உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# தேவாரப்பதிகங்கள்

மூலமும்,

காஞ்சீபுரம் - மஹாவித்வான்

ஸ்ரீமத் - இராமாநந்த யோகிகள்

எழுதிய உரையும்.

பு. ஷண்முக முதலியாரால்

சென்னை:

மதராஸ் டைமண்ட் பிரெஸில்

பதிப்பிக்கப்பட்டன.

---

1913.

*Registered Copy - right*

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்

# திவ்விய சரித்திரம்.

திருக்கைலாசமலையில் பார்வதியாரோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மெய்த்தொண்டர் அறுபத்து மூவரில் ஒருவராகிய ஆலாலசுந்தர ரென்பவர், ஒருநாள் அப் பரமபதிக்குப் பூமாலை தொடுத்து அணிதற்பொருட்டு, மலர் கொய்தற்குத் திருநந்தவனத்திற் சென்றபோது, உமாதேவியாருக்கு மலர்மாலை கட்டிச் சாத்துதற்கு அவ் வனத்திற் பூப்பறித்து நின்ற அவருடைய சேடியர்களாகிய அநிந்திதை, கமலினி என்னும் பெயருடைய பெண்கள் இருவர்மேல் இச்சைகொண்டார். அவர்களும் ஆலால சுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருவாறு மனத்தை மீட்டுக்கொண்டு ஆலாலசுந்தரர் சிவ சந்நிதானத்துக்கும், சேடியர்கள் தாயார் சந்நிதிக்குஞ் சென்றனர். சர்வாந்தரியாமியாகிய கைலாசபதி ஆலாலசுந்தரரை நோக்கி, "நீ பெண்கள்மேல் இச்சைகொண்டபடியால் தக்ஷிணபூமியில் மானுடதேகமெடுத்து அப் பெண்களோடு கூடி யின்ப மநுபவிப்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளக்கேட்டு, ஆலாலசுந்தரர் நடுநடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, எழுந்து நின்று அஞ்சலியஸ்தராய் "கருணைக்கடலே! மனிதனாய்ப்பிறந்து சமுசார சாகரத்தில் மூழ்கி, செய்வது இன்னது, தவிர்வது இன்னது என்று அறியாது மயங்கும்பொழுது தேவரீர் என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமானார் அதற்குத் திருவுள மிசைந்தனர்.

அவ்வாறே ஆலாலசுந்தரர் புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் தென்தேசத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவப் பிராமணகுலத்தில் சடையனாருடைய கற்புக் கிருப்பிடமாகிய இசைஞானியார் திருவயிற்றில் அவதரித்து, நம்பியாரூரரென்னும் பிள்ளைத் திருநாமம்பெற்று, ஒருநாள் வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடுகையில், அந் நாட்டரசராகிய நரசிங்கமுனையரையர் கண்டு சடையனார் சம்மதத்தின்மேல் அப்பிள்ளையைத் தம் மாளிகைக்கு எடுத்துக் கொண்டுபோய் அபிமான புத்திரராகப் பாவித்து வளர்க்க வளர்ந்தாராயினும், பிராமண குலத்துக்குரிய ஒழுக்கமுடையராய்த் தக்க பருவத்தில் உபநயனஞ்செய்யப்பெற்று, வேதாகமமுதலிய சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய்த்

திருமணஞ்செய்து கொள்ளுதற்குரிய பருவத்தை யடைந்தனர். அது கண்டு தந்தையாராகிய சடையனார் தம் மரபுக்கேற்ற புத்தூரிலுள்ள சடங்கவி சிவாசாரியரிடத்தில் அவர் புத்திரியைத் தம் புத்திரருக்கு மணம்பேசச் சில முதியோரை அனுப்பினார். அவர்கள் சடங்கவி சிவாசாரியரிடத்திற் சென்று பேசி அவர் உடன்பட்ட செய்தியைச் சடையனாருக்கு அறிவித்தனர். அப்பொழுது சடையனார் மனமகிழ்ந்து, விவாக சுபதின முகூர்த்தம் நிச்சயித்துத் தம் ஞாதிகள் முதலிய உறவினரையும், நட்பினர் யாவரையும் திருமணவோலைபோக்கி வரவழைத்தனர். பின்பு, நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமணக்கோலம் பூண்டு, குதிரையிலேறிச் சகல சம்பிரமத்தோடும் புத்தூரில் சடங்கவியார் வீட்டில் திருக்கல்யாணப் பந்தற்குமுன் சென்று, குதிரையினின்றிழிந்து, உள்ளேபோய் ஆசனத்திருந்தனர். அப்போது சிவபெருமான் தாம் திருக்கைலாசத்தில் ஆலாலசுந்தரர்க்குத் திருவாக்களித்தபடி ஓர் வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு அந்தக் கல்யாணப்பந்தலில் எழுந்தருளி நின்று, அங்குள்ளார்க்கெதிரில் நம்பியாரூரரை நோக்கி, 'உனக்கும் எனக்கும் ஒரு வழக்கிருக்கிறது. அது தீர்ந்தபிறகுதான் நீ விவாகஞ் செய்து கொள்ளவேண்டும்' என்றார். நம்பியாரூரர், 'உமக்கும் எனக்கும் உள்ள வழக்கு யாது' என்ன, அவ்வையர் அங்குள்ள பிராமணர்களை நோக்கி, 'இந்த நம்பியாரூரன் எனக்கு அடிமை' என்றார். அதுகேட்ட நம்பியாரூரர் இவ்வையர் சொல்லியது நன்றாயிருக்கிறதென்று பழித்துச் சிரிக்க, பிராமணவேடம் பூண்டுவந்த கடவுள், உன்பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலை இதோ இருக்கிறது. அப்படியிருக்க நீ பரிகாசஞ்செய்தது என்ன?' என்றார். நம்பியாரூரர் ஐயரைநோக்கி, 'பிராமணருக்குப் பிராமணர் அடிமைப்படுதல் இன்றுதான் நீர் சொல்லக்கேட்டோம்; நீ பித்தனோ?' என்ன, ஐயர், 'நான் பித்தனானாலுமாகட்டும், பேயனானாலுமாகட்டும், நான் அதற்குச் சிறிதும் வெட்கமடையேன், நீ விநோதவார்த்தைகள் பேசவேண்டாம், அடிமைத்தொழில் செய்ய வா' என்றார். நம்பியாரூரர் 'ஐயரே! அவ்வோலையைக் காட்டும்' என்ன, ஐயர், நீ இந்த வோலையைப்பார்த்து நிச்சயிக்கத் தக்கவனோ? நான் இந்தச் சபையாருக்குக் காட்டி மெய்யென்று ஒப்புக்கொள்ளச் செய்வித்தபின், எனக்கடிமைத்தொழில் செய்யமாத்திரம் தக்கவன்' என்றார். அது கேட்டு நம்பியாரூரர் கோவங்கொண்டு, அவர்கையிலுள்ள ஓலையைப் பறிக்க அவருக்கு எதிரிற்சென்ற அளவில், அவரோட; தாம் பின் தொடர்ந்தோடிப் பிடித்து ஓலையைப் பறித்துக் கிழித்தனர். சுந்தரமூர்த்தியை பிடித்து ஒருதரம் இது முறையோ என்று கூச்சலிட, சமீபத்தினின்றவர்கள் இருவரையும் விலக்கி, உலகத்தில் எந்நாளும் நடந்திராத செய்தியைக் கொண்டு வழக்காடுகிற பிராமணரே! நீர் எங்கேயிருக்கிறவர் சொல்லுமென, 'நான் இந்தத் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறவன்; அஃதிருக்கட்டும், இந்த நம்பியாரூரன் அறநெறிக்கு விரோத

மாக என்கையில் இருந்த ஓலையைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக் கிழித்த தனால்தான் எனக்கடிமை என்பதை ஸ்திரப்படுத்தினன்' என்றார். அப் பொழுது நம்பியாரூரர் நீர் திருவெண்ணெய் நல்லூரில் இருப்பவராயின், உம்முடைய தப்பு வழக்கை அங்கேதானே பேசித் தீர்ப்புச்செய்ய வாரும் என்ன, ஐயர் அது கேட்டுத் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள பிராமணர் களுக்கு முன் ஆதியில் எழுதிய மூல, ஓலையைக்காட்டி, நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேனென்று தண்டூன்றிக்கொண்டு முன்னேசென்றார். நம்பியாரூரரும் மற்றைப் பிராமணர்களும் பின்னே போயினர்.

ஐயர் தமக்குப் பின்வந்த நம்பியாரூரரோடும் மற்றைப் பிராமண ரோடும் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்து, அங்குக் கூடிய பிராம ணர்களுக் கெதிரில் அவர்களை நோக்கி, 'அறிவிற் சிறந்த பெரியோர் களே! இந்த நம்பியாரூரன் எனக்கடிமையென்று காட்டிய ஓலையைப் பறித்துக் கிழித்துவிட்டு உங்களிடத்திற்கு வந்திருக்கிறான்' என்று முறையிட்டார். அதைக் கேட்ட பிராமணர்கள் அவரைப் பார்த்து, 'பிராமணர்கள் அடிமைப்படுதல் இவ்வுலகத்தில் எக்காலத்துமில்லையே! ஐயரே! நீர் என்ன தப்புவார்த்தை சொல்லுகின்றீர்' என்ன, ஐயர், 'நான் சொல்லியது பொய்யன்று, மெய்யே, இவன் பறித்துக் கிழித்த வோலை இவனுடைய பாட்டன், தானும் தன் உறவினரும் எனக்கடிமை என் றெழுதிக் கொடுத்தவோலை' என்றார். உடனே பிராமணர்கள் நம்பி யாரூரரை நோக்கி, 'இவர் உம்முடைய பாட்டன் எழுதிக்கொடுத்த முறி யோலையைக் காட்டினால் நீர் அதைப் பறித்துக் கிழிக்கலாமா? அதனால் உம்முடைய பக்ஷம் செயித்ததாமா? இவர் தம் வழக்கை யாவரும் ஒத் துக்கொள்ளும்படி கூறினர். இனி உம்முடைய கருத்து யாது?' என்ன, அதற்குச் சுந்தரர், வேதாகமமுதலிய யாவுங் கற்றுணர்ந்த மகான்களே? நான் ஆதிசைவனென்பதை நீங்களெல்லா மறிவீர்களே! அப்படியிருக்க இந்தப் பிராமணர் என்னைத் தமக்கடிமையென்று சாதிக்கிறாரே! இது மனத்தால் நிச்சயிக்கத் தகாத மாயை என்றே நினைத்தல் வேண்டும். நானிதற்கு என்ன சொல்வேன்' என்ன, அதைக்கேட்ட பிராமணர் அவ்வையரை நோக்கி, நீர் இவரை உம்முடைய அடிமையென்று சொல் லுகிறதற்கு அநுபவம், விகிதம், சாக்ஷி இம்மூன்றிலொன்று உம்மிடத் தில் இருக்கவேண்டுமே அதைக் காட்டும்' என்றார்கள். அப்பொழுது ஐயர், 'இவன் கிழித்தஓலை மூலவோலையைப்பார்த்து எழுதிய படியோலை. மூலவோலையோ என்னிடத்திருக்கின்றது, என்றார். பிராமணர், 'ஆனால் அதைக் காட்டும்' என, ஐயர், ஆரூரன் அதையும் முன்போலப் பறித்துக் கிழித்துப் போட்டால் என்செய்வேன்? ஆதலால், அப்படிச் செய்யாத படித் திட்டஞ்செய்வீர்களே யானால் காட்டுகிறேன்' என்ன, பிராமணர், கிழிக்கவொட்டோம், காட்டும்' என்றார்கள். ஐயர் மூலவோலையைக் கையிலெடுத்தனர், அப்பொழுது சபையார் கட்டளையின்படி ஓர் கணக்

குப்பிள்ளை எழுந்து அவரைக் கும்பிட்டு ஓலையை வாங்கிச் சபையிலுள்ளார் கேட்கும்படி, "திருநாவலூரிலிருக்கும் ஆதிசைவனுகிய ஆரூரனென்னும் நான் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு, நானும் என் சந்ததியாரும் வழித்தொண்டு செய்ய உள்ளும்புறமு மொப்ப உடன்பட்டெழுதிக்கொடுத்தேன்.

இப்படிக்கு, ஆரூரன் "

என்று வாசித்தான். அதிற் சாக்ஷி கையெழுத்திட்டவர்களும் தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக் கொண்டனர். அதன் பின்பு பிராமணர்கள் நம்பியாரூரரை நோக்கி, "இது உம்முடைய பாட்டன் கையெழுத்துத்தானே பாரும்" என்றார்கள். ஐயர் அவர்களைப்பார்த்து, 'இச் சிறுவன் தன்னடிமை யோலையில் எழுதிய தன் பாட்டன் கையெழுத்தை அறியச் சக்தியுள்ளவனே? இவன் பாட்டன் எழுதிய வேறு கைச்சாத்திருந்தால் அதை வருவித்துப்பார்த்து ஒத்திருந்தால் உங்களுக்குத் தோன்றிய தீர்ப்புச் சொல்லுங்கள்' என்ற அளவில், அப்படியே அவர் பாட்டனார் கைச்சாத்தொன்று அழைப்பித்துப் பார்த்து ஒத்திருக்கக் கண்டு, 'இனி நீர் தப்ப வழியில்லை. நீர் இந்தப் பிராமணருக்குத் தோற்றீர் ஆதலால் அவர் கருத்தின்படி அடிமை செய்வதே கடன்' என்றார்கள். ஆலாலசுந்தரர், 'விதிமுறை யிதுவாயின் நானுடன்படேனென்று சொல்லக் கூடுமோ?' என்று நின்றார். அப்பொழுது பிராமணர் அவ்வையரை நோக்கி, நீர் காட்டிய முறியோலையில் உங்களூரே எங்களுடைய ஆராக எழுதப்பட்டிருக்கின்றது. ஆகையால் உமக்கு இங்கே தலைமுறையாகவுள்ள வீடும் ஸ்திதியும் காட்டுமென்ன, காட்டுகிறேன் வாருங்களென்று நம்பியாரூரரும் பிராமணர்களும் பின்தொடர்ந்துவரத் தாம் அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்னுஞ் சிவாலயத்துள்ளே போயினர். பின் போன சபையார் அவரைக் காணுது திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னை அடிமைகொண்ட பிராமணர் திருக்கோயிலுள்ளே புகுந்தது என்ன ஆச்சரியமென்றுகருதி, அத்தியந்த வாசையோடும் தனித்து அவரைப் பின் தொடர்ந்து போய்க் கூப்பிடச் சிவபெருமான் அறவடிவாகிய இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி, "நீநமக்குமுன்னே தொண்டனுயிருந்தாய், பெண்கள்மேல் ஆசை வைத்ததனுல் நம்முடைய ஆணையாற் பூமியிற் பிறந்தாய்; இப்பொழுது சமுசார பந்தமானது உன்னைத்தொடராதபடி நாமே வலிய வந்து தடுத்தாட்கொண்டோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறெழுந்த அருமைத் திருவாக்குச் செவியில் நுழையச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவசப்பட்டு அடியற்ற மரம்போல் பூமியில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம்பண்ணி ஆநந்தக் கண்ணீர் பெருக எழுந்து நின்று இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து, "பொன்னம்பலத்தில் பஞ்சகிருத்தியத் திருநடனஞ்செய்தருளும் சுவாமி! தேவரீர் ஒன்றுக்கும் பற்

ரூத என்னை வலியத் தடுத்தாண்ட அருட் பெருமையை என்னென்று சொல்லுவேன்!" என்றார். அப்படி நின்ற நம்பியாரூரரை நோக்கி, 'நீ நம்மோடு வன்சொற்பேசி வன்றொண்டனென்னும் பெயர்பெற்றாய். நமக்கு அன்பினாற்செய்யும் அருச்சனையாவது பாடலேயாம். ஆதலால் நம்மேல் தமிழ்ப்பாடல் பாடு' என்று அருளிச்செய்யச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அஞ்சலியஸ்தராய், "அடியேன் தேவரீருடைய அநந்த கல்யாண குணங்களில் எதை அறிவேன், என்னவென்று பாடுவேன்" என்ன, அதற்குச் சிவபெருமான் "நீ முன்னே நம்மைப் பித்தனென்றாய்; ஆதலால் என்பெயர் பித்தனென்றே பாடுக" என்ன, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை அடிமைகொண்ட சிவபெருமான்மேல் "பித்தாபிறைசூடி" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார். பின்பு தம்பிரானார், நீயின்னும் நடபுகழைக் குறித்துப் பலவகையாகப் பாடுக" என்று மறைந்தருளினார். இது நிற்க, புத்தூரில் சடங்கவி சிவாசாரியர் புத்திரியாரோ விவாகந் தவறினதினால் சுந்தரமூர்த்தி சுவாமிகளையே தியானஞ்செய்து கொண்டிருந்து சிவபதமடைந்தனர்.

பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கின்ற திருவருட்டுறை என்னும் ஆலயத்திலெழுந்தருளிய பரம காருண்ய மூர்த்தியாகிய சிவபெருமான் தம்மை யாட்கொண்டபின் திருநாவலூர்க்கும் திருத்துறையூர்க்கும் சென்று திருப்பதிகம் பாடிச் சிதம்பரத்திலே ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளும் நடேசரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையோடு புறப்பட்டுத் திருவதிகையென்னுந் தலத்துக்குச் சமீபத்திற்போய்த் திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரத்தால் கைத்தொண்டு செய்த இத்தலத்தை நான் மிதிக்க அஞ்சுகின்றேனென்று அதற்குட் செல்லாமல் அருகிலிருந்த சித்தவடமடத்திலெழுந்தருளி அன்றிராத்திரி திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு நித்திரை செய்யும்போது, வீரட்டானேசுரர் ஓர் விருத்தப் பிராமணராகி அம்மடத்தில் நுழைந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிரசின்மேல் தமது திருவடியை வைத்தருளித் துயில்பவர் போ லிருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்துக்கொண்டு, 'ஐயரே! என் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர்' என்ன, ஐயர் 'என் வயோதிகத்தால் திசை தெரியாது அப்படிச் செய்தேன்' என்றார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அதற்கு ஒத்துக்கொண்டு, தம்முடைய சிரசை வேறொரு திசையில் வைத்து நித்திரைசெய்தனர். எம்பிரானார் அங்குஞ்சென்று, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சிரசில் தம்முடைய பாதத்தை நீட்டச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'என் சிரசில் பலமுறை காலைவைத்த நீர் யார்?' என்ன, 'நீ என்னை அறியாயா?' என்று உரைத்து மறைந்தருளினர். அது கண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்முடைய சிரசில் பாதத்தை வைத்தவர் சுவாமி என்றறிந்து, "அடியேன் செருக்கினால் சிவ பெருமானென்று அறியாமையால் என்செய்தேன்"

'என்றுவருந்தி, வீரட்டானேசுரரை 'தம்மானையறியாத சாதியாருளரே' என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்திற் சென்று கனகசபையில் ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைத் தரிசித்து, அன்புமிகுதியால் நெருப்பிலிட்ட நெய்போல் மனமுருகி, ஆநந்தக் கண்ணீர் பெருக விழுந்து நமஸ்கரித்து, பேரின்ப சாகரத்தில் முழுகி, இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் குவித்துப் பதிகம்பாடித் துதித்து நின்றனர்.

அப்பொழுது நடேசர் திருவருளால் "திருவாரூர்க்குவா" என்று எழுந்த அசரீரி வாக்கைக்கேட்டு, அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு கனக சபையைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு, புறப்பட்டுக் கொள்ளிடநதியைக் கடந்து, சீர்காழிக்குச் சமீபித்து, இது திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்த தலம், ஆகையால் இதை மிதிக்கலாகாதென்று கருதி, அதன் எல்லையை வணங்கி வலம் வரும்போது சிவபெருமான் தரிசனந் தந்தருள, "சாதலும் பிறத்தலுந் தவிர்த்து" என்னும் திருப்பதிகம் பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கோலக்கா முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூர்க் கெழுந்தருளி ஆலயத்துட்சென்று, வன்மீகநாதரை வணங்கிப் பேரின்பக்கடலுள் மூழ்கித் திருப்பதிகம் பாடித் துதித்து நின்றார். அப்பொழுது சுந்தரமூர்த்திசுவாமிகள் கேட்கும்படித் தியாகப் பெருமான் திருவருளால் "நாமுனக்குத் தோழரானோம், முன்னே யாட்கொண்ட விவாககாலத்தில் நீ கொண்டிருந்த மணக்கோலத்தை என்றும் பூண்டு விளையாடுவாயாக" என்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அது கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆநந்த பரவசராய்த் தொழுது துதித்துப் புறம்போந்து, அன்று தொட்டு அடியார் யாவரும் தம்பிரான் தோழர் என்று சொல்லிக்கொள்ளத் திருமணக்கோலம் பூண்டு, நாடோறும் வன்மீகநாதரைத் தரிசனஞ் செய்துகொண்டு அங்கிருந்தனர். இதுநிற்க,

இதற்குமுன்னே திருக்கைலாசமலையில் இருக்கும் பார்வதியாருடைய பாங்கியரிருவரில் ஒருவராகிய கமலினி என்பவர் அத் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னும் திருப்பெயர்பெற்று மங்கைப்பருவமடைந்து, தாம் தோழிமாரோடு தினமும் ஆலயத்துட்சென்று சிவதரிசனஞ்செய்து வருவார். ஒருநாள் தரிசனஞ் செய்யப் போம்பொழுது அங்கு பரிசனத்தோடு சிவதரிசனத்துக் கெழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு, ஆசைகொண்டு, தாம் அவரை விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென்று சுவாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ் செய்தருளினர். சிவபெருமான் அவர் விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு பரவையாரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருமணஞ் செய்து கொடுக்கும்படி அடியார்களுக்குக் கட்டளையிட்டருள, அவர்கள் அப்படியே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பரவையாரை விதிப்படி விவா

கஞ்செய்து கொடுத்தார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைக் கூடி வாழ்ந்திருக்கும் நாளில், ஒருநாள் சிவதரிசனத்திற் கெழுந்தருளும் போது, தேவாசிரிய மண்டபத்தில் சேர்ந்திருந்த சிவனடியார்களைக் கண்டு அவர்கள்மேல் பத்திரிருந்து, நானிவர்க்கு அடியனாகுநாள் எந்நாளென்று கருதிச் சுவாமி தரிசனத்துக்குத் திருக்கோயிலுட் சென்றனர். அவர் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தியாகப்பெருமான் அவர்க்குக் காட்சிகொடுத்தருளி, 'நீ நம்மடியார்மேற் பதிகம் பாடுவாயாகவென்று திருவாய் மலர்ந்தருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணங்கி நின்று, 'சுவாமி! அடியவர்கள் வரலாறு இன்னதென்றும் அவர்கள் தன்மை இன்னதென்றும் சிறிதும் அறியாத யான் எப்படிப் பாடுவேன்? அவர்களைப் பாடுஞ்சக்தியைத் தேவரீரே அடியேனுக்கு அருளிச் செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அதற்கிசைந்து தமது அருமைத் திருவாக்கால் "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று அடி எடுத்துக்கொடுத்து மறைந்தருளினர். அது கண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்தை யடைந்து அவ்வடியவர் யாவர்க்குந் தனித்தனியே அடியேன் என்று திருத்தொண்டத் தொகை என்னுந் திருப்பதிகம்பாடி அவர்களை வணங்கினர்.

பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிலநாள் அங்கிருந்து, அதற்குச் சமீபத்திலுள்ள திருக்கோளிலி என்னும் தலத்துக் கெழுந்தருளி ஆலயத்துட்சென்று சிவபெருமானை வணங்கி வேளாளராகிய குண்டையூர்க் கிழார் கொடுத்த நெற்குவியலைத் திருவாரூரிற் சேர்ப்பிக்கக் கிருபை செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவாக்கினையாற் பூதங்கள் குண்டையூரிலிருந்த நென்மலையை எடுத்துச்சென்று பரவையார் திருமாளிகையிலும் மற்ற விடங்களிலும் நிறைத்தன. சுந்தரமூர்த்திசுவாமிகள் மீண்டுந் திருவாரூர்க்குச் சென்று, வன்மீகநாதரைத் தொழுது துதித்துப் பரவையார் திருமாளிகையிற் சேர்ந்து, நிகழ்ந்த செய்தியைச் சொல்லிச் சிலநாள் அங்கிருந்து, கோட்புலிநாயனார் வேண்டுகோளால், திருநாட்டியத்தான் குடிக் கெழுந்தருளிய பொழுது, அந்நாயனார் எதிர்கொண்டு வந்து வணங்கித் தம்முடைய வீட்டுக்கு அழைத்துப்போய் ஆசனத்திலிருத்தி, அருச்சனைசெய்து, திருவமுது செய்வித்து, வணங்கித் தம்முடைய புத்திரிகளாகிய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் கொண்டுவந்து வணங்குவித்துத் தாமும் வணங்கி அடியேன்பெற்ற இப் பெண்களை அடிமையாகக் கொண்டருள வேண்டும் என்ன, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அந்தப் பெண்களைப் புத்திரிகளாகப்பாவித்தருளிச் சிவாலயத்துட்சென்று, சிவபெருமானை வணங்கி "பூணாணவதொரரவம்" என்னுந் திருப்பதிகம்பாடி அப் பதிகத்தின் திருக்கடைக்காப்பில் கோட்புலி நாயனாரைச் சிறப்பித்துச் சிங்கடியாருக்குத் தம்மைப் பிதாவாகக் கருதினமையால் தம்மைச் சிங்கடியப்பன் என்று வைத்தருளினர். பின்பு அவ்விடத்

தினின்றும் எழுந்தருளித் திருவலிவலத்திற் சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு, மீண்டும் திருவாரூர்க்குச் சென்று, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, பரவையார் வீட்டிலிருந்தனர். இருக்கும் நாளில் பங்குனியுத்தரத் திருவிழா சமீபிக்கவும், பரவையாருக்குத் 'திருவிழாச் செலவிற்காகக் கொடுப்பதற்குப் பொருள்கொண்டு வரும் பொருட்டுத் திருப்புகலூரைச் சேர்ந்து, ஆலயத்துட்சென்று, சுவாமியை வணங்கிப் பதிகம்பாடிச் செங்கல்லைப் பொன்னாக்கித் தரப்பெற்று, அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரையடைந்து பரவையார் வீட்டில் எழுந்தருளினர்

அங்கிருந்து புறப்பட்டுத் திருநன்னிலம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருமுது குன்றத்தைச் சேர்ந்து, சுவாமி தரிசனஞ் செய்து பதிகம் பாடியபோது, சுவாமி பன்னீராயிரம் பொன்கொடுத்தருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணங்கிநின்று, தேவரீர் கொடுத்தருளிய பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர் யாவரும் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்க, அப்பொழுது 'எம்பிரானுடைய திருவருளால், 'சுந்தரமூர்த்தி! நீ இந்தப் பொன் எல்லாவற்றையும் மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தி லெடுத்துக்கொள், என்று அசரீரிவாக் கெழுந்தது, அதுகேட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மச்சம்வெட்டி எடுத்துக்கொண்டு பொன்னனைத்தையும் மணிமுத்தா நதியிலிட்டு, அன்று என்னைத் தடுத்தாட்கொண்ட திருவருளை இதிலறிவேனென்று சிதம்பரத்துக்கெழுந்தருளக் கருதி, வழிக்கொண்டு இடையிலுள்ள திருக்கடம்பூரை வணங்கித் தில்லையைச்சேர்ந்து, நடேசரைத் தொழுது பதிகம்பாடித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருக்கருப்பறியலூர் முதலிய பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டுந் திருவாரூர்க் கெழுந்தருளி வன்மீகநாதரைப் பணிந்து பரவையாருடன் மனமகிழ்ந்திருக்குநாளில் ஒருநாள் பரவையாரை நோக்கி, 'எனக்குத் திருமுதுகுன்றர் கொடுத்தருளிய பொன்னையெல்லாம் மணிமுத்தா நதியிலிட்டு வந்தேன். இப்போது இத்தலத்தில் திருக்கோயிலுக்கு மேற்கிலுள்ள குளத்தில்போய் அவரது திருவருளால் எடுத்துக்கொண்டு வருவோம் வா, என்ன, பரவையார் இது என்ன அதிசயமென்று தமக்குள் தாமே எண்ணிக்கொண்டு கூடவர, அக்குளத்தருகிற் சென்று பரவையாரைக் கரைமேல் நிறுத்தித் தாம் வன்மீகநாதரை வணங்கித் துதித்துக் குளத்திலிறங்கித் தடவிப் பார்க்கையில், பொன்னகப்படாமையால் மனம் வருந்தித் திருப்பதிகம்பாடிச் சிவபெருமான் திருவருளால் வந்தெழுந்த பொற்றிரளை வாரி எடுத்து ஆட்களிற் சுமத்தி அனுப்பிவிட்டுத் தாம் திருக்கோயிலுட் சென்று வன்மீகநாதரைப் பணிந்து, துதித்து வீட்டுக்குச்சென்று பரவையாரோடுமகிழ்ந்திருக்குநாளில், சிவஸ்தல யாத்திரை பண்ண விருப்பமுற்று, திருநள்ளாறு முதலியவற்றை வணங்கிக்கொண்டு, திருக்குருகாவூர்க்குச் சமீபத்தில் வரும்பொழுது, வன்றொண்டர் பசிதாக

முதலியவற்றால் மெலிந்து வருகிறார் என்று பரமசிவம் திருவுளமிரங்கித் தண்ணீரும் கட்டமுதும் கொண்டுவந்து வெயில் வெப்பத்தைத் தணிக்கும்பொருட்டு, அங்கு ஒருபக்கத்தில் ஓர் தண்ணீர்ப்பந்தரையுண்டாக்கித் தாம் ஓர் பிராமணவேடம்பூண்டு, களைத்துவருகின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை நோக்கி, 'நீர் மிகவும் பசித்திருக்கின்றீர், என்னிடத்தில் பொதிசோறிருக்கின்றது, அதையுண்டு, தண்ணீர்குடித்து, 'இளைப்பாறும், என்று சொல்லியருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதற்கிசைந்து, கட்டமுது வாங்கி அடியாரோடு அமுது செய்து தண்ணீர் அருந்திப் பரிசனங்களோடு நித்திரை செய்ய ஐயர் தண்ணீர்ப்பந்தரோடு மறைந்தருளினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் துயிலெழுந்து ஐயரைக் காணுமையால் ஆச்சரியமடைந்து "இத்தனை மாற்றமறிந்திலேன்" என்னும் திருப்பதிகம்பாடித் திருக்குருகாவூரை சேர்ந்து, சிவதரிசனஞ்செய்து, அதை அகன்று வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு, திருக்கழுக்குன்றிற்போய்ச் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருக்கச்சூருக்கெழுந்தருளி ஆலக்கோயிலுள்ளே சென்று சிவதரிசனஞ்செய்து புறத்தில்வந்து அமுதுசெய்யும் காலமாகியும் அமுதுசெய்து படைக்கும் பரிசனங்கள் வராமையால் மிகுந்த பசியோடு மதிற்புறத்திலிருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு பிராமணராகி அருகிற்சென்று, 'நீர் மிகப் பசியோடிருக்கின்றீர் நான் உமக்குப் பிராமணர் வீட்டில் அன்னம் யாசித்துக்கொண்டு வருகிறேன், நீர் அப்புறம் போகாமல் இங்கேயே யிரும், என்று சொல்லிப்போய் அப்படியே யாசித்துக்கொண்டுவந்து கொடுக்க, சுந்தரமூர்த்திசுவாமிகள் தம்முடன் வந்த தொண்டர்களோடு உண்டு மகிழ்ந்தனர். உடனே அவ்வையர் மறைந்தருளினதைக் கண்டு, அவர் சிவபெருமானே என்று துணிந்து, இந்த நடுப்பகலில் திருவடி வருந்த அடியேன் பொருட்டு எழுந்தருளிய பெருங்கருணையை என்னென்று புகழ்வேன், என்று மனமுருகித் தோத்திரஞ்செய்து, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் காஞ்சீபுரத்திற் சென்று, திருவேகம்பத்தை யடைந்து காமாக்ஷியம்மையால் அருச்சிக்கப்பட்ட ஸ்ரீ ஏகாம்பரநாதரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு, இடையிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் தொழுதுகொண்டு, திருக்காளத்தி மலைக்குச்சென்று, சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் திருவொற்றியூரிற்போய்ப் பதிகம் பாடிச் சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு அங்கிருந்தனர்.

முன் திருக்கைலாசகிரியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்மேல் ஆசைகொண்ட தோழிமார் இருவரில் ஒருவராகிய அனிந்திதையார் என்பவர் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளரிற் சிறந்த ஞாயிறுகிழார் என்பவருக்குப் புத்திரியாராகத் திருவவதாரஞ்செய்து சங்கிலியார் என்னுந் திருநாமம் பெற்றுத் திருக்கோயிலில் திருத்தொண்டு செய்து ஒழுகுநாளில் ஒருநாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரைக்கண்டு ஆசைகொண்டு

சுவாமி சந்நிதானத்திற் சென்று வணங்கி, சங்கிலியாரைத் தமக்குத் தந்தருளும்படி பிரார்த்தித்துக் கோயிலின் புறத்தில் ஓரிடத்தில் மனக்கவலையோடிருக்க, அப்பொழுது சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கெதிரிற்போய், 'சங்கிலியை உனக்குத் தருகிறோம்; நீ கொண்ட கவலையை ஒழிப்பாயாக' வென்று திருவாய் மலர்ந்தருளி, உடனே கன்னிமாடத்திற் கண்வளரும் சங்கிலியார் சொப்பனத்திற் றோன்றி, 'சங்கிலியே! நம்மிடத்து மிகுந்த பத்தியையுடைய சுந்தரன் தனக்கு மனைவியாக உன்னைத் தரும்படி என்னைப் பிரார்த்தித்தான்; நீ அதற்கு உடன்படவேண்டும் என்றார். அதற்குச் சங்கிலியார், 'சுவாமி! அடியேன் தேவரீருடைய திருவாணையைச் சிரமேற்கொண்டேன்; அவ்வாறே அவர்க்கே மனைவியாதற்குரியேன்; ஆயினும் அவர் திருவாரூரிலே மிகுந்த சந்தோஷத்தோடு வசிக்கின்றவர் என்பதைத் தேவரீர் திருவுளங்கொண்டருளும், என்று விண்ணப்பஞ் செய்தார். சுவாமி அதுகேட்டு, 'பெண்ணே! சுந்தரன், உன்னைப் பிரியேன் என்று சபதஞ்செய்து தருவான், என்று சொல்லிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்து வந்து, 'நான் உன்னைப் பிரியேன் என்று நீ அவளுக்குச் சபதஞ்செய்து கொடுத்தால்தான் அவள் உடன்படுவா' ளென்ன, 'ஆயின் அவ்வாறே செய்து கொடுக்கிறேன்; தேவரீர் அப்பொழுது திருக்கோயிலிலிராது மகிழின்கீழ் எழுந்தருளி யிருக்கவேண்டும்' என்ன, அதற்குச் சிவபெருமான் இசைந்தருளி, மீண்டுஞ் சங்கிலியாரிடத்திற்சென்று, 'சுந்தரன் உனக்குச் சபதஞ்செய்ய வந்தால் மகிழடியிற் செய்யும்படி கேள், என்று மறைந்தருளினார். பின்பு சங்கிலியார் திருப்பள்ளி யெழுச்சிக்குப் பூமாலை தொடுக்கத் தோழியரோடு திருக்கோயிலுக்குச் செல்ல, அவருக்குச் சபதஞ்செய்து கொடுக்க அதற்குமுன் வந்திருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர்க் கெதிரிற்போய்த் தமக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளியதைச் சொல்ல, அவர் அதற்கொன்றுஞ் சொல்லாமல் நாணமுற்றுச் சேடியரோடு கோயிலுக்குட் சென்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பின் தொடர்ந்துபோய். 'பெண்ணே! உன்னைப் பிரியேனென்று யான் சபதஞ்செய்யச் சந்நிதானத்திற்கு வா' என்ன, சங்கிலியார்கண்ட கனவைக் கேட்டறிந்த தோழிமார், 'இங்கேவேண்டுவதில்லை. மகிழடியிற் சபதஞ்செய்து கொடும்' என, அவ்வாறே மகிழடியிற் போய்ச் சபதஞ்செய்து கொடுத்து சங்கிலியாரை விவாகஞ்செய்து கொண்டு அங்கு அவரோடு சிலநாள் கூடியிருந்து, அதற்குமேல் திருவாரூர் வீதி விடங்கப்பெருமானைத் தரிசனஞ் செய்யாமல் எத்தனைநாள் நீங்கியிருப்பேன் என்று மனவருத்தமுற்று, ஆலயத்திற் சென்று சுவாமி தரிசனஞ்செய்து திருவொற்றியூர் எல்லையை நீங்கிய அளவில் இரண்டு கண்களும் மறைந்தன. மறையவே சபதந்தவறினமையால் நேரிட்டதென்று வருந்தி, "அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்" எனுந் திருப்பதிகம் பாடியும் அத்துன்பம் நீங்கவில்லை; ஆயினும் திருவாரூர்க்குப் போகவேண்டும் என்னும் ஆசை மேன்மேலும் வளர்தலால் சிலர் முன்னே வழி

காட்டத் திருமுல்லைவாயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கி, "விண் பணிந்தேத்தும் வேதியா" என்னுந் திருப்பதிகம்பாடித் திருவெண்பாக் கத்தைச் சேர்ந்து, சிவபெருமானைப்பணிந்து, "திருக்கோயிலுள்ளீரோ" என்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமி அவருக்கு ஊன்றுகோல் கொடுத் தருளி 'உளோம் போகீர்' என்றனர். பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பிழையுளது பொறுத்திடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு காஞ்சீபுரத்துக் கெழுந்தருளி, ஏகாம்பரநாதரை வணங்கி, அவர் திருவரு ளால் ஒருகண்பெற்று, வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு திருவாரூர்க்குச் சென்று வன்மீகநாதரைத் தொழுது மற்றொரு கண்ணும் பெற்றுப் பரவையாரின் ஊடலை நீக்கும்பொருட்டு, வீதிவிடங்கப் பெருமானை இரண்டுதரம் அவர் மனையில் தூது அனுப்பி ஊடல் தணிந்தபின் அங்குச் சென்று அவரோடுகூடி, நாள்தோறும் வன் மீகநாதரைத் தரிசனஞ்செய்து கொண்டிருந்தனர். இருக்கும்பொழுது தாம் சிவபெருமானைத் தூது அனுப்பிய செய்தியைத் திருப்பெருமங் கலத்திலிருக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேள்வியுற்று, அதுதக் கது அன்றென்று தம்மேல் கோபங்கொண்டு இருத்தலை அறிந்து, சுவாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் கலிக்காம நாயனா ருக்குச் சூலைநோயை ஏவி, அவரிடத்திற்போய்ச் சுந்தரன் வந்தாலன்றித் தீராதென்ன, அவர் அதற்கு உடன்படாமையைக் கண்டும் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் வந்து, நீ போய்க் கலிக்காமனுடைய சூலையைத் தீர்ப் பாய் என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சூலைநோயைத் தீர்க்கும்பொரு ட்டு வருஞ்செய்தி கேட்டுக் கலிக்காமநாயனார் உடைவாளால் வயிற்றைப் பீறிக்கொண்டு இறந்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அங்குச்சென்றுகலிக் காமநாயனார் இறந்திருத்தலை நோக்கி, நானும் மரணமடைவேனென்று உடைவாளை எடுத்தனர். உடனேசிவபெருமான் திருவருளால் கலிக்காம நாயனார் உயிர்த்தெழுந்து உடைவாளைப் பற்றிக்கொள்ள, அவர் விழுந்து நமஸ்கரித்தனர். கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கி னர். சிலநாள் இருவரும் அன்போடு அளவளாவி யிருந்தபின், சுந்தரர் மீண்டுந் திருவாரூர்க் கெழுந்தருளி வன்மீகநாதரைத் தரிசனஞ்செய்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது சேரமான்பெருமாணாயனார் சிவபெருமானால் சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய மகிமையை அறிந்து, அவரைத் தரிசிக்க விரும்பித் திருவாரூரை யடைந்து அவரை வணங்க, சுந்தரமூர்த்தி சுவா மிகள் சேரமான் பெருமாணாயனாரை வணங்கினர். பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாணாயனாரை உடன்கொண்டு ஆலயத்திற் சென்று, வன்மீகநாதரை வணங்கிப் பரவையார் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் விருந்துசெய்து, சிலநாள் அவரோடு அங்கிருந்து, இன் னுமுள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பிச் சேரமான் பெருமாணாய

ரூரும் கூடவரப் புறப்பட்டுச் சோழநாட்டிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு, பாண்டிநாட்டிற் சென்று அங்குள்ள மதுரை முதலிய சிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்து கொண்டு மீண்டும் திருவாரூர்க்குச் சென்று வன்மீகநாதரை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டுச் சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு செல்லுகையில் திருவையாற்றுக்குச் செல்லத் தடையாகக் காவேரி பெருகி வருவதைக்கண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்பதிகத்தால் அவ்வாறு வழிவிடப் பரிசனங்களோடு சென்று, பஞ்சநதேசுரரைத் தரிசித்து வணங்கி, மீளவும் அவ்வழியே வந்த பின்பு வெள்ளம் முன்போலப் பெருகி யோடிற்று. அவ்விடம் விட்டு நீங்கிக் கொங்கு நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக் கொண்டு; மலைநாட்டிற் சென்றபோது சேரமான் பெருமாணாயனார் நகரமாகிய கொடுங்கோளூரி லிருப்பவர்கள் எதிர்கொண்டுவந்து வணங்க, அவர்களுடன் திருவஞ்சைக் களமென்னுந் தலத்திற் சென்று ஆலயத்தைப் பிரதக்ஷிணம் பண்ணித் திருப்பதிகம் பாடித் துதித்துச் சேரமான் பெருமாணாயனாரோடு அவர் திருமாளிகையிற் சென்று திருவமுது செய்து, சிலநா ளங்கிருந்து புறப்படும்போது சேரமான் பெருமாணாயனார் தம்முடைய பொக்கிஷத்திலுள்ள நிதியையெல்லாம் பல ஆட்களின் மேல் சுமத்தியனுப்பத் திருமுருகன் பூண்டியென்னுந் தலத்துக்குச் சமீபமாக வரும்போது சிவபெருமான் ஆஞ்ஞையால் பூதங்கள் வேடுருக்கொண்டுவந்து அப்பொருளனைத்தையும் பறித்துக் கொண்டுபோய்ச் சுவாமி சந்நிதானத்திற் சேர்த்தன. அதுகண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுருகன் பூண்டியில் ஆலயத்துட்சென்று சுவாமியை வணங்கி, "கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடியமாத்திரத்தில் கடவுள் திருவருளால் அந்தப்பொருளெல்லாம் கோபுரவாயிலில் குவிந்திருக்கக் கண்டு, சுவாமியை வணங்கி, அவற்றை எடுத்துக்கொண்டு முன்னே செல்ல ஆட்களை ஏவி, அவ்விடத்தை நீங்கிக் கொங்குநாட்டைக்கடந்து, திருவாரூரை அடைந்து, அங்குச் சிவதரிசனம் செய்திருந்தனர்.

சிலநாள் சென்றபின் சேரமான் பெருமாணாயனாரைக்காண விரும்பி அங்கிருந்து புறப்பட்டுச் சோழதேசத்தைக் கடந்து, கொங்குதேசத்தையடைந்து, திருப்புக்கொளியூரிற் சென்று, அங்கே ஒரு வீதியிலே இரண்டு வீடுகளுள் ஒரு வீட்டில் மங்கல ஒலியும், மற்றொரு வீட்டில் அழுகையொலியுமா யிருக்கக்கண்டு, அங்கிருந்த பிராமணர்களை நோக்கி இஃதென்னவென, அவர்கள் வணங்கி, ஐந்து வயதுள்ள இரண்டு புதல்வர்கள் குளத்தில் நீராடுகையில், ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றொருவன் பிழைத்து வந்தான். இந்த வீட்டில் முழங்குமோசை பிழைத்துவந்த புதல்வனுக்கு உபநயனம் செய்யும் மங்கல ஓசை; அந்த வீட்டிலுண்டாமோசை இறந்த பிள்ளையைக் குறித்து, அழுகைக் குரலோசை

என்றனர். அதுகேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுளமிரங்கி அந்தக் குளத்தருகிற் சென்று அம்முதலை தான் விழுங்கிய புதல்வனை உமிழும் பொருட்டு, "உரைப்பாருரையுகந் துள்கவல்லார்" என்னுந் திருப்பதிகம் பாடியபோது, அம் முதலை பிள்ளையைக் கரையில் உமிழ்ந்தது. தாய் ஓடி அப்பிள்ளையை எடுத்துக்கொண்டு வந்து, நாயகனோடு தானும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடிகளில் விழுந்து நமஸ்காரஞ் செய்தாள்; சுந்தரமூர்த்தி சுவாமிகள் அப்பிள்ளையை அழைத்துக்கொண்டு, அவிநாசிக்குப் போய்ச் சிவதரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடித் திரும்பி, அப்புதல்வன் வீட்டிற்சென்று அவனுக்கு உபநயனஞ் செய்வித்து, அதன் பின்பு மகோதையென்னுந் தலத்திற் சென்று இறங்கியிருக்கையில், ஒருநாள் சேரமான் பெருமாணாயனார் ஸ்நானஞ் செய்யும்போது, சுந்தரமூர்த்திசுவாமிகள் மீண்டும் திருவஞ்சைக் களத்திற்குச் சென்று, அங்குள்ள ஆலயத்தை வலஞ்செய்து, உள்ளே புகுந்து, சந்நிதியில் விழுந்து, நமஸ்கரித்து எழுந்துநின்று, அழலிற்பட்ட மெழுகுபோல் உள்ளமுருக மயிர்க்குச் செறியக் கண்ணீர்பெருக இரண்டு கைகளும் சிரசின்மேற் குவியத் துதித்து, அடியேனை மாயாகாரியமாகிய இவ்வுலக வாழ்க்கையினின்று நீக்கித் தேவரீருடைய திருவடியிற் சேர்த்தருள வேண்டுமென்னுங் கருத்தோடு "தலைக்குத் தலைமாலை" என்னுந் திருப்பதிகம் பாடியருள, தயாசமுத்திரமாகிய சிவபெருமான், 'பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, நீங்கள் சென்று நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மே லேற்றிக்கொண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டார். அவர்கள் அவ்வாறே சென்று சந்நிதானத்தினின்றும் எழுந்தருளுகிற சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர்கொண்டு சிவபெருமானுடைய திருவாணையைத் தெரிவிக்க, அவர் சுவாமியை வணங்கி வெள்ளையானையின் மேலேறிச் செல்லுகையில் தம்முடைய தோழராகிய சேரமான் பெருமாணாயனாரை நினைத்துச் செல்ல, சேரமான் பெருமாணாயனார் அஃதறிந்து ஓர் குதிரையின்மேலேறி அதிவிரைவாகத் திருவஞ்சைக் களத்துக்குப்போய்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளையானையின்மேலேறி அந்தரமார்க்கமாய்ச் செல்வதை யுணர்ந்து, தம்முடைய குதிரையின் காதில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதிய அளவில் அக்குதிரை ஆகாயமார்க்கமாய்ப் போய்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகளேறிச் செல்லும் வெள்ளையானையை வலம்வந்து, அதற்குமுன் சென்றது. சேரமான் பெருமாணாயனார் படைவீரர்கள் அவரைக் கண்ணுக்குத் தோன்றுமளவும் ஆகாயத்திற் கண்டு பின் காணாமையால் மனவருத்தமுற்றுத் தம் தம் உடைவாளால் உடலைச் சேதித்து வீரயாக்கையைப் பெற்று அந்நாயனாருக்கு முற்பட்டு அவரைத் தரிசித்துக்கொண்டு சென்றனர். சேரமான் பெருமாணாயனார் முன்செல்லப் பின் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள், "தானெனை முன்படைத்தான்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கைலாசமலையின் தெற்கு வாயிலுக்கு முன் சென்றனர். அங்கு

இருவரும் வாகனங்களினின் றிரங்கிச் சந்நிதானத்திற்சென்ற கைலாச பதியை நமஸ்கரித்தெழுந்து அவருடைய திருவருளால் பழையபடி சுந்தரர் ஆலாலசுந்தரராய் தாம் முன்செய்துகொண்டிருந்த திருத்தொண்டு செய்பவரும், சேரமான் பெருமாணுயனர் தம் தொழில் செய்பவரும் ஆயினர்.

முன் பூமியின்கண் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முன்போலக் கமலினியும் அனிந்திதையுமாகிப் பார்வதியாருக்குத் திருத்தொண்டு செய்திருந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் வழியில் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை வருண ராஜனிடத்துக் கொடுத்தருள அவன் அதைத் திருவஞ்சைக் களத்திற்கொண்டுபோய் விளக்கினன்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திவ்விய சரித்திரம்

முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நம்பியாரூரரென்னும்

# சுந்தரமூர்த்திசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

மூலமும் - உரையும்.

## திருவெண்ணெய்நல்லூர்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

**பித்தாபிறை சூடீபெரு மானேயருளாளா**
**வெத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை [றையு**
**வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு**
**ளத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே.**

### பதவுரை

பித்தா - பித்தனே, பிறைசூடீ - பிறையையணிந்தவனே, பெருமானே- பெருமையுடையோனே, அருளாளா - அருளாளனே, எத்தால் - எவ்வகையாலும், மறவாதே - மறவாமலே, நினைக்கின்றேன் - நினையாநிற்பவனாகிய எனது, மனத்து - மனத்தில், உன்னை வைத்தாய் - உன்னை யிருத்தினவனே, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்றிசையிலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையி லெழுந்தருளிய, அத்தா - அத்தனே, உனக்கு ஆள் ஆய் — முன்னமே உனக் கடிமையாகி, இனி - இனி, அல்லேன் எனல் - அல்லேனென்றல், ஆமே - கூடுமோ—என்றவாறு.

### பொழிப்புரை

பித்தனே - பிறையையணிந்தவனே, பெருமையுடையோனே, அருளாளனே, எவ்வகையாலும் மறவாமலே நினையாநிற்பவனாகிய என் மனத்தில் உன்னை யிருத்தினாய், பெண்ணையாற்றின் தென்றிசையிலுள்ள திருவெண்

ணெய் நல்லூரில் திருவருட்டுறையி லெழுந்தருளிய அத்தனே, முன்னமே உனக் கடிமையாகி, இனி அல்லேனென்றல் கூடுமோ.

### கருத்துரை

திருவெண்ணெய் நல்லூரருட்டுறையு ளெழுந்தருளியிருக்கிற அத்தனே, உனக்கு நான் அடிமையாகி இனி யல்லேனென்றல் கூடுமோ வென்பதாம்.

### விசேஷவுரை

"பத்தராத்தத்திலுறுக்கு முத்திப்பதங் கொடுக்கும்பித்தன்" ஆதலாலும், அன்பர் அடாதவற்றைச் செய்யெனினும் செய்வோனாதலாலும், அன்பரிடத்துப் பித்துடைய னாதலாலும், தம்மைத் தடுத்தாட்கொண்ட பின்பு, என்னைப் பாடுகவென, உன்பெருமை யாதுகொண்டு பாடுகேனென, "அன்பனை யருளிஞேக்கி யங்கண ரருளிச்செய்வார், முன்பெனைப் பித்தனென்றே மொழிந்தனை யாதலாலே, என்பெயர் பித்தனென்றே பாடுவா யென்றார் நின்ற, வன்பெருந் தொண்டராண்ட வள்ளலைப் பாடலுற்றார்" 'கொத்தார்மலர்க் குழலாளொரு கூறா யடியவர்பால், மெய்த்தாயினு மினியானையவ் வியனாலவர் பெருமான், பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிகம், இத்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார்" எனப் புராணங் கூறுதலாலும் இத்திருப்பதிகத்தின் றொடக்கத்தில் பித்தாவென்னுமொழி யமைந்ததென்க. பிறை - ஒரு கலையாகிய சந்திரன். அருட்டுறை - திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயம். அத்தன் — கடவுள். ஆமேயென்ப தனீற்றேகாரம் எதிர்மறைப் பொருட்டு. பித்தன் என்பது மங்கலமொழியன்றேனும் இறைவனருளப்பாட்டால் முதற்கண் ணமைக்கலாயிற்றென் றுரைத்துக்கொள்க. அருளாளன்- அருளையாளுதலுடையவன். இனி யென்பது, "பண்டறியேன் கூற்றென்பதனை யினியறிந்தேன், பெண்டகையாற் பேரமர்கட்டு" என்னுந் திருக்குறளிற்போல நிகழ்காலத்தைக் குறித்தது. சூடி வினையாலணையும் பெயர். (1)

நாயேன்பலநாளுநினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) நாயேன் - நாயினேன், பலநாளும் - நெடுநாள்களாகவும், மனத்து - மனத்தில், உன்னை நினைப்பு இன்றி - உன்னை நினைத்தலில்லாதே, பேயாய்த்திரிந்து — பேய்போலத்திரிந்து, எய்த்தேன் - இளைத்தேன், (இன்று) பெறல்ஆகா - பெறவொண்ணாத, அருள்பெற்றேன் - (உன்) திருவருளைப் பெற்றேன், வேய்ஆர் - (கரையில்) மூங்கில் நெருங்கப்பெற்ற, பெண்ணைத் தென்பால் - பெண்ணையாற்றின் தென்கரையில், வெண்ணெய்நல்லூரருட்டுறையுள் - திருவெண்ணெய்நல்லூரில் அருட்டுறையென்னும் தலத்தில், ஆயா - ஆயனே, ஆளாய் - (உனக்கு முன்னமே) அடிமையாகி, இனியல்லேனெனலாமே - இனி உன் அடிமையல்லேன் என்றல் கூடுமோ—எ-று.

(போ-ரை.) நாயினேன் நெடுநாள்களாகவும் மனத்தில் உன்னை நினைத்த லில்லாதே பேய்போலத் திரிந்து இளைத்தேன், (இன்று) பெறவொண்ணாத உன் திருவருளைப் பெற்றேன், (கரையில்) மூங்கில் நெருங்கப்பெற்ற பெண் ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள் ஆயனே உனக் காளா யினி யல்லே னெனலாமே.

(க-ரை.) பலநாளும் உன்னை நினைத்தலின்றிப் பேயாய்த் திரிந்தெய்த்து பெறுதற்கரிய வுன் திருவருளை இன்றுபெற்றேன், ஆயனே உனக்கடிமையாகி இனியல்லேனென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) நாயினேன் - நாய்போல்வேன். எய்த்தல் - இளைத்தல். பெற லாகா - பெறுதலருமையாகிய. நதியில் மூங்கிலுள தாதலின்மையால் கரையி லென்றுரைக்கலாயிற்று. ஆயன் - ஆன்மகோடிகட்குத் தாயை நிகர்த்தவன், வேதாகமாதிகளா லாராயப்பட்டவன் எனினுமாம். (2)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி [யு
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட் டுறை
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) மனத்து - மனத்தில், உன்னை மறவாதே நினைக்கின்றேன் - உன்னை மறவாமலே நினையாநின்றேன், மன்னே - இறைவனே, பொன்னே - பொன்னையும், மணிதானே - மணியையும், வயிரமே - வயிரத்தையும், பொ ருது உந்தி - மோதித்தள்ளி, மின் ஆர் - மின்னுதலையுடைய, பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்—, அன்னே-தாயே, உனக்காளா யினி யல்லேனெனலாமே—எ-று.

(போ-ரை.) மனத்தில் உன்னை மறவாதேநினையாநின்றேன், இறைவனே பொன்னையும் மணியையும் வயிரத்தையும் மோதித்தள்ளி மின்னுதலையுடைய பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள் அன்னே, உனக் காளாயினி யல்லேனெனலாமே.

(க-ரை.) நான் உன்னை மறவாமல் நினையாநின்றேன், மன்னே, அன் னே, உனக்காளாயினி யல்லேனென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) மன் - இறைவன், நிலைபேறுடையவன் என்றலுமாம். பொன்னே மணிதானே வயிரம்மே என்பவற்றில் ஏகாரங்கள் உம்மைப்பொ ருள். மின் - மின்னுதல் (தொழிற்பெயர்). பொருதல் - மோதுதல். உந்து தல் - தள்ளுதல். வயிரம்மே யெனத் தனித்துரைத்தலால் மணியென்பதற்கு அஃதொழிய மற்றுள மணிகளென்றுரைத்துக்கொள்க. வயிரம்-மரவயிரங்கள் எனினுமாம். (3)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ [பு
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) இனி-இனி, முடியேன்-இறவேன், பிறவேன்-பிறக்கமாட்டேன், பெறின் (பிறவியைப்) பெற்றால், மூவேன்-முதிரேன், பெற்றம் ஊர்தீ-விடையூர்வோய், கொடியேன் - கொடியவனாய், பல பொய்யே யுரைப்பேனை - பல பொய்மொழியே பேசுவேனாகிய என்னை, நீ குறிக்கொள் - நீ குறிக்கொண்டு காப்பாயாக, செடியார்-(கரையில்) செடிகள் நிறைந்த, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, அடிகேள்-அடிகாள், உனக்கு ஆளாயினி அல்லேனெனலாமே—எ-று.

(பொ-ரை.) இனி இறவேன், பிறவேன், பிறவியைப் பெற்றால் முதிரேன், விடையூர்வோய், கொடியவனாய் பல பொய்மொழியே பேசுவேனாகிய என்னை நீ குறிக்கொண்டு காப்பாயாக, கரையில் செடிகள் நிறைந்த பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அடிகாள், உனக் காளாயினி யல்லேனெனலாமே.

(க-ரை.) இனிநான் இறவேன் பிறவேன் முதிரேன், பல பொய் பேசித் திரியுமென்னை, நீ குறிக்கொண்டு காக்கவேண்டும், இடபவாகனனே, உனக் காளாயினி யல்லே னென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) முடிதல் - இறத்தல். பிறத்தல் - ஜநமித்தல். மூத்தல் - முதிர்தல், பெற்றம் - இடபம். ஊர்தல் - செலுத்தல். குறிக்கொள்ளல் - திருவுளம் பற்றல். அடிகள் - சுவாமி. (4)

பாதம்பணிவார்கள்பெறும்பண்டமதுபணியா
யாதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) ஆதன் பொருள் ஆனேன் — மூடனென்னும் பொருளாயினேன், அறிவு இல்லேன் - அறிவில்லாதேன், அருளாளா - அருளாளனே, பாதம் பணிவார்கள் - உன் திருவடியை வணங்குவோர், பெறு — பெறுதற்குரிய, பண்டம் அது — பொருளாகிய அதனை, பணியாய் - அருள்செய்யக் கடவை, தாது ஆர் - பூந்துகள் நிறைந்த, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, ஆதி-முதல்வனே, உனக்காளாயினி அல்லேனெனலாமே—எ-று.

(பொ-ரை.) மூடனென்னும் பொருளாயினேன், அறிவில்லாதேன், அருளாளனே, உன் திருவடியை வணங்குவோர் பெறுதற்குரிய பொருளாகிய அதனை அருள்செய்யக்கடவை, பூந்துகள் நிறைந்த பெண்ணைத் தென்பால்

வெண்ணெய் நல்லூரருட் டுறையுள் ஆதீ, உனக் காளாயினி யல்லே னெனலாமே.

(க-ரை.) அருளாளா, மூடனாகிய எனக்கு, உன்னடியார் பெறுதற் குரிய பொருளை யருள்செய்பக்கடவை, முதல்வனே, உனக்காளாயினி யல்லே னென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) பணிதல் - வணங்குதல். பண்டம் - பொருள். பாதம் பணிவார்கள் - அடியார்கள். பண்டம் இவ்வடியார்கள் அடைதற்குரிய முத்தி, மெய்ஞ்ஞானம் என்றலுமாம். ஆதன் - மூடன், தாது - பொற்பொடி முதலியவையுமாம். ஆதி - முதல், ஆகுபெயர். (5)

தண்ணார்மதிசூடி தழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தோய் [யு
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) தண் ஆர் - குளிர்ச்சி பொருந்திய, மதிசூடி - பிறைசூடி, தழல் போலும் - நெருப்புப்போலும், திருமேனி - திருமேனியை யுடையவனே, எண்ணார் - பகைவரது, புரம் மூன்றும் - முப்புரங்களையும், எரியுண்ண - நெருப்புண்ணும்படி, நகைசெய்தோய் - சிரித்தவனே, மண் ஆர் — அலங்காரம் அமைந்த, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அண்ணா—, உனக்காளாயினி யல்லேனெனலாமே—எ-று.

(பொ-ரை.) குளிர்ச்சிபொருந்திய பிறைசூடீ, நெருப்புப் போலுந் திருமேனியையுடையவனே, பகைவரது முப்புரங்களையும் நெருப்புண்ணும்படி சிரித்தவனே, அலங்காரமமைந்த பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அண்ணா, உனக்காளாயினி யல்லேனெனலாமே.

(க-ரை.) பிறைசூடீ, நெருப்புருவனே, திரிபுராந்தகனே, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அண்ணா, உனக்காளாயினி யல்லேனென்றல் கூடுமோவென்பதாம்.

(வி-ரை.) தண்மை தண்ணென்றாயிற்று. பல்லவபாணீ, அளிகுலவேணி என்னும் வடநூன்மதம்பற்றித் திருமேனியுடையவனைத் திருமேனீயென்றார். எண்ணார் - மதியாதவர் (பகைவர்). எரி - ஆகுபெயர். நகைசெய்தோய் என்றது ஒருசொல். மண்ணல் - அலங்கரித்தல். மண் முதனிலைத் தொழிற் பெயர். அண்ணா என்பதற்கு தந்தாய் என்றும், கிட்டுதற்கரிய என்றும் பொருளுரைத்துக்கொள்க. (6)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) ஊன் ஆய் - தசையாகி, உயிர் ஆனாய் - சீவனானாய், உடல் ஆனாய் - உடம்பானாய், உலகு ஆனாய் - உலகமானாய், வான் ஆய்-ஆகாயமாகி, நிலன் ஆனாய்-பூமியானாய், கடல்ஆனாய் - சமுத்திரமானாய், மலைஆனாய்-பர்வதமானாய், தேன்ஆர் - தேன்பொருந்திய, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்—, ஆனாய்-அமர்ந்தோய், உனக்காளாயினி யல்லே னெனலாமே—எ-று.

(பொ-ரை.) தசையாகி சீவனானாய், உடம்பானாய், உலகமானாய், ஆகாயமாகி பூமியானாய், கடலானாய், மலையானாய், தேன்பொருந்திய பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள் அமர்ந்தோய், உனக்காளாயினி யல்லே னெனலாமே.

(க-ரை.) ஊனுயிர் முதலிய வெல்லாம் நீயேயாயினை, பெண்ணைத்தென் பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு ளமர்ந்தோய், நான், உனக்காளாயினி யல்லேனென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) ஊன் - மாமிசம், தேன் வண்டுகள், அன்றி மலைத்தேன் முதலியனவுமாம். ஆதல் - அமர்தல். (7)

ஏற்றார்புரமூன் றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித் திரிவேனோசெக்கர்வானீ [யு
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளாத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) ஏற்றார் - பகைவரது, புரம் மூன்றும் - முப்புரங்களையும், எரிஉண்ண-நெருப்புண்ணும்படி, சிலைதொட்டாய்-விற்பிடித்தவனே, தேற்றாதனசொல்லி - தெளிவில்லனவாகிய சொற்களைச்சொல்லி, திரிவேனோ - அலைவேனோ, செக்கர்வான்நீர் - செவ்வானத்தின் நிறத்தை, ஏற்றாய்-அடைந்திருப்பவனே, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, ஆத்தா-ஆப்தனே, உனக்காளாயினி யல்லேனெனலாமே—எ-று.

(பொ-ரை.) பகைவரது முப்புரங்களையும் நெருப்புண்ணும்படி விற்பிடித்தவனே, தெளிவில்லனவாகிய சொற்களைச் சொல்லி அலைவேனோ, செவ்வானத்தின் நிறத்தையடைந்திருப்பவனே, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் ஆப்தனே, உனக்காளாயினி யல்லே னெனலாமே.

(க-ரை.) பகைவரது முப்புரத்தை யெரித்தவனே, தேற்றாதனசொல்லி அடியேன் திரியவோ, செவ்வானின் நிறத்தையுடையவனே, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் ஆத்தனே, உனக்காளாயினி யல்லே னென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) ஏற்றல் - எதிர்த்தல். தொடுதல் - தீண்டுதலுமாம். தேற்றாதன - அறிவொடு கூடாத சொற்கள். செக்கர்வான் நீர் ஏற்றல் என்பதற்கு செவ்வானம்போலுஞ் சடையில் கங்கையை யேற்றவனே யென் றுரைத்தலு

மமையும், ஆத்தன் ஆப்தன் என்னும் வடசொற்றிரிபு, உயிர்களுக்கு இதஞ் செய்பவன் என்பது பொருள். (8)

மழுவாள்வலனேந்திமறையோதிமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே [றையு
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

(ப-ரை.) மழு வாள் - மழுவாகிய வாளினை, வலன் ஏந்தீ - வலப்புறத் தேந்துவோனே, மறை ஓதீ - வேதாத்தியயநஞ் செய்வோனே, மங்கை பங்கா - பெண்பாகனே, தொழுவார் அவர் - வணங்குவோராகிய அவர்களது, துயர் ஆயின - துன்பங்களாயினவற்றை, தீர்த்தல் - ஒழித்தல், உனதொழிலே - உன்தொழிலேயாம், செழு - செழுமையாய், வார் - ஒழுகுகின்ற, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, அழகா - அழகனே, உனக்காளா யினியல்லே னெனலாமே—எ-று.

(பொ-ரை.) மழுவாகிய வாளினை வலப்புறத் தேந்துவோனே, வேதாத்தியயநஞ் செய்வோனே, பெண்பாகனே, வணங்குவோராகிய அவர்களது துன்பங்களாயினவற்றை யொழித்தல் உன் தொழிலேயாம், செழுமையாய் ஒழுகுகின்ற பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அழகனே, உனக் காளாயினி யல்லே னெனலாமே.

(க-ரை.) மழு வாள் வலனேந்துவோய், மறையோதுவோய், மங்கை பங்கா, வணங்குவோர் விசனத்தை யொழிப்பது உன் தொழிலேயாம், பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள் அழகனே, உனக்காளா யினி யல்லேனென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) மழுவாள்-இருபெயரொட்டு. வலன்-போலி. ஏந்தீ, ஓதீ வினையாலணையும் பெயர்கள். மங்கை - உமாதேவி. வார்தல் - ஒழுகுதல். (9)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே.

(ப-ரை.) கார் ஊர் - மேகத்தினின்றும் வீழ்கின்ற, புனல் எய்தி - நீர் வந்து, திரை - அலைகளாகிய, கையால் - கைகளைக்கொண்டு, கரைகல்லி - கரையைத்தோண்டி, பார் ஊர் - உலகமெங்கும் பரவின, புகழ் எய்தி - புகழை யடைந்து, திகழ் - விளங்குகின்ற, பல் - பலவாகிய, மா - பெரிய, மணி உந்தி - மணிகளைக் கொழித்து, சீர் ஊர் - சிறப்புப்பொருந்திய, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்— (எழுந்தருளியிருக்கிற), எம்பெருமாற்கு - எம்பெருமானுக்கு, ஆரூரன் - ஆரூரனாகிய யான், ஆள் அல்லேன் எனல் ஆமே - அடிமையல்லே னெனலாமோ— எ-று.

(பொ-ரை) மேகத்தினின்றும் வீழ்கின்ற நீர்வந்து அலைகளாகிய கைக ளைக்கொண்டு கரையைத்தோண்டி உலகமெங்கும் பரவின புகழையடைந்து விளங்குகிற பலவாகிய பெரிய மணிகளைக் கொழித்துச் சிறப்புப்பொருந்திய பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையி லெழுந்தருளி யிருக்கும் எம்பெருமானுக்கு ஆரூரனாகியயான் அடிமையல்லேனெனலாமோ.

(க-ரை.) அலைகளாகிய கைகளால் கரையைக் கல்லிப் பல மணிகளைக் கொழித்து விளங்குகிற பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் டுறையி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானுக்கு நான் அடிமையல்லே னென்றல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) கார் - ஆகுபெயர். கல்லல் - தோண்டல். திரை-ஆகுபெயர். உந்தல் - கொழித்தல். (10)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமி பெயர் - தடுத்தாட்கொண்ட ஈசுவரர்.

தேவியார்பெயர்-வேற்கண்மங்கையம்மை.

---

## திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டீருமைக்
 கொண்டுழல்கின்றதோர் கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக்குத்தித்தெருவே திரியுஞ்
 சிலபூதமுநீருந்திசை திசையன
சோத்திட்டுவிண்ணோர்பலருந்தொழ நும்மரைக்
 கோவணத்தோடொருதோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும்பாம்புகைக்கொண்டதும்
 பாம்படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

(ப-ரை.) கோத்திட்டையும்-திருக்கோத்திட்டையையும், கோவலூரும்—திருக்கோவலூரையும், கோயில்கொண்டீர் - திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருந்தீர், உம்மைக்கொண்டு - உம்மைப்பற்றி, உழல்கின்ற-உழலாநின்ற, கொல்லை - பூந்தோட்டங்களையும், சில்லை - பண்டியுருள்களையும், சேத்திட்டு-சிவந்து, (கோவித்து) குத்தி-குத்தாநின்று, திசை திசையன - திசை திசையன வாய், தெருவே திரியும்-தெருவிற் றிரியாநிற்கும், சிலபூதமும் - சிலபூதங்களும், விண்ணோர் பலரும்-தேவர்கள் பலரும், சோத்திட்டு-அஞ்சலிசெய்து, தொழ-வணங்காநிற்க, நும் - நுமது, அரை - திருவரையிலுள்ள, கோவணத்தோடு -

கோவணத்துடனே, ஒரு தோல் - ஒரு தோலானது, புடைசூழ்ந்தது - பக்கத்தே சூழ்ந்திருந்தது, ஆர்த்திட்டதும் பாம்பு - (அதன்மேல்) கட்டினதும் பாம்பே, கைக்கொண்டதும் பாம்பு-கைக்கொண்டிருப்பதும் பாம்பே, (ஆதலால்) அடிகேள்-சுவாமிகாள், நுமக்கு ஆள்செய்ய - உமக்கடிமைசெய்ய,அஞ்சுதும்-யாம் அஞ்சாநின்றேம் எ - று.

(பொ-ரை.) தேவரீரும் திருக்கோத்திட்டையையும், திருக்கோவலூரையும் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருந்தீர், உம்மைப்பற்றி யுழலாநின்ற சில பூதங்களும் பூந்தோட்டங்களையும் வண்டியுருள்களையும் சிவந்து (கோவித்தழித்து) குத்தாநின்று திசை திசையனவாய் தெருவிற்றிரியாநிற்கும், (அது வேயுமன்றி) தேவர்கள் பலரும் அஞ்சலிசெய்து வணங்காநிற்க, நுமது திருவரையிலுள்ள கோவணத்துடனே ஒரு தோலானது பக்கத்தே சூழ்ந்திருந்தது, (அதன்மேல்) கட்டினதும் பாம்பே, கைக்கொண்டிருப்பதும் பாம்பே, (ஆதலால்) சுவாமிகாள், உமக்கடிமைசெய்ய யாம் அஞ்சாநின்றேம்.

(க - ரை.) திருக்கோத்திட்டையிலும் திருக்கோவலூரிலும், கோயில் கொண்டிருக்கும் நுமக்குப் பரிகரங்கள் பூதங்கள், நீர் அரையிலும் கையிலும் கட்டியிருப்பது பாம்பு, ஆதலால், அடிகேள் உமக்கு அடிமைசெய்ய யாம் அஞ்சாநின்றேம் என்பதாம்.

(வி - ரை.) சேத்திட்டு என்பதில் பகுதி செய்மை. சோத்து சோத்தம் என்பதன் விகாரம். சோத்தம்-அஞ்சலி. "சோத்துன்னடியமென்றோரை" "சோத்தெம்பிரானென்று சொல்லிச்சொல்லி" என்றற்றொடக்கத்தனவற்றானிது விசதம். ஆர்த்திட்டது—கட்டினது. (1)

முண்டந்தரித்தீர் முதுகாடுறைவீர்
முழுநீறுமெய்பூசுதிர் மூக்கப்பாம்பைக்
கண்டத்திலுந்தோளிலுங் கட்டிவைத்தீர்
கடலைக்கடந்திட்டதோர் நஞ்சையுண்டீர்
பிண்டஞ்சுமந்தும் மொடுங்கூடமாட்டோம்
பெரியாரொடுநட்பினி தென்றிருத்தும்
அண்டங்கடந்தப்புறத்து மிருந்தீ
ரடிகேளுமக்காட்செய வஞ்சுதுமே.

(ப - ரை.) முண்டம் தரித்தீர்-தலைமாலையைத் தரித்தீர், முதுகாடு உறைவீர் - மயானத்தில் வாழ்வீர், மெய் - திருமேனியில், முழுநீறுபூசுதிர் - முழுவெண்பொடியைப் பூசுவீர், மூக்கப்பாம்பை—மூர்க்கப்பாம்பினை, கண்டத்திலும்-கழுத்திலும், தோளிலும் – புயத்திலும், கட்டிவைத்தீர் - கட்டிவைத்தீர், கடலைகடந்திட்டது-கடலின் வரம்பு கடந்ததாகிய, ஓர்-ஒப்பற்ற, நஞ்சை உண்டீர்-விஷத்தைச் சாப்பிட்டீர், பிண்டம்சுமந்து - உடம்பைச்சுமந்து, உம்மொடும் கூடமாட்டோம்-உம்முடன் சேரமாட்டோம், பெரியாரொடு நட்பு-பெரி

யோருடனே நட்புக்கொள்ளல், இனிது என்று இருந்தும்-இனிதென் றிருப்போம், அண்டம் கடந்து - எல்லாவுலகங்களையுங்கடந்து. அப்புறத்தும் இருந்தீர் - அப்பாலுமிருக்கின்றீர், (ஆதலால்) அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதும் - சுவாமிகாள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றோம் எ - று.

(பொ-ரை.) தலைமாலையைத்தரித்தீர், மயானத்தில் வாழ்வீர், திருமேனியில் முழுவெண்பொடியைப்பூசுவீர், மூர்க்கப்பாம்பினைக் கழுத்திலும் புயத்திலும் கட்டிவைத்தீர், கடலின் வரம்பு கடந்ததாகிய ஒப்பற்ற நஞ்சை யுண்டீர், உடம்பைச்சுமந்து உம்மொடுங் கூடமாட்டோம், பெரியோருடனே நட்புக்கொள்ளல்இனிதென் றிருப்போம்,எல்லாவுலகங்களையுங்கடந்துஅப்பாலுமிருக்கின்றீர், ஆதலால், சுவாமிகாள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றோம்.

(கு - ரை.) தலைமாலையைத் தரித்தல் முதலிய வுமது செய்கைகளைக் கண்டு அடிகேள் உமக்காட்செய வஞ்சுதும் என்பதாம்.

(வி - ரை.) முண்டம் - தலை, அது இங்குத்தலைமாலைக்காயிற்று, வெண்டலையெனினுமாம். இடுகாடு சுடுகாடு என்னு மிரண்டுமடங்க முதுகாடு என்றார். மூக்க முழுக்க என்றலுமொன்று. கடைந்திட்டது எனப் பாடமோதி பாற்கடலைக் கடைந்தெடுத்திட்டது என்றுரைப்பினுமாம். "பாற்கடல் கடையப்படுங் கடுவெண்ணெயைத் திருமிடற்றடக்கிய சிவனே" என்றார் பிறரும். "தேமலினியகுயிலே சேட்டியேலெங்கள் பெருமான், பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக்கப்பால், சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்துநின்ற தொன்மை," "அண்டங்கடந்தவ னன்னமென்றான்" என்பவாதலான், அண்டங்கடந் தப்புறத்தும்மிருந்தீர் என்றார். (2)

மூடாயுமுயலகன் மூக்கப்பாம்பு முடைநாறிய
வெண்டலைமொய்த்த பல்பேய்
பாடாவருபூதங்கள் பாய்புலித்தோல்
பரிசொன் றறியாதன பாரிடங்க
டோடார்மலர்க்கொன் றையுந் துன்னெருக்குந்
துணைமாமணி நாகமரைக்கசைத்தொன்
றூடாதனவேசெய்தீ ரெம்பெருமா
னடிகேளுமக்காட்செய வஞ்சுதுமே.

(ப - ரை.) மூடுஆய முயலகன் - மூடனாகிய முயலகன், மூக்கப்பாம்பு - மூர்க்கப்பாம்பு, முடைநாறிய வெண்தலை - முடை நாற்றம் வீசுகின்ற வெண்டலை, மொய்த்தபல்பேய்பாடாவரு பூதங்கள்-மிகுந்தபல திருநாமங்களைப்பாடி வருகிற பூதங்கள், பாய்புலித்தோல் - பாயுமியல்புள்ள புலியின்தோல், பரிசு ஒன்று அறியாதன பாரிடங்கள் - ஒருவகையு மறியாதனவாகிய பிசாசங்கள், (என்னு மிவற்றோடு) தோடுஆர்-இதழ்நிறைந்த, மலர்க்கொன்றையும் - கொன்றைமலர் மாலையையும், துன் எருக்கும் - மிக்கு எருக்கம்பூ மாலையையும்,

(உடையீர்,) துணை - (தனக்குத்தானே) ஒப்பாகிய, மாமணி - மாணிக்கத்தை யுடைய, நாகம் - பாம்பை, அரைக்கு அசைத்து - திருவரையிற்கட்டி, ஒன்று ஆடாதனவே செய்தீர் - சிறிதும் ஆடாதனவாகவே செய்தீர், (ஆதலால்) எம் பெருமான் - எம்பெருமானே, அடிகேள் உமக்காட்செயவஞ்சுதும் - சுவாமி காள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றோம் எ - று.

(பொ - ரை.) மூடனாகிய முயலகன், மூர்க்கப்பாம்பு, முடைநாற்றம்வீசு கிற வெண்டலை, மிகுந்த பலதிருநாமங்களைப் பாடிவருகிறபூதங்கள், பாயுமியல் புள்ள புலியின்தோல், ஒருவனையு மறியாதனவாகிய பிசாசங்கள், (என்னு மிவற்றோடு) இதழ்நிறைந்த கொன்றைமலர் மாலையும் மிக்க எருக்கம்பூமாலை யும் (உடையீர்) தனக்குத்தானே யொப்பாகிய மாணிக்கத்தையுடைய பாம் பைத் திருவரையிற்கட்டிச் சிறிதும் ஆடாதனவாகவே செய்தீர், (ஆதலால்) எம்பெருமானாகிய அடிகேள் உமக்காட்செயவஞ்சுதும்.

(க - ரை.) மூடனாகிய முயலகன் முதலிய பொருள்களையுடையீராத லால், எம்பெருமானாகிய அடிகேள் உமக்காட்செயவஞ்சுதும் என்பதாம்.

(வி - ரை.) மூடு-மூடன், (ஆகுபெயர்) பாடா-செயவெனெச்சம். பாரி டம் - பூதம். கொன்றை எருக்கு என்பன ஆகுபெயர்கள். மணிகளெல்லாவற் றினுஞ் சிறந்ததாதலால் மாணிக்கத்தை மாமணி என்றார் ஒன்றென்பதனீற் றும்மைதொக்கது. (3)

மஞ்சுண்டமாலை மதிசூடுசென்னி
மலையான்மடந்தை மணவாளநம்பி
பஞ்சுண்டவல்குற்பணை மென்முலையாளொடு
நீருமொன்றாயிருத்த லொழியீர்
நஞ்சுண்டுதேவர்க் கமுதங்கொடுத்த
நலமொன்றறியோ முங்கைநாகமதற்
கஞ்சுண்டுபடமது போகவிடீ
ரடியோமுமக்காட்செய வஞ்சுதுமே.

(ப - ரை.) மஞ்சு உண்ட - அழகுபொருந்திய. மாலைமதி - மாலைப்பிறை யை, சூடு - தரித்த, சென்னி - சடாபாரத்தையுடைய, மலையான்மடந்தை- மலையரையன்மகளுக்கு, மணவாளநம்பி-மணாளனாகிய நம்பீ, பைஞ்சு உண்ட அல்குல்-பாம்பின் படம்போலும் அல்குலையும், பணை-பருத்த, மெல் - மெல் லிய, முலையாளோடு - தனங்களையு முடையவளாகிய வுமாதேவியோடு, நீரும் - தேவரீரும், ஒன்றாயிருத்தல் ஒழியீர் - ஒருவடிவாயிருத்த லொழியீர், நஞ்சுஉண்டு-விடத்தையுண்டு, தேவர்க்கு-தேவர்களுக்கு, அமுதம் கொடுத்த- அமுதம் கொடுத்தருளிய, நலம் - நன்மையை, ஒன்று அறியோம் - சிறிதுமறி யோம், உம் கை - உமதுகையிலுள்ள, நாகமதற்கு - பாம்புக்கு, படம் அஞ்சு உண்டு - ஐந்து படங்களுண்டு, அது போகவிடீர் - அதனை யொழியவிடீர்,

(ஆதலால்) அடியோம்-அடியேம், உமக்காட்செய வஞ்சுதும்-உமக்கு அடிமை செய்ய அஞ்சாநின்றோம் எ-று.

(போ - ரை.) அழகுபொருந்திய மாலைப்பிறையைத்தரித்த சடாபாரத்தையுடைய மலையரையன்மகளுக்கு மணாளனாகியநம்பீ பாம்பின்படம்போன்ற அல்குலையும் பருத்த மெல்லியதனங்களையுமுடையவளாகிய வுமாதேவியோடு நீரும் ஒருவடிவாயிருத்தலை யொழியீர், விடத்தையுண்டு தேவர்க்கு அமுதம் கொடுத்த நன்மையைச் சிறிது மறியோம்,உமது கையிலுள்ள பாம்புக்கு ஐந்து படங்களுண்டு, அதனை யொழியவிடீர், ஆதலால் அடியேம் உமக்காட்செய வஞ்சுதும்.

(க - ரை.) மலைமகணாயகனே, நீர் அம்மலைமகளோடு ஒன்றாயிருத்தல் முதலிய செயல்களொழியீராதலால், உமக்காட்செயவஞ்சுதும் என்பதாம்.

(வி - ரை.) மதிசூடிசென்னி மலையான் மடந்தை மணவாள என வியையும், மலையான் மடந்தை, மணவாள என்பது ஒரு சொல். பைஞ்சு பாம்பின் படம் அது பஞ்சு என விகாரமாயிற்று. பணைத்தல் - பருத்தல், நாகமதற்கு என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி, நாகமாகிய அதற்கெனினுமாம், (4)

பொல்லாப்புறங்காட்டகத்தாட்டொழியீர்
புலால்வாயனபேயொடுபூச்சொழியீ
ரெல்லாமறிவீரிதுவேயறியீரென்
றிரங்குவோமெல்லியுநண்பகலுங்
கல்லாணிழற்கீழொருநாள்கண்டதுங்
கடம்பூர்க்கரக்கோயிலின்முன்கண்டது
மல்லால்விரகொன்றிலமெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

(ப - ரை.) பொல்லாபுறங்காட்டகத்து - பொல்லாதமயானத்தில், ஆட்டு ஒழியீர் - ஆடுதலையொழியீர், புலால்வாயன-புலால்வாயினவாகிய, பேயொடு-பேய்களோடு, பூச்சுஒழியீர் - நட்பையொழியீர், எல்லாம் அறிவீர் - எல்லாவற்றையும் உணர்வீர், இதுவே அறியீரென்று - இதுவொன்றையுமே யறியீரென்று, எல்லியும் நண்பகலும் இரங்குவோம் - இரவும் நடுப்பகலும் இரங்குவோம், கல்லால் நிழற்கீழ் ஒருநாள் கண்டதும் - கல்லாலின் நிழலின்கீழ் ஒருநாள் கண்டதும், கடம்பூர் கரக்கோயிலில் முன் கண்டதும் அல்லால்-கடம்பூர் கரக்கோயிலை முன்னே கண்டதும் அல்லால், விரகு ஒன்று இலம்-வேறோருபாய முடையோமல்லோம், (ஆதலால்) எம்பெருமான் - எம்பெருமானே, அடிகளே-உமக்காட்செய வஞ்சுதும் சுவாமிகாள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றோம் எ-று.

(போ - ரை.) பொல்லாத மயானத்தில் ஆடுதலையொழியீர், எல்லாமறிவீர், இதுவொன்றையுமே யறியீரென்று இரவும் நடுப்பகலும் இரங்குவோம்,

கல்லாளிழற்கீழ் ஒருநாள் கண்டதும் கடம்பூர் கரக்கோயிலில் முன் கண்டதும் அல்லால் வேறொருபாயமுடையோமல்லோம், ஆதலால் உமக்காட்செயவஞ்சுதும்.

(க - ரை.) பொல்லாத புறங்காட்டாட்டு முதலியவற்றை யொழியீராதலால் உமக்காட்செயவஞ்சுதும் என்பதாம்.

(வி - ரை.) புறங்காடு - மயானம், "எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க பல்லெலன்பு கண்டொழுகுவேன்" என்றார் பிறரும். புலால் - தசை. பூச்சு - நட்பு. எல்லி - இரவு. விரகு - சூழ்ச்சியெனினுமாம். (5)

தென்னத்தெனத்தெத்தென வென்றுபாடிச்
  சிலபூதமுநீருந் திசைதிசையன
பன்னன்மறைபாடுதிர் பாசூருளீர்படம்
  பக்கங்கோட்டுந் திருவொற்றியூரீர்
பண்ணார்மொழியாளையோர் பங்குடையீர்
  படுகாட்டகத்தென்று மோர்பற்றொழியீ
ரண்ணமலையேனென் றீரா ரூருளீ
  ரடியோமுமக்காட்செய வஞ்சுதுமே.

(ப - ரை.) சில பூதமும் நீரும் - சில பூதங்களும் தேவரீரும், தென்னத் தெனத்தெத்தனவென்றுபாடி—, திசைதிசையன - திக்குகள் தோறும், பல் நான் மறை பாடுதிர் - பலவாகிய நான்குவேதங்களையும் பாடாநின்றீர், பாசூர் உள்ளீர் - பாசூரிலுள்ளீர், படம்பக்கங் கோட்டுந் திருவொற்றியூரீர்-படம் பக்கத்தில்வளைந்துள்ள திருவொற்றியூருடையீர், பண் ஆர்-பண்போலும், மொழியாளை—இன்சொல்லை யுடையவளாகிய வுமாதேவியை, ஓர் பங்கு உடையீர்—ஒரு பாகத்திலுடையீர், படுகாட்டகத்து— மயானத்தில், என்றும் - எந்நாளும் ஓர் பற்று ஒழியீர் - ஒரு ஆசையை யொழியீர், அண்ணமலையேன் என்றீர்-அண்ணமலையேன் என்றருளினீர், ஆரூர் உள்ளீர் - திருவாரூரில் இருக்கின்றீர், (ஆதலால்) அடியோம்-அடியேம், உமக்காட்செய வஞ்சுதும்-உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றேம் எ-று.

(போ - ரை) சில பூதமும் நீரும் தென்னத் தெனத்தெத்தென வென்று பாடித் திக்குகள்தோறும் பலவாகிய நான்குவேதங்களையும் பாடாநின்றீர், பாசூரிலுள்ளீர், படம்பக்கங் கோட்டுந் திருவொற்றியூரீர், பண்போலும் இன்சொல்லையுடையவளாகிய வுமாதேவியை ஒருபாகத்திலுடையீர், மயானத்தில் எந்நாளும் ஆசையை யொழியீர், அண்ணமலையேன் என்றீர், ஆரூர் உள்ளீர், (ஆதலால்) உமக்காட்செயவஞ்சுதும்.

(க - ரை.) பூதங்களோடு கூடித் தென்னத் தெனத்தெத்தெனத்தெனப் பாட்டுப்பாடுகின்றீர்,நால்வேதங்களையும் பாடாநின்றீர்,மயானப்பற்றொழியீர், ஆதலால் உமக்காட்செயவஞ்சுதும் என்பதாம்.

(வி - ஸர்.) ஓர்பங்குடையீர் எனமேல் வருதலால் பண்ணார்மொழியாள் என்றது உமாதேவியை யுணர்த்திற்று. படுகாடு-மயானம். அண்ணாமலையேன் என்று சொல்லி அங்குச்சென்று நாடுங்கால் ஆரூரிலிருத்தலால் அஞ்சுதற் கேதுவாயிற்று. (6)

சிங்கத்துரிமூடுதிர்தேவர்கணந்தொழநிற்
றீர்பெற்றமுகந்தேறிடுதிர்
பங்கம்பலபேசிடப்பாடுந்தொண்டர்தமைப்
பற்றிக்கொண்டாண்டுவிடவுங்கில்லீர்
கங்கைச்சடையீருங்கருத்தறியோங்
கண்ணுமூன்றுடையீர்கண்ணேயாயிருந்தா
லங்கத்துறுநோய்களைந்தாளகில்லீ
ரடியோமுமக்காட்செயவஞ்சுதுமே.

(ப - ரை.) சிங்கத்து உரி மூடுதிர் - சிங்கத்தின்றோலை மூடாநின்றீர் தேவர் கணம் தொழ நிற்றீர் - தேவர்கூட்டம் வணங்க நிற்கின்றீர், பெற்றம்-இடபத்தின்மேல், உகந்து ஏறிடுதிர் - விரும்பி யேறாநின்றீர், பங்கம் பல பேசி-பல நிந்தைகள்சொல்லி, பாடும் - பாடாநின்ற, தொண்டர்தம்மை-அடியாரை, பற்றிக்கொண்டு -பிடித்துக்கொண்டு, ஆண்டு - ஆண்டுகொண்டு, விடவுங்கில்லீர் - விடவு மாட்டிற்றிலீர், கங்கைச்சடையீர்-கங்கைச்சடையை உடையீரே, உம்கருத்து அறியோம்-உமது கருத்தை அறியோம், கண்ணும் மூன்று உடையீர் - மூன்று கண்களை உடையீர், (அவை) கண்ணேயாயிருந் தால்-கண்களாகவே யிருந்தால், அங்கத்து உறும் - எம் உடம்பிலுள்ள, நோய்-பிணியை, களைந்து ஆளகில்லீர் - ஒழித்தாண்டருளகில்லீர், (ஆதலால்) அடியோம்-அடியேம், உமக்காட்செயவஞ்சுதும்- உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றோம் எ-று.

(பொ-ரை.) சிங்கத்தின் தோலால் மூடாநின்றீர், தேவர்கூட்டம் வணங்க நிற்கின்றீர், இடபத்தின்மேல் விரும்பியேறா நின்றீர், பல நிந்தைகள் சொல்லிப் பாடாநின்ற அடியாரைப் பிடித்துக்கொண்டு ஆண்டுகொண்டுவிடவுமாட்டிற்றிலீர், கங்கைச்சடையீர், உங்கருத்து அறியோம், கண்ணும் மூன்றுடையீர் (அவை) கண்களாகவேயிருந்தால், எம் உடம்பிலுள்ள பிணியை யொழித்தாண்டருளகில்லீர், (ஆதலால்) அடியேமுமக்காட்செயவஞ்சுதும்.

(க - ரை.) சிங்கத்துரி மூடுதல் முதலிய செயல்களைக் கண்டு உமக்காட் செயவஞ்சுதும் என்பதாம்.

(வி - ரை.) தோல் உரியெனப்பட்டது உரிக்கப்படுதலால். மூடுதல் - போர்த்தல். பங்கம் - நிந்தாஸ்துதி. களைதல்-ஒழித்தல். (7)

பிணிவண்ணத்தவல்வினை தீர்த்தருளீர்
பெருங்காட்டகத்திற்பெரும்பேயுநீருந்
துணிவண்ணத்தின்மேலுமோர்தோலுடுத்துச்
சுற்றுநாகத்தராய்ச்சுண்ணநீறுபூசி
மணிவண்ணத்தின்மேலுமோர்வண்ணத்தராய்
மற்றுமற்றும்பலவண்ணத்தரா
யணிவண்ணத்தராய்நிற்றீரெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

(ப - ரை.) பிணிவண்ணத்த - நோயுருவாகிய, வல்வினை - வலியவினைகளை, தீர்த்தருளீர்-தீர்த்தருளிச்செய்யீர், பெருங்காட்டகத்து - மயானத்தில், பெரும் பேயுநீரும்-பெரும்பேயும் தேவரீரும், துணிவண்ணத்தின் மேலும்-ஆடையழகுக்கு மேலும், ஓர் தோல் உடுத்து - ஒருதோலையுடுத்து, சுற்றும்-அதன்மேற்சுற்றிய, நாகத்தராய் - பாம்பையுடையவராய், சுண்ணநீறுபூசி-வெண்பொடிபூசி, மணிவண்ணத்தின்மேலும் ஓர் வண்ணத்தர் ஆய்-மாணிக்கநிறத்தின்மேலும் ஓர் நிறமுடையவராய், மற்று மற்றும் பலவண்ணத்தர் ஆய்-பின்னும் பல வேறு நிறத்தையுடையவராய், அணிவண்ணத்தராய் நிற்றீர்-அழகுருவாய் நிற்கின்றீர், (ஆதலால்) எம்பெருமான் - எம்பெருமானே, அடிகேள் உமக்காட்செயவஞ்சுதும் - சுவாமிகாள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றோம் எ-று.

போ - ரை. நோயுருவாகிய வலியவினைகளைத்தீர்த்தருளீர், மயானத்தில் பெரும்பேயும் நீரும் ஆடையழகுக்குமேலும் ஓர்தோல் உடுத்து அதன்மேற் சுற்றிய பாம்பையுடையராய், வெண்பொடிபூசி மாணிக்கநிறத்தின் மேலும் ஓர் நிறமுடையவராய் மற்றுமற்றும் பலவண்ணத்தராய் அழகுருவாய் நிற்கின்றீர் ஆதலால் எம்பெருமானடி கேளுமக்காட்செயவஞ்சுதும்.

(க - ரை.) நோய்வடிவாகிய வல்வினையைத் தீர்த்தருளாது, பெருங்காட்டில் பேயோடாடாநின்றீர், அதுவேயுமன்றிப் பலவண்ணமாய் நிற்கின்றீராதலால் அடிசேளுமக்காட்செயவஞ்சுதும் என்பதாம்.

(வி - ரை.) வண்ணம் - உரு. பெருங்காடு - மயானம், எல்லாரையும் விழுங்குங் காடாதலால் இதற்கிப்பெயர் வழங்கிற்று. வண்ணம்-நிறம். (8)

கோளாளியகுஞ்சரங்கோளிழைத்தீர்மலையின்
றலையல்லதுகோயில்கொள்ளீர்
வேளாளியகாமனைவெந்தழியவிழித்தீ
ரதுவன்றியும்வேய்புரையுந்
தோளாளுமைநங்கையோர்பங்குடையீ
ருடுகூறையுஞ்சோறுந்தந்தாளகில்லீ

ராளாளியவேகற்றீரெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

(ப - ரை.) கோள்ஆளிய - துன்பஞ்செய்கிற, குஞ்சரம் - யானைக்கு, கோள் இழைத்தீர் - துன்பஞ் செய்தீர், மலையின் றலையல்லது - மலையின் மேலன்றி, கோயில் கொள்ளீர் - கோயில் கொள்ளமாட்டீர், வேள் ஆளிய - ஆசையை யுண்டாக்குகிற, காமனை - மன்மதனை, வெந்து அழிய விழித்தீர்- வெந்தழியும்படி நுதற்கண்ணைத் திறந்தீர், அது அன்றியும் - அதுவுமன்றி வேய்புரையும்-மூங்கில்போலு', தோளாள்-தோள்களையுடையவளாகிய, உமை மங்கை - உமாதேவியை, ஓர் பங்கு உடையீர் - ஒருபாகத்தேயுடையீர், உடு கூறையும் - உடுக்குமாடையும், சோறும் - அன்னமும், தந்து - கொடுத்து, ஆளகில்லீர் - ஆளமாட்டீர், ஆள் ஆளியவே கற்றீர் - ஆள்படைக்கவே கற்றீர், (ஆதலால்) எம்பெருமான்-எம்பெருமானே, அடிகேள் உமக்காட்செய வஞ்சுதும் -சுவாமிகாள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சாநின்றேம் எ-று.

(போ - ரை) துன்பஞ்செய்கிற யானைக்குத் துன்பஞ்செய்தீர், மலைமேலன்றிக் கோயில்கொள்ளமாட்டீர். ஆசையையுண்டாக்குகிற மன்மதனை வெந்தழியும்படி நுதற்கண்ணைத்திறந்தீர். அதுவன்றியும் மூங்கில்போலுந்தோள்களையுடையவளாகிய வுமாதேவியை ஒருபாகத்தேயுடையீர், உடுக்கும்மாடையுமன்னமும்கொடுத்து ஆளமாட்டீர், ஆள்படைக்கவேகற்றீர்,ஆதலால் எம்பெருமானடிகேளுமக்காட்செய வஞ்சுதும்.

(க - ரை.) கோளிழைக்குங் குஞ்சரத்தைக் கோளிழைத்தல்முதலிய வன்செயல்கள் உம்மிடத்தே காணப்படுதலால், யாம் உமக்காட்செயவஞ்சுதும் என்பதாம்.

(ப - ரை.) கோள் - துன்பம். "கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை" என்றார் மணிவாசகரும். தலை ஏழனுருபு. புரைதல் - நிகர்த்தல். கூறை - ஆடை. ஆளிய செய்யிய வென்னும் வினையெச்சம். (9)

பாரோடுவிண்ணும்பகலுமாகிப்
பனிமால்வரையாகிப்பரவையாகி
நீரோடுதீயுநெடுங்காற்றுமாகி
நெடுவெள்ளிடையாகிநிழலுமாகித்
தேரோடவரையெடுத்தவரக்கன்சிரம்
பத்திறுத்தீருமசெய்கையெல்லா
மாரோடுங்கூடாவடிகேளிதுவெ
னடியோமுமக்காட்செயவஞ்சுதுமே.

(ப - ரை.) பாரோடு - பூமியோடு, விண்ணும் - ஆகாயமும், பகலும் ஆகி-பகலுமாகி, மால்-பெரிய, பனிவரையாகி-இமயமலையாகி, பரவையாகி-கடல்களாகி, நீரோடு தீயும் நெடுங்காற்றுமாகி - நீரும் தீயும் நெடுங் காற்றுமாகி, நெடு-நெடிய, வெள்ளிடையாகி - வெற்றிடமாகி, நிழலும் ஆகி - நிழலாகி, தேரோடு - தேருடன், அவரை எடுத்த - அந்த மலையையெடுத்த, அரக்கன் - அரக்கனது, சிரம்பத்து - பத்துத் தலைகளையும், இறுத்தீர் - அறுத்தீர், உமசெய்கை யெல்லாம் - உம்முடைய செய்கைகள் எல்லாம், ஆரோடும் கூடா - யாவரோடுஞ் சேராதனவாயிருக்கின்றன, இது என் - இது என்ன, அடிகேள் - சுவாமிகாள், உமக்கு - நமக்கு, அடியோம்-அடியேம், ஆட்செய வஞ்சுதும் - அடிமைசெய்ய அஞ்சாநின்றோம் எ-று.

(பொ - ரை.) பூமியோடாகாயமும் பகலுமாகி, பெரிய இமயமலையாகி, கடல்களாகி, நீரோடு தீயும் நெடுங்காற்றுமாகி, நெடிய வெற்றிடமாகி நிழலுமாகி, தேரோடு அந்தமலையை யெடுத்த அரக்கனது பத்துத் தலைகளையும் அறுத்தீர், உமசெய்கையெல்லாம் யாவரோடுஞ் சேராதனவா யிருக்கின்றன, இது என், சுவாமிகாள் உமக்கு அடிமை செய்ய அஞ்சா நின்றோம்.

(கு - ரை.) பார்முதலிய வெல்லாப் பொருள்களுமாகி விளங்குகிற வுமக்கு யாமாட்செய வஞ்சுகிறோம் என்பதாம்.

(வி - ரை.) பரவை ஆகுபெயர். இடை - இடம். அ வரையென்பதில் அகரம் பண்டறிசுட்டு. அவ்வரையென்றது கைலாயமலையை. அரக்கன் என்றது இராவணனை. (10)

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்
றமரர்பெருமானையாரூரனஞ்சி
முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர்நான்குமோரொன்றினையும்
படியாயிவைகற்றுவல்லவடியார்
பரங்குன்றமேயபரமனடிக்கே
குடியாகிவானோர்க்குமோர்கோவுமாகிக்
குலவேந்தராய்விண்முழுதாள்பவரே.

(ப - ரை.) அடிகேள் உமக்கு ஆட்செயவஞ்சுதுமென்று - சுவாமிகாள் உமக்கு அடிமைசெய்ய அஞ்சா நின்றோம் என்று, அமரர்பெருமானை-தேவர் பிரானை, ஆரூரனஞ்சி—, முடியால் - முடிசூடின அதிகாரத்தால், உலகு ஆண்ட - உலகத்தை ஆண்ட, மூவேந்தர் முன்னே - சேர சோழ பாண்டியர் முன்னே, மொழிந்த-சொன்ன, ஆறும் ஓர் நான்கும் ஒரொன்றினையும் - பதினொன்றினையும், படியா - படித்து, இவை கற்றுவல்ல அடியார்—, பரங்குன்றமேயபரமன்-திருப்பரங்குன்றத்தே யெழுந்தருளின பரமனது, அடிக்கே-திருவடியிற்றானே, குடியாகி - குடிகொண்டு, வானோர்க்கும் ஓர் கோவும்

ஆகி - தேவர்களுக்குமொரு அரசனாகி, குலவேந்தர் ஆய்-மேலான வேந்தருமாகி, விண்முழுது ஆள்பவர் - சுவர்க்கலோக முழுதும் ஆள்பவராவர் எ-று.

(போ - ரை.) அடிகேளுமக்காட்செயவஞ்சுது மென்று தேவர்பிரானை ஆரூரனஞ்சி, முடிசூடின அதிகாரத்தால் உலகாண்ட மூவேந்தர் முன்னே சொன்ன பதினொன்றினையும் படித்து இவை கற்றுவல்ல அடியார் திருப்பரங்குன்றத்தே யெழுந்தருளின பரமனது திருவடியிற்றானே குடிகொண்டு தேவர்களுக்குமொரு அரசனாகி, மேலானவொரு வேந்தருமாகி, சுவர்க்கலோக முழுதும் ஆள்பவராவர்.

(க - ரை.) அடிசேளுமக்காட்செயவஞ்சுதுமென்று ஆரூரன் சொன்ன இவை பதினொரு பாடலுங் கற்று வல்லார், பரமனடிக்குடியாகி, விண்முழுதாள்பவராவரென்பதாம்.

(வி - ரை.) அமரர்-தேவர், இது மங்கலவழக்கு. முடி-கிரீடம். படியா-செய்யாவெனெச்சம். பரமன் - மேலானவன். குலம்-மேன்மை. விண் ஆகுபெயர். (11)

திருச்சிற்றம்பலம்

திருப்பரங்குன்றம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பரங்கிரிநாதர். தேவியார்-ஆவுடைநாயகியம்மை.

---

## திருநெல்வாயில் திருஅரத்துறை

பண் இந்தளம்

திருச்சிற்றம்பலம்

**கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்**
**கலந்துந்திவருந்நிவவின்கரைமே**
**னெல்வாயிலரத்துறைநீடுறையுந்**
**நிலவெண்மதிசூடியநின்மலனே**
**நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்**
**நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்திற்**
**சொல்வாய்க்கழிகின்றதறிந்தடியேன்றொடர்ந்தே**
**னுய்யப்போவதோர்சூழல்சொல்லே.**

(ப-ரை.) கல்வாய்-மலையினிடத்துள்ள, அகிலும்-அகிற்கட்டைகளையும், மா - பெரிய, கதிர் - ஒளியுள்ள, மணியும் - ரத்நங்களையும், கலந்து - சேர்த்து, உந்திவரும் - தள்ளிவருகிற, நிவவின் கரைமேல் - நிவவின்கரையிலுள்ள, நெல்வாயில் அரத்துறை-திருநெல்வாயிலரத்துறையில், நீடு உறையும்-நெடிது வாழ்கின்ற, நிலவெள்மதிசூடிய நின்மலனே - நிலவையுடைய வெண்

பிறையைத்தரித்த நிர்மலனே, நல்வாயில் செய்தார் - நல்வாழ்க்கை செய்தார், நடந்தார் - நடந்தனர், உடுத்தார் - உடுத்தனர், நரைத்தார் - நரைகொண்டனர், இறந்தார் - இறந்துபட்டார், என்று நானிலத்தில் சொல்லாய் கழிகின்றது அறிந்து - என்று உலகத்தில் சொல்மாத்திரமாய்க் கழிவதையறிந்து, அடியேன் - அடியனேன், தொடர்ந்தேன் - உன்னைத் தொடரலாயினேன், (ஆதலால்) உய்யப்போவது - உய்யப்போவதாகிய, ஓர் சூழல் சொல் - ஒரு உபாயஞ் சொல்வாயாக எ-று.

(பொ-ரை.) மலையினிடத்துள்ள அகிற்கட்டைகளையும் பெரிய வெளியுள்ள ரத்நங்களையும் சேர்த்துத் தள்ளிவருகிற நிவவின்கரையிலுள்ள திருநெல்வாயில் அரத்துறையில் நெடிது வாழ்கின்ற நிலவையுடைய வெண்பிறையைத் தரித்த நின்மலனே, நல்வாழ்க்கை செய்தார், நடந்தனர், உடுத்தனர், நரைகொண்டனர், இறந்தார் என்று உலகத்தில் சொல்மாத்திரமாய்க் கழிகின்றதையறிந்து, அடியனேன், உன்னைத் தொடரலாயினேன், ஆதலால் உய்யப்போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயில் அரத்துறை நின்மலனே, யாக்கை நிலையாமையை யுணர்ந்து உன்னைத் தொடர்ந்தேன், நான் உய்யுமுபாயமொன்றைச் சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை.) கல் - மலை, (ஆகுபெயர்) நிவவு - ஒருநதி. நின்மலன் - மலரஹிதன், நானிலம் என்றூர் பாலைக்கு நிலமின்மையான். (1)

கறிமர்மிளகும்மிகுவனமரமும்
மிகவுந்திவருந்நிவவின்கரைமே
னெறிவார்குழலாரவர்காணநடஞ்செய்
நெல்வாயிலரத்துறைநின்மலனே
வறிதேநிலையாதவிம்மண்ணுலகி
னரனாகவகுத்தனைநானிலையேன்
பொறிவாயிலிவையைந்தனையுமவியப்
பொருதுன்னடியேபுகுஞ்சூழல்சொல்லே.

(ப-ரை.) மா - பெருமை பொருந்திய, கறிமிளகும் - கறிமிளகையும், மிகு - மிகுத்த, வனமாமும் - காட்டுமரங்களையும், மிக உந்திவரும் - மிகுதியாகத் தள்ளிவருகிற, நிவவின்கரைமேல் - நிவவின்கரைமேல், நெறிவார் குழலார் - நெறித்துநீண்ட கூந்தலையுடையவராகிய, அவர் - அவ் வுமாதேவியார், காண - தரிசிக்கும்படி, நடம்செய் - நடிக்கிற, நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவரே, வறிதே - வீணாகவே, நிலையாதே - நிலையாமலே, இ - இந்த, மண்ணுலகில் - மண்ணுலாகிய உலகத்தில், நரன் ஆக வகுத்தனை - மானிடனாகப் படைத்தாய், நான் நிலையேன் - நான் நிலைத்திரேன், பொறிவாயில் இவை ஐந்தனையும் - பொறிவாயில்க

ளாகிய இவையைந்தினையும், அவியப்பொருது-அடங்குமாறு பொருத், உன் அடியேபுகும்-உன் திருவடிக்கே புகும்படியான, சூழல்-உபாயத்தை, சொல்-சொல்வாயாக எ-று.

(பொ-ரை.) பெருமைபொருந்திய கறிமிளகையும் மிகுத்த காட்டுமரங்களையும் மிகுதியாகத் தள்ளிவருகிற நிவவின்கரைமேல், நெறித்து நீண்ட கூந்தலையுடைய அவ்வுமாதேவியார் தரிசிக்கும்படி நடிக்கிற திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவரே, வீணாகவே நிலையாமலே இந்த மண்ணுலாகிய உலகத்தில் மானிடனாகப் படைத்தாய், நான் நிலைத்திரேன், பொறிவாயில்களாகிய இவையைந்தினையும் அடங்குமாறு பொருது உன் திருவடிக்கே புகும்படியான உபாயத்தைச் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, இவ்வுலகில் நரனாய்த்தோன்றின நான் நிலைத்திரேன், ஆதலால், பொறிவாயிலைந்தவித்து உன்னடியிற் புகுவதோருபாயத்தைச் சொல்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) மிளகுக்குப் பெருமையாவது பிணியொழித்தல். வனம்-காடு. வறிது - வீண். வகுத்தல் - படைத்தல். பொறிவாயிலைந்து-பொறிகளை வாயில்களாகவுடைய ஐந்தாசை. "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்" என்பதனு லினிது விளங்கும். (2)

புற்றாடரவமரையார்த்துகந்தாய்
புனிதாபொருவெள்விடையூர்தியினா
யெற்றேயொருகண்ணிலனின்னையல்லா
னெல்வாயிலரத்துறைநின்மலனே
மற்றேலொருபற்றிலனெம்பெருமான்
வண்டார்குழலாண்மங்கைபங்கினனே
யற்றார்பிறவிக்கடனீந்தியேறியடியே
னுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை.) புற்று ஆடு அரவம் - புற்றிடத்தையுடைய ஆடுமியல்புள்ள பாம்பினை, அரை ஆர்த்து - திருவரையிற்கட்டி, உகந்தாய் - மகிழ்ந்தவனே, புனிதா - பரிசுத்தனே, பொரு - போர்செய்கிற, வெள்விடை - வெண்மையாகிய இடபத்தை, ஊர்தியினாய் - வாகனமாகவுடையவனே, நின்னை அல்லால் - உன்னையல்லால், எற்று - எத்தன்மைத்தாகிய, ஒரு கண் இலன் - ஒருகண்ணுமில்லேன், நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தனே, மற்று ஒரு பற்று இலன்-மற்றோர் பற்றுமில்லாதவன், எம்பெருமான்-எனது தலைவனே, வண்டு ஆர் குழலாள் - வண்டுகள் நிறைந்த கூந்தலையுடையவளாகிய, மங்கை - உமாதேவியை, பங்கினனே - பாகத்திலுடையவனே, அற்று-அத்தன்மைத்தாகிய, ஆர்-கடத்தற்கரிய, பிறவிக்கடல்-ஜன்மசாகரத்தை, நீந்தி ஏறி - கடந்து முத்திக்கரையேறி, அடியேன் - அடிய

னேன், உய்யப்போவது - உய்யப்போவதாகிய, ஓர் சூழல்சொல்-ஒரு உபாயஞ் சொல்வாயாக எ—று.

(பொ-ரை.) புற்றிடத்தையுடைய ஆடுமியல்புள்ள பாம்பினைத் திருவரையிற்கட்டி மகிழ்ந்தவனே, பரிசுத்தனே, போர்செய்கிற வெண்மையாகிய இடபத்தை வாகனமாகவுடையவனே, உன்னையல்லால் எந்தன்மைத்தாகிய வொரு கண்ணுமில்லேன், திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தனே, மற்றோர் பற்றுமில்லாதவன், எமது தலைவனே, வண்டுகள் நிறைந்த கூந்தலையுடையவளாகிய உமாதேவியை பாகத்திலுடையவனே, அத்தன்மைத்தாகிய கடத்தற்கரிய ஜன்மசாகரத்தைக் கடந்து முத்திக்கரையேறி அடியனேன் உய்யப்போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) திருநெல்வாயிலரத்துறை நின்மலனே, ஒரு கண்ணிலேன், ஒரு பற்றிலேன், நான் பிறவிக்கடலை நீந்துதற்குரிய ஒரு உபாயஞ் சொல்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) ஆர்த்தல் - கட்டுதல். உகத்தல் - மகிழ்தல். புனிதன்-பரிசுத்தன். பொருதல் - போர்செய்தல் கண் - அறிவுமாம், வற்றுப் பிறவிக்கடல் என்றும் பாடம். கூந்தலில் வண்டு மொய்ப்பது தேன் விருப்பத்தானென்க.

கோடுயர்கோங்கலர்வேங்கையலர்,
மிகவுந்திவருந்நிவவின்கரைமே
னீடுயர்சோலைநெல்வாயிலரத்துறை
நின்மலனேநினைவார்மனத்தா
யோடுபுனற்கரையாமிளமையுறங்கி
விழித்தாலொக்குமிப்பிறவி
வாடியிருந்துவருந்தல்செய்யாதடியே
னுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை.) கோடு உயர் - கிளைகளானுயர்ந்த, கோங்கு அலர் — கோங்கமலரையும், வேங்கை அலர் - வேங்கை மலரையும், மிக - மிகுதியாக, உந்தி வரும் - தள்ளிவருகிற, நிவவின் கரைமேல் - நிவவின் கரைமேல், நீடு உயர் சோலை - மிகவுமுயர்ந்த சோலைகள்சூழ்ந்த, நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவரே, நினைவார் மனத்தாய்-நினைப்போரதுமனத்திருப்பவனே, இளமை-இளமைப்பருவமானது, ஓடு-பெருகியோடுகிற, புனல்கரையாம் - நீர்க்கரைபோலும், இப்பிறவி - இந்தப் பிறப்பு, உறங்கிவிழித்தால் ஒக்கும் - உறங்கிவிழித்தற்போலும், வாடியிருந்து-வாடியிருந்து, வருந்தல் செய்யாது - வருந்தாமல், அடியேன் - அடியனேன், உய்யப்போவது - உய்யப் போவதாகிய, ஓர் சூழல் சொல் — ஒரு உபாயஞ் சொல்வாயாக எ-று.

(போ-ரை.) கிளைகளானுயர்ந்த கோங்கமலரையும் வேங்கைமலரையும் மிகுதியாகத் தள்ளிவருகிற நிவவின்கரைமேல், மிகவுமுயர்ந்த சோலைகள் சூழ் திருநெல்வாயி லரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனே, நினைப்போரது மனத்திருப்பவனே, இளமைப்பருவமானது பெருகியோடுகிற நீர்க்கரை போலும், இந்தப் பிறவி உறங்கிவிழித்தாற்போலும், வாடியிருந்து வருந்தாமல் அடியனேன் உய்யப்போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, இளமைப்பருவம் பெருகியோடுகிற நீர்க்கரைபோலும், இப்பிறவி உறங்கிவிழித்தாற்போலும், ஆதலால் அடியேன் வாடிவருந்தாமல், உய்யுமுபாயஞ் சொல்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) ஒழுபுனற்கரை—யாற்றிடிகரை, "ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிநான்" என்றார் பிறரும். "உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு" என்பது திருக்குறள். (4)

உலவுமுலகின்றலைகற்பொழிய
  வுயர்வேயோடிழிநிவவின்கரைமே
னிலவுமயிலாரவர்தாம்பயிலு
  நெல்வாயிலரத்துறைநின்மலனே
புலனைந்துமயங்கியகங்குழையப்
  பொருவேலோர்நமன்றமர்தாநலிய
வலம்வந்துமயங்கியயர்வதன்முன்
  னடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை.) உலவும் உலகின்தலை சஞ்சரித்தற்குரிய வுலகில், கல்பொழிய-கற்களைச் சொரிய, உயர்வேயோடு — உயர்ந்த மூங்கில்களோடு, இழி - இறங்குகிற, நிவவின்கரைமேல் - நிவவின்கரைமேல், நிலவும் — நிலாவுகிற, மயிலார் அவர்-மயிற்சாயலையுடைய அந்த மாதர், பயிலும்-நெருங்குகிற, நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயி லரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனே, புலன்ஐந்தும் — ஐம்புலன்களும், மயங்கி- (ஒன்றோடொன்று) கலந்து, அகம் குழைய — மனங்குழைய, பொரு - போர்செய்தற்குரிய, வேலோர் - வேலாராகிய, நமன்தமர் - யமன்தூதுவர், நலிய - வருத்த, அலம் வந்து மயங்கி - சுழன்று மயங்கி, அயர்வதன்முன் - அயர்வதற்கு முன்னமே, அடியேன் - அடியனேன், உய்யப்போவது - உய்யப் போவதாகிய, ஓர் சூழல் சொல் - ஒரு உபாயஞ் சொல்வாயாக எ-று.

(போ-ரை.) சஞ்சரித்தற்குரிய வுலகில் கற்களைச்சொரிய உயர்ந்த மூங்கில்களோடிறங்குகிற நிவவின் கரைமேல் நிலாவுகிற மயிற்சாயலையுடைய அந்த மாதர்நெருங்குகிற திருநெல்வாயிலரத்துறையில்விளங்கும் பரிசுத்தமானவனே, ஐம்புலன்களும் ஒன்றோடொன்றுகலந்து மனங்குழைய போர்செய்தற்குரிய

வேலவாகிய யமன்தூதுவர் வருத்த, சுழன்று மயங்கி அயர்வதற்கு முன்னமே அடியனேன் உய்யப்போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, அடியேன் உய்யுமுபாயஞ் சொல்லென்பதாம்.

(வி-ரை) உலவல் - சஞ்சரித்தல். வேய்-மூங்கில். இழிதல் - இறங்குதல் நிலவுதல் — ஒளிசெய்தல். பயிலல்-நெருங்கல். மயங்கல் - கலத்தல். குழைதல்-நெகிழ்தல். நலிதல் - வருத்துதல். அலமரல் - சுழலல். அயர்தல் - சோர்தல்

ஏலம்மிலவங்கமெழிற்கனக
  மிகவுந்திவருந்நிவவின்கரைமே
னீலம்மலர்ப்பொய்கையிலன்னம்மலி
  நெல்வாயிலரத்துறைவாவொருநெல்
வாலூன்றவருந்தும்முடம்பிதனை
  மகிழாதழகாவலந்தேனினியா
னாலநிழலிலமர்ந்தாயமராவடியே
  னுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை) ஏலம்-ஏலத்தையும், இலவங்கம்-இலவங்கத்தையும், எழில் - அழகாகிய,கனகம்-பொன்னையும், மிகஉந்திவரும் - மிகவுந் தள்ளிவருகிற, நிவவின் கரைமேல் — நிவவின்கரைமேல், நீலமலர் பொய்கையில் - நீலங்கள் மலர்கின்ற பொய்கையில், அன்னம்மலி - அன்னங்கள் மிகுந்திருக்கிற, நெல்வாயிலரத்துறைவா-திருநெல்வாயிலரத்துறையையுடையவனே, ஒருநெல்வால்-ஒரு நெல்லின் முனையானது, ஊன்ற - ஊன்றின், வருந்தும் - வருந்துகிற, உடம்பிதனை - இந்தவுடம்பை, மகிழாது - விரும்பாமல், அழகா - அழகனே, அலந்தேன் - வருந்தினேன், இனியான் - இனியனாகி, ஆலநிழலில் அமர்ந்தாய்-கல்லாலினிழலில் அமர்ந்தவனே, அமரா - நாசரஹிதனே, அடியேன் - அடியனேன், உய்யப்போவது-உய்யப்போவதாகிய, ஓர் சூழல்சொல்-ஒரு உபாயஞ் சொல்வாயாக எ-று.

(போ-ரை.) ஏலத்தையும் இலவங்கத்தையும் அழகாகிய பொன்னையும் மிகவுந் தள்ளிவருகிற நிவவின்கரைமேல், நீலங்கள் மலர்கின்ற பொய்கையில் அன்னங்கள் மிகுந்திருக்கிற திருநெல்வாயிலரத்துறையையுடையவனே, ஒரு நெல்லின் முனையானது ஊன்றின் வருந்துகிற இந்தவுடம்பை விரும்பாமல், அழகனே வருந்தினேன், இனியனாகி கல்லாலினிழலில் அமர்ந்தவனே, நாசரஹிதனே, அடியனேன் உய்யப்போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, அடியேன் உய்யுமுபாயஞ் சொல் என்பதாம்.

(வி-ரை.) ஏலம் - ஏலச்செடி. இலவங்கம்-இலவங்கமரம். நீலம் - நீலோற்பலம். மலிதல் — நிறைதல் எனினுமாம். அழகா மகிழாது என நிறுத்தி அழகுள்ளதாக விரும்பாமல் என்றுரைத்தலுமொன்று. இனியான் - சநகாதியர்க்கினியவன். அமரன் — இறவாதவன் (நாசரஹிதன்). (6)

சிகரிமுகத்திற்றிரளாரகிலும்
மிகவுந்திவருந்நிவவின்கரைமே
னிகரின்மயிலாரவர்தாம்பயிலு
நெல்வாயிலரத்துறைநின்மலனே
மகரக்குழையாய்மணக்கோலமதே
பிணக்கோலமதாம்பிறவியிதுதா
னகரமுதலினெழுத்தாகிநின்றாயடியே
னுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை.) சிகரிமுகத்தில் - மலையினிடத்து நின்றும், திரள்ஆர்அகிலும் - திரளாகிய அகிற்கட்டைகளையும், மிக உந்திவரும் - மிகுதியாய்த் தள்ளிக்கொண்டுவருகிற, நிவவின்கரைமேல் - நிவவின்கரைமேல், நிகர் இல் - ஒப்பில்லாத, மயிலாரவர் - மயிற்சாயலையுடைய மாதர், பயிலும் - சஞ்சரிக்கிற, நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயி லரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவரே, மகரக்குழையாய் - மகரகுண்டலத்தை யணிந்தவனே, மணக்கோலமே-மணக்கோலமே, பிணக்கோலம் ஆம்-பிணக்கோலமாகும், பிறவி இது - பிறப்பிது (ஆதலால்). அகரமுதல் எழுத்து ஆகி நின்றாய்-அகரமுதலாகிய எழுத்துருவாய் நின்றவனே, அடியேன் - அடியனேன், உய்யப்போவது - உய்யப்போவதாகிய, ஓர் சூழல் சொல் - ஒரு உபாயஞ் சொல்வாயாக எ—று.

(பொ-ரை.) மலையினிடத்து நின்றும் திரளாகிய அகிற்கட்டைகளையும் மிகுதியாகத் தள்ளிக்கொண்டு வருகிற நிவவின்கரைமேல்,ஒப்பில்லாத மயிற்சாயலையுடைய மாதர் சஞ்சரிக்கின்ற நெல்வாயிலரத்துறை நின்மலனே, மகரகுண்டலத்தை யணிந்தவனே, மணக்கோலமே பிணக்கோலமாகும் பிறப்பிது ஆதலால், அகரமுதலாகிய எழுத்துருவாய் நின்றவனே, அடியேன் உய்யப்போவதாகிய, ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, அடியேன் உய்யுமுபாயம் சொல் என்பதாம்.

(வி-ரை.) சிகரி - சிகரங்களையுடையது (மலை). மகரக்குழை - மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட குண்டலம். மணக்கோலம் - மணவணி. பிணக்கோலம் - பிணவணி, அது பகுதிப்பொருள் விகுதி. அகரமுதலினெழுத்து என்பதற்கு அகரமாகிய தலைமையெழுத்து எனினுமாம். இன்சாரியை. (7)

திண்டேர்நெடுவீதியிலங்கையர்கோன்
றிரடோளிருபஃதுநெரித்தருளி
நெண்டாடுநெடுவயல்சூழ்புறவி
னெல்வாயிலரத்துறைநின்மலனே
பண்டேமிகநான்செய்தபாக்கியத்தாற்
பரஞ்சோதிநின்னாமம்பயிலப்பெற்றே
னண்டாவமரர்க்கமரர்பெருமானடியே
னுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை.) திண்தேர் - வலியதேரோடுகிற, நெடுவீதி - நெடுந்தெருக்களையுடைய, இலங்கையர் கோன் - இலங்கையருக்கரசனாகிய ராவணனது, திரள் தோள் இருபதும் - திரண்ட இருபது புயங்களையும், நெரித்தருளி - முறித்தருளி, நெண்டு ஆடு - நண்டுகள் சஞ்சரிக்கிற, நெடுவயல் சூழ் புறவின் - நெடிய வயல்கள் சூழ்ந்த முல்லைநிலத்தையுடைய, நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனே, பண்டே-பூர்வ காலத்தே, மிக - மிகுதியாக, நான்செய்த பாக்கியத்தால் - நான் செய்த பேற்றினால், பரஞ்சோதி-பரஞ்சோதியே, நின் நாமம் - உன் திருநாமங்களை, பயிலப்பெற்றேன் - உச்சரிக்கப்பெற்றேன், அண்டா - தேவனே, அமரர்க்கு - தேவர்களுக்கு, அமரர்பெருமான் - தேவர்பெருமானே, அடியேன் - அடியனேன், உய்யப்போவது - உய்யப்போவதாகிய, ஓர் சூழல் சொல் - ஒரு உபாயஞ் சொல்வாயாக எ-று.

(பொ-ரை.) வலிய தேரோடுகிற நெடுந்தெருக்களையுடைய இலங்கையருக் கரசனாகிய ராவணனது திரண்ட இருபது புயங்களையும் முறித்தருளி, நண்டுகள் சஞ்சரிக்கிற நெடிய வயல்கள் சூழ்ந்த முல்லைநிலத்தையுடைய திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனே,பூர்வகாலத்தே மிகுதியாக நான்செய்த பாக்கியத்தால் பரஞ்சோதியே,உன் திருநாமங்களை உச்சரிக்கப் பெற்றேன், தேவனே-தேவர்களுக்குத்தேவர் பெருமானே—, அடியேன் உய்யப்போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை) நெல்வாயிலரத்துறை நின்மலனே, அடியேன் உய்யுமுபாயஞ் சொல் என்பதாம்.

(வி-ரை.) இலங்கையர் - இலங்கையிலுள்ளார். நெண்டு - நண்டு என்பதன்போலி. பரஞ்சோதி - பேரொளி. அண்டன் - தேவன். (8)

மாணுவுருவாகியோர்மண்ணளந்தான்
மலர்மேலயன்றேடியுங்காண்பரியாய்
நீணீண்முடிவானவர்வந்திறைஞ்சு
நெல்வாயிலரத்துறைநின்மலனே

வாணார்நுதலார்வலைப்பட்டடியேன்
பலவின்கனியீபோல்வதன்முன்
ஆணோடுபெண்ணாமுருவாகிநின்றா
யடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

(ப-ரை.) மாணாஉருஆகி - மாட்சிமைப்படாதவுருவத்தையுடையவனாகி, ஓர் மண் அளந்தான் - ஒப்பற்ற பூமியை யளந்தவனாகிய திருமாலும், மலர் மேல் அயன் - தாமரை மலர் மீதிருக்கும் பிரமனும், தேடியும் - தேடியும், காண்பு அரியாய்-காண்பதற் கருமையானவனே, நீள்நீள் முடி-மிகவும் நீண்ட கிரீடங்களையணிந்த, வானவர் - தேவர்கள், வந்து இறைஞ்சும் - வந்துவணங்குகிற, நெல்வாயிலரத்துறை நின்மலனே - திருநெல்வாயி லரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனே, வாள்-ஒளிபொருந்திய, நார் - அன்பையுண்டாக்குகிற, நுதலார் - நெற்றியையுடைய மாதராது, வலைப்பட்டு - வலையிலகப்பட்டு, அடியேன் - அடியனேன், பலவின்கனி ஈபோல்வதன்முன் - பலாக்கனியி லொட்டிக்கொண்ட ஈப்போல வருந்துவதற்குமுன்பே, ஆணோடு பெண் ஆம் உரு ஆகி நின்றாய்-ஆணும் பெண்ணும் ஆகிய உருவாகி நின்றனை, அடியேன்-அடியனேன், உய்யப்போவது - உய்யப்போவதாகிய, ஓர் சூழல் சொல்-ஒரு உபாயஞ் சொல்வாயாக எ-று.

(பொ-ரை.) மாட்சிமைப்படாத வுருவத்தையுடையவனாகி, ஒப்பற்றபூமியையளந்தவனாகிய திருமாலும் தாமரை மலர்மீதிருக்கும் பிரமனும் தேடியும் காண்பதற் கருமையானவனே, மிகவும் நீண்ட கிரீடங்களையணிந்த தேவர்கள் வந்து வணங்குகிற திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும்பரிசுத்தமானவனே, ஒளிபொருந்திய அன்பையுண்டாக்குகிற நெற்றியையுடைய மாதராது வலையிலகப்பட்டு அடியனேன் பலாக்கனியி லொட்டிக்கொண்ட ஈப்போல வருந்துவதற்கு முன்பே, ஆணும் பெண்ணும் ஆகிய உருவாகி நின்றனை. அடியனேன் உய்யப் போவதாகிய ஒரு உபாயஞ் சொல்வாயாக.

(க-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, அடியேன், உய்யுமுபாயஞ் சொல் என்பதாம்.

(வி-ரை.) மாணாவுரு - சிற்றுரு. (வாமனரூபம்) நீள்நீள் என்ற அடுக்கு மிகுதி குறித்தது. நுதல் - நெற்றி. அது பகுதிப்பொருள் விகுதி. (9)

நீரூருநெடுவயல்சூழ்புறவி
னெல்வாயிலரத்துறைநின்மலனைத்
தேரூர்நெடுவீதிநன்மாடமலி
தென்னாவலர்கோனடித்தொண்டுபண்ணி
யாரூரனுரைத்தனநற்றமிழின்
மிகுமாலையோர்பத்திவைகற்றுவல்லார்
காரூர்களிவண்டறையானைமன்ன
ரவராகியோர்விண்முழுதாள்பவரே.

(ப-ரை.) நீர்ஊரும், - நீர்பாய்கின்ற, நெடுவயல் சூழ்புறவின் —, நெல்வாயிலரத்துறை நின்மலனை - திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனை, தேர்ஊர் - தேரோடுகிற, நெடுவீதி - நெடுந்தெருக்களும், மாடம் - மாளிகைகளும், மலி - நிறைந்த, தென் நாவலர் கோன் ஆரூரன் —, தொண்டு பண்ணி - தொண்டுசெய்து, உரைத்தன - சொன்னவையாகிய, நல்தமிழின் மிகுமாலை ஓர்பத்து —, இவை கற்றுவல்லார் - இவற்றைக் கற்றுவல்லவர், கார்ஊர் - கருமையாகிய, களிவண்டு அறை - களிப்பையுடைய வண்டுகளொலித்தற்கிடமாகிய, யானை - யானைகளையுடைய, மன்னரவர்ஆகி - அரசராகி, ஓர் - ஒப்பற்ற, விண்முழுது - விண்ணுடுமுழுதும், ஆள்பவர் - ஆள்வோராவர் எ-று.

(பொ-ரை.) நீர்பாய்கின்ற நெடுவயல்சூழ் புறவின் திருநெல்வாயிலரத்துறையில் விளங்கும் பரிசுத்தமானவனை, தேரோடுகிற நெடுந்தெருக்களும் மாளிகைகளும் நிறைந்த தென்னாவலர் கோன் ஆரூரன் தொண்டுசெய்து சொன்னவையாகிய நல்தமிழின் மிகுமாலை ஓர்பத்து இவற்றைக் கற்றுவல்லவர், கருமையாகிய களிப்பையுடைய வண்டுகளொலித்தற்கிடமாகிய யானைகளையுடைய அரசராகி ஒப்பற்ற விண்ணுடுமுழுதும் ஆள்வோராவர்.

(கு-ரை.) நெல்வாயிலரத்துறை நின்மலனே, அடியேன் உய்யுமுபாயஞ் சொல் என்பதாம்.

(வி-ரை.) மலிதல் — நிறைதல். தென்னாவலர்கோன் ஆரூரன் - சுந்தரன். கார் — கருநிறம். வண்டறைதல் மதநீருண்ணும் பொருட்டு. விண்முழுதாள்பவர் - இந்திரர். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அரத்துறைநாதர். தேவியார் - ஆனந்தநாயகியம்மை.

---

## திரு அஞ்சைக் களம்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தலைக்குத்தலைமாலை யணிந்ததென்னே
சடைமேற்கங்கைவெள்ளந் தரித்ததென்னே
யலைக்கும்புலித்தோல்கொண் டசைத்ததென்னே
யதன்மேற்கதநாகக்கச் சார்த்ததென்னே
மலைக்குநிகரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றிமுழங்கி வலம்புரிகொண்
டலைக்குங்கடலங் கரைமேன்மகோதை
யணியார்பொழி லஞ்சைக்களத்தப்பனே,

(ப-ரை.) மலைக்கு நிகர் ஒப்பன - மலைபோன்ற, வல்திரைகள் — வலிய அலைகள், வலித்து எற்றி — வலிகொண்டு மோதி, முழங்கி - சத்தித்து, வலம்புரிகொண்டு - வலம்புரிச்சங்குகளை யேந்தி, அலைக்கும்-அசைக்கின்ற கடல், அம் கரைமேல் - அழகிய கடற்கரைமேலுள்ள, மகோதைஅணிஆர் - பேரொலியழகு நிறைந்த, பொழில்—சோலைகள் சூழ்ந்த, அஞ்சைக் களத்து - திருவஞ்சைக் களத்திலெழுந்தருளியிருக்கிற, அப்பனே - எமது தந்தையே, தலைக்குத் தலைமாலை அணிந்தது என்னே - தலையில் தலைமாலையை அணிந்தது யாது காரணமோ, சடைமேல் கங்கைவெள்ளம் தரித்தது என்னே—, அலைக்கும் - வருத்துகிற, புலித்தோல் கொண்டு - புலியின் தோலைக்கொண்டு, அசைத்தது- கட்டினது, என்னே - யாது காரணமோ, அதன்மேல் - அதன்மேல், கதம் — கோவத்தையுடைய, நாகக்கச்சு - பாம்புக்கச்சையை, ஆர்த்தது - கட்டினது, என்னே - யாதுகாரணமோ எ-று.

(பொ-ரை.) மலைபோன்ற அலைகள் வலிகொண்டு மோதிசத்தித்துவலம்புரிச்சங்குகளையேந்தி அசைக்கின்ற, அழகிய கடற்கரைமேலுள்ள பேரொலியழகு நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவஞ்சைக்களத்தி லெழுந்தருளியிருக்கிற எமது தந்தையே, தலையில் தலைமாலையை அணிந்தது யாது காரணமோ, சடைமேல் கங்கைவெள்ளம் தரித்தது என்னே, வருத்துகிற புலியின் தோலை கொண்டு கட்டினது யாது காரணமோ, அதன்மேல் கோவத்தையுடைய பாம்புக்கச்சையைக் கட்டினது யாதுகாரணமோ.

(க-ரை.) திருஅஞ்சைக்களத் தப்பனே, தலைமாலையணிதல் முதலியவற்றைச்செய்ததென், என்பதாம்.

(வி-ரை.) தலைமாலை - தலைகளாலியன்ற மாலை. அலைக்கும் - கொல்லுதலெனினுமாம். அசைத்தல்-கட்டுதல். ஆர்த்தல்-கட்டுதல். முழங்கல் சத்தித்தல்.

பிடித்தாட்டியோர்நாகத்தைப்பூண்டதென்னே
  பிறங்குஞ்சடைமேற்பிறை சூடிற்றென்னே
பொடித்தான்கொண்டு மெய்முற்றும்பூசிற்றென்னே
  புகரேறுகந்தேறல் புரிந்ததென்னே
மடித்தோட்டந்துவன்றிரையெற்றியிட
  வளர்சங்கமங்காந்து முத்தஞ்சொரிய
வடித்தார்கடலங்கரைமேன்மகோதை
  யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) மடித்து-மறிந்து, ஓட்டந்து - ஓடி, வல்திரைஎற்றியிட - வலிய அலைகள் எறிந்திட, வளர்சங்கம் அங்காந்து - அங்குவளராநின்ற சங்குகள் வாய் திறந்து, முத்தம் சொரிய - முத்துக்களையுமிழ, அடித்து - அறைந்து, ஆர்-நிறைந்த, கடலங்கரைமேல் - அழகிய கடற்கரைமீது, மகோதை அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்தப்பனே - அழகுநிறைந்தபொழில் சூழ்ந்த அஞ்சைக்

களத்தப்பனே, ஓர் நாகத்தை - ஒரு பாம்பை, பிடித்துஆட்டி-பிடித்து ஆட்டி, பூண்டது என்னே - அணிந்தது என்ன காரணமோ,பிறங்கும் - விளங்குகிற, சடைமேல் பிறை சூடிற்று என்னே —, பொடிகொண்டு - திருநீறுகொண்டு, மெய்முழுதும் - திருமேனிமுழுதும், பூசிற்றென்னே - பூசியது என்னே, புகர் ஏறு - கோவத்தையுடைய இடபத்தின்மேல், உகந்து - மகிழ்ந்து, ஏறல் புரிந்தது - ஏறுதலைவிரும்பினது, என்னே - என்ன காரணமோ எ-று.

(பொ-ரை.) மறிந்து ஓடி வலிய அலைகள் எறிந்திட அங்கு வளராநின்ற சங்குகள் வாய்திறந்து முத்துக்களையுமிழ அறைந்து நிறைந்த அழகிய கடற் கரைமீது அழகு நிறைந்த பொழில் சூழ்ந்த அஞ்சைக்களத் தப்பனே, ஒரு பாம்பைப் பிடித்து ஆட்டி அணிந்தது என்னகாரணமோ, விளங்குகிற சடை மேல் பிறை சூடிற்று என்னே, திருநீறுகொண்டு திருமேனிமுழுதும் பூசியது என்னே, கோவத்தையுடைய இடபத்தின்மேல் மகிழ்ந்தேறுதலை விரும்பினது என்னகாரணமோ.

(க-ரை.) திரு அஞ்சைக்களத்தப்பனே, நீபாம்பாட்டல் முதலியவற்றைச் செய்வதென் னென்பதாம்.

(வி-ரை) பிறங்குதல் - விளங்குதல். புகர்-குற்றம் அது இங்குக் கோவத் தைக் குறித்தது. உகத்தல் - விரும்பல். ஒட்டம் தந்து என்பது ஒட்டந்து என விகாரமாயிற்று. அங்காத்தல் - வாய்திறத்தல். (2)

சிந்தித்தெழுவார்க்குநெல்லிக்கனியே
சிறியார்பெரியார்மனத்தேறலுற்றான்
முந்தித்தொழுவாரிறவார்பிறவார்
முனிகண்முனியேயமரர்க்கமரா
சந்தித்தடமால்வரைபோற்றிரைக
டணியாதிடறுங்கடலங்கரைமே
லந்தித்தலைச்செக்கர்வானேயொத்தியா
லணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) சிந்தித்து எழுவார்க்கு - நினைத்தெழுவோர்க்கு, நெல்லிக்கனி யே - நெல்லிப்பழமே, சிறியார் - சிறியோர், பெரியார் மனத்து - பெரியோ ரது திருவுளத்தில், ஏறலுற்றால் - ஏறினால், முந்தித் தொழுவார்—, இறவார் - இறக்க மாட்டார், பிறவார்-பிறக்கமாட்டார், முனிகள் முனியே-முனிவர்க்கு முனிவனே, அமரர்க்கு அமரா - தேவர்க்குத் தேவனே, சந்தி - சந்திகளை யுடைய, தடமால் வரைபோல் - மிகப்பெரிய மலைபோல, திரைகள்-அலைகள், தணியாது இடறும் - தாழாதிடறுகிற, கடலங்கரைமேல்-அழகிய கடற்கரை மீது, அந்தித்தலை - அந்திக்காலத்துத் தோன்றுகிற, செக்கர்வானே ஒத்தி - செவ்வானத்தையே நிகர்க்கிறாய், அணியார்பொழில் அஞ்சைக்களத் தப் பனே- அழகுநிறைந்த பொழில் சூழ்ந்த அஞ்சைக்களத் தப்பனே எ-று

(பொ-ரை.) நினைத்தெழுவோருக்கு நெல்லிப்பழமே, சிறியோர் பெரியோராது திருவுளத்திலேறினால், முந்தித்தொழுவார், இறக்கமாட்டார், பிறக்கமாட்டார், முனிவர்க்கு முனிவனே, தேவர்க்குத் தேவனே, சந்திக்ளையுடைய மிகப் பெரிய மலைபோல அலைகள் தாழாதிடறுகிற அழகிய கடற்கரைமீது அந்திக்காலத்துத் தோன்றுகிற செவ்வானத்தையே நிகர்க்கிறாய், அழகு நிறைந்த பொழில் சூழ்ந்த அஞ்சைக் களத்தப்பனே.

(க-ரை.) திரு அஞ்சைக் களத்தப்பனே, செவ்வான்போலும் நிறமுள்ளவனே, என்னையாளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) நெல்லிக்கனி யென்றது அன்பர்மனத்தி லூறுந்தோறும் இனித் திருத்தலானென்க. அமரன் - தேவன். அந்தித்தலை யென்பதில் தலை ஏழனுருபு. (3)

இழைக்குமெழுத்துக்குயிரேயொத்தியா
லிலையேயொத்தியாலிணையேயொத்தியாற்
குழைக்கும்பயிர்க்கோர்புயலேயொத்தியா
லடியார்தமக்கோர்குடியேயொத்தியான்
மழைக்குநிகரொப்பனவன்றிரைகள்
வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டழைக்குங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) இழைக்கும் எழுத்துக்கு - எழுது மெழுத்துக்கு, உயிரேயொத்தி - உயிரையே நிகர்க்கிறாய், இலையே ஒத்தி-இலையையே நிகர்க்கிறாய், இணையே ஒத்தி - இணையையே நிகர்க்கிறாய், குழைக்கும் பயிர்க்கு - கரிந்து போம் பயிருக்கு, ஓர் புயலே ஒத்தி - ஒப்பற்ற மேகத்தையே நிகர்க்கிறாய், அடியார் தமக்கு - அடியாருக்கு, ஓர் குடியே ஒத்தி - ஒரு குடியையே நிகர்த்திருக்கிறாய், மழைக்கு நிகரொப்பன - மேகத்துக்கு நிகராயினவாகிய, வல் திரைகள் - வலிய அலைகள், வலித்து எற்றி முழங்கி வலம்புரிகொண்டு—, அழைக்கும் - ஒலிக்கிற, கருங்கடலங்கரைமேல் - கரிய கடலின் கரைமேல், மகோதையணியார் பொழிலஞ்சைக்களத்தப்பனே - அழகு நிறைந்த சோலைகள் சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே எ-று.

(பொ-ரை.) எழுது மெழுத்துக்கு உயிரையே நிகர்க்கிறாய், இலையையே நிகர்க்கிறாய், இணையையே நிகர்க்கிறாய், கரிந்துபோம் பயிருக்கு ஒப்பற்ற மேகத்தையே நிகர்க்கிறாய், அடியார் தமக்கு ஒரு குடியையே நிகர்த்திருக்கிறாய், மேகத்துக்கு நிகராயினவாகிய வலிய அலைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு ஒலிக்கிற கருங்கடலங்கரைமேல் அழகு நிறைந்த சோலைகள் சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே.

(க-ரை.) திரு அஞ்சைக்களத் தப்பனே, என்னை யாளவேண்டுமென்ப தாம்.

(வி - ரை.) இழைத்தல் இவ்விடத்தெழுதல் மேற்று. குழைக்கும் தன்வினை. புயல் - மேகம். மழை - மேகத்துக் காகுபெயர். அழைத்தல் ஈண்டொலித்தன்மேவது. (4)

வீடின்பயனென்பிறப்பின்பயனென்
விடையேறுவதென்மதயானைநிற்கக்
கூடுமலைமங்கைபொருத்தியுடன்
சடைமேற்கங்கையாளைநீசூடிற்றென்னே
பாடும்புலவர்க்கருளும்பொருளென்
னிதியம்பலசெய்தகலச்செலவி
லாடுங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.)) வீடின்பயன்என்-வீட்டின்பயன் யாது, பிறப்பின் பயன்என்-பிறவிப்பயன் யாது, மதயானைநிற்க விடையேறுவது என் - மதயானையிருக்க விடையேறுவது என்னகாரணம் கூடும் - சேர்ந்த, மலைமங்கை ஒருத்தியுடன் - பார்வதியாகிய ஒருத்தியோடு, சடைமேல் - சடையின்மேல், கங்கையாளை - கங்கையை, சூடிற்று என்னே - சூடினது என்னகாரணம், பாடும் புலவர்க்கு - நின்னைப்பாடுகின்ற புலவர்க்கு, அருளும் பொருள் என் - அருள் செய்யும் பொருள் யாது, நிதியம்பல செய்து - பல திரவியங்களைச் சேகரித்துக்கொண்டு, அகலம் செலவில் - விஸ்தாரமாகிய செலவினால், ஆடும் கடலங்கரைமேல்-மோதுகின்ற கடலின் கரைமேல், மகோதையணியார் பொழிலஞ்சைக்களத் தப்பனே - அழகுநிறைந்த சோலைகள் சூழ்ந்த அஞ்சைக்களத் தப்பனே எ-று.

(பொ-ரை ) வீட்டின்பயன் யாது, பிறவிப்பயன்யாது, மதயானையிருக்க விடையேறுவது என்னகாரணம், சேர்ந்த பார்வதியாகிய வொருத்தியோடு சடைமேல் கங்கையைச் சூடினது என்னகாரணம், நின்னைப் பாடுகின்ற புலவர்க்கு அருள்செய்யும்பொருள்யாது, பலதிரவியங்களைச்சேகரித்துக்கொண்டு விஸ்தாரமாகிய செலவினால் மோதுகின்ற கடலின்கரைமேல் அழகு நிறைந்த சோலைகள் சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே.

(க-ரை.) திரு அஞ்சைக் களத்தப்பனே, என்னை யாளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) எதுகையின்பநோக்கி வீடின் என நின்றது. கங்கையாள் - கங்கையாகிய பெண். ஆடல் – அசைதல். (5)

இரவத்திடுகாட்டெரியாடிற்றென்னே
யிறந்தார்தலையிற்பலிகோடலென்னே
பரவித்தொழுவார்பெறுபண்டமென்னே
பரமாபரமேட்டிபணித்தருளா
யுரவத்தொடுசங்கமோடிப்பிமுத்தங்கொணர்ந்
தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டரவக்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) உரவத்தொடு - வலிமையோடு, சங்கமோடு இப்பிமுத்தம் - சங்கினோடு இப்பிமுத்துக்களை, கொணர்ந்து எற்றி - கொண்டுவந் தெறிந்து, முழங்கி - சத்தித்து, வலம்புரிகொண்டு - வலம்புரிச் சங்குகளைக் கொண்டு, அரவம் - ஒலியையுடைய, கடலங்கரைமேல் - அழகிய கடற்கரைமேலுள்ள, மகோதை அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே - அழகு நிறைந்த பொழில் சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே, இரவத்து - இராக்காலத்தில், இடு காட்டு-மயானத்தில், எரியாடிற்று என்னே - நெருப்பில் ஆடினது என்னகாரணம், இறந்தார் தலையில்-இறந்தவரது தலையோட்டில், பலிகோடல் என்னே- பிக்ஷையேற்றல் என்னே, பரவி தொழுவார் - வாழ்த்தி வணங்குவோர், பெறு பண்டம் என்னே - பெறுகின்ற பொருள் என்னே. பரமா - பரமனே, பர மேட்டி - பரமேஷ்டீ, பணித்தருளாய் - கட்டளையிட்டருளாய் எ-று.

(போ - ரை) வலிமையோடு சங்கினோடு இப்பிமுத்துக்களைக் கொண்டு வந்தெறிந்து சத்தித்துவலம்புரிச் சங்குகளைக்கொண்டு ஒலியையுடையஅழகிய கடற்கரைமேலுள்ள அழகு நிறைந்த பொழில்சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே, இராக்காலத்தில் மயானத்தில் நெருப்பில் ஆடினது என்னகாரணம், இறந்தவரது தலையோட்டில் பிக்ஷையேற்றல் என்னே, வாழ்த்திவணங்குவோர் பெறுகின்ற பொருள் என்னே, பரமனே, பரமேஷ்டீ, கட்டளையிட்டருளாய்.

(க - ரை.) திருஅஞ்சைக் களத்தப்பனே, நீ தலையோட்டி விரந்துண்பதென் என்பதாம்.

(வி - ரை.) இரவு - இரவம் என அம்முச்சாரியை யேற்றுநின்றது. பரவல் - துதித்தல். பண்டம் - பொருள். பரமேஷ்டீ - உயர்ந்த இடத்திலிருப்பவன். உரம் உரவம் என விகாரப்பட்டது. சங்கம் - சங்கு. இப்பி - முத்துச் சிப்பி. அரவம் - ஓசை. (6)

ஆக்குமழிவுமமைவுநீயென்பனுன்
சொல்லுவார்சொற்பொருளவைநீயென்பனு
னாக்குஞ்செவியுங்கண்ணுநீயென்பனு
னலனேயினிநானுனைநன்குணர்ந்தே

ஞேக்குநிதியம்பலவெத்தனையுங்கலத்திற்
புகப்பெய்துகொண்டேறநுந்தி
யார்க்குங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) நான் - யான், ஆக்கும் - படைப்பும், அழிவும் - அழிப்பும், அமைவும் - அளிப்பும், நீயென்பன்-நீயே யென்பேன், நான்-யான், சொல்லுவோர் - சொல்வோராது, சொற்பொருள் அவை - சொற் பொருள்களாகிய அவையாவும், நீயென்பன் - நீயே யென்பேன், நான் - யான், நாக்கும் செவியும் கண்ணும்—, நீயென்பன்-நீயே யென்பேன், நலனே-நன்றாகவே, இனி-இப்பொழுது, நான் உன்னை கண்டு உணர்ந்தேன் - நான் உன்னை நன்றாய் உணர்ந்தேன், நோக்கும் - பார்க்கப்படுகிற, நிதியம்பல எத்தனையும் - பல திரவியங்களையும், கலத்தில் புகபெய்து கொண்டு - மாக்கலத் தடங்கவிட்டுக் கொண்டு, ஏறநுந்தி - ஏறத்தள்ளி, ஆர்க்கும்-ஒலிக்கின்ற, கடலங்கரைமேல் மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே-அழகுநிறைந்த சோலைகள் சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே எ-று.

(பொ-ரை.) யான் படைப்பும் அழிப்பும் அளிப்பும் நீயே யென்பேன், யான் சொல்வோராது சொற்பொருளாகிய அவை யாவும் நீயே யென்பேன், யான் நாக்கும்செவியும் கண்ணும் நீயேயென்பேன், நன்றாகவே இப்பொழுது, நான் உன்னை நன்றாய் உணர்ந்தேன், பார்க்கப்படுகிற பல திரவியங்களையும் மாக்கலத்தடங்க விட்டுக்கொண்டு ஏறத்தள்ளி யொலிக்கின்ற அழகுநிறைந்த சோலைகள்சூழ்ந்த அஞ்சைக்களத்தப்பனே.

(க-ரை.) திருஅஞ்சைக்களத்தப்பனே, படைப்புமுதலியவை நீயேயென்பேன் என்பதாம்.

(வி-ரை.) ஆக்கு தொழிற்பெயர். இனி - நிகழ்காலங் குறித்து வந்தது. கலம் - மரக்கலம். பெய்தல் - இடுதல். ஏற - கரையேற, நேராக எனினுமாம்.

வெறுத்தேன்மனைவாழ்க்கையைவிட்டொழிந்தேன்
விளங்குங்குழைக்காதுடைவேதியனே
யிறுத்தாயிலங்கைக்கிறையாயவனைத்
தலைபத்தொடுதோள்பலவிற்றுவிழக்
கண்டங்கறுத்தாய்கடனஞ்சமுதுண்டு
கடுகப்பிரமன்றலையைந்தனுளொன்
றறுத்தாய்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) கடல்அம்கரைமேல் - அழகிய கடற்கரைமேலுள்ள, மகோதை அணிஆர் - பேரொளியழகுநிறைந்த, பொழில் - சோலைகள்சூழ்ந்த, அஞ்சைக் களத்து - திருவஞ்சைக்களத்தி லெழுந்தருளி யிருக்கிற, அப்பனே - எமது

தந்தையே, மனைவாழ்க்கையை - இல்லறவாழ்க்கையை, வெறுத்தேன் - வெறுத்தவனாய், விட்டு ஒழிந்தேன் - விட்டு நீங்கினேன், விளங்கும் - பிரகாசிக்கிற, குழை - குண்டலமணிந்த, காது உடை - திருச்செவியையுடைய, வேதியனே - அந்தணனே, தலைபத்தொடு - பத்துத் தலைகளோடு, பலதோள் - பலதோள்களும், இற்றுவிழ - அற்றுவிழும்படி, இலங்கைக்கு - இலங்கைக்கு, இறை ஆயவனை - தலைவனாகிய ராவணனை, இறுத்தாய் - முடிவுசெய்தாய், கடல் நஞ்சு - கடல்விஷத்தை, அமுது உண்டு - உணவாகவுண்டு, கண்டம் கறுத்தாய் - திருமிடறு கறுத்தாய், கடுக - விரைவாக, பிரமன் தலை ஐந்தனுள் ஒன்று அறுத்தாய் —, எ-று.

(பொ-ரை.) அழகிய கடற்கரைமேலுள்ள பேரொளியழகு நிறைந்த சோலைகள்சூழ்ந்த திருவஞ்சைக்களத்திலெழுந்தருளியிருக்கிற எமது தந்தையே; இல்லறவாழ்க்கையை வெறுத்துவிட்டேன், விட்டுநீங்கினேன், பிரகாசிக்கிற குண்டலமணிந்த திருச்செவியையுடைய அந்தணனே, பத்துத்தலைகளோடு பலதோள்களும் அற்று விழும்படி இலங்கைக்கு தலைவனாகிய ராவணனை முடிவு செய்தாய், கடல்விஷத்தை உணவாக வுண்டு திருமிடறு கறுத்தாய், விரைவாக பிரமன்தலை ஐந்தனுள் ஒன்று அறுத்தாய்.

(கு-ரை.) திரு அஞ்சைக்களத்தப்பனே, மனைவாழ்வை விட்டேன் என்னை யாளவேண்டுமென்பதாம்.

(வி-ரை.) வெறுத்தேன் - முற்றெச்சம் (வெறுத்து) அறவாழி யந்தணனாதலால் வேதியனே என்றார். (8)

பிடிக்குக்களிறேயொத்தியாலெம்பிரான்
 பிரமற்கும்பிரான் மற்றையார்க்கும்பிரா
னொடிக்குமளவிற்புரமூன்றெரியச்சிலை
 தொட்டவனேயுனைநான்மறவேன்
வடிக்கின்றனபோற்சிலவன்றிரைகள்
 வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டடிக்குங்கடலங்கரைமேன்மகோதை
 யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

(ப-ரை.) வடிக்கின்றனபோல் - வடிப்பனபோல, சிலவல்திரைகள் - சிலவலிய அலைகள், வலித்து எற்றி முழங்கி வலம்புரிகொண்டு அடிக்கும் கரைமேல் மகோதையணியார் பொழிலஞ்சைக் களத்தப்பனே—, பிடிக்கு - பெண்யானைக்கு, களிறேஒத்தி - ஆண்யானையையே நிகர்க்கிறாய், எம்பிரான்—, பிரமற்கும் பிரான்-பிரமனுக்குந்தலைவன், மற்றையார்க்கும் பிரான்—, நொடிக்குமளவில் - நொடிப்பொழுதில், புரமூன்று எரிய-முப்புரமெரிந்து நீறாகும்படி, சிலைதொட்டவனே - வில்வளைத்தவனே, உன்னை நான் மறவேன் - உன்னை யான் மறவேன் எ-று.

(பொ-ரை.) வடிப்பனபோலச் சிலவலிய அலைகள் வலித்துஎற்றி முழங்கி வலம்புரிகொண்டு அடிக்கும் கரைமேல் மகோதையணியார்பொழி லஞ்சைக் களத்தப்பனே, பெண்யானைக்கு ஆண்யானையே நிகர்க்கிறாய், எம்பிரான், பிரமனுக்குந்தலைவன், மற்றையார்க்கும் பிரான், நொடிப்பொழுதில் முப்புரமெரிந்து நீறாகும்படி வில்வளைத்தவனே, உன்னை யான் மறவேன்.

(க-ரை.) திரு அஞ்சைக் களத்தப்பனே, உன்னை நான் மறவேன் என்பதாம்.

(வி-ரை.) பிடி - பெண்யானை. களிறு-ஆண்யானை. சிலை - மலை யெனினுமாம். (9)

எந்தம்மடிகளிமையோர்பெருமானெனக்
கென்றுமளிக்குமணிமிடற்ற
னந்தண்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனை
மந்தமுழவுங்குழலுமியம்பும்
வளர்நாவலர்கோனம்பியூரன்சொன்ன
சந்தமிகுதண்டமிழ்மாலைகள்கொண்
டடிவீழவல்லார்தடுமாற்றிலரே.

(ப-ரை.) எந்தம் அடிகள் - எமது சுவாமிகள், இமையோர் பெருமான்- தேவர் பெருமான், எனக்கு - எனக்கு, என்றும் - எந்நாளும், அளிக்கும் - அருள்செய்கிற, மணி மிடற்றன் -நீலமணிபோலுந் திருமிடறுடையவன், அம்தண் கடல்மேல் மகோதை அணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனை—, மந்தம் முழவும் - மந்தமாகிய மத்தளமும், குழலும் - குழலும், இயம்பும் - ஒலிக்கிற, வளர் - வளராநின்ற, நாவலர்கோன்—, நம்பியாரூரன் சொன்ன—, சந்தம் மிகு - அழகுமிகுந்த, தண் தமிழ்மாலைகள் கொண்டு—, அடி வீழவல்லார் - இறைவனது திருவடியை விரும்பவல்லார், தடுமாற்று இலர் - தடுமாற்றமில்லாதவராவர் எ-று.

(பொ-ரை) எமது சுவாமிகள், தேவர் பெருமான், எனக்கு எந்நாளும் அருள் செய்கிற நீலமணிபோலுந் திருமிடறுடையவன், அம்தண் கடல்மேல் மகோதை அணியார் பொழிலஞ்சைக் களத்தப்பனை, மந்தமாகிய மத்தளமும் குழலும் ஒலிக்கின்ற வளராநின்ற நாவலர்கோன் நம்பியாரூரன் சொன்ன அழகு மிகுந்த தண்தமிழ் மாலைகள் கொண்டு இறைவனது திருவடியை விரும்பவல்லவர் தடுமாற்றமில்லாதவராவர்.

(க-ரை.) திரு அஞ்சைக்களத் தப்பனை வணங்கவல்லவர் தடுமாற்றமில்லாதவராவர் என்பதாம்.

(வி-ரை.) இமையோர் - தேவர், இதுமங்கலம். மணி-நீலமணி. மிடற்று-கண்டர். வீழ்தல் - விழுதல் எனினுமாம். தடுமாற்றம் என்பது தடுமாற்று என வந்தது. தடுமாற்றமாவது பிறவித் துன்பத்தால் தடுமாறுதல். (10)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் மலைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அஞ்சைக்களத்தப்பர். தேவியார்-உமையம்மை.

---

## திருஓணகாந்தன்றளி

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

**நெய்யும்பாலுந் தயிருங்கொண்டுநித் தம்பூசனைசெய்ய லுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லா
லைவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேனுக்
குய்யுமாறொன்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே.**

(ப-ரை.) ஓணகாந்தன் றளியுளீரே - திருஓணகாந்தன் றளியி லெழுந்தருளியிருப்பவரே, நெய்யும் பாலும் தயிரும் கொண்டு-நெய்யினையும் பாலினையும் தயிரினையும் கொண்டு, (உன் அன்பர்) நித்தம் பூசனை செய்யலுற்றார் - நித்தமும் பூசை செய்யாநின்றார், (எனக்கோ) கையில் ஒன்றும் காணம் இல்லை-கையில் சிறிதும் பொன் இல்லை, கழல்-வீரக்கழலணிந்த, அடி - உன் திருவடியை, தொழுது - வணங்கி, உய்யினல்லால் - பிழைத்தாலன்றி, ஐவர் கொண்டு-ஐவரால், இங்கு - இந்த மாயவாழ்க்கையில், ஆட்ட ஆடி - ஆடுவிக்கஆடி, ஆழ்-ஆழ்ந்த, குழிப்பட்டு - குழியில் விழுந்து, அழுந்துவேனுக்கு - அழுந்தாநின்ற எனக்கு, உய்யும் - பிழைத்தற்குரிய, ஆறு ஒன்று - ஒரு வழியை, அருளிச் செய்யீர் - அருளிச்செய்வீராக எ-று.

(பொ-ரை.) திருவோணகாந்தன் றளியி லெழுந்தருளியிருப்பவரே, நெய்யினையும் பாலினையும் தயிரினையும் கொண்டு உன் அன்பர் நித்தமும் பூசை செய்யாநின்றார், எனக்கோ கையில் சிறிதும் பொன் இல்லை வீரக்கழலணிந்த வுன்திருவடியை வணங்கி பிழைத்தாலன்றி ஐவரால் இந்த மாய வாழ்க்கையில் ஆடுவிக்க ஆடி ஆழ்ந்த குழியில் விழுந்து அழுந்தாநின்ற எனக்கு பிழைத்தற்குரிய ஒருவழியை அருளிச்செய்வீராக.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, நான் உய்யும்வழி சொல்லும் என்பதாம்.

(வி-ரை.) செய்யலுற்றார் என்பதற்கு வினைமுதலாகிய உன் அன்பர் என்பது வருவித்துரைக்கப்பட்டது. செய்யலுற்றால் எனப் பாடமோதி செய்யத் தொடங்கினால் என்றுரைத்தலுமாம். காணம் - பொன். (பொற்

கார்ச்) ஐவர் என்றது பஞ்சேந்திரியங்களை, அவையாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி யென்பன. (1)

திங்கடங்குசடைகண்மேலோர்திரைகள்வந்துபுரளவீசுங்
கங்கையாளேல்வாய்திறவாள்கணபதியேல்வயிறுதாரி
யங்கைவேலான்குமரன்பிள்ளைதேவியார்கோற்றட்டியாளா
லுங்களுக்காட்செய்யமாட்டோமோணகாந்தன்றளியுளீரே.

(ப-ரை.) திங்கள்தங்கு - பிறைதங்கிய, சடைகள்மேல்-சடைகளின்மீது, ஓர் - ஒப்பற்ற, திரைகள் வந்து புரள - அலைகள்வந்து புரளாநிற்க, வீசும்-எறிகின்ற, கங்கையாளேல் - கங்காதேவியோவெனின், வாய்திறவாள் - வாய்திறக்கமாட்டாள், கணபதியேல் — கணபதியோவெனின், வயிறுதாரி - பெறுவயிறன், அங்கை வேலான் - அங்கையில் வேலை யுடையவனாகிய முருகனோவெனின், குமரன்பிள்ளை-குமார பருவத்தனாகிய பிள்ளை, தேவியார்-தேவியாரோவெனின், கோற்றட்டியாள் - கோற்றட்டியாளாயிருக்கிறாள், ஆல் - ஆதலால், உங்களுக்கு - உங்களுக்கு, ஆட்செய்யமாட்டோம் - தொண்டு செய்யமாட்டோம், ஓணகாந்தன் றளியுளீரே - திருவோணகாந்தன்றளியி லெழுந்தருளியிருப்பவரே எ-று.

(பொ-ரை.) பிறைதங்கிய சடைகளின்மீது ஒப்பற்ற அலைகள் வந்து புரளாநிற்க எறிகின்ற கங்காதேவியோவெனின், வாயைத்திறக்கமாட்டாள், கணபதியோவெனின் பெறுவயிறன், அங்கையில் வேலையுடையவனாகிய முருகனோவெனின் குமாரபருவத்தனாகியபிள்ளை, தேவியாரோவெனின் கோற்றட்டியாளாயிருக்கிறாள், ஆதலால் உங்களுக்கு ஆட்செயமாட்டோம், திருவோணகாந்தன்றளியி லெழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, யாம் உங்களுக்கு ஆட்செய்யமாட்டோம் என்பதாம்.

(வி-ரை.) எல் எனின் என்பதன் மரூஉ. ஆல் - ஆதலால். கோற்றட்டியாள் - கோலைத் தட்டுகிறவள். (மாயவித்தை செய்கிறவள்) மாயவித்தை செய்கிறவன் தன் கையிலொரு சிறுகோல் கொண்டு நிலத்திற் றட்டுதலும் அவன் குறித்த காரியங்க ளெல்லா முடிவதுபோல, இவளும் தான் சங்கற்பித்தபடியே பஞ்சகிருத்தியங்களும் முட்டின்றி முடிவதனை லிவ்வாறு கூறினார். (2)

பெற்றபோதும்பெறாதபோதும்பேணியுங்கழலேத்துவார்கண்
மற்றோர்பற்றிலரென்றிரங்கிமதியுடையவர்செய்கைசெய்யீ
ரற்றபோழ்துமலந்தபோழ்துமாவற்காலத்தடிகேளும்மை
யொற்றிவைத்திங்குண்ணலாமோவோணகாந்தன்றளியுளீரே.

(ப-ரை.) பெற்றபோதும் பெறாதபோதும் - பெற்றகாலத்தும் பெறாதகாலத்தும், பேணி - விரும்பி, உம்கழல் ஏத்துவார்கள் - உமது திருவடியைத்

துதிப்பவர், மற்று ஓர் பற்று இலர் என்று இரங்கி - வேறொரு ஆதரவில லொன்று இரக்கமுற்று, மதிஉடையவர் - அறிவுடையோரது, செய்கை-செய் கையை, செய்யீர் - செய்யமாட்டீர், அற்றபோழ்தும் - கைப்பொருளில்லாத போதும், அலந்தபோழ்தும்-வருந்தினபோதும், ஆவற்காலத்து - ஆபத்காலத் தில், அடிகேள் - சுவாமிகளே, உம்மை ஒற்றிவைத்து - தேவரீரை ஒற்றி வைத்து, இங்கு உண்ணல் ஆமோ - இவ்விடத்தில் உண்ணக்கூடுமோ, ஓண காந்தன் றளியுளீரே-திருஓணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) பெற்றகாலத்தும் பெறுதகாலத்தும் விரும்பி உமது திரு வடியைத் துதிப்பவர் வேறொரு ஆதரவிலரொன்று இரக்கமுற்று அறிவுடை யோரது செய்கையைச் செய்யமாட்டீர், கைப்பொருளில்லாத போதும் வருந் தினபோதும் ஆபத்காலத்தில், சுவாமிகளே, தேவரீரை ஒற்றிவைத்து இவ் விடத்தில் உண்ணக் கூடுமோ, திருஓணகாந்தன்றளியி லெழுந்தருளி யிருப் பவரே.

(க-ரை.) திருவோண காந்தன் றளியுளீரே, ஆபத்காலத்தில் உம்மை யொற்றிவைத் துண்ணலாமோ வென்பதாம்.

(வி-ரை.) கழல் - திருவடி. ஏத்துதல் - துதித்தல். பற்று - ஆதாவு. மதி யுடையவர் செய்கையாவது காத்தல். அலத்தல் - வருந்தல். ஒற்றி - அடை மானம். (3)

வல்லதெல்லாஞ்சொல்லியும்மைவாழ்த்தினும்வாய்திறந்தொன்
றில்லையென்னீருண்டுமென்னீரெம்மையாள்வானிருப்பதென்னீர்
பல்லையுக்கபடுதலையிற்பகலெலாம்போய்ப்பலிதிரிந்திங்
கொல்லைவாழ்க்கையொழியமாட்டீரோணகாந்தன்றளியுளீரே.

(ப-ரை.) வல்லது எல்லாம் சொல்லி - கூடுமான தெல்லாஞ் சொல்லி, உம்மை வாழ்த்தினும் - தேவரீரைத் துதித்தாலும், வாய்திறந்து - வாயைத் திறந்து, ஒன்று இல்லை யென்னீர் உண்டும் என்னீர் - ஒன்றில்லை யென்ன மாட்டீர் உண்டென்னமாட்டீர், எம்மை ஆள்வான்-எம்மையாளும்பொருட்டு, நீர் இருப்பது என் - நீரிருப்பதென்ன, பல் உக்கப்படுதலையில் - பல்லுதிர்ந்து பட்டதலையில், பகல் எல்லாம் போய் - பகற்பொழுதெல்லாம் போய், பலி திரிந்து - பிச்சைக்கு அலைந்து, இங்கு-இவ்விடத்தில், ஒல்லைவாழ்க்கை ஒழிய மாட்டீர் - விரைந்தழியும் வாழ்வை யொழியமாட்டீர், ஓணகாந்தன் றளியு ளீரே - திருவோணகாந்தன்றளியி லெழுந்தருளியிருப்பவரே எ-று.

(பொ-ரை.) கூடுமானதெல்லாஞ் சொல்லி தேவரீரைத் துதித்தாலும் வாயைத் திறந்து ஒன்றில்லை யென்னமாட்டீர் உண்டென்னமாட்டீர், எம்மை யாளும்பொருட்டு நீரிருப்பதென்ன, பல்லுதிர்ந்துபட்டதலையில் பகலெல்லாம் போய் பிச்சைக்கு அலைந்து இவ்விடத்தில் விரைந்தழியும் வாழ்வை யொழிய மாட்டீர், திருவோணகாந்தன்றளியி லெழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, நீர் பிக்ஷையேற்பதை யொழியமாட்டீர் என்பதாம்.

(வி-ரை.) வல்லது - இசைந்தது. உண்டும் என்பதில் உம்மை யிசை நிறை. பல்லை யென்பதில் ஐசாரியை. ஒல்லை-விரைவு. ஒல்லைவாழ்க்கை-விரைவிலழியும் அற்பவாழ்வு. (4)

கூடிக்கூடித்தொண்டர்தாங்கள்கொண்டபாணிகுறைபடாமே
யாடிப்பாடியழுதுநெக்கங்கன்புடையவர்க்கின்பமோரீர்
தேடித்தேடித்திரிந்தெய்த்தாலுஞ்சித்தமென்பால்வைக்கமாட்டீ
ரோடிப்போகீர்பற்றுந்தாரீரோணகாந்தன் றளியுளீரே.

(ப-ரை.) தொண்டர் - அடியார், கூடிக்கூடி-சேர்ந்து சேர்ந்து, தாங்கள் கொண்டபாணி குறைபடாமே-தாம் தொடங்கின பாட்டுக் குறையாமல், ஆடி பாடி அழுது - ஆடிபாடி அழுது, நெக்கு - (மனம்) நெகிழ்ந்து, அங்கு - அவ்வாறு, அன்பு உடையவர்க்கு - அன்பருக்கு, இன்பம் ஓரீர்-சுகந்தர நாடமாட்டீர், தேடி தேடி திரிந்து - தேடித்தேடியலைந்து, எய்த்தாலும் - இளைத்தாலும், சித்தம் - உம்திருவுளத்தை, என்பால் - என்னிடத்தில், வைக்கமாட்டீர் - வைக்கமாட்டீர், ஓடிப்போகீர் - ஓடிப்போகமாட்டீர், பற்றுந்தாரீர் - பிடியும் கொடுக்கமாட்டீர், ஓணகாந்தன் றளியுளீரே - திருவோணகாந்தன் றளியி லெழுந்தருளி யிருப்பவரே எ-று.

(போ-ரை.) அடியார் சேர்ந்து சேர்ந்து தாம் தொடங்கின பாட்டுக் குறையாமல் ஆடிபாடி அழுது மனம்நெகிழ்ந்து அவ்வாறு அன்புடையவருக்கு சுகந்தரநாடமாட்டீர், தேடித் தேடியலைந்து இளைத்தாலும் உம் திருவுளத்தை என்னிடத்தில் வைக்கமாட்டீர், ஓடிப்போகமாட்டீர் பிடிகொடுக்கவுமாட்டீர், திருவோணகாந்தன்றளியி லெழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, உமது திருவுளத்தை யென் மீது வைக்கமாட்டீர் என்பதாம்.

(வி-ரை.) பாணி - பாட்டு. ஓர்தல் - நாடுதல். எய்த்தல் - இளைத்தல். பற்று - பிடி. (5)

வாரிருங்குழல்மைவாணெடுங்கண்மலைமகண்மதுவிம்முகொன்றைத்
தாரிருந்தடமார்புநீங்காத்தையலாளுலகுய்யவைத்த
காரிரும்பொழிற்கச்சிமூதூர்க்காமக்கோட்டமுண்டாகநீர்போ
யூரிடும்பிச்சைகொள்வதென்னேயோணகாந்தன் றளியுளீரே.

(ப-ரை.) வார் - நீண்ட, இருங்குழல் - பெரிய கூந்தலையும், மைவாள் நெடுங்கண் - மையெழுதும் பெரியவாள்போலும் கண்களையும் உடைய, மலை

மங்கை-மலைமகளும், மதுவிம்மு - தேன்பெருகுகிற, கொன்றைதார் - கொன் றைமலர் மாலையையணிந்த, தடம்மார்புநீங்கா - விசாலமான வுன் மார்பை விட்டகலாத, தையலாள் - பெண்ணுமாயிருக்கிற உமாதேவியானவள், உலகு உய்யவைத்த - உலகம் பிழைக்கும்படிவைத்த, கார் - மேகங்கள் தவழ்கின்ற, இரும்பொழில் - பெரியசோலைகள் சூழ்ந்த, கச்சிமூதூர் - திருக்கச்சியாகிய, பழையநகரில், காமக்கோட்டம் உண்டாக - காமக்கோட்டம் உண்டாயிருக்க, நீர் - தேவரீர், போய் - சென்று, ஊர் - ஊரார், இடும் - போடுகிற, பிச்சை கொள்வது என்னே - பிச்சை யேற்பதற்குக் காரணம் யாதோ, ஓணகாந்தன் றளியுளீரே - திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) நீண்ட. பெரிய கூந்தலையும் மையெழுதும் பெரியவாள் போலும் கண்களையும் உடைய மலைமகளும் தேன்பெருகுகிற கொன்றைமலர் மாலையையணிந்த விசாலமான வுன் மார்பைவிட்டகலாத பெண்ணுமாயிருக்கிற உமாதேவியானவள் உலகம் பிழைக்கும்படி வைத்த மேகங்கள் தவழ்கின்ற பெரிய சோலைகள் சூழ்ந்த திருக்கச்சியாகிய பழைய நகரில் காமக்கோட்டம் உண்டாயிருக்க நீர் போய் ஊரார் போடுகிற பிச்சையை யேற்பதற்குக் காரணம் யாதோ, திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, காமக்கோட்டமிருக்க நீர் பிச்சையேற்ற லென்னென்பதாம்.

(வி-ரை.) வார் என்பதற்கு ஒப்பனை செய்யப்பட்ட என்றுரைப்பினு மாம். விம்முதல் - மிகுதல். காமக்கோட்டம் - விரும்பினவற்றைக் கொடுத்தற் குரிய அறச்சாலை. இது உமாதேவியாரால் திருக்கச்சியில் வைத்து முப்பத்தி ரண்டறமும் தவறாது நடத்தப்பட்டு வருவதற்குரிய தருமச்சாலை. (6)

**பொய்ம்மையாலேபோதுபோக்கிப்புறத்துமில்லையகத்துமில்லை**
**மெய்ம்மைசொல்லியாளமாட்டீர்மேலைநாளொன் றிட வுங்கில்லீ**
**ரெம்மைப்பெற்றாலேதும்வேண்டீரேதுந்தாரீரேதுமோதீ**
**ரும்மையென்றேயெம்பெருமானோணகாந்தன் றளியுளீரே.**

(ப-ரை.) பொய்மையாலே - பொய் சொல்லுதலாலே, போதுபோக்கி - பொழுதுபோக்கி, புறத்தும் இல்லை - வெளியிலுமில்லை, அகத்தும் இல்லை - உள்ளிடத்துமில்லை, மெய்மைசொல்லி - உண்மைசொல்லி, ஆளமாட்டீர் - ஆண்டருளமாட்டீர், மேலைநாள் - முன்னாளில், ஒன்று இடவும் கில்லீர் - ஒன் றிடவுமாட்டீர், எம்மைப்பெற்றால் - எங்களைத் தொண்டராகப்பெறின், ஏதும் வேண்டீர்-யாதொன்றையும் விரும்பமாட்டீர், ஏதும் தாரீர்-யாதும்கொடுக்க மாட்டீர், ஏதும் ஓதிர் - எதுவும் சொல்லமாட்டீர், இப்படிப்பட்ட உம்மை எம்பெருமான் என்றேம்-எம்மிறைவனென்றோம், ஓணகாந்தன் றளியுளீரே- திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவரே எ-று.

(போ-ரை.) பொய் சொல்லுதலாலே பொழுதுபோக்கி வெளியிலும் இல்லை உள்ளிடத்தும் இல்லை, உண்மை சொல்லி ஆண்டருளமாட்டீர், முன்னுளில் ஒன்றிடவுமாட்டீர், எங்களைத்தொண்டராகப்பெறில் யாதொன்றையும் விரும்பமாட்டீர், எதையும் கொடுக்கமாட்டீர், எதையும் சொல்லமாட்டீர், இப்படிப்பட்ட உம்மை எம்மிறைவனென்றேம், திருவோணகாந்தன் றளியி லெழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவோண காந்தன் றளியுளீரே, ஒன்றும் தராதவும்மை எம் பெருமானென்றேம் என்பதாம்.

(வி-ரை.) போது - பொழுது. வேண்டல் - விரும்பல். (7)

**வலையம்வைத்தகூற்றமீவான்வந்துநின்றவார்த்தைகேட்டுச்**
**சிலையமைத்தசிந்தையாலேதிருவடிதொழுதுய்யினல்லாற்**
**கலையமைத்தகாமற்செற்றேய்குரோதலோபமதமவருடை**
**யுலைபமைத்திங்கொன்றமாட்டேனேணகாந்தன்றளியுளீரே.**

(ப-ரை.) வலையம்வைத்த - வலைவைத்தா, கூற்றம் - யமனுனவன், மீவான் - மேலிடமாகிய ஆகாயத்தில், வந்துநின்ற வார்த்தை கேட்டு - வந்து நின்ற சொல்லைக்கேட்டு, சிலை அமைத்த சிந்தையாலே-கல்லாலமைக்கப்பட்ட மனத்தினுலே, திருவடி தொழுது - உன்திருவடியையவணங்கி, உய்யின் அல்லால் - பிழைத்தலேயன்றி, கலை அமைத்தகாமன் - மகரமீனையுயர்த்த காமனை, செற்றேய்-அழித்தவனே, குரோதம் லோபம் மதம் என்பவற்றையுடைய—, அவருடை - அவரது, உலை - கெடுவழியில், அமைத்து-வைக்கப்பட்டு, இங்கு ஒன்றமாட்டேன் - இவ்விடத்திருக்கமாட்டேன், ஓணகாந்தன் றளியுளீரே - திருவோணகாந்தன்றளியி லெழுந்தருளியிருப்பவரே எ-று.

(போ-ரை.) வலைவைத்த யமனுனவன் மேலிடமாகிய ஆகாயத்தில் வந்து நின்ற சொல்லைக்கேட்டு, கல்லாலமைக்கப்பட்ட மனத்தாலே உன்திருவடியை வணங்கிப் பிழைத்தலேயன்றி, மகரமீனை யுயர்த்த காமனை யழித்தவனே, குரோதம் லோபம் மதம் என்பவற்றையுடைய அவரது கெடுவழியில் அமைத்து வைக்கப்பட்டு இவ்விடத்திருக்கமாட்டேன், திருவோணகாந்தன் றளியி லெழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, காமநெறியி லமைந்திருக்க மாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) வலையம் என்பதில் அம்சாரியை. மீ-மேலிடம். வான் - ஆகாயம். சிலையமைத்த சிந்தை - கல்மனம். கலை - மகரமீன். அமைத்த-கொடியாயமைத்த. செறல் - அழித்தல். உலைதல் - கெடுதல். உலையென்றது முதனிலைத் தொழிற்பெயர். உலைதற்காரணமாகிய வழியை யுணர்த்தலால் ஆகுபெயர். (8)

வாரமாகித்திருவடிக்குப்பணிசெய்தொண்டர்பெறுவதென்னே
யாரம்பாம்புவாழ்வதாரூரொற்றியூரே லும்மதன்று
தாரமாகக்கங்கையாளைச்சடையில்வைத்தவடிகேளுந்த
மூருங்காடுமுடையுந்தோலேயோணகாந்தன்றளியுளீரே.

(ப-ரை.) வாரம் ஆகி - அன்புடையராகி, திருவடிக்கு - சீர்பாதத்துக்கு, பணிசெய் - தொண்டுசெய்கிற, தொண்டர் - அடியார், பெறுவது என்னே - பெறுவது யாதோ, ஆரம்பாம்பு - பாம்பே மாலை, வாழ்வது ஆரூர் — நீர் வசிப்பது திருவாரூர், ஒற்றியூரேல் - ஒற்றியூரோவெனின், உம்மது அன்று-அது உமதல்ல, கங்கையாளை - கங்காதேவியை, தாரம் ஆக—மனைவியாகக்கொண்டு, சடையில்வைத்த-சடையில் வைத்துக்கொண்ட, அடிகேள் - சுவாமிகளே, உம் தம்-உம்முடைய, ஊரும் காடு-ஊரும் மயானம், உம் உடையும் தோலே-உமதாடையுந் தோலே, ஓணகாந்தன் றளியுளீரே - திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) அன்புடையராகி சீர்பாதத்துக்கு தொண்டுசெய்கிற அடியார் பெறுவது யாதோ, பாம்பே மாலை, நீர்வசிப்பது திருவாரூர், ஒற்றியூரோவெனின் அது உமதல்ல, கங்காதேவியை மனைவியாகக்கொண்டு சடையில் வைத்துக்கொண்ட சுவாமிகளே, உம்முடைய ஊரும் மயானம், உமது ஆடையும் தோலே, திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவோணகாந்தன் றளியுளீரே, உமக்குள்ள செல்வம் பாம்பும் தோலுமே யென்பதாம்.

(வி-ரை.) ஒற்றியூர்-ஒற்றிவைத்த வூர். உடை-உடுக்கப்படுவது (ஆடை). தோல் என்றது யானைத்தோல் புலித்தோல் சிங்கத்தோல் என்பவற்றை. (9)

ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தா
மாவணஞ்செய்தாளுங்கொண்டவரைதுகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்க்குப்பறையுந்தாஞ்செய்தபாவந்தா [னே.

(ப-ரை.) ஓவண்ணம்மேல்-ஓவண்ணத்தின்மேல், எருது ஒன்று ஏறும் - ஒரு எருதின்மீது ஏறுகின்ற, ஓணகாந்தன் றளியுளார் - திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவர், தாம் - தாமே, ஆவணம் செய்து - அடிமையோலை யுண்டாக்கிக்கொண்டு வந்து, அ - அந்த, அரைதுகிலொடு - திருவரையாடையோடு, பட்டும் வீக்கி - பட்டாடையுங்கட்டி, கோவணமேற்கொண்டவேடம்-கோவணமேற்கொண்ட கோலத்தை, கோவையாக-வரிசையாக, ஆரூரன்சொன்ன - சுந்தரன்சொன்ன, பாவண்ணத்தமிழ் - பாடலாகிய அழகிய தமிழானியன்ற, பத்தும் - பத்துப்பாடலையும், வல்லார்க்கு - கற்று வல்லவர்க்கு, தாம்செய்தபாவம் - அவர் தாம்செய்த பாவம், பறியும்-அவரைவிட்டு நீங்கும் எ-று.

(போ-ரை.) ஓவண்ணத்தின்மேல் ஒரு எருதின்மீது ஏறுகின்ற திருவோணகாந்தன் றளியிலெழுந்தருளி யிருப்பவராகிய சிவபிரானார், தாமே அடிமையோலை யுண்டாக்கிக்கொண்டு வந்து, அந்தத் திருவரை யாடையோடு பட்டாடையுங்கட்டிக் கோவணமேற்கொண்ட கோலத்தை வரிசையாகச் சுந்தரன் சொன்ன பாடலாகிய அழகிய தமிழாணியன்ற பத்தினையும் கற்று வல்லவர்க்குத் தாம்செய்த பாவம் அவரைவிட்டு நீங்கும்.

(கு-ரை.) திருவோணகாந்தன் றளியுளாரை ஆரூரன் சொன்ன பத்துப் பாடலும் கற்று வல்லவர்க்கு பாவமொழியும் என்பதாம்.

(வி-ரை.) ஓவண்ணம் - அரன் என்னும் வண்ணம். வீக்குதல் - கட்டுதல். கோவணமேற்கொண்ட வேடம் - கோவணக்கோலம். பறிதல்-நீங்குதல்.

திருச்சிற்றம்பலம்

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஓணகாந்தேசுவரர்.

---

## திருவெண்காடு

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

**படங்கொணாகஞ்சென்னிசேர்த்திப்பாய்புலித்தோலரையில்வீக்கி**
**யடங்கலாரூரெரியச்சீறியன்றுமூவர்க்கருள்புரிந்தீர்**
**மடங்கலானைச்செற்றுகந்தீர்மனைகடோறுந்தலைகையேந்தி**
**விடங்கராகித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.**

(ப-ரை.) படம் கொள் நாகம் - படத்தையுடைய பாம்பை, சென்னி சேர்த்தி - சடையிற்கட்டி, பாய் - பாய்கின்ற, புலித்தோல் - புலித்தோலை, அரையில்வீக்கி - திருவரையிற்கட்டி, அடங்கலார் - பகைவாது, ஊர் - ஊராகிய முப்புரம், எரிய - எரியும்படி, சீறி - கோபித்து, அன்று - அந்நாளில், மூவர்க்கு அருள்புரிந்தீர் - மூவர்க்குமாத்திரமே அநுக்கிரகம் செய்தீர், மடங்கலானை - சிங்கவுருவத்தானை, செற்று உகந்தீர் - அழித்துக்களித்தீர், தலை கை ஏந்தி - தலையோட்டைக் கையிலேந்தி, விடங்கர் ஆகி - அழகராகி, மனைகள் தோறும் - வீடுகள் தோறும், திரிவது என்னே - உழல்வது யாதுகாரணத்தாலோ, வேலை சூழ் - கடல் சூழ்ந்த, வெண்காடனீரே - திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே எ-று.

(போ-ரை.) படத்தையுடைய பாம்பைச் சடையிற்கட்டி, பாய்கின்ற புலித்தோலை திருவரையிற் கட்டி, பகைவாது ஊராகிய முப்புரம் எரியும்படி கோபித்து, அந்நாளில் மூவர்க்கு மாத்திரமே அநுக்கிரகம் செய்தீர், சிங்கவுருவத்தானை யழித்துக் களித்தீர், தலையோட்டைக் கையிலேந்தி அழகராகி வீடுகள் தோறும் உழல்வது யாது காரணத்தாலோ, கடல் சூழ்ந்த திருவெண் காட்டில் எழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவெண் காடனீரே, முப்புரமெரித்த நீர், பிணைகூயேற்ப தென்னென்பதாம்.

(வி-ரை.) படங்கொள் நாகம் என்றார் நீர்ப்பாம்பு முதலியவற்றை விலக்குதற்கு. மூவர் என்றது தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்யுந்மாலி என்பவர்களை. மடங்கலான் என்றது நரசிங்கனை. விடங்கம் - அழகு. வேலை வேலா என்னும் வடசொற்றிரிபு. வெண்காடு என்பதனை சுவேதவநம் என்பர் வடநூலார். (1)

**இழித்துகந்தீர்முன்னைவேடமிமையவர்க்குமுரைகள்பேணு**
**தொழித்துகந்தீர்நீர்முன்கொண்டவுயர்தவத்தையமரர்வேண்ட**
**வழிக்கவந்தகாமவேளையவனுடையதாதைகாண**
**விழித்துகந்தவெற்றியென்னேவேலைசூழ்வெண்காடனீரே.**

(ப-ரை.) முன்னைவேடம் - முந்தின வேடத்தை, இழித்து உகந்தீர் - இழிவாக்கி மகிழ்ந்தீர், இமையவர்க்கும்-தேவர்களுக்கும், உரைகள் பேணுது - சொற்களைச் சொல்லாது, ஒழித்து உகந்தீர் - நீக்கி மகிழ்ந்தீர், முன் - முற்காலத்தில், கொண்ட - நீர் கொண்ட, உயர்தவத்தை - சிறந்ததவத்தினை, அழிக்க - அழிக்கும்படி, அமரர் வேண்ட - தேவர்கள் வேண்ட, வந்த காமவேளை - வந்த மன்மதனை, அவனுடைய தாதைகாண-அவன் தந்தை நோக்கிக் கொண்டிருக்க, விழித்து - விழித்து எரித்து, உகந்த - மகிழ்ந்த, வெற்றி என்னே - வெல்விக்குக் காரணம் யாதோ, வேலைசூழ் - கடல் சூழ்ந்த, வெண்காடனீரே - திருவெண்காட்டிலெழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) முந்தினவேடத்தை இழிவாக்கி மகிழ்ந்தீர், தேவர்களுக்கும் சொற்களைச் சொல்லாது நீக்கி மகிழ்ந்தீர், முற்காலத்தில் நீர் கொண்ட சிறந்த தவத்தினை அழிக்கும்படி தேவர்கள்வேண்ட வந்த மன்மதனை அவன் தந்தை நோக்கிக் கொண்டிருக்க விழித்தெரித்து மகிழ்ந்த வெல்விக்குக் காரணம் யாதோ, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, உமது தவத்தை யழிக்கவந்த காமனை யெரித்த வெற்றியென்னே யென்பதாம்.

(வி-ரை.) முன்னைவேடம் - சிவவேடம். உயர்தவம் - உயர்ந்ததவம். காமவேள் - இருபெயரொட்டு. தாதை - தந்தை. விழித்தல் - நெற்றிக்கண்ணைத் திறத்தல். (2)

**படைகளேந்திப்பாரிடமும்பாதம்போற்றமாதுநீரு**
**முடையோர்கோவணத்தராகியுண்மைசொல்லீருமையன்றே**
**சடைகடாழக்கரணமிட்டுத்தண்மைபேசியில்பலிக்கு**
**விடையதேறித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.**

(ப-ரை.) படைகள் ஏந்தி - ஆயுதங்களைத் தாங்கி, பாரிடம் - பூதகணங்கள், உம்பாதம் போற்ற - உமது திருவடியைவணங்க, மாதும் நீரும் - தேவி

யாரும் நீருமாக, உடை ஓர் கோவணத்தர் ஆகி - ஒரு கோவணத்தையுடையவ ராகி, உண்மை சொல்லீர்-மெய் சொல்லீர், உண்மையன்றே-இது உண்மை யல்லவா, சடைகள்தாழ - சடைகள் தொங்க, கரணமிட்டு - கரணம் போட்டு, தண்மைபேசி - தாழ்மை சொல்லி, இல்பலிக்கு - வீடுகள்தோறும் பிக்ஷைக்கு, விடையேறித்திரிவதென்னே - இடபமேறி யுழல்வதற்குக் காரணம் யாதோ, வேலைசூழ் - கடல் சூழ்ந்த, வெண்காடனீரே- திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) ஆயுதங்களைத் தாங்கிப் பூதகணங்கள் உமது திருவடியை வணங்க தேவியாரும் நீருமாக, ஒரு கோவணத்தை யுடையவராகி மெய்சொல் லீர், இது உண்மையல்லவா, சடைகள் தொங்கக் கரணம் போட்டுத் தாழ்மை சொல்லி வீடுகள்தோறும் பிக்ஷைக்கு இடபமேறி யுழல்வதற்குக் காரணம் யாதோ, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, நீர் விடையேறி வீடுதோறும் பிக்ஷை யேற்பு தென்னென்பதாம்.

(வி-ரை.) உடை ஓர் கோவணத்தர் ஆகி - உடையும் ஒருகோவணமும் உடையவராகி. தாழ்தல் - தொங்குதல். தண்மை - தாழ்வு. விடையது என்ப தில் அது பகுதிப்பொருள் விகுதி. (3)

பண்ணுளீராய்ப்பாட்டுமானீர்பத்தர்சித்தம்பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க்கருத்திலும்மைக்கருதுவார்கள்காணும்வண்ண
மண்ணுளீராய்மதியம்வைத்தீர்வானநாடர்மருவியேத்த
விண்ணுளீராய்நிற்பதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.

(ப-ரை.) பண்ணுளீராய் - பண்ணுள்ளிருப்பவராய், பாட்டும் ஆனீர் - பாடலுமானீர், பத்தர்சித்தம் - பத்தருடைய மனதில், பரவிக்கொண்டீர்- வியாபித்துக்கொண்டீர், கண்ணுளீராய்-கண்ணுள்ளிருப்பவராய், கருத்தில் - மனத்தில், உம்மை கருதுவார்கள் - உம்மை நினைப்பவர்கள், காணும் வண் ணம் - காணும்படி, மண்ணுளீராய் - மண்ணுள்ளிருப்பவராய், மதியம் வைத் தீர் - பிறையை யணிந்தீர், வானநாடர் - தேவர்கள், மருவி ஏத்த - வந்து துதிக்க, விண்ணுளீராய் நிற்பது என்னே - ஆகாயத்திலிருப்பவராய் நிற்ப தென்னே, வேலைசூழ் - கடல் சூழ்ந்த, வெண்காடனீரே - திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே எ-று.

(பொ-ரை.) பண்ணுள்ளிருப்பவராய் பாடலுமானீர், பத்தருடைய மனத் தில் வியாபித்துக் கொண்டீர், கண்ணுள்ளிருப்பவராய் மனத்தில் உம்மை நினைப்பவர்கள் காணும்படி, மண்ணுள்ளிருப்பவராய் பிறையை யணிந்தீர், தேவர்கள் வந்து துதிக்க ஆகாயத்திலிருப்பவராய் நிற்பதென்னே, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, நீர் பண் முதலிய எல்லாவற்றுள்ளும் நிற்பதென்னே யென்பதாம்.

(வி-ரை.) பண்-இந்தளம். பஞ்சுரம் நட்டராக முதலியன. மதியம்வைத்தீர் என்பதற்கு திருவுளம் வைத்தீர் என்றுரைத்தலுமாம். வானநாடு - சுவர்க்கலோகம். (4)

குடமெடுத்துநீரும்பூவுங்கொண்டுதொண்டரேவல்செய்ய
நடமெடுத்தொன்றாடிப்பாடிநல்குவீர்நீர்புல்கும்வண்ணம்
வடமெடுத்தகொங்கைமாதோர்பாகமாகவார்கடல்வாய்
விடமிடற்றில்வைத்ததென்னேவேலைசூழ்வெண்காடனீரே.

(ப-ரை.) குடம் எடுத்து - குடத்தால் மொண்டு, நீரும்பூவும் கொண்டு- நீரையுமலரையுங்கொண்டு, தொண்டர் ஏவல்செய்ய - அடியார் பணிசெய்யா நிற்க ஒன்றுநடம் எடுத்து ஆடி-ஒருநடநத்தையெடுத்தாடி,பாடி-பாட்டுப்பாடி, நல்குவீர் - அருள்செய்வீர், நீர் புல்கும்வண்ணம் - நீர் தழுவும்படி, வடம் எடுத்த - வடத்தைத் தாங்கிய, கொங்கை - தனத்தையுடைய, மாது - உமாதேவியானவள், ஓர்பாகம் ஆக - ஒருபாகத்தில் அமர்ந்திருக்க, வார் - நீண்ட, கடல்வாய் - கடலிலுண்டான, விடம் - நஞ்சை, மிடற்றில் - கண்டத்தில், வைத்தது என்னே-வைத்ததற்குக் காரணம் யாதோ, வேலைசூழ் - கடல்சூழ்ந்த, வெண்காடனீரே - திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) குடத்தால்மொண்டு நீரையு மலரையுங்கொண்டு அடியார் பணிசெய்யா நிற்க, ஒரு நடநத்தை யெடுத்தாடி பாட்டுப்பாடி அருள் செய்வீர், நீர்தழுவும்படி வடத்தைத் தாங்கிய தனத்தையுடைய உமாதேவியானவள் ஒருபாகத்தில் அமர்ந்திருக்க, நீண்ட கடலிலுண்டான நஞ்சைக் கண்டத்தில் வைத்ததற்குக் காரணம் யாதோ, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, உமைபங்கராகிய நீர் நஞ்சுண்டதென்னென்பதாம்.

(வி-ரை.) குடம் - திருமஞ்சனக்குடம். நீர்-புண்ணியதீர்த்தம். பூ-கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை மலர்கள். புல்கல் - தழுவல். வடம் - மாலை (முத்துமாலை முதலியன). ஓர்பாகமாக என மேல் வருதலால் மாது உமாதேவியை யுணர்த்திற்று. கடல் - பாற்கடல். (5)

மாறுபட்டவனத்தகத்தின்மருவவந்தவன்களிற்றைப்
பிறிபிட்டமாகப்போர்த்தீர்பெய்பலிக்கென்றில்லந்தோறுங்
கூறுபட்டகொடியுநீருங்குலாவியேற்றையடரவேறி
வேறுபட்டுத்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.

(ப-ரை.) மாறுபட்ட வனத்தகத்தில் - மாறுபட்ட காட்டில், மருவவந்த-சேரவந்த, வல்களிற்றை-வலியயானையை. பீறி-கிழித்து, இட்டமாக - விருப்பமாக, போர்த்தீர் - போர்த்துக்கொண்டீர், பெய்பலிக்கென்று - இடப்பட்ட பிக்ஷையின்பொருட்டு, இல்லந்தோறும் - வீடுதோறும், கூறுபட்ட - பாகத்திற் பொருந்திய, கொடியும் - உமாதேவியும், நீரும் - தேவரீரும், குலாவி - தழுவிக்கொண்டு, ஏற்றை - இடபத்தின்மேல், அடாஏறி - நெருக்கமாயேறி, வேறுபட்டு திரிவது என்னே - மாறுபட்டுழல்வதற்குக் காரணம் யாதோ, வேலைசூழ் - கடல்சூழ்ந்த, வெண்காடனீரே-திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே எ-று.

(பொ-ரை.) மாறுபட்ட காட்டில் சேரவந்த வலிய யானையைக் கிழித்து விருப்பமாகப் போர்த்துக்கொண்டீர், இடப்பட்ட பிக்ஷையின் பொருட்டு வீடுதோறும் பாகத்திற் பொருந்திய உமாதேவியும் நீரும் தழுவிக்கொண்டு இடபத்தின்மேல் நெருக்கமாயேறி, மாறுபட்டுத் திரிவதற்குக் காரணம் யாதோ, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே.

(கு-ரை.) திருவெண்காடனீரே, யானையை வுரித்த நீர், தேவியோடு வீடுதோறும் பிக்ஷையேற்ப தென்னென்பதாம்,

(வி-ரை.) மாறுபட்ட - கொடிய. பீறல்-கிழித்தல். போர்த்தல்-(தோலை) போர்வையாகப் போர்த்துக்கொள்ளல். கொடி - ஆகுபெயர். குலாவல் - தழுவல். ஏறு - இடபம். அடர்தல் - நெருக்கல். (6)

காதலாலேகருதுந்தொண்டர்காரணத்தராகிநின்றே
பூதம்பாடப்புரிந்துநட்டம்புவனியேத்தவாடவல்லீர்
நீதியாகவேழிலோசைநித்தராகிச்சித்தர்சூழ
வேதமோதித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.

(ப-ரை.) காதலாலே - ஆசையாலே, கருதும் - நினைக்கிற, தொண்டர் - அடியாரது, காரணத்தர் ஆகி நின்று - காரணமாகநின்று, பூதம்பாட - பூதகணங்கள் பாடவும், புவனி ஏத்த - உலகந்துதிக்கவும், புரிந்து - விரும்பி, நட்டம் ஆடவல்லீர் - நடனமாடவல்லீர், நீதியாக - நியாயமா, ஏழிலோசை - சத்த சுரங்களையுடைய, நித்தர்ஆகி - சாசுவதராகி, சித்தர் சூழ - சித்தர்கள் சூழ்ந்திருக்க, வேதம் ஓதி திரிவது என்னே -வேதம்படித் துழல்வதற்குக் காரணம் யாதோ, வேலைசூழ் - கடல்சூழ்ந்த, வெண்காடனீரே - திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே எ-று.

(பொ-ரை) ஆசையாலே நினைக்கிற அடியாரது காரணமாக நின்று பூதகணங்கள் பாடவும் உலகம் துதிக்கவும் விரும்பி நடனமாடவல்லீர், நியாயமாக சத்தசுரங்களையுடைய சாசுவதராகிச் சித்தர்கள் சூழ்ந்திருக்க வேதம்படித் துழல்வதற்குக் காரணம் யாதோ, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, பூதகணங்கள்பாட நடமனாடுகிற நீர், வேத மோதித்திரிவ தென்னென்பதாம்.

(வி-ரை.) புரிதல் - விரும்புதல். நட்டம் - நடனம். புவனி - உலகம். இது உலகத்தாரை யுணர்த்திற் றாகுபெயரான். ஏழிலோசை - சத்தசுரங்களோடு பாட வல்ல. (7)

குரவுகொன்றைமதியமத்தங்கொங்கைமாதர்கங்கைநாகம்
விரவுகின்றசடையுடையீர்விருத்தரானீர்கருத்திலும்மைப்
பரவுமென்மேற்பழிகள்போக்கீர்பாகமாயமங்கையஞ்சி
வெருவவேழஞ்செற்றதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.

(ப-ரை.) குரவு - குராமலர், கொன்றை-கொன்றைமலர், மதியம்-பிறை, மத்தம் - ஊமத்தமலர், கொங்கைமாதர் கங்கை - தனத்தினழகுள்ள கங்கை, நாகம் - பாம்பு, (ஆகிய இவைகள்) விரவுகின்ற - பொருந்துகின்ற, சடை உடையீர் - சடையை யுடையீர், விருத்தர் ஆனீர் - வயோதிகரானீர், கருத்தின் - மனத்தினால், உம்மை - தேவரீரை, பரவும் - வழிபடுகிற, என்மேல் - அடியேன்மீது, பழிகள்போக்கீர் - பழிகள் சுமத்தீர், பாகம் ஆய - உமது பாகத்திலமர்ந்த, மங்கை - உமாதேவி, அஞ்சி வெருவ - மிகவும் பயப்பட, வேழம் செற்றது என்னே - யானையை யுரித்தது என்னே, வேலைசூழ்-கடல் சூழ்ந்த, வெண்காடனீரே-திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே எ-று.

(பொ-ரை.) குராமலர், கொன்றைமலர், பிறை, ஊமத்தமலர், தனத்தினழகுள்ள கங்கை, பாம்பு (ஆகிய இவைகள்) பொருந்துகின்ற சடையையுடையீர், வயோதிகர் ஆனீர், மனத்தினால் தேவரீரை வழிபடுகிற அடியேன்மீது, பழிகள் சுமத்தீர், உமது பாகத்திலமர்ந்த வுமாதேவி மிகவும் பயப்பட யானையை யுரித்தது என்னே, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளி யிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, நீர் உமாதேவி யஞ்சும்படி யானையைக் கொன்ற தென்னென்பதாம்.

(வி-ரை.) குரவு கொன்றை மத்தம் என்பன ஆகு பெயர்கள். மாதர் - அழகு. வயோதிகர் - வயது முதிர்ந்தவர். பாகமாயமங்கை யென்றமையால் உமாதேவியென் றுரைக்கலாயிற்று. (8)

மாடங்காட்டுங்கச்சியுள்ளீர்நிச்சயத்தானினைப்புள்ளார்பாற்
பாடுங்காட்டிலாடலுள்ளீர்பரவும்வண்ணமெங்ஙனேதா
ன்டுங்காட்டிலயனுமாலுகனுகாவண்ணமனலமாய
வேடங்காட்டித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே.

(ப-ரை.) மாடம் காட்டும்-மாடங்களைத் தோற்றுவிக்கிற, கச்சி உள்ளீர்-திருக்கச்சியிலுள்ளவரே, நிச்சயத்தால் - நிச்சயமாக, நினைப்பு உள்ளார் பால்-

நினைப்புள்ளவரிடத்தில், பாடுங்காட்டில் - படுங்காட்டில், ஆடல் உள்ளீர் - ஆடுதலுடையீர், பரவும் வண்ணம் - உம்மை வழிபடும்வகை, எங்ஙன் - எப்படி, ஆடும் - ஆடாநின்ற, காட்டில் - மயானத்தில், அயனும் மாலும் - பிரமனும் விண்டுவும், அணுகாவண்ணம்-நெருங்காதபடி, அனலம் ஆய-நெருப்புருவாகிய, வேடம் காட்டி - கோலத்தைக் காட்டி, திரிவது என்னே - உழல்வதற்குக் காரணம் யாதோ, வேலைசூழ் - கடல்சூழ்ந்த, வெண்காடனீரே - திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே எ-று.

(பொ-ரை.) மாடங்களைத் தோற்றுவிக்கிற திருக்கச்சியிலுள்ளவரே, நிச்சயமாக நினைப்புள்ளவரிடத்தில், படுங்காட்டில் ஆடுதலுடையீர், உம்மை வழிபடும்வகை யெப்படி, ஆடாநின்ற மயானத்தில் பிரமனும் விண்டுவும் நெருங்காதபடி, நெருப்புருவமாகிய கோலத்தைக்காட்டி உழல்வதற்குக் காரணம் யாதோ, கடல்சூழ்ந்த திருவெண்காட்டில் எழுந்தருளியிருப்பவரே.

(க-ரை.) திருவெண்காடனீரே, நீர் மயானத்திலாடுதல் முதலிய வேடங் காட்டித்திரிவ தென்னென்பதாம்.

(வி-ரை.) மாடம்-மாளிகை. பாடுங்காட்டில் - பாடுதற்கு முன்பேயெனினுமாம். ஆடுங்காடு - சர்வசங்காரகாலத்தி லாடு மயானம். அணுகல்-நெருங்கல்.

விரித்தவேதமோதவல்லார்வேலைசூழ்வெண்காடுமேய
விருத்தனுபவேதன்றன்னைவிரிபொழிற்றிருநாவலூரா
னருத்தியாலாரூரன்றொண்டனடியன்வேட்டமாலைபத்துந்
தெரித்தவண்ணமொழியவல்லார்செம்மையாளர்வானுளாரே.

(ப-ரை.) விரித்த - விரிக்கப்பட்ட, வேதம் ஓதவல்லார் - வேதமோதவல்லவரும், வேலைசூழ் - கடலும் சூழ்ந்த, வெண்காடுமேய - திருவெண்காட்டிலெழுந்தருளிய, விருத்தன் ஆய - வயோதிகனாகிய, வேதன்றன்னை - வேதியனை, விரிபொழில் - விரிந்த சோலைகள் சூழ்ந்த, திருநாவலூரான் - சுந்தரனாகிய, ஆரூரன்—,தொண்டன்—,அடியன்—, அருத்தியால்-ஆசையால்,வேட்ட- விரும்பித் தொடுத்த, மாலைபத்தும் - சொன்மாலை பத்தினையும், தெரித்தவண்ணம் - தெரிவித்தபடியே, மொழியவல்லார் - ஓதவல்லவர், செம்மையாளர் — செவ்வியராகி, வான் உள்ளார் - விண்ணுலகத்தராவர் எ-று.

(பொ-ரை.) விரிக்கப்பட்ட வேதமோத வல்லவரும் கடலும் சூழ்ந்த திருவெண்காட்டி லெழுந்தருளிய வயோதிகனாகிய வேதியனை, விரிந்த சோலைகள் சூழ்ந்த திருநாவலூரான், ஆரூரன்,தொண்டன் அடியன், விரும்பித் தொடுத்த சொன்மாலை பத்தினையும், தெரிவித்தபடியே சொல்ல வல்லவர் செவ்வியராகி விண்ணுலகத்தராவர்.

(க-ரை.) திருவெண்காடரை, ஆரூரன் பாடின பத்துப் பாட்டும் கற்று வல்லவர் விண்ணுலகமெய்துவர் என்பதாம்.

(வி-ரை.) வேதன் - வேதியன். வேதப்பிரதி பாத்தியன் எனினுமாம். செம்மையாளர் முற்றெச்சம். (10)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுவேதாரணியேசுவரர்.

தேவியார் - பிர்மவித்தியாநாயகியம்மை.

---

## திரு எதிர்கொள் பாடி

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

*மத்தயானையேறிமன்னர்சூழவருவீர்காள்*
*செத்தபோதிலாருமில்லைச்சிந்தையுள்வைம்பின்கள்*
*வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே*
*யத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.*

(ப-ரை.) மத்தயானை ஏறி - மதயானைமேலேறி, மன்னர்சூழ - அரசர் சூழ, வருவீர்காள் - வருவோர்களே, செத்தபோதில் - இறந்த போதில், ஆரும் இல்லை - யாருமில்லை, சிந்தையுள் வைமின்காள் - மனத்தில் வையுங்கள், வைத்த உள்ளம் மாற்றவேண்டா - வைத்தமனத்தைத் திருப்பவேண்டா, வம்மின் - வாருங்கள், மனத்தீரே - விருப்பமுள்ளவர்களே, அத்தர் கோயில் - அத்தர் கோயிலாகிய, எதிர்கொள்பாடி யென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம் எ-று.

(பொ-ரை.) மதயானைமேலேறி அரசர் சூழ வருவோர்களே, இறந்தபோதில் ஆருமில்லை, மனத்தில் வையுங்கள், வைத்தமனத்தைத் திருப்பவேண்டா, வாருங்கள் விருப்பமுள்ளவர்களே, அத்தர் கோயிலாகிய திருவெதிர்கொள் பாடி யென்னுந் திருப்பதியைச் சேர்வோம்.

(கு-ரை.) உலகீரே, இறக்கும்போது யாருந் துணையில்லை யாதலால் இறைவாது திருவெதிர்கொள்பாடியை யடைவோம் என்பதாம்.

(வி-ரை.) மத்தயானையேறி மன்னர்சூழ வருவீர்காள் என்றது சக்ரவர்த்திகளை நோக்கிற்று. ஆருமில்லையென்றது அத்தரொருவருண்டென்றவாறு. அத்தர் - இறையனார். (1)

*தோற்றமுண்டேன்மரணமுண்டுதுயரமனைவாழ்க்கை*
*மாற்றமுண்டேல்வஞ்சமுண்டுநெஞ்சமனத்தீரே*
*நீற்றரேற்றர்நீலகண்டர்நிறைபுனனீள்சடைமே*
*லேற்றர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.*

(ப-ரை.) தோற்றம் உண்டேல் - பிறத்தலுண்டாயின், மரணம் உண்டு-சாதலுண்டு, மனைவாழ்க்கை - இல்வாழ்க்கை, துயரம் - துன்பவுருவாகும், மாற்றம் உண்டேல் - சொல்லுண்டாயின், நெஞ்சம் வஞ்சமுண்டு - நெஞ்சில் வஞ்சமுண்டு, மனத்தீரே - விருப்பமுள்ளவரே, நீற்றர்-திருவெண்ணீறுடைய வர், ஏற்றர் - இடபவாகநர், நீலகண்டர் - கருங்கண்டத்தையுடையவர், நிறைபுனல் - நிறைந்த நீரை, நீள்சடைமேல் ஏற்றர் - நீண்ட சடையின்மீதேற்றலை யுடையவர், (அவரது) கோயில் - கோயிலாகிய, எதிர்கொள்பாடி யென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம்-சேர்வோம். எ-று.

(பொ-ரை.) பிறத்தலுண்டாயின் சாதலுண்டு, இல்வாழ்க்கை துன்பவுருவாகும், சொல்லுண்டாயின் நெஞ்சில் வஞ்சமுண்டு, விருப்பமுள்ளவரே, திருவெண்ணீறுடையவர், இடபவாகநர், கருங்கண்டத்தையுடையவர், நிறைந்த நீரை நீண்ட சடையின்மீ தேற்றலையுடையவர் (அவரது) கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியைச்சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, பிறப்பிறப்புக்க ளில்லாமையை விரும்புவீராயின் இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோம் என்பதாம்.

(வி-ரை.) நிறைபுனல் - கங்கை. ஏற்றர் - ஏற்றலையுடையவர் எனினுமாம். நீலகண்டர்- நஞ்சுண்டதனாற் கறுத்த கண்டத்தை யுடையவர். (2)

**செடிகொளாக்கைசென்றுசென்றுதேய்ந்தொல்லைவீழாமுன்**
**வடிகொள்கண்ணார்வஞ்சனையுட்பட்டுமயங்காதே**
**கொடிகொளேற்றர்வெள்ளைநீற்றர்கோவணவாடையுடை**
**யடிகள்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.**

(ப-ரை.) செடிகொள்-பாவத்தைக்கொண்ட, ஆக்கை-உடம்பு, சென்று சென்று—, தேய்ந்து—, ஒல்லை-விரைவாக, வீழாமுன்-விழுவதற்கு முன்பே, வடிகொள் - மாவடுவின் றன்மையைக் கொண்ட, கண்ணார்-கண்களையுடைய வராகிய மாதரது, வஞ்சனையுள்பட்டு - கபடவலையிலகப்பட்டு, மயங்காதே - மயங்காமல், கொடிகொள் ஏற்றர் - இடபக்கொடியை யுடையவர், வெள்ளை நீற்றர் - வெண்பொடியை யுடையவர், கோவணம் ஆடை உடை - கோவணமாகிய ஆடையை யுடைய, அடிகள் - சுவாமிகள், (அவரது) கோயில்-கோயிலாகிய, எதிர்கொள்பாடியென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம் எ-று.

(பொ-ரை.) பாவத்தைக்கொண்ட வுடம்பு சென்றுசென்று தேய்ந்து விரைவாக விழுவதற்கு முன்பே, மாவடுவின் றன்மையைக் கொண்ட கண்களையுடையவராகிய மாதரது கபடவலையிலகப்பட்டு மயங்காமல், இடபக் கொடியையுடையவர் வெண்பொடியை, யுடையவர்,கோவணமாகியஆடையை யுடைய சுவாமிகள் (அவரது) கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி என்னுந் திருப்பதியைச்சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, இந்தவுடம் பழியுமுன்னே, இறைவரது திருவெதிர் கொள்பாடியை யடைவோம் என்பதாம்.

(வி-ரை.) வடி - மாவடு, வடுத்தலையுடையது. இது இதன்வகிரை யுணர்த்திற்று. "வடுத்தான் வகிர்மலர்க்கண்ணிக்கு" "மாவடுவகிரன்ன கண்ணி பங்கா" என்றார் மணிவாசகரும். (3)

வாழ்வர்கண்டீர்நம்முளைவர்வஞ்சமனத்தீரே
யாவராலுமிகழப்பட்டிங்கல்லலில்வீழாதே
மூவராயுமிருவராயுமுதல்வனவனேயாந்
தேவர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

(ப-ரை.) வஞ்சமனத்தீரே - கபடமனமுடையவரே, நம்முள் - நமக்கு முன்னே, ஐவர்வாழ்வர் -ஐந்துபேர் வாழ்கின்றனர், யாவராலும் இகழப்பட்டு- எல்லாராலும் அவமதிக்கப்பட்டு, இங்கு-இவ்விடத்தில், அல்லலில் வீழாதே - துன்பக்கடலில் விழாமல், மூவராயும் - மூவராயும், இருவராயும் - இருவராகியும், முதல்வன் - தலைவன், அவனே ஆம் - அவனே யாவன், தேவர் கோயில் - தேவர்கோயிலாகிய, எதிர்கொள்பாடி யென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம் எ-று.

(பா-ரை.) கபடமனமுடையவரே, நமக்கு முன்னே ஐந்துபேர் வாழ்கின்றனர், எல்லாராலும் அவமதிக்கப்பட்டு, இவ்விடத்தில் துன்பக்கடலில் விழாமல் மூவராகியும் இருவராகியும் தலைவன் அவனே யாவன், தேவர் கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி என்னுந் திருப்பதியைச் சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, துன்பத்திலகப்பட்டு வருந்தாமல், இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோம் என்பதாம்.

(வி-ரை.) கண்டீர் - முன்னிலையசையிடைச் சொல். ஐவர் - ஐம்பொறிகள். இங்கு - இவ்வுலகத்தில். அல்லல் - துன்பம். மூவர் - அயன், அரி, அரன் என்பவர். இருவர் - சத்தி சிவம் என்பவர் தேவர் கோயில் - தேவரால் நிருமிக்கப்பட்ட கோயில். வீழாதே யென்ற குறிப்பால் அல்லல் என்பதற்குத் துன்பக்கடல் என்றுரையுரைக்கலாயிற்று. (4)

அரித்துநம்மேலைவர்வந்திங்காறலைப்பான்பொருட்டாற்
சிரித்தபல்வாய்வெண்டலைபோய்யூர்ப்புறஞ்சேராமுன்
வரிக்கொள்துத்தவாளரக்கர்வஞ்சமதில்மூன்று
மெரித்தவில்லியெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

(ப-ரை.) ஐவர் - ஐவராவார், நம்மேல் - நம்மீது, அரித்து - பகைகொண்டு, இங்குவந்து - இவ்விடத்து வந்து, ஆறலைப்பான் பொருட்டால் - ஆறலைக்கும் பொருட்டு, சிரித்து - சிரிக்கப்பட்டு, பல்வாய்போய் - பற்களவாயி

னின்றும் உதிர்ந்து, வெண்டலைபோய் - வெண்டலை யடைந்து, ஊர்ப்புறம் - மயானத்தை, சேராமுன் - அடைவதற்கு முன்பே, வரிக்கொள் - நீட்சியைக் கொண்ட, துத்தம் - வயிற்றினையுடைய, வாள் அரக்கர் - வாளையுடைய அரக்கரது, வஞ்சமதில் மூன்றும் எரித்த - கபடமதில்கள் மூன்றனையும் நீறாக்கின, வில்லி-வில்லினையுடைய சிவபெருமானது, எதிர்கொள்பாடியென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம்-சேர்வோம் எ-று.

(போ-ரை.) ஐவராவார் நம்மீது பகைகொண்டு இவ்விடத்து வந்து ஆறலைக்கும் பொருட்டு, சிரிக்கப்பட்டு, பற்கள் வாயினின்றும் உதிர்ந்து வெண்டலையடைந்து மயானத்தில் அடைவதற்கு முன்பே, நீட்சியைக்கொண்ட வயிற்றினையுடைய வாளையுடைய அரக்கரது கபடமதில்கள் மூன்றனையும் நீறாக்கின வில்லினையுடைய சிவபெருமானது திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, நாம் மயானத்தை யடைவதன்முன்னே இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோமென்பதாம்.

(வி-ரை.) ஐவராவார் - ஐம்பொறிகள். அரித்தல் - பகைகொள்ளல். ஆறலைத்தல் - வழிகட்டிப் பறித்தல். வெண்டலை யடைதலாவது - நரைத்தலையை யுடையராதல். மும்மதில்கள் ஆகாயசஞ்சாரிகளாய் எல்லா வூர்களையுமழித்தலால் அவற்றை வஞ்சமதில் மூன்றும் என்றார். (5)

பொய்யர்கண்டீர்வாழ்க்கையாளர்பொத்தடைப்பான்பொருட்டால்
மையல்கொண்டீரெம்மோடாடிநீருமனத்தீரேல்
நையவேண்டாமிம்மையேத்தவம்மைநமக்கருளு
மையர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

(ப-ரை.) வாழ்க்கையாளர் - இல்வாழ்க்கையுடையார், பொய்யர்-பொய்யராவர், (ஆதலால்) பொத்து அடைப்பான் பொருட்டால் - குற்றத்தை யடைக்கும்பொருட்டு, மையல் கொண்டீர் - விருப்பங்கொண்டீர், நீரும்-நீங்களும், எம்மோடு ஆடி - எம்மோடு கூடி, மனத்திரேல் - விருப்பமுடையீராயின், நையவேண்டாம் - வருந்தவேண்டாம், இம்மை ஏத்த - இம்மையில் துதிக்க, அம்மை - அம்மையில், நமக்கு அருளும் - எமக்கருள் செய்கிற, ஐயர் கோயில் - இறைவர் கோயிலாகிய, எதிர்கொள்பாடி யென்பது - திருவெதிர் கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம் எ-று.

(போ-ரை.) இல்வாழ்க்கையுடையார் பொய்யராவர் (ஆதலால்) குற்றத்தை யடைக்கும்பொருட்டு விருப்பங்கொண்டீர், நீங்களும் எம்மோடு கூடி விருப்பமுடையீராயின் வருந்தவேண்டாம், இம்மையில் துதிக்க அம்மையில் எமக் கருள்செய்கிற இறைவர் கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியைச்சேர்வோம்.

(க-ரை.) உலகீரே இல்வாழ்க்கையாளரை நட்டு வருந்தவேண்டாம். இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோமென்பதாம்.

(வி-ரை.) பொத்து - குற்றம். மனம் - விருப்பம். நைதல் - வருந்தல். இம்மை - இவ்வுலகு. அம்மை - அவ்வுலகு. (6)

கூசநீக்கிக்குற்றநீக்கிச்செற்றமனநீக்கி
வாசமல்குகுழலினார்கள்வஞ்சமனைவாழ்க்கை
யாசைநீக்கியன்புசேர்த்தியென்பணிந்தேறேறு
மீசர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

(ப-ரை.) கூசம் நீக்கி - வெட்கத்தை யொழித்து, குற்றம்நீக்கி - குற்றத்தை யொழித்து, செற்றம்மனம் நீக்கி - கோவத்தையுடைய மனத்தை யொழித்து, வாசம் மல்கு - வாசனை நிறைந்த, குழலினார்கள் - கூந்தலை யுடையவர்களாகிய மாதர்களது, வஞ்சம் - கபடத்தையுடைய, மனைவாழ்க்கை - இல்வாழ்க்கையின், ஆசைநீக்கி - ஆசையை யொழித்து, அன்புசேர்த்தி - அன்பு கொண்டு, என்பு அணிந்து - எலும்பு மாலையையணிந்து, ஏறு ஏறும்-இடபத்தின்மேலேறுகிற, ஈசர் - ஈசரது, கோயில் - கோயிலாகிய, எதிர்கொள்பாடி யென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம். எ-று.

(பொ-ரை.) வெட்கத்தை யொழித்து கோவத்தையுடைய மனத்தை யொழித்து வாசனைநிறைந்த கூந்தலை யுடையவர்களாகிய மாதர்களது கபடத்தையுடைய இல்வாழ்க்கையின் ஆசையை யொழித்து, அன்புகொண்டு, எலும்புமாலையை யணிந்து இடபத்தின்மே லேறுகிற ஈசரது கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியைச் சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, கூசமுதலியவற்றை யொழித்து, இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோமென்பதாம்.

(வி-ரை.) வாசம் - இயற்கை மணம் செயற்கை மணம் இரண்டையடக்கி நின்றது. ஆசை - குற்றத்தை யெனினுமாம். ஆசு - குற்றம். ஈசர்- ஐசுவர்யமுடையவர். (7)

இன்பமுண்டேற்றுன்பமுண்டேழைமனைவாழ்க்கை
முன்புசொன்னான்மோழைமையான்முட்டைமனத்தீரே
யன்பரல்லாலணிகொள்கொன்றையடிகளடிசேரா
ரென்பர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

(ப-ரை.) இன்பம் உண்டேல் - சுகமுண்டாயின், துன்பம் உண்டு- துக்கமுண்டு, ஏழைமனை வாழ்க்கை-அறியாமையை யுடைய இல்வாழ்க்கை, முன்பு சொன்னால் - முந்திச்சொன்னால், மோழைமை-பேதைமையாகும், ஆல்- ஆதலால், முட்டை மனத்தீரே - புன்மனத்தையுடையவரே, அன்பர் அல்லால் - பத்தரல்லாமல், அணிகொள் - அழகைக்கொண்ட, கொன்றை - கொன்றை மலர்மாலையை யணிந்த, அடிகள் - இறைவரது, அடிசேரார் - திருவடியை

அடையமாட்டார், என்பர் - எலும்புமாலையைத் தரித்தவராகிய சிவபிரானது, கோயில் - கோயிலாகிய, எதிர்கொள்பாடி - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம் எ-று.

(பொ-ரை.) சுகமுண்டாயின் துக்கமுண்டு, ஏழை மனைவாழ்க்கைமுன்பு சொன்னால் பேதைமையாகும், ஆதலால் புன்மனத்தையுடையவரே, பத்தரல்லாமல், அழகைக்கொண்ட கொன்றைமலர் மாலையையணிந்த இறைவரது திருவடியை அடையமாட்டார், எலும்புமாலையைத் தரித்தவராகிய சிவபிரானதுகோயிலாகிய திருவெதிர்கொள்பாடியென்னுந்திருப்பதியைச்சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, இந்த மனைவாழ்க்கையில் இன்பதுன்பங்களுண்டாதலால் இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோ மென்பதாம்.

(வி-ரை.) மோழைமை - அறியாமை. முட்டைமனம் - கபடமனம். கொன்றை ஆகுபெயர். என்பு - எலும்பு. என்பர் என்பதற்கு என்று சொல்லுவர் எனினுமாம். (8)

தந்தையாருந்தவ்வையாருமெட்டனைச்சார்வாகார்
வந்துநம்மோடுள்ளளாவிவானநெறிகாணுஞ்
சிந்தையீரேநெஞ்சினீரேதிகழ்மதியஞ்சூடு
மெந்தைகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

(ப-ரை.) தந்தையாரும் - தகப்பனாரும், தவ்வையாரும் - தாயாரும், எள்தனை - எள்ளளவும், சார்வு ஆகார் - ஆதரவாக மாட்டார், வந்து - வந்து, நம்மோடு - நம்முடனே, உள் அளாவி - அந்தரங்கமாகப் பேசி, வான நெறி காணும் - வானநெறியைக் காணவேண்டு மென்கிற, சிந்தையீரே - எண்ணமுடையவரே, நெஞ்சினீரே - மனமுடையவரே, திகழ்மதியம் சூடும் - விளங்குகிற பிறையைத் தரித்த, எந்தை - எமது தந்தையாகிய சிவபெருமானது, கோயில் - கோயிலாகிய, எதிர்கொள்பாடி யென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம் - சேர்வோம் எ-று.

(பொ-ரை.) தகப்பனாரும் தாயாரும் எள்ளளவும் ஆதரவாகமாட்டார், வந்து நம்முடனே அந்தரங்கமாகப் பேசி, வானநெறியைக் காணவேண்டுமென்கிற எண்ணமுடையவரே, மனமுடையவரே, விளங்குகிற பிறையைத் தரித்த எமது தந்தையாகிய சிவபெருமானது கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியைச் சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, தந்தை தாயார் நமக்குத் துணையாகார் ஆதலால், இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோம் என்பதாம்.

(வி-ரை.) தவ்வை-தாய், அக்காள் எனினுமாம். தனை - துணை. (அளவு) வானநெறி - வானாட்டுவழி, முத்திநெறி. சிந்தை - சிந்தனை. நெஞ்சு - மனம். திகழ்தல் - விளங்குதல். (9)

*குருதிசோரவானையின்றோல்கொண்டகுழற்சடையன்*
*மருதுகீறியூடுபோனமாலயனுமறியாச்*
*சுருதியார்க்குஞ்சொல்லவொண்ணாச்சோதியெம்மாதியான்*
*கருதுகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.*

(ப-ரை.) குருதிசோர-ரத்தமொழுகும்படி, ஆனையின்தோல் கொண்ட-யானைத்தோலைப் போர்த்துக்கொண்ட, குழல் சடையன் - குழன்ற சடையையுடையவன், மருதுகீறி - மருத மரங்களைப் பிளந்து, ஊடுபோன - அவற்றிடையே சென்ற, மால் அயனும் அறியா - விட்டுணு பிரமன் என்பவரும் அறியாத, சுருதியார்க்கும் - வேதாதிகாரிகளுக்கும், சொல்ல லொண்ணா - சொல்ல வொண்ணாத, சோதி - ஒளியுருவாகிய, எம் ஆதியான் - எமது முதல்வன், கருது கோயில் - விரும்புகிற கோயிலாகிய, எதிர்கொள்பாடியென்பது - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியை, அடைவோம்-சேர்வோம் எ-று.

(போ-ரை.) ரத்த மொழுகும்படி யானைத்தோலைப் போர்த்துக்கொண்ட குழன்ற சடையையுடையவன், மருதமரங்களைப்பிளந்து அவற்றிடையே சென்ற விட்டுணு பிரமன் என்பவரும் அறியாத வேதாதிகாரிகளுக்கும் சொல்ல வொண்ணாத ஒளியுருவாகிய எமது முதல்வன் விரும்புகிற கோயிலாகிய திருவெதிர்கொள்பாடியென்னுந் திருப்பதியைச் சேர்வோம்.

(க-ரை.) உலகீரே, யானையுரி போர்த்த இறைவரது திருவெதிர்கொள்பாடியை யடைவோ மென்பதாம்.

(வி-ரை.) சோர்தல் - ஒழுகுதல். குழற்சடை - சடை சுருண்ட சடை. சுருதியார் - வேதபுருடனார் எனினுமமையும். கருதுதல் - விரும்புதல். (10)

*முத்துநீற்றுப்பவளமேனிச்செஞ்சடையானுறையும்*
*பத்தர்பந்தத்தெதிர்கொள்பாடிப்பரமனையேபணியச்*
*சித்தம்வைத்ததொண்டர்தொண்டன்சடையனவன்சிறுவன்*
*பத்தனூரன்பாடல்வல்லார்பாதம்பணிவாரே.*

(ப-ரை.) முத்துநீற்று - முத்துப்போலும் வெண்ணீறு பூசப்பட்ட, பவளமேனி - பவளம்போலுந் திருமேனியையுடைய, செஞ்சடையான் - செஞ்சடையானாகிய சிவபிரான், உறையும் - நித்தியவாசம்பண்ணுகிற, பத்தர்பந்தத்து - பத்தர்க்கு ஆசையை விளைப்பதாகிய, எதிர்கொள்பாடிப் பரமனையே-திருவெதிர்கொள்பாடிப் பரமனையே, பணிய - வணங்க, சித்தம்வைத்த-மனம் வைத்த, தொண்டர் தொண்டன் - அடியார்க் கடியன், சடையன் அவன் சிறுவன் - சடையனாகிய அவனுக்கு மகன், பத்தன் - பக்தன், ஊரன் - ஆரூரன், (அவனது) பாடல்வல்லார் - பாடலைக்கற்றுவல்லவர், பாதம்பணிவார் - இறைவனது திருவடியை வணங்குவோராவர் எ-று.

(போ-ரை.) முத்துப்போலும் வெண்ணீறு பூசப்பட்ட பவளம்போலுந் திருமேனியையுடைய செஞ்சடையானாகிய சிவபிரான் நித்தியவாசம் பண்

ணுகிற பத்தர்க்கு ஆசையை விளைப்பதாகிய திருவெதிர்கொள்பாடிப் பரமனையே வணங்க மனம்வைத்த அடியார்க்கடியன், சடையனாகிய அவனுக்கு மகன், பத்தன், ஆரூரன், அவனது பாடலைக் கற்றுவல்லவர், இறைவனது திருவடியை வணங்குவோராவர்.

(க-ரை.) திருவெதிர்கொள்பாடி யிறைவரை ஆரூரன் பாடின பத்துப் பாட்டும் கற்றுவல்லார் அவரது திருவடிக்காளாவர் என்பதாம்.

(வி-ரை.) வெண்ணீறு என்றற்கு முத்துநீறென்றும், செம்மேனி யென்றற்கு பவளமேனி யென்றும் கூறினர். பந்தம் - ஆசை. பாமன் - மேலானவன். (11)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அயிராபதேசர்.

தேவியார் - வாசமலர்க்குழல்நாயகியம்மை.

---

## திருவாரூர்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

**இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு**
**பறைகிழித்தனையபோர்வைபற்றியானோக்கினேற்குத்**
**திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி**
**யறைகழலிறைஞ்சுமாரூரப்பனேயஞ்சினேனே.**

(ப-ரை.) இறைகளோடு இசைந்த-அரசோடு பொருந்திய, இன்பம்-சுகமும், இன்பத்தோடு இசைந்த - சுகத்தோடு பொருந்திய, வாழ்வும் - செல்வமும், பற்றியான் நோக்கினேற்கு-உற்று நோக்கின எனக்கு, பறைகிழித்தனைய போர்வை - பறைகிழித்தாற்போன்ற போர்வையாகும், (ஆதலால் அவற்றுக்கு) தேவர் - வானோர், திறைகொணர்ந்து-கப்பங்கொண்டுவந்து, ஈண்டி-நெருங்கி, செம்பொன்னும் மணியும் - செம்பொன்னையும் மணிகளையும், தூவி-சிந்தி, அறை - சத்திக்கிற, கழல்-வீரக்கழலணிந்த திருவடியை, இறைஞ்சும் - வணங்குதற்குரிய, ஆரூர் அப்பனே - திருவாரூரிலெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன் - பயந்தேன் எ-று.

(பொ-ரை.) அரசோடு பொருந்திய சுகமும், சுகத்தோடு பொருந்திய செல்வமும் உற்றுநோக்கின எனக்கு பறைகிழித்தாற் போன்ற போர்வையாகும் (ஆதலால் அவற்றிற்கு) வானோர் கப்பங்கொண்டுவந்து நெருங்கி, செம்பொன்னையும் மணிகளையும் சிந்தி, சத்திக்கிற வீரக்கழலணிந்த திருவடியை வணங்குதற்குரிய திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, இந்தப் பொய்யாகிய வாழ்வையும் செல்வத்தையும் அஞ்சினேன் என்பதாம்.

(வி-ரை.) இறை-அரசு. செல்வம் வாழ்தற்குக் காரணமாதலால் அதனை வாழ்வு என்றார். திறை - கப்பம். (அரசிறை) ஈண்டல் - நெருங்கல். பறை-வாச்சியம். (1)

ஊன்மிடையுதிரக்குப்பையொருபொருளிலாதமாய
மான்மறித்தனையநோக்கமடந்தைமார்மதிக்குமிந்த
மானிடப்பிறவிவாழ்வுவாழ்வதோர்வாழ்வுவேண்டே
னானல்வெள்ளேற்றவாரூரப்பனேயஞ்சினேனே.

(ப-ரை.) ஊன்மிடை - தசைநெருங்கின, உதிரக்குப்பை - உதிரக்குவியல், (உடம்பு) ஒருபொருள் அல்லாத மாயம் - ஒரு பொருட்டன்மை யில்லாத மாயமாகும், (ஆதலால்) மான்மறித்தனைய - மானை வலையால் மறித்தாற்போன்ற, நோக்கம்-பார்வையையுடைய, மடந்தைமார்-மாதர், மதிக்கும்-மதிக்கின்ற, இந்த மானிடப்பிறவி-மானிடப்பிறவியில், வாழ்வு வாழ்வது ஓர்வாழ்வு வேண்டேன் - மானிடப்பிறவியில் வாழ்கின்ற வாழ்வை விரும்பமாட்டேன், ஆன் நல்வெள் ஏற்ற - ஆன்கூட்டத்திற் சிறந்த வெள்விடையை யுடையவனே, ஆரூர் அப்பனே-திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன்-பயந்தேன் எ-று.

(பொ-ரை.) தசை நெருங்கின உதிரக்குவியல் (உடம்பு) ஒருபொருட்டன்மை யில்லாத மாயமாகும், (ஆதலால்) மானை வலையால் மறித்தாற்போன்ற பார்வையையுடைய மாதர் மதிக்கின்ற மானிடப்பிறவியில் வாழ்கின்ற வாழ்வை விரும்பமாட்டேன், ஆன் கூட்டத்திற் சிறந்த வெள்விடையை யுடையவனே, திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, இந்த மானிடப்பிறவியை வேண்டேன், அதற்கஞ்சினே னென்பதாம்.

(வி-ரை.) ஆன்-பசுப்பொது. ஏறு - இடபம். மான்மறித் தனையநோக்கம் என்றது வலையிலகப்பட்ட மானினது அச்சத்தோடுகூடிய மருண்ட நோக்கம். "வலைத்தலைமா னன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு" "காய்சினவேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து வீசினபோது" என்றார் மணிவாசகரும். (2)

அறுபதும்பத்துமெட்டுமாறினோடஞ்சுநான்குந்
துறுபறித்தனையநோக்கிச்சொல்லிற்றொன்றாகச்சொல்லார்
நறுமலர்ப்பூவுநீரும்நாடொறும்வணங்குவார்க்கு
அறிவினைக்கொடுக்குமாரூரப்பனேயஞ்சினேனே.

(ப-ரை.) அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோடு எட்டும் நான்கும்- தொண்ணூற்றாறு தத்துவங்களும், நோக்கி-ஆராய்ந்து, சொல்லின்-சொல்லு மிடத்து, துறுபறித்தனைய-துறுகல்லினைப் பிடுங்கினாற் போலும், (ஆதலால் அறிஞர்) ஒன்றாகச் சொல்லார் - (இவ்வுடம்பை) ஒரு பொருளாக மதித்துச் சொல்லமாட்டார்கள், நறுவிரை பூவும் நீரும் - நல்ல மணமுள்ள மலரையும் நீரையுங்கொண்டு, நாள்தொறும் வணங்குவார்க்கு - தினந்தோறும் தொழுவா ருக்கு, அறிவினைக் கொடுக்கும் - அறிவைக்கொடுக்கிற, ஆரூரப்பனே - திரு வாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன் - பயந்தேன் எ-று.

(பொ-ரை.) தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஆராய்ந்து சொல்லு மிடத்து துறுகல்லினைப் பிடுங்கினாற்போலும் (ஆதலால் அறிஞர்) இவ்வுடம் பை ஒருபொருளாக மதித்துச் சொல்லமாட்டார்கள், நல்லமணமுள்ள மலரை யும் நீரையும் கொண்டு தினந்தோறும் தொழுவாருக்கு அறிவைக் கொடுக் கிற திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திவாரூரப்பனே, தொண்ணூற்றாறு தத்துவங்களோடு கூடின இவ்வுடம்பை யொருபொருளாக மதியாமல் அஞ்சினே னென்பதாம்.

(வி-ரை.) துறு - துறுகல். அதாவது சலதாரை முதலியவற்றை யடைக் குங்கல். அறிவு - ஞானம். (3)

சொல்லிடிலெல்லையில்லைச்சுவையிலாப்பேதைவாழ்வு
நல்லதோர்கூரைபுக்குநலமிகவறிந்தேனல்லேன்
மல்லிகைமாடநீடுமறுகொடுநெருங்கியெங்கு
மல்லிவண்டியங்குமாரூரப்பனேயஞ்சினேனே.

(ப-ரை,) சொல்லிடின் - சொல்லுமிடத்து, எல்லையில்லை-வரம்பில்லை, சுவையில்லா பேதைவாழ்வு - இன்பமில்லாத ஏழை வாழ்க்கை, நல்லது - நல்ல தாகிய, ஓர் கூரைபுக்கு-ஒரு வீட்டிற் புகுந்து, நலம் - நன்மையை, மிக அறிந் தேன் அல்லேன் - மிகுதியாய்த் தெரிந்து கொண்டேனல்லன், மல்லிகை-மல் லிகைக் கொடிபடர்ந்த, மாடம் - மாளிகைகள், நீடும் - நீண்ட, மறுகொடு - தெருக்களோடு, நெருங்கி - நெருக்கமாகி, எங்கும் - எவ்விடத்தும், அல்லி - அகவிதழ்களில், வண்டு இயங்கும் - வண்டுகள் சஞ்சரித்தற் கிடமாகிய, ஆரூ ரப்பனே - திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன்-பயந் தேன் எ-று.

(பொ-ரை.) சொல்லுமிடத்து வரம்பில்லை, இன்பமில்லாத ஏழை வாழ்க்கை, நல்லதாகிய ஒருவீட்டிற்புகுந்து நன்மையை மிகுதியாகத் தெரிந்து கொண்டேனல்லன், மல்லிகைக் கொடிபடர்ந்த மாளிகைகள் நீண்ட தெருக்க ளோடு நெருக்கமாகி எவ்விடத்தும் அகவிதழ்களில் வண்டுகள் சஞ்சரித்தற் கிடமாகிய திருவாரூரிலெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, சிறிது மின்பமில்லாத அந்தப் பேதைவாழ்வுக் கஞ்சினேன் என்பதாம்.

(வி-ரை.) சுவை - இன்பம். பேதைவாழ்வு - பொய்வாழ்வு. நல்லதோர் கூரை - நல்லதாகிய வொப்பற்ற வீடு. (முத்தி) மறுகு - தெரு. அல்லி - பூவினுள்ளிதழ். இயங்குதல் - சஞ்சரித்தல். (4)

*நரம்பினோடெலும்புகட்டிநசையினோடிசைவொன்றில்லாக்*
*குரம்பைவாய்க்குடியிருந்துகுலத்தினல்வாழமாட்டேன்*
*விரும்பியகமழும்புன்னைமாதவித்தொகுதியென்று*
*மரும்புவாய்மலருமாரூரப்பனேயஞ்சினேனே.*

(ப-ரை.) நரம்பினோடு - நரம்புடனே, எலும்புகட்டி - எலும்பைக்கட்டி, நசையினோடு - விருப்பத்தோடு, இசைவு ஒன்று இல்லா - சிறிதும் இணக்கமில்லாத, குரம்பைவாய் - குடிலினிடத்து, குடியிருந்து - குடியாயிருந்து, குலத்தினல் - மேன்மையோடு, வாழமாட்டேன் - வாழ்ந்திரேன், விரும்பிய - விரும்பும்படி, கமழும் - பரிமளிக்கிற, புன்னை மாதவித்தொகுதி - புன்னை மாதவிகளின் கூட்டம், என்றும் - எந்நாளும், அரும்பு - அரும்புகள், வாய்மலரும் - வாய்விள்ளுதற்கிடமாகிய, ஆரூரப்பனே - திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன் - பயந்தேன் எ-று.

(பொ-ரை.) நரம்புடனே எலும்பைக்கட்டி விருப்பத்தோடு சிறிதும் இணக்கமில்லாத குடிலினிடத்துக் குடியாயிருந்து மேன்மையோடு வாழ்ந்திரேன், விரும்பும்படி பரிமளிக்கிற புன்னைமாதவிகளின் கூட்டம் எந்நாளும் அரும்புகள் வாய்விள்ளுதற் கிடமாகிய திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, நரம்புமுதலியவற்றா லாக்கப்பட்ட இவ்வுடம்பின் வாழ்க்கைக்கு அஞ்சினேன் என்பதாம்.

(வி-ரை.) நசை - விருப்பம். குரம்பை - சிறுகுடில். (உடம்பு) குலம் - மேன்மை. விரும்பிய - செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். மாதவி - குருக்கத்திமரம். (5)

*மணமெனமகிழ்வர்முன்னேமக்கடாய்தந்தைசுற்றம்*
*பிணமெனச்சுடுவர்பேர்த்தேபிறவியைவேண்டேனாயேன்*
*பணையிடைச்சோலைதோறும்பைம்பொழில்வளாகத்தெங்க*
*ளணிவினைக்கொடுக்குமாரூரப்பனேயஞ்சினேனே.*

(ப-ரை.) மக்கள் தாய்தந்தை சுற்றம் - பிள்ளைகள் தாய்தந்தை உறவினர், முன்னே - முன்பு, மணம் என - மணமென்று சொல்லுதலும், மகிழ்வர் - களிப்பார், பேர்த்து - மீட்டும், பிணம் என - பிணமென்று இகழ்ந்து, சுடு

வர்-சுட்டெரிப்பர், (ஆதலால்) நாயேன்-நாயினேன், பிறவியை வேண்டேன்-பிறப்பை விரும்பேன், பணை இடை - மிகுந்த இடத்தையுடைய, சோலைதோறும் - பொழில்களிலெல்லாம், பைம்பொழில வளாகத்து - பசிய சோலைகளினிடங்கடோறும், எங்கள் அணைவினைகொடுக்கும் - எங்கள் சஞ்சாரத்தைக் கொடுக்கிற, அரூரப்பனே-திருவாரூரிலெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன் - பயந்தேன் எ-று.

(பொ-ரை.) பிள்ளைகள் தாய்தந்தை உறவினர்முன்பு மணமென்றுசொல்லு லும் களிப்பார், மீட்டும் பிணமென்று இகழ்ந்து சுட்டெரிப்பர், ஆதலால் நாயினேன் பிறப்பைவிரும்பேன், மிகுந்த இடத்தையுடைய பொழில்களிலெல்லாம் பசிய சோலைகளினிடங்கடோறும் எங்கள் சஞ்சாரத்தைக் கொடுக்கிற திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, மணக்கோலமே பிணக் கோலமாகிற இப்பிறவியை யஞ்சினே னென்பதாம்.

(வி-ரை.) மணம் - விவாகம். பணைத்தல் - மிகுதல். வளாகம் - இடம். அணைவு - சஞ்சாரம். (6)

தாழ்வெனுந்தன்மைவிட்டுத்தனத்தையேமனத்தில்வைத்து
வாழ்வதேகருதித்தொண்டர்மறுமைக்கொன்றீயகில்லா
ராழ்குழிப்பட்டபோதுவலக்கணிலொருவர்க்காவ
ரியாழ்முயன்றிருக்குமாரூரப்பனேயஞ்சினேனே.

(ப-ரை.) தாழ்வு என்னுந் தன்மைவிட்டு-இழிவாகிய தன்மையைவிட்டு, தனத்தையே மனத்தில் வைத்து-பொருளையே நெஞ்சில்வைத்து, வாழ்வதே கருதி - வாழ்வையே நினைத்து, தொண்டர் - அடியார், மறுமைக்கு - மறுமையின்பத்தின் பொருட்டு, ஒன்று ஈயகில்லார் - ஒருபொருளையும் கொடுக்கமாட்டார், (இவர்) ஆழ்குழிப்பட்டபோது - ஆழ்ந்த குழியில் வீழ்ந்த போது, அலக்கணில்-துன் பக்காலத்தில், ஒருவர்க்கு ஆவர் - சண்டனொருவர்க்கே யுரியராவர், யாழ்முயன்றிருக்கும் - யாழ்முயன்று வாசிக்கிற, ஆரூரப்பனே - திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன்-பயந்தேன் எ-று.

(பொ-ரை.) இழிவாகிய தன்மையை விட்டு பொருளையே நெஞ்சில் வைத்து வாழ்வையே நினைத்து அடியார் மறுமை யின்பத்தின்பொருட்டு ஒரு பொருளையும் கொடுக்கமாட்டார், (இவர்) ஆழ்ந்த குழியில் வீழ்ந்தபோது, துன்பக்காலத்தில் சண்டனொருவர்க்கே யுரியராவர், யாழ்முயன்று வாசிக்கிற திருவாரூரிலெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, செல்வத்தையே பெரிதாக மதித்து ஒருவர்க்குங் கொடாதவர், மறுமையில் நிரயத் துன்ப மநுபவிப்பரென்பதாம்.

(வி-ரை.) தனம் – பொருள். மறுமை ஆகுபெயர். ஆழ்குழியென்றது நரகத்தை. அலக்கண் - துன்பம். சண்டனார் - யமனார். யாழ்முயன்றிருக்கும்-யாழோசை மிக்கிருக்கிற. (7)

உதிரநீரிறைச்சிக்குப்பையெடுத்ததுமலக்குக்கைம்மேல்
வருவதோர்மாயக்கூரைவாழ்வதோர்வாழ்வுவேண்டேன்
கரியமாலயனுந்தேடிக்கழலிணை காணமாட்டா
வரியனாய்நின்றவாரூரப்பனேயஞ்சினேனே.

(ப-ரை.) உதிரநீர் - ரத்தநீர், இறைச்சிகுப்பை - தசைக்குவியல், மேல் எடுத்த மலக்குக்கை - மேலே யெடுத்தது கலக்கமாகிய கை, வருவது - அதன் மேல் வருவது, ஓர் - ஒப்பற்ற, மாயக்கூரை - மாயமாகிய வேய்வு, வாழ்வது-(இதில்) வாழ்வதாகிய, ஓர் வாழ்வு வேண்டேன் - அற்பவாழ்வை விரும்பமாட்டேன், கரியமால் அயனும் தேடி - கரியமாலும் பிரமனும் தேடி, கழல் இணை - திருவடியிரண்டையும், காணமாட்டா - காணவொண்ணாத, அரியனாய் நின்ற - அருமையானவனாய் நின்ற, ஆரூரப்பனே - திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன் - பயந்தேன் எ–று.

(பொ-ரை.) இரத்தநீர் தசைக்குவியல் மேலேயெடுத்தது கலக்கமாகிய கை, அதன்மேல் வருவது ஒப்பற்ற மாயமாகிய வேய்வு, இதில் வாழ்வதாகிய அற்பவாழ்வை விரும்பமாட்டேன், கரியமாலும் பிரமனும் தேடி திருவடியிரண்டையும் காணவொண்ணாத அருமையானவனாய் நின்ற திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(கு-ரை.) திருவாரூரப்பனே, உதிரமுதலிய பொருள்களால் ஆக்கப்பட்ட இவ்வுடம்போடு கூடிவாழும் வாழ்க்கைக்கு அஞ்சினேன் என்பதாம்.

(வி-ரை.) மலக்கு - கலக்கம். கூரை-மேற்கூரை. அயன்-பிரமன். (8)

பொய்த்தன்மைத்தாயமாயப்போர்வையைமெய்யென்றெண்ணும்
வித்தகத்தாயவாழ்வுவேண்டிநான்விரும்பகில்லேன்
முத்தினைத்தொழுதுநாளுமுடிகளால்வணங்குவார்க்கு
வத்தன்மைத்தாகுமாரூரப்பனேயஞ்சினேனே.

(ப-ரை.) பொய்த்தன்மைத்து ஆய - பொய்த்தன்மைத் தாகிய, மாயப் போர்வையை - மாயமாகிய போர்வையை, மெய்யென்று - உண்மையென்று, எண்ணும் - நினைக்கிற, வித்தகத்து ஆயவாழ்வு - வித்தகத்தாகிய வாழ்வினை, வேண்டி விரும்பகில்லேன்—, முத்தினை - முத்துப்போலுந் திருமேனியையுடைய சிவபிரானை, தொழுது - வணங்கி, நாளும் - நாடோறும், முடிகளால் வணங்குவார்க்கு - தலைகளால் வணங்குவோருக்கு, அத்தன்மைத்து ஆதும் - அத்தன்மையுடைய தாகிற, ஆரூரப்பனே - திருவாரூரி லெழுந்தருளிய எமது தந்தையே, அஞ்சினேன் - பயந்தேன் எ–று.

(போ-ரை.) பொய்த்தன்மைத்தாகிய மாயமாகிய போர்வையை உண்மையென்று நினைக்கிற வித்தகத்தாகிய வாழ்வினை வேண்டி விரும்பகில்லேன், முத்துப்போலுந் திருமேனியையுடைய சிவபிரானை வணங்கி நாடோறுந் தலைகளால் வணங்குவோருக்கு அத்தன்மையுடையதாகும் திருவாரூரிலெழுந்தருளிய எமது தந்தையே, பயந்தேன்.

(க-ரை.) திருவாரூரப்பனே, பொய்யாகிய இவ்வுடம்போடு கூடி வாழும் வாழ்க்கைக்கு அஞ்சினே னென்பதாம்.

(வி-ரை.) வித்தகம் - அதிசயம். முத்து - உவமையாகுபெயர். (வண்ணவுவமை) செவ்வண்ணமன்றோ வெனின், செவ்வண்ணமே யாயினும் திருவெண்ணீற்று முழுப்பூச்சாலிங்ஙனங் கூறினர் என்க. "யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி" அருள்செய்வோனாதலால் 'அத்தன்மைத்தாகு மாரூரப்பனே' என்றார். (9)

தஞ்சொலாரருள்பயக்குந்தமியனேன்றடமலைக்க
ணஞ்சொலார்பயிலுமாரூரப்பனை யூரனஞ்சிச்
செஞ்சொலானயந்தபாடல்சிந்தியாவேத்தவல்லார்
நஞ்சுலாங்கண்டத்தெங்கணாதனை நணுகுவாரே.

(ப-ரை.) தம்சொல் ஆர் - தமது புகழ் மிகுந்த, அருள் பயக்கும்-அருள் செய்கிற, தமியனேன்-தமியேனது, தடமலைக்கண் - பெருமுலையினிடத்து, அம்சொல்லார் பயிலும்-மாதர் பயில்கின்ற, ஆரூரப்பனை --திருவாரூரிலமர்ந்த எமது தந்தையை, ஊரன் - நாவலூரான், அஞ்சி - பயந்து, செஞ்சொல்லால்-செவ்விய சொற்களால், நயந்த - விரும்பிச்செய்த, பாடல் - பாடல்களை, சிந்தியா - சிந்தித்து, ஏத்தவல்லார்-துதிக்கவல்லார், நஞ்சுலாம் கண்டத்து - நஞ்சு துஞ்சுங் கண்டத்தையுடைய, எங்கள் நாதனை - எங்களிறைவனாகிய சிவபிரானை, நணுகுவார் - அடைவார்கள் எ-று.

(போ-ரை.) தமது புகழ் மிகுந்த அருள்செய்கிற தமியேனது பெருமுலையினிடத்து மாதர் பயில்கின்ற திருவாரூரிலமர்ந்த எமது தந்தையை நாவலூரன் பயந்து செவ்விய சொற்களால் விரும்பிச் செய்த பாடல்களைச் சிந்தித்துத் துதிக்கவல்லார் நஞ்சு துஞ்சுங் கண்டத்தையுடைய எங்களிறைவனாகிய சிவபிரானை அடைவார்கள்.

(க-ரை.) திருவாரூரப்பனை, ஆரூரன்பாடின பத்துப்பாடலுங் கற்றுவல்லார் சிவபிரான் திருவடியை யடைவார்க ளென்பதாம்.

(வி-ரை.) பயிலல்-சஞ்சரித்தல். நயத்தல்-விரும்புதல். சிந்தியா-செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். (10)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வன்மீகநாதர்.

தேவியார் - அல்லியங்கோதையம்மை.

## திருப்புத்தூர்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மலைக்குமகளஞ்சமதகரியையுரித்தீ
  ரெரித்தீர்வருமுப்புரங்கள்
சிலைக்குங்கொலைச்சேவுகந்தேற்றொழியீர்
  சில்பலிக்கில்கடோறுஞ்செலவொழியீர்
கலைக்கொம்புங்கரிமருப்புமிடறிக்
  கலவம்மயிற்பீலியுங்காரகிலு
மலைக்கும்புனல்சேரரிசிற்றென்கரை
  யழகார்திருப்புத்தூரழகனீரே.

(ப-ரை.) மலைக்குமகள் அஞ்ச - பார்வதி தேவியானவள் அஞ்சும்படி, மதகரியை உரித்தீர் - மதயானையை யுரித்தீர், வரும் - திரிகிற, முப்புரங்கள் எரித்தீர்—, சிலைக்கும் - ஆரவாரிக்கிற, கொலை - கொலைத் தொழிலையுடைய, சே - இடபத்தின்மேல், உகந்து எற்று - மகிழ்ந் தேறுதலை, ஒழியீர் - ஒழிய மாட்டீர், சில்பலிக்கு - அற்பமாகிய பிக்ஷைச்சோற்றுக்கு, இல்கள் தோறும் - வீடுதோறும், செலவு - செல்லுதலை, ஒழியீர் - ஒழியமாட்டீர், கலைக்கொம்பும் - மான் கொம்புகளையும், கரிமருப்பும் - யானைக்கொம்புகளையும், இடறி - எற்றி, கலவம் - தோகையையுடைய, மயில் பீலியும் - மயிலிறகினையும், கார் அகிலும் - கரிய அகிற்கட்டைகளையும், அலைக்கும் - அலைக்கின்ற, புனல்சேர் - நீர் சேர்ந்த, அரிசில் - அரிசிலாற்றின், தென்கரை - தென்கரையிலுள்ள, அழகு ஆர் - அழகுபொருந்திய, திருப்புத்தூர் - திருப்புத்தூரி லெழுந்தருளிய, அழகனீரே - அழகரே எ—று.

(பொ-ரை.) பார்வதி தேவியானவள் அஞ்சும்படி மதயானையை யுரித்தீர், திரிகிற முப்புரங்களெரித்தீர், ஆரவாரிக்கிற கொலைத் தொழிலையுடைய இடபத்தின்மேல் மகிழ்ந்தேறுதலை ஒழியீர், அற்பமாகிய பிக்ஷைச் சோற்றுக்கு வீடுதோறும் செல்லுதலை ஒழியமாட்டீர், மான் கொம்புகளையும் யானைக் கொம்புகளையும் எற்றி, தோகையையுடைய மயிலிறகினையும் கரிய அகிற்கட்டைகளையும் அலைக்கின்ற நீர் சேர்ந்த அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகுபொருந்திய திருப்புத்தூரி லெழுந்தருளிய அழகரே.

(க-ரை.) அரிசிலாற்றின்தென்கரையிலுள்ள திருப்புத்தூரழகரே, மலைமகளஞ்சக் கரியுரித்தல் முதலிய செயல்களை யொழியீர். இதுஎன்னென்பதாம்.

(வி-ரை.) சிலைத்தல் - ஆரவாரித்தல். எற்று - எறுதல். கலவம் கலாபம் என்னும் வடசொற்றிரிபு. (1)

அருமலரோன்சிரமொன் றறுத்தீர்
செறுத்தீரழற்சூலத்தினந்தகனைத்
திருமகள்கோனெடுமால்பலநாள்
சிறப்பாகியபூசனைசெய்பொழுதி
லொருமலராயிரத்திற்குறைவா
னிறைவாகவோர்கண்மலர்சூட்டலுமே
பொருவிறலாழிபுரிந்தளித்தீர்
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

(ப-ரை.) அரு-அருமையாகிய, மலரோன்-பிரமனது, சிரம் ஒன்று-ஒரு தலையை, அறுத்தீர்-சேதித்தீர், அழல் - நெருப்புருவாகிய, சூலத்தின்-சூலத்தினால், அந்தகனை-யமனை, செறுத்தீர்-அழித்தீர், திருமகள்கோன்-திருமகள்கணவனாகி, நெடுமால்—திருமால், பலநாள் - நெடுங்காலம், சிறப்பாகிய பூசனைசெய்பொழுதில்-சிறந்தபூசைசெய்யும் சமயத்தில், ஆயிரத்தில் ஒருமலர் குறைவால்-ஆயிரத்திலொருபூ இல்லாமையால், நிறைவு ஆக-நிறைய, ஓர் கண்மலர்சூட்டலும் -ஒரு கண்ணாகிய மலரைச் சூட்டுதலும், பொரு - போர் செய்தற்குரிய, விறல் - வெற்றியையுடைய, ஆழி - சக்கரப்படையை, புரிந்துஅளித்தீர்—விரும்பித்தந்தீர், பொழில்-சோலைகள், ஆர் - நிறைந்த, திருப்புத்தூர் - திருப்புத்தூரிலெழுந்தருளிய, புனிதனீரே - பரிசுத்தரே எ-று.

(பொ-ரை.) அருமையாகிய பிரமனது ஒரு தலையை சேதித்தீர், நெருப்புருவாகிய சூலத்தினால் யமனை அழித்தீர், நெடுமால் நெடுங்காலம் சிறந்த பூசை செய்யும் சமயத்தில் ஆயிரத்திலொருபூ இல்லாமையால் நிறைய ஒரு கண்ணாகிய மலரைச் சூட்டுதலும், போர்செய்தற்குரிய வெற்றியையுடைய சக்கரப் படையை விரும்பித்தந்தீர், சோலைகள் நிறைந்த திருப்புத்தூரி லெழுந்தருளிய பரிசுத்தரே.

(க-ரை.) திருப்புத்தூர்ப் புனிதரே, பிரமன் தலையொன்றை யறுத்தீர், யமனை யழித்தீர், திருமாற்குச் சக்கரங்கொடுத்தீர் என்னென்பதாம்.

(வி-ரை.) செறுத்தல்-அழித்தல். அந்தகன் — முடிவுசெய்பவன். பூசனை - பூசை. புரிந்து என்பதற்கு இரங்கி யென்றுரைப்பினுமாம். (2)

தரிக்குந்தரைநீர்தழல்காற்றந்தரஞ்
சந்திரன்சவிதாவியமானனுனீர்
சரிக்கும்பலிக்குத்தலையங்கையேந்தித்
தையலார்பெய்யக்கொள்வதுதக்கதன்றுன்
முரிக்குந்தளிர்ச்சந்தனத்தொடுவேயு
முழங்குந்திரைக்கைகளால்வாரிமோதி
யரிக்கும்புனல்சேரரிசிற்றென்கரை
யழகார்திருப்புத்தூரழகனீரே.

(ப-ரை.) தரிக்கும் - (எல்லாப் பொருள்களையும்) தாங்குகிற, தரை - மண், நீர் - புனல், தழல் - நெருப்பு, காற்று - வாயு, அந்தரம் - ஆகாயம், சந்திரன்-மதி, சவிதா - சூரியன். இயமானன்-ஆன்மா, (என்பவையாவும்) ஆனீர்-ஆயினீர், சரிக்கும் - சஞ்சரித்தேற்கிற, பலிக்கு - பிக்ஷையின் பொருட்டு, தலை - கபாலத்தை, அங்கை ஏந்தி - அகங்கையிற்றாங்கி, தையலார் - மாதர், பெய்ய - பிக்ஷயிட, கொள்வது - ஏற்றுக்கொள்வது, தக்கது அன்று - தகுதியல்ல, முரிக்கும் - முரிக்கப்பட்ட, தளிர்ச்சந்தனத்தொடு - சந்தனத்தளிரோடு, வேயும்-மூங்கிலிலையும், முழங்கும்-சத்திக்கிற, திரை-அலைகளாகிய, கைகளால்-கரங்களால், வாரிமோதி - வாரியிறைத்து, அரிக்கும் - அரிக்கின்ற, புனல் சேர் - நீர்சேர்ந்த, அரிசில் தென்கரை - அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, அழகு ஆர் - அழகுபொருந்திய, திருப்புத்தூர் - திருப்புத்தூரிலெழுந்தருளிய, அழகனீரே - அழகரே எ-று.

(பொ-ரை.) எல்லாப்பொருள்களையும் தாங்குகிற மண், புனல், நெருப்பு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா என்பவையாவும் ஆயினீர், சஞ்சரித்தேற்கிற பிக்ஷையின் பொருட்டு கபாலத்தை அகங்கையிற்றாங்கி, மாதர் பிக்ஷையிட ஏற்றுக்கொள்வது தகுதியல்ல, முரிக்கப்பட்ட சந்தனத்தளிரோடு மூங்கிலிலையும் சத்திக்கிற அலைகளாகிய கரங்களால்வாரியிறைத்து அரிக்கின்ற நீர்சேர்ந்த அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகுபொருந்திய திருப்புத்தூரிலெழுந்தருளிய அழகரே.

(க-ரை.) திருப்புத்தூரழகரே, அட்டமூர்த்தியாயிருக்கிற நீர் மாதரிடம் பிக்ஷையேற்றல் தகுதியன்றென்பதாம்.

(வி-ரை.) தரித்தல்-தாங்குதல். அங்கை - உள்ளங்கை. அழகிய கையெனினுமாம். (3)

கொடியுடைமும்மதில்வெந்தழியக்குன்றம்
வில்லாநாணியிற்கோலொன்றினா
லிடிபடவெய்தெரித்தீரிமைக்குமளவி
லுமக்காரெதிரெம்பெருமான்
கடிபடுபூங்கணையாங்கருப்புச்சிலைக்
காமனைவேவக்கடைக்கண்ணினாற்
பொடிபடநோக்கியதென்னைகொல்லோ
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

(ப-ரை.) கொடி உடை - கொடியையுடைய, மும்மதில - முப்புரம், வெந்து அழிய - வெந்து நீறாக, குன்றம்வில்லா - மலைவில்லாக, நாணியில் - நாணில், கோல் ஒன்றினால் - ஒரு அம்பினால், இடிபடஎய்து எரித்தீர்-இடிய எய்து எரித்தீர், இமைக்கும் அளவில்-இமைகொட்டுங் காலத்தில், (ஆதலால்) எம்பெருமான்-எம்பெருமானே, உமக்கு ஆர் எதிர்-உமக்கு எதிர்யார், கடிபடு-

மணம்பொருந்திய, பூ - மலராகிய, கணையான் - அம்பையுடையவனாகிய கருப்புச்சிலை - கருப்பு வில்லையுடைய, காமனை - மன்மதனை, வேவ - வெந்தழியும்படி, கடைக்கண்ணினால் - கடைக்கண்ணில், பொடிபட நோக்கியது என்னைகொல்லோ பொடியாகும்படி நோக்கிய செயல் என்னோ, பொழில் - சோலைகள், ஆர் - நிறைந்த, திருப்புத்தூர் - திருப்புத்தூரி லெழுந்தருளிய, புனிதனீரே - பரிசுத்தரே எ-று.

(பொ-ரை.) கொடியையுடைய முப்புரம் வெந்து நீறாக, மலைவில்லாக நாணில் ஒரு அம்பினால் இடிய எய்து எரித்தீர், இமைகொட்டுங் காலத்தில், எம்பெருமானே, உமக்கு எதிர் ஆர், மணம்பொருந்திய மலராகிய அம்பையுடையவனாகிய கரும்புவில்லையுடைய மன்மதனை வெந்தழியும்படி கடைக்கண்ணால் பொடியாகும்படி நோக்கிய செயல் என்னைகொல்லோ, சோலைகள் நிறைந்த திருப்புத்தூரி லெழுந்தருளிய பரிசுத்தரே.

(க-ரை.) திருப்புத்தூர்ப் புனிதரே, ஒரு நொடியில் மும்மதில்களை யெரித்தீர், உமக்கெதிர் யார், பூங்கணைக் காமனை யெரித்தது யாதுக்கு என்பதாம்.

(வி-ரை.) குன்றம் - மலை (மேரு). நாணி - நாரி, (நாண்). கோல்-அம்பு. கடி - மணம். (4)

வணங்கித்தொழுவாரவர்மால்பிரமன்
மற்றும்வானவர்தானவர்மாமுனிவ
ருணங்கற்றலையிற்பலிகொண்டதெனே
யுலகங்களெலாமுடையீருரையீ
ரிணங்கிக்கயலிளஞ்சேலிளவாளைபாய
வினக்கெண்டைதுள்ளக்கண்டிருந்தவன்ன
மணங்கிக்குணங்கொளரிசிற்றென்கரை
யழகார்திருப்புத்தூரழகனீரே.

(ப-ரை.) வணங்கி தொழுவார் அவர் - தாழ்ந்து வணங்குவோராகிய அவர், மால் பிரமன் மற்றும் - விட்டுணு பிரமன் மற்றுமுள்ள, வானவர் தானவர் மாமுனிவர் - தேவர் ராக்ஷதர் பெரிய முனிவர், (அங்ஙனமாக - அங்ஙனமாகியநீர்), உணங்கல் தலையில்- உலர்ந்த தலையோட்டில், பலிகொண்டது என்னே-பிக்ஷையேற்றதென்னே, உலகங்கள் எல்லாம் உடையீர் - எல்லாவுலகங்களையுமுடையீர், உரையீர் - சொல்லமாட்டீர், இணங்கி - சேர்ந்து, கயல் - கயல், இளஞ்சேல் இளவாளைபாய - இளஞ்சேல் இளவாளை துள்ள, இனம்-கூட்டமாகிய, கெண்டைதுள்ள - கெண்டைகள் துள்ள, கண்டிருந்த அன்னம்-பார்த்திருந்த அன்னப்பறவைகள், அணங்கி - வருந்தி, குணம்கொள் - குணத்தைக் கொள்ளுவதற் கிடமாகிய, அரிசிற் றென்கரை - அரிசிலாற்றின் தென்

கரையிலுள்ள, அழகு ஆர் - அழகு பொருந்திய, திருப்புத்தூர் - திருப்புத்தூரி லெழுந்தருளிய, அழகனீரே - அழகரே எ-று.

(பொ-ரை.) தாழ்ந்து வணங்குவோராகிய அவர் விட்டுணு பிரமன் மற்றுமுள்ள தேவர் ராக்ஷதர் பெரியமுனிவர், அங்ஙனமாக, நீர், உலர்ந்த தலையோட்டில் பிக்ஷையேற்றதென்னே, எல்லா வுலகங்களையுமுடையீர், சொல்லுவீர், சேர்ந்து கயல் இளஞ் சேல் இளவாளை துள்ள கூட்டமாகிய கெண்டைதுள்ளப் பார்த்திருந்த அன்னப்பறவைகள் ஒருந்தி குணத்தைக் கொள்ளுதற் கிடமாகிய அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகுபொருந்திய திருப்புத்தூரி லெழுந்தருளிய அழகரே.

(கு-ரை.) திருப்புத்தூரழகனீரே, உம்மை திருமால் முதலியோர் வணங்காநிற்க, நீர் தலையோட்டில் பிக்ஷையேற்பது யாது காரணத் தாலோ சொல்லுவீர் என்பதாம்.

(வி-ரை.) வானவர் - தேவர். தானவர் - அசுரர். (5)

*அகத்தடிமைசெய்யுமந்தணன்று
னரிசிற்புனல்கொண்டுவந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக்குடத்தைநும்
முடிமேல்விழுத்திட்டுநடுங்குதலும்
வகுத்தவனுக்குநித்தற்படியும்வருமென்
றொருகாசினைநின்றநன்றிப்
புகழ்த்துணைகைபுகச்செய்துகந்தீர்
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

(ப-ரை.) அகத்தடிமை செய்யும் - அகத்தொண்டு செய்கிற, அந்தணன் - வேதியன், அரிசில் புனல் கொண்டுவந்து - அரிசிலாற்று நீரைக் கொண்டுவந்து, ஆட்டுகின்றான் - திருமஞ்சனஞ் செய்பவன், (ஒருநாள்) மிகத் தளர்வு எய்தி - மிகத் தளர்வடைந்து, குடத்தை - திருமஞ்சனக்குடத்தை, நும்முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும் - உம்முடிமேல் போட்டுவிட்டு நடுங்குதலும்,

* திருப்புத்தூரென்னு மித்திருப்பதியிலே, ஆதிசைவ பிராமணகுலத்திலே, திருவவதாரஞ் செய்து புகழ்த்துணை நாயனாரெனத் திருநாமம்பெற்று, மிகுந்த சிவநேசத்துடன் சிவலிங்கப் பெருமாற்குத் திருமஞ்சனமாதி யுபசாரங்கள் ஆகமவிதி வழாது இயற்றி வருங்கால், பஞ்சம் நேரிட்டுச் சின்னுணவின்றித் திருமேனி வாடியு மோர்தினந் திருமஞ்சனஞ் செய்கையில் குடநழுவிச் சிவபெருமான் திருமுடிக்கண் வீழலும், நாயனார் பெருந்தகையஞ்சி நடுங்குதல் திருவுளத்திற்கொண்டு திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் பஞ்சம் நீங்குமளவும் அப்பெரியார்க்கோர் படிக்காசு அருள்செய்த அருட்பெற்றியை விளக்குவது இவ்வாருந்தேவாரம்.

அவனுக்கு - அந்த வேதியனுக்கு, நித்தம்படியும் வருமென்று - நாள்தோறும் கிடைக்குமென்று, ஒரு காசினை வகுத்து - ஒரு காசினை யேற்படுத்தி, நின்ற - நிலைபெற்ற, நன்றி - நல்லொழுக்கத்தையுடைய, புகழ்த்துணை - புகழ்த்துணை நாயனாரது, கைபுகச் செய்து-கையிற் கிடைக்கச்செய்து, உகந்தீர் - மகிழ்ந்தீர், பொழில் ஆர் - சோலைகள் சூழ்ந்த, திருப்புத்தூர் - திருப்புத்தூரி லெழுந்தருளிய, புனிதனீரே — பரிசுத்தரே எ-று.

(போ-ரை.) அகத்தொண்டு செய்கிற வேதியன் அரிசிலாற்று நீரைக் கொண்டுவந்து திருமஞ்சனஞ் செய்பவன் (ஒருநாள்) மிகத் தளர்வடைந்து திருமஞ்சனக்குடத்தை உம்முடிமேல் போட்டு நடுங்குதலும் அந்த வேதியனுக்கு, நாள்தோறும் கிடைக்குமென்று, ஒரு காசினை ஏற்படுத்தி நிலைபெற்ற நல்லொழுக்கத்தையுடைய புகழ்த்துணை நாயனாரது கையிற் கிடைக்கச்செய்து மகிழ்ந்தீர், சோலைகள் சூழ்ந்த திருப்புத்தூரி லெழுந்தருளிய பரிசுத்தரே.

(க-ரை.) தமது தளர்ச்சியால் திருமஞ்சனக்குடத்தை நும் முடிமேல் வீழ்த்தி யஞ்சிநின்ற புகழ்த்துணை நாயனாருக்கு நாடோறும் ஒருகாசு அருளிச் செய்துகந்தீர். திருப்புத்தூ ரழகனீரே, உமது கருணை யிருந்தவா றென்னென்பதாம்,

(வி-ரை.) புனல் - நீர். ஆட்டுதல் - திருமஞ்சனஞ்செய்தல். ஒரு காசு - பொற்காசு. (6)

பழிக்கும்பெருந்தக்கனெச்சம்மழியப்
பகலோன்முதலாப்பலதேவரையுந்
தெழித்திட்டவரங்கஞ்சிதைத்தருளுஞ்
செய்கையென்னேகொலோமைகொள்செம்மிடற்றீர்
விழிக்குந்தழைப்பீலியோடேலமுந்திவிளங்கு
மணிமுத்தொடுபொன்வரன்றி
யழிக்கும்புனல்சேரரிசிற்றென்கரை
யழகார்திருப்புத்தூரழகனீரே.

(ப-ரை.) பழிக்கும் - பழித்த, பெருந்தக்கன் - பெரியதக்கனது, எச்சம் - யாகமானது, அழிய — கெட, பகலோன் முதலா - சூரியன் முதலாகிய, பல தேவரையும்-பல தேவர்களையும், தெழித்திட்டு-அதட்டி, அவர்அங்கம் சிதைத்தருளும் - அவருடம்பை யழித்தருளின, செய்கை என்னே கொலோ - செயலென்னோ, மைகொள் - கருநிறங்கொண்ட,செம்மிடற்றீர் - செந்நிறத் திருமிடற்றையுடையீர், விழிக்கும் - விழிக்கின்ற, தழைப்பீலியொடு - தழைத்த மயிலிறகுடனே, ஏலம் உந்தி - ஏலத்தையும் தள்ளி, விளங்கும்-பிரகாசிக்கிற, மணிமுத்தொடுபொன் - மணிமுத்துடனே பொன்னையும், வரன்றி - வாரிக் கொண்டு, அழிக்கும் - கரையை யழிக்கிற, புனல் சேர் - நீர் சேர்ந்த, அரிசில் தென்கரை - அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, அழகு ஆர் - அழகுபொருந்திய, திருப்புத்தூர்-திருப்புத்தூரி லெழுந்தருளிய, அழகனீரே-அழகரே.எ-று.

(பொ-ரை.) பழித்த பெரிய தக்கனது யாகமானது கெட, சூரியன் முத லாகிய பல தேவர்களையும் அதட்டி அவருடம்பை யழித்தருளின செயலென்னே, கருநிறங்கொண்ட செந்நிறத் திருமிடற்றை யுடையீர், விழிக்கின்ற தழைத்த மயிலிறகுடனே ஏலத்தையும் தள்ளி, பிரகாசிக்கிற மணிமுத்துடனே பொன்னையும் வாரிக்கொண்டு கரையை யழிக்கிற நீர்சேர்ந்த அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகுபொருந்திய திருப்புத்தூரிலெழுந்தருளிய அழகரே.

(கு-ரை) திருப்புத்தூ ரழகரே, நிந்தித்த தக்கனது யாகத்தை யழித்து, அங்கு வந்திருந்த சூரியன் முதலான தேவர்களையுந் தண்டித்தீர், இச்செய்கை யுமக்குத் தகுமோ வென்பதாம்.

(வி-ரை) தெழித்தல் - அதட்டுதல். மை-கருநிறம். மிடறு - கண்டம். மயிலிறகிற் கண்களிருத்தலால் விழிக்கும் என்றார். வான்றல்-வாருதல். (7)

பறைக்கணெடும்பேய்க்கணம்பாடல்செய்யக்
குறட்பாரிடங்கள்பறைதாமுழக்கப்
பிறைக்கொள்சடைதாழப்பெயர்ந்துநட்டம்
பெருங்காடரங்காகநின்றாடலென்னே
கறைக்கொள்மணிகண்டமுந்திண்டோள்களுங்
கரங்கள்சிரந்தன்னிலுங்கச்சுமாகப்
பொறிக்கொளரவம்புனைந்தீர்பலவும்
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

(ப-ரை.) பறைக்கண் - பறைபோலுங் கண்களையுடைய, நெடும் பேய்க் கணம் - நெடிய பேய்க்கூட்டம், பாடல் செய்ய - பாட, குறள் - குட்டையாகிய, பாரிடங்கள் - பூதகணங்கள், பறைமுழக்க—பறைகொட்ட, பிறைகொள் - பிறையணிந்த, சடை தாழ - சடை தொங்க, பெயர்ந்து - அசைந்து, பெருங் காடு-மயானமாகிய, அரங்கம்-ஆடிடத்தில், நின்று - நின்று, நட்டம் ஆடல்-நடனமாடுதல், என்னே-என்னே, கறைகொள் - விடத்தை யணிந்த, மணிகண்டமும் - நீலகண்டத்திலும், திண்தோள்களும் - வலிமையுள்ள புயங்களிலும், கரங்கள் - கைகளிலும், சிரம்தன்னிலும் - சிரத்திலும், கச்சை ஆக - கச்சையாகவும், பொறிகொள் — புள்ளிகளைக் கொண்ட, அரவம் பலவும் புனைந்தீர் - பாம்புகள் பலவற்றையு மணிந்தீர், பொழில் ஆர் - சோலைகள் சூழ்ந்த, திருப் புத்தூர் - திருப்புத்தூரி லெழுந்தருளிய, புனிதனீரே - பரிசுத்தரே எ-று.

(பொ-ரை.) பறைபோலுங் கண்களையுடைய நெடிய பேய்க்கூட்டம் பாட, குட்டையாகிய பூதகணங்கள் பறைகொட்ட, பிறையணிந்த சடை தொங்க அசைந்து மயானமாகிய ஆடிடத்தில் நின்று நடனமாடுதல் என்னே, விடத்தை யணிந்த நீலகண்டத்திலும் வலிமையுள்ள புயங்களிலும் கைகளிலும் சிரத்திலும் கச்சையாகப் புள்ளிகளைக் கொண்டபாம்புகள் பலவற்றையுமணிந்தீர், சோலைகள் சூழ்ந்த திருப்புத்தூரி லெழுந்தருளிய பரிசுத்தரே.

(க-ரை.) நெடும்பெயர் குழும்பூதமும் பாடவும் பறைகொட்டவும் மயானத்தில் நடித்த லென்னே, கண்ட முதலிய விடங்களில் பாம்புகளை யணிந்தீர் திருப்புத்தூர்ப் புனிதனீரே யென்பதாம்.

(வி-ரை.) தாழ்தல் - தொங்குதல். மணி-அழகு எனினுமாம். புனைதல் - அணிதல். கச்சை - கயிறு. (8)

மழைக்கண்மடவாளையோர்பாகம்வைத்தீர்
வளர்புன்சடைக்கங்கையைவைத்துகந்தீர்
முழைக்கொளரவோடென்பணிகலனு
முழுநீறுமெய்பூசுதலென்னைகொலோ
கழைக்கொள்கரும்புங்கதலிக்கனியுங்
கமுகின்பழுக்காயுங்கவர்ந்துகொண்டிட்
டழைக்கும்புனல்சேரரிசிற்றென்கரை
யழகார்திருப்புத்தூரழகனீரே.

(ப-ரை.) மழைகண் - குளிர்ச்சியாகிய கண்களையுடைய, மடவாளை - உமாதேவியை, ஓர்பாகம் வைத்தீர் - ஒருபக்கத்தில் வைத்துக்கொண்டீர், வளர்புன்சடை - வளர்ந்த புல்லிய சடையில், கங்கையை வைத்து உகந்தீர் - கங்கா நதியை வைத்து மகிழ்ந்தீர், முழைகொள் - புற்றிடங்கொண்ட, அரவோடு - பாம்புடனே, என்பு - எலும்பையும், அணிகலன் ஆ - ஆபரணமாகக்கொண்டு, மெய் - திருமேனியில், முழுநீறு பூசுதல் - முழுநீறணிதல், என்னைகொலோ - யாது காரணமோ, கழைகொள் - மூங்கில் போலும், கரும்பும் - கரும்புகளும், கதலிக்கனியும் - வாழைப் பழமும், கமுகின் பழுக்காயும் - கமுகம் பழமும், கவர்ந்து கொண்டிட்டு - வாரிக்கொண்டு, அழைக்கும் - சத்திக்கிற, புனல்சேர் - நீர்சேர்ந்த, அரிசில் தென்கரை - அரிசிலாற்றின் தென் கரையிலுள்ள, அழகு ஆர் - அழகு பொருந்திய, திருப்புத்தூர் - திருப்புத்தூரிலெழுந்தருளிய, அழகனீரே - அழகரே எ-று.

(பொ-ரை.) குளிர்ச்சியாகிய கண்களையுடைய உமாதேவியை ஒருபக்கத்தில் வைத்துக் கொண்டீர், வளர்ந்த புல்லிய சடையில் கங்காநதியை வைத்து மகிழ்ந்தீர், புற்றிடங்கொண்ட பாம்புடனே எலும்பையும் ஆபரணமாகக் கொண்டு திருமேனியில் முழுநீறணிதல் யாது காரணமோ, மூங்கில்போலும் கரும்புகளும் வாழைப்பழமும் கமுகம் பழமும் வாரிக்கொண்டு சத்திக்கிற நீர் சேர்ந்த அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள அழகு பொருந்திய திருப்புத்தூரிலெழுந்தருளிய அழகரே.

(க-ரை.) திருப்புத்தூரழகரே, உமாதேவியை யொருபாகத்திலும் கங்கையைச் சடையிலும் வைத்து, பாம்பு எலும்பு என்பவற்றை அணிகலனாகக் கொண்டீர், இதென்னையோ வென்பதாம்,

(வி-ரை.) மழைக்கண் என்றது கருணைக்கண் என்றபடி-மடவாள். மடப்பத்தை யுடையாள், இளமையுள்ளவள் எனினுமாம். கழைக்கொள் என்பதில் கொள் உவமவுருபு. கதலி - வாழை. அழைத்தல் - சத்தித்தல். (9)

கடிக்கும்மரவால்மலையாலமரர்
  கடலைக்கடையவெழுகாளகூட
மொடிக்கும்முலகங்களையென்றதனை
  யுமக்கேயமுதாகவுண்டருமிழீ
ரிடிக்குமழைவீழ்த்திழுத்திட்டருவி
  யிருபாலுமோடியிரைக்குந்திரைக்கை
யடிக்கும்புனல்சேரரிசிற்றென்கரை
  யழகார்திருப்புத்தூரழகனீரே.

(ப-ரை.) கடிக்கும் அரவால் - கடிக்கும் பாம்பினால், மலையால் - பர்வதத்தால், அமரர் - தேவர், கடலைக்கடைய - சமுத்திரத்தைக்கடைய, எழு - அதிலெழுந்த, காளகூடம் - காளகூட விஷமானது, உலகங்களை – லோகங்களை, ஒடிக்குமென்று - அழிக்குமென்று, அதனை உமக்கே அமுது ஆக உண்டீர் - அதை உமது வுணவாக வுண்டீர், உமிழீர் - உமிழவுமாட்டீர், இடிக்கும் - இடிக்கின்ற, மழை - மேகத்தால், வீழ்த்திட்டு-பொழியப்பட்டு, இழுத்திட்டு - ஈர்த்து, அருவி - அருவியாறு, இருபாலும் - இருபக்கத்திலும், ஓடி-விரைவாய் சென்று, இரைக்கும் - சத்திக்கிற, திரை - அலையாகிய, கை அடிக்கும் - கையாலெற்றுகிற, புனல்சேர் - நீர் சேர்ந்த, அரிசில் தென் கரை - அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, அழகுஆர் - அழகு பொருந்திய, திருப்புத்தூர் - திருப்புத்தூரிலெழுந்தருளிய, அழகனீரே - அழகரே எ-று.

(பொ-ரை) கடிக்கிற பாம்பினால் பர்வதத்தால் தேவர் சமுத்திரத்தைக் கடைய அதி லெழுந்த காளகூட விஷமானது லோகங்களை அழிக்குமென்று அதை உமது வுணவாக வுண்டீர், உமிழவுமாட்டீர், இடிக்கின்ற மேகத்தால் பொழியப்பட்டு ஈர்த்திட்டு அருவியாறு இரண்டு பக்கத்திலும் விரைவாய் சென்று சத்திக்கிற அலையாகிய கையாலெற்றுகிற நீர் சேர்ந்த அரிசிலாற்றின் தென் கரையிலுள்ள அழகு பொருந்திய திருப்புத்தூரி லெழுந்தருளிய அழகரே.

(கு-ரை) திருப்புத்தூரழகரே, திருப்பாற்கடல் கடையப்பட்டபோது எழுந்த காளகூட விஷத்தை யமுதாக வுண்டீர், உமிழவுமாட்டீர், அங்ஙனம் நீர் செய்தது, அது உலகத்தை யழிக்குமென்று திருவுளம்பற்றியேபோலும் என்பதாம்.

(வி-ரை) அரவு - வாசுகி. மலை-மந்தரம். ஒடித்தல் - அழித்தல். அமுது-உணவு. உமிழ்தல் - கக்குதல். (10)

காரூர்மழைபெய்துபொழியருவிக்
கழையோடகிலுந்திட்டிருகரையும்
போரூர்புனல்சேரரிசிற்றென்கரைப்
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதர்தம்மை
யாரூரனருந்தமிழைந்திரேடைந்தழகா
லுரைப்பார்களுங்கேட்பவருஞ்
சீரூர்தருதேவகணங்களொடுமிணங்கிச்
சிவலோகமதெய்துவரே.

(ப-ரை.) கார் ஊர் - கருமை பொருந்திய, மழை பெய்து பொழி - மேகத்தினுல் மிகவும் பெய்யப்பட்டுப் பெருகின, அருவி-அருவியாறுனது, கழையோடு-மூங்கிலோடு, அகில்-அகிற்கட்டைகளேயும், உந்திட்டு-தள்ளி, இரு கரையும் - இருகரையிலும், போர் ஊர் - மோதுகிற, புனல் சேர் - நீர் சேர்ந்த, அரிசிற்றென்கரை - அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள, பொழில் ஆர்-சோலைகள் சூழ்ந்த, திருப்புத்தூர் - திருப்புத்தூரி லெழுந்தருளிய, புனிதர் தம்மை - பரிசுத்தரை, (பாடின) ஆரூரன் - ஆரூரனது, அருந்தமிழ் ஐந்திரேடைந்து- அரிய தமிழ்ப்பாடல் பத்தினையும், அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்-அழகாகப்படிப்பவரும் கேட்பவரும், சீர், ஊர் தரு-சிறப்புப் பொருந்திய, தேவகணங்களொடும் - தேவசமுகங்களோடும், இணங்கி - சேர்ந்து, சிவலோகம் எய்துவர் - சிவபுரத்தையடைவர் எ-று.

(பொ-ரை.) கருமை பொருந்திய மேகத்தினுல் மிகவும் பெய்யப்பட்டுப் பெருகின அருவியாறுனது மூங்கிலோடு அகிற்கட்டை களேயும் தள்ளி இரு கரையிலும் மோதுகிற நீர் சேர்ந்த அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள சோலைகள் சூழ்ந்த திருப்புத்தூரி லெழுந்தருளிய பரிசுத்தரை, (பாடின) ஆரூரனது அரிய தமிழ்ப்பாடல் பத்தினையும் அழகாகப் படிப்பவரும் கேட்பவரும் சிறப்புப்பொருந்திய தேவசமுகங்களோடும் சேர்ந்து சிவபுரத்தை யடைவர்.

(க-ரை.) திருப்புத்தூர்ப் புனிதரை ஆரூரன்பாடின தமிழ்ப்பாடல் பத்தினையும் சொல்வோரும் கேட்போரும் சிவலோகத்தையடைவர் என்பதாம்.

(வி-ரை.) பெய்து பொழி யென்றதனுல் மிகவும் பெய்யப்பட்டு என்றுரைக்கலாயிற்று. ஐந்திரேடைந்து - பத்து. (11)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-புத்தூரீசர். தேவியார்-சிவகாமியம்மை.

---

## திருக்கச்சியனேகதங்காபதம்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தேனெய்புரிந்துழல்செஞ்சடையெம்
  பெருமானதிடந்திகழைங்கணையக்
கோனையெரித்தெரியாடியிடங்குலவான
  திடங்குறையாமறையா
மானையிடத்ததோர்கையனிடம்மத
  மாறுபடப்பொழியும்மலைபோல்
யானையுரித்தபிரானதிடங்கலிக்
  கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) தேன் - வண்டுகள், நெய்புரிந்து - நெய்யைவிரும்பி, உழல் - உழலாநிற்றற் கிடமாகிய, செஞ்சடை எம்பெருமானது இடம் - செஞ்சடையையுடைய எம்பெருமானது இடமாயிருப்பதும், திகழ்-விளங்குகிற, ஐங்கணை - பஞ்சபாணங்களையுடைய, அக்கோனை - அந்தமன்மதனை, எரித்து - நீறுக்கி, எரியாடி - அழலோடாடியின், இடம் - இடமாயிருப்பதும், குலவானது - மேலானவனது, இடம் - இடமாயிருப்பதும், குறையாமறையா மானை - குறையாமறையாமானினை, இடத்தது - இடப்புறத்ததாகிய, ஓர் கையன்-ஒரு கையுடையவனது, இடம்-இடமாயிருப்பதும், மாறுபட-மாறுக, மதம்பொழியும்-மதத்தைச் சொரிகிற, மலைபோல்-மலைபோன்ற, யானையுரித்த பிரானது-யானையையுரித்த இறைவனது, இடம் - இடமாயிருப்பதும், கலிக்கச்சி அநேக தங்காபதமே - கலிக்கச்சி அநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) வண்டுகள் நெய்யை விரும்பி யுழலா நிற்றற் கிடமாகிய செஞ்சடை யெம்பெருமான திடமாயிருப்பதும், விளங்குகிற பஞ்சபாணங் களையுடைய அந்த மன்மதனை எரித்து அழலோடாடியின திடமாயிருப்பதும், மேலானவனது இடமாயிருப்பதும்,குறையாமறையாமானினை இடப்புறத்ததாகிய ஒருகையிலுடையவனது இடமாயிருப்பதும், மாறுபட மதம்பொழியும் மலைபோன்ற யானையுரித்த பிரானது இடமாயிருப்பதும் கலிக்கச்சி அநேக தங்காபதமே.

(க-ரை.) தேனெய் புரிந்துழல் செஞ்சடை முதலியவற்றை யுடைய சிவ பெருமானது இடம் கலிக்கச்சி அநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) புரிதல் - விரும்புதல். ஐங்கணையாவன—, தாமரைமலர், அசோகமலர், மாமலர், முல்லைமலர், நீலமலர் என்பன. குலம் - மேன்மை. இறைவன் திருக்கரத்து மானுக்கு இளைப்பும் இறப்பு மில்லை யாதலால், குறையாமறையாமான் என்றார். மறைதல் - இறத்தல். (1)

கூறுநடைக்குழிகட்பகுவாயன
பேயுகந்தாடநின்றோரியிட
வேறுபடக்குடகத்திலயம்பலவாண
னின்றாடல்விரும்புமிட
மேறுவிடைக்கொடியெம்பெருமா
னிமையோர்பெருமானுமையாள்கணவ
னாறுசடைக்குடையப்பனிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(பத-ரை.) கூறுநடை-சொல்லப்பட்ட நடையினையும், குழிகண் - குழிந்த கண்களையும், பகுவாயன - பிளந்தவாயினையு முடையனவாகிய, பேய் - பேய்கள், உகந்துஆட-களித்தாட, ஓரி - ஓரிகள், வேறுபட-வெவ்வேறாக, குடகத்து இலயம் பல - பலவாகிய குடகத்திலயங்களை, நின்று இட - நின்றுபோட, வாணன்-அவ்விடத்து வாழ்வோனாகிய சிவபெருமான், நின்று ஆடல்விரும்பும் இடம் - இடமாயிருப்பதும், விடையேறுகொடி - இடபமேறின கொடியை யுடைய், எம்பெருமான் - எம்பிரான், இமையோர் பெருமான்-தேவர்பிரான், உமையாள்கணவன் - உமாநாயகன், சடைக்கு - சடையில், ஆறு உடை - கங்காநதியையுடைய, அப்பன் - எமது தந்தை, (அவனது) இடம் - இடமாயிருப்பதும், கலிக்கச்சியநேகதங்காபதமே-கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) சொல்லப்பட்ட நடையினையும் குழிந்த கண்களையும் பிளந்த வாயினையு முடையனவாகிய பேய்கள் களித்தாட, ஓரிகள் வெவ்வேறாக பலவாகிய குடகத்திலயங்களை நின்று போட, அவ்விடத்து வாழ்வோனாகிய சிவபெருமான் நின்று ஆடல்விரும்பும் இடமாயிருப்பதும், இடபமேறின கொடியையுடைய எம்பெருமான் இமையோர் பெருமான், உமையாள் கணவன் சடையில் கங்காநதியையுடைய எமது தந்தை (அவனது) இடமாயிருப்பதும் கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) பேயோடு மயானத்தில் நின்றாடுவோனாகிய சிவபிரானது இடம் கலிக்கச்சியநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) கூறுநடை - விரைநடை. ஓரி - கிழநரி. குடகத்திலயம் - காணம். சடைக்கு உருபு மயக்கம். (2)

கொடிகளிடைக்குயில்கூவுமிடம்
மயிலாலும்மிடமழுவாளுடைய
கடிகொள்புனற்சடைகொண்டநுதற்
கறைக்கண்டனிடம்பிறைத்துண்டமுடிச்
செடிகொள்வினைப்பகைதீருமிடந்
திருவாகுமிடந்திருமார்பகலா

தடிகளிடமழல்வண்ணனிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) கொடிகளிடை - கொடிகளின் மீதிருந்து, குயில்கூவும்இடம்-குயில் கூவுமிடமாயிருப்பதும், மயில் – மயில்கள், ஆலும் - ஆடுகிற, இடம் - இடமாயிருப்பதும், மழுவாள் உடைய-மழுவாளினையுடைய, கடிகொள்புனல்-நறுமணங் கொண்ட கங்கைநீரை, சடைகொண்ட - சடையிலேற்றுக் கொண்ட, நுதல் - நெற்றியையுடைய, கறைகண்டன் - விஷகண்டத்தை யுடையவனது, இடம் - இடமாயிருப்பதும், பிறைத்துண்டம் - சந்திரகண் டத்தை, முடி - திருமுடியிலணிந்த, செடிகொள் - குற்றத்தைக் கொண்ட, வினைப்பகை - வினைப்பகைவனுகிய சிவபிரான், தீரும் இடம் - தீர்ந்திருக்கு மிடமாயிருப்பதும், திரு ஆகும் இடம் - செல்வஞ் சேருமிடமாயிருப்பதும், திரு - திருவானவள், மார்பு அகலாத-மார்பைவிட்டு நீங்காத, அடிகள் இடம் - சுவாமியினிடமாயிருப்பதும், அழல்வண்ணன் இடம் - நெருப்புநிறமுள்ள வனது இடமாயிருப்பதும், கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக்கச்சியநே கதங்காபதமே எ-று.

(பொ-ரை.) கொடிகளின் மீதிருந்து குயில் கூவுமிடமா யிருப்பதும் மயில்களாடுகிற இடமாயிருப்பதும். மழுவாளினையுடைய நறுமணங்கொண்ட கங்கைநீரை சடையிலேற்றுக் கொண்ட நெற்றியையுடைய விஷகண்டத் தையுடையவனது இடமாயிருப்பதும் சந்திரகண்டத்தை திருமுடியிலணிந்த குற்றத்தைக்கொண்ட வினைப்பகைவனுகிய சிவபிரான் தீர்ந்திருக்குமிடமா யிருப்பதும் செல்வஞ்சேருமிடமாயிருப்பதும் திருவானவள் மார்பைவிட்டு நீங்காத சுவாமியினிடமா யிருப்பதும் நெருப்புநிறமுள்ளவனது இடமாயிருப் பதும் கலிக்கச்சியநேகதங்காபதமே.

(கு-ரை.) குயில்கூவல் மயிலாடல் முதலிய நிகழாநிற்க, சிவபெருமான் எழுந்தருளியிருக்குமிடம் கலிக்கச்சி அநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) இடை ஏழனுருபு. ஆலல் - ஆடல். வினைப்பகை பணிப்பகை போல நின்றது. (3)

கொங்குநுழைத்தனவண்டறைகொன்றையுங்
கங்கையுந்திங்களுஞ்சூடுஞ்சடை
மங்குனுழைமலைமங்கையைநங்கையைப்
பங்கினிற்றங்கவுவந்தருள்செய்
சங்குகுழைச்செவிகொண்டருவித்
திரள்பாயவியாத்தழல்போலுடைத்த
மங்கைமழுத்திகழ்கையனிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) வண்டு அறை - வண்டுகள் சத்திக்கிற, கொங்குநுழைத்தன்ன தேனைநுழைத்து வைத்தாற்போன்ற, கொன்றையும் - கொன்றைமலரையும், கங்கையும் - கங்கையையும், திங்களும் - சந்திரகண்டத்தையும், சூடும் — தரித்த, சடை - சடாபாரத்தையுடைய, மங்குல்நுழை - மேகங்கள் தவழ்கின்ற, மலைமங்கையை - பார்வதியாகிய, நங்கையை - பெண்ணை, பங்கினில்தங்கு - பாகத்தில் தங்கும்படி, உவந்து அருள்செய் - மகிழ்ந்தருள்கிற, சங்குகுழை செவிகொண்டு - சங்கக்குழையைச் செவியிலணிந்து, அருவித்திரள்பாய் — அருவிக்கூட்டம் பாய்கின்ற, அவியாதழல்போல - அவியாத நெருப்புப்போல, உடை - உடைத்தாயிருக்கிற, தம்-தமது, அங்கை - அகங்கையில், மழுநிகழ் - மழு விளங்குகிற, கையன் - திருக்கரத்தையுடையவனாகிய சிவபிரானது இடம் - இடமானது, கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) வண்டுகள் சத்திக்கிற தேனைநுழைத்து வைத்தாற்போன்ற கொன்றைமலரையும் கங்கையையும் சந்திரகண்டத்தையும் தரித்த சடாபாரத்தையுடைய மேகங்கள் தவழாநின்ற பார்வதியாகிய பெண்ணை பாகத்தில் தாங்கும்படி மகிழ்ந்தருள்கிற சங்கக்குழையைச் செவியிலணிந்து அருவிக்கூட்டம் பாய்கின்ற அவியாதநெருப்புப்போல உடைத்தாயிருக்கிற தமது அகங்கையில் மழு விளங்குகிற திருக்கரத்தை யுடையவனாகிய சிவபிரானது இடமானது கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) கொன்றைமலர் மாலை முதலியவற்றையுடைய சிவபிரானுக் கிடமாயிருப்பது கலிக்கச்சி அநேகதங்காபதமேயென்பதாம்.

(வி-ரை.) கொங்கு - மணமுமாம். நங்கை-குணபூர்த்தியுள்ளவள். தழல்-நெருப்பு. மங்கையை என்பதில் ஐ சாரியை. (4)

பைத்தபடத்தலையாடரவம்பயில்கின்ற
விடம்பயிலப்புகுவார்
சித்தமொருநெறிவைத்தவிடந்திகழ்கின்ற
விடந்திருவானடிக்கே
வைத்தமனத்தவர்பத்தர்மனங்கொள
வைத்தவிடமழுவாளுடைய
அத்தனிடமழல்வண்ணனிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) பைத்த - பசுமையாகிய, படத்தலை - படத்தோடு கூடிய தலையையுடைய, ஆடு அரவம் - ஆடுகிற பாம்புகள், பயில்கின்ற - நெருங்குகிற, இடம் - இடமும், பயிலப்புகுவார் - வசிக்கப்புகும்வார், சித்தம் - தமது மனத்தை, ஒரு நெறிவைத்த — ஒருவழியில் வைத்த, இடம் - இடமும், திகழ்கின்ற

இடம்-விளங்குகிற இடமும், திருவான் அடிக்கே-திருவுடையவனாகிய சிவபிரானது திருவடியின் கண்ணே, வைத்தமனத்தவர் - மனம்வைத்தவராகிய, பத்தர்மனம் கொள்ளவைத்த இடம் - பத்தர்மனம் பதித்த இடமும், மழுவாள் உடைய அத்தன் இடம் - மழுவாளினையுடைய எமது தந்தையினிடமும், அழல் வண்ணன் இடம் - தழல்நிறத்தனிடமும், கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) பசுமையாகிய படத்தோடுகூடிய தலையையுடைய ஆடுகிற பாம்புகள் நெருங்குகிற இடமும் வசிக்கப்புகுவோர் தமது மனத்தை ஒருவழியில்வைத்த இடமும் விளங்குகிற இடமும் திருவுடையவனாகிய சிவபிரானது திருவடியின் கண்ணே மனம்வைத்தவராகிய பத்தர்மனம் பதித்த இடமும் மழுவாளினையுடைய எமது தந்தையினிடமும் தழல் நிறத்தனிடமும் கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) பைத்தபடத்தலை யாடரவம் பயிலிடமாய் இறைவனிருத்தற்கிடமாயிருப்பது கலிக்கச்சியநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) ஒருநெறியென்றது - பொறிவழிசெல்லாது இறைவன் திருவடியாகிய ஓரிடத்தை. திரு - கடையிலாச்செல்வம். (5)

தண்டமுடைத்தருமன் றமரென் றமரைச்
செயும்வன் றுயர்தீர்க்குமிடம்
பிண்டமுடைப்பிறவித் தலைநின் று
நினைப்பவராக்கையைநீக்குமிடங்
கண்டமுடைக்கருநஞ்சைநுகர்ந்த
பிரானதிடங்கடலேழுகடந்
தண்டமுடைப்பெருமானதிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) தண்டம் உடை - தண்டாயுதத்தையுடைய, தருமன்தமர் - யமபடர், என்தமரைசெய்யும் - என்னுறவினரைச் செய்யும், வல்துயர்தீர்க்கும் - வலிய துன்பத்தையொழிக்கிற, இடமும் - இடமும், பிண்டம் உடை - சரீரத்தையுடைய, பிறவித்தலைநின்று - பிறவியிடத்துநின்று, நினைப்பவர் - நினைப்பவரது, ஆக்கையை - சரீரத்தை, நீக்கும் இடம் - ஒழிக்கிற இடமும், கண்டம் உடை - கண்டத்தில் உடைத்தாயிருக்கிற, கருநஞ்சை - கரியவிடத்தை, நுகர்ந்த - உண்ட, பிரானது-உபகார சீலனது, இடம் - இடமும், கடல் எழுகடந்து - எழுகடலையுந் தாண்டி, அண்டம் உடை - எல்லா வுலகங்களையுமுடைய, பெருமானது இடம் - பெருமானது இடமும், கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) தண்டாயுதத்தையுடைய யமபடர் என்னுறவினரைச்செய்யும் வலியதுன்பத்தை யொழிக்கிற இடமும் சரீரத்தையுடைய பிறவியிடத்து நின்று நினைப்பவரது சரீரத்தை ஒழிக்கிற இடமும் கண்டத்தில் உடைத்தாயிருக்கிற கரியவிடத்தை உண்டவுபகாரசீலனது இடமும் எழுகடலையுந்தாண்டி எல்லா வுலகங்களையுமுடைய பெருமானது இடமும் கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை) யமபடர் செய்யும் துன்பத்தை யொழித்தல் முதலியவற்றைச் செய்யும் இறைவற்கிடமாகியிருப்பது கலிக்கச்சியநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) தண்டம் - தண்டித்தற் குரிய வோராயுதம். தமர் - படர். பிறவித்தலையென்பதில் தலை எழனுருபு. நுகர்தல் - உண்டல். (6)

கட்டுமயக்கமறுத்தவர்கைதொழுதேத்து
மிடங்கதிரோனொளியால்
விட்டவிடம்விடையூர்தியிடங்குயிற்
பேடைதன்சேவலோடாடுமிட
மட்டுமயங்கியவிழ்ந்தமலரொரு
மாதவியோடுமணம்புணரு
மட்டபுயங்கப்பிரானதிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) கட்டு - பிறவிக்கட்டுக் கேதுவாகிய, மயக்கம் - மயக்கத்தை, அறுத்தவர் - அறுத்தவராகிய துறவோர், கைதொழுது - கைகூப்பி வணங்கி, ஏத்தும் - துதிக்கிற, இடம் - இடமும், கதிரோன் ஒளியால் - சூரியனொளியால், விட்ட - நிருமித்த, இடம் - இடமும், விடையூர்தி - இடபவாகனனது, இடம் - இடமும், குயில்பேடை - குயிற்பேடு, தன்சேவலோடு - தன் சேவலுடன், ஆடும் - புணர்கின்ற, இடம் - இடமும், மட்டு - தேன், மயங்கி - பொருந்தி, அவிழ்ந்த - விரிந்த, மலர் - மலரானது, ஒருமாதவியோடு - ஒரு குருக்கத்தியோடு, மணம்புணரும் - மணம்புணர்கின்ற, அட்டபுயங்கப் பிரானது இடம் - திருவட்ட புயங்கப் பெருமானது இடமும், கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) பிறவிக்கட்டுக் கேதுவாகிய மயக்கத்தை அறுத்தவராகிய துறவோர் கைகூப்பி வணங்கி துதிக்கிற இடமும் சூரியனொளியால் நிருமித்த இடமும் இடபவாகனனது இடமும் குயிற்பேடு தன் சேவலுடன் புணர்கின்ற இடமும் தேன் பொருந்தி விரிந்த மலரானது ஒரு குருக்கத்தியோடு மணம் புணர்கின்ற திருவட்ட புயங்கப் பெருமானது இடமும் கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) கட்டு மயக்க மறுத்தவர் கைதொழு தேத்துதல் முதலிய செய்கைகள் நிகழ்தற் கிடமாயிருப்பது கலிக்கச்சியநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) கட்டு மயக்க மறுத்தவர்-ஞானியர். ஆடுதல் – புணர்தல். மயங்கல் - கலத்தல் எனினுமாம். மாதவி வசந்தமல்லிகைக்கொடியெனக் கொண்டு மணம்புணரும் என்பதற்கு மணம் வீசுமென் றுரைத்தலுமாம் (7)

புல்லியிடந்தொழு துய்துமெனுதவர்
தம்புரமூன் றும்பொடிபடுத்த
வில்லியிடம்விரவா துயிருண் ணும்வெங்
காலனைக்காற்கொடுவீந்தவியக்
கொல்லியிடங்குளிர்மா தவிமவ்வல்குரா
வகுளங்குருக்கத்திபுன்னை
யல்லியிடைப்பெடைவண்டுறங்குங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை) புல்லி - ஆன்மகோடிக ளெல்லாவற்றுள்ளும் பொருந்து வோனது, இடம் - இடமும், தொழுது-வணங்கி, உய்தும் - பிழைப்போம், என்னுதவர் - என்று நினையாதவாது, புரம்மூன்றும் - முப்புரங்களையும், பொடிபடுத்த - நீருக்கின, வில்லி - வில்லையுடையவனது, இடம் - இடமும், விரவாது - கலவாமல், உயிர் உண்ணும் வெம்காலனை - உயிருண்ணும் கொடிய காலனை, கால்கொடு - திருவடியால், வீந்து அவிய - இறந்துபட, கொல்லி - கொன்றவனது, இடம் - இடமும், குளிர்மாதவி - குளிர்ந்த வசந்த மல்லிகை, மவ்வல் - முல்லை, குரா - குரவம், வகுளம் - மகிழ், குருக்கத்தி - குருக்கத்தி, புன்னை - புன்னை, (இவற்றின்) அல்லியிடை - அகவிதழ்களில், பெடைவண்டு உறங்கும் - பெண் வண்டு தூங்குகிற, கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(போ-ரை.) ஆன்மகோடிக ளெல்லாவற்றுள்ளும் பொருந்துவோனது இடமும் வணங்கி பிழைப்போம் என்று நினையாதவாது முப்புரங்களையும் நீருக்கின வில்லையுடையவனது இடமும் கலவாமல் உயிருண்ணும் கொடிய காலனை திருவடியால் இறந்துபடக் கொன்றவனது இடமும் குளிர்ந்த வசந்த மல்லிகை முல்லை குரவம் மகிழ் குருக்கத்தி புன்னை (இவற்றின்) அகவிதழ்களில் பெண்வண்டு தூங்குகிற கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) ஆன்மகோடிக ளெல்லாவற்றுள்ளும் பொருந்துவோனாகிய சிவபிரான் முதலியோர்க் கிடமாயிருப்பது கலிக்கச்சியநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) புல்லல்- பொருந்தல். விரவல் - கலத்தல். விரவாது என்றது பகைத்து என்றபடி. வீதல் - இறத்தல். அல்லி - அகவிதழ் - (உள்ளிதழ்) (8)

சங்கையவர்புணர் தற்கரியான்றள
வெனகையாடவிராமிகுசீர்
மங்கையவண்மகிழச்சுடுகாட்டிடை
நட்டநின்றாடியசங்கரனே
யங்கையினனலேந்துமவன்கனல்சே
ரொளியன்னதோர்பேரகலத்
தங்கையவன் னுறைகின்றதடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) சங்கையவர் - ஐயமுள்ளவர், புணர்தற்கு அரியான்-அடைதற் கரியவன், தளவு என் - முல்லையரும்பென்று சொல்லுதற்குரிய, நகையாள் - பல்லையுடையவளும், தவிரா மிகுசீர்-நீங்காத மிக்கசிறப்பினையுடைய, மங்கை-மங்கைப் பருவமுடையவளுமாகிய, அவள் - அந்தவுமாதேவியானவள், மகிழ-களிக்க, சுடுகாட்டிடைநின்று-மயானத்தினின்று, நட்டம் ஆடிய - நடநமாடிய, சங்கரன்-சிவபிரான், எய் அங்கையில் - பொருந்திய வுள்ளங்கையில், அனல் ஏந்துமவன் - நெருப் பேந்துவோன், கனல்சேர் - நெருப்பினிடத் துள்ள, ஒளி அன்னது - ஒளி போல்வதாகிய, ஓர்பேர் அகலத்து-பெரிய திரு மார்பினோடு கூடிய, அம்கையவன்—அழகிய திருக்கரத்தையுடையவன், உறைகின்ற - வாழ்கின்ற, இடம் - இடம், கலிக்கச்சியநேகதங்காபதமே - கலிக் கச்சியநேகதங்காபதமே எ-று.

(போ-ரை.) ஐயமுள்ளவர் அடைதற் கரியவன், முல்லையரும்பென்று சொல்லுதற்குரிய பல்லையுடையவளும் நீங்காத மிக்க சிறப்பினையுடைய மங்கைப்பருவ முடையவளுமாகிய அந்த வுமாதேவியானவள் களிக்க மயானத்தினின்று நடநமாடிய சிவபிரான், பொருந்திய வுள்ளங்கையில் நெருப் பேந்துவோன், நெருப்பினிடத்துள்ள ஒளிபோல்வதாகிய பெரிய திருமார்பினோடு கூடிய அழகிய திருக்கரத்தையுடையவன் வாழ்கின்ற இடம் கலிக் கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) ஐயமுள்ளவர் அடைதற் கருமை முதலியவற்றையுடைய சிவ பெருமானுக் கிடமாயிருப்பது கலிக்கச்சி அநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) மங்கைப்பருவம் - பன்னிரண்டுவயதுள்ள பருவம். சங்கரன் - உயிர்களுக்கிதஞ்செய்பவன் என்னும் பொருடருவதோர் வடசொல். அகலம்—மார்பு. (9)

வீடுபெறப்பலவூழிகணின்றுநினைக்கு
மிடம்வினைதீருமிடம்
பீடுபெறப்பெரியோர்திடங்கொண்டு
மேவினர்தங்களைக்காக்குமிடம்

பாடுமிடத்தடியான்புகழூரனுரைத்தவிம்
மாலைகள்பத்தும்வல்லார்
கூடுமிடஞ்சிவலோகனிடங்கலிக்
கச்சியனேகதங்காபதமே.

(ப-ரை.) வீடுபெற - வீட்டினையடைய, பலவூழிகள் நின்று நினைக்கும் இடம்-நெடுங்காலமிருந்து நினைத்தற்குரிய இடமும், வினைதீரும் இடம் - வினையொழியுமிடமும், பீடுபெற - பெருமையடைய, பெரியோர்திடங்கொண்டு-பெரியோர் உறுதிகொண்டு, மேவினர் தங்களைக்காக்கும் இடம் - அடைந்தோரைக் காக்குமிடமும், பாடுமிடத்து-பாடுமிடத்து,அடியான் புகழூரன் உரைத்த-அடியானாகிய சுந்தரன் சொன்ன, இப்பத்தும் வல்லார் கூடுமிடம்-இப் பத்துப்பாடலும் கற்று வல்லவர் கூடுமிடமும், சிவலோகன் இடம் - சிவலோகனது இடமும், கலிக்கச்சி அநேகதங்காபதமே - கலிக்கச்சியநேகதங்காபதமே எ-று.

(பொ-ரை.) வீட்டினையடைய நெடுங் காலமிருந்து நினைத்தற்குரிய இடமும் வினையொழியு மிடமும் பெருமையடைய பெரியோர் உறுதிகொண்டு அடைந்தோரைக் காக்குமிடமும் பாடுமிடத்து அடியானாகிய சுந்தரன் சொன்ன இப் பத்துப்பாடலும் கற்று வல்லவர் கூடுமிடமும் சிவலோகனது இடமும் கலிக்கச்சியநேகதங்காபதமே.

(க-ரை.) வீடு பேறு முதலிய பலனைத்தருமிடமாவது கலிக்கச்சி அநேகதங்காபதமே யென்பதாம்.

(வி-ரை.) திடம் - மனவுறுதி. சிவலோகம் - சிவபுரம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது. சுவாமிபெயர்-காமேசுவரர்.

---

## திருப்பூவணம்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திருவுடையார் திருமாலயனும்
உருவுடையாருமையாளையோர்பாகம்
பரிவுடையாரடைவார்வினைதீர்க்கும்
புரிவுடையாருறைபூவணமீதோ.

(ப-ரை.) திருவுடையார் - ஐசுவரியமுடையவர், திருமால் அயனும் - திருமாலினையும் பிரமனையும், உரு உடையார் - தமது திருவுருவிலுடையவர், உமையாளை - உமையவளை, ஓர்பாகம் - ஒருபங்கில், பரிவு உடையார் -

விரும்புதலையுடையவர், அடைவார் - தம்மையடைப்பவராது, வினைதீர்க்கும் - வினையை யொழிக்கின்ற, புரிவு உடையார் - அருளுடையவர், (அவர்) உறை - வாழ்கின்ற, பூவணம் - திருப்பூவணமென்னுந் திருப்பதி, ஈதோ - இது தானோ எ-று.

(பொ-ரை.) ஐசுவரிய முடையவர், திருமாலினையும் பிரமனையும் தமது திருவுருவிலுடையவர், உமையவளை ஒருபங்கில் விரும்புதலையுடையவர், தம்மையடைப்பவராது வினையையழிக்கின்ற அருளுடையவர், (அவர்) வாழ்கின்ற திருப்பூவணமென்னுந் திருப்பதி யிதுதானோ.

(க-ரை.) திரு முதலியவற்றையுடைய இறைவர்வாழ்கின்ற திருப்பூவண மென்னுந் திருப்பதியிதுதானோ வென்பதாம்.

(வி-ரை.) திரு என்றது கடையிலாச்செல்வம். ஆல் என்னும் மூன்ற னுருபு இங்கு இரண்டனுருபின் பொருள் பயந்து நின்றது. உரு-திருமேனி. வினை - இருவினை. புரிவு - பரிவு என்பன தொழிற் பெயர்கள். (1)

எண்ணியிருந்துங்கிடந்துநடந்து
மண்ணலெனநினைவார்வினைதீர்ப்பார்
பண்ணிசையார்மொழியார்பலர்பாடப்
புண்ணியனுறைபூவணமீதோ.

(ப-ரை.) எண்ணி - நினைத்து, இருந்தும் கிடந்தும் நடந்தும்—, அண்ணல் என - அண்ணலே யென்று, நினைவார் - நினைப்பவராது, வினை - வினைகளை, தீர்ப்பார் - ஒழிக்கிறவரும், பண் இசை - பண்ணோடு பொருந்தின, ஆர் - அரிய, மொழியார் - மொழியையுடையவராகிய மாதர், பலர்பாட - பலர்நின்று பாடாநிற்க, புண்ணியனுர் - புண்ணியராய் வீற்றிருப்பவருமாகிய சிவபிரானுர், உறை - வாழ்கின்ற, பூவணம்-திருப்பூவணமென்னுந் திருப்பதி, ஈதோ - இதுதானோ எ-று.

(பொ-ரை.) நினைத்தும் இருந்தும் கிடந்தும் அண்ணலேயென்று நினைப் பவராது வினைகளை யொழிக்கிறவரும், பண்ணோடு பொருந்தின அரியமொழி யையுடையவராகிய மாதர் பலர்நின்று பாடாநிற்க, புண்ணியராய் வீற்றிருப்ப வராகிய சிவபிரானுர் வாழ்கின்ற திருப்பூவண மென்னுந் திருப்பதி இது தானோ.

(க-ரை.) எக்காலத்து மறவாது நினைப்பவராது வினைகளை யொழிக்கும் இறைவரது திருப்பூவண மிதுதானோ வென்பதாம்.

(வி-ரை.) இருப்பினுங் கிடப்பினு நடப்பினும் மறத்தலாகாதென்பதை வற்புறுத்தற்கு எண்ணியென முற்கூறினர். அண்ணல்-அண்மைவிளி, பெரு மையிற் சிறந்தோன் என்பது பொருள். புண்ணியனுர் - அறவுருவினர். "அறவாழியந்தணன்" என்றூர் பிறரும். (2)

தெள்ளியபேய்பலபூதமவற்றோடு
நள்ளிருணட்டமதாடல்நவின்றோர்
புள்ளுவராகுமவர்க்கவர்தாமும்
புள்ளுவனாருறைபூவணமீதோ.

(ப-ரை.) தெள்ளிய - தெளிவாகிய, பலபேய்பூதம் அவற்றொடு - பல பேய்களும் பூதங்களுமாகிய அவற்றோடு, நள்இருள் - நடுராத்திரியில், நட்டம் ஆடல் - நடனமாடுதலை, நவின்றோர்-கற்றவரும், புள்ளுவர் ஆகும் அவர்க்கு - புள்ளுவராவார்க்கு, அவர்தாமும் - அவரும், புள்ளுவனார் - புள்ளுவராயிருப்பவரும் ஆகிய (சிவபிரானார்) உறை-வாழ்கின்ற, பூவணம்-திருப்பூவணமென்னுந் திருப்பதி, ஈதோ - இதுதானோ எ-று.

(பொ-ரை.) தெளிவாகிய பலபேய்களும் பூதங்களுமாகிய அவற்றோடு நடுராத்திரியில் நடனமாடுதலைக் கற்றவரும், புள்ளுவராவார்க்கு அவரும் புள்ளுவராயிருப்பவருமாகிய சிவபிரானார் வாழ்கின்ற திருப்பூவணமென்னுந் திருப்பதி இதுதானோ.

(க-ரை.) பேய் பூதங்களோடு நடனஞ் செய்பவரும் புள்ளுவர்க்குப் புள்ளுவருமாகிய சிவபிரானாரது பூவணமீதோ வென்பதாம்.

(வி-ரை.) தெள்ளிய-தெளிந்தெடுக்கப்பட்ட. நட்டமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. நவிலல் - கற்றல். புள்ளுவர் - வஞ்சகர். வேடம் என்றலுமொன்று. நயந்தோர் - பயின்றோர் என்பன பாடாந்தரங்கள். "நள்ளிருளினட்டம் பயின்றாடுநாதனே" என்றார் மணிவாசகரும். (3)

நலனுடைமான்மறிகையதுதெய்வக்
கனலுடைமாமழுவேந்தியோர்கையில்
அனலுடையாரழகார்தருசென்னிப்
புனலுடையாருறைபூவணமீதோ.

(ப-ரை.) நலன் உடை - நன்மையையுடைய, மான்மறி - மான்கன்றானது, கையது - ஒருகையினிடத்தது, ஓர்கையில் - ஒருகையில், தெய்வம் - தைவிகமுள்ள, கனல் உடை - நெருப்பையுடைய, மாமழு ஏந்தி - பெரிய மழுவைத்தாங்கி, அனல் உடையார் - நெருப்புருவாயிருப்பவர், அழகு ஆர் தரு - அழகு பொருந்திய, சென்னி - திருமுடியில், புனல் உடையார் - கங்கையையுடையவர், (அவ்விறைவர்) உறை - வாழ்கின்ற, பூவணம்-திருப்பூவணமென்னுந் திருப்பதி ஈதோ - இதுதானோ. எ-று.

(பொ-ரை.) நன்மையையுடைய மான்கன்றானது ஒருகையினிடத்தது, ஒரு கையில், தைவிகமுள்ள நெருப்பையுடைய பெரியமழுவைத்தாங்கி நெருப்

புருவாகியிருப்பவர், அழகுபொருந்திய திருமுடியில் கங்கையை யுடையவர் (அவ்விறைவர்) வாழ்கின்ற திருப்பூவண மென்னுந் திருப்பதி இதுதானோ.

(க-ரை.) மான்கன்று முதலியவற்றைத் தாங்குவோராகிய சிவபிரானர் வாழ்கின்ற பூவணமீதோ வென்பதாம்.

(வி-ரை.) நலன் - அழகு எனினும் பொருந்தும். ஆர்தரு ஒரு சொல், இதற்குப் பகுதி ஆர்தா. (4)

நடையுடைநல்லெருதேறுவர்நல்லார்
கடைகடைதோறிடுமின்பலியென்பார்
துடியிடைநன்மடவாளொடுமார்பிற்
பொடியணிவாருறைபூவணமீதோ.

(ப-ரை.) நடை உடை - விரைநடையுள்ள, நல் எருது - நல்ல இடபத்தின் மேல், ஏறுவர் - ஏறுநிற்பர், நல்லார் - மாதர்களுடைய, கடை கடை தோறு - வாயில்கள்தோறும் போய், பலியிடுமின் என்பார் - பிக்ஷையிடுங்கள் என்பர், துடி இடை-உடுக்கைபோலும் இடையையுடைய, நல்மடவாளொடு-நல்லமாதோடு கூடி, மார்பில் - திருமார்பில், பொடி அணிவார்-வெண்பொடி தரிப்பார், (அவ்விறைவர்) உறை - வாழ்கின்ற, பூவணம் - திருப்பூவணமென்னுந் திருப்பதி, ஈதோ - இதுதானோ எ-று.

(பொ-ரை.) விரைநடையுள்ள நல்ல இடபத்தின்மேல் ஏறுவர், மாதர்களுடைய வாயில்கடோறும்போய் பிக்ஷையிடுங்கள் என்பர். உடுக்கைபோலும் இடையையுடைய நல்ல மாதோடு கூடி மார்பில் வெண்பொடி தரிப்பர் (அவ்விறைவர்) வாழ்கின்ற திருப்பூவணமென்னுந் திருப்பதி இதுதானோ.

(க-ரை.) இடபமூர்தல் முதலிய இயல்புகளுள்ள சிவபிரானர் வாழ்கின்ற பூவண மீதோ வென்பதாம்.

(வி-ரை.) நடையென்றது ஈண்டு விரைநடையைக் குறித்தது. விரை நடையுடைமைபற்றியே அதனை நல்லெருது என்றார். நல்லார் என்றது தாருகாவனத் திருடியர் பன்னியரை. துடியிடை நல் மடவாள் என்றது உமாதேவியை. பொடி - விபூதி. (5)

மின்னனையாள்திருமேனிவிளங்கவோர்
தன்னமர்பாகமதாகியசங்கரன்
முன்னினையார்புரமூன்றெரியூட்டிய
பொன்னனையானுறைபூவணமீதோ.

(ப-ரை.) மின் அனையாள் - மின் கொடியை நிகர்த்தவளாகிய வுமாதேவியானவள், திருமேனி விளங்க-தன் திருமேனி விளங்கும்படி, தன் - தனது,

ஓர் அமர்பாகம் ஆகிய - ஒரு விரும்பத்தக்க பாகத்தி லுடைத்தாகிய, சங்கரன் - சுககரன், முன் - முற்காலத்தில், நினையார் - பகைவரது, புரம்மூன்று- முப்புரங்களை, எரி ஊட்டிய - எரியை யுண்பித்த, பொன் அனையான் - பொன்னை நிகர்த்தவன், (அவன்) உறை - வாழ்கின்ற, பூவணம்-திருப்பூவணமென்னுந் திருப்பதி, ஈதோ - இதுதானோ எ-று.

(பொ-ரை.) மின் கொடியை நிகர்த்தவளாகிய வுமாதேவியானவள் தன் திருமேனியில் விளங்கும்படி தனது ஒரு விரும்பத்தக்க பாகத்தி லுடைத்தாகிய சங்கரன், முற்காலத்தில் பகைவரது முப்புரங்களை எரியை யுண்பித்த பொன்னை நிகர்த்தவன் (அவன்) வாழ்கின்ற திருப்பூவணமென்னுந் திருப்பதி இதுதானோ.

(க-ரை.) உமாசஹிதனாகிய த்ரிபுராந்தகன் வாழ்கின்ற பூவணமீதோ வென்பதாம்.

(வி-ரை.) திருமேனி விளங்கவென மேல்வருதலால். மின்னனையாள் என்றது உமாதேவியை யுணர்த்திற்று. அமர்தல் - விரும்புதல். நினையார் - மதியாதவர் (பகைவர்). எரி-நெருப்பு. எரியூட்டிய-நெருப்புக்கிரையாக்கின. ()

**மிக்கிறையேயவன் றுன்மதியாலிட**
**நக்கிறையேவிரலாலிறவூன்றி**
**நெக்கிறையேநினைவார் தனிநெஞ்சம்**
**புக்குறைவானுறைபூவணமீதோ.**

(ப-ரை.) மிக்க இறை எயவன் - மிகுந்த தலைமைப்பாட்டினை யுடையவனாகிய ராவணனது, துன்மதி - கெடுபுத்தி, ஆலிட - நடுங்கும்படி, இறையே நக்கு - சிறிதே நகைத்து, இற - நெரியும்படி, விரலால் ஊன்றி - விரல்களாலழுத்தி, இறை நெக்கு நினைவார் - சிறிது மனம்நெகிழ்ந்து நினைவாரது, தனி நெஞ்சம் - ஒப்பற்ற மனத்தில், புக்கு உறைவான் - புகுந்து வாழ்வோனாகிய சிவபிரான், உறை - வாழ்கின்ற, பூவணம்-திருப்பூவண மென்னுந் திருப்பதி, ஈதோ - இதுதானோ எ-று.

(பொ-ரை.) மிகுந்த தலைமைப்பாட்டினை யுடையவனாகிய ராவணனது கெடுபுத்தி நடுங்கும்படி சிறிதே நகைத்து நெரியும்படி விரல்களா லழுத்தி, சிறிது மனநெகிழ்ந்து நினைவாரது ஒப்பற்ற மனத்தில் புகுந்து வாழ்வோனாகிய சிவபிரான் வாழ்கின்ற திருப்பூவணமென்னுந் திருப்பதி இதுதானோ.

(க-ரை.) இராவணனை மலைக்கீழ் விழ விரலாலழுத்தி, அடியார் மனத்தில் வாழ்கின்ற சிவபிரானது பூவண மீதோ வென்பதாம்.

(வி-ரை.) மிக்க இறை மிக்கிறை யெனத் தொகுத்தலாயிற்று. ஆலல் - அசைதலுமாம். மிகு நகு நெகு புகு என்னும் பகுதிகளிரட்டி இறந்தகாலங் காட்டின. இறைமை இறையெனத் தொகுத்தல் பெற்றது. (7-8-9.)

*சீரின்மிகப்பொலியுந்திருப்பூவண*
*மாரவிருப்பிடமாவுறைவானை*
*ஊரனுரைத்தசொன்மாலைகள்பத்திவை*
*பாரிலுரைப்பவர்பாவமறுப்பரே.*

(ப-ரை.) சீரின் - சிறப்பினால், மிக பொலியும் - மிகவும் விளங்குகிற, திருப்பூவணம் - திருப்பூவணமென்னுந் திருப்பதியானது, ஆர - மிகுதியாக, இருப்பிடமா உறைவானை - இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவனாகிய சிவபிரானை, ஊரன் - சுந்தரன், உரைத்த-சொன்ன, சொல்மாலைகள் - சொன்மாலைகளாகிய, இவைபத்து-இவை பத்தினையும், பாரில் உரைப்பவர் - இவ்வுலகத்திற் சொல்லுவோர், பாவம் அறுப்பர் - தம் பாவங்களைச் சேதிப்பர் எ-று.

(பொ-ரை.) சிறப்பினால் மிகவும் விளங்குகிற திருப்பூவண மென்னுந் திருப்பதியானது மிகுதியாக இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவனாகிய சிவபிரானை, சுந்தரன்சொன்ன சொன்மாலைகளாகிய இவை பத்தினையும் இவ்வுலகத்திற் சொல்லுவோர் தம் பாவங்களைச் சேதிப்பர்.

(கு-ரை.) திருப்பூவணத்தெம்பிரானைச் சுந்தரன் புகழ்ந்துரைத்த இப் பத்துப் பாடலையு மோதுவோர் தமது பாவங்களை யொழித்துக் கொள்வர் என்பதாம்.

(வி-ரை.) சீரின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருட்டு. உறைதல் – வாழ்தல். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பூவணநாதர். தேவியார்-மின்னாம்பிகை.

---

## திருநாட்டுத்தொகை

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

*வீழக்காலனைக்கால்கொடுபாய்ந்தவிலங்கலான்*
*கூழையேறுகந்தானிடங்கொண்டதுங்கோவலூர்*
*தாழையூர்தகடூர்தக்களூர்தருமபுரம்*
*வாழைகாய்க்கும்வளர்மருகல்நாட்டுமருகலே.*

(ப-ரை.) வீழ - விழும்படி, காலனை - யமனை, கால்கொடுபாய்ந்த-காலாலுதைத்த, விலங்கலான்-மலையையுடையவன், கூழை - மந்தகதியையுடைய, ஏறு - இடபத்தை, உகந்தான் - விரும்பினவனாகிய சிவபிரான், இடம்கொண்

டது-இடமாகக்கொண்டிருப்பது, கோவலூர் - திருக்கோவலூர், தாழையூர் - திருத்தாழையூர் - தகளூர் - திருத்தகளூர், தக்களூர் - திருத்தக்களூர், தருமபுரம் - திருத்தருமபுரம், வாழை காய்க்கும்-வாழை இடையறாது காய்க்கின்ற, வளர் - விருத்தியைத் தருகிற, மருகல் - திருமருகல், நாட்டுமருகல் - திருநாட்டுமருகல் எ-று.

(பொ-ரை.) விழும்படி யமனைக் காலாலுதைத்த மலையையுடையவன், மந்தகதியையுடைய இடபத்தை விரும்பினவனாகிய சிவபிரான் இடமாகக்கொண்டிருப்பது திருக்கோவலூர், திருத்தாழையூர், திருத்தகளூர், திருத்தக்களூர், திருத்தருமபுரம், வாழை இடையறாது காய்க்கின்ற, விருத்தியைத்தருகிற திருமருகல் திருநாட்டுமருகல்,

(கு-ரை.) யமனை யுதைத்தவனும் கைலாசபதியுமாகிய சிவபிரான் விரும்புமிடங்கள் கோவலூர் தகளூர் முதலியனவென்பதாம்.

(வி-ரை.) கொடு - மூன்றாமவன் சொல்லுருபு. விலங்கல் - மலை, அது இங்கு கைலாயமலையைக் குறித்தது. கூழை - மந்த நடை. ஏறு - இடபம். (1)

அண்டத்தண்டத்தினப்புறத்தாடுமமுதனூர்
தண்டந்தோட்டந்தண்டங்குறைதண்டலையாலங்காடு
கண்டன்முண்டல்கள்சூழ்கழிப்பாலைகடற்கரை
கொண்டல்நாட்டுக்கொண்டல்குறுக்கைநாட்டுக்குறுக்கையே.

(ப-ரை.) அண்டத்து அண்டத்தின் - எல்லா அண்டங்களுக்கும், அப்புறத்து - அப்புறத்தே, ஆடும் - திருநடனஞ்செய்கிற, அமுதன் - அமுதனது, ஊர் - ஊர்களாயிருப்பன, தண்டந் தோட்டம் - திருத்தண்டந்தோட்டம், தண்டங்குறை - திருத்தண்டங்குறை, தண்டலை - திருத்தண்டலை, ஆலங்காடு - திருவாலங்காடு, கண்டல் முண்டல்கள்சூழ் - தாழை முதலிய முட்செடிகள் சூழ்ந்த, கழிப்பாலை - திருக்கழிப்பாலை, கடற்கரை - கடற்கரையிலுள்ள, கொண்டல் - திருக்கொண்டல், நாட்டுக்கொண்டல் - திருநாட்டுக்கொண்டல், குறுக்கை - திருக்குறுக்கை, நாட்டுக்குறுக்கை - திருநாட்டுக்குறுக்கை எ-று.

(பொ-ரை.) எல்லா அண்டங்களுக்கும் அப்புறத்தே நடனஞ்செய்கிற அமுதனது ஊர்களாயிருப்பன, திருத்தண்டந்தோட்டம், திருத்தண்டங்குறை, திருத்தண்டலை, திருவாலங்காடு, தாழை முதலிய முட்செடிகள் சூழ்ந்த திருக்கழிப்பாலை, கடற்கரையிலுள்ள திருக்கொண்டல், திருநாட்டுக்கொண்டல், திருக்குறுக்கை, திருநாட்டுக்குறுக்கை.

(கு-ரை.) சிவபிரானுக்கு இடங்களாயிருப்பன தண்டந் தோட்டமுதலியவென்பதாம்.

(வி-ரை.) அமுதன் - முத்தியளிப்பவன். இறவாதவன் - அமுதவுருவன். கண்டல் - தாழை. முண்டல் - முட்செடி. (2)

மூலனூர்முதலாயமுக்கண்ணன்முதல்வனூர்
நாலனூர்நரையேறுவந்தேறியநம்பனூர்
கோலநீற்றன்குற்றாலங்குரங்கணின்முட்டமும்
வேலனூர்வெற்றியூர்வெண்ணிக்கூற்றத்துவெண்ணியே.

(ப-ரை.) மூலன் ஊர் - மூலகாரணனாகிய சிவபிரானது ஊர், முக்கண்ணன் - முக்கண்ணன் என்று சொல்லப்படுகிற, முதன்வன் ஊர் - தலைவனது ஊர், நாலன் ஊர் - சதுர்வேதப்ரதிபாத்யனாகிய சிவபிரானது ஊர், நரை ஏறு - வெள்ளிடபத்தின்மீது, உவந்து ஏறிய - மகிழ்ந்து ஏறின, நம்பன் ஊர்- சிவபிரானது ஊர், கோலநீற்றன் - அழகிய திருநீற்றையுடையவனது, குற்றாலம்-திருக்குற்றாலமும், குரங்கணின் முட்டமும்-திருக்குரங்கணின் முட்டமும், வேலனூர் - திருவேலனூர், வெற்றியூர் - திருவெற்றியூர், வெண்ணி - திருவெண்ணியோடு, கூற்றத்து வெண்ணி-திருக்கூற்றத்து வெண்ணி எ-று.

(போ-ரை.) மூலகாரணனாகிய சிவபிரானது ஊர் முக்கண்ணன் என்று சொல்லப்படுகிற தலைவனது ஊர் சதுர்வேதப்ரதிபாத்யனாகிய சிவபிரானது ஊர் வெள்ளிடபத்தின்மீது மகிழ்ந்து ஏறின சிவபிரானது ஊர் அழகிய திருநீற்றையுடையவனது ஊர் திருக்குற்றாலமும் திருக்குரங்கணின் முட்டமும் திருவேலனூர் திருவெற்றியூர் திருவெண்ணியோடு திருக்கூற்றத்துவெண்ணி.

(க-ரை) முக்கண்ணனது ஊர்கள் மூலனூர் முதலியன வென்பதாம்.

(வி-ரை.) மூலன் - காரணன். நரை - வெள்ளைநிறம். (3)

தேங்கூருந்திருச்சிற்றம்பலமுஞ்சிராப்பள்ளி
பாங்கூரெங்கள்பிரானுறையுங்கடம்பந்துறை
பூங்கூரும்பரமன்பரஞ்சோதிபயிலுமூர்
நாங்கூர்நாட்டுநாங்கூர்நறையூர்நாட்டுநறையூரே.

(ப-ரை.) தேங்கூரும்-திருத்தேங்கூரும், திருச்சிற்றம்பலமும்-திருத்தில்லையும், சிராப்பள்ளி - திருச்சிராப்பள்ளியும், பாங்கு ஊர் - நன்மைபொருந்திய, எங்கள்பிரான் - எங்கள்தலைவன், உறையும்-வாழ்கின்ற, கடம்பந்துறை-திருக்கடம்பந்துறை, பூகூரும் - பொலிவுமிகுந்த, பரமன் - மேலானவன், பரஞ்சோதி - பேரொளியையுடையவன், பயிலும் ஊர் - பழகுகிறவூர், நாங்கூர் - திருநாங்கூர், நாட்டுநாங்கூர்-திருநாட்டுநாங்கூர், நறையூர்-திருநறையூர், நாட்டுநறையூர் - திருநாட்டுநறையூர் எ-று.

(போ-ரை.) திருத்தேங்கூரும் திருத்தில்லையும் திருச்சிராப்பள்ளியும் நன்மைபொருந்திய எங்கள் தலைவன் வாழ்கின்ற திருக்கடம்பந்துறை பொலிவு மிகுந்த மேலானவன் பேரொளியையுடையவன் பழகுகிறவூர் திருநாங்கூர் திருநாட்டுநாங்கூர் திருநறையூர் திருநாட்டுநறையூர்.

12

(க-ரை.) எங்கள் பிரானுறையுமிடங்கள், திருச்சிற்றம்பலம் சிராப்பள்ளி முதலியன வென்பதாம்.

(வி-ரை.) தேம்கூர் எனப் பிரித்து - வாசனைமிகுந்த எனினுமாம். (4)

குழலைவென்றமொழிமடவாளையோர்கூறனு
மழலையேற்றுமணாளனிடந்தடமால்வரைக்
கிழவன்கீழைவழிப்பழையாறுகிழையமு
மிழலைநாட்டுமிழலைவெண்ணிநாட்டுமிழலையே.

(ப-ரை.) குழலைவென்ற - குழலோசையைவென்ற, மொழி - சொல்லையுடைய, மடவாளை - உமாதேவியை, ஓர்கூறன் ஆம் - ஒருபாகனுகிய, மழலை ஏற்று - இளவெருதினையுடைய, மணாளன் - மணவாளன், இடம் - இடமானது, தடம் - பெரிய, மால் - பெருமைபொருந்திய, வரைக்கிழவன் - மலையரையன், கீழைவழி - கீழைவழியிலுள்ள, பழையாறு-திருப்பழையாறு, கிழையமும் - திருக்கிழையமும், மிழலை - திருமிழலையும், நாட்டுமிழலை - திருநாட்டுமிழலையும், வெண்ணிநாட்டுமிழலை - திருவெண்ணிநாட்டு மிழலையும் எ-று.

(பொ-ரை.) குழலோசையை வென்ற சொல்லையுடைய உமாதேவியை ஒரு பாகனுகிய இளவெருதினையுடைய மணவாளன் இடமானது பெரிய பெருமைபொருந்திய மலையரையன் கீழைவழியிலுள்ள திருப்பழையாறு திருக்கிழையமும் திருமிழலையும் திருநாட்டுமிழலையும் திருவெண்ணிநாட்டு மிழலையும்.

(க-ரை.) உமாதேவி பங்கனுகிய சிவபிரானிடங்கள் பழையாறு முதலியவாமென்பதாம்.

(வி-ரை.) குழல் - ஆகுபெயர். குழலைவென்றமொழி யென்றமையால் இன்சொல் எனக்கொள்க. மழலை - இளமை. வரைக்கிழவன்-இமயமலை. (5)

தென்னூற்கைம்மைத்திருச்சுழியல்திருக்கானப்பேர்
பன்னூர்புக்குறையும்பரமர்க்கிடம்பாய்ஞால
மென்னூரெங்கள்பிரானுறையுந்திருத்தேவனூர்
பொன்னூர்நாட்டுப்பொன்னூர்புரிசைநாட்டுப்புரிசையே.

(ப-ரை.) தென்னூற்கு-தென்சொல்லுக்கு, ஐம்மை - அழகாகிய, திருச்சுழியல்—, திருக்கானப்பேர்—, பன் - சொல்லப்பட்ட, ஊர் - ஊர்களிலெல்லாம், புக்கு உறையும்-புகுந்து வாழ்கின்ற, பரமர்க்கு-மேலானவர்க்கு, இடம் இடமானது, பாய் ஞாலம் என் ஊர் - திருப்பாய்ஞாலமென்கிறவூர், எங்கள் பிரான் உறையும் - எங்கள் சிவபெருமான் வாழ்கின்ற, திருத்தேவனூர் - திருத்தேவனூர், பொன்னூர் - திருப்பொன்னூர், நாட்டுப் பொன்னூர் -

திருநாட்டுப்பொன்னூர், புரிசை நாட்டுப் புரிசையே - திருப்புரிசையும் திரு நாட்டுப் புரிசையுமே எ-று.

(பொ-ரை.) தென் சொல்லுக்கு அழகாகிய திருச்சுழியல் திருக்கானப் பேர், சொல்லப்பட்ட ஊர்களிலெல்லாம் புகுந்து வாழ்கின்ற மேலானவர்க்கு இடமானது திருப்பாய் ஞாலமென்கிறவூர் எங்கள் சிவபெருமான் வாழ் கின்ற திருத்தேவனூர் திருப்பொன்னூர் திருநாட்டுப் பொன்னூர் திருப்புரி சையும் திருநாட்டுப் புரிசையுமே.

(க-ரை) எம்பிரானுக்கு உறைவிடமாயிருப்பன திருச்சுழியல் முதலியன வென்பதாம்.

(வி-ரை.) தென்சொல் - தமிழ்மொழி. இது தென்றிசையில் வழங்கி வருதலால் இதனை இப்பெயரா னழைப்பாராயினர். (6)

ஈழநாட்டுமாந்தோட்டந்தென்னாட்டிராமேச்சுரஞ்
சோழநாட்டுத்துருத்திநெய்த்தானந்திருமலை
யாழியூரனநாட்டுக்கெல்லாமணியாகிய
கீழையில்லரனார்க்கிடங்கிள்ளிகுடியதே.

(ப-ரை.) கீழை இல் - கீழ்மையையுடையனல்லாத, அரனார்க்கு - சிவ பிரானார்க்கு, இடம் - இடங்களாயிருப்பன, ஈழநாட்டு மாந்தோட்டம் - ஈழ நாட்டிலுள்ள திருமாந் தோட்டம், தென்னாட்டு இராமேச்சுரம் - தென்னாட்டி லுள்ள ராமேச்சுரம், சோழநாட்டுத் துருத்தி - சோழ நாட்டிலுள்ள திருத் துருத்தி, நெய்த்தானம் - திருநெய்த்தானம், திருமலை - திருவேங்கடம், ஆழி ஊர்-கடல்சூழ்ந்த, அன்ன - அத்தன்மையவாகிய, நாட்டுக் கெல்லாம் - ஊர் களுக்கெல்லாம், அணி ஆகிய - அழகாகிய, கிள்ளிகுடி - திருக்கிள்ளிகுடி எ-று.

(பொ-ரை.) கீழ்மையை யுடையனல்லாத சிவபிரானார்க்கு இடங்களா யிருப்பன ஈழநாட்டிலுள்ள திருமாந்தோட்டம் தென் நாட்டிலுள்ள ராமேச் சுரம் சோழநாட்டிலுள்ள திருத்துருத்தி திருநெய்த்தானம் திருவேங்கடம் கடல்சூழ்ந்த அத்தன்மையவாகிய ஊர்களுக்கெல்லாம் அழகாகிய திருக் கிள்ளிகுடி.

(க-ரை.) எம்பிரானுக் கிடமாயிருப்பன ஈழநாட்டு மாந்தோட்ட முதலி யனவாமென்பதாம்.

(வி-ரை.) கீழையில்லான் என்பதில் இன்மை உடைமைக்கு மறுதலை யாகிய இன்மை. திருமலை - ஸ்ரீசைலம், (திருப்பதிஸ்தலம்.) (7)

நாளுநன்னிலந்தென்பனையூர்வடகஞ்சனூர்
நீளநீள்சடையானெல்லிக்காவுநெடுங்களங்
காளகண்டனுறையுங்கடைமுடிகண்டியூர்
வேளூர்நாட்டுவேளூர்விளத்தூர்நாட்டுவிளத்தூரே.

(ப-ரை.) நீள நீள் சடையான்-மிகுதியாக நீண்ட சடையையுடையவன், காளகண்டன் - விஷகண்டன், நாளும் - எந்நாளும், நன்னிலம் - திரு நன்னிலம், தென்பனையூர் - திருத்தென்பனையூர், வடகஞ்சனூர்-திருவடகஞ்சனூர், நெல்லிக்காவு - திருநெல்லிக்காவு, நெடுங்களம் - திருநெடுங்களம், கடைமுடி-திருக்கடைமுடி, கண்டியூர் - திருக்கண்டியூர், வேளூர் - திருவேளூர்,நாட்டு வேளூர் - திருநாட்டுவேளூர், விளத்தூர் - திருவிளத்தூர், நாட்டுவிளத்தூர் - திருநாட்டு விளத்தூர், (என்பவற்றுள்) உறைவன் - வாழ்வான் எ-று.

(பொ-ரை.) மிகுதியாக நீண்ட சடையையுடையவன் விஷகண்டன் எந்நாளும் திருநன்னிலம் திருத்தென்பனையூர் திருவடகஞ்சனூர் திருநெல்லிக்காவு திருநெடுங்களம் திருக்கடைமுடி திருக்கண்டியூர் திருவேளூர் திருநாட்டுவேளூர் திருவிளத்தூர் திருநாட்டுவிளத்தூர் என்பவற்றுள் வாழ்வான்.

(கு-ரை.) சிவபெருமான் திருநன்னில முதலான இடங்களில் வாழ்வான் என்பதாம்.

(வி-ரை.) நீளநீள் என்றது மிக நீண்ட என்றபடி. காளம் - விஷம். (8)

தழலுமேனியன்றையலோர்பாகமமர்ந்தவன்
றொழலுந்தொல்வினை தீர்க்கின்றசோதிசோற்றுத்துறை
கழலுங்கோவையுடையவன் காதலிக்கும்பிடம்
பழனம்பாம்பணிபாம்புரந்தஞ்சைதஞ்சாக்கையே.

(ப-ரை.) தழலும் - எரிகிற, மேனியன் - திருமேனியை யுடையவன், தையல் - உமாதேவியானவள், ஓர்பாகம் - ஒருபங்கில், அமர்ந்தவன் - அமர்ந்திருக்கப்பெற்றவன், தொழலும் - தன்னை வணங்குதலும், தொல்வினை – பழவினையை, தீர்க்கின்ற - ஒழிக்கின்ற, சோதி-ஒளியுருவாயிருப்பவன், கழலும்-கழன்ற, கோவை உடையவன் - பொறிகளையுடையவன், காதலிக்கும் இடம்–விரும்பு மிடங்களாவன, சோற்றுத்துறை - திருச்சோற்றுத்துறை, பழனம் - திருப்பழனம், பாம்பணி - திருப்பாம்பணி, பாம்புரம் - திருப்பாம்புரம், தஞ்சை - திருத்தஞ்சை, தஞ்சாக்கை - திருத்தஞ்சாக்கை எ-று.

(பொ-ரை.) எரிகிற திரு மேனியையுடையவன், உமாதேவியானவள் ஒருபங்கில் அமர்ந்திருக்கப் பெற்றவன், தன்னை வணங்குதலும் பழவினையை யொழிக்கின்ற ஒளியுருவாயிருப்பவன், கழன்ற பொறிகளையுடையவன் விரும்புமிடங்களாவன, திருச்சோற்றுத்துறை திருப்பழனம் திருப்பாம்பணி திருப்பாம்புரம் திருத்தஞ்சை திருத்தஞ்சாக்கை.

(கு-ரை.) தழலுமேனிய னுறையுமிடங்கள் திருச்சோற்றுத்துறை முதலியவாமென்பதாம்.

(வி-ரை.) தையல் - கைபுனையப்பட்டவள், அலங்கரிக்கப்பட்டவள். கழலுங்கோவையுடையவன் என்றது பொறிவாயிலைந்தவித்தான் என்றபடி. (9)

மைகொள்கண்டனெண்டோளன்முக்கண்ணன்வலஞ்சுழி
பைகொள்வாளரவாட்டித்திரியும்பரமனூர்
செய்யில்வாளைகள்பாய்ந்துகளுந்திருப்புன்கூர்நன்
றையன்மேயபொழிலணியாவடுதண்டுறையதே.

(ப-ரை.) மைகொள் கண்டன் - கருமையைக் கொண்ட கண்டத்தை யுடையவன், எண்தோளன் - எட்டுப்புயங்களை யுடையவன், முக்கண்ணன் - மூன்று கண்களையுடையவன், பைகொள் - படத்தைக்கொண்ட, வாள் அரவு ஆட்டி திரியும்-ஒளியையுடைய பாம்பையாட்டித் திரிகிற, பரமன்-மேலோனது, ஊர் - ஊர்களாவன, வலஞ்சுழி - திருவலஞ்சுழி, செய்யில்-வயல்களில், வாளைகள் பாய்ந்து உகளும்-வாளைகள் பாய்ந்து துள்ளுகிற, திருப்புன்கூர்—, நன்று - நன்றாக, ஐயன் மேய - இறைவனெழுந்தருளியிருக்கிற, பொழில் அணி - சோலையழகு வாய்ந்த, ஆவடுதண்டுறை - குளிர்ந்த திருவாவடு துறை எ-று.

(பொ-ரை.) கருமையைக்கொண்ட கண்டத்தையுடையவன் எட்டுப்புயங்களையுடையவன், மூன்றுகண்களை யுடையவன், படத்தையுடைய பாம்பை யாட்டித்திரிகிற, மேலோனது ஊர்களாவன, வலஞ்சுழி வயல்களில் வாளைகள் பாய்ந்து துள்ளுகிற திருப்புன்கூர் நன்றாகஇறைவனெழுந்தருளியிருக்கிற சோலையழகுவாய்ந்த திருவாவடுதுறை யென்பவைகளாம்.

(க-ரை.) கருங்கண்டனுக் கிடமாயிருப்பன' திருவலஞ்சுழி, திருப்புன்கூர் முதலியவா மென்பதாம்.

(வி-ரை.) மையென்றது விடக்கறையை. பை - படம். வாள் - ஒளி. செய் - வயல். உகளல் - துள்ளல். ஐ—அழகாதலால் ஐயன் என்பதற்கு அழகன் என் றுரைத்தலுமாம். (10)

பேணிநாடதனிற்றிரியும்பெருமான்றனை
யாணையாமடியார்கடொழப்படுமாதியை
நாணியூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்சொற்
பாணியாலிவையேத்துவார்சேர்பரலோகமே.

(ப-ரை.) நாடதனில் - திருநாடுகளை, பேணி - விரும்பி, திரியும் - திரிகிற, பெருமான்றனை - பெருமானை, ஆணை ஆம் - அவனாணைக்கமைந்து நடக்கிற, அடியார்கள் - தொண்டர்களால், தொழப்படும் - வணங்கப்படுகிற, ஆதியை - முதல்வனை, நாணி - வெள்கி, ஊரன் - சுந்தரன், வனப்பகை—, அப்பன் —, வன்றொண்டன்—, சொல் இவை-சொல்லாகிய இவற்றை,பாணியால் ஏத்துவார் - பண்களோடு துதிக்கவல்லவர், பரலோகம் சேர்-பரலோகத்தை யடைவர் எ-று.

(பொ-ரை.) திருநாடுகளை விரும்பித்திரியும் பெருமானை, அவனாணைக் கமைந்து நடக்கிற தொண்டர்களால் வணங்கப்படுகிற முதல்வனை, வெள்கி,

ஊரன், வனப்பகைவன் ஞெண்டன் சொல்லாகிய இவற்றைப் பண்களோடு துதிக்கவல்லவர் பரலோகத்தை யடைவர்.

(க-ரை.) தொண்டர்களால் வணங்கப்படு முதல்வனை ஊரன் சொன்ன பத்துப் பாடலையுங் கற்று வல்லவர் பரலோகத்தை யடைவரென்பதாம்.

(வி-ரை.) பேணல் - விரும்பல். திருநாடு - திருப்பதி. ஆணை - கட்டளை. பாணி - பண். சேர் - சேர்வர். இது "கொள்வாருங்கள் வருநோர்" என்றாற்போல்வது. (11)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்துறையூர்

பண்-தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மலையாரருவித்திரண்மாமணியுந்திக்
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கலையாரல்குற்கன்னியராடுந்துறையூர்த்
தலைவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

(ப-ரை.) மலை ஆர் - மலைகளில் நிறைந்துள்ள, அருவித்திரள் - அருவிக் கூட்டங்கள், மா - பெரிய, மணி உந்தி-மணிகளைத்தள்ளி, குலை ஆர கொணர்ந்து எற்றி-திரளாகக் கொண்டுவந்தெறிந்து, ஓர் - ஒப்பற்ற, பெண்ணை-பெண்ணையாற்றின், வடபால் - வடபக்கத்தில், கலை ஆர் - மேகலைபொருந்திய, அல்குல் - அல்குலையுடைய, கன்னியர் - இளம் பெண்கள், ஆடும் - நீராடுகிற, துறை-துறைகள் சூழ்ந்த, துறையூர்-திருத்துறையூரிலெழுந்தருளிய, தலைவா-முதல்வனே, உன்னைவேண்டி - உன்னை யடையவேண்டி, தவநெறிகொள்வேன் - தவநெறியை மேற்கொள்வேன் எ-று.

(பொ-ரை.) மலைகளில் நிறைந்துள்ள அருவிக்கூட்டங்கள் பெரிய மணிகளைத்தள்ளித் திரளாகக் கொண்டுவந் தெறிந்து ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபக்கத்தில் மேகலை பொருந்திய அல்குலையுடைய இளம்பெண்கள் நீராடுகிற துறைகள் சூழ்ந்த திருத்துறையூரி லெழுந்தருளிய முதல்வனே, உன்னையடையவேண்டித் தவநெறியை மேற்கொள்வேன்.

(க-ரை.) திருத்துறையூர்த் தலைவனே, உன்னையடையவேண்டி நான் தவநெறியை மேற்கொள்வேன் என்பதாம்.

(வி-ரை.) மாமணி - மாணிக்கம் எனினுமாம். கலை - மேகலை, இது மாதரிடையணிகளி லொன்று. வேண்டிக்கொள்வேன் றவநெறியென்பதற்கு

தபோமார்க்கத்தை யெனக்கருள்செய்யும்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றுரைப்பினுமாம. (1)

மத்தமதயானையின்வெண்மருப்புந்தி
முத்தங்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
பத்தர்பயின்றேத்திப்பரவுந்துறையூர்
அத்தாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

(ப-ரை.) மத்தமதயானையின்-மத்தமதயானையின், வெள் மருப்பு உந்தி-வெண்மையாகிய கொம்புகளைத்தள்ளி, முத்தம் - முத்துக்களை, கொணர்ந்து எற்றி - கொண்டுவந் தெறிந்து, ஓர் பெண்ணைவடபால் - ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபக்கத்தில், பத்தர் - பத்திமான்கள், பயின்று - நெருங்கி நின்று, ஏத்திப்பரவும்-துதித்துவணங்குகிற, துறையூர் அத்தா - திருத்துறையூர் அத்தனே, உன்னை வேண்டிக் கொள்வேன் தவநெறி – உன்னை யடையவேண்டி தவநெறியை மேற்கொள்வேன் எ-று.

(பொ-ரை.) மத்தமதயானையின் வெண்மையாகிய கொம்புகளைத்தள்ளி முத்துக்களை கொண்டுவந்தெறிந்து ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபக்கத்தில் பத்திமான்கள் நெருங்கிநின்று, துதித்துவணங்குகிற திருத்துறையூர் அத்தனே, உன்னை யடையவேண்டித் தவநெறியை மேற்கொள்வேன்.

(க-ரை.) திருத்துறையூர் அத்தனே, உன்னை வேண்டிக் கொள்வேன் தவநெறியென்பதாம்.

(வி-ரை.) மத்தமதயானை - மிகு மதங்கொண்ட யானை. முத்தம் முக்தம் என்னும் வடசொற்றிரிபு. (2)

கந்தங்கமழ்காரகில்சந்தனமுந்திச்
செந்தண்புனல்வந்திழிபெண்ணைவடபான்
மந்திபலமாநடமாடுந்துறையூர்
எந்தாயுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

(பரை.) கந்தம் கமழ் – சுகந்தம் பரிமளிக்கிற, கார் அகில்-அகிற்கட்டைகளையும், சந்தனம் - சந்தனமரங்களையும், உந்தி - தள்ளி, தண்–குளிர்ச்சியாகிய, செம்புனல் – செவந்தநீரானது, வந்து இழி – வந்திறங்குகிற, பெண்ணை வடபால் - பெண்ணையாற்றின் வடபக்கத்தில், பலமந்தி-பலகுரங்குகள், மாநடம் ஆடும் - பெரிய நடநஞ்செய்கிற, துறையூர் எந்தாய்-திருத்துறையூர் எந்தையே, உன்னை வேண்டிக்கொள்வேன் தவநெறி – உன்னையடைய வேண்டித் தவநெறியை மேற்கொள்வேன் எ-று.

(பொ-ரை) சுகந்தம் பரிமளிக்கின்ற கரிய அகிற்கட்டைகளையும் சந்தநமரங்களையும் தள்ளி குளிர்ச்சியாகிய செவந்த நீரானது வந்திறங்குகிற பெண்ணையாற்றின் வடபக்கத்தில் பல குரங்குகள் பெரிய நடநஞ் செய்கிற திருத்துறையூர் எந்தையே, உன்னை யடையவேண்டித் தவநெறியை மேற்கொள்வேன்.

(க-ரை.) திருத்துறையூர் எந்தையே, உன்னை வேண்டிக்கொள்வேன் தவ நெறி யென்பதாம்.

(வி-ரை.) சந்தம் இங்குச் சுகந்தத்தைக் குறித்தது. சுகந்தம் - நறுமணம். செந்தண்புனல் — புது நீர். (3)

அரும்பார்ந்தனமல்லிகைசெண்பகஞ்சாடிச்
சுரும்பாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கரும்பார்மொழிக்கன்னியராடுந்துறையூர்
விரும்பாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

(ப-ரை.) அரும்பு ஆர்ந்தன - அரும்பு நிறைந்த, மல்லிகை செண்பகம் - மல்லிகை செண்பகங்களை, சாடி-வீசி, சுரும்பு ஆர-வண்டுகள் நிறைந்திருக்க, கொணர்ந்து எற்றி - கொண்டுவந்து வீசி, ஓர் பெண்ணைவடபால் - ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபக்கத்தில், கரும்பு - கருப்பஞ்சாறுபோலும், ஆர் மொழி-அரிய சொற்களையுடைய, கன்னியர் ஆடும் - கன்னியர் மூழ்குகின்ற, துறையூர் - திருத்துறையூரில், விரும்பா - விருப்பனே, உன்னை வேண்டிக் கொள்வேன் தவநெறி - உன்னை யடையவேண்டித் தவநெறியை மேற்கொள் வேன் எ-று.

(பொ-ரை.) அரும்புகள் நிறைந்த மல்லிகை செண்பகங்களை வீசி வண்டுகள் நிறைந்திருக்க கொண்டுவந்து வீசி ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபக்கத்தில் கருப்பஞ்சாறு போலும் அரியசொற்களையுடைய கன்னியர் மூழ்குகின்ற திருத்துறையூரில் விருப்பனே, உன்னை யடையவேண்டித் தவநெறியை மேற் கொள்வேன்.

(க-ரை.) திருத்துறையூர் விருப்பனே, உன்னை வேண்டிக்கொள்வேன் தவநெறி யென்பதாம்.

(வி-ரை.) ஆர்ந்தன - முற்றெச்சம். சாடல் - வீசல். கரும்பார்மொழி- இன்சொல். (4)

மாடார்ந்தனமாவும்பலாக்களுஞ்சாடி
நாடாரவந்தெற்றியோர்பெண்ணைவடபான்
மாடார்ந்தனமாளிகைசூழுந்துறையூர்
வேடாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

(ப-ரை.) மாடு - பக்கங்களில், ஆர்ந்தன-நிறைந்திருப்பனவாகிய, மாவும்- மாமரங்களையும், பலாக்களும் - பலாமரங்களையும், சாடி - எறிந்து, நாடு ஆர வந்து எற்றி - நாடு நிறையவந்து வீசி, ஓர் பெண்ணை வடபால் - ஒப்பற்ற பெண்ணையாற்றின் வடபக்கத்தில், மாடு ஆர்ந்தன - பொன்னொளியன்றனவாகிய, மாளிகை சூழும் - மாளிகைகள் சூழ்ந்த, துறையூர்வேடா - திருத்துறையூர் வேடனே, உன்னை வேண்டிக்கொள்வேன் தவநெறி-உன்னையடையவேண்டித் தவநெறியை மேற்கொள்வேன் எ-று.

ளத்தையுடைய, அரிசிலின் தென்கலைய நல்லூர தனை - அரிசிலாற்றின் தென் கரையிலுள்ள திருக்கலைய நல்லூரை, நண்பு உடைய நன்சடையன் இசை ஞானி சிறுவன் நாவலர்கோன் ஆரூரன் - சுந்தரன், நாவின் - நாவினால் நயந்து உரைசெய் - விரும்பிச்சொன்ன, பண்பயிலும் பத்தும் இவை - பண்போடு கூடின இவை பத்துப்பாடலையும், பத்திசெய்து நித்தம் பாடவல்லார் - பத்தி பண்ணி நாள்தோறும் பாடவல்லவர், அல்லலொடு பாவம் இலர்- துன்பத்துடன் பாவமுமிலராவர் எ-று.

(போ-ரை.) குளிர்ந்த கங்கையையும் வெள்ளிய சந்த்ர கண்டத்தையும் தரித்த செஞ்சடையை யுடையவன், பிரமன் தலையை பிக்ஷாபாத்ரமாகக் கொண்டு, முன்காமரப் பண்பாடிக்கொண்டு திரியுமேலோன் வாழ்கின்ற ஊராகிய நிறைநீர்பாய்கிற வெள்ளத்தையுடைய அரிசிலாற்றின் தென்கரையிலுள்ள திருக்கலையநல்லூரை, நண்பு உடைய நன்சடையன் இசைஞானி சிறுவன் நாவலர்கோன் ஆரூரன் நாவினால் விரும்பிச் சொன்ன பண்போடு கூடின இவை பத்துப் பாடலையும் பத்திபண்ணி நாள்தோறும் பாடவல்லவர் துன்பத்துடன் பாவமுமிலராவர்.

(க-ரை.) நாவலூரன் திருக்கலைய நல்லூர்ப் பரமனைப் பாடிய இப் பத்துப் பாடலையும் தினந்தோறும் பத்தியோடு பாடவல்லார், அல்லலையும் பாவத்தையும் நீக்கவல்லவராவர் என்பதாம்.

(வி-ரை.) ஒழுகுதல் – ஓடுதல். நாவின் என்பதில் இன் மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது. அல்லல் – துன்பம். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அமுதகலைநாதர். தேவியார் - அமுதகலையம்மை.

---

## திருவெண்ணெய்நல்லூருந் திருநாவலூரும்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

**கோவலனான்முகன் வானவர்கோனுங்குற்றேவல்செய்ய**
**மேவலர்முப்புரந்தீயெழுவித்தவனோரம்பினா**
**லேவலனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட**
**நாவலனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.**

(ப-ரை.) கோவலன் - திருமாலும், நான்முகன் - பிரமனும், வானவர் கோனும் – இந்திரனும், குற்றேவல் செய்ய – சிறுதொண்டு செய்ய, மேவலர்- பகைவருடைய, முப்புரம் ஓர் அம்பினால் தீ எழுவித்து அவண் ஏவு அரனார் -

ஒருகணையால் தீ யெழச்செய்து அவ்விடத்தேவின சிவபிரானுர், வெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை ஆளுங்கொண்ட - திருவெண்ணெய் நல்லூரில் வைத்து என்னையடிமைகொண்ட, நாவலனுர்க்கு இடமாவது-திருநாவலூரார்க்கு இடமாயிருப்பது, நற்திருநாவலூரே - நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை.) திருமாலும்பிரமனும் இந்திரனும் சிறுதொண்டு செய்ய, பகைவருடைய முப்புரம் ஒரு கணையால் தீ யெழச் செய்து அவ்விடத்தேவின சிவபிரானுர் திருவெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை யடிமைகொண்ட திருநாவலூரார்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) கோவலன் முதலானோர் வழிபட முப்புரமெரித்து திருவெண்ணெய் நல்லூரிலும் திருநாவலூரிலும் என்னை யாண்டருளின நாவலனுர்க்கிடமாயிருப்பது திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை.) கோவலன் – கண்ணன். வானவர் - தேவர். கோன் - அரசன். ஏவு - ஏவின. நாவலனுர் என்றது சிவபெருமானை. (1)

தன்மையினலடியேனைத்தாமாட்கொண்டநாடசபைமுன்
வன்மைகள்பேசிடவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்
புன்மைகள்பேசவும்பொன்னைத்தந்தென்னைப்போகம்புணர்த்த
நன்மையினர்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

(ப-ரை.) தன்மையினல் - தமது கருணைக் குணத்தாலே, அடியேனை - தொண்டனேனை, தாம் ஆட்கொண்ட நாள் - தாம் அடிமைகொண்ட காலத்தில், சபைமுன்-சபைக்கெதிரே, வன்மைகள் பேசிட-வன் சொற்களைப்பேச, வல் தொண்டன் என்பது-வன்றொண்டனென்பதாகிய, ஓர் வாழ்வு தந்தார் - ஒரு செல்வந்தந்தார், புன்மைகள் பேசவும் - புன்சொற்களைச் சொல்லவும், பொன்னைதந்து - பொன்னைக்கொடுத்து, என்னை - அடியேனை, போகம் புணர்த்த - போகத்திற் பொருந்துவித்த, நன்மையினர்க்கு - நற்குணமுள்ளவர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, நம் திருநாவலூரே – நமது திருநாவலூரே யாம் எ-று.

(பொ-ரை.) தமது கருணைக் குணத்தாலே தொண்டனேனைத் தாம் அடிமை கொண்டகாலத்தில் சபைக்கெதிரே வன் சொற்களைப் பேச வன்றொண்டனென்பதாகிய ஒரு செல்வந்தந்தார், புன் சொற்களைச் சொல்லவும் பொன்னைக் கொடுத்து அடியேனை போகத்திற் பொருந்துவித்த நற்குணமுள்ளவர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) தமது பெருங்கருணையால் என்னை யாட்கொண்டு என் வன்சொற்களைப் பொறுத்து, எனக்கு வன்றொண்டனென்னும் பேர்கொடுத்து, பொன்னுங்கொடுத்து, போகி யாக்கின சிவபெருமானுர்க்கு இடமாவது நம் திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை.) வாழ்வு - செல்வம். நன்மையினர் – புண்ணியனுர். (2)

வேகங்கொண்டோடியவெள்விடையேறியோர்மெல்லியலை
யாகங்கொண்டோர்வெண்ணெய் நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்டார்
போகங்கொண்டார்கடற்கோடியின்மோடியைப்பூண்பதாக
நாகங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

(ப-ரை.) வேகங்கொண்டு ஓடிய வெள்விடை ஏறி-விரைந்தோடிய வெள்ளெருதின்மேலேறி, ஓர் மெல்லியலை-ஒரு பெண்ணை, ஆகம்கொண்டு-தமது திருமேனியில் தரித்து, ஓர்-ஒப்பற்ற வெண்ணெய் நல்லூரில் வைத்து-திருவெண்ணெய் நல்லூரில் வைத்து, என்னை ஆளும்கொண்டார், என்னை யடிமையாகவும் கொண்டார், கடற்கோடியில் - கடற்கோடியூரில், மோடியை - துர்க்கையை, போகங்கொண்டார்-போகஸ்தானமாகக் கொண்டார், நாகம்-பாம்புகளை, பூண்பதாக கொண்டார்க்கு-ஆபரணமாகக் கொண்டவர்க்கு, இடமாவது-இடமாயிருப்பது, நம்திருநாவலூரே-நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை.) விரைந்தோடிய வெள்ளெருதின்மேலேறி ஒரு பெண்ணை தமது திருமேனியில் தரித்து ஒப்பற்ற திருவெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை யடிமையாகவும் கொண்டார், கடற்கோடியூரில் துர்க்கையை போகஸ்தானமாகக் கொண்டார், பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) வெள்விடையேறி, மங்கைபங்கர், என்னை யாட்கொண்டவர், நாகாபரணர், அவர்க்கிடமாவது திருநாவலூரேயாம்.

(வி-ரை.) வேகம்-விரைவு மெல்லியல் அன்மொழித்தொகைக் காரணப் பெயர். இது உமாதேவியைக் குறித்தது. கடற்கோடி-கோடிக்குழகர் என்னுந் திருப்பதி. (3)

அஞ்சுங்கொண்டாடுவராவினிற்சேவினையாட்சிகொண்டார்
தஞ்சங்கொண்டாரடித்தண்டியைத்தாமெனவைத்துகந்தார்
நெஞ்சங்கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்டு
நஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

(ப-ரை.) ஆவினில்-பசுவினிடத்துண்டாகிய, அஞ்சும்கொண்டு ஆடுவர்-ஐந்தினையுங்கொண்டு மூழ்குவர், சேவினை-எருதை, ஆட்சிகொண்டார்-ஆள்வதாகக் கொண்டார், தஞ்சம்கொண்டு-பற்றுக்கோடாகக்கொண்டு, அடியார் - தமது திருவடியை யடைந்த, தண்டியை-தண்டியடிகளை, தாம் என வைத்து-தாமாகவே வைத்து, உகந்தார் நெஞ்சம் கொண்டார்-விரும்பின அன்பர் மனத்தை யிடமாகக்கொண்டார், வெண்ணெய் நல்லூரில் வைத்து - திருவெண்ணெய் நல்லூரில் வைத்து, என்னை யாளுங் கொண்டு-என்னை யடிமையாகவும் கொண்டு, நஞ்சம் கொண்டார்க்கு - விடமுண்டவர்க்கு, இடமாவது-இடமாயிருப்பது, நம்திருநாவலூரே-நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை,) பசுவினிடத்துண்டாகிய ஐந்தினையுங்கொண்டு மூழ்குவர், எருதை ஆள்வதாகக் கொண்டார், பற்றுக்கோடாகக் கொண்டு தமது திருவடியையடைந்த தண்டியடிகளை தாமாகவே வைத்து,விரும்பின அன்பர்மனத்தை யிடமாகக்கொண்டார், திருவெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை யடிமையாகக்கொண்டு விடமுண்டவர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) ஆவினில் அஞ்சுங்கொண்டாடுவாரும், எருதேறுவாரும், தண்டியைச் சாரூபியாக்கினவரும், அன்பர் நெஞ்சி லமர்ந்திருப்பவரும், வெண்ணெய் நல்லூரில் என்னை யாட்கொண்டவரு ், நஞ்சுண்டவருமாகிய சிவபிரானுர்க்கிடமாவது நம்திருநாவலூரேயா மென்பதாம்

(வி-ரை.) ஆவினில் அஞ்சு - பஞ்சகவ்யம். ஆடுதல்-திருவபிடேகமாகக் கோடல். சே-இடபம். ஆட்சி-ஆளல்.தாமெனவைத்தல்-சாரூபங்கொடுத்தல்.

**உம்பரார்கோனைத்திண்டோள்முரித்தாருரித்தார்களிற்றைச்**
**செம்பொனுர்தீவண்ணர்தூவண்ணநீற்றரோராவணத்தால்**
**எம்பிரானுர்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட**
**நம்பிரானுர்க்கிடமாவதுநந்திருநாவலூரே.**

(ப-ரை.) உம்பரார் கோனை-இந்திரனை, திண்தோள் முரித்தார் - வலிய புயத்தை நெரித்தார், களிற்றை உரித்தார் - யானையையுரித்தார், செம்பொனுர்-செம்பொன்னிறத்தார், தீவண்ணர்-நெருப்புருவர், தூவண்ணம்-வெண்ணிறத்தையுடைய, நீற்றர்-திருவெண்ணீற்றை யுடையவர், ஓர் ஆவணத்தால்-ஒரு அடிமைப் பத்திரத்தால், எம்பிரானுர்-எம்பெருமானுர், வெண்ணெய் நல்லூரில் வைத்து-திருவெண்ணெய் நல்லூரில் வைத்து, என்னையாளுங்கொண்ட-என்னை யடிமைகொண்ட, நம்பிரானுர்க்கு - நமது தலைவனுர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, நம் திருநாவலூரே-நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை ) இந்திரனை வலியபுயத்தை நெரித்தார், யானையை யுரித்தார், செம்பொன்னிறத்தார், நெருப்புருவர், வெண்ணிறத்தையுடைய திருவெண்ணீற்றையுடையவர், ஒரு அடிமைப்பத்திரத்தால் எம்பெருமானுர் திருவெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை யடிமைகொண்ட நமது தலைவனுர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) இந்திரனைத் தோள்முரித்தல் முதலிய செயல்களையுடையவராகிய நம்பிரானுர்க்கு இடமாவது நந்திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை.) வண்ணர், நிறமுள்ளவர். ஆவணம் - அடிமைச்சீட்டு. எம்பிரானுர்-எமது தலைவர். (5)

**கோட்டங்கொண்டார்குடமூக்கிலுங்கோவலுங்கோத்திட்டையும்**
**வேட்டங்கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்டார்**
**ஆட்டங்கொண்டார்தில்லைச்சிற்றம்பலத்தேயருக்கனைமுன்**
**நாட்டங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.**

(ப-ரை.) குடமூக்கிலும் கோவலும் கோத்திட்டையும்-திருக்குடமூக்கிலும்திருக்கோவலூரிலும் திருக்கோத்திட்டையிலும், கோட்டம்கொண்டார்-திருக்கோயில்கொண்டவர், வேட்டம்கொண்டு-விருப்பம்கொண்டு, ஆர்-அரிய, வெண்ணெய் நல்லூரில் வைத்து-திருவெண்ணெய் நல்லூரில்வைத்து, என்னையாளுங்கொண்டார் - என்னை அடிமையாகக்கொண்டார், தில்லைச்சிற்றம்பலத்தே ஆட்டங்கொண்டார்-திருத்தில்லையில் நடனங்கொண்டார், அருக்கனை-சூரியனை, முன்-முற்காலத்தில், நாட்டம் கொண்டார்க்கு- கண்பறித்தவர்க்கு, இடமாவது-இடமாயிருப்பது, நம்திருநாவலூரே-நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை.) திருக்குட மூக்கிலும் திருக்கோவலூரிலும் திருக்கோத்திட்டையிலும் திருக்கோயில் கொண்டவர், விருப்பங்கொண்டு அரிய திருவெண்ணெய்நல்லூரில் வைத்து என்னை அடிமையாகக்கொண்டார், திருத்தில்லையில் நடனங்கொண்டார், சூரியனை முற்காலத்தில் கண்பறித்தவர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) குடமூக்கு முதலியவற்றில் கோயில்கொண்டிருத்தல் முதலிய செயல்களை யுடையவர்க் கிடமாவது நந்திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை.) கோட்டம் - கோயில். குடமூக்கு - கும்பகோணம். ஆட்டம்-நடனம். (6)

**தாயவளாய்த்தந்தையாகிச்சாதல்பிறத்தலின்றிப்**
**போயகலாமைத்தன்பொன்னடிக்கென்னைப்பொருந்தவைத்த**
**வேயவனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட**
**நாயகனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.**

(ப-ரை.) தாயவளாய் - தாயாகி, தந்தையாகி-பிதாவாகி, சாதல் பிறத்தல் இன்றி - இறப்புப்பிறப்பில்லாமல், போய் அகலாமை-நீங்கிப்போகாமல், தம் பொன்னடிக்கு - தமது திருவடிக்கே, என்னைப் பொருந்தவைத்த - என்னை யமையவைத்த, வேயவனார் - விண்டுமுத்தர், வெண்ணெய் நல்லூரில்வைத்து - திருவெண்ணெய் நல்லூரில்வைத்து, என்னையாளுங்கொண்ட - என்னை அடிமையாகக்கொண்ட, நாயகனார்க்கு—, இடமாவது-இடமாயிருப்பது, நந்திருநாவலூரே-நந்திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை.) தாயாகி பிதாவாகி இறப்புப்பிறப்பில்லாமல் நீங்கிப்போகாமல் தமது திருவடிக்கே என்னை யமையவைத்த விண்டுமுத்தர், திருவெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை யடிமையாகக்கொண்ட நாயகனார்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) தாய் தந்தை முதலிய உருவங்கொண்டு என்னை யாட்கொண்ட நாயகனார்க்கிடமாவது நந்திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை.) வேய்-மூங்கில். மூங்கிலி லொருகா லவதரித்ததனால் வேயவனார் என்றார். விண்டு-மூங்கில். முத்தர்-முத்துப்போல்பவர். (7)

வாயாடிமாமறையோதியோர்வேதியனாகிவந்து
தீயாடியார்சினக்கேழலின்பின்சென்றோர்வேடுவனாய்
வேயாடியார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நாயாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

(ப-ரை.) வாயாடி மாமறை ஓதி - வாய்திறந்து ஒப்பற்ற வேதமோதி, ஓர் வேதியனாகிவந்து - ஒரு அந்தணனாகிவந்து, தீயாடியார் - அழலாடியார், ஓர் வேடுவனாய் - ஒரு வேடுவனாகி, சினம் கேழலின் பின்சென்று - கோவத்தையுடைய பன்றியின் பின்னேசென்று, வேயாடியார் - விண்டுமூர்த்தர், வெண்ணெய் நல்லூரில்வைத்து - திருவெண்ணெய் நல்லூரில்வைத்து, என்னையாளுங்கொண்ட - என்னையடிமைகொண்ட, நாயாடியார்க்கு - பேயாட்டத்தையுடையவர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, நந்திருநாவலூரே - நமது திருநாவலூரே எ-று.

(பொ-ரை.) வாய்திறந்து ஒப்பற்ற வேதமோதி ஒரு அந்தணனாகிவந்த அழலாடியார், ஒரு வேடுவனாகி கோவத்தையுடைய பன்றியின் பின்னே சென்ற விண்டுமூர்த்தர், திருவெண்ணெய் நல்லூரில்வைத்து என்னையடிமை கொண்ட பேயாட்டத்தை யுடையவர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரே.

(க-ரை.) மறையோதல் முதலிய செயல்களை யுடைய சிவபிரானார்க்கு இடமாவது திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை.) நாயாடியார் - பேயாட்டத்தையுடையவர், பேயோடாடியென்பதும் இவர்க்கோர் திருநாமம். (8)

படமாடும்பாம்பணையானுக்கும்பாவைநல்லாடனக்கும்
வடமாடுமால்விடையேற்றுக்கும்பாகனாய்வந்தொருநாள்
இடமாடியார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நடமாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

(ப-ரை.) படம் ஆடும் பாம்பு அணையானுக்கும் - படமெடுத்தாடுகிற சர்ப்பசயனனுக்கும், பாவைநல்லாள்தனக்கும் - உமாதேவிக்கும், வடம் ஆடும் மால் விடையேற்றுக்கும் - வடம் பூண்டாடுகிற பெரிய இடபவேற்றினுக்கும், பாகனாய்வந்து - ஒருகாலத்தில் பாகனாயெழுந்தருளி, இடம் ஆடியார் - இடப்பக்கத்தில் கொண்டவர், வெண்ணெய் நல்லூரில்வைத்து - திருவெண்ணெய் நல்லூரில்வைத்து, என்னையாளுங்கொண்ட-என்னை யடிமைகொண்ட, நடம் ஆடியார்க்கு - நடனமாடுவோர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, நந்திரு நாவலூரே - நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை.) படமெடுத்தாடுகிற சர்ப்பசயனனுக்கும் உமாதேவிக்கும் வடம் பூண்டாடுகிற பெரிய இடபவேற்றினுக்கும் ஒரு காலத்தில் பாகனாயெழுந்தருளி இடப்பக்கத்தில் கொண்டவர் திருவெண்ணெய் நல்லூரில்

வைத்து என்னையடிமை கொண்ட நடனமாடுவோர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) பாம்பணையான் முதலியோர்க்குப் பாகராய் வந்தவரும் வெண்ணெய் நல்லூரில்வைத் தென்னையாட் கொண்டவருமாகிய சிவபெருமானார்க்கு இடமாவது திருநாவலூரே யென்பதாம்.

(வி-ரை) படமாடும் பாம்பணையான் - விஷ்ணு. வடம்-ஆலிலை. மால்-திருமால். (9)

மிடுக்குண் டென்றோடியோர்வெற்பெடுத்தான்வலியைநெரித்தார்
அடக்கங்கொண்டாவணங்காட்டிநல்வெண்ணெய்யூராளுங்கொண் [டார்
தடுக்கவொண்ணாததோர்வேழத்தினையுரித்திட்டுமையை
நடுக்கங்கண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

(ப-ரை.) மிடுக்கு உண்டென்று ஓடி - தனக்கு வலியுண்டென்றோடி, ஓர் வெற்பு எடுத்தான் வலியை நெரித்தார் - ஒப்பற்ற கைலாய மலையை எடுத்தவனது வலியை யடக்கினவர், அடக்கம்கொண்டு ஆவணம் காட்டி - தாழ்வாகவந்து அடிமையோலையைக் காட்டி, நல்வெண்ணெய்யூர் ஆளுங் கொண்டார்-திருவெண்ணெய்நல்லூரில் என்னை அடிமையாகக் கொண்டவர், தடுக்கவொண்ணாதது ஓர் வேழத்தினை உரித்திட்டு - பிறரால் தடுக்கவொண்ணாததாகிய ஒரு யானையை யுரித்து, உமையை நடுக்கங் கண்டார்க்கு - உமாதேவியை நடுங்கவைத்தவர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, நந்திருநாவலூரே - நமது திருநாவலூரேயாம் எ-று.

(பொ-ரை,) தனக்கு வலிவுண்டென்றோடி ஒப்பற்ற கைலாய மலையையெடுத்தவனது வலியை யடக்கினவர், தாழ்வாக வந்து அடிமை யோலையைக் காட்டி திருவெண்ணெய் நல்லூரில் என்னை யடிமையாகக் கொண்டவர், பிறரால் தடுக்கவொண்ணாததாகிய ஒரு யானையை யுரித்து உமாதேவியை நடுங்கவைத்தவர்க்கு இடமாயிருப்பது நமது திருநாவலூரேயாம்.

(க-ரை.) இராவணன் மிடுக்கடக்கி, வெண்ணெய் நல்லூரில் என்னையாட்கொண்டவராகிய சிவபிரானார்க்கு இடமாவது திருநாவலூரே என்பதாம்.

(வி-ரை.) வெற்பெடுத்தான் என்றது இராவணனை. (10)

நாதனுக்கூர்நமக்கூர்நரசிங்கமுனையரையன்
ஆதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரென்
றோதநற்றக்கவன்றொண்டனாரூரனுரைத்ததமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்பவர்தம்வினைகட்டறுமே.

(ப-ரை ) நாதனுக்கு ஊர்-இறைவனுக்கு ஊர், நமக்கு ஊர்-எமக்கு ஊர், நரசிங்கமுனையரையன்—, ஆதரித்து-விரும்பி, ஈசனுக்கு ஆட்செய்யும் ஊர் - ஈச்சுரனுக்கு அடிமைசெய்யும் ஊர், அணி - அழகாகிய, நாவலூர் - திருநாவ

லூர், என்று ஓத - என்று சொல்லும்படி, நல்-நன்மையாகிய, தக்க-தகுதியை யுடைய, வன்றொண்டன் ஆரூரன் - சுந்தரன், உரைத்த-சொன்ன, தமிழ் - தமிழ்ப்பாடல்களை, காதலித்து - விரும்பி, கற்று கேட்பவர் - கற்றுக் கேட்பவருடைய, வினை - வினைகள், கட்டு அறும் - கட்டோடு அற்றுப்போகும் எ-று.

(பொ-ரை.) இறைவனுக்கு ஊர், எமக்கு ஊர், நரசிங்கமுனையரையன் விரும்பி ஈசனுக்கு அடிமை செய்யும் ஊர், அழகாகிய திருநாவலூர் என்று சொல்லும்படி நன்மையாகிய தகுதியையுடைய சுந்தரன் ஆரூரன் சொன்ன தமிழ்ப் பாடல்களை விரும்பி கற்றுக் கேட்பவருடைய வினைகள் கட்டோடு அற்றுப்போகும்.

(க-ரை.) ஆரூரனாகிய வன்றொண்டன் சொல்லிய இத் தமிழ்ப் பாடல்களைக் கற்பவரும் கேட்பவரும் வினை யொழியப் பெறுவார்க ளென்பதாம்.

(வி-ரை.) ஆதரித்தல்-விரும்புதல். காதலித்தல்-இச்சித்தல். (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவலூர் - நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருநாவலீசுவரர். தேவியார் - சுந்தரவல்லியம்மை.

---

## மூப்பதுமில்லை

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

மூப்பதுமில்லைபிறப்பதுமில்லையிறப்பதில்லைச்
சேர்ப்பதுகாட்டகத்தூரினுமாகச்சிந்திக்கிலல்லாற்
காப்பதுவேள்விக்குடிதண்டுருத்தியெங்கோன்றலைமேல்
ஆர்ப்பதுநாகமறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) மூப்பதும் இல்லை - முதிர்வதுமில்லை, பிறப்பதும் இல்லை—, இறப்பதும் இல்லை—, காட்டகத்து சேர்ப்பது-மயானத்து சேர்க்கப்படுவது, ஊரினும் ஆக-ஊரினும் அதிகமாக, சிந்திக்கில் அல்லால் - நினைத்தாலல்லது, காப்பன வேள்விக்குடி-இவரால் காக்கப்படுவன திருவேள்விக் குடியும், தண்டுருத்தி - திருத்தண்டுருத்தியுமாம், தலைமேல் - சிரமீது, ஆர்ப்பது-கட்டுவது, நாகம் - பாம்பாகும், அறிந்தோம் எல் - இந்தச் செய்தியை யாம் முன்னமே அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாமிவர்க்கு அடிமைப் படமாட்டோம் எ-று.

(பொ-ரை.) முதிர்வதுமில்லை பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை, மயானத்து சேர்க்கப்படுவது ஊரினும் அதிகமாக நினைத்தாலல்லது இவரால் காக்கப்படுவது திருவேள்விக் குடியும் திருத்தண்டுருத்தியுமாம், தலைமேல் கட்டுவது பாம்பாகும் இந்தச் செய்தியை யாம் முன்னமே அறிந்திருப்போமாயின் நாம் இவர்க்கு ஆட்படோம்.

(க-ரை.) திருவேள்விக்குடியும் திருத்தண்டுருத்தியும் இவரால் காக்கப் படுவன, இவர் கட்டுவது பாம்பு முதலியனவாம், இந்தச் செய்தியை யாம் முன்னமே யறிந்திருப்போமாயின் இவர்க்கு யாம் ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) இறப்பது என்பதனீற்றில் எண்ணும்மை சேர்த் துரைக்கப் பட்டது. ஆர்த்தல்-கட்டுதல். (1)

**கட்டக்காட்டினடமாடுவரியாவர்க்குங்காட்சியொண்ணார்**
**சுட்டவெண்ணீறணிந்தாடுவர்பாடுவர்தூயநெய்யால்**
**வட்டக்குண்டத்திலெரிவளர்த்தோம்பிமறைபயில்வார்**
**அட்டக்கொண்டுண்பதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.**

(ப-ரை.) கட்டம் - கஷ்டமான, காட்டில் - மயானத்தில், நடம் ஆடுவர் - நடனமாடுவர், யாவர்க்கும் - எல்லார்க்கும், காட்சி ஒண்ணார் - காணக்கூடாத வர், சுட்ட வெண்ணீறு அணிந்து ஆடுவர்-சுட்ட திருநீறு தரித்து ஆடுவர், பாடு வர்-பாடுதலுஞ்செய்வர், தூய நெய்யால் - பரிசுத்தமான நெய்யினால், வட்டம் - வட்டவடிவாகிய, குண்டத்து - ஓமகுண்டத்தில், எரிவளர்த்து - அக்கினி வளர்த்து, ஓம்பி - காத்து, மறைபயில்வார் - வேத மோதுவோர், அட்ட கொண்டு - சமைத்த (அந்தச்சோற்றை) யேற்று, உண்பது - உண்ணுவதை, அறிந்தோம் எல் - முன்னமே அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்ப டோம் - யாமிவர்க்கு அடிமைப்பட மாட்டோம் ஏ-று.

(பொ-ரை.) கஷ்டமான மயானத்தில் நடனமாடுவர், எல்லார்க்கும் காணக்கூடாதவர், சுட்ட திருநீறுதரித்து ஆடுவர், பாடுதலுஞ் செய்வர், பரி சுத்தமான நெய்யினால் வட்டவடிவாகிய ஓமகுண்டத்தில் அக்கினிவளர்த்து காத்து வேத மோதுவோர் சமைத்த (அந்தச்சோற்றை) யேற்று உண்ணு வதை முன்னமே அறிந்திருப்போமாயின் யாமிவர்க்கு அடிமைப்பட மாட்டோம்.

(க-ரை.) இவர் மயானத்தில் ஆடுதல் முதலிய செய்கைகளை யாம் முன் னமே யறிந்திருப்போமாயின், இவர்க்கு ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) ஓம்புதல் - காத்தல் அட என்பது எதுகை யின்பநோக்கி அட் டவென்றாயிற்று. வேதமோதுவோர் சமைத்த சோறு என்றது அவியுணவை.

**பேருமோராயிரம்பேருடையார்பெண்ணோடாணுமல்லர்**
**ஊருமதொற்றியூர்மற்றையூர்பெற்றவாநாமறியோங்**
**காருங்கருங்கடனஞ்சமுதுண்டுகண்டங்கறுத்தார்க்**
**காரம்பாம்பாவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.**

(ப-ரை.) பேரும் - திருநாமங்களும், ஓர் ஆயிரம்பேர் உடையார் - ஓரா யிரமுடையவர், பெண்ணோடு ஆணும் அல்லர் - பெண்ணும் ஆணுமல்லர், ஊரும் ஒற்றியூர் - ஊரும் ஒற்றியூர், மற்றை ஊர் - மற்றையவூர்கள், பெற்ற ஆறு - பெற்ற வரலாற்றை, நாம் அறியோம் - யாம் அறிந்திலோம், கடல் -

பாற்கடலிற் றோன்றின, காரும் கருநஞ்சு - மிகக்கறுத்த நஞ்சினை, உண்டு - உண்டதனால், கண்டம் கறுத்தார்க்கு - மிடறு கறுத்தவர்க்கு, ஆரம் பாம்பு ஆவது அறிந்தோம் எல் - பாம்பே ஆரமாவதை யாமறிந்தோமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாமிவர்க்கு அடிமைப்பட மாட்டோம் எ-று.

(பொ - ரை.) திருநாமங்களும் ஓராயிரமுடையவர், பெண்ணும் ஆணுமல்லர், ஊரும் ஒற்றியூர், மற்றையவூர்கள் பெற்ற வரலாற்றை யாமறிந்திலோம் பாற்கடலிற் றோன்றின மிகக் கறுத்த நஞ்சினை உண்டதனால் மிடறு கறுத்தவர்க்கு பாம்பே ஆரமாவதை யாமறிந்தோமாயின் யாமிவர்க்கு அடிமைப்பட மாட்டோம்.

(க-ரை.) ஆயிரந் திருநாமங்களை யுடைத்தாதல் முதலியவற்றை யுடையரென்று முன்னமே யறிந்திருப்போமாயின் இவர்க்கு நாம் ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) காருங் கருநஞ்சு என மேலே வருதலால் கடல் என்றது பாற்கடலை யுணர்த்திற்று. (3)

ஏனக்கொம்பும்மிளவாமையும்பூண்டங்கோரேறுமேறிக்
கானக்காட்டிற்றொண்டர்கண்டனசொல்லியுங்காமுறவே
மானைத்தோலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்குமிட்டு
யானைத்தோல்போர்ப்பதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) ஏனம் கொம்பும்-பன்றியின் கொம்பும், இள ஆமையும் - இளமையாகிய ஆமையோடும், பூண்டு-தரித்து, அங்கு - அவ்விடத்து, ஓர் - ஒரு, ஏறும் - எருதின் மீதும், ஏறி - ஆரோகணித்து, கானம் - அரணியத்திலுள்ள, காட்டில் - மயானத்தில், தொண்டர் - அடியார், கண்டன சொல்லியும் - தாம் கண்டவற்றை யெடுத்துச் சொல்லியும், காமுற - விரும்பும்படி, மான் - மானினது, ஐ - அழகிய, தோல் ஒன்று உடுத்து-ஒரு தோலையுடுத்து, புலி தோல்-புலித்தோலை, பியற்கும் இட்டு - பிடரின்மீதுந் தாங்கி, ஆனைதோல் போர்ப்பது - யானைத் தோலையும் போர்த்துக் கொள்வதை, அறிந்தோமேல்- யாம் அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாமிவர்க்கு அடிமைப்படமாட்டோம் எ-று.

(பொ-ரை.) பன்றியின் கொம்பும் இளமையாகிய ஆமையோடும் தரித்து அவ்விடத்து ஒரு எருதின்மீதும் ஆரோகணித்து அரணியத்திலுள்ள மயானத்தில் அடியார் தாம் கண்டவற்றை யெடுத்துச் சொல்லியும், விரும்பும்படி, மானினது அழகிய ஒரு தோலையுடுத்து புலித்தோலை பிடரின்மீதுந் தாங்கி யானைத்தோலையும் போர்த்துக் கொள்வதை யாம் அறிந்திருப்போமாயின் யாமிவர்க்கு அடிமைப்படமாட்டோம்.

(க-ரை.) பன்றிக்கொம்பு முதலியவற்றை யுடையவ ரென்பதை முன்னமே யறிந்திருப்போமாயின் இவர்க்கு நாம் ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) ஆமையோட்டை ஆமையென்றார் ஆகுபெயரான். பியல் - பிடர். காமுறல் - விரும்புதல். (4)

ஊட்டிக்கொண்டுண்பதோரூணிலரூரிடுபிச்சையல்லாற்
பூட்டிக்கொண்டேற்றினையேறுவதேறியோர்பூதந்தம்பாற்
பாட்டிக்கொண்டுண்பவர்பாழிதொறும்பலபாம்புபற்றி
யாட்டிக்கொண்டுண்பதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) ஊர் இடு பிச்சை அல்லால் - ஊரிலுள்ளார் இடுகின்ற பிச்சையேயன்றி, ஊட்டிக்கொண்டு-தம்மிடத்து வருவோரை யுண்பித்து, உண்பது-தாமும் உண்பதாகிய, ஓர் ஊண் இலர் - ஒரு உணவையும், இல்லாதவர், ஏற்றினை - எருதை, பூட்டிக்கொண்டு - விரிகட்டிக்கொண்டு, ஏறுவது - ஏறுவதையும், ஏறி - ஏறினபிறகு, ஓர் - ஒப்பற்ற, பூதம் தம்பால் - பூதங்களிடத்துக் கூடி, பாடிக்கொண்டு - பாடிக்கொண்டு, பலர் பாழி தொறும் - பலர் வீடு தோறும், பிச்சையேற்று-பிச்சையெடுத்து, உண்பவர்-உண்போர், பல பாம்பு பற்றி - பல பாம்புகளைப்பிடித்து, ஆட்டிக்கொண்டு - ஆடுவித்துக்கொண்டு, உண்பது - உண்பதை, அறிந்தோமேல் - அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாமிவர்க்கு அடிமைப்படமாட்டோம் எ-று.

(பொ-ரை.) ஊரிலுள்ளார் இடுகின்ற பிச்சையேயன்றி தம்மிடத்து வருவோரை யுண்பித்து தாமும் உண்பதாகிய ஒரு உணவையும் இல்லாதவர், எருதை விரி கட்டிக்கொண்டு ஏறுவதையும் ஏறின்பிறகு ஒப்பற்ற பூதங்களிடத்துக் கூடி பாடிக்கொண்டு பலர் வீடு தோறும் பிச்சையெடுத்து உண்போர், பல பாம்புகளைப்பிடித்து ஆடுவித்துக்கொண்டு உண்பதை அறிந்திருப்போமாயின் யாமிவர்க்கு அடிமைப் படமாட்டோம்.

(க-ரை.) பிக்ஷைச் சோறுண்டல் முதலிய செய்கைகளை முன்னமே யறிந்திருப்போமாயின் நாம் இவர்க்கு ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) ஏறு - எருது. பாடிக்கொண்டு என்பது எதுகை யின்ப நோக்கி பாட்டிக்கொண்டு என்றாயிற்று. (5)

குறவனார் தம்மகடம்மகனார்மணவாட்டிகொல்லை
மறவனாராயங்கோர்பன்றிப்பின்போவதுமாயங்கண்டீர்
இறைவனாராதியார்சோதியாராயங்கோர்சோர்வுபடா
அறவனாராவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) குறவனார் தம்மகள் - குறப் பெண், தம்மகனார் மணவாட்டி - தம்மகனுக்கு மனைவி, கொல்லை-தினைக் கொல்லையையுடைய, மறவனார் ஆய் - வேடுவராகி, அங்கு - அவ்விடத்து, ஓர் பன்றி பின்போவது - ஒருபன்றியின் பின்னேசெல்வது, மாயம் - மாயச் செயலாம், (அவ்வாறிருப்பினும்) இறைவனார் - தலைவராயிருப்பவர், ஆதியார் - முதல்வராயிருப்பவர், சோதியார்-ஒளியுருவாயிருப்பவர், அங்கு - அவ்வாறிருத்தலில், ஓர் சோர்வுபடா - சிறிதும்

சோர்வையடையாத, அறவனார் ஆவது - அறநெறியை யுடையவராவதை, அறிந் தோமேல் - யாம் அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாமிவர்க்கு அடிமைப்பட மாட்டோம் எ-று.

(பொ-ரை.) குறப்பெண் தம்மகனுக்கு மனைவி, திணைக் கொல்லையை யுடைய வேடுவராகி அவ்விடத்து ஓர் பன்றியின் பின்போவது மாயச் செயலாம், அவ்வாறிருப்பினும் தலைவராயிருப்பவர், முதல்வராயிருப்பவர், ஒளியுருவாயிருப்பவர், அவ்வாறிருத்தலில் சிறிதும் சோர்வடையாத அறநெறியை யுடையவராவதை யாமறிந்திருப்போமாயின் யாமிவர்க்கு அடிமைப் பட மாட்டோம்.

(க-ரை.) தம்மகனார்க்குக் குறப்பெண்ணைக் கொண்டது முதலிய செய்கைகளை முன்னமே யறிந்திருப்போமாயின் நாம் இவர்க் காட்படோம் என்பதாம்.

(வி-ரை.) குறப்பெண் - வள்ளியம்மை. (6)

பித்தரையொத்தொருபெற்றியர்நற்றவையென்னைப்பெற்ற
முத்தவைதம்மனைதந்தைக்குந்தவ்வைக்குந்தம்பிரானார்
செத்தவர்தந்தலையிற்பலிகொள்வதேசெல்வமாகில்
அத்தவமாவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) பித்தரை ஒத்து - பித்தரை நிகர்த்து, ஒரு பெற்றியர் - ஒரு தன்மையை யுடையவர், நல் தவ்வை — நல்ல தாய், என்னை பெற்ற முத்தவை - என்னை யீன்ற பெரிய தாய், தம்மனை தந்தைக்கும் - தமது மனைவியாகிய உமாதேவியின் தந்தைக்கும், தவ்வைக்கும் - தாய்க்கும், தம்பிரானார் — தலைவனார், செத்தவர் தலையில் - இறந்தவரது தலையோட்டில், பலி கொள்வதே செல்வம் ஆகில் - பிச்சை யேற்பதே இவர்க்குச் செல்வமாகில், அ தவமாவது அறிந்தோமேல் - அத்தவமானதை யறிந்தேமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாமிவர்க்கு அடிமைப்படமாட்டோம் எ-று.

(பொ-ரை.) பித்தரை நிகர்த்து ஒரு தன்மையை யுடையவர், நல்லதாய், என்னை யீன்ற பெரிய தாய், தமது மனைவியாகிய உமாதேவியின் தந்தைக்கும் தாய்க்கும் தலைவனார், இறந்தாரது தலையோட்டில் பிச்சையேற்பதே யிவர்க்குச் செல்வமாகில், அத்தவமாவதை யறிந்தேமாயின் யாமிவர்க்கு அடிமைப்பட மாட்டோம்.

(க-ரை.) பித்தரை யொத்திருப்பினும் என்றுமொரு தன்மையா யிருத்தல் முதலிய குணங்களை யுடையவராகிய சிவபெருமானார்க்கு, செத்தவர் தலையோட்டில் இரந்துண்ணும் தொழிலை யறிந்திருப்போமாயின், இவர்க்கு நாம் ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) பெற்றி-தன்மை. முத்தவை - பாட்டியுமாம். பலி-பிச்சை. (7)

உம்பரானூழியானாழியானோங்கிமலருறைவான்
றம்பரமல்லவர்சிந்திப்பவர்தடுமாற்றறுப்பான்
எம்பரமல்லவரென்னெஞ்சத்துள்ளுமிருப்பதாகில்
அம்பரமாவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) உம்பரான் - மேலே யிருப்பவன், ஊழியான் - கற்பகாலத்து மிருப்பவன், ஆழியான் - கடலிற் றுயில்பவன், ஓங்கி - உயர்ந்து, மலர் உறைவான் - தாமரை மலரில் வசிப்பவன், தம்பரம் அல்லவர் - சுதந்தரம் இல்லாதவராய், சிந்திப்பவர் - தம்மை நினைப்பவராது, தடுமாற்று - தடுமாற்றத்தை, அறுப்பான் - கெடுக்கும் பொருட்டு, எம்பரம் அல்லவர் - எம் பட்சத்தர் அல்லாதவர், என் நெஞ்சத்து உள்ளும் இருப்பது ஆகில் - என் மனத்தினுள்ளும் இருப்பதாயின், அம்பரம் ஆவது - சிதாகாய வுருவாய் இருப்பதை, அறிந்தோமேல் - அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம்-யாமிவர்க்கு அடிமைப்படமாட்டோம் எ-று.

(பொ-ரை.) மேலே யிருப்பவன், கற்பகாலத்து மிருப்பவன், கடலிற் துயில்பவன், உயர்ந்து தாமரைமலரில் வசிப்பவன், சுதந்திர மில்லாதவராய் தம்மை நினைப்பவராது தடுமாற்றத்தைக் கெடுக்கும் பொருட்டு எம் பக்ஷத்தரல்லாதவர் என் நெஞ்சத்துள்ளும் இருப்பதாகில், இவர் சிதாகாயத்தி லிருப்பதை அறிந்திருப்போமாயின் யாமிவர்க்கு அடிமைப்படமாட்டோம்.

(க-ரை.) திருமால் பிரமன் முதலியோராது தடுமாற்றத்தை யறுப்பவனாகிய சிவபெருமான், என் மனத்திலும் ஆகாயத்திலு மிருப்பதை யறிந்திருப்போமாயின் இவர்க்கு ஆட்படோம்.

(வி-ரை.) உம்பர் - மேல். ஊழி - கற்பகாலம். அம்பரம் - ஆகாயம். அது இங்குச் சிதாகாயத்தைக் குறித்தது. (8)

இந்திரனுக்குமிராவணனுக்குமருள்புரிந்தார்
மந்திரமோதுவர்மாமறைபாடுவர்மான்மறியார்
சிந்துரக்கண்ணனுநான்முகனுமுடனாய்த்தனியே
அந்தரஞ்செல்வதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

(ப-ரை.) இந்திரனுக்கும் இராவணனுக்கும் அருள் புரிந்தார் - தேவேந்திரனுக்கும் இராவணனுக்கும் அருள்செய்தவர், மந்திரம ஓதுவர் - மந்திரத்தை யுச்சரிப்பார், மாமறை பாடுவர் - பெரிய வேதங்களைப் பாடுவார், மான்மறியார் - மான் கன்றினை யுடையவர், சிந்துரம் கண்ணனும் - திருமாலும், நான்முகனும்-நான்கு முகங்களையுடைய பிரமனும், உடன் ஆய் - உடன் கூடியிருக்க, தனியே அந்தரம் செல்வது - தாம் தனித்து ஆகாயத்திற் செல்வது, அறிந்தோமேல் - யாம் அறிந்திருப்போமாயின், நாம் இவர்க்கு ஆட்படோம் - யாம் இவர்க்கு அடிமைப்படமாட்டோம் எ-று.

(பொ-ரை.) தேவேந்திரனுக்கும் இராவணனுக்கும் அருள்செய்தவர், மந்திரத்தை யுச்சரிப்பார், பெரிய வேதங்களைப் பாடுவார், மான் கன்றினை யுடையவர், திருமாலும் நான்கு முகங்களையுடைய பிரமனும் உடன்கூடி யிருக்க, தாம் தனித்து ஆசாயத்திற் செல்வது அறிந்தோமேல் யாம் இவர்க்கு அடிமைப்படமாட்டோம்.

(க-ரை.) இந்திரன் முதலியோருக்கு அருள் செய்து, பெரிய வேதமோதுவாராய், திருமால் பிரமன் என்பவர்க்கு முடனாய் அந்தரஞ் செல்வ தறிந்தோமேல், நாம் இவர்க்கு ஆட்படோம் என்பதாம்.

(வி-ரை.) மான் மறி - மான் கன்று. சிந்தூர கண்ணன் - செங்கண்மால். அந்தரம் - ஆகாயம். அது இங்குச் சிதாகாயத்தை யுணர்த்திற்று. (9)

கூடலர்மன்னன்குலநாவலூர்க்கோனலத்தமிழைப்
பாடவல்லபரமன்னடியார்க்கடிமைவழுவார்
நாடவல்லதொண்டனாரூரனாட்படுமாறுசொல்லிப்
பாடவல்லார்பரலோகத்திருப்பதுபண்டமன்றே.

(ப-ரை.) கூடலர் மன்னன்-கூடலார்க்கு அரசன், குலம் – உயர்வாகிய, நாவலூர்கோன். - திருநாவலூர்க் கரசனது, நலம் தமிழை - நல்ல தமிழ்ப் பாடல்களை, பாடவல்ல - பாட வல்லவராகிய, பரமன் அடியார்க்கு - சிவனடியார்க்கு, அடிமை - தொண்டு செய்தலில், வழுவார் - தவறுதவராய், நாட வல்ல - ஆராயவல்ல, தொண்டன் - அடியான், ஆரூரன் - சுந்தரன், ஆட்படும் ஆறு - அடிமைப்பட்ட வரலாற்றை, சொல்லி பாடவல்லார் - சொல்லிப் பாடவல்லவர், பரலோகத்து இருப்பது-சிவபுரத்திருப்பது, பண்டம் அன்று- ஓர் பொருளல்ல எ-று.

(பொ-ரை.) கூடலார்க்கு அரசன், உயர்வாகிய திருநாவலூர்க் கரசனது, நல்ல தமிழ்ப் பாடல்களை பாட வல்லவராகிய சிவனடியார்க்கு தொண்டு செய்தலில் தவறுதவராய் ஆராயவல்ல அடியான் சுந்தரன் அடிமைப்பட்ட வரலாற்றைச் சொல்லிப் பாடவல்லவர் சிவபுரத்திருப்பது ஓர் பொருளல்ல.

(க-ரை,) சுந்தரன் சொன்ன தமிழ்ப்பாடல்களைப் பாடவல்ல அடியார்க்குப் பரலோகத்திருப்பது ஒரு பொருளன் றென்பதாம்.

(வி-ரை.) வழுவல் - தவறுதல். பரலோகம் - சிவலோகம். பண்டம் - பொருள். (10)

திருச்சிற்றம்பலம்.

## திருநின்றியூர்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

*அற்றவனாரடியார் தமக்காயிழைபங்கினராம்*
*பற்றவனாரெம்பராபரனென்றும்பலர்விரும்புங்*
*கொற்றவனார்குறுகாதவரூர்நெடுவெஞ்சரத்தாற்*
*செற்றவனார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே.*

(ப-ரை.) அடியார் தமக்கு - அடியவர்தமக்கு, அற்றவனார் - அறுதியிடப் பட்டவர், ஆயிழைபங்கினர் ஆம் - மங்கைபங்கினராகிய, பற்றவனார் - பற்றுடையவர், எம்பராபரர் என்று-எமது பராபரரென்று சொல்லி, பலர் விரும்பும் - பலராலும் விரும்பப்படுகிற, கொற்றவனார் - தலைவனார், குறுகாதவர் - பகைவரது, ஊர் - முப்புரத்தை, நெடுவெம் சரத்தால் - நீண்ட கொடிய பாணத்தினால், செற்றவனார்க்கு அழித்தவர்க்கு, இடம் ஆவது - இடமாயிருப்பது,' திருநின்றியூரே - திருநின்றியூரென்னுந் திருப்பதியே யாம் எ-று.

(பொ-ரை.) அடியவர் தமக்கு அறுதியிடப்பட்டவர், மங்கை பங்கினராகிய பற்றுடையவர், எமது பராபரரென்றுசொல்லிப் பலராலும் விரும்பப்படுகிற தலைவனார், பகைவரது முப்புரத்தை நீண்ட கொடிய பாணத்தினால் அழித்தவர்க்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) அடியார்க்கென் றறுதியிடப் பட்டவராகிய திரிபுரசங்காரிக்கு இடமாயிருப்பது திருநின்றியூரேயா மென்பதாம்.

(வி-ரை.) ஆயிழை - அன்மொழித் தொகைக் காரணப்பெயர், (உமாதேவி) குறுகாதவர் - பகைவர். சரம் - அம்பு. செறல் - அழித்தல். (1)

*வாசத்தினார்மலர்க்கொன்றையுள்ளார்வடிவார்ந்தநீறு*
*பூசத்தினார்புகலிந்நகர்போற்றுமெம்புண்ணியத்தார்*
*நேசத்தினாரென்னையாளுங்கொண்டார்நெடுமாகடல்சூழ்*
*தேசத்தினார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே.*

(ப-ரை.) வாசத்தின் - மணத்தால் நிரம்பிய, மலர் கொன்றை உள்ளார்-கொன்றை மலர் மாலையையுடையவர், வடிவு-தம் திருமேனியின்மீது, ஆர்ந்த - நிறைந்த, நீறு - திருவெண்ணீற்றை, பூசத்தினார் - பூசிக்கொள்பவர், புகல் - சொல்லப்பட்ட, இந்நகரார் - இவ்வுலகத்தார், போற்றும் - வணங்குகின்ற, எம் புண்ணியத்தார்-எமது தருமவடிவினர், நேசத்தின் - அன்பினால், ஆர்-நிறைந்த, என்னை யாளும் கொண்டார்-என்னை யடிமையாகவும் கொண்டவர், நெடுமா கடல் சூழ் - நீண்ட பெரிய கடல் வளைந்த, தேசத்தினார்க்கு-இவ்வுலகத்தை யுடையவர்க்கு, இடம் ஆவது - இடமாயிருப்பது, நம் திருநின்றியூரே - திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(பொ-ரை.) மணத்தால் நிரம்பிய கொன்றைமலர் மாலையையுடையவர், தம் திருமேனியின்மீது நிறைந்த திருவெண்ணீற்றை பூசிக்கொள்பவர், சொல்லப்பட்ட இவ் வுலகத்தார் வணங்குகின்ற எமது தருமவடிவினர், அன்பினால் நிறைந்த என்னை யடிமையாகவும் கொண்டவர், நீண்ட பெரிய கடல்வளைந்த இவ் வுலகத்தை யுடையவர்க்கு இடமாயிருப்பது திருநின்றியூ ரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) கொன்றைமலர் மாலை முதலியவற்றையுடைய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரேயா மென்பதாம்.

(வி-ரை.) கொன்றை ஆகுபெயர். பூசத்தினார்-பூசுதலையுடையவர். (2)

அங்கையின்மூவிலைவேலரமரரடிபரவச்
சங்கையைநீங்கவருளித்தடங்கடல்நஞ்சமுண்டார்
மங்கையோர்பாகமகிழ்ந்தவிடம்வளமல்குபுனற்
செங்கயல்பாயும்வயல்பொலியுந்திருநின்றியூரே.

(ப-ரை.) அம் கையில் - அழகிய திருக்கரத்தில், மூ இலை வேலர் - திரிசூலத்தையுடையவர், அமரர் - தேவர்கள், அடி - தமது பாதங்களை, பரவ-வழிபட, சங்கையை - அவர்களுடைய ஐயத்தை, நீங்க அருளி - நீங்கும்படி அருள்செய்து, தடம் - விசாலமான, கடல் - பாற்கடலிற் றோன்றின, நஞ்சம் உண்டார் - விடத்தையுண்டவர், மங்கை ஓர் பாகர் - உமாதேவியை ஓர் பாகத்துடையவர், (அவர்) மகிழ்ந்த இடம் - மகிழ்ந்திருக்கும் இடம், வளம்மல்கு-வளம் நிறைந்த, புனல்-நீர் நிலைகளில், செம்கயல்-செஞ்சேல்கள், பாயும்-பாய்ந்து விளையாடுகின்ற, வயல் பொலியும் - வயல்கள் சூழ்ந்த, திருநின்றியூரே - திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(பொ-ரை.) அழகிய திருக்கரத்தில்-திரிசூலத்தை யுடையவர், தேவர்கள் தமது பாதங்களை வழிபட, அவர்களுடைய ஐயத்தை நீங்கும்படி அருள் செய்து, விசாலமான பாற்கடலிற் றோன்றின விடத்தையுண்டவர், உமாதேவியை ஓர் பாகத்தி லுடையவர், அவர் மகிழ்ந்திருக்குமிடம், வளம் நிறைந்த நீர் நிலைகளில் செஞ்சேல்கள் பாய்ந்து விளையாடுகின்ற வயல்கள் சூழ்ந்த திருநின்றியூ ரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) மூவிலைவேல் முதலியவற்றையுடைய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயா மென்பதாம்.

(வி-ரை) அங்கை - அகங்கை யெனினுமாம். அமரர் - தேவர் (இறவாதவர்) இது மங்கலம். (3)

ஆறுகந்தாரங்கநான்மறையாரெங்குமாகியட
லேறுகந்தாரிசையேழுகந்தார்முடிக்கங்கைதன்னை
வேறுகந்தார்விரிநாலுகந்தார்பரிசாந்தமதா
நீறுகந்தாருறையும்மிடமாந்திருநின்றியூரே.

(ப-ரை.) அங்கம் ஆறு உகந்தார் - ஆறு அங்கங்களையும் விரும்பினவர், நால் மறையார் - நான்கு வேதங்களை யுடையவர், எங்கும் ஆகி-எவ்விடத்தும் வியாபித்து, அடல் - வலிமையுள்ள, ஏறு உகந்தார் - இடபத்தை விரும்பினவர், ஏழ் இசை உகந்தார் -ஏழ் இசைகளையும் மகிழ்ந்தவர், முடி - தம்முடியில், கங்கைதன்னை - கங்கையை, வேறு உகந்தார்-வேறாக வைத்துக்கொண்டவர், விரிநூல் உகந்தார் - விரிந்த நூல்களை விரும்பினவர், பரிசாந்தம் ஆம் - விசிராந்தியுண்டாதற்குக் காரணமாகிய, நீறு உகந்தார் - திருவெண்ணீற்றை விரும்பினவர், உறையும் இடம்-(அவர்) வாழ்கின்ற இடம், திருநின்றியூரே ஆம் - திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(போ-ரை.) ஆறங்கங்களையும் விரும்பினவர், நான்கு வேதங்களையுடையவர், எவ்விடத்தும் வியாபித்து, வலிமையுள்ள இடபத்தை விரும்பினவர், ஏழிசைகளையு மகிழ்ந்தவர், தம் திருமுடியில் கங்கையை வேறாக வைத்துக்கொண்டவர், விரிந்த நூல்களை விரும்பினவர், விசிராந்தி யுண்டாதற்குக் காரணமாகிய திருவெண்ணீற்றை விரும்பினவர், அவர் வாழ்கின்ற இடம் திருநின்றியூ ரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) ஆறங்க முதலியவற்றை விரும்பினவராகிய சிவபெருமானுக்கிடமாயிருப்பது திருநின்றியூ ரென்னுந் திருப்பதியேயா மென்பதாம்.

(வி-ரை.) ஆறங்கமாவன—சப்தம் ஜோதிஷம் முதலியன. நால்மறையாவன—இருக்கு முதலாயின. இசை யேழாவன—சரிகம முதலியன. (4)

**வஞ்சங்கொண்டார்மனஞ்சேரகிலார்நறுநெய்தயிர்பா**
**லஞ்சுங்கொண்டாடியவேட்கையினாரதிகைப்பதியே**
**தஞ்சங்கொண்டார்தமக்கென்றுமிருக்கைசரணடைந்தார்**
**நெஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே.**

(ப-ரை.) வஞ்சம் கொண்டார் மனம் - வஞ்சங் கொண்டவரது மனத்தை, சேரகிலார் - சேரமாட்டார், நறு நெய் தயிர் பால் - நல்ல நெய் தயிர் பால் முதலிய, அஞ்சும் - ஐந்தையும், கொண்டு ஆடிய - அபிடேகம் பெற்ற, வேட்கையினார் - விருப்பமுள்ளவர், அதிகைபதியே - திருவதிகைப்பதியையே, தஞ்சம் கொண்டார் - சமக்குப் பற்றுக்கோடாகக் கொண்டவர்-தமக்கு—, என்றும்-எந்நாளும், சரண் அடைந்தார் நெஞ்சம் - தமது திருவடியை யடைந்தவரது மனத்தை, இருக்கை கொண்டார்க்கு - இருப்பிடமாகக் கொண்டவர்க்கு, இடம் ஆவது-இடமாயிருப்பது, நம் திருநின்றியூரே-நமது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(போ-ரை.) வஞ்சங் கொண்டவரது மனத்தைச் சேரமாட்டார், நல்ல நெய் தயிர் பால் முதலிய ஐந்தையும் அபிஷேகம் பெற விருப்பமுள்ளவர், திருவதிகைப்பதியையே தமக்குப் பற்றுக்கோடாகக் கொண்டவர், தமக்கு எந்நாளும் தமது திருவடியை யடைந்தவரது மனத்தை இருப்பிடமாகக் கொண்டவர்க்கு இடமாவது திருநின்றியூ ரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) வஞ்சமனத்திற் சேராமை முதலிய குணங்களையுடைய சிவ பெருமானுக் கிடமாயிருப்பது திருநின்றியூ ரென்னுந் திருப்பதியேயா மென் பதாம்.

(வி-ரை.) அஞ்சும் என்றது பஞ்சகவ்வியத்தை. (5)

ஆர்த்தவராடரவம்மரைமேற்புலியீருரிவை
போர்த்தவரானையின்றோ லுடல்வெம்புலால்கையகலப்
பார்த்தவரின்னுயிர்பார்படைத்தான்சிரமஞ்சிலொன்றைச்
சேர்த்தவருக் குறையுமிடமாந்திருநின்றியூரே.

(ப-ரை.) அரைமேல் - அரையில், ஆடு அரவம் - ஆடுகின்ற பாம்பை, ஆர்த்தவர் - கட்டினவர், புலி - புலியினது, ஈர் உரிவை - குளிர்ந்ததோலையும், யானையின்தோல் - யானைத்தோலையும், உடல் - திருமேனியில், போர்த்தவர்-போர்த்துக்கொண்டவர், வெம்புலால் - வெவ்விய புலால் நாற்றம், கை அகல பார்த்தவர் - கை யொழியக்கண்டவர், இன் உயிர் - இனிய உயிர்களையும், பார் - உலகத்தையும், படைத்தான் - படைத்தவனாகிய பிரமனது, சிரம் அஞ்சில் ஒன்றை-ஐந்து சிரத்தில் ஒரு சிரத்தை, சேர்த்தவருக்கு - கைக்கொண்டவருக்கு, உறையும் இடம் - வாழும் இடம், திருநின்றியூரே ஆம் - திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(பொ-ரை.) அரையில் ஆடுகின்ற பாம்பைக் கட்டினவர், புலியினது குளிர்ந்ததோலையும் யானைத்தோலையும் திருமேனியில் போர்த்துக் கொண்டவர், வெவ்வியபுலால் நாற்றம் கையொழியக் கண்டவர், இனிய வுயிர்களையும் உலகத்தையும் படைத்தவனாகிய பிரமனது ஐந்து சிரத்தில் ஒரு சிரத்தைக் கைக்கொண்டவர், அவருக்கு வாழுமிடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) திருவரையில் பாம்பைக் கட்டுதல் முதலிய செயல்களை யுடைய வராகிய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்ப தியேயாமென்பதாம்.

(வி-ரை.) சிரமஞ்சி லொன்று என்றது சிருட்டித் தொழிற் குரிய சிரத்தை. (6)

தலையிடையார்பலிசென்றகந்தோறுந்திரிந்தசெல்வர்
மலையுடையாளொருபாகம்வைத்தார்கற்றுதைந்தநன்னீ
ரலையுடையார்சடையெட்டுஞ்சுழலவருநடஞ்செய்
நிலையுடையாருறையுமிடமாந்திருநின்றியூரே.

(ப-ரை.) அகம்தோறும்-வீடுதோறும், தலை இடை - தலையோட்டில், ஆர் பலி சென்று - அருமையாகிய பிச்சைக்குச் சென்று, திரிந்த - உழன்ற, செல்வர்-செல்வமுடையவர், மலை உடையாள்-மலைமகளை, ஒருபாகம் வைத்தார்-ஒரு பாகத்தில் வைத்துக்கொண்டவர், கல்துதைந்த-கல்லினிடத்துப் படர்ந்த,

நல் நீர் - நல்ல நீரினது, அலை உடையார் - அலையை உடையவர், சடை - சடையோடு, எட்டும் - அட்டதிக்கும், சுழல - சுழலும்படி, அரு நடம் செய்- அரிய நடனத்தைச் செய்த, நிலை உடையார் - நிலையையுடையவர், உறையும் இடம் - அவர் வாழும் இடம், திருநின்றியூரே ஆம் - திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

((போ-ரை.) வீடுதோறும் தலையோட்டில் அருமையாகிய பிக்ஷைக்குச் சென்றுழன்ற செல்வமுடையார், மலைமகளை ஒருபாகம் வைத்தவர், கல்லினிடத்துப் படர்ந்த நல்லநீரினது அலையையுடையவர், சடையோடு அஷ்டதிக்கும் சுழலும்படி அரிய நடநத்தைச்செய்த நிலையை யுடையவர், அவர் வாழுமிடம் திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) தலை யோட்டில் பலியேற்றண்டல் முதலிய செயல்களையுடைய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயா மென்பதாம்.

(வி-ரை.) கற்றுறைந்த நன்னீர் என்றது கங்காநதியை. (7)

எட்டுகந்தார் திசையேழுகந்தாரெழுத்தாறுமன்ப
ரிட்டுகந்தார்மலர்ப்பூசையிச்சிக்குமிறைவர்முன்னாள்
பட்டுகும்பாரிடைக்காலனைக்காய்ந்துபலியிரந்துண்
சிட்டுகந்தார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே.

(பத-ர.) திசை எட்டு உகந்தார் - அட்ட திக்குகளில் உள்ளாராலும் மகிழப்பட்டவர், ஏழ் உகந்தார் - சப்தலோகத்தாராலும் மகிழப்பட்டவர், எழுத்து ஆறும் - பிரமனெழுத்துத் தணியப்பெற்ற, அன்பர்-தமது அன்பரானவர், மலர் இட்டு - மலர்களாலருச்சிக்க, உகந்து - அதனை மகிழ்ந்து, ஆர் - அரிய, பூசை - அவரது பூசையை, இச்சிக்கும் - விரும்புகின்ற, இறைவர் - தலைவர், முன் நாள் - முற்காலத்தில், பார் இடை - பூமியில், பட்டு உகும் - உதைபட்டு வீழ்ந்த, காலனை-இயமனை, காய்ந்து-சினந்து, பலி இரந்து உண்- பலியேற்று உண்கின்ற, சிட்டு உகந்தார்க்கு - சிக்கனவை விரும்பினவர்க்கு, இடம் ஆவது - இடமாயிருப்பது, நம் திருநின்றியூரே - நமது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(போ-ரை.) அஷ்ட திக்குக்களிலுள்ளாராலு மகிழ்ப்பட்டவர், சப்தலோகத்தாராலு மகிழப்பட்டவர், பிரமனெழுத்துத் தணியப் பெற்ற தமது அன்பரானவர் மலர்களால் அருச்சிக்க அதனை மகிழ்ந்து, அரிய அவரது பூசையை விரும்புகின்ற தலைவர், முற்காலத்தில் பூமியில் உதைபட்டு வீழ்ந்த இயமனைச் சினந்து, பலியேற்றுண்கின்ற சிக்கனவை விரும்பினவர்க்கு இடமாயிருப்பது, திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை) திசையெட்டுகத்தல் முதலிய செயல்களை யுடையவராகிய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாமென்பதாம்.

(வி-ரை.) ஆறுதல் - தணிதல். உகல் - விழுதல். சிட்டு-சிக்கெனவு. (8)

காலமுநாயிறுமாகின்றார்கழல்பேணவல்லார்
சீலமுஞ்செய்கையுங்கண்டுகப்பாரடிபோற்றிசைப்ப
மாலொடுநான்முகனிந்திரன்மந்திரத்தால்வணங்க
நீலநஞ்சுண்டவருக்கிடமாந்திருநின்றியூரே.

(ப-ரை.) காலமும்-காலமும், நாயிறும்-சூரியனும், ஆகின்றார்-தாம் ஆகியிருந்தவர், கழல்-தம்திருவடியை, பேணவல்லார் - விரும்பவல்லவர், சீலமும்-தமது ஒழுக்கத்தையும், செய்கையும் - செயலையும், கண்டு - நோக்கி, அடிபோற்றிசைப்ப - அடிவணங்கும்படி, உகப்பார் - விரும்பினவர், மால் ஒடு நான்முகன் இந்திரன்-திருமாலோடு பிரமன் இந்திரன் என்பவர்கள், மந்திரத்தால் - வேத மந்திரங்களைக் கொண்டு, வணங்க - தோத்திரிக்க, நீலநஞ்சு உண்டவருக்கு - கரிய விடத்தை யுண்டவர்க்கு, இடம் - இடமாவது, திருநின்றியூரே - திருநின்றி யூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(பொ-ரை.) காலமும் சூரியனும் ஆகினின்றார், தம் திருவடியை விரும்பவல்லவர் தமது ஒழுக்கத்தையும் செயல்களையுங் கண்டு அடிவணங்கும்படி விரும்பினவர், திருமாலோடு பிரமன் இந்திரன் என்பவர்கள் வேத மந்திரங்களைக் கொண்டு தோத்திரிக்க, நீல நஞ்சுண்டவருக்கு இடமாவது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) காலமுதலிய வெல்லாமாகி நின்றவராகிய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயா மென்பதாம்.

(வி-ரை.) காலம் - முக்காலம். அவை இறப்பு நிகழ்வு எதிர்வு என்பன. நீல நஞ்சு — கருநஞ்சு. (9)

வாயார்மனத்தால்நினைக்குமவர்க்குமருந்தவத்திற்
றூயார்சுடுபொடியாடியமேனியர்வானிலென்று
மேயார்விடையுகந்தேறியவித்தகர்போந்தவர்க்குச்
சேயாரடியார்க்கணியவரூர்திருநின்றியூரே.

(ப-ரை.) மனத்தால் நினைக்கும் அவர்க்கும் — மனத்தினால் தியானிப்பவர்க்கும், வாயார் - கிடைக்காதவர், அரும் தவத்தின் தூயார் - அரிய தவத்தினால் பரிசுத்தர், சுடுபொடி - சுட்ட திருநீற்றை, ஆடிய - பூசிய, மேனியர் - திருமேனியுடையவர், என்றும் - எந்நாளும், வானில் - சிதாகாசத்தில், மேயார் - இருப்பவர், விடை - இடபத்தின்மேல், உகந்து ஏறிய - மகிழ்ந்து ஏறின, வித்தகர் — ஞான சொரூபர், போந்தவர்க்கு - தம்மை விட்டு நீங்கினவர்க்கு, சேயார் - தூரஸ்தர், அடியார்க்கு - தொண்டருக்கு, அணியவர் - சமீபஸ்தர், (அவரது) ஊர் - ஊரானது, திருநின்றியூரே - திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம் எ-று.

(பொ-ரை.) மனத்தினால் தியானிப்பவர்க்கும் கிடைக்காதவர், அரிய தவத்தினால் பரிசுத்தர், சுட்ட திருநீற்றைப் பூசிய திருமேனியையுடையவர், எந்நாளும் சிதாகாசத்திலிருப்பவர், இடபத்தின்மேல் மகிழ்ந்தேறின ஞான சொரூபர், தம்மை விட்டு நீங்கினவர்க்கு தூரஸ்தர், தொண்டருக்கு சமீபஸ்தர், அவரது ஊரானது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(க-ரை.) மனத்தால் நினைப்பார்க்கும் கிடைத்த லரிதாதல் முதலிய செயல்களையுடைய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருநின்றியூரென்னுந் திருப்பதியேயாம்.

(வி-ரை.) வாய்த்தல்-கிடைத்தல் என்றும் எயார் எனினுமாம். சேய்மை-தூரம். அணிமை-சமீபம். (10)

சேரும்புகழ்த்தொண்டர்செய்கையருத்திருநின்றியூரிற்
சீருஞ்சிவகதியாயிருந்தானைத்திருநாவலா
ரூரனுரைத்தவுறுதமிழ்பத்தும்வல்லார்வினைபோய்ப்
பாரும்விசும்புந்தொழப்பரமன்னடிகூடுவரே.

(ப-ரை.) சேரும் - சேர்ந்த, புகழ் - புகழினையுடைய, தொண்டர் - அடியவரது, செய்கையர் ஆய் - செய்கையை யுடையவராய், திருநின்றியூரில் - திருநின்றியூரென்னுந் திருப்பதியில், சீரும் - சிறக்கின்ற, சிவகதி ஆய் இருந்தானை - மோக்ஷ உருவாய் இருந்தவனை, திருநாவல் ஆரூரன்-சுந்தரன், உரைத்த - சொல்லிய, உறு தமிழ்பத்தும் வல்லார் - மிக்க தமிழ்ப்பாடல் பத்தினையும் கற்று வல்லவர், வினைபோய் - வினையொழிந்து, பாரும் - மண்ணுலகி லுள்ளாரும், விசும்பும் - விண்ணுலகி லுள்ளாரும், தொழ - வணங்க, பரமன் - சிவபெருமானது, அடி கூடுவர் — திருவடியை யடைவர் எ-று.

(பொ-ரை.) சேர்ந்த புகழினையுடைய அடியவரது செய்கையை யுடையவனாய், திருநின்றியூரில் சிறக்கின்ற மோக்ஷவுருவா யிருந்தவனை, சுந்தரன் சொல்லிய மிக்க தமிழ்ப்பாடல் பத்தினையும் கற்று வல்லவர், வினையொழிந்து, மண்ணுலகி லுள்ளாரும் விண்ணுலகி லுள்ளாரும் வணங்கச் சிவபிரானது திருவடியை அடைவர்.

(க-ரை.) திருநின்றியூரிற் சிவகதியா யிருந்தவனைத் திருநாவலாரூரனுரைத்த தமிழ்ப்பாடல் பத்தும் கற்று வல்லார், தம் வினை யொழியப் பெற்றுப் பரமனடி யடைவர் என்பதாம்.

(வி-ரை.) சிவகதி - மோக்கம். பார்விசும்பு ஆகுபெயர்கள். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-இலட்சுமியீசுவரர். தேவியார்-உலகநாயகியம்மை.

## திருக்கோளிலி

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியே னுமை நித்த லுங்கை தொழுவேன்
வாளன கண்மடவாளவள் வாடி வருந்தாமே
கோளிலியெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமா னவையட்டித் தரப்பணியே.

(ப-ரை.) அடியேன் - அடியனேன், நீள நினைந்து - நெடுக நினைந்து, உம்மை - தேவரீரை, நித்தலும் - நாடோறும், கை தொழுவேன் - கை குவித்து வணங்குவேன், வாள் அன்ன - வாள் போன்ற, கண் - கண்ணையுடைய, மடவாள் அவள் - பெண்ணாகிய அந்தப் பரவை, வாடி வருந்தாமே - வாட்டமடைந்து வருந்தாமல், கோளிலி - திருக்கோளிலி யென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கிற, எம்பெருமான் - எம்பெருமானே, குண்டையூர் - திருக்குண்டையூரில், சில நெல்லு பெற்றேன் - சில நெல்லினைச் சம்பாதித்தேன், ஆள் இல்லை - ஆட்களில்லை, எம்பெருமான் - எம்பெருமானே, அவை - அவற்றை, அட்டில் தரப்பணி - அட்டிலிற்சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(பொ-ரை.) அடியனேன் நெடுகநினைந்து தேவரீரை நாடோறும் கைகுவித்து வணங்குவேன், வாள்போன்ற கண்ணையுடைய பெண்ணாகிய அந்தப் பரவை வாட்டமடைந்து வருந்தாமல், திருக்கோளிலி யென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கிற எம் பெருமானே, திருக்குண்டையூரில் சில நெல்லினைச் சம்பாதித்தேன் ஆட்களில்லை, எம்பெருமானே அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(கு-ரை.) அடியேன் நாடோறும் உன்னை வணங்குவேன், குண்டையூரில் எனக்குக் கிடைத்த நெல்லைப் பரவையிடத்திற் சேர்த்தருளப் பணிக்கக் கடவை யென்பதாம்.

(வி-ரை.) நீள-மிகுதியாக எனினுமாம். வாளனகண் மடவாள் என்றது பரவையை. (1)

வண்டமருங் குழலா ளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புர மூன்றெரி செய்தவெம் வேதியனே
தெண்டிரைநீர் வயல்சூழ் திருக்கோளிலி யெம்பெருமா
னண்டமதாயவனே யவையட்டித் தரப்பணியே.

(ப-ரை.) வண்டு அமரும் - வண்டுகள் விரும்புகின்ற, குழலாள் - கூந்தலையுடையவளாகிய, உமை நங்கை - உமாதேவியை, ஓர் பங்கு உடையாய் - ஓர் பாகத்தி லுடையவனே, விண்டவர் - பகைவரது, புரம் மூன்று-முப்புரத்தை, எரிசெய்த - எரித்த, எம் வேதியனே - எமது அந்தணனே, தெள் திரை

நீர் வயல் சூழ்-தெளிவாகிய அலைகளோடு கூடிய நீரை யுடைய வயல்சூழ்ந்த, திருக்கோளிலி எம்பெருமான் - திருக்கோளிலி எம்பெருமானே, அண்டம் ஆயவனே - உலகமுழுதும் வியாபித்திருப்பவனே, அவை - அவற்றை, அட்டிற்றரப்பணி - அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக் கடவை எ-று.

(பொ-ரை.) வண்டுகள் விரும்புகின்ற கூந்தலை யுடையவளாகிய உமா தேவியை ஓர் பாகத்தி லுடையவனே, பகைவரது முப்புரத்தை எரித்த எமது அந்தணனே, தெளிவாகிய அலைகளோடு கூடிய நீரையுடைய வயல்சூழ்ந்த திருக்கோளிலி எம்பெருமானே, உலக முழுதும் வியாபித்திருப்பவனே, அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(க-ரை.) திருக்கோளிலி எம்பெருமானே, இந்த நெல்லைப் பாவையிடஞ் சேர்க்கும்படி பணித்தருளக் கடவை என்பதாம்.

(வி-ரை.) அமர்தல் - தங்குதல் எனினுமாம். நங்கை - குணபூர்ணை. எரி செய்த ஒரு சொல் - எரித்தலைச்செய்த என்றலு மொன்று. (2)

பாதியோர்பெண்ணைவைத்தாய்படருஞ்சடைக்கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத்தமதுநீயுமறிதியன்றே
கோதில்பொழில்புடைசூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாதியேயற்புதனேயவையட்டிற்றரப்பணியே.

(ப-ரை.) பாதி - திருமேனியிற் பாதியில், ஓர் பெண்ணை வைத்தாய் - ஒரு பெண்ணை வைத்துக்கொண்டாய், படரும் சடை - விரிந்த சடையினிடத்து, கங்கைவைத்தாய் - கங்கை நதியை வைத்துக்கொண்டாய், மாதர்-அழகிய, நல்லார் - பெண்களது, வருத்தம் - துன்பத்தை, நீயும் அறிதி அன்றே - நீயும் அறிகின்றாயல்லவா, கோது இல்-குற்றமில்லாத, பொழில் - சோலைகள், புடைசூழ்-பக்கத்தில் சூழப்பெற்ற, குண்டையூர் சில நெல்லுபெற்றேன் - குண்டையூரில் சில நெல்லைப்பெற்றேன், ஆதியே - முதல்வனே, அற்புதனே - ஆச்சரியகரனே, அவை - அவற்றை, அட்டிற்றரப்பணி - அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை எ-று.

(பொ-ரை.) திருமேனியிற் பாதியில் ஒரு பெண்ணை வைத்துக்கொண்டாய், விரிந்த சடையினிடத்து கங்கை நதியை வைத்துக்கொண்டாய் அழகிய பெண்களது துன்பத்தை நீயும் அறிகின்றாயல்லவா, குற்றமில்லாத சோலைகள் பக்கத்தில் சூழப்பெற்ற குண்டையூரில் சில நெல்லைப் பெற்றேன், முதல்வனே, ஆச்சரியகரனே, அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(க-ரை,) திருக்கோளிலி யெம்பெருமானே, மாதர் வருத்தத்தை நீயு மறிவையாதலால், இந்த நெல்லைப் பாவையிடஞ் சேர்க்கப் பணித்தருளக் கடவை யென்பதாம்.

(வி-ரை.) பாதியோர் பெண் என்றது உமாதேவியை. கோது - பயன் தராமை முதலிய குற்றங்கள், (3)

சொல்லுவதென்னுனைநான்றொண்டைவாயுமைநங்கையைநீ
புல்கியிடத்தில்வைத்தாய்க்கொருபூசல்செய்தாருளரோ
கொல்லைவளம்புறவிற்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னல்லல்களைந்தடியேற்கவையட்டிற்றரப்பணியே.

(ப-ரை.) நான் உன்னை சொல்லுவது என்-நான் உன்னைச் சொல்லுவது யாது, தொண்டைவாய் - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடைய, உமை நங்கையை - உமாதேவியை, நீ புல்கி - நீ தழுவி, இடத்தில் வைத்தாய்க்கு - இடப்பாகத்தில்வைத்த உனக்கு, ஒரு பூசல் செய்தார் உளரோ - ஒருகலகஞ் செய்தவர் உளரோ, கொல்லை-கொல்லைகளோடு கூடிய, வளம் புறவின் - வளமாகிய முல்லை நிலத்தினையுடைய, குண்டையூர் சில நெல்லு பெற்றேன் - குண்டையூரில் சில நெல்லைப்பெற்றேன், அல்லல் களைந்து - துன்பத்தையொழித்து, அடியேற்கு - அடியேனுக்கு, அவை - அவற்றை, அட்டிற்றரப்பணி- அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(பொ-ரை.) நானுன்னைச் சொல்லுவது யாது. கொவ்வைக் கனிபோன்ற அதரத்தையுடைய உமாதேவியை நீ தழுவி இடப்பாகத்தில் வைத்த உனக்கு ஒரு கலகஞ்செய்தவர் உளரோ, கொல்லைகளோடு கூடிய வளமாகிய முல்லை நிலத்தினையுடைய குண்டையூரில் சில நெல்லைப் பெற்றேன், துன்பத்தை யொழித்து அடியேனுக்கு அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக் கடவை.

(க-ரை.) நான் உன்னைச் சொல்லுவதென், உமாதேவியை யிடப்பாகத்தில் வைத்துக்கொண்டாய், இந்த நெல்லை அட்டிற்றரப் பணித்தருளக் கடவை யென்பதாம்.

(வி-ரை.) தொண்டை - ஆகுபெயர். புல்கல் - தழுவல். (4)

முல்லைமுறுவலுமையொருபங்குடைமுக்கணனே
பல்லயர்வெண்டலையிற்பலிகொண்டுழல்பாசுபதா
கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலியெம்பெருமா
னல்லல்களைந்தடியேற்கவையட்டிற்றரப்பணியே.

(ப-ரை.) முல்லை - முல்லையரும்புபோன்ற, முறுவல் - பல்லினையுடைய, உமை - உமாதேவியை, ஒருபங்கு உடை - ஒருபாகத்தில் உடைய, முக்கண்ணனே - மூன்று கண்ணையுடையவனே, பல் அயர் - பல் உதிர்ந்த, வெள்தலையில் - வெள்ளிய தலையோட்டில், பலிகொண்டு உழல் - பிச்சை யேற்றுத் திரிகின்ற, பாசுபதா - பாசுபதனே, கொல்லை வளம்புறவின் - கொல்லைவளமுள்ள முல்லைநிலத்தின் கண்ணுள்ள, குண்டையூர் சில நெல்லு பெற்றேன் - குண்டையூரில் சில நெல்லை யாசித்துப் பெற்றேன், அல்லல்களைந்து - துன்பத்தை யொழித்து, அடியேற்கு-அடியேனுக்கு, அவை-அவற்றை, அட்டிற்றரப்பணி - அட்டிலிற்சேர்க்கக் கட்டளை யிடக்கடவை எ-று.

(பொ-ரை.) முல்லையரும்புபோன்ற பல்லினையுடைய உமாதேவியை ஒருபாகத்தி லுடைய மூன்று கண்களையுடையவனே, பல்லுதிர்ந்த வெள்ளிய தலையோட்டில் பிக்ஷையேற்றுத் திரிகின்ற பாசுபதனே, கொல்லை வளமுள்ள முல்லை நிலத்தின் கண்ணுள்ள குண்டையூரிற் சில நெல்லை யாசித்துப் பெற்றேன். துன்பத்தை யொழித்து அடியேனுக்கு அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(க-ரை.) திருக்கோளிலி யெம்பெருமானே, இந்த நெல்லை அட்டிலிற் றரப்பணி யென்பதாம்.

(வி-ரை.) முல்லை ஆகுபெயர். அயர்தல் - உதிர்தல். பாசுபதன் - பசுபதித்வமுடையவன், பாசுபதாஸ்திரத்தை யுடையவன் என்றலு மொன்று. (5)

குரவமருங்குழலாளுமைநங்கையோர்பங்குடையாய்
பரவைபசிவருத்தமதுநீயுமறிதியன்றே
குரவமரும்பொழில்சூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னரவமசைத்தவனேயவையட்டிற்றரப்பணியே.

(ப-ரை.) குரவு அமரும் - குராமலரையணிந்த, குழலாள் - கூந்தலையுடையவளாகிய, உமை நங்கை ஓர் பங்கு உடையாய் - உமாதேவியை ஒரு பாகத்தி லுடையவனே, பரவை - பரவையின், பசி வருத்தம் - பசித்துன்பத்தை, நீயும் அறிதி அன்றே - நீயும் அறிவாயல்லவா, குரவு அமரும் - குராமரங்கள் உள்ள, பொழில் சூழ் - சோலை சூழ்ந்த, குண்டையூர் சில நெல்லு பெற்றேன் - குண்டையூரில் சில நெல்லைச் சம்பாதித்தேன், அரவம் - பாம்பை, அசைத்தவனே - அரைநாண் முதலியவாகக் கட்டினவனே, அவை - அவற்றை, அட்டிற்றரப்பணி - அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(பொ-ரை.) குராமலரையணிந்த கூந்தலை யுடையவளாகிய உமாதேவியை ஒரு பாகத்தி லுடையவனே, பரவையின் பசித்துன்பத்தை நீயும் அறிவாயல்லவா, குராமரங்களுள்ள சோலை சூழ்ந்த குண்டையூரிற் சில நெல்லைச் சம்பாதித்தேன், பாம்பை அரைநாண் முதலியவாகக் கட்டினவனே அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளை யிடக்கடவை.

(க-ரை.) உமாதேவிபங்கனே, இந்த நெல்லையட்டிலிற்றரப்பணி யென்பதாம்.

(வி-ரை.) குரவு - ஆகுபெயர். (6)

எம்பெருமானுனையேநினைந்தேத்துவனெப்பொழுதும்
வம்பமருங்குழலாளொருபாகமமர்ந்தவனே
செம்பொனின்மாளிகைசூழ்திருக்கோளிலியெம்பெருமா
னன்பதுவாயடியேற்கவையட்டிற்றரப்பணியே.

(ப-ரை.) எம்பெருமான் - எம்பெருமானே, எப்பொழுதும் உன்னையே நினைந்து - எப்போதும் உன்னையே நினைந்து, ஏத்துவன் - துதிப்பேன், வப்பு அமரும் - வாசனை பொருந்திய, குழலாள் — கூந்தலை யுடையவளாகிய, உமாதேவியை, ஒரு பாகம் அமர்ந்தவனே - ஒரு பாகத்தில் அமைக்கப்பெற்றவனே, செம்பொன்னின் மாளிகைசூழ் - செம்பொன்னு லியன்ற மாளிகைகள் சூழ்ந்த, திருக்கோளிலி எம்பெருமான் - திருக்கோளிலி யெம்பெருமானே, அன்பு ஆய் - (என்னிடத்து) அன்புடையையாகி, அடியேற்கு - அடியேனுக்கு, அவை-அவற்றை, அட்டிற்றரப்பணி - அட்டிலிற் சேர்க்கக் கட்டளை யிடக்கடவை எ-று.

(பொ-ரை), எம்பெருமானே, எப்போதும் உன்னையே நினைந்து துதிப்பேன், வாசனை பொருந்திய கூந்தலை யுடையவளாகிய உமாதேவியை ஒரு பாகத்தில் அமைக்கப் பெற்றவனே, செம்பொன்னுலியன்ற மாளிகைகள் சூழ்ந்த திருக்கோளிலி எம்பெருமானே, (என்னிடத்து) அன்புடையையாகி அடியேனுக்கு அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(கு-ரை.) திருக்கோளிலி எம்பெருமானே, இந்த நெல்லை யட்டிற்றாப் பணி யென்பதாம்.

(வி-ரை.) அன்பது வாய் என்பதில், அது பகுதிப்பொருள் விகுதி. (7)

**அரக்கன்முடிகரங்களடர்த்திட்டவெம்மாதிபிரான்**
**பரக்குமரவல்குலாள்பரவையவள்வாடுகின்ருள்**
**குரக்கினங்கள்குதிகொள்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே**
**னிரக்கமதாயடியேற்கவையிட்டுத்தரப்பணியே.**

(ப-ரை.) அரக்கன்-அரக்கனது, முடிகரங்கள்-தலைகளையும் கைகளையும், அடர்த்திட்ட — நெருக்கின, எம் ஆதிபிரான் - எமது ஆதிப்பெருமானே, பரக்கும் - பரந்த, அரவு - பாம்பின் படத்தை யொத்த, அல்குலாள் - அல்குலையுடையவளாகிய, பரவை அவள் - பரவையாகிய அவள், வாடுகின்ருள் - வாடுகிருள், குரங்கு இனங்கள் - குரங்கின் கூட்டங்கள், குதிகொள்-குதிக்கின்ற, குண்டையூர் - குண்டையூரில், சில நெல்லு பெற்றேன்-சில நெல்லை யாசித்துப் பெற்றேன், இரக்கம் ஆய் - இரக்கமுடையவனாய், அடியேற்கு - அடியேனுக்கு, அவை — அவற்றை, இட்டுத்தரப்பணி - அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை எ-று.

(பொ-ரை.) அரக்கனது தலைகளையும் கைகளையும் நெருக்கின எமது ஆதிப்பெருமானே, பரந்த பாம்பின் படத்தையொத்த அல்குலை யுடையவளாகிய பரவையென்பவள் வாடுகின்ருள், குரங்கின் கூட்டங்கள் குதிக்கின்ற குண்டையூரில் சில நெல்லை யாசித்துப்பெற்றேன், இரக்கமுடையவனாய் அடியேனுக்கு அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை.

(கு-ரை.) திருக்கோளிலி யெம்பெருமானே, இந்த நெல்லை யட்டிற் றாப் பணி யென்பதாம்.

(வி-ரை.) அரக்கன் என்றது இராவணனை. அடர்த்தல் - நெரித்தல் எனினுமாம். அரவு ஆகுபெயர். குரங்கு-குரக்கு என வலித்தல் பெற்றது.

பண்டையமால்பிரமன்பறந்துமிடந்துமயர்ந்துங்
கண்டிலராயவர்கள்கழல்காண்பரிதாயபிரான்
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமா
னண்டமதாயவனேயவையட்டிற்றரப்பணியே.

(ப-ரை.) பண்டைய - பழமையாகிய, மால் பிரமன் - மாலும் பிரமனும், பறந்தும் - பறந்தும், இடந்தும் - பிளந்தும், அயர்ந்தும் - சோர்ந்தும், அவர்கள்—, கண்டிலர் ஆய் - காணப் பெறுதவராய், கழல் - திருவடியை, காண்பு அரிது ஆய பிரான் - காண்டல் அருமையாகிய பெருமானே, தெள் திரை நீர் வயல் சூழ் - தெளிவாகிய அலைகளையுடைய நீர் நிறைந்த வயல் சூழ்ந்த, திருக்கோளிலி எம்பெருமான் - திருக்கோளிலி எம்பெருமானே, அண்டம் ஆயவனே - உலகமுழுதும் வியாபித்திருப்பவனே, அவை - அவற்றை, அட்டிற்றரப்பணி - அட்டிலிற் சேர்க்கக் கட்டளையிடக்கடவை எ-று.

(பொ-ரை.) பழமையாகிய மாலும் பிரமனும் பறந்தும் பிளந்தும் சோர்ந்தும் அவர்கள் காணப் பெறுதவர்களாய் திருவடியைக் காண்டல், அருமையாகிய பெருமானே, தெளிவாகிய அலைகளையுடைய நீர் நிறைந்த வயல் சூழ்ந்த திருக்கோளிலி யெம்பெருமானே, உலகமுழுதும் வியாபித்திருப்பவனே, அவற்றை அட்டிலிற் சேர்க்கக் கட்டளை யிடக்கடவை.

(க-ரை.) திருக்கோளிலி யெம்பெருமானே, இந்த நெல்லை யட்டிற் றரப் பணி யென்பதாம்.

(வி-ரை.) பண்டை அ மால்பிரமன் எனப் பிரித்து முற்காலத்தில் அந்த மால் பிரமன் என் றுரைத்தலுமாம். இடத்தல் - பிளத்தல். அண்டம்-உலகம். அது பகுதிப்பொருள் விகுதி. (9)

கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவ
னெல்லிடவாட்கள்வேண்டிநினைந்தேத்தியபத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகினண்டர்வானுலகாள்பவரே.

(ப-ரை.) கொல்லை வளம் புறவின் - கொல்லைகளோடு கூடிய முல்லை நிலத்தையுடைய, திருக்கோளிலிமேயவனை - திருக்கோளிலியென்னுந் திருப்பதியில் எழுந்தருளினவனை, நல்லவர் பரவும்-நல்லோர் துதிக்கின்ற, திருநாவல ஊரன் அவன் - சுந்தரன், நெல் இட - நெற்கொண்டு போய்ச்சேர்க்க, ஆட்கள் வேண்டி - ஆட்களை விரும்பி, நினைந்து ஏத்திய - நினைந்து தோத்திரம் செய்த, பத்தும் - இப்பத்துப் பாடலையும், வல்லார் - கற்று வல்லவர், உலகில் அல்லல் களைந்து - இவ்வுலகில் துன்பங்களை யொழித்து, அண்டர் - தேவர்களுடைய, வான் உலகு - விண்ணுலகத்தை, ஆள்பவர் - ஆள்வோராவர் எ-று.

(பொ-ரை.) கொல்லைகளோடு கூடிய வளமாகிய முல்லை நிலத்தை யுடைய திருக்கோளிலியென்னுந் திருப்பதியி லெழுந்தருளினவனை, நல்லோர் துதிக்கின்ற திருநாவலூரனவன், நெற்கொண்டுபோய்ச் சேர்க்க ஆட்களை விரும்பி நினைத்து தோத்திரம் செய்த இப்பத்துப் பாடலையும் கற்று வல்லவர், இவ்வுலகின் துன்பங்களை யொழித்து, தேவர்களுடைய விண்ணுலகத்தை ஆள்வோராவர்.

(க-ரை.) திருக்கோளிலி யெம்பெருமானைத் திருநாவலூரன், நெல்லிட ஆட்கள்வேண்டி யுரைத்த இப்பத்துப் பாடலையும் கற்று வல்லவர் விண்ணுலகத்தை யாள்பவராவர் என்பதாம்.

(வி-ரை.) பரவல் - துதித்தல். விண்ணுலகு - சுவர்க்கலோகம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கோளிலியப்பர். தேவியார் - வண்டமர்பூங்குழலியம்மை

---

## திருவேகம்பம் திருமேற்றளி

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

**நொந்தாவொண்சுடரே நுனையேநினைந்திருந்தேன்**
**வந்தாய்போயறியாய்மனமேபுகுந்துநின்ற**
**சிந்தாயெந்தைபிரான்றிருமேற்றளியுறையு**
**மெந்தாயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே.**

(ப-ரை.) நொந்தா - அவிக்க வொண்ணுத, ஒண்சுடரே - அழகிய சோதியே, நுன்னையே - உன்னையே, நினைந்து இருந்தேன் - நினைத்திருந்தேன், வந்தாய் - வந்தனை, போய் அறியாய் - சென்றறியாய், மனமே புகுந்து நின்ற - மனதிற் புக்குநின்ற, சிந்தாய்-கருணைக்கடலே, எந்தைபிரான்-எந்தைபிரானே, திருமேற்றளி உறையும் - திருமேற்றளி யென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, எந்தாய் - எம் தந்தையே, உன்னையல்லால் - உன்னையன்றி, இனி - இனி வேறொருவரை, ஏத்தமாட்டேன் - துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) அவிக்கவொண்ணுத அழகியசோதியே, உன்னையே நினைத்திருந்தேன், வந்தனை, சென்றறியாய், மனதிற் புக்குநின்ற கருணைக்கடலே, எந்தைபிரானே, திருமேற்றளியென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற எந்தையே, உன்னையன்றி இனி வேறொருவரை துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியெம்பெருமானே, என்மனம் புகுந்த வுன்னை யன்றி வேறொருவரை யேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) நொந்தல் - நொதுத்தல். (அவித்தல்) சிந்து - கடல். எந்தாய் - விளியுருபேற்ற மரூஉமொழி. (1)

ஆட்டான்பட்டமையாலடியார்க்குத்தொண்டுபட்டுக்
கேட்டேன்கேட்பதெல்லாம்பிறவாமைக்கேட்டொழிந்தேன்
சேட்டார்மாளிகைசூழ்திருமேற்றளியுறையு
மாட்டேயுன்னையல்லால்மகிழ்ந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) ஆள் பட்டமையால் - அடிமைப்பட்டமையால், அடியார்க்கு—, தொண்டுபட்டு—, கேட்பது எல்லாம் கேட்டேன் - கேட்கவேண்டிய வற்றையெல்லாம் கேட்டேன், பிறவாமை - பிறவாமைக்குக் காரணத்தையும், கேட்டு ஒழிந்தேன் - கேட்டுவிட்டேன், சேடு ஆர் - உயர்வு பொருந்திய, மாளிகை சூழ் - மாளிகைகள் சூழ்ந்த, திருமேற்றளி உறையும் - திருமேற்றளியில் வாழ்கின்ற, மாடே - பொன்னே, உன்னை அல்லால் - உன்னையன்றி, மகிழ்ந்து - விரும்பி, ஏத்தமாட்டேன் - வேறொருவரைத் துதிக்கமாட்டேன் ஏ-று.

(பொ-ரை.) அடிமைப் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டு, கேட்கவேண்டியவற்றையெல்லாம் கேட்டேன், பிறவாமைக்குக் காரணத்தையும் கேட்டுவிட்டேன், உயர்வுபொருந்திய மாளிகைகள் சூழ்ந்த திருமேற்றளியில் வாழ்கின்ற பொன்னே, உன்னையன்றி விரும்பி வேறொருவரைத் துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியுறையும் பொன்னே, உன்னையல்லால், வேறொருவரைத் துதிக்கமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) ஆட்டான் என்பதில் தான் அசை - சேடு - உயர்வு. மாடு - பொன், இது எதுகை யின்பநோக்கி மாட்டு என்றுயிற்று. (2)

மோறுந்தோரொருகால்நினையா திருந்தாலும்
வேறுவந்தென்னுள்ளம்புகவல்லமெய்ப்பொருளே
சேறார்தண்கழனித்திருமேற்றளியுறையு
மேறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே.

(ப-ரை.) ஓர் ஒருகால் - ஒவ்வொருகாலத்தில், மோறுந்து - மறந்து, நினையாது இருந்தாலும் - நினைக்காமலிருந்தாலும், வேறு ஆ - வேறாக, வந்து என் உள்ளம் புகவல்ல - வந்து என்மனத்தில் புகவல்ல, மெய்ப்பொருளே - உண்மைப்பொருளே, சேறு ஆர் - சேறு நிறைந்த, தண் - குளிர்ந்த, கழனி - வயல்கள்சூழ்ந்த, திருமேற்றளி உறையும் - திருமேற்றளியில் வாழ்கின்ற, ஏறே - ஆண் சிங்கமே, உன்னையல்லால் - உன்னையன்றி, இனி - இனிவேறொருவரை, ஏத்தமாட்டேன் - துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) ஒவ்வொருகாலத்தில் மறந்து நினைக்காமலிருந்தாலும் வேறாகவந்து என்மனத்தில் புகவல்ல மெய்ப்பொருளே, சேறுநிறைந்த குளிர்ந்த

வயல்கள் சூழ்ந்த திருமேற்றளியில் வாழ்கின்ற ஆண் சிங்கமே, உன்னையன்றி இனி வேறொருவரைத் துதிக்கமாட்டேன்.

(கு-ரை.) திருமேற்றளியுறையும் ஏறே, உன்னையல்லால் வேறொருவரை யேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) மோருத்தல் - மறத்தல். ஏறு விலங்கேற்றின் பொதுப்பெயர், அது ஈண்டைக்கேற்ப ஆண் சிங்கத்தையுணர்த்திற்று. (3)

உற்றார்சுற்றமெனுமதுவிட்டுநுன்னடைந்தே
னெற்றாலென்குறையேனிடரைத்துறந்தொழிந்தேன்
செற்றாய்மும்மதிலுந்திருமேற்றளியுறையும
பற்றேநுன்னையல்லால்பணிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) உற்றார் - உற்றவராகிய, சுற்றம் என்னும் அது - சுற்றத்தார் என்கின்ற அந்தக் கொள்கையை, விட்டு - ஒழித்து, நுன் அடைந்தேன் - உன்னை யடுத்தேன், எற்றால் - எதனாலும், என் குறையேன் - என்ன குறை யுடையேன், இடரை - துன்பத்தை, துறந்து ஒழிந்தேன் - விட்டு நீங்கினேன், மும்மதிலும் - முப்புரத்தையும், செற்றாய் - அழித்தாய், திருமேற்றளி உறை யும் - திருமேற்றளியில் வாழ்கின்ற, பற்றே - ஆதாரமே, நுன்னை யல்லால் - உன்னையன்றி, பணிந்து ஏத்தமாட்டேன் - வேறொருவரை வணங்கித் துதிக் கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) உற்றவராகிய சுற்றத்தாரென்கின்ற அந்தக் கொள்கை யை ஒழித்து உன்னை யடுத்தேன், எதனாலும் என்ன குறையுடையேன், துன்பத்தை விட்டு நீங்கினேன், முப்புரத்தையும் அழித்தாய், திருமேற்றளியில் வாழ்கின்ற ஆதாரமே, உன்னையன்றி வேறொருவரை வணங்கித் துதிக்க மாட்டேன்.

(கு-ரை.) திருமேற்றளியுறையும் பற்றே, உன்னையல்லால், வேறொருவ ரைப் பணிந்தேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) செறல் - அழித்தல். பற்று - ஆதாரம். (4)

எம்மானெம்மனையேயென்பவரிட்டிறந்தொழிந்தார்
மெய்ம்மாலாயினதீர்த்தருள்செய்யுமெய்ப்பொருளே
கைம்மாவீருரியாய்கனமேற்றளியுறையும்
பெம்மானுன்னையல்லால்பெரிதேத்தமாட்டேனே.

(ப-ரை.) எம்மான் - எமது தந்தை, எம் அன்னை - எமது தாய், என்ப வர் - என்று சொல்லப்பட்டவர்கள், இட்டு — என்னை யிங்குவைத்து, இறந்து ஒழிந்தார் - இறந்துபோயினர், (ஆதலால்) மெய் - உண்மையாகிய, மால் ஆயின - மயக்கங்கள் ஆயினவற்றை, தீர்த்து அருள்செய்யும் - ஒழித் தரு ளுகிற, மெய் பொருளே - உண்மைப்பொருளே, கைம்மா - யானையின், ஈர் உரியாய் - குளிர்ந்த தோலையுடையவனே, கனம் - பெருமை பொருந்திய,

மேற்றளி உறையும் - திருமேற்றளியில் வாழ்கின்ற, பெம்மான்-பெருமானே, உன்னை அல்லால் - உன்னையன்றி, பெரிது எத்தமாட்டேன்-வேறொருவரை மிகவும் துதிக்கமாட்டேன் எ-று.

(போ-ரை.) எமது தந்தை எமது தாய் என்று சொல்லப்பட்டவர்கள், என்னை யிங்கு வைத்து இறந்துபோயினர். (ஆதலால்) உண்மையாகிய மயக்கங்க ளாயினவற்றை யொழித்தருளுகிற மெய்ப்பொருளே, யானையின் குளிர்ந்த தோலையுடையவனே, பெருமைபொருந்திய திருமேற்றளியில் வாழ்கின்ற பெருமானே, உன்னையன்றி வேறொருவரை மிகவும் துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியுறையும் பெம்மானே, உன்னையல்லால் வேறொருவரைப் பெரிதும் எத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) மெய்மால் - உடம்பைப்பற்றின மயக்கம் எனினுமாம். (5)

நானே லுன்னடியே நினைந்தேனினை தலுமே
யூனாரிவ்வுடலம்புகுந்தாயென்னொண்சுடரே
தேனேயின்னமுதே திருமேற்றளியுறையுங்
கோனேயுன்னையல்லாற்குளிர்ந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) நானேல் - நானோ வெனில், உன் அடியே நினைந்தேன்-உன் பாதத்தையே நினைந்திருந்தேன், நினைதலும் - நினைத்தவளவில், ஊன் ஆர் - மாமிசம் நிறைந்த, இவ்வுடலம் புகுந்தாய் - இவ்வுடம்பிற் பிரவேசித்தாய், என் ஒள் சுடரே-எனது ஒட்பமாகிய சோதியே, தேனே—, இன் - இனிய, அமுதே-அமிர்தமே, திருமேற்றளி உறையும்-திருமேற்றளியில் வாழ்கின்ற, கோனே - இறைவனே, உன்னை அல்லால்- உன்னையன்றி, குளிர்ந்து-மனங்குளிர்ந்து, எத்த மாட்டேன்—வேறொருவரைத் துதிக்கமாட்டேன் எ-று.

(போ-ரை.) நானோ வெனில், உன் பாதத்தையே நினைந்திருந்தேன், மாமிசம் நிறைந்த இவ் வுடம்பிற் பிரவேசித்தாய், எனது ஒட்பமாகிய சோதியே, தேனே, இனிய அமிர்தமே, திருமேற்றளியில் வாழ்கின்ற இறைவனே, உன்னை யன்றி மனங்குளிர்ந்து வேறொருவரைத் துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியுறையும் கோனே, உன்னையல்லால் வேறொருவரைக் குளிர்ந் தேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) எல் எனின் என்பதன் மரூஉ, இன் அமுதுக்குச் சாதியடை.

கையார்வெஞ்சிலைநாணதன்மேற்சரங்கோத்தே
யெய்தாய்மும்மதிலுமெரியுண்ணவெம்பெருமான்
செய்யார்பைங்கமலத்திருமேற்றளியுறையு
மையாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) கை ஆர் - கையினிடத்துப் பொருந்திய, வெம்சிலை-கொடிய வில்லாகிய, அதன்மேல்-அதன்மீது, சரம்கோத்து-அம்பு தொடுத்து, மும்மதி

னும் எரி உண்ண-மும்மதில்களையும் நெருப்புண்ணும்படி, எய்தாய்-எய்தவனே, எம்பெருமான்-எம்பெருமானே, செய் ஆர் பைங்கமலம்-வயல்களிலுள்ள பசிய தாமரை மலர்கின்ற, திருமேற்றளி உறையும்-திருமேற்றளியில்வாழ்கின்ற, ஐயா-ஐயனே, உன்னை அல்லால் - உன்னையன்றி, அறிந்து எத்தமாட்டேன் - வேறொருவரை யறிந்து துதிக்கமாட்டேன். எ-று.

(பொ-ரை) கையினிடத்துப் பொருந்திய கொடிய வில்லாகிய அதன் மீது அம்பு தொடுத்து, மும்மதில்களையும் நெருப்புண்ணும்படி எய்தவனே, எம்பெருமானே, வயல்களிலுள்ள பசிய தாமரை மலர்கின்றதிருமேற்றளியுறையும் ஐயனே, உன்னையன்றி வேறொருவரை யறிந்து துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியுறையும் ஐயா, உன்னையல்லால், வேறொருவரை யறிந் தேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) காண்-அசை. சரம்-வடசொல்.

விரையார்கொன்றையினாய்விமலாவினியுன்னையல்லா
லுரையேனுவதனாலுடலில்லுயிருள்ளளவுந்
திரையார்தண்கழனித்திருமேற்றளியுறையு
மரையாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) விரை ஆர் கொன்றையினாய்-வாசனை பொருந்திய கொன்றைமாலையைச்சூடினவனே, விமலா-விமலனே, உடலில் உயிர் உள்ள அளவும்-உடம்பில் உயிருள்ளமட்டும், உன்னை யல்லால் - உன்னையன்றி, நா அதனால்-நாவினால், உரையேன்-வேறொருவரைத் துதியேன், திரை ஆர்-அலைகள் நிறைந்த, தண்கழனி-குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, திருமேற்றளி உறையும்-திருமேற்றளியில் வாழ்கின்ற, அரையா-அரசனே, உன்னை அல்லால் - உன்னையன்றி, அறிந்து எத்தமாட்டேன்-வேறொருவரை யறிந்து துதிக்கமாட்டேன் எ-று.

(பொ - ரை.) வாசனை பொருந்திய கொன்றை மாலையைச் சூடினவனே, விமலனே உடம்பில் உயிருள்ளமட்டும் உன்னையன்றி நாவினால் வேறொருவரைத் துதியேன், அலைகள் நிறைந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருமேற்றளியில் வாழ்கின்ற அரசனே, உன்னையன்றி வேறொருவரை யறிந்து துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியுறையும் அரையா, உன்னையல்லால் வேறொருவரையறிந்தேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) விமலன்-மலநீக்க முள்ளவன். திரை - ஆகுபெயர். (8)

நிலைபாய்நின்னடியேநினைந்தேனினைதலுமே
தலைவாநின்னினையப்பணித்தாய்சலமொழிந்தேன்
சிலையார்மாமதில்சூழ்திருமேற்றளியுறையு
மலையேயுன்னையல்லால்மகிழ்ந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) நிலையாய்-நிலையாக, நின் அடியே நினைந்தேன்-உன்பாதத்தையே நினைந்தேன், நினைதலும்-நினைந்தளவில், தலைவா-முதல்வனே, நின் நினைய பணித்தாய் – உன்னை நினைக்கும்படி நியமித்தனை, சலம் ஒழிந்தேன்-துன்பம் நீங்கினேன், சிலை ஆர்-மலைபோன்ற, மாமதில் சூழ்-பெரிய மதில் வளைந்த, திருமேற்றளி உறையும்-திருமேற்றளியில் வாழ்கின்ற, மலையே-பர்வதமே, உன்னையல்லால்-உன்னையன்றி, மகிழ்ந்து எத்தமாட்டேன் - (வேறொருவரை) விரும்பித் துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) நிலையாக உன்பாதத்தையே நினைந்தேன், நினைந்தளவில், முதல்வனே, உன்னை நினைக்கும்படி நியமித்தனை, துன்பம் நீங்கினேன், மலைபோன்ற பெரிய மதில்வளைந்த திருமேற்றளியில் வாழ்கின்ற பர்வதமே, உன்னையன்றி வேறொருவரை விரும்பித் துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருமேற்றளியுறையும் மலையே, உன்னையல்லால் வேறொருவரை மகிழ்ந்தேத்தமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) ஆர்-உவமவுருபு. தலைவன்-முதல்வன். சிலை - ஆகுபெயர். (9)

பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
யாரூரனடியானடித்தொண்டனாரூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே.

(ப-ரை.) பார் ஊர்-உலகமெங்கும் புகழ் பரவப்பெற்ற, பல்லவன்-பல்லவராஜனது, ஊர்-ஊராகிய, மதில்-மதில் சூழ்ந்த, காஞ்சிமாநகர்வாய்-காஞ்சிமாநகரத்தில், சீர் ஊரும்-சிறப்புப் பொருந்திய, புறவில்-முல்லைநிலத்திலுள்ள, திருமேற்றளி சிவனை - திருமேற்றளியில் வாழ்கின்ற சிவபெருமானை, (ஆரூரன்-அடியான்—, அடித்தொண்டன்—, ஆரூரன்--,) சுந்தரன் சொன்ன—, சீர் ஊர் பாடல் வல்லார் - சிறப்புப் பொருந்திய பாடலைக் கற்று வல்லவர், சிவலோகம் சேர்வார்-சிவநகரையடைவர் எ-று.

(பொ-ரை.) உலகமெங்கும் புகழ் பரவப்பெற்ற பல்லவராஜனது ஊராகிய மதில் சூழ்ந்த காஞ்சிமாநகரத்தில் சிறப்புப் பொருந்திய முல்லை நிலத்திலுள்ள திருமேற்றளியில் வாழ்கின்ற சிவபெருமானை, ஆரூரன் சொன்ன சிறப்புப்பொருந்திய பாடலைக் கற்று வல்லவர் சிவநகரை யடைவர்.

(க-ரை.) திருமேற்றளிச் சிவபெருமானை ஆரூரன் புகழ்ந்துரைத்த இந்தப்பத்துப் பாடலுங் கற்று வல்லவர் சிவலோகத்தை யடைவர் என்பதாம்.

(வி-ரை.) பல்லவன் – ஓரரசன். சிவலோகம்-சிவபுரம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமேற்றளியீசுவரர். தேவியார்-திருமேற்றளிநாயகி.

## திருப்பழமண்ணிப் படிக்கரை

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

முன்னவனெங்கள்பிரான்முதல்காண்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான் றிருநீலமிடற்றெம்பிரான்
மன்னியவெங்கள்பிரான்மறைநான்குங்கல்லானிழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) முன்னவன் - முதல்வன், எங்கள் பிரான் - எங்கள்பெருமான், முதல் காண்பு அரிது ஆய-அடிகாண்பது அரிதாகிய, பிரான் - பெருமான், சென்னியில் - சோழ தேயத்திலுள்ள, எங்கள் பிரான் - எம்பெருமான், திரு- அழகிய, நீலமிடறு - நீலகண்டத்தையுடைய, எம்பிரான் - எம்பெருமான், மன்னிய - நிலைபெற்ற, எங்கள் பிரான் - எம்பெருமான், மறை நான்கும் - நான்கு வேதப் பொருளினையும், கல் ஆல் நிழல் கீழ் - கல்லாலின் நீழலின் கீழே, பன்னிய - (சனகாதியர்க்குச்) சொல்லியருளின, எங்கள்பிரான் - எம் பெருமான், (அவனுக்கிடமாயிருப்பது) பழமண்ணிப் படிக்கரையே - திருப் பழமண்ணிப் படிக்கரையேயாம் எ-று.

(பொ-ரை.) முதல்வன், எங்கள் பெருமான், அடிகாண்பது அரிதாகிய பெருமான், சோழ தேயத்திலுள்ள எங்கள் பெருமான், அழகிய நீலகண்டத் தை யுடைய எம்பெருமான், நிலைபெற்ற எங்கள் பெருமான், நான்கு வேதப் பொருளினையும் கல்லாலின் நீழலின் கீழே (சனகாதியர்க்குச்) சொல்லியரு ளின எம்பெருமான் (அவனுக் கிடமாயிருப்பது) திருப்பழமண்ணிப் படிக் கரையே யாம்.

(கு-ரை.) முன்னவன் முதலிய திருநாமங்களால் துதிக்கப்படுகிற சிவபி ரானுக் கிடமாயிருப்பது திருப்பழ மண்ணிப் படிக்கரையேயா மென்பதாம்.

(வி-ரை.) சென்னி ஆகுபெயர். சநகாதியராவார்-சநக சநந்தந சநத்குமார சநத்ஸுஜாதர் என்பவர். (1)

அண்டங்கபாலஞ்சென்னியடிமேலலரிட்டுநல்ல
தொண்டங்கடிபரவித்தொழுதேத்திநின்றாடுமிடம்
வெண்டிங்கள்வெண்மழுவன்விரையார்கதிர்மூவிலைய
பண்டங்கன்மேயவிடம்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) கபாலம் சென்னி - கபாலத்தோடு கூடிய திருமுடியானது அண்டம் - விண்ணுலகத்தின் மேலது, அடிமேல் - திருவடியின் மீது, அலர் இட்டு - மலர்கள் சொரிந்து, நல்ல தொண்டு - நல்ல தொண்டர்கள், அங்கு அடி பரவி-அவ்விடத்துத் திருவடியை வாழ்த்தி, தொழுது-வணங்கி, ஏத்தி- துதித்து, நின்று ஆடும் இடம் - நின்று ஆனந்தக் கூத்தாடுகின்ற இடமாவது,

வெள் திங்கள் மழுவன் - வெள்ளிய பிறையையும் வெள்ளிய மழுவையுமுடையவன், விரை ஆர் கதிர் - வேகத்தோடு கூடிய ஒளியை யுடைய, மூ இலைய - திரிசூலத்தை யுடைய, பண்டங்கள் - சிவபெருமான், மேய - எழுந்தருளியிருக்கிற, இடம் - இடமாவது, பழமண்ணிப் படிக்கரையே - திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம் எ-று.

(பொ-ரை.) கபாலத்தோடு கூடிய திருமுடியர்ந்து விண்ணுலகத்தின் மேலது, திருவடியின்மீது மலர்கள் சொரிந்து நல்ல தொண்டர்கள் அவ்விடத்துத் திருவடியை வாழ்த்தி வணங்கித் துதித்து நின்று ஆனந்தக்கூத்தாடுகின்ற இடமாவது, வெள்ளிய பிறையையும் வெள்ளிய மழுவையு முடையவன், வேதத்தோடு கூடிய ஒளியையுடைய திரிசூலத்தை யுடைய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கிற இடமாவது திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(க-ரை.) அண்டமளாவிய திருமுடியையுடைய சிவபிரானுக் கிடமாயிருப்பது திருப்பழ மண்ணிப் படிக்கரையேயா மென்பதாம்.

(வி-ரை.) தொண்டு ஆகுபெயர். விரை - தொழிற் பெயர். பாண்டரங்கம் சிவன் கூத்து. அதனை யுடையவனுதலால் அவனை பாண்டரங்கன் என்பர். அது பண்டங்கன் எனச் சிதைந்து மருஉவாயிற்று. (2)

ஆடுமினன்புடையீரடிக்காட்பட்டதூளிகொண்டு
சூடுமின்றொண்டருள்ளீருமரோடெமர்சூழவந்து
வாடுமின்வாழ்க்கைதன்னைவருந்தாமற்றிருந்தச்சென்று
பாடுமின்பத்தருள்ளீர்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) அன்பு உடையீர் - அன்புடையவர்களே, ஆடுமின் - ஆடுங்கள், அடிக்கு ஆட்பட்ட - திருவடியில் பொருந்தின, தூளிகொண்டு - பொடியைக் கொண்டு, சூடுமின் - சூடுங்கள், தொண்டர் உள்ளீர்-தொண்டர்களா யுள்ளவர்களே, உமரோடு - உம்மவரோடு, எமர் - எம்மவரும், சூழவந்து - சூழும்படி வந்து, வாழ்க்கை தன்னை வாடுமின் - உலகவாழ்வை விட்டொழியுங்கள், வருந்தாமல்-வருத்தப்படாமல், திருந்தச்சென்று-செவ்வையாகப்போய், பாடுமின்-பாடுங்கள், பத்தர் உள்ளீர்-பத்தர்களாய் உள்ளவர்களே, (அவனுக் கிடமாயிருப்பது) பழமண்ணிப் படிக்கரையே - திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(பொ-ரை.) அன்புடையவர்களே ஆடுங்கள், திருவடியிற் பொருந்தின பொடியைக்கொண்டு சூடுங்கள், தொண்டர்களா யுள்ளவர்களே, உம்மவரோடு எம்மவரும் சூழும்படிவந்து உலகவாழ்வை விட்டொழியுங்கள், வருந்தாமல் செவ்வையாகப்போய் பாடுங்கள், பத்தர்களா யுள்ளவர்களே, (அவனுக் கிடமாயிருப்பது) திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(க-ரை.) அன்பர்களே, திருப்பழ மண்ணிப்படிக்கரையி லெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானைப் பாடி யாடுங்கள் என்பதாம்.

(வி-ரை.) தூளி-வடசொல். சூடுதல்-சிரமேற்றரித்தல். வாட்டுமின் என்பது வாடுமின் என எதுகை நோக்கி வந்தது. (3)

அடுதலையேபுரிந்தானவையந்தரமூவெயிலுங்
கெடுதலையேபுரிந்தான்கிளருஞ்சிலைநாணியிற்கோ
லடுதலையேபுரிந்தானரிகான்றிட்டவெச்சில்வெள்ளைப்
படுதலையேபுரிந்தான்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) அவை - அவையாகிய, அந்தரம் - ஆகாயத்திற்றிரிகிற, மூவெயிலும், மும்மதில்களையும், அடுதலையே புரிந்தான் - அழித்தலையே செய்தவனாகி, கெடுதலையே புரிந்தான் - கெடுதியே செய்தவன், கிளரும் - விளங்குகின்ற, சிலை நாணியில் - வில் நாணில், கோல் இடுதலையே புரிந்தான் - அம்பு தொடுதலையே செய்தவன், அரிகான்றிட்ட - திருமால் உமிழ்ந்து விட்ட, எச்சில் - எச்சிலை, வெள்ளை படுதலையே - வெண்மை ஆதலையே, புரிந்தான்-செய்தவன், (அவனுக்கிடமாயிருப்பது) பழமண்ணிப் படிக்கரையே - திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம் எ-று.

(பொ-ரை.) அவையாகிய ஆகாயத்தில் திரிகிற மும்மதில்களையும் அழித்தலையே செய்தவனாகி கெடுதியே செய்தவன், விளங்குகின்ற வில் நாணில் அம்பு தொடுத்தலையே செய்தவன், திருமால் உமிழ்ந்துவிட்ட எச்சிலை வெண்மையாதலையே செய்தவன், (அவனுக்கிடமாயிருப்பது) திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(க-ரை.) திரிபுர மெரித்தல் முதலியவற்றைச் செய்த சிவபிரானுக் கிடமாயிருப்பது திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(வி-ரை.) அரிகான்றிட்ட எச்சில் வெள்ளைப் படுதலையே புரிந்தான் என்பதற்கு பாம்பினுலுமிழப்பட்ட வெண்பிறையோடு, இறந்தாரது தலைமாலையை யுடையவன் என்றுரைத்தலுமாம். (4)

உங்கைகளாற்கூப்பியுவந்தேத்தித்தொழுமின்றொண்டீர்
மங்கையோர்கூறுடையான்வானோர்முதலாயபிரான்
அங்கையில்வெண்மழுவன்னலையார்கதிர்மூவிலைய
பங்கயபாதனிடம்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) தொண்டீர் - தொண்டர்களே, மங்கை ஓர் கூறு உடையான் - உமாதேவியை ஒருபங்கி லுடையவன், வானோர் முதல் ஆய பிரான்-தேவர்களுக்குத் தலைவனாகிய பெருமான், அம் கையில்-அழகிய கையினிடத்து, வெள் மழுவன் - வெள்ளிய மழுவையுடையவன், அலை ஆர் கதிர் - அசையாநின்ற ஒளியையுடைய, மூ இலைய-முத்தலைச் சூலத்தை யேந்தின, பங்கயபாதன் - தாமரை மலர்போலுந் திருவடியையுடைய சிவபிரானது, இடம்-இடமாகிய, பழமண்ணிப்படிக்கரை - திருப்பழமண்ணிப் படிக்கரையை, உம் கைகளால் - உமது கைகளாலே, கூப்பி – அஞ்சலிசெய்து, உவந்து எத்தி தொழுமின் - மகிழ்ந்து துதித்து வணங்குங்கள் எ-று.

(பொ-ரை.) தொண்டர்களே, உமாதேவியை ஒரு பங்கி லுடையவன், தேவர்களுக்குத் தலைவனாகிய பெருமான், அழகிய கையினிடத்து வெள்ளிய

மழுவையுடையவன், அசையாநின்ற வொளியையுடைய முத்தலைச் சூலத்தை யேந்தின, தாமரைமலர்போலுந் திருவடியையுடைய சிவபிரானது இடமாகிய திருப்பழமண்ணிப் படிக்கரையை உமது கைகளாலே அஞ்சலிசெய்து மகிழ்ந்து துதித்து வணங்குங்கள்.

(கு-ரை.) தொண்டர்களே, திருப்பழமண்ணிப் படிக்கரை யெம்பிரானது திருவடியை உங்கள் கைகூப்பித் தொழுங்கள் என்பதாம்.

(வி-ரை.) உகத்தல் - புகழ்தல். மங்கை - உமாதேவி. முதல் ஆகுபெயர். பங்கயம் - தாமரை. சேற்றிற் பிறப்பதென்னும் பொருளதோர் வடசொற் றிரிபு இது எதுகை நோக்கி பங்கையம் என வந்தது. (5)

செடிபடத்தீவிளைத்தான்சிலையார்மதிற்செம்புனஞ்சேர்
கொடிபடுமூரிவெள்ளையெருதேற்றையுமேற்கொண்டான்
கடியவன்காலன்றன்னைக்கறுத்தான்கழற்செம்பவளப்
படியவன்பாசுபதன்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) சிலை ஆர் மதில் - மலைபோலும் மும்மதில்கள், செம்புனம்சேர் கொடிபட - செந்நெருப்பின் கொழுந்துகள் படரும்படி, செடிபட - துன்பமுண்டாக, தீ விளைத்தான் - நெருப்பை எவினவன், மூரி - வலிமைபொருந்திய, வெள்ளை எருது எற்றையும் - வெள்ளெருதின் மேலும், மேல் கொண்டான் - எறிக்கொண்டவன், கடியவன் - கொடியவனாகிய, காலன் தன்னை - யமனை, கறுத்தான் - கோபித்தவன், கழல் - திருவடி, செம்பவளம் படியவன் - செம்பவளம்போல் இருக்கப் பெற்றவன், பாசுபதன் - பாசுபதத்தை யுடையவன், (அவனுக் கிடமாவது) பழமண்ணிப்படிக்கரையே - திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம் எ-று,

(பொ-ரை.) மலைபோலு மும்மதில்கள் செந்நெருப்பின் கொழுந்துகள் படரும்படி துன்ப முண்டாக நெருப்பை யேவினவன், வலிமை பொருந்திய வெள்ளெருதின்மேலும் எறிக்கொண்டவன்,கொடியவனாகிய காலன் தன்னை கோபித்தவன், திருவடி செம்பவளம்போ லிருக்கப் பெற்றவன், பாசுபதன் (அவனுக்கிடமாயிருப்பது) திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(கு-ரை.) முப்புரமழியத் தீவிளைத்த சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருப்பழமண்ணிப் படிக்கரையேயா மென்பதாம்.

(வி-ரை.) செடி-துன்பம். எருதேறு-எருது. கறுத்தல் - கோவித்தல், படி உவமவுருபு. (6)

கடுத்தவன்றேர்கொண்டோடிக்கயிலாயநன்மாமலையை
யெடுத்தவனீரைந்துவாயரக்கன்முடிபத்தலற
விடுத்தவன்கைநரம்பால்வேதகீதங்கள்பாடலுறப்
படுத்தவன்பால்வெண்ணீற்றன்பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) கடுத்தவன் - வேகங்கொண்டவனாய், தேர் கொண்டு ஓடி - தேரேறி விரைந்து வந்து, கயிலாயம் நல் மா மலையை எடுத்தவன் - கயிலாயமாகிய நல்ல மலையை எடுத்தவனாகி, ஈர் ஐந்து வாய் - பத்துவாயினையுடைய, அரக்கன் - அரக்கனாகிய இராவணனது, முடி பத்து - பத்துச் சிரங்களும், அலற விடுத்தவன் - வருந்தவிட்டவன், கைநரம்பால் - கைநரம்பினால், வேத கீதங்கள் - வேதகீதங்களை, பாடல் உற - பாடத்தொடங்க, படுத்தவன் - நியமித்தவன், பால் வெள் நீற்றன் - பால்போலும் வெள்ளிய திருநீற்றையுடையவன், (அவனுக் கிடமாயிருப்பது) பழமண்ணிப்படிக்கரையே - திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம் எ-று.

(பொ-ரை.) வேகங்கொண்டவனாய் தேரேறி விரைந்து வந்து கயிலாயமாகிய நல்ல மலையை எடுத்தவனாகி பத்து வாயினையுடைய அரக்கனாகிய இராவணனது பத்துச் சிரங்களும் வருந்தவிட்டவன், கைநரம்பினால் வேத கீதங்களை பாடத்தொடங்க நியமித்தவன், பால்போலும் வெள்ளிய திருநீற்றையுடையவன் (அவனுக்கிடமாயிருப்பது) திருப்பழமண்ணிப்படிக்கரையேயாம்.

(கு-ரை.) கயிலாய மலையை யெடுத்தவனாகிய ராவணனது சிரந் தோள்களை நெரித்தவனாகிய சிவபிரானுக் கிடமாயிருப்பது திருப்பழமண்ணிப் படிக்கரையேயா மென்பதாம்.

(வி-ரை.) கடுத்தல் - விரைதல். அலறல் - அரற்றல். (7)

திரிவனமும்மதிலுமெரித்தானிமையோர்பெருமா
னரியவனட்டபுட்பமவைகொண்டடிபோற்றிநல்ல
கரியவனுன்முகனுமடியுமுடிகாண்பரிய
பரியவனபாசுபதன் பழமண்ணிப்படிக்கரையே.

(ப-ரை.) திரிவன - சுழல்வனவாகிய, மும்மதிலும் எரித்தான் - முப்புரங்களையும் எரித்தவன், இமையோர்பெருமான் - தேவர்கோன், அரியவன் - காண்டற் கருமையானவன், அட்ட புட்பம் அவைகொண்டு - எண்வகை மலர்களைக் கொண்டு, அடிபோற்றி - திருவடியை வழிபட்டு, நல்ல கரியவன் - நன்மையாகிய நீலநிறத்தையுடைய திருமாலும், நான்முகனும் - பிரமனும், அடியும் முடி காண்பு அரிய - அடியையும் முடியையும் காண்டற் கரிதாகிய, பரியவன் - பெரியோன், பாசுபதன் - பாசுபதத்தையுடையவன், (அவனுக் கிடமாயிருப்பது) பழமண்ணிப் படிக்கரையே - திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம் எ-று.

(பொ-ரை.) சுழல்வனவாகிய முப்புரங்களையும் எரித்தவன், தேவர்கோன் காண்டற் கருமையானவன், எண்வகை மலர்களைக்கொண்டு திருவடியை வழிபட்டு, நன்மையாகிய நீல நிறத்தையுடைய திருமாலும் பிரமனும் அடியையும் முடியையும் காண்டற் கரிதாகிய பெரியோன், பாசுபதத்தை யுடையவன், (அவனுக்கிடமாயிருப்பது) திருப்பழமண்ணிப் படிக்கரையேயாம்.

(க-ரை.) திரிபுரநாசகனுகிய சிவபிரானுக்கு இருப்பிடமாவது திருப்பழமண்ணிப் படிக்கரையேயா மென்பதாம்.

(வி-ரை.) உம்மை கரியவனுக்கும் கூட்டி வுரைக்கப்பட்டது. முடியென்பதனீற்றும் உம்மை சேர்த்துரைச்கலாயிற்று. பரியவன் என்பதற்குப் பகுதி பருமை. அட்டபுட்பமாவன :—புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்னு மிவற்றின் புட்பங்களாம். இவை புலரிமுதலிய காலங்களிற் சாத்தும் அட்டபுட்பம், மற்று முள்ளவகைகளைப் புட்பவிதியிற் காண்க. (8)

வெற்றரைக்கற்றமணும்விரையாதுவிண்டாலமுணுந்
துற்றரைத்துற்றறுப்பான்றுன்னவாடைத்தொழிலுடையீர்
பெற்றரைப்பித்தரென்றுகருதேன்மின்படிக்கரையுட்
பற்றரைப்பற்றிநின்றுபழிபாவங்கடீர்மின்களே.

(ப-ரை.) வெறு அரை - வெற்றரையை யுடைய, கற்ற அமணும் - கற்ற சமணர்களும், விரையாது - விரையாமல், விண்டு - பிட்டு, ஆலம் உண்ணும் - நஞ்சு உண்கிற, துற்றரை - கவளத்தை யுடையவரை, துற்று அறுப்பான் - கவளம் பெறும்பொருட்டு, துன்னம் ஆடை தொழில் உடையீர்-தைத்தலாகிய ஆடைத் தொழிலை யுடையவர்களே, பெற்றரை-இடபவாகனரை, பித்தர் என்று கருதேல் மின் - பித்தரென்று நினையாதீர்கள், படிக்கரையுள் - பழமண்ணிப் படிக்கரையில், பற்றரை-விருப்பமுள்ளவரை, பற்றிநின்று-அடைந்துநின்று, பழிபாவங்கள் தீர்மின்கள் - பழிபாவங்களை யொழித்துக் கொள்ளுங்கள் எ-று.

(பொ-ரை.) வெற்றியையுடைய, கற்ற சமணர்களும் விரையாமல் பிட்டு நஞ்சையுண்கிற கவளத்தை யுடையவரை, கவளம் பெறும் பொருட்டு, தைத்தலாகிய ஆடைத்தொழிலை யுடையவர்களே, இடபவாகனரை, பித்த ரொன்று நினையாதீர்கள், பழமண்ணிப் படிக்கரையில் விருப்பமுள்ளவரை அடைந்து நின்று, பழிபாவங்களை யொழித்துக் கொள்ளுங்கள்.

(க-ரை.) துன்னவாடைத் தொழிலுடையீர், நீங்கள் திருப்பழமண்ணிப் படிக்கரை யெம்பிரானை யடைந்து நின்று நம் பழிபாவங்களை யொழித்துக் கொள்ளுங்க ளென்பதாம்.

(வி-ரை.) கற்ற மண் என்பதில் நிலை மொழியி னீற்றகரம் தொகுத்தல். துற்று - கவளம். துன்னம் - தைத்தல். பெற்றம் - எருது. (9)

பல்லுயிர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரையை
யல்லியந்தாமரைத்தாரரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிளைக்கும்
எல்லியுநண்பகலுமிடர்கூருதலில்லையன்றே.

(ப-ரை.) பல் உயிர் - பலஜீவர்கள், வாழும் - வாழ்கின்ற, தெள்நீர் - தெளிந்த நீரையுடைய, பழமண்ணிப் படிக்கரையை - திருப்பழமண்ணிப் படிக்கரையை, அல்லி - அகவிதழ்களையுடைய, அம் - அழகிய, தாமரை தார் - தாமரைமலர்மாலை யணிந்த, ஆரூரன் - சுந்தரன், உரைத்த - சொன்ன, தமிழ் - தமிழ்ப்பாடல்களை, சொல்லுதல் - சொல்லுதலினும், கேட்டல் - கேட்டலினும், வல்லார் - வல்லவராகிய, அவர்க்கும் - அவர்களுக்கும், தமர்க்கும் - அவரது சிநேகர்க்கும், கிளைக்கும் - உறவினர்க்கும், எல்லியும் -இரவினும், நண்பகலும் - நடுப்பகலினும், இடர் கூருதல் இல்லை - துன்பம் மிகுதல் இல்லையாகும் எ-று.

(பொ-ரை.) பல ஜீவர்கள் வாழ்கின்ற தெளிந்த நீரையுடைய பழமண்ணிப் படிக்கரையை, அகவிதழ்களை யுடைய அழகிய தாமரை மலர் மாலையணிந்த ஆரூரன் உரைத்த தமிழ்ப்பாடல்களைச் சொல்லுதலினும் கேட்டலினும் வல்லவராகிய அவர்க்கும் அவரது சிநேகருக்கும் உறவினர்க்கும் இரவினும் நடுப்பகலினும் துன்பமிகுதல் இல்லையாகும்.

(க-ரை.) திருப்பழமண்ணிப் படிக்கரை யெம்பெருமானைத் திருநாவலூரன் புகழ்ந்துரைத்த தமிழ்ப்பாடலைக் கற்று வல்லவர் துன்புறலில்லையென்பதாம்.

(வி-ரை.) பலஜீவர்கள்-மீன்முதலிய பல வுயிர்கள். தாமரை ஆகுபெயர்.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நீலகண்டேசர். தேவியார்-வடிக்கண்முகாம்பிகை.

---

## திருக்கழிப்பாலை.

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

செடியேன் றீவினையிற்றடுமாற்றங்கண்டாலு
மடியானவவெனுதொழிதல்தகவாமே
முடிமேல்மாமதியும்மரவுமுடன்றுயிலும்
வடிவேதாமுடையார்மகிழுங்கழிப்பாலையதே.

(ப-ரை.) முடிமேல் - திருமுடிமீது, மா - பெருமை பொருந்திய, மதியும் - பிறையும், அரவும் - பாம்பும், உடன் துயிலும் - உடன் தூங்குகின்ற, வடிவே - திருவுருவத்தையே, தாம் உடையார் - தாம் உடையவராகிய சிவபெருமானார், மகிழும் - விரும்புகின்ற, கழிப்பாலை-திருக்கழிப் பாலையானது, செடியேன் - குற்றத்தையுடைய நான், தீவினையில் - தீவினையினிடத்து, தடு

மாற்றம் - தடுமாறுதலை, கண்டாலும் - பார்த்தாலும், ஆவ - அந்தோ, அடியான் என்று ஒழிதல்-நம்மடியவனென்றொழிதலும், தகவு ஆமே - தகுதியாமோ எ-று.

(பொ-ரை.) திருமுடிமீது பெருமைபொருந்திய பிறையும் பாம்பும் உடன் தாங்குகிற திருவுருவத்தையே தாமுடையவராகிய சிவபெருமானார் விரும்புகின்ற திருக்கழிப் பாலையானது குற்றத்தையுடைய நான் தீவினையினிடத்துத் தடுமாறுதலைப் பார்த்தாலும், அந்தோ, நம்மடியவனென்றொழிதலும் தகுதியாமோ.

(க-ரை.) திங்கள் முடியானாகிய சிவபெருமான் வாழ்கின்ற திருக்கழிப் பாலையானது என் தடுமாற்றங்கண்டு அந்தோவென் றிரங்காதிருத்தல் தகுதியாமோ வென்பதாம்.

(வி-ரை) செடி - குற்றம். ஆவ இரக்கக் குறிப்பிடைச்சொல், ஆமே இதில் ஏகாரம் வினா. (1)

எங்கேனுமிருந் துன்னடியேனுனை நினைந்தா
லங்கேவந்தென்னொடுமுடனாகிநின் றருளி
யிங்கேயென்வினையையறுத் திட்டெனையாளுங்
கங்காநாயகனேகழிப்பாலைமேயானே.

(ப-ரை.) எங்கு எனும் - எவ்விடத்தாயினும், இருந்து-இருந்துகொண்டு, உன் அடியேன் - உன் தொண்டனாகிய நான், உன்னை நினைந்தால் - உன்னை நினைத்தால், அங்கே வந்து - அவ்விடத்துவந்து, என்னொடும் உடன் ஆகி நின்று அருளி - என்னுடன் கூடியிருந்தருளி, இங்கே என் வினையை அறுத்திட்டு—, என்னை ஆளும் கங்கா நாயகனே - என்னை யாண்டருளுப கங்கைக் கணவனே, கழிப்பாலை மேயானே-திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) எவ்விடத்தாயினும் இருந்து கொண்டு உன் தொண்டனாகிய நான் உன்னை நினைத்தால் அவ்விடத்து வந்து என்னுடன் கூடியிருந்தருளி, இங்கே என்வினையை அறுத்திட்டு இவ்விடத்தே என்னை யாண்டருளும் கங்கைக் கணவனே, திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானே, நானெவ்விடத்திருந்துன்னை நினைத்தாலும் அவ்விடத்தே யெழுந்தருளி யென்னை யாண்டருள வேண்டு மென்பதாம்.

(வி-ரை.) வினை யென்றது வினையான்வந்த பிறவியை. கங்காநாயகன் வடநூன் முடிபு. (2)

ஒறுத்தாய்நின்னருளிலடியேன்பிழைத்தனகள்
பொறுத்தாயெத்தனையுநாயேனைப்பொருட்படுத்திச்
செறுத்தாய்வேலைவிடமறியாமலுண்டுகண்டங்
கறுத்தாய்தண்கழனிக்கழிப்பாலைமேயானே.

(ப-ரை.) அடியேன் - தொண்டனேன், பிழைத்தனகள் - பிழைத்தனவற்றை, நின் அருளில் - உன் கருணையினால், ஒறுத்தாய்-சிக்ஷித்து, நாயேனை பொருட்படுத்தி - நாயினேனை யொருபொருளாக மதித்து, எத்தனையும் பொறுத்தாய் - எவ்வளவும் பொறுத்தருளினை, வேலை - பாற்கடலிற் றோன்றின, விடம் - நஞ்சானது, மறியாமல் - (தேவர் முதலியோரைத்) தடுக்காமல், உண்டு - உண்டருளி, செறுத்தாய் - அதன் வேகத்தைத் தணித்து, கண்டம் கறுத்தாய் - கண்டங் கறுத்தவனே, தண் - குளிர்ந்த, கழனி - வயல் சூழ்ந்த, கழிப்பாலை மேயானே-திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) தொண்டனேன் பிழைத்தனவற்றை உன் கருணையினால் சிக்ஷித்து, நாயினேனை யொரு பொருளாக மதித்து எவ்வளவும் பொறுத்தருளினை, பாற்கடலிற் றோன்றின நஞ்சானது தேவர் முதலியோரைத் தடுக்காமல் உண்டருளி, அதன் வேகத்தைத் தணித்து, கண்டங் கறுத்தவனே, குளிர்ந்த வயல்சூழ்ந்த திருக்கழிப்பாலையில் எழுந்தருளியிருப்பவனே.

(கு-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானே, தொண்டனேன் செய்த பிழைகளெல்லாவற்றையும் பொறுத்தருளினை, உன் பெருங்கருணை யிருந்தவாறென் னென்பதாம்.

(வி-ரை.) ஒறுத்தல் - சிக்ஷித்தல். செறுத்தல் - தணித்தல். விடம் என மேல் வருதலால் வேலைபாற் கடலுக்காயிற்று. (3)

சுரும்பார்விண்டமலரவைதூவித்தூங்குகண்ணீ
ரரும்பாநிற்குமனத்தடியாரொடுமன்புசெய்வன்
விரும்பேனுன்னையல்லாலொருதெய்வமென்மனத்தாற்
கரும்பாருங்கழனிக்கழிப்பாலைமேயானே.

(ப-ரை.) சுரும்பு ஆர் - வண்டுகள் மொய்க்கின்ற, விண்ட மலர்-மலர்ந்த மலர்களாகிய, அவை - அவற்றை, தூவி - அருச்சித்து, தூங்கு - ஒழுகாநின்ற, கண் நீர் அரும்பாநிற்கும் - கண்ணீர் சுரந்து நிற்கின்ற, மனத்து-மனத்தினையுடைய, அடியாரோடும் - தொண்டரோடும், அன்பு செய்வன் - அன்பு செய்வேன், உன்னை அல்லால்-உன்னையன்றி, ஒரு தெய்வம் என்மனத்தால் விரும்பேன் - வேறொரு தெய்வத்தை என்மனத்தினால் நினைக்கமாட்டேன், கரும்பு ஆரும் - கருப்பஞ் சோலைகள் நிறைந்த, கழனி - வயல்சூழ்ந்த, கழிப்பாலை மேயானே - திருக்கழிப்பாலையில் எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) வண்டுகள் மொய்க்கின்ற மலர்ந்த மலர்களாகிய அவற்றை அருச்சித்து ஒழுகாநின்ற கண்ணீர் சுரந்து நிற்கின்ற மனத்தினையுடைய

தொண்டரோடும் அன்புசெய்வேன், உன்னையன்றி வேறொரு தெய்வத்தை என் மனத்தினுல் நினைக்கமாட்டேன், கருப்பஞ் சோலைகள் நிறைந்த வயல் சூழ்ந்ததிருக்கழிப்பாலையில் எழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானே, நான் உன் அடியாரோடும் அன்புசெய்வேன், உன்னையன்றி வேறொரு தெய்வத்தை விரும்பேன் என்பதாம்.

(வி-ரை.) தூவுதல் - சிந்துதல். அரும்புதல் - சுரத்தல். (4)

ஒழிப்பாயென்வினையையுகப்பாய்முனிந்தருளித்
தெழிப்பாய்மோதுவிப்பாய்விலையாவணமுடையாய்
கழிப்பால்கண்டறங்கச்சுழியேந்துமாமறுகிற்
கழிப்பாலைமருவுங்கனலேந்துகையானே.

(ப-ரை.) என் வினையை ஒழிப்பாய் - எனது கன்மத்தை நீக்குவாய், உகப்பாய் - சந்தோஷிப்பாய், முனிந்தருளி — கோபித்தருளி, தெழிப்பாய் — அதட்டுவாய், மோதுவிப்பாய் - அறைவிப்பாய், விலை ஆவணம் உடையாய் — அடிமைச் சீட்டை யுடையவனே, கழிப்பால் - கழியினிடத்துள்ள, கண்டல் தங்க - தாழைச் செடிகள் பொருந்த, சுழி ஏந்தும் - நீர்ச்சுழிகள் ஏந்திவருகிற, மாமறுகில் - பெருந்தெருக்களை யுடைய, கழிப்பாலை மருவும் - திருக்கழிப்பாலையி லெழுந்தருளியிருக்கிற, கனல் ஏந்து கையானே - நெருப்பை யேந்திய திருக்கரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) எனது கன்மத்தை நீக்குவாய், சந்தோஷிப்பாய், கோபித்தருளி அதட்டுவாய் - அறைவிப்பாய், அடிமைச் சீட்டையுடையவனே, கழியினிடத்துள்ள தாமரைச் செடிகள் பொருந்த, நீர்ச்சுழிகள் ஏந்திவருகிற பெருந்தெருக்களையுடைய திருக்கழிப்பாலையில் எழுந்தருளியிருக்கிற நெருப்பை யேந்திய திருக்கரத்தை யுடையவனே.

(க-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானே, என்வினையை யொழித்தருளுவா யென்பதாம்.

(வி-ரை.) உகத்தல்-சந்தோஷித்தல். முனிதல்-கோபித்தல். தெழித்தல் - அதட்டுதல். மறுகு — தெரு. (5)

ஆர்த்தானாடரவையரையார்புலியதண்மேற்
போர்த்தானானையின்றோலுரிவைபுலால்நாறக்
காத்தான்தொண்டுசெய்வார்வினைகளவைபோகப்
பார்த்தானுக்கிடமாம்பழியில்கழிப்பாலையதே.

(ப-ரை.) ஆடு அரவை - ஆடுமியல்புள்ள பாம்பை, அரை ஆர் - திருவரையிற் பொருந்திய, புலி அதள்மேல் - புலித்தோல்மீது, ஆர்த்தான் - கட்டினவனும், யானையின்தோல் உரிவை - யானையினின்றும் உரித்த தோலை,

புலால் நாற - புலால் நாற்றம் வீச, போர்த்தான்-போர்த்துக்கொண்டவனும், தொண்டு செய்வார் - அடிமை செய்வாருடைய, வினைகள் அவை போக - வினைகளாகிய அவைகள் விட்டொழியும்படி, காத்தான் - காத்தவனும், பார்த்தானுக்கு - அர்ச்சுனனுக்கு கடைக்கண் நோக்கஞ் செய்தருளினவனுமாகிய அவனுக்கு, பழி இல் கழிப்பாலை - பழிப்பில்லாத திருக்கழிப்பாலையானது, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(பொ-ரை.) ஆடுமியல்புள்ள பாம்பை திருவரையிற் பொருந்திய புலித்தோல்மீது கட்டினவனும், யானையினின்றும் உரித்ததோலை புலால் நாற்றம் வீச போர்த்துக்கொண்டவனும், அடிமை செய்வார்களுடைய வினைகளாகிய அவைகள் விட்டொழியும்படிகாத்தவனும், அருச்சுனனுக்கு கடைக்கண்ணோக்கஞ் செய்தருளினவனுமாகிய அவனுக்கு பழிப்பில்லாத திருக்கழிப்பாலையானது இடமாகும்.

(க-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானே, என் வினையை யொழித்தருளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) ஆர்த்தல் - கட்டுதல். அதள் - தோல். (6)

பருத்தாள்வன்பகட்டைப்படமாகமுன்பற்றியத
ளுரித்தாயானையின்றோ லுலகந்தொழுமுத்தமனே
எரித்தாய்முப்புரமுமிமையோர்களிடர்கடியுங்
கருத்தார்தண்கழனிக்கழிப்பாலைமேயானே.

(ப-ரை.) பருத்தாள்-பெருத்த அடியினையுடைய, வன்பகட்டை - வலிய யானையை, முன்-முற்காலத்தில், பற்றி - பிடித்து, படம் ஆக - போர்வை ஆகும்படி, அதள்யானையின்தோல் - அதளென்று சொல்லப்படுகிற யானையின் தோலை, உரித்தாய் - உரித்தவனே, உலகம் தொழும் உத்தமனே - உலகம் வணங்குகிற உத்தமனே, முப்புரம் எரித்தாய் - திரிபுரமெரித்தவனே, இமையோர்கள் - தேவர்களுடைய, இடர் கடியும்-துன்பத்தை ஒழிக்கின்ற, கருத்து ஆர் - திருவுள்ளத்தையுடைய, தண் - குளிர்ந்த, கழனி - வயல் சூழ்ந்த, கழிப்பாலை மேயானே - திருக்கழிப்பாலையில் எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) பெருத்த அடியினையுடைய வலிய யானையை முற்காலத்தில் பிடித்து, போர்வையாகும்படி அதளென்று சொல்லப்படுகிற யானையின் தோலை யுரித்தவனே, உலகம் வணங்குகிற உத்தமனே, திரிபுரமெரித்தவனே, தேவர்களுடைய துன்பத்தை யொழிக்கின்ற திருவுள்ளத்தையுடைய குளிர்ந்த வயல் சூழ்ந்த திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருக்கழிப்பாலையி லெழுந்தருளி யிருப்பவனே, முற்காலத்தில் யானைத்தோலை யுரித்துப் போர்த்துக்கொண்டவனே, என்னை யாண்டருள்க வென்பதாம்.

(வி-ரை.) பகடு - யானை. படம் - போர்வை. அதள் - தோல். கடிதல் - ஒழித்தல். (7)

*படைத்தாய்ஞாலமெலாம்படர்புன்சடையெம்பரமா*
*உடைத்தாய்வேள்விதனையுமையாளையோர்கூறுடையா*
*யடர்த்தாய்வல்லரக்கன்றலைபத்தொடுதோணெரியக்*
*கடற்சாருங்கழனிக்கழிப்பாலைமேயானே.*

(ப-ரை.) ஞாலம் எல்லாம் - உலகமெல்லாம், படைத்தாய் - சிருஷ்டித்தவனே, படர் - படர்ந்த, புன்சடை-புல்லிய சடையினையுடைய, எம்பரமா - எம்பரமனே, வேள்விதன்னை - தக்கனது யாகத்தை, உடைத்தாய் - அழித்தவனே, உமையாள் - உமையவளை, ஓர் கூறு உடையாய் - ஒரு பங்கில் உடையவனே, வல் அரக்கன் - வலிய அரக்கனாகிய இராவணனது, தலைபத்தொடு-பத்துத் தலைகளோடு, தோள் - இருபது தோள்களும், நெரிய — நெரியும்படி, அடர்த்தாய் - நெருக்கினவனே, கடல் சாரும் - கடலைச் சார்ந்த, கழனி-வயல் சூழ்ந்த, கழிப்பாலை மேயானே - திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) உலகமெல்லாம் சிருட்டித்தவனே, படர்ந்த புல்லிய சடையினையுடைய எம்பரமனே, தக்கனது யாகத்தை யழித்தவனே, உமையவளை யொருபங்கிலுடையவனே, வலிய அரக்கனாகிய இராவணனது பத்துத் தலைகளோடு இருபது தோள்களும் நெரியும்படி நெருக்கினவனே, கடலைச்சார்ந்த வயல் சூழ்ந்த திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானே, உலகமுழுதும் படைத்தல் முதலியவற்றைச் செய்பவனே, அடியேனை யாண்டருள்க வென்பதாம்.

(வி-ரை.) பரமன்-மேலானவன். அடர்த்தல் - நெருக்கல். தலைபத்தொடு தோள் நெரிய என மேல் வருதலால் அரக்கனென்றது இராவணனைக் குறித்தது. (8)

*பொய்யாநாவதனாற்புகழ்வார்கள்மனத்தினுள்ளே*
*மெய்யேநின்றெரியும்விளக்கேயொத்ததேவர்பிரான்*
*செய்யானுங்கரியநிறத்தானுந்தெரிவரியான்*
*மையார்கண்ணியொடுமகிழ்வான்கழிப்பாலையதே.*

(ப-ரை.) பொய்யா நா அதனால் - பொய்யாத நாவினால், புகழ்வார்கள்-புகழ்கின்றவர்களுடைய, மனத்தின் உள்ளே - கருத்தினுள்ளே, மெய்யே - உண்மையாகவே, நின்று எரியும் விளக்கே ஒத்த-நின்றெரிகின்ற தீபத்தையே போன்ற, தேவர் பிரான் - தேவர்பிரானே, செய்யானும் - பிரமனும், கரிய நிறத்தானும் - மாலும், தெரிவு அரியான்-தெரிதற் கரியவன், மை ஆர் கண்ணி ஒடு-உமாதேவியொடு, மகிழ்வான்-மகிழ்ந்திருப்பவனாகிய சிவபிரானது இடம், கழிப்பாலையே - திருக்கழிப்பாலையே எ-று.

(பொ-ரை.) பொய்யாத நாவினால் புகழ்கின்றவர்களுடைய மனத்தினுள்ளே உண்மையாகவே நின்றெரியும் தீபத்தையே போன்ற தேவர்பிரானே,

பிரமனும் மாலும் தெரிதற்கரியவன், உமாதேவியோடு மகிழ்ந்திருப்பவனுமாகிய சிவபிரானது இடம் திருக்கழிப்பாலையே.

(சு-ரை.) தன்னைப் புகழ்வார்களுடைய மனத்தில் நின்றெரியும் தீபம் போலுஞ் சிவபெருமானது இடமாவது திருக்கழிப்பாலையே யென்பதாம்.

(வி-ரை.) பொய்யாநா - உண்மையையே பயின்ற நா. புகழ்வார்கள் என்றது அன்பர்களை. செய்யான் - செந்நிறமுள்ளவன். மை ஆர் கண்ணி - அஞ்சநமெழுதப்பெற்ற கண்களையுடையவள். (9)

பழிசேரில்புகழான்பரமன்பரமேட்டி
கழியார்செல்வமல்குங்கழிப்பாலைமேயானைத்
தொழுவானுவலர்கோனூரனுரைத்ததமிழ்
வழுவாமாலைவல்லார்வானோருலகாள்பவரே.

(ப-ரை.) பழிசேர் இல் - பழி சேர்தலில்லாத, புகழான் - புகழையுடையவனும், பரமன் - பரமனும், பரமேட்டி - பரமேட்டியும், கழி ஆர் செல்வம் மல்கும் - பெருஞ் செல்வம் நிறைந்த, கழிப்பாலை மேயானை - திருக்கழிப்பாலையி லெழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபிரானை, தொழுவான்-தொழுபவனும், நாவலர்கோன் - நாவலர் கோனுமாகிய, ஆரூரன்-சுந்தரன், உரைத்த-சொன்ன, வழுவா - வழுவுதலில்லாத, தமிழ் மாலை வல்லார் - தமிழ் மாலையைக் கற்று வல்லவர், வானோர் உலகு ஆள்பவர்-விண்ணுலகை ஆள்பவராவர்.

(பொ-ரை.) பழிசேர்தலில்லாத புகழுடையவனும் பரமனும் பரமேட்டியும் பெருஞ் செல்வம் நிறைந்த திருக்கழிப்பாலையி லெழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபிரானைத் தொழுபவனும் நாவலர்கோனுமாகிய சுந்தரன் சொன்ன, வழுவுதலில்லாத தமிழ் மாலையைக் கற்று வல்லவர் விண்ணுலகை யாள்பவராவர்.

(சு-ரை.) திருக்கழிப்பாலைச் சிவபிரானை ஆரூரன் உரைத்த தமிழ்மாலையைக் கற்று வல்லவர் வானோருலகாள்பவராவர் என்பதாம்.

(வி-ரை.) பழிசேரில் புகழ் - குற்றமற்ற புகழ். கழி - மிகுதி. மல்கல் - நிறைதல். வானோர் உலகு - தேவலோகம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பால்வண்ணநாதர். தேவியார் - வேதநாயகியம்மை.

## திருமழபாடி

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

**பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து**
**மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே**
**மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே**
**யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.**

(ப-ரை.) பொன்ஆர் மேனியனே-பொன்போலு மரிய திருமேனியை யுடையவனே, புலிதோலை - புலியின்தோலை, அரைக்கு அசைத்து - திருவரையிற் கட்டி, மின் ஆர் - மின்னுதலையுடைய, செம் சடைமேல் – செவந்த சடையின்மீது, மிளிர் - விளங்குகின்ற, கொன்றை அணிந்தவனே-கொன்றை மலர்மாலையை யணிந்தவனே, மன்னே - இறைவனே, மாமணியே - பெரிய இரத்தினமே, மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே - மாணிக்கமே, அன்னே - தாயே, உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேன் - உன்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) பொன்போலும் அரிய திருமேனியை யுடையவனே, புலியின்தோலை திருவரையிற் கட்டி மின்னுதலையுடைய செவந்த சடையின்மீது, விளங்குகின்ற கொன்றைமலர் மாலையை யணிந்தவனே, இறைவனே, பெரிய இரத்தினமே, திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, தாயே, உன்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியிலெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, அடியேன் உன்னையல்லால் இனி யாரை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) அசைத்தல் - கட்டல். கொன்றை ஆகுபெயர். மன் - நிலைபேறுடையவன் எனினுமாம். மின் ஆர்-என்பதற்கு மின்கொடிபோற் பொருந்தின என்று முரைக்கலாம். மிளிர்தல் – விளங்குதல். (1)

**கீளார்கோவணமுந்திருநீறுமெய்பூசியுன்றன்**
**றாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ**
**வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே**
**கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே.**

(ப-ரை.) கீள் ஆர் - கீளோடு கூடின, கோவணமும்-கௌபீனமும், திருநீறு மெய்பூசி - திருநீறு உடம்பில்பூசி, உன் தன்தாளே வந்து அடைந்தேன் - உன் பாதத்தையே வந்தடுத்தேன், தலைவா - முதல்வனே, நீ என்னை ஏன்று கொள் - நீ யென்னை யேற்றுக்கொள்ளக்கடவை, வாள் ஆர் கண்ணிபங்கா - உமாதேவி பங்கனே, மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே-மாணிக்கமே, கேளா - எனக்கு உறவாயிருப்பவனே, நின்னையல்லால் இனியாரை நினைக்கேன்-உன்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன்.

(பொ-ரை.) கீளோடுகூடின கௌபீனமும், திருநீறு மெய்பூசி உன்பாதத்தையே வந்தடுத்தேன், முதல்வனே நீஎன்னை யேற்றுக்கொள்ளக் கடவை உமாதேவி பங்கனே, திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, எனக்குறவாயிருப்பவனே, உன்னையல்லாமல் இனியாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, அடியேன் உன்னையல்லால் இனி யாரைநினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) தாள் - திருவடி. வாளார்கண்ணி - வாட்படைபோலும் கண்களை யுடையவள். கேள் - உறவு. (2)

எம்மானெம்மனையென்றெனக்கெட்டனைச்சார்வாகா
ரிம்மாயப்பிறவிப்பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யெம்மானின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) எம்மான் - எமது தந்தையும், எம் அன்னை-எமதுதாயும், என்தனக்கு - எனக்கு, எள் தனை - எள்ளளவும், சார்வு ஆகார் - ஆதாவாகமாட்டார், இ - இந்த, மாயப் பிறவி பிறந்து இறந்து - மாயப்பிறப்பில் பிறந்தும் இறந்தும், எய்த்து ஒழிந்தேன் - மெலிந்தொழிந்தேன், மை - மேகங்கள் தவழ்கின்ற, மா - பெரிய, பூம் பொழில்சூழ் - பூஞ்சோலை சூழ்ந்த, மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே-மாணிக்கமே, எம்மான்-எம்மானே, நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேன் - உன்னையல்லாமல் இனி யாரைநினைப்பேன் எ-று.

(பொ-ரை.) எமது தந்தையும், எமது தாயும், எனக்கு எள்ளளவும் ஆதரவாகமாட்டார், இந்த மாயப்பிறப்பில் பிறந்தும்இறந்தும் மெலிந்தொழிந்தேன், மேகங்கள் தவழ்கின்ற பெரிய பூஞ்சோலை சூழ்ந்த திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, எம்மானே, நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, உன்னையல்லால் இனி யாரைநினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) எய்த்தல் - இளைத்தல். எட்டனை - எள்ளளவு. (3)

பண்டேநின்னடியேனடியாரடியார்கட்கெல்லாந்
தொண்டேபூண்டொழிந்தேன்றொடராமைத்துரிசறுத்தேன்
வண்டார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யண்டாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) பண்டே - முன்னமே, நின் அடியேன் - உன் தொண்டன், அடியார் அடியார்கட்கு எல்லாம் - தொண்டர் தொண்டர்கட்கெல்லாம், தொண்டே பூண்டு ஒழிந்தேன் - அடிமை பூண்டொழிந்தேன், துரிசு தொட

ராமை அறுத்தேன் - குற்றங்கள் தொடராமல் சேதித்தேன், வண்டு ஆர்-வண்டுகள் நிறைந்த, பூம் பொழில்சூழ் – பூஞ்சோலைகள் சூழ்ந்த, மழபாடியுள்-திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே - மாணிக்கமே, அண்டா - சிதாகாயத்தி லிருப்பவனே, நின்னையல்லால் இனி யாரைநினைக்கேன்-நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) முன்னமே உன் தொண்டன், தொண்டர் தொண்டர்கட்கெல்லாம் அடிமைபூண்டொழிந்தேன், குற்றங்கள் தொடராமல் சேதித்தேன், வண்டுகள் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, சிதாகாயத்தி லிருப்பவனே, நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியிலெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, முன்னமே உன்னடியவர்க்குத் தொண்டுபட்டேன், உன்னையல்லால் இனியாரை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) அண்டா என்பதற்கு ஒருவரு மணுக வொண்ணாத என்றுரைத்தலுமாம். தொண்டு - அடிமை. அண்டம் - ஆகாசம். அது இங்குச் சிதாகாசத்தைக் குறித்தது. (4)

கண்ணாயேழுலகுங்கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணாரின் தமிழாய்ப் பரமாயபரஞ்சுடரே •
மண்ணார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) எழ் உலகும் - எழுலகத்திற்கும், கண் ஆய்-கண்ணாகி, கருத்து ஆய - கருத்தாகிய, அருத்தமும் ஆய் - பொருளுமாகி, பண் ஆர் - பண்களோடு கூடிய, இன் தமிழ் ஆய் - இனிய தமிழ்ப் பாடல்களாகி, பரம் ஆய - மேலாகிய, பரஞ்சுடரே – பரஞ்சோதியே, மண் ஆர் - அலங்காரமமைந்த, பூம் பொழில்சூழ் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே-மாணிக்கமே, அண்ணா-தந்தையே, நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேன் - நின்னை அல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை) எழுலகத்திற்கும் கண்ணாகி, கருத்தாகிய பொருளுமாகி, பண்களோடு கூடிய இனிய தமிழ்ப்பாடல்களாகி, மேலாகிய பரஞ்சோதியே, அலங்காரமமைந்த, பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, தந்தையே, நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, நின்னையல்லால் இனி யாரை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை-) அருத்தம் - பொருள். பரஞ்சுடர் – பரஞ்சோதி. மண்ணல்- அலங்கரித்தல். (5)

நாளார்வந்தணுகிநலியாமுனநின்றனக்கே
யாளாவந்தடைந்தேனடியேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளுமழபாடியுண்மாணிக்கமே
யாளாநுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) நாளார் - கூற்றுவனார், வந்து அணுகி - வந்து கிட்டி, நலியா முன்னம்-வருத்தாமுன்னமே, நின்றனக்கே ஆளாவந்து அடைந்தேன்-உனக்கே தொண்டனாய் வந்தடுத்தேன், அடியேனையும் நீ ஏன்று கொள் - அடியேனையும் நீ ஏற்றுக்கொள், மாளாநாள் அருளும் - முடிவில்லாத ஆயுளை அருள்செய்கின்ற, மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே - மாணிக்கமே, ஆளா - எம்மை யாளுதலுடையவனே, நுன்னையல்லால் இனி யாரை நினைக்கேன் - உன்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) கூற்றுவனார் வந்துகிட்டி வருத்தாமுன்னமே, உனக்கே தொண்டனாய் வந்தடுத்தேன், அடியேனையும் நீ யேற்றுக்கொள், முடிவில்லாத ஆயுளை அருள்செய்கின்ற திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, எம்மை ஆளுதலையுடையவனே, உன்னையல்லாமல் இனியாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, நின்னையல்லால் இனி யாரைநினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) நாளார் என்றுயர்த்திக் கூறியது யமன் நாட்கடவுளாதனோக்கி. அணுகல் - கிட்டல். நலிதல் - வருத்துதல். ஏன்றுகொள்ளல்—ஏற்றுக்கொள்ளல். ஆளன் - ஆளுதலுடையவன். (6)

சந்தாருங்குழையாய்சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய்விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) சந்தம் ஆரும் - அழகுநிறைந்த, குழையாய் - குண்டலத்தை யுடையவனே, சடைமேல் - சடைமீது, பிறைதாங்கி - பிறையை யணிந்து, வெந்தார் - வெந்தவரது, நல்ல வெண்பொடியாய் - அழகிய நீற்றை யுடையவனே, விடை ஏறிய - எருதேறின, வித்தகனே-ஞானரூபியே, மைந்து ஆர் - வலிமைபொருந்திய, சோலைகள் சூழ் - சோலைகள் சூழ்ந்த - மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே - மாணிக்கமே, எந்தாய் - என் தந்தையே, நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேன் - நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) அழகு நிறைந்த குண்டலத்தை யுடையவனே, சடைமீது பிறையையணிந்து வெந்தவரது அழகிய நீற்றையுடையவனே, எருதேறின ஞானரூபியே, வலிமைபொருந்திய சோலைகள் சூழ்ந்த திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, என் தந்தையே, நின்னையல்லாமல் இனியாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, எந்தையே உன்னையல்லால் இனியாரை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) சந்தம் சந்து என வந்தது. வெண்பொடி - சாம்பர். (7)

வெய்யவிரிசுடரோன்மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிகுசெம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யையாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) வெய்ய - வெம்மையையுடைய, விரிசுடரோன் - விரிந்த கிரணங்களையுடையவனாகிய சூரியனும், மிகு தேவகணங்கள் - மிக்க தேவர் கூட்டங்களுமாகிய, எல்லாம் - எல்லாரும், செய்ய - அழகிய, மலர்கள் இட - மலர்களால் அருச்சிக்க, மிகு செம்மையுள் நின்றவனே - மிக்க நடுவு நிலைமையில் நின்றவனே, மை ஆர் - மேகங்கள் தவழ்கின்ற, பூம்பொழில் சூழ் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, மழபாடியுள் - திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே - மாணிக்கமே, ஐயா - ஐயனே, நின்னை அல்லால் இனியாரை நினைக்கேன் - நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) வெம்மையையுடைய விரிந்த கிரணங்களையுடையவனாகிய சூரியனும் மிக்கதேவர்கூட்டங்களுமாகிய எல்லாரும் அழகிய மலர்களாலருச்சிக்க, மிக்க நடுவுநிலைமையில் நின்றவனே, மேகங்கள் தவழ்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, ஐயனே, நின்னையல்லாமல் இனியாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, தேவரெல்லாரும் அருச்சனை செய்ய நின்றவனே, ஐயனே, நின்னையல்லால் இனியாரை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) கணம் - கூட்டம். இடல் - அருச்சித்தல். மை - மேகம். இது பண் பாகு பெயர். (8)

நெறியேநின்மலனேநெடுமாலயன்போற்றிசெய்யுங்
குறியேநீர்மையனேகொடியேரிடையாள்தலைவா
மறிசேரங்கையனேமழபாடியுண்மாணிக்கமே
யறிவேநின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

(ப-ரை.) நெறியே - நன்னெறியே, நின்மலனே - நிர்மலனே, நெடுமால் அயன்போற்றி செய்யும்-நெடுமாலும்பிரமனும்வணங்குகிற, குறியே இலக்கே, நீர்மையனே-மங்கலகுணங்களை யுடையவனே, கொடிஏர் இடையாள் தலைவா - உமாதேவி நாயகனே, மறிசேர் அம் கையனே-மான்கன்றை ஏந்திய அழகிய திருக்கரத்தை யுடையவனே, மழபாடியுள்-திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற, மாணிக்கமே-மாணிக்கமே, அறிவே-அறிவுருவனே, நின்னை அல்லால்

இனியாரை நினைக்கேன்-நின்னையல்லாமல் இனி யாரை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) நன்னெறியே, நிர்மலனே; நெடுமாலும் பிரமனும் வணங்குகிற (இலக்கே) மங்கல குணங்களை யுடையவனே, உமாதேவி நாயகனே, மான்கன்றை ஏந்திய அழகிய திருக்கரத்தை யுடையவனே, திருமழபாடியில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, அறிவுருவனே, நின்னை யல்லாமல் இனி யாரை நினைப்பேன்.

(க-ரை.) திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற மாணிக்கமே, அறிவுருவாயிருப்பவனே, உன்னையல்லால் இனி யாரை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை.) நெறி-மார்க்கம். அது இங்கு சன்மார்க்கத்துக்காயிற்று. நின்மலன்-மலமில்லாதவன். நீர்மை – குணம். அது இங்கு மங்கல குணங்களைக் குறித்தது. கொடியேர் என்பதில் ஏர் உவமவுருபு. (9)

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
சீரார்நாவலர்கோனாரூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பவரே.

(ப-ரை.) ஏர் ஆர்–அழகுபொருந்திய, முப்புரமும் எரிய – திரிபுரமுமெரியும்படி, சிலை தொட்டவனை - வில்வளைத்தவனை, வார் ஆர் கொங்கையுடன் - உமாதேவியாரோடு, மழபாடியுள் மேயவனை - திருமழபாடியில் எழுந்தருளியிருப்பவனை, சீர் ஆர்-சிறப்புப்பொருந்திய, நாவலர்கோன் ஆரூரன்-சுந்தரன், உரைத்த - சொல்லிய, தமிழ் - தமிழ்ப்பாடல்களை, பாரோர் உலகத்தவருள், ஏத்த வல்லார்-துதிக்க வல்லவர் எவரோ (அவர்,) பரலோகத்து இருப்பவர் - சிவலோகத்தில் வாழ்பவராவர் எ–று.

(பொ-ரை.) அழகுபொருந்திய திரிபுரமு மெரியும்படி வில்வளைத்தவனை, உமாதேவியாரோடு திருமழபாடியில் எழுந்தருளியிருப்பவனை, சிறப்புப் பொருந்திய நாவலர்கோன் ஆரூரன் சொல்லிய தமிழ்ப்பாடல்களை, உலகத்தவருள் துதிக்க வல்லவர் எவரோ அவர் சிவலோகத்தில் வாழ்பவராவர்.

(க-ரை.) திருமழபாடியி லெழுந்தருளியிருக்கிற சிவபிரானைத் திருநாவலூரன் புகழ்ந்துரைத்த தமிழ்ப் பாடல்களைத் துதிக்கவல்லவர், பரலோகத்து இருப்பவராவர் என்பதாம்.

(வி–ரை.) சிலை யென்றது. மேருமலையாகிய வில்லை. வாரார்கொங்கை-அன்மொழித்தொகை தமிழ். ஆகுபெயர். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வச்சிரத்தம்பேசுவரர். தேவியார்-அழகாம்பிகையம்மை.

## திருமுதுகுன்றம்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்செய்தமேனியினீர்புலித்தோலேயரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலுமெரித்தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள்பரவையிவள்தன்முகப்பே
யென்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) பொன்செய்த - பொன்போன்ற, மேனியினீர் - திருமேனியை யுடையவரே, புலிதோலே - புலியின்தோலே, அரைக்கு அசைத்தீர் - திருவரை யிற் கட்டினீர், முன்-முற்காலத்தில், செய்த - அமைக்கப்பட்டிருந்த, மூன்று எயிலும் - மும்மதில்களேயும், எரித்தீர் - தகித்தீர், முதுகுன்று - பழமலே யில், அமர்ந்தீர் - எழுந்தருளினீர், மின்செய்த - மின்கொடிபோன்ற, நுண் இடையாள் - நுட்பமாகிய இடையினை யுடையவளாகிய, பரவை - பரவை யென்னும் பேருள்ள, இவள் தன் முகப்பே - இவளிடத்திலே, அடியேன் - அடியேனது, இட்டளம்கெட - துன்பம் ஒழிய, என்செய்த ஆறு - நீர் என்ன செய்த பிரகாரம், அடிகேள் - சுவாமி எ-று.

(பொ-ரை.) பொன்போன்ற திருமேனியை யுடையவரே, புலியின் தோலேத் திருவரையிற் கட்டினீர், முற்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த மும் மதில்களேயும் எரித்தீர், பழமலேயில் எழுந்தருளினீர், மின்கொடி போன்ற நுட்பமாகிய இடையினை யுடையவளாகிய பரவை யென்னும் பேருள்ள இவ ளிடத்திலே, அடியேனது துன்பமொழிய, நீர் என்ன செய்த பிரகாரம், சுவாமி.

(க-ரை.) திருமுதுகுன்றி லெழுந்தருளியிருக்கிற சுவாமீ, இந்தப் பர வைக் கெதிரே என்ன செய்தீர் என்பதாம்.

(வி-ரை.) பொன்செய்த மின்செய்த என்பவற்றுள் செய்த உவமவுருபு. அசைத்தல் - கட்டல். மும்மதில் என்றது முப்புரத்தை. (1)

உம்பரும்வானவருமுடனேநிற்கவேயெனக்குச்
செம்பொனேத்தந்தருளித்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலாள்பரவையிவள்வாடுகின்று
ளெம்பெருமானருளீரடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) உம்பரும் - தேவரும், வானவரும் - ஆகாசசஞ்சாரிகளும், உடன் நிற்க - உடன்கூடிநிற்க, எனக்கு - அடியேனுக்கு, செம்பொன்னே தந் தருளி - செம்பொன்னேக் கொடுத்தருளி, திகழும்-விளங்குகின்ற, முதுகுன்று அமர்ந்தீர் - பழமலேயி லமர்ந்திருப்பவரே, வம்பு அமரும் - வாசனே பொருந் திய, குழலாள் - கூந்தலே யுடையவளாகிய, பரவை இவள்-இந்தப் பரவையான

வள், வாடுகின்றாள் - வாடாநின்றாள், எம்பெருமான் - எம்பெருமானே, அடியேன் - அடியேனது, இட்டளம் கெட - துன்பம் ஒழிய, அருளீர்—, எ-று.

(போ-ரை) தேவரும் ஆகாசசஞ்சாரிகளும் உடன் கூடிநிற்க, அடியேனுக்கு செம்பொன்னைக் கொடுத்தருளி விளங்குகின்ற பழமலையிலமர்ந்திருப்பவரே, வாசனைபொருந்திய கூந்தலையுடையவளாகிய இந்தப் பரவையானவள் வாடா நின்றாள், எம்பெருமானே, அடியேனது துன்பம் ஒழிய அருளீர்.

(க-ரை) திருமுதுகுன்றிலமர்ந்தவரே, பரவை வாடுகிறாள், அடியேனது துன்பங்கெட அருள் செய்யக்கடவீர் என்பதாம்.

(வி-ரை) உம்பர் - விண்ணுலகிலுள்ள தேவர். வானவர் ஆகாசசஞ்சாரிகள், அவர் இருடியர் முதலானோர். (2)

பத்தாபத்தர்களுக்கருள்செய்யும்பரம்பரனே
முத்தாமுக்கணனேமுதுகுன்றமமர்ந்தவனே
மைத்தாருந்தடங்கண்பரவையிவள்வாடாமே
யத்தாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) பத்தா-பத்தனே, பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே-பத்தருக் கருள்செய்கிற கடவுளே, முத்தா-பாசநீக்க முடையவனே, முக்கண்ணனே-மூன்றுகண்களையுடையவனே,முதுகுன்றம் அமர்ந்தவனே - பழமலையிலமர்ந்திருப்பவனே, மைத்து ஆரும் - கறுத்துப் பரந்த, தடம்கண் - பெருங்கண்களையுடைய, பரவை இவள் - இந்தப்பரவையானவள், வாடாமே - வாடாமல், அத்தா, அத்தனே, அடியேன் - அடியேனது, இட்டளம்கெட - துன்பம் ஒழிய, அருளாய்—, எ-று.

(போ-ரை.) பத்தனே, பத்தருக் கருள்செய்கிற பரம்பரனே, பாசநீக்கமுடையவனே, முக்கண்ணனே, பழமலையிலமர்ந்திருப்பவனே, கறுத்துப் பரந்த பெருங் கண்களையுடைய இந்தப் பரவையானவள் வாடாமல், அத்தனே அடியேனது துன்பம் ஒழிய அருளாய்.

(க-ரை.) திருமுதுகுன்றமர்ந்தவனே, பரவையானவள் வாடுகின்றாள் அடியேனது துன்பங்கெட அருள் செய்க என்பதாம்.

(வி-ரை.) பற்று - பத்து என வந்தது. பற்று - அன்பு, அதாவது அன்பரிடத்துச் செய்யு மன்பு. மைத்தல் கறுத்தல். இது பெயரடியாகப் பிறந்த வினைப் பெயர். (3)

மங்கையோர்கூறுயர்ந்தீர்மறைநான்கும்விரித்துகந்தீர்
திங்கள்சடைக்கணிந்தீர்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
கொங்குநல்லாள்பரவைகுணங்கொண்டிருந்தாள்முகப்பே
யங்கணனேயருளாயடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) மங்கை ஓர் கூறு அமர்ந்தீர் - உமாதேவி யொருபாகத்தில்இருக்க விரும்பினீர், மறை நான்கும் விரித்து உகந்தீர் - நால்வேதங்களையும் விரித்துக் களித்தீர், சடைக்கு - சடையில், திங்கள் அணிந்தீர் - பிறைதரித்தீர், திகழும்-விளங்குகிற,முதுகுன்று அமர்ந்தீர்-பழமலையிலமர்ந்தீர், கொங்கைநல்லாள்-அழகிய கொங்கைகளை யுடையவளாகிய, பரவை - பரவையானவள், குணம் கொண்டுஇருந்தாள் முகப்பே - குணங் கொண்டிருந்தவளாகிய இவளது திறத்தில், அடியேன்-அடியேனது, இட்டளம் கெட-துன்பம் ஒழிய, அருளாய்—, அம் கண்ணனே - கிருபைக்கண்ணனே எ-று.

(பொ-ரை.) உமாதேவி யொருபாகத்தில் இருக்க விரும்பினீர், நால்வேதங்களையும் விரித்துக்களித்தீர், சடையில் பிறைதரித்தீர், பழமலையிலமர்ந்தீர், அழகிய கொங்கைகளையுடையவளாகிய பரவையானவள் குணங்கொண்டிருந்தவளாகிய இவளது திறத்தில் அடியேனது துன்பம் ஒழிய அருளாய், கிருபைக் கண்ணனே.

(கு-ரை ) திருமுதுகுன்றத் தமர்ந்தவனே, பரவை குணங்கொண்டிருந்தாள், அவளுக்கெதிரே, அடியேனது துன்பம் ஒழிய அருளாய் என்பதாம்.

(வி-ரை.) மங்கை - மங்கைப்பருவமுள்ள பெண். அம் மங்கைப் பருவத்திற்கு பதின்மூன்றாண்டும் பத்துத் திங்களும் நாள்வரையறை. இப்பருவத்தையே யென்னாளு முடையவளாதலால் உமாதேவியை மங்கையென்றார். அங்கணன் - கிருபைக்கண்ணை யுடையவன். (4)

மையாரும்மிடற்றாய்மருவார்புரமூன்றெரித்த
செய்யார்மேனியனேதிகழும்முதுகுன்றமர்ந்தாய்
பையாருமரவேரல்குலாளிவள்வாடுகின்றாள்
ஐயாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) மை ஆரும் - கருமை பொருந்திய, மிடற்றாய் - கண்டத்தையுடையவனே, மருவார் - பகைவரது, புரம் மூன்று - முப்புரத்தை, எரித்த - தகித்த, செய் ஆர் மேனியனே-செவந்த திருமேனியையுடையவனே, திகழும் முது குன்று அமர்ந்தாய் - விளங்குகிற பழமலையையுடையவனே, பை ஆரும்-படத்தையுடைய, அரவு ஏர் - அரவைநிகர்த்த, அல்குலாள் இவள் - அல்குலையுடையவளாகிய இவள், வாடுகின்றாள் - வாடாநின்றாள், ஐயா - ஐயனே, அடியேன் - அடியேனது, இட்டளம்கெட - துன்பம்ஒழிய, தந்தருளாய்—, எ-று.

(பொ-ரை.) கருமை பொருந்திய கண்டத்தை யுடையவனே,பகைவரது முப்புரத்தை தகித்த செவந்த திருமேனியை யுடையவனே, விளங்குகிற பழமலையை யுடையவனே, படத்தையுடைய அரவைநிகர்த்த அல்குலை யுடையவளாகிய இவள் வாடாநின்றாள், ஐயனே, அடியேனது துன்பம் ஒழியத் தந்தருளாய்.

(க-ரை.) திருமுதுகுன்றமர்ந்தவனே, பரவை வாடுகின்றாள், அடியேனது துன்பம் கெடத் தந்தருளாய் என்பதாம்.

(வி-ரை.) திகழ்தல்-விளங்குதல். அரவேர் என்பதில் ஏர் உவமவுருபு. (5)

நெடியோனுன்முகனுமிரவியொடுமிந்திரனும்
முடியால்வந்திறைஞ்சமுதுகுன்றமமர்ந்தவனே
படியாரும்மியலாள்பரவையிவள்தன்முகப்பே
யடிகேள்தந்தருளாயடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) நெடியோன் நான்முகனும் - திருமாலும் பிரமனும், இரவியொடும் இந்திரனும் - சூரியனோடு இந்திரனும், வந்து முடியால் இறைஞ்ச - வந்து தலையால் வணங்க, முதுகுன்று அமர்ந்தவனே-பழமலையி லமர்ந்தவனே, படி ஆரும் இயலாள் - உலகமெல்லாம் பரவிய நற்குண முடையவளாகிய, பரவை இவள் தன்முகப்பே - பரவையாகிய இவளுக்கெதிரே, அடிகேள் - சுவாமி, அடியேன் - அடியேனது, இட்டளம் கெட - துன்பம் ஒழிய, தந்தருளாய்—, எ-று.

(பொ-ரை.) திருமாலும் பிரமனும் சூரியனோடு இந்திரனும் வந்து தலையால் வணங்க முதுகுன்றமர்ந்தவனே, உலகமெல்லாம் பரவிய நற்குணமுடையவளாகிய பரவையாகிய இவளுக்கெதிரே, சுவாமீ, அடியேனது துன்பம் ஒழியத் தந்தருளாய்.

(க-ரை.) திருமுது குன்றமர்ந்தவனே, பரவையாகிய இவள் வாட்டந் தீரவும் என் துன்பமொழியவும் அருள் செய்யக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) நெடியோன் - திரிவிக்கிரமன். இயல் - குணம். அது இங்கு நற்குணத்தைக் குறித்தது. (6)

கொந்தணவும்பொழில்சூழ்குளிர்மாமதில்மாளிகைமேல்
வந்தணவும்மதிசேர்சடைமாமுதுகுன்றுடையாய்
பந்தணவும்விரலாள்பரவையிவள்தன்முகப்பே
யந்தணனேயருளாயடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) கொந்து அணவும் - பூங்கொத்துகள் நிறைந்த, பொழில் சூழ்-சோலை சூழ்ந்த, குளிர்மாமதில் - குளிர்ந்த பெரிய மதில்களையுடைய, மாளிகைமேல் - மாளிகையின்மீது, வந்து அணவும் - வந்து பொருந்துகின்ற, மதி சேர் - பிறைசேர்ந்த, சடை - சடையையுடைய, மா - பெருமை பொருந்திய, முதுகுன்று உடையாய் - பழமலையையுடையவனே, பந்து அணவும் - பந்தோடு பழகுகின்ற, விரலாள் - விரல்களை யுடையவளாகிய, பரவை இவள் தன்முகப்பே - பரவையாகிய இவளுக்கெதிரே, அந்தணனே - வேதியனே, அடியேன் - அடியேனது, இட்டளம் கெட-துன்பம்ஒழிய, அருளாய்—, எ-று.

(போ-ரை.) பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைசூழ்ந்த குளிர்ந்த பெரிய மதில்களை யுடைய மாளிகையின் மீது வந்து பொருந்துகின்ற பிறை சேர்ந்த சடையையுடைய பெருமை பொருந்திய பழமலையையுடையவனே, பந்தோடு பழகுகின்ற விரல்களை யுடையவளாகிய பாவையாகிய இவளுக்கெதிரே,வேதியனே, அடியேனது துன்பம் ஒழிய அருளாய்.

(கு-ரை.) திருமுதுகுன்றமர்ந்தவனே, பாவைக்கெதிரே, அடியேன் துன்பங்கெடத் தந்தருளா யென்பதாம்.

(வி-ரை.) கொத்து கொந்து என மெலிந்து நின்றது. அணவல்-தவழ்தல்.

பரசாருங்கரவாபதினெண்கணமுஞ்சூழ
முரசார்வந்ததிர முதுகுன்றமமர்ந்தவனே
விரைசேருங்குழலாள்பாவையிவள்தன்முகப்பே
யரசேதந்தருளாயடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) பரசு ஆரும் கரவா - மழுத்தரித்த திருக்கரத்தையுடையவனே, பதினெண் கணமும் சூழ - பதினெண்கணங்களும் சூழாநிற்க, ஆர் முரசு - நிறைந்த முரசங்கள், வந்து அதிர - வந்து முழங்க, முதுகுன்று அமர்ந்தவனே - பழமலையிலமர்ந்தவனே, விரை சேரும் குழலாள் - வாசனை யமைந்த கூந்தலை யுடையவளாகிய, பாவை இவள்தன்முகப்பே-பாவையாகிய இவளுக்கெதிரே, அரசே - அரசனே, அடியேன் - அடியேனது, இட்டளம் கெட - துன்பம் ஒழிய, தந்தருளாய்—, எ-று.

(போ-ரை.) மழுத்தரித்த திருக்கரத்தை யுடையவனே, பதினெண்கணங்களும் சூழாநிற்க நிறைந்த முரசங்கள் வந்து முழக்க பழமலையிலமர்ந்தவனே வாசனையமைந்த கூந்தலை யுடையவளாகிய பாவையாகிய இவளுக்கெதிரே, அரசனே, அடியேனது துன்பம் ஒழிய தந்தருளாய்.

(கு-ரை.) திருமுதுகுன்றமர்ந்தவனே, பாவையிவள் தன்முகப்பே அடியேனது துன்பம் ஒழிய அருளாயென்பதாம்.

(வி-ரை.) கரம் - கை. முரசார் என்பது பொருளமைதிக்சேற்ப முன் பின்னாக மாற்றி யுரைக்கப்பட்டது. அரசு - ஆகுபெயர். (8)

எத்தாதிருந்தறியேனிமையோர்தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பாவையிவள்தன் முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கெடவே.

(ப-ரை.) எத்தாது - உன்னைத் துதிக்காமல், இருந்தறியேன் - இருந்தறியமாட்டேன், இமையோர் - தேவர்கட்கு, தனிநாயகனே - ஒப்பற்ற தலைவனே, உலகுக்கு எல்லாம் மூத்தாய் - எல்லா வுலகங்கட்கும் முற்பட்டவனே, முதுகுன்று அமர்ந்தவனே-பழமலையிலமர்ந்தவனே, பூத்து ஆரும் குழலாள் - மலர்கள் அணிந்து நிறைந்த கூந்தலை யுடையவளாகிய, பாவை இவள்

தன்முகப்பே - பாவையாகியஇவளுக்கெதிரே, கூத்தா - நடராஜனே, கொடியேன்-கொடியேனது, இட்டளம்கெட-துன்பம்ஒழிய, தந்தருளாய்—, எ-று.

(பொ-ரை.) உன்னைத் துதிக்காமல் இருந்தறியமாட்டேன், தேவர்கட்கு ஒப்பற்ற தலைவனே, எல்லா வுலகங்கட்கும் முற்பட்டவனே, பழமலையி லமர்ந்தவனே, மலர்கள் அணிந்து நிறைந்த கூந்தலை யுடையவளாகிய பாவையாகிய இவளுக் கெதிரே, நடராஜனே, கொடியேனது துன்பம் ஒழிய தந்தருளாய்.

(க-ரை.) திருமுதுகுன்றமர்ந்தவனே, பாவையாகிய இவளுக்கெதிரே அடியேனது துன்பம் ஒழியத் தந்தருளா யென்பதாம்.

(வி-ரை.) இமையோர் என்றது மங்கலவழக்கு. கூத்தன்-நடிப்பவன் (9)

பிறையாருஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர்வணங்கும்முதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயல்நாவலாரூரன்சொன்ன
இறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே.

(ப-ரை.) அமரர்வந்து - தேவர்கள் வந்து, பிறை ஆரும்சடை - பிறை தங்கிய சடையையுடைய, எம்பெருமான் - எம்பெருமானே, அருளாய் என்று - அருள் செய்யவேண்டு மென்று, முறையால் வணங்கும் - கிரமமாக வணங்குகிற, முதுகுன்றர் தம்மை - பழமலையாரை, மறையார் தம்குரிசில் - வேதியர் தலைவனாகிய, வயல் நாவலூரன் சொன்ன - சுந்தரன் சொன்ன, இறை ஆர் பாடல் வல்லார்க்கு - தலைமை பொருந்திய பாடல்களைக் கற்று வல்லார்க்கு, சிவலோகம் எளிது ஆம் - சிவலோகம் எளிதாகும் எ-று.

(பொ-ரை.) தேவர்கள் வந்து பிறைதங்கிய சடையையுடைய எம்பெருமானே, அருள் செய்யவேண்டுமென்று கிரமமாக வணங்குகிற பழமலையாரை வேதியர் தலைவனாகிய சுந்தரன் சொன்ன தலைமை பொருந்திய பாடல்களைக் கற்று வல்லார்க்கு சிவலோகம் எளிதாகும்.

(க-ரை.) திருமுதுகுன்றத் தெம்பெருமானைத் திருநாவலூரான் புகழ்ந்துரைத்த இந்தத் தமிழ்ப்பாடலைக் கற்று வல்லார்க்குச் சிவலோகம் எளிதாகு மென்பதாம்.

(வி-ரை.) அமரர் என்றது மங்கலவழக்கு. குரிசில் - பெருமையிற் சிறந்தோன். வயல் - வயல்சூழ்ந்த இறை - இறைமை. இந்தப் பதிகம் முதுகுன்றில் இறைவ னருள்செய்த பொன்னை மணிமுத்தா நதியிற் போட்டுப் போய் திருவாரூர்க் கமலாலயமென்னுந் தடத்திலிறங்கி தடவும்போது பாடப்பட்டது இதில் எத்தாதிருந்தறியேன் என்னும் ஒன்பதாம்பாடலோதும்போது பொருளகப்பட்டது. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம்.
சுவாமிபெயர் - பழமலைநாதர். தேவியார் - பெரியநாயகியம்மை.

## திருக்காளத்தி

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாருங்குழலாளுமைபாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங்கணநாதனெங்காளத்தியா
யண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) செண்டு ஆடும் விடையாய் - வையாளி ஆடுகின்ற இடபவாகனத்தை யுடையவனே, சிவனே-சிவனே, என் செழும்சுடரே - என் செழுஞ் சோதியே, வண்டு ஆரும் குழலாள் - வண்டுகள் நிறைந்த கூந்தலையுடையவளாகிய, உமைபாகம் மகிழ்ந்தவனே - உமாபாகத்தை விரும்பினவனே, கண்டார் காதலிக்கும்-கண்டோர்விரும்புகிற, கணநாதன்-கணநாதனாகிய, எம் காளத்தியாய்-எமது திருக்காளத்தியி லெழுந்தருளி யிருப்பவனே, அண்டா-தேவனே உன்னை அல்லால்-உன்னையன்றி, அறிந்து-வேறொரு தெய்வத்தை நாடி, ஏத்தமாட்டேன் - துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) வையாளியாடுகின்ற இடப வாகனத்தை யுடையவனே சிவனே, என் செழுஞ் சோதியே, வண்டுகள் நிறைந்த கூந்தலை யுடையவளாகிய உமாபாகத்தை விரும்பினவனே, கண்டோர் விரும்புகின்ற கணநாதனாகிய எமது திருக்காளத்தியி லெழுந்தருளியிருப்பவனே, தேவனே, உன்னையன்றி வேறொரு தெய்வத்தை நாடி துதிக்கமாட்டேன்.

(கு-ரை) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் வேறொருவரை நான் துதிக்கமாட்டேனென்பதாம்.

(வி-ரை.) விடை - இடபம். சிவன் - மங்களகரன். கணநாதன் - சிவகணங்களுக்குத் தலைவன், பூதகணங்களுக்குத் தலைவன் எனினுமாம். அண்டன்- தேவன். (1)

இமையோர்நாயகனேயிறைவாவென்னிடர்த்துணையே
கமையோர்கருணையினாய்கருமாமுகில்போன்மிடற்றா
யுமையோர்கூறுடையாயுருவேதிருக்காளத்தியு
ளமைவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) இமையோர் நாயகனே-தேவநாயகனே, இறைவா-தலைவனே, என் இடர்த்துணையே-என் இடுக்கட்காலத்தில் துணையாவோனே, கமை ஆர் கருணையினாய் - பொறுமையோடு கூடிய கருணையுடையவனே, கருமாமுகில் போல் - கரிய பெரிய மேகம்போன்ற, மிடற்றாய்-கண்டத்தையுடையவனே, உமை ஓர் கூறு உடையாய் - உமையவளை ஒரு பாகத்திலுடையவனே, உருவே—, திருக்காளத்தியுள்—, அமைவே - அமைந்திருப்பவனே, உன்னை

அல்லால் - உன்னையன்றி, அறிந்து - வேறொரு தெய்வத்தை நாடி, ஏத்தமாட்டேன் - துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை) தேவநாயகனே, தலைவனே, என் இடுக்கட்காலத்தில் துணையாவோனே, பொறுமையோடு கூடிய கருணையுடையவனே, கரிய பெரிய மேகம்போன்ற கண்டத்தை யுடையவனே, உமையவளை ஒருபாகத்தி லுடையவனே, உருவே, திருக்காளத்தியுள் அமைந்திருப்பவனே, உன்னையன்றி வேறொரு தெய்வத்தை நாடி துதிக்கமாட்டேன்.

(கு-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் வேறொருவரை நான் துதிக்கமாட்டேனென்பதாம்.

(வி-ரை.) இடர்த்துணை - ஆப்தஸஹாயன். சமை க்ஷமா என்னும் வடசொற்றிரிபு. அமைவு ஆகுபெயர். (2)

படையார்வெண்மழு வாய்பகலோன்பல் லுகுத்தவனே
விடையார்வே தியனே விளங்குங்குழைக்கா துடையாய்
கடையார்மாளிகைசூழ்கணநா தனெங்காள த்தியா
யுடையாயுன்னையல்லா லுகந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) படை ஆர் - படுத்தற்றொழிலமைந்த, வெள்மழுவாய்-வெள்ளிய மழுவை யுடையவனே, பகலோன்-சூரியனது, பல் உகுத்தவனே-பல்லை யுதிர்த்தவனே, விடை ஆர்-இடபவாகனத்தையுடைய, வேதியனே – அந்தணனே, விளங்கும்-விளங்குகின்ற, குழை-குண்டலமணிந்த, காது உடையாய்-செவியுடையவனே, கடை ஆர்-கடைவாயில்க ளமைந்த, மாளிகைசூழ்-மாளிகைசூழ்ந்த, கணநாதன்-கணநாதனுகிய, எம்காளத்தியாய்-எமது திருக்காளத்தியி லெழுந்தருளியிருப்பவனே, உடையாய்-உடையவனே, உன்னை அல்லால் - உன்னையன்றி, உகந்து-வேறொருவரைவிரும்பி, ஏத்தமாட்டேன்- துதிக்கமாட்டேன்

(பொ-ரை.) படுத்தற்றொழிலமைந்த வெள்ளிய மழுவை யுடையவனே, சூரியனது பல்லை யுதிர்த்தவனே, இடபவாகனத்தையுடைய வேதியனே, விளங்குகின்ற குண்டலமணிந்த செவியுடையவனே, கடைவாயில்களமைந்த மாளிகைசூழ்ந்த கணநாதனுகிய எமது திருக்காளத்தியி லெழுந்தருளியிருப்பவனே, உடையவனே, உன்னையன்றி வேறொருவரை விரும்பி துதிக்கமாட்டேன்.

(கு-ரை ) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் வேறொருவரைத் துதிக்கமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) படையார் வெண்மழுவாய் என்பதற்கு படையாகக்கொண்ட வெள்மழுவை யுடையோனே யென்றுரைத்தலுமாம். பகலோன் - பகலைச் செய்வோன். வடநூலார் திவாகரன் என்பர். உகத்தல்-விரும்புதல். (3)

மறிசேர்கையினனே மதமாவுரிபோர்த்தவனே
குறியேயென் னுடையகுருவேயுன் குற்றேவல்செய்வே
னெறியேநின்னடியார்க்கினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லா லறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) மறிசேர்கையினனே - மான்சேர்ந்த கையனே, மதமா-மதயானையின், உரி - தோலை, போர்த்தவனே-போர்த்துக்கொண்டவனே, குறியே-இலக்கே, என்னுடைய குருவே - என் தேசிகனே, உன் குற்றேவல் செய்வேன் - உன் குற்றேவலைச் செய்வேன், நெறியே - முறையாகவே, உன் அடியார் நினைக்கும் - உமதடியார் நினையாநிற்கும், திருக்காளத்தியுள்-திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கிற, அறிவே - ஞானஉருவனே, உன்னை அல்லால் - உன்னையன்றி, அறிந்து-வேறொரு தெய்வத்தை நாடி, ஏத்தமாட்டேன், துதிக்கமாட்டேன் எ-று,

(பொ-ரை.) மான் சேர்ந்த கையனே, மதயானையின் தோலை போர்த்துக்கொண்டவனே, இலக்கே, என் தேசிகனே, உன் குற்றேவலைச் செய்வேன், முறையாகவே உமதடியார்நினையாநிற்கும் திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கிற ஞானவுருவனே, உன்னையன்றி வேறொரு தெய்வத்தை நாடி துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் வேறொருவரைத் துதிக்கமாட்டேனென்பதாம்.

(வி-ரை.) மறி-மான்கன்று. உரி- ஆகுபெயர். குறி-இலக்கு. குற்றேவல்-சிறுதொண்டு. (4)

செஞ்சேலன்னகண்ணார் திறத்தேகிடந்துற்றலறி
நஞ்சேனடியேனலமொன்றறியாமையினாற்
றுஞ்சேனொருகாற்றொழுதேன்றிருக்காளத்தியா
யஞ்சாதுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) நான் அடியேன்-தொண்டனாகிய நான், நலம் ஒன்று அறியாமையினால் - நன்மை சிறிதும் அறியாமையால், செம்சேல் அன்ன கண்ணார் திறத்தே - மாதரிடத்தே, கிடந்து - கிடந்து, உற்று அலறி - மிகவும் அலறி, நஞ்சேன் - இளைத்தேன், நான்-யான், ஒருகால்-ஒருபொழுதும், துஞ்சேன் - உறங்கேன், தொழுதேன் - உன்னை வணங்கினேன். திருக்காளத்தியாய் - திருக்காளத்தியை யுடையவனே, அஞ்சாது - அஞ்சாமல், உன்னை அல்லால் - உன்னை யன்றி, அறிந்து - வேறொரு தெய்வத்தை நாடி, ஏத்த மாட்டேன் - துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) தொண்டனாகிய நான் நன்மை சிறிதும் அறியாமையால் மாதரிடத்தே கிடந்து மிகவும் அலறி இளைத்தேன், யான் ஒருபொழுதும் உறங்கேன், உன்னை வணங்கினேன், திருக்காளத்தியையுடையவனே, அஞ்சாமல் உன்னையன்றி வேறொரு தெய்வத்தை நாடி துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் வேறொருவரைத் துதிக்கமாட்டே னென்பதாம்.

(வி-ரை.) செஞ்சே லன்ன கண்ணார் - செவந்த சேல்மீன்போலுங் கண்களையுடையவர். திறம் - எழுனுருபு. துஞ்சல் - உறங்கல். நஞ்சேன் நைந்தேன் என்பதன் சிதைவு, இதற்கு நஞ்சுபோல்வேன் என்றுரைப்பினுமாம். (5)

பொய்யவனுயடியேன்புகவேநெறியொன்றறியேன்
செய்யவனுகியேவந்திடரானவைதீர்த்தவனே
மெய்யவனேதிருவேவிளங்குந்திருக்காளத்தியென்
ஐயநுன்றன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

(ப-ரை.) பொய்யவன் நாய் அடியேன் - பொய்யனுகிய நாயடியேன், புக - பிரவேசிப்பதற்குரிய, நெறி ஒன்று அறியேன் - ஒரு நெறியு மறியமாட்டேன், செய்யவன் ஆகி வந்து - செப்பமுடையவனுய் வந்து, இடர் ஆனவை தீர்த்தவனே - துன்பங்களானவற்றை யொழித்தவனே, மெய்யனே - மெய்யனே, திருவே - பாக்கியமே, விளங்கும் - பிரகாசித்துக்கொண்டிருக்கிற, திருக்காளத்தி என் ஐய - திருக்காளத்தியிலுள்ள என் ஐயனே, நுன்றன்னை அல்லால் - உன்னையன்றி, அறிந்து-வேருெருதெய்வத்தை நாடி, ஏத்தமாட்டேன்-துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) பொய்யனுகிய நாயடியேன், பிரவேசிப்பதற்குரிய ஒரு நெறியுமறிய மாட்டேன், செப்பமுடையவனுய் வந்து துன்பங்களானவற்றை யொழித்தவனே, மெய்யனே, பாக்கியமே, பிரகாசித்துக்கொண்டிருக்கிற திருக்காளத்தியிலுள்ள என் ஐயனே, உன்னையன்றி வேருெரு தெய்வத்தை நாடி துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் வேருெருவரை நான் துதிக்கமாட்டேன் என்பதாம்.

(வி-ரை.) பொய்யவன் - பொய்யன். மெய்யவன் - மெய்யன். ஐயன் - இறைவன், அழகன் எனினுமாம். ஐ - அழகு. (6)

கடியேன்காதன்மையாற்கழற்போதறியாதவென்னுள்
குடியாக்கோயில்கொண்டகுளிர்வார்சடையெங்குழகா
முடியால்வானவர்கள்முயங்குந் திருக்காளத்தியா
யடியேனுன்னையல்லாலறியேன்மற்றொருவரையே.

(ப-ரை.) காதன்மையால் கடியேன் - ஆசையில் மிக்கவன், கழல்போது - உன்றிருவடித்தாமரை மலரை, அறியாத - தெரியாத, என் உள் - என் மனத்தில், குடி ஆ கோயில்கொண்ட - குடியாகக் கோயில்கொண்டிருந்த, குளிர் வார்சடை - குளிர்ந்த நீண்ட சடையையுடைய, எம்குழகா - எம் அழகனே, வானவர்கள் - தேவர்கள், முடியால் முயங்கும் - தலையால் வணங்குகிற, திருக்காளத்தியாய் - திருக்காளத்தியையுடையவனே, அடியேன் - தொண்டனுகிய நான், உன்னை அல்லால் - உன்னையன்றி, மற்றொருவரை அறியேன் வேருெருவரை யறியமாட்டேன் எ-று.

(பொ-ரை.) ஆசையில்மிக்கவன், உன்திருவடித்தாமரை மலரை அறியாத என் மனத்தில் குடியாகக் கோயில்கொண்டிருந்த நீண்ட சடையையுடைய எம் அழகனே, தேவர்கள் தலையால் வணங்குகிற திருக்காளத்தியை யுடையவனே, தொண்டனுகிய நான் உன்னையன்றி வேருெருவரை யறியமாட்டேன்.

(க-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானே, அடியேன் உன்னையல்லால் வேறொருவரை யறியமாட்டேனென்பதாம்.

(வி-ரை.) காதன்மை - விரும்புந்தன்மை. (ஆசை) திருவடிக் குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் போது தாமரை மலரைக் குறித்தது. முயங்கல்-தழுவல். (7)

நீறார்மேனியனேநிமலாநின்னையன்றிமற்றுக்
கூறேனாவதனாற்கொழுந்தேயென்குணக்கடலே
பாறார்வெண்டலையிற்பலிகொண்டுழல்காளத்தியா
யேறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே.

(ப-ரை.) நீறு ஆர் மேனியனே - திருவெண்ணீறு நிறைந்த திருமேனியையுடையவனே, நிமலா - நிர்மலனே, நின்னை அன்றி - உன்னையல்லாமல், நாவதனால் - என் நாவினால், மற்று - வேறொருவரை, கூறேன் - சொல்லேன், கொழுந்தே - கொழுந்தே, என் குணக்கடலே - என்குணசாகரமே, பாறு ஆர் பருந்துகள் சுற்றுகின்ற, வெள் தலையில் - வெண்டலை யோட்டில், பலிகொண்டு உழல் - பிக்ஷையேற்றுழலாநின்ற, காளத்தியாய் - திருக்காளத்தியையுடையவனே, ஏறே - ஆண்சிங்கமே, உன்னை அல்லால் - உன்னையன்றி, இனி ஏத்தமாட்டேன் - இனி துதிக்கமாட்டேன் எ-று.

(பொ-ரை.) திருவெண்ணீறு நிறைந்த திருமேனியையுடையவனே, நிர்மலனே, உன்னையல்லாமல் என் நாவினால் வேறொருவரை சொல்லேன், கொழுந்தே, என்குணசாகரமே, பருந்துகள் சுற்றுகின்ற வெண்டலையோட்டில் பிக்ஷையேற்றுழலாநின்ற திருக்காளத்தியை யுடையவனே, ஆண் சிங்கமே, உன்னையன்றி இனி துதிக்கமாட்டேன்.

(க-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானே, உன்னையல்லால் நான் வேறொருவரைத் துதிக்கமாட்டே னென்பதாம்.

(வி-ரை.) நாவதனால் என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி. கொழுந்து-மறைமுடிவு. குணம் - மங்களகுணம். பாறு - பருந்து. வெண்டலையைப் பருந்து சுற்றுதல் புலானாற்றத்திற் கென்க. (8)

தளிர்போல்மெல்லடியாள் தனையாகத்தமர்ந்தருளி
யெளிவாய்வந்தென்னுள்ளம்புகுதவல்லவெம்பெருமான்
களியார்வண்டறையுந்திருக்காளத்தியுள்ளிருந்த
வொளியேநுன்னையல்லாலினியொன்றுமுணரேனே.

(ப-ரை.) தளிர்போல் மெல் அடியாள் தன்னை-உமாதேவியை, ஆகத்து-திருமேனியிலிருக்க, அமர்ந்தருளி - விரும்பியருளி, எளிவு ஆய் - எளிதாக, வந்து - வந்து, என் உள்ளம் புகுதவல்ல - என் மனத்திற் புகவல்ல, எம்பெருமான் - எம்பெருமானே, களி ஆர் - களிப்புள்ள, வண்டு - வண்டுகள், அறை

யும் - சத்திக்கின்ற, திருக்காளத்தியுள் இருந்த ஒளியே - திருக்காளத்தியி லெழுந்தருளிய சோதியே, நுன்னை அல்லால் - உன்னையன்றி, இனி ஒன்றும் உணரேன்-இனி வேறொன்றை அறியமாட்டேன் எ-று.

(பொ-ரை.) உமாதேவியைத் திருமேனியிலிருக்க விரும்பியருளி, எளிதாக வந்து என்மனத்திற் புகவல்ல எம்பெருமானே, களிப்புள்ள வண்டுகள் சத்திக்கிற திருக்காளத்தியுள்ளிருந்த ஒளியே, உன்னையன்றி இனி வேறொன்றறியமாட்டேன்.

(க-ரை.) திருக்காளத்தி யெய்பெருமானே, நின்னையல்லால் நான் வேறொருவரை யறிய மாட்டே னென்பதாம்.

(வி-ரை.) ஆகத்தமர்ந்தருளியென மேல் வருதலால் தளிர் போல் மெல்லடியாள் என்றது உமாதேவியைக் குறித்தது. எம்பெருமான் அண்மைவிளி, அறைதல் - சத்தித்தல். (9)

காராரும்பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியுள்
ஆராவின்னமுதையணிநாவலாரூரன்சொன்ன
சீரார்செந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
பேராவிண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே.

(ப-ரை.) கார் ஆரும் - மேகங்கள் நிறைந்த, பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, எம் கணநாதன் - எமது கணநாதனாகிய, காளத்தியுள் ஆரா இன் அமுதை-காளத்தியிலுள்ள தெவிட்டாத இனிய அமிர்தத்தை, அணி-அழகிய, நாவலாரூரன் சொன்ன - சுந்தரன் சொன்ன, சீர் ஆர் - சிறப்புப் பொருந்திய, செந்தமிழ்கள்-செந்தமிழ்ப்பாடல்களை,செப்புவார்-சொல்லுவோர், வினை போய் - தம்வினையானவை யொழிந்து, பேரா - நிலைபெயராத, விண்ணுலகம் பெறுவார் - விண்ணுட்டையடைவார், பிழைப்பு - பிழைத்தல், ஒன்றும் இலர்-சிறிது மிலர் எ-று.

(பொ-ரை.) மேகங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த எமது கணநாதனாகிய காளத்தியிலுள்ள தெவிட்டாத இனிய அமிர்தத்தை அழகிய சுந்தரன் சொன்ன சிறப்புப் பொருந்திய செந்தமிழ்ப் பாடல்களை சொல்லுவோர், தம் வினையானவை யொழிந்து நிலைபெயராதவிண்ணுட்டை யடைவார், பிழைத்தல் சிறிது மிலர்.

(க-ரை.) திருக்காளத்தி யெம்பெருமானை நாவலூரன் சொல்லிப் புகழ்ந்த பாடல்களை யோதுவார்க்கு, ஒருதீங்கும் வாராதென்பதாம்.

(வி-ரை.) ஆரா - தெவிட்டாத. பேர்தல்-நிலைபெயர்தல். விண்ணுலகம்-மேலுலகம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - காளத்திநாதர். தேவியார் - ஞானப்பூங்கோதையம்மை.

## திருக்கற்குடி

பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாய்பரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) விடை ஆரும் கொடியாய் - இடபவுருவெழுதப்பட்ட கொடியையுடையானே, வெறி ஆர் - மணம் நிறைந்த, மலர் கொன்றையினாய் - கொன்றைமலர் மாலை யுடையவனே, படை ஆர் - படுத்தற் றொழிலமைந்த, வெண்மழுவாய் - வெள்ளிய மழுவையுடையவனே, பரம் ஆய - மேன்மையாகிய, பரம்பரனே - மிக மேலானவனே, கடி ஆர் - வாசனைநிறைந்த, பூம் பொழில்சூழ் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, திருக்கற்குடி - திருக்கற்குடி யென்னுந் திருப்பதியில், மன்னிநின்ற - நிலைபெற்று நின்ற, அடிகேள்-சுவாமி, எம்பெருமான் - எம் பெருமானே, அடியேனையும் - தொண்டனேனையும், அஞ்சல் என் பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) இடபவுரு வெழுதப்பட்ட கொடியையுடையவனே, மணம் நிறைந்த கொன்றைமலர் மாலையை யுடையவனே, படுத்தற் றொழிலமைந்த வெள்ளிய மழுவை யுடையவனே, மேன்மையாகிய பரம்பரனே, வாசனை நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியென்னுந் திருப்பதியில் நிலை பெற்றுநின்ற சுவாமி, எம்பெருமானே, அடியேனையும் பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி யெம்பெருமானே, அடியேனை அஞ்சற்க வென்று சொல்லி யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) கொன்றை ஆகுபெயர். படுத்தல் - கொல்லுதல். (1)

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
விறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) மறையோர் வானவரும்-வேதியரும் விண்ணவரும், தொழுது எத்தி வணங்கநின்ற - வழிபட்டுத் துதித்து வணங்கநின்ற, இறைவா - இறைவனே, எம்பெருமான் - எம்பெருமானே, எனக்கு இன் அமுது ஆயவனே - எனக்கு இனிய அமிர்தமானவனே, கறை ஆர் - கருமை நிறைந்த, சோலைகள்சூழ் - சோலைகள் சூழ்ந்த, திருக்கற்குடி - திருக்கற்குடியென்னுந் திருப்பதியில், மன்னிநின்ற - நிலைபெற்று நின்ற, அறவா - தருமவடிவினனே, அங்

கணனே - அழகிய கிருபைக்கண்ணனே, அடியேனையும்-தொண்டனேனையும், அஞ்சல் என் - பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) வேதியரும் விண்ணவரும் வழிபட்டுத் துதித்து வணங்க நின்ற இறைவனே, எம்பெருமானே, எனக்கு இனிய அமிர்தமானவனே, கருமைநிறைந்த சோலைகள்சூழ்ந்த திருக்கற்குடியென்னுந் திருப்பதியில் நிலைபெற்று நின்ற தருமவடிவினனே, அழகிய கிருபைக்கண்ணனே, தொண்டனேனையும் பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற தருமவடிவினனே, அடியேனை அஞ்சற்கவென்று சொல்லி யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) மறையோர் என்பதனீற்றில் எண்ணும்மை கூட்டப்பட்டது. தொழுதல் இங்குச் சிந்தித்தல் எனப் பொருள் பயந்து நின்றது. கறை - கருநிறம். சோலைக்குக் கருநிறம் மரச்செறிவாலுண்டானது. (2)

சிலையால்முப்புரங்கள்பொடியாகச்சிதைத்தவனே
மலைமேல்மாமருந்தேமடமாதிடங்கொண்டவனே
கலைசேர்கையினனே திருக்கற்குடிமன்னிநின்ற
அலைசேர்செஞ்சடையாயடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) சிலையால் - மேருமலையாகிய வில்லினால், முப்புரங்கள் பொடி ஆக - திரிபுரங்கள் நீறாகும்படி, சிதைத்தவனே - அழித்தவனே, மலைமேல்-மலைமீதுள்ள, மாமருந்தே - மகா ஔஷதமே, மடம் மாது - இளம்பெண்ணாகிய உமாதேவியை, இடம் கொண்டவனே-இடப்பாகத்தில் அமைத்தவனே, கலைசேர் கையினனே - மான் சேர்ந்த கையினை யுடையவனே, திருக்கற்குடி-திருக்கற்குடியென்னுந் திருப்பதியில், மன்னிநின்ற - நிலைபெற்று நின்ற, அலைசேர் செம்சடையாய் - கங்கை பொருந்திய செஞ்சடையனே, அடியேனையும் - தொண்டனேனையும், அஞ்சல் என் - பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) மேருமலையாகியவில்லினால் திரிபுரங்கள் நீறாகும்படி அழித்தவனே, மலைமீதுள்ள மஹாஔஷதமே, இளம்பெண்ணாகிய உமாதேவியை இடப்பக்கத்தில் அமைத்தவனே, மான் சேர்ந்த கையினையுடையவனே, திருக்கற்குடியென்னுந் திருப்பதியில் நிலைபெற்றுநின்ற கங்கை பொருந்திய செஞ்சடையனே, தொண்டனேனையும் பயப்படாதேயென்று சொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற அலைசேர் செஞ்சடையாய், அடியேனை அஞ்சலென்று சொல்லி யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) சிதைத்தல் - அழித்தல். மருந்து அமிர்தம் எனினுமாம், இடம் - இடப்பக்கம். அலை - ஆகுபெயர், (கங்கை.) (3)

செய்யார்மேனியனே திருநீலமிடற்றினனே
மையார்கண்ணிபங்காமதயானையுரித்தவனே
கையார்சூலத்தினாய் திருக்கற்குடிமன்னிநின்ற
வையாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) செய் ஆர் மேனியனே - செந்திருமேனி யுடையவனே, திருநீலமிடற்றினனே - திருநீலகண்டனே, மை ஆர் கண்ணிபங்கா - உமா தேவி பங்கனே, மதயானை உரித்தவனே-மதயானையை உரித்தவனே, கை ஆர் சூலத்தினாய் - கையில் சூலத்தையுடையவனே; திருக்கற்குடி - திருக்கற்குடி யென்னும் திருப்பதியில், மன்னிநின்ற - நிலைபெற்றுநின்ற, ஐயா - ஐயனே, எம் பெருமான் — எம் பெருமானே, அடியேனையும் - தொண்டனேனையும், அஞ்சல் என் — பயப்படாதே யென்றுசொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) செந்திருமேனியையுடையவனே, திருநீலகண்டனே, உமா தேவி பங்கனே, மதயானையையுரித்தவனே, கையில் சூலத்தை யுடையவனே, திருக்கற்குடியென்னும் திருப்பதியில் நிலைபெற்றுநின்ற ஐயனே, எம்பெரு மானே, தொண்டனேனையும் பயப்படாதே யென்றுசொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற ஐயா, அடியேனை அஞ்சலென்று சொல்லக் கடவையென்பதாம்.

(வி-ரை.) செய் - செம்மை (செந்நிறம்.) மிடறு - கண்டம். மை - அஞ் சனம், கருமையெனினுமாம். (4)

சந்தார்வெண்குழையாய்சரிகோவணவாடையனே
பந்தாரும்விரலாளொருபாகமமர்ந்தவனே
கந்தார்சோலைகள்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
எந்தாயெம்பெருமானடியேனையுமேன்றுகொள்ளே.

(ப-ரை.) சந்தம் ஆர் வெண்குழையாய்-அழகு நிறைந்த வெண்குழையை யுடையவனே, சரி-சரிந்த, கோவணம் ஆடையனே-கௌபீந வஸ்திரத்தை யுடையவனே, பந்து ஆரும் விரலாள்-உமாதேவியானவள், ஒரு பாகம் அமர்ந் தவனே-ஒருபங்கிலமைந்தவனே, கந்தம் ஆர்-மணம்நிறைந்த, சோலைகள் சூழ்-பூஞ்சோலைகள் சூழ்ந்த, திருக்கற்குடி-திருக்கற்குடி யென்னும் திருப்பதியில், மன்னிநின்ற-நிலைபெற்றுநின்ற, எந்தாய்—என்தந்தையே, எம் பெருமான்-எம் பெருமானே, அடியேனையும் - தொண்டனேனையும், ஏன்றுகொள்-ஏற்றுக் கொள்ளக்கடவை எ-று.

(பொ-ரை.) அழகு நிறைந்த வெண்குழையை யுடையவனே, சரிந்த கௌபீன வஸ்திரத்தை யுடையவனே, உமாதேவியானவள் ஒருபங்கிலமைந் தவனே, மணம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியென்னும் திருப்பதியில் நிலைபெற்று நின்ற என்தந்தையே, எம்பெருமானே, தொண் டனேனையும் ஏற்றுக்கொள்ளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற எந்தாய், அடியேனை அஞ்சலென்று சொல்லி யருளக்கடவையென்பதாம்.

(வி-ரை.) சந்து சந்தம் என்பதன் சிதைவு, (ஈறுதொகுத்தல்) சங்கக் குழையாதலால் வெண்குழையென்றார். பந்து ஆர்தல்-பந்தோடு பழகுதல். அமர்தல்-விரும்புதல். கந்தம் என்பது கந்து என ஈறு தொகுத்தலாயிற்று.

அரையார்கீளொடுகோவணமுமரைக்கசைத்து
விரையார்கொன்றையுடன்விளங்கும்பிறைமேலுடையாய்
கரையாரும்வயல்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அரையாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) அரை ஆர் கீள் ஒடு-திருவரையிற் பொருந்திய கீளோடு, கோவணமும்-கௌபீனமும், அரைக்கு அசைத்து-அரையிற் கட்டி, விரை ஆர்-வாசனை நிரம்பிய, கொன்றை உடன்-கொன்றை மலரை, விளங்கும் பிறை மேல் உடையாய்-பிரகாசிக்கின்ற பிறைமேலுடையவனே, கரை ஆரும்-கரைகளோடு பொருந்தின, வயல் சூழ்-வயல்கள் சூழ்ந்த, திருக்கற்குடி-திருக்கற்குடி யென்னும் திருப்பதியில், மன்னிநின்ற-நிலைபெற்றுநின்ற, அரையா—அரசனே, எம்பெருமான்-எம்பெருமானே, அடியேனையும்-தொண்டனேனையும், அஞ்சல் என்-பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) திருவரையிற் பொருந்திய கீளோடு, கௌபீநமும் அரையிற்கட்டி வாசனைநிரம்பிய கொன்றை மலரை பிரகாசிக்கின்ற பிறைமேலுடையவனே, கரைகளோடு பொருந்தின வயல்கள் சூழ்ந்த திருக்கற்குடி யென்னுந் திருப்பதியில் நிலைபெற்றநின்ற அரசனே, எம்பெருமானே தொண்டனேனையும் பயப்படாதே யென்றுசொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடிமன்னிநின்ற அரசனே, அடியேனை அஞ்சலென்று சொல்லியருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) அரை-இடை. அசைத்தல்-கட்டுதல், கரை-வரம்பு. அரையன்-அரசன். (6)

பாரோர்விண்ணவரும்பரவிப்பணிந்தேத்தநின்ற
சீரார்மேனியனே திகழ்நீலமிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
ஆராவின்னமுதேயடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) பாரோர் விண்ணவரும்-மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும், பரவிபணிந்து நின்று எத்த-வழிபட்டுவணங்கித்துதிக்க, சீர் ஆர் மேனியனே - சிறப்புற்ற திருமேனியை யுடையவனே, திகழ் நீல மிடற்றினனே விளங்குகிற நீலகண்டனே, கார் ஆர்-கருமை பொருந்திய, பூம்பொழில் சூழ்-

பூஞ்சோலைகள் சூழ்ந்த, திருக்கற்குடி-திருக்கற்குடியென்னுந் திருப்பதியில், மன்னிநின்ற-நிலைபெற்றுநின்ற, இன்-இனிய, ஆரா அமுதே-தெவிட்டாத அமுதமே, அடியேனையும்-தொண்டனேனையும், அஞ்சல் என்-பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் வழிபட்டு வணங்கித் துதிக்க சிறப்புற்ற திருமேனியையுடையவனே, விளங்குகிற நீலகண்டனே, கருமைபொருந்திய பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கற்குடியென்னுந் திருப்பதியில் நிலைபெற்றுநின்ற இனிய தெவிட்டாத அமுதமே, தொண்டனேனையும் பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற ஆராவமுதே, அடியேனை அஞ்சலென்று சொல்லியருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) பாரோர் என்பத னீற்றில் எண்ணும்மை கூட்டப்பட்டது. பரவல் இங்குச் சிந்தித்தற் பொருளது. கார் ஆர் என்பதற்கு மேகங்கள் தவழ்கின்ற எனினுமாம். (7)

நிலனேநீர்வளிதீநெடுவானகமாகிநின்ற
புலனேபுண்டரிகத்தயன்மாலவன்போற்றிசெய்யுங்
கனலேகற்பகமேதிருக்கற்குடிமன்னிநின்ற
அனல்சேர்கையினனேயடியேனையுமஞ்சலென்னே.

(ப-ரை.) நிலன் நீர் வளிதீ நெடுவானகம் ஆகிநின்ற-மண்நீர்காற்று நெருப்பு நெடிய ஆகாசமாகிநின்ற, புலனே-அறிவுருவனே, புண்டரிகத்து அயன்-தாமரைமலரிலிருக்கிற பிரமன், மால் அவன்-திருமால், போற்றிசெய்யும்-வணங்குகிற, கனலே-நெருப்புருவனே, கற்பகமே-கற்பகத்தருவே, திருக்கற்குடி-திருக்கற்குடியென்னுந் திருப்பதியில், மன்னிநின்ற-நிலைபெற்றுநின்ற, அனல்சேர்கையினனே-மழுப்பொருந்திய திருக்கரத்தை யுடையவனே, அடியேனையும் - தொண்டனேனையும், அஞ்சல் என் - பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை எ-று.

(பொ-ரை.) மண்நீர் காற்று நெருப்பு நெடிய ஆகாசமாகி நின்ற அறிவுருவனே, தாமரைமலரிலிருக்கிற பிரமன் திருமால் வணங்குகிற நெருப்புருவனே, கற்பகத்தருவே, திருக்கற்குடி யென்னுந் திருப்பதியில் நிலைபெற்று நின்ற மழுப்பொருந்திய திருக்கரத்தையுடையவனே, தொண்டனேனையும் பயப்படாதே யென்று சொல்லி யருளக்கடவை.

(க-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற அனல்சேர் கையினனே, அடியேனை, அஞ்சலென்று சொல்லியருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) நிலம் நிலன் எனப் போலியாயிற்று. புலம் என்பது-மதி. வளி-காற்று. வானகம் - ஆகாயம். புண்டரீகம் - தாமரை மலர். கற்பகம்-கற்பகமரம். (8)

வருங்காலன் னுயிரைமடியத்திருமெல்விரலால்
பெரும்பாலன் றனக்காய்ப்பிரிவித்தபெருந்தகையே
கரும்பாரும்வயல்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
விரும்பாவெம்பெருமானடியேனையும்வேண்டுதியே.

(ப-ரை.) வரும் - வந்த, காலன் உயிரை - இயமன் உயிரை, மடிய - மாளும்படி, திருமெல் விரலால் - அழகிய மெல்லிய விரல்களாலே, பெரும் பாலன் தனக்காய் - பெருமையுள்ள மார்க்கண்டனுக்காக, பிரிவித்த - பிரித்த, பெரும் தகையே-பெருங்குணத்தை யுடையவனே, கரும்பு ஆரும் வயல்சூழ் - கரும்பு நிறைந்த வயல்சூழ்ந்த, திருக்கற்குடி - திருக்கற்குடியென்னுந் திருப்பதியில், மன்னிநின்ற - நிலைபெற்று நின்ற, விரும்பா - விரும்புதலை யுடையவனே, எம்பெருமான் - எம்பெருமானே, அடியேனையும் - தொண்டனேனையும், வேண்டுதி - விரும்பக்கடவை எ-று.

(பொ-ரை.) வந்த இயமனுயிரை மாளும்படி அழகிய மெல்லிய விரல்களாலே பெருமையுள்ள மார்க்கண்டனுக்காகப் பிரித்த பெருங்குணத்தை யுடையவனே, கரும்பு நிறைந்த வயல் சூழ்ந்த திருக்கற்குடி யென்னுந் திருப்பதியில் நிலைபெற்று நின்ற விரும்புதலை யுடையவனே, தொண்டனேனையும் விரும்பக்கடவை.

(கு-ரை.) திருக்கற்குடி மன்னிநின்ற விரும்புதலை யுடையவனே, அடியேனையும் விரும்பக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) தகை - குணம். கரும்பு - கருப்பஞ்சோலை. விரும்பா - விரும்பனே. (விருப்பத்தை யுடையவனே) வேண்டல் - விரும்பல். (9)

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமருங்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாள்நல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே.

(ப-ரை.) அலை ஆர் - அலைகள் நிறைந்த, தண்புனல் சூழ்ந்து - குளிர்ந்த நீர் சூழ்ந்து, அழகு ஆகி - அழகுபெற்று, விழவு அமரும் - திருவிழாக்கள் அமைந்த, கலை ஆர் - கலைஞரும், மாதவர் - மாதவரும், சேர்-கூடிய, திருக்கற்குடி - திருக்கற் குடியிலெழுந்தருளியிருக்கிற, கற்பகத்தை - கற்பகவிருக்ஷத்தை, சிலை ஆர் வாள் நுதலாள் வனப்பகை நல்லசிங்கடி அப்பன் நாவலூரன்—, உரை - சொன்ன, விலை ஆர் மாலை வல்லார் - விலைமதிக்கப் பெற்ற தமிழ்மாலையைக் கற்று வல்லவர், வியன்—பெரிய, மூவுலகு - மூன்றுலகத்தையும், ஆள்பவர் - ஆள்பவராவர் எ-று.

(பொ-ரை.) அலைகள் நிறைந்த குளிர்ந்த நீர் சூழ்ந்து அழகுபெற்று திருவிழாக்களமைந்த, கலைஞரும் மாதவரும் கூடிய திருக்கற்குடியி லெழுந்தருளி

யிருக்கிற கற்பகவிருக்ஷத்தை, சிலையார்வாள் நுதலாள் நல்ல சிங்கடியப்பன், நாவலூரன் புகழ்ந்துரைத்த, விலைமதிக்கப்பெற்ற தமிழ் மாலையைக் கற்று வல்லவர் பெரிய மூன்றுலகத்தையும் ஆள்பவராவர்.

(கு-ரை.) திருக்கற்குடிக் கற்பகத்தைத் திருநாவலாரூரன் புகழ்ந்துரைத்த தமிழ் மாலையைக் கற்று வல்லவர் மூன்றுலகங்களையும் ஆள்பவராவர் என்பதாம்.

(வி-ரை) சிலை ஆர்வாள் நுதலாள் - வில்லினை நிகர்த்த ஒளிபொருந்திய நெற்றியையுடையவள். மூவுலகு - சுவர்க்கலோகம், மத்தியலோகம், பாதாளலோகம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மூத்தீசர். தேவியார் - அஞ்சனாக்ஷியம்மை.

---

## திருக்கடவூர்.

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை.) பொடி ஆர் மேனியனே - திருவெண்ணீற்றை யணிந்த திருமேனியை யுடையவனே, புரிநூல் - முப்புரிநூலானது, ஒருபால் பொருந்த - ஒருபாகத்திற் பொருந்த, வடி ஆர்-கூர்மைபொருந்திய, மூ இலைவேல் - முத்தலைச் சூலத்தையும், வளர்கங்கையின் மங்கை யொடும் - வளராநின்ற கங்கையாகிய பெண்ணோடும், கடி ஆர் - வாசனைநிறைந்த, கொன்றையனே - கொன்றைமலர் மாலையையுடையவனே, கடவூர் தன்னுள் - திருக்கடவூருள், வீரட்டத்து - திருவீரட்டத்து எழுந்தருளிய, எம் அடிகேள் - எமது சுவாமீ, என் அமுதே - என் அமிர்தமே, எனக்கு-அடியேனுக்கு, நீ அலது-நீயன்றி, துணை - துணையாவார், ஆர் - வேறியாவர் எ-று.

(பொ-ரை.) திருவெண்ணீற்றை யணிந்த திருமேனியை யுடையவனே, முப்புரி நூலானது ஒருபாகத்திற் பொருந்த, கூர்மைபொருந்திய முத்தலைச் சூலத்தையும், வளராநின்ற கங்கையாகிய பெண்ணோடும் வாசனை நிறைந்த கொன்றைமலர் மாலையை யுடையவனே, திருக்கடவூருள் திருவீரட்டத்தெழுந்தருளிய எமது சுவாமீ, என் அமிர்தமே, அடியேனுக்கு நீயன்றித் துணையாவார் வேறு யாவர்.

(க-ரை.) திருக்கடவூர் வீரட்டத் தெழுந்தருளியிருக்கிற எமது சுவாமீ, நீயன்றி எனக்குத் துணையாவார் யார் என்பதாம்.

(வி-ரை.) புரி - முறுக்கு., கங்கையின் மங்கை - இதில் இன் அல்வழிச் சாரியை. (1)

பிறையாருஞ்சடையாய்பிரமன் றலையிற்பலிகொண்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர் தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதேயெனக்கார் துணைநீயலதே.

(ப-ரை.) பிறைஆரும் சடையாய் -பிறைசேர்ந்த சடையையுடையவனே, பிரமன்தலையில் - பிரமன் தலையோட்டில், பலிகொள் - பிச்சையேற்கின்ற, மறை ஆர் - வேதரூபியாயிருக்கிற, வானவனே-தேவனே, மறையின்பொருள் ஆனவனே - வேதார்த்தமானவனே, கறை ஆரும் மிடற்றாய் - நஞ்சுபொருந்திய திருமிடற்றை யுடையவனே, கடவூர் தன்னுள் - திருக்கடவூருள், வீரட்டத்து-திருவீரட்டத்து எழுந்தருளிய, எம் இறைவா - எமது தலைவனே, என் அமுதே - என் அமிர்தமே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது - நீயன்றி, துணை - துணையாவார், ஆர் - வேறியாவர் எ-று.

(பொ-ரை.) பிறைசேர்ந்த சடையையுடையவனே, பிரமன் தலையோட்டில் பிச்சை யேற்கின்ற வேதரூபியாயிருக்கிற தேவனே, வேதார்த்தமானவனே நஞ்சுபொருந்திய திருமிடற்றையுடையவனே, திருக்கடவூருள்திருவீரட்டத்து ளெழுந்தருளிய எமது தலைவனே, என் அமிர்தமே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(க-ரை.) திருக்கடவூர்த் திருவீரட்டத் தெம் மிறைவா, எனக்கு நீயன்றித் துணையாவார் வேறு யாவர் என்பதாம்.

(வி-ரை.) பலி - பிக்ஷை. மறையின் பொருள்-வேதார்த்தம். கறை-நஞ்சு. மிடறு - கண்டம். (2)

அன்றாலின்னிழற்கீழறநால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர்கொடுத்தாய்மறையோனுக்குமான்
கன்றாருங்கரவாகடவூர்த்திருவீரட்டத்துள்
என்றாதைபெருமானெனக்கார் துணைநீயலதே.

(ப-ரை.) அன்று - அக் காலத்தில், ஆலின் நிழல் கீழ் - கல்லாலின் னிழலின் கீழே, நால்வர்க்கு - (சனகர் முதலிய) நால்வருக்கும், அறம் அருள்புரிந்து - அற நெறியைக் கிருபைசெய்து, காலன் - இயமனது, உயிர் - உயிரை, கொன்றாய் - வாங்கினை, மறையோனுக்கு - வேதியச் சிறுவனுக்கு, உயிர் கொடுத்தாய் - உயிர் தந்தாய், மான்கன்று - மான் கன்று, ஆரும் - பொருந்திய, கரவா - திருக்கரத்தை யுடையவனே, கடவூர்-கடவூர், திருவீரட்டத்

துள் - திருவீரட்டத்துளெழுந்தருளிய, என் தாதை - என் தந்தையே, பெரு மான் - எம்பெருமானே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது - நீ யன்றி, துணை - துணையாவார், ஆர் - வேறியாவர் எ-று.

(பொ-ரை.) அக்காலத்தில் கல்லாலி னீழலின்கீழே சநகர் முதலிய நால்வருக்கும் அறநெறியைக் கிருபைசெய்து, யமனது உயிரை வாங்கினை, வேதியச் சிறுவனுக்கு உயிர்தந்தாய், மான் கன்று பொருந்திய திருக்காத்தையுடையவனே, கடவூர் திருவீரட்டத்துள் எழுந்தருளிய என் தந்தையே, எம்பெருமானே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(க-ரை.) கடவூர்த் திருவீரட்டத்துள் என் தாதையே, எனக்கு நீயலது துணையார் என்பதாம்.

(வி-ரை.) நால்வர்க்கருள்புரிந்து என மேல்வருதலால் ஆல் என்றது கல்லால் என்பது பெறுமாருயிற்று. காலன் - காலதேவதை. உயிர் கொன்ருய் உயிர் கொடுத்தாய் என வியையும். மறையோன் என்றது மார்க்கண்டனை. காவன் - கையையுடையவன். (3)

போராருங்கரியின்னுரிபோர்த்துப்பொன்மேனியின்மேல்
வாராரும்முலையாளொருபாகமகிழ்ந்தவனே
காராருமிடற்ருய்கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை.) போர் ஆரும்-போர்த்தொழிலையுடைய, கரியின் உரி-யானைத் தோலை, பொன் மேனியின்மேல் போர்த்து - பொன்போலுந் திருமேனியின்மீது போர்த்து, வார் ஆரும் முலையாள்-உமாதேவியானவள், ஒரு பாகம்- ஒரு பாகத்தில் இருக்க, மகிழ்ந்தவனே - களித்தவனே, கார் ஆரும் மிடற்ருய் - திருநீலகண்டனே, கடவூர் தன்னுள் - திருக்கடவூருள், வீரட்டானத்து - திருவீரட்டானத்து ளெழுந்தருளிய, ஆரா என் அமுதே - தெவிட்டாத என் அமிர்தமே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது-நீ யன்றி, துணை- துணையாவார், ஆர் - வேறியாவர் எ-று.

(பொ-ரை.) போர்த்தொழிலையுடைய யானைத்தோலை பொன்போலுந் திருமேனியின்மீது போர்த்து, உமாதேவியானவள் ஒரு பாகத்தி லிருக்க களித்தவனே, திருநீலகண்டனே, திருக்கடவூருள் திருவீரட்டானத்துளெழுந்தருளிய தெவிட்டாத என் அமிர்தமே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(க-ரை.) கடவூர் வீரட்டானத்து ஆராவமுதே, எனக்கு நீயலது துணையாவார் யாவர் என்பதாம்.

(வி-ரை.) போர் - போர்த்தொழில். பொன்மேனி - பொன்போலு மேனி, அழகாகிய திருமேனி யென்றலு மொன்று. வார் - கச்சு. (4)

மையார்கண்டத்தினய்மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென் னுயிருட்புகுந்தாயின்னம்போந்தறியாய்
கையாராடரவாகடவூர்தனுள்வீரட்டத்தெம்
ஐயாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை.) மை ஆர் கண்டத்தினய் - திருநீலகண்டத்தை யுடையவனே, மதமா உரி போர்த்தவனே - மதயானையின் தோலைப் போர்த்தவனே, பொய்யாது - பொய்க்காமல், என் உயிருள் புகுந்தாய்-என் உயிரில் பிரவேசித்தாய், இன்னும் போந்து அறியாய்-இன்னும் வெளிப்பட்டறியாய், கை ஆர் - கையினிடத்துப் பொருந்திய, ஆடு அரவா - ஆடுகின்ற பாம்பை யுடையவனே, கடவூர்தனுள் - திருக்கடவூருள், வீரட்டத்து - திருவீரட்டத்து ளெழுந்தருளிய, எம் ஐயா - எம் ஐயனே, என் அமுதே - என் அமிர்தமே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது - நீயன்றி, துணை - துணையாவார், ஆர் - வேறியாவர் எ-று.

(பொ-ரை.) திருநீல கண்டத்தை யுடையவனே, மதயானையின் தோலைப் போர்த்தவனே, பொய்க்காமல் என் உயிரில் பிரவேசித்தாய், இன்னும் வெளிப்பட்டறியாய், கையினிடத்துப் பொருந்திய ஆடுகின்ற பாம்பையுடையவனே, திருக்கடவூருள் திருவீரட்டத்து ளெழுந்தருளிய எம் ஐயனே, என் அமிர்தமே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(கு-ரை.) கடவூர்தன்னுள் வீரட்டத்து எம்மையா, என்னமுதே, எனக்கு நீயலது, வேறு துணை யில்லை யென்பதாம்.

(வி-ரை.) மையார் கண்டம் - நீலகண்டம். மதமா-மதயானை. அரவன்-பாம்பையுடையவன். (5)

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணுருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை.) மண்—, நீர்—, தீ—, வெளி - ஆகாயம், கால்-காற்று, (என்கிற) வரு - வளராநின்ற, பூதங்கள் ஆகி - பஞ்சபூதங்களாகி, மற்றும்—மேலும், பெண்ணோடு ஆண் அலி ஆய் - பெண்ணுடனே ஆண்பேடு ஆய், பிறவா உரு ஆனவனே - பிறக்காதவடிவானவனே, கண் உள் ஆர் மணியே - கண்ணுள்ளே பொருந்திய மணியே, கடவூர் தனுள் - திருக்கடவூருள், வீரட்டத்து - திருவீரட்டத்து ளெழுந்தருளிய, எம் அண்ணா-எமது தந்தையே, என் அமுதே-என் அமிர்தமே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது-நீயன்றி, துணை-துணையாவார், ஆர் - வேறியாவர் எ-று.

(பொ-ரை.) மண் நீர் தீ ஆகாயம் காற்று என்று சொல்லப்பட்ட வளராநின்ற பஞ்சபூதங்களாகி, மேலும் பெண்ணுடனே ஆண்பேடு ஆய், பிறக்

காத வடிவானவனே, கண்ணுள்ளே பொருந்திய மணியே, திருக்கடவூருள் திருவீரட்டத்து ளெழுந்தருளிய எமது தந்தையே, என் அமிர்தமே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(க-ரை.) திருக்கடவூரி லெழுந்தருளியிருக்கிற எம் அண்ணு, அமுதே, எனக்கு நீயலது துணையாவார் வேறில்லை யென்பதாம்.

(வி-ரை.) அலி – பேடு. கண்ணுருள் மணி - கண்மணி. (6)

எரியார்புன்சடைமேலிளநாகமணிந்தவனே
நரியாருஞ்சுடலைநகுவெண்டலைகொண்டவனே
கரியாரீருரியாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
அரியாயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை) எரி ஆர்-நெருப்புப்போலும், புன்சடைமேல்-புல்லிய சடையின் மீது, இளநாகம் அணிந்தவனே - இளம்பாம்பை அணிந்தவனே, நரி ஆரும், நரிகள் நிறைந்த, சுடலை-சுடலையில், நகு-விளங்குகின்ற, வெண்டலைகொண்டவனே-வெண்டலையேந்தினவனே, ஆர் ஈர் கரி உரியாய்-அருமையாகிய குளிர்ந்த யானைத்தோலையுடையவனே, கடவூர்தனுள்-திருக்கடவூருள், வீரட்டத்து-திருவீரட்டத்து ளெழுந்தருளிய, எம் அரியாய்-எமது அரியவனே, என் அமுதே - என் அமிர்தமே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது - நீயன்றி, துணை-துணையாவார், ஆர்-வேறியாவர் எ-று.

(பொ-ரை) நெருப்புப் போலும் புல்லிய சடையின்மீது இளம்பாம்பை அணிந்தவனே, நரிகள் நிறைந்த சுடலையில் விளங்குகின்ற வெண்டலை யேந்தினவனே, அருமையாகிய குளிர்ந்த யானைத் தோலையுடையவனே, திருக்கடவூருள் திருவீரட்டத்து ளெழுந்தருளிய எமது அரியவனே, என் அமிர்தமே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(க-ரை.) திருக்கடவூர் வீரட்டத்து எம் அரியாய், என் அமுதே, எனக்கு நீயலது துணையாவார் ஒருவருமில்லை யென்பதாம்.

(வி-ரை.) எரி-நெருப்பு. நாகம்-பாம்பு. ஆர்தல்-நிறைதல். சுடலை-மயாநம். நகு என்பதற்கு சிரிக்கின்ற என்றுரைத்தலுமாம். உரி-தோல்.

வேறாவுன்னடியேன்விளங்குங்குழைக்காதுடையாய்
தேறேனுன்னையல்லாற்சிவனேயென்செழுஞ்சுடரே
காறூர்வெண்மருப்பாகடவூர்த்திருவீரட்டத்துள்
ஆறூர்செஞ்சடையாயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை.) உன் அடியேன் வேறு - உன்னடியேன் வேறானவனு, விளங்கும்-பிரகாசிக்கிற, குழை காது உடையாய்-குழையையணிந்த திருச்செவியை யுடையவனே, உன்னை அல்லால்-உன்னையன்றி, தேறேன்-வேறொருவரை அறியேன், சிவனே-சிவபிரானே, என்செழுஞ்சுடரே-என்செழுஞ்சோதியே,

காறு ஆர்-கொழுப்போன்ற, வெண்மருப்பா-வெண்கொம்பையுடையவனே, கடவூர்-கடவூர், திருவீரட்டத்துள்-திருவீரட்டத்து ளெழுந்தருளிய, ஆறு ஆர் செம் சடையாய் - கங்கைதங்கிய செஞ்சடையனே, எனக்கு-அடியேனுக்கு, நீ அலது - நீயன்றி, துணை-துணையாவார், ஆர்-வேறியாவர் எ-று

(பொ-ரை.) உன்னடியேன் வேறொனவனு, பிரகாசிக்கிற குழையையணிந்த திருச்செவியையுடையவனே, உன்னையன்றி வேறொருவரை அறியேன், சிவபிரானே, என் செழுஞ்சோதியே, கொழுப்போன்ற வெண் கொம்பையுடையவனே, கடவூர் திருவீரட்டத்து ளெழுந்தருளிய கங்கைதங்கிய செஞ்சடையனே, அடியேனுக்கு நீயன்றி துணையாவார் வேறியாவர்.

(கு-ரை.) திருக்கடவூர் வீரட்டத்துள் எழுந்தருளியிருக்கிற கங்கைச் சடையனே, எனக்கு நீயலது துணையாவார் ஒருவருமில்லை யென்பதாம்.

(வி-ரை.) குழை-குண்டலம். தேறல்-அறிதல். ஆறு-கங்காநதி. (8)

அயனோடன்றரியுமடியும்முடிகாண்பரிய
பயனேயெம்பரனேபரமாயபரஞ்சுடரே
கயமாருஞ்சடையாய்கடவூர்த்திருவீரட்டத்துள்
அயனேயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே.

(ப-ரை.) அன்று - அக்காலத்தில், அயனோடு அரியும் - பிரமனும் திருமாலும், முடியும் அடியும் காண்பு அரிய - முடியும் அடியும் காண்டற்கரிய, பயனே-பிரயோசனமே, எம்பரனே-எமதுபரனே, பரம் ஆய-மேன்மையாகிய, பரஞ்சுடரே-பரஞ்சோதியே, கயம் ஆரும் சடையாய்-கங்கை நீர் நிறைந்த சடையையுடையவனே, கடவூர்-கடவூர், திருவீரட்டத்துள்-திருவீரட்டத்து ளெழுந்தருளிய, அயனே —, என் அமுதே - என் அமிர்தமே, எனக்கு - அடியேனுக்கு, நீ அலது-நீயன்றி, துணை - துணையாவார், ஆர்-வேறியாவர்.

(பொ-ரை.) அக்காலத்தில் அயனோடு அரியும் முடியும் அடியும் காண்டற்கரிதாயிருந்தபயனே, எம்பரனே, மேன்மையாகிய பரஞ்சுடரே, கங்கைநீர் நிறைந்த சடையையுடையவனே கடவூர் திருவீரட்டத்து ளெழுந்தருளியிருக்கிற ஐயனே, என்னமுதே, எனக்கு நீயலது வேறு துணையாவர் ஒருவருமில்லை.

(கு-ரை.) திருக்கடவூர்த் திருவீரட்டத்துள் எழுந்தருளி யிருக்கிற ஐயனே, எனக்கு நீயலது வேறு துணையில்லை யென்பதாம்.

(வி-ரை.) வெண்மருப்பு-பன்றிக்கொம்பு. அயன்-ஐயன். (9)

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்துணையாவெழில்நாவலர்கோன்
ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே.

(ப-ரை.) கார் ஆரும்-மேகங்கள் தவழ்கின்ற, பொழில் சூழ்-சோலை சூழ்ந்த, கடவூர்-கடவூர், திருவீரட்டத்துள்-திருவீரட்டத்துள் ளெழுந்தருளியிருக்கிற, ஏர் ஆரும் இறையை-அழகு நிறைந்த இறைவனை, துணை ஆ-துணையாகக் கொண்டு, எழில் நாவலர் கோன்—, ஆரூரன் அடியான்—, அடித்தொண்டன்—, உரைத்த-சொல்லிய, தமிழ்-தமிழ் மாலையை, ஏத்தவல்லார்-ஏத்தவல்லவராகிய, பாரோர் - இவ்வுலகத்தார், பரலோகத்து இருப்பார்-பரலோகத்திருப்பவராவர் எ-று.

(பொ-ரை.) மேகங்கள் தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த கடவூர்த் திருவீரட்டத்து ளெழுந்தருளியிருக்கிற அழகுபொருந்திய இறைவனைத் திருநாவலாரூரன் புகழ்ந்துரைத்த தமிழ் மாலையைக் கற்று வல்லவர், பரலோக வாழ்வைப் பெறுவர்.

(கு-ரை.) திருக்கடவூர்த் திருவீரட்டத்துள் எழுந்தருளியிருக்கிற இறைவனைத் திருநாவலாரூரன் புகழ்ந்துரைத்த தமிழ் மாலையைக்கொண்டு அவ்விறைவனைத் துதிக்கவல்லாராகிய இவ்வுலகத்தார் பரலோகத்திருப்பவராவர் என்பதாம்.

(வி-ரை.) ஏர்-அழகு. இறை-ஆகுபெயர். எழில்-அழகு. பார்-பூமி. பரலோகம்-சிவலோகம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அமுர்தகடேசர். தேவியார் - அபிராமியம்மை.

---

## திருக்குருகாவூர்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தரேயென்றுன்னைப்பேசுவார்பிறரெல்லா
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தகனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) இத்தனை ஆம் ஆற்றை - இவ்வளவாந்தன்மையை, அறிந்திலேன் - உணர்ந்திலேன், எம்பெருமான்-எம்பெருமானே, முத்தினை-முத்துப்போல்பவனாகிய வுன்னை, மணிதன்னை மாணிக்கம்போல்பவனாகிய வுன்னை, பிறர் எல்லாம் - அந்நியரெல்லாரும், உன்னை - நின்னை, பித்தனே என்று பேசுவர் - பித்தனேயென்று சொல்லுவர், மாணிக்கம் முளைத்து எழுந்த -

மாணிக்கமே முளைத்தெழுந்தாற்போன்ற, வித்தகனே - ஞானவடிவனே, குருகாவூர் வெள்ளடை - திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா எ-று.

(பொ-ரை.) இவ்வளவாகிய தன்மையை யுணர்ந்திலேன், எம்பெருமானே, முத்துப்போல்பவனாகிய வுன்னை, மாணிக்கம்போல்பவனாகிய வுன்னைப் பிறரெல்லாம் பித்தனே யென்று பேசுவர், மாணிக்கம் முளைத்தெழுந்தாற்போன்ற ஞானவடிவனே, திருக்குருகாவூர் வெள்ளடையி லெழுந்தருளியிருக்கிற நீயல்லவா.

(க-ரை.) திருக்குருகாவூரி லெழுந்தருளியிருக்கிறவித்தகனே, உன்னைப் பித்தனே யென்பர் பிறரெல்லாம், இதென்னபாவம் என்பதாம்.

(வி-ரை.) தனை-அளவு. ஆறு-வழி. வித்தன் எனப் பாடமோதி வித்துப் போல்பவன் என்றுரைப்பினுமாம். (1)

ஆவியைப்போகாமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
வாவியிற்கயல்பாயக்குளத்திடைமடைதோறுங்
காவியுங்குவளையுங்கமலமுஞ்செங்கழுநீரும்
மேவியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) வாவியில் - தடாகங்களில், கயல்பாய - சேல்கள் துள்ள, குளத்திடை - குளங்களில், மடைதோறும் - மடைகளிலெல்லாம், காவியும்—, குவளையும்—, கமலமும்-தாமரையும், செங்கழுநீரும் - செவ்வல்லியும், மேவிய - பொருந்திய, குருகாவூர் வெள்ளடை - திருச்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா, ஆவியை-என்னுயிரை, போகாமே தவிர்த்து - போகாமல் தடுத்து, என்னை ஆட்கொண்டாய் - என்னையடிமை கொண்டனை எ-று.

(பொ-ரை.) தடாகங்களில் சேல்கள் துள்ள, குளங்களில் மடைகளிலெல்லாம் காவியும் குவளையும் தாமரையும் செவ்வல்லியும் பொருந்திய திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற நீ அல்லவா என்னுயிரை போகாமல் தடுத்து என்னை யடிமை கொண்டனை.

(க-ரை.) திருச்குருகாவூர் வெள்ளடையி லெழுந்தருளியிருக்கிற நீயல்லவா, என்னுயிரைப் போகாது தடுத்தாட்கொண்டவன் என்பதாம்.

(வி-ரை.) ஆவி - உயிர். தவிர்த்தல் - தடுத்தல். காவி குவளையென்பன. ஒன்றற்கொன்று சிறிது வேற்றுமையுள்ள ஒரு சாதிமலர்கள். கமலம்-தாமரை.

பாடுவார்பசிதீர்ப்பாய்பரவுவார்பிணிகளைவா
யோடுநன்கலனாகவுண்பலிக்குழல்வானே
காடுநல்லிடமாகக்கடுவிருள்நடமாடும்
வேடனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) ஓடு - தலையோட்டினை, நன்கலன் ஆக - நல்லபலிபாத்திரமாகக்கொண்டு, உண்பலிக்கு - உண்ணுஞ் சோற்றின் பொருட்டு, உழல்வானே - திரிபவனே, காடு - மயானம், நல் இடம் ஆக - நல்லிடமாகக் கொண்டு, கடு இருள் - மிக்க இருளில், நடம் ஆடும் - நடனஞ் செய்கிற, வேடனே - வேடுவனே, குருகாவூர் வெள்ளடை - திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா, பாடுவார் - பாடுவோருடைய, பசிதீர்ப்பாய் - பசியை யொழிப்பாய், பரவுவார் - தோத்திரம்பண்ணுவோருடைய, பிணி களைவாய் - நோய் தீர்ப்பாய் எ-று.

(பொ-ரை) தலையோட்டினை நல்ல பலி பாத்திரமாகக் கொண்டு உண்ணுஞ் சோற்றின் பொருட்டுத் திரிபவனே, மயானம் நல்லிடமாகக் கொண்டு மிக்க இருளில் நடனஞ்செய்கிற வேடனே, திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற நீயல்லவா பாடுவோருடைய பசியை யொழிப்பாய், தோத்திரம்பண்ணுவோருடைய நோய்தீர்ப்பாய்.

(க-ரை.) திருக்குருகாவூரிறைவனே, பாடுவார் பசி தீர்ப்பவனும் தோத்திரம் பண்ணுவோருடைய பிணி தீர்ப்பவனும் நீயன்றோ வென்பதாம்.

(வி-ரை.) பரவுதல் - துதித்தல். களைதல் - வேரறுத்தல். கலன் - கலம், (பாத்திரம்.) பலி - சோறு. (3)

வெப்பொடுபிணியெல்லாந்தவிர்த்தென்னையாட்கொண்டா
யொப்புடையொளிநீலமோங்கியமலர்ப்பொய்கை
யப்படியழகாயவணிநடைமடவன்னம்
மெய்ப்படுகுருகாவூர்வெள்ளடை நீயன்றே.

(ப-ரை.) ஒப்பு உடை - அழகமைந்த, ஒளி - ஒளியையுடைய, நீலம் - நீலமலர்கள், ஓங்கிய - மிகுந்த, மலர் பொய்கை - புஷ்பதடாகங்களிலும், அப்படி அழகு ஆய - அவ்வாறே அழகாகிய, அணிநடை - அழகிய நடையையுடைய, மட அன்னம் - இளமை பொருந்திய அன்னங்கள், மெய்படு - நிலைபெற்ற, குருகாவூர் வெள்ளடை - திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா, வெப்பொடு - ஜ்வரத்தோடு, பிணி எல்லாம் தவிர்த்து - பிணிகளை யெல்லாம் ஒழித்து, என்னை ஆட்கொண்டாய் - என்னை யடிமை கொண்டாய் எ-று.

(பொ-ரை.) அழகமைந்த ஒளியையுடைய நீலமலர்கள் மிகுந்த புஷ்பதடாகங்களிலும் அவ்வாறே அழகாகிய அழகிய நடையையுடைய இளமை பொருந்திய அன்னங்கள் நிலைபெற்ற திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற நீயல்லவா ஜ்வரத்தோடு பிணிகளை யெல்லாம் ஒழித்து என்னையடிமை கொண்டாய்.

(க-ரை.) திருக்குருகாவூர் வெள்ளடை நீயல்லவா என் பிணி யெல்லாமொழித்து ஆட்கொண்டவன் என்பதாம்.

(வி-ரை.) வெப்பு - வெம்மை. (ஜ்வரம்) தவிர்த்தல் - ஒழித்தல். நீலம் - கருங்குவளை. (4)

வரும்பழிவாராமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
சுரும்புடைமலர்க்கொன்றைச்சுண்ணவெண்ணீற்றானே
யரும்புடைமலர்ப்பொய்கையல்லியுமல்லிகையும்
விரும்பியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) சுரும்பு உடை - வண்டுகளையுடைய, மலர் கொன்றை-கொன்றைமலர் மாலை யணிந்த, சுண்ணவெண்ணீற்றானே - பொடியாகிய திருவெண்ணீற்றையணிந்தவனே, அரும்புஉடை, அரும்புதலையுடைய,மலர்பொய்கை - பூம் பொய்கைகளில், அல்லியும் - அல்லியும், மல்லிகையும் - மல்லிகையும், விரும்பிய - யாவராலும் விரும்பப்பட்ட, குருகாவூர் வெள்ளடை - திருக்குருகாவூர் வெள்ளடையிலெழுந்தருளியிருக்கிற, நீ அன்றே-நீ அல்லவா, வரும்பழி வாராமே தவிர்த்து - வரக்கடவனவாகிய பழிகளை யொழித்து, என்னை யாட்கொண்டாய் - என்னை யடிமைகொண்டனை எ-று.

(பொ-ரை.) வண்டுகளையுடைய கொன்றைமலர் மாலை யணிந்த பொடியாகிய திருவெண்ணீற்றை யணிந்தவனே, அரும்புதலையுடைய பூம்பொய்கைகளில் அல்லியும் மல்லிகையும் யாவராலும் விரும்பப்பட்ட திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற நீயல்லவா வரக்கடவனவாகிய பழிகளை யொழித்து என்னை யடிமைகொண்டனை.

(க-ரை.) குருகாவூர் வெள்ளடைநீயன்றே என் பழியொழித்து ஆட்கொண்டவன் என்பதாம்.

(வி-ரை.) பழி-நிந்தை. சுண்ணம்-பொடி. (5)

பண்ணிடைத்தமிழொப்பாய்பழத்தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய்கடுவிருட்சுடரொப்பாய்
மண்ணிடையடியார்கள்மனத்திடர்வாராமே
விண்ணிடைகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) மண் இடை-மண்ணுலகத்துள்ள, அடியார்கள் மனத்து-தொண்டர்களுடைய மனத்தில், இடர்வாராமே-துன்பமுண்டாகாமல், விண் இடை-ஆகாயத்தில் பறக்கடிக்கின்ற, குருகாவூர் வெள்ளடை-திருக்குருகாவூர் வெள்ளடையில் எழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா, பண் இடை தமிழ் ஒப்பாய்-பண்ணொடு கூடிய தமிழ்ப்பாடல்களை யொப்பவன், பழத்தினில் சுவை ஒப்பாய் - கனிகளில் சுவையை நிகர்ப்பவன், கண் இடைமணி ஒப்பாய்-கண்ணிடத்து மணியை யொப்பவன், கடு இருள்-மிக்க இருளில், சுடர் ஒப்பாய்-ஒளியை யொப்பவன் எ-று.

(பொ-ரை.) மண்ணுலகத்திலுள்ள தொண்டர்களுடைய மனத்தில்இடர் வாராமே, ஆகாயத்தில் பறக்கடிக்கின்ற திருக்குருகாவூர் வெள்ளடையி

லெழுந்தருளியிருக்கிற நீயல்லவா, பண்ணொடு கூடிய தமிழ்ப் பாடல்களை யொப்பவன், பழத்திற் சுவையாயிருப்பவன், கண்ணிடத்து மணியை யொப்பவன், மிக்க இருளில் ஒளியை யொப்பவன்.

(க-ரை.) குருகாவூர் வெள்ளடைநீயன்றே, அடியார்களிடத்து ஒரு துன்பம் வராமற் காத்து, பண்ணிடைத்தமிழ் முதலியவாயிருப்பவன் என்பதாம்.

(வி-ரை.) பண்-இந்தளம் நட்டராகம் முதலியன. கண்ணிடைமணி - கண்மணி. (6)

போந்தனைதரியாமேநமன்றமர்புகுந்தென்னை
நோந்தனைசெய்தாலுநுன்னலதறியேனான்
சாந்தனைவருமேலுந்தவிர்த்தென்னையாட்கொண்ட
வேந்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) சாந்தனை வரும் எலும்-இறக்கு மெல்லை வந்தாலும், தவிர்த்து-அதனையொழித்து, எனை ஆட்கொண்ட வேந்தனே-என்னை யடிமைகொண்ட அரசனே, குருகாவூர் வெள்ளடை - திருக்குருகாவூர் வெள்ளடையி லெழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா, நமன்தமர் - எமதூதர்கள், புகுந்து-வந்து, என்னை – அடியேனை, நோந்தனை செய்தாலும் - வருந்துமளவுந் துன்பஞ் செய்தாலும், தரியாமே - அதனைப் பொறுக்காமல், போந்தனை - எனக்கெதிரே யெழுந்தருளினை, (ஆதலால்) நான் - அடியேன், நுன் அலது அறியேன்-உன்னையன்றி வேறொருவரை யறியமாட்டேன் எ-று.

(பொ-ரை.) இறக்கு மெல்லை வந்தாலும் அதனை யொழித்து என்னை யாட்கொண்ட, வேந்தனே, திருக்குருகாவூர் வெள்ளடையி லெழுந்தருளியிருக்கிற நீ யல்லவா எமதூதர்கள் வந்து, அடியேனை வருந்து மளவும் துன்பஞ் செய்தாலும் அதனைப் பொறுக்காமல் எனக்கெதிரே யெழுந்தருளினை, ஆதலால் அடியேன் உன்னையன்றி வேறொருவரை யறியமாட்டேன்.

(க-ரை.) திருக்குருகாவூரிறைவனே, யமவாதனையை யொழித்தென்னை யாட்கொண்டருளினை யென்பதாம்.

(வி-ரை.) தரித்தல் - சகித்தல். நோந்தனை - நோகுமளவாகிய துன்பம். தனை - அளவு. எலும் எனினும் என்பதன் மரூஉ. (7)

மலக்கில்நின்னடியார்கள்மனத்திடைமால்தீர்ப்பாய்
சலச்சலமிடுக்குடைய தருமனார்தமரென்னைக்
கலக்குவான்வந்தாலுங்கடுந்துயர்வாராமே
விலக்குவாய்குருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) மலக்கு இல் - மலங்குதல் இல்லாத, நின் அடியார்கள் மனத்திடை - உன்னடியார்கள் மனத்தில், உள்ள மால்தீர்ப்பாய் - மயக்கத்தை

யொழிப்பவனே, குருகாவூர் வெள்ளடை - திருக்குருகாவூர் வெள்ளடையி லெழுந்தருளியிருக்கிற, நீ அன்றே - நீ அல்லவா, சலச்சலம் மிடுக்கு உடைய - மிக்ககோபத்தையும் வலியையுமுடைய, தருமனார் தமர் - எமதூதர், என்னை - அடியேனை, கலக்குவான் - கலக்கும் பொருட்டு, வந்தாலும் - வந்தாராயினும், கடும் துயர் வாராமே - மிகு துன்பமுண்டாகாமல், விலக்குவாய் - விலக்கு பவன் எ-று.

(பொ-ரை.) மலங்குதலில்லாத உன்னடியார்கள் மனத்திலுள்ள மயக்கத்தை யொழிப்பவனே, திருக்குருகாவூர் வெள்ளடையி லெழுந்தருளி யிருக்கிற நீயல்லவா மிக்க கோபத்தையும் வலியையு முடைய எமதூதர் அடியேனை கலக்கும் பொருட்டு வந்தாலும், மிகு துன்பமுண்டாகாமல் விலக்குபவன்.

(கு-ரை.) யமவேதனையை விலக்கி என்னை யாட்கொள்பவன் குருகாவூர் வெள்ளடை நீயன்றே யென்பதாம்.

(வி-ரை.) மலக்கு - மலங்குதல் (கலங்கல்). தருமன் - யமன். தமர் - பரிவாரத்தார் (கிங்கரர்.) கலக்குவான் - கலக்க. (8)

பாடுவிப்பாயுனக்கேயாட்பலரையும்பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன்தோலுடுத்துழல்வானே
கெடுவிப்பாயல்லாதார்கேடிலாப்பொன்னடிக்கே
விடுவிப்பாய்குருகாவூர்வெள்ளடைநீயன்றே.

(ப-ரை.) குருகாவூர் வெள்ளடை-திருக்குருகாவூர் வெள்ளடையிலெழுந்தருளியிருக்கின்ற, நீஅன்றே-நீயல்லவா, பலரையும் பணியாமே-பலதேவரையும் பணியாமல், உனக்கே ஆட்படுவிப்பாய்- உனக்கே தொண்டுபடும்படி செய்வாய், துகிலொடு பொன் தொடுவிப்பாய்-ஆடையோடு பொன்னையும் எமக்குப் பொருந்துவிப்பாய், தோல் உடுத்து உழல்வானே-தோலுடுத்துத் திரிவோனே, அல்லாதார் கெடுவிப்பாய்-உனக்கு ஆளல்லாதாரைக் கெடச்செய்வாய், கேடு இல்லா பொன் அடிக்கே - நாசமில்லாத உன் பொன்னடிக்கே, விடுவிப்பாய்-எம்மை விடுவிப்போனே எ-று.

(பொ-ரை) திருக்குருகாவூர் வெள்ளடையிலெழுந்தருளியிருக்கிற நீயல்லவா பலதேவரையும் பணியாமல் உனக்கே தொண்டுபடும்படி செய்வாய், ஆடையோடு பொன்னையும் எமக்குப்பொருந்துவிப்பாய், தோலுடுத்துத் திரிவோனே, உனக்கு ஆளல்லாதாரைக் கெடச்செய்வாய், நாசமில்லாத உன் பொன்னடிக்கே எம்மை விடுவிப்போனே.

(கு-ரை.) என்னை உனக்காட்படுவித்தல் முதலியவற்றைச் செய்கிறவன் திருக்குருகாவூர் வெள்ளடை நீயன்றே யென்பதாம்.

(வி-ரை.) பணித்தல்-வணங்குதல். துகில்—ஆடை. அல்லாதார்-ஆட்படாதவர். கேடு. - அழிவு. (9)

வளங்கனிபொழின்மல்குவயலணிந்தழகாய
விளங்கொளிகுருகாவூர்வெள்ளடையுறைவானை
யிளங்கிளையாரூரன் வனப்பகையவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலைபத்தர்கட்குரையாமே.

(ப-ரை.) வளம் கனி-வளமிகுந்த, பொழில்-சோலைகளாலும், மல்கு வயல்-நிறைந்த வயல்களாலும், அணிந்து - அலங்கரிக்கப்பெற்று, அழகு ஆய-அழகு பொருந்திய, விளங்கு ஒளி - பிரகாசிக்கிற வொளியையுடைய, குருகாவூர் வெள்ளடை உறைவானை-திருக்குருகாவூர் வெள்ளடையில் வாழ்பவனான சிவபிரானை, இளம்கிளை-இளஞ்சுற்றத்தாரையுடைய, ஆரூரன்—,வனப்பகையவள் அப்பன்—, சுந்தரன் சொன்ன, உள்ளம் குளிர் தமிழ் மாலை-தண்ணிய தமிழ் மாலையானது, பத்தர்கட்கு-பத்திமான்களுக்கு, உரை ஆம்-ஓதுதற்கு உரியதாகும் எ-று.

(பொ-ரை.) வளமிகுந்த சோலைகளாலும் நிறைந்த வயல்களாலும் அலங்கரிக்கப் பெற்று அழகுபொருந்திய பிரகாசிக்கிற வொளியையுடைய திருக்குருகாவூர் வெள்ளடையில் வாழ்பவனான சிவபிரானை, இளஞ்சுற்றத்தாரையுடைய ஆரூரன் வனப்பகையவளப்பன் சுந்தரன் சொன்ன தண்ணிய தமிழ் மாலையானது பத்திமான்களுக்கு, ஓதுதற்குரியதாகும்.

(க-ரை) குருகாவூர் வெள்ளடையுறைவானை நாவலூரன் புகழ்ந்துரைத்த தமிழ் மாலையானது பத்திமான்களுக்கு ஓதுதற்குரியதாமென்பதாம்.

(வி-ரை.) கனிதல் - மிகுதல். மல்கல்-நிறைதல். அணிதல்-அலங்கரித்தல். உறைதல்-வாழ்தல். உரை-உரைத்தல், (சொல்லுதல்.) (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வெள்ளடையப்பர். தேவியார் - காவியங்கண்ணியம்மை.

---

## திருக்கருப்பறியலூர்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

சிம்மாந்துசிம்புளித்துச்சிந்தையினில்
வைத்துகந்துதிறம்பாவண்ணங்
கைம்மாவினுரிவைபோர்த்துமைவெருவக்
கண்டானைக்கருப்பறியலூர்க்

கொய்ம்மாவின்மலர்ச்சோலைக்குயில்பாட
மயிலாடுங்கொகுடிக்கோயி
லெம்மானை மனத்தினால்நினைந்தபோ
தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) கைம்மாவின் உரிவை-யானையின் றோலை, போர்த்து-போர்த்துக்கொண்டு, உமை-உமாதேவியானவள், வெருவகண்டானை-அஞ்சப்பார்த்தவனை, கருப்பறியலூர்—திருக்கருப்பறியலூரில், கொய் - பறிக்கப்படுகிற, மாவின்-மாமரங்களடர்ந்த, மலர்ச்சோலை-பூஞ்சோலைகளில், குயில்பாட -குயில்கள் பாட, மயில் ஆடும்-மயில்கள் நடனஞ்செய்கிற, கொகுடிக்கோயில்-கொகுடிக்கோயிலிலுள்ள, எம்மானை—எம்பெருமானை, சிம்மாந்து - இறுமாந்து, சிம்புளித்து-கண்சிறுகத் திறந்து, சிந்தையினில் வைத்து உகந்து - மனத்தில்வைத்துக்களித்து, திறம்பாவண்ணம்-தவறுதபடி, மனத்தினால் நினைந்தபோது-மனத்தினால் நினைத்தகாலத்தில், அவர்-அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு-நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) யானைத்தோலைப்போர்த்து உமாதேவியானவள் அஞ்சப் பார்த்தவனை, திருக்கருப்பறியலூரில், பறிக்கப்படுகிற மாமரங்களடர்ந்த பூஞ்சோலைகளில் குயில்பாட மயில்கள் நடனஞ்செய்கிற கொகுடிக்கோயிலிலுள்ள எம்பெருமானை, இறுமாந்து கண் சிறுகத் திறந்து மனத்தில் வைத்துக் களித்து தவறுதபடி மனத்தினால் நினைத்தகாலத்தில், அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியராமாறு என்னவியப்பு.

(க-ரை.) திருக்கருப் பறியலூர்க் கொகுடிக்கோயி லெம்மானை யாம் நினைந்தபோது அவர் நமக்கினியராமாறு என்னவியப்பு என்பதாம்.

(வி-ரை.) சிம்மாத்தல்-செம்மாத்தல். சிம்புளித்தல் - கண்சுருக்குதல். கைம்மா-யானை. வெருவல்- அஞ்சல். கொகுடிக்கோயில்-திருக்கருப்பறியலூரிலுள்ள சிவாலயம். (1)

நீற்றாருமேனியராய்நினைவார்தம்
முள்ளத் தேநிறைந்துதோன்றுங்
காற்றானைத்தீயானைக்கதிரானை
மதியானைக் கருப்பறியலூர்க்
கூற்றானைக்கூற்றுதைத்துக்கோல்வளையா
ளவளோடுங்கொகுடிக்கோயி
லேற்றானைமனத்தினால்நினைந்தபோ
தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) நீற்று-திருவெண்ணீற்றினால், ஆரும்-நிறைந்த, மேனியராய்-திருமேனியையுடையவராய், நினைவார்தம் உள்ளத்தே-நினைப்பவரது மனத்

தில், நிறைந்து தோன்றும்-நிறைந்து விளங்குகிற, காற்றானை-காற்றுவடிவனை, தீயானை-நெருப்புவடிவனை, கதிரானை-சூரியவடிவனை, மதியானை-சந்திரவடிவனை, கருப்பறியலூர்-திருக்கருப்பறியலூரை, கூற்றானை-இடமாகவுடையவனை, கூற்று உதைத்து-இயமனையுதைத்து, கோல் வளையாள் அவளோடும்-உமாதேவியோடும், கொகுடிக்கோயில்-கொகுடிக்கோயிலிலுள்ள, எற்றானை-இடபவாகனனை, மனத்தினால் நினைத்தபோது-மனத்தினால் நினைத்த காலத்தில், அவர்-அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு-நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) திருவெண்ணீற்றினால் நிறைந்த திருமேனியை யுடையவராய் உள்ளத்தே நினைப்பவாது மனத்தில் நிறைந்து விளங்கிடுகிற காற்றுவடிவனை, நெருப்புடையவனை, சூரிய வடிவனை சந்திர வடிவனை திருக்கருப்பறியலூரை இடமாக யுடையவனை இயமனையுதைத்து, உமாதேவியோடும் கொகுடிக்கோயிலிலுள்ள இடபவாகனனை மனத்தினால் நினைந்தகாலத்தில் அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(கு-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக்கோயிலிறைவனை நினைந்தபோது, அவர் நமக்கினியராமா றென்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) காற்றானை-காற்றுருவாயிருப்பவனை. தீயானை-தீயுருவாயிருப்பவனை. கதிரானை-சூரியவுருவாயிருப்பவனை. மதியானை-சந்திரனுருவாயிருப்பவனை. கூற்றான்-இடமாகவுடையவன். கோல்வளையாள்-புள்ளியையுடைய வளையலையணிந்தவள். எறு-இடபம். (2)

முட்டாமேநாடோறும்நீர்மூழ்கிப்
பூப்பறித்துமூன்றுபோதுங்
கட்டார்ந்தவிண்டைகொண்டடிசேர்த்து
மந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொட்டாட்டுப்பாட்டாகிநின்றானைக்
குழகனைக்கொகுடிக்கோயி
லெட்டானமூர்த்தியைநினைந்தபோ
தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) முட்டாமே - தடைபடாமல், நாள்தோறும் - தினந்தோறும், நீர் மூழ்கி - நீரில் முழுகி, பூ பறித்து - மலர் பறித்து, மூன்று போதும்-முப்பொழுதும், கட்டு ஆர்ந்த - முறுக்குள்ள, இண்டைகொண்டு - தாமரை மலரைக் கொண்டு, அடிசேர்த்தும் - திருவடியி லர்ச்சிக்கின்ற, அந்தணர் தம் - வேதியருடைய, கருப்பறியலூர் - திருக்கருப்பறியலூரில், கொட்டு ஆட்டு பாட்டு ஆகி நின்றானை - கொட்டு ஆட்டு பாட்டு ஆகிநின்றானை, குழகனை - அழகனை, கொகுடிக் கோயில் - கொகுடிக்கோயிலிலுள்ள, எட்டு ஆன மூர்த்தியை - அட்டமூர்த்தமா யிருப்பவனை, நினைந்தபோது - நினைத்தகாலத்

தில், அவர் - அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு - நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) தடைபடாமல் தினந்தோறும் நீரில் மூழ்கி, மலர் பறித்து, முப்பொழுதும் முறுக்குள்ள தாமரை மலரைக் கொண்டு திருவடியி லர்ச்சிக்கின்ற வேதியருடைய திருக்கருப்பறியலூரில் கொட்டு ஆட்டுபாட்டு ஆகின்றானை, அழகனை, கொகுடிக் கோயிலிலுள்ள அட்ட மூர்த்தமாயிருப்பவனை நினைத்தகாலத்தில், அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக்கோயிலிலுள்ள இறைவரை நினைந்தபோது அவர் நமக்கினியராமாறென்ன வியப்பென்பதாம்.

(வி-ரை.) மூட்டல்-தடைபடல். கொட்டு-கொட்டப்படுவது. (மத்தளம் முதலியன) அட்டமூர்த்தம் - எட்டுரு. அவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன, (3)

விருந்தாயசொன்மாலைகொண்டேத்தி
வினைபோகவேலிதோறுங்
கருந்தாளவாழைமேற்செங்கனிகள்
தேன்சொரியுங்கருப்பறியலூர்க்
குருந்தாயமுள்ளெயிற்றுக்கோல்வளையா
ளவளோடுங்கொகுடிக்கோயி
லிருந்தானைமனத்தினால்நினைந்தபோ
தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) விருந்து ஆய - புதுமையாகிய, சொல்மாலை கொண்டு-சொல் மாலைகளால், ஏத்த - அன்பர்துதிக்கவும், வினைபோக - அவர்களுடைய வினை ஒழியவும், வேலி தோறும் - வேலிகளிலெல்லாம், கருதாள - கருமையாகிய அடிகளையுடைய, வாழைமேல் - வாழை மரங்களில், செம் கனிகள் - செவந்த பழங்கள், தேன் சொரியும்-தேனைப் பொழிகிற, கருப்பறியலூர் - திருக்கருப்பறியலூரில், குருந்து ஆய - குருந்துப்போன்ற, முள் எயிறு - முள்ளுப்போலும் பல்லினையுடைய, கோல் வளையாள் அவளோடும் – உமாதேவியோடும், கொகுடிக்கோயில் - கொகுடிக் கோயிலில், இருந்தானை - எழுந்தருளி யிருந்தவனை, மனத்தினால் நினைந்தபோது - மனத்தினால் நினைத்தகாலத்தில், அவர் - அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறே - நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) புதுமையாகிய சொன்மாலைகளால் அன்பர் துதிக்கவும் அவர்களுடைய வினை யொழியவும், வேலிகளிலெல்லாம் கருமையாகிய அடிகளையுடைய வாழைமரங்களில் செவந்த பழங்கள் தேனைப் பொழிகிற திருக்கருப்

பறியலூரில் குருத்துப்போன்ற முள்ளுப்போலும் பல்லினையுடைய உமாதேவியோடும் கொகுடிக்கோயிலி லெழுந்தருளியிருந்தவரை மனத்தினால் நினைத்த காலத்தில் அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக்கோயிலி லிருந்தவரை நினைந்தபோது அவர் நமக் கினியராமா றென்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) கொண்டு - மூன்றுவதன் பரியாயம். தாள குறிப்புப் பெயரெச்சம். குருந்து - குருத்தின் மெலிவு, (4)

பொடியேறு திருமேனிப்பெருமானைப்
பொங்கரவக்கச்சையானைக்
கடிநாறும்பூம்பொய்கைக்கயல்வாளை
குதிகொள்ளுங்கருப்பறியலூர்க்
கொடியேறிவண்டினமுந்தண்டேனும்
பண்செய்யுங்கொகுடிக்கோயி
லடியேறுகழலானை நினைந்தபோ
தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) பொடி ஏறு - திருவெண்ணீறு நிறைந்த, திருமேனி பெருமானை - திருமேனியையுடைய பெருமானை, பொங்கு அரவக்கச்சையானை - சீறுகின்ற பாம்புக் கச்சையை யுடையவனை, கடிநாறும் - வாசனை கமழ்கின்ற, பூம்பொய்கை - மலர்ப்பொய்கைகளில், கயல்வாளை - கயல்களும் வாளைகளும், குதிகொள்ளும்-குதிக்கின்ற, கருப்பறியலூர் - திருக்கருப்பறியலூரில், கொடி ஏறி – பூங்கொடிமேலேறி, வண்டு இனமும் - கருவண்டின் கூட்டமும், தண்தேனும் – குளிர்ந்த தேன் வண்டுகளும், பண் செய்யும் - பண் பாடுகின்ற, கொகுடிக்கோயில்-கொகுடிக்கோயிலிலுள்ள, அடி ஏறு கழலானை-திருவடியி லணிந்த திருக்கழலையுடையவனை, நினைந்தபோது-நினைத்த காலத்தில், அவர் - அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு - நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) திருவெண்ணீறு நிறைந்த திருமேனியை யுடைய பெருமானை, சீறுகின்ற பாம்பணிந்த சடையையுடையவனை, வாசனை கமழ்கின்ற மலர்ப்பொய்கைகளில் வயல்களும் வாளைகளும் குதிக்கின்ற திருக்கருப்பறியலூரில் பூங்கொடிமேலேறி கருவண்டின் கூட்டமும் குளிர்ந்த தேன் வண்டுகளும் பண்பாடுகின்ற கொகுடிக்கோயிலிலுள்ளதிருவடியிலணிந்த திருக்கழலையுடையவனை நினைத்தகாலத்தில், அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக்கோயிலி லிருந்த இறைவனை நினைந்தபோது அவர் நமக் கினியராமா றென்னவியப்பு என்பதாம்.

(வி-ரை.) பொங்குதல் - சீறுதல். கழல் - வீரகண்டாமணி. (5)

பொய்யாதவாய்மையாற்பொடிப்பூசிப்
 போற்றிசைத்துப்பூசைசெய்து
கையினாலெரியோம்பிமறைவளர்க்கு
 மந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவ
 மயிலாடுங்கொகுடிக்கோயி
லையனையென்மனத்தினால்நினைந்தபோ
 தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) பொய்யாத - பொய்க்காத, வாய்மையால் – உண்மையினால், பொடிபூசி - திருநீறணிந்து, போற்றிசைத்து - வணங்கி, பூசைசெய்து - பூசித்து, கையினால்-கைகளால், எரி ஓம்பி - யாகாக்னியை வளர்த்து, மறைவளர்க்கும் - வேதத்தை விருத்திசெய்கின்ற, அந்தணர் - வேதியாது, கருப்பறியலூர் - திருக்கருப்பறியலூரில், கொய் உலாம் - பறிக்கப்படுகின்ற, மலர் - மலர்களையுடைய, சோலை - சோலையில், குயில் கூவ - குயில்கள் கூவாநிற்க, மயில் ஆடும் - மயில்கள் நடிக்கின்ற, கொகுடிக்கோயில் ஐயனை - கொகுடிக் கோயிலிலுள்ள ஐயனை, என் மனத்தினால் நினைந்தபோது - என் மனத்தினால் நினைத்தகாலத்தில், அவர்-அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனி ஆறு - நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) பொய்க்காத வுண்மையினால் திருநீறணிந்து வணங்கி பூசித்து கைகளால் யாகாக்னியை வளர்த்து வேதத்தை விருத்தி செய்கின்ற வேதியாது திருக்கருப்பறியலூரில், பறிக்கப்படுகின்ற மலர்களையுடையசோலையில் குயில்கள் கூவாநிற்க, மயில்கள் நடிக்கின்ற கொகுடிக்கோயிலிலுள்ள ஐயனை என் மனத்தினால் நினைத்தகாலத்தில் அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை.) திருக்கருப்பறியலூரிறைவனை நினைந்தபோது அவர் நமக்கினியராமா றென்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) ஓம்புதல் காத்தல் எனினுமாம். (6)

செடிகொணோயுள்ளளவுந்தீவினையுந்
 தீர்ந்தொழியச்சிந்தைசெய்ம்மின்
கடிகொள்பூந்தடமண்டிக்கருமேதி
 கண்படுக்குங்கருப்பறியலூர்க்

*கொடிகொள் பூநுண்ணிடையாள்*
*கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயி*
*லடிகளையென்மனத்தினால்நினைந்தபோ*
*தவர்நமக்கினியவாறே.*

(ப-ரை.) செடிகொள் - குற்றத்தைக் கொண்ட, நோய் உள்ள அளவும்- பிணியுள்ளமட்டும், தீவினையும் - (அதற்குக் காரணமாகிய) தீவினையும், தீர்ந்து ஒழிய—விட்டொழியும்படி, சிந்தை செய்மின்-சிந்தியுங்கள், கடிகொள் - வாசனையைக் கொண்ட, பூந்தடம் - பூம் பொய்கைகளில், கருமேதி - கரிய எருமைகள், மண்டி - நெருங்கி, கண்படுக்கும் - தூங்குகின்ற, கருப்பறியலூர் - திருக்கருப்பறியலூரில், கொடி கொள்-கொடியின்றன்மையைக்கொண்ட, பூ- அழகிய, நுண் இடையாள் - நுண்ணிடையையுடையவளாகிய, கோல் வளையாள் அவளோடும் - உமாதேவியாரோடும், கொகுடிக் கோயில் - கொகுடிக் கோயிலிலுள்ள, அடிகளை-சுவாமியை, என் மனத்தினால் நினைந்த போது-என் மனத்தினால் நினைத்தகாலத்தில், அவர் - அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு-நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ -று.

(பொ-ரை.) குற்றத்தைக் கொண்ட பிணியுள்ளமட்டும் அதற்குக் காரணமாகிய தீவினையும் விட்டொழியும்படி சிந்தியுங்கள், வாசனையைக் கொண்ட பூம் பொய்கைகளில் கரிய எருமைகள் நெருங்கித் தூங்குகிற திருக்கருப்பறியலூரில் கொடியின் தன்மையைக் கொண்ட அழகிய நுண்ணிடையை யுடையவளாகிய உமாதேவியாரோடும் கொகுடிக்கோயிலிலுள்ள சுவாமியை என் மனத்தினால் நினைத்தகாலத்தில் அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக் கோயிலடிகளை என் மனத்தினால் நினைந்தபோது, அவர் நமக்கு இனியராமாறென்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) தீவினை யென்றது தீவினைப்பயனாகிய பாவத்தை. நோய்-பிறவிப்பிணி. சிந்தை செய்தல் - சிந்தித்தல். (7)

*பறையாதவல்வினைகள்பறந்தொழியப்*
*பன்னாளும்பாடியாடிக்*
*கறையார்ந்தகண்டத்தனெண்டோளன்*
*முக்கண்ணன்கருப்பறியலூர்க்*
*குறையாதமறைநாவர்குற்றேவ*
*லொழியாதகொகுடிக்கோயி*
*லுறைவானைமனத்தினால்நினைந்தபோ*
*தவர்நமக்கினியவாறே.*

(ப-ரை.) பறையாத-சொல்லவொண்ணாத, வல்வினைகள் பறந்து ஒழிய- வலிய வினைகள் பறந்தொழியும்படி, பலநாளும்-தினந்தோறும், பாடி ஆடி -

பாடியும் ஆடியும், கறை ஆர்ந்த கண்டத்தன் - நஞ்சு பொருந்திய கண்டத்தை யுடையவன், எண் தோளன்-எட்டுப்புயங்களுள்ளவன், முக்கண்ணன்-மூன்று கண்களுள்ளவன், கருப்பறியலூர் - திருக்கருப்பறியலூரில், குறையாத-குறைவுபடாத, மறைநாவர்-வேதம்பயில்கின்ற நாவையுடைய அந்தணர், குற்றேவல் ஒழியாத-சிறு தொண்டினை நீங்காது செய்கிற, கொகுடிக் கோயில் உறைவானை-கொகுடிக்கோயிலில் வாழ்பவனை, மனத்தினால் நினைந்தபோது-மனத்தினால் நினைத்தகாலத்தில், அவர் - அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு - நமக்கு இனியர் ஆமாறு என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) சொல்ல வொண்ணாத வல்வினைகள் பறந்தொழியும்படி தினந்தோறும் பாடியும் ஆடியும், நஞ்சு பொருந்திய கண்டத்தை யுடையவன், எட்டுப் புயங்களுள்ளவன், மூன்று கண்களுள்ளவன், திருக்கருப்பறிய லூரில் குறைவுபடாத வேதம்பயில்கின்ற நாவையுடைய அந்தணர் சிறு தொண்டினை நீங்காது செய்கிற கொகுடிக்கோயிலில் வாழ்பவனை மனத்தினால் நினைத்த காலத்தில் அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர்நமக்கு இனியர் ஆமாறு என்னவியப்பு.

(கு-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக் கோயிலில் வாழ்பவராகிய சிவபிரானாரை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கினியராமாறு என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) பறைதல்-சொல்லுதல். குற்றேவல்-கைத்தொண்டு. உறைதல்-வாழ்தல். (8)

சங்கேந்துகையானுந் தாமரையின்
 மேலானுந் தன்மைகாணாக்
கங்கார்ந்தவார்சடைகளுடையானை
 விடையானைக்கருப்பறியலூர்க்
கொங்கார்ந்தபொழிற்சோலைசூழ்கனிகள்
 பலவுதிர்க்குங்கொகுடிக்கோயி
லெங்கோனைமனத்தினால்நினைந்தபோ
 தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) சங்கு ஏந்து கையானும்-விஷ்ணுவினாலும், தாமரையின் மேலானும்-பிரமனாலும், தன்மைகாணா-தன்மை யின்னதென்றறியப்படாத, கங்கா ஆர்ந்த-கங்கைதங்கிய, வார்சடைகள் உடையானை-நீண்டசடைகள் உடையவனை, விடையானை-இடபவாகனனை, கருப்பறியலூர்-திருக்கருப்பறியலூரில், கொங்கு ஆர்ந்த-வாசனைநிறைந்த, பொழில் சோலை-பெருமைபொருந்திய சோலைகள், சூழ்-தம்மிடத்துள்ள, கனிகள் பல உதிர்க்கும்-பலகனிகளையுதிர்க்கின்ற, கொகுடிக்கோயில்-கொகுடிக்கோயிலிலுள்ள, எம்கோனை-எமதிறைவனை, மனத்தினால் நினைந்தபோது-மனத்தினால் நினைத்தகாலத்தில், அவர்-

அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு-நமக்கு இனியர் ஆமாறு என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) விஷ்ணுவினாலும் பிரமனாலும் தன்மை யின்னதென்றறியப்படாத கங்கைதங்கிய நீண்ட சடையையுடையவனை, இடபவாகனனை, திருக்கருப்பறியலூரில் வாசனை நிறைந்த பெருமை பொருந்திய சோலைகள் தம்மிடத்துள்ள பல கனிகளையுதிர்க்கின்ற கொகுடிக்கோயிலெம்மிறைவனை மனத்தினால் நினைத்த காலத்தில் அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கிற எமதிறைவனை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கினியராமாறு என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) கங்கா ஆர்ந்த என்பது கங்கார்ந்த எனத் தொகுத்தலாயிற்று. கொங்கு தேன் எனினுமாம். (9)

"பண்டாழினிசைமுரலப்பன்னாளும்
பாவித்துப்பாடியாடிக்
கண்டார்தங்கண்குளிருங்களிக்கமுகம்
பூஞ்சோலைக்கருப்பறியலூர்க்
குண்டாடுஞ்சமணருஞ்சாக்கியரும்
புறங்கூறுங்கொகுடிக்கோயி
லெண்டோளெம்பெருமானைநினைந்தபோ
தவர்நமக்கினியவாறே.

(ப-ரை.) பண்டு-பழமையாகிய, ஆழின் இசை முரல-யாழோசை சப்திக்க, பல் நாளும்-பல நாட்களும், பாவித்து-நினைந்து, பாடி ஆடி-பாடியும் ஆடியும், கண்டார் கண்குளிரும்-கண்டவாது கண்குளிர்தற்குரிய, களி-களிப்பைத் தருகிற, பூ-அழகிய, கமுகஞ்சோலை-கமுகம் சோலைகள், கருப்பறியலூர்-திருக்கருப்பறியலூர், குண்டு ஆடும்-கோட்சொல்லுகின்ற, சமணரும் சாக்கியரும்-சமணர்களும் சாக்கியரும், புறம் கூறும்-புறம்பழிக்கின்ற, கொகுடிக்கோயில்-திருக்கொகுடிக்கோயிலிலுள்ள, எண்தோள்-எட்டுப்புயங்களுள்ள, எம்பெருமானை-எமது தலைவனை, நினைந்தபோது-நினைத்தகாலத்தில், அவர்-அவ்வாறு நினைக்கப்பட்டவராகிய இறைவர், நமக்கு இனிய ஆறு-நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) பழமையாகிய யாழோசை சப்திக்கப் பலநாளும் நினைந்து பாடியாடி கண்டவாது கண் குளிர்தற் குரிய களிப்பைத் தருகிற அழகிய கமுகஞ் சோலை சூழ்ந்த திருக்கருப்பறியலூரில், கோட் சொல்லுகின்ற சமணர்களும்சாக்கியரும் புறங்கூறும் கொகுடிக் கோயிலில் வாழ்கின்ற எட்டுப்

புயங்களுள்ள எமது தலைவனை நினைத்த காலத்தில், அவ்வாறு நினைக்கப்பட்டவ் ராகிய இறைவர் நமக்கு இனியர் ஆமாறு என்ன வியப்பு.

(க-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக் கோயிலெம் பெருமானை நினைந்தபோது அவர் நமக்கினியாராமா றென்னென்பதாம்.

(வி-ரை.) ஆழ் - யாழ், (வீணை) பாவித்தல் - நினைத்தல். குண்டாடல் - கோட்சொல்லல். (10)

கலைமலிந்ததென்புலவர்கற்றோர்தம்
 இடர்தீர்க்குங்கருப்பறியலூர்க்
குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்
 பூஞ்சோலைக்கொகுடிக்கோயி
லிலைமலிந்தமழுவாளைமனத்தினா
 லன்புசெய்தின்பமெய்தி
மலைமலிதோளாரூரன்வனப்பகையப்
 பனுரைத்தவண்டமிழ்களே.

(ப-ரை.) கருப்பறியலூர்-திருக்கருப்பறியலூரில், குலைமலிந்தகோட்டு - குலைகள் மிகுந்த கிளைகளில், எங்கும் - எவ்விடத்தும், மட்டு ஒழுகும் - தேனொழுகாநின்ற, பூசோலை - பூஞ்சோலை சூழ்ந்த, கொகுடிக் கோயில் - கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கிற, இலைமலிந்த மழுவாளை-இலைவடிவினதாகிய மழுப்படையை யுடையவனை, மனத்தினால் அன்பு செய்து - மனத்தினால் பத்தி செய்து, இன்பம் எய்தி - சுகமடைந்து, மலைமலிதோள்-மலைபோலுந் தோள்களையுடையவனாகிய, ஆரூரன் வனப்பகை அப்பன் - சுந்தரன், உரைத்த - சொல்லிய, வள் தமிழ்கள்-வளவிய தமிழ்ப்பாடல்கள், கலைமலிந்த - கலைகள் நிறைந்த, தென்புலவர் - தமிழ்ப்புலவராய், கற்றோர் - கற்றவரது, இடர்தீர்க்கும் - துன்பத்தை யொழிக்கும் எ-று.

(பொ-ரை.) திருக்கருப்பறியலூரில் குலைகள் மிகுந்த கிளைகளில் எவ்விடத்தும் தேனொழுகாநின்ற பூஞ்சோலை சூழ்ந்த கொகுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கிற, இலை வடிவினதாகிய மழுப்படையை யுடையவனை, மனத்தினால் பத்திசெய்து சுகமடைந்து, மலைபோலுந் தோள்களை யுடையவனாகிய சுந்தரன் உரைத்த வளவிய தமிழ்ப்பாடல்கள் கலைகள் நிறைந்த தமிழ்ப்புலவராய்க் கற்றோரது துன்பத்தை யொழிக்கும்.

(க-ரை.) திருக்கருப்பறியலூர்க் கொகுடிக் கோயி லெம்பெருமானைத் திருநாவலூரன் புகழ்ந்துரைத்த தமிழ்ப்பாடல்கள், தம்மைக் கற்போரது துன்பத்தை யொழிக்கு மென்பதாம்.

(வி-ரை.) மலிதல் - மிகுதல், கோகு - கிளை. வண்டமிழ்கள் இடர்தீர்க்கும் என முடித்துக்கொள்க. (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - குற்றம்பொறுத்தநாதர். தேவியார் - கோல்வளையம்மை.

---

## திரு இடையாற்றுத்தொகை

பண்-கோல்லி

திருச்சிற்றம்பலம்

முந்தையூர்முதுகுன்றங்குரங்கணின்முட்டஞ்
சிந்தையூர்நன்றுசென்றடைவான்றிருவாரூர்
பந்தையூர்பழையாறுபழனம்பைஞ்ஞீலி
யெந்தையூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) முந்தையூர்—, முதுகுன்றம்—, குரங்கணின் முட்டம்—, சிந்தை ஊர் - (அன்பாது) மனமாகிய ஊரில், நன்று சென்று அடைவான் - நன்றாகப் போய்த் தங்குவோனது, திருவாரூர்—, பந்தையூர்—, பழையாறு—, பழனம்—, பைஞ்ஞீலி—, எந்தை ஊர்—, எய்தமானின்—, இடையாறு—, இடைமருது—, எ-று, (1)

சுற்றுமூர்சுரியல்திரிச்சோபுரந்தொண்ட
ரொற்றுமூரொற்றியூர்திருவூறலொழியாப்
பெற்றமேறிப்பெண்பாதியிடம்பெண்ணைத்தெண்ணீர்
எற்றுமூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) சுற்றுமூர்—, சுரியல்—, திருச்சோபுரம்—, தொண்டர் ஒற்றுமூர்—, ஒற்றியூர்—, திருவூறல்—, ஒழியா - இடையறுமல், பெற்றம் ஏறி - இடபம் ஏறி, பெண்பாதி - பெண்பாதியனுகிய சிவபிரானது, இடம் - இடமாவது, பெண்ணை - பெண்ணையாற்றின், தெள்நீர் - தெளிந்த நீரினுல், எற்றும் - மோதப்படுகிற, ஊர்—, எய்து அம்மான்—, எ-று. (2)

கடங்களூர்திருக்காரிகரைக்கயிலாயம்
விடங்களூர்திருவெண்ணியண்ணுமலைவெய்ய
படங்களூர்கின்றபாம்பரையான்பரஞ்சோதி
யிடங்களூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) கடங்களூர்—, திருக்காரிகரை—, கயிலாயம்—, விடங்களூர் - திருவெண்ணி—, அண்ணாமலை—, வெய்ய - கொடிதாகிய, படங்கள் - படங்களையுடைய, ஊர்கின்ற பாம்பு – தவழ்கின்ற பாம்பை, அரையான் – திருவரையிற் கட்டினவனாகிய, பரஞ்சோதி - சிவபிரான், இடம்கொள் ஊர்-இடமாகக் கொண்டவூர் எ-று. (3)

கச்சையூர்காவங்கழுக்குன்றங்காரோணம்
பிச்சையூர் திருவானகடவூர்வடபேறூர்
கச்சியூர்கச்சிசிக்கல்செய்த்தானமிழலை
யிச்சையூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) கச்சையூர்—, காவம்—, கழுக்குன்றம்—, காரோணம்—, பிச்சையூர் —, திரு ஆன - அழகான, கடவூர்—, வடபேறூர்—, கச்சியூர்—, கச்சி—, சிக்கல்—, செய்த்தானம்—, மிழலை—, எ-று (4)

நிறையனூர்நின்றியூர்கொடுங்குன்றமமர்ந்த
பிறையனூர்பெருமூர்பெரும்பற்றப்புலியூர்
மறையனூர்மறைக்காடுவலஞ்சுழிவாய்த்த
இறைவனூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) நிறையனூர்—, நின்றியூர்—, கொடுங்குன்று—, அமர்ந்த - விரும்பின, பிறையனூர்—, பெருமூர்—, பெரும்பற்றப்புலியூர்—, மறையனூர்—, மறைக்காடு—, வலஞ்சுழி—, எ-று. (5)

திங்களூர் திருவாதிரையான்பட்டினமூர்
நங்களூர்நறையூர்நணிநாலிசைநாலூர்
தங்களூர்தமிழானென்றுபாவிக்கவல்ல
வெங்களூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) திங்களூர்—, திருவாதிரையான் பட்டினமூர்—, நங்களூர்—, நறையூர்—, நணிநாலிசை நாலூர்—, தங்களூர்—, (6)

கருக்கநஞ்சமுதுண்டகல்லாலன்கொல்லேற்றன்
தருக்கருக்கனைச்செற்றுகந்தான்றன்முடிமேல்
எருக்கநாண்மலரிண்டையுமத்தமுஞ்சூடி
யிருக்குமூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) கருக்கம் - கருமையுடைய, நஞ்சு - விடத்தை, அமுது உண்ட - அமுதமாக வுண்டருளின, கல்லாலன் - கல்லாலின் கீழிருப்பவன், கொல் ஏற்றன்-கொல்லுகின்ற இடபத்தை யுடையவன், தருக்கு-செருக்கின, அருக்கனை – சூரியனை, செற்று - வென்று, உகந்தான் - களித்தவன், தன்முடி

மேல் - தன் திருமுடி மீது, நான் - புதிய, எருக்கமலர் - எருக்கம் பூவையும், இண்டையும் - இண்டைக் கொழுந்தையும், மத்தமும் - ஊமத்தம்பூவையும், சூடி - சூடுவோனாகிய சிவபெருமான், இருக்கும் ஊர்—, எ-று (7)

தேசனூர்வினைதேயநின்றான் றிருஆக்கூர்
பாசனூர்பரமேட்டிபவித்திரபாவ
நாசனூர்நனிபள்ளிநள்ளாற்றையமர்ந்த
ஈசனூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) தேசன் ஊர் - ஒளியுருவானவனது ஊர், வினைதேய நின்றான் திரு ஆக் கூர் - அன்பரது வினைதேயும்படி நிலைபெற்றிருப்பவனது திரு ஆக் கூர், பாசன்ஊர்—, அன்பரிடத்துப் பற்றுள்ளவனது ஊர், பரமேட்டி - பரமேட்டியும், பவித்திரபாவநாசன்-பரிசுத்தமாகிய பாவநாசனுமாகியசிவபிரானது, ஊர்—, நனிபள்ளி—, நள்ளாற்றை—, அமர்ந்த-விரும்பின், ஈசன் ஊர் - ஈசனது ஊர் எ-று. (8)

பேறனூர்பிறைச்சென்னியினான்பெருவேளூர்
தேறனூர்திருமாமகள்கோன் றிருமாலோன்
கூறனூர்குரங்காடுதுறைதிருக்கோவல்
ஏறனூரெய்தமானிடையாறிடைமருதே.

(ப-ரை.) பேறனூர்—, பிறை சென்னியினான் பெருவேளூர் - பிறை சூடிய முடியையுடைய சிவபிரானது பெருவேளூர், தேறனூர்—, திருமா மகள் கோன் - லக்ஷ்மி நாயகன், திருமலரோன்-பிரமன், கூறன் ஊர்-(இவ்விருவரையும்) பங்கில் உடையவனது ஊர், குரங்காடுதுறை—, திருக்கோவல்—, ஏறன் ஊர் - இடபவாகனனது ஊர் எ-று. (9)

ஊறிவாயினநாடிய வன்றொண்ட னூரன்
தேறுவார்சிந்தைதேறுமிடஞ்செங்கண்வெள்ளே
றேறுவாரெய்தமானிடையாறிடைமருதைக்
கூறுவார்வினையெவ்விடமெய்குளிர்வாரே.

(ப-ரை.) ஊறி - சுரந்து, வாயின - வாய்ப்பாயின வற்றை, நாடிய-ஆராய்ந்தறிந்த, வன் தொண்டன் ஊரன் - சுந்தரன், தேறுவார் - தெளிபவரது, சிந்தை - மனமானது, தேறும் இடம் - தெளியுமிடமாகிய, செம்கண் வெள் ஏறு ஏறுவார் - சிவந்த கண்ணையுடைய வெள்ளிய விடையை ஏறுபவராகிய சிவபிரானது, எய்தமான் இடையாறு இடைமருதை—, கூறுவார் - புகழ்வோர், வினை எவ்விட - வினைகள்தேய, மெய்குளிர்வார் - சரீரங்குளிரப் பெறுவார்கள் எ-று. (10)

திருச்சிற்றம்பலம்

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - இடையாற்றீசுரர். தேவியார்-சிற்றிடை நாயகியம்மை.

## திருக்கோடிக்குழகர்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கடிதாய்க்கடற்காற்றுவந்தெற்றக்கரைமேற்
குடிதானயலேயிருந்தாற்குற்றமாமே
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீர்
அடிகேளுமக்கார்துணையாகவிருந்தீரே.

(ப-ரை.) கடற்காற்று - கடற்காற்றானது, கடிதாய் வந்து எற்ற - கடிதமாய் வந்து வீச, கரைமேல் - கரையின்மீது, அயலே - பக்கத்திலே, குடியிருந்தால் - குடியிருப்பின், குற்றம் ஆமே - குற்றமாகுமே, கொடியேன் கண்கள் கண்டன - கொடியேனது கண்கள் நோக்கின, கோடிக்குழகீர் - திருக்கோடிக் குழகரே, அடிகேள் - சுவாமீ, உமக்கு ஆர் துணையாக இருந்தீர் - உமக்கு யார் துணையாகக் கொண்டு இவ்விடத் திருந்தீர் எ-று.

(பொ-ரை.) கடற்காற்றானது கடிதமாய் வந்து வீச, கரைப்பக்கத்திலே குடியிருப்பின் குற்றமாமே, கொடியேனது கண்கள் நோக்கின திருக்கோடிக் குழகரே, சுவாமீ, உமக்கு யார் துணையாகக் கொண்டு இவ்விடத்திருந்தீர்.

(கு-ரை.) திருக்கோடிக் குழகரே, கடற்கரைமேல் யாரைத் துணையாகக் கொண்டு இருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) கடிதாய் - வேகமாய் என்றுரைத்தலுமாம். எற்றுதல் - மோதுதல் எனினுமமையும். (1)

முன்றான்கடல்நஞ்சமுண்டவதனாலோ
பின்றான்பரவைக்குபகாரஞ்செய்தாயோ
குன்றாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
என்றான்றனியேயிருந்தாயெம்பிரானே.

(ப-ரை.) முன்தான்-முற்காலத்திலே, கடல்-கடலிற் றோன்றின, நஞ்சம் உண்ட அதனாலோ-விஷத்தையுண்டதனாலேயோ, பின்தான் - பின்னே, பரவைக்கு உபகாரஞ் செய்தாயோ-பரவைக்கு உபகாரஞ்செய்தனையோ, குன்றா பொழில் சூழ்-அழியாத சோலைகள் சூழ்ந்த, கோடிக்குழகா-திருக்கோடிக்குழகனே, எம்பிரானே-எம்பெருமானே, என்தான் தனியேயிருந்தாய்-என்ன காரணமாய்த் தனியாயிருந்தனை எ-று.

(பொ-ரை.) முற்காலத்திலே கடலிற்றோன்றின விஷத்தையுண்டதனாலேயோ, பின்னேபரவைக்கு உபகாரஞ் செய்தனையோ, அழியாத சோலைகள் சூழ்ந்த திருக்கோடிக்குழகனே, எம்பெருமானே, என்னகாரணமாய்த் தனியேயிருந்தனை.

(க-ரை.) திருக்கோடிக் குழகரே, நீர் என் தனியே யிருந்தீரென்பதாம்.

(வி-ரை.) கடல் நஞ்சம்-கடலிற் றோன்றின ஆலாகலவிடம். கடல் என்றது கடற்பொதுமையொழித்து பாற்கடலையே யுணர்த்திற்று. (2)

மத்தம்மலிசூழ்மறைக்காடதன்றென்பாற்
பத்தர்பலர்பாடவிருந்தபரமா
கொத்தார்பொழில்சூழ்தருகோடிக்குழகா
வெத்தாற்றனியேயிருந்தாயெம்பிரானே.

(ப-ரை.) மத்தம் மலி-மத்தமிகுந்து, சூழ்-சூழ்ந்த, மறைக்காடதன் தென்பால்-மறைக்காட்டுக்குத் தென்பக்கத்தில், பத்தர் பலர்பாட - பலபத்தர் பாடாநிற்க, இருந்த-எழுந்தருளியிருந்த, பரமா-பரமனே, கொத்து ஆர்-பூங்கொத்துக்கள் நிறைந்த, பொழில் சூழ்தரு-சோலைகள் சூழ்ந்த, கோடிக்குழகா-திருக்கோடிக் குழகனே, எம்பிரானே-எம்பெருமானே, எத்தால்-எந்தக்காரணத்தால், தனியேயிருந்தாய் - தனியேயிருந்தனை எ-று.

(பொ-ரை.) மத்தம்மிகுந்து சூழ்ந்த மறைக்காட்டுக்குத் தென்பக்கத்தில் பலபத்தர் பாடாநிற்க எழுந்தருளியிருந்த பரமனே, பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோடிக் குழகனே, எம்பெருமானே, எந்தக்காரணத்தால் தனியேயிருந்தனை.

(க-ரை.) திருக்கோடிக்குழகா, நீ யாதுகாரணத்தால் தனியேயிருந்தாயென்பதாம்.

(வி-ரை) மலி-மலிந்தென்னும் வினையெச்சப் பொருடந்து நின்றது. மறைக்காடதன் என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (3)

காடேமிகவாலிதுகாரிகையஞ்சக்
கூடிப்போந்திலாந்தைகள்கூகைகுழற
வேடித்தொண்டர்சாலவுந்தீயர்சழக்கர்
கோடிக்குழகாவிடங்கோயில்கொண்டாயே.

(ப-ரை.) காடே - மயானமே, மிக-மிகவும், வாலிது – பரிசுத்தமானது, (அதைவிட்டு) காரிகை-உமாதேவியானவள், அஞ்ச-அஞ்சும்படி, போந்தில்-மரப்பொந்துகளில், ஆந்தைகள் கூகை-ஆந்தைகளும் கூகைகளும், கூடி-சேர்ந்து, குழற-சத்திக்க, (அதுவேயுமன்றி) வேடித்தொண்டர்-வேடித்தொண்டர்கள், சாலவும்-மிகவும், தீயர்-தீயோர், சழக்கர்-பாவிகள், கோடிக்குழகா இடம் - கோடிக்குழகா விடத்தை, கோயில் கொண்டாய் - திருக்கோயில் கொண்டனை, எ-இதென்ன விபரீதம் எ-று.

(பொ-ரை.) மயானமே மிகவும் பரிசுத்தமானது (அதைவிட்டு) உமாதேவியானவள் அஞ்சும்படி, மரப் பொந்துகளில் ஆந்தைகளும் கூகைகளும் சேர்ந்து சத்திக்க, (அதுவேயுமன்றி) வேடித்தொண்டர்கள் மிகவும் தீயோர்

பாவிகள், கோடிக்குழகாவிடத்தை திருக்கோயில் கொண்டனை, இதென்ன விபரீதம்.

(க-ரை.) திருக்கோடிக்குழகாவிடங் கோயில்கொண்டனை, அவ்வாறு கொண்டது உமாதேவிக் கச்சத்தை விளைப்பதனால், உமக்கு மயானமே தகுதியான விடமென்பதாம்.

(வி-ரை.) காரிகை - அழகு. அதிற் சிறந்தவளாதலால் உமாதேவியைக் காரிகை யென்றார், காரிகை ஆகுபெயர். (4)

**மையார் தடங்கண்ணிபங்காகங்கையாளு**
**மெய்யாகத்திருந்தனள்வேறிடமில்லை**
**கையார்வளைக்காடுகளோடுமுடனாய்க்**
**கொய்யார்பொழிற்கோடியேகோயில்கொண்டாயே.**

(ப-ரை.) கொய் ஆர் பொழில் - (மலர்கள்) பறித்தலைப் பொருந்திய, பொழில் - சோலைகள் சூழ்ந்த, கோடியே கோயில் கொண்டாயே - கோடியே கோயில்கொண்டவனே, மை ஆர் - மை யெழுதப்பெற்ற, தடம் கண்ணிபங்கா- பெருங் கண்ணியாகிய உமாதேவி பங்கனே, கங்கையாளும் - கங்காதேவியும், கை ஆர் - கையிலுள்ள, வளைக்காடுகளோடும் - வளையற் காடுகளுடனே, உடன் ஆய் - கூடவே, மெய் ஆகத்து இருந்தனள் - உனது நித்தியமாகிய திருமுடிமேலிருந்தனள், வேறு இடமில்லை - (அவளுக்கு) வேறோரிடமில்லைபோலும் எ-று.

(பொ-ரை.) மலர்கள் பறித்தலைப் பொருந்திய சோலைகள் சூழ்ந்த கோடியே கோயில் கொண்டவனே, மை யெழுதப்பெற்ற பெருங் கண்ணியாகிய வுமாதேவி பங்கனே, கங்காதேவியும் கையிலுள்ள வளையற் காடுகளுடனே கூடவே உனது நித்தியமாகிய திருமுடிமேலிருந்தனள், அவளுக்கு வேறோரிட மில்லைபோலும்.

(க-ரை.) திருக்கோடிக் குழகாவிடங் கோயில்கொண்டவனே, உமாதேவி யுன்பாகத்திலிருக்க, கங்கையாளும் உன் திருமுடிமே லிருக்கிறாளே, அவளுக்கு வேறிட மில்லைபோலும் என்பதாம்.

(வி-ரை.) பங்கா என மேலே வருதலால் மையார்தடங்கண்ணி யென்றது உமாதேவியைக் குறித்தது. (5)

**அரவேரல்குலாளையோர்பாகமமர்ந்து**
**மரவங்கமழ்மாமறைக்காடதன்றென்பாற்**
**குரவப்பொழில்சூழ்தருகோடிக்குழகா**
**இரவேதுணையாயிருந்தாயெம்பிரானே.**

(ப-ரை.) அரவு - பாம்பின் படம்போலும், ஏர் - அழகாகிய, அல்குலாளை- நிதம்பத்தையுடையவளாகிய உமாதேவியை, ஓர் பாகம் அமர்ந்து - ஒரு பாகத்திலிருக்கவிரும்பி, மரவம் கமழ் - குங்குமமரங்கள் பரிமளிக்கிற, மா - பெருமை

பொருந்திய, மறைக்காடதன் தென்பால் - திருமறைக்காட்டுக்குத் தென்பக்கத்தில், குராவப்பொழில் - குராச்சோலைகள், சூழ்தரு - சூழப்பெற்ற, கோடிக்குழகா - திருக்கோடிக்குழகனே, எம்பிரானே-எம் பெருமானே, இரவே துணையாயிருந்தாய் - இராக்காலமே துணையாகக் கொண்டிருந்தனைபோலும் எ-று.

(பொ-ரை.) பாம்பின் படம்போலும் அழகாகிய நிதம்பத்தை யுடையவளாகிய வுமாதேவியை ஒருபாகத்திலிருக்க விரும்பி, குங்குமமரங்கள் பரிமளிக்கிற பெருமைபொருந்திய திருமறைக்காட்டுக்குத் தென்பக்கத்தில் குராச்சோலைகள் சூழப்பெற்ற திருக்கோடிக் குழகனே, எம்பெருமானே, இராக்காலமே துணையாகக் கொண்டிருந்தனைபோலும்.

(க-ரை.) திருக்கோடிக்குழகா எம்பிரானே, உமாதேவியை ஒருபாகத்தமைத்துக்கொண்டு இரவே துணையாயிருந்தனை, இவ்வாறிருந்தற் காரணம் யாது என்பதாம்.

(வி-ரை.) அரவு ஆகுபெயர். அமர்தல் - விரும்புதல். குரவம் – குராமரம்.

பறையுங்குழலும்மொலிபாடலியம்ப
அறையுங்கழலார்க்கநின்றூடுமமுதே
குறையாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
இறைவாதனியேயிருந்தாயெம்பிரானே.

(ப-ரை) பறையும்- தோற்கருவியும், குழலும் - தொளைக்கருவியும், ஒலி பாடல் இயம்ப - சத்தத்தையும் பாடலையும் தராநிற்க, அறையும் - ஒலிக்கின்ற, கழல் ஆர்க்க - கழல் ஆரவாரிக்க, நின்று ஆடும் - நின்று கூத்தாடுகிற, அமுதே – அமிர்தமே, குறையா - நிறைந்த, பொழில் சூழ் தரு - சோலைகள் சூழ்ந்த, கோடிக்குழகா - திருக்கோடிக் குழகனே, இறைவா - தலைவனே, எம்பிரானே - எம்பெருமானே, தனியே இருந்தாய் - தனியே யிருந்தனை எ-று.

(பொ-ரை.) தோற்கருவியும் தொளைக்கருவியும் சத்தத்தையும் பாடலையும் தராநிற்க, ஒலிக்கின்றகழல் ஆரவாரிக்க நின்று கூத்தாடுகிற அமிர்தமே, நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோடிக் குழகனே, தலைவனே, எம்பெருமானே, தனியே யிருந்தனை.

(க-ரை.) தோற்கருவி முதலிய வாத்தியங்கள் முழங்காநிற்க நடனஞ் செய்கிற அமிர்தமே, நீ தனியேயிருத்தற் காரணம் யாதென்பதாம்.

(வி-ரை.) பறை - தம்பட்டம் முதலாயின. குழல் - வேய்ங்குழல் முதலாயின. அறைதல் - சத்தித்தல். ஆர்த்தல் - ஆரவாரித்தல். (7)

ஒற்றியூரென்றவூனத்தினாலதுதானோ
அற்றப்படவாரூரதென்றகன்றாயோ
முற்றுமதிசூடியகோடிக்குழகா
எற்றாற்றனியேயிருந்தாயெம்பிரானே.

(ப-ரை.) ஒற்றியூர் என்ற ஊனத்தினால் - ஒற்றியூரென்று சொல்லப்படுகிற குறையால், அதுதானே - அந்தக் காரணத்தினாற்றானே, அற்றப்பட - சமயப்பட, ஆரூரதென்று - ஆரூர் அதுவென்று, அகன்றாயோ - அதைவிட்டு நீங்கினையோ, முற்றாமதி-இளம்பிறையை, சூடிய - தரித்த, கோடிக்குழகா - திருக்கோடிக் குழகனே, எம்பிரானே — எம்பெருமானே, எற்றால் - எந்தக் காரணத்தால், தனியேயிருந்தாய் - தனியேயிருந்தனை எ-று.

(பொ-ரை.) ஒற்றியூரென்று சொல்லப்படுகிற குறையால், அந்தக்காரணத்தினாற்றானே சமயப்பட, ஆரூர் அதுவென்று அதை விட்டு நீங்கினையோ, இளம்பிறையைத் தரித்த திருக்கோடிக் குழகனே, எம்பெருமானே, எந்தக்காரணத்தால் தனியே யிருந்தனை.

(க-ரை.) கோடிக்குழகா, எம்பிரானே, ஒற்றியூர் என்கிற குறையினாற்றானே அதைவிட்டுத் தனியே யிருந்தா யென்பதாம்.

(வி-ரை.) ஒற்றியூர் - ஒற்றிவைக்கப்பட்டவூர். ஊனம் - குறை. அற்றம் — சமயம், அறுதியெனினுமாம். (8)

**நெடியானொடுநான் முகனும் மறிவொண்ணாப்**
**படியான்படிகொள்ளுமிடங்குடியில்லை**
**கொடியார்பலர்வேடர்கள்வாழுங்கரைமேல்**
**அடிகேளன்பதாயிடங்கோயில்கொண்டாயே.**

(ப-ரை.) நெடியானொடு - நெடுமாலோடு, நான்முகனும்-பிரமனும், அறிவு ஒண்ணாபடியால் - அறிதல் கூடாதபடியால், படிகொள்ளும் இடமும் குடி இல்லை - இவ்வுலகில் கொள்ளத் தகுந்த இடமும் குடியும் இல்லை, கொடியார் — கொடியவராகிய, பல வேடர்கள் வாழுங்கரைமேல் - பல வேடுவர்கள் வாழ்கின்ற கரைமீது, அடிகேள் - சுவாமீ, அன்பதாய் - அன்போடு, இடம் கோயில் கொண்டாயே - இடமும் கோயிலுமாகக் கொண்டனையே எ-று.

(பொ-ரை.) நெடுமாலோடு பிரமனும் அறிதல் கூடாதபடியால், இவ்வுலகில் கொள்ளத்தகுந்த இடமும் குடியும் இல்லை, கொடியவராகிய பல வேடர்கள் வாழுங் கரைமீது, சுவாமி, அன்போடு, இடமும் கோயிலுமாகக் கொண்டனையே.

(க-ரை.) நெடுமாலும் பிரமனும் அறிய வொண்ணாத இறைவனே, பல வேடர்கள் வாழுங் கடற்கரைமேல் கோயில் கொண்டனையே யென்பதாம்.

(வி-ரை.) திரிவிக்கிரமனாகி நீண்டதனால் திருமாலை நெடியான் என்றார். படி கொள்ளும் இடம் குடி இல்லை யென்பதற்கு ஒப்புமைகொள்ளும் காரணமும் குடிப்பிறப்பு மில்லையென் றுரைத்தலுமாம். கரை - கடற்கரை. (9)

**பாரூர்மலிசூழ்மறைக்காட தன்றென்பா**
**லேரார்பொழில்சூழ்தருகோடிக்குழகை**
**யாரூரனுரைத்தனபத்திவைவல்லார்**
**சீரார்சிவலோகத்திருப்பவர்தாமே.**

(ப-ரை.) பார் ஊர் - இவ்வுலகில் உள்ள ஊர்களுள்ளே, மலி சூழ் - மிக்குச் சூழ்ந்த, மறைக்காடதன் தென்பால் - திருமறைக்காட்டின் தென்புறத்தில், எர் ஆர் - அழகுநிறைந்த, பொழில் சூழ்தரு - சோலைகள் சூழ்ந்த, கோடிக் குழகை - திருக்கோடிக் குழகரை, ஆரூரன் உரைத்தன - சுந்தரன் சொன்ன, இவை பத்துவல்லார் - இந்தப் பத்துப் பாடலுங் கற்று வல்லார், சீர் ஆர் - சிறப்புப் பொருந்திய, சிவலோகத்து இருப்பவர்தாம்-சிவலோகத்திலிருப்பவரேயாவர் எ-று.

(பொ-ரை.) இவ்வுலகிலுள்ள ஊர்களுள்ளே மிக்குச் சூழ்ந்த மறைக்காடதன் தென்பால், அழகுநிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோடிக் குழகரை, சுந்தரன் சொன்ன இந்தப் பத்துப்பாடலுங் கற்று வல்லார், சிறப்புப் பொருந்திய சிவலோகத்தி லிருப்பவரேயாவர்.

(க-ரை.) திருக்கோடிக் குழகைச் சுந்தரன் சொன்ன இந்தப் பத்துப் பாடலுங் கற்று வல்லார் சிவலோகத் திருப்பவரே யாவரென்பதாம்.

(வி-ரை.) மலி - மலிந்து. சிவலோகம் - சிவபுரம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அமுதகடநாதர். தேவியார் - மையார்தடங்கண்ணயகியம்மை.

---

## நமக்கடிகளாகிய அடிகள்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**பாறுதாங்கியகாடரோபடுதலையரோமலைப்பாவையோர்**
**கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள**
**ஏறுதாங்கியகொடியரோசுடுபொடியரோவிளங்கும்பிறை**
**யாறுதாங்கியசடையரோநமக்கடிகளாகியவடிகளே.**

(ப-ரை.) நமக்கடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமியாகிய சிவபிரானுர், பாறுதாங்கிய காடரோ - பருந்துகள் தங்கிய மயானத்தையுடையவரோ, படுதலையரோ - தசையுலர்ந்த தலையோட்டை யுடையவரோ, மலைபாவை - மலைமகளாகிய உமாதேவியை, ஓர் கூறுதாங்கிய - ஒரு பாகத்தில் அமைத்தருளின, குழகரோ - அழகரோ, குழைகாதரோ - குண்டலத்தை யணிந்த காதினை யுடையவரோ, குறுகோடு - குறுகிய கொம்பினையுடைய, இள எறு தாங்கிய - இளமையாகிய இடபத்தைத் தாங்கிய, கொடியரோ - கொடியை யுடையவரோ, சுடுபொடியரோ - சுட்ட வெண்ணீற்றை யணிந்தவரோ, விளங்கும் - பிரகாசிக்கிற, பிறை - பிறையினையும், ஆறு - ஆகாய கங்கையினையும், தாங்கிய - சுமந்த, சடையரோ - சடையினையுடையவரோ எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானுர் பருந்துகள் தங்கிய மயானத்தை யுடையவரோ, தசையுலர்ந்த தலையோட்டை யுடையவரோ, மலைமகளா

கிய வுமாதேவியை யொருபாகத்தி லமைத்தருளின வழகரோ, குண்டலத்தை யணிந்த காதினையுடையவரோ, குறுகின கொம்பினையுடைய விளமையாகிய விடபத்தினைத் தாங்கிய கொடியை யுடையவரோ, சுட்ட வெண்ணீற்றை யணிந்தவரோ, பிரகாசிக்கின்ற பிறையினையும் ஆகாயகங்கையினையும் சுமந்த சடையினையுடையவரோ எ-று.

(க-ரை.) நமக்கடிகளாகிய அடிகள் பாறுதாங்குதல் முதலிய செய்கையுடையவரோ வென்பதாம்.

(வி-ரை.) இள ஏறு என்றது இள வேற்றின் உருவத்தை என்று கொள்க. இள ஏறுதலால் குறுங்கோ டென்றார். (1)

**இட்டிதாகவந்துரைமினோநுமக்கிசையுமாறினைந்தேத்துவீர்**
**கட்டிவாழ்வதுநாகமோசடைமேலுநாறுகரந்தையோ**
**பட்டியேறுகந்தேறரோபடுவெண்டலைப்பலிகொண்டுவந்**
**தட்டியாளவுங்கிற்பரோநமக்கடிகளாகியவடிகளே.**

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமிகளாகிய சிவபிரானார், கட்டிவாழ்வது - திருவவை முதலிய விடங்களிற் கட்டிவாழ்வது, நாகமோ - பாம்புகளோ, சடைமேலும் - சடைமேலுள்ளதும், நாறு - பரிமளிக்கிற, கரந்தையோ - கரந்தையோ, உகந்து ஏறு - விரும்பியேறுதல், பட்டி ஏறரோ-பட்டியெருதுதானோ, படு வெள்தலை - படு வெண்டலையில், பலிகொண்டு-பலியேற்று, உவந்து அட்டி-மகிழ்வோடுண்டு, ஆளவும் கிற்பரோ-எம்மையாளவும் வல்லரோ, நுமக்கு இசையும் ஆறு - உங்களுக் கிசையும் வண்ணம், நினைந்து ஏத்துவீர் - நினைந்து துதிப்பவர்களே, இட்டிது ஆக வந்து உரைமின் - சிறிது வந்து சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமிகளாகிய சிவபிரானார் திருவவை முதலிய விடங்களிற் கட்டி வாழ்வது பாம்புகளோ, சடைமேலுள்ளதும் பரிமளிக்கிற கரந்தையோ, விரும்பியேறுதல் பட்டியெருதுதானோ, படுவெண்டலையில் பலியேற்று மகிழ்வோடுண்டு எம்மையாளவும் வல்லரோ, உங்களுக்கிசையும் வண்ணம் நினைந்து துதிப்பவர்களே, சிறிது வந்து சொல்லுங்கள்.

(க-ரை.) நமக்கடிகளாகிய அடிகள், பாம்பணி முதலியவற்றை யுடையவரோ வென்பதாம்.

(வி-ரை.) கரந்தை - ஓர் பூடு. பட்டியேறு - இளவெருது. இட்டிமை - சிறுமை. (2)

**ஒன்றுநீர்கள்வந்துரைமினோநமக்கிசையுமாறினைந்தேத்துவீர்**
**குன்றிபோல்வதோருருவரோகுறிப்பாகிநீறுகொண்டணிவரோ**
**வின்றியேயிலராவரோவன்றியுடையராயிலராவரோ**
**அன்றியேமிகவறவரோநமக்கடிகளாகியவடிகளே.**

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமியாகிய சிவபிரானுர், குன்றிபோல்வது - குன்றியை நிகர்த்ததாகிய, ஓர் உருவரோ - ஒப்பற்ற திருமேனியை யுடையவரோ, குறிப்பு ஆகி நீறு கொண்டு அணிவரோ-திருவுள்ளங்கொண்டு திருவெண்ணீற்றை யெடுத்தணிந்து கொள்வரோ, இன்றியே - இல்லாமலே, இலர் ஆவரோ - இல்லாதவராவரோ, அன்றி - அல்லாமல், உடையர் ஆய் - எல்லாம் உடையவராயிருந்தும், இலர் ஆவரோ - இல்லாதவராவரோ, அன்றியே - அல்லாமல், மிக அறவரோ - மிகவுந் தருமவுருவரோ, நுமக்கு இசையும் ஆறு நினைந்து எத்துவீர்-உமக்கிசையும்படி நினைந்து துதிப்பவர்களே, நீர்கள் வந்து ஒன்று உரைமின் - நீங்கள் வந்து சிறிது சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானுர், குன்றியை நிகர்த்ததாகிய ஒப்பற்ற திருமேனியையுடையவரோ, திருவுள்ளங்கொண்டு திருவெண்ணீற்றை யெடுத்தணிந்து கொள்வரோ, இல்லாமலே இல்லாதவராவரோ, அல்லாமல் எல்லாம் உடையவராயிருந்தும் இல்லாதவராவரோ, அல்லாமல் மிகவும் தருமவுருவரோ, உமக்கிசையும்படி நினைந்து துதிப்பவர்களே நீங்கள் வந்து சிறிது சொல்லுங்கள்.

(க-ரை.) நமக்கடிகளாகிய அடிகள், குன்றிபோல்வதாகிய வுருவம் முதலியவற்றை யுடையவரோ வென்பதாம்.

(வி-ரை.) குன்றி - குன்றிமணி. அறம் - தருமம். (3)

**தேனையாடுமுக்கண்ணரோமிகச்செய்யரோவெள்ளைநீற்றரோ**
**பானெய்யாடலும்பயில்வரோதமைப்பற்றினுர்கட்குநல்லரோ**
**மானைமேவியகண்ணினுள்மலைமங்கைநங்கையையஞ்சவோர்**
**ஆனையீருரிபோர்ப்பரோநமக்கடிகளாகியவடிகளே.**

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமியாகிய சிவபிரானுர், தேனை ஆடும் முக்கண்ணரோ - தேனையபிஷேகமாகப் பெறுகிற திரிநேத்திரரோ, மிக செய்யரோ-மிகவும் செந்நிறமுள்ளவரோ, வெள்ளை நீற்றரோ-வெண்ணீற்றை யணிந்தவரோ, பால் நெய் ஆடலும் - பால் நெய்களில் அபிஷேகிக்கச் செய்யப்படுதலும், பயில்வரோ - பழகுவரோ, தம்மை பற்றினுர்கட்கு - தம்மை யடுத்தவருக்கு, நல்லரோ - நன்மை செய்பவரோ, மானை - மானின் கண்ணின் றன்மையை, மேவிய - பொருந்திய, கண்ணினுள் - கண்ணினையுடையவராகிய, மலைமங்கை நங்கை - மலையிற் றேன்றிய மங்கைப் பருவத்தையுடைய பெண்ணுகிய வுமாதேவியாரானவர், அஞ்ச - அஞ்சும்படி, ஓர்-ஒப்பற்ற, ஆனை -யானையின், ஈர்உரி - குளிர்ந்ததோலை, போர்ப்பரோ - போர்த்துக்கொள்வரோ எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானுர், தேனை அபிஷேகமாகப் பெறுகிற திரிநேத்திரரோ, மிகவும் செந்நிறமுள்ளவரோ, வெண்ணீற்றை யணிந்தவரோ, பால் நெய்களில் அபிஷேகஞ் செய்யப் படுதலும் பழகுவரோ, தம்மை யடுத்தவருக்கு நன்மை செய்பவரோ, மான் கண்ணின் தன்மையைப்

பொருந்திய கண்ணினை யுடையவராகிய வுமாதேவியா ரானவர் அஞ்சும்படி ஒப்பற்ற யானையின் குளிர்ந்த தோலைப் போர்வையா யுடையவரோ.

(க-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானூர் தேனை யபிஷேகமாகப் பெறுதல் முதலியவற்றை யுடையவரோ வென்பதாம்.

(வி-ரை.) செய்யர் - செந்நிறமுள்ளவர். பயிலல் - பழகல். மான் - ஆகுபெயர். மங்கை - பன்னிராட்டைப் பிராயத்தாள். (4)

**கோணல்மாமதிசூடரோகொடுகொட்டிகாலர்கழலரோ**
**வீணைதானவர்கருவியோவிடையேறுவேதமுதல்வரோ**
**நாணதாகவோர்நாகங்கொண்ட ரைக்கார்ப்பரோநலமார்தர**
**ஆணையாகநம்மடிகளோநமக்கடிகளாகியவடிகளே.**

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள - எமக்கு சுவாமியாகிய சிவபிரானூர், கோணல்மாமதி சூடரோ - வளைந்த அழகிய பிறையையணிந்தவரோ, கொடுகொட்டி காலர் கழலரோ - கொடுகொட்டியாடுகிற திருவடியையும் கழலையுமுடையவரோ, வீணைதான் - வீணையே, அவர் கருவியோ – அவரதாயுதமோ, விடை ஏறும்-இடபமேறுகின்ற, வேதமுதல்வரோ-மறைமுதல்வரோ, ஓர்நாகம் கொண்டு - ஒப்பற்ற பாம்பைக்கொண்டு, நாண் அது ஆக - நாணாக, அரைக்கு ஆர்ப்பரோ - திருவரையிற் கட்டுவரோ, நலம் ஆர்தர - நன்மையுண்டாக, ஆணை ஆக நம்மடிகளோ - சத்தியமாக நமது சுவாமிகளோ எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானூர் வளைந்த அழகியபிறையை யணிந்தவரோ, கொடுகொட்டி யாடுகிற திருவடியையும் கழலையுமுடையவரோ, வீணையே அவரது ஆயுதமோ, இடப மேறுகின்ற மறைமுதல்வரோ, ஒப்பற்ற பாம்பைக்கொண்டு நாணாகத் திருவரையிற் கட்டுவரோ, நன்மையுண்டாக சத்திய மாக நமது சுவாமிகளோ.

(க-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானூர் வளைந்த அழகிய பிறையணி முதலியவற்றை யுடையவரோ வென்பதாம்.

(வி-ரை.) கோணல் மாமதி - பிறை. கொடுகொட்டி - சிவன்கூத்து. கழல்-விருது. (5)

**வந்துசொல்லுமின்மூடனேனுக்குவல்லவாகிணைந்தேத்துவீர்**
**வந்தசாயினையறிவரோதம்மைவாழ்த்தினூர்கட்குநல்லரோ**
**புந்தியாலுரைகொள்வரோவன்றிப்பொய்யின்மெய்யுரைத்தாள்வ**
**அன்றியேமிகவறவரோநமக்கடிகளாகியவடிகளே. [ரோ**

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமியாகிய சிவபிரானூர், வந்த - நேர்ந்த, சாயினை - எமது தளர்ச்சியை, அறிவரோ - உணர்வாரோ, தம்மை வாழ்த்தினூர் கட்கு நல்லரோ - தம்மைத் துதித்தவர்க்கு நல்லவரோ, புந்தியால் - தம் திருவுளத்தில், உரை கொள்வரோ - எமது அற்பமொழிகளை

யேற்றுக் கொள்வரோ, அன்றி - அல்லாமல், பொய் இல் - பொய்படாத, மெய் உரைத்து - உண்மை நிலையைச் சொல்லி, ஆள்வரோ-ஆளுவரோ, அன்றியே - அல்லாமலே, மிக அறவரோ - மிகவும் தருமவடிவத்தையுடையரோ, வல்லஆறு நினைந்து ஏத்துவீர் - உமக்கு இசையும் வண்ணம் நினைந்து துதிப்பவர்களே, வந்து மூடனேனுக்கு சொல்லுமின் - நீங்கள் வந்து மூடனாகிய வெனக்குச் சொல்லுங்கள் எ-று.

**(போ-ரை.)** எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், நேர்ந்த எமது தளர்ச்சியை அறிவரோ, தம்மைத் துதித்தவர்கட்கு நல்லவரோ, தம் திருவுளத்தில் எமது அற்பமொழிகளை யேற்றுக் கொள்வரோ, அல்லாமல், பொய்படாத வுண்மை நிலையைச் சொல்லி ஆள்வரோ, அல்லாமல், மிகவும் தருமவடிவத்தை யுடைய வரோ, நுமக்கிசையும் வண்ணம் நினைந்து துதிப்பவர்களே, நீங்கள் வந்து மூடனேனுக்குச் சொல்லுங்கள்.

**(க-ரை.)** எமக்கு சுவாமியாகிய சிவபிரானார் எமது தளர்ச்சியை யறிந்து அதனை யொழிக்கவல்ல அறவடிவரோ, நீங்கள் சொல்லுங்கள் என்பதாம்.

**(வி-ரை.)** சாய் - முதனிலைத் தொழிற்பெயர். (6)

***மெய்யென்சொல்லுமினமரங்காளுமக்கிசையுமாறினைந்தேத்துவீர்***
***கையிற்சூலமதுடையரோகரிகாடரோகறைக்கண்டரோ***
***வெய்யபாம்பரையார்ப்பரோவிடையேறரோகடைதோறுஞ்சென்***
***றையங்கொள்ளுமவ்வடிகளோநமக்கடிகளாகியவடிகளே.***

**(ப-ரை.)** நமக்கு அடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், கையில் சூலமது உடையரோ - கையிற் சூலாயுதத்தை யுடையவரோ, கரிகாடரோ - கரிந்துபோன மயானத்தையுடையவரோ, கறைகண்டரோ - விஷகண்டத்தை யுடையவரோ, வெய்ய பாம்பு அரை ஆர்ப்பரோ - கொடிய பாம்பினை திருவரையிற் கட்டுவரோ, விடை ஏறரோ - இடபத்தின் மீதேறுவரோ, கடைதோறும் சென்று - வாயில்கடோறும் சென்று, ஐயம் கொள்ளும் அ அடிகளோ - ஐயமேற்கின்ற அந்த இறைவரோ, உமக்கு இசையும் ஆறு நினைந்து ஏத்துவீர் - உமக்கிசையும் வண்ணம் நினைந்து துதிப்பவர்களே, நமராங்காள்-நமர்காள், மெய் என் - உண்மையாவது யாது, சொல்லுமின் - சொல்லுங்கள் எ-று.

**(போ-ரை.)** எமக்கு சுவாமியாகிய சிவபிரானார் கையிற் சூலாயுதத்தையுடையவரோ, கரிந்துபோன மயானத்தையுடையவரோ, விஷகண்டத்தை யுடையவரோ, கொடிய பாம்பினைத் திருவரையிற் கட்டுவரோ, இடபத்தின் மீதேறுவரோ, வாயில்கடோறுஞ் சென்று ஐயமேற்கின்ற அந்த இறைவரோ, உமக்கிசையுமாறு நினைந்தேத்துவீர், நமர்காள், உண்மையாவது யாது, சொல்லுங்கள்.

**(க-ரை.)** எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், கையிற் சூல முதலானவற்றை யுடையவரோ, நீங்கள் சொல்லுங்களென்பதாம்.

**(வி-ரை.)** கரிகாடு - மயானம். கறை - விஷம். கடை - வாயில். (7)

*நீடுவாழ்பதியுடையரோவயனெடியமாலுக்குநெடியரோ*
*பாடுவாரையுமுடையரோதமைப்பற்றினர்கட்குநல்லரோ*
*காடுதானரங்காகவேகைகளெட்டிேனாடிலயம்பட*
*ஆடுவாரெனப்படுவரோநமக்கடிகளாகியவடிகளே.*

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள்-எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், நீடு வாழ்பதி உடையரோ - நெடிதாகத் தாம் வாழ்கின்ற திருப்பதிகளை யுடையவரோ, அயன் நெடிய மாலுக்கு - பிரம விஷ்ணுக்களுக்கு, நெடியரோ - (காணவொண்ணாமல்) நீண்டிருப்பவரோ, பாடுவாரையும் உடையரோ - (தம்மைப்புகழ்ந்து) பாடுகின்ற தொண்டர்களையு முடையவரோ, தம்மைபற்றினர்கட்கு நல்லரோ - தம்மை அடுத்தவர்களுக்கு நல்லவரோ, காடுதான் - சுடலையே, அரங்கு ஆக—ஆடரங்காகக்கொண்டு, கைகள் எட்டினோடு-திருப்புயங்கள் எட்டினுடன், இலயம்பட - லயத்துக்குப் பொருந்த, ஆடுவார் என படுவரோ-ஆடுவோரென்று சொல்லப்படுவரோ எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், நெடிதாகத் தாம் வாழ்கின்ற திருப்பதிகளையுடையவரோ, பிரமவிஷ்ணுக்களுக்கு காண வொண்ணாமல் நீண்டிருப்பவரோ, தம்மைப் புகழ்ந்து பாடுகின்ற தொண்டர்களையு முடையவரோ, தம்மை அடுத்தவர்களுக்கு நல்லவரோ, சுடலையே ஆடரங்காகக் கொண்டு திருப்புயங்கள் எட்டினுடன் லயத்துக்குப் பொருந்த ஆடுவோரென்று சொல்லப்படுவரோ.

(க-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், திருப்பதிகள் அநேகமாயுடைத்தாதல் முதலியவற்றை யுடையரோ வென்பதாம்.

(வி-ரை.) பதி - தலம். அரங்கு - ஆடிடம். (8)

*நமணநந்தியுங்கருமவீரனுந்தருமசேனனுமென்றிவர்*
*குமணமாமலைக்குன்றுபோல்நின்றுதங்கள்கூறையொன்றின்றியே*
*ஞமணஞாஞணஞாணஞோணமென்றோதியாரையுநாணிலா*
*அமணராற்பழிப்புடையரோநமக்கடிகளாகியவடிகளே.*

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள் - எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், நமணநந்தியும் - நமணநந்தியும், கருமவீரனும் - கருமவீரனும், தருமசேனனும், தருமசேனனும், என்று இவர் - என்று சொல்லப்பட்ட இவர், குமணமாமலை குன்றுபோல நின்று-குமணமாமலை குன்றுபோல நின்று, தங்கள்-தமது, கூறை ஒன்றும் இன்றியே - ஆடை சிறிது மில்லாமலே, ஞமண ஞாஞண ஞாண ஞோண என்று ஓதி—, யாரையும் - யார்க்கும், நாண் இலா - வெட்காத, அமணரால்-அந்த அமணர்களால், பழிப்பு உடையரோ-பழித்தலை யுடையவரோ எ-று.

(பொ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானார், நமணநந்தியும் கருமவீரனும் தருமசேனனும் என்று சொல்லப்பட்ட இவர், குமணமாமலை குன்றுபோல் நின்று, தமது ஆடை சிறிதுமில்லாமலே, ஞமண ஞாஞண ஞாண ஞோண

மென்று ஓதி, யார்க்கும் வெட்காத அந்த அமணர்களால் பழித்தலை யுடைய வரோ.

(க-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானர், நமணநந்தி முதலியோரால் பழிக்கப்பட்டவரோ வென்பதாம்.

(வி-ரை.) நமணநந்தி முதலியோர் சமணாசாரியர். யாரையும் உருபுமயக்கம். நாண் முதனிலைத் தொழிற்பெயர். (9)

**படிசெய்நீர்மையிற்பத்தர்தாள்பணிந்தேத்தினேன்பணிமீரருள்**
**வடிவிலான்றிருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்**
**செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேமனஞ்சிந்திக்கும்**
**அடியனூரனையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே.**

(ப-ரை.) நமக்கு அடிகளாகிய அடிகள்-எமக்கு சுவாமியாகிய சிவபிரானர், அருள் - அருளோடு கூடி, வடிவு இல்லான் - திருவு நவில்லாதவனாகிய சிவபிரானது, (திருநாவலூரன் - சுந்தரன், வனப்பகை அப்பன்—, வன்றொண்டன்—,) செடியன் ஆயினும் - குற்றமுடையேனாயினும், தீயன் ஆயினும் - தீயேனாகிலும், தம்மையே மனம் சிந்திக்கும் - தம்மையே மனத்தினால் சிந்தனை செய்கிற, (அடியன் ஊரனை - தொண்டனாகிய வூரனை. சுந்தரனை,) ஆள்வரோ - ஆண்டருள்வரோ, படிசெய் நீர்மையின் - செய்யவேண்டிய முறைமைப்படி, பத்தர் தாள் - பத்தர்களின் திருவடிகளை, பணிந்து ஏத்தினேன் - வணங்கித் துதித்தேன், பணியீர் - சொல்லுங்கள் எ-று.

(போ-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானர், அருளோடு கூடித் திருவுருவில்லாதவனாகிய சிவபிரானது சுந்தரன் வனப்பகை அப்பன் வன்றொண்டன், குற்றமுடையேனாயினும் தீயேனாயினும் தம்மையே மனத்தினாற் சிந்திக்கிற தொண்டனாகிய வூரனை ஆண்டருள்வரோ, செய்யவேண்டிய முறைமைப்படி பத்தர்களின் திருவடிகளை வணங்கித் துதித்தேன் சொல்லுங்கள்.

(க-ரை.) எமக்கு சுவாமியாகிய சிவபிரானரைத் திருநாவலூரனாகிய நான் புகழ்ந்துரைத்ததனை யேற்று என்னை யாண்டருள்வரோ வென்பதாம்.

(வி-ரை.) நீர்மை - முறைமை. (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புகலூர்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சாரினுந்தொண்டர்தருகிலாப்**
**பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்கா**
**எம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம் [ள்**
**அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) புலவீர்காள் - புலவர்களே, தொண்டர் - அடியவர், தம்மையே புகழ்ந்து - தம்மையேபுகழ்ந்து, இச்சைபேசினும் - ஆசைவார்த்தை பேசினுலும், சாரினும் - அடுத்திருந்தாலும், தருகிலா - ஒன்றுங்கொடாத, பொய்ம்மையாளரை - பொய்யரை, பாடாதே - பாடாமல், எந்தை - எமது தந்தையாகிய சிவபிரானது, புகலூர் - திருப்புகலூரை, பாடுமின் - பாடுங்கள், (பாடினுல்) இம்மையே - இம்மையிலே, சோறும் கூறையும் தரும் - சோற்றையும் ஆடையையும் தருவன், ஏத்தல் ஆம் - அவனைத் துதித்தலுமாம், இடர்கெடலும் ஆம் - துன்பங்கள் ஒழிதலுமாம், அம்மையே - மறுமையிலே, சிவலோகம் ஆள்வதற்கு - சிவநகரையாள்வதற்கு, யாதும் - சிறிதும், ஐயுறவு இல்லை - சந்தேகமில்லை எ - று.

(பொ-ரை.) புலவர்களே, அடியவர், தம்மையே புகழ்ந்து ஆசைவார்த்தை பேசினுலும் அடுத்திருந்தாலும் ஒன்றுங்கொடாத பொய்யரைப் பாடாமல் எமது தந்தையாகிய சிவபிரானது திருப்புகலூரைப்பாடுங்கள், பாடினுல், இம்மையிலே சோற்றையும் ஆடையையும் தருவன், அவனைத் துதித்தலுமாம், துன்பங்கள் ஒழிதலுமாம், மறுமையிலே சிவநகரை யாள்வதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவர்களே, ஈயாத பொய்யரைப் பாடாமல், திருப்புகலூர்ச் சிவபெருமானைப் பாடுங்கள், பாடினுல், உங்களுக்கு இம்மை மறுமை யின்பங்களுண்டாமென்பதாம்.

(வி-ரை.) கூறை - ஆடை. (1)

**மிடுக்கிலா தானை வீமனே விறல்விசயனே வில்லுக்கிவனென்று**
**கொடுக்கிலா தானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரிலைப்**
**பொடிக்கொள்மேனியெம்புண்ணியனெந்தைபுகலூரைப்பாடுமின்பு**
**அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.[லவீர்காள்**

(ப-ரை.) மிடுக்கு இல்லாதானை-வலியில்லாதவனை நோக்கி, இவன்-இவன், வீமனேயென்று - வீமசேநனேயென்றும், வில்லுக்கு - வில்வித்தையில், விறல் விசயனேயென்று - வெற்றியையுடைய அருச்சுநனே யென்றும், கொடுக்கிலாதானை - ஈயாதலோபியை, பாரியேயென்றும் - பாரியேயென்றும், கூறினும் - புகழ்ந்தாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆகையால்) புலவீர்காள் - புலவர்களே, பொடிகொள் - திருவெண்ணீறணிந்த, மேனி - திருமேனியையுடைய, எம் - எமது, புண்ணியன் - புண்ணியரூபனுகிய சிவபெருமானது, புகலூரை பாடுமின் - திருப்புகலூரைப் பாடுங்கள், அடுக்குமேல் - (பாடுதற்ருெழில் உமக்கு) உண்டாயின், அமருலகம் ஆள்வதற்கு - சிவலோகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ - று.

(பொ-ரை.) வலியில்லாதவனை நோக்கி யிவன் வீமசேனனே யென்றும், வில்வித்தையில் வெற்றியையுடைய அருச்சுனனே யென்றும், ஈயாத லோபியை பாரியேயென்றும் புகழ்ந்தாலுங் கொடுப்பவரில்லை, ஆகையால்புலவர்களே, திருவெண்ணீறணிந்த திருமேனியையுடைய வெமது புண்ணிய ரூபனுகிய சிவ

பெருமானது திருப்புகலூரைப் பாடுங்கள், பாடுதற் ஞெழிலுமக்குண்டாயின் சிவலோகத்தை யாள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவீர்காள், நீங்கள் எவ்வளவு புகழ்ந்து பேசினும் கொடுப்பவ ரில்லை யாகையால், திருப்புகலூர்ப் புண்ணியனைப் பாடுங்கள், பாடினல், நீங்கள் சிவலோகத்தை யாள்வதற்குச் சந்தேகமில்லை யென்பதாம்.

(வி-ரை.) பாரி - ஒருவள்ளல். அமரர் உலகம் என்பது அமர் உலகம் என விகாரமாயிற்று. (2)

**காணியேற்பெரிதுடையனே கற்றுநல்லனேசுற்றநன்கிளை**
**பேணியேவிருந்தோம்புவோயென்றுபேசினுங்கொடுப்பாரிலைப்**
**பூணிபூண்டுழன்புட்சிலம்புத்தண்புகலூர்பாடுமின்புலவீர்காள்**
**ஆணியாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) காணியேல் - நிலமோவெனின், பெரிது உடையனே - மிகுதியா யுடையவனே, கற்றுவல்லனே-கற்றுவல்லோனே, சுற்றம் நன்கிளை பேணியே - சுற்றத்தாரையும் நன்கிளையையும் காப்பாற்றுவோனே, விருந்தோம்புவோய் - விருந்தோம்புவோனே, என்று பேசினும்-என்று புகழ்ந்து பேசினலும், கொடுப் பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆதலால்) புலவீர்காள் - புலவர்களே, பூணி பூண்டு - இடபவாகனத்தையுடையவனுகிய சிவபிரானது, உழல்புள் சிலம்பும் - சுழலாநின்ற பறவைகளொலிக்கின்ற, தண்புகலூர்-குளிர்ந்தபுகலூரை, பாடுமின்- பாடுங்கள், (பாடுவீராயின் நீங்கள்) ஆணி ஆய் - உறுதியுடையராய், அமருலகம் ஆள்வதற்கு - சுவர்க்கலோகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறி தும் சந்தேக மில்லை எ - று.

(பொ-ரை.) நிலமோ வெனில் மிகுதியாயுடையவனே, கற்றுவல்லனே, சுற் றத்தாரையும் நல்ல கிளையையும் காப்பாற்றுவோனே, விருந்தோம்புவோனே, என்று புகழ்ந்துபேசினுலும் கொடுப்பவரில்லையாதலால், புலவர்களே,இடபவாக னத்தையுடையவனுகிய சிவபிரானது சுழலாநின்ற பறவைகளொலிக்கின்ற குளிர்ந்தபுகலூரைப்பாடுங்கள், பாடுவீராயின், நீங்கள் உறுதியுடையராய் சுவர்க்க லோகத்தை யாள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவீர்காள், ஈயாவுலோபரைப் பாடுதல்விட்டு, திருப்புகலூர்ச் சிவபிரானைப் பாடுவீராயின், நீங்கள் சுவர்க்கலோகத்தை யாள்வதற்கு ஐயுற வில்லை யென்பதாம்.

(வி-ரை.) ஏல் எனின் என்பதன் மரூஉ. (3)

**நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடல்நடுங்கிநிற்குமக்கிழவனை**
**வரைகள்போல்திரடோளனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலைப்**
**புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்**
**அரையனுயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) நரைகள்போந்து - நரைமயிர்களுண்டாகி, மெய்தளர்ந்து - மெய் தளர்வடைந்து, உடல்மூத்து - உடல்முதிர்ந்து, நடுங்கிநிற்கும் அக்கிழவனை - நடுங்கிநிற்கிற அந்தக் கிழவனை, வரைகள்போல் - மலைகள்போல, திரள் தோளனேயென்று வாழ்த்தினும் - திரண்டதோள்களையுடையவனே யென்று புகழ்ந்தாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆதலால்) புலவீர்காள் - புலவர்களே, புரை - மேன்மையாகிய, வெள் ஏறு உடை - வெள்விடையையுடைய, புண்ணியன் - புண்ணியனது, புகலூரைபாடுமின் - திருப்புகலூரைப் பாடுங்கள், (பாடினால் நீங்கள்) அரையர் ஆய் - அரசராகி, அமருலகம் ஆள்வதற்கு - தேவலோகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ - று.

(பொ-ரை.) நரைமயிர்களுண்டாகி மெய்தளர்வடைந்து உடல்முதிர்ந்து நடுங்கிநிற்கிற அந்தக் கிழவனை மலைகள் போலத் திரண்ட தோள்களையுடையவனேயென்று புகழ்ந்தாலும், கொடுப்பவரில்லை யாதலால் புலவர்களே, மேன்மையாகிய வெள்விடையையுடைய புண்ணியனது திருப்புகலூரைப் பாடுங்கள், பாடினால், நீங்கள் அரசராகி தேவலோகத்தை யாள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(கு-ரை.) புலவீர்காள், நீங்கள் கொடாதவரைப் பாடாமல், திருப்புகலூர்ப் புண்ணியனைப் பாடுவீராயின், அரசராய், தேவலோகத்தை யாள்வதற்கு யாதும் ஐயுறவில்லை யென்பதாம்.

(வி-ரை.) நரைகள் - வெண்மயிர்கள். மெய் - மங்கலவழக்கு. (4)

**வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்பாவியைவழக்கில்லியைப்**
**பஞ்சதுட்டனைச்சாதுவேயென்றுபாடினுங்கொடுப்பாரிலைப் [ள்**
**பொன்செய்செஞ்சடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்கா**
**நெஞ்சில்நோயறுத்துஞ்சுபோவதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) வஞ்ச நெஞ்சனை - வஞ்சமனத்தானை, மாசழக்கனை - பெருஞ்சழக்கனை, பாவியை - பாவமுடையவனை, வழக்கில்லியை - நீதியில்லாதவனை, பஞ்சதுட்டனை - பெரியதுட்டனை, சாதுவேயென்று பாடினும் - சாந்தகுணமுடையவனேயென்று பாடினாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆதலால்) புலவீர்காள் - புலவர்களே, பொன்செய் - பொன்போலும், செஞ்சடைப் புண்ணியன் புகலூரைப்பாடுமின் - செஞ்சடைப் புண்ணியனது புகலூரைப் பாடுங்கள், (பாடுவீராயின்) நெஞ்சில் நோய் அறுத்து - மனத்துன்பத்தையொழித்து, உஞ்சுபோவதற்கு - நீங்கள் உய்ந்துபோவதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

(பொ-ரை.) வஞ்சமனத்தானை பெருஞ்சழக்கனை பாவமுடையவனை நீதியில்லாதவனை பெரியதுட்டனை சாந்தகுண முடையவனே யென்று பாடினாலும் கொடுப்பவரில்லை யாதலால் புலவர்களே, பொன்போலும் செஞ்சடைப் புண்ணி

யனது புகலூரைப்பாடுங்கள், பாடுவீராயின், மனத்துன்பத்தை யொழித்து நீங்கள் உய்ந்துபோவதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவீர்காள், நீங்கள் கொடாத லோபிகளைப் பாடாமல், புகலூர்ப் புண்ணியனைப் பாடுங்கள், பாடுவீராயின், நீங்கள் உய்ந்துபோம் வழி யுண்டாமென்பதாம்.

(வி-ரை.) சழக்கு - குற்றம். பஞ்சதுட்டன்-அற்பனுகிய துஷ்டன் எனினுமாம். பொன்செய் என்பதில் செய் உவமவுருபு. (5)

**நலமிலாதானை நல்லனேயென் றுநரைத்தமாந்தரையிளையனே யென்**
**குலமிலாதானைக்குலவனேயென்றுகூறினுங்கொடுப்பாரிலைப் [று**
**புலமெலாம்வெறிகமழும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்**
**அலமராதமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) நலம் இலாதானை - நன்மையில்லாதவனை, நல்லனே யென்றும் - நல்லவனேயென்றும், நரைத்த மாந்தரை இளையரே யென்றும்-நரைத்தமனிதரை இளையவரேயென்றும், குலம் இலாதானை குலவனேயென்றும் - குலமில்லாதவனைக் குலத்தனே யென்றும், கூறினும் கொடுப்பார் இல்லை - சொன்னலும் கொடுப்பாரில்லை, (ஆதலால்) புலவீர்காள் - புலவர்களே, புலம் எல்லாம் - எல்லா விடங்களிலும், வெறிகமழும் - வாசனை வீசுகிற, பூ - அழகிய, புகலூரைப்பாடுமின் - புகலூரைப்பாடுங்கள், (பாடினல்) அலமராது - உழலாமல், அமருலகம் ஆள்வதற்கு - விண்ணுலகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

(பொ-ரை.) நன்மையில்லாதவனை நல்லவனேயென்றும், நரைத்த மனிதரை இளையவரேயென்றும், குலமில்லாதவனைக்குலத்தனேயென்றும் சொன்னலும் கொடுப்பாரில்லை, (ஆதலால்) புலவர்களே எல்லாவிடங்களிலும் வாசனை வீசுகிற அழகிய புகலூரைப்பாடுங்கள், பாடினல், உழலாமல் விண்ணுலகத்தை யாள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவீர்காள், உலோபரைப் பாடாமல் புகலூர்ப் புண்ணியனைப் பாடுங்கள், பாடினல், நீங்கள் தேவலோகத்தை யாள்வதற்கு யாதும்ஐயுறவில்லையென்பதாம்.

(வி-ரை.) புலம் - வயல் எனினுமாம். அலமராது என்பதற்குப் பகுதி அலமா. (6)

**நோயனைத்தடந்தோளனேயென்றுநொய்யமாந்தரைவிழுமிய**
**தாயன்றேபுலவோர்க்கெலாமென்றுசாற்றினுங்கொடுப்பாரிலைப்**
**போயுழன்றுகண்குழியாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்**
**ஆயமின்றிப்போயண்டமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) நோயனை - நோயாளனை, தடம் தோளனே யென்றும் - மலை போலுந் தோள்களை யுடையவனே யென்றும், நொய்ய மாந்தரை - அற்ப மனிதரை, விழுமிய - மேன்மையாகிய, புலவோர்க்கு எல்லாம் - புலவருக்கெல்லாம், தாய் அன்றே என்றும் - தாயல்லவோவென்றும், சாற்றினும்-புகழ்ந்துரைத்தாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆகையால்) புலவீர்காள் - புலவர்களே, (நீங்கள்) போய் உழன்று - இங்குமங்குமாகப் போய்த் திரிந்து, கண் குழியாதே - கண்குழிந் தழியாமல், எந்தை - எந்தையாகிய சிவபிரானது, புகலூர் பாடுமின் - புகலூரைப் பாடுங்கள், ஆயம் இன்றி போய் - ஆயமில்லாமலே போய், அண்டம் ஆள்வதற்கு - தேவலோகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

(பொ-ரை.) நோயாளனை மலைபோலும் தோள்களை யுடையவனே யென்றும், அற்ப மனிதரை மேன்மையாகிய புலவருக்கெல்லாம் தாயல்லவோ வென்றும் புகழ்ந்துரைத்தாலும் கொடுப்பவரில்லை யாகையால், புலவர்களே, நீங்கள் இங்கு மங்குமாகப் போய்த் திரிந்து கண்குழிந் தழியாமல் எந்தையாகிய சிவபிரானது புகலூரைப் பாடுங்கள், பாடினால், ஆயமில்லாமலேபோய் தேவலோகத்தையாள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(கு-ரை.) புலவீர்காள், நீங்கள் நொய்ய மாந்தரைப் பாடாமல், புகலூரைப் பாடினால் தேவலோகத்தை யாள்வதற்கு யாதும் ஐயுறவில்லை யென்பதாம்.

(வி-ரை.) ஆயம் - தடை. (7)

**எள்விழுந்திடம்பார்க்குமாகிலுமீக்குமீகிலனாகிலும்**
**வள்ளலேயெங்கள்மைந்தனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலைப்**
**புள்ளெலாஞ்சென்றுசேரும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்**
**அள்ளற்பட்டழுந்தாதுபோவதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) (ஒருவன்) எள்விழுந்த இடம் யார்க்குமாயினும் – எள்வீழ்ந்த இடத்தைப்பார்த்தாலும், ஈக்கும் - ஈயினுக்கும், ஈகிலன் ஆகிலும் - கொடாதவனானாலும், வள்ளலே - வள்ளலே, எங்கள் மைந்தனே - எங்கட் குறுதிதருவோனே, என்று வாழ்த்தினும்-என்று புகழ்ந்தாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆதலால்) புலவீர்காள்-புலவர்களே, புள் எல்லாம் சென்று சேரும் - பறவைகளெல்லாம் போய்க் கூடுகிற, பூ-அழகாகிய, புகலூரைப் பாடுமின்-புகலூரைப் பாடுங்கள், (பாடினால்) அள்ளல்பட்டு அழுந்தாது போவதற்கு - அள்ளலிலகப்பட்டு அழுந்தாமற்போவதற்கு, யாதும் ஐயுறவில்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

(பொ-ரை.) ஒருவன் எள்வீழ்ந்த இடத்தைப் பார்த்தாலும் ஈயினுக்கும் கொடாதவனானாலும், வள்ளலே, எங்கட்குறுதிதருவோனே என்று புகழ்ந்தாலும் கொடுப்பவரில்லை யாதலால், புலவர்களே, பறவைகளெல்லாம் போய்க் கூடுகிற அழகாகிய புகலூரைப் பாடுங்கள், பாடினால், அள்ளலிலகப்பட்டு அழுந்தாமற் போவதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவீர்காள், நீங்கள் லோபரைப்பாடாமல், புகலூர்ப் புண்ணியனைப் பாடினால், அள்ளலிற்பட் டழுந்தாமற் போவதற்கு யாதும் ஐயுறவில்லை யென்பதாம்.

(வி-ரை.) விழுந்த இடம் விழுந்திடம் என நிலைமொழியீறு தொகுத்தது. வள்ளல் - வரையாது கொடுப்போன். மைந்தன் - ஆதரவானவன். அள்ளல்-ஒரு நரகவிசேடம். (8)

**கற்றிலாதானைக்கற்றுவல்லனேகாமதேவனையொக்குமே**
**முற்றிலாதானைமுற்றனேயென்றுமொழியினுங்கொடுப்பாரிலைப்**
**பொத்திலாந்தைகள்பாட்டறாப்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்**
**அத்தனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) கற்றிலாதானை - கல்விகற்காதவனை, கற்று வல்லனேயென்றும் - கற்று வல்ல புலவனேயென்றும், காமதேவனை ஒக்குமேயென்றும் - (அழகிய) காமதேவனை நிகர்ப்பவனே யென்றும், முற்றிலாதானை - முடிவிலாதவனை, முற்றனேயென்றும் - முடிவனே யென்றும், மொழியினும் - புகழ்ந்துரைத்தாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, (ஆதலால்) புலவீர்காள் - புலவர்களே, பொத்தில் - பொந்துகளில், ஆந்தைகள் பாட்டு அறா - ஆந்தைகள் பாடுதல் நீங்காத, புகலூரைப் பாடுமின் - புகலூரைப் பாடுங்கள், அத்தன் ஆய் - இறைவனாகி, அமருலகம் ஆள்வதற்கு - தேவலோகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயுறவில்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

(பொ-ரை.) கல்விகற்காதவனை கற்றுவல்ல புலவனே யென்றும் அழகிய காமதேவனை நிகர்ப்பவனே யென்றும், முடிவிலாதவனை முடிவனே யென்றும் புகழ்ந்துரைத்தாலும் கொடுப்பவரில்லை யாதலால், புலவர்களே, பொந்துகளில் ஆந்தைகள் பாடுதல் நீங்காதபுகலூரைப் பாடுங்கள் இறைவனாகி தேவலோகத்தையாள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

(க-ரை.) புலவீர்காள், நீங்கள், கொடாதாரைப் பாடாமல், புகலூர்ப் புண்ணியனைப் பாடினால், இறைவராகி, தேவலோகத்தை யாள்வதற்கு, யாதும் ஐயுறவில்லை யென்பதாம்.

(வி-ரை.) முற்று - நிறைகுணம். பொத்து பொந்து என்பதன் விகாரம்.

**தையலாருக்கோர்காமனேசாலநலவழகுடையையனே**
**கையுலாவியவேலனேயென்றுகழறினுங்கொடுப்பாரிலைப்**
**பொய்கைவாவியின்மேதிபாய்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்**
**ஐயனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.**

(ப-ரை.) தையலாருக்கு - மாதருக்கு, ஓர்காமனே யென்றும் - ஒப்பற்ற மன்மதனே யென்றும், சால நல அழகுடைய ஐயனே யென்றும் - மிகுதியாகிய சிறந்த அழகுள்ள இறைவனே யென்றும், கைஉலாவிய வேலனே யென்றும் - சுப்பிரமணியனே யென்றும், கழறினும் - புகழ்ந்துரைத்தாலும், கொடுப்பார் இல்லை - கொடுப்பவரில்லை, பொய்கைவாவியில் - பொய்கைகளிலும் வாவிகளி

லும், மேதிபாய்-எருமைகள் பாயாநின்ற, புகலூரைப்பாடுமின்-திருப்புகலூரைப் பாடுங்கள், புலவீர்காள் - புலவர்களே, ஐயனார் அமர் - இறையனார் அமர்ந்திருக்கிற, உலகம் - சிவபுரத்தை, ஆள்வதற்கு - நீங்கள்போய் ஆள்வதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

**(பொ-ரை.)** மாதருக்கு ஒப்பற்ற மன்மதனே யென்றும், மிகுதியாகிய சிறந்த அழகுள்ள இறைவனே யென்றும், சுப்பிரமணியனே யென்றும், புகழ்ந்துரைத்தாலும் கொடுப்பவரில்லை, பொய்கைகளிலும் வாவிகளிலும் எருமைகள் பாயாநின்ற, திருப்புகலூரைப் பாடுங்கள் புலவர்களே, இறையனார் அமர்ந்திருக்கிற சிவபுரத்தை நீங்கள்போய் ஆள்வதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

**(க-ரை.)** புலவீர்காள், நீங்கள் கொடாத வுலோபரைப் பாடுதலொழிந்து திருப்புகலூரைப் பாடுங்கள்; பாடினால், சிவபுரத்தை யாள்வதற்கு யாதும் ஐயுறவில்லை யென்பதாம்.

**(வி-ரை.)** தையலார் - கைபுனையப்பட்டவர். கழறல் - சொல்லல். (10)

**செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவியசெல்வனை**
**நறவம்பூம்பொழில்நாவலூரன்வனப்பகையப்பன்சடையன்றன்**
**சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத்திவைவல்லவர்**
**அறவனாரடிசென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லையே.**

**(ப-ரை.)** செறுவினில்-வயல்களில், செழுங்கமலம் ஓங்கு-செழியதாமரை மலர்கள் மிக்கிருக்கிற, தென்புகலூர் மேவிய செல்வனை - தென்புகலூரில் வாழ்கிற பாக்யவானை, நறவம் - தேன்பெருகுகிற, பூம்பொழில் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, நாவலூரன் - திருநாவலூரையுடையவன், வனப்பகையப்பன்—, சடையன்றன் சிறுவன்—, வன்றொண்டனூரன்—, பாடியபாடல் இவைபத்தும் வல்லவர் - பாடின பாடல்களாகிய இவை பத்தினையும் கற்றுவல்லவர், அறவன் ஆர் அடி - சிவபிரானது அருமையாகிய திருவடியை, சென்று சேர்வதற்கு-சென்றடைவதற்கு, யாதும் ஐயுறவு இல்லை - சிறிதும் சந்தேகமில்லை எ-று.

**(பொ-ரை.)** வயல்களில் செழிய தாமரைமலர்கள் மிக்கிருக்கிற தென்புகலூரில் வாழ்கிற பாக்யவானை, தேன் பெருகுகிறபூஞ்சோலைகள் சூழ்ந்த திருநாவலூரையுடையவன் வனப்பகையப்பன் சடையன்றன் சிறுவன் வன்றொண்டனூரன் பாடின பாடல்களாகிய இவை பத்தினையும் கற்று வல்லவர் சிவபிரானது அருமையாகிய திருவடியை சென்றடைவதற்கு சிறிதும் சந்தேகமில்லை.

**(க-ரை.)** திருப்புகலூர்ச் சிவபிரானைச் சுந்தரன் பாடிய இப்பத்துப் பாடலும் கற்றுவல்லவர், அவ்விறைவனது திருவடியை யடைவதற்கு யாது மையுறவில்லை யென்பதாம்.

**(வி-ரை.)** செறு - வயல். (11)

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அக்கினீசுவரர். தேவியார் - கருந்தார்க்குழலியம்மை.

திருச்சிற்றம்பலம்.

## திருப்புறம்பியம்

பண் - கோல்லி

திருச்சிற்றம்பலம்

**அங்கமோதியோராறைமேற்றளிநின்றும்போந்துவந்தின்னம்பர்த்**
**தங்கினேமையுமின்னதென்றிலரீசனூரெழுநெஞ்சமே**
**கங்குலேமங்கள்கொண்டுதேவர்களேத்திவானவர்தாந்தொழும்**
**பொங்குமால்விடையேறிசெல்வப்புறம்பியந்தொழப்போதுமே.**

(ப-ரை.) அங்கம் ஓதி - வேதாங்கங்களையோதி, ஓர் - ஒப்பற்ற, ஆறை மேற்றளி நின்றும் போந்து - திருவாறை மேற்றளிநின்றும் வந்து, உவந்து - மகிழ்ந்து, இன்னம்பர் தங்கினேமையும் - திருவின்னம்பரில் தங்கின வெம்மையும், ஈசனூர் - இறைவனூர், இன்னது என்றிலர் - இன்னதென்று சொல்லிற்றிலர், (ஆதலால்) நெஞ்சமே - மனமே, கங்குல் ஏமங்கள் கொண்டு-இராக்காலங்களிலும் களிப்புக்கொண்டு, வானவர் - விண்ணவராகிய, தேவர்கள் ஏத்தி தொழும் - தேவர்கள் துதித்து வணங்குகிற, பொங்கும் - விளங்குகிற, மால் விடை ஏறி - பெரிய இடபத்தை யூர்வோனாகிய சிவபிரானது, செல்வப்புறம்பியம் - செல்வநிறைந்த திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப் போவோம் எ-று.

(பொ-ரை.) வேதாங்கங்களையோதி யொப்பற்ற திருவாறைமேற்றளி நின்றும் வந்து மகிழ்ந்து திருவின்னம்பரில் தங்கின வெம்மையும் இறைவனூர் இன்னதென்று சொல்லிற்றிலர், ஆதலால் மனமே, இராக்காலங்களிலும் களிப்புக்கொண்டு விண்ணவராகிய தேவர்கள் துதித்து வணங்குகிற விளங்குகிற பெரிய விடபத்தை யூர்வோனாகிய சிவபிரானது செல்வநிறைந்த திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(க-ரை.) நெஞ்சமே, சிவபெருமானது திருப்புறம்பியத்தை வணங்கப் போவோம் வா என்பதாம்.

(வி-ரை) வேதாங்கங்களாவன:—சந்தோபிசிதம், சோதிடம், நிகண்டு, நிருத்தம், மந்திரம், வியாகரணம் என்பன. ஆறைமேற்றளி - இன்னம்பரென்பன திருப்பதிகள். ஏமம் - களிப்பு. ஏறி - வினையாலணையும் பெயர். (1)

**பதியுஞ்சுற்றமும்பெற்றமக்களும்பண்டையரல்லாப்பெண்டிருந்**
**நிதியிலிம்மனைவாழும்வாழ்க்கையுநினைப்பொழிம்மடநெஞ்சமே**
**மதியஞ்சேர்சடைக்கங்கையானிடமகிழும்மல்லிகைசெண்பகம்**
**புதியபூமலர்ந்தெல்லிநாறும்புறம்பியந்தொழப்போதுமே.**

(ப-ரை.) பதியும் - ஊரும், சுற்றமும் - உறவினரும், பெற்றமக்களும் - பெற்ற பிள்ளைகளும், பண்டையர் அல்லா பெண்டிரும் - முன்னையரல்லாத மகளிரும், நிதி இல் - திரவியமில்லாத, இம்மனைவாழும் வாழ்க்கையும் - இந்த

இல்லறவாழ்வும், (ஆகிய இவைகளில்) நினைப்பு ஒழி - நினைவை யொழித்து விடு, மடநெஞ்சமே - மூடமனமே, மதியம்சேர்சடை - சந்திரகண்டம் பொருந்திய சடையில், கங்கையான் இடம் - கங்கையைத் தரித்தவனாகிய சிவபிரானுக்கிடமாகிய, மகிழும் மல்லிகையும் சண்பகமும் - மகிழ்தற்குக் காரணமாகிய மகிழமும் மல்லிகையும் சண்பகமும், புதிய பூமலர்ந்து - புதுப்பூமலர்ந்து, எல்லி - இராக்காலத்தில், நாறும் - மிக்குப் பரிமளிக்கிற, புறம்பியம்-திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) ஊரும் உறவினரும் பெற்ற பிள்ளைகளும் முன்னையரல்லாத மகளிரும் திரவியமில்லாத இந்த இல்லறவாழ்வுமாகிய இவைகளில் நினைவை யொழித்துவிடு, மூடமனமே, சந்திரகண்டம் பொருந்திய சடையில் கங்கையைத் தரித்தவனாகிய சிவபிரானுக்கிடமாகிய மகிழ்தற்குக் காரணமாகிய மகிழமும் மல்லிகையும் சண்பகமும் புதுப்பூமலர்ந்து இராக்காலத்தில் மிக்குப் பரிமளிக்கிற திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(க-ரை.) மூடமனமே, பதிமுதலியவற்றின் மேல்வைத்த பற்றொழிந்து, சிவபிரானது திருப்புறம்பியம் தொழப்போதும் என்பதாம்.

(வி-ரை.) மதியம் என்பதில் அம் சாரியை. (2)

**புறந்திரைந்துநரம்பெழுந்துநரைத்துநீயுரையாற்றளர்ந்**
**தறம்புரிந்துநினைப்பதாண்மையரிதுகாணிவையறிதியேற்**
**றிறம்பியாதெழுநெஞ்சமேசிறுகாலைநாமுறுவாணிபம்**
**புறம்பியத்துறைபூதநாதன்புறம்பியந்தொழப்போதுமே.**

(ப-ரை.) புறம்திரைந்து - முதுகுதிரைந்து, நரம்பு எழுந்து - நரம்புகள் தோன்றி, நரைத்து-வெள்ளைமயிருடையையாய், நீ உரையால் தளர்ந்து-நீசொல் தடுமாறி, அறம்புரிந்து நினைப்பது-அறத்தை விரும்பி நினைப்பதாகிய, ஆண்மை-ஆண்டன்மை, அரிது - அருமையாகும், இவை அறிதியேல் - இவற்றை யறிவையாயின், நெஞ்சமே - மனமே, திறம்பியாதெழு - தவறாதெழக்கடவை, சிறுகாலை - இளமைப்பருவத்திற்றானே, நாம் உறுவாணிபம் - நாம் செய்தற்குரிய வியாபாரம் இதுவேயாம், (ஆதலால்) புறம்பியத்து உறை பூதநாதன் - புறங்காட்டில்வாழ்கிற பூதநாதனது, புறம்பியம்-திருப்புறம்பியத்தை, தொழப் போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) முதுகுதிரைந்து நரம்புகள் தோன்றி வெள்ளைமயிருடையையாய் நீ சொல்தடுமாறி அறத்தைவிரும்பி நினைப்பதாகிய ஆண்டன்மை அருமையாகும், இவற்றை யறிவையாயின், மனமே தவறாதெழக்கடவை, இளமைப் பருவத்திற்றானே நாம் செய்தற்குரிய வியாபாரம் இதுவேயாம், ஆதலால் புறங்காட்டில் வாழ்கிற பூதநாதனது திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(க-ரை.) நெஞ்சமே, முதுமைவரின், செய்வதரிதாதலால், இவ்விளமையிற்றானே, சிவபிரானது திருப்புறம்பியம் தொழப்போவோம் வா வென்பதாம்.

(வி-ரை.) திறம்பித்தல் - தவறுதல். (3)

**குற்றொருவரைக்கூறைகொண்டுகொலைகள்சூழ்ந்தகலவெலாஞ்**
**செற்றொருவரைச்செய்ததீமைகளிம்மையேவருந்திண்ணமே**
**மற்றொருவரைப்பற்றிலேன்மறவாதெழும்மடநெஞ்சமே**
**புற்றரவுடைப்பெற்றமேறிபுறம்பியந்தொழப்போதுமே.**

(**ப-ரை.**) மடநெஞ்சமே - மூடமனமே, குற்று ஒருவரை - குற்றிய வொருவரது, கூறைகொண்டு - ஆடையைக்கவர்ந்து, கொலைகள் சூழ்ந்து அகல - கொலைகளையாலோசித்து நீங்க, எல்லாம்செற்று - எல்லாரையும் வருத்தி, ஒருவரைச் செய்த தீமைகள் - ஒருவருக்குச்செய்த தீங்குகள், இம்மையேவரும் - இம்மையிலேயேயுண்டாகும், திண்ணமே - சத்தியமே, மற்றொருவரைப் பற்றிலேன் - வேறொருவரைப் பற்றிலேன், மறவாதெழு — மறவாமலெழக்கடவை, புற்றரவுடை - புற்றுப்பாம்பினையுடைய, பெற்றம் ஏறி - இடபமேறுவோனது, புறம்பியம் - திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(**பொ-ரை.**) மூடமனமே, குற்றிய வொருவரது ஆடையைக் கவர்ந்து கொலைகளையாலோசித்து எல்லாரையும் வருத்தி ஒருவருக்குச் செய்த தீங்குகள் இம்மையிலேயே உண்டாகும், சத்தியமே, வேறொருவரைப் பற்றிலேன், மறவாமலெழக்கடவை, புற்றுப்பாம்பினையுடைய இடபமேறுவோனது திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(**க-ரை.**) ஒருவரைக் கொலை முதலிய செய்த தீமைப்பயன் இம்மையிற்றானே வருதல் நிச்சயமாதலால், சிவபிரானது திருப்புறம்பியந் தொழப்போவோம் வாவென்பதாம்.

(**வி-ரை.**) சூழ்தல் - எண்ணுதல். செறுதல் - வருத்துதல். தீமைகள் - தீவினைப்பயன்கள், புற்றரவு என்பதில் புற்று சாதியடை. ஏறி - வினையாலணையும் பெயர். (4)

**கள்ளிநீசெய்ததீமையுள்ளனபாவமும்பறையும்படி**
**தெள்ளிதாவெழுநெஞ்சமேசெங்கண்சேவுடைச்சிவலோகனூர்**
**துள்ளிவெள்ளிளவாளைபாய்வயற்றோன்றுதாமரைப்பூக்கள்மேற்**
**புள்ளிநள்ளிகள்பள்ளிகொள்ளும்புறம்பியந்தொழப்போதுமே.**

(**ப-ரை.**) நெஞ்சமே-மனமே, நீ கள்ளிச்செய்த தீமையுள்ளன - நீ களவிற்செய்த தீங்குகளாயுள்ளனவாகிய, பாவமும் - பாவங்களும், பறையும்படி - ஒழியும்படி, தெள்ளிதா எழு - தெளிவாயெழுந்திரு, செங்கண்சே உடை - செங்கண்ணோடு கூடிய இடபத்தை யூர்கின்ற, சிவலோகன்-சிவபுரத்தானது, ஊர்-ஊராகிய, துள்ளிவெள் இளவாளைபாய் வயல் - இளவாளைகள் துள்ளிப் பாய்கிற வயல்களில், தோன்று - முளைத்த, தாமரைப்பூக்கள்மேல் - தாமரை மலர்களின்மீது, புள்ளி நள்ளிகள் - புள்ளியையுடைய நண்டுகள், பள்ளிகொள்ளும்- தூங்குகிற, புறம்பியம் - திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) மனமே, நீ களவிற்செய்த தீங்குகளாயுள்ளனவாகிய பாவங்களும் ஒழியும்படி தெளிவாயெழுந்திரு, செங்கண்ணோடு கூடிய இடபத்தை யூர்கின்ற சிவபுரத்தானது, ஊராகிய இளவாளைகள் துள்ளிப்பாய்கிற வயல்களில் முளைத்த தாமரைமலர்களின்மீது புள்ளியையுடைய நண்டுகள் தூங்குகிற திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(க வை) நெஞ்சமே, நீ செய்த பாவமொழியும் வண்ணம் சிவபிரானது திருப்புறம்பியம் தொழப்போவோம் வாவென்பதாம்.

(வி-ரை.) கள்ளி - களவுசெய்து. பறைதல் - ஒழிதல். நள்ளி-நண்டு. (5)

**படையெலாம்பகடாரவாளினும்பவ்வஞ்சூழ்ந்தரசாளினுங்**
**கடையெலாம்பிணைத்தேரைவால்கவலாதெழுமடநெஞ்சமே**
**மடையெலாங்கழுநீர்மலர்ந்துமருங்கெலாங்கரும்பாடத்தேன்**
**புடையெலாமணநாறுசோலைப்புறம்பியந்தொழப்போதுமே.**

(ப-ரை.) மடநெஞ்சமே - மூடமனமே, படை யெல்லாம் - படைகளெல்லாவற்றையும், பகடு ஆர ஆளினும் - பெருமைபொருந்த ஆண்டாலும், பவ்வம் சூழ்ந்து அரசு ஆளினும் - கடல்சூழ்ந்த இந் நிலவுலகமுழுதும் ஆண்டாலும், எல்லாம்-இவை யாவும், கடை-இறுதியில், பிணைதேரைவால் - பிணைத்த தேரை வால்போல்வனவேயாம், (ஆதலால்) கவலாது எழு - நீ கவலைப்படாதெழக் கடவை, மடையெல்லாம் கழுநீர் மலர்ந்து-மடைகளிலெல்லாம் கழுநீர் மலர்ந்து, மருங்கு எல்லாம் கரும்பு ஆட - அயலிலெல்லாம் கரும்புகள் அசைய, தேன் புடையெல்லாம் மணம் நாறு சோலை - தேனுள்ள இடங்களெல்லாம் வாசனை வீசுகின்ற சோலைகள் சூழ்ந்த, புறம்பியம் - திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) மூடமனமே, படைகளெல்லாவற்றையும் பெருமை பொருந்த ஆண்டாலும், கடல்சூழ்ந்த இந்நிலவுலகமுழுதும் ஆண்டாலும், இவை யாவும் இறுதியில், பிணைத்த தேரை வால்போல்வனவேயாம் ஆதலால், நீ கவலைப்படாதெழக்கடவை, மடைகளிலெல்லாம் கழுநீர் மலர்ந்து அயலிலெல்லாம் கரும்புகளசைய, தேனுள்ள விடங்களெல்லாம் வாசனை வீசுகின்ற சோலைகள் சூழ்ந்த திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(க-ரை.) மூடமனமே, சதுரங்கசேனைகளையுடையராய் நிலவுலக முழுதுமாண்டாலும் இறுதியில் ஒன்றுமின்றி யொழியுமாதலால், சிவபிரானது திருப்புறம்பியத்தை தொழப்போவோம் வாவென்பதாம்.

(வி-ரை.) படை - சேனை. தேரைவால் - தவளைவால். கவலல் - கவலைப்படல். ஆட - ஆலையாடவெனினுமாம். (6)

**முன்னைச்செய்வினையிம்மையில்வந்துமூடுமாதலின்முன்னமே**
**பென்னைநீநியங்கா தெழும்மடநெஞ்சமேயெந்தைதந்தையூர்**
**அன்னச்சேவலோடூடிப்பேடைகள் கூடிச்சேருமணிபொழிற்**
**புன்னைக்கன்னிகழிக்கணாறும்புறம்பியந்தொழப்போதுமே.**

(ப-ரை.) மடநெஞ்சமே-மூடமனமே, முன்னைச் செய்வினை - முன்செய்த தீவினை, இம்மையில்வந்து மூடும் ஆதலின் - இப்பொழுது வந்து கவ்வுமாதலால், முன்னமே - முன்னேதானே, என்னை-எம்மை, நீ தியங்காது - நீ மயங்காமல், எழு — எழக்கடவை, எந்தை தந்தை ஊர் - எந்தை தந்தையாகிய சிவபெருமானது ஊராகிய, அன்னச்சேவலொடு - ஆணன்னத்துடன், ஊடி-பிணங்கி, பேடைகள் - பெட்டையன்னங்கள், கூடிச்சேரும் - கூடிக் குலாவுகிற, அணிபொழில் - அழகிய சோலைகளும், புன்னைக்கன்னி-இளம் புன்னைகளும், கழிக்கண்ணாறும் - கழியருகே பரிமளிக்கின்ற, புறம்பியம்-திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) மூடமனமே, முன்செய்த தீவினை யிப்பொழுது வந்து கவ்வுமாதலால் முன்னேதானே எம்மை நீ மயங்காமல் எழக்கடவை, எந்தை தந்தையாகிய சிவபெருமானது ஊராகிய, ஆணன்னத்துடன் பிணங்கி பெட்டையன்னங்கள் கூடிக் குலாவுகிற அழகிய சோலைகளும் இளம்புன்னைகளும் கழியருகே பரிமளிக்கின்ற திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(கு-ரை.) மூடமனமே, முற்செய்த வினைப்பயன்கள், இம்மையில் வந்து நம்மை மூடுமாதலால், அவை வந்து மூடுமுன்னே, யாம் சிவபிரானது திருப்புறம்பியம் தொழப்போவோம் என்பதாம்.

(வி-ரை.) முன்னை - முற்பிறப்பு. இம்மை - இப்பிறப்பு. தியக்கல் - மயக்கல். (7)

**மலமெலாமறுமிம்மையேமறுமைக்கும்வல்வினைசார்கிலா**
**சலமெலாமொழிநெஞ்சமேயெங்கள்சங்கரன்வந்துதங்குமூர்**
**கலமெலாங்கடன்மண்டுகாவிரிநங்கையாடியகங்கைநீர்**
**புலமெலாமண்டிப்பொன்விளைக்கும்புறம்பியத்தொழப்போதுமே.**

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, இம்மையே - இம்மையிலேயே, மலம் எல்லாம் அறும் - மலமுழுதும் அற்றுப்போகும், மறுமைக்கும் - மறுமையிலும், வல்வினை சார்கிலா - வலிய வினைகள் சேரமாட்டா, (ஆதலால்) சலம் எல்லாம் உன் சலமுழுதும், ஒழி - ஒழித்துவிடு, எங்கள் சங்கரன் வந்து தங்கும் ஊர் - எமது சிவபிரான் வந்து தங்கும் ஊராகிய, கலம் எல்லாம் - மரக்கலங்களெல்லாம், கடல் மண்டு - கடலிற்போல நெருங்கிய, காவிரிநங்கை ஆடிய - காவிரியாகிய பெண்ணாடிய, கங்கைநீர்-கங்கைநீரானது, புலம் எல்லாம் மண்டி-வயல்களெல்லாம் நிறைந்து, பொன்விளைக்கும் - பொன்னை விளைவிக்கிற, புறம்பியம் - திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) மனமே, இம்மையிலேயே மலமுழுதும் அற்றுப்போகும், மறுமையிலும் வலிய வினைகள் சேரமாட்டாவாதலால் உன் சலமுழுதும் ஒழித்துவிடு, எமது சிவபிரான் வந்து தங்கும் ஊராகிய மரக்கலங்களெல்லாம் கடலிற்போல நெருங்கிய காவிரியாகிய பெண்ணாடிய கங்கை நீரானது வயல்களிலெல்

லாம் நிறைந்து பொன்னை விளைவிக்கிற திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(கு-ரை.) நெஞ்சமே, இம்மை மறுமைகளில் நமக்கு நன்மையுண்டாகுமாதலால், யாம் சிவபெருமானது திருப்புறம்பியம் தொழப்போவோம் வாவென்பதாம்.

(வி-ரை.) மலம் - களங்கம். கலம் - மரக்கலம் (கப்பல்), மண்டுதல் - நெருங்குதல். புலம் - இடமெனினுமாம். (8)

**பண்டரியனசெய்ததீமையும்பாவமும்பறையும்படி**
**கண்டரியனகேட்டியேற்கவலாதெழுமடநெஞ்சமே**
**தொண்டரியனபாடித்துள்ளிநின்றாடிவானவர்தாந்தொழும்**
**புண்டரீகமலரும்பொய்கைப்புறம்பியந்தொழப்போதுமே.**

(ப-ரை.) மடநெஞ்சமே - மூடமனமே, பண்டு-முன்னே, அரியன-அரியனவாக, செய்த - யாம் செய்த, தீமையும் பாவமும் பறையும்படி - தீங்கும் பாவமும் ஓடும்படி, கண்டு அரியன - கண்டிலாதவற்றை, கேட்டியேல் - கேட்பாயாயின், கவலாது எழு - கவலாமலே யெழு, தொண்டு அரியன பாடி - அரியன வாகிய தொண்டுகளைப் பாடி, துள்ளிநின்று ஆடி - குதித்து நின்றாடி, வானவர் தொழும் - தேவர்கள் வணங்குகிற, புண்டரீகம் மலரும் பொய்கை - தாமரைமலரும் தடங்கள் சூழ்ந்த, புறம்பியம் திருப்புறம்பியத்தை, தொழப்போதும் - வணங்கப்போவோம் எ-று.

(பொ-ரை.) மூடமனமே, முன்னே யரியனவாக யாம் செய்த தீங்கும் பாவமும் ஓடும்படி கண்டிலாதவற்றை கேட்பாயாயின், கவலாமலே யெழு அரியனவாகிய தொண்டுகளைப் பாடி குதித்து நின்றாடி தேவர்கள் வணங்குகிற தாமரைமலரும் தடங்கள் சூழ்ந்த திருப்புறம்பியத்தை வணங்கப்போவோம்.

(கு-ரை.) மூடமனமே, முன்னே யாம் செய்த தீமையும் பாவமு மோடும்படி சிவபெருமானது திருப்புறம்பியத்தை வணங்கப்போவோமென்பதாம்.

(வி-ரை.) பண்டு - பூர்வம். (முற்பிறப்பு) கேட்டியேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. (9)

**துஞ்சியும்பிறந்துஞ்சிறந்துந்துயக்கறாதமயக்கிவை**
**யஞ்சியூரன்திருப்புறம்பியத்தப்பனைத்தமிழ்ச்சீரினால்**
**நெஞ்சினாலேபுறம்பியந்தொழுதுய்துமென்றுநினைத்தன**
**வஞ்சியாதுரைசெய்யவல்லவர்வல்லவானுலகாள்வரே.**

(ப-ரை.) துஞ்சியும் - இறந்தும், பிறந்தும் - பிறந்தும், சிறந்தும் - உயர்ந்தும், துயக்கு அறாத - தொடக்கறாத, மயக்கு இவை - மயக்கமாகிய இவைகளை, அஞ்சி - பயந்து, ஊரன் - சுந்தரன், திருப்புறம்பியத்து அப்பனை - திருப்புறம்பியத்தப்பனை, தமிழ்ச்சீரினால் சிறப்பையுடைய தமிழ்மொழியால், நெஞ்சிலே-

மனத்திலே, புறம்பியம் தொழுது - திருப்புறம்பியத்தை வணங்கி, உய்தும் என்று நினைத்தன - உய்வோமென்று நினைத்தனவாகிய பாடல்களை, வஞ்சியாது உரைசெய்ய வல்லவர் - வஞ்சனையற்றுச் சொல்ல வல்லவர், வல்லை வானுலகு ஆள்வர்-விரைவில் விண்ணுலகையாள வல்லவராவர் எ-று.

**(பொ-ரை.)** இறந்தும் பிறந்தும் உயர்ந்தும் தொடக்கறுத மயக்கமாகிய இவைகளைப் பயந்து சுந்தரன் திருப்புறம்பியத் தப்பனைத் தமிழ்ச்சீரினால் மனத்திலே திருப்புறம்பியத்தை வணங்கி உய்வோமென்று நினைத்தனவாகிய பாடல்களை வஞ்சனையற்றுச் சொல்ல வல்லவர் விரைவில் விண்ணுலகையாள வல்லவராவர்.

**(கு-ரை.)** திருநாவலூரன் தன் மனத்தைநோக்கி, யாம் உய்யவேண்டிச் சிவபிரானது திருப்புறம்பியத்தைத் தொழப்போவோம் என்றழைத்த இப் பத்துப் பாடலும் கற்று வல்லவர் வானுலகாள்வர் என்பதாம்.

**(வி-ரை.)** துஞ்சல் - இறத்தல். வல்லை - விரைவில். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சாக்ஷிவரதநாதர். தேவியார் - கரும்பன்னசொல்லம்மை.

## திருப்பைஞ்ஞீலி

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**காருலாவியநஞ்சையுண்டிருள்கண்டர்வெண்டலையோடுகொண்**
**டூரெலாந்திரிந்தென்செய்வீர்பலியோரிடத்திலேகொள்ளுநீர்**
**பாரெலாம்பணிந்தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்**
**ஆரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்கரே.**

**(ப-ரை.)** கார் உலாவிய-கருநிறம்பொருந்திய, நஞ்சைஉண்டு - விஷத்தை யுண்டு, இருள் - இருண்ட, கண்டர் - கண்டத்தையுடையவராகிய, நீர் - தேவரீர், வெண்டலை யோடுகொண்டு - வெள்ளிய தலையோட்டைக்கொண்டு, ஊர் எல்லாம் திரிந்து என்செய்வீர் - ஊர்கடோறும் திரிந்து என்னசெய்வீர், பலி - பிக்ஷையை, ஓரிடத்திலே கொள்ளும் - ஓரிடத்திற்போயிரக்கிற, பைஞ்ஞீலியீர் - திருப்பைஞ்ஞீலியை யுடையவரே, உம்மையே - தேவரீரையே, பார் எல்லாம் - உலகெல்லாம், பணிந்து பரவிக்கருதும் - வணங்கித் துதித்து வாழ்த்தா நின்றது, ஆரணீயவிடங்கரே - ஆரணீயவிடங்கரே, (உமக்கு) ஆரம் ஆவது - ஆரமாயிருப்பது, நாகமோ - பாம்போ, சொல்லும் - சொல்லக்கடவீர் எ-று.

**(பொ-ரை.)** கருநிறம்பொருந்திய விஷத்தையுண்டு இருண்ட கண்டத்தை யுடையவராகிய தேவரீர், வெள்ளிய தலையோட்டைக்கொண்டு ஊர்கடோறும்

திரிந்து என்னசெய்வீர், பிக்ஷையை யோரிடத்திற்போயிரக்கிற திருப்பைஞ்ஞீலியையுடையவரே, தேவரீரையே உலகெல்லாம் வணங்கித்துதித்து வாழ்த்தா நின்றது, ஆரணீயவிடங்கரே உமக்கு ஆரமாயிருப்பது பாம்போ சொல்லக்கடவீர்.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலிச் சிவபெருமானே, நீர் தலையோடுகொண்டு உலகெலாந்திரிந்து பலியேற்கிறீர், இது என்ன காரியம், ஓரிடத்திற்றானே பிக்ஷையேற்கலாகாதா, உமக்கு ஆரமாயிருப்பது பாம்புதானோ, சொல்லும் என்பதாம்.

(வி-ரை.) இருள் - வினைத்தொகை. பார் - ஆகுபெயர். (1)

**சிலைத்துநோக்கும்வெள்ளேறுசெந்தழல்வாயபாம்பதுமூசெனும்**
**பலிக்குநீர்வரும்போதுநங்கையிற்பாம்புவேண்டாபிரானிரே**
**மலைத்தசந்தொடுவேங்கைகோங்கமுமன்னுகாரகில்சண்பகம்**
**அலைக்கும்பைம்புனல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) மலைத்த - மலையிலுள்ள, சந்தொடு - சந்தநமரத்தோடு, வேங்கை, கோங்கமும், மன்னுகார் அகில், சண்பகமும்—, (இவற்றை) அலைக்கும்-அலைத்துக்கொண்டு வருகிற, பைம்புனல்சூழ் - பசுமையாகிய நீரினாற் சூழப்பெற்ற, பைஞ்ஞீலியில் - திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளியிருக்கிற, ஆரணீயவிடங்கரே-ஆரணீயவிடங்கரே, வெள் ஏறு-(உமது) வெள்விடை, சிலைத்து நோக்கும்-சிலைத்துப் பார்க்கும், செம்தழல்வாய-செந்தழல்போலும் வாயினையுடைய, பாம்பு- பாம்பு, மூசு என்னும் - சீறுநிற்கும், (ஆதலால்) நீர் பலிக்கு வரும்போது - நீர் பிக்ஷைக்குவரும்போது, நும் கையில் பாம்புவேண்டா-உமது கையிற் பாம்பு வேண்டுவதில்லை, பிரானீரே - பெருமானுரே எ-று.

(பொ-ரை.) மலையிலுள்ள சந்தநமரத்தோடு வேங்கை கோங்கமும் மன்னு கார் அகில் சண்பகமும், இவற்றை அலைத்துக்கொண்டு வருகிற பசுமையாகிய நீரினாற் சூழப்பெற்ற திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளி யிருக்கிற ஆரணீய விடங்கரே, உமது வெள்விடை சிலைத்துப் பார்க்கும் செந்தழல்போலும் வாயினை யுடைய பாம்பு சீறுநிற்கும் (ஆதலால்) நீர் பிக்ஷைக்கு வரும்போது உமது கையில் பாம்பு வேண்டுவதில்லை, பெருமானுரே.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளியிருக்கிற ஆரணீய விடங்கரே, நீர் இனி பலிக்கு வரும்போது, வெள்ளேறும் பாம்புமின்றி வரக்கடவீ ரென்பதாம்.

(வி-ரை.) மலைத்த - மலைத்து என்னும் குறிப்பு வினைமுற்று அடியாகப் பிறந்த பெயரெச்சம். இது சந்து என்பதைக்கொண்டு முடிந்தது. சிலைத்தல் - ஒலித்தல் (ஆரவாரித்தல்). (2)

**தூயவர்கண்ணும்வாயுமேனியுந்துன்னவாடைசுடலையிற்**
**பேயொடாடலைத்தவிருநீரொருபித்தரோவெம்பிரானிரே**
**பாயுநீர்க்கிடங்கார்கமலமும்பைந்தண்மாதவிபுன்னையும்**
**ஆயபைம்பொழில்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரே.**

**(ப-ரை.)** கண்ணும் வாயும் மேனியும் தூயவர் - கண்ணும் வாயும் மேனியும் தூய்மையாயிருக்கப்பெற்றவர், துன்னஆடை - தைத்த ஆடையுடன், சுடலையில் - மயானத்தில், பேயோடு ஆடலை-பேய்களுடன் ஆடுதலை, தவிரும் - விட்டுவிடும், நீர் ஒரு பித்தரோ - நீர் ஒரு பித்தர்தாமோ, எம்பிரானீரே - எம்பெருமானரே, பாயும் நீர்கிடங்கு—பாய்கின்ற நீரையுடைய அகழிகளில், ஆர் - நிறைந்த, கமலமும் - தாமரையும், பைதண்மாதவி புன்னையும் - பசுமையும் குளிர்ச்சியுமுள்ள குருக்கத்தியும் புன்னையும், ஆய - உண்டாயிருக்கிற, பைம்பொழில்சூழ் - பசிய சோலைகள் சூழ்ந்த, பைஞ்ஞீலியில் - திருப்பைஞ்ஞீலியி லிருக்கிற, ஆரணீயவிடங்கரே - ஆரணீயவிடங்கரே எ-று.

**(போ-ரை.)** கண்ணும் வாயும் மேனியும் தூய்மையாயிருக்கப் பெற்றவர் தைத்த ஆடையுடன் மயானத்தில் பேய்களுடனாடுதலை விட்டுவிடும், நீர் ஒரு பித்தர் தாமோ, எம்பெருமானரே, பாய்கின்ற நீரையுடைய அகழிகளில் நிறைந்த தாமரையும் பசுமையும் குளிர்ச்சியுமுள்ள குருக்கத்தியும் புன்னையு முண்டாயிருக்கிற பசிய சோலைகள் சூழ்ந்த திருபைஞ்ஞீலியி லிருக்கிற ஆரணீய விடங்கரே.

**(க-ரை.)** திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளியிருக்கிற ஆரணீயவிடங்கரே, நீர் சுடலையில் பேயோடாடுவதை விட்டுவிடும், நீர் பித்தரோ வென்பதாம்.

**(வி-ரை.)** மேனி-திருமேனி. தூயவர் - பரிசுத்தர். துன்னம் - தைத்தல். தவிர்தல் - விடுதல். மாதவி - குருக்கத்தி. (3)

**செந்தமிழ்த்திறம்வல்லிரோசெங்கணரவமுன்கையிலாடவே**
**வந்துநிற்குமிதென்கொலோபலிமாற்றமாட்டோமிடுகிலோம்**
**பைந்தண்மாமலருந்துசோலைகள்கந்தநாறுபைஞ்ஞீலியீர்**
**அந்திவானமுமேனியோசொல்லுமாரணீயவிடங்கரே.**

**(ப-ரை.)** செந்தமிழ்த்திறம் வல்லிரோ - நீர் செந்தமிழ் வகையில் வல்லவரோ, செங்கண் அரவம் - செங்கட்பாம்பு, முன்கையில் ஆட-முன்னங்கையில் ஆடாநிற்க, வந்து நிற்கும் இது - வந்து நிற்கிற இச்செய்கை, என் கொலோ - யாதுகொலோ, பலி மாற்றமாட்டோம் - பிச்சை யில்லை யென்னோம், இடுகிலோம் - இடவுமாட்டோம், பைதண் மாமலர் - பசியதண்ணிய அழகிய மலர்களை, உந்து சோலைகள் - உதிர்க்கின்ற சோலைகள், கந்தம்நாறு - பரிமளம் வீசுகிற, பைஞ்ஞீலியீர் - திருப்பைஞ்ஞீலியில் வாழ்பவரே, அந்திவானம் உம் மேனியோ - உமது திருமேனி அந்திவானந்தானோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே - ஆரணீயவிடங்கரே எ-று.

**(போ-ரை.)** நீர் செந்தமிழ் வகையில் வல்லவரோ, செங்கட்பாம்பு முன்னங்கையில் ஆடாநிற்க வந்துநிற்கிற இச்செய்கை யாதுகொலோ, பிச்சையில்லை யென்னோம், இடவுமாட்டோம் பசியதண்ணிய அழகிய மலர்களை உதிர்க்கின்ற சோலைகள் பரிமளம் வீசுகிற திருப்பைஞ்ஞீலியில் வாழ்பவரே, உமது திருமேனி அந்திவானந்தானோ சொல்லக்கடவீர் ஆரணீய விடங்கரே.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலியில் ஆரணீயவிடங்கரே, உமது முன்கையில் பாம்பு ஆடவந்து நிற்கிற இது என்னகாரியம் சொல்லும் என்பதாம்.

(வி-ரை.) உந்தல் - உதிர்த்தல். கந்தம் - வடசொல், (நறுநாற்றம்.) அந்தி வானம் - செவ்வானம். (4)

**நீறுநந்திருமேனிநித்திலநீணெடுங்கண்ணினாளொடுங்**
**கூறராய்வந்துநிற்றிராற்கொணர்ந்திடுகிலோம்பலிநடமினோ**
**பாறுவெண்டலைகையிலேந்திப்பைஞ்ஞீலியேனென்றீரடிகணீர்**
**ஆறுதாங்கியசடையரோசொல்லுமாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) நீறுநும் திருமேனிநித்திலம் - நீறணிந்த வுமது திருமேனி முத்துப்போலும், நீள் நெடுங்கண்ணினாளொடும் - உமாதேவியுடன், கூறராய் - பங்கினராகி, வந்து நிற்றிர் - வந்து நிற்கின்றீர், ஆல் - ஆதலால், பலிகொணர்ந்து இடுகிலோம்-பிக்ஷைகொண்டுவந்து இடமாட்டோம், நடமின் - போம், பாறு - பருந்துகள் மொய்க்கிற, வெள்தலை கையில் ஏந்தி - வெண்டலையைக் கையிலேந்தி, பைஞ்ஞீலியேன் என்றீர்-திருப்பைஞ்ஞீலியையுடையேனென்றீர்,அடிகணீர்-சுவாமியீர், ஆறுதாங்கிய சடையரோ - கங்கையைச்சுமந்த சடையினரோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே - ஆரணீயவிடங்கரே. எ-று.

(பொ-ரை.) நீறணிந்த வுமது திருமேனி முத்துப்போலும், உமாதேவியுடன் பங்கினராகி வந்து நிற்கின்றீர் ஆதலால், பிக்ஷைகொண்டு வந்து இடமாட்டோம் போம், பருந்துகள் மொய்க்கிற வெண்டலையைக் கையிலேந்தி திருப்பைஞ்ஞீலியையுடையே னென்றீர், சுவாமியீர், கங்கையைச் சுமந்த சடையினரோ சொல்லக்கடவீர் ஆரணியவிடங்கரே.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலியில் ஆரணீயவிடங்கரே, நீர் உமாதேவி பங்கராய் வந்து நிற்கின்றீராதலால் உமக்குப் பலியிடமாட்டோம், போம் என்பதாம்.

(வி-ரை.) கூறு - பங்கு. ஆறு - கங்காநதி. (5)

**குரவநாறியகுழலினார்வளைகொள்வதேதொழிலாகிநீர்**
**இரவுமிம்மனையறிதிரேயிங்கேநடந்துபோகவும்வல்லிரே**
**பரவிநாடொறும்பாடுவார்வினைபற்றறுக்கும்பைஞ்ஞீலியீர்**
**அரவமாட்டவும்வல்லிரோசொல்லுமாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) குரவம் - குராமலர்கள், நாறிய - பரிமளிக்கிற, குழலினார் - கூந்தலையுடையவராகிய மாதரது, வளைகொள்வதே - வளையலைக்கவர்வதே, தொழில் ஆகி - வேலையாகி, நீர் இரவும் - நீர் இராக்காலத்திலும், இம்மனை அறிதிரே - இந்த வீட்டையறிகின்றீரோ, இங்கே நடந்து போகவும் வல்லீரே - இங்கு நின்றும் நடந்துபோகவும் வல்லீரோ, பரவி - துதித்து, நாள்தொறும் - தினந்தோறும், பாடுவார் - பாடுவோரது, வினை - வினையை, பற்றறுக்கும் - பற்றறுக்கிற, பைஞ்ஞீலியீர் - திருப்பைஞ்ஞீலியில் வாழ்பவரே, அரவம் ஆட்டவும் வல்

விரோ - பாம்பாட்டவும் வல்லிரோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீய விடங்கரே - ஆரணீயவிடங்கரே எ-று.

(போ-ரை.) குராமலர்கள் பரிமளிக்கிற கூந்தலையுடையவராகிய மாதரது வளையலைக் கவர்வதே வேலையாகி நீர் இராக்காலத்திலும் இந்த வீட்டை யறிகின்றீரே, இங்கு நின்றும் நடந்துபோகவும் வல்லிரோ, துதித்து தினந்தோறும் பாடுவோரது வினையை பற்றறுக்கிற திருப்பைஞ்ஞீலியில் வாழ்பவரே, பாம்பாட்டவும் வல்லிரோ, சொல்லக்கடவீர் ஆரணீயவிடங்கரே.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலியில் ஆரணீயவிடங்கரே, நீர் மாதரது வளையலைக் கவர்வதே தொழிலாகி, இரவிலும் வருகின்றீர், நீர் பாம்பாட்டவும் வல்லீரோ என்பதாம்.

(வி-ரை.) பற்றறுத்தல் - வேரோடறுத்தல். (6)

**ஏடுலாமலர்க்கொன்றைசூடுதிரென்பெலாமணிந்தென்செய்வீர்**
**காடுநம்பதிபோடுகையதுகாதல்செய்பவர்பெறுவதென்**
**பாடல்வண்டிசையாலுஞ்சோலைப்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால்**
**ஆடல்பாடலும்வல்லிரோசொல்லுமாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) ஏடு உலாம் - இதழ்களையுடைய, மலர்க்கொன்றை சூடுதிர் - கொன்றைமலரைச் சூடுவீர், என்பு எல்லாம் அணிந்து என்செய்வீர் - எலும்பெல்லாமணிந்து யாதுசெய்வீர், நம்பதி - நமதிடம், காடு-சுடுகாடே, கையது- நமது கையிலுள்ளது, ஓடு - ஓடே, காதல்செய்பவர் - உம்மிடத்தன்பு செய்வோர், பெறுவது என் - பெறுவதுயாது, வண்டு பாடல் இசை - வண்டுகள் பாட்டுப் பாடுகிற, ஆலும்சோலை - அசையாநின்ற சோலைகள் சூழ்ந்த, பைஞ்ஞீலியேன் என்று - திருப்பைஞ்ஞீலியை யுடையேனென்று, நிற்றிர் - நிற்கின்றீர், ஆல் - ஆதலால், ஆடல்பாடலும் வல்லிரோ - ஆடல் பாடல்களிலும் வல்லவரோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே - ஆரணீயவிடங்கரே எ-று.

(போ-ரை.) இதழ்களையுடைய கொன்றைமலரைச் சூடுவீர், எலும்பெல்லாமணிந்து யாதுசெய்வீர், நமதிடம் சுடுகாடே, நமது கையிலுள்ளது ஓடே, உம்மிடத்தன்புசெய்வோர் பெறுவது யாது, வண்டுகள் பாட்டுப்பாடுகிற அசையாநின்ற சோலைகள் சூழ்ந்த பைஞ்ஞீலியை யுடையேனென்று நிற்கின்றீர், ஆதலால் ஆடல் பாடல்களிலும் வல்லவரோ சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலியில் ஆரணீயவிடங்கரே, நமதிடம் காடு, நம் கையது ஓடு, உம்மைக் காதலிப்பவர் பெறுவது யாதென்பதாம்.

(வி-ரை.) ஆலல் - அசைதல். (7)

**மத்தமாமலர்க்கொன்றைவன்னியுங்கங்கையாளொடுதிங்களு**
**மொய்த்தவெண்டலைகொக்கிறகொடுவெள்ளெருக்கமுஞ்சடையதா**
**பத்தர்சித்தர்கள்பாடியாடும்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால் [ம்**
**அத்தியீருரிபோர்த்திரோசொல்லுமாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) மத்தம் மாமலர் கொன்றை வன்னியும் கங்கையாளொடு திங்களும் - ஊமத்தை கொன்றை வன்னியிலை கங்கைபிறை ஆகிய இவற்றுடனே, மொய்த்த வெள்தலை-நெருங்கிய வெண்டலை, கொக்கிறகொடு—, வெள்ளெருக்கும் - வெள்ளெருக்கும், உன்சடையவாம் - உன்சடைமேலிருப்பனவாம், பத்தர் சித்தர்கள் — பத்தர்சித்தர்கள், பாடியாடும் - பாடியாடாநிற்கும், பைஞ்ஞீலியேன் என்று - பைஞ்ஞீலியையுடையேனென்று, நிற்றிர் - நிற்கின்றீர், ஆல் - ஆதலால், அத்தி - யானையின், ஈர் உரி போர்த்திரோ குளிர்ந்த தோலைப் போர்த்தீரோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே - ஆரணீய விடங்கரே எ-று.

(பொ-ரை.) ஊமத்தை கொன்றை வன்னியிலை கங்கைபிறையாகிய இவற்றுடனே, நெருங்கிய வெண்டலை கொக்கிற கொடு வெள்ளெருக்கும் உன்சடைமேலிருப்பனவாம், பத்தர் சித்தர்கள் பாடியாடாநிற்கும் பைஞ்ஞீலியையுடையேனென்று நிற்கின்றீராதலால், யானையின் குளிர்ந்த தோலைப் போர்த்திரோ சொல்லக்கடவீர் ஆரணீயவிடங்கரே.

(க-ரை.) ஆரணீய விடங்கரே, கொன்றைமலர் முதலியவற்றையுடையீர், நீர் யானைத்தோலையும் போர்த்துக் கொள்வீரோ வென்பதாம்.

(வி-ரை.) அத்தி-ஹஸ்தியென்னும் வடசொற்றிரிபு. துதிக்கையையுடையதென்பது பொருள். (8)

**தக்கைதண்ணுமைதாளம்வீணை தகுணிச்சங்கிளைசல்லரி**
**கொக்கரைகுடமுழவினோடிசைகூடிப்பாடநின்றாடுவீர்**
**பக்கமேகுயில்பாடுஞ்சோலைப்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால்**
**அக்குமாமையும்பூண்டிரோசொல்லுமாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) தக்கை தண்ணுமை தாளம் வீணை தகுணிசங்கு இளை சல்லரி கொக்கரை குடமுழவினோடு—, இசைகூடி பாடநின்று ஆடுவீர் - இசை கலந்து பாடநின்று ஆடாநின்றீர், பக்கம் - பக்கத்தில், குயில் பாடும் சோலை - குயில் பாடும் சோலைசூழ்ந்த, பைஞ்ஞீலியேனென்று நிற்றீர் ஆல் - பைஞ்ஞீலியையுடையேனென்று நிற்கின்றீர் ஆதலால், அக்கும் - அக்குமாலையையும், ஆமையும் - ஆமையோட்டையும், பூண்டிரோ - பூணுதிரோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே - ஆரணீயவிடங்கரே எ-று.

(பொ-ரை.) தக்கை தண்ணுமை தாளம் வீணை தகுணி சங்கு இளை சல்லரி கொக்கரை குடமுழவினோடு இசைகலந்து பாடநின்று ஆடாநின்றீர், பக்கத்தில் குயில்பாடும் சோலை சூழ்ந்த பைஞ்ஞீலியை யுடையேனென்று நிற்கின்றீர், ஆதலால் அக்குமாலையையும் ஆமையோட்டையும் பூணுதிரோ, சொல்லக்கடவீர் ஆரணீயவிடங்கரே.

(க-ரை.) தக்கை முதலிய வாத்தியங்கள் முழங்க நின்றாடுவீர், பைஞ்ஞீலியேனென்று நிற்றிர், அக்கும் ஆமையும் பூணுதிரோ, சொல்லும், ஆரணீய விடங்கரே யென்பதாம்.

(வி-ரை.) தக்கைமுதலியன - வாத்திய விசேடங்கள். அக்கு - சங்குமணி. ஆமை - ஆகுபெயர். (ஆமையோடு.) (9)

**கையோர்பாம்பரையார்த்தோர்பாம்புகழுத்தோர்பாம்பவைபின்பு**
**மெய்யெலாம்பொடிக்கொண்டுபூசுதிர்வேதமோதுதிர்கீதமும்[தாழ**
**பையவேவிடங்காகநின்றுபைஞ்ஞீலியேனென்றீரடிகணீர்**
**ஐயமேற்குமிதென்கொலோசொல்லுமாரணீயவிடங்கரே.**

(ப-ரை.) கை - கையில், ஓர் பாம்பு - ஒரு பாம்பு, ஓர் பாம்பு அரை ஆர்த்து - ஒரு பாம்பை அரையிற்கட்டி, கழுத்து-கண்டத்தில், ஓர் பாம்பு-ஒருபாம் பணிந்து, அவை பின்புதாழ - அவை பின்னேதொங்க, மெய் எல்லாம் - திருமேனிமுழுதும், பொடிகொண்டு பூசுதிர் - திருநீறுகொண்டு பூசாநின்றீர், வேதமும் கீதமும் ஓதுதிர் - வேதத்தையும் கீதத்தையும் ஓதாநின்றீர், பைய - மெல்ல, விடங்காகநின்று - அழகாக நின்று, பைஞ்ஞீலியேன் என்றீர் - பைஞ்ஞீலியையுடையேனென்கிறீர், அடிகணீர் - சுவாமிகளாகிய நீர், ஐயம் ஏற்கும் இது என்கொலோ - பிக்ஷையேற்கிற இத்தொழிற்குக் காரணம் யாதோ, சொல்லும் - சொல்லக்கடவீர், ஆரணீய விடங்கரே - ஆரணீய விடங்கரே எ-று.

(பொ-ரை.) கையில் ஒருபாம்பு, ஒருபாம்பை அரையிற்கட்டி கண்டத்தில் ஒரு பாம்பணிந்து, அவைபின்னே தொங்க, திருமேனிமுழுதும் -திருநீறுகொண்டு பூசாநின்றீர், வேதத்தையும் கீதத்தையும் ஓதாநின்றீர், மெல்ல அழகாக நின்று பைஞ்ஞீலியையுடையே னென்கிறீர், சுவாமிகளாகிய நீர், பிக்ஷையேற்கிற இத்தொழிற்குக் காரணம் யாதோ சொல்லக்கடவீர், ஆரணீயவிடங்கரே.

(க-ரை.) கை முதலிய இடங்களில் பாம்பணிகின்றீர், மெய்யில் பொடி பூசுகின்றீர், வேதகீதங்கள் பாடுகின்றீர், பைஞ்ஞீலியேன் என்றீர், நீர் ஐயமேற்பது யாதுக்கு என்பதாம்.

(வி-ரை.) ஆர்த்தல் - கட்டல். தாழ்தல் - தொங்குதல். பொடி - திருநீறு. விடங்கம் - அழகு அது விடங்கு என ஈறு தொகுத்தலாயிற்று. (10)

**அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரை [சொல்**
**மின்னும்நுண்ணிடைமங்கைமார்பலர்வேண்டிக்காதல்மொழிந்த**
**மன்னுதொல்புகழ்நாவலூரன்வன்றொண்டன்வாய்மொழிபாடல்பத்**
**துன்னியின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே.**

(ப-ரை.) அன்னம் சேர்வயல் சூழ் - அன்னங்கள் சேர்ந்த வயல்சூழ்ந்த, பைஞ்ஞீலியில் - திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளியிருக்கின்ற, ஆரணீயவிடங்கரை - ஆரணீயவிடங்கரை, மின்னும் - மின்னுகிற, நுண் இடை - நுண்ணிய இடையையுடைய, மங்கைமார்பலர் - பலமாதர், வேண்டி - பிரார்த்தித்து, காதல் - ஆசையால், மொழிந்தசொல் - சொன்னசொல்லாக, மன்னு - நிலைபெற்ற, தொல்புகழ்-பழமையாகிய புகழையுடைய, (நாவலூரான் —, வன்றொண்டன் —, சுந்தரன்,) வாய்மொழி - வாயினால் சொன்ன, பாடல் பத்து - பத்துப்

பாடலையும், உன்னி-நினைத்து, இன் இசை பாடுவார்-இனிய இசையோடு பாடுவோர், உமைகேள்வன் - உமாநாயகனது, சேவடி - திருவடியை, சேர்வர் - அடைவார்கள் எ-று.

(பொ-ரை.) அன்னங்கள்சேர்ந்த வயல் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியிலெழுந்தருளியிருக்கிற ஆரணீய விடங்கரை, மின்னுகிற நுண்ணிய இடையையுடைய பலமாதர் பிரார்த்தித்து, ஆசையால் சொன்ன சொல்லாக நிலைபெற்ற பழமையாகிய புகழையுடைய சுந்தரன், வாயினால் சொன்ன பத்துப் பாடலையும் நினைத்து இனிய இசையோடு பாடுவோர் உமாநாயகனது திருவடியை யடைவார்கள்.

(க-ரை.) திருப்பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரை, சுந்தரன் பாடிய இப் பத்துப் பாடலும் இசையோடு பாடுவோர், சிவபிரானது திருவடியை யடைவார்கள் என்பதாம்.

(வி-ரை.) உன்னல் - நினைத்தல். இசை - இராகம். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - நீலகண்டேசுவரர். தேவியார் - விசாலாக்ஷியம்மை.

---

## திருவாரூர்

பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்.

**குருகுபாயக்கொழுங்கரும்புகணெரிந்தசா**
**றருகுபாயும்வயலந்தணாரூரரைப்**
**பருகுமாறும்பணிந்தேத்துமாறுந்நினைந்**
**துருகுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) குருகுபாய - பறவைகள் பாய்ந்தோட, கொழுங்கரும்புகள் - செழுங்கரும்புகள், நெரிந்த - நெரிதலாலுண்டான, சாறு - சாறானது, அருகு வயல்பாயும்-அருகேயுள்ள வயல்களிற்பாய்கின்ற, அம்தண்-அழகும் குளிர்ச்சியுமுள்ள, ஆரூரரை - திருவாரூரரை, பருகுமாறும் - துய்க்கும் விதமும், பணிந்து ஏத்துமாறும் - வணங்கித் துதிக்கும் விதமும், நினைந்து உருகுமாறும் - நினைந்துருகும் விதமும் ஆகிய, இவை - இவற்றை, உணர்த்த வல்லீர்களே - அறிவிக்க வல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) பறவைகள் பாய்ந்தோட செழுங்கரும்புகள் நெரிதலாலுண்டான சாறானது அருகேயுள்ள வயல்களிற் பாய்கின்ற அழகும் குளிர்ச்சியுமுள்ள திருவாரூரரை துய்க்கும்விதமும், வணங்கித் துதிக்கும்விதமும், நினைந்துருகும் விதமுமாகிய இவற்றை யறிவிக்க வல்லீர்களோ.

(க-ரை.) திருவாரூராரை, யான் துதித்தல் முதலிய விதங்களை அவருக்கு அறிவிக்கவல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) நெரிதல்-ஆலையிலிடப்பட்டு நசுங்குதல். ஈற்றேகாரம் வினா. (1)

**பறக்குமெங்கிள்ளைகாள்பாடுமெம்பூவைகாள்**
**அறக்கணென்னத்தகுமடிகளாரூரரை**
**மறக்ககில்லாமையும்வளைகணில்லாமையும்**
**உறக்கமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) பறக்கும் - பறக்கின்ற, எம்கிள்ளைகாள் - எம்கிளிகளே, பாடும்-பாடுகின்ற, எம் பூவைகாள் - எம்பூவைகளே, அறக்கண் என்னத்தகும் - தருமத்தின் கண்ணெனத் தகுந்த, அடிகள் ஆரூரரை - சுவாமிகளாகிய திருவாரூரரை, மறக்ககில்லாமையும் - மறவாமையையும், வளைகள் நில்லாமையும் - வளையல் நில்லாமையையும், உறக்கம் இல்லாமையும் - தூக்கமில்லாமையையும், உணர்த்த வல்லீர்களே - அவருக்கு அறிவிக்கவல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) பறக்கின்ற எம்கிளிகளே, பாடுகின்ற எம்பூவைகளே, தருமத்தின் கண்ணெனத்தகுந்த அடிகள் ஆரூரரை மறவாமையையும் வளையல் நில்லாமையையும் தூக்கமில்லாமையையும் அவருக்கு அறிவிக்கவல்லீர்களோ.

(க-ரை.) கிளிகளே, பூவைகளே, யாம் திருவாரூரரைத் துதித்தல் முதலிய விதங்களை அவருக்கு அறிவிக்க வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) பூவை - நாகணவாய்ப்புள். இதனை சாரிகம் என்பர் வடநூலார்.

**சூழுமோடிச்சுழன்றுழலும்வெண்ணாரைகாள்**
**ஆளுமம்பொற்கழலடிகளாரூரற்கு**
**வாழுமாறும்வளைகழலுமாறும்மெனக்**
**கூழுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) சூழும் ஓடி - சுற்றிலும் ஓடி, சுழன்று உழலும் வெள்நாரைகாள் - சுழன்று திரியும் வெள்ளை நாரைகளே, ஆளும் - எம்மை யாளுதற்குரிய, அம் - அழகிய, பொன் - பொன்னினாற் செய்யப்பட்ட, கழல் - கழலையணிந்த, அடிகள் - திருவடிகளையுடைய, ஆரூரற்கு - திருவாரூரருக்கு, வாழுமாறும் - யான் வாழ்ந்திருக்கும் விதமும், வளைகழலுமாறும்-வளையல் கழலும்விதமும், எனக்கு-எனக்குள்ள, ஊழுமாறும் - ஊழ்வகையின் தன்மையும் ஆகிய இவற்றை, உணர்த்த வல்லீர்களே - அறிவிக்கவல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) சுற்றிலுமோடி சுழன்று திரியும் வெள்ளைநாரைகளே, எம்மை யாளுதற்குரிய அழகிய பொன்னினாற் செய்யப்பட்ட கழலையணிந்த திருவடிகளையுடைய திருவாரூரருக்கு யான் வாழ்ந்திருக்கும் விதமும், வளையல் கழலும் விதமும், எனக்குள்ள ஊழ்வகையின் தன்மையுமாகிய இவற்றையறிவிக்க வல்லீர்களோ.

(க-ரை.) நாரைகளே, திருவாரூரருக்கு, யான் வாழுமாறு முதலியவற்றை நீங்கள் சென்றறிவிக்க வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) கழல் - விருது. (வீரவெண்டயம்.) ஊழ் - விதி. (3)

**சக்கிரவாளத் திளம்பேடைகாள்சேவல்காள்**
**அக்கிரமங்கள்செயுமடிகளாரூரற்கு**
**வக்கிரமில்லாமையும்வளைகணில்லாமையும்**
**உக்கிரமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) சக்கிரவாளத்து இளம்பேடைகாள் - சக்ரவாளப் பறவையின் இளம்பேடைகளே, சேவல்காள் - சேவல்களே, அக்கிரமங்கள் செய்யும் அடிகள் ஆரூரற்கு - அனியாயம்செய்கிற சுவாமியாகிய திருவாரூரருக்கு, வக்கிரம் இல்லாமையும் - யாம் கொடுமையின்மையும், வளைகள் நில்லாமையும் - வளைகள் கழல்வதையும், உக்கிரம் இல்லாமையும் - கோவமின்மையும், உணர்த்த வல்லீர்களே - அறிவிக்க வல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) சக்ரவாளப் பறவையின் இளம்பேடைகளே, சேவல்களே, அனியாயம் செய்கிற சுவாமியாகிய திருவாரூரருக்கு யாம் கொடுமையின்மையும் வளைகள் கழல்வதையும் கோவமின்மையும் அறிவிக்கவல்லீர்களோ.

(க-ரை.) சக்ரவாளப்பேடைகாள், சேவல்காள், திருவாரூரற்கு, யான் வக்கிரமில்லாதிருத்தல் முதலியவற்றை நீங்கள்சென் றறிவிக்க வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) சக்ரவாளம் — சக்ரவாகம். இதனை கோகம், சகோரம், நேமிப் புள், பெருங்குருகு, நிலாமுகிப்புள் எனப் பல பெயர்களான் வழங்குவர். வக்கிரம் - கோணல். உக்கிரம் - வெம்மை. (4)

**இலைகள்சோலைத்தலையிருக்கும்வெண்ணுரைகாள்**
**அலைகொள்சூலப்படையடிகளாரூரற்குக்**
**கலைகள்சோர்கின்றதுங்கனவளைகழன்றதும்**
**முலைகள்பீர்கொண்டதும்மொழியவல்லீர்களே.**

(ப-ரை.) இலைகள் - இலைகளிலும், சோலை - சோலைகளிலும், தலையிருக்கும் வெண்ணுரைகாள் - அடைகிடக்கும் வெண்ணுரைகளே, அலைகொள் - வருத்துதலைக்கொண்ட, சூலப்படை அடிகள் ஆரூரற்கு - சூலாயுதத்தையுடைய சுவாமியாகிய திருவாரூரற்கு, கலைகள்சோர்கின்றதும் - ஆடைகள் நெகிழ்வதையும், கனவளை கழன்றதும் - பெரியவளைகள் நெகிழ்ந்ததையும், முலைகள் பீர் கொண்டதும் - கொங்கைகள் பசலைநிற மடைந்ததையும், மொழியவல்லீர்களே - சொல்லவல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) இலைகளிலும் சோலைகளிலும் அடைகிடக்கும் வெண்ணுரைகளே, வருத்துதலைக்கொண்ட சூலாயுதத்தையுடைய சுவாமியாகிய திருவாரூ

ரற்கு ஆடைகள் நெகிழ்வதையும் பெரிய வளைகள் நெகிழ்ந்ததையும் கொங்கைகள் பசலைநிறமடைந்ததையும் சொல்லவல்லீர்களோ.

(க-ரை.) நாரைகளே, நீங்கள் திருவாரூரரிடத்தேசென்று, என் வளைகழலல் முதலிய செய்திகளைச்சொல்ல வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை) தளையிருத்தல் - தளைக்கப்பட்டிருத்தல். கலைகள்-ஆடைகள். சோர்தல் - நழுவுதல். பீர் - மாமை. இதனைப் பசலைநிறம் என்றுங் கூறுப. வடநூலார் வைவர்ண்யம் என்பர். (5)

**வண்டுகாள்கொண்டல்காள்வார்மணற்குருகுகாள்**
**அண்டவாணர்தொழுமடிகளாரூரரைக்**
**கண்டவாறுங்காமத்தீக்கனன்றெரிந்துமெய்**
**யுண்டவாறும்மிவையுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) வண்டுகாள் - வண்டுகளே, கொண்டல்காள் - மேகங்களே, வார்மணற் குருகுகாள் - நெடிய மணற்றிட்டைகளிலுள்ள பறவைகளே, அண்டவாணர் - தேவர்கள், தொழும் - வணங்குகிற, அடிகள் ஆரூரரை - திருவாரூரடிகளை, கண்டவாறும்-கண்டவிதமும், காமத்தீ-காமநெருப்பு, கனன்று எரிந்து - மூண்டெரிந்து, மெய்உண்டவாறும் - உடம்பை யெரித்தவிதமும், (ஆகிய) இவை உணர்த்த வல்லீர்களே இவற்றை யறிவிக்கவல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) வண்டுகளே, மேகங்களே, நெடிய மணற்றிட்டைகளிலுள்ள பறவைகளே, தேவர்கள் வணங்குகிற திருவாரூரடிகளை கண்டவிதமும் காமநெருப்பு மூண்டெரிந்து உடம்பை யெரித்தவிதமுமாகிய இவற்றை யறிவிக்கவல்லீர்களோ.

(க-ரை.) வண்டுகாள், கொண்டல்காள், நான் திருவாரூரடிகளைக் கண்டவாறு முதலிய செய்திகளை யவருக்கு நீங்கள் அறிவிக்கவல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) குருகு - கொய்யடிநாரை. கனன்றெரிதல்-மூண்டெரிதல். மெய்யுண்டல் - உடம்பை யிரையாகக்கோடல். (6)

**தேனலங்கொண்டதேன்வண்டுகாள்கொண்டல்காள்**
**ஆனலங்கொண்டவெம்மடிகளாரூரற்குப்**
**பானலங்கொண்டவெம்பணைமுலைபயந்துபொன்**
**ஊனலங்கொண்டதும்முணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) தேன் நலம்கொண்ட தேன் வண்டுகாள்- தேனின் இனிமையை யுண்ட தேன்வண்டுகளே, கொண்டல்காள் – மேகங்களே, ஆன்நலம்கொண்ட-பசுவினது நலத்தைக்கொண்ட, எம் அடிகள்-எமது சுவாமிகளாகிய, ஆரூரற்கு-திருவாரூரருக்கு, பால்நலம்கொண்ட எம்பணைமுலைபயந்து - பாலின் நலத்தைக் கொண்ட எமது பருத்த கொங்கைகள் பசலைபோர்த்து, பொன்-பொன்னிறம், ஊன் நலம்கொண்டதும் - உடம்பினழகைக் கவர்ந்ததும், உணர்த்த வல்லீர்களே - அறிவிக்கவல்லீர்களோ எ-று.

(போ-ரை.) தேனின் இனிமையையுண்ட தேன் வண்டுகளே, மேகங்களே, பசுவினது நலத்தைக்கொண்ட எமது சுவாமிகளாகிய திருவாரூரருக்கு, பாலின் நலத்தைக்கொண்ட எமது பருத்த கொங்கைகள் பசலைபோர்த்து பொன்னிறம் உடம்பினழகைக் கவர்ந்ததும் அறிவிக்கவல்லீர்களோ.

(க-ரை.) வண்டுகாள், கொண்டல்காள், திருவாரூரடிகளுக்கு என்முலைப் பசப்பு முதலியவற்றை நீங்கள் அறிவிக்கவல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) ஆன்-பசு. ஆன்நலம் கோடலாவது பஞ்சகவ்வியத்தை அபிஷேக திரவியமாகக்கோடல். பால் நலம் - பாலின்சுவை. பணை - பருத்த. பயந்து - பசந்து. ஊன் - உடம்பு. இது ஆகுபெயர். (7)

**சுற்றுமுற்றுஞ்சுழன்றுழலும்வெண்ணுரைகாள்**
**அற்றமுற்றப்பகர்ந்தடிகளாரூரற்குப்**
**பற்றுமற்றின்மையும்பாடுமற்றின்மையும்**
**உற்றமற்றின்மையுமுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) சுற்றுமுற்றும்சுழன்று உழலும் வெண்ணுரைகாள்- சுற்றுமுற்றும் சுழன்று திரிகின்ற வெண்ணுரைகளே, அடிகள் ஆரூரற்கு - சுவாமியாகிய திருவாரூரருக்கு, அற்றமுற்ற பகர்ந்து - சமயம்பார்த்துச் சொல்லி, பற்று மற்று இன்மையும் - வேறுபற்றில்லாமையும், பாடுமற்று இன்மையும்-வேறு பெருமையில்லாமையும், உற்றமற்று இன்மையும் - அடுத்த வேறுகாரியங்களில்லாமையும், உணர்த்த வல்லீர்களே - அறிவிக்கவல்லீர்களோ எ-று.

(போ-ரை.) சுற்றுமுற்றும் சுழன்று திரிகின்ற வெண்ணுரைகளே, சுவாமியாகிய திருவாரூரருக்கு சமயம்பார்த்துச்சொல்லி, வேறு பற்றில்லாமையும் வேறு பெருமையில்லாமையும் அடுத்த வேறுகாரியங்களில்லாமையும் அறிவிக்க வல்லீர்களோ.

(க-ரை.) வெண்ணுரைகாள், திருவாரூரடிகளிடத்தே நீங்கள், எனக்குப் பற்றின்மை முதலியவற்றை அறிவிக்க வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) அற்றம் - சமயம். பற்று - ஆதரவு. பாடு - பெருமை. உற்ற-உற்றன, (உதவுவன.) (8)

**குரவநாறக்குயில்வண்டினம்பாடநின்**
**றரவமாடும்பொழிலந்தணாரூரரைப்**
**பரவிநாடும்மதும்பாடிநாடும்மதும்**
**உருகிநாடும்மதுமுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) குரவம்நாற - குராமலர்கள் பரிமளிக்கவும், குயில்வண்டு இனம் பாட - குயில்வண்டினங்கள் பாடவும், நின்று அரவம் ஆடும்பொழில் - பாம்புகள் நின்றாடும் சோலைகள் சூழ்ந்த, அம்தண் ஆரூரரை - அழகும் குளிர்ச்சியுமுள்ள திருவாரூரரை, பரவி நாடும்மதும் - யாம் துதித்து நினைப்பதையும், பாடி

நாடும்மதும் - பாடி நினைப்பதையும், உருகி நாடும்மதும் - மனங்கரைந்து நினைப்பதையும், உணர்த்தவல்லீர்களே - அறிவிக்கவல்லீர்களோ எ—று.

(பொ-ரை.) குராமலர்கள் பரிமளிக்கவும், குயில்வண்டினங்கள் பாடவும், பாம்புகள் நின்றாடும் சோலைகள் சூழ்ந்த அழகும் குளிர்ச்சியுமுள்ள திருவாரூரரையாம் துதித்து நினைப்பதையும், பாடி நினைப்பதையும், மனங்கரைந்து நினைப்பதையும் அறிவிக்கவல்லீர்களோ.

(க-ரை.) திருவாரூரரை, நான் பரவி நாடுதல் முதலியவற்றை, அவருக்கு நீங்கள் அறிவிக்க வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) குயில் வண்டு-குயிலும் வண்டும். பரவல்-வணங்கல். பரவிநாடல்-காயத்தின்றொழில். பாடிநாடல் - வாக்கின்றொழில். உருகிநாடல் - மனத்தின்றொழில். (9)

**கூடுமன்னப்பெடைகாள்குயில்வண்டுகாள்**
**ஆடுமம்பொற்கழலடிகளாரூரரைப்**
**பாடுமாறும்பணிந்தேத்துமாறுங்கூடி**
**யூடுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே.**

(ப-ரை.) கூடும் அன்னப் பெடைகாள் - கூடியிருக்கும் பெடையன்னங்களே, குயில்வண்டுகாள் - குயில்களே வண்டுகளே, ஆடும் அம்பொன்கழல் - நடிக்கின்ற அழகிய பொற்கழலணிந்த, அடிகள் ஆரூரரை - சுவாமியாகிய திருவாரூரரை, பாடுமாறும் - பாடும்விதமும், பணிந்தேத்துமாறும்-வணங்கித் துதிக்கும்விதமும், கூடிஊடுமாறும் - கூடியூடும்விதமும், (ஆகிய) இவற்றை உணர்த்த வல்லீர்களே - அறிவிக்கவல்லீர்களோ எ-று.

(பொ-ரை.) கூடியிருக்கும் பெடையன்னங்களே, குயில்களே, வண்டுகளே, நடிக்கின்ற அழகிய பொற்கழலணிந்த சுவாமியாகிய திருவாரூரரை பாடும்விதமும் வணங்கித் துதிக்கும்விதமும் கூடியூடும்விதமும் ஆகிய இவற்றை அறிவிக்க வல்லீர்களோ.

(க-ரை.) அன்னப் பெடைகாள், குயில்வண்டுகாள், நீங்கள்திருவாரூரடிகளிடத்தே சென்று, யான் அவரைப் பாடுமாறு முதலியவற்றை யறிவிக்க வல்லீர்களோ வென்பதாம்.

(வி-ரை.) கூடல் - சேர்தல். ஊடல் - பிணங்கல். (10)

**நித்தமாகநினைந்துள்ளமேத்தித்தொழும்**
**அத்தனம்பொற்கழலடிகளாரூரரைச்**
**சித்தம்வைத்தபுகழ்ச்சிங்கடியப்பன்மெய்ப்**
**பத்தனூரன்சொன்னபாடுமின்பத்தரே.**

(ப-ரை.) நித்தமாக - நாடோறும், உள்ளம் நினைந்து-மனத்தால் நினைந்து, ஏத்தி - துதித்து, தொழும் - யாம் வணங்குதற்குரிய, அத்தன் - தந்தை, அம்

பொன் கழல் - அழகிய பொற்கழலணிந்த, அடிகள் ஆரூரரை - சுவாமியாகிய திருவாரூரரை, சித்தம்வைத்த - மனத்தில்வைத்த, புகழ் - புகழினையுடைய, சிங்கடியப்பன் மெய்ப்பத்தன் ஊரான் - சுந்தரன், சொன்ன - சொன்னவையாகிய இப் பத்துப் பாடலையும், பத்தரே - பத்தர்களே, பாடுமின்-பாடுங்கள் எ-று.

(பொ-ரை.) நாடோறும் மனத்தால் நினைந்து துதித்து யாம் வணங்குதற்குரிய தந்தை அழகிய பொற்கழலணிந்த சுவாமியாகிய திருவாரூரரை மனத்தில் வைத்த புகழினையுடைய சுந்தரன் சொன்னவையாகிய இப் பத்துப் பாடலையும் பத்தர்களே பாடுங்கள்.

(க-ரை.) பத்தர்களே, திருவாரூரடிகளைச் சுந்தரன் புகழ்ந்துபாடின இப் பத்துப்பாடலையும் பாடுங்களென்பதாம்.

(வி-ரை.) அம்பொன்கழல் - அழகிய பொன்னுனியன்ற கழல். (11)

திருச்சிற்றம்பலம்.

## திருவதிகைவீரட்டானம்

பண் - கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**தம்மானையறியாதசாதியாருளரே**
**சடைமேற்கொள்பிறையானைவிடைமேற்கொள்விகிர்தன்**
**கைம்மாவினுரியானைக்கரிகாட்டிலாட**
**லுடையானைவிடையானைக்கறைகொண்டகண்டத்**
**தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்**
**னுமாசையால்வாழ்கின்றவறிவிலாநாயே**
**னெம்மானையெறிகெடிலவடவீரட்டானத்**
**துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.**

(ப-ரை.) தம்மானையறியாத சாதியார் உளரே - தம்பிரானையறியாத சாதியார உளரோ, சடைமேல் கொள்பிறையானை - சடைமீது பிறையையுடையவனை, விடைமேற்கொள் விகிர்தன் - எருதேறுமெய்யனை, கைம்மாவின் உரியானை - யானைத்தோலையுடையவனை, கரிகாட்டில் ஆடல் உடையானை - மயானத்திலாடுகிறவனை, விடையானை - இடபவாகனனை, கறைகொண்ட கண்டத்து எம்மான் - விடங்கொண்ட கண்டத்தெம்பெருமான், தன் அடிகொண்டு - தன் திருவடியை, என்முடிமேல் - என்சிரத்தின்மீது, வைத்திடும் என்னும் ஆசையால் - வைப்பாரென்கிற விருப்பத்தால், வாழ்கின்ற - வாழாநின்ற, அறிவிலா நாயேன் - அறிவற்ற நாயினேன், எம்மானை - எம்பெருமானை, எறி - அலையெறிகிற, கெடிலம - கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும் - அற்பகாலமும், யான் இகழ்வன் போல் - நானிகழ்வேனோ எ-று.

(போ-ரை.) தம்பிரானையறியாத சாதியார் உளரோ, சடைமீது பிறையை யுடையவனை, எருதேறுமெய்யனை, யானைத்தோலையுடையவனை, மயானத்திலாடு கிறவனை, இடபவாகனனை, விடங்கொண்ட கண்டத்தெம்பெருமான் தன்றிரு வடியை என் சிரத்தின்மீது வைப்பாரென்கிற விருப்பத்தால் வாழாநின்ற அறி வற்ற நாயினேன் எம்பெருமானை அலையெறிகிற கெடிலநதிசூழ்ந்த வடவீரட்டா னத்து வாழ்பவனை அற்பகாலமும் இகழ்வேனோ.

(கு-ரை.) திருவதிகைத் திருவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை, யான் இறைப்பொழுதும் இகழ்வேனோ வென்பதாம்.

(வி-ரை.) உளரேயென்னும் ஏகாரம் வினா. விகிர்தன்-மெய்யன். கைம்மா - யானை. விடை - இடபம். கறை - நஞ்சு. கரிகாடு - சுடலை. (1)

**முன்னேயெம்பெருமானைமறந்தென்கொல்மறவா**
**தொழிந்தென்கொல்மறவாதசிந்தையால்வாழ்வேன்**
**பொன்னேநன்மணியேவெண்முத்தேசெம்பவளக்**
**குன்றமேயீசவென்றுன்னையேபுகழ்வேன்**
**அன்னேயென்னத்தாவென்றமரராலமரப்**
**படுவானையதிகைமாநகருள்வாழ்பவனை**
**யென்னேயென்னெறிகெடிலவடவீரட்டானத்**
**துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.**

(ப-ரை.) முன்னே - முன்னமே, எம்பெருமானை - எம்பிரானை, மறந்து என்கொல் - மறந்தாலென்ன, மறவாது ஒழிந்து என்கொல் - மறவாதொழிந்தா லென்ன, மறவாத சிந்தையால் வாழ்வேன் - மறவாமனத்தோடு வாழ்வேன், பொன்னே - சுவர்ணமே, நல்மணியே-சிறந்தரத்நமே, வெண்முத்தே - வெண் மையாகிய முத்தே, செம்பவளக்குன்றமே - செம்பவளமலையே, ஈச என்று - ஈசனேயென்று, உன்னையே புகழ்வேன்-நின்னையே புகழாநிற்பேன், அன்னே- தாயே, என் அத்தா என்று-என் தந்தையேயென்று, அமரரால் - தேவர்களால், அமரப்படுவானை-விரும்பப்படுவானை, அதிகைமாநகருள் வாழ்பவனை - அதிகை நகருள் வாழ்பவனை, என்னேயென - என்னேயென்று வினவுகின்ற, எறி - அலையெறிகிற, கெடிலம் - கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும் - அற்பகாலமும், யான் இகழ் வன்போல் - நானிகழ்வேனோ எ-று.

(போ-ரை.) முன்னமே எம்பிரானை மறந்தாலென்ன மறவாதொழிந்தா லென்ன, மறவாமனத்தோடு வாழ்வேன் சுவர்ணமே, சிறந்தரத்நமே வெண்மை யாகிய முத்தே, செம்பவளமலையே ஈசனேயென்று நின்னையே புகழாநிற்பேன் தாயே என் தந்தையேயென்று தேவர்களால் விரும்பப்படுவானை, அதிகைமா நகருள் வாழ்பவனை என்னேயென்று வினவுகின்ற அலையெறிகிற கெடிலநதி சூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(க-ரை.) திருவதிகைத் திருவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனோ வென்பதாம்.

(வி-ரை.) ஈசன் - அண்மைவிளி. அமர்தல் - விரும்புதல். இறக்குந்தேவரை அமரர் என்றது மங்கல வழக்கு. (2)

விரும்பினேற்கென துள்ளம்விடகிலாவிதியே
விண்ணவர்தம்பெருமானேமண்ணவர்நின்றேத்துங்
கரும்பேயென்கட்டியென்றுள்ளத்தாலுள்கிக்
காதல்சேர்மாதராள்கங்கையாணங்கை
வரும்புனலுஞ்சடைக்கணிந்துவளராதபிறையும்
வரியரவுமுடன்றுயிலவைத்தாளுமெந்தை
யிரும்புனல்வந்தெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

(ப-ரை.) விரும்பினேற்கு-விரும்பின எனக்கு, எனது உள்ளம் வீடகிலா-என் மனத்தைவிட்டுப் பிரியாத, விதியே - ஊழே, விண்ணவர்தம் பெருமானே-தேவர்பெருமானே, மண்ணவர் நின்று எத்தும் கரும்பே - மண்ணுலகத்தார் நின்று துதிக்கிற கரும்பே, என்கட்டியென்று-என் வெல்லக்கட்டியென்று, உள்ளத்தால் உள்கி - மனத்தால் நினைத்து, காதல்சேர் மாதராள் - ஆசை மனையாளாகிய, கங்கையாள் நங்கை - கங்கை நங்கையையும், வரும்புனலும் சடைக்கணிந்து - பெருகாநின்ற நீரையும் சடையில்தரித்து, வளராதபிறையும் - இளம்பிறையையும், வரிஅரவும் - வரியையுடைய பாம்பையும், உடன் துயிலவைத்து ஆளும் எந்தை - கூட விருந்து தூங்கவைத்த எமது தந்தை, இரும்புனல் வந்து - பெருவெள்ளம் வந்து, எறி - அலைவீசுகிற, கெடிலம் கெடிலநதி சூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும் - அற்பகாலமும், யான் இகழ்வன்போல் - நானிகழ்வேனோ எ-று.

(போ-ரை.) விரும்பின எனக்கு என் மனத்தை விட்டுப் பிரியாத வூழே, தேவர்பெருமானே, மண்ணுலகத்தார் நின்று துதிக்கிற என் வெல்லக்கட்டியென்று மனத்தால்நினைத்து ஆசை மனையாளாகிய கங்கை நங்கையையும் பெருகாநின்ற நீரையும் சடையில் தரித்து, இளம்பிறையையும் வரியையுடைய பாம்பையும் கூடவிருந்து தூங்கவைத்த எமது தந்தை, பெரு வெள்ளம் வந்து அலைவீசுகிற கெடிலநதிசூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(க-ரை.) திருவதிகைத் திருவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனோ வென்பதாம்.

(வி-ரை.) கட்டி - அண்மைவிளி. உள்கல் - நினைத்தல். வளராதபிறை - ஒரு கலையாகிய சந்திரன். வரி - நீட்சி. கீற்றெனினுமாம். (3)

நாற்றானத்தொருவனைநானயபரனை
நள்ளாற்றுநம்பியைவெள்ளாற்றுவிதியைக்
காற்றனைத்தீயானைக்கடலானைமலையின்
றலையானைக்கடுங்கலுழிக்கங்கைநீர்வெள்ள
ஆற்றானைப்பிறையானையம்மானையெம்மான்
றம்மானையாவர்க்குமறிவரியசெங்கண்
ஏற்றானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

(ப-ரை.) நாற்றானத்து ஒருவனை - நாற்றிசையிலுமுள்ள வொருவனை, நான் ஆயபரனை - நானாகிய பரமனை, நள்ளாற்று நம்பியை - திருநள்ளாற்று நம்பியை, வெள்ளாற்றுவிதியை - வெள்ளாற்றிலுள்ள விதியை, காற்றனை—, தீயானை — நெருப்பாயிருப்பவனை, கடலானை - கடலாயிருப்பவனை, மலையின் தலையானை - மலையுச்சியிலுள்ளவனை, கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ளம் ஆற்றானை - வேகமாகிய பெருக்கினையுடைய கங்காநதியை யுடையவனை, பிறையானை - சந்திரகண்டத்தையுடையவனை, அம்மானை - என் தந்தையை, எம்மான் தம்மானை - எமது பாட்டனை, யாவர்க்கும் அறிவு அரிய - யாவராலும் அறியவொண்ணாத, செங்கண் ஏற்றானை — செங்கண் விடையையுடையவனை, எறி - அலைவீசுகிற, கெடிலம் - கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும் - அற்பகாலமும், யான் இகழ்வன்போல் - நானிகழ்வேனோ எ-று.

(பொ-ரை.) நாற்றிசையிலுமுள்ள வொருவனை, நானாகிய பரமனை, திருநள்ளாற்று நம்பியை, வெள்ளாற்றிலுள்ள விதியை, காற்றனை, நெருப்பாயிருப்பவனை, கடலாயிருப்பவனை, மலையுச்சியிலுள்ளவனை, வேகமாகிய பெருக்கினையுடைய கங்காநதியையுடையவனை, சந்திரகண்டத்தையுடையவனை, என் தந்தையை, எனது பாட்டனை, யாவராலும் அறியவொண்ணாத செங்கண் விடையையுடையவனை, அலைவீசுகிற கெடிலநதி சூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை, அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(க-ரை.) திருவதிகை வீரட்டானத் துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனோ வென்பதாம்.

(வி-ரை.) நாற்றானம் - நாற்றிசை. நள்ளாறு - ஓர் திருப்பதி. வெள்ளாறு- ஓர் திருப்பதி. மலையின்தலை-மலையின் சிகரம். கலுழி - பெருக்கு. (4)

சேர்ந்தாயமலைமங்கைதிருநிறமும்பரிவு
முடையானையதிகைமாநகருள்வாழ்பவனைக்
கூந்தல்தாழ்புனல்மங்கைகுயிலன்னமொழியாள்
சடையிடையிற்கயலினங்கள்குதிகொள்ளக்குலாவி

வாய்ந்தநீர்வரவுந்திமராமரங்கள்வணக்கி
மறிகடலையிடங்கொள்வான்மலையாரவாரி
யேந்துநீரெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

(ப-ரை.) சேர்ந்து ஆய — சேர்தலாலுண்டாகிய, மலைமங்கை - உமாதேவியின், திருநிறமும் - அழகிய ஒளியும், பரிவும் - அன்பும், உடையானை - உடையவனை, அதிகைமாநகருள் வாழ்பவனை - அதிகைநகரில் வாழ்பவனை, கூந்தல் - குழல், தாழ்-நீண்ட, புனல் மங்கை - கங்கையாகிய, குயில் அன்னமொழியாள் குயில்போலுஞ் சொல்லினையுடையவள், சடையிடையில் - சடைநடுவில், கயல் இனங்கள்-சேற்கூட்டங்கள், குதிகொள்ள-குதிக்க, குலாவி-கூடி, வாய்ந்த நீர்வர உந்தி-தகுந்தநீர் பெருகத்தள்ளி, மாராமரங்கள் வணக்கி - மாராமரங்களை வளைத்து, மறிகடலை - அலைகள் மடங்குகிற கடலை, இடம்கொள்வான் - இடம்கொள்ளும் பொருட்டு, மலை ஆரவாரி - மலைகளோடு பொருந்தவாரி, ஏந்துநீர் - ஏந்துகின்ற நீரினால், எறி - அலைவீசுகிற, கெடிலம் - கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும் - அற்பகாலமும், யான் இகழ்வன்போல் - நானிகழ்வேனோ எ-று.

(பொ-ரை.) சேர்தலாலுண்டாகிய உமாதேவியின் அழகிய வொளியும் அன்பும் உடையவனை, அதிகைமாநகருள் வாழ்பவனை, கூந்தல் நீண்ட கங்கையாகிய குயில்போலுஞ் சொல்லினையுடையவள், சடைநடுவில் சேற்கூட்டங்கள் குதிக்க கூடி தகுந்தநீர் பெருகத்தள்ளி, மாராமரங்களை வளைத்து, அலைகள் மடங்குகிற கடலை இடங்கொள்ளும்பொருட்டு மலைகளோடு பொருந்த வாரி ஏந்துகின்ற நீரினால் அலைவீசுகிற கெடிலநதி சூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(க-ரை.) திருவதிகை வீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனோவென்பதாம்.

(வி-ரை.) சேர்ந்து-காரணப்பொருட்டாகிய வினையெச்சம். குதி-முதனிலைத்தொழிற்பெயர். உந்தி - தள்ளி. (5)

மைம்மானமணிநீலகண்டத்தெம்பெருமான்
வல்லேனக்கொம்பணிந்தமாதவனைவானோர்
தம்மானைத்தலைமகனைத்தண்மதியும்பாம்புந்
தடுமாறுஞ்சடையானைத்தாழ்வரைக்கைவென்ற
வெம்மானமதகரியினுரியானைவேத
விதியானைவெண்ணீறுசண்ணித்தமேனி
யெம்மானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

(ப-ரை.) மை - கரிய, மானம் - பெருமைபொருந்திய, மணி - மணியை நிகர்த்த, நீலகண்டத்து எம்பெருமான் - கருங்கண்டத்தையுடைய எம்பெருமான், வல் - வலிய, ஏனக்கொம்பு அணிந்த - பன்றிக்கொம்பையணிந்த, மாதவனை - பெருந்தவத்தனை, வானோர் தம்மானை - தேவர்கோமானை, தலைமகனை - தலைவனை, தண்மதியும் பாம்பும் தடுமாறும் சடையானை - குளிர்ந்த பிறையும் பாம்பும் தடுமாறுகிற சடையையுடையவனை, தாழ்வர - தாழும்படி, கைவென்ற- கையைவெட்டின, வெம்-கொடிய, மானம் - பெருமைபொருந்திய, மதகரியின் உரியானை - மதயானைத் தோலையுடையவனை, வேதவிதியானை - வேதவிதியை யுடையவனை, வெண்ணீறு சண்ணித்தமேனி எம்மானை - திருவெண்ணீறு பூசப்பெற்ற திருமேனியை யுடையவனை, எறி - அலைவீசுகிற, கெடிலம்-கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும்-அற்பகாலமும், யான் இகழ்வன்போல்-நானிகழ்வேனோ எ-று.

(பொ-ரை.) கரிய பெருமை பொருந்திய மணியை நிகர்த்த கருங்கண்டத்தையுடைய எம்பெருமான், வலிய பன்றிக்கொம்பை யணிந்த பெருந்தவத்தனை, தேவர்கோமானை, தலைவனை, குளிர்ந்த பிறையும் பாம்பும் தடுமாறுகிற சடையை யுடையவனை, தாழும்படி கையைவெட்டின கொடிய பெருமைபொருந்திய மதயானைத்தோலை யுடையவனை, வேதவிதியை யுடையவனை, திருவெண்ணீறு பூசப்பெற்ற திருமேனியையுடையவனை, அலைவீசுகிற கெடிலநதி சூழந்த வடவீரட்டானத்து வாழ்பவனை, அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(கு-ரை.) திருவதிகைத் திருவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனோவென்பதாம்.

(வி-ரை.) மணி - நீலமணி. ஏனம் - பன்றி. கை - துதிக்கை. உரி - தோல். (6)

**வெய்தாயவினைக்கடலிற்றடுமாறுமுயிர்க்கு**
**மிகவிரங்கியருள்புரிந்துவீடுபேறாக்கம்**
**பெய்தானைப்பிஞ்ஞகனைமைஞ்ஞவிலுங்கண்டத்**
**தெண்டோளெம்பெருமானைப்பெண்பாகமொருபாற்**
**செய்தானைச்செக்கர்வானொளியானைத்தீவா**
**யரவாடுஞ்சடையானைத்திரிபுரங்கள்வேவ**
**எய்தானையெறிகெடிலவடவீரட்டானத்**
**துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.**

(ப-ரை.) வெய்து ஆய-கொடிதாகிய, வினைக்கடலில்-வினையாகிய கடலில், தடுமாறும் உயிர்க்கு - தடுமாறுகிற உயிர்களுக்கு, மிக இரங்கி - மிகவும் இரக்கங்கொண்டு, வீடுபேறு ஆக்கம் - வீடுபேறாகிய செல்வத்தை, பெய்தானை - தந்தவனை, பிஞ்ஞகனை-பிஞ்ஞகத்தையுடையவனை, மைஞவிலும் கண்டத்து-மேகம்போலுங் கண்டத்தோடு, எண்டோள் - அஷ்டபுஜங்களையுமுடைய, எம்பெருமானை - எம்பிரானை, ஒருபால் - ஒருபக்கம், பெண்பாகம் செய்தானை -

பெண்கூறுசெய்துகொண்டவனை, செக்கர்வான் ஒளியானை - செவ்வானத்தின் நிறமுடையவனை, தீவாயஅரவு ஆடுஞ்சடையானை-விஷாக்நியுள்ள வாயையுடைய பாம்பாடுகிற சடையனை, திரிபுரங்கள் வேவ எய்தானை - முப்புரங்கள் வேகும் படி அம்பெய்தவனை, எறி - அலைவீசுகிற, கெடிலம் - கெடிலநதி சூழ்ந்த, வட வீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைபோதும்- அற்பகாலமும், யான் இகழ்வன்போல் - நானிகழ்வேனே எ-று.

(பொ-ரை.) கொடிதாகிய வினையாகிய கடலில் தடுமாறுகிற உயிர்க்கு மிக வும் இரக்கங்கொண்டு வீடு பேறாகிய செல்வத்தை தந்தவனை, பிஞ்ஞகத்தையு டையவனை, மேகம்போலும் கண்டத்தோடு அஷ்டபுஜங்களையுமுடைய எம்பி ரானை, ஒருபக்கம் பெண் கூறு செய்து கொண்டவனை, செக்கர்வானத்தின் நிற முடையவனை, விஷாக்நியுள்ள வாயையுடைய பாம்பாடுகிற சடையனை, முப்புரங்கள் வேகும்படி அம்பெய்தவனை, அலைவீசுகிற கெடில நதிசூழ்ந்த வட வீரட்டத்துவாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனே.

(க-ரை.) திருவதிகைத் திருவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனேவென்பதாம்.

(வி-ரை.) வினைக்கடல்-வினைப்பயனாகிய கடல். பிஞ்ஞகன் - தலைக்கோல முடையவன். நவிலும் - ஞவிலும் என நகரத்திற்கு ஞகரம் போலியாயிற்று. செக்கர்வான் - செவ்வானம். (7)

**பொன்னானைமயிலூர்திமுருகவேள்தாதை**
**பொடியாடுதிருமேனிநெடுமாறன்முடிமேற்**
**றென்னனைக்குடபாலின்வடபாலின்குணபாற்**
**சேராதசிந்தையான்செக்கர்வானந்தி**
**யன்னானையமரர்கடம்பெருமானைக்கருமானி**
**னுரியானையதிகைமாநகருள்வாழ்பவனை**
**யென்னானையெறிகெடிலவடவீரட்டானத்**
**துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.**

(ப-ரை.) பொன்னானை - பொன்போல்பவனை, மயில் ஊர்தி முருகவேள் தாதை - மயில் வாகனத்தையுடைய முருகக்கடவுளின் தந்தை, பொடியாடு திரு மேனி - திருநீறணிந்த திருமேனியையுடைய, நெடுமாறன்முடிமேல் - நெடுஞ் செழியன் முடிமீது, தென்னனை-அழகனை, குடபாலின் வடபாலின் குணபால் சேராத சிந்தையான்—, செக்கர்வான் அந்தி அன்னானை - அந்திப்பொழுதிற் காணப்படுகிற செவ்வானத்தை நிகர்த்தவனை, அமரர்கள் பெருமானை-தேவர்கள் பெருமானை, கருமானின் உரியானை - யானைத்தோலையுடையவனை, அதிகைமா நகருள் வாழ்பவனை-அதிகைநகரில் வாழ்பவனை, என் ஆனை-என் இடபத்தை, எறி - அலைவீசுகிற, கெடிலம் - கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறை வானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைப்பொழுதும் - அற்பகாலமும் யான் இகழ்வேனே - நானிகழ்வேனே எ-று.

(**போ-ரை.**) பொன்போல்பவனை, மயில்வாகனத்தையுடைய முருகக்கடவுளின் தந்தை, திருநீறணிந்த திருமேனியையுடைய நெடுஞ்செழியன் முடிமீது அழகனை, குடபாலின் வடபாலின் குணபால் சேராத சிந்தையான், அந்திப்பொழுதிற் காணப்படுகிற செவ்வானத்தை நிகர்த்தவனை, தேவர்கள் பெருமானை, யானைத்தோலையுடையவனை, அதிகைமா நகருள் வாழ்பவனை, என் இடபத்தை, அலைவீசுகிற கெடில நதிசூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனோ

(**க-ரை.**) திருவதிகைவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை, யான் இறைப்பொழுதும் இகழ்வேனோ வென்பதாம்.

(**வி-ரை.**) தென் - அழகு, தென்றிசையுமாம். குடபால் - மேற்றிசை. வடபால் - வடதிசை. குணபால் - கீழ்த்திசை. கருமாவின் உரி - யானைத்தோல்.

**திருந்தாதவாளவுணர்புரமூன்றும்வேவச்**
**சிலைவளைவித்தொருகணையாற்றொழில்பூண்ட சிவனைக்**
**கருந்தாளமதக்களிற்றி னுரியானைப்பெரிய**
**கண்மூன்று முடையானைக்கருதாதவரக்கன்**
**பெருந்தோள்கள்நாலைந்துமீரைந்துமுடியு**
**முடையானைப்பேயுருவமூன்றுமுறமலைமே**
**லிருந்தானையெறிகெடிலவடவீரட்டானத்**
**துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.**

(**ப-ரை.**) திருந்தாத-திருத்தமடையாத, வாள் அவுணர் புரமூன்றும் வேவ-வாளசுரர்களுடைய முப்புரங்களும் வெந்தொழிய, சிலை - மேருமலையை, வளைவித்து - வளையப்பண்ணி, ஒரு கணையால் தொழில்பூண்ட சிவனை - ஒருபாணத்தையேவின சிவபிரானை, கருந்தாள - கரிய அடியையுடைய, மதக்களிற்றின் உரியானை - மதயானைத்தோலையுடையவனை, பெரிய கண் மூன்றும் உடையானை - பெரிய மூன்றுகண்களையுடையவனை, கருதாத அரக்கன் - மதிக்காத இராவணாசுரனுடைய, பெருந்தோள்கள் நாலைந்தும் - பெரிய தோள்கள் இருபதும், ஈரைந்து முடியும் - பத்துத்தலைகளும், உடையானை - உடையவனாகிய ராவணனை, பேய்உருவம் மூன்றும் உறமலைமேல் இருந்தானை—, எறி - அலைவீசுகிற, கெடிலம் - கெடிலநதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைப்பொழுதும் - அற்பகாலமும், யான் இகழ்வேனோ - நானிகழ்வேனோ எ-று.

(**போ-ரை.**) திருத்தமடையாத வாளசுரர்களுடைய முப்புரங்களும் வெந்தொழிய மேருமலையை வளையப்பண்ணி ஒருபாணத்தையேவின சிவபிரானை, கரிய அடியையுடைய மதயானைத்தோலையுடையவனை, பெரிய மூன்று கண்களையுடையவனை, மதிக்காத இராவணாசுரனுடைய பெரிய தோள்கள் இருபதும் பத்துத்தலைகளும் உடையவனாகிய ராவணனை பேய் உருவம் மூன்றும் உறமலைமேல் இருந்தானை, அலைவீசுகிற கெடிலநதிசூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(க-ரை.) திருவதிகை வீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை யான் இறைப்பொழுதும் இகழ்வேனோவென்பதாம்.

(வி-ரை.) வாள்-கட்கம். அவுணர் முப்புரத்தரக்கர். புரம்மூன்று என்றது இரும்பு வெள்ளி பொன் என்பவற்றானியன்ற சங்கம நகரங்களை. ஒரு கணை - ஒப்பற்றபாணம், ஒற்றைக்கணையுமாம். (9)

என்பினையேகலனாகவணிந்தானையெங்க
 ளெருதேறும்பெருமானையிசைஞானிசிறுவன்
வன்பனையவளர்பொழில்சூழ்வயனாவலூர்க்கோன்
 வன்றொண்டனாரூரன்மதியாதுசொன்ன
அன்பனையாவர்க்குமறிவரியவத்தர்
 பெருமானையதிகைமாநகருள்வாழ்பவனை
யென்பொன்னையெறிகெடில்வடவீரட்டானத்
 துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

(ப-ரை.) என்பினையே - எலும்பையே, கலன் ஆக அணிந்தானை - ஆபரணமாகப் பூண்டவனை, எங்கள் எருது ஏறும் பெருமானை - எமது விடையூர்தியை, (இசைஞானிசிறுவன்—, வன்பனைய - வலியபனைகளையுடைய, வளர் பொழில் சூழ்—, வயல் நாவலூர்க்கோன்—, வன்றொண்டன்—, ஆரூரன் - சுந்தரன்,) மதியாது சொன்ன—, அன்பனை - க்ருபாமூர்த்தியை, யாவர்க்கும் அறிவு அரிய – யாவர்க்கும் அறிய வொண்ணாத, அத்தர்பெருமானை - தேவர்பிரானை, அதிகைமாநகருள் வாழ்பவனை - அதிகைநகருள்வாழ்பவனை, என் பொன்னை - என் சுவர்ணத்தை, எறி - அலைவீசுகிற, கெடிலம் - கெடில நதிசூழ்ந்த, வடவீரட்டானத்து உறைவானை - வடவீரட்டானத்து வாழ்பவனை, இறைப்பொழுதும்- அற்பகாலமும், யான் இகழ்வேனோ - நானிகழ்வேனோ எ-று.

(பொ-ரை.) எலும்பையே ஆபரணமாகப் பூண்டவனை, எமது விடையூர்தியை, இசைஞானிசிறுவன் வலிய பனைகளையுடைய வளர்பொழில்சூழ் வயல் நாவலூர்க்கோன் வன்றொண்டன் சுந்தரன் மதியாதுசொன்ன க்ருபாமூர்த்தியை, யாவர்க்கும் அறியவொண்ணாத தேவர்பிரானை, அதிகைநகருள்வாழ்பவனை, என் சுவர்ணத்தை, அலைவீசுகிற கெடிலநதிசூழ்ந்த வடவீரட்டானத்து வாழ்பவனை அற்பகாலமும் நானிகழ்வேனோ.

(க-ரை.) திருவதிகைத் திருவீரட்டானத்துறையுஞ் சிவபெருமானை, யான் இறைப்பொழுதும் இகழ்வேனோவென்பதாம்.

(வி-ரை.) என்பு - எலும்பு. கலன் - ஆபரணம். பொன்னை-பொன்போல்பவனை. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டில் கெடிலநதிக்கு வடபக்கத்திலுள்ளது.

திரிபுரவிசயஞ்செய்த வீரட்டானம்.

சுவாமிபெயர் - அதிகைநாதர். தேவியார் - திருவதிகைநாயகி.

## திருத்தொண்டத்தொகை

பண்-கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்
இல்லையேயென்னாதஇயற்பகைக்குமடியேன்
இளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியே
னல்லிமென்முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.

(ப-ரை.) தில்லைவாழ் அந்தணர்தம் - தில்லைவாழ் அந்தணருடைய, அடியார்க்கும் அடியேன் - அடியவருக்கும் அடியேன், திருநீலகண்டத்துக் குயவனார்க்கு - திருநீலகண்டக் குயவருக்கு, அடியேன் - அடியேன், இல்லை என்னாத - இல்லையென்று சொல்லாத, இயற்பகைக்கும் - இயற்பகையாருக்கும், அடியேன் - அடியேன், இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் - இளையான்றன் குடிமாறனது அடியவருக்கும், அடியேன் - அடியேன், வெல்லுமாறு மிக வல்ல - வெல்லும் வழியில் மிகவல்லவராகிய, மெய்ப்பொருளுக்கு - மெய்ப்பொருளுடையனார்க்கு, அடியேன் - அடியேன், விரிபொழில்சூழ் - விரிந்த சோலைகள்சூழ்ந்த, குன்றையார் - குன்றையூரிலுள்ள, விறல்மிண்டர்க்கு-விறல்மிண்டநாயனார்க்கு, அடியேன் - அடியேன், அல்லி-அகவிதழ்களையுடைய, மெல்-மெல்லிய, அம்-அழகாகிய, முல்லைத்தார்-முல்லை மாலையணிந்த, அமர்நீதிக்கு - அமர்நீதிநாயனார்க்கு, அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) தில்லைவாழந்தணருடைய அடியவருக்கும் அடியேன், திருநீலகண்டக் குயவருக்கும் அடியேன், இல்லை என்று சொல்லாத இயற்பகையாருக்கும் அடியேன், இளையான்றன் குடிமாறனது அடியவருக்கும் அடியேன், வெல்லும் வழியில் மிக வல்லவராகிய மெய்ப்பொருளுடையனார்க்கு அடியேன், விரிந்த சோலைகள்சூழ்ந்த குன்றையூரிலுள்ள விறல்மிண்டநாயனார்க்கு அடியேன், அகவிதழ்களையுடைய மெல்லிய அழகாகிய முல்லைமாலையணிந்த அமர்நீதி நாயனார்க்கு அடியேன், ஆரூரன், ஆரூரிலெழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) தில்லைவாழந்தணர் முதல் அமர்நீதி நாயனாரிறுதியாயுள்ள அடியார்க்கு நானடியேன் என்பதாம்.

(வி-ரை.) தில்லைவாழந்தணர் - தில்லை மூவாயிரவர். இளையான்றன் என்பதில் தன் சாரியை. (1)

இலைமலிந்தவேல்நம்பியெறிபத்தர்க்கடியேன்
ஏனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பர்க்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளல்மானக்கஞ்சாற
னெஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்தபுனல்மங்கையானாயர்க்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.

**(ப-ரை.)** இலைமலிந்த - இலைவடிவினைப் பொருந்திய, வேல்-வேற்படையைத்தாங்கிய, நம்பி - குணபூர்த்தியுள்ள, எறிபத்தர்க்கு - எறிபத்தநாயனார்க்கு, அடியேன் - அடியேன், எநாதிநாதன் - எநாதிநாதனுடைய, அடியார்க்கும் - அடியவருக்கும், அடியேன் - அடியேன், கலைமலிந்தசீர் - நூலாராய்ச்சி மிகுந்த சிறப்பினையுடைய, நம்பி - குணபூர்த்தியுள்ள, கண்ணப்பர்க்கு - கண்ணப்ப நாயனார்க்கு, அடியேன் - அடியேன், கடவூரில் - திருக்கடவூரிலுள்ள, கலயன் - கலயநாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், மலைமலிந்ததோள் - மலைபோல் பருத்த தோள்களையுடைய, வள்ளல் - உதாரகுணமுள்ள, மானக்கஞ்சாறன்-மானக்கஞ்சாறநாயனார், எஞ்சாத - குறையாத, வாள் தாயன் - வாளையுடைய தாயநாயனார், (இவர்களுடைய) அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், அலைமலிந்த - அலைகள் மிகுந்த, புனல் - நீர்சூழ்ந்த, மங்கை - மங்கை நகரத்தையுடைய, ஆனாயர்க்கு - ஆனாயநாயனார்க்கு, அடியேன்–அடியேன், ஆரூரன் - ஆரூரான், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

**(பொ-ரை.)** இலைவடிவினைப் பொருந்திய வேற்படையைத்தாங்கிய குணபூர்த்தியுள்ள எறிபத்தநாயனார்க்கு அடியேன், எநாதிநாதனுடைய அடியவர்க்கும் அடியேன், நூலாராய்ச்சி மிகுந்த சிறப்பினையுடைய குணபூர்த்தியுள்ள கண்ணப்பநாயனார்க்கு அடியேன், திருக்கடவூரிலுள்ள கலயநாயனாரது அடியவர்க்கும் அடியேன், மலைபோல் பருத்த தோள்களையுடைய உதாரகுணமுள்ள மானக்கஞ்சாறநாயனார், குறையாத வாளையுடைய தாயநாயனார் இவர்களுடைய அடியவர்க்கும் அடியேன், அலைகள்மிகுந்த நீர்சூழ்ந்த மங்கைநகரத்தையுடைய ஆனாயநாயனார்க்கு அடியேன், ஆரூரன், ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

**(க-ரை.)** எறிபத்தர்முதல் ஆனாயரிறுதியாயுள்ள பத்தர்களுக்கு அடியேன் என்பதாம்.

**(வி-ரை.)** ஏனாதி நாதன்றன் என்பதில் தன் சாரியை. கலயன்றன் என்பதிலும் தன் சாரியை. (2)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்குமடியேன்
முருகனுக்கும்உருத்திரபசுபதிக்குமடியேன்
செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன்
மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்க
வெகுண்டெழுந்ததாதைதாள்மழுவினலெறிந்த
அம்மையாரடித்தண்டிப்பெருமானுக்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.

(ப-ரை.) மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் - மூன்றினுல் உலகத்தை யாண்ட மூர்த்திநாயனுர்க்கும், அடியேன் - அடியேன், முருகனுக்கும் - முருக நாயனுர்க்கும், உருத்திரபசுபதிக்கும்-உருத்திரபசுபதி நாயனுர்க்கும், அடியேன் - அடியேன், செம்மையே-செவ்வையாகவே, திருநாளைப்போவார்க்கும்-திருநாளைப் போவார் நாயனுர்க்கும், அடியேன்-அடியேன், திருக்குறிப்புத்தொண்டர்-திருக் குறிப்புத்தொண்ட நாயனுருடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், மெய்ம்மையே - மெய்ம்மையாகவே, திருமேனி - தன்திருமேனியி ஞல், வழிபடாநிற்க - சிவலிங்கத்தை வழிபடாநிற்க, வெகுண்டு எழுந்த தாதை யை - கோபித்தெழுந்த தன் தந்தையை, மழுவினுல் எறிந்த - மழுவினுல் வெட்டின, அம்மையான் - அழகுள்ளவனுகிய, அடி - அடித்தொண்டு பூண்ட, சண்டிப்பெருமானுக்கு - சண்டேசுரநாயனுர்க்கு, அடியேன் - அடியேன், ஆரூ ரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மா னுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) மூன்றினுல் உலகத்தையாண்ட மூர்த்திநாயனுர்க்கும் அடி யேன், முருகநாயனுர்க்கும் உருத்திரபசுபதி நாயனுர்க்கும் அடியேன், செவ்வை யாகவே திருநாளைப்போவார் நாயனுருக்கும் அடியேன், திருக்குறிப்புத்தொண்ட நாயனுருடைய அடியவர்க்கும் அடியேன், மெய்ம்மையாகவே தன் திருமேனி யினுல் சிவலிங்கத்தை வழிபடாநிற்க கோபித்தெழுந்த தன்தந்தையை மழுவினுல் வெட்டின அழகுள்ளவராகிய அடித்தொண்டுபூண்ட சண்டேசுர நாயனுருக்கு அடியேன், ஆரூரன், ஆரூரில் எழுந்தருளின அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) மூர்த்திநாயனுர்முதல் சண்டிப்பெருமா னிறுதியாயுள்ள அடியார் களுக்கு நான் அடியவன் என்பதாம்.

(வி-ரை.) மும்மை - மூன்று, அவை - விபூதி, உருத்திராக்கம், சடை என் பன. திருக்குறிப்புத் தொண்டர்தம் என்பதில் தம் சாரியை. திருமேனி - சிவ பிரானது திருவுருவாகிய சிவலிங்கமென்றுரைத்தலுமாம். (3)

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைதன்னடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பர்க்கும்பேயார்க்குமடியே

ஞொருநம்பியப்பூதியடியார்க்குமடியே
னொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியே
னருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.

(ப-ரை.) திருநின்ற செம்மையே - திருவருளாகிய நிலைபெற்ற செல்வத்தையே, செம்மையாக்கொண்ட - செல்வமாகக்கொண்ட, திருநாவுக்கரையன் - திருநாவுக்கரசு நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், பெருநம்பி - பெரியகுணபூர்த்தியுள்ள, குலச்சிறை - குலச்சிறை நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், பெருமிழலைக் குறும்பர்க்கும்-பெருமிழலைக்குறும்பநாயனார்க்கும், பேயார்க்கும் - பேயுருவாகிய காரைக்காலம்மையார்க்கும், அடியேன் – அடியேன், ஒரு - ஒப்பற்ற, நம்பி - குணபூர்த்தியுள்ள, அப்பூதி - அப்பூதிநாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் – அடியேன், ஒலிபுனல்சூழ் - சத்திக்கின்ற நீர்சூழ்ந்த, சாத்தமங்கை - சாத்தமங்கையிலுள்ள, நீலநக்கர்க்கு - திருநீலநக்க நாயனார்க்கு, அடியேன் – அடியேன், அரு - அருமையாகிய, நம்பி - குணபூர்த்தியுள்ள, நமிநந்தி – நமிநந்தி நாயனாரது, அடியார்க்கும் – அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) திருவருளாகிய நிலைபெற்ற செல்வத்தையே செல்வமாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனாரது அடியவர்க்கும் அடியேன், பெரிய குணபூர்த்தியுள்ள குலச்சிறைநாயனாரது அடியவர்க்கும் அடியேன், பெருமிழலைக் குறும்பநாயனார்க்கும், பேயுருவாகிய காரைக்காலம்மையார்க்கும் அடியேன், ஒப்பற்ற குணபூர்த்தியுள்ள அப்பூதிநாயனாரது அடியவர்க்கும் அடியேன், சத்திக்கின்ற நீர்சூழ்ந்த சாத்தமங்கையிலுள்ள திருநீலநக்க நாயனார்க்கும் அடியேன் அருமையாகிய குணபூர்த்தியுள்ள நமிநந்திநாயனாரது அடியவர்க்கும் அடியேன், ஆரூரன் ஆரூரில் எழுந்தருளின அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) திருநாவுக்கரையன்முதல் நமிநந்தி யிறுதியாயுள்ள அடியார்களுக்கு அடியேன் என்பதாம்.

(வி-ரை.) செம்மையாக்கொண்ட - செந்நெறியாகக்கொண்ட எனினுமாம். திருநாவுக்கரையன்றன் குலச்சிறைதன் என்பவற்றிலுள்ள தன் சாரியை. (4)

வம்பறுவரிவண்டுமணநாறமலரு
மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணு
எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேன்
ஏயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியே
னம்பிரான்திருமூலனடியார்க்குமடியே
னாட்டமிகுதண்டிக்குமூர்க்கர்க்குமடியேன்
அம்பரான்சோமாசிமாறனுக்குமடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.

(ப-ரை.) வம்பு அறு - வாசனைநீங்காத, வரிவண்டு-கீற்றுகளையுடைய வண்டுகள், மணம் நாற - மணம் வீசும்படி, மலரும் - மலர்கின்ற, மது - தேனையுடைய, நல் - அழகாகிய, மலர் கொன்றையான்-கொன்றைமாலையை யணிந்தவனாகிய சிவபெருமானது, அடி அல்லால் - திருவடியல்லது, பேணு - வேறொன்றை விரும்பாத, எம்பிரான் - எம்பிரானாகிய, சம்பந்தன் - சம்பந்தரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஏயர்கோன் கலிக்காமன் - ஏயர்கோன் கலிக்காம நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், நம்பிரான் - நம்பெருமானாகிய, திருமூலன் - திருமூல நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், நாட்டம் மிகு - தியானம் மிகுந்த, தண்டிக்கும் - தண்டி நாயனார்க்கும், மூர்க்கற்கும் - மூர்க்கநாயனார்க்கும், அடியேன் - அடியேன், அம்பரான்-அம்பரில் அவதரித்த, சோமாசிமாறனுக்கும் - சோமாசிமாற நாயனார்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில், அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) வாசனைநீங்காத கீற்றுகளையுடைய வண்டுகள் மணம்வீசும்படி மலர்கின்ற தேனையுடைய அழகாகிய கொன்றைமலர்மாலையை யணிந்தவனாகிய சிவபெருமானது திருவடியல்லது வேறொன்றை விரும்பாத எம்பிரானாகிய சம்பந்தரது அடியவர்க்கும் அடியேன், ஏயர்கோன் கலிக்காமநாயனாரது அடியவர்க்கும் அடியேன், நம்பெருமானாகிய திருமூலநாயனாரது அடியவர்க்கும் அடியேன், தியானம்மிகுந்த தண்டிநாயனார்க்கும் மூர்க்கநாயனார்க்கும் அடியேன், அம்பரிலவதரித்த சோமாசிமாற நாயனார்க்கும் அடியேன், ஆரூரன் ஆரூரிலெழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) சம்பந்தர்முதல் சோமாசிமாற னீறாயுள்ள அடியார்க்கு அடியேன் என்பதாம்.

(வி-ரை.) வம்பு - சண்டை (தேன் காரணமாக வுண்டாகுஞ் சண்டை.) வரிவண்டு - பாட்டுப்பாடுகிற வண்டு எனினுமாம். (5)

**வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலே**
**மறவாதுகல்லெறிந்தசாக்கியர்க்குமடியேன்**
**சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்**
**செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டர்க்கடியேன்**
**கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன்**
**கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியே**
**னார்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியேன்**
**ஆரூரனாரூரிலம்மானுக்காளே.**

(ப-ரை.) வார்கொண்ட-கச்சணிந்த, வனமுலையாள் - அழகாகிய ஸ்தனங்களையுடையவளாகிய, உமைபங்கன் - உமைபங்காளனாகிய சிவபெருமானது,

கழலே - திருவடியையே, மறவாது - மறவாமல், கல் எறிந்த - கல்லாலெறிந்த, சாக்கியர்க்கும் - சாக்கிய நாயனர்க்கும், அடியேன் - அடியேன், சீர் கொண்ட புகழ் - சிறப்பைக்கொண்ட புகழினையுடைய, வள்ளல் உதாரகுணமுள்ள, சிறப் புலிக்கும் - சிறப்புலி நாயனர்க்கும், அடியேன் - அடியேன், செங்காட்டங்குடி மேய - செங்காட்டங்குடியில் வாழ்ந்த, சிறுத்தொண்டர்க்கு - சிறுத்தொண்ட நாயனர்க்கு, அடியேன் — அடியேன், கார்கொண்ட கொடை - மேகம்போன்ற கொடையினையுடைய, கழறிற்றறிலார்க்கும்-கழறிற்றறிவார் நாயனர்க்கும், அடியேன் - அடியேன், கடல்காழி - கடல்சூழ்ந்த சீகாழியிலுள்ள - கணநாதன் - கணநாதநாயனருடைய, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆர்கொண்ட - கூர்மையைக்கொண்ட, வேல்கூற்றன் களந்தைக்கோன் - வேற்படையையுடைய களந்தைக்கோனகிய கூற்றுவநாயனர்க்கு, அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள்-ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(**பொ-ரை.**) கச்சணிந்த அழகாகிய ஸ்தனங்களையுடையவளாகிய உமை பங்காளனுகிய சிவபெருமானது திருவடியையே மறவாமல் கல்லாலெறிந்த சாக்கிய நாயனர்க்கும் அடியேன், சிறப்பைக்கொண்ட புகழினையுடைய உதாரகுணமுள்ள சிறப்புலி நாயனர்க்கும் அடியேன், செங்காட்டங்குடியில் வாழ்ந்த சிறுத்தொண்ட நாயனர்க்கும் அடியேன், மேகம்போன்ற கொடையினையுடைய கழறிற்றறிவார் நாயனர்க்கும் அடியேன், கடல் சூழ்ந்த சீகாழியிலுள்ள கணநாத நாயனருடைய அடியவர்க்கும்அடியேன், கூர்மையைக்கொண்ட வேற்படையையுடைய களந்தைக்கோனகிய கூற்றுவநாயனருக்கும் அடியேன், ஆரூரன், ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(**க-ரை.**) சாக்கியர் முதல்களந்தைக்கோ னிறுதியாயுள்ள அடியார்க்கு அடியேன் என்பதாம்.

(**வி-ரை.**) வனம்-நிறம் எனினும் சந்தனக்கோலம் எனினுமமையும், கார் கொண்ட கொடை — கைம்மாறு வேண்டாத கொடை. (6)

**பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்**
**பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழர்க்கடியேன்**
**மெய்யடியனரசிங்கமுனையரையர்க்கடியேன்**
**விரிதிரைசூழ்கடனகையதிபத்தர்க்கடியேன்**
**கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்கழற்**
**சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன்**
**ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியேன்**
**ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே.**

(**ப-ரை.**) பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் — பொய்யடிமையில்லாத புலவர்கட்கும், அடியேன் அடியேன், பொழில்-சோலைகள் சூழ்ந்த, கருவூர் துஞ்சிய - கருவூரில் தங்கிய, புகழ் சோழர்க்கு - புகழ்ச்சோழ நாயனர்க்கு, அடி

யேன் - அடியேன், மெய் அடியன் - மெய்யடியவனாகிய, நரசிங்கமுனை அரையர்க்கு - நரசிங்கமுனையரைய நாயனார்க்கு, அடியேன் - அடியேன், விரிதிரை சூழ்கடல்-விரிந்த அலைகள்சூழ்ந்த கடலால் வளைக்கப்பட்ட, நாகை-திருநாகையில் அவதரித்த, அதிபத்தர்க்கு-அதிபத்தநாயனார்க்கு, அடியேன் - அடியேன், கைதடிந்த-கைவெட்டின, வரிசிலையான்-நீண்ட வில்லையுடையவனாகிய, கலிக்கம்பன்-கலிக்கம்பநாயனார், கலியன் - கலியநாயனார், கழற்சத்தி - வீரக்கழலையணிந்த சத்திநாயனாராகிய, வரிஞ்சையர்கோன் - வரிஞ்சையர்க்கரசன், (ஆகிய இவர்களுடைய) அடியார்க்கும் — அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஐயடிகள் காடவர்கோன் - ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் — ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) பொய்யடிமையில்லாத புலவர்கட்கும் அடியேன், சோலைகள் சூழ்ந்த கருவூரில் தங்கிய புகழ்ச்சோழநாயனாருக்கு அடியேன், மெய்யடியவனாகிய நரசிங்கமுனையரைய நாயனார்க்கு அடியேன், விரிந்த அலைகள் சூழ்ந்த கடலால் வளைக்கப்பட்ட திருநாகையிலவதரித்த அதிபத்தநாயனார்க்குஅடியேன், கைவெட்டின நீண்ட வில்லையுடையவனாகிய கலிக்கம்பநாயனார் கலியநாயனார் வீரக்கழலையணிந்த சத்திநாயனாராகிய வரிஞ்சையர்க்கரசன் ஆகிய இவர்களுடைய அடியவர்க்கும் அடியேன், ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது அடியவர்க்கும் அடியேன், ஆரூரன், ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) பொய்யடிமை யில்லாத புலவர்முதல் ஐயடிகள் காடவர்கோன் இறுதியாயுள்ள அடியார்க்கும் அடியேன் என்பதாம்.

(வி-ரை.) பொய்யடிமையில்லாத என்றமையால் மெய்யடிமை யெனப் பொருள் கூறுக. தடிதல் - வெட்டுதல். (7)

**கறைக்கண்டன் கழலடியேகாப்புக்கொண்டிருந்த**
**கணம்புல்லநம்பிக்குங் காரிக்குமடியே**
**னிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற**
**நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்**
**துறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்**
**தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியே**
**னறைக்கொண்டவேல்நம்பிமுனையடுவார்க்கடியேன்**
**ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.**

(ப-ரை.) கறைக்கண்டன் - விஷகண்டத்தையுடைய சிவ பெருமானது, கழல் - வீரக்கழலணிந்த, அடியே - திருவடியையே, காப்புகொண்டு இருந்த - காவலாகக்கொண்டிருந்த, கணம்புல்ல நம்பிக்கும் - கணம்புல்ல நாயனார்க்கும், காரிக்கும் - காரியநாயனார்க்கும், அடியேன் - அடியேன், நிறைக்கொண்ட சிந்தையான் - நிறைவைக்கொண்ட மனத்தையுடையவனாகிய, நெல்வேலிவென்ற- நெல்வேலி என்னும் ஊரில் மேம்பட்ட, நின்றசீர் - நிலைபெற்ற சிறப்பினை

யுடைய, நெடுமாறன் - நெடுமாற நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், துறைக்கொண்ட - துறைகளிலுள்ள, செம்பவளம் - சிவந்த பவளம், இருள் அகற்றும் - இருளைநீக்குகிற, சோதி - ஒளியுள்ள, தொல்மயிலை - பழையதாகிய திருமயிலையில் அவதரித்த, வாயிலார் - வாயிலார் நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், அறைக் கொண்டவேல் - அறுத்தலைத் தன்னிடத்தே கொண்டிருக்கின்ற வேற்படையை யுடைய, நம்பி - குணபூர்த்தியுள்ள, முனையடுவார்க்கு - முனையடுவார் நாயனார்க்கு, அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) விஷகண்டசடையுடைய சிவபெருமானது வீரக்கழலணிந்த திருவடியையே காவலாகக் கொண்டிருந்த, கணம்புல்லநாயனார்க்கும் காரிநாய னார்க்கும், அடியேன், நிறைவைக்கொண்ட மனத்தையுடையவனாகிய நெல் வேலி என்னும் ஊரில் மேம்பட்ட நிலைபெற்ற சிறப்பினையுடைய நெடுமாற நாயனாரது அடியவர்க்கும் அடியேன், துறைகளிலுள்ள சிவந்த பவளம் இருளை நீக்குகின்ற ஒளியுள்ள பழையதாகிய திருமயிலையிலவதரித்த வாயிலார் நாயனா ரது அடியவர்க்கும் அடியேன், அறுத்தலைத் தன்னிடத்தே கொண்டிருக்கின்ற வேற்படையையுடைய குணபூர்த்தியுள்ள முனையடுவார் நாயனார்க்கு அடியேன், ஆரூரன் ஆரூரிலெழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) கணம்புல்ல நம்பிமுதல் முனையடுவார் நாயனாரீறுயுள்ள அடியா ரெல்லார்க்கும் அடியேன் என்பதாம்.

(வி-ரை.) நிறை - வரம்புகடவாமை. அறை - அறுத்தல். பகுதி - அறு. ஐ - தொழிற்பெயர் விகுதி. (8)

**கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்**
**காடவர்கோன் கழற்சிங்கனடியார்க்குமடியேன்**
**மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை**
**மன்னவனாஞ்செருத்துணை தன்னடியார்க்குமடியேன்**
**புடைசூழ்ந்தபுலியதள்மேலரவாடவாடி**
**பொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியேன்**
**அடல்சூழ்ந்தவேல்நம்பிகோட்புலிக்குமடியேன்**
**ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.**

(ப-ரை.) கடல் சூழ்ந்த உலகுஎல்லாம் - கடல்வளைந்த உலகமுழுதும், காக் கின்ற பெருமான் - காக்கின்ற பெருமையுடையோனாகிய, காடவர்கோன் - காடவர்கோன், கழற்சிங்கன் - கழற்சிங்கன், (இவர்களுடைய) அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், மடல் சூழ்ந்ததார் - இதழ்களையுடைய பூமாலையணிந்த, நம்பி — குணபூர்த்தியுள்ள, இடங்கழிக்கும்-இடங்கழிநாயனார்க் கும், தஞ்சை மன்னவன் ஆம் - தஞ்சைக்கு அரசனாகிய, செருத்துணை தன் -

செருத்துணைநாயனருடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், புடைசூழ்ந்த - பக்கத்தில்வளைந்த, புலி அதள்மேல் - புலித்தோலின் மீது, அரவு ஆட - பாம்பாட, ஆடி - நடனஞ்செய்வோனாகிய சிவபெருமானது, பொன்அடிக்கே - பொன்போலுந் திருவடியினிடத்தே, மனம்வைத்த - மனத்தைவைத்த, புகழ்த்துணைக்கும் - புகழ்த்துணை நாயனார்க்கும், அடியேன் - அடியேன், அடல்சூழ்ந்த - வெற்றிபொருந்திய, வேல் - வேற்படையையுடைய, நம்பி - குணபூர்த்தியுள்ள, கோட்புலிக்கும் - கோட்புலிநாயனார்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பொ-ரை.) கடல்வளைந்த உலகமுழுதும் காக்கின்ற பெருமையுடையோனாகிய காடவர்கோன் கழற்சிங்கன் இவர்களுடைய அடியவர்க்கும் அடியேன், இகழ்களையுடைய பூமாலையணிந்த குணபூர்த்தியுள்ள இடங்கழி நாயனார்க்கும், தஞ்சைக்கு அரசனாகிய செருத்துணை நாயனாருடைய அடியவர்க்கும் அடியேன், பக்கத்தில் வளைந்த புலித்தோலின்மீது பாம்பாட நடனஞ்செய்வோனாகிய சிவபெருமானது பொன்போலுந் திருவடியினிடத்தே மனத்தைவைத்த புகழ்த்துணை நாயனார்க்கும் அடியேன், வெற்றிபொருந்திய வேற்படையையுடைய குணபூர்த்தியுள்ள கோட்புலிநாயனார்க்கும் அடியேன், ஆரூரன், ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(க-ரை.) காடவர்கோன் முதல் கோட்புலி யீறாயுள்ள அடியார்க்கு அடியேன் என்பதாம்.

(வி-ரை.) அடல் - கொல்லுதற்றொழில் எனினுமாம். (9)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
  பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
  திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்
  முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன்
அப்பாலுமடிச்சார்ந்தவடியார்க்குமடியேன்
  ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே.

(ப-ரை.) பத்தர் ஆய் - பத்தர்களாகி, பணிவார்கள் எல்லார்க்கும் - வணங்குவோரெல்லார்க்கும், அடியேன் - அடியேன், பரமனையேபாடுவார் - பரமனையேபாடுவாருடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், சித்தத்தை சிவன்பாலே வைத்தார்க்கும் - மனத்தைச் சிவனிடத்திலே வைத்தவர்க்கும், அடியேன் - அடியேன், திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் - திருவாரூரில் பிறந்தவர்களெல்லாருக்கும், அடியேன் - அடியேன், முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு - முப்போதும் திருமேனிதீண்டுவார்க்கு, அடியேன்-

அடியேன், முழுநீறுபூசிய முனிவர்க்கும் - முழுநீறுபூசிய முனிவருக்கும், அடியேன் - அடியேன், அப்பாலுமடிசார்ந்த அடியார்க்கும் - அப்பாலுமடிசார்ந்த அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை எ-று.

(பேர்-ரை.) பத்தர்களாகி வணங்குவோரெல்லார்க்கும் அடியேன், பரமனையே பாடுவாருடைய அடியவர்க்கும் அடியேன், மனத்தை சிவனிடத்தே வைத்தவர்க்கும் அடியேன், திருவாரூரில் பிறந்தவர்களெல்லாருக்கும்அடியேன், முப்போதும் திருமேனிதீண்டுவார்க்கும் அடியேன், முழுநீறுபூசிய முனிவருக்கும் அடியேன், அப்பாலு மடிசார்ந்த அடியவர்க்கும் அடியேன், ஆரூரன், ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை.

(கு-ரை.) பத்தராய்ப் பணிவார்முதல் அப்பாலு மடிசார்ந்தாரீறாயுள்ள அடியாரெல்லார்க்கும் அடியேன் என்பதாம்.

(வி-ரை) பத்தர் - அன்பர். பரமன் - மேலானவன். முப்போது - காலை மாலை பகல். (10)

**மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்**
**வரிவளையாள்மானிக்கும்நேசனுக்குமடியேன்**
**தென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்**
**திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே**
**னன்னவனாமரனடியேயடைந்திட்டசடைய**
**னிசைஞானிகாதலன் திருநாவலூர்க்கோ**
**னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா**
**ராரூரிலம்மானுக்கன்பராவாரே.**

(ப-ரை.) மன்னியசீர் - நிலைபெற்ற சிறப்பினையுடைய, மறை - வேதத்தில் வல்ல, நாவல் நின்றவூர் - நாவலூரையுடைய, பூசல் - பூசலார்க்கும், வரிவளையாள் - வரிவளையையணிந்தவளாகிய, மானிக்கும் - மானிக்கும், நேசனுக்கும் - நேசநாயனார்க்கும், அடியேன்-அடியேன், தென்னவனாய்-பாண்டியனாகி, உலகு ஆண்ட - உலகத்தையாண்ட, செங்கணார்க்கு - செங்கணார்க்கு, அடியேன் - அடியேன், திருநீலகண்டத்துப் பாணனார்க்கு - திருநீலகண்டத்துப் பாணனாருக்கு, அடியேன் - அடியேன், அன்னவனாம் - அன்னவனாகிய, அரன் அடியே - சிவனடியையே, அடைந்திட்ட - சரணாகவடைந்த, சடையன் - சடையனார், இசைஞானி - இசைஞானியார், (இவர்களுக்கு) காதலன் - புதல்வன், நாவலூர் கோன் - நாவலூருக்கதிபன், அன்னவன் ஆரூரன் - அத்தன்மையனாகிய ஆரூரன், (அவனது) அன்மை - அன்மைத்திறத்தை, கேட்டு உவப்பார் - கேட்டு மகிழ்வோர், ஆரூரில் - திருவாரூரிலெழுந்தருளிய, அம்மானுக்கு - சிவபெருமானுக்கு, அன்பர் ஆவார் - அன்பராவார்கள் எ-று.

(பொ-ரை.) நிலைபெற்ற சிறப்பினையுடைய வேதத்தில் வல்ல நாவலூரை யுடைய பூசலார்க்கும், வரிவளையை யணிந்தவளாகிய மானிக்கும் நேசனார்க்கும் அடியேன், பாண்டியனாகி உலகத்தையாண்ட செங்கணார்க்கு அடியேன், திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன், அன்னவனாகிய சிவனடியையே சாரணாகவடைந்த சடையனார் இசைஞானியார் இவர்களுக்கு புதல்வன், நாவலூருக் கதிபன் அத்தன்மையனாகிய ஆரூரன், அவனது அடிமைத்திறத்தைக் கேட்டு மகிழ்வோர் திருவாரூரி லெழுந்தருளிய சிவபெருமானுக்கு அன்பராவார்கள்.

(க-ரை.) பூசலார் முதலாயுள்ள அடியா ரெல்லார்க்கும் அடியேன் என்பதாம்.

(வி-ரை.) வரிவளை-கீற்றுக்களையுடைய வளையல். அரன் என்பதற்கு அன்பரது பாவத்தை யறுப்பவனென்றும், இறுதிக்காலத்தில் எல்லாப்பொருள்களையும் சங்கரிப்பவன் என்றும் பொருளுரைத்துக்கொள்க. (11)

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூர்ப் பரவையார் திருமாளிகையிலிருந்து வீதிவிடங்கப்பெருமானை தரிசிக்கும்பொருட்டு ஆலயத்துக்கு எழுந்தருளும்போது தேவாசிரியமண்டபத்தில் வீற்றிருக்குஞ் சிவனடியார்களை யுள்ளத்தால் வணங்கி இவர்களுக்கு நானடியேனாகும்படி சிவபெருமான் எப்பொழுது திருவருள் செய்வாரென்று செல்லுகையில் பரமசிவம் எதிரில் தரிசனங் கொடுத்தருளித் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்குமடியே" னென்று முதலடி யெடுத்துக்கொடுக்கப் பாடித் துதிசெய்த பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கானாட்டுமுள்ளூர்

பண்-கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**வள்வாயமதிமிளிரும்வளர்சடையினானை**
**மறையவனைவாய்மொழியைவானவர்தங்கோனைப்**
**புள்வாயைக்கீண்டுலகம்விழுங்கியுமிழ்ந்தானைப்**
**பொன்னிறத்தின் முப்புரி நூலானைமுகத்தினானை**
**முள்வாயமடல்தழுவிமுடத்தாழையீன்று**
**மொட்டலர்ந்துவிரைநாறுமுருகுவிரிபொழில்சூழ்**
**கள்வாயகருங்குவளைகண்வளருங்கழனிக்**
**கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே**

(ப-ரை.) வள்வாய - வளவிய இடத்தையுடைய, மதி - இளம்பிறை, மிளிரும் - விளங்குகிற, வளர் - நீண்ட, சடையினானை - சடையையுடையவனை, மறையவனை - வேதியனை, வாய்மொழியை - வாக்குருவாயிருப்பவனை, வானவர்

தம்கோனை - தேவர்பெருமானை, புள்வாயைக்கீண்டு உலகம் விழுங்கி உமிழ்ந்தானை - திருமாலை, பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை-பிரமனை, முள்வாயமடல் தழுவி - முள்வாயினையுடைய மடல்களைப்பொருந்தி, முடத்தாழை ஈன்று-வளைவாகிய தாழையினால் தரப்பெற்று, மொட்டுஅலர்ந்து - மொட்டு விரிந்து, விரைநாறும் - வாசனைவீசுகிற, முருகு விரிபொழில் சூழ் - தேன்பெருகும் சோலைசூழ்ந்த, கள்வாய - தேனைத்தன்னிடத்திற் கொண்டிருக்கிற, கருங்குவளை - நீலமலர்கள், கண்வளரும் - உறங்குகிற, கழனி - வயல்சூழ்ந்த, கானாட்டுமுள்ளூரில் - திருக்கானாட்டு முள்ளூரில், கண்டு தொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பொ-ரை.) மதிமிளிரும் சடையானை, வேதியனை, வாக்குருபமா யிருப்பவனை, தேவர்கோனை, திருமாலை, பிரமனை, தாழைமொட்டுவிரிந்து வாசனை வீசுகிற சோலைகள் சூழ்ந்த, கருங்குவளைமலர்கள் கண்வளர்கிற கழனிகளையுடைய, கானாட்டுமுள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(க-ரை.) மதிமிளிரும் சடைமுதலியவற்றையுடைய சிவபிரானை, கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன், யான் என்பதாம்.

(வி-ரை.) சடையானைக் கானாட்டுமுள்ளூரிற் கண்டு தொழுதேன் என வியைத்துரைத்துக்கொள்க. நான் என்னும் வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. திருமால் பிரமன் முதலிய எல்லாவுருவும் சிவபிரானே யென்ப திச்செய்யுளாற் போந்தபொருள். வானவர்தம்கோன் - இந்திரன். (1)

ஒருமேகமுகிலாகியொத்துலகந்தானா
  யூர்வனவுநிற்பனவுமூழிகளுந்தானாய்ப்
பொருமேவுகடலாகிப்பூதங்களைந்தாய்ப்
  புனைந்தவனைப்புண்ணியனைப்புரிசடையினானைத்
திருமேவுசெல்வத்தார்தீமூன்றும்வளர்த்த
  திருத்தக்கவந்தணர்களோதுநகரெங்குங்
கருமேதிசெந்தாமரைமேயுங்கழனிக்
  கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.

(ப-ரை.) ஒரு மேகமுகில் ஆகி - ஒப்பற்றமேகமென்கிற முகிலாகி, ஒத்த உலகம்தான் ஆய் - பொருந்திய உலகங்களும் தானேயாகி, ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளும் தான்ஆய் - தவழ்வனவும் நிற்பனவும் கற்பங்களும் தானேயாகி, பொருமேவுகடல் ஆகி — அலைமோதுகிற கடலாகி, பூதங்கள் ஐந்தாய் - பஞ்ச பூதங்களாகி, புனைந்தவனை - அலங்கரிக்கப்பெற்றவனை, புண்ணியனை - அறவடிவனை, புரிசடையினானை - முறுக்கப்பட்ட சடையையுடையவனை, திருமேவு செல்வத்தார் - அழகாகிய செல்வர்கள், தீமூன்றும் வளர்த்த - முத்தீயும் வளர்த்த, திருத்தக்க அந்தணர்கள் ஓதும் நகர் எங்கும்-அழகுபொருந்திய வேதியர் வேதமோதுகிற நகர்முழுதும், கருமேதி செந்தாமரைமேயும்கழனி - காரெ

ருமைகள் செந்தாமரை மலரைமேய்கின்ற வயல்கள் சூழ்ந்த, கானாட்டுமுள்ளூரில் - திருக்கானாட்டு முள்ளூரில், கண்டுதொழுதேன் - கண்டு வணங்கினேன் எ - று.

**(போ-ரை.)** ஒப்பற்ற மேகமென்கிற முகிலாகி, பொருந்திய உலகங்களும் தானேயாகி, தவழ்வனவும் நிற்பனவும் கற்பங்களும் தானேயாகி, அலைமோதுகிற கடலாகி, பஞ்சபூதங்களாகி அலங்கரிக்கப்பெற்றவனை, அறவடிவனை, முறுக்கப்பட்ட சடையை யுடையவனை, அழகாகிய செல்வர்கள் முத்தீயும் வளர்த்த அழகுபொருந்திய வேதியர்கள் வேதமோதுகிற நகர்முழுதும், காரெருமைகள் செந்தாமரைமலரை மேய்கிற வயல்கள் சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

**(க-ரை.)** மேகமுதலிய பொருள்களாகி விளங்குஞ் சிவபிரானைத் திருக்கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழுதேன் என்பதாம்.

**(வி-ரை.)** ஒரு - ஒப்பற்ற ஊர்வன - எறும்புமுதலியன. பொரு - அலைமோதுதல், முதனிலைத் தொழிற்பெயர். தீ மூன்று என்றது யாகாக்கினி மூன்றினை. அவை—ஆகவநீயம், தக்ஷிணாக்நி, கார்ஹபத்யம் என்பன. திருத்தக்க-அழகுமிக்க. மேதி - எருமை. (2)

**இரும்புயர்ந்தமூவிலைய சூலத் தினானை**
**யிறையவனை மறையவனை யெண்குணத் தினானைச்**
**சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடுஞ்**
**சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை**
**யரும்புயர்ந்த வரவிந்தத் தனிமலர்களேறி**
**யன்னங்கள் விளையாடு மகன்றுறையி னருகே**
**கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்**
**கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.**

**(ப-ரை.)** இரும்பு உயர்ந்த மூவிலைய சூலத்தினானை - இரும்பாணியன்றுயர்ந்த முத்தலைச் சூலத்தையுடையவனை, இறையவனை - தலைவனை, மறையவனை-வேதியனை, எண் குணத்தினானை - எண்குணங்களையுடையவனை, சுரும்பு உயர்ந்த - வண்டுகள் மிகுதியாய் மொய்க்கிற, கொன்றையொடு தூமதியம் சூடும் சடையானை - கொன்றைமலரோடு தூயபிறையணிந்த சடையை யுடையவனை, விடையானை - இடபவாகனனை, சோதி என்னுஞ்சுடரை - சோதி யென்னும் ஒளியை, அரும்பு உயர்ந்த - அரும்புதல்மிகுந்த, தனி - ஒப்பற்ற, அரவிந்தமலர்கள் ஏறி - தாமரைமலர்களிலேறி, அன்னங்கள் விளையாடும்-அன்னப்பறவைகள் விளையாடுகிற, அகன் துறையின் அருகே - பெரிய துறைகளின் அயலில், கரும்பு உயர்ந்து-கருப்பங்காடு ஓங்கி, பெருஞ்செந்நெல் நெருங்கி விளைகழனி - பெரிய செந்நெல் நெருங்கி விளைகின்ற வயல்கள் சூழ்ந்த, கானாட்டுமுள்ளூரில் - திருக்கானாட்டு முள்ளூரில், கண்டுதொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பேர்-ரை.) இரும்பானியன் றுயர்ந்த முத்தலைச் சூலத்தையுடையவனை, தலைவனை, வேதியனை, எண்குணங்களை யுடையவனை, வண்டுகள் மிகுதியாய் மொய்க்கிற கொன்றைமலரோடு தூயபிறையணிந்த சடையை யுடையவனை, இடபவாகனனை, சோதியென்னும் ஒளியை, அருப்புதல் மிகுந்த ஒப்பற்ற தாமரைமலர்களிலேறி அன்னப்பறவைகள் விளையாடுகிற பெரிய துறைகளின் அயலில் கருப்பங்காடு ஓங்கி பெரிய செந்நெல் நெருங்கி விளைகின்ற வயல் சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டுவணங்கினேன்.

(க-ரை.) சூல முதலிய பொருள்களையுடைய சிவபிரானைத் திருக்கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) எண்குணமாவன-தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன.

**பூளைபுனைகொன்றையொடுபுரிசடையினானைப்**
**புனலாகியனலாகிப்பூதங்களைந்தாய்**
**நாளையின்றுநெருநலாயாகாசமாகி**
**நாயிறுய்மதியமாய்நின்றவெம்பரனைப்**
**பாளைபடுபைங்கமுகின்சூழலிளந்தெங்கின்**
**படுமதஞ்செய்கொழுந்தேறல்வாய்மடுத்துப்பருகிக்**
**காளைவண்டுபாடமயிலாலும்வளர்சோலைக்**
**கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.**

(ப-ரை.) பூளைபுரிகொன்றையொடு புரிசடையினானை - பூளைப்பூ விரும்பப்படுகிற கொன்றைமலரோடு தரித்து முறுக்கிய சடையை யுடையவனை, புனல் ஆகி - நீராகி, அனல் ஆகி - நெருப்பாகி, பூதங்கள் ஐந்துஆய் - ஐம்பூதங்களாகி, நாளை இன்று நெருநல் ஆய் - நாளையத்தினம் இன்றையத்தினம் நேற்றையத்தினமாகி, ஆகாசம் ஆகி - ஆகாசமாகி, நாயிறுஆய் - சூரியனாகி, மதியம் ஆய் நின்ற - சந்திரனாகிநின்ற, எம்பரனை - எம்பரமனை, பாளைபடு பைங்கமுகின் சூழல் - பாளைவிரிந்த பசிய கமுகஞ்சோலை, இளந்தெங்கின் - இளந்தென்னையின், படுமதம்செய்-உண்டாகிய மதத்தைச்செய்கிற, கொழுந்தேறல் - செழுந்தேனை, வாய்மடுத்துப் பருகி-வாய்வைத்துண்டு, காளைவண்டுபாட - இளவண்டுகள் பாடாநிற்க, மயில் ஆலும் - மயில்கள் ஆடுகிற, சோலை - சோலைசூழ்ந்த, கானாட்டுமுள்ளூரில் - திருக்கானாட்டு முள்ளூரில், கண்டுதொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பொ-ரை.) பூளைப்பூ விரும்பப்படுகிற கொன்றைமலரோடு தரித்து முறுக்கிய சடையையுடையவனை, நீராகி நெருப்பாகி ஐம்பூதங்களாகி நாளையத்தினம் இன்றையத்தினம் நேற்றையத்தினமாகி ஆகாசமாகி சூரியனாகி சந்திரனாகி நின்ற எமது பரமனை, பாளைவிரிந்த பசிய கமுகஞ்சோலை இளந்தென்னையின் உண்டாகிய மதத்தைச் செய்கிற செழுந்தேனை வாய் வைத்துண்டு இளவண்டு

கள் பாடாநிற்க, மயில்கள் ஆடுகிற சோலைசூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(க-ரை.) பூளைபுரி கொன்றையொடு புரிசடை முதலியவற்றை யுடைய சிவபெருமானைத் திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேன் என்பதாம்.

(வி-ரை) பூளை - பூளைப்பூ. புரி - முறுக்கு. நெருநல் - நேற்று. சூழல் - சோலை. மதம் - மயக்கம். தேறல் - தேன். (4)

செருக்குவாய்ப்பைங்கண்வெள்ளரவரையினானைத்
தேவர்கள்சூளாமணியைச்செங்கண்விடையானை
முருக்குவாய்மலரொக்குந்திருமேனியானை
முன்னிலைபாய்முழுதுலகமாயபெருமானை
யிருக்குவாயந்தணர்களெழுபிறப்புளெங்கும்
வேள்வியிருந்திருநிதியம்வழங்குநகரெங்கும்
கருக்குவாய்ப்பெண்ணையொடுதெங்குமலிசோலைக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.

(ப-ரை.) செருக்குவாய் பைங்கண் — சீறுகிற வாயையும் பசுங்கண்களையு முடைய, வெள் அரவு அரையினானை-வெண்பாம்புகளை அரையிற் கச்சையாகக் கட்டினவனை, தேவர்கள் சூளாமணியை - தெய்வசிகாமணியை, செங்கண் விடையானை - செவந்த கண்களையுடைய இடபத்தையுடையவனை, முருக்குவாய் மலர் ஒக்கும் திருமேனியானை - முருக்கமலர்போலுந் திருமேனியை யுடையவனை, முன்னிலையாய் முழுது உலகம் ஆய பெருமானை - உலகமுழுதுக்கும் சாக்ஷியாய்த் தானேயாகிய பெருமானை, இருக்குவாய் அந்தணர்கள் - மறைநாவினராகிய மறையவர்கள், எழுபிறப்புள் எங்கும்-எழுபிறப்பினுள் எவ்விடத்தும், வேள்வியிருந்து - யாகஞ்செய்திருந்து, இருநிதியம் வழங்கும் நகர் எங்கும் - பெரும்பொருள் வழங்குகிற நகர்முழுதும், கருக்குவாய் பெண்ணையொடு-வாயிற் கருக்குள்ள பனைமரங்களோடு, தெங்குமலிசோலை - தென்னமரங்களு மிகுந்த சோலைகள் சூழ்ந்த, கானாட்டுமுள்ளூரில் - திருக்கானாட்டுமுள்ளூரில், கண்டு தொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பொ-ரை) சீறுகிற வாயையும் பசுங்கண்களையுமுடைய வெண்பாம்புகளை அரையிற் கச்சையாகக் கட்டினவனை, தெய்வசிகாமணியை, செவந்த கண்களை யுடைய இடபத்தையுடையவனை, முருக்கமலர்போலுந் திருமேனியையுடையவனை, உலகமுழுதுக்கும் சாக்ஷியாய்த் தானேயாகிய பெருமானை, மறைநாவினராகிய மறையவர்கள் எழுபிறப்பினுள் எவ்விடத்தும் யாகஞ்செய்திருந்து பெரும்பொருள் வழங்குகிற நகர்முழுதும் வாயிற்கருக்குள்ள பனைமரங்களோடு தென்னமரங்களுமிகுந்த சோலைகள்சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(க-ரை.) திருவரையிற் பாம்பார்த்தல் முதலியவற்றையுடைய சிவபிரானைத் திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) செருக்குதல் - சீறுதல். சூளாமணி - சிகாமணி. முருக்கு - முருக்கமரம். இருக்கு - வேதத்தின் பொதுப்பெயர். வழங்கல்-கொடுத்தல். கருக்கு - இனங்கருக்கு. பெண்ணை - பனைமரம். (5)

விடையரவக்கொடியேந்தும்விண்ணவர்தங்கோனை
வெள்ளத்துமாலவனும்வேதமுதலானும்
அடியிணையுந்திருமுடியுங்காணவரிதாய
சங்கரனைத்தத்துவனைத்தையல்மடவார்க
ளுடையவிழக்குழலவிழக்கோதைகுடைந்தாடக்
குங்குமங்களுந்திவருகொள்ளிடத்தின்கரைமேற்
கடைகள்விடுவார்குவளைக்களைவாருங்கழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.

(ப-ரை.) விடை அரவக்கொடியேந்தும் - இடபக் கொடியையும் பாம்புக் கொடியையும் ஏந்துகிற, விண்ணவர் தம் கோனை - தேவர்பெருமானை, வெள்ளத்து மாலவனும் - பாற்கடலிற் றுயிலுந் திருமாலும், வேதமுதலானும் - பிரமனும், அடி இணையும் திருமுடியும் காண - இரண்டு திருவடியையும் திருமுடியையும் காண, அரிது ஆய சங்கரனை - அரிதாயிருந்த சிவபிரானை, தத்துவனை - மெய்யனை, தையல் மடவார்கள் உடை அவிழ - கைபுனையப்பட்ட மாதர்கள் ஆடையவிழவும், குழல் அவிழ-கூந்தல் அவிழவும், கோதை குடைந்தாட - மயிர்முடி மூழ்கியாடவும், குங்குமங்கள் உந்தி வரு கொள்ளிடத்தின் கரைமேல் - குங்குமக்குழம்பைக் கரைத்துக்கொண்டு வருகிற கொள்ளிட நதியின் கரைமீது, கடைகள் விடுவார் - இடங்கள் விடுவாரும், குவளைகளைவாரும் கழனி - குவளைகளைவாரும் பொருந்திய வயல்கள்சூழ்ந்த, கானாட்டு முள்ளூரில்-திருக்கானாட்டு முள்ளூரில், கண்டு தொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பொ-ரை.) இடபக்கொடியையும் பாம்புக்கொடியையும் ஏந்துகிற தேவர் பெருமானை, பாற்கடலிற் றுயிலுந் திருமாலும் பிரமனும் இரண்டு திருவடியையும் திருமுடியையும் காண்டற்கரிதாயிருந்த சிவபிரானை, மெய்யனை, கைபுனையப் பட்ட மாதர்கள் ஆடையவிழவும், கூந்தலவிழவும், மயிர்முடி மூழ்கியாடவும், குங்குமக்குழம்பைக் கரைத்துக்கொண்டு வருகிற கொள்ளிடநதியின் கரைமீது இடங்கள் விடுவாரும் குவளை களைவாரும் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருக் கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(க-ரை.) விடை அரவக்கொடியேந்தும் விண்ணவர்தம் கோனைத் திருக் கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) கோதை - பூமாலையுமாம். (6)

அருமணியைமுத்தினையானைஞ்சுமாடு
மமரர்கடம்பெருமானையருமறையின்பொருளைத்
திருமணியைத்தீங்கரும்பினூறலிருந்தேனைத்
தெரிவரியமாமணியைத்திகழ்தருசெம்பொன்னைக்
குருமணிகள்கொழித்திழிந்துசுழித்திழியுந்திரைவாய்க்
கோல்வளையார்குடைந்தாடுங்கொள்ளிடத்தின்கரைமேற்
கருமணிகள்போல்நீலமலர்கின்றகழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.

(ப-ரை.) அருமணியை - அரிதாகிய ரத்நத்தை, முத்தினை - முத்தை, ஆன் ஐஞ்சும் ஆடும் - பஞ்சகவ்வியங்களிலும் அபிஷேகம் செய்யப்படுகிற, அமரர்கள் தம் பெருமானை - தேவர்பெருமானை, அருமறையின் பொருளை - அரிய வேதார்த்தத்தை, திருமணியை - அழகிய மணியை, தீங்கரும்பின் ஊறல் இருந்தேனை - இனிய கருப்பஞ்சாறாகிய பெருந்தேனை, தெரிவு அரிய மாமணியை - அறிதற்கரிய பெரிய மணியை, திகழ்தரு செம்பொன்னை - ஒளிவிடுகிற செம்பொன்னை, குருமணிகள் கொழித்து இழிந்து - நிறமுள்ள மணிகளைக் கொழித்திறங்கி, சுழித்து இழியும் திரைவாய் - சுழித்திறங்குகிற அலைகளில், கோல்வளையார் குடைந்தாடும் - மாதர்கள் மூழ்கி விளையாடுகிற, கொள்ளிடத்தின் கரைமேல் - கொள்ளிடநதியின் கரைமீது, கருமணிகள்போல் - நீலமணிகள்போல, நீலம்மலர்கின்றகழனி - நீலமலர் மலர்கின்ற வயல்கள் சூழ்ந்த, கானாட்டு முள்ளூரில் - திருக்கானாட்டு முள்ளூரில், கண்டு தொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பொ-ரை.) அரிதாகிய ரத்நத்தை, முத்தை, பஞ்சகவ்வியங்களிலும் அபிஷேகம் செய்யப்படுகிற தேவர் பெருமானை, அரிய வேதார்த்தத்தை, அழகிய மணியை, இனியகருப்பஞ்சாறாகியபெருந்தேனை, அறிதற்கரிய பெரியமணியை ஒளிவிடுகிற செம்பொன்னை நிறமுள்ள மணிகளைக் கொழித்திறங்கி சுழித்திறங்குகிற அலைகளில் மாதர்கள் மூழ்கி விளையாடுகிற கொள்ளிட நதியின் கரைமீது நீலமணிகள்போல நீலமலர் மலர்கின்ற வயல்கள் சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(கு-ரை.) அருமணிமுத்து முதலிய பொருள்கள்போலுஞ் சிவபிரானைத் திருக்கானாட்டு முள்ளூரில் கண்டுதொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) ஊறல் - சுரத்தல். குரு - ஒளி. திரை - அலை. கோல்வளையார் - மாதர். கருமணி - நீலமணி. (7)

இழைதழுவுவெண்ணூலுமேவுதிருமார்பி
னீசன்றனெண்டோள்கள்வீசியெரியாடக்
குழைதழுவுதிருக்காதிற்கோளரவமசைத்துக்
கோவணங்கொள்குழகனைக்குளிர்சடையினானைத்

தழைதழுவு தண்ணிறத்தசெந்நெ லதனயலே
தடந்தாளமென் கரும்பிற்றாழ்கிடங்கி னருகே
கழைதழுவித் தேன்றொடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டுமுள்ளூரிற் கண்டுதொழு தேனே.

(ப-ரை.) இழை தழுவு வெண்ணூல்மேவு-இழைகள்பொருந்திய பரிசுத்தமாகிய முப்புரிநூலணிந்த, திருமார்பின் ஈசன் - திருமார்பினையுடைய ஈச்சுரன், தன் எண் தோள்கள்வீசி எரியாட - தனது எட்டுத்தோள்களையும் வீசி அனலாடாநிற்க, குழை தழுவு திருகாதில் — குண்டலமணிந்த திருச்செவியில், கோள் அரவம் அசைத்து - துன்பஞ்செய்யும் பாம்பையசைத்து, கோவணம்கொள் குழகனை - கோவணம்கொண்ட அழகனை, குளிர்சடையினானை - குளிர்ந்த சடையை யுடையவனை, தழை தழுவு - தழைத்தலையுடைய, தண்நிறத்த-குளிர்ந்தநிறமுள்ள, செந்நெல் அதன் அயலே - செந்நெல்லினருகே, தடம்தாள - பெரிய அடியையுடைய, மென்கரும்பின் - மெல்லியகரும்பின், தாழ்கிடங்கின் அருகே - ஆழ்ந்த குழிகளினருகே, கழைதழுவி - மூங்கிலையடுத்து, தேன் தொடுக்கும் - தேன்கூடு கட்டப்படுகிற, கழனிசூழ் பழனம் - வயல்கள் சூழ்ந்த பழனம், கானாட்டுமுள்ளூரில் - திருக்கானாட்டுமுள்ளூரில், கண்டுதொழுதேன்-கண்டுவணங்கினேன் எ-று.

(பொ-ரை.) இழைகள்பொருந்திய பரிசுத்தமாகிய முப்புரிநூலணிந்த திருமார்பினையுடைய ஈச்சுரன் தனது எட்டுத் தோள்களையும் வீசி அனலாடாநிற்க, குண்டலமணிந்த திருச்செவியில் துன்பஞ்செய்யும் பாம்பையசைத்து கோவணம்கொண்ட அழகனை, குளிர்ந்த சடையையுடையவனை, தழைத்தலையுடைய குளிர்ந்த நிறமுள்ள செந்நெல்லினருகே பெரிய அடியையுடைய மெல்லிய கரும்பின் ஆழ்ந்த குழிகளினருகே மூங்கிலையடுத்து தேன்கூடு கட்டப்படுகிற வயல்கள் சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(க-ரை.) முப்புரிநூலணிந்த திருமார்பினையுடைய சிவபிரானைத் திருக்கானாட்டு முள்ளூரில் கண்டுதொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) இழை - நூலிழை. எரியாடல் - அனலோடாடுதல். கிடங்கு - அகழி. தொடுத்தல் - கூடமைத்தல். (8)

குனிவினிய கதிர்மதியஞ் சூடுசடை யானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்டினங்கள் பாடப்
பனியுதிருஞ் சடையானைப் பால்வெண்ணீற் றானைப்
பலவுருவுந் தன்னுருவே யாயபெரு மானைத்
துனிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநீலங் கண்வளருஞ் சூழ்கிடங்கி னருகே
கனிவினிய கதலிவனந் தழுவுபொழிற் சோலைக்
கானாட்டுமுள்ளூரிற் கண்டுதொழு தேனே,

(ப-ரை.) குனிவு இனிய-வளைவாகிய இனிய, கதிர்மதியம்சூடு-ஒளியுள்ள பிறையையணிந்த, சடையானை - சடையையுடையவனை, குண்டலம்சேர் காதவனை - குண்டலமணிந்த செவியையுடையவனை, வண்டு இனங்கள்பாட - வண்டுக்கூட்டங்கள் பாடாநிற்க, பனி உதிரும் சடையானை - குளிர்ச்சி பெருகுகிற சடையையுடையவனை, பால்வெண்ணீற்றானை – பால்போலும் வெண்ணீறுடையவனை, பலஉருவும் தன் உருவே ஆய பெருமானை - எல்லாவுருவங்களும் தனதுருவேயாகியிருக்கிற பெருமானை, துனிவு இனிய தூயமொழிதொண்டைவாய் நல்லார் - பிணங்குதலாலினியவராகிய தூ மொழியையும் கோவைக்கனிபோலும் அதரத்தையுமுடைய மாதர் போல, தூநீலம்கண்வளரும் - தூய நீலமலர்கள் தூங்குகிற, சூழ்கிடங்கின் அருகே-வளைந்த அகழியினருகே, கனிவு இனிய கதலிவனம் - பழுத்தலாலினிய வாழைக் கொல்லைகள், தழுவு பொழில் சோலை - பொருந்திய பொழில்களும் சோலைகளும் சூழ்ந்த, கானாட்டு முள்ளூரில் - திருக்கானாட்டு முள்ளூரில், கண்டு தொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(போ-ரை.) வளைவாகிய இனிய வொளியுள்ள பிறையையணிந்த சடையையுடையவனை, குண்டலமணிந்த செவியையுடையவனை, வண்டுக்கூட்டங்கள் பாடாநிற்க குளிர்ச்சி பெருகுகிற சடையையுடையவனை, பால்போலும் வெண்ணீறுடையவனை, எல்லாவுருவங்களும் தனதுருவேயாகியிருக்கிற பெருமானை, பிணங்குதலாலினியராகிய தூமொழியையும் கோவைக்கனிபோலும் அதரத்தையுமுடைய மாதர்போல் தூயநீலமலர்கள் தூங்குகிற வளைந்த அகழியினருகே பழுத்தலாலினிய வாழைக்கொல்லைகள் பொருந்திய பொழில்களும் சோலைகளும் சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(க-ரை.) பிறையணிந்த சடை குழையணிந்த செவிமுதலியவற்றையுடைய சிவபிரானைத் திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) பனி - நீர்த்துளி. நீலம்-கருங்குவளைமலர் கதலிவனம்-வாழைத் தோட்டம், (9)

**தேவியம்பொன்மலைக்கோர்மான் தன்பாவையாகத்**
**தனதுருவமொருபாகஞ்சேர்த்துவித்தபெருமான்**
**மேவியவெந்நரகத்திலழுந்தாமைநமக்கு**
**மெய்ஞ்ஞெறியைத்தான்காட்டும்வேதமுதலானைத்**
**தூவியவாய்நாரையொடுகுருகுபாய்ந்தார்ப்பத்**
**துறைக்கெண்டைமிளிர்ந்துகயல்துள்ளிவிளையாடக்**
**காவிவாய்வண்டுபலபண்செய்யுங்கழனிக்**
**கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.**

(ப-ரை.) தேவி அம்பொன் மலைக்கு ஓர் மான்-உமாதேவி யென்கிற அழகிய பொன்மலையிற் றோன்றிய ஒரு மான்போல் வாள், தன் பாவை ஆக - தன் மனைவியாக, தனது உருவம் ஒருபாகம்-தன் வடிவத்தின் ஒரு கூற்றில், சேர்த்துவித்த பெருமான் - சேர்த்துக்கொண்ட பெருமான், மேவிய வெம் நரகத்தில்

அழுந்தாமை - உண்டாயிருக்கிற கொடிய நரகத்தி லழுந்தாமல், நமக்கு-எமக்கு, மெய் ஞெறியைத் தான் காட்டும் — மெய்வழியைத் தானே காட்டுகிற, வேத முதலானை - மறைமுதல்வனை, தூவிய வாய் நாரையொடு - தூய வாயினை யுடைய நாரைகளோடு, குருகுபாய்ந்தார்ப்ப-குருகுகளும்பாய்ந்து ஒலிக்க, துறை கெண்டை மிளிர்ந்து - துறைகளில் கெண்டைகள் ஒளிசெய்து, கயல்துள்ளி விளையாட - கயல்கள் துள்ளி விளையாடாநிற்க, காவிவாய் - குவளைமலர்களில், வண்டுபல-பலவண்டுகள், பண் செய்யும் - பாட்டுப் பாடுகிற, கழனி-வயல்கள் சூழ்ந்த, கானாட்டுமுள்ளூரில்-திருக்கானாட்டு முள்ளூரில், கண்டு தொழுதேன் - கண்டு வணங்கினேன் எ-று.

(பொ-ரை.) உமாதேவி யென்கிற அழகிய பொன்மலையிற் றோன்றிய ஒரு மான் போல்வாள் தன்மனைவியாக தன் வடிவத்தின் ஒரு கூற்றில் சேர்த்துக்கொண்ட பெருமான், உண்டாயிருக்கிற கொடிய நரகத்திலழுந்தாமல் எமக்கு மெய்வழியைத்தானே காட்டுகிற மறைமுதல்வனை, தூயவாயினையுடைய நாரைகளோடு குருகுகளும் பாய்ந்து ஒலிக்க துறைகளில் கெண்டைகள் ஒளி செய்து துள்ளிவிளையாடாநிற்க குவளை மலர்களில் பல வண்டுகள் பாட்டுப்பாடுகிற வயல்கள் சூழ்ந்த திருக்கானாட்டு முள்ளூரில் கண்டு வணங்கினேன்.

(கு-ரை.) மலைமகளைத் தன்னொருபாகத் தமைத்துக்கொண்ட சிவபெருமானைத் திருக்கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேன் என்பதாம்.

(வி-ரை.) பாவை - பாவைபோலும் உருவுடைய பெண். ஞெறி - நெறி யென்பதன் போலி. தூவி-சிறகு. மிளிர்தல் - வலமிடமாகப் பிறழ்தல். காவி - குவளைமலர். வாய் - எழனுருபு. (10)

**திரையினார்கடல்சூழ்ந்ததென்னிலங்கைக்கோனைச்**
**செற்றவனைச்செஞ்சடைமேல்வெண்மதியினானை**
**நுரையினார்கரைதழுவுகொள்ளிடத்தின்கரைமேற்**
**கானாட்டுமுள்ளூரிற்கண்டுகழல்தொழுது**
**உரையினார்மதயானைநாவலாரூர**
**னுரிமையாலுரைசெய்தவொண்டமிழ்கள்வல்லார்**
**வரையினார்வகைஞாலமாண்டவர்க்கும்தாம்போய்**
**வானவர்க்குந்தலைவராய்நிற்பரவர்தாமே.**

(பொ-ரை.) திரையின் ஆர்-அலைகளால் நிறைந்த, கடல்சூழ்ந்த-கடல்வளைந்த, தென் இலங்கைக்கோனை-தென்னிலங்கைக் கரசனாகிய ராவணனை, செற்றவனை - ஜெயித்தவனை, செஞ்சடைமேல் - செஞ்சடையின்மீது, வெள்மதியினானை - வெண்பிறையை யணிந்தவனை, நுரையின்ஆர் கரைதழுவு - நுரையோடு கரைமேலேறுகிற, கொள்ளிடத்தின் கரைமேல்-கொள்ளிட நதிக்கரையிலுள்ள, கானாட்டுமுள்ளூரில்-திருக்கானாட்டு முள்ளூரில், கண்டு கழல்தொழுது-கண்டு திருவடி வணங்கி, உரையின் ஆர் - புகழ்மிகுந்த, மதயானை - மதயானைபோன்ற, நாவலாரூரன் - சுந்தரன், உரிமையால் உரைசெய்த - உரிமை

யாற் சொன்ன, ஒள்தமிழ்கள் வல்லார் - ஒட்பமாகிய தமிழ்ப்பாடல்களைக் கற்று வல்லவர், வரையின் ஆர்வகை - மலையின் தோற்றம்போல, ஞாலம் ஆண்டவர்க்கும் — உலகை யாண்டவர்க்கும், தாம் போய் - தாம்சென்று, வானவர்க்கும் தலைவராய் நிற்பரவர்தாமே - அவர் தேவர்களுக்கும் தலைவராகி நிலைபெற்றிருப்பார் எ-று.

**(பொ-ரை.)** அலைகளால் நிறைந்த கடல்வளைந்த தென்னிலங்கைக் கரசனாகிய ராவணனை ஜெயித்தவனை, செஞ்சடையின்மீது வெண்பிறையையணிந்தவனை, நுரையோடு கரைமேலேறுகிற கொள்ளிட நதிக்கரையிலுள்ள திருக்கானாட்டுமுள்ளூரில்கண்டு திருவடிவணங்கி புகழ்மிகுந்த மதயானைபோன்ற சுந்தரன் உரிமையாற் சொன்ன ஒட்பமாகிய தமிழ்ப் பாடல்களைக் கற்று வல்லவர் மலையின் தோற்றம்போல உலகையாண்டவர்க்கும் தாம்சென்று அவர் தேவர்களுக்குத் தலைவராகி நிலைபெற்றிருப்பார்.

**(க-ரை.)** திருக்கானாட்டு முள்ளூர்ச் சிவபிரானைத் திருநாவலூரன் கண்டு தொழுதுரைத்த இந்தப் பத்துப் பாடல்களையும் கற்று வல்லார் இம்மையில் ஞால முழுதுமாண்டவரிலும் மேம்பட்டு மறுமையில் தேவாதிபராயிருப்பர் என்பதாம்.

**(வி-ரை.)** உரிமை - பாத்யதை. வரையின் ஆர்வகை - மலையினது நெடுந்தூரம் உயர்ந்து தோன்றும் தோற்றம்போல. (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பதஞ்சலியீசர். தேவியார்-கானார்குழலம்மை.

---

## திருக்கச்சூர் ஆலக்கோயில்

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடல்முயல்வானே**
**மதுவார்கொன்றைப்புதுவீசூடுமலையான்மகடன்மணவாளா**
**கதுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியார்கவலாரே**
**யதுவேயாமாறிதுவோகச்சூராலக்கோயிலம்மானே.**

**(ப-ரை.)** முதுவாய் ஓரி கதற-கிழநரி பெருங்கூச்சலிட, முதுகாட்டு எரி கொண்டாடல் முயல்வானே - மயானத்தில் நெருப்போடாடுவோனே, மதுவார் கொன்றைப் புதுவீசூடும் மலையான் மகள்தன் மணவாளா - தேன் நிறைந்த கொன்றைப் புதுப்பூவைச் சூடும் உமாநாயகனே, கதுவாய் தலையில் நீ பலி கொள்ளக்கண்டால் - பொருந்திய தலையோட்டில் நீ பிக்ஷையேற்றலைப் பார்த்தால், அடியார் கவலாரே - நின் தொண்டர் வருந்தாரோ, ஆமாறு அதுவே இதுவோ - உனக்குத் தகுதியாவது அதுவோ இதுவோ, கச்சூர் ஆலக்கோயில் அம்மானே-திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(போ-ரை.) கிழநரி பெருங்கூச்சலிட மயானத்தில் நெருப்போடாடு வோனே, தேன் நிறைந்த கொன்றைப் புதுப்பூவைச் சூடும் உமாநாயகனே, பொருந்திய தலையோட்டில் நீ பிக்ஷை யேற்றலைப் பார்த்தால் நின் தொண்டர் வருந்தாரோ, உனக்குத் தகுதியாவது அதுவோ இதுவோ, திருக்கச்சூர் ஆலக் கோயிலி லெழுந்தளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே, நீ தலையோட்டில் பலியேற்பது கண்டால், அடியார் கவலைப்படமாட்டாரோ வென்பதாம்.

(வி-ரை.) கவலாரோ - கவலைப்படாரோ. ஆமாறு - ஆகும் விதம். (1)

**கச்சேரரவொன் றரையிலசைத்துக்கழலுஞ்சிலம்புங்கலிக்கப்பலிக்**
**றுச்சம்போதாவூரூர்திரியக்கண்டாலடியாருருகாரே [கென்**
**யிச்சையறியோமெங்கள்பெருமானேயேழ்பிறப்புமென்னையாள்வா**
**யச்சமில்லாக்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே.**

(ப-ரை.) ஏர் அரவு ஒன்று - அழகிய பாம்பொன்றினை, கச்சு-கச்சையாக, அரையில் அசைத்து-அரையிற்கட்டி, கழலும் சிலம்புங்கலிக்க - கழலும் சிலம்பும் சத்திக்க, பலிக்கு என்று - பிக்ஷக்கென்று, உச்சம்போதா ஊரூர் திரியக்கண் டால் - உச்சிக்காலத்தில் ஊரூர் திரியக்கண்டால், அடியார் உருகாரே - உன் தொண்டர் மனமுருகாரோ, இச்சை அறியோம் - உன்திருவுளத்தை யறியமாட் டோம், எங்கள் பெருமானே - எம்பெருமானே, ஏழ் பிறப்பும் என்னையாள் வாய் - ஏழ் பிறப்பிலும் என்னைத் தொடர்ந்தாளக் கடவை, அச்சம் இல்லா - பய மில்லாத, கச்சூர் வடபால்-திருக்கச்சூரின் வடக்கில், ஆலக்கோயில் அம்மானே- ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(போ-ரை.) அழகிய பாம்பொன்றினை கச்சையாக அரையிற்கட்டி கழ லும் சிலம்பும் சத்திக்க பிக்ஷைக்கென்று உச்சிக்காலத்தில் ஊரூர் திரியக்கண் டால் உன் தொண்டர் மனமுருகாரோ, உன் திருவுளத்தை யறியமாட்டோம் எம்பெருமானே, ஏழ் பிறப்பிலும் என்னைத் தொடர்ந்தாளக் கடவை, பயமில் லாத திருக்கச்சூரின் வடக்கில் ஆலககோயிலிலெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே, நீ ஊர்தோறும் பிக்ஷையேற்பதைக் கண்டால் அடியார் மனமுருகாரோ என்ப தாம். (2)

(வி-ரை.) உச்சப்போது - உச்சிப்பொழுது. இச்சை - (உன்) திருவுளம்.

**சாலக்கோயிலுள்ளநின்கோயிலவையென்றலைமேற்கொண்டாடி**
**மாலைத்தீர்ந்தேன்வினையுந்துரந்தேன்வானோரறியாநெறியானே**
**கோலக்கோயில்குறையாக்கோயில்குளிர்பூங்கச்சூர்வடபாலை**
**யாலக்கோயில்கல்லால்நிழற்கிழறங்களுரைந்தவம்மானே.**

(ப-ரை.) சால - மிகுதியாக, கோயில் உள - கோயில்கள் உள்ளன, நின் கோயில் அவை - உன் கோயில்களாகிய அவற்றை, என் தலைமேற்கொண்டு ஆடி - என் சிரமேற்கொண்டு நடனஞ் செய்து, மாலைதீர்ந்தேன் - மயக்கத்தை யொழித்தேன், வினையும் துரந்தேன் - வினையையும் ஓட்டிவிட்டேன், வானோர் அறியா நெறியானே - தேவர்களும் அறியாத நெறியையுடையவனே, கோலக் கோயில் - அழகிய கோயில், குறையாக் கோயில் -குறையாத கோயில், குளிர்பூங் கச்சூர் வடபாலை - குளிர்ந்த அழகிய திருக்கச்சூர் வடபுறத்துள்ள, ஆலக்கோ யில் - ஆலக்கோயிலில், கல்லால் நிழற்கீழ் - கல்லாலமரத்தின் நிழலின்கீழே, அறங்களுரைத்த அம்மானே - சநகாதியர் நால்வருக்கும் அறநெறிகளை யுபதேசி த்த எமது தந்தையே எ-று.

(பொ-ரை.) மிகுதியாக கோயில்கள் உள்ளன, உன் கோயில்களாகிய அவற்றை என் சிரமேற்கொண்டு நடனஞ்செய்து மயக்கத்தை யொழித்தேன், வினையையும் ஓட்டிவிட்டேன், தேவர்களும் அறியாத நெறியையுடையவனே, கோலக்கோயில் குறையாக்கோயில் குளிர்ந்த அழகிய திருக்கச்சூர் வடபுறத் துள்ள ஆலக்கோயிலில் கல்லாலமரத்தின் நிழலின் கீழே சநகாதியர் நால்வருக் கும் அறநெறிகளை யுபதேசித்த எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே, உன் கோயில்களைத் தொழுது என் வினை முதலியவற்றை யொழித்தேன் என்பதாம்.

(வி-ரை.) துரந்தேன் - ஒழித்தேன். நெறி - முத்திநெறி. (3)

**விடையுங்கொடியுஞ்சடையுமுடையாய்மின்னேருருவத்தொளியானே**
**கடையும்புடைசூழ்மணிமண்டபமுங்கன்னிமாடங்கலந்தெங்கும்**
**புடையும்பொழிலும்புனலுந்தழுவிப்பூமேற்றிருமாமகள்புல்கி**
**யடையுங்கழனிப்பழனக்கச்சூராலக்கோயிலம்மானே.**

(ப-ரை.) விடையும் கொடியும் சடையும் உடையாய் – இடபமும் இட பக்கொடியும் சடையுமுடையவனே, மின்நேர் உருவத்து ஒளியானே - மின் னலை நிகர்த்த சரீரகாந்தியையுடையவனே, கடையும் புடைசூழ் மணிமண்டப மும் - கடையும் பக்கத்தில் சூழ்ந்திருக்கிற ரத்னமண்டபங்களும், கன்னிமாடங் களும் கலந்து - கன்னி மாடங்களும் கலந்து, எங்கும் - எவ்விடத்தும், புடையும் பொழிலும் புனலும் தழுவி - புடைத்துக்கொண்டு வருகிற சோலையையும் நீரை யும் தழுவிக்கொண்டு, பூமேல் திருமாமகள் புல்கி - தாமரை மலர்மேல் வாழ் கின்ற இலக்குமியானவள் தழுவப்பெற்று, அடையும் கழனிப் பழனம்-வந்தடை கின்ற பாத்திகளும் வயல்களும் நெருங்கின, கச்சூர் ஆலக்கோயில் அம்மானே - திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(பொ-ரை.) இடபமும் இடபக்கொடியும் சடையுமுடையவனே, மின் னலை நிகர்த்த சரீரகாந்தியையுடையவனே, கடையும் பக்கத்தில் சூழ்ந்திருக் கிற ரத்ன மண்டபங்களும், கன்னிமாடங்களும் கலந்தெவ்விடத்தும் புடைத்துக் கொண்டு வருகிற சோலையையும் நீரையும் தழுவிக்கொண்டு தாமரைமலர்மேல்

வாழ்கின்ற இலக்குமியானவள் தழுவப்பெற்றுவந்தடைகின்றபாத்திகளும் வயல்களும் நெருங்கின திருக்கச்சூர் ஆலக்கோயிலிலெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலம்மானே, என்னை யாண்டருளக்கடவை என்பதாம்.

(வி-ரை.) திருமாமகள் என மேல் வருதலால் பூவென்றது தாமரைப் பூவை. (4)

**மேலைவிதியே வினையின்பயனே விரவார்புரமூன் றெரிசெய்தாய்**
**காலையெழுந்து தொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா**
**மாலைமதியே மலைமேல்மருந்தே மறவேனடியேன் வயல்சூழ்ந்த**
**வாலைக்கழனிப் பழனக்கச்சூ ராலக்கோயி லம்மானே.**

(ப-ரை.) மேலை விதியே - முன்னை விதியே, வினையின்பயனே - வினைப் பயனே, விரவார் புரம்மூன்று எரிசெய்தாய் - பகைவரது முப்புரத்தை யெரித்துவிட்டாய், காலை எழுந்து - காலையிலெழுந்து, தொழுவார் தங்கள் - வணங்குவோருடைய, கவலை களைவாய் - துன்பத்தை வேரோடறுப்பவனே, கறைக்கண்டா - விஷகண்டனே, மாலைமதியே - மாலைப்பிறையே, மலைமேல் மருந்தே - மலையிலுள்ள அமிர்தமே, அடியேன் மறவேன் - அடியேன் மறக்கமாட்டேன், வயல் சூழ்ந்த - வயல்கள் சூழ்ந்த, ஆலைக்கழனிப்பழனம் - ஆலைகளுள்ள கழனிகளும் வயல்களுஞ் சூழ்ந்த, கச்சூர் ஆலக்கோயில் அம்மானே - திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(பொ-ரை.) முன்னை விதியே, வினைப்பயனே, பகைவரது முப்புரத்தை யெரித்துவிட்டாய் காலையிலெழுந்து வணங்குவோருடைய துன்பத்தை வேரோடறுப்பவனே, விஷகண்டனே, மாலைப்பிறையே, மலையிலுள்ள அமிர்தமே, அடியேன் மறக்கமாட்டேன், வயல்கள் சூழ்ந்த ஆலைக்கழனிப்பழனம் திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலம்மானே, அடியேன் உன்னை மறவேன் என்பதாம்.

(வி-ரை.) ஆலை - கரும்பாலை. (5)

**பிறவாயிறவாய் பேணாய்மூவாய் பெற்றமேறிப் பேய்சூழ்தல்**
**துறவாய்மறவாய் சுடுகாடென்று மிடமாக்கொண்டு நடமாடி**
**யொறுவாய்த்தலையிற் பலிநீகொள்ளக் கண்டாலடியா ருருகாரே**
**யறவேயொழியாய் கச்சூர்வடபா லாலக்கோயி லம்மானே.**

(ப-ரை.) பிறவாய் இறவாய்—பிறக்கமாட்டாய் இறக்கமாட்டாய், பேணாய்- இச்சியாய், மூவாய் - முதிரமாட்டாய், பெற்றம் ஏறி - இடபமேறி, பேய் சூழ்தல் துறவாய் - பேய்கள் சூழ்ந்துவருவதை ஒழியாய், மறவாய் - மறக்கமாட்டாய், சுடுகாடு என்றும் இடமாக்கொண்டு நடம் ஆடி - மயானத்தை யெக்காலத்தும் இடமாகக்கொண்டு நடனஞ்செய்து, ஒறுவாய் தலையில் நீ பலிகொள்ளக்கண்டால் -

ஒடிந்தவாயோடுகூடிய தலையோட்டில் நீ பிக்ஷையேற்றலைப்பார்த்தால், அடியார் உருகாரே-தொண்டர் மனமுருகாரோ, (இந்தப்பலியேற்குந்தொழிலை) அறவே ஒழியாய் - முற்று மொழிக்கமாட்டாய், கச்சூர் வடபால் — திருக்கச்சூரின் வடக்கில், ஆலக்கோயில் அம்மானே - ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(போ-ரை.) பிறக்கமாட்டாய் இறக்கமாட்டாய் இச்சியாய் முதிரமாட்டாய் இடபமேறி பேய்கள் சூழ்ந்து வருவதை மறக்கமாட்டாய் சுடுகாடு என்றும் இடமாக்கொண்டு நடம் ஆடி, ஒடிந்த வாயோடு கூடிய தலையோட்டில் நீ பிக்ஷையேற்றலைப் பார்த்தால் தொண்டர் மனமுருகாரோ, இந்தப் பலியேற்குந் தொழிலை முற்று மொழிக்கமாட்டாய், திருக்கச்சூரின் வடக்கில் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே, நீ தலையோட்டில் பலியேற்பதை அடியார் கண்டால் உருகாரோ வென்பதாம்.

(வி-ரை.) மூத்தல் - முதிர்தல். துறத்தல் - விடுதல். (6)

**பொய்யேயுன்னைப்புகழ்வார்புகழ்ந்தாலதுவும்பொருளாக்கொள்வானே**
**மெய்யேயெங்கள்பெருமானுன்னைநினைவாரவரைநினைகண்டாய்**
**மையார்தடங்கண்மடந்தைபங்காமதியஞ்சடைவைத்த**
**ஐயாசெய்யாய்வெளியாய்கச்சூராலக்கோயிலம்மானே.**

(ப-ரை.) உன்னைப் புகழ்வார் - உன்னைப் புகழ்வோர், பொய்யே புகழ்ந்தால் - பொய்யாகப் புகழ்ந்தால், அதுவும் பொருளாக்கொள்வானே - அதையும் பொருளாகக் கொள்வோனே, மெய்யேய் எங்கள் பெருமான் - உண்மையையே யுடைய எம்பெருமானே, உன்னை நினைவார் அவரை — உன்னை நினைப்பவரை நினைக்கக்கடவை, மை ஆர் - மையெழுதப்பெற்ற, தடம்கண் - பெருங்கண்களை யுடைய, மடந்தைபங்கா - உமாதேவி பங்கனே, மதியம் சடைவைத்த ஐயா - பிறையைச் சடைமீது தரித்த அழகனே, செய்யாய்-செவ்வியனே, வெளியாய்-வெண்ணிறமுள்ளவனே, கச்சூர் ஆலக்கோயில் அம்மானே - திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(போ-ரை.) உன்னைப் புகழ்வோர் பொய்யாகப் புகழ்ந்தால் அதையும் பொருளாகக்கொள்வோனே, உண்மையையுடைய எம்பெருமானே, உன்னை நினைப்பவரை நினைக்கக்கடவை, மையெழுதப்பெற்ற பெருங் கண்களை யுடைய உமாதேவிபங்கனே, பிறையைச் சடைமீது தரித்த அழகனே, செவ்வியனே, வெண்ணிற முடையவனே, திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே, பொய்ப் புகழ்ச்சியையும் மெய்ப் புகழ்ச்சியாகக் கொள்வோனே, அடியேனை ஆண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) பொருளாகக்கோடல் - மெய்யாகக்கோடல். பெருமான் - அண்மைவிளி. மை - கருமை, அஞ்சனம் எனினும் அமையும். (7)

**ஊனைப்பெருக்கியுன்னை நினையாதொழிந்தேன்செடியேனுணர்வில்**
**கானக்கொன்றைகமழமலருங்கடிநாறுடையாய்கச்சூராய் [லேன்**
**மானைப்புரையுமடமென்னோக்கிமடவாளஞ்சமறைத்திட்ட**
**ஆனைத்தோலாய்ஞானக்கண்ணாயாலக்கோயிலம்மானே.**

(ப-ரை.) ஊனைப்பெருக்கி - உடம்பைப்பெருக்கி, உன்னை நினையாதொழிந்தேன் - உன்னை நினையாதொழிந்தேன், செடியேன் - தீயேன், உணர்வு இல்லேன் - அறிவிலேன், கானக்கொன்றை கமழமலரும் கடிநாறு உடையாய் - காட்டுக்கொன்றை பரிமளிக்கிற கொன்றைமாலையை யுடையோனே, கச்சூராய்-திருக்கச்சூரானே, மானைப்புரையும் மடம் மெல்நோக்கி மடவாள் அஞ்ச - மானின்நோக்கத்தை நிகர்த்த உமாதேவிஅஞ்ச, மறைத்திட்ட ஆனைத்தோலாய்-போர்த்திட்ட யானைத்தோலையுடையவனே, ஞானக்கண்ணாய் - ஞானநேத்திரத்தையுடையவனே, ஆலக்கோயிலம்மானே-ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(பொ-ரை.) ஊனைப்பெருக்கி உன்னை நினையாதொழிந்தேன், தீயேன், அறிவிலேன்,காட்டுக்கொன்றை பரிமளிக்கிற கொன்றைமாலை யுடையோனே, கச்சூராய், உமாதேவியஞ்ச மறைத்திட்ட யானைத்தோலாய், ஞானநேத்திரத்தை யுடையவனே, ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலம்மானே, யான் உன்னை நினையாதொழியினும் நீ என்னைக் கைவிடலாகாதென்பதாம்.

(வி-ரை.) செடி - குற்றம். கானம் - காடு. கடிநாறு - மணம்வீசுதல். (8)

**காதல்செய்துகளித்துப்பிதற்றிக்கடிமாமலரிட்டுனையேத்தி**
**யாதல்செய்யுமடியாரிருக்கவையங்கொள்ளலழகிதே**
**யோதக்கண்டேனுன்னைமறவேனுமையாள்கணவாவெனையாள்வா**
**ஆதற்பழனக்கழனிக்கச்சூராலக்கோயிலம்மானே. [ய்**

(ப-ரை.) காதல் செய்து-விரும்பி, களித்துப் பிதற்றி - மகிழ்ந்து பிதற்றி, கடிமாமலர் இட்டு – கடிய மாமலரினால், உன்னை ஏத்தி - உன்னைத் துதித்து, ஆதல்செய்யும் அடியார் இருக்க-நல்லனவேசெய்கிற அடியாரிருக்க, ஐயங்கொள்ளல் அழகிதே - பிச்சையேற்றல் உனக்கழகாமோ, ஓதக்கண்டேன் - ஓதா நிற்கப்பார்த்தேன், உன்னை மறவேன் - உன்னை மறக்கமாட்டேன், உமையாள் கணவா - உமாபதியே, என்னை ஆள்வாய் ஆதல் – என்னை யாளக்கடவாய், பழனக்கழனி-பண்ணையும் வயல்களும் சூழ்ந்த, கச்சூர் ஆலக்கோயில் அம்மானே - திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே எ-று.

(பொ-ரை ) விரும்பி மகிழ்ந்து பிதற்றி, கடிய மாமலரினால் உன்னைத் துதித்து நல்லனவே செய்கிற அடியாரிருக்க பிச்சையேற்றல் உனக்கழகாமோ, ஓதா நிற்கப் பார்த்தேன், உன்னை மறக்கமாட்டேன், உமாபதியே, என்னை யாளக் கடவாய், பழனக்கழனி திருக்கச்சூர் ஆலக்கோயிலி லெழுந்தருளிய எமது தந்தையே.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலம்மானே, உனக்குத் தொண்டர் வேண்டியது செய்வாராயிருக்க, நீ ஐயமேற்பது அழகோ என்பதாம்.

(வி-ரை.) ஆதல்செய்தல்-இஷ்டமானவற்றைச் செய்தல். ஆள்வாய் ஆதல்-ஆள்வோயாக. (9)

**அன்னமன்னும்வயல்சூழ்கச்சூராலக்கோயிலம்மானை**
**யுன்னமுன்னுமனத்தாரூரனாரூரன்பேர்முடிவைத்த**
**மன்னுபுலவன்வயல்நாவலர்கோன்செஞ்சொல்நாவன்வன்றொண்டன்**
**பன்னுதமிழ்நூல்மாலைவல்லாரவரெந்தலைமேற்பயில்வாரே.**

(ப-ரை.) அன்னம் மன்னும் வயல்சூழ் - அன்னப்பறவைகள் மேய்கிற வயல்கள் சூழ்ந்த, கச்சூர் ஆலக்கோயில் அம்மானை - திருக்கச்சூர் ஆலக்கோயிலிலெழுந்தளிய எமது தந்தையை, (உன்ன முன்னு மனத்து ஆரூரன்—, ஆரூரன் பேர்முடிவைத்த—, மன்னுபுலவன்—, வயல் நாவலர்கோன்—, செஞ்சொல் நாவன்—, வன்றொண்டன்) சுந்தரன், பன்னு - சொன்ன, தமிழ்நூல் மாலை வல்லார்-தமிழ்நூல் மாலையைக் கற்று வல்லவராகிய, அவர்-அவர், எம் தலைமேல் பயில்வாரே - எமது சிரமீது விளங்குவோராவர் எ-று.

(பொ-ரை.) அன்னப்பறவைகள் மேய்கிற வயல்கள் சூழ்ந்த திருக்கச்சூர் ஆலக்கோயிலிலெழுந்தருளிய எமது தந்தையை, உன்னமுன்னு மனத்து ஆரூரான், ஆரூரன் பேர்முடிவைத்த மன்னுபுலவன், வயல் நாவலர்கோன், செஞ்சொல்நாவன், சுந்தரன், சொன்ன தமிழ்நூல் மாலையைக்கற்று வல்லவராகிய அவர் எமது சிரமீது விளங்குவோராவர்.

(க-ரை.) திருக்கச்சூர் ஆலக்கோயிலம்மானைத் திருநாவலூரான் புகழ்ந்துரைத்த இத் தமிழ்மாலையைக் கற்றுவல்லவர் எம் தலைமேலராகக் கடவர் என்பதாம்.

(வி-ரை.) உன்ன - நினைக்க. முன்னுதல் - முற்படல். முடிவைத்தல் - சிரசாவகித்தல். பன்னல் - சொல்லல். பயில்வார் - இருத்தற்குரியவர். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - தினம் விருந்திட்டநாதர். தேவியார் - கன்னியுமையம்மை.

---

## திருவெஞ்சமாக்கூடல்

பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**எறிக்குங்கதிர்வேயுதிர்முத்தமொடு**
**மிலவங்கந்தக்கோலமிஞ்சி**
**செறிக்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்**
**திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரைமேல்**

முறிக்குந்தடமாமுடப்புன்னைஞாழல்
குருக்கத்திகள்மேற்குயில்கூவலறா
வெறிக்குங்கலைமாவெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

(ப-ரை.) எறிக்கும் கதிர்வேய் - கிரணங்களை வீசுகிற மூங்கிலி னின்றும், உதிர்-உதிர்கின்ற, முத்தமொடும்-முத்துக்களோடும், இலவங்கம் - கிராம்பு, தக்கோலம் - தக்கோலம், இஞ்சி - இஞ்சி, செறிக்கும் புனலுள் பெய்துகொண்டு - மிகுந்த நீரில் அடக்கிக்கொண்டு, மண்டி திளைத்து எற்று-நெருங்கித் தேக்கியெறிகிற, சிற்றாறதன் கீழ்க்கரைமேல் - சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது, முறிக்கும் தடம்மாமுடப்புன்னை - முறிக்கப்படுகிற மிகப்பெரிய வளைந்த புன்னை, ஞாழல்-குங்குமமரம், குருக்கத்திகள்மேல்-குருக்கத்தி மரங்கள் இவற்றின்மேல், குயில்கூவல் அறா - குயில் கூவுதல் ஒழியாத, வெறிக்கும் கலைமா - மணக்கும் கலைப்பெருமை நிறைந்த, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(பொ-ரை.) கிரணங்களை வீசுகிற மூங்கிலினின்றும் உதிர்கின்ற முத்தமொடும் கிராம்பு தக்கோலம் இஞ்சி மிகுந்த நீரிலடக்கிக்கொண்டு நெருங்கித் தேக்கி யெறிகிற சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது முறிக்கப்படுகிற மிகப் பெரிய வளைந்த புன்னை குங்குமமரம் குருக்கத்திமரங்களிவற்றின்மேல் குயில் கூவுதல் ஒழியாத மணக்கும் கலைப்பெருமை நிறைந்த வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(கு-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, அடியேனையும் விரும்புதியோ வென்பதாம்.

(வி-ரை.) தக்கோலம் - ஓர் வாசனைப்பூடு. திளைத்தல் - நிரம்பல். எற்றல் - வீசுதல். வேண்டுதியே என்னும் ஏகாரம் வினா. (1)

குளங்கள்பலவுங்குழியுந்நிறையக்
குடமாமணிசந்தனமுமகிலும்
துளங்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்
திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரைமேல்
வளங்கொள்மதில்மாளிகைகோபுரமு
மணிமண்டபமுமிவைமஞ்சுதன்னுள்
விளங்குமதிதோய்வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

(ப-ரை.) குளங்கள் பலவும் குழியும் நிறைய - பல குளங்களும் குழிகளும் நிறையும்படி, குடம்மாமணி சந்தநமும் அகிலும் - குடம்போலும் பெரிய மணிகளையும் சந்தந மரங்களையும் அகிற்கட்டைகளையும், துளங்கும் புனலுள் பெய்து

கொண்டு-அசையாநின்ற நீரிலடக்கிக்கொண்டு, மண்டி திளைத்து எற்று-நெருங்கித்தேக்கி யெறிகிற, சிற்றாறதன் கீழ்க்கரைமேல் - சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது, வளம்கொள் மதில் மாளிகை கோபுரமும் மணிமண்டபமும் - வளமுள்ள மதில்மாளிகை கோபுரமும் மணி மண்டபங்களும், (ஆகிய) இவை - இவைகள், மஞ்சுதன்னுள் விளங்கும் மதிதோய் - மேகமண்டலத்தில் விளங்குகிற சந்திரன் தவழ்கின்ற, வெஞ்சமாக்கூடல் – வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(பொ-ரை.) பல குளங்களும் குழிகளும் நிறையும்படி குடம்போலும் பெரிய மணிகளையும் சந்தநமரங்களையும் அகிற்கட்டைகளையும் அசையாநின்ற நீரிலடக்கிக்கொண்டு நெருங்கித் தேக்கியெறிகிற சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது, வளமுள்ள மதில்மாளிகை கோபுரமும் மணிமண்டபங்களும் (ஆகிய) இவைகள் மேகமண்டலத்தில் விளங்குகிற சந்திரன் தவழ்கின்ற வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோவென்பதாம்.

(வி-ரை.) துளங்கள் - அசைதல். (2)

**வரைமானனையார்மயிற்சாயல்நல்லார்**
**வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சத்**
**திரையார்புனலுட்பெய்துகொண்டுமண்டித்**
**திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரைமேல்**
**நிரையார்கமுகுந்நெடுந்தாட்டெங்குங்**
**குறுந்தாட்பலவும்விரவிக்குளிரும்**
**விரையார்பொழில்சூழ்வெஞ்சமாக்கூடல்**
**விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.**

(ப-ரை.) வரைமான் அனையார்-மலைமானை நிகர்த்தவர், மயில்சாயல் நல்லார் - மயிற்சாயலையுடையமாதர், வடிவேற்கண் நல்லார்-வடித்த வேல்போலுங் கண்களையுடைய மாதர், பலர்வந்து இறைஞ்ச - பலர்வந்து வணங்க, திரை ஆர் புனலுள் பெய்துகொண்டு - அலைகள் நிறைந்த நீரிலடக்கிக்கொண்டு, மண்டி திளைத்து எற்று - நெருங்கித் தேக்கியெறிகிற, சிற்றாறதன் கீழ்க்கரைமேல்-சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது, நிரை ஆர் கமுகும் நெடுந்தாள் தெங்கும்-வரிசையாகிய கமுகமரங்களும் நீண்ட தாளையுடைய தென்னமரங்களும், குறுந்தாள் பலவும் - குறுகிய வேரையுடைய பலாமரங்களும், விரவிக்குளிரும் - கலந்து குளிர்ந்திருக்கிற, விரை ஆர் பொழில்சூழ் - மணம்நிறைந்த சோலைகள் சூழ்ந்த, வெஞ்சமாக்கூடல்-வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(பொ-ரை.) மலைமானைநிகர்த்தவர் மயிற்சாயலையுடையமாதர் வடித்தவேல் போலுங் கண்களையுடைய மாதர் பலர்வந்து வணங்க, நெருங்கித் தேக்கியெறிகிற, சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது வரிசையாகிய கமுகமரங்களும் தென்னமரங்களும் குறுகிய வேரையுடைய பலாமரங்களும் கலந்து குளிர்ந்திருக்கிற மணம்நிறைந்த சோலைகள் சூழ்ந்த வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோவென்பதாம்.

(வி-ரை.) வடிவேல் - வடித்தவேல் (கூர்மையாகியவேல்) நிரை - வரிசை. விரை - வாசனை. (3)

**பண்ணேர்மொழியாளையோர்பங்குடையாய்**
**படுகாட்டகத்தென்றுமோர்பற்றொழியாய்**
**தண்ணாரகிலுங்நலசாமரையு**
**மலைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரைமேல்**
**மண்ணார்முழவுங்குழலுமியம்ப**
**மடவார்நடமாடுமணியரங்கில்**
**விண்ணார்மதிதோய்வெஞ்சமாக்கூடல்**
**விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.**

(ப-ரை.) பண்ணேர் - பண்களை நிகர்த்த, மொழியாளை - இன் சொல்லையுடையவளாகிய உமாதேவியை, ஓர் பங்கு உடையாய் - ஒருபாகத்திலுடையவனே, படுகாட்டகத்து என்றும் ஓர்பற்று ஒழியாய் - மயானத்தில் என்றும் ஒரு விருப்பமொழியாய், தண் ஆர் அகிலும் - குளிர்ச்சியுள்ள அகிற்கட்டைகளையும், நல்ல சாமரையும் - நல்ல கவரிமான் மயிரையும், அலைத்து எற்று - அலைக்கூட்டம் எறிகிற, சிற்றாறதன் கீழ்க்கரைமேல் - சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது, மண்ணார் முழவும் குழலுமியம்ப - அழகிய மத்தளமும் வேய்ங்குழலும் முழங்க, மடவார் நடம் ஆடும் - மாதர் நடனஞ்செய்கிற, அணி அரங்கில் - அழகிய ஆடிடங்களின்மேல், விண் ஆர் மதிதோய் - ஆகாயத்திலுள்ள சந்திரன் தவழ்கின்ற, வெஞ்சமாக்கூடல்-வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(பொ-ரை.) பண்களைநிகர்த்த இன்சொல்லையுடையவளாகிய உமாதேவியை ஒரு பாகத்திலுடையவனே, மயானத்தில் என்றும் ஒரு விருப்பமொழியாய், குளிர்ச்சியுள்ள அகிற்கட்டைகளையும் நல்ல கவரிமான் மயிரையும் அலைக்கூட்டம் எறிகிற சிற்றாற்றின் கீழ்க்கரையின்மீது அழகிய மத்தளமும் வேய்ங்குழலும் முழங்க மாதர் நடனஞ்செய்கிற அழகிய ஆடிடங்களின்மேல் ஆகாயத்திலுள்ள சந்திரன் தவழ்கின்ற வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோ வென்பதாம்.

(வி-ரை.) பண்கள் - இந்தளம், நட்ட பாடை, கொல்லிக்கௌவாணம், பஞ்சரம், பழம்பஞ்சரம் முதலியன. மண் ஆர் - மார்ஜனையமைந்த. (4)

**துளைவெண்குழையுஞ்சுருள்வெண்டோடுந்**
**தூங்குங்காதிற்றுளங்கும்படியாய்**
**களையேகமழும்மலர்க்கொன்றையினாய்**
**கலந்தார்க்கருள்செய்திடுங்கற்பகமே**
**பிளைவெண்பிறையாய்பிறங்குஞ்சடையாய்**
**பிறவாதவனேபெறுதற்கரியாய்**
**வெளைமால்விடையாய்வெஞ்சமாக்கூடல்**
**விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.**

(ப-ரை.) துளைவெண்குழையும் - தொளைத்த வெண்குழையும், சுருள்வெண் தோடும் - சுருண்ட வெள்ளியதோடும், தூங்கும் காதில் - தொங்குகிற காதில், துளங்கும்படியாய் - அசைகின்ற உருவமுடையவனே, களையே - கட்டழகனே, கமழும்மலர் கொன்றையினாய் - மணக்கின்ற கொன்றைமலரை யுடையவனே, கலந்தார்க்கு அருள்செய்திடு - அடுத்தவர்க்கு அருள்செய்கிற, கற்பகமே - கற்பகமரமே, பிள்ளைவெண் பிறையாய் - பாலசந்திரனை யணிந்தவனே, பிறங்கும் சடையாய் - விளங்குகிற சடையையுடையவனே, பிறவாதவனே-பிறவாதனே, பெறுதற்கு அரியாய் - அடைதற்கரியவனே, வெள்ளைமால் விடையாய் - பெரிய வெள்விடையையுடையவனே, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(போ-ரை.) தொளைத்த வெண்குழையும் சுருண்ட வெள்ளியதோடும் தொங்குகிற காதில் அசைகின்ற வுருவமுடையவனே, கட்டழகனே, மணக்கின்ற கொன்றைமலரை யுடையவனே, அடுத்தவர்க்கு அருள்செய்கிற கற்பக மரமே, பாலசந்திரனை யணிந்தவனே, விளங்குகிற சடையையுடையவனே, பிறவாதவனே, அடைதற்கரியவனே, பெரிய வெள்விடையையுடையவனே, வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோ வென்பதாம்.

(வி-ரை.) களையே - கள்ளையே (தேனையே எனினுமாம்) பிறங்கல் - விளங்கல், பிள்ளை வெள்ளை யென்பன பிளை வெளையெனத் தொகுத்தலாயிற்று. (5)

**தொழுவார்க்கெளியாய்துயர்தீர்கின்றாய்**
**சுரும்பார்மலர்க்கொன்றைதுன்றுஞ்சடையா**
**யுழுவார்க்கரியவிடையேறியொன்னார்**
**புரந்தீயெழவோடுவித்தாயழகார்**

முழவாரொலிபாடலோடாடலறு
முதுகாடரங்காநடமாடவல்லாய்
விழவார்மறுகில்வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

(ப-ரை) தொழுவார்க்கு எளியாய் - வணங்குவோர்க் கெளியவனே, துயர் தீர நின்றாய் - எமது துன்பமொழிய நின்றவனே, சுரும்புஆர் - வண்டுகள் மொய்க்கிற, மலர்க்கொன்றை - கொன்றைமலர், துன்றும் சடையாய் — நெருங்கின சடையையுடையவனே, உழுவார்க்கு அரிய - உழுவார்க்கு கிடைத்தற்கரிய, விடை ஏறி - எருதேறி, ஒன்னார்புரம் - பகைவரது முப்புரத்தில், தீ எழ ஓடுவித்தாய் - நெருப்பெழச் செலுத்தினவனே, அழகு ஆர் முழவுஆர் ஒலி - அழகுள்ள மத்தளவொலி, பாடலோடு ஆடல் அறு - பாடலொடு ஆடல் இடையறாத, முதுகாடு அரங்கு ஆ - மயானம் ஆடிடமாகக்கொண்டு, நடம் ஆடவல்லாய்- நடனஞ்செய்ய வல்லவனே, விழவுஆர் மறுகின் - திருவிழாப்பொருந்திய தெருக்களையுடைய, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(பொ-ரை.) வணங்குவோர்க் கெளியவனே, எமது துன்பமொழிய நின்றவனே, வண்டுகள் மொய்க்கிற கொன்றைமலர் நெருங்கின சடையையுடையவனே, உழுவார்க்கு கிடைத்தற்கரிய எருதேறி பகைவரது முப்புரத்தில் நெருப்பெழச்செலுத்தினவனே, பாடலொடு ஆடல் இடையறாத மயானம் ஆடிடமாகக் கொண்டு நடனஞ் செய்ய வல்லவனே, திருவிழாப் பொருந்திய தெருக்களையுடைய வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோ வென்பதாம். (6)

கடமாகளியானையுரித்தவனே
கரிகாடிடமாவனல்வீசிநின்று
நடமாடவல்லாய்நரையேறுகந்தாய்
நல்லாய்நறுங்கொன்றைநயந்தவனே
படமாயிரமாம்பருத்துத்திப்பைங்கண்
பகுவாயெயிற்றோடழலேயுமிழும்
விடவாரரவாவெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

(ப-ரை.) கடம் - மதநீரையுடைய, மா - பெரிய, களி - களிப்பையுடைய, யானை உரித்தவனே - யானையை யுரித்தவனே, கரிகாடு இடம் ஆ - மயானத்தை யிடமாகக்கொண்டு, அனல்வீச நின்று - நெருப்புவீச நின்று, நடம் ஆடவல்லாய் -

நடனஞ் செய்ய வல்லவனே, நரை ஏறு உகந்தாய் - வெள்ளெருதை விரும்பினவனே, நல்லாய் — நல்லவனே, நறுங்கொன்றை நயந்தவனே - மணமுள்ள கொன்றைமலரை விரும்பினவனே, படம் ஆயிரம் ஆம்-ஆயிரம் படங்களையும், பரும் துத்தி - பெரும்புள்ளிகளையும், பைங்கண் - பசிய கண்களையும், பகுவாய் - பிளந்த வாயையுடைய, எயிற்றோடு - பல்லுடனே, அழலே உமிழும் - நெருப்பைக் கக்குகிற, விடம் ஆர் - விஷத்தையுடைய, அரவா - அரவாபரணனே, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(பொ-ரை.) மதநீரையுடைய பெரிய களிப்பையுடைய யானையை யுரித்தவனே, மயானத்தை யிடமாகக்கொண்டு நெருப்புவீச நின்று நடனஞ்செய்ய வல்லவனே, வெள்ளெருதை விரும்பினவனே, மணமுள்ள கொன்றைமலரை விரும்பினவனே, ஆயிரம்படங்களையும் பெரும்புள்ளிகளையும் பசிய கண்களையும் பிளந்தவாயையுடைய பல்லுடனே நெருப்பைக் கக்குகிற விஷத்தையுடைய அரவாபரணனே, வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே அடியேனையும் விரும்புதியோ.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோ வென்பதாம்.

(வி-ரை.) பகுவாய் - பிளந்தவாய். (7)

**காடும்மலையும்நாடுமிடறிக்**
**கதிர்மாமணிசந்தனமும்மகிலுஞ்**
**சேடனுறையும்மிடந்தான்விரும்பித்**
**திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரைமேல்**
**பாடல்முழவுங்குழலுமியம்பப்**
**பணைத்தோளியர்பாடலோடாடலறா**
**வேடர்விரும்பும்வெஞ்சமாக்கூடல்**
**விகிர்தாவடியேனையும்வேண்டுதியே**

(ப-ரை.) காடும் மலையும் நாடும் இடறி - காட்டையும் மலையையும் நாட்டையு மிடறிக்கொண்டு, கதிர்மாமணி சந்தநமும் அகிலும் - ஒளியுள்ள பெரிய மணிகளையும் சந்தநமரங்களையும் அகிற்கட்டைகளையும், சேடன் உறையும் இடம் தான் விரும்பி - ஆதிசேடன் வாழும் பாதாள லோகத்தைத்தான் விரும்பி, திளைத்து எற்று - தேக்கி எறிகிற, சிற்றாறதன் கீழ்க்கரை மேல் - சிற்றாற்றின் கீழ்க் கரையின்மீது, பாடல் முழவும் குழலும் இயம்ப - பாடலும் மத்தளமும் குழலும் சததிக்க, பணைத்தோளியர் - வேய்த்தோளியரது, பாடலோடு ஆடல் அறா - பாடலாடல்கள் இடையறாத, வேடர் விரும்பும் - வேடர் விரும்புகிற, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(**போ-ரை.**) காடும் மலையும் நாடும் இடறி கதிர் மாமணி சந்தநமும் அகிலும் ஆதிசேடன் வாழும் பாதாளலோகத்தைத்தான் விரும்பி தேக்கி எறிகிற சிற்றாற்றின் கீழ்க்கரையின் மீது பாடலும் மத்தளமும் குழலும் சத்திக்க வேய்த்தோளியர் பாடலாடல்கள் இடையறாத வெஞ்சமாக் கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோ.

(**கு-ரை.**) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோ வென்பதாம்.

(**வி-ரை.**) பணைத்தோளியர் - மூங்கில்போலும் தோள்களையுடையவராகிய மாதர். (8)

**கொங்கார்மலர்க்கொன்றையந்தாரவனே**
**கொடுகொட்டியோர்வீணையுடையவனே**
**பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்**
**பொதியும்புனிதாபுனஞ்சூழ்ந்தழகார்**
**துங்கார்புனலுட்பெய்துகொண்டுமண்டித்**
**திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரைமேல்**
**வெங்கார்வயல்சூழ்வெஞ்சமாக்கூடல்**
**விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.**

(**ப-ரை.**) கொங்கு ஆர்-தேன் நிறைந்த, மலர்க் கொன்றையந்தாரவனே - கொன்றைமலர் மாலையைத் தரித்தவனே, கொடுகொட்டி ஓர் வீணை உடையவனே - கொடு கொட்டிக் கூத்துடன் ஒரு வீணையையும் உடையவனே, பொங்கு ஆடு அரவும் புனலும் சடைமேல் பொதியும் புனிதா - சீறுகிற படமெடுத்தாடுகிற பாம்பையும் நீரையும் சடையிற்றரித்த பரிசுத்தனே, புனம் சூழ்ந்து - புனத்தைச் சூழ்ந்து, அழகு ஆர் - அழகாகிய, துங்கம் ஆர் புனலுள் பெய்து கொண்டு - உயர்வாகிய நீரிற்கலந்துகொண்டு, மண்டி திளைத்து எற்று - நெருங்கித் தேக்கி யெறிகிற, சிற்றாறதன் கீழ்க்கரை மேல் - சிற்றாற்றின் கீழ்க்கரையின் மீது, வெம்கார் வயல் சூழ் - விரும்புதற்குரிய கரிய வயல்சூழ்ந்த, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா - மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே - அடியேனையும் விரும்புவையோ எ-று.

(**போ-ரை.**) தேன் நிறைந்த கொன்றைமலர் மாலையைத் தரித்தவனே, கொடுகொட்டிக் கூத்துடன் ஒரு வீணையையும் உடையவனே, பொங்கு ஆடு அரவும் புனலும் சடைமேல் பொதியும் புனிதா, புனத்தைச் சூழ்ந்து அழகு ஆர் துங்கம் ஆர் புனலுள் பெய்து கொண்டு நெருங்கித் தேக்கி யெறிகிற சிற்றாற்றின் கீழ்க்கரையின் மீது வெம்கார் வயல்சூழ் வெஞ்சமாக் கூடலில் எழுந்தருளின மெய்யனே அடியேனையும் விரும்புவையோ.

(**கு-ரை.**) திருவெஞ்சமாக்கூடல் விகிர்தா, நீ அடியேனையும் விரும்புதியோ வென்பதாம்.

(வி-ரை.) கொடுகொட்டி - சிவன் கூத்து ளொன்று. பொங்குதல் - சீறுதல். பொதிதல் - தரித்தல். துங்கம் ஆர் என்பது துங்கார் எனத் தொகுத்தலாயிற்று. வெம்கார்வயல் - மிகக்கறுத்தவயல். (9)

**வஞ்சிநுண்ணிடையார்மயிற்சாயல்நல்லார்**
**வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சும்**
**வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்**
**வேண்டுதியேயென்றுதான்விரும்பி**
**வஞ்சியாதளிக்கும்வயல்நாவலர்கோன்**
**வனப்பகையப்பன்வன்றொண்டன்சொன்ன**
**செஞ்சொற்றமிழ்மாலைபத்தும்வல்லார்**
**சிவலோகத்திருப்பதுதிண்ணமன்றே.**

(ப-ரை.) வஞ்சி நுண் இடையார்-வஞ்சிக்கொடிபோலும் நுண்ணிடையார், மயில் சாயல் நல்லார் - மயிற் சாயலையுடைய மாதர், வடிவேற்கண் நல்லார்-வடித்த வேல்போலுங் கண்களையுடைய மாதர், பலர்வந்து இறைஞ்சும் - பலரும் வந்து வணங்குகிற, வெஞ்சமாக்கூடல் - வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின, விகிர்தா-மெய்யனே, அடியேனையும் வேண்டுதியே என்று - அடியேனையும் விரும்புவையோவென்று, தான் விரும்பி - தான்விரும்பி, வஞ்சியாது அளிக்கும் - வஞ்சிக்காமல் காக்கின்ற, (வயல் நாவலர்கோன்—, வனப்பகையப்பன்—, வன்றொண்டன்) சுந்தரன், சொன்ன - சொல்லிய, செஞ்சொல் - செஞ்சொல்லையுடைய, தமிழ்மாலை பத்தும் வல்லார் - தமிழ்மாலைப் பத்துப் பாடலும் கற்று வல்லார், சிவலோகத்து இருப்பதுதிண்ணம் அன்றே— எ-று.

(பொ-ரை.) வஞ்சிக்கொடிபோலும் நுண்ணிடையார், மயிற்சாயலையுடைய மாதர், வடித்தவேல்போலுங் கண்களையுடைய மாதர் பலர் வந்து இறைஞ்சும் வெஞ்சமாக்கூடலில் எழுந்தருளின மெய்யனே, அடியேனையும் விரும்புவையோவென்று தான் விரும்பி வஞ்சிக்காமல் காக்கின்ற வயல் நாவலர்கோன் வனப்பகையப்பன் சுந்தரன் சொல்லிய செஞ்சொல்லையுடைய தமிழ்மாலை பத்துப்பாடலும் கற்று வல்லார் சிவலோகத்து இருப்பது திண்ணம் அன்றே.

(க-ரை.) திருவெஞ்சமாக்கூடல் இறைவனை நாவலூரான் சொன்ன தமிழ்ப் பாடல் பத்தும் கற்று வல்லவர் சிவலோகத்திலிருப்பது திண்ணமல்லவா என்பதாம்.

(வி-ரை.) வஞ்சி - கொடி, வஞ்சிக்கொடியெனினுமாம். இறைஞ்சல் - வணங்கல். திண்ணம் - நிச்சயம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் கொங்கநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சௌந்தரநாதர், தேவியார் - பெரியநாயகியம்மை.

39

## திருமுதுகுன்றம்

பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**நஞ்சியிடையென்றுநாளையென்றும்மைநச்சுவார்**
**துஞ்சியிட்டாற்பின்னைச்செய்வதென்னடிகேள்சொலீர்**
**பஞ்சியிடப்புட்டில்கீறுமோபணியீரருள்**
**முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர்முதுகுன்றரே.**

**(ப-ரை.)** முஞ்சி இடை-முஞ்சிப்புதலினிடையே, சங்கம் ஆர்க்கும் - சங்குகள் முழங்குகிற, சீர் - சிறப்பினையுடைய, முதுகுன்றரே-பழமலையாரே, நஞ்சி - நைந்து, இடையென்று - இடையிலென்றும், நாளையென்று - நாளையென்றும், உம்மை நச்சுவார் - உம்மை விரும்புவார், துஞ்சியிட்டால் - இறந்து விட்டால், பின்னை-அதன்பிறகு, செய்வது என் - செய்வதுயாது, அடிகேள் சொல்வீர் - சுவாமீ சொல்லக்கடவீர், பஞ்சியிட - பஞ்சியிட்டால், புட்டில் கீறுமோ-புட்டில் கிழியுமோ, பணியீர் அருள் - அருள் பாலிக்கக் கடவீர் எ-று.

**(பொ-ரை.)** முஞ்சிப்புதலினிடையே சங்குகள் முழங்குகிற சிறப்பினையுடைய பழமலையாரே, நைந்து இடையிலென்றும் நாளையென்றும்,உம்மை விரும்புவார் இறந்து விட்டால் அதன்பிறகு செய்வது என், சுவாமீ சொல்லக்கடவீர், பஞ்சியிட்டால் புட்டில் கிழியுமோ, அருள் பாலிக்கக்கடவீர்.

**(க-ரை.)** திருமுதுகுன்றரே, உம்மை விரும்புவோர், இறந்துபோனால், பின்பு செய்வது யாது என்பதாம்.

**(வி-ரை.)** முஞ்சி - தருப்பைப்புல். புட்டில் - கூடு. (1)

**ஏரிக்கனகக்கமலமலரன்னசேவடி**
**யூரித்தனையுந்திரிந்தக்காலவைநோங்கொலோ**
**வாரிக்கட்சென்றுவளைக்கப்பட்டுவருந்திப்போய்**
**மூரிக்களிறுமுழக்கருமுதுகுன்றரே.**

**(ப-ரை.)** ஏரி - ஏரியிற்பூத்த, கமலமலர் அன்ன-தாமரைமலரை நிகர்த்த, சேவடி - உன்திருவடிகள், ஊர் இத்தனையும் திரிந்தக்கால் – இத்தனை யூர்களிலும் திரிந்தால், அவை நோகும் கொலோ - அவை நோகுமோ, வாரிக்கண் சென்று - வெள்ளத்திற் போய், வளைக்கப்பட்டு-வருந்திப்போய், மூரிக்களிறு - வலிய யானைகள், முழக்கு - முழங்குதல், அறு - இடையறாத, முதுகுன்றரே - பழமலையாரே எ-று.

**(பொ-ரை.)** ஏரியிற் பூத்த தாமரைமலரை நிகர்த்த உன் திருவடிகள் இத்தனை யூர்களிலும் திரிந்தால் அவை நோகுமோ, வெள்ளத்திற்போய் வருந்திப் போய் வலிய யானைகள் முழங்குதல் இடையறாத பழமலையாரே.

(க-ரை.) திருமுதுகுன்றரே, இத்தனையூர்களிற் போய்த் திரிந்தால் தாமரை மலர்போலும் உமது திருவடிகள் நோவாவோ வென்பதாம்.

(வி-ரை.) வாரி - யானை படுகுழியெனினுமாம். மூரி - வலிமை. முழக்கு- தொழிற்பெயர். (2)

**தொண்டர்கள்பாடவிண்ணோர்களேத்தவுழிதருவீர்**
**பண்டகந்தோறும்பலிக்குச்செல்வதுபான்மையே**
**கண்டகர்வாளிகள்வில்லிகள்புறங்காக்குஞ்சீர்**
**மொண்டகைவேள்விமுழக்கறுமுதுகுன்றரே.**

(ப-ரை.) கண்டகர் வாளிகள் - கண்டகருடைய அம்புகளும், வில்லிகள் - வில்லியரும், புறம்காக்கும் - புறங்காவல் செய்கிற, சீர், பொன்னை, மொண் டகை, வாரிக்கொடுக்குங் கையினுற் செய்யப்படுகிற, வேள்வி முழக்கு அறு - யாகமுழக்கம் இடையறாத, முதுகுன்றரே - பழமலையாரே, தொண்டர்கள் பாட - அடியார்கள் பாடவும், விண்ணோர் ஏத்த - தேவர்கள் துதிக்கவும், உழிதரு வீர் - வீற்றிருப்பவரே, பண்டு - பழமையாகிய, அகம் தோறும் - வீடு தோறும், பலிக்குச் செல்வது - பலியேற்கப்போவது, பான்மையே-உமக்குத் தகுதியோ எ-று.

(பொ-ரை.) கண்டகருடைய அம்புகளும் வில்லியரும் புறங்காவல் செய் கிற பொன்னை வாரிக்கொடுக்குங் கையினுற் செய்யப்படுகிற யாகமுழக்கம் இடையறாத முதுகுன்றரே, தொண்டர்கள் பாடவும் தேவர்கள் துதிக்கவும் வீற்றிருப்பவரே, பழமையாகிய வீடுதோறும் பலியேற்கப் போவது உமக்குத் தகுதியோ.

(க-ரை.) திருமுதுகுன்றரே, நீர் வீடுதோறும் சென்று பலியேற்பது உமக் குத் தகுதியோ வென்பதாம்.

(வி-ரை.) கண்டகர் - துஷ்டர். பான்மையே என்பதில் ஈற் றேகாரம் வினவும் எதிர்மறையுமாம். (3)

**இளைப்பறியீரிம்மையேத்துவார்க்கம்மைசெய்வதென்**
**விளைப்பறியாதவெங்காலனையுயிர்வீட்டினீர்**
**அளைப்பிரியாவரவல்குலாளொடுகங்கைசேர்**
**முளைப்பிறைச்சென்னிச்சடைமுடிமுதுகுன்றரே.**

(ப-ரை.) அளைபிரியா - வளையைவிட்டு நீங்காத, அரவு-பாம்பின் படம்போ லும், அல்குலாளொடு - அல்குலை யுடையவளாகிய உமாதேவியோடு, கங்கை சேர் - கங்காநதிசேர்ந்த, முளைப்பிறை - இளம்பிறையையணிந்த, சென்னி - சிரத்திலுள்ள, சடைமுடி-சடைமுடியையுடைய, முதுகுன்றரே-பழமலையாரே, இளைப்பு அறியீர் - மெலிவை யறியமாட்டீர், இம்மை ஏத்துவார்க்கு - இம்மை யில் துதிப்பவர்க்கு, அம்மை செய்வது என் - அம்மையிற் செய்வது யாது,

விளைப்பு - மேல் விளையப்போவதை, அறியாத - உணராத, வெம்காலனை - கொடிய யமனை, உயிர்வீட்டினீர் - உயிர் செகுத்தீர் எ-று.

(போ-ரை.) வளையைவிட்டு நீங்காத பாம்பின் படம்போலும் அல்குலையு டையவளாகிய உமாதேவியோடு கங்காநதிசேர்ந்த இளம்பிறையையணிந்த சிரத் திலுள்ள சடைமுடியையுடைய பழமலையாரே, மெலிவை யறியமாட்டீர், இம் மையில் துதிப்பவர்க்கு அம்மையிற் செய்வது யாது, மேல்விளையப்போவதை உணராத கொடிய யமனை உயிர்செகுத்தீர்.

(க-ரை.) திருமுது குன்றரே இளைப்பறிந்து எம் மனோரைக் காவாத நீர், அம்மையிற் செய்வது யாது என்பதாம்.

(வி-ரை.) அளை-வளை (புற்று). அரவு-ஆகுபெயர். விளைப்பு - விளைவு. உயிர் வீட்டல் - உயிர் கவர்தல். (4)

**ஆடியசைந்தடியாருநீருமகந்தோறும்**
**பாடிப்படைத்தபொருளெலாமுமையாளுக்கோ**
**மாடமதிலணிகோபுரமணிமண்டப**
**மூடிமுகில்தவழ்சோலைசூழ்முதுகுன்றரே.**

(ப-ரை.) மாடம் மதில் அணி கோபுரம் மணிமண்டபம் - மாடங்கள் மதில் கள் அழகிய கோபுரங்கள் ரத்ந மண்டபங்கள் ஆகிய இவற்றை, மூடி முகில் தவழ் சோலைசூழ் - மறைத்து மேகங்கள் தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த, முது குன்றரே-பழமலையாரே, ஆடி அசைந்து-ஆடி யசைந்து, அடியாரும் நீரும்-உன் தொண்டரும் நீரும், அகம்தோறும்-வீடுதோறுஞ்சென்று, பாடிபடைத்த பொரு ளெல்லாம்-பாடிப்பெற்ற பொருள்முழுதும், உமையாளுக்கோ-உமாதேவிக்குத் தானோ எ-று.

(போ-ரை.) மாடங்கள் மதில்கள் அழகிய கோபுரங்கள் ரத்நமண்டபங்கள் ஆகிய இவற்றை மறைத்து மேகங்கள் தவழ்கின்ற சோலைகள்சூழ்ந்த பழமலை யாரே, ஆடியசைந்து உன் தொண்டரும் நீரும், வீடு தோறுஞ்சென்று பாடிப் பெற்ற பொருள்முழுதும் உமாதேவிக்குத்தானோ.

(க-ரை.) திருமுதுகுன்றரே, அடியாரும் நீரும் பாடிக்கொண்டுபோய் வீடு தோறும் இரந்து படைத்த பொருளெல்லாம் உமாதேவிக்குத்தானோவென்பதாம்.

(வி-ரை.) உமையாளுக்கோ என்னுமோகாரம் ஐயம். (5)

**இழைவளர்நுண்ணிடைமங்கையோடிடுகாட்டிடைக்**
**குழைவளர்காதுகள்மோதநின்றுகுனிப்பதோ**
**மழைவளருங்நெடுங்கோட்டிடைமதயானைகள்**
**முழைவளராளிமுழக்கருமுதுகுன்றரே.**

(ப-ரை.) மழைவளரும் - மேகங்கள் தூங்குகிற,நெடுங்கோட்டிடை-நீண்ட சிகரத்தில் உள்ள, மதயானைகள் - மதயானைகளுடையவும், முழைவளர்—குகை களில் வாழ்கின்ற, ஆளி - சிங்கங்களுடையவும், முழக்கு அரு - முழக்கங்க

ளிடையறாத, முதுகுன்றரே - பழமலையாரே, இழைவளர் - நூலிழைபோலும், நுண் இடை மங்கையோடு - நுண்ணிடையையுடைய உமாதேவியோடு, இடு காட்டிடை-மயானத்தில், குழைவளர்-குண்டலமணிந்த, காதுகள்போத-காதுகள் தாக்க, நின்று குனிப்பதோ - நின்று நடிப்பதோ (உமக்குத் தகுதியாவது) எ-று.

(போ-ரை.) மேகங்கள் தூங்குகிற நீண்ட சிகரத்திலுள்ள மதயானைகளுடையவும், குகைகளில் வாழ்கின்ற சிங்கங்களுடையவும் முழக்கங்களிடையறாத பழமலையாரே, நூலிழைபோலும் நுண்ணிடையையுடைய உமாதேவியோடு மயானத்தில் குண்டலமணிந்த காதுகள் தாக்க நின்று நடிப்பதோ (உமக்குத் தகுதியாவது).

(க-ரை.) திருமுதுகுன்றரே,உமாதேவியோடு சுடுகாட்டில் ஆடுவதுதானோ உமக்குத் தகுதியாவதென்பதாம்.

(வி-ரை.) குனித்தல்-நடித்தல். வளர்தல் - கண்வளர்தல். கோடு-சிகரம் (6)

**சென்றிலிடைச்செடிநாய்குரைக்கச்சேடிச்சிகள்**
**மன்றிலிடைப்பலிதேரப்போவதுவாழ்க்கையே**
**குன்றிலிடைக்களிறாளிகொள்ளக்குறத்திகள்**
**முன்றிலிடைப்பிடிகன்றிடும்முதுகுன்றரே.**

(ப-ரை.) குன்றிலிடை - மலையில்வாழ்கின்ற, களிறு - ஆண்யானைகளை, ஆளிகொள்ள - சிங்கங்கள் கவர்ந்துகொண்டுபோக, குறத்திகள் - குறத்திகளும், முன்றிலிடை-முற்றங்களிலுள்ள, பிடி - பெண்யானைகளும், கன்றிடும் - மனம் வருந்துகிற, முதுகுன்றரே - பழமலையாரே, இல் இடைசென்று - வீடுதோறுஞ் சென்று, செடிநாய் குரைக்க-கோவத்தையுடைய நாய்கள் குரைக்க, சேடிச்சிகள் மன்றிலிடை - சேடிச்சிகளுடைய முற்றங்களில், பலிதேரப்போவது - பலியேற்கப் போவது, வாழ்க்கையோ - வாழ்வுதானோ எ-று.

(போ-ரை.) மலையில் வாழ்கின்ற ஆண்யானைகளைச் சிங்கங்கள் கவர்ந்து கொண்டுபோக, குறத்திகளும் முற்றங்களிலுள்ள பெண்யானைகளும் மனம் வருந்துகிற பழமலையாரே, வீடுதோறுஞ்சென்று கோவத்தையுடைய நாய்கள் குரைக்க சேடிச்சிகளுடைய முற்றங்களில் பலியேற்கப்போவது வாழ்வுதானோ.

(க-ரை.) திருமுதுகுன்றரே, நீர், நாய்கள் குரைக்கும்படி வீடுதோறுஞ் சென்று பலியேற்கும் வாழ்வும் ஓர் வாழ்வுதானோவென்பதாம்.

(வி-ரை.) சேடிச்சிகள் - தோழமையுடையவர்கள். மன்று - முற்றம். (7)

**அந்திதிரிந்தடியாருநீருமகந்தொறுஞ்**
**சந்திகடோறும்பலிக்குச்செல்வதுதக்கதே**
**மந்திகடுவனுக்குண்பழநாடிமலைப்புற**
**முந்தியடிதொழநின்றசீர்முதுகுன்றரே.**

(ப-ரை.) மந்தி - பெண்குரங்குகள், கடுவனுக்கு - ஆண்குரங்கின் பொருட்டு, உண்பழம் - உண்டற்குரிய கனிகளை, நாடி - தேடி, மலைப்புறம் முந்தி -

மலைப்புறத்தே முற்பட்டு, அடிதொழநின்ற - அடிவணங்கநின்ற, சீர் - சிறப்புப் பொருந்திய, முதுகுன்றரே - பழமலையாரே, அடியாரும் நீரும் - தொண்டரும் நீரும், அந்தி - அந்திப்பொழுதில், அகம்தோறும் திரிந்து-வீடுகள்தோறும் திரிந்து, சந்திகள்தோறும்-சந்திகள்தோறும், பலிக்குச்செல்வது - பிச்சை யெடுக்கப்போவது, தக்கதே - (உமக்குத்) தக்கதோ எ-று.

(பொ-ரை.) பெண்குரங்குகள் ஆண்குரங்கின் பொருட்டு உண்டற்குரிய கனிகளை தேடி மலைப்புறத்தே முற்பட்டு அடிவணங்க நின்ற சிறப்புப் பொருந்திய பழமலையாரே, தொண்டரும் நீரும் அந்திப்பொழுதில் வீடுகள்தோறும் திரிந்து சந்திகள்தோறும் பிக்ஷையெடுக்கப்போவது (உமக்கு தக்கதோ.)

(க-ரை.) திருமுதுகுன்றரே, நீரும் உம்மடியாருமாக அந்திப்பொழுதில் வீடுதோறுஞ் சென்றிரப்பது உமக்குத் தகுதியோவென்பதாம்.

(வி-ரை.) தக்கதே என்பதில் ஏகாரம் வினா. (8)

**செட்டிநின்காதலியூர்கடோறுமறஞ்செய**
**வட்டுமின்சில்பலிக்கென்றகங்கடைநிற்பதே**
**பட்டிவெள்ளேறுகந்தேறுவீர்பரிசென்கொலோ**
**முட்டியடிதொழநின்றசீர்முதுகுன்றரே.**

(ப-ரை.) முட்டி - (தேவர் முதலியோர்) நெருங்கி, அடிதொழநின்ற அடிவணங்க நின்ற, சீர் - சிறப்பினையுடைய, முதுகுன்றரே - பழமலையாரே, பட்டிவெள் ஏறு உகந்து ஏறுவீர் - பட்டியாகிய வெள்ளெருதை யுகந் தேறு நிற்பீர், செட்டி - செட்டுக்காரியாகிய, உம் காதலி - உமது மனைவி, ஊர்கள் தோறும் அறம் செய்ய - ஊர்தோறும் தருமஞ்செய்ய, அட்டும் - சமைத்தும், இன் - இனிய, சில்பலிக்கென்று-சில்பலியின் பொருட்டு, அகம்கடை நிற்பதே- கடைவாயிலில் போய் நிற்பதோ (உமக்குத் தகுதி), பரிசு என்கொலோ-இந்தத் தன்மை யும்மிடத்திருப்பதற்குக் காரணம் யாதோ எ-று.

(பொ-ரை.) (தேவர்முதலியோர்) நெருங்கி அடிவணங்கநின்ற சிறப்பினையுடைய பழமலையாரே, பட்டியாகிய வெள்ளெருதை யுகந்தேறுநிற்பீர், செட்டுக்காரியாகிய வுமது மனைவி ஊர்தோறும் தருமஞ்செய்ய சமைத்தும் இனிய சில்பலியின் பொருட்டு கடைவாயிலில் போய்நிற்பதோ (உமக்குத் தகுதி) இந்தத் தன்மை யும்மிடத்திருப்பதற்குக் காரணம் யாதோ.

(க-ரை.) திருமுதுகுன்றரே, உமதுமனைவி அறஞ்செய்யச் சமைத்து வைத்துக்கொண்டிருக்க, நீர் இவ்வாறு வீடுதோறும் சென்று பலியேற்பது உமக்குத் தகுதியோ வென்பதாம்.

(வி-ரை.) செட்டு-சிக்கனவு. இகரம் வினை முதற்பொருண்மை விகுதி. அடுதல் - சமைத்தல். (9)

**எத்திசையுந்திரிந்தேற்றக்காற்பிறரென்சொலார்**
**பத்தியினாலிடுவாரிடைப்பலிகொள்மினோ**
**எத்திசையுந்திரையேறமோதிக்கரைகண்மேல்**
**முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரே.**

(**ப-ரை.**) எத்திசையும்-எந்தத் திக்கிலும், கரைகள்மேல்-கரைகளின்மீது, திரை ஏறமோதி - அலைகளேறமோதி, முத்தி - முத்தியைத் தரத்தக்க, முத்தாறு - மணிமுத்தாநதி, வலம்செயும் - வலம்வருகிற, முதுகுன்றரே - பழமலையாரே, எத்திசையும் திரிந்து எற்றக்கால் - எந்தத் திக்கிலும் திரிந்து பிச்சையேற்றால், பிறர் என் சொல்லார் - அன்னியர் என்ன சொல்லமாட்டார், பத்தியினால் இடுவாரிடை - பத்தியோடு இடுவோரிடத்தில், பலி கொள்மின் - பலி கொள்ளும் எ-று.

(**பொ-ரை.**) எந்தத் திக்கிலும் கரைகளின்மீது அலைகளேற மோதி, முத்தியைத் தரத்தக்க மணிமுத்தாநதி வலம்வருகிற பழமலையாரே, எந்தத் திக்கிலும் திரிந்து பலியேற்றால் அன்னியர் என்ன சொல்லமாட்டார், பத்தியோடு இடுவோரிடத்தில் பலிகொள்ளும்.

(**க-ரை.**) திருமுதுகுன்றரே, நீர் எல்லாவிடங்களிலுஞ் சென்று பலியேற்றால், பிறர் என்ன சொல்லார், பக்தியோடு இடுவோரிடத்திற் சென்று பலி கொள்ளும் என்பதாம். (10)

**முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரைப்**
**பித்தனொப்பானடித்தொண்டனூரன்பிதற்றிவை**
**தத்துவஞானிகளாகினார்தடுமாற்றிலார்**
**எத்தவத்தோர்களுமேத்துவார்க்கிடரில்லையே.**

(**ப-ரை.**) முத்தி முத்தாறு வலஞ்செயும் - தன்னிடத்தில் மூழ்குவோர்க்கு முத்தியைத் தரத்தக்க மணிமுத்தா நதி வலம் வருகிற, முதுகுன்றரை - பழமலையாரை, (பித்தன் ஒப்பான்—, அடித்தொண்டன்—, ஊரன்—,) சுந்தரன் பிதற்று இவை - பிதற்றிய இப் பாடல்களை, தடுமாற்றம் இல்லார் - தடுமாற்றமில்லாதவராகிய, தத்துவஞானிகள் ஆகினார் - மெய்ஞ்ஞானிகளும், எத்தவத்தோர்களும் - பாடவல்லவர்களும், (ஆகி) எத்துவார்க்கு - துதிப்போர்க்கு, இடர் இல்லை — துன்பமில்லை எ-று.

(**பொ-ரை.**) தன்னிடத்தில் மூழ்குவோர்க்கு முத்தியைத் தரத்தக்க மணிமுத்தாநதி வலம்வருகிற பழமலையாரை, பித்தன் ஒப்பான் அடித்தொண்டன் ஊரன் சுந்தரன் பிதற்றிய இப் பாடல்களை தடுமாற்றமில்லாதவராகிய மெய்ஞ்ஞானிகளும், பாட வல்லவர்களும் (ஆகிய) துதிப்போர்க்கு துன்பமில்லை.

(**க-ரை.**) திருமுதுகுன்றரைச் சுந்தரன் புகழ்ந்து பாடின இந்தப் பத்துப் பாடல்களையும் தோத்திரஞ் செய்பவருக்கு இடரில்லை யென்பதாம்.

(**வி-ரை.**) தடுமாற்றம் என்பது தடுமாற்று என விகாரமாயிற்று. (11)

**திருச்சிற்றம்பலம்.**

## முடிப்பதுகங்கை

பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**முடிப்பதுகங்கையுந்திங்களுஞ்செற்றதுமூவெயில்**
**நொடிப்பதுமாத்திரைநீறெழக்கணை நூறினார்**
**கடிப்பதுமேறுமென்றஞ்சுவன்றிருக்கைகளாற்**
**பிடிப்பதுபாம்பன்றியில்லையோவெம்பிரானுக்கே.**

(ப-ரை.) முடிப்பது - முடித்துக்கொள்வது, கங்கையும் திங்களும்--கங்கையும் பிறையும், நொடிப்பது மாத்திரை - நொடிப்பதாகிய மாத்திரைப் பொழுதில், நீறு எழ — பொடியெழும்வண்ணம், கணை - பாணத்தினால், நூறினார் - பொடிபடுத்து, செற்றது-அழித்தது, மூன்று எயில் மும்மதில்கள், கடிப்பதும் - கடித்தலும, ஏறும் என்று - விடமேறுமென்று, அஞ்சுவன்-அஞ்சாநின்றேன், எம்பிரானுக்கு - எம்பெருமானுக்கு, திருக்கைகளால் பிடிப்பது பாம்பு - திருக்காத்தால் பற்றுவது பாம்பேயாயிற்று, அன்றி-இவையன்றி, இல்லையோ-வேறு பொருளில்லையோ எ-று.

(பொ-ரை.) முடித்துக்கொள்வது கங்கையும் பிறையும், நொடிப்பதாகிய மாத்திரைப்பொழுதில் பொடியெழும்வண்ணம் பாணத்தினால் பொடிபடுத்தி அழித்தது மும்மதில்கள், கடித்தலும் விடமேறுமென்று அஞ்சாநின்றேன், எம்பெருமானுககு திருக்காத்தால் பற்றுவது பாம்பேயாயிற்று, இவையன்றி வேறு பொருளில்லையோ.

(க-ரை.) கங்கையையுந் திங்களையும் முடித்துக்கொள்பவரும், மூ வெயில் செற்றவரும் ஆகிய எம்பிரானுக்குக் கையிற் பிடிக்கப் பாம்பன்றி வேறு பொருளில்லையோ, அந்தப் பாம்பைக்கண்டு அஞ்சாநின்றேன் என்பதாம்.

(வி-ரை.) மூவெயில் என்றது முப்புரத்தை. இது மதிலுருவாதலால் இங்ஙனங் கூறினார். (1)

**தூறன்றியாடரங்கில்லையோசுடலைப்பொடி**
**நீறன்றிச்சாந்தமற்றில்லையோவிமவான்மகள்**
**கூறன்றிக்கூறுவதில்லையோகொல்லைச்சில்லைவெள்**
**ஏறன்றியேறுவதில்லையோவெம்பிரானுக்கே.**

(ப-ரை.) எம்பிரானுக்கு - எம் பெருமானுக்கு, தூறு அன்றி - புதல்முதலிய அடர்ந்த மயானம் அல்லாமல், ஆடரங்கு இல்லையோ-நடனசபை இல்லையோ, நீறு அன்றி - வெண்பொடியேயன்றி, சாந்தம் மற்று இல்லையோ - பூச்சுப்பொருள் வேறில்லையோ, இமவான் மகள் கூறு அன்றி - உமாதேவியின் பாகம் அல்லாமல், கூறுவது இல்லையோ-பாகத்திற் கொள்வது இல்லையோ, கொல்லை சில்லை வெள் ஏறு அன்றி - கொல்லுந் தொழிலும் பட்டித்தனமுமுள்ள வெள் விடையன்றி, ஏறுவது இல்லையோ-ஏறுதற்குரிய வேறு பொருளில்லையோ எ-று.

(போ-ரை.) எம்பெருமானுக்கு புதல் முதலிய அடர்ந்த மயாநம் அல்லாமல் நடநசபை இல்லையோ, வெண்பொடியேயன்றி பூச்சுப்பொருள் வேறில்லையோ, உமாதேவியின் பாகம் அல்லாமல் பாகத்திற்கொள்வது இல்லையோ, கொல்லுந் தொழிலும் பட்டித்தனமுமுள்ள வெள்விடையன்றி ஏறுதற்குரிய வேறு பொருளில்லையோ.

(க-ரை.) எம்பிரானுக்கு, தூறு முதலியவையேயன்றி ஆடரங்கு முதலியன வேறில்லையோ வென்பதாம். (2)

**தட்டெனுந்தட்டெனுந்தொண்டர்காள் தடுமாற்றத்தை**
**யொட்டெனுமொட்டெனுமாநிலத்துயிர்கோறலைச்**
**சிட்டன்றிரிபுரஞ்சுட்டதேவர்கள்தேவனை**
**வெட்டெனப்பேசன்மின்றொண்டர்காளெம்பிரானையே.**

(ப-ரை.) தொண்டர்காள் - அடியார்களே, தடுமாற்றத்தை - தடுமாறுதலை, தட்டு என்னும் தட்டு என்னும் - தடை என்னும் தடை என்னும், மாநிலத்து உயிர் கோறலை - உலகத்திலுள்ள உயிர்களைக்கொல்லுதலை, ஒட்டு என்னும் ஒட்டு என்னும் - ஒட்டென்னும் ஒட்டென்னும், சிட்டன் - பெரியோனாகிய, திரிபுரம் சுட்ட - முப்புரமெரித்த, தேவர்கள் தேவனை - தேவதேவனை, எம்பிரானை - எம்பெருமானை, தொண்டர்காள் - அடியார்களே, (நீங்கள்) வெட்டெனப் பேசன்மின் - வெட்டென்று பேசாதீர்கள் எ-று.

(போ-ரை.) அடியார்களே, தடுமாற்றத்தை தட்டு என்னும் தட்டு என்னும் உலகத்திலுள்ள வுயிர்களைக் கொல்லுதலை ஒட்டு என்னும் ஒட்டு என்னும் பெரியோனாகிய முப்புரமெரித்த தேவதேவனை, எம்பெருமானை, அடியார்களே, (நீங்கள்) வெட்டென்று பேசாதீர்கள்.

(க-ரை.) தொண்டர்களே, நீங்கள், உயிர்க்கொலை முதலியவற்றை விடுங்கள், எம்பிரானை வெட்டெனப் பேசாதீர்கள் என்பதாம்.

(வி-ரை.) வெட்டெனப்பேசல் - கடுமையாகப் பேசல். தேவர்கள் தேவன் என்பதை யொரு சொல்லாகக் கொள்க. (3)

**நரிதலைகவ்வநின்றோரிகூப்பிடநள்ளிரு**
**ளெரிதலைப்பேய்புடைசூழவாரிருட்காட்டிடைச்**
**சிரிதலைமாலைசடைக்கணிந்தவெஞ்செல்வனைப்**
**பிரிதலைப்பேசன்மின்றொண்டர்காளெம்பிரானையே.**

(ப-ரை.) தொண்டர்காள் - அடியார்களே, நரிதலைகவ்வ - நரிகள் தலைகளைக் கவ்வாநிற்க, ஓரி கூப்பிட - கிழநரி கூவாநிற்க, நள் இருள் - நடுராத்திரியில், எரிதலை - நெருப்புப்போலச் சிவந்த தலைமயிரையுடைய, பேய் புடைசூழ - பேய்கள் பக்கத்தில் வளைந்து நிற்க, ஆர் இருள் — மிக்க இருளையுடைய, காட்டிடை - சுடுகாட்டில், சிரி-சிரிக்கின்ற, தலைமாலை சடைக்கு அணிந்த - தலைமா

லையைச் சடையில் தரித்த, எம்செல்வனை - எமது செல்வனை, எம் பிரானை - எமது தலைவனை, பிரிதலைப் பேசல்மின் - பிரிவுபேசாதீர்கள் எ-று.

(பொ-ரை.) அடியார்களே, நரிகள் தலைகளைக் கவ்வாநிற்க, கிழநரி கூவாநிற்க, நடுராத்திரியில் நெருப்புப்போலச் சிவந்த தலைமயிரையுடைய பேய்கள் பக்கத்தில்வளைந்துநிற்க, மிக்க இருளையுடைய சுடுகாட்டில்சிரிக்கின்ற தலைமாலை சடைக்கு அணிந்த எமதுசெல்வனை எமது தலைவனை பிரிவுபேசாதீர்கள்.

(க-ரை.) தொண்டர்காள், தலைமாலையணிந்து சுடுகாட்டிலாடும் எம்பிரானைப் பிரிவு பேசாதீர்கள் என்பதாம்.

(வி-ரை.) காடு-இடுகாடு சுடுகாடு என்னு மிரண்டற்கும் பொது. பிரிதல் - பிரிவு. (4)

**வேயனதோளிமலைமகளைவிரும்பிய**
**மாயமில்மாமலைநாடனாகியமாண்பனை**
**யாயனசொல்லிநின்றார்களல்லலறுக்கினும்**
**பேயனேபித்தனேயென்பாரலெம்பிரானையே**

(ப-ரை.) ஆயன சொல்லி நின்றார்கள்-தம்மா லியன்றவற்றைச் சொல்லி நின்றார்களது, அல்லல் - துன்பத்தை, அறுக்கினும்-ஒழிப்பினும், வேய் அன்ன தோளி - மூங்கில்போலுந் தோள்களை யுடையவளாகிய, மலைமகளை - பர்வத ராஜகுமாரியை, விரும்பிய-இச்சித்த, மாயம் இல் - கபடகுணமில்லாத, மாமலை நாடனாகிய மாண்பனை - பெருமைபொருந்திய மலை நாடனாகிய மாண்பனை, எம்பிரானை - எம் பெருமானை, பேயனே பித்தனே என்பர் - பேயனே பித்தனே என் றிகழாநிற்பர் எ-று.

(பொ-ரை.) தம்மா லியன்றவற்றைச் சொல்லி நின்றார்களது துன்பத்தையொழிப்பினும், மூங்கில்போலுந் தோள்களை யுடையவளாகிய பர்வத ராஜகுமாரியை இச்சித்த கபடகுணமில்லாத பெருமைபொருந்திய மலை நாடனாகிய மாண்பனை, எம் பெருமானை, பேயனே பித்தனே என் றிகழாநிற்பர்.

(க-ரை.) தம்மாலியன்ற துதிகளைச் சொல்லுவோரது துன்பத்தை யொழித்துக்கொண்டிருக்கவும் அந்த எம்பிரானைப் பேயனே பித்தனே யென்பர் இதென்ன பாவம் என்பதாம்.

(வி-ரை.) மாண்பன் - பெருமையுடையவன். மாண்பு - பெருமை. (5)

**இறைவனென்றெம்பெருமானைவானவரேத்தப்போய்த்**
**துறையொன்றித்தூமலரிட்டடியிணைபோற்றுவார்**
**மறையன்றிப்பாடுவதில்லையோமல்குவானிளம்**
**பிறையன்றிச்சூடுவதில்லையோவெம்பிரானுக்கே.**

(ப-ரை.) எம்பெருமானை - எமது தலைவனை, வானவர் - தேவர், இறைவன் என்று - தம்தலைவனென்று, ஏத்திப்போய் - துதித்துக்கொண்டுபோய்,

துறை ஒன்றி - நல்வழியிற்பொருந்தி, தூ - பரிசுத்தமாகிய, மலர் இட்டு - மலர் தூவி, அடி இணை - திருவடியிணையை, போற்றுவார் - வணங்குவார், எம்பிரானுக்கு (அவ்வாறாகிய பெருமையுள்ள) எம்பிரானுக்கு, மறை அன்றிபாடுவது இல்லையோ - வேதமன்றிப் பாடுவது இல்லையோ, மல்குவான் - நிறைந்த ஆகாயத்திலுள்ள, இளம்பிறை அன்றி - பாலசந்திரனை யன்றி, சூடுவது - தரித்துக் கொள்வது, இல்லையோ - வேறுபொருளில்லையோ எ-று.

(போ-ரை.) எமது தலைவனை, தேவர்தம் தலைவரென்று துதித்துக் கொண்டுபோய் நல்வழியிற் பொருந்தி பரிசுத்தமாகிய மலர்தூவி, திருவடியிணையை வணங்குவார் (அவ்வாறாகிய பெருமையுள்ள) எம்பெருமானுக்கு வேதமன்றிப் பாடுவதில்லையோ, நிறைந்த ஆகாயத்திலுள்ள பாலசந்திரனேயன்றி தரித்துக்கொள்வது வேறு பொருளில்லையோ.

(க-ரை.) எம்பிரானைத் தேவர்கள் வழிபடா நிற்பார்கள், (அங்ஙனம் பெருமைவாய்ந்த) எம்பிரானுக்கு மறையன்றிப் பாடுவதில்லையோ, பிறையன்றிச் சூடுவதில்லையோ வென்பதாம் (6)

**தாருந்தண்கொன்றையுங்கூவிளந்தனிமத்தமும்**
**ஆருமளவறியாதவாதியுமந்தமும்**
**ஊருமொன்றில்லையுலகெலாமுகப்பார்தொழப்**
**பேருமோராயிரமென்பராலெம்பிரானுக்கே.**

(ப-ரை.) எம்பிரானுக்கு - எமது தலைவனுக்கு, தாரும் - மாலையாயிருப்பனவும், தண் கொன்றையும் கூவிளமும் தனிமத்தமும்-குளிர்ச்சியுள்ள கொன்றையும் கூவிளமும் ஒப்பற்ற ஊமத்தமலரும், ஆதியும் அந்தமும் - முதலும் இறுதியும், ஆரும் அளவு அறியாத - யாரும் அளவறியாதன, உவப்பார் தொழ விரும்பும் - அடியார் வணங்க விரும்புகிற, உலகு எல்லாம் - உலகமுழுதிலும், ஊரும் - ஒன்றும் இல்லை மிகப்பலவாம் என்பர் எ-று.

(போ-ரை.) எமது தலைவனுக்கு மாலையாயிருப்பனவும், குளிர்ச்சியுள்ள கொன்றையும் கூவிளமும் ஒப்பற்ற ஊமத்தமலரும் முதலும் இறுதியும் யாருமளவறியாதன, அடியார் வணங்க விரும்புகிற உலகமுழுதிலும் ஊரும் ஒன்றுமில்லை மிகப்பலவாம்.

(க-ரை.) எம்பிரானுக்கு மாலையாயிருப்பன கொன்றை முதலாயினவே, முதலும் இறுதியும் யாருமறியாதனவே, அடியார்தொழுதற்குரிய திருப்பதிகள் மிகப்பலவே, பேரும் ஓராயிரமே யென்பர் என்பதாம்.

(வி-ரை.) கூவிளம் - வில்வம். மத்தம் - ஊமத்தை. உவத்தல் - விரும்புதல். உவப்பார் என்றமையால் அன்பர் எனக்கொள்க. அளவு - எல்லை. (7)

**அரியொடுபூமிசையானுமாதியுமறிகிலார்**
**வரிதருபாம்பொடுவன்னிதிங்களுமத்தமும்**
**புரிதருபுன்சடைவைத்தவெம்புனிதற்கினி**
**யெரியன்றியங்கைக்கொன்றில்லையோவெம்பிரானுக்கே.**

**(ப-ரை.)** அரியொடு - விண்டுவோடு, பூமிசையானும் - பிரமனும், ஆதியும் அறிகிலர் - முதலும் அறிகிலர், வரிதரு பாம்பொடுவன்னியும் - வரிகளையுடைய பாம்புடனே வன்னியும், திங்களும் மத்தமும் - பிறையும் மத்தமும் ஆகிய இவற்றை, புரிதரு புன்சடைவைத்த - முறுக்கப்பட்ட புல்லிய சடையில் தரித்த, எம்புனிதற்கு - எமது பரிசுத்தருக்கு, எம்பிரானுக்கு - எமதுபெருமானுக்கு, இனி எரி அன்றி - இப்பொழுது நெருப்பல்லது, அங்கைக்கு ஒன்று இல்லையோ - அங்கையிலேந்துதற்கு வேறொன்றுமில்லையோ எ-று.

**(பொ-ரை.)** விண்டுவோடு பிரமனும் முதலுமறிகிலர், வரிகளையுடைய பாம்புடனே வன்னியும் முறுக்கப்பட்ட புல்லிய சடையில்தரித்தபிறையும் மத்தமும் ஆகிய இவற்றை எம்புனிதற்கு எம்பெருமானுக்கு இப்பொழுது நெருப்பல்லது அங்கையிலேந்துதற்கு வேறொன்றுமில்லையோ.

**(க-ரை.)** எம்பிரானுக்கு, அங்கையில் தரிப்பதற்கு நெருப்பன்றி வேறொரு பொருளில்லையோ வென்பதாம். (8)

**கரியமனச்சமண்காடியாடுகழுக்களால்**
**எரியவசணவுந்தன்மையோவிமவான்மகள்**
**பெரியமனந்தடுமாறவேண்டிப்பெம்மான்மதக்**
**கரியினுரியல்லதில்லையோவெம்பிரானுக்கே.**

**(ப-ரை.)** கரியமனம் - கரு மனத்தையுடைய, சமண் - சமணர், காடி ஆடு கழுக்களால் - நெய்யாடிய கழுமரங்களில், எரிய - எரியவும், வசவுண்ணவும் - வைவுண்ணவும், தன்மையோ - தகுதியோ, இமவான்மகள் - உமாதேவி, பெரியமனம் தடுமாறவேண்டி - பெரியமனம் கலங்கவிரும்பி, பெம்மான் - பெருமானாகிய, எம்பிரானுக்கு - எம்பெருமானுக்கு, மதக்கரியின் உரியல்லது இல்லையோ - மதயானைத்தோலன்றி வேறொன்று மில்லையோ எ-று.

**(பொ-ரை.)** கருமனத்தையுடைய சமணர் நெய்யாடிய கழுமரங்களில் எரியவும், வைவுண்ணவும் தகுதியோ, உமாதேவி பெரிய மனங்கலங்க விரும்பி பெருமானாகிய எம்பெருமானுக்கு மதயானைத்தோலன்றி வேறொன்று மில்லையோ.

**(க-ரை.)** சமணரைக் கழுவேற்றிய எம்பிரானுக்கு, மலைமகளை அச்சுறுத்தற்கு யானைத்தோலன்றி வேறுபொருளில்லையோ வென்பதாம்.

**(வி-ரை.)** கழுக்களால் உருபுமயக்கம். வசவுண்ணவும் என்பது வசணவும் என விகாரமாயிற்று. (9)

**காய்சினமால்விடைமாணிக்கத்தெங்கறைக்கண்டத்**
**தீசனை யூரனெட்டோடிரண்டும்விரும்பிய**
**வாயினசீர்ப்பகைஞானியப்பனடித்தொண்டன்ருன்**
**ஏசினபேசுமின்றொண்டர்காளெம்பிரானையே.**

**(ப-ரை.)** காய்சினம் - கடுஞ்சினத்தையுடைய, மால்விடை - மால்விடையூர்தியாகிய, மாணிக்கத்து - மாணிக்கம்போன்ற, எம்கறைக்கண்டத்து ஈசனை - எம் விஷகண்டத்தீச்சுரனை, எம்பிரானை - எம்பெருமானை, (ஊரன் விரும்பிய வாயின சீர்ப்பகைஞானியப்பன் அடித்தொண்டன்) சுந்தரன், ஏசின எட்டோடு இரண்டும் - வைதனவாகிய பத்துப் பாடல்களையும், தொண்டர்காள் - அடியார்களே, பேசுமின் - நீங்கள் பாடுங்கள் எ-று.

**(பொ-ரை.)** கடுஞ்சினத்தையுடைய மால்விடையூர்தியாகிய மாணிக்கம் போன்ற எம்விஷகண்டத்தீச்சுரனை, எம்பெருமானை, சுந்தரன் வைதனவாகிய பத்துப் பாடல்களையும் அடியார்களே நீங்கள் பாடுங்கள்.

**(கு-ரை.)** தொண்டர்காள், சுந்தரன் எம்பிரானை வைத பாடலாகிய இப் பத்தினையும் நீங்கள் பாடுங்கள் என்பதாம்.

**(வி-ரை.)** மால் விடை - பெரிய இடபம். (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஆமாத்தூர்

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**காண்டனன்காண்டனன்காரிகையாள்தன்கருத்தனை**
**யாண்டனனாண்டனனாமாத்துரெம்மடிகட்காட்**
**பூண்டனன்பூண்டனன்பொய்யன்றுசொல்லுவன் கேண்மின்க**
**மீண்டனன்மீண்டனன்வேதவித்தல்லாதவர்கட்கே.** [ள்

**(ப-ரை.)** காண்டனன் காண்டனன் - கண்டேன் கண்டேன், காரிகையாள் தன் கருத்தனை ஆண்டனன் ஆண்டனன் - உமாநாயகனை வந்து எம்மை யாண்டருளினன் ஆண்டருளினன், ஆமாத்தூர் எம் அடிகளுக்கு - திருஆமாத்தூர் எம் சுவாமிகட்கு, ஆள் பூண்டனன் பூண்டனன் - அடிமை பூண்டேன் பூண்டேன், பொய் அன்று - இது பொய்யல்ல, சொல்லுவன் - சொல்லுகிறேன், கேள்மின்கள் - கேளுங்கள், வேதவித்து அல்லாதவர்கட்கு - வேதவித்தல்லாதவரிடத்தினின்றும், மீண்டனன் மீண்டனன் - மீண்டேன் மீண்டேன் எ-று.

(**போ-ரை.**) கண்டேன் கண்டேன் உமாநாகனுய்வந்து எம்மை யாண்டருளினன் ஆண்டருளினன், திருஆமாத்தூர் சுவாமிகட்கு, அடிமை பூண்டேன் பூண்டேன், இது பொய்யல்ல, சொல்லுகிறேன் கேளுங்கள், வேதவித்தல்லாதவரிடத்தினின்றும் மீண்டேன் மீண்டேன்.

(**க-ரை.**) திருவாமாத்தூ ரடிகளைக் கண்டு அவனுக் கடிமையானேன் என்பதாம்.

(**வி-ரை.**) கண்டனன் என்பது காண்டனன் என விகாரமாயிற்று. (1)

**பாடுவன்பாடுவன்பார்ப்பதிதன்னடிபற்றிநான்**
**தேடுவன்தேடுவன் திண்ணெனப்பற்றிச்செறிதர**
**ஆடுவனாடுவனாமாத்தூரெம்மடிகளைக்**
**கூடுவன்கூடுவன்குற்றமதற்றென்குறிப்பொடே.**

(**ப-ரை.**) பார்ப்பதி தன் அடிபற்றி - லோகநாதனது திருவடியைப்பற்றி, நான் பாடுவன் பாடுவன் - நான் பாடுவேன் பாடுவேன், திண்ணெனப்பற்றி - உறுதியாகப்பிடித்து, செறிதர – பொருந்த, தேடுவன் தேடுவன் - தேடுவேன் தேடுவேன், ஆடுவன் ஆடுவன் - ஆடுவன் ஆடுவேன், ஆமாத்தூர் எம் அடிகளை - திருஆமாத்தூர் எம் சுவாமிகளை, குற்றம் அற்று - குற்றம் நீங்கி, என் குறிப்பொடே - என் நினைவுடனே, கூடுவன் கூடுவன் - கூடுவேன் கூடுவேன் எ-று.

(**போ-ரை.**) லோகநாதனது திருவடியைப்பற்றி நான் பாடுவேன் பாடுவேன், உறுதியாய்ப் பிடித்து பொருந்த தேடுவேன் தேடுவேன், ஆடுவன் ஆடுவன், திரு ஆமாத்தூர் எம்சுவாமிகளை குற்றம்நீங்கி என் நினைவுடனேகூடுவேன் கூடுவேன்.

(**க-ரை.**) லோகநாதனாகிய ஆமாத்தூரடிகளைப் பாடுதல் முதலியவற்றைச் செய்வேன் என்பதாம்.

(**வி-ரை**) செறிதர என்பதற்குப் பகுதி செறிதா. (2)

**காய்ந்தவன்காய்ந்தவன்கண்ணழலாலன்றுகாமனைப்**
**பாய்ந்தவன்பாய்ந்தவன்பாதத்தினாலன்றுகூற்றத்தை**
**ஆய்ந்தவனாய்ந்தவனாமாத்தூரெம்மடிகளார்**
**ஏய்ந்தவனேய்ந்தவனெம்பிராட்டியைப்பாகமே.**

(**ப-ரை.**) அன்று-அந்நாளில், கண் அழலால்-கண்ணெருப்பால், காமனைக் காய்ந்தவன் காய்ந்தவன் - மன்மதனை எரித்தவன் எரித்தவன், அன்று - அந்நாளில், பாதத்தினால் - திருவடியால், கூற்றத்தைப் பாய்ந்தவன் பாய்ந்தவன் - யமனை உதைத்தவன் உதைத்தவன், ஆய்ந்தவன் ஆய்ந்தவன் - ஆராய்ந்தவன் ஆராய்ந்தவன், ஆமாத்தூர் எம் அடிகளார் - ஆமாத்தூர் எம் சுவாமிகள், எம்

பிராட்டியை - எம்பிராட்டியாகிய உமாதேவியை, பாகம் - பாகத்தில், எய்ந்தவன் எய்ந்தவன் — வைத்தவன் வைத்தவன் எ-று.

(**பொ-ரை.**) அந்நாளில் கண்ணெருப்பால் மன்மதனை எரித்தவன் எரித்தவன், அந்நாளில்திருவடியால் யமனைஉதைத்தவன் உதைத்தவன், ஆராயவேண்டுவன யாவும் ஆராய்ந்தவன் ஆராய்ந்தவன், திரு ஆமாத்தூர் எம் சுவாமிகள் எம்பிராட்டியாகிய உமாதேவியை பாகத்தில் வைத்தவன் வைத்தவன்.

(**க-ரை.**) திருவாமாத்தூ ரடிகளார் காமனைக் காய்தல் முதலிய செயல்களைச் செய்தவர் என்பதாம். (3)

**ஓர்ந்தனனோர்ந்தனனுள்ளத்துள்ளேநின்றவொண்பொருள்**
**சேர்ந்தனன்சேர்ந்தனன்சென்றுதிருவொற்றியூர்புக்குச்**
**சார்ந்தனன்சார்ந்தனன்சங்கிலிமென்றோள்தடமுலை**
**யார்ந்தனனார்ந்தனனாமாத்தூரையனருளதே.**

(**ப-ரை.**) உள்ளத்துள்ளே நின்ற ஒண் பொருள் - என் மனத்தினுள்ளே நின்ற மேலானபொருளை, ஓர்ந்தனன் ஓர்ந்தனன் - அறிந்தேன் அறிந்தேன், சென்று திருவொற்றியூர் புக்கு - போய் திருவொற்றியூரில் பிரவேசித்து, சேர்ந்தனன் சேர்ந்தனன் - சேர்ந்தேன் சேர்ந்தேன், சங்கிலி மெல் தோள்தடமுலை- சங்கிலியின் மெல்லியதோள்களையும் மலைபோலும் முலைகளையும், சார்ந்தனன் சார்ந்தனன் - சேர்ந்தேன் சேர்ந்தேன், ஆமாத்தூர் ஐயன் அருள் - திருவாமாத்தூர் ஐயனருளை, ஆர்ந்தனன் ஆர்ந்தனன் - பெற்றேன் பெற்றேன் எ-று.

(**பொ-ரை.**) என் மனத்தினுள்ளே நின்ற மேலான பொருளை அறிந்தேன் அறிந்தேன், போய் திருவொற்றியூரில் பிரவேசித்து சேர்ந்தேன் சேர்ந்தேன், சங்கிலியின்மெல்லிய தோள்களையும் மலைபோலும் முலைகளையும் சேர்ந்தேன் சேர்ந்தேன், திருவாமாத்தூர் ஐயனருளை பெற்றேன் பெற்றேன்.

(**க-ரை.**) திருவாமாத்தூரைய னருளால் திருவொற்றியூ ரடைந்து சங்கிலியைப் பெற்றேனென்பதாம்-

(**வி-ரை.**) ஆர்தல் - பொருந்தல். சங்கிலி - திருவொற்றியூரிலிருந்த வொருக்வசை. (4)

**வென்றவன்வென்றவன்வேள்வியில்விண்ணவர்தங்களைச்**
**சென்றவன்சென்றவன்சில்பலிக்கென்றுதெருவிடை**
**நின்றவனின்றவனீதிநிறைந்தவர்தங்கள்பால்**
**அன்றவனன்றவன்செய்யருளாமாத்தூரெம்மையனே**

(**ப-ரை.**) வேள்வியில் - யாகத்தில், விண்ணவர் தங்களை - தேவர்களை, வென்றவன் வென்றவன் - ஜெயித்தவன் ஜெயித்தவன், சில்பலிக்கு என்று - சிறிது சோற்றுக்கென்று, தெருவிடை - தெருக்களில், சென்றவன் சென்ற

வன் - போனவன் போனவன், நீதி நிறைந்தவர் தங்கள்பால் - நீதி நிறைந்தவரிடத்தே, நின்றவன் நின்றவன் - நின்றவன் நின்றவன், செய்யருள்-செந்நெறியாரிடத்து, அன்றவன் அன்றவன் - சேர்ந்தவன் சேர்ந்தவன், ஆமாத்தூர் எம் ஐயன் – திருவாமாத்தூர் எமதையன் எ-று.

(பொ-ரை) யாகத்தில் தேவர்களை ஜெயித்தவன் ஜெயித்தவன், சிறிது சோற்றுக்கென்று தெருக்களில் போனவன் போனவன், நீதி நிறைந்தவரிடத்தே நின்றவன் நின்றவன், செந்நெறியாரிடத்தும் சேர்ந்தவன் சேர்ந்தவன், திருவாமாத்தூர் எம் ஐயன்.

(க-ரை.) திருவாமாத்தூ ரெம்மையன், வேள்வியில் தேவர்களை வெல்லல் முதலியவற்றைச் செய்தவன் என்பதாம்.

(வி-ரை.) அன்றவன் - பொருந்தியிருப்பவன். (5)

**காண்டவன்காண்டவன்காண்டற்கரியகடவுளாய்**
**நீண்டவனீண்டவனாரணனான்முகனேடவே**
**யாண்டவனாண்டவனாமாத்தூரையுமென்னையுமாட்**
**பூண்டவன்பூண்டவன்மார்பிற்புரிநூல்புரளவே.**

(ப-ரை.) காண்டற்கு அரிய கடவுளாய் - காண்பதற் கரிய தேவனாய், காண்டவன் காண்டவன் - காணப்பட்டவன் காணப்பட்டவன், நாரணன் நான்முகன் - விட்டுணுவும் பிரமனும், தேட - தேட, நீண்டவன் நீண்டவன் - நீண்டிருந்தவன் நீண்டிருந்தவன், ஆமாத்தூரையும் என்னையும் - திருவாமாத்தூரையும் என்னையும், ஆண்டவன் ஆண்டவன் - ஆண்டருளினவன் ஆண்டருளினவன், மார்பில் - தன் மார்பிலுள்ள, புரிநூல் புரள் - முப்புரிநூல் புரளும்படி, ஆள் பூண்டவன் பூண்டவன் - அடிமை கொண்டவன் அடிமை கொண்டவன் எ-று.

(பொ-ரை.) காண்பதற்கரிய தேவனாய் காணப்பட்டவன் காணப்பட்டவன், விட்டுணுவும் பிரமனும்தேட நீண்டிருந்தவன் நீண்டிருந்தவன், திருவாமாத்தூரையும் என்னையும் ஆண்டருளினவன் ஆண்டருளினவன், தன் மார்பிலுள்ள முப்புரிநூல் புரளும்படி அடிமைகொண்டவன் அடிமைகொண்டவன்.

(க-ரை.) என்னை யாளுதல் முதலியவற்றைச் செய்தவன் திருவாமாத்தூரிறைவனே யென்பதாம்.

(வி-ரை.) நேடல் - தேடல். புரிநூல் - முறுக்கப்பட்ட நூல் (பூணூல்.)

**எண்ணவனெண்ணவனேழுலகத்துயிர்தங்கட்குக்**
**கண்ணவன்கண்ணவன்காண்டுமென்பாரவர்தங்கட்குப்**
**பெண்ணவன்பெண்ணவன்மேனியோர்பாகமாம்பிஞ்ஞகன்**
**அண்ணவனண்ணவனாமாத்தூரெம்மடிகளே.**

(ப-ரை.) எழ் உலகத்து உயிர் தங்கட்கு-எழுலகத்திலுள்ள உயிர்களுக்கு, **எண்ணவன் எண்ணவன்** — மதிக்கத்தக்கவன் மதிக்கத்தக்கவன், **காண்டும் என்பாரவர்தங்கட்கு** - காண்போமென்பவர்க்கு, **கண்ணவன் கண்ணவன்**-கண்ணுயிருப்பவன் கண்ணுயிருப்பவன், மேனி ஓர் பாகம் ஆம் — திருமேனியின் ஒருபாகத்திலமர்ந்த, **பெண்ணவன் பெண்ணவன்** - பெண்ணையுடையவன் பெண்ணையுடையவன், **பிஞ்ஞகன்** - பிஞ்ஞகமென்னுந் தலைக்கோலத்தையுடையவன், **ஆமாத்தூர் எம் அடிகள்** - திருவாமாத்தூர் எம் சுவாமிகள், **அண்ணவன் அண்ணவன்** - சமீபித்தவன் சமீபித்தவன் எ-று.

(போ-ரை.) எழுலகத்திலுள்ள உயிர்களுக்கு மதிக்கத்தக்கவன் மதிக்கத்தக்கவன், காண்போமென்பவர்க்கு கண்ணுயிருப்பவன் கண்ணுயிருப்பவன், திருமேனியின் ஒருபாகத்திலமர்ந்த பெண்ணையுடையவன் பெண்ணையுடையவன், பிஞ்ஞகமென்னுந் தலைக்கோலத்தையுடையவன், திருவாமாத்தூர் எம் சுவாமிகள் சமீபித்தவன் சமீபித்தவன்.

(க-ரை.) திருவாமாத்தூரடிகள், எழுலகத்துயிர்க்கெல்லாம் நினைத்தற்குரியவனுயிருப்பவன் என்பதாம்.

(வி-ரை.) பெண்ணவன் - அர்த்தநாரீசுவரன். கண்ணவன் - அறிவாயிருப்பவன் எனினுமாம். (7)

**பொன்னவன்பொன்னவன்பொன்னைத்தந்தென்னைப் போகவிடா**
**மின்னவன்மின்னவன்வேதத்தினுட்பொருளாகிய**
**அன்னவனன்னவனுமாத்தூரையனையார்வத்தால்**
**என்னவனென்னவனென்மனத்தின்புற்றிருப்பனே.**

(ப-ரை.) **பொன்னவன் பொன்னவன்** - பொன்னுடையவன் பொன்னுடையவன், **பொன்னைத்தந்து** - பொன்னைக் கொடுத்து, **என்னைப் போகவிடா** - என்னை யகலவிடாத, **மின்னவன் மின்னவன்** - மின்போல்பவன் மின்போல்பவன், **வேதத்தின் உட்பொருள் ஆகிய** - வேதத்தின் அந்தரார்த்தமாகிய, **அன்னவன் அன்னவன்** - அத்தன்மையன் அத்தன்மையன், **ஆமாத்தூர் ஐயனை** — திருவாமாத்தூர் ஐயனை, **ஆர்வத்தால்** - ஆசையால், **என்னவன் என்னவன்** - என்னுடையவன் என்னுடையவன், **என்** - என்கிற, **மனத்து** - மனத்தில், **இன்பு உற்று இருப்பன்** - இனிமையாய் வாழ்ந்திருப்பன் எ-று.

(போ-ரை.) பொன்னுடையவன் பொன்னுடையவன், பொன்னைக் கொடுத்து என்னை யகலவிடாத மின்போல்பவன் மின்போல்பவன், வேதத்தின் அந்தரார்த்தமாகிய அத்தன்மையன் அத்தன்மையன், திருவாமாத்தூர் ஐயனை ஆசையால் என்னுடையவன் என்னுடையவன் என்கிற மனத்தில் இனிமையாய் வாழ்ந்திருப்பன்.

(க-ரை.) திருவாமாத்தூரெம்மையன் எனக்குப் பொன் கொடுத்தல் முதலியவற்றைச் செய்தவனென்பதாம்.

(வி-ரை.) பொன்னவன் - பொன்போல்பவன். இன்புற்றிருத்தல் - மகிழ்ந்திருத்தல். (8)

*தேடுவன்றேடுவன்செம்மலர்ப்பாதங்கணுடோறு*
*நாடுவனுடுவனுபிக்குமேலேயோர்நால்விரல்*
*மாடுவன்மாடுவன்வன்கைபிடித்துமகிழ்ந்துளே*
*யாடுவனுடுவனுமாத்தூரெம்மடிகட்கே.*

**(ப-ரை.)** செம்மலர்ப்பாதங்கள்-செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை, நாள்தோறும் - தினந்தோறும், தேடுவன் தேடுவன் - தேடுவேன் தேடுவேன், நாபிக்குமேலே ஓர் நால் விரல் - உந்திக்குமேலே ஒரு நால் விரலளவில், நாடுவன் நாடுவன்-தேடுவேன் தேடுவேன், வன்கை பிடித்து மாடுவன் மாடுவன்—, உள்ளே மகிழ்ந்து ஆடுவன் ஆடுவன் - மகிழ்ந்து ஆடுவேன் ஆடுவேன், (யார் பொருட்டெனின்) ஆமாத்தூர் எம் அடிகட்கே - திருவாமாத்தூரிலுள்ள எமது சுவாமிகள் பொருட்டே எ-று.

**(பொ-ரை.)** செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை தினந்தோறுந் தேடுவேன் தேடுவேன், உந்திக்குமேலே ஒரு நால் விரலளவில் தேடுவேன் தேடுவேன், வன்கை பிடித்து மாடுவன் மாடுவன், மகிழ்ந்து ஆடுவேன் ஆடுவேன், திருவாமாத்தூரிலுள்ள எமது சுவாமிகள் பொருட்டே.

**(க-ரை.)** திருவாமாத்தூ ரெம்மடிகள் பொருட்டு அவன் பாதங்களைத் தேடுதல் முதலியவற்றைச் செய்வேனென்பதாம்.

**(வி-ரை.)** நாபிக்குமேலே ஓர் நால்விரல் என்றது இருதயத் தானத்தை. மாடுதல் - அயலிருத்தல். உள்ளே மகிழ்தல் – மனமகிழ்தல். (9)

*உற்றனனுற்றவர்தம்மையொழிந்துள்ளத்துள்பொருள்*
*பற்றினன்பற்றினன்பங்கயச்சேவடிக்கேசெல்ல*
*அற்றனனற்றனனுமாத்தூர்மேயானடியார்கட்காட்*
*பெற்றனன்பெற்றனன்பெயர்த்தும்பெயர்த்தும்பிறவாமைக்கே*

**(ப-ரை.)** உற்றவர் தம்மை ஒழிந்து - உறவினரை விட்டு நீங்கி, உள்ளத்து உள்பொருள் - மனத்திலுள்ள பொருளை, உற்றனன் - அடைந்தேன், பங்கயச் சேவடிக்கே செல்ல - தாமரைமலர்போலுந் திருவடிக்கே செல்லும் பொருட்டு, பற்றினன் பற்றினன்-பிடித்தேன் பிடித்தேன், ஆமாத்தூர் மேயான் அடியார்கட்கு - திருவாமாத்தூரி லெழுந்தருளினவனது அடியார்களுக்கு, அற்றனன் அற்றனன் - அறுதியிடப்பட்டேன் அறுதியிடப்பட்டேன், பெயர்த்தும் பெயர்த்தும் - மீட்டும் மீட்டும், பிறவாமைக்கு - பிறவாமையை, பெற்றனன் பெற்றனன் - அடைந்தேன் அடைந்தேன் எ–று.

**(பொ-ரை.)** உறவினரைவிட்டு நீங்கி மனத்திலுள்ள பொருளை அடைந்தேன், தாமரைமலர்போலுந் திருவடிக்கே செல்லும்பொருட்டு பிடித்தேன் பிடித்தேன், திருவாமாத்தூரி லெழுந்தருளினவனது அடியார்களுக்கு அறுதியிடப்பட்டேன் அறுதியிடப்பட்டேன், மீட்டும் மீட்டும் பிறவாமையை யடைந்தேன் அடைந்தேன்.

(க-ரை.) திருவாமாத்தூரடிகளை யடைந்து, உறவினர் முதலியோரை யொழிந்து, பிறவாமையைப் பெற்றேன் என்பதாம். (10)

**ஐயனைஅத்தனையாளுடையாமாத்தூரண்ணலை**
**மெய்யனைமெய்யர்க்குமெய்ப்பொருளானவிமலனை**
**மையனைமையணிகண்டனைவன்றொண்டனூரன்சொற்**
**பொய்யொன்றுமின்றிப்புலம்புவார்பொற்கழல்சேர்வரே.**

(ப-ரை.) ஐயனை - இறைவனை, அத்தனை - தந்தையை, ஆளுடை-எம்மை யாளுடைய, ஆமாத்தூர் அண்ணலை—, மெய்யனை—, மெய்யர்க்கு மெய்ப் பொருளான விமலனை —, மையனை - நடு நிலையாயிருப்பவனை, மை அணிகண் டனை—, வன் தொண்டனூரன் - சுந்தரன், சொல் - சொன்னவற்றை, பொய் ஒன்றுமின்றி புலம்புவார் - சிறிதும் பொய்யில்லாமற் புலம்புவோர், பொன் கழல் சேர்வர் - பொன்போலுந் திருவடியை யடைவர் எ-று.

(பொ-ரை.) இறைவனை, தந்தையை, எம்மையாளுடைய ஆமாத்தூர் அண்ணலை, மெய்யனை, மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை, நடு நிலை யாயிருப்பவனை, மைஅணிகண்டனை சுந்தரன் சொன்னவற்றை சிறிதும் பொய் யில்லாமற் புலம்புவோர் பொன்போலுந் திருவடியையடைவர்.

(க-ரை.) திருவாமாத்தூர் அண்ணலை, சுந்தரன் பாடிய பாடலைப் படிப் பவர், அவனது பொன்போலுந் திருவடியையடைவர் என்பதாம்.

(வி-ரை.) அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். விமலன் - மலவிமுக் தன். மையணிகண்டன் - கருநிறத் திருமிடறுடையவன். (11)

ஆமாத்தூர் என்பது - பசுக்களுக்குத் தாயகமானவூர் என்றும், ஆமாதாவூர் எனற்பாலது - ஆமாத்தூர் என மருவி நின்றதென்றும், பெரியோர்களாற் கேள்வி. ஆ - பசு. சமஸ்கிருதத்தில் - கோமாதுருபுரம் எனப் பெயராம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - காமார்த்தநாயகர். தேவியார் - அழகியநாயகியம்மை.

---

## திருக்காரோணம்

பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

**பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்**
**பாவையரைக்கிறிபேசிப்படிறுடித்திரிவீர்**
**செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்**
**செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்**

**முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவை**
**யவைபூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறுங்**
**கத்தூரிகமழ்சாந்துபணித்தருளவேண்டுங்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) பத்து ஊர்புக்கு - பத்தூர்களிற் போய், இரந்து உண்டு - பிச்சையேற்றுண்டு, பலபதிகம் பாடி - பல வேதசாகைகளைப் பாடி, பாவையரை கிறி பேசி - பெண்களோடு பொய்பேசி, படிறு ஆடி திரிவீர் - வஞ்சனை செய்து திரிவீர், செத்தார் தம் எலும்பு அணிந்து - இறந்தோ ரெலும்பணிந்து, சே ஏறி திரிவீர் - எரு தேறித்திரிவீர், செல்வத்தை மறைத்து வைத்தீர் - பொருளை ஒளித்துவைத்தீர், எனக்கு - அடியேனுக்கு, ஒருநாள் - ஒருநாள், இரங்கீர் - இரங்கி யருளமாட்டீர், முத்து ஆரம் - முத்து வடம், இலங்கி மிளிர் - மிகுதியாய் பிரகாசிக்கிற, மணிவயிரக்கோவை - வயிரமணித் தாழ்வடம் ஆகிய, அவை பூணத் தந்தருளி - அவற்றைத் தரிக்கக் கொடுத்தருளி, மெய்க்கு - உடம்பில், இனிதாநாறும் - இனியதாய் பரிமளிக்கிற, கத்தூரி கமழ் சாந்து பணித் தருள வேண்டும் - கஸ்தூரி மணக்கின்ற சந்தநம் என்பவற்றைக் கட்டளையிட் டருள வேண்டும், கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) பத்தூர்களிற் போய் பிச்சையேற்றுண்டு பல வேத சாகைகளைப் பாடி, பெண்களோடு பொய்பேசி வஞ்சனைசெய்து திரிவீர், இறந்தோரெலும்பணிந்து எரு தேறித்திரிவீர், பொருளை ஒளித்துவைத்தீர், அடியேனுக்கு ஒருநாள் இரங்கி யருளமாட்டீர், முத்துவடம் மிகுதியாய்ப் பிரகாசிக்கிற வயிரமணித் தாழ்வடம் ஆகிய அவற்றைத் தரிக்கக் கொடுத்தருளி, உடம்பில் இனியதாய் பரிமளிக்கிற கஸ்தூரி மணக்கின்ற சந்தநம் என்பவற்றைக் கட்டளையிட் டருளவேண்டும், கடல்சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத்தரே, இரந்துண்டு செல்வத்தை யீட்டுகிறீர், எனக்கு முத்தார முதலியவற்றை யருள்செய்யவேண்டு மென்பதாம். (1)

**வேம்பினொடுதீங்கரும்புவிரவியெனைத்தீர்த்தீர்**
**விருத்திநானுமைவேண்டத்துருத்திபுக்கங்கிருந்தீர்**
**பாம்பினொடுபடர்சடைகளவைகாட்டிவெருட்டிப்**
**பகட்டநானொட்டுவனோபலகாலுமுழன்றேன்**
**சேம்பினொடுசெங்கழுநீர்தண்கிடங்கிற்றிகழுந்**
**திருவாரூர்புக்கிருந்ததீவண்ணர்நீரே**
**காம்பினொடுநேத்திரங்கள்பணித்தருளவேண்டுங்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) வேம்பினொடு தீங்கரும்பு விரவி - வேம்புடனே இனிய கரும்பையுங் கலந்து, என்னைத் தீர்த்தீர் - என்னை யொழித்தீர், 'நான் உம்மை விருத்

திவேண்ட - நான் உம்மை உயர்வின்பொருட்டு பிரார்த்திக்க, துருத்திபுக்கு அங்கு இருந்தீர் - திருத்துருத்தியிற்போய் அங்கே யிருந்துவிட்டீர், பாம்பி ெடு - பாம்புடனே, படர் சடைகள் அவை காட்டி - விரிந்த சடைகளைக் காட்டி, வெருட்டிப்பகட்ட - அச்சுறுத்திப் பகட்டுதற்கு, நான் ஒட்டுவேனே - நான் சம்மதிப்பேனே, பலகாலும் உழன்றேன் - பலதாரமும் திரிந்தேன், சேம் பிெனாடு செங்கழுநீர் - சேம்போடு செங்கழுநீரும், தண் கிடங்கில் திகழும் - குளிர்ந்த அகழிகளில் மிக்குக் காணப்படுகிற, திருவாரூர்புக் கிருந்த — திருவா ரூரிற் போயிருந்த, தீவண்ணர் நீரே - நெருப்புநிறத்தினர் நீரே, காம்பினொடு நேத்திரங்கள் - காம்போடு கூடிய கண்களை, பணித்தருளவேண்டும் - கட்டளை யிட்டருளவேண்டும், கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந் தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) வேம்புடனே யினிய கரும்பையுங் கலந்து என்னை யொழித் தீர், நான் உம்மை உயர்வின்பொருட்டுப் பிரார்த்திக்க, திருத்துருத்தியிற்போய் அங்கேயிருந்து விட்டீர், பாம்புடனே விரிந்த சடைகளைக் காட்டி அச்சுறுத்திப் பகட்டுதற்கு நான் சம்மதிப்பேனே, பலதாரமும் திரிந்தேன், சேம்போடு செங் கழுநீரும் குளிர்ந்த அகழிகளில் மிக்குக் காணப்படுகிற திருவாரூரிற் போயி ருந்த நெருப்பு நிறத்தினர் நீரே, காம்போடு கூடிய கண்களை கட்டளையிட் டருள வேண்டும், கடல்சூழ்ந்த திருக்காரோணத்தி லெழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத் தெம் பெருமானே, என் நேத்திரங்களைத் தந் தருளவேண்டுமென்பதாம்.

(வி-ரை.) துருத்தி - ஒரு திருப்பதி. பகட்டல் - பசப்புதல். (2)

**பூண்பதோரிளவாமைபொருவிடையொன்றேறிப்**
**பொல்லாதவேடங்கொண்டெல்லாருங்காணப்**
**பாண்பேசிப்படுதலையிற்பலிகொள்கைதவிரீர்**
**பாம்பினொடுபடர்சடைமேல்மதிவைத்தபண்பீர்**
**வீண்பேசிமடவார்கைவெள்வளைகள்கொண்டால்**
**வெற்பரையன்மடப்பாவைபொறுக்குமோசொல்லீர்**
**காண்பினியமணிமாடநிறைந்தநெடுவீதிக்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) பூண்பது ஓர் இள ஆமை - நீர் அணிவது ஓர் இள ஆமையோடு, பொரு - போர் செய்கிற, விடை ஒன்று ஏறி - ஒரு எருதேறி, பொல்லாத வேடங்கொண்டு - பொல்லாத வேஷம்பூண்டு, எல்லாரும் காண - யாவருங் காணும்படி, பாண்பேசி - பாட்டுப்பாடி, படுதலையில் - இறந்தோரது தலையில், பலிகொள்கை - பலி யேற்பதை, தவிரீர் - ஒழியமாட்டீர், பாம்பினொடு படர் சடைமேல் - விரிசடைமேல் பாம்புடனே, மதிவைத்த - பிறையணிந்த, பண் பீர் - குணத்தீர், வீண்பேசி - வீண்வார்த்தை பேசி, மடவார் கை வெள்வளை

கள் கொண்டால் - மாதர் கை வெள்வளைகள் கவர்ந்தால், வெற்பு அரையன் மடப்பாவை பொறுக்குமோ - மலையரையன் மகள் பொறுப்பாளோ, சொல்லீர் - சொல்லக்கடவீர், காண்பு இனிய - பார்த்தற் கினிய, மணிமாடம் நிறைந்த - ரத்நமாளிகைகள் நிரம்பின, நெடுவீதி - நீண்ட தெருக்களையுடைய, கடல்-கடல் சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ - று.

(பொ-ரை.) நீர் அணிவது ஒரிள ஆமையோடு, போர்செய்கிற ஒரு எருதேறி பொல்லாத வேஷம்பூண்டு யாவருங் காணும்படி பாட்டுப்பாடி, இறந்தோரது தலையில் பலியேற்பதை யொழியமாட்டீர், விரிசடைமேல் பாம்புடனே பிறையணிந்த குணத்தீர், வீண்வார்த்தை பேசி மாதர் கை வெள்வளைகள் கவர்ந்தால் மலையரையன் மகள் பொறுப்பாளோ சொல்லக்கடவீர், பார்த்தற்கினிய ரத்நமாளிகைகள் நிரம்பின நீண்ட தெருக்களையுடைய கடல்சூழ்ந்த திருக்காரோணத்தி லெழுந்தருளியிருந்தவரே.

(கு-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, எல்லாருங் காண, பல பாவையர் கைவளையைக் கொள்வதை, மலைமகள் காணில் பொறுப்பாளோ வென்பதாம். (3)

**விட்டதோர்சடைதாழவீணைவிடங்காக**
**வீதிவிடையேறுவீர்வீணடிமையுகந்தீர்**
**துட்டராயினபேய்கள்சூழநடமாடிச்**
**சுந்தரராய்த்தூமதியஞ்சூடுவதுசுவண்டே**
**வட்டவார்குழல்மடவார்தம்மைமயல்செய்தல்**
**மாதவமோமாதிமையோவாட்டமெலாந்தீரக்**
**கட்டியெமக்கீவதுதானெப்போதுசொல்லீர்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) விட்டது - திரித்துவிட்டதாகிய, ஓர் - ஒப்பற்ற, சடைதாழ - சடை தொங்க, வீணை விடங்காக - வீணையழகாக, வீதிவிடை ஏறுவீர் - தெருவில் எருதேறி வருவீர், வீண் அடிமை உகந்தீர் - என் வீண்தொண்டினை யேற்றீர், துட்டர் ஆயின பேயர்கள் சூழ - துஷ்டராகிய பேய்கள் சூழ, நடம் ஆடி - நடித்து, சுந்தரர் ஆய் - அழகராகி, தூமதியம் சூடுவதும் - வெண்பிறை தரிப்பதும், சுவண்டே - கபடமே, வட்டம் வார்குழல் - வட்டவடிவாய்ச் சுருட்டி முடித்த கூந்தலையுடைய, மடவார்தம்மை - மாதரை, மயல்செய்தல் - மயக்குதல், மாதவமோ - பெருந் தவமோ, மாதிமையோ - அழகோ, வாட்டம் எல்லாம் தீர - துன்பமுழுதும் ஒழிய, எமக்கு - எங்களுக்கு, கட்டி ஈவது - கட்டித் தருவது, எப்போது சொல்லீர் - எப்பொழுதோ சொல்லக்கடவீர், கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) திரித்துவிட்டதாகிய ஒப்பற்ற சடைதொங்க, வீணை யழகராக தெருவில் எருதேறிவருவீர், என் வீண்தொண்டினை யேற்றீர், துஷ்டராகிய பேய்கள் சூழ நடித்து அழகராகி வெண்பிறை தரிப்பதும் கபடமே, வட்டவடிவாய்ச் சுருட்டி முடித்த கூந்தலையுடைய மாதரை மயக்குதல் பெருந்தவமோ, அழகோ, துன்பமுழுது மொழிய எங்களுக்கு கட்டித் தருவது எப்பொழுது சொல்லக்கடவீர், கடல் சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, நீ மாதரை மையல் செய்தல் உனக்கு அழகாமோ வென்பதாம்.

(வி-ரை.) விடங்கம் - அழகு. அது இங்கு விடங்கு என ஈறு குறைந்துவந்தது. கவண்டு - கபடம். (4)

**மிண்டாடித்திரிதந்துவெறுப்பனவேசெய்து**
**வினைக்கேடுபலபேசிவேண்டியவாதிரிவீர்**
**தொண்டாடித்திரிவேனைத்தொழும்புதலைக்கேற்றுஞ்**
**சுந்தரனேகந்தமுதலாடையாபரணம்**
**பண்டாரத்தேயெனக்குப்பணித்தருளவேண்டும்**
**பண்டுதான்பிரமாணமொன்றுண்டேநம்மைக்**
**கண்டார்க்குங்காண்பரிதாய்க்கனலாகிநிமிர்ந்தீர்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) மிண்டாடி திரிதந்து - மதர்த்துத் திரிந்து, வெறுப்பனவே செய்து - வெறுக்கத்தக்கனவே செய்து, வினைக்கேடு பலபேசி - பலவினைக்கெடுதிகளைப் பேசி, வேண்டியவாறு திரிவீர் - வேண்டியபடியே திரிவீர், தொண்டாடித் திரிவேனை - தொண்டுசெய்து திரிகிற என்னை, தொழும்புதலைக்கு ஏற்றும் - அடிமைத்திறத்தில் முற்படச்செய்கிற, சுந்தரனே - அழகனே, கந்தம் முதல் - சந்தநமுதலாக, ஆடை ஆபரணம் - ஆடையாபரணங்களை, பண்டாரத்தே - பொக்கிஷத்திலேயே, எனக்கு - அடியேனுக்கு, பணித்தருளவேண்டும் — கட்டளையிட் டருளவேண்டும், பண்டுதான் - முன்னமே, பிரமாணம் ஒன்று உண்டே - ஒரு பிரமாணமுண்டே, நம்மை - உம்மை, காண்டார்க்கும்-கண்டவர்க்கும், காண்பு அரிது ஆய் - காண்ட லரிதாகிய, கனல் ஆகி நிமிர்ந்தீர்-நெருப்புருவாய் நீண்டிருந்தீர், கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) மதர்த்துத் திரிந்து வெறுக்கத்தக்கனவே செய்து பலவினைக்கெடுதிகளைப்பேசி, வேண்டியபடியே திரிவீர், தொண்டுசெய்து திரிகிற என்னை அடிமைத்திறத்தில் முற்படச் செய்கிற அழகரே, சந்தன முதலாக ஆடையாபரணம் பொக்கிஷத்திலேயே எந்தனுக்கு கட்டளையிட் டருளவேண்டும், முன்னமே ஒரு பிரமாணமுண்டே, உம்மை கண்டவர்க்கும் காண்ட லரிதாகிய நெருப்புருவாய் நீண்டிருந்தீர், கடல்சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, எனக்கு உன் பொக்கிஷத்தி லிருந்தே ஆடையாபரணுதிகள் யாவும் அருள்செய்யவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) தொழும்பு - தொண்டு. (5)

**இலவவிதழ்வாயுமையோடெருதேறிப்பூத**
**மிசைபாடவிடுபிச்சைக்கெச்சுச்சப்போது**
**பலவகம்புக்குழிதருவீர்பட்டோடுசாந்தம்**
**பணித்தருளாதிருக்கின்றபரிசென்னபடிறே**
**உலவுதிரைக்கடல்நஞ்சையன்றமரர்வேண்ட**
**வுண்டருளிச்செய்ததுமக்கிருக்கொணுதிடவே**
**கலவமயிலியலவர்கணடமாடுஞ்செல்வக்**
**கடனுகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) இலவம் - முருக்கம்பூப்போலும், வாய்-அதரத்தையுடைய, உமையொடு எருது ஏறி - உமாதேவியோடு எருது ஏறி, பூதம் இசைபாட - பூதம் சங்கீதம்பாட, இடுபிச்சைக்கு - இடுகிற பிச்சைக்கு, எச்சு உச்சப்போது - மிக்க உச்சிக்காலத்தில், பல அகம்புக்கு உழிதருவீர் - பலவீடுகளிற் புகுந்துழலுவீர், பட்டோடு சாந்தம் - பட்டுடனே சந்தநம், பணித்தருளாதிருக்கின்ற பரிசு - கட்டளையிட்டருளாதிருக்கும் விதம், என்னபடிறே-என்ன வஞ்சனையோ, உலவு திரை - அலைகளுலாவுகிற, கடல் நஞ்சை-பாற்கடல் விடத்தை, அன்று அமரர் வேண்ட - அன்று தேவர்கள் பிரார்த்திக்க, உண்டருளிச்செய்தது - அமுதுசெய்தருளினது, உமக்கு இருக்கொணுது - உம்மை யிருக்கவொட்டாது, இட - உமக்குப் பலியிடும் பொருட்டு, கலவம் மயில் இயலவர்கம் -தோகையையுடைய மயிற் சாயலையுடைய மாதர்கள், நடமாடும் - உலாவுகிற, செல்வம் - செல்வப்பெருக்குள்ள, கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) முருக்கம்பூப்போலும் அதரத்தையுடைய உமாதேவியோடு எருது ஏறி, பூதம் சங்கீதம்பாட, இடுகிற பிச்சைக்கு மிக்க வுச்சிக்காலத்தில் பல வீடுகளிற் புகுந்துழலுவீர், பட்டுடனே சந்தனம் கட்டளையிட்டருளாதிருக்கும் விதம் என்னவஞ்சனையோ, அலைகளுலாவுகிற பாற்கடல் விஷத்தை அன்று தேவர்கள் பிரார்த்திக்க அமுது செய்தருளினது உம்மை யிருக்கவொட்டாது, உமக்குப் பலியிடும் பொருட்டு தோகையையுடைய மயிற் சாயலையுடைய மாதர்கள் உலாவுகிற செல்வப்பெருக்குள்ள கடல்சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத் தெம்பெருமானே, உச்சிப்போதில் உமையாளோடு பிச்சைக்குழலாநிற்பீர், எமக்குப் பட்டாடை பணி முதலியவை யருள்செய்யாதிருக்கிறீர், இது என்ன வஞ்சனையோவென்பதாம்.

(வி-ரை.) எச்சு உச்சம் - கடும்பகல், கலவம் - கலாபம் என்னும் வடசொற் றிரிபு. (6)

தூசுடையவகலல்குற்றூமொழியாளூடல்
தொலையாதகாலத்தோர்சொற்பாடாய்வந்து
தேசுடையவிலங்கையர்கோன்வரையெடுக்கவடர்த்துத்
திப்பியகீதம்பாடத்தேரொடுவாள்கொடுத்தீர்
நேசமுடையடியவர்கள்வருந்தாமையருந்த
நிறைமறையோருறைவீழிமிழலைதனில்நித்தல்
காசருளிச்செய்தீரின்றெனக்கருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.

(ப-ரை.) தூசு உடைய – ஆடையணிந்த, அகல் அல்குல்-அகன்ற அல்குலையுடைய, தூமொழியாள்-உமாதேவியின், ஊடல் தொலையாத காலத்து - ஊடல் தீராதகாலத்தில், ஓர் சொற்பாடாய் வந்து - ஒருவார்த்தைப் பாடாகவந்து, தேசு உடைய இலங்கையர்கோன் - ராவணன், வரை எடுக்க - கயிலாயமலையை யெடுக்க, அடர்த்து - (அவனை) நெருக்கி, திப்பிய கீதம்பாட - (அவன்) திவ்யமான கீதத்தைப் பாடுதலும், தேரொடுவாள் கொடுத்தீர் - (அவனுக்கு) தேரும் வாளும் கொடுத்தீர், நேசம் உடைய அடியவர்கள் - அன்புடைய தொண்டர்கள், வருந்தாமை அருந்த - வருந்தாமலுண்ண, நிறைமறையோர் - நிரம்பின வேதியர், உறை - வாழ்கின்ற, வீழிமிழலைதன்னில் - திருவீழிமிழலையில், நித்தல்-நாள்தோறும், காசு அருளிச்செய்தீர் - பொற்காசு அருளிச்செய்தீர், இன்று எனக்கு அருளவேண்டும் - இன்று எனக்கு அருளவேண்டும், கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை) ஆடையணிந்த அகன்ற அல்குலையுடைய உமாதேவியின் ஊடல்தீராத காலத்தில் ஒருவார்த்தைப் பாடாகவந்து ராவணன் கயிலாயமலையையெடுக்க, (அவனை) நெருக்கி (அவன்) திவ்யமான கீதத்தைப் பாடுதலும் (அவனுக்கு) தேரொடு வாள்கொடுத்தீர், அன்புடைய தொண்டர்கள் வருந்தாமலுண்ண நிரம்பின வேதியர் வாழ்கின்ற திருவீழிமிழலையில் நாள்தோறும் பொற்காசு அருளிச்செய்தீர், இன்று எனக்கு அருளவேண்டும் கடல்சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத்தெம்பிரானே, திருவீழிமிழலையில் அடியார் வருந்தாமல் நாடோறும் காசு அருளிச்செய்ததுபோல, இன்று எனக்கருள் செய்ய வேண்டுமென்பதாம்.

(வி-ரை.) தேசு - புகழ். (7)

மாற்றமேலொன்றுரையீர்வாளாநீரிருந்தீர்
வாழ்விப்பனெனவாண்டீர்வழியடியேனுமக்கு
வாற்றவேற்றிருவுடையீர்நல்கூர்ந்தீரல்லீ
ரணியாரூர்புகப்பெய்தவருநிதியமதனிற்

**றோற்றமிகுமுக்கூற்றிலொருகூறுவேண்டுந்**
**தாரீரேலொருபொழுதுமடியெடுக்கவொட்டேன்**
**காற்றனையகடும்பரிமாவேறுவதுவேண்டுங்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) மாற்றமேல் ஒன்று உரையீர் - ஒருபேச்சும் பேசமாட்டீர், நீர் வாளா இருந்தீர்-நீர் சும்மாயிருந்தீர், வாழ்விப்பன் என - வாழ்விப்பேனென்று, ஆண்டீர் - என்னை யாண்டருளினீர், வழியடியேன் உமக்கு ஆற்றவேல் - உமக்கு வழியடியேனாகிய நான் மிக்க அடிமைசெய்யவோவெனில், திருஉடையீர்- செல்வமுடையீர், நல்கூர்ந்தீர் அல்லீர் - வறியீரல்லீர், அணிஆரூர் புகப்பெய்த- அழகிய ஆரூரிலிட்ட, அருநிதியமதனில் - அருஞ்செல்வத்தில், தோற்றமிகும்- தோற்றத்தால் மிகுந்த, முக்கூற்றில் - மூன்றுபங்கில், ஒரு கூறுவேண்டும்-ஒரு பாகம் வேண்டும், தாரீரேல் - தரமாட்டீராயின், ஒருபொழுதும் - ஒருபோதும், அடியெடுக்கவொட்டேன் - அடிபெயர்க்கவொட்டேன், ஏறுவது-ஏறுதற்குரிய, காற்று அனைய - வாயுவை நிகர்த்த, கடு - வேகத்தையுடைய, பரிமாவேண்டும்- குதிரைவேண்டும், கடல் - கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) ஒரு பேச்சும்பேசமாட்டீர், நீர் சும்மாயிருந்தீர், வாழ்விப்பேனென்று என்னை யாண்டருளினீர், உமக்கு வழியடியேனாகிய நான் மிக்க அடிமை செய்யவோவெனில், செல்வமுடையீர், வறியீரல்லீர், அழகிய ஆரூரிலிட்ட அருஞ்செல்வத்தில் தோற்றத்தால் மிகுந்த மூன்று பங்கில் ஒருபாகம்வேண்டும், தரமாட்டீராயின் ஒருபோதும் அடிபெயர்க்கவொட்டேன், ஏறுதற்குரிய வாயுவை நிகர்த்த வேகத்தையுடைய குதிரை வேண்டும் கடல் சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(கு-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, வாயுவேகமாய்ச் செல்லுகிற ஒரு குதிரையை எனக்கருள் செய்யவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) நல்கூர்தல் - வறியராதல். (8)

**மண்ணுலகும்விண்ணுலகுமும்மதேயாட்சி**
**மலையரையன்பொற்பாவைசிறுவனையுந்தேறே**
**னெண்ணிலியுண்பெருவயிறன்கணபதியொன்றறியா**
**னெம்பெருமானிதுதகவோவியம்பியருள்செய்யீர்**
**திண்ணெனவென்னுடல்விருத்திதாரீரேயாகிற்**
**றிருமேனிவருந்தவேவளைக்கின்றேனாளைக்**
**கண்ணறையன்கொடும்பாடனென்றுரைக்கவேண்டா**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி - மண்ணுலகமும் விண்ணுலகமும் உம்மதே ஆளுகை, மலையரையன் பொற்பாவை - உமாதேவி,

சிறுவனையும்தேறேன்-சிறுவனையும் தெளியேன், எண் இலி உண் - அளவற்ற பண்டங்களை யுண்கிற, பெருவயிறன் - பெருவயிற்றையுடையவன், கணபதி - விநாயகன், ஒன்று அறியான் - ஒன்றும் அறியான், எம்பெருமான் - எம்பெருமானே, இது தகவோ - இது தகுதியோ, இயம்பியருள் செய்யீர் - சொல்லியருளக் கடவீர், திண்ணென - உறுதியாக, என் உடல் விருத்தி தாரீரேயாகில் - என் சரீரவிருத்தியைத் தரமாட்டீராயின், திருமேனிவருந்த - உமது திருமேனி வருந்தும்படி, நாளை வளைக்கின்றேன் - நாளை வளைப்பேன், (பிறகு)கண்ணறையன் - குருடன், கொடும்பாடன் - கொடுமைசெய்வோன், என்று உரைக்கவேண்டாம் - என்று சொல்லவேண்டாம், கடல் - கடல் சூழ்ந்த, நாகைக் காரோணம் மேவியிருந்தீரே - திருக்காரோணத்தில் எழுந்தருளி யிருந்தவரே எ-று.

(போ-ரை.) மண்ணுலகமும் விண்ணுலகமும் உம்மதே ஆளுகை, உமாதேவியின் சிறுவனையும் தெளியேன், அளவற்ற பண்டங்களையுண்கிற பெருவயிற்றையுடையவன் கணபதி ஒன்றுமறியான் எம்பெருமானே, இது தகுதியோ, சொல்லியருளக்கடவீர், உறுதியாக என் சரீரவிருத்தியைத் தரமாட்டீராயின் உமது திருமேனி வருந்தும்படி நாளைவளைப்பேன் (பிறகு) குருடன் கொடுமைசெய்வோன் என்று சொல்லவேண்டாம் கடல்சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, என்னுடல் விருத்தி செய்யீராயின், உன் திருமேனியை வளைப்பேன், பிறகு, கண்ணறையனிப்படி செய்தானென்றுரைக்கவேண்டா மென்பதாம்.

(வி-ரை.) விருத்தி - வளர்ச்சி. கண்ணறையன் - கண்ணற்றவன். (9)

**மறியேறுகரதலத்தீர்மாதிமையேலுடையீர்**
**மாநிதியந்தருவனென்றுவல்லீராயாண்டீர்**
**கிறிபேசிக்கீழ்வேளூர்புக்கிருந்தீரடிகேள்**
**கிறியுமாற்படுவேனேதிருவாணையுண்டேற்**
**பொறிவிரவுநற்புகர்கொள்பொற்சுரிகைமேலோர்**
**பொற்பூவும்பட்டிகையும்புரிந்தருளவேண்டுங்**
**கறிவிரவுநெய்சோறுமுப்போதும்வேண்டுங்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.**

(ப-ரை.) மறியேறு கரதலத்தீர் - மானேறின கையையுடையீர், மாதிமையேல் உடையீர் - அழகென்றாலோ (அதுவும்) உடையீர், மாநிதியம் தருவல் என்று - பெருஞ்செல்வம் தருவேனென்று, வல்லீராய் ஆண்டீர் - வல்லவராய் ஆண்டீர், கிறிபேசி - பொய்பேசி, கீழ்வேளூர்புக்கிருந்தீர் - கீழ்வேளூரில் போயிருந்தீர், அடிகேள் - சுவாமி, உம்மால் – தேவரீரால், கிறிபடுவேனே - பொய்படுவேனே, திருவாணை உண்டேல் - திருவாணையுண்டாயின், பொறிவிரவும் - புள்ளிகளோடு கூடின, நல்புகர்கொள் - நன்னிறத்தைக்கொண்ட, பொற்சுரிகை

மேல் - பொற்சுரிகையின்மீது, ஓர் பொற்பூவும் பட்டிகையும் - ஒருபொற்பூவும் பட்டிகையும் வேண்டும், புரிந்தருள வேண்டும் - அன்போடு அருள் செய்ய வேண்டும், கறிவிரவும் நெய் சோறு - கறிகலந்த நெய்சோறு, முப்பொழுதும் வேண்டும் - முப்பொழுதும் வேண்டும், கடல் - கடல் சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரே-திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே எ-று.

(பொ-ரை.) மானேறினகையையுடையீர், அழகென்றாலோ (அதுவும்) யீர், பெருஞ்செல்வம் தருவேனென்று வல்லவராய் ஆண்டீர், பொய்பேசி கீழ் வேளூரில் போயிருந்தீர், சுவாமி, தேவரீரால் பொய்படுவேனோ, திருவாணை யுண்டாயின் புள்ளிகளோடு கூடின நன்னிறத்தைக் கொண்ட பொற்சுரிகையின்மீது ஒரு பொற்பூவும் பட்டிகையும் வேண்டும், அன்போடு அருள் செய்ய வேண்டும், கறி கலந்த நெய் சோறு முப்பொழுதும் வேண்டும், கடல்சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே.

(க-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, அடியேனுக்கு ஒரு பொற் சுரிகையும் பட்டிகையும் அருள்செய்யவேண்டும், முப்பொழுதும் நெய்ச்சோறு வேண்டுமென்பதாம்.

(வி-ரை.) பட்டிகை - அரைப்பட்டிகை. சுரிகை - சிறுவாள். (10)

**பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்**
**பற்றாயபெருமானேமற்றாரையுடையே**
**னுண்மயத்தவுமக்கடியேன்குறைதீர்க்கவேண்டு**
**மொளிமுத்தம்பூணாரமொண்பட்டும்பூவுங்**
**கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்**
**கடனாகைக்காரோணமேவியிருந்தீரென்**
**றண்மயத்தாலணிநாவலாரூரன்சொன்ன**
**வருந்தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே.**

(ப-ரை.) பண்மயத்த - பண்போன்ற, மொழி - சொல்லையுடைய, பரவை சங்கிலிக்கும் - பரவைசங்கிலிக்கும், எனக்கும் - எமக்கும், பற்று ஆய பெருமானே - ஆதரவாகிய பெருமானே, மற்று ஆரை உடையேன் - வேறு யாரை உடையேன், உள்மயத்த - அந்தர்யாமியாயிருக்கிற, உமக்கு - தேவரீருக்கு, அடியேன் குறைதீர்த்தல்-அடியேன் குறைதீர்த்தல், வேண்டும் - தகுதியாகும், ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும் - ஒளிமுத்தும் பூணாரமும் அழகிய பட்டும் பூவும், கண்மயத்த கத்தூரி கமழ் - கண்ணுக் கினியதாகிய கஸ்தூரியும் பரிமளிக்கிற, சாந்தும் வேண்டும் - சந்தனமும் வேண்டும், கடல்-கடல்சூழ்ந்த, நாகைக்காரோணம் மேவியிருந்தீரென்று - திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தவரே யென்று, அண்மயத்தால் - பொருந்தும் வகையால், ஆரூரன் சொன்ன-சுந்தரன் சொன்ன, அரு்தமிழ்கள் - அரிய தமிழ்ப்பாடல்களாகிய, இவை வல்லார் - இவற்றைக் கற்று வல்லவர், அமருலகு ஆள்பவரே - சுவர்க்க லோகத்தை யாள்பவரே யாவர் எ-று.

(பொ-ரை.) பண்போன்ற சொல்லையுடைய பரவை சங்கிலிக்கும் எனக்கும் ஆதரவாகிய பெருமானே, வேறு யாரை உடையேன், அந்தர்யாமியாயிருக்கிற தேவரீருக்கு அடியேன் குறைதீர்த்தல், தகுதியாகும், ஒளிமுத்தும் பூணாரமும் அழகிய பட்டும்பூவும் கண்ணுக் கினியதாகிய கஸ்தூரியும் பரிமளிக்கிற சந்தனமும் வேண்டும், கடல் சூழ்ந்த திருக்காரோணத்தில் எழுந்தருளியிருந்தீரென்று பொருந்தும் வகையால், சுந்தரன் சொன்ன அரிய தமிழ்ப்பாடல்களாகிய இவற்றைக் கற்று வல்லவர் சுவர்க்கலோகத்தை யாள்பவரேயாவர்.

(கு-ரை.) திருக்காரோணத் தெம்பிரானே, அடியேனுக்கு பூணாரம் பட்டாடை முதலியவும் தந்தருளவேண்டுமென்று, நாவலூரன் வேண்டியுரைத்த இப் பத்துப் பாடலையும் கற்று வல்லவர் விண்ணுலகையாள்வர் என்பதாம்.

(வி-ரை.) பண்மயத்த - பண்களோடு கூடிய. பற்று - ஆதரவு. உள் மயத்த - மனத்திலிருக்கிற. கண் - பெருமை. அண்மயத்தால்-பொருந்தும் வகையால். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - காயாரோகணேசர். தேவியார் - நீலாயதாக்ஷியம்மை.

---

## ஊர்த்தொகை

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்**
**கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே**
**பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே**
**மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே.**

(ப-ரை.) காட்டூர்கடலே - காட்டூரி லெழுந்தருளிய (கருணைக்) கடலே, கடம்பூர் மலையே - கடம்பூரி லெழுந்தருளிய குணமலையே, கானப்பேரூராய்-கானப்பேர் என்னும் ஊரி லெழுந்தருளியிருப்பவனே, கோட்டூர் கொழுந்தே - கோட்டூர்க் கொழுந்தே, அழுந்தூர் அரசே—, கொழுநல் கொல்லேறே-கொழுநலி லெழுந்தருளின கொல்விடையே, பாட்டூர் பலரும் பரவப்படுவாய் - பாடல்களால் ஊர்தோறுமுள்ள பலராலும் துதிக்கப்படுவோனே, பனங்காட்டூரானே—, மாட்டு ஊர் அறவா - இடபத்தை நடத்துகின்ற தருமசொரூபனே, உன்னை மறவாது பாடபணியாய்-உன்னை மறவாமல் பாடும்வண்ணம் (அடியேனை) நியமித்தருள்வாயாக எ-று.

(பொ-ரை.) காட்டூரிலெழுந்தருளிய கருணைக்கடலே, கடம்பூரி லெழுந்தருளிய குணமலையே, கானப்பேரூரென்னும் ஊரி லெழுந்தருளி யிருப்பவனே, கோட்டூர்க் கொழுந்தே, அழுந்தூரரசே, கொழுநலி லெழுந்தருளின கொல்

விடையே, பாடல்களால் ஊர்தோறு முள்ள பலராலும் துதிக்கப்படுவோனே, பனங்காட்டூரானே, இடபத்தை நடத்துகின்ற தருமசொரூபனே, உன்னை மறவாமல் பாடும்வண்ணம் (அடியேனை) நியமித்தருள்வாயாக.

(க-ரை.) காட்டூர் முதலிய திருப்பதிகளி லெழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, அடியேன் உன்னை மறவாமல் பாடும்வண்ணம் அருள்செய்யவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) கொல்லேறு - (பகைவராகிய யானைகளை) கொல்லுகின்ற ஆண் சிங்கம் எனினுமாம். (1)

**கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா**
**மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா**
**சங்கக்குழையார்செவியாயழகாவவியாவனலேந்திக்**
**கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே.**

(ப-ரை.) கொங்கில் குறும்பில் - கொங்கநாட்டில் குறும்பூரிலுள்ள, குரக்குத்தளியாய் - குரக்குத்தளியையுடையவனே, குழகா - குழகனே, குற்றாலா - குற்றாலத்தை யுடையவனே, மங்குல் திரிவாய் - இரவில் சஞ்சரிப்பவனே, வானோர் தலைவா-தேவர் பிரானே, வாய்மூர் மணவாளா-வாய்மூருக்குத் தலைவனே, சங்கக்குழை ஆர் செவியா-சங்கக்குழையணிந்த செவியையுடையவனே, அழகா-அழகனே, அவியா அனல் ஏந்தி - தணியாத அக்கினியைத் தாங்கி, கங்குல் - இராக்காலத்தில், புறங்காட்டு ஆடீ-புறங்காட்டி லாடுவோனே, அடியார் கவலை - அடியவராது துன்பத்தை, களையாய் - நீக்கி யருள்வாயாக எ-று.

(பொ-ரை.) கொங்கநாட்டில் குறும்பூரிலுள்ள குரக்குத்தளியை யுடையவனே, குழகனே, குற்றாலத்தை யுடையவனே, இரவில் சஞ்சரிப்பவனே, தேவர்பிரானே, வாய்மூருக்குத் தலைவனே, சங்கக்குழையையணிந்த செவியை யுடையவனே, அழகனே, தணியாத அக்கினியைத் தாங்கி இராக்காலத்தில் புறங்காட்டி லாடுவோனே, அடியாரது துன்பத்தைநீக்கி யருள்வாயாக.

(க-ரை.) குரக்குத்தளி முதலிய திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் இறைவனே, அடியார்களுடைய கவலையை யொழிக்கவேண்டுமென்பதாம்.

(வி-ரை.) குரக்குத்தளி - ஓர் திருப்பதி. வாய்மூர் - திருவாய்மூர். புறங்காடு - மயானம். மணவாளன் - நித்தியகலியாணமுடையவன். (2)

**நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே**
**மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே**
**மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே**
**யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மானம்மானே.**

(ப-ரை.) நிறைக்காட்டானே - நிறைக்காட்டை யுடையவனே, நெஞ்சத்தானே - (அடியாரது) மனத்திலிருப்பவனே, நின்றியூரானே-நின்றியூரை யுடை

யவனே, மிறைக்காட்டானே - மிறைக்காட்டை யுடையவனே, புனல் சேர் சடையாய்-கங்கை பொருந்திய சடையையுடையவனே, அனல்சேர் கையானே-நெருப்புப்பொருந்திய கையையுடையவனே, மறைக்காட்டானே - மறைக்காட்டை யுடையவனே, திருமாந்துறையாய் - திருமாந்துறையை யுடையவனே, மாகோணத்தானே - மாகோணத்தை யுடையவனே, எம்மான் தம்மானே - எம்பெருமானாகிய இறைவனே, எங்கட்கு - எங்களுக்கு, உன்னை-உன்னை, இறைக்காட்டாய் - இறையாகத் தந்தருளாய் எ-று.

(போ-ரை.) நிறைக்காட்டை யுடையவனே (அடியேனது) மனத்தி லிருப்பவனே நின்றியூரை யுடையவனே, மிறைக்காட்டை யுடையவனே, கங்கை பொருந்திய சடையை யுடையவனே, நெருப்புப்பொருந்திய கையையுடையவனே, மறைக்காட்டையுடையவனே, திருமாந்துறையையுடையவனே, மாகோணத்தையுடையவனே, எம் பெருமானாகிய இறைவனே, எங்களுக்கு உன்னை இறையாகத் தந்தருளாய்.

(க-ரை.) நிறைக்காடு முதலிய திருப்பதிகளி லெழுந்தருளினவனே, எமக்கு உன்னைச் சிறிது காட்டக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) இறைக்காட்டாய் என்பதற்கு சிறிது காட்டியருளாய் என்றுரைத்தலுமாம். (3)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே.

(ப-ரை.) ஆரூர் அத்தா - ஆரூரத்தனே, ஐயாற்று அமுதே-ஐயாற்றிலுள்ள அமுதமே, அளப்பூர் அம்மானே - அளப்பூரிலுள்ள அம்மானே, கார் ஊர் பொழில்கள் புடைசூழ் - கருமையாகிய சோலைகள் பக்கத்தில் சூழ்ந்த, புறவில் கருகாவூரானே - புறவினோடு கருகாவூரை யுடையவனே, பேரூர் உறைவாய்-பேரூரில் வாழ்பவனே, பட்டிப்பெருமான்-பட்டிப்பெருமானே, பிறவாநெறியானே-பிறவாத நெறியையுடையவனே, பார் ஊர் பலரும் பரவப்படுவாய் – உலகத்திலுள்ள பலராலும் வழிபடப்படுவோனே, பாசூர் அம்மானே - பாசூரிலுள்ள பெருமானே எ-று.

(போ-ரை.) ஆரூரத்தனே, ஐயாற்றிலுள்ள அமுதமே, அளப்பூரிலுள்ள அம்மானே, கருமையாகிய சோலைகள் பக்கத்தில் சூழ்ந்த புறவினோடு கருகாவூரை யுடையவனே, பேரூரில் வாழ்பவனே, பட்டிப்பெருமானே, பிறவாநெறியை யுடையவனே, உலகத்திலுள்ள பலராலும் வழிபடப்படுவோனே, பாசூரிலுள்ள பெருமானே.

(க-ரை.) ஆரூர் முதலிய திருப்பதிகளி லெழுந்தருளியிருக்கு மிறைவனே அடியேற் கருள் செய்யவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) ஐயாறு - திருவையாறு. (4)

**மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே**
**அருகற்பிணிநின்னடியார்மேலவகலவருள்வாயே**
**கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே**
**பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே.**

(ப-ரை.) மருகல் உறைவாய் - மருகலில் வாழ்பவனே, மாகாளத்தாய் - மாகாளத்தை யுடையவனே, மதி அம் சடையானே - பிறையணிந்த அழகிய சடையையுடையவனே, அருகல் பிணி - மெலிதற்குக் காரணமாகிய நோய்கள், நின் அடியார்மேல - உன்னடியவர் மேலனவற்றை, அகல அருளாய் - நீங்கும் படி யருள் செய்யக்கடவை, கருகல் குரலாய் - கரிய கண்டத்தையுடையவனே, வெண்ணிக்கரும்பே - வெண்ணியிலுள்ள கரும்பே, கானூர்கட்டியே - கானூரிலுள்ள வெல்லமே, பவளப்படியானே - பவளம்போலுந் திருமேனியையுடையவனே, அடியார்க்கு-அடியவர்க்கு, உன்னை - உன்னை, பருகப்பணியாய்-பருகும்படி கிருபைசெய்வாயாக எ-று.

(பொ-ரை.) மருகலில் வாழ்பவனே, மாகாளத்தையுடையவனே, பிறையணிந்த அழகிய சடையை யுடையவனே, மெலிதற்குக் காரணமாகிய நோய்கள் உன்னடியவர் மேலனவற்றை நீங்கும்படி யருள்செய்யக்கடவை, கரிய கண்டத்தையுடையவனே, வெண்ணியிலுள்ள கரும்பே, கானூரிலுள்ள வெல்லமே, பவளம்போலுந் திருமேனியை யுடையவனே, அடியவர்க்கு உன்னை பருகும்படி கிருபை செய்வாயாக.

(கு-ரை.) திருமருகல் முதலிய திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கு மிறைவனே, உன்னடியார் மீதுள்ள பிணியொழிய அருள்செய்கவென்பதாம். (5)

**தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே**
**வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே**
**நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பானே**
**பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே.**

(ப-ரை.) நின் அடியார்மேல - உன்னடியார் மேலனவாகிய, கூர்பிணி - மிக்க பிணிகள், அகல-நீங்க, அருளாய் - அருள் செய்வாயாக, வேங்கூர் உறைவாய் - வேங்கூரில் வாழ்பவனே, விளமர்நகராய் - விளமர்நகரையுடையவனே, விடை ஆர் கொடியானே - இடபக்கொடியை யுடையவனே, நாங்கூர் உறைவாய் - நாங்கூரில் வாழ்வோனே, தேங்கூர் நகராய் - தேங்கூர் நகரையுடையவனே, நல்லூர் நம்பானே - நல்லூர்நம்பனே, பாங்கு ஊர் - அழகிய வூர்கள்தோறும், பலிதேர் - பலியெடுக்கிற, பரனே - மேலோனே, பரமா - பரமனே, பழனப்பதியானே - பழனப்பதியை யுடையவனே எ-று.

(பொ-ரை.) உன்னடியார் மேலனவாகிய மிக்க பிணிகள் நீங்க அருள் செய்வாயாக, வேங்கூரில் வாழ்பவனே ·விளமர் நகரையுடையவனே, இடபக் கொடியை யுடையவனே, நாங்கூரில் வாழ்வோனே, தேங்கூர் நகரை யுடைய

வனே, நல்லூர் நம்பனே, அழகிய வூர்கள்தோறும் பலியெடுக்கிற மேலோனே, பரமனே, பழனப் பதியை யுடையவனே.

(க-ரை.) திருவேங்கூர் முதலிய திருப்பதிகளிலெழுந்தருளியிருப்பவனே, உன்னடியார் மேலனவாகிய பிணிகளை யொழித்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) நம்பன் என்பது நம்பான் என விகாரமாயிற்று. (6)

**தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்**
**வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே**
**யானைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே**
**யூனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே.**

(ப-ரை.) தேனை காவல் கொண்டு-தேனைத் தன்னிடத்தே யுடையதாய், விண்ட-விரிந்த, கொன்றை-கொன்றைமலர்களாலாகிய, செழுதாராய் - செழிய மாலையை யுடையவனே, வானை காவல் கொண்டு நின்றார் - தேவர்களும், அறியா நெறியானே - அறியாத நெறியை யுடையவனே, ஆனைக்காவில் அரனே - ஆனைக்காவில் வாழ்கின்ற சிவனே, பரனே-மேலோனே, அண்ணாமலையானே—, ஊனை காவல் கைவிட்டு - உடற்காப்பை நீங்கி, உன்னை உகப்பார் - உன்னை விரும்புவோர், உணர்வார் - (உன்னை) அறிவார்கள் எ-று.

(பொ-ரை.) தேனைத் தன்னிடத்தே யுடையதாய் விரிந்த கொன்றை மலர்களாலாகிய செழிய மாலையையுடையவனே, தேவர்களுமறியாத நெறியை யுடையவனே, ஆனைக்காவில் வாழ்கின்ற சிவனே, மேலோனே, அண்ணாமலையானே, உடற்காப்பை நீங்கி உன்னை விரும்புவோர் (உன்னை) அறிவார்கள்.

(க-ரை.) திருவானைக்காமுதலிய திருப்பதிகளி லெழுந்தருளி யிருப்பவனே, தேவர்கள் உன்னை யறியமாட்டார்கள், உன்னடியார் உன்னையறிவார் என்பதாம்.

(வி-ரை.) வானை காவல் கொண்டு நின்றார் - விண்ணுலகைக் காவலாகக் கொண்டு நின்றவர் தேவர்கள். (7)

**துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலாய்**
**பருத்திநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்**
**திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா**
**வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே.**

(ப-ரை.) துருத்திச்சுடரே - துருத்திச் சோதியே, நெய்த்தானத்தாய் - நெய்த்தானத்தை யுடையவனே, சொல் ஆய் கல்லாலா - வேதங்களா லாராயப்படுகிற கல்லாலமரத்தின் கீழ் எழுந்தருளினவனே, பருத்தி நியமத்து உறைவாய் - பருத்தி நியமத்தில் வாழ்பவனே, வெயில் ஆய் - வெயிலாகி, பல ஆய் - பல பொருள்களாகி, காற்று ஆனாய் - காற்றானாய், திருத்தித்திருத்தி வந்து - மிகவுந் திருத்தி வந்து, என் சிந்தை - என் மனத்தை, இடம்கொள் - இடமாகக்

கொண்ட, கயிலாயா - கயிலாயனே, அருத்தித்து - விரும்பி, உன்னை அடைந் தார் - உன்னை யடுத்தவர்களுடைய, வினைகள் அகல - வினைகளொழியும்படி, அருளாய் - அருளக்கடவை எ-று.

(பொ-ரை.) துருத்திச் சோதியே, நெய்த்தானத்தை யுடையவனே, வேதங் களா லாராயப்படுகிற கல்லாலமரத்தின்கீழ் எழுந்தருளினவனே, பருத்தி நிய மத்தில் வாழ்பவனே, வெயிலாகி பல பொருள்களாகி காற்றாய், மிகவுந் திரு த்திவந்து என் மனத்தை இடமாகக்கொண்ட கயிலாயனே, விரும்பி உன்னை யடுத்தவர்களுடைய வினைக ளொழியும்படி யருளக்கடவை.

(க-ரை.) திருத்துருத்தி முதலிய திருப்பதிகளில் எழுந்தருளி யிருப்ப வனே, உன்னைப் பிரார்த்தித்து அடைந்தவருடைய வினைக ளொழிய அருள் செய்யக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) சொல் - வேதம். துருத்தி - ஓர் திருப்பதி. நெய்த்தானம் - ஓர் திருப்பதி. பருத்திநியமம் - ஓர் திருப்பதி. (8)

**புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதாரா**
**பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே**
**வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடீ**
**கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே.**

(ப-ரை.) புலியூர் சிற்றம்பலத்தாய் - புலியூர்ச் சிற்றம்பலத்தை யுடைய வனே, புகலூர்ப்போதா - புகலூரிலுள்ள அறிவனே, மூதாரா - மூதாரையுடை யவனே, பொலிசேர்-விளக்கம்பொருந்திய, புரம் மூன்று-முப்புரங்கள், எரிய - எரிந்தொழிய, செற்ற - (அவற்றை) வென்ற, புரி புன்சடையானே - முறுக் கையுடைய புன் சடையை யுடையவனே, வலிசேர் அரக்கன் - வலிபொருந்திய ராவணாசுரனது, ஐஞ்ஞான்கு தடக்கை - இருபது பெரிய கைகளையும், அடர்த்த - நெரித்த, மதிசூடீ - பிறைசூடீ, கலிசேர் புறவில்-ஒலிபொருந்திய முல்லை நிலத்திலுள்ள, கடவூராளீ - கடவூரை யாள்வோனே, காண அருளாய் (உன்னை நான்) காணும்படி கிருபை செய்வாயாக எ-று.

(பொ-ரை.) புலியூர்ச் சிற்றம்பலத்தையுடையவனே, புகலூரிலுள்ள அறி வனே, மூதாரையுடையவனே, விளக்கம்பொருந்திய முப்புரங்கள் எரிந்தொ ழிய (அவற்றை) வென்ற முறுக்கையுடைய புன்சடையை யுடையவனே, வலி பொருந்திய ராவணாசுரனது இருபது பெரிய கைகளையும் நெரித்த பிறைசூடீ, ஒலிபொருந்திய முல்லை நிலத்திலுள்ள கடவூரை யாள்வோனே, (உன்னைநான்) காணும்படி கிருபைசெய்வாயாக.

(க-ரை.) புலியூர்ச் சிற்றம்பலமுதலிய திருப்பதிகளி லெழுந்தருளியிருப் பவனே, அடியேன் உன்னைக்கண்டு களிக்க அருள்செய்யவேண்டுமென்பதாம்.

(வி-ரை.) ஐஞ்ஞான்கு என்பதில் ஞகாரம் நகரத்திற்குப் போலியாய் வந்தது. (9)

**கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி**
**மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாள்மடச்சிங்கடி**
**தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை**
**செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே.**

(ப-ரை.) கைம்மா உரிவை - யானைத்தோலையுடைய, அம்மான் காக்கும் - பெருமான் காக்கின்ற, பலவூர் - பலதிருப்பதிகளையும், கருத்து உன்னி - மனத்தில் நினைத்து, மை - அஞ்சந மெழுதப்பெற்ற, மா-மாவடுவெகிர்போன்ற, தடம் கண் - பெரிய கண்களையுடைய, மதுரம் அன்ன மொழியாள் - மதுரம்போலு மொழியை யுடையவளாகிய, மடச்சிங்கடி - மடச்சிங்கடிக்கும், தம்மான் ஊரன் சடையன் - தம்மானூரன் சடையனுக்கும், சிறுவன் - சிறுவனாகிய, அடியன் - அடியவனது, தமிழ்மாலை - தமிழ்மாலையை, செம்மாந்திருந்து - இறுமாந் திருந்து, திருவாய் திறப்பார் - திருவாய்திறப்பவர், சிவலோகத்தாரே - சிவலோகத்தையுடையவரேயாவர் எ-று.

(பொ-ரை.) யானைத்தோலையுடைய பெருமான் காக்கின்ற பல திருப்பதிகளையும் மனத்தில் நினைத்து, அஞ்சந மெழுதப்பெற்ற மாவடுவெகிர் போன்ற பெரிய கண்களையுடைய மதுரம்போலு மொழியை யுடையவளாகிய மடச்சிங்கடிக்கும், தம்மானூரன் சடையனுக்கும், சிறுவனாகிய அடியவனது தமிழ் மாலையை இறுமாந்திருந்து திருவாய்திறப்பவர் சிவலோகத்தை யுடையவரே, யாவர்.

(க-ரை.) சிவபெருமானுடைய பல வூர்களை நினைத்து, திருநாவலூரன் சொன்ன தமிழ்மாலையைப் படிப்பவர் சிவலோகத்தை யடைவாரென்பதாம்.

(வி-ரை.) திருவாய் திறப்பார் - திருவாய்மலர்ந்து பாடுவோர். (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பாண்டிக்கொடுமுடி

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்**
**பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்**
**கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி**
**நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(ப-ரை.) எனக்கு மற்றுபற்று இன்றி - எனக்கு வேறு ஆதாரவில்லாமல், நின் - உனது, திருப்பாதமே-திருவடியையே, மனம்பாவித்தேன் - மனத்தில் நினைத்தேன், பெற்றலும் — (நினைக்கப்) பெறுதலும், பிறந்தேன் - பிறந்தவனானேன், இனி - இனி, வந்து பிறவாததன்மை எய்தினேன் - வந்து பிறவாத

தன்மையையும் அடைந்தேன், கற்றவர் தொழுது ஏத்தும் - கற்றவர் வணங்கித் துதிக்கிற, சீர் - சிறப்பமைந்த, கறையூரில் - கறையூரின்கண், பாண்டிக்கொடு முடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, நல்தவா - நல்ல நாதனே, நான் உன்னை மறக்கிலும் - நான் உன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, சொல்லும் — உச்சரித்துக்கொண்டிருக்கும் எ-று.

(பொ-ரை.) எனக்கு வேறு ஆதரவில்லாமல் உனது திருவடியையே மனத்தில் நினைத்தேன், (நினைக்கப்) பெறுதலும் பிறந்தவனானேன், இனி வந்து பிறவாத தன்மையையுமடைந்தேன், கற்றவர் வணங்கித் துதிக்கிற சிறப்பமைந்த கறையூரின்கண் திருப்பாண்டிக்கொடுமுடியிலெழுந்தருளிய நல்லநாதனே, நான் உன்னை மறந்தாலும் என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும்.

(க-ரை.) திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய இறைவனே, நான் உன்னை மறந்தாலும் என்னாவானது நமசிவாய வென்று உச்சரியாநிற்கும் என்பதாம்.

(வி-ரை.) அரிதாகிய இம் மானிடப் பிறவி பிறந்தபேறு இறைவனது திருவடியை நினைத்தலே யாதலாலும், நினையாதவர் பிறவாதவர்களே யாதலாலும் 'நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன் பெற்றலும் பிறந்தேன்' என்றார். தவன் - நாதன். (1)

**இட்டனுன்னடியேத்துவாரிகழ்ந்திட்டநாள்மறந்திட்டநாள்**
**கெட்டநாளிவையென்றலால்கருதேன்கிளர்புனற்காவிரி**
**வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி**
**நட்டவாவுனைநான்மறக்கிலுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(ப-ரை.) இட்டன் - இட்டனாகிய, நும் அடி ஏத்துவார் - உமது திருவடியைத் துதிப்பவர், இகழ்ந் திட்டநாள் - இகழ்ந்திட்ட நாளும், மறந்திட்டநாள் - மறந்திட்டநாளும், (ஆகிய) இவை - இந்த நாட்கள், கெட்டநாள் என்று அல்லால் கருதேன் - கெட்ட நாள்களென்று நினைப்பதன்றி நல்ல நாட்களாக நினைக்கமாட்டேன், கிளர் புனல்-பெருகுகின்ற நீரையுடைய, காவிரி - காவிரியாறானது, வட்டவாசிகை கொண்டு - வட்டவடிவாகிய பூமாலைகளைக் கொண்டு, அடி தொழுது ஏத்து - திருவடியை வணங்கித் துதிக்கின்ற, பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய, நட்டவா - நடராஜனே, நான் உன்னை மறக்கினும் - நான் உன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, சொல்லும்-உச்சரித்துக் கொண்டிருக்கும் எ-று.

(பொ-ரை.) இட்டனாகிய உனது திருவடியைத் துதிப்பவர் இகழ்ந்திட்ட நாளும், மறந்திட்டநாளும் (ஆகிய) இந்த நாட்கள் கெட்டநாள்களென்று நினைப்பதன்றி நல்ல நாட்களாக நினைக்க மாட்டேன், பெருகுகின்ற நீரையுடைய காவிரியாறானது வட்டவடிவாகிய பூமாலைகளைக் கொண்டு திருவடியை வணங்கித் துதிக்

கின்ற திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய நடராஜனே, நான் உன்னை மறந்தாலும் என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டிருக்கும்.

(க-ரை.) திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய இறைவனே, நான் உன்னை மறந்தாலும் என்னுவானது நமசிவாய வென்று உச்சரியா நிற்கும் என்பதாம்.

(வி-ரை.) இட்டன் - பரமாப்தன். இகழ்தல் - மதியாதிருத்தல். வாசிகை - கோத்தபூமாலை. காவிரி வாசிகை கொண்டடி தொழுதலாவது தான்வருவழியில் இருமருங்கினுமுள்ள மரங்களினின்றுதிர்ந்த மலர்களை வரிசையா யீர்த்துக் கொண்டு வருதல். (2)

**ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்**
**காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்**
**பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி**
**நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(ப-ரை.) ஓவும் நாள்-(உன்னைவிட்டு) நீங்குகிற நாட்கள், உணர்வு அழியும் நாள் - அறிவு கெடுகிற நாட்கள், உயிர் போகும்நாள் - உயிர் நீங்குகிற நாட்கள், உயர் பாடைமேல் காவும் நாள் - உயர்ந்த பாடையின் மேலிட்டுச் சுமக்கும் நாட்கள், என்று அல்லால் - என்று நினைப்பதன்றி, இவை - இவற்றை, கருதேன் - வேறாக நினையேன், கிளர்புனல் காவிரி - விளங்குகிற நீரையுடைய காவிரியாற்றின், பரவு - பரவிய, தண்புனல் - குளிர்ந்த நீரானது, வந்து இழி - வந்திறங்குதற்குரிய, பரஞ்சோதி - பரஞ்சோதியை யுடைய, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய, நாவலா - நாவலனே, நான் உன்னை மறக்கினும் - நான் உன்னைமறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, சொல்லும்-உச்சரித்துக் கொண்டிருக்கும் எ-று.

(பொ-ரை.) (உன்னை விட்டு) நீங்குகிற நாட்கள் அறிவு கெடுகிற நாட்கள் உயிர் நீங்குகிற நாட்கள் உயர்ந்த பாடையின்மேலிட்டுச் சுமக்கும்நாட்கள் என்று நினைப்பதன்றி, இவற்றை வேறாக நினையேன், விளங்குகிற நீரையுடைய காவிரியாற்றின் பரவிய குளிர்ந்த நீரானது வந்திறங்குதற்குரிய பரஞ்சோதியையுடைய திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய நாவலனே, நானுன்னை மறந்தாலும் என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக் கொண்டிருக்கும்.

(க-ரை.) திருப்பாண்டிக் கொடுமுடியை யுடையவனே, நான் உன்னை மறந்தாலும், என்னுவானது நமசிவாய என்று சொல்லா நிற்கும் என்பதாம்.

(வி-ரை.) ஓவுதல் - நீங்குதல். காவுதல் - சுமத்தல். வேத சிவாகமாதிகள் யாவும் அருளிச் செய்தவனுதலால் இறைவனை 'நாவலன்' என்றார். வடமொழியைப் பாணினிக்கும், தென்மொழியை அகத்தியனுக்கும் கற்பித்தவனுதலால் 'நாவலன்' என்றா ரெனினுமாம். (3)

**எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி**
**கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை**
**நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி**
**வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(**ப-ரை.**) எல்லை இல்புகழ் எம்பிரான் - எல்லையில்லாத புகழை யுடைய எம்பெருமான், எந்தை - எமது தந்தை, தம்பிரான் - இறைவன், என் பொன் - என் சுவர்ணம், மாமணி - மாணிக்கம், கல்லை உந்தி - கற்களைத்தள்ளி, வளம் பொழிந்து - (முத்து முதலாகிய) வளங்களைக் கொழித்து, இழி - வருகிற, காவிரியதன் வாய்கரை - காவிரியாற்றங் கரையில், நல்லவர் தொழுது ஏத்தும் - நல்லோர் வணங்கித் துதிக்கிற, சீர் - சிறப்பையுடைய, கறையூரில் - திருக்கறையூரில், பாண்டிக் கொடுமுடி-திருப்பாண்டிக் கொடுமுடியிலெழுந்தருளிய, வல்லவா - வல்லவனே, நான் உன்னை மறக்கினும் - நான் உன்னை மறந்தாலும், நா — என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, சொல்லும்-உச்சரித்துக் கொண்டிருக்கும் எ-று.

(**பொ-ரை.**) எல்லையில்லாத புகழையுடைய எம்பெருமான், எமது தந்தை, இறைவன், என்சுவர்ணம், மாணிக்கக்கற்களைத்தள்ளி (முத்து முதலாகிய) வளங்களைக்கொழித்து வருகிற காவிரியாற்றங்கரையில் நல்லோர் வணங்கித் துதிக்கிற சிறப்பையுடைய திருக்கரையூரில் திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய வல்லவனே, நானுன்னை மறந்தாலும், என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும்.

(**க-ரை.**) திருப்பாண்டிக் கொடுமுடி இறைவனே, நான் உன்னை மறந்தாலும் என்னுவானது நமசிவாயவென்று சொல்லாநிற்கும் என்பதாம்.

(**வி-ரை.**) இறைவன்புகழ் பொருள்சேர் புகழாதலால், 'எல்லையில் புகழ்' என்றும், எல்லாம் வல்லவனுதலால் 'வல்லவன்' என்றும் கூறினர். நல்லவர் என்றது அன்பரை. (4)

**அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினேன்**
**அஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கினாய்க்கழிகின்றதென்**
**பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி**
**நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(**ப-ரை.**) அஞ்சினார்க்கு - பயந்தவர்க்கு, அரண் ஆதி என்று - காவலாகிறாயென்றறிந்து, நான் அடியேனும் மிக அஞ்சினேன் - அடியேனாகிய நானும் மிக அஞ்சினேன், அடிதொண்டனேற்கு - திருவடித்தொண்டனாகிய எனக்கு, அருள் நல்கினாய்க்கு — அருள்செய்த வுனக்கு, அழிகின்றது என் - கெடுகின்றதென், பஞ்சின் - பஞ்சினும், மெல்அடி - மென்மையாகிய பாதங்களையுடைய, பாவைமார் குடைந்தாடு - மாதர் குடைந்தாடுகின்ற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய, நஞ்சு அணிகண்ட - விடமணி கண்

டனே, நான் உன்னை மறக்கினும் - நான் உன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, சொல்லும் - உச்சரித்துக்கொண்டிருக்கும் எ-று.

**(பொ-ரை.)** பயந்தவர்க்கு காவலாகிருயென்றறிந்து அடியேனுகிய நானும் மிக அஞ்சினேன், திருவடித் தொண்டனுகிய வெனக்கு அருள்செய்த வுனக்கு கெடுகின்றதென், பஞ்சினும் மென்மையாகிய பாதங்களையுடைய மாதர் குடைந்தாடுகின்ற திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய விடமணிகண்டனே, நானுன்னை மறந்தாலும் என் நாவானது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டிருக்கும்.

**(க-ரை.)** திருப்பாண்டிக் கொடுமுடியிலெழுந்தருளி யிருப்பவனே, நான் உன்னை மறந்தாலும் என்னுவானது நமசிவாயவென்று சொல்லாநிற்கும் என்பதாம்.

**(வி-ரை.)** அரண் - காவல். அழிகின்றது என் என்றது. நஷ்டம் யாது என்றபடி. பஞ்சின் என்பதில் இன் உறழ்பொருளில் வந்தது. ஒப்புப்பொருளதெனக் கொண்டு பஞ்சுபோலவென் றுரைத்தலுமாம். பாவைமார் உவமையாகு பெயராய் பாவைபோலு முருவுடையாராகிய மாதரை யுணர்த்திற்று. (5)

***ஏடுவானிளந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மேல்***
***ஆடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்***
***பாடுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்***
***சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.***

**(ப-ரை.)** ஏடுவான் - எடுப்பாகிய ஆகாச சஞ்சாரியாகிய, இளந்திங்கள் சூடினை - இளம்பிறையை அணிந்தாய், என் - என்ன, பின் - மேலும், கொல்புலித்தோலின்மேல் - கொல்புலித்தோலின்மீது, ஆடுபாம்பு - ஆடுகிற பாம்பை, அரைக்கு அசைத்த - திருவரையிற்கட்டிய, அழகனே - சுந்தரனே, அம்தண் - அழகும் குளிர்ச்சியுமுள்ள, காவிரிப்பாடு-காவிரியாற்றின் பக்கத்தில், தண்புனல் வந்து இழி - குளிர்ந்த நீர்வந்திறங்குகிற, பரஞ்சோதி-மேலான ஒளியையுடைய, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, சேடனே - நித்தியனே, நான் உன்னை மறக்கினும்-நான் உன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, சொல்லும் - உச்சரித்துக்கொண்டிருக்கும் எ-று.

**(பொ-ரை.)** எடுப்பாகிய ஆகாச சஞ்சாரியாகிய இளம்பிறையை யணிந்தாய், என்ன, மேலும் கொல்புலித்தோலின்மீது ஆடுகிற பாம்பை திருவரையிற் கட்டிய சுந்தரனே, அழகும் குளிர்ச்சியுமுள்ள காவிரியாற்றின் பக்கத்தில் குளிர்ந்த நீர் வந்திறங்குகிற மேலான ஒளியையுடைய திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய நித்தியனே, நான் உன்னை மறந்தாலும் என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டிருக்கும்.

(க-ரை.) திருப்பாண்டிக்கொடுமுடிச் சேடனே, நான் உன்னைமறந்தாலும் என்னுவானது நமச்சிவாயவென்று சொல்லாநிற்கு மென்பதாம்.

(வி-ரை.) எடு என்பதற்குப் பகுதி எடு. அசைத்தல் - கட்டுதல். சேடன் - எல்லாப் பொருள்களும் நசித்தொழிந்த காலத்திலும் நசியாது எஞ்சி நிற்பவன். (6)

**விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன்வினைகளும்விண்டன**
**நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடைக்**
**குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி**
**விரும்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(ப-ரை.) நின் - உனது, மலர் - தாமரைமலர்போலும், பாதமே - திருவடியையே, விரும்பி நினைந்தேன் - விரும்பி தியானித்தேன், வினைகளும் விண்டனன் - வினைகளும் நீங்கப்பெற்றேன், வண்பொழில் நெருங்கி சூழ்ந்து - வளவிய சோலைகள் நெருங்கிச் சூழ்ந்து, எழில்பெற நின்ற - அழகுபெற நின்ற, காவிரிகோட்டிடை - காவிரியாற்றங்கரையில், குரும்பைமெல் முலைகோதைமார் - கோங்கரும்புபோலும் மெல்லிய தனங்களையுடைய மாதர், குடைந்தாடு - குடைந்தாடுகிற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, விரும்பனே - யாவரும் விரும்புதற்குரியவனே, நான் உன்னை மறக்கினும் - நானுன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, சொல்லும் - உச்சரித்துக்கொண்டிருக்கும் எ-று.

(பொ-ரை.) உனது தாமரை மலர்போலுந் திருவடியையே விரும்பி தியானித்தேன், வினைகளும் நீங்கப்பெற்றேன், வளவிய சோலைகள் நெருங்கிச் சூழ்ந்து அழகுபெறநின்ற காவிரி யாற்றங்கரையில் கோங்கரும்புபோலும் மெல்லிய தனங்களையுடைய மாதர் குடைந்தாடுகிற திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய யாவரும் விரும்புதற்குரியவனே, நானுன்னை, மறந்தாலும் என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும்

(க-ரை.) திருப்பாண்டிக் கொடுமுடி விரும்பனே, நான் உன்னை மறந்தாலும், என்னுவானது நமசிவாயவென்று சொல்லாநிற்கும் என்பதாம்.

(வி-ரை.) கோடு - கரை. கோதைமார் - பூமாலையை யணிந்தமாதர். பாண்டிக்கொடுமுடி விரும்பன் - பாண்டிக்கொடுமுடியை விரும்பினவன் எனினுமாம்.

**செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய்**
**வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்**
**கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி**
**நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(ப-ரை ) செம்பொன் நேர்சடையாய் - செம்பொன்னை நிகர்த்த சடையையுடையவனே, திரிபுரம் - முப்புரத்தில், தீ எழ-நெருப்பெழும்படி, சிலைகோலி

ஞய் - சிலையை வளைத்தாய், வம்பு உலாம் குழலாளை - மணங் கமழ்கின்ற கூந்தலை யுடையவளாகிய உமாதேவியை, பாகம் அமர்ந்து-பாகத்திலிருக்க விரும்பி, காவிரி கோட்டிடை - காவிரிக் கரையில், கொம்பின் மேல் குயில் கூவ - கிளைகளின்மேல் குயில்கள் கூவாநிற்க, மாமயில் ஆடு - பெரிய மயில்கள் ஆடாநின்ற, பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய, நம்பனே - சிவபிரானே, நான் உன்னை மறக்கினும் - நானுன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, சொல்லும் - உச்சரித்துக் கொண்டிருக்கும் எ-று.

(பொ-ரை.) செம்பொன்னை நிகர்த்த சடையை யுடையவனே, முப்புரத்தில் நெருப் பெழும்படி சிலையை வளைத்தாய், மணங்கமழ்கின்ற கூந்தலை யுடையவளாகிய உமாதேவியை பாகத்திலிருக்க விரும்பி, காவிரிக்கரையில் கிளைகளின்மேல் குயில்கள் கூவாநிற்க, பெரிய மயில்கள் ஆடாநின்ற திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய சிவபிரானே, நானுன்னை மறந்தாலும் என் நாவானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டிருக்கும்.

(கு-ரை.) திருப்பாண்டிக் கொடுமுடி நம்பனே, நான் உன்னை மறந்தாலும் என்னுவானது நமசிவாயவென்று சொல்லநிற்கும் என்பதாம்.

(வி-ரை.) செம்பொன் ஏர் சடையெனப் பிரித்து செம்பொன் போலும் அழகிய சடையெனினுமாம். கோலுதல் - வளைத்தல். வம்பு - மணம். பாகம் - இடப்பாகம். (8)

**சாரணன்றந்தையெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணியெ**
**பேரெணுயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார் [ன்று**
**நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடிக்**
**காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.**

(ப-ரை.) சாரணன் தந்தை - சாரணன்தந்தை, எம்பிரான் எந்தை - எம்பெருமான் எந்தை, தம்பிரான் - தம்பிரான், என் பொன்மாமணியென்று - என் பொன்மாமணியென்று, பேர் - திருநாமங்களை, எண்ணுயிரகோடி தேவர் - எண்ணுயிரகோடி தேவர்கள், பிதற்றி நின்று பிரிகிலார் - பிதற்றி நின்று நீங்காதிருக்கின்றனர், நாரணன் பிரமன் தொழும் - விஷ்ணுவும் பிரமனும் வணங்குகின்ற, கறையூரில்-திருக்கறையூரில், பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, காரணா - காரணனே, நான் உன்னை மறக்கினும் - நானுன்னை மறந்தாலும், நா - என் நாவானது, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, சொல்லும் - உச்சரித்துக்கொண்டிருக்கும் எ - று.

(பொ-ரை.) சாரணன் தந்தை எம்பெருமான் எந்தை தம்பிரான் என் பொன்மாமணியென்று திருநாமங்களை எண்ணுயிரகோடி தேவர்கள் பிதற்றி நின்று நீங்காதிருக்கின்றனர், விஷ்ணுவும் பிரமனும் வணங்குகின்ற திருக்கறையூரில் திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய காரணனே, நானுன்னை மறந்தாலும் என்நாவானது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும்.

(க-ரை.) திருப்பாண்டிக்கொடுமுடிக்காரணா, நான் உன்னை மறந்தாலும் என் நாவானது நமசிவாயவென்று சொல்லாநிற்கும் என்பதாம்.

(வி-ரை.) காரணன் - சர்வகாரணன். (9)

**கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி**
**பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்**
**பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை [மே.**
**நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைதுன்ப**

(ப-ரை.) கோணிய - வளைந்த, பிறைசூடியை - பிறையைத் தரித்தவனை, கறையூரில் - திருக்கறையூரில், பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியை, பேணிய பெருமானை - விரும்பின பெருமானை, பிஞ்ஞகப்பித்தனை - பிஞ்ஞகனாகிய பித்தனை, பிறப்பு இல்லியை - பிறவியில்லாதவனை, பாண் உலா - இசையோடு உலாவுகின்ற, வரிவண்டு அறை - கீற்றுக்களையுடைய வண்டுகள் ஒலித்தற்கிடமாகிய, கொன்றைத்தாரனை - கொன்றைமலர் மாலையையுடையவனை, படப்பாம்பு - படத்தையுடைய பாம்பாகிய, அரை நாணனை—அரைநாணையுடையவனை, தொண்டனூரன் சொல் - தொண்டனூரன் சொல்லிய, இவை - இந்தப் பாடல்களை, சொல்லுவார்க்கு - சொல்லுவோருக்கு, துன்பம் இல்லை - துன்பமில்லையாகும் எ-று.

(பொ-ரை.) வளைந்த பிறையைத்தரித்தவனை, திருக்கறையூரில் திருப்பாண்டிக்கொடுமுடியை விரும்பின பெருமானை, பிஞ்ஞகனாகிய பித்தனை, பிறவியில்லாதவனை, இசையோடுலாவுகின்ற கீற்றுக்களையுடைய வண்டுகள் ஒலித்தற்கிடமாகிய கொன்றைமலர் மாலையையுடையவனை, படத்தையுடைய பாம்பாகிய அரைநாணையுடையவனை, தொண்டனூரன் சொல்லிய இந்தப் பாடல் சொல்லுவோருக்கு துன்பமில்லையாகும்.

(க-ரை.) திருப்பாண்டிக் கொடுமுடி இறைவனை, நாவலூரன் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாடலுஞ் சொல்லுவார்க்குத் துன்பமில்லையென்பதாம்.

(வி-ரை.) பிஞ்ஞகன் - தலைக்கோலத்தையுடையவன். நாண்-கயிறு. அரைநாண் — அரையிற்கட்டுங்கயிறு. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொடுமுடிநாதேசுவரர். தேவியார் - பண்மொழியம்மை.

## திருமுருகன்பூண்டி

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்விரவலாமைசொல்லித்
திடுகுமொட்டெனக்குத்திக்கூறைகொண்டாறலைக்குமிடம்
முடுகுநாறியவடுகர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வா [ரே.
யிடுகுநுண்ணிடைமங்கைதன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீ**

(ப-ரை.) கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் - கோணிய கொடிய வில்லையுடைய வடுகவேடர், விரவலாமை சொல்லி -கடுஞ் சொற்களைச் சொல்லி, திடுகு மொட்டெனக் குத்தி - திடுகு மொட்டென்னு மொலியெழக்குத்தி, கூறை கொண்டு - ஆடையைக்கவர்ந்து, ஆறலைக்கும் இடம் - வழிகட்டிப் பறிக்குமிடமாய், முடுகு நாறிய - முடுக்குத்தன்மையையுடைய, வடுகர் வாழ் - வடுகர் வாழ்கின்ற, முருகன் பூண்டிமாநகர் வாய் - திருமுருகன் பூண்டிமாநகரத்தில், இடுகு நுண் இடை மங்கையொடும் - உமாதேவியோடும், எத்துக்கு இங்கு இருந்தீர் - யாதுக்கு இவ்விடத்திருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

(பொ-ரை.) கோணிய கொடிய வில்லையுடைய வடுக வேடர் கடுஞ் சொற்களைச் சொல்லி, திடுகு மொட்டென்னு மொலியெழக்குத்தி,ஆடையைக்கவர்ந்து வழிகட்டிப் பறிக்குமிடமாய் முடுக்குத் தன்மையை யுடைய வடுகர் வாழ்கின்ற திருமுருகன் பூண்டிமாநகரத்தில் உமாதேவியோடும் யாதுக்கு இவ்விடத்திருந்தீர் எம்பெருமானீரே.

(கு-ரை.) திருமுருகன் பூண்டி இறைவரே, வேடுவர் வழிகட்டிப் பறித்தற்குரிய இவ்விடத்தில் ஏனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) விரவலாமை - பகைமை. (கடுஞ்சொல்) முடுகு - வலி. இடுகுதல் - சுருங்குதல். எத்துக்கு - எதுக்கு எது என்னும் வினாப்பெயர். உருபேற்குங்கால் தகரம் இரட்டித்து வருதலைப் பெரியோ ரிலக்கியங்களிற் காணலாம். "இத்தை மெய் யெனக்கருதி" என்பது திருவாசகம். (1)

**வில்லைக்காட்டிவெருட்டிவேடுவர்விரவலாமைசொல்லிக்
கல்லினாலெறிந்திட்டுமோதியுங்கூறைகொள்ளுமிடம்
முல்லைத்தாதுமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வா [ரே.
யெல்லைக்காப்பதொன்றில்லையாகிநீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீ**

(ப-ரை.) வில்லைக்காட்டி வெருட்டி - வில்லைக்காட்டி பயமுறுத்தி, வேடுவர் - வேடுவர், விரவலாமை சொல்லி-பகைமையைச் சொல்லி, கல்லினால் எறிந்திட்டும் - கல்லால் எறிந்தும், மோதியும் - அடித்தும், கூறை கொள்ளுமிடம் - ஆடையைப் பறிக்குமிடம், முல்லைத்தாது மணம் கமழ் - முல்லை மலர்த்தாது மணம்வீசுகிற, முருகன்பூண்டிமாநகர்வாய் - திருமுருகன் பூண்டிமாநகரத்தில்,

எல்லைகாப்பது ஒன்று இல்லையாகில் - எல்லைகாக்குந் தொழிலில்லையானால், நீர் எத்துக்கு இங்கு இருந்தீர் - நீர் யாதுக்கு இவ்விடத்திருந்தீர், எம்பிரானீரே — எம் பெருமானீரே எ-று.

(பொ-ரை.) வில்லைக்காட்டி பயமுறுத்தி வேடுவர் பகைமையைச் சொல்லி, கல்லால் எறிந்தும், அடித்தும், ஆடையைப் பறிக்குமிடம் முல்லை மலர்த்தாது மணம் வீசுகிற திருமுருகன் பூண்டிமா நகரத்தில் எல்லை காக்குந் தொழிலில்லை யானால் நீர் என் இங்கிருந்தீர் எம்பிரானீரே.

(க-ரை.) திருமுருகன் பூண்டி இறைவரே, வேடுவர் வழிகட்டிப் பறிக்கிற இவ்விடத்தில் நீர் ஏனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) எத்துக்கு - எதன்பொருட்டு. (2)

**பசுக்களேகொன்றுதின்றுபாவிகள்பாவமொன்றறியார்**
**உசிர்க்கொலைபலநேர்ந்துநாடொறுங்கூறைகொள்ளுமிடம்**
**முசுக்கள்போற்பலவேடர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வா**
**யிசுக்கிழியப்பயக்கங்கொண்டுநீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.**

(ப-ரை.) பசுக்களே கொன்று தின்று - பசுக்களையே கொன்று தின்று, பாவிகள் - பாவிகள், பாவம் ஒன்று அறியார் - பாவமென்பதைச் சிறிதும் அறியாதவராய், பல உசிர்க் கொலை நேர்ந்து-பலஉயிர்க்கொலை செய்து, நாள்தொறும்-தினந்தோறும், கூறை கொள்ளுமிடம் - ஆடைபறிக்குமிடம், முசுக்கள் போல-குரங்குகள் போல, பல வேடர் வாழ் - பல வேடுவர் வாழ்கின்ற, முருகன் பூண்டிமாநகர்வாய் - திருமுருகன் பூண்டிமாநகரத்தில், இசுக்கு இழியப்பயக்கம் கொண்டு - வழுக்கு நிலத்தில் இறங்கப்பழகி, நீர் எத்துக்கு இங்கு இருந்தீர் - நீர் என் இங்கு இருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

(பொ-ரை.) பசுக்களையே கொன்றுதின்று பாவிகள் பாவமென்பதைச் சிறிது மறியாதவர்கள், உயிர்க்கொலைசெய்து தினந்தோறும் ஆடை பறிக்குமிடம், குரங்குகள் போல பல வேடுவர் வாழ்கின்ற திருமுருகன் பூண்டிமாநகரத்தில் வழுக்கு நிலத்தில் இறங்கப்பழகி நீர் என் இங்கிருந்தீர் எம்பெருமானீரே.

(க-ரை.) திருமுருகன்பூண்டி இறைவரே, பசுக்களைக் கொன்றுண்ணும் பாவிகளாகிய வேடர் வாழ்கிற இவ்விடத்தில் நீர் ஏனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) உயிர் - உசிர் என விகாரமாயிற்று. இசுக்கு - இழுக்கு என்பதன் விகாரம். வழுக்கல் என்பது பொருள். (3)

**பீறைகூறையுடுத்தோர்பத்திரங்கட்டிவெட்டனராய்ச்**
**சூறைப்பங்கியராகிநாடொறுங்கூறைகொள்ளுமிட**
**மோறைவேடுவர்கூடிவாழ்முருகன்பூண்டிமாநகர்வா**
**யேறுகாலிற்றதில்லையாய்விடிலெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.**

(ப-ரை.) பீறை கூறை உடுத்து - பீற்றல் ஆடையை உடுத்து, ஓர் பத்திரம்கட்டி - ஓர் உடைவாளைக் கட்டி, வெட்டனர் ஆய் - கடியராகி, சூறைப்

பங்கியர் ஆகி - சுழலாநின்ற மயிரையுடையராய், நாள்தொறும் - தினந்தோறும், கூறைகொள்ளுமிடம் - ஆடை பறிக்குமிடம், மோறை வேடுவர் கூடிவாழ் - முறட்டு வேடர் கூடிவாழ்கிற, முருகன் பூண்டிமாநகர்வாய்- திருமுருகன் பூண்டிமாநகரத்தில், எறு - உமது இடபம், கால் இற்ற தில்லையாய் விடின் - காலொடியாதிருந்தால், எத்துக்கு இங்கு இருந்தீர் - யாதுக்கு இவ்விடத்திருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

(போ-ரை.) பீற்றலாடையையுடுத்து, ஓர் உடைவாளைக்கட்டி கடியராகி சுழலாநின்ற மயிரையுடையராய், தினந்தோறும் ஆடைபறிக்குமிடம் முறட்டு வேடுவர் கூடிவாழ்கின்ற திருமுருகன் பூண்டிமாநகரத்தில் உமது இடபம் காலொடியா திருந்தால் யாதுக்கு இவ்விடத்திருந்தீர் எம்பெருமானீரே.

(க-ரை.) திருமுருகன்பூண்டி இறைவரே, பீற்றலாடையுடுத்து முறட்டு வேடுவர் வாழ்கின்ற இவ்விடத்தில் எனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) மோறை - முறட்டுத்தனம். (4)

**தயங்குதோலையுடுத்தசங்கரசாமவேதமோதீ**
**மயங்கியூரிடுபிச்சைகொண்டுணுமார்க்கமொன்றறிவீர்**
**முயங்குபூண்முலைமங்கையாளொடுமுருகன்பூண்டிமாநகர்வா**
**யியங்கவுமிடுக்குடையராய்விடிலெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே**

(ப-ரை.) தயங்கு - விளங்குகிற, தோலை உடுத்தசங்கர - தோலுடுத்த சங்கரனே, சாமவேத மோதீ - சாமவேத மோதுவோனே, மயங்கி ஊரிடுபிச்சை கொண்டு - மயங்கி ஊராரிடுகிற பிச்சையேற்று, உண்ணும் மார்க்க மொன்று அறிவீர் - உண்ணும் வழியொன்றை யறிவீர், முயங்கு - தழுவுதற்குறிய, பூண்முலை மங்கையாளொடும் - உமாதேவியோடும், முருகன்பூண்டிமாநகர்வாய் - திருமுருகன்பூண்டிமாநகரத்தில், இயங்கவும் - சஞ்சரிக்கவும், மிடுக்கு உடையர் ஆய் விடின் - வலியுடையவராயின், எத்துக்கு இங்கு இருந்தீர் - யாதுக்கு இவ்விடத்திருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

(போ-ரை) விளங்குகிற தோலுடுத்த சங்கரனே, சாமவேதமோதுவோனே, மயங்கி ஊராரிடுகிற, பிச்சையேற்று உண்ணும் வழியொன்றை யறிவீர், தழுவுதற்குரிய உமாதேவியோடும் திருமுருகன் பூண்டிமாநகரத்தில் சஞ்சரிக்கவும் வலியுடையவராயின் யாதுக்கு இவ்விடத்திருந்தீர் எம்பெருமானீரே.

(க-ரை.) திருமுருகன்பூண்டி இறைவரே, ஊராரிடும் பிச்சையேற்றுண்ணும் வழியறிவீர், அங்ஙனமாக, உமாதேவியோடும் நீர் இக்கொடியோர் வாழிடத்தில் எனிருந்தீர் என்பதாம். (5)

**விட்டிசைப்பனகொக்கரைகொடுகொட்டிதத்தளகங்**
**கொட்டிப்பாடுமித்துந்துமியொடுகுடமுழாநீர்மகிழ்வீர்**
**மொட்டலர்ந்துமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வா**
**யிட்டபிச்சைகொண்டுண்பதாகில்நீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.**

(ப-ரை.) விட்டு - வாய்விட்டு, இசைப்பன-சத்திப்பனவாகிய, கொக்கரை - கொக்கரை, கொடுகொட்டி - கொடுகொட்டி, தத்தளகம் - தத்தளகம், கொட்டிப் பாடும்-கொட்டிப்பாடும், இத்துந்துமியொடு குடமுழா - இத்துந்துமியொடு குட முழா, (என்பவற்றை) நீர் மகிழ்வீர் - நீர் மெச்சுவீர், மொட்டு அலர்ந்து-மொட்டு விரிந்து, மணம் கமழ்-வாசனை வீசுகிற, முருகன்பூண்டி மாநகர்வாய் — திருமுரு கன்பூண்டிமாநகரத்தில், இட்டபிச்சைகொண்டு - ஊராரிடம் பிச்சையேற்று, உண்பதாகில் - உண்பதானுல், நீர் எத்துக்கு இங்கு இருந்தீர் - நீர் யாதுக்கு இவ்விடத்திருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

(பொ-ரை.) வாய்விட்டு சத்திப்பனவாகிய கொக்கரை கொடுகொட்டி தத் தளகம் கொட்டிப்பாடும் இத்துந்துமியொடு குடமுழா (என்பவற்றை) நீர் மெச் சுவீர், மொட்டு விரிந்து வாசனைவீசுகிற திருமுருகன் பூண்டிமாநகரத்தில் ஊரா ரிடம் பிச்சையேற்றுண்பதானுல், நீர் யாதுக்கு இவ்விடத்திருந்தீர் எம்பெருமா னீரே.

(க-ரை.) திருமுருகன்பூண்டி இறைவரே, ஊராரிடம் பிச்சையேற்றுண் டலைவிட்டு, இந்த வேடுவச்சேரியில் ஏனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) கொக்கரை - சங்குவிசேடம். கொடுகொட்டி முதலியவை கூத் தும் வாத்திய விசேடங்களும். மொட்டு - மொக்கு. (அரும்பு) (6)

**வேதமோதிவெண்ணீறுபூசிவெண்கோவணந்தற்றயலே**
**யோதமேவியவொற்றியூரையுமுந்திநீர்மகிழ்வீர்**
**மோதிவேடுவர்கூறைகொள்ளுமுருகன்பூண்டிமாநகர்வா**
**யேதுகாரணமேதுகாவல்கொண்டெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே**

(ப-ரை.) வேதம் ஓதி — வேதமோதாநின்று, வெண்ணீறுபூசி - வெண் பொடிபூசி, வெண்கோவணம்தற்று - வெண்கோவணத்தை யிறுக்கிக்கட்டி, அயலே - பக்கத்திலே, ஓதம் மேவிய-கடல் சூழ்ந்த, ஒற்றியூரையும் உந்தி - திரு வொற்றியூரையுமடைந்து, நீர்மகிழ்வீர்-நீர்மகிழாநின்றீர், வேடுவர்மோதி-வேடர் அடித்து, கூறைகொள்ளும் - ஆடைபறிக்கிற, முருகன் பூண்டிமாநகர்வாய் - திருமுருகன் பூண்டிமாநகரத்தில், ஏதுகாரணம் - என்னகாரணமாக, ஏதுகாவல் கொண்டு - எதைக்காவல்பூண்டு, எத்துக்கு இங்கு இருந்தீர் - யாதுக்கு இவ் விடத்து இருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

(பொ-ரை.) வேதமோதாநின்று வெண்பொடிபூசி, வெண்கோவணத்தை யிறுக்கிக்கட்டி, பக்கத்திலே கடல் சூழ்ந்த திருவொற்றியூரையுமடைந்து, நீர் மகி ழாநின்றீர், வேடர் அடித்து ஆடைபறிக்கிற திருமுருகன் பூண்டிமாநகரத்தில் என்னகாரணமாக எதைக் காவல்பூண்டு யாதுக்கு இவ்விடத்திருந்தீர் எம்பெரு மானீரே.

(க-ரை.) திருமுருகன்பூண்டி இறைவரே, வேடுவர் அடித்துக் கூறை பறிக்கு மிவ்விடத்தில் நீர் ஏனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) தற்றுதல் — இறுகவுடுத்தல். (7)

**படவரவுநுண்ணேரிடைப்பணைத்தோள்வரிநெடுங்கண்**
**மடவரலுமைநங்கைதன்னையோர்பாகம்வைத்துகந்தீர்**
**முடவரல்லீரிடரிலீர்முருகன்பூண்டிமாநகர்வா**
**யிடவமேறியும்போவதாகில்நீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.**

**(ப-ரை)** பட அரவு நுண்நேர் இடை - படப்பாம்புபோலும் நுண்ணிய நேர்ந்த இடையையும், பணைத்தோள் - மூங்கில்போலும் தோளினையும், வரி நெடுங்கண் - வரிபடர்ந்த நெடுங்கண்களையுமுடைய, மடவரல் - இளமைபொருந்திய, உமை நங்கை தன்னை - உமாதேவியை, ஓர் பாகம் வைத்து உகந்தீர்-ஒரு பக்கத்தில் வைத்துகந்தீர், முடவர் அல்லீர்-நீர் முடவரல்லீர், இடர் இலீர்-துன்பமில்லீர், முருகன் பூண்டிமாநகர் வாய் - திருமுருகன்பூண்டிமாநகரத்தில், இடவம் ஏறியும் போவதாகில் - எரு தேறியும் போவதானால், நீர் எத்துக்கு இங்கு இருந்தீர் - நீர் என் இங்கிருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

**(போ-ரை.)** படப்பாம்புபோலும் நுண்ணியநேர்ந்த இடையையும் மூங்கில் போலுந் தோளினையும் வரிபடர்ந்த நெடுங்கண்களையுமுடைய இளமைபொருந்திய உமாதேவியை ஒருபக்கத்தில் வைத்துகந்தீர், நீர் முடவரல்லீர், துன்பமில்லீர், திருமுருகன்பூண்டிமாநகரத்தில் எருதேறியும் போவதானால், நீர் என் இங்கிருந்தீர் எம்பெருமானீரே.

**(க-ரை.)** திருமுருகன்பூண்டி இறைவரே, நீர் இடபமேறி எங்கேனும் போகவல்லீராயிருக்க, இங்கு ஏனிருந்தீர் என்பதாம்.

**(வி-ரை)** இடவம்- இடபம். (8)

**சாந்தமாகவெண்ணீறுபூசிவெண்பற்றலைகலனு**
**வேய்ந்தவெண்பிறைக்கண்ணிதன்னையோர்பாகம்வைத்துகந்தீர்**
**மோந்தையோடுமுழக்கறுமுருகன்பூண்டிமாநகர்வா**
**யேந்துபூண்முலைமங்கைதன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.**

**(ப-ரை.)** சாந்தம் ஆக - அமைதியாக, வெண்ணீறு பூசி - திருவெண்ணீற்றை யணிந்து, வெண்பல்தலை - வெண்பல்லோடு கூடிய தலையை, கலன் ஆ - பாத்திரமாகப் பொருந்திய, வெண்பிறைக் கண்ணி தன்னை - வெண்பிறை மாலையை யுடையவளாகிய உமாதேவியை, ஓர் பாகம் வைத்து உகந்தீர் - ஒரு பாகத்தில் வைத்து மகிழ்ந்தீர், மோந்தையோடு - மோந்தை வாத்தியத்துடன், முழக்கு அறு-முழக்கம் இடையறாத, முருகன்பூண்டிமாநகர்வாய்-திருமுருகன் பூண்டிமாநகரத்தில், ஏந்து பூண் முலை மங்கை தன்னொடும்-உமாதேவியோடும், எத்துக்கு இங்கு இருந்தீர் -என் இங்கிருந்தீர், எம்பிரானீரே - எம்பெருமானீரே எ-று.

**(போ-ரை.)** அமைதியாக திருவெண்ணீற்றை யணிந்து வெண்பல்லோடு கூடிய தலையைபாத்திரமாகப்பொருந்திய வெண்பிறைமாலையை யுடையவளாகிய

உமாதேவியை ஓர் பக்கத்தில்வைத்து மகிழ்ந்தீர், மோந்தை வாத்தியத்துடன் முழக்கம் இடையறாத திருமுருகன்பூண்டிமா நகரத்தில் உமாதேவியோடும் என் இங்கிருந்தீர் எம்பெருமானீரே.

(க-ரை.) திருமுருகன்பூண்டி இறைவரே, நீர் உமாதேவியோடும் இந்தத் தகாத இடத்தில் எனிருந்தீர் என்பதாம்.

(வி-ரை.) கலன் - பிக்ஷாபாத்திரம். ஓர் பாகம் - ஓரிடம். மொந்தை - ஒரு கட்பறை. இது நீட்டல் விகாரம்பெற்று மோந்தையென்றாயிற்று. (9)

**முந்திவானவர்தாக்தொழுமுருகன்பூண்டிமாநகர்வாய்ப்**
**பந்தணைவிரற்பாவைதன்னையோர்பாகம்வைத்தவனைச்**
**சிந்தையிற்சிவத்தொண்டனூரனுரைத்தனபத்துங்கொண்**
**டெந்தம்மடிகளையேத்துவாரிடரொன்றுந்தாமிலரே.**

(ப-ரை.) வானவர் - தேவர், முந்திதொழும் - முற்பட்டுவணங்குகிற, முருகன் பூண்டிமாநகர்வாய் - திருமுருகன் பூண்டிமாநகரத்தில், பந்து அணைவிரல் பாவை தன்னை - உமாதேவியை, ஓர் பாகம் வைத்தவனை - ஒருபாகத்திலிருத்திக் கொண்டவனை, சிந்தையின்-மனப்பூர்வகமாக, சிவ தொண்டன் ஊரன் - சுந்தரன், உரைத்தன - சொன்னவையாகிய, பத்தும் கொண்டு - பத்துப் பாடலுங் கொண்டு, எந்தம் அடிகளை - எமது சுவாமியை, எத்துவார் - துதிப்பவர், தாம் இடர் ஒன்றும் இலர் - தாம் துன்பமொன்று மில்லாதவராவர் எ-று.

(பொ-ரை.) தேவர் முற்பட்டு வணங்குகிற திருமுருகன் பூண்டிமாநகரத்தில் உமாதேவியை ஒரு பாகத்திலிருத்திக் கொண்டவனை, மனப்பூர்வகமாக சுந்தரன் சொன்னவையாகிய பத்துப்பாடலுங்கொண்டு எமது சுவாமியை துதிப்பவர் தாம் துன்பமொன்று மில்லாதவராவர்.

(க-ரை.) திருமுருகன் பூண்டி யிறைவனை, திருநாவலூரா னுரைத்த இந்தப் பத்துப் பாட்டுக்களைக்கொண்டு துதிப்பவர் துன்பஞ் சிறிது மிலராவர் என்பதாம்.

கழறிற்றறிவாரென்னுஞ் சேரமான்பெருமாணயனார்கொடுத்த திரவியங்களை பரிசனங்கள் தலையில் எடுப்பித்துக்கொண்டு திருமுருகன் பூண்டிக்குச் சமீபத்தில் எழுந்தருளும்போது பரமசிவத்தின்கட்டளையினால் பூதங்கள் வேடுவர்களாகி வந்து அந்தப் பரிசனங்களை அடித்துப் பொருள்களைப் பறித்துப் போயின. அப்போது சுந்தரமூர்த்திசுவாமிகள் இந்தப் பதிகமோதிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டனர். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆவுடைநாயகர். தேவியார் - ஆவுடைநாயகியம்மை.

# திருப்புனவாயில்

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**சித்தநீநினையென்னொடுசூளுறும்வைகலு**
**மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்**
**பத்தர்தாம்பலர்பாடிநின்றாடும்பழம்பதி**
**பொத்திலாந்தைகள்பாட்டறாப்புனவாயிலே.**

(ப-ரை.) வைகலும் - நாள்தோறும், என்னொடு சூளுறும் - என்னோடு சூளுறுகின்ற, மத்தயானையின் - மதயானையின், ஈர் - குளிர்ந்த, உரிபோர்த்த - தோலைப் போர்த்துக்கொண்ட, மணாளன் - மணவாளனது, ஊர் - ஊரானது, பத்தர் பலர்பாடி நின்று ஆடும் பழம்பதி - அன்பர் பலர் பாடிநின்று ஆடும் பழமையான திருப்பதியாகிய, பொத்தில்-மரப்பொந்துகளில், ஆந்தைகள் பாட்டு - ஆந்தைகள் பாடும் பாட்டு, அறா - இடையறாத, புனவாயில் - திருப்புனவாயிலை, சித்தம் - மனமே, நீ நினை - நீ நினைக்கக்கடவை எ-று.

(பொ-ரை.) நாள்தோறும் என்னோடு சூளுறுகின்ற மதயானையின் குளிர்ந்த தோலைப் போர்த்துக்கொண்ட மணவாளனது ஊரானது, அன்பர் பலர் பாடி நின்று ஆடும் பழமையான திருப்பதியாகிய, மரப்பொந்துகளில் ஆந்தைகள் பாடும்பாட்டு இடையறாத திருப்புனவாயிலை, மனமே நீ நினைக்கக்கடவை.

(கு-ரை.) மனமே, மதயானையின் தோலைப் போர்த்துக்கொண்ட மணாளனது ஊரானது திருப்புனவாயிலேயாம். ஆதலால், அதனை நீ நினைக்கக்கடவையென்பதாம்.

(வி-ரை.) பொத்து பொந்து என்பதன் விகாரம். ஆந்தைகள் பாடுமியல்பிலவாதலால் பாட்டு என்றது அவை குழறுதலை. (1)

**கருதுநீமனமென்னொடுசூளுறும்வைகலும்**
**எருதுமேற்கொளுமெம்பெருமாற்கிடமாவது**
**மருதவாணர்வைகும்மிடம்மறவேடுவர்**
**பொருதுசாத்தொடுபூசலறாப்புனவாயிலே.**

(ப-ரை.) வைகலும் என்னொடு சூளுறும் - தினந்தோறும் என்னுடன் சபதஞ்செய்கிற, எருது மேற்கொளும் - எருதேறுகிற, எம் பெருமாற்கு - எம் பெருமானுக்கு, இடம் ஆவது - இடமாயிருப்பது, மருதவாணர் - மருதவாணர், வைகும் இடம்-வசிக்கும் இடமாகிய, மறவேடுவர் பொருது-கோவத்தையுடைய வேடர் போரிட்டு, சாத்தொடு பூசல்-சாவத்தொடங்குகிற சத்தம், அறா - இடையறாத, புனவாயில் - திருப்புனவாயிலை, மனம் - என்மனமே, நீ கருது - நீ நினைக்கக்கடவை எ-று.

(போ-ரை.) தினந்தோறும் என்னுடன் சபதஞ்செய்கிற, எருதேறுகிற எம் பெருமானுக்கு இடமாயிருப்பது, மருதவாணர் வசிக்குமிடமாகிய கோவத்தையுடைய வேடவேர் போரிட்டு சாவத்தொடங்குகிற சத்தம் இடையறாத, திருப்புனவாயிலே என் மனமே, நீ நினைக்கக்கடவை.

(க-ரை.) மனமே, இடபவாகனனாகிய சிவபெருமானது இடமாகிய திருப்புனவாயிலை நீ நினைக்கக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) மருதவாணர் — மருதநிலத்து வாழ்வோர். மறம் - கோவம். பொருதல் - சண்டைசெய்தல். பூசல் - சண்டை, ஆரவாரம் எனினுமாம். (2)

**தொக்காயமனமென்னொடுசூளுறும்வைகலு**
**நக்கானமையாளுடையானவிலும்மிடம்**
**அக்கோடரவார்த்தபிரானடிக்கன்பராய்ப்**
**புக்காரவர்போற்றொழியாப்புனவாயிலே.**

(ப-ரை.) தொக்கு ஆய மனம் - (என்னொடு) சம்பந்தப்பட்ட மனமானது, என்னொடு சூளுறும் - என்னோடு சபதஞ்செய்யும், வைகலும் - நாள்தோறும், நக்கான்-நக்கன், நம்மை ஆளுடையான் - எம்மையாளாகவுடையவன், நவிலும் இடம் - பழகும் இடம், அக்கோடு அரவு ஆர்த்தபிரான் - சங்குமணியோடு பாம்பையும் தரித்த பெருமானது, அடிக்கு அன்பராய் - திருவடிக்கு அன்பராய், புக்கார் அவர் - அடைந்தவரது, போற்று ஒழியா - வழிபாடொழியாத, புனவாயிலே - திருப்புனவாயிலேயாம் எ-று.

(போ-ரை.) என்னொடு சம்பந்தப்பட்ட மனமானது, என்னொடு சபதஞ்செய்யும், நாள்தோறும் நக்கன், எம்மை யாளாகவுடையவன், பழகுமிடம் சங்குமணியோடு பாம்பையும் தரித்த பெருமான் திருவடிக்கு அன்பராய் அடைந்தவரது வழிபாடொழியாத திருப்புனவாயிலேயாம்.

(க-ரை.) மனமே, எம்மையாளுடையானாகிய சிவபெருமானுக் கிடமாகிய திருப்புனவாயிலை கருதுவாயாக என்பதாம்.

(வி-ரை.) நக்கன் நக்கான் என நீட்டல் பெற்றது. இது நக்கன் என்னும் வடசொற்றிரிபு. திகம்பரனென்பது பொருள். அக்கு - சங்குமணி. ஆர்த்த - கட்டின. போற்று - போற்றல், இது முதனிலைத் தொழிற்பெயர். (3)

**வற்கென்றிருத்திகண்டாய்மனமென்னொடுசூளுறும்வைகலும்**
**பொற்குன்றஞ்சேர்ந்ததோர்காக்கைபொன்னாமதுவேபுகல்**
**கற்குன்றுந்தூறுங்கடுவெளியுங்கடற்கானல்வாய்ப்**
**புற்கென்றுதோன்றிடுமெம்பெருமான்புனவாயிலே.**

(ப-ரை.) மனம்-மனமே, வற்கென்று இருத்தி-சும்மா இருக்கக்கடவாய், வைகலும் - நாள்தோறும், என்னொடு சூளுறும் - என்னோடு சபதஞ்செய்யும், பொற் குன்றம் சேர்ந்தது ஓர் காக்கை - பொன்மலையைச்சேர்ந்த வொருகாகம்,

பொன் ஆம் - பொன்னிறமேயாகிற, அதுவே - அத்தன்மையேயாம், கல் குன்றும் தூறும் கடுவெளியும் - கல்மலையும் புதலும் கடுஞ்சுரமும், கடல் கானல் வாய் - கடற்கரைச் சோலையினிடத்து, புற்கென்று தோன்றிடும் - அந்திநிறம் போலக் காணப்படுகிற, எம் பெருமான் - எம் பெருமானது, புனவாயிலே - திருப்புனவாயிலேயாம்.

(பொ-ரை.) மனமே, சும்மாவிருக்கக்கடவாய், நாள்தோறும் என்னோடு சபதஞ்செய்யும், பொன்மலையைச்சேர்ந்த வொருகாகம் பொன்னிறமேயாகிற, அத்தன்மையேயாம், கல்மலையும் புதலும் கடுஞ்சுரமும் கடற்கரைச் சோலையினிடத்து அந்திநிறம்போலக் காணப்படுகின்ற எம்பெருமானது திருப்புனவாயிலேயாம்.

(க-ரை.) மனமே, எம்பெருமானது திருப்புனவாயிலைக் கருதாநின்று நீ சும்மா இரு என்பதாம்.

(வி-ரை.) வற்கென்றிருத்தல் - சும்மாவிருத்தல். தூறு - புதல். கடற்கானல் - கடலையடுத்த கழிக்கரைச் சோலை. வாய் - இடம். (4)

**நில்லாய்மனமென்னொடுசூளுறும்வைகலும்**
**நல்லானமையாளுடையானவிலும்மிடம்**
**வில்வாய்க்கணைவேட்டுவராட்டவெருண்டுபோய்ப்**
**புல்வாய்க்கணம்புக்கொளிக்கும்புனவாயிலே.**

(ப-ரை.) நில்லாய்மனம் - நில்லாயாகிய மனமே, வைகலும் – தினந்தோறும், என்னொடு சூளுறும் - என்னோடு சபதஞ்செய்யும், நல்லான்–நல்லோன், நம்மை ஆளுடையான்-எம்மை யடிமையாயுடையவன், நவிலும் இடம் - பழகுமிடம், வில்வாய்க்கணை - வில்லில் தொடுத்த அம்புகளால், வேட்டுவர் ஆட்ட - வேடுவர் அலைக்க, வெருண்டுபோய் - அஞ்சிச் சென்று, புல்வாய்கணம் - மான் கூட்டங்கள், ஒளிக்கும்-ஒளித்துக்கொள்ளுகிற, புனவாயிலே - திருப்புனவாயிலேயாம் எ-று.

(பொ-ரை.) நில்லாயாகிய மனமே, தினந்தோறும் என்னோடு சபதஞ்செய்யும் நல்லோன், எம்மை யடிமையாயுடையவன் பழகுமிடம், வில்லில் தொடுத்த அம்புகளால் வேடுவர் அலைக்க, அஞ்சிச்சென்று, மான் கூட்டங்கள் ஒளித்துக்கொள்ளுகிற திருப்புனவாயிலேயாம்.

(க-ரை) மனமே, நம்மை யாளுடையானாகிய சிவபெருமானது இடமாகிய திருப்புனவாயிலை நீ கருதுவாயாக வென்பதாம்.

(வி-ரை.) வில்வாய் என்பதில் வாய் ஏழனுருபு. வெருளல் - அஞ்சல். ()

**மறவல்நீமனமென்னொடுசூளுறும்வைகலு**
**முறவுமூழியுமாயபெம்மாற்கிடமாவது**
**பிறவுகள்ளியினீள்கவட்டேறித்தன்பேடையைப்**
**புறவங்கூப்பிடப்பொன்புனஞ்சூழ்புனவாயிலே.**

(ப-ரை.) மனம் - மனமே, நீ மறவல்-நீ மறவாதே, வைகலும் - நாள்தோறும், என்னொடு சூளுறும் - என்னோடு சபதஞ்செய்யும், உறவும் ஊழியும் ஆய பெம்மாற்கு—, இடமாவது - இடமாயிருப்பது, பிறவு கள்ளியின் நீள்கவட்டு ஏறி—, தன் பேடையை-தன்பெட்டையை, புறவு கூப்பிட-புறாக்கூவ, பொன் புனம் சூழ் - அழகிய புனம்சூழ்ந்த, புனவாயிலே - திருப்புனவாயிலேயாம் எ-று.

(போ-ரை.) மனமே, நீ மறவாதே, நாள்தோறும் என்னோடு சபதஞ்செய்யும் உறவும் உழியும் ஆய பெம்மாற்கு, இடமாயிருப்பது பிறவு கள்ளியின் நீள் கவட்டு ஏறி, தன் பெட்டையை புறாக்கூவ அழகிய புனம் சூழ்ந்த திருப்புனவாயிலேயாம்.

(க-ரை.) மனமே, எமக்கு உறவு முதலியவாயிருக்கிற எம்பெருமானுக்கிடமாகிய திருப்புனவாயிலை நீ மறவாமல் கருதுவாயாக வென்பதாம்.

(வி-ரை.) உழி - இடம், (ஆதாரம்.) பிறவு - உற்பத்தி. கவடு - கிளை. புறவம் - புறா. (6)

ஏசற்றுநீநினையென்னொடுசூளுறும்வைகலும்
பாசற்றவர்பாடிநின்றாடும்பழம்பதி
நேசத்தடியவர்வந்திருபோதும்வணங்கிடப்
பூசற்றுடிப்பூசலறாப்புனவாயிலே.

(ப-ரை.) வைகலும் - நாள்தோறும், என்னொடு சூளுறும் - என்னோடு சபதஞ்செய்யும், நீ - நீ, ஏசற்று - துன்பமற்று, நினை - நினைக்கக்கடவை, பாசு அற்றவர் - பாசமற்றவர், பாடி நின்று ஆடும் பழம் பதி - பாடிநின்று ஆடுகிற பழமையான திருப்பதி, அடியர்-அடியார், நேசத்து - அன்புடனே, இருபோதும், வந்து வணங்கி - இருபொழுதும் வந்து தொழுது, பூசல் - பேரொலியையுடைய, துடி பூசல் அறா-துடியின் முழக்கம் இடையறாத, புனவாயிலே-திருப்புனவாயிலேயாம் எ-று.

(போ-ரை.) நாள்தோறும் என்னோடு சபதஞ்செய்யும் நீ துன்பமற்று நினைக்கக்கடவை, பாசமற்றவர் பாடி நின்று ஆடுகிற பழமையான திருப்பதி, அடியார் அன்புடனே இருபொழுதும் வந்து தொழுது பேரொலியை யுடைய துடியின் முழக்கம் இடையறாத திருப்புனவாயிலேயாம்.

(க-ரை.) மனமே, அடியார் பாடியாடும் பழம்பதியாகிய திருப்புனவாயிலை நீ நினைக்கக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) பாசமற்றவர் என்பது பாசற்றவர் என்றாயிற்று விகாரவகையால். இருபோது - காலைமாலை. துடி - ஓர் வாச்சியம். (7)

கொள்ளிவாயினகூரெயிற்றேனங்கிழிக்கவே
தெள்ளிமாமணிதீவிழிக்குமிடஞ்செந்தறை
கள்ளிவற்றிப்புற்றீந்துவெங்கானங்கழிக்கவே
புள்ளிமானினம்புக்கொளிக்கும்புனவாயிலே.

(ப-ரை.) கொள்ளி வாயின - கொள்ளி வாயினை யுடையனவாகிய, கூர் எயிறு ஏனம் கிழிக்க-கூரிய பற்களையுடைய பன்றிகண் பிளக்க, மாமணி-உயர்ந்த ரத்நங்கள், தெள்ளி - தெளிக்கப்பட்டு, தீவிழிக்கும் இடம் - தீப்போல் விழிக்கிற இடமாவது, செந்தறை - செந்நிலத்தில், கள்ளிவற்றி - கள்ளிச்செடிகளுலர்ந்து, புல்தீந்து - புல்கருகி, வெம்கானம் கழிக்க - கடுங்காட்டைக் கடக்க, புள்ளிமான் இனம்-புள்ளிமான் கூட்டம், புக்கு ஒளிக்கும்-போய் மறைகின்ற, புனவாயிலே - திருப்புனவாயிலேயாம் எ-று.

(பொ-ரை.) கொள்ளிவாயினை யுடையனவாகிய கூரிய பற்களையுடைய பன்றிகண் பிளக்க, உயர்ந்த ரத்நங்கள், தெளிக்கப்பட்டு, தீப்போல் விழிக்கிற இடமாவது, செந்நிலத்தில் கள்ளிச்செடிகளுலர்ந்து புல்கருகி கடுங்காட்டைக் கடக்க புள்ளிமான் கூட்டம் போய் மறைகின்ற திருப்புனவாயிலேயாம்.

(க-ரை.) மனமே, எம் பெருமானது திருப்புனவாயிலை நீ கருதுவாயாக வென்பதாம்.

(வி-ரை.) தறை - தரை. "தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ" என்றார் பிறரும். (8)

எற்றேநினையென்னொடுசூளுறும்வைகலும்
மற்றேதும்வேண்டாவல்வினையாயினமாய்ந்தறக்
கற்றூறுகாராக்காட்டிடைமேய்ந்தகார்க்கோழிபோய்ப்
புற்றேறிக்கூகூவெனவழைக்கும்புனவாயிலே.

(ப-ரை.) வைகலும் - நாள்தோறும், என்னொடு சூளுறும் - என்னோடு சபதஞ்செய்யும், (மனமே) எற்றே நினை - எவ்வகையாலேனும் நினைக்கக் கடவை, மற்று ஏதும் வேண்டா - வேறு யாதும் வேண்டா, வல்வினையாயின அறமாய்ந்து - வலிய வினைகளானவை முழுதும் நசித்து, கல் தூறு - கற்றூறு களில் மேயுங், காரா-கரும்பசு, காட்டிடைமேய்ந்த கார்க்கோழி - காட்டில்மேய்ந்த கருங்கோழி, போய் - சென்று, புற்று ஏறி - புற்றின்மேலேறி, கூ கூ என அழைக்கும் - கூ கூ வென்று கூவுகிற, புனவாயிலே - திருப்புனவாயிலேயாம் எ - று.

(பொ-ரை.) நாள்தோறும் என்னோடு சபதஞ்செய்யும், (மனமே) எவ்வகையாலேனும் நினைக்கக்கடவை, வேறு யாதும் வேண்டா, வலிய வினைகளானவை முழுதும் நசித்து கற்றூறுகளில் மேயுங் கரும்பசு, காட்டில்மேய்ந்த கருங்கோழிசென்று, புற்றின்மேலேறி கூ கூ வென்று கூவுகிற திருப்புனவாயிலேயாம்.

(க-ரை.) மனமே, எம்பிரானது திருப்புனவாயிலை நீ கருதுவாயாக வென்பதாம். (9)

(வி-ரை.) அழைத்தல் - கூவுதல்.

**பொடியாடுமேனியன்பொன்புனஞ்சூழ்புனவாயிலை**
**யடியாரடியன்னுவலூரனுரைத்தன**
**மடியாதுகற்றிவையேத்தவல்லார்வினைமாய்ந்துபோய்க்**
**குடியாகப்பாடிநின்றாடவல்லார்க்கில்லைகுற்றமே.**

**(ப-ரை.)** பொடி ஆடும் – நீறு பூசப்பட்ட, மேனியன் - திருமேனியையுடையவனது, பொன்-அழகிய, புனம் சூழ்-புனம் சூழ்ந்த, புனவாயிலை-திருப்புனவாயிலை, அடியார் அடியன் நாவலூரன் - சுந்தரன், உரைத்தன - சொன்ன பாடல்களை, மடியாது-சோம்பாது, கற்று-கற்று, இவை ஏத்தவல்லார்-இவற்றைத் துதிக்கவல்லவர், வினைமாய்ந்து போய் - வினை யொழிந்து சென்று, குடியாகப் பாடிநின்று ஆட வல்லார்க்கு-குடியாயிருந்து பாடி நின்றாட வல்லவர்க்கு, குற்றம் இல்லை - ஒரு தீங்குமில்லை எ-று.

**(போ-ரை.)** நீறு பூசப்பட்ட திருமேனியையுடையவனது, அழகிய புனம் சூழ்ந்த திருப்புனவாயிலை, அடியாரடியன் நாவலூரன் சுந்தரன் சொன்ன பாடல்களை சோம்பாதுகற்று, இவற்றால் துதிக்க வல்லவர், வினையொழிந்துசென்று, குடியாயிருந்து பாடி நின்றாட வல்லவர்க்கு ஒரு தீங்குமில்லை.

(க-ரை.) சிவபெருமானது திருப்புனவாயிலை நாவலூரன் உரைத்த இந்தப் பத்துப் பாடலும் பாடி நின்றாடவல்லார்க்கு குற்றமில்லை யென்பதாம்.

(வி-ரை.) மடிதல் - சோம்புதல். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - புனவாயிலீசுவரர். தேவியார் - கருணையீசுவரியம்மை.

---

## திருவாரூர்

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**பத்திமையுமடிமையையுங்கைவிடுவேன்பாவியேன்**
**பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழுவேன்**
**முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்**
**எத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) பத்திமையும் அடிமையையும்-பத்திசெய்தலையும் தொண்டுசெய்தலையும், கைவிடுவேன் - கைவிடுவேனாகிய பாவியேன் - பாவியாகிய நான், பொத்தினநோயது இதனை-என்னை மூடின நோயாகிய இதனது, பொருள் அறிந்தேன்-மெய்ம்மையை யுணர்ந்தேன், முத்தினை-முத்தை, மாமணிதன்னை-மாணிக்கத்தை, வயிரத்தை - வச்சிரத்தை, மூர்க்கனேன் - மூர்க்கனாகிய நான், என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப்பெருமானை, எத்தனைநாள் பிரிந்திருக்கேன் - எத்தனைநாள் பிரிந்திருக்கவல்லேன், (இனி) போய்த்தொழுவேன்-இனிச்சென்று வணங்குவேன் எ-று.

(பொ-ரை.) பத்தி செய்தலையும் தொண்டு செய்தலையும் கைவிடுவேனாகிய பாவியாகிய நான் என்னை மூடின நோயாகிய இதனது மெய்ம்மையை யுணர்ந்தேன், முத்தை, மாணிக்கத்தை, வச்சிரத்தை, மூர்க்கனாகிய நான் என் ஆரூர்ப்பெருமானை, எத்தனைநாள் பிரிந்திருக்கவல்லேன், இனிச் சென்று வணங்குவேன்.

(க-ரை.) திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் எம்மிறைவனை, எத்தனை நாள் பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) பொருள் - உண்மை. (1)

**ஐவணமாம்பகழியுடையடல்மதனன்பொடியாகச்**
**செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி**
**மையணவுகண்டத்துவளர்சடையெம்மாரமுதை**
**யெவ்வணம்நான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) ஐவண்ணம் ஆம் - ஐந்து வகையாகிய, பகழி உடை-பாணங்களையுடைய, அடல்மதனன் - வலிமிகுந்த மன்மதன், பொடியாக - நீறாக, செவ்வண்ணம் ஆம் - செந்நிறமாகிய, திருநயனம் - திருக்கண்ணை, விழிசெய்த - விழித்த, சிவமூர்த்தி - மங்களரூபி, மை அணவு கண்டத்து - கருநிறம் பொருந்திய கண்டத்தையும், வளர்சடை-நீண்ட சடையையுமுடைய, எம் ஆர்அமுதை-எமது ஆராவமிர்தத்தை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப் பெருமானை, எவ்வண்ணம் நான் பிரிந்திருக்கேன் - எவ்வாறு நான் பிரிந்திருக்க வல்லேன் எ-று.

(பொரை.) ஐந்து வகையாகிய பாணங்களையுடைய வலிமிகுந்த மன்மதன் நீறாக, செந்நிறமாகிய திருக்கண்ணை விழித்த மங்களரூபி, கருநிறம்பொருந்திய கண்டத்தையும் நீண்ட சடையையுமுடைய எமது ஆராவமிர்தத்தை, என் ஆரூர்ப்பெருமானை, எவ்வாறு நான் பிரிந்திருக்கவல்லேன்.

(க-ரை.) பஞ்சபாணனாகிய மன்மதனை யெரித்தல் முதலியவற்றைச் செய்த திருவாரூரிறைவனை நான் எப்படி பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) விழிசெய்த ஒரு சொல். ஆரமுது-அருமையாகிய அமிர்தமுமாம். ஐவண்ணமாம் பகழியென்றது ஐவகையாகிய புஷ்பபாணங்களை. அவையாவன:- தாமரைமலர், அசோகமலர், மாமலர், முல்லைமலர், நீலமலர் என்பன. (2)

**சங்கலைக்குந்தடங்கடல்வாய்விடஞ்சுடவந்தமரர்தொழ**
**அங்கலக்கண்டீர்த்தவ்விடமுண்டுகந்தவம்மானை**
**யிங்கலக்குமுடற்பிறந்தவறிவிலியேன்செறிவின்றி**
**யெங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) சங்கு அலைக்கும்-சங்குகளை யெறிகிற, தடம்கடல் வாய்-பெரிய கடலினிடத்தே தோன்றின, விடம்சுட-நஞ்சு சுடுதலால், வந்து அமரர்தொழ - தேவர் வந்து வணங்க, அங்கு - அப்பொழுதே, அலக்கண் (அவர்களது) துன்பத்தை, தீர்த்து - ஒழித்து, அவ்விடம்-அந்த நஞ்சை, உண்டு உகந்த அம்மானை- உண்டுகளித்த எமது தந்தையை, என் ஆரூர் இறைவனை-என் ஆரூர்ப் பெருமானை, இங்கு - இவ்வுலகில், உலக்கும்-அழிந்துபோகிற, உடல்-உடம்போடு பிறந்த, அறிவிலியேன் - அறிவிலியாகிய நான், செறிவு இன்றி - அடக்கமில்லாமல், எங்கு உலக்கப்பிரிந்திரிக்கேன் - எவ்வாறு நீங்கிப் பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) சங்குகளை யெறிகிற பெரிய கடலினிடத்தே தோன்றின நஞ்சுசுடுதலால் தேவர்வந்து வணங்க, அப்பொழுதே (அவர்களது) துன்பத்தை தீர்த்து, அந்த நஞ்சை உண்டு களித்த எமது தந்தையை, என் ஆரூர்ப் பெருமானை, இவ்வுலகில் அழிந்துபோகிற உடம்போடு பிறந்த அறிவிலியாகிய நான் அடக்கமில்லாமல் எவ்வாறு நீங்கிப் பிரிந்திருப்பேன்.

(க-ரை.) கடல் விடமுண்டு தேவரைக் காத்தருளின திருவாரூர் இறைவனை நான் எப்படி விட்டுப் பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) சங்கலக்கும் என்றும் பாடம். கடல்வாய் என்பதில் வாய் ஏழனுருபு. கடலில் தோன்றின என்றுரைத்தலுமாம். அமரர் - இறவாதவர் இறப்பவரை இங்ஙனங் கூறியது மங்கலவழக்கு. உலத்தல் - கெடுதல். (3)

**இங்ஙனம்வந்திடர்ப்பிறவிப்பிறந்தயர்வேனயராமே**
**யங்ஙனம்வந்தெனையாண்டவருமருந்தென்னாரமுதை**
**வெங்கனன்மாமேனியனைமான்மருவுங்கையானை**
**யெங்ஙனம்நான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) இங்ஙனம் - இவ்விடத்தில், வந்து-வந்து, இடர்ப்பிறவி பிறந்து - துன்பப் பிறவி பிறந்து, அயர்வேன் - தளர்வேன், அயராமே - தளராமல், அங்ஙனம் வந்து என்னை ஆண்ட - அவ்விடத்து வந்து என்னை யாண்டருளின, அருமருந்து - அருமருந்தாகிய, என் ஆர் அமுதை - என் அரிய அமிர்தத்தை, வெம்கனல்மாமேனியனை-கொடியநெருப்புப்போலுந்திருமேனியையுடையவனை

மான்மருவும் கையானை - மானேந்திய கையையுடையவனை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப் பெருமானை, எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன் - எவ்வாறு நான் பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) இவ்விடத்தில் வந்து துன்பப் பிறவிபிறந்து தளர்வேன், தளராமல் அவ்விடத்து வந்து என்னை யாண்டருளின அருமருந்தாகிய என் அமிர்தத்தை, கொடிய நெருப்புப்போலுந் திருமேனியையுடையவனை, மானேந்திய கையையுடையவனை, என் ஆரூர்ப்பெருமானை, எவ்வாறு நான் பிரிந்திருப்பேன்.

(க-ரை.) இவ்விடத்தில்வந்து பிறந்து துன்புறுகின்ற என்னைத் தடுத்தாண்ட என்னாரூரிறைவனை நான் எப்படிப் பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) அயர்தல்-தளர்தல். அங்ஙனம்-அவ்விடம். அதாவது திருவெண்ணெய் நல்லூர். (4)

**செப்பரியவயனொடுமால்சிந்தித்துந்தெரிவரிய**
**அப்பெரியதிருவினையேயறியாதேயருவினையேன்**
**ஒப்பரியகுணத்தானையிணையிலியையணைவின்றி**
**யெப்பரிசுபிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) செப்பு அரிய-சொல்லுதற்கரிய, அயனொடுமால்-பிரமனோடு விட்டுணுவும், சிந்தித்தும் தெரிவு அரிய-நினைத்தும் தெரிவரிய, அ-அந்த, பெரிய திருவினை-பெருஞ்செல்வத்தை, ஒப்பு அரிய குணத்தானை-நிகரில்லாத குணத்தையுடையவனை, இணையிலியை - இணையற்றவனை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப் பெருமானை, அருவினையேன்-தொலைத்தற்கரிய வினையையுடைய நான், அறியாதே - அறியாமல், அணைவு இன்றி-சேராமல், எப்பரிசு-எவ்விதமாக, பிரிந்திருக்கேன் - பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) சொல்லுதற்கரிய பிரமனோடு விட்டுணுவும் நினைத்தும் தெரிவரிய அந்த பெருஞ்செல்வத்தை, நிகரில்லாத குணத்தை யுடையவனை, இணையற்றவனை, என் ஆரூர்ப்பெருமானை, தொலைத்தற்கரிய வினையையுடைய நான் அறியாமல் எவ்விதமாக பிரிந்திருப்பேன்.

(க-ரை.) அயன்மால் என்பவர்கட்கும் அறிவரிய திருவாரூரிறைவனை யடையாமல், நான் எப்படி பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) அயன் அஜன்என்னும் வடசொற்றிரிபு. பிறவாதவன் என்பது பொருள். இது மங்கலவழக்கு. திரு - செல்வம். அணைவு - அடைதல். (5)

**வன்னாகங்காண்வரைவிலங்கிகணையரிபகழி**
**தன்னாகமுறவாங்கிப்புரமெரித்ததன்மையனை**
**முன்னாகநினையாதமூர்க்கனேனாக்கைசுமந்**
**தென்னாகப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) வல் நாகம் நாண்-வலிய பாம்பு நாண், வரைவில் - மலையேவில், அங்கிகணை - நெருப்பே அம்பு, அரிபகழி-விட்டுணுவே அம்புநுனி, தன் ஆகம் உற-தன் மார்பிற்பட, வாங்கி-(வில்லை) வளைத்து, புரம் எரித்த தன்மையனை - முப்புரமெரித்த கோவ குணத்தையுடையவனை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப்பெருமானை, முன்னுகை நினையாத மூர்க்கனேன்-முன்னமே நினைக்காத மூர்க்கனாகிய நான், ஆக்கை சுமந்து-உடம்பைச் சுமந்து, என்னுகப் பிரிந்திருக்கேன் - எவ்வாறாகப் பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) வலிய பாம்பு நாண், மலையே வில், நெருப்பே அம்பு, விட்டுணுவே அம்புநுனி தன் மார்பிற்பட (வில்லை) வளைத்து, முப்புரமெரித்த கோவ குணத்தையுடையவனை, என் ஆரூர்ப்பெருமானை, முன்னமே நினைக்காத மூர்க்கனாகிய நான் உடம்பைச் சுமந்து எவ்வாறாகப் பிரிந்திருப்பேன்.

(கு-ரை.) திரிபுராந்தகனாகிய திருவாரூ ரிறைவனை, மூர்க்கனாகிய நான எப்படி பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) வல்நாகம் என்றது ஆதிசேடனை. (6)

வன்சயமாயடியான்மேல்வருங்கூற்றினுரங்கிழிய
முன்சயமார்பாதத்தால்முனிந்துகந்தமூர்த்திதனை
மின்செயும்வார்சடையானைவிடையானையடைவின்றி
யென்செயநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

(ப-ரை.) வன்சயமாய் - வலிய வெற்றியுடையவனாய், அடியான்மேல் வரும் - அடியவன்மீது வந்த, கூற்றின் உரம் கிழிய - யமனது மார்பு பிளக்க, முன் - முற்காலத்தில், சயம் ஆர் பாதத்தால் - வெற்றியையுடைய திருவடியால், முனிந்து - உதைத்து, உகந்த - மகிழ்ந்த, மூர்த்திதனை-மூர்த்தியை, மின் செய்யும் வார் சடையானை -மின் கொடிபோலும் நீண்ட சடையையுடையவனை, விடையானை-இடபவாகனனை, என் ஆரூர் இறைவனை-என் ஆரூர்ப்பெருமானை, அடைவு இன்றி - அடையாமல், என் செய்ய நான் பிரிந்திருக்கேன் - யாது செய்ய நான் பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) வலிய வெற்றியுடையவனாய் அடியவன்மீதுவந்த யமனது மார்பு பிளக்க முற்காலத்தில் வெற்றியையுடையதிருவடியால் உதைத்து மகிழ்ந்த மூர்த்தியை, மின்கொடிபோலும் நீண்ட சடையையுடையவனை, இடபவாகனனை, என் ஆரூர்ப் பெருமானை, அடையாமல் யாதுசெய்ய நான் பிரிந்திருப்பேன்.

(கு-ரை.) காலகாலனாகிய திருவாரூரிறைவனை அடையாமல் என்செய்ய நான் பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) அடியான் என்றது மார்க்கண்டனை. உரம் - மார்பு, வலியெனினுமாம். முனிதல் இங்கு உதைத்தற்காயிற்று. மின்செய்தல் - மின்னுதல், மின்போலும் என்றலுமாம். வார்சடை - நீண்ட சடை, நீரையணிந்த சடையெனினுமாம். வார் - நீர். (7)

**முன்னெறிவானவர்கூடித்தொழுதேத்துமுழுமுதலை**
**யந்நெறியையமரர்தொழும்நாயகனையடியார்கள்**
**செந்நெறியைத்தேவர்குலக்கொழுந்தைமறந்திங்ஙனநான்**
**என்னறிவான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) முன்நெறி - முதன்மையாகிய நெறியையுடைய, வானவர் கூடி-தேவர்கள் சேர்ந்து வந்து, தொழுது ஏத்தும் - வணங்கித் துதிக்கிற, முழுமுதலை - முழுமுதற்பொருளை, அந்நெறியை-அறநெறியை, அமரர்தொழும் நாயகனை - தேவர்கள் வணங்குதற்குரிய தலைவனை, அடியார்கள்செம் நெறியை - அடியார்களுக்கு நேர்வழியாயிருப்பவனை, தேவர் குலக்கொழுந்தை - தேவகுலமாகிய மரத்துக்குக் கொழுந்தாயிருப்பவனை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப்பெருமானை, இங்ஙனம் நான் மறந்து -இவ்வாறுநான் மறந்து, என் அறிவான் - எதனையறியும் பொருட்டு, பிரிந்திருக்கேன் - பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) முதன்மையாகிய நெறியையுடைய தேவர்கள் சேர்ந்துவந்து வணங்கித் துதிக்கிற முழுமுதற்பொருளை, அறநெறியை, தேவர்கள் வணங்குதற்குரியதலைவனை, அடியார்க்கு நேர்வழியாயிருப்பவனை, தேவகுலமாகிய மரத்துக்குக் கொழுந்தாயிருப்பவனை, என் ஆரூர்ப்பெருமானை, இவ்வாறு நான் மறந்து எதனை யறியும்பொருட்டு பிரிந்திருப்பேன்.

(க-ரை.) தேவர்களெல்லாம் வணங்கித் துதித்தற்குரிய என்னாரூரிறைவனை மறந்து நான் என்செய்யப் பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) அந்நெறி - தருமமார்க்கம். செந்நெறி-நன்னெறி. கொழுந்து-சிரோபூஷணம். (8)

**கற்றுளவான்கனியாயகண்ணுதலைக்கருத்தார**
**உற்றுளனாமொருவனைமுன்னிருவர்நினைந்தினிதேத்தப்**
**பெற்றுளனாம்பெருமையனைப்பெரிதடியேன்கையகன்றிட்**
**டெற்றுளனாய்ப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.**

(ப-ரை.) கற்றுள்ள வான்கனி ஆய கண்ணுதலை - எல்லாக் கலைகளையுங் கற்றிருக்கிற மேலான கனியாகிய நெற்றிக்கண்ணனை, கருத்து ஆர உற்றுளன் ஆம் ஒருவனை - மனம் நிறையப் பொருந்தியிருக்கிற வொப்பற்றவனை, முன் - முற்காலத்தில், இருவர் நினைந்து-இருவர் நினைந்து, இனிது ஏத்தப்பெற்றுளன் ஆம் பெருமானை-இனிதாகத் துதிக்கப்பெற்ற பெருமையுடையவனை, என் ஆரூர் இறைவனை ; என் ஆரூர்ப்பெருமானை, அடியேன் - அடியனேன், பெரிது கையகன்றிட்டு-மிகவும் நீங்கி, எற்று உளன் ஆய்-எத்தன்மையனாகி, பிரிந்திருக்கேன் - பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) எல்லாக் கலைகளையும் கற்றிருக்கிற மேலான கனியாகிய நெற்றிக்கண்ணனை, மனம் நிறையப் பொருந்தியிருக்கிற வொப்பற்றவனை, முற்காலத்தில் இருவர்நினைந்து இனிதாகத் துதிக்கப்பெற்ற பெருமையுடையவனை,

என் ஆரூர்ப்பெருமானை, அடியனேன், மிகவும் நீங்கி எத்தன்மையனாகி பிரிந்திருப்பேன்.

(க-ரை.) முக்கண் மூர்த்தியாகிய என் ஆரூரிறைவனை நான் என்னுடையேனாய்ப் பிரிந்திருக்கேன் என்பதாம்.

(வி-ரை.) கற்றுளவான்கனி-எல்லாக் கலைகளையுங்கற்றிருக்கிற மேலான கனிபோல்பவன். கண்ணுதல் - நெற்றிக்கண்ணன். இருவர்-மாலும் அயனும். கையகன்று ஒரு சொல் இதற்குப் பகுதிகையகல். (9)

ஏழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியிலா
ஏழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

(ப-ரை.) ஏழ் இசையாய் - ஏழிசையுருவாகி, இசைப்பயனாய்-இசையின் பயனாகி, இன் அமுதாய் - இனிய அமிர்தமாகி, என்னுடைய தோழனுமாய் - எனது நண்பனுமாகி, யான் செய்யும் துரிசுகளுக்கு - நான் செய்யுங் குற்றங்களுக்கு, உடனாகி - உடன்பட்டு, மாழை - மாவடுவகிர்போன்ற, ஒள்கண்-அழகிய கண்களையுடைய, பரவையைத்தந்து ஆண்டானை-பரவையைத் தந்துஎன்னை யாட்கொண்டவனை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப் பெருமானை, மதி இல்லா ஏழை - அறிவில்லாத ஏழையேன், என் பிரிந்திருக்கேன்-யாதுகாரணமாய் பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) ஏழிசையுருவாகி, இசையின் பயனாகி, இனிய அமிர்தமாகி, எனது நண்பனுமாகி, நான் செய்யுங் குற்றங்களுக்கு உடன்பட்டு, மாவடு வகிர் போன்ற அழகிய கண்களையுடைய பரவையைத் தந்து என்னை யாட்கொண்டவனை, என் ஆரூர்ப்பெருமானை, அறிவில்லாத ஏழையேன் யாது காரணமாய் பிரிந்திருப்பேன்.

(க-ரை.) ஏழிசை முதலியவாயிருப்பவனாகிய திருவாரூரிறைவனை யான் ஏன் பிரிந்திருக்கேன் என்பதாம்.

(வி-ரை.) துரிசு - குற்றம். உடனாகி - சம்மதித்து. (10)

வங்கமலிகடனஞ்சைவானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளிநொய்யேனைப்பொருட்படுத்துச்
சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

(ப-ரை.) வங்கம் மலிகடல் நஞ்சை - மரக்கலங்கள் மிக்கிருக்கிற கடல் விடத்தை, வானவர்கள் உய்ய - தேவர்கள் பிழைக்க, நுங்கி - விழுங்கி, அவர்க்கு அமுது அருளி-அத்தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுத்து, நொய்யேனை - அற்பனாகிய என்னை, பொருட் படுத்து - ஒருபொருளாக்கி, சங்கிலியோடு என்

ணைபுணர்த்த - சங்கிலியோடென்னைச்சேர்த்த, தத்துவனை - மெய்யனை, என் ஆரூர் இறைவனை - என் ஆரூர்ப்பெருமானை, எங்கு உலக்கப்பிரிந்திருக்கேன் - எவ்வாறு நீங்கிப் பிரிந்திருப்பேன் எ-று.

(பொ-ரை.) மரக்கலங்கள் மிக்கிருக்கிற கடல்விடத்தை தேவர்கள் பிழைக்க விழுங்கி, அத்தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுத்து, அற்பனாகிய என்னை யொருபொருளாக்கி, சங்கிலியோடென்னைச் சேர்த்த மெய்யனை, என் ஆரூர்ப் பெருமானை, எவ்வாறு நீங்கிப் பிரிந்திருப்பேன்.

(க-ரை.) நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந்து என்னைச் சங்கிலியோடு இசைவித்த என்னாரூரிறைவனை, யான் எவ்வண்ணம் பிரிந்திருப்பேன் என்பதாம்.

(வி-ரை.) வங்கம் - மரக்கலம், (கப்பல்) மலிதல் - மிகுதல். நொய்மை - மென்மை, புணர்த்தல் - இசைத்தல். (11)

**பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தஞ்**
**சீரூருந்திருவாரூர்ச்சிவனடியே திறம்விரும்பி**
**யாரூரனடித்தொண்டனடியன்சொலகலிடத்தில்**
**ஊரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே.**

(ப-ரை.) பேர் - பெருமை, ஊரும் - பொருந்திய, மதகரியின் உரியானை - மதயானைத் தோலையுடையவனை, பெரியவர் தம்சீர் ஊரும் - பெரியோரது சிறப்பு விளங்குகிற, திருவாரூர்ச் சிவன் அடியே - திருவாரூர்ச் சிவனது திருவடியையே, திறம் விரும்பி - உறுதியாய் நம்பி, ஆரூரன் அடித்தொண்டன் அடியன் ஊரன் - சுந்தரன், சொல் - சொன்ன பாடல்களாகிய, இவை - இவற்றை, அகலிடத்தில் - உலகத்தில், ஊர் - இருக்கிற, வல்லார் - கற்றுவல்லார், உலகவர்க்கு மேலார் - எல்லா உலகத்தார்க்கு மேலானவராவர் எ-று.

(பொ-ரை.) பெருமை பொருந்திய மதயானைத்தோலையுடையவனை, பெரியோரது சிறப்புவிளங்குகிற திருவாரூர்ச் சிவனது திருவடியையே உறுதியாய் நம்பி, ஆரூரன் அடித்தொண்டனடியன் சுந்தரன் சொன்ன பாடல்களாகிய இவற்றை உலகத்திலிருக்கிற கற்றுவல்லார் எல்லா வுலகத்தார்க்கு மேலானவராவர்.

(க-ரை.) திருவாரூர் இறைவனை, ஆரூரன் புகழ்ந்துரைத்த இந்தப் பாடல்களைக் கற்றோதவல்லார், எல்லாவுலகத்தவர்க்கு மேலோராவர் என்பதாம்.

(வி-ரை.) திறம் விரும்பி - உறுதியாய் விரும்பி. அகலிடம்-ஒரு சொல்.

திருச்சிற்றம்பலம்.

## திருவாலங்காடு

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

***முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா***
***சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே***
***பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய***
***அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.***

(ப-ரை.) முத்தா - முத்தனே, முத்திதரவல்ல—, முகிழ்மெல்முலையாள்- கோங் கரும்பு போன்ற மெல்லிய ஸ்தனங்களை யுடையவளாகிய, உமைபங்கா - உமாதேவி பாகனே, சித்தா - சித்தனே, சித்தித்திறம்காட்டும்-சித்திவகையைக் காட்டுகின்ற, சிவனே - சிவபெருமானே, தேவர் சிங்கமே- தேவர்களுட் சிறந்தவனே, பத்தா - பத்தனே, பத்தர் பலர்போற்றும்-அன்பர் பலர் போற்றுகின்ற, பரமா - பரமனே, பழையனூர் மேய - பழையனூரி லெழுந்தருளிய, அத்தா - அத்தனே, ஆலங்காடா - திருவாலங்காடனே, உன் அடியார்க்கு அடியேனாவேன் - உன் தொண்டர்க்குத் தொண்டனாவேன் எ—று.

(போ-ரை.) முத்தனே, முத்திதரவல்ல கோங் கரும்புபோன்ற மெல்லிய ஸ்தனங்களை யுடையவளாகிய உமாதேவிபாகனே, சித்தனே, சித்திவகையைக் காட்டுகின்ற சிவபெருமானே, தேவர்களுட் சிறந்தவனே, பத்தனே, அன்பர் பலர் போற்றுகின்ற பரமனே, பழையனூரி லெழுந்தருளிய அத்தனே, திருவாலங்காடனே, உன் தொண்டர்க்குத் தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, உன் அடியார்க் கடியேனாவேன்என்பதாம்.

(வி-ரை.) முத்தன்-பாசநீக்க முள்ளவன். சித்தன் - அறிவுருவன். சித்தி - பாவிதம், அட்டமாசித்தி யெனினுமாம். பத்தன் - அடியாரிடத் தன்புள்ளவன். பரமன் - மேலானவன். ஏ - ஈற்றசை. ஆவேனே என்பதில் ஈற்றேகாரம் வினாவென்க் கோடலு மொன்று. (1)

***பொய்யேசெய்துபுறம்புறமேதிரிவேன்றன்னைப்போகாமே***
***மெய்யேவந்திங்கெனையாண்டமெய்யாமெய்யர்மெய்ப்பொருளே***
***பையாடரவமரைக்கசைத்தபரமாபழையனூர்மேய***
***ஐயாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.***

(ப-ரை.) பொய்யே செய்து - கொடியவற்றையே செய்து, புறம்புறமே திரிவேன் தன்னை - புறமாகத்திரிகிற என்னை, போகாமே-போகாமல், மெய்யேவந்து - உண்மையாகவே வந்து, இங்கு என்னையாண்டமெய்யா - இவ்விடத் தென்னை யாட்கொண்ட மெய்யனே, மெய்யர்மெய்ப்பொருளே - மெய்யருக்கு மெய்யனாயிருப்பவனே, பை ஆடு – படமெடுத்தாடுகிற, அரவம் - பாம்பை, அரைக்கு - திருவரையில், அசைத்த -கட்டின, பரமா - பரமனே, பழையனூர்

மேய ஐயா - பழையனூரி லெழுந்தருளின ஐயனே, ஆலங்காடா - திருவாலங் காடனே, உன் அடியார்க்கு — உன் தொண்டர்க்கு, அடியேன் ஆவேன்-தொண் டனுவேன் எ-று.

(பொ-ரை.) கொடியவற்றையே செய்து புறமாகத்திரிகிற வென்னை போ காமல் உண்மையாகவேவந்து இவ்விடத்தென்னை யாட்கொண்ட மெய்யனே, மெய்யருக்கு மெய்யனுயிருப்பவனே, படமெடுத்தாடுகிற பாம்பை திருவரை யில் கட்டின பரமனே, பழையனூரி லெழுந்தருளின ஐயனே, திருவாலங் காடனே, உன் தொண்டர்க்குத் தொண்டனுவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, நான் உன்னடியார்க் கடியேனுவேன் என் பதாம்.

(வி-ரை.) பொய் - பொய் படுங்காரியங்கள். அசைத்தல் - கட்டல். பர மன் - மேலானவன். (2)

**தூண்டாவிளக்கினற்சோதிதொழுவார்தங்கள்துயர்தீர்ப்பாய்**
**பூண்டாயெலும்பைப்புரமூன்றும்பொடியாச்செற்றபுண்ணியனே**
**பாண்டாழ்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய**
**ஆண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனுவேனே.**

(ப-ரை.) தூண்டாவிளக்கின் நற்சோதி - தூண்டா விளக்கின் சிறந்தவொ ளியே, தொழுவார் தங்கள் வினைதீர்ப்பாய் - வணங்குவோருடைய வினைகளை யொழிப்பவனே, எலும்பை பூண்டாய் - என்புமாலையைத் தரித்தவனே, புர மூன்றும் பொடியாச் செற்ற புண்ணியனே-முப்புரத்தை பொடியாகச் செய்த புண்ணியனே, பாண்டு - பண்டுசெய்த, ஆழ் வினைகள் - மிக்க வினைகளாகிய, அவை - அவற்றை, தீர்க்கும்-ஒழிக்கின்ற, பரமா-பரமனே, பழையனூர்மேய- பழையனூரி லெழுந்தருளிய, ஆண்டா — ஆண்டவனே, ஆலங்காடா - திரு வாலங்காடனே, உன்னடியார்க்கு - உன் தொண்டர்க்கு, அடியேன் ஆவேன் - தொண்டனுவேன் எ—று.

(பொ-ரை.) தூண்டாவிளக்கின் சிறந்தவொளியே, வணங்குவோருடைய வினைகளை யொழிப்பவனே, என்புமாலையைத் தரித்தவனே, முப்புரத்தைப் பொடியாகச் செய்த புண்ணியனே, பண்டு செய்த மிக்கவினைகளாகிய அவற்றை ஒழிக்கின்ற பரமனே, பழையனூரி லெழுந்தருளிய ஆண்டவனே, திருவாலங் காடனே உன் தொண்டர்க்குத் தொண்டனுவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, நான் உன்னடியார்க் கடியேனுவேன் என் பதாம்.

(வி-ரை.) செற்ற - செயித்த. பண்டு என்பது பாண்டு என நீட்டல் விகா ரம்பெற்றது. (3)

**மறிநேரொண்கண்மடநல்லார்வலையிற்பட்டுமதிமயங்கி**
**யறிவேயழிக்தேனையாநான்மையார்கண்டமுடையானே**
**பறியாவினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய**
**அறிவேயாலங்காடாவுன்னடியார்க்கடியேனுவேனே.**

(ப-ரை.) மறிநேர்-மானை நிகர்த்த, ஒண்கண் - அழகிய கண்களையுடைய, மடநல்லார் வலையில் பட்டு - பெண்களாகிய வலையிற் சிக்கி, மதிமயங்கி - அறிவு மயங்கி, நான் அறிவேயழிந்தேன் - நான் அறிவேயிழந்தேன், ஐயா - ஐயனே, மை ஆர் கண்டம் உடையானே - நீல கண்டனே, பறியா - ஒழியாத, வினைகள் அவை தீர்க்கும் பரமா - வினைகளைத் தொலைக்கின்ற மேலோனே, பழையனூர் மேய அறிவே - பழையனூரிலெழுந்தருளிய அறிவுருவே, ஆலங்காடா - திருவாலங்காடனே, உன்னடியார்க்கு - உன்தொண்டர்க்கு, அடியேன்ஆவேன் - தொண்டனாவேன் எ-று.

(பொ-ரை.) மானைநிகர்த்த அழகிய கண்களையுடைய பெண்களாகிய வலையிற்சிக்கி அறிவுமயங்கி நான் அறிவேயிழந்தேன், ஐயனே, நீலகண்டனே, வினைகளைத் தொலைக்கின்ற மேலோனே, பழையனூரி லெழுந்தருளிய அறிவுருவே, திருவாலங்காடனே, உன்தொண்டர்க்குத் தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, நான் உன்னடியார்க் கடியேனாவேன் என்பதாம்.

(வி-ரை.) மடநல்லார் - மாதர். (4)

**வேலங்காடுதடங்கண்ணார்வலையுட்பட்டுன்னெறிமறந்து**
**மாலங்காடிமறந்தொழிந்தேன்மணியேமுத்தேமரகதமே**
**பாலங்காடிநெய்யாடிபடர்புன்சடையாய்பழையனூர்**
**ஆலங்காடாவுன்னுடையவடியார்க்கடியேனாவேனே.**

(ப-ரை.) வேல் அங்கு ஆடு தடம் கண்ணார் வலையுட்பட்டு - மாதர்வலையிற் சிக்கி, உன்நெறிமறந்து — உன்மார்க்கத்தை மறந்து, மால் அங்கு ஆடி - மயக்கத்தைப் பொருந்தி, மறந்தொழிந்தேன் - மறந்தொழிந்தேன், மணியே - ரத்நமே, முத்தே - தாளமே, மரகதமே - மரகதமணியே, அங்கு பாலாடி - பாலாடுவோனே, நெய்யாடி - நெய்யாடுவோனே, படர் - பரந்த, புன் சடையாய் - புன் சடையை யுடையவனே, பழையனூர் - பழையனூர், ஆலங்காடா - திருவாலங்காடனே, உன் அடியார்க்கு - உன்தொண்டர்க்கு, அடியேன்ஆவேன் - தொண்டனாவேன் எ-று.

(பொ-ரை.) மாதர் வலையிற்சிக்கி உன்மார்க்கத்தை மறந்து, மயக்கத்தைப் பொருந்தி மறந்தொழிந்தேன், ரத்நமே, தாளமே, மரகதமணியே, பாலாடுவோனே, நெய்யாடுவோனே, பரந்த புன்சடையையுடையவனே, பழையனூர்த் திருவாலங்காடனே, உன் தொண்டர்க்கு தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, நான் உன்னடியார்க் கடியேனாவேன் என்பதாம்.

(வி-ரை.) வேல் அங்கு ஆடு தடங்கண்ணார் - வேற்படையானது கண்ட அவ்விடத்திற்றானே நடுங்கி நிற்றற்குரிய விசால நேத்ரங்களை யுடையவராகிய

மாதர். மால் - மயக்கம். ஆடி - பொருந்தி. மணி-மாணிக்கம். மரகதம் - பச்சை. பாலாடல் நெய்யாடல் - திருவபிடேககாலத்தில் நிகழ்வன. (5)

**எண்ணார்தங்களெயிலெய்தவெந்தாயெந்தைபெருமானே**
**கண்ணாயுலகங்காக்கின்றகருத்தா திருத்தலாகாதாய்**
**பண்ணாரிசைகளவைகொண்டுபலருமேத்தும்பழையனூர்**
**அண்ணாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.**

(ப-ரை.) எண்ணார் தங்கள் - பகைவருடைய, மதில் - மும்மதில்களையும், எய்த - அம்பெய்தழித்த, எந்தாய் - எந்தையே, எந்தை பெருமானே - என் தந்தையாகிய பெரியோனே, கண் ஆய் - ஆதாரமாகி, உலகம் காக்கின்ற கருத்தா - உலகத்தைக் காக்கின்ற கர்த்தனே, திருத்தல் ஆகாதாய் - திருத்தவொண்ணாதவனே, பண் ஆர் இசைகள் அவைகொண்டு - பண்கள் நிறைந்த இசைகளைக் கொண்டு, பலரும் எத்தும் - பலரும் துதிக்கிற, பழையனூர் அண்ணா - பழையனூரிலெழுந்தருளிய தந்தையே, ஆலங்காடா - திருவாலங்காடனே, உன் அடியார்க்கு - உன் தொண்டர்க்கு, அடியேன் ஆவேன் - தொண்டனாவேன் எ-று.

(பொ-ரை.) பகைவருடைய மும்மதில்களையும் அம்பெய்தழித்த எந்தையே, என் தந்தையாகிய பெரியோனே, ஆதாரமாகி உலகத்தைக் காக்கின்ற கர்த்தனே, திருத்தவொண்ணாதவனே, பண்கள் நிறைந்த இசைகளைக்கொண்டு பலரும் துதிக்கிற பழையனூரிலெழுந்தருளிய தந்தையே, திருவாலங்காடனே, உன் தொண்டர்க்கு தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடா, நான் உன்னடியார்க் கடியேனாவேன் என்பதாம்.

(வி-ரை.) எண்ணார் - மதியாதவர் (பகைவர்) இவர் முப்புரத்தார். கண் - ஆதாரம். கருத்தன் - திருவுள்ளமுடையவன். திருத்தலாகாதாய் - இயற்கைத் திருத்தமுடையாய் கொண்டு மூன்றுவதன் சொல்லுருபு. (6)

**வண்டார்குழலியுமைநங்கைபங்காகங்கைமணவாளா**
**விண்டார்புரங்களெரிசெய்தவிடையாய்வேதநெறியானே**
**பண்டாழ்வினைகள்பலதீர்க்கும்பரமாபழையனூர்மேய**
**அண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.**

(ப-ரை.) வண்டு ஆர் குழலி உமை நங்கைபங்கா — வண்டுகள் நிறைந்த கூந்தலையுடைய உமாதேவிபாகனே, கங்கை மணவாளா-கங்காதேவிக்குக் கணவனே, விண்டார் புரங்கள் எரிசெய்த - பகைவருடைய முப்புரங்களை எரித்த, விடையாய் - இடபவாகனனே, வேதநெறியானே - வேதமார்க்கத்தையுடையவனே, பண்டு - முற்காலத்தே செய்த, பலவினைகள் - பலவினைகளாகிய அவற்றை, தீர்க்கும் பரமா - ஒழிக்கும் பரமனே, பழையனூர் மேய - பழையனூரிலெழுந்தருளின, அண்டா - தேவனே, ஆலங்காடா - திரு

வாலங்காடனே, உன் அடியார்க்கு - உன் தொண்டர்க்கு, அடியேன் ஆவேன் - தொண்டனாவேன் எ-று.

(பொ-ரை.) வண்டுகள் நிறைந்த கூந்தலையுடைய உமாதேவி பாகனே, கங்காதேவிக்குக் கணவனே, பகைவருடைய முப்புரங்களை யெரித்த இடபவாகனனே, வேதமார்க்கத்தை யுடையவனே, முற்காலத்தேசெய்த பலவினைகளாகிய அவற்றையொழிக்கும் பரமனே, பழையனூரிலெழுந்தருளிய தேவனே, திருவாலங்காடனே,உன் தொண்டர்க்கு தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, நான் உன்னடியார்க் கடியேனாவேன் என்பதாம்.

(வி-ரை.) வண்டு ஆர்குழலி - (தேன் மணம் என்பவற்றைவிரும்பி) வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடையவள். பங்கன் - பாகத்தையுடையவன். (7)

**பேழ்வாயரவின்னணையானும்பெரியமலர்மேலுறைவானுந்**
**தாழாதுன்றன்சரண்பணியத்தழலாய்நின்றதத்துவனே**
**பாழாம்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்தன்னை**
**யாள்வாயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.**

(ப-ரை.) பேழ்வாய் அரவின் அணையானும் - திருமாலும், பெரியமலர் மேல் உறைவானும்-பிரமனும், தாழாது-தாமதிக்காமல், உன்றன்தாள் பணிய - உன் திருவடியை வணங்க, தழலாய் நின்ற தத்துவனே - நெருப்புருவாய் நின்ற மெய்யனே, பாழாம் வினைகள் அவை தீர்க்கும் பரமா - பாழ்வினைகளாகிய அவற்றை யொழிக்கின்ற பரமனே, பழையனூர் தன்னை ஆளவாய்-பழையனூரை யாள்வோனே, ஆலங்காடா - திருவாலங்காடனே, உன் அடியார்க்கு - உன் தொண்டருக்கு, அடியேன் ஆவேன் - தொண்டனாவேன் எ-று.

(பொ-ரை.) திருமாலும், பிரமனும் தாமதிக்காமல் உன் திருவடியை வணங்க, நெருப்புருவாய் நின்ற மெய்யனே, பாழ்வினைகளாகிய அவற்றை யொழிக்கின்ற பரமனே, பழையனூரை யாள்வோனே, திருவாலங்காடனே,உன்தொண்டருக்கு தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே நான் உன்னடியார்க்கடியேனாவேன் என்பதாம்.

(வி-ரை.) பேழ்வாய் அரவின் அணையான்-பெரியவாயினையுடைய சர்ப்பசயனனாகிய திருமால். பெரிய மலர்மேல் உறைவான் - பெரிய தாமரை மலர்மீதிருப்பவன். தாழ்தல் - தாமதித்தல். (8)

**எம்மானெந்தைமூத்தப்பனேழ்படிகாலெமையாண்ட**
**பெம்மானீமப்புறங்காட்டிற்பேயோடாடல்புரிவானே**
**பன்மாமலர்களவைகொண்டுபலருமேத்தும்பழையனூர்**
**அம்மாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே.**

(ப-ரை.) எம்மான் எந்தை மூத்தப்பன் - எம்மான் என்தந்தை பாட்டன், ஏழ்படிகால் எம்மையாண்ட பெம்மான் - ஏழ்தலைமுறையும் என்னையாண்ட பெருமானே, ஈமப்புறங்காட்டில் - சுடுகாட்டில், பேயோடு ஆடல்புரிவானே - பேய்களோடு ஆடுவோனே, பல்மாமலர்கள் அவைகொண்டு - பெருமையுள்ள பலமலர்களால், பலரும் ஏத்தும் - பலரும் துதிக்கிற, பழையனூர் அம்மா - பழையனூர் அம்மானே, ஆலங்காடா - திருவாலங்காடனே, உன் அடியார்க்கு - உன் தொண்டர்க்கு, அடியேன் ஆவேன் - தொண்டனாவேன் எ-று.

(பொ-ரை.) எம்மான் என்தந்தை பாட்டன், ஏழ்தலைமுறையும் எம்மையாண்ட பெருமானே, சுடுகாட்டில் பேய்களோடு ஆடுவோனே, பெருமையுள்ள பல மலர்களால் பலரும் துதிக்கிற பழையனூர் அம்மானே, திருவாலங்காடனே, உன் தொண்டர்க்கு தொண்டனாவேன்.

(க-ரை.) திருவாலங்காடனே, நான் உன்னடியார்க்கடியேனாவேன் என்பதாம்.

(வி-ரை.) ஈமப்புறங்காடு - ஈமமென்னும் மயானம். ஆடல் புரிவான் - நடனஞ்செய்வோன். (9)

**பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய**
**அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகிச்**
**சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்**
**பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே.**

(ப-ரை.) பத்தர் சித்தர் பலர் ஏத்தும் பரமன் - பத்தரும் சித்தருமாகிய பலர் துதிக்கிற பரமன், பழையனூர் மேய அத்தன்-பழையனூரிலெழுந்தருளிய எமது தந்தை, ஆலங்காடன்றன் - திருவாலங்காடன்றன், அடிமைத்திறமே அன்பாகி - அடிமைவகையிலே அன்புள்ளவனாகி, சித்தர் சித்தம்வைத்த புகழ்ச் சிறுவன் ஊரன் — சுந்தரன், ஒள்தமிழ்கள் பத்தும் - ஒள்ளிய தமிழ்ப் பாடல்கள் பத்தினையும், பாடி ஆடுவார் - பாடியாடுவோர், பரமன் அடியே பணிவார் - பரமனது திருவடியையே யடைவர் எ-று.

(பொ-ரை.) பத்தரும் சித்தருமாகிய பலர் துதிக்கிற பரமன், பழையனூரிலெழுந்தருளிய எமது தந்தை, திருவாலங்காடன்றன் அடிமைவகையிலே அன்புள்ளவனாகி, சித்தர் சித்தம்வைத்த புகழ்ச்சிறுவன் சுந்தரன் ஒள்ளிய தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பாடியாடுவோர் பரமனடியேபணிவார்.

(க-ரை.) திருவாலங்காடனது அடிமையையே விரும்பி, நாவலூரன் சொன்ன இப் பத்துப் பாடல்களையும் கற்று வல்லவர் சிவபெருமானது திருவடியைப் பணிவோராவர் என்பதாம்.

(வி-ரை.) அடிமைத்திறம் - திருத்தொண்டின் திறம். ஒள்தமிழ்கள் - அழகாகிய தமிழ்ப்பாடல்கள். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம்-தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஊர்த்ததாண்டவேசுவரர். தேவியார் - வண்டார்குழலியம்மை,

## திருக்கடவூர் மயானம்

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை) மருஆர் கொன்றை - மணம்பொருந்திய கொன்றை மலர்மாலையையும், மதி - இளம் பிறையையும், சூடி - தரித்து, மாணிக்கத்தின் மலைபோல - மாணிக்க மலைபோல், பூதப்படைசூழ - பூதப்படைகள் சூழ்ந்துவர, மகிழ்ந்து - மகிழ்வடைந்து, மாதோடு - உமாதேவியாரோடு, விடைமேல் வருவார் - இடபத்தின்மேல் எறிவருபவர், (யாரெனின்), திருமால் பிரமன் இந்திரற்கும் - திருமாலுக்கும் பிரமனுக்கும் இந்திரனுக்கும், தேவர் நாகர் தானவர்க்கும் - தேவர்க்கும் நாகர்க்கும் தானவர்க்கும், பெருமான் - இறைவனாய், கடவூர் மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(பொ-ரை.) மணம்பொருந்திய கொன்றை மலர்மாலையையும் இளம் பிறையையும் தரித்து, மாணிக்கமலைபோல் பூதப்படைகள் சூழ்ந்துவர மகிழ்வடைந்து உமாதேவியாரோடு இடபத்தின் மேலேறிவருபவர் (யாரெனின்), திருமாலுக்கும் பிரமனுக்கும் இந்திரனுக்கும் தேவர்க்கும் நாகர்க்கும் தானவர்க்கும் இறைவனாய், திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர்.

(க-ரை.) கொன்றை மலர்மாலை சந்த்ரகண்ட முதலியவற்றை யணிந்து உமாசகிதராய் இடபமேறி வருவோர் யாரெனின், தேவர்முதலிய யாவர்க்கும் தலைவராய் திருக்கடவூர் மயாநத்தி லெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானடிகளே என்பதாம்.

(வி-ரை.) மருஆர் - வாசனைமிகுந்த எனினுமாம். இந்திரற்கும் என்னும் உம்மையை திருமால் என்பதனோடும் பிரமன் என்பதனோடும் தானவர்க்கும் என்னும் உம்மையை தேவர் என்பதனோடும் நாகர் என்பதனோடும், கூட்டுக. ()

**விண்ணோர்தலைவர்வெண்புரிநூல்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) விண்ணோர் தலைவர் - தேவர்களுக்குத் தலைவரும், வெண்புரிநூல் மார்பர் - வெண்புரி நூலைத்தரித்த மார்பினையுடையவரும், வேதகீதத்தர் - வேதகீதத்தையுடையவரும், கண் ஆர்நுதலர் - கண்ணோடுகூடிய நெற்றியையுடையவரும், நகுதலையர் சிரிக்கின்ற தலையையுடையவரும், காலகாலர் — காலகாலரும், கடவூரர் - கடவூரரும், எண்ணார் - பகைவருடைய, புரம்மூன்று - முப்புரங்களை, எரிசெய்த இறைவர் - எரித்த இறைவரும், இமையோர் - தேவரும், ஒருபாகம் - ஒருபாகத்தில், பெண் - பெண்ணையுடைய, ஆண் ஆவர் - ஆணுருவாவாரும், (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(பொ-ரை.) தேவர்களுக்குத் தலைவரும்,வெண்புரிநூலைத்தரித்த மார்பினையுடையவரும், வேதகீதத்தை யுடையவரும், கண்ணோடு கூடிய நெற்றியையுடையவரும், சிரிக்கின்ற தலையை யுடையவரும், காலகாலரும், கடவூரரும், பகைவருடைய முப்புரங்களை யெரித்த இறைவரும்,தேவரும்,ஒருபாகத்தில் பெண்ணையுடைய ஆணுருவாவாரும் (யாரெனின்), திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர்.

(க-ரை) விண்ணோர் தலைவராதல் முதலிய பெருமை வாய்ந்தவர் யாரெனின், திருக்கடவூர் மயானத்துப் பெரியபெருமான் அடிகளே யென்பதாம்.

(வி-ரை.) உமையோரொருபாகம் பெண்ணாணவர் எனப் பாடபேதமுண்டு. இதற்கு உமாதேவியாரையொருபாகத்தி லுடைமையால் பெண்டன்மையும் ஒருபாகத்தில் தமதுருவாயிருத்தலால் ஆண்டன்மையும் உடையரென்பது தோன்ற, உமையோ ரொருபாகம் பெண்ணாணவர், என்றார். (2)

**காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்**
**தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார்**
**பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி**
**பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) காயும் புலியின் அதள் உடையர் - கோபிக்கிற புலியின் தோலையுடையவரும், கண்டர்-கண்டரும், எண்தோள் கடவூரர் - எட்டுத் தோள்களையுடைய கடவூரரும், பல் உயிர்க்கும் - எல்லாவுயிர்களுக்கும், தாயும் தந்தை — தாயும் தந்தையும், தாமே ஆய தலைவனார் - தாமேயாகிய தலைவரும், பாயும் - பாய்ந்து செல்லுகிற, ஒன்று விடை ஏறி - ஒரு இடபத்தின் மீதேறி, பலி தேர்ந்து உண்ணும் பரமேட்டி — பிச்சை யேற்றுண்ணுகிற பரமேட்டியும், (யாரெனின்) பேய்கள் வாழும் மயானத்து - பேய்கள் வாழ்கின்ற திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(பொ-ரை.) கோபிக்கிற புலியின் தோலையுடையவரும், கண்டரும் எட்டுத் தோள்களையுடைய கடவூரரும், எல்லாவுயிர்களுக்கும் தாயும் தந்தையும் தாமே யாகிய தலைவரும், பாய்ந்து செல்லுகிற ஒரு இடபத்தின் மீதேறி பிச்சையேற் றுண்ணுகிற பரமேட்டியும் (யாரெனின்), பேய்கள் வாழ்கின்ற திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர்.

(க-ரை.) புலித்தோல் முதலியவற்றையுடையவர் யாரெனின், திருக்கடவூர் மயாநத்துப் பெரிய பெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) காய்தல் - உறுமுதலுமாம். கண்டர் - நீலகண்டர். தாயும் என்னும் உம்மை தந்தை யென்பதனோடும் கூட்டப்பட்டது. பரமேட்டி - மேன்மை யாகிய யாகங்களுக்கு முதல்வன். (3)

**நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த**
**இறையாராவரெல்லார்க்குமில்லையென்னாதருள்செய்வார்**
**பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்ப்**
**பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) நறைசேர் - மணம்பொருந்திய, மலர் ஐங்கணையானை - ஐந்து மலரம்புகளை யுடையவனாகிய மன்மதனை, நயனத்தீயால்-கண்ணெருப்பால், பொடி செய்த - பொடித்த, இறையார் ஆவர் - இறைவராவாரும், எல்லார்க்கும் - யாவர்க்கும், இல்லையென்னாது - இல்லை யென்னாமல், அருள் செய்வார் - அருள் செய்வாரும், பறை ஆர் முழவம்-பறையும் பொருந்திய முழவமும், பாட்டோடு பயிலும் - பாடலோடு பயில்கின்ற, தொண்டர் பயில் - அடியார்கள் வாழ்கிற, கடவூர் பிறை ஆர் சடையார் - கடவூரிலுள்ள பிறையணிந்த சடையையுடைய வரும், (யாரெனின்), மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக் கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(பொ-ரை,) மணம்பொருந்திய ஐந்து பூவம்புகளையுடையவனாகிய மன் மதனை கண்ணெருப்பால் பொடித்த இறைவராவாரும், யாவர்க்கும் இல்லையென் னாமல் அருள் செய்வாரும், பறையும் பொருந்திய முழவமும் பாடலோடு பயில் கின்ற அடியார்கள் வாழ்கிற கடவூரிலுள்ள பிறையணிந்த சடையை யுடையவ ரும் (யாரெனின்) திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளி யிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர்.

(க-ரை.) பஞ்சபாணனாகிய மன்மதனை யெரித்த நெற்றிக்கண்ணர் யாரெ னின், திருக்கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) நறை - தேன் எனினுமாம். பறை முழவம் என்பன வாத்திய விசேடங்கள். (4)

**கொத்தார்கொன்றைமதிசூடிக்கோள்நாகங்கள்பூணாக**
**மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்**
**பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்**
**பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) கொத்து ஆர் - கொத்துகளாயிருக்கிற, கொன்றை – கொன்றைமலர் மாலையையும், மதி – பிறையையும், சூடி - தரித்து, கோள் நாகங்கள் - துன்பத்தைச் செய்கிற பாம்புகள், பணி ஆக - ஆபரணமாகக்கொண்டு, மத்த யானை உரிபோர்த்து - மதயானையின் தோலைப்போர்த்து, மருப்பும் ஆமைத் தாலியார்-(அதன்) கொம்பையும் ஆமையோட்டையும் தாலியாகவுடையவரும், பாரிடங்கள் - பேய்கள், பத்திசெய்து - பத்திபண்ணி, பாடிஆட - பாடியாடா நிற்க, பலிகொள்ளும் - பிச்சையேற்கிற, பித்தர் - பித்தரும், (யாரெனின்) கடவூர் மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரியபெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(போ-ரை.) கொத்துகளாயிருக்கிற கொன்றைமலர் மாலையையும், பிறையையும் தரித்து துன்பத்தைச் செய்கிற பாம்புகள் ஆபரணமாகக் கொண்டு மதயானையின் தோலைப் போர்த்து (அதன்) கொம்பையும் ஆமை யோட்டையும் தாலியாகவுடையவரும், பேய்கள் பத்திபண்ணி பாடி ஆடாநிற்க, பிச்சையேற்கிற பித்தரும் (யாரெனின்) திருக்கடவூர் மயானத்திலெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளேயாவர், கொன்றை முதலியவற்றை தரித்து, பேய்கள் பாடியாடி பலிகொள்ளும் பித்தர் யாரெனின், திருக்கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே என்பதாம்.

(க-ரை.) கொன்றை முதலியவற்றைத் தரித்து, பேய்கள் பாடியாடி பலி கொள்ளும் பித்தர் யாரெனின், திருக்கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) கொன்றை அதன் மலருக்கும் மலர் அதனாற் றொடுக்கப்பட்ட மாலைக்கும் ஆயினமையால் இருமடியாகுபெயர். பின்னையது கருவியாகுபெயர்.

**துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து**
**பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த்**
**திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்**
**பிணிவார்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) துணி - துணித்த, வார்கீளும் கோவணமும் துதைந்து - நீண்ட கீளும் கோவணமும் தரித்து, சுடலைப்பொடி அணிந்து - சுடலைப்பொடியைப்பூசி, பணிமேல் இட்ட - பாம்புகளை மேலேபூண்ட, பாசுபதர் - பாசுபதரும், பஞ்சவடி மார்பினர் - பஞ்சவடியைத்தரித்த மார்பினையுடையவரும், கடவூர் - கடவூரையுடைய, திணிவார் குழையார்-வலிமையும் நீட்சியுமுள்ள குழையையணிந்தவரும், புரம் மூன்றும் - முப்புரங்களையும், தீவாய்படுத்த - நெருப்புக்

கிரையாக்கின, சேவகனார் - வீரரும், பிணிவார் சடையார் - கட்டிநீண்ட சடையையுடையவரும், (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர் மயானத்திலெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே எ-று.

(பொ-ரை.) துணித்த நீண்ட கீளும் கோவணமும் தரித்து, சுடலைப்பொடியைப் பூசி, பாம்புகளை மேலேபூண்ட பாசுபதரும், பஞ்சவடியைத் தரித்த மார்பினையுடையவரும், கீடவூரையுடைய வலிமையும் நீட்சியுமுள்ள குழையையணிந்தவரும், முப்புரங்களையும் நெருப்புக்கிரையாக்கின வீரரும், கட்டி நீண்ட சடையையுடையவரும், (யாரெனின்), திருக்கடவூர் மயாநத்திலெழுந்தருளிய பெரியபெருமானாகிய சுவாமிகளே.

(க-ரை.) துண்டித்த நீண்ட கோவணமுதலியவற்றை யுடையவர் யாரெனின், மயானத்துப் பெரியபெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) துணித்தல் - துண்டித்தல். பாசுபதர் - பாசுபதாஸ்திரத்தை யுடையவர். பஞ்சவடி - பூணூல். (6)

**காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்**
**தேரார்அரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினார்**
**ஊர்தானாவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்**
**பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) கார் ஆர் - கருமை பொருந்திய, கடலில் - பாற்கடலிற் பிறந்த, நஞ்சு - விஷத்தை, உண்ட - உண்டருளின, கண்டர் - கண்டத்தையுடையவரும், கடவூர் உறைவாணர் - கடவூரில் வாழ்கிற வாணரும், தேர் ஆர் அரக்கன்—தேரையுடைய அரக்கன், போய் வீழ்ந்து சிதைய — போய் விழுந்தழியும்படி, விரலால் ஊன்றினார்-விரலால் அழுத்தினவரும், ஊர்தான் ஆவது-ஊராவதோவென்றால், உலகு ஏழும் உடையார்க்கு - ஏழுலகங்களையும் உடையவருக்கு, ஒற்றியூர் ஆரூர்-ஒற்றியூரும் ஆரூருமாம், பேர் ஆயிரவர்-ஆயிரம் பேர்களையுடையவரும்;(யாரெனின்) மயானத்து-திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரியபெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(பொ-ரை.) கருமைபொருந்திய பாற்கடலிற் பிறந்த விஷத்தை உண்டருளின கண்டத்தையுடையவரும், கடவூரில்வாழ்கிற வாணரும், தேரையுடைய அரக்கன் போய் விழுந்தழியும்படி விரலால் அழுத்தினவரும், ஊராவதே வென்றால் ஏழுலகங்களையும் உடையவருக்கு ஒற்றியூரும் ஆரூருமாம், ஆயிரம் பேர்களை யுடையவரும் (யாரெனின்) திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளி யிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர்.

(க-ரை.) கடல்விடமுண்ட கண்டமுதலியவற்றை யுடையவர் யாரெனின் திருக்கடவூர் மயாநத்துப் பெரிய பெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) கார் ஆர் என்னும் விசேடணம் நஞ்சுக்காதல் கண்டத்துக்காதல் இயைத்துக் கொள்க. தேர் ஆர் அரக்கன் - ராவணன். (7)

**வாடாமுலையாள் தன்னோடுமகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்துவாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) வாடாமுலையாள் தன்னோடு மகிழ்ந்து - சாயாத தனங்களையுடையவளாகிய உமாதேவியோடு கூடிமகிழ்ந்து, கானில் - காட்டில், வேடுவனாய் - வேடனாகி, கோடுஆர் - கொம்பையுடைய, கேழல்பின் சென்று குறுகி - பன்றியின் பின்னே போய்க்கிட்டி, விஜயன் தவம் அழித்து - அருச்சுனனது தவத்தை யழித்து, நாடாவண்ணம் செருசெய்து - பார்க்கவொண்ணாதபடி யுத்தம் பண்ணி, ஆவம்நாழி நிலையருள்செய்-ஆவமாகிய நாழியை நிலைக்க அருள்செய்த, பீடு ஆர் சடையார் - பெருமைபொருந்திய சடையையுடையவர் (யாரெனின்), மயானத்து – திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளி யிருக்கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர் எ-று.

(பொ-ரை.) சாயாத தனங்களையுடையவளாகிய உமாதேவியோடு கூடி மகிழ்ந்து, காட்டில் வேடனாகி, கொம்பையுடைய பன்றியின் பின்னேபோய்க் கிட்டி, அருச்சுனனது தவத்தையழித்து, பார்க்கவொண்ணாதபடி யுத்தம் பண்ணி, ஆவமாகிய நாழியை நிலைக்கவருள்செய்த பெருமைபொருந்திய சடையை யுடையவர் (யாரெனின்) திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளேயாவர்.

(சு-ரை.) வேடுவனாய் பன்றியின் பின்னேபோய் விஜயன் தவம் அழித்து அவனுக்கு ஆவ முதலியவற்றை யருள்செய்தவர் யாரெனின், திருக்கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) வாடாமை இவ்விடத்துச் சாயாமைப் பொருளது. ஆவம்-அம்பறாத்தூணி. (8)

**வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பரிதனக்கன்றானைந்துகப்பரறமுரைப்பர்
ஏழைத்தலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.**

(ப-ரை.) வேழம் உரிப்பர் - யானையை யுரிப்பவரும், மழுவாளர் - மழுவாளரும், வேள்வி அழிப்பர் - யாகத்தைக் கெடுப்பவரும், சிரம் அறுப்பர்-தலையறுப்பவரும், அரிதனக்கு ஆழி அளிப்பர் - விஷ்ணுவுக்குச் சக்கரம் கொடுப்பவரும், ஆன் ஐந்து உகப்பர் - பசுவினது ஐந்து பொருள்களை விரும்புவோரும், அறம் உரைப்பர் - தருமத்தைச் சொல்லுவாரும், ஏழை தலைவர்-உமாதேவிக்கு நாயகரும், கடவூரில் இறைவர் - கடவூரிறைவரும், சிறுமான் மறிகையர் - சிறுமான் கன்றையேந்தின கையினையுடையவரும், பேழைசடையர்-பெரிய சடை

யை யுடையவரும் (யாரெனின்), மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரியபெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளேயாவர் எ-று.

(பொ-ரை.) யானையை யுரிப்பவரும், மழுவாளரும், யாகத்தைக் கெடுப்பவரும், தலையறுப்பவரும், விஷ்ணுவுக்குச் சக்கரம் கொடுப்பவரும், பசுவினது ஐந்து பொருள்களை விரும்புவோரும், தருமத்தைச் சொல்லுவாரும், உமாதேவிக்கு நாயகரும், கடவூரிறைவரும், சிறுமான் கன்றையேந்திய கையினை யுடையவரும், பெரிய சடையை யுடையவரும், (யாரெனின்) திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானாகிய சுவாமிகளே.

(கு-ரை.) யானைத்தோல் முதலியவற்றை யுடையவர் யாரெனின், திருக்கடவூர் மயானத்துப் பெரியபெருமானடிகளே யென்பதாம்.

(வி-ரை.) வேள்வி - தக்கன் யாகம், சிரமறுத்தது அவனையே. ஆனஞ்சுகப்பர் என்பதை ஆன் ஐந்து உகப்பர் எனப் பிரித்து, பசுவினது ஐந்து பொருள்களையும் விரும்புவோர் என்க. ஆனஞ்சு-பஞ்சகவ்வியம், அவை பால் தயிர் நெய் கோமயம் கோசலம் என்பன. (9)

**மாடமல்குகடவூரில்மறையோரேத்துமயானத்துப்**
**பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்**
**நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்**
**பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே.**

(ப-ரை.) மாடம் மல்கு கடவூரில் - மாடங்கள் நிறைந்த கடவூரிலுள்ள, மறையோர் ஏத்தும் - வேதியர் துதிக்கின்ற, மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளி, பீடைதீர - துன்பம் நீங்கும்படி, அடியாருக்கு அருளும் - அடியவர்க் கருள்செய்கிற, பெருமானடிகள் சீர் - பெருமானடிகளின் சிறப்பை, நாடி - ஆராய்ந்தறிந்து, நாவலாரூரன் நம்பி - சுந்தரர், சொன்ன - சொல்லிய, நல் தமிழ்கள் - நல்ல தமிழ்ப்பாடல்களை, பாடும் - பாடுகிற, அடியார் கேட்பார் மேல் - அடியார்மேலும் கேட்போர்மேலும், பாவமான பறையும் - பாவமாயின வெல்லாம் விட்டு நீங்கும் எ-று.

(பொ-ரை.) மாடங்கள் நிறைந்த கடவூரிலுள்ள வேதியர் துதிக்கின்ற திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளி துன்பம் நீங்கும்படி அடியவர்க் கருள் செய்கிற பெருமானடிகளின் சிறப்பை யாராய்ந்தறிந்து சுந்தரர் சொல்லிய நல்ல தமிழ்ப் பாடல்களை பாடுகிற அடியார்மேலும், கேட்போர் மேலும் பாவமாயின வெல்லாம் விட்டு நீங்கும்.

(கு-ரை.) திருக்கடவூர் மயானத்தெம்பெருமானடிச்சீரை நாடி, நாவலாரூரன் சொன்ன இந்தத் தமிழ்ப்பாடல் பத்தும் பாடுவோர் கேட்போர்மேலுள்ள பாவங்களோடிப்போம் என்பதாம்.

(வி-ரை.) மல்கல் - நிறைதல். நம்பி - சுகுணபூர்த்தியுள்ளவன். பறைதல்- நீங்குதல். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரீசுவரர். தேவியார் - மலர்க்குழல்மின்னம்மை.

---

## திருவொற்றியூர்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அழுக்குமெய்கொடுன் திருவடியடைந்தே
னதுவுநான்படற்பாலதொன்றானாற்
பிழுக்கைவாரியும்பால்கொள்வரடிகேள்
பிழைப்பனாகிலுந் திருவடிப்பிழையேன்
வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லால்
மற்றுநானறியேன்மறுமாற்றம்
ஒழுக்கவென்கணுக்கொருமருந்துரையா
யொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) அழுக்கு மெய் கொடு - அழுக்குடம்பு கொண்டு, உன் திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், அதுவும்-அதுவும், நான்படற் பாலது ஒன்று ஆனால்-நான் படுதற்குரிய தொன்றாயின், பிழுக்கைவாரியும்-பிழுக்கை வாரிக்கொட்டியும், பால் கொள்வர்-பாலாகிய பயனையடைவர், அடிகேள் - சுவாமீ, பிழைப்பன் ஆகிலும் - பிழைசெய்வோனாயினும், திருவடிபிழையேன்- உன் திருவடிக்குப் பிழை செய்யமாட்டேன், வழுக்கி வீழினும் - வழுக்கிவிழுந் தாலும், திருப்பெயர் அல்லால் - உன் திரு நாமமல்லாமல், மற்றும் மறுமாற்றம் நான் அறியேன் - வேறொரு சொல்லையும் நான் அறியேன், என் கண்ணுக்கு ஒழுக்க - என் கண்ணில் வார்க்க, ஒரு மருந்து உரையாய் - ஒரு மருந்து சொல் லாய், ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ் வோனே எ-று.

(பொ-ரை.) அழுக்குடம்பு கொண்டு உன் திருவடியைச் சேர்ந்தேன், அது வும் நான் படுதற்குரிய தொன்றாயின், பிழுக்கைவாரிக் கொட்டியும், பாலாகிய பயனை யடைவர், சுவாமீ, பிழை செய்வோனாயினும் உன் திருவடிக்குப் பிழை செய்ய மாட்டேன், வழுக்கி விழுந்தாலும் உன் திருநாமமல்லாமல் வேறொரு சொல்லையும் நான் அறியேன், என் கண்ணில் வார்க்க வொருமருந்து சொல்லாய், ஒற்றியூரென்கிற வூரில் வாழ்வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே, என்கண்ணுக்கு வார்க்க ஒரு மருந்து சொல்லக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) பிழுக்கை - ஆட்டுப்பிழுக்கை. (ஆட்டினெச்சம்) பிழைத்தல் - பிழை செய்தல். மாற்றம் - சொல். (1)

கட்டனேன்பிறந்தே னுனக்காளாய்க்
காதற்சங்கிலிகாரணமாக
எட்டினாற்றிகழுந்திருமூர்த்தி
யென்செய்வானடியேனெடுத்துரைக்கேன்
பெட்டனாகிலுந்திருவடிப்பிழையேன்
பிழைப்பனாகிலுந்திருவடிக்கடிமை
யொட்டினேனென்னைநீசெய்வதெல்லா
மொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) கட்டனேன் - இடுக்கணுடையேன், காதல் சங்கிலிகாரணமாக - சங்கிலி காதல் காரணமாக, உனக்கு ஆளாய் பிறந்தேன் - உனக்கடிமையாய்ப் பிறந்தேன், எட்டினால் திகழும் திருமூர்த்தி - எட்டுப் பொருள்களால் விளங்குகிற திருமூர்த்தியே, அடியேன் - தொண்டனேன், என் செய்வான் - என் செய்தற் பொருட்டு, எடுத்து உரைக்கேன் - எடுத்துச் சொல்வேன், பெட்டன் ஆகிலும் - ஆசைப் பெருக்க முள்ளேனாயினும், திருவடி பிழையேன் - திருவடிக்குப் பிழை செய்யமாட்டேன், பிழைப்பன் ஆகிலும் - பிழை செய்வோனாயினும், திருவடிக்கு அடிமை ஒட்டினேன் - திருவடிக்குத் தொண்டுசெய்ய அடுத்தேன், என்னை - அடியேனை, எல்லாம் நீ செய்வது - எல்லாம் செய்வது நீயே, ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(போ-ரை.) இடுக்கணுடையேன், சங்கிலிகாரணமாக உனக்கடிமையாய்ப் பிறந்தேன், எட்டுப் பொருள்களால் விளங்குகிற திருமூர்த்தியே, தொண்டனேன் என் செய்தற் பொருட்டு எடுத்துச் சொல்வேன், ஆசைப்பெருக்கமுள்ளேனாயினும் திருவடிக்குப் பிழைசெய்ய மாட்டேன், பிழை செய்வோனாயினும் திருவடிக்குத் தொண்டுசெய்ய வடுத்தேன், அடியேனை யெல்லாம் செய்வது நீயே, ஒற்றியூரென்கிற வூரில் வாழ்வோனே.

(கு-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே, எல்லாம் உன் செயலேயா மென்பதாம்.

(வி-ரை.) கட்டன் - கஷ்டஜீவி. காதல் - ஆசை. எட்டு - அட்டமூர்த்தம். அவை:—பஞ்சபூதங்கள், சந்திரன், சூரியன், ஆன்மா என்பன. (2)

கங்கைதங்கியசடையுடைக்கரும்பே
கட்டியேபலர்க்குங்களைகண்ணே
யங்கைநெல்லியின்பழத்திடையமுதே
யத்தவென்னிடரார்க்கெடுத்துரைக்கேன்

சங்குமிப்பியுஞ்சலஞ்சலமுரல
வயிரமுத்தொடுபொன்மணிவரன்றி
யொங்குமாகடலோதம்வந்துலவு
மொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) கங்கைதங்கிய சடையுடைக்கரும்பே - கங்காநதி தங்கிய சடையை யுடைய கரும்பே, கட்டியே - வெல்லக்கட்டியே, பலர்க்கும் - எல்லாருக்கும், களை கண்ணே - ஆதாரமே, அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே - அங்கை நெல்லிப்பழத்தின் சாறே, அத்த - அத்தனே, என் இடர் ஆர்க்கு எடுத்துரைக்கேன் - என் துன்பத்தை ஆர்க்கு எடுத்துச் சொல்வேன், சங்கும் இப்பியும் சலஞ்சலம் முரல - சங்கும் இப்பியும் சலஞ்சலமும் முழங்க, வயிரம் முத்தொடு - வயிரம் முத்தொடு, பொன் மணிவரன்றி - பொன்மணி இவைகளை வாரிக்கொண்டு, ஓங்கும் மாகடல் ஓதம் - உயர்ந்த கடலலைகள், வந்து உலவும் - வந்து உலாவுகின்ற, ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) கங்காநதிதங்கிய சடையையுடைய கரும்பே, வெல்லக்கட்டியே, எல்லாருக்கும் ஆதாரமே, அங்கை நெல்லிப்பழத்தின் சாறே, அத்தனே, என் துன்பத்தை ஆர்க்கு எடுத்துச் சொல்வேன், சங்கும் இப்பியும் சலஞ்சலமும் முழங்க, வயிரம்முத்தொடு பொன்மணி இவைகளை வாரிக்கொண்டு உயர்ந்த கடலலைகள் வந்துலாவுகின்ற ஒற்றியூரென்கிற வூரில் வாழ்வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே, என் துன்பத்தை யாரிடத்திற் சொல்லிக்கொள்வே னென்பதாம்.

(வி-ரை.) களைகண்-ஆதாரம். அங்கை-உள்ளங்கை. சங்கு, இப்பி, சலஞ்சலம் என்பன சங்கு விசேடம். முரல்வல் - சத்தித்தல். வரன்றல் - வாருதல். ஓங்கும் என்பது ஓங்கும் எனக் குறுக்கலாயிற்று. ஓதம் - அலை. இடர்-துன்பம்.

ஈன்றுகொண்டதோர்சுற்றமொன்றன்று
லியாவராகிலெனன்புடையார்கள்
தோன்றநின்றருள்செய்தளித்திட்டாற்
சொல்லுவாரையல்லாதனசொல்லாய்
மூன்றுகண்ணுடையாயடியேன்கண்
கொள்வதேகணக்குவழக்காகில்
ஊன்றுகோலெனக்காவதொன்றருளா
யொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) ஈன்றுகொண்டது - பெற்றுக்கொண்டதாகிய, ஓர் சுற்றம் ஒன்றன்றால் - உறவு ஒன்றல்ல வாகையால், யாவர் ஆகில் என் அன்புடையார்கள் - எவராகிலும் என்மேலன்புள்ளவர்கள், தோன்ற நின்று அருள் செய்து அளித்

திட்டால் - வெளிப்படநின்று அருள்செய்து காப்பாற்றினல், சொல்லுவாரை அல்லாதன சொல்லாய் - துதிப்பவரை கடுஞ்சொற் சொல்லாதவனே, மூன்று கண் உடையாய் - முக்கண்ணுடையவனே, அடியேன் கண் கொள்வதே-என் கண் கொள்வதே, கணக்கு வழக்கு ஆகில்-உன் கணக்குவழக்காயின், எனக்கு ஆவது - எனக்குத் தகுதியாவதாகிய, ஊன்று கோல் ஒன்று அருளாய் - ஒரு ஊன்றுகோலைத் தந்தருளாய், ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே — ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(போ-ரை.) பெற்றுக் கொண்டதாகிய உறவு ஒன்றல்லவாகையால், எவராகிலும் என்மேலன்புள்ளவர்கள் வெளிப்பட நின்றருள்செய்து காப்பாற்றினல், துதிப்பவரை கடுஞ்சொற் சொல்லாதவனே, முக்கண்ணுடையவனே, என்கண் கொள்வதே உன் கணக்கு வழக்காயின், எனக்குத் தகுதியாவதாகிய ஒரு ஊன்றுகோலைத் தந்தருளாய், ஒற்றியூரென்கிறவூரில் வாழ்வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளியிருப்பவனே, என் கண்ணில்லாமையால் ஒரு ஊன்றுகோல் தந்தருளாய் என்பதாம்.

(வி-ரை.) அளித்திடல் - காத்திடல். சுற்றம் - உறவு. (4)

**வழித்தலைப்படுவான்முயல்கின்றே**
**னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்**
**சுழித்தலைப்பட்டநீரதுபோலச்**
**சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங்**
**கழித்தலைப்பட்டநாயதுபோல**
**வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை**
**யொழித்துநீயருளாயினசெய்யா**
**யொற்றியூரெனுமூருறைவானே.**

(ப-ரை.) வழித்தலைப்படுவான் — செந்நெறிப்படும் பொருட்டு, முயல்கின்றேன - முயற்சிசெய்கிறேன், உன்னைப்போல் என்னை பாவிக்கமாட்டேன் - உன்னைப்போலென்னை நினைக்கமாட்டேன், சுழித்தலைப்பட்ட நீர்போல - சுழிகளையுடைய நீர்போல, சுழல்கின்றேன் - சுழலாநின்றேன், என் உள்ளம் சுழல்கின்றது - என் மனம் சுழலாநின்றது, கழித்தலைப்பட்ட நாய்போல - இழிவடைந்த நாய்போல, ஒருவன் கோல்பற்றி கறகற இழுக்கை ஒழித்து - ஒருவன் கோல்கொடுத்து இழுப்பதை யொழித்து, அருளாயின செய்யாய்-அருளாயின செயல்களை செய்யவேண்டும், ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே-ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(போ-ரை.) செந்நெறிப்படும் பொருட்டு முயற்சிசெய்கிறேன், உன்னைப் போலென்னை நினைக்கமாட்டேன், சுழிகளையுடைய நீர்போல சுழலாநின்றேன், என் மனம் சுழலாநின்றது, இழிவடைந்த நாய்போல ஒருவன் கோல் கொடுத்

திழுப்பதை யொழித்து அருளாயின செயல்களை செய்யவேண்டும், ஒற்றியூரென்கிற வூரில் வாழ்வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளியிருப்பவனே, ஒருவன் என் சொல்பற்றி யிழுப்பதை யொழித்தருள்வாய் என்பதாம்.

(வி-ரை.) செந்நெறி - முத்திநெறி. பாவித்தல் - நினைத்தல். சுழித்தலைப் பட்ட என்பதில் தலை ஏழனுருபு. சுழித்தலைப்பொருந்திய எனினுமாம். கழித் தலைப்பட்ட என்பதற்கு அருவருத்து ஒழிக்கப்பட்ட என்றாயினும், கழியி னிடத்தகப்பட்ட என்றாயினும் பொருள் கொள்க. இழுக்கை-இழுத்தல். (5)

மானைநோக்கியர்கண்வலைப்பட்டு
வருந்தியானுற்றவல்வினைக்கஞ்சித்
தேனையாடியகொன்றையினாயுன்
சீலமுங்குணமுஞ்சிந்தியாதே
நானுமித்தனைவேண்டுவதடியே
னுயிரொடுநரகத்தழுந்தாமை
யூனமுள்ளனதீர்த்தருள்செய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) மானை நோக்கியர்கண் வலைப்பட்டு வருந்தி - மாதர் கண்களாகிய வலையிலகப்பட்டு வருந்தி, யான் உற்ற வல்வினைக்கு அஞ்சி-நானடைந்த வலிய வினைக்கு பயந்து, தேனை ஆடிய கொன்றையினாய் - தேன் பொருந்திய கொன் றைமலர்மாலையை யுடையவனே, உன் சீலமும் குணமும் சிந்தியாதே - உன் ஒழுக்கத்தையும் குணத்தையும் நினைக்காமல், நானும் இத்தனை வேண்டுவது - நான் விரும்புவதும் இவ்வளவே, அடியேன் - அடியனேன், உயிரொடு நரகத்து அழுந்தாமை - உயிரோடு நரகத்தில் மூழ்காமல், ஊனம் உள்ளன - குற்றங்களா யுள்ளனவெல்லாம், தீர்த்து அருள்செய்யாய் - ஒழித்து அருள்செய்யக்கடவாய், ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ - று.

(பொ-ரை.) மாதர் கண்களாகிய வலையிலகப்பட்டு வருந்தி நானடைந்த வலிய வினைக்கு பயந்து, தேன்பொருந்திய கொன்றைமலர் மாலையையுடைய வனே, உன்னொழுக்கத்தையும் குணத்தையும் நினைக்காமல் நான் விரும்புவதும் இவ்வளவே, அடியனேன் உயிரோடு நரகத்தில் மூழ்காமல் குற்றங்களாயுள் ளனவெல்லாமொழித்து அருள் செய்யக்கடவாய், ஒற்றியூரென்கிறவூரில் வாழ் வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே, நான் நரகத்தி லழுந்தாமல் என் குற்றங்களை யொழித்தருள்வா யென்பதாம்.

(வி-ரை.) மான் ஐ நோக்கியர் - மானினது அழகிய நோக்கம்போலும் நோக்கினையுடைய மாதர். கண்வலை - கண்ணாகியவலை. (6)

மற்றுத்தேவரைநினைந்துனைமறவே
னெஞ்சினுரோடுவாழவுமாட்டேன்
பெற்றிருந்தும்பெறுதொழிகின்ற
பேதையேன்பிழைத்திட்டதையறியேன்
முற்றுநீயெனைமுனிந்திடவடியேன்
கடவதென்னுனைநான்மறவேனேல்
உற்றநோயுறுபிணிதவிர்த்தருளா
யொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) மற்றுத்தேவரை நினைந்து - வேறு தேவரை நினைந்து, உன்னை மறவேன் - உன்னை மறக்கமாட்டேன், எஞ்சினுரொடு வாழவும் மாட்டேன் - மற்றுள்ளவரோடு கூடி வாழவுமாட்டேன், பெற்றிருந்தும் - பெற்றிருந்தும், பெறுது ஒழிகின்ற பேதையேன் - பெறுதொழிகின்ற அறிவிலேன், பிழைத் திட்டதை அறியேன் - பிழைசெய்ததை யறியேன், முற்றுநீ என்னை முனிந்திட - நீரென்னை முழுதுங் கோவிக்க, அடியேன் கடவது என் - அடியேன் செய்யக்கடவது யாது, உன்னைநான் மறவேனேல் - உன்னைநான் மறவேனுயின், உற்றநோய் - நேர்ந்த நோய், உறுபிணி-மிக்கபிணி, தவிர்த்து அருளாய் - ஒழித்தருளக்கடவை, ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) வேறு தேவரை நினைந்து உன்னை மறக்கமாட்டேன், மற்றுள் ளவரோடு கூடி வாழவுமாட்டேன், பெற்றிருந்தும் பெறுதொழிகின்ற அறிவி லேன் பிழைசெய்ததை யறியேன், நீரென்னை முழுதுங் கோவிக்க அடியேன் செய்யக்கடவது யாது, உன்னை நான் மறவேனுயின், நேர்ந்த நோய் மிக்க பிணி யொழித்தருளக்கடவை, ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளியிருப்பவனே, என் பிணியை யொழித்தருள்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) எஞ்சினுர் - வேருயினவர். மறவேனேல் - மறவேனுயின். எல் எனின் என்பதன் மரூஉ. நோய் - சரீரவியாதி. பிணி-மனோவியாதி. (7)

கூடினுய்மலைமங்கையைநினையாய்
கங்கையாயிரமுகமுடையாளைச்
சூடினுயென்றுசொல்லியபுக்கால்
ருெழும்பனேனுக்குஞ்சொல்லலுமாமே
வாடிநீயிருந்தென்செய்திமனனே
வருந்தியானுற்றவல்வினைக்கஞ்சி
யூடினுலினியாவதொன்றுண்டே
யொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) மலைமங்கையை கூடினாய் - உமாதேவியைச் சேர்ந்தாய், நினையாய் - நினைக்கமாட்டாய், கங்கை ஆயிரம் முகம் உடையாளை - ஆயிரமுகங்களையுடைய கங்கையை, சூடினாய் - சடையிற்றரித்தாய், என்று சொல்லிய புக்கால் - என்று சொல்லத் தொடங்கினால், தொழும்பனேனுக்கும் சொல்லலும் ஆமே - தொண்டனேற்குச் சொல்லவுங் கூடுமோ, மனமே - மனமே, நீ வாடியிருந்து என்செய்தி - நீவாடியிருந் தென்செய்கிறாய், வருந்தியான் உற்ற வல்வினைக்கு அஞ்சி – வருந்தி நானடைந்த வலியவினைக்கு பயந்து, ஊடினால்-பிணங்கினால், இனி ஆவது ஒன்று உண்டோ - இனியாகக்கடவது ஒன்றுண்டோ, ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) உமாதேவியைச் சேர்ந்தாய் நினைக்கமாட்டாய், ஆயிரமுகங்களையுடைய கங்கையைச் சடையிற் றரித்தாய் என்று சொல்லத்தொடங்கினால் தொண்டனேற்குச் சொல்லவுங் கூடுமோ, மனமே, நீவாடியிருந்தென்ன செய்கிறாய் வருந்திநானடைந்த வலிய வினைக்கு பயந்து பிணங்கினால் இனியாகக்கடவது ஒன்றுண்டோ ஒற்றியூரென்கிற வூரில் வாழ்வோனே.

(கு-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே, என் வல்வினைக்கு அஞ்சியூடினால் ஆவதொன் றுண்டோ வென்பதாம்.

(வி-ரை.) சொல்லிய - சொல்ல. செய்திய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆமே - ஆமோ. (8)

மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய்
 மைந்தனேமணியேமணவாளா
அகத்திற்பெண்டுகள் நானொன்றுசொன்னா
 லழையேற்போகுருடாவெனத்தரியேன்
முகத்திற்கண்ணிழந் தெங்ஙனம்வாழ்கேன்
 முக்கணாமுறையோமறையோதீ
யுகைக்குந்தண்கடலோதம்வந்துலவு
 மொற்றியூரெனுமூருறைவானே.

(ப-ரை.) எனக்கு மகத்தில் புக்கது - எனக்கு மகத்தில் பிரவேசித்ததாகிய, ஓர்சனிஆனாய் - ஒரு சனியாயினை, மைந்தனே – வலியனே, மணியே-ரத்நமே, மணவாளா - நாயகனே, அகத்தில்பெண்டுகள் - வீட்டிற் பெண்கள், நான் ஒன்று சொன்னால் - நான் ஒன்று சொன்னால், அழையேல் போ குருடா - அழைக்காதே குருடா, என - என்று சொல்ல, தரியேன் - சகியேன், முகத்தில் கண் இழந்து - முகக்கண்ணிழந்து, எங்ஙனம் வாழ்கேன் - எப்படி வாழ்வேன், முக்கணா - முக்கண்ணனே, மறையோதீ - வேதமோதுவோனே, முறையோ-முறையோ, உகைக்கும் - எழுகின்ற, தண்கடல் - தண்ணிய கடலின், ஓதம்வந்து உலவும் - அலைகள் வந்துலாவுகிற, ஒற்றியூர் என்னும் ஊர் உறைவானே - ஒற்றியூரென்கிற ஊரில் வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) எனக்கு மகத்தில் பிரவேசித்ததாகிய ஒரு சனியாயினை, வலியனே, ரத்நமே, நாயகனே, வீட்டிற் பெண்கள் நானென்று சொன்னால் அழைக்காதே குருடாவென்று சொல்ல சகியேன், முகக்கண்ணையிழந்து எப்படி வாழ்வேன், முக்கண்ணனே, வேதமோதுவோனே, முறையோ, எழுகின்ற தண்ணிய கடலினலைகள் வந்துலாவுகிற ஒற்றியூரென்கிறவூரில் வாழ்வோனே.

(க-ரை.) திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே, வீட்டுப்பெண்கள் குருடாவென்றழைக்கப் பொறேன், நீ யருள்செய்யவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) மகத்திற் சனிபுக்கால் துன்பமுண்டா மென்பது சோதிட நூற்றுணிபு. மைந்தன் - வலியன். (சர்வசக்தன்) (9)

ஓதம்வந்துலவுங்கரைதன்மே
லொற்றியூருறைசெல்வனைநாளு
ஞாலந்தான்பரவப்படுகின்ற
நான்மறையங்கமோதியநாவன்
சீலந்தான்பெரிதும்மிகவல்ல
சிறுவன்வன்றொண்டனூரனுரைத்த
பாடல்பத்திவைவல்லவர்தாம்போய்ப்
பரகதிதிண்ணநண்ணுவர்தாமே.

(ப-ரை.) ஓதம் - கடலலைகள், வந்து உலவும்-வந்து தவழ்கின்ற, கரைதன்மேல் - கடற்கரைமேல், ஒற்றியூர் உறை செல்வனை - ஒற்றியூரில் வாழ்கிற பாக்யவானை, நாளும் - நாடோறும், ஞாலம் பரவப்படுகின்ற - உலகத்தவரால் துதிக்கப்படுகிற, நான் மறை அங்கம் ஓதிய நாவன் - நால்வேதத்தையும் ஆறங்கத்தையும் ஓதிய நாவினையுடையவன், சீலம் பெரிதும் மிகவல்ல சிறுவன் - மிகுந்த நல்லொழுக்கமுடையவன், வன்றொண்டன் - வலியதொண்டன், ஊரன் - சுந்தரன், உரைத்த பாடல் - சொன்னபாடல்களாகிய, இவைபத்தும் கற்று வல்லார்போய் - இவைபத்தும் கற்று வல்லவர்போய், பரகதி நண்ணுவர் - பரகதியை யடைவர், திண்ணம்-நிச்சயம் எ-று.

(பொ-ரை.) கடலலைகள் வந்து தவழ்கின்ற கடற்கரைமேல் ஒற்றியூரில் வாழ்கிற பாக்யவானை நாடோறும் உலகத்தவரால் துதிக்கப்படுகிற நால் வேதத்தையும் ஆறங்கத்தையு மோதிய நாவினையுடையவன், மிகுந்த நல்லொழுக்கமுடையவன், வலிய தொண்டன், சுந்தரன் சொன்ன பாடல்களாகிய இவை பத்தும் கற்று வல்லவர் போய் பரகதியை யடைவர் நிச்சயம்.

(க-ரை.) திருவொற்றியூர்ச் செல்வனை வன்றொண்டன் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாடலும் கற்றுவல்லார், பரகதியடைவர், இது திண்ணம் என்பதாம்.

(வி-ரை.) ஞாலம் - உலகம். இது ஆகுபெயராய் அதில் வாழ்வோரை யுணர்த்திற்று. நான் மறை - இருக்கு யஜுஸ் சாமம் அதர்வணம் என்பன. அங்

கம் - வேதாங்கம், அவை — மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. (10)

இது உன்னைப் பிரிந்துபோவதில்லையென்று சங்கிலியாருக்குச் சூளுரை செய்து மணந்துமகிழ்ந்திருக்கையில், திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானுடைய திருவோலக்கத் தரிசனம் செய்வதற்கின்றி நெடுநாள் பிரிந்திருக்கின்றேயே யென்னும் ஞாபகமுண்டாகப் பரமசிவத்தின் திருவிளையாட்டால் முன்கூறிய சூளுரையை மறந்து திருவொற்றியூரெல்லையைக் கடந்தவளவில் நேத்திரங்களுக்கு அபாவந்தோன்ற வருந்தித் துதிசெய்த பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கத்தியாகர். தேவியார் - வடிவுடையம்மை.

---

## திருப்புன்கூர்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

**அந்தணாளனுன்னடைக்கலம்புகுத**
**வவனைக்காப்பதுகாரணமாக**
**வந்தகாலன்றனாருயிரதனை**
**வவ்வினாயுன்றன்வன்மைகண்டடியேன்**
**எந்தைநீயெனைநமன்றமர்நலியி**
**லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்**
**சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்**
**செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.**

(ப-ரை) அந்தணாளன் - வேதியனாகிய மார்க்கண்டன், உன் அடைக்கலம் புகுத - உன்னைச் சரணமடைய, அவனை - அந்த அந்தணாளனை, காப்பது காரணமாக - காப்பதே காரணமாகக்கொண்டு, வந்த காலன் தன் - வந்த யமனது, ஆர் உயிரதனை - அரிய உயிரை, வவ்வினாய் - கவர்ந்தாய், உன்றன் வன்மை கண்டு - உனது வல்லமையைக்கண்டு, அடியேன், அடியனேனது, எந்தை நீ - எந்தையாகிய நீ, என்னை - அடியேனை, நமன் தமர் - எமதூதர், நலியின் - வருத்தினால், இவன் என் அடியான் என - இவன் என்அடியவனென்று, விலக்கும் - விலக்கவேண்டுமென்கிற, சிந்தையால் - எண்ணத்தினால், வந்து உன் திருவடி அடைந்தேன் - வந்து உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும் பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) வேதியனாகிய மார்க்கண்டன் உன்னைச் சரணமடைய அந்த அந்தணாளனைக் காப்பதே காரணமாகக்கொண்டு, வந்த யமனது அரியவுயிரை கவர்ந்தால், உனது வல்லமை கண்டு அடியனேனது எந்தையாகிய நீ, அடியேனை எமதூதர் வருத்தினால், இவன் என் அடியவனென்று விலக்கவேண்டு

மென்கிற எண்ணத்தினுல் வந்து உன் திருவடியைச் சேர்ந்தேன், செழுமை யாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளியிருப்பவனே, நீ காலகாலனுதலால், என்னை நமன்தமர் வந்து நலிகையை விலக்குவாயென்று உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) அந்தணாளன் - அழகிய தட்பத்தை யாள்பவன். காலன்தன் என்பதில் தன் சாரியை. (1)

வையகமுற்றுமாமழைமறந்து
வயலில்நீரிலைமாநிலந்தருகோம்
உய்யக்கொள்கமற்றெங்களையென்ன
வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்
பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்
பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ்
செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

(ப-ரை.) வையகம் முற்றும் - உலகமுழுதும், மாமழை மறந்து - பெரிய மழைபெய்ய மறந்ததனுல், வயலில் நீர் இல்லை - வயலில் நீரில்லையாயிற்று, மாநிலம் தருகோம் - பெரிய நிலத்தைக் கொடுப்போம், எங்களை - அடியோங்களை, உய்யக்கொள்க என்ன - உய்யக் கொண்டருள்க வென்று சொல்லுதலும், ஒளிகொள்-ஒளியைக்கொண்ட, வெள் முகில் ஆய்-வெள்ளை மேகமாகி, எங்கும் பரந்து - எங்கும் பரவி, பெய்யும் - பெய்கிற, மாமழை - பெரிய மழையினுலுண்டாகிய, பெரு வெள்ளம் தவிர்த்து - பெரு வெள்ளத்தை யொழித்து, பெயர்த்தும் - மறுபடியும், பன்னிருவேலி கொண்டருளும் - பன்னிரண்டு வேலி நிலத்தைக் கொண்டருளின, செய்கை கண்டு - செய்கையை நோக்கி, நின் திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும் பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) உலகமுழுதும் பெரிய மழை பெய்ய மறந்ததனுல் வயலில் நீரில்லையாயிற்று, பெரிய நிலத்தைக் கொடுப்போம் அடியோங்களை யுய்யக்கொண்டருள்க வென்று சொல்லுதலும், ஒளியைக்கொண்ட வெள்ளை மேகமாகி எங்கும் பரவிப் பெய்கிற பெரிய மழையினுலுண்டாகிய பெரியவெள்ளத்தை யொழித்து மறுபடியும், பன்னிரண்டு வேலி நிலத்தைக் கொண்டருளின செய்கையை நோக்கி, உன் திருவடியைச் சேர்ந்தேன், செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளியிருப்பவனே, நிலம் பெற்றுப் பெருமழை பெய்வித்த நின் கருணையைக்கண்டு உன் திருவடியை யடைந்தே னென்பதாம்.

(வி-ரை.) வையகமுற்று மாமழை மறந்து வயலினீரிலை மாநிலந்தருகோ, முய்யக்கொள் கமற்றெங்களை யென்ன வொளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும், பெய்யுமா மழைப்பெரு வெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளுஞ் செய்கை, என்பதிலடங்கியிருக்குங் கதையாவது. - திருப்புன்கூரில் மழை பெய்யாது வருத்துகிற காலத்தில், அவ்வூரார், மழை பெய்வித்து எங்களைக் காப்பாற்றினல், உமக்குச் சில நிலந் தருவோமென்று வேண்டுதலும், பெருமான் திருவுளமிரங்கி முகிலுருவாய் அதிக மழையைப் பெய்விக்க, அதுவும் அவர்களுக்கு வருத்தத்தை யுண்டாக்க, பன்னிருவேலி நிலம் மறுபடியுந் தருவோமென்றவளவில் மழையை நிறுத்தி, முன் சொன்ன நிலத்தோடு இந்தப் பன்னிருவேலி நிலத்தையுங் கொண்டருளின ரென்பது.(2)

ஏதமின்னிலமீராறுவேலிக்
கேயர்கோனுற்றவிருப்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கறந்தாட்டக்
கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்
சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்
பூம்பொழிற்றிருப்புன்கூருளானே.

(ப-ரை.) ஏதம் இல் நிலம் ஈராறுவேலிக்கு - குற்றமில்லாத பன்னிருவேலி நிலத்துக்காக, ஏயர் கோன் உற்ற - ஏயர்கோன் அடைந்த, இரும்பிணி தவிர்த்து - பெரிய பிணியை யொழித்து, கோதனங்களின் பால் கறந்து - பசுக்கூட்டங்களின் பாலைக்கறந்து, ஆட்ட - அபிஷேகஞ் செய்ய, கோலம் - அழகாகிய, வெள் மணல் - வெள்ளை மணலாற் செய்யப்பட்ட, சிவன் தன் மேல் சென்ற - சிவன் மேல் சென்ற, தாதை — தந்தையின், தாள் அற - காலற, எறிந்த - வெட்டின, சண்டிக்கு - சண்டேசுரனுக்கு, உன்சடை மிசை மலர் - உன் சடைமேலணிந்த மலரை, அருள் செய்ய கண்டு-அருள் செய்யப் பார்த்து, பூதவாளி-பூதநாதனே, நின் பொன்னடி அடைந்தேன் - உன் பொன்னடியைச் சேர்ந்தேன், பூ பொழில் - பூஞ் சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) குற்றமில்லாத பன்னிருவேலி நிலத்துக்காக ஏயர்கோனடைந்த பெரிய பிணியை யொழித்து, பசுக்கூட்டங்களின் பாலைக்கறந்து அபிஷேகஞ் செய்ய, அழகாகிய வெள்ளை மணலாற் செய்யப்பட்ட சிவன் மேல் சென்ற தந்தையின் காலற வெட்டின சண்டேசுரனுக்கு உன் சடைமேலணிந்த மலரை அருள் செய்யப்பார்த்து, பூதநாதனே, உன் பொன்னடியைச் சேர்ந்தேன், பூஞ்சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளியிருப்பவனே, தந்தை தாளெறிந்த சண்டிக்கு உன் சடைமீதணிந்த மலரை யருள்செய்யக்கண்டு உன் திருவடியடைந்தே னென்பதாம்.

(வி-ரை.) ஏயர்கோன் - ஏயர்கோன் கலிக்காமநாயனார், இவர் பன்னிரு வேலி நன்னிலம் கொடுத்துத் தம் பிணியை யொழித்துக் கொண்டார் என்னுஞ் செய்தியும், சண்டீசர் தமது சிவாபிஷேக பங்கத்தை யுத்தேசித்து வந்த தந்தையின் காலெறிந்த செய்தியும் இதிலடங்கியிருக்கின்றன. பூதவாளி- பூதகணங்களை யாள்பவன். (3)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
னாவினுக்கரையனாளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரள்மணிக்கமலங்கள்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே.

(பத-ரை.) நல்தமிழ் வல்ல ஞானசம்பந்தன் - நல்ல தமிழில் வல்லவனாகிய ஞான சம்பந்தனும், நாவினுக்கு அரையன் - திருநாவுக்கரசனும், நாளைப்போவானும் - திருநாளைப் போவானும், கற்ற சூதன் - கற்ற சூதனும், நல் சாக்கியன் - நல்ல சாக்கியனும், சிலந்தி - சிலந்தியும், கண்ணப்பன் - கண்ணப்பனும், கணம் புல்லன் - கணம்புல்லனும், என்றிவர்கள் - என்று சொல்லப்பட்ட இவர்கள், குற்றம் செய்யினும் - குற்றம் செய்தாலும், குணம் என கருதும் - குணமென்று நினைக்கிற, கொள்கை கண்டு - உன் கொள்கையைப் பார்த்து, நின் குரை கழல் அடைந்தேன் - உனது ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடியைச் சேர்ந்தேன், பொன்திரள் மணி கமலங்கள் மலரும் - பொற்றிரளும் அழகிய தாமரைகளும் மலரப் பெற்ற, பொய்கைசூழ் - தடாகங்கள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) நல்ல தமிழ் வல்லவனாகிய ஞானசம்பந்தனும், திருநாவுக்கரசனும் திருநாளைப் போவானும், கற்ற சூதனும், நல்ல சாக்கியனும், சிலந்தியும், கண்ணப்பனும், கணம்புல்லனும் என்று சொல்லப்பட்ட இவர்கள் குற்றம் செய்தாலும் குணமென்று நினைக்கிற உன் கொள்கையைப் பார்த்து உனது ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடியைச் சேர்ந்தேன், பொற்றிரளும் அழகிய தாமரைகளும் மலரப்பெற்ற தடாகங்கள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளி யிருப்பவனே, திருஞான சம்பந்தர் முதலியோர்க் கருள் செய்த வுன் கொள்கையைக்கண்டு உன் திருவடி யடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) நாவினுக்கரையன் - வாகீசர். இவரை அப்பர் என்றுங் கூறுவர். குற்றத்தைக் குணமாகக்கொண்டு சிலந்தி கண்ணப்பன் முதலானவர்களுக் கருள்செய்த செய்திகள் இச்செய்யுளி லடங்கியிருக்கின்றன. (4)

*கோலமால்வரைமத்தெனநாட்டிக்*
*கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த*
*ஆலநஞ்சுகண்டவர்மிகவிரிய*
*வமரர்கட்கருள்புரிவதுகருதி*
*நீலமார்கடல்விடந்தனையுண்டு*
*கண்டத்தேவைத்தபித்தநீசெய்த*
*சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்*
*செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.*

(ப-ரை.) கோலம் - அழகாகிய, மால்வரை - பெரிய மலையை, மத்து என நாட்டி-மத்தாக நட்டு, கோள் அரவு சுற்றி கடைந்து - துன்பத்தைச் செய்கிற பாம்பை அந்த மலைமீது சுற்றிக் கடைந்து, எழுந்த - அதிலுண்டாகிய, ஆலம் நஞ்சுகண்டு - ஆலாகல விஷத்தைக் கண்டு, அவர் மிக இரிய - அவர்கள் மிகுதியாய் ஓட, அமரர்கட்கு - தேவர்கட்கு, அருள்புரிவது கருதி - அருள் செய்ய நினைத்து, நீலம் ஆர் — நீலநிறம் பொருந்திய, கடல் விடந்தனை உண்டு - கடல் விஷத்தைப் பருகி, கண்டத்தே வைத்த - திருமிடற்றி லமைத்துக்கொண்ட, பித்த-பித்தனே, நீசெய்த சீலம்கண்டு - நீசெய்த செய்கையைக்கண்டு, நின்திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே-எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) அழகாகிய பெரிய மலையை மத்தாக நட்டு, துன்பத்தைச் செய்கிற பாம்பை அந்த மலைமீது சுற்றிக்கடைந்து அதிலுண்டாகிய ஆலாகல விஷத்தைக்கண்டு அவர்கள் மிகுதியாயோட தேவர்கட்கருள்செய்ய நினைத்து, நீலநிறம் பொருந்திய கடல்விஷத்தைப் பருகி, திருமிடற்றி லமைத்துக்கொண்ட பித்தனே, நீ செய்த செய்கையைக்கண்டு உன் திருவடியைச் சேர்ந்தேன், செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளி யிருப்பவனே, திருப்பாற்கடல் கடையத்தோன்றின நஞ்சுண்டு கண்டங் கறுத்த உன் சீலத்தைக்கண்டு உன் திருவடி யடைந்தே னென்பதாம்.

(வி-ரை.) கோலமால் வரை யென்றது மந்தரமலையை. கோளரவு என்றது வாசுகியை. அவர் என்றது அந்தத் தேவர் முதலியோரை. இரிதல்-ஓடுதல். (5)

*இயக்கர்கின்னரர்ஞமனொடுவருண*
*ரியங்குதீவளிஞாயிறுதிங்கள்*
*மயக்கமில்புலிவானரநாகம்*
*வசுக்கள்வானவர்தானவரெல்லாம்*

அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
திகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

(ப-ரை.) இயக்கர் - யக்ஷர், கின்னரர் - கிந்நரர், யமனொடு வருணர் - யமனொடு வருணர், இயங்கு தீ - விளங்குகிற நெருப்பு, வளி - காற்று, ஞாயிறு - சூரியன், திங்கள் - சந்திரன், மயக்கம் இல் — மயக்கமில்லாத, புலி - புலி, வானரம் - குரங்கு, நாகம் - பாம்பு, வசுக்கள் - வசுக்கள், வானவர் - தேவர்கள், தானவர் - அசுரர்கள், (ஆகிய) எல்லாம் - எல்லாரும், அயர்ப்பு ஒன்று இன்றி - தளர்வு சிறிது மில்லாமல், நின் திருவடி யதனை—உன் திருவடியை, அர்ச்சித்தார் - அர்ச்சித்தவராய், பெறும் - பெற்ற, ஆர் அருள் கண்டு - அரிய அருளைப்பார்த்து, திகைப்பு ஒன்று இன்றி - பிரமித்தல் சிறிது மில்லாமல், நின் திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) யக்ஷர் கிந்நரர் யமனொடு வருணர் விளங்குகிற நெருப்புகாற்று சூரியன் சந்திரன் மயக்கமில்லாத புலி குரங்கு பாம்பு வசுக்கள் தேவர்கள் அசுரர்கள் (ஆகிய) எல்லாரும் தளர்வு சிறிதுமில்லாமல் உன் திருவடியை யர்ச்சித்தவராய் பெற்ற அரிய அருளைப்பார்த்து, பிரமித்தல் சிறிதுமில்லாமல் உன் திருவடியைச் சேர்ந்தேன். செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளியிருப்பவனே, கிந்நரர் யமன்முதலாயினோர் உன்னை யருச்சித்துப் பெற்ற பேறுகண்டு உன் திருவடி யடைந்தேனென்பதாம்.

(வி-ரை.) இயக்கர் கின்னரர் முதலாயினோர் இத் திருப்பதி யெம்பெருமானை யருச்சித் தருள்பெற்றாரென்னுஞ் செய்தி இச்செய்யுளி லடங்கி யிருக்கின்றது. (6)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்
பொழில்கொளாணிழற்கீழறம்புரிந்து
பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்
தருளினாய்பண்டுபகீரதன்வேண்ட
ஆர்த்துவந்திழியும்புனற்கங்கை
நங்கையாளைநின்சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின்றன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

(ப-ரை.) போர்த்த நீள் செவியாளர் - பொத்தின நீண்ட செவியினையுடையவராகிய, அந்தணர்க்கு - வேதியர்க்கு, பொழில் கொள் - சோலையாகத் தழைத்திருந்த, ஆல நிழற் கீழ் - கல்லாலின் நிழலில், அறம்புரிந்து - தர்மோபதேசஞ் செய்து, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, அன்று - அந்நாளில், பாசுபதம் கொடுத்து - பாசுபதாஸ்திரத்தைத் தந்து, அருளினாய் - அருள் செய்தாய், பண்டு - முற்காலத்தில், பகிரதன் வேண்ட - பகிரதன் பிரார்த்திக்க, ஆர்த்து வந்து இழியும் - ஆரவாரித்துக்கொண்டு வந்திறங்குகின்ற, புனல் - நீருருவாகிய, கங்கை நங்கையாளை - கங்கையாகிய பெண்ணை, நின் சடைமிசை கரந்த - உன் சடைமீது அடக்கிக்கொண்ட, தீர்த்தனே - பரிசுத்தனே, நின்றன் - உன்னுடைய, திருவடி யடைந்தேன் - திருவடியைச்சேர்ந்தேன், செழும்பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) பொத்தின நீண்ட செவியினை யுடையவராகிய வேதியர்க்கு சோலையாகத் தழைத்திருந்த கல்லாலின் நிழலில் தர்மோபதேசஞ்செய்து அருச்சுனனுக்கு அந்நாளில் பாசுபதாஸ்திரத்தைத் தந்தருள் செய்தாய், முற்காலத்தில் பகிரதன் பிரார்த்திக்க, ஆரவாரித்துக் கொண்டு வந்திறங்குகின்ற நீருருவாகிய கங்கையாகிய பெண்ணை உன் சடைமீது அடக்கிக்கொண்ட பரிசுத்தனே, உன்னுடைய திருவடியைச் சேர்ந்தேன், செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன் கூரில் எழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளியிருப்பவனே, கல்லாலின்கீழிருந்து சநகாதியர்க் கறமுரைத்தல் முதலியவை செய்த நின் கொள்கைகண்டு உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) போர்த்த நீள்செவியாள ரந்தணர்க்கு என்றது சநகாதியர் நால்வருக்கு என்றபடி. தீர்த்தன் - தேவன் எனினுமாம். (7)

**மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி**
**லிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்**
**காவலாளரென்றேவியபின்னை**
**யொருவனீகரிகாடரங்காக**
**மானைநோக்கியோர்மாநடமகிழ**
**மணிமுழாமுழக்கவருள்செய்த**
**தேவதேவநின்றிருவடியடைந்தேன்**
**செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.**

(ப-ரை.) மூவெயில் செற்றஞான்று - மும்மதில்களை யழித்த நாளில், உய்ந்த - பிழைத்துப்போன, மூவரில் - மூன்றுபேர்களுள், இருவர் - இரண்டுபேர், நின் - உனது, திருக்கோயிலின் வாயில் காவலாளர் என்று - திருக்கோயிலின் வாசற் காப்பாளரென்று, ஏவிய பின்னை - அனுப்பின பிறகு, ஒருவன் - மற்றொருவன், நீ - நீ, கரிகாடு அரங்கு ஆக - கரிகாடே நாட்டிய சபையாகக் கொண்டு,

மான் ஐநோக்கி - மான்போலும் அழகிய நோக்கத்தை யுடையவளாகிய வுமாதேவி, மகிழ - களிக்க, ஓர் மா நடம் - ஒப்பற்ற பெரிய நடத்தை, மணிமுழா முழக்க - அழகிய மத்தளமுழக்கும்படி, அருள் செய்த - அருள்புரிந்த, தேவதேவ - தேவதேவனே, நின் திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) மும்மதில்களை யழித்த நாளில் பிழைத்துப்போன மூன்று பேர்களுள் இரண்டுபேர் உனது திருக்கோயிலின் வாசற் காப்பாளரென்று அனுப்பின பிறகு, மற்றொருவன் நீ சுரிகாடே நாட்டிய சபையாகக்கொண்டு, மான்போலும் அழகிய நோக்கத்தை யுடையவளாகிய உமாதேவி களிக்க, ஒப்பற்ற பெரிய நடத்தை அழகிய மத்தளமுழக்கும்படி அருள்புரிந்த தேவதேவனே, உன் திருவடியைச் சேர்ந்தேன், செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளியிருப்பவனே, மும்மதில்களை யெரித்தழித்தல் முதலிய செய்த நின் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை) மானைநோக்கி - உமாதேவியை நோக்கி எனினுமாம். (8)

அறிவினுல் மிக்கவ றுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
எறியுமாகடலிலங்கையர்கோனைத்
துளங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

(ப-ரை) அறிவினுல் மிக்க - அறிவினுற் சிறந்த, அறுவகை சமயம்-அறுவகைச் சமயங்களை யுடைய, அவரவர்க்கு - அவரவர்களுக்கு, அங்கே - அவ்விடத்தில், ஆர் அருள் புரிந்து - அரிய அருளைச் செய்து, எறியும் - அலைகள் வீசுகிற, மாகடல் – பெரிய கடல் சூழ்ந்த, இலங்கையர் கோனை - இலங்கையர்க்கரசனுகிய ராவணனை, துளங்க - நடுங்கும்படி, மால் - பெரிய, வரைக்கீழ் - மலையின் கீழ், அடர்த்திட்டு - அமுக்கி, குறிகொள் பாடலின் - குறித்துப் பாடுகின்ற பாடலின், இன் இசைகேட்டு - இனிய இசையைக் கேட்டு, கோலவாளொடு - அழகிய வாளாயுதத்துடன், நாளது கொடுத்த - ஆயுளையும் கொடுத்த, செறிவுகண்டு - அன்பைப்பார்த்து, உன் திருவடியடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும் பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே-எழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) அறிவினாற் சிறந்த அறுவகைச் சமயங்களையுடைய அவரவர்களுக்கு அவ்விடத்தில் அரிய அருளைச் செய்து அலைகள் வீசுகிற பெரிய கடல் சூழ்ந்த இலங்கையர்க்கரசனாகிய ராவணனை நடுங்கும்படி, பெரிய மலையின் கீழ் அமுக்கி, குறித்துப் பாடுகின்ற பாடலின் இனிய இசையைக் கேட்டு, அழகிய வாளாயுதத்துடன் ஆயுளையும் கொடுத்த அன்பைப் பார்த்து உன் திருவடியைச சேர்ந்தேன், செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருப்புன்கூரி லெழுந்தருளி யிருப்பவனே, அறுசமயத்தார்க்கும் அவ்வவர் விரும்பினபடி யருள்செய்த நின் கொள்கை கண்டு, உன் திருவடி யடைந்தே னென்பதாம்.

(வி-ரை.) மால்வரை யென்றது கயிலாய மலையை. (9)

கம்பமால்களிற்றின் னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண் ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்ட னுள்ளத்தா லுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவரருவினையிலரே.

(ப-ரை.) கம்பம் - கட்டுத்தறியிற் சட்டப்படுகிற, மால் - மதமயக்கத்தை யுடைய, களிற்றின் உரியானை-யானைத் தோலையுடையவனை, காமன் காய்ந்தது - மன்மதனை யெரித்ததாகிய, ஓர் கண் உடையானை - ஒரு கண்ணை யுடையவனை, செம்பொன்னே ஒக்கும் - செம் பொன்னையே நிகர்க்கிற, திருவுருவானை - திரு மேனியையுடையவனை, செழும்பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர்-திருப்புன்கூரில், உள்ளானை-எழுந்தருளி யிருப்பவனை, உம்பர் ஆளியை-தேவர்களுக்குள்ளே சிறந்தவனை, உமையவள் கோனை-உமாநாயகனை, ஊரன் வன்றொண்டன்-சுந்தரன், உள்ளத்தால் உகந்து-மனத்தால் விரும்பி, அன்பினால் சொன்ன-அன்பினாற் சொல்லிய, அருந்தமிழ்-அரிய தமிழ்ப்பாடல்கள், ஐந்தோடு ஐந்தும்-பத்தும், வல்லவர்-கற்று வல்லவர், அரு-ஒழித்தற் கரிதாகிய, வினை-வினையை, இலர்-இல்லாதவராவார் எ-று.

(பொ-ரை.) கட்டுத்தறியிற் கட்டப்படுகிற மதமயக்கத்தையுடைய யானைத் தோலை யுடையவனை, மன்மதனை யெரித்ததாகிய ஒரு கண்ணையுடையவனை, செம்பொன்னை நிகர்க்கிற திருமேனியையுடையவனை, செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனை, தேவர்களுக்குள்ளே சிறந்தவனை, உமாநாயகனை, சுந்தரன் மனத்தால் விரும்பி அன்பினாற் சொல்லிய அரிய தமிழ்ப் பாடல்கள் பத்தும் கற்று வல்லவர் ஒழித்தற்கரிதாகிய வினையை இல்லாதவராவார்.

(க-ரை.) திருப்புன்கூர்ச் சிவபிரானை வன்றொண்டன் புகழ்ந்து பாடின் இந்தப் பத்துப்பாடலுங் கற்றுவல்லார் அருவினைக் காளாகார் என்பதாம்.

(வி-ரை.) ஆளி சிறந்தவன் என்னும் பொருளில் வந்தது. ஓர்கண்-நெற்றிக்கண். (10)

**திருச்சிற்றம்பலம்.**

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவலோகநாதர். தேவியார் - சொக்கநாயகி.

---

## திரு நீடூர்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஊர்வதோர்விடையொன்றுடையானை
யொண்ணுதற்றனிக்கண்ணுதலானைக்
காரதார்கறைமாமிடற்றானைக்
கருதலார்புரமூன்றெரித்தானை
நீரில்வாளைவரால்குதிகொள்ளு
நிறைபுனற்கழனிச்செல்வநீடூர்
பாருளார்பாவித்தொழநின்ற
பரமனைப்பணியாவிடலாமே.

(ப-ரை.) ஊர்வது - தவழ்ந்து செல்வதாகிய, விடை ஒன்று உடையானை - ஒரு எருதினையுடையவனை, ஒள் நுதல் - ஒள்ளிய நெற்றியில், தனிக்கண் நுதலானை - ஒற்றைக்கண்ணுள்ள நெற்றியையுடையவனை, கார் ஆர் - கருமை பொருந்திய, கறை - நஞ்சினையுடைய, மாமிடற்றானை - அழகிய கண்டத்தை யுடையவனை, கருதலார் - பகைவருடைய, புரம் மூன்று எரித்தானை - முப்புரத்தைச் சுட்டவனை, நீரில் - நீரில், வாளை - வாளைமீன்கள், வரால்-வரால்மீன்கள், குதிகொள்ளும் - குதிக்கிற, நிறைபுனல் - நிறைநீருள்ள, கழனிச் செல்வம்-கழனிச் செல்வம் நிறைந்த, நீடூர் - திருநீடூரில், பார் உள்ளார் - உலகத்துள்ளோர், பாவித்தொழ நின்ற பரமனை - துதித்து வணங்க நின்ற மேலோனை, பணியா விடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) தவழ்ந்து செல்வதாகிய ஒரு எருதினையுடையவனை, ஒள்ளிய நெற்றியில் ஒற்றைக்கண்ணுள்ளவனை, கருமை பொருந்திய நஞ்சினையுடைய அழகிய கண்டத்தையுடையவனை, பகைவருடைய முப்புரத்தைச் சுட்டவனை, நீரில் வாளைமீன்கள் வரால்மீன்கள் குதிக்கிற நிறை நீருள்ள கழனிச்செல்வம் நிறைந்த திருநீடூரில் உலகத்துள்ளோர் துதித்து வணங்கநின்ற மேலோனை, வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீரேச் சிவபெருமானைப் பணியாது விடலாமோ என்பதாம்.

(வி-ரை.) சாரது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. மிடறு - கண்டம். கருதலார் - மதியாதவர். (பகைவர்) பணியாது எனற் பாலது பணியா என ஈறு தொகுத்தல் பெற்றது. (1)

துன்னுவார்சடைத்தூமதியானைத்
துயக்கறும்வகைதோன்றுவிப்பானைப்
பன்னுநான்மறைபாடவல்லானைப்
பார்த்தனுக்கருள்செய்தபிரானை
யென்னையின்னருளெய்துவிப்பானை
யேதிலார்தமக்கேதிலன்றன்னைப்
புன்னைமாதவிபோதலர்நீரேப்
புனிதனைப்பணியாவிடலாமே.

(ப-ரை.) துன்னும் - நெருங்கிய, வார்சடை - நீண்ட சடையிலணிந்த, தூமதியானை-வெள்ளிய பிறையையணிந்தவனை, துயக்கு அறும் வகைதோன்றுவிப்பானை - தொடர்பறும் வகையைத் தோன்றுவிப்பவனை, பன்னும் - சொல்லப்பட்ட, நான் மறை பாட வல்லானை - நால்வேதங்களையும் பாடவல்லவனை, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, அருள் செய்த பிரானை-அருள்செய்த பிரானை, என்னை - அடியேனை, இன் அருள் எய்து விப்பானை - இனிய அருளைப் பெறுவிப்பவனை, எதிலார் தமக்கு - அயலார்க்கு, எதிலன் தன்னை - அயலாவானை, புன்னை மாதவிப்போது - புன்னை மாதவி மலர்கள், அலர் - மலர்தற்கிடமாகிய, நீரே - திருநீரேரி லெழுந்தருளிய, புனிதனை - பரிசுத்தனை, பணியா விடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) நெருங்கிய நீண்ட சடையிலணிந்த வெள்ளிய பிறையையணிந்தவனை, தொடர்பறும் வகையைத் தோன்றுவிப்பவனை, சொல்லப்பட்ட நால்வேதங்களையும் பாடவல்லவனை, அருச்சுனனுக்கு அருள்செய்த பிரானை, அடியேனை இனிய வருளைப் பெறுவிப்பவனை, அயலார்க்கு அயலாவானை, புன்னை மாதவிமலர்கள் மலர்தற்கிடமாகிய திருநீரேரி லெழுந்தருளிய பரிசுத்தனை வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீரேச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) மாதவி - குருக்கத்தி. (2)

கொல்லுமுழவிலைவேலுடையானைக்
கொடியகாலனையுங்குமைத்தானை
நல்லவாறெறிகாட்டுவிப்பானை
நாளுநாமுகக்கின்றபிரானை

யல்லலில்லருளேபுரிவானை
யாடுநீர்வயல்சூழ்புனல்நீடூர்க்
கொல்லைவெள்ளெருதேறவல்லானைக்
கூறிநாம்பணியாவிடலாமே.

(ப-ரை.) கொல்லும் -(பகைவரை) கொல்லுகிற, மூவிலைவேல் உடையானை - முத்தலைச் சூலத்தை யுடையவனை, கொடிய காலனையும் குமைத்தானை - கொடிய யமனையும் உதைத்தவனை, நல்லவான் நெறிகாட்டு விப்பானை - நல்ல நெறி வழிகாட்டுவிப்பவனை, நாளும் நாம் உகக்கின்ற பிரானை - தினந்தோறும் யாம் விரும்புகிற உபகாரசீலனை, அல்லல் இல் - துன்பமில்லாமைக் கேதுவாகிய, அருளேபுரிவானை - கருணைசெய்வோனை, ஆடும் - அசையாநின்ற, நீர் - நீரினை யுடைய, வயல்சூழ் - வயல்கள் சூழ்ந்த, நலம் நீடு - சிறந்த திருநீடூரிலுள்ள, கொல்லை வெள் எருது ஏற வல்லானை - கொல்லுகிற வெள் ளேற்றின்மீது ஏற வல்லவனை, கூறி - புகழ்ந்து, நாம் - யாம், பணியாவிடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) (பகைவரை) கொல்லுகிற முத்தலைச் சூலத்தை யுவடையவனை, கொடிய யமனையும் உதைத்தவனை, நல்ல நெற்வழி காட்டுவிபபவனை, தினந் தோறும் யாம் விரும்புகிற உபகாரசீலனை, துன்பமில்லாமைக் கேதுவாகிய கருணை செய்வோனை, அசையாநின்ற நீரினையுடைய வயல்சள் சூழ்ந்த சிறந்த திருநீடூரிலுள்ள கொல்லுகிற வெள் ளேற்றின்மீது ஏற வல்லவனை, புகழ்ந்து யாம் வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை) திருநீடூர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) காலனையும் என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. நல்லவான் நெறி-முத்திநெறி. குமைத்தல் - வருத்தல். (3)

தோடுகாதிடுதூநெறியானைத்
தோற்றமுந்துறப்பாயவன்றன்னைப்
பாடுமாமறைபாடவல்லானைப்
பைம்பொழிற்குயில்கூவிடமாடே
யாடுமாமயிலன்னமோடாட
வலைபுனற்கழனித்திருநீடூர்
வேடனாயபிரானவன்றன்னை
விரும்பிநாம்பணியாவிடலாமே.

(ப-ரை.) தோடு - குழையை, காது இடு - காதிலணிகிற, தூநெறியானை - நன்னெறியையுடையவனை, தோற்றமும் - பிறப்பும், துறப்பு ஆயவன் தன்னை - இல்லாதவனை, பாடும் மாமறை பாடவல்லானை - பாடுதற்குரிய பெரிய வேதங்களைப் பாடவல்லவனை, பைம்பொழில் - பசிய சோலையில், குயில் கூவிட-குயில் கூவாநிற்க, மாடே - அயலிலே, ஆடும் மாமயில் - ஆடாநின்ற அழகிய மயில்கள், அன்னமோடு ஆட - அன்னங்களோடு விளையாட, அலைபுனல் கழனி - அலையா

நின்ற நீர் நிறைந்த கழனிகளையுடைய, திருநீரே் - திருநீரேர், வேடன் ஆய பிரானவன் தன்னை - வேடனாகிய பெருமானை, விரும்பி - இச்சித்து, நாம் - யாம், பணியாவிடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) குழையை காதிலணிகிற நன்னெறியை யுடையவனை, பிறப்புமில்லாதவனை, பாடுதற்குரிய பெரிய வேதங்களைப் பாடவல்லவனை, பசிய சோலையில் குயில் கூவாநிற்க, அம்பலிலே ஆடாநின்ற அழகிய மயில்கள் அன்னங்களோடு விளையாட அலையாநின்ற நீர் நிறைந்த கழனிகளையுடைய திருநீரேர் வேடனாகிய பெருமானை இச்சித்து யாம் வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீரேர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) துறப்பு ஆயவன் - துறந்தவன். (இல்லாதவன்) பாடுமாமறை யென்பதில் பாடு பெருமை யெனினுமாம். (4)

குற்றமொன் றடியாரிலரானாற்
கூடுமா றதனைக்கொடுப்பானைக்
கற்றகல்வியி லும்மினியானைக்
காணப்பேணுமவர்க்கெளியானை
முற்றவைஞ்சுந் துறந்திருப்பானை
மூவரின் முதலாயவன் றன்னைச்
சுற்றுநீள் வயல்சூழ் திருநீரேர்த்
தோன் றலைப்பணியாவிடலாமே.

(ப-ரை.) அடியார் குற்றம் ஒன்று இலர் ஆனால்-தொண்டர் குற்றம் சிறிதும் இல்லாதவராயின், கூடும் ஆறு அதனை தன்னை யடையும் நெறியை, கொடுப்பானை-எனக்குத் தருபவனை, கற்ற கல்வியினும் இனியானை-யாம் கற்ற கல்வியினும் இனியவனை, காணப் பேணுமவர்க்கு-காணவிரும்புவார்க்கு, எளியானை-எளியவனா யிருப்பவனை, ஐஞ்சும்-ஐம்பொறிகளையும், முற்ற துறந்திருப்பானை-முழுதும் விட்டிருப்பவனை, மூவரில் முதல் ஆயவன் தன்னை-திரிமூர்த்திகளிலும் முதன்மையானவனை, சுற்றும்-சுற்றிலும், நீர்-நீரினையுடைய, வயல்சூழ்-வயல்கள் சூழ்ந்த, திருநீரேர்த்தோன்றலை-திருநீரேரிலெழுந்தருளியிருக்கிற பெரிய பெருமானை, பணியாவிடலாமே-வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) தொண்டர் குற்றம் சிறிதுமில்லாதவராயின் தன்னையடையும் நெறியை எனக்குத் தருபவனை, யாம் கற்ற கல்வியினும் இனியவனை, காண விரும்புவார்க்கு எளியவனா யிருப்பவனை, ஐம்பொறிகளையும் முழுதும் விட்டிருப்பவனை, திரிமூர்த்திகளிலும் முதன்மையானவனை, சுற்றிலும் நீரினையுடைய வயல்கள் சூழ்ந்த திருநீரேரிலிருக்கிற பெரிய பெருமானை, வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீரேர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) மூவரில் என்றது மூவர்க்கும் என்றபடி. (உருபு மயக்கம்.) (5)

காடிலாடியகண்ணுதலானைக்
  காலனைக்கடிந்திட்டபிரானைப்
பாடியாடும்பரிசேபுரிந்தானைப்
  பற்றினோடுசுற்றமொழிப்பானைத்
தேடிமாலயன்காண்பரியானைச்
  சித்தமுந்தெளிவார்க்கெளியானைக்
கோடிதேவர்கள்கும்பிடுநீடூர்க்
  கூத்தனைப்பணியாவிடலாமே.

(ப-ரை.) காடில் ஆடிய கண்ணுதலானை-சுடுகாட்டிலாடின நெற்றிக்கண்ணனை, காலனைக் கடிந்திட்ட பிரானை-யமனைக்கோவித்த பெருமானை, பாடி ஆடும் பரிசே புரிந்தானை-பாடியாடுந் தொழிலையே எனக்குத் தந்தவனை, பற்றினோடு சுற்றம் ஒழிப்பானை - இருவகைப் பற்றுடனே உறவினையும் நீக்கியருள்வோனை மால் அயன் தேடி காண்பு அரியானை-திருமாலும் பிரமனும் தேடிக் காண்டற் கருமையாயிருந்தவனை, சித்தமும் தெளிவார்க்கு-மனத்தெளிவுடையவர்க்கு, எளியானை - எளியனானவனை, கோடி தேவர்கள் கும்பிடும் நீடூர்க்கூத்தனை - கோடி தேவர்கள் கும்பிடுகிற நீடூர்நடத்தனை, பணியாவிடலாமே-வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை) சுடுகாட்டிலாடிய நெற்றிக்கண்ணையுடையவனை, யமனைக்கோவித்தபெருமானை, பாடியாடுந் தொழிலையே எனக்குத் தந்தவனை, இருவகைப் பற்றுடனே உறவினையும் நீக்கி யருள்வோனை, திருமாலும் பிரமனுந்தேடிக் காண்டற் கருமையாயிருந்தவனை, மனத்தெளிவுடையவர்க்கு எளியனானவனை, கோடிதேவர்கள் கும்பிடுகிற நீடூர்நடத்தனை, வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீடூர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) காடில் - காட்டில். கண்ணுதலான் - நெற்றிக்கண்ணன். பரிசு - தன்மை. புரிதல் - செய்தல். கூத்தன் - நடமாடுவோன். கோடியென்றது பல வென்னும் பொருள் குறித்தது. (6)

விட்டிலங்கெரியார்கையினானை
  வீடிலாதவியன்புகழானைக்
கட்டுவாங்கந்தரித்தபிரானைக்
  காதிலார்கனகக்குழையானை
விட்டிலங்குபுரிநூலுடையானை
  வீந்தவர்தலையோடுகையானைக்
கட்டியின்கரும்போங்கியநீடூர்க்
  கண்டுநாம்பணியாவிடலாமே.

(ப-ரை.) விட்டு இலங்கு - வெளிப்பட்டு விளங்குகிற எரிஆர் கையினானை - நெருப்பேந்திய கையினையுடையவனை, வீடு இல்லாத - நீங்காத, வியன் புகழானை - பெரும்புகழை யுடையவனை, கட்டு வாங்கம் தரித்த பிரானை - மழுவைத்தரித்த பெருமானை, காதில் ஆர் - செவியிற் பொருந்திய, கனகக்குழையானை - பொற்குழையணிந்தவனை, விட்டு இலங்கு - ஒளியைப் பரப்பி விளங்குகிற புரிநூல் உடையானை - உபவீதத்தையுடையவனை, வீந்தவர் - இறந்தாருடைய, தலையோடு - தலையோட்டை, கையானை - கையிலுடையவனை, கட்டியின் கரும்பு - வெல்லக்கட்டியைத் தருகிற இனிய கரும்புகள், ஓங்கிய - உயர்ந்து வளர்தற்குரிய, நீடூர் - திருநீடூரை, கண்டு - தரிசித்து, நாம் - யாம், பணியாவிடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) வெளிப்பட்டு விளங்குகிற நெருப்பேந்திய கையினை யுடையவனை, நீங்காத பெரும்புகழையுடையவனை, மழுவைத்தரித்த பெருமானை, செவியிற் பொருந்திய பொற்குழையணிந்தவனை, ஒளியைப் பரப்பி விளங்குகிற உபவீதத்தை யுடையவனை, இறந்தாருடைய தலையோட்டை கையிலுடையவனை, வெல்லக்கட்டியைத் தருகிற இனிய கரும்புகள் உயர்ந்து வளர்தற்குரிய திருநீடூரை தரிசித்து யாம் வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை,) திருநீடூர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) வீடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர். கட்டுவாங்கம் - சிவாஸ்த்ரவிசேஷம். (7)

**மாயமாயமனங்கெடுப்பானை**
**மனத்துளேமதியாயிருப்பானைக்**
**காயமாயமுமாக்குவிப்பானைக்**
**காற்றுமாய்க்கனலாய்க்கழிப்பானை**
**யோயுமாறுறுநோய்புணர்ப்பானை**
**யொல்லைவல்வினைகள்கெடுப்பானை**
**வேய்கொள்தோளுமைபாகனைநீடூர்**
**வேந்தனைப்பணியாவிடலாமே.**

(ப-ரை.) மாயம் ஆய - மாயமாகிய, மனம் கெடுப்பானை - மனத்தை யழிப்பவனை, மனத்துள்ளே மதியாய் இருப்பானை - மனத்தில் அறிவாயிருப்பவனை, காயம் - உடம்பாகிய, மாயமும் - மாயப்பொருளையும், ஆக்குவிப்பானை - உண்டாக்குவோனை, காற்றும் ஆய் கனல் ஆய் கழிப்பானை-வாயுவுமாகி நெருப்புமாகி அவற்றைப் போக்குவோனை, ஓயுமாறு - இறக்கும்படி, உறும் - வந்தடைகிற, நோய் புணர்ப்பானை - நோயைக் கூட்டுபவனை, ஒல்லை - விரைவில், வல்வினைகள் கெடுப்பானை - வலிய வினையை யழிப்பவனை, வேய் கொள் தோள் - மூங்கிலின் தன்மையைக் கொண்ட தோள்களையுடைய, உமைபாகனை - உமைபங்

கனை, நீடூர்வேந்தனை - திருநீடூர்க்காரசனை, பணியாவிடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) மாயமாகிய மனத்தை யழிப்பவனை, மனத்தில் அறிவாயிருப்பவனை, உடம்பாகிய மாயப் பொருளையும் உண்டாக்குவோனை, வாயுவுமாகி நெருப்புமாகி அவற்றைப் போக்குவோனை, இறக்கும்படி வந்தடைகிற நோயைக் கூட்டுபவனை, விரைவில் வலிய வினையை யழிப்பவனை, மூங்கிலின் தன்மையைக் கொண்ட தோள்களையுடைய வுமைபங்கனை, திருநீடூர்க்காரசனை, வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீடூர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ என்பதாம்.

(வி-ரை.) மதி - அறிவு. ஒய்தல் - தளர்தல் எனினுமாம். புணர்த்தல் - சேர்த்தல். (8)

கண்டமுங்கறுத்திட்டபிரானைக்
காணப்பேணுமவர்க்கெளியானைத்
தொண்டரைப்பெரிதும்முகப்பானைத்
துன்பமுந்துறந்தின்பினியானைப்
பண்டைவல்வினைகள்கெடுப்பானைப்
பாகமாமதியானவன்றன்னைக்
கெண்டைவாளைகிளர்புனல்நீடூர்க்
கேண்மையார்ப்பணியாவிடலாமே.

(ப-ரை.) கண்டமும் கறுத்திட்டபிரானை - திருமிடறு கறுத்த பெருமானை, காணப்பேணுமவர்க்கு எளியானை - காண விரும்புவோர்க்கு எளியனாயிருப்பவனை, தொண்டரைப் பெரிதும் உகப்பானை அடியாரை மிகவும் மகிழ்வோனை, துன்பமும் துறந்து - துன்பத்தை யொழித்து, இன்பு இனியானை - இன்பந்தருதலில் இனியவனை, பண்டை வல்வினைகள் கெடுப்பானை-பழைய வல்வினையை யழிப்பவனை, பாகம் ஆம் மதியான் அவன் தன்னை - சந்திரகண்டத்தை யுடையவனை, கெண்டைவாளை கிளர்புனல் - கெண்டை மீன்களும் வாளைமீன்களும் மிகுந்த நீரினையுடைய, நீடூர்க்கேண்மையான் - நீடூரில் விருப்பமுள்ளவனை, பணியாவிடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை) திருமிடறு கறுத்தபெருமானை, காண விரும்புவோர்க்கு எளியனாயிருப்பவனை, அடியாரை மிகவும் மகிழ்வோனை, துன்பத்தை யொழித்து இன்பந் தருதலில் இனியவனை, பழைய வல்வினையை யழிப்பவனை, சந்திரகண்டத்தையுடையவனை, கெண்டை மீன்களும் வாளை மீன்களும் மிகுந்த நீரினையுடைய நீடூரில் விருப்பமுள்ளவனை, வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீடூர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) பாகமாமதி - பிளவாகிய சந்திரன், கேண்மை - கேளாந்தன்மை. விருப்பம்) (9)

அல்லலுள்ளனதீர்த்திடுவானை
யடைந்தவர்க்கமுதாயிடுவானைக்
கொல்லைவல்லரவம்மசைத்தானைக்
கோலமார்கரியின்னுரியானை
நல்லவர்க்கணியானவன்றன்னை
நானுங்காதல்செய்கின்றபிரானை
யெல்லிமல்லிகையேகமழ்நீடு
ரேத்திநாம்பணியாவிடலாமே.

(ப-ரை.) அல்லல் உள்ளன தீர்த்திடுவானை - துன்பமாயுள்ள வற்றை யொழிப்பவனை, அடைந்தவர்க்கு - அடுத்தவர்க்கு, அமுது ஆயிடுவானை-அமிர்தமாவானை, கொல்லை - கொல்லுந் தொழிலமைந்த, வல் - வலிய, அரவம் - பாம்பை, அசைத்தானை - கச்சையாகக் கட்டினவனை, கோலம் ஆர் - அழகு பொருந்திய, கரியின் உரியானை - யானைத்தோலையுடையவனை, நல்லவர்க்கு - நல்லோருக்கு, அணியானவன் தன்னை - ஆபரணம் போன்றிருப்பவனை, நானும் காதல் செய்கின்ற பிரானை - நானும் விரும்புகிற பெருமானை, எல்லி - இராக்காலத்தில், மல்லிகைகமழ் - மல்லிகைமலர்கள் மணக்கின்ற, நீடூர் - திருநீடூரில், ஏத்தி - துதித்து, நாம் - யாம், பணியாவிடலாமே - வணங்காது விடக்கூடுமோ எ-று.

(பொ-ரை.) துன்பமாயுள்ளவற்றை யொழிப்பவனை, அடுத்தவர்க்கு அமிர்தமாவானை, கொல்லுந்தொழிலமைந்த வலிய பாம்பை கச்சையாகக் கட்டினவனை, அழகு பொருந்திய யானைத்தோலை யுடையவனை, நல்லோருக்கு ஆபரணம் போன்றிருப்பவனை, நானும் விரும்புகிற பெருமானை, இராக்காலத்தில் மல்லிகைமலர்கள் மணக்கின்ற திருநீடூரில் துதித்து யாம் வணங்காது விடக்கூடுமோ.

(க-ரை.) திருநீடூர்ச் சிவபிரானைப் பணியாது விடலாமோ வென்பதாம்.

(வி-ரை.) அசைத்தல் - கட்டுதல். நானும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. பொல்லேனுகிய நானும் என்பது பொருள். (10)

பேரோராயிரமும்முடையானைப்
பேரினற்பெரிதும்மினியானை
நீருர்வார்சடைநின்மலன்றன்னை
நீடூர்நின்றுகந்திட்டபிரானை
யாரூரன்னடிகாண்பதற்கன்பா
யாதரித்தழைத்திட்டவிம்மாலை
பாரூரும்பரவித்தொழவல்லார்
பத்தராய்முத்திதாம்பெறுவாரே.

(ப-ரை.) பேர் ஓர் ஆயிரமும் உடையானை - ஆயிரந் திருநாம முடைய வனை, பேரினும் பெரிதும் இனியானை-பேரினுல் மிகவும் இனியவனை, நீர் ஊர் வார் சடை - கங்கை தங்கிய நீண்ட சடையையுடைய, நின்மலன் தன்னை - மல விமுத்தனை, நீரேர் நின்று உகந்திட்ட பிரானை - திருநீரேரில் நிலைபெற்று மகிழ்ந்த பெருமானை, ஆரூரன்-சுந்தரன், அடிகாண்பதற்கு - திருவடியைத் தரிசிப்பதற்கு, அன்பாய் - அன்புபூண்டு, ஆதரித்து - விரும்பி, அழைத்திட்ட இம் மாலை - அழைத்த இந்தத் தமிழ்மாலையை, பார் ஊரும் பரவித்தொழவல்லார் - உலகத்திலும் ஊர்களிலும் வாழ்த்தி வணங்கவல்லவர், பத்தர் ஆய் - தொண்டராய், முத்திபெறுவார் - மோக்ஷத்தையடைவார் எ-று.

(பொ-ரை.) ஆயிரந் திருநாம முடையவனை, பேரினுல் மிகவும் இனியவனை, கங்கை தங்கிய நீண்ட சடையையுடைய மலவிமுத்தனை, திருநீரேரில் நிலை பெற்று மகிழ்ந்த பெருமானை, சுந்தரன் திருவடியைத் தரிசிப்பதற்கு அன்பு பூண்டு விரும்பி அழைத்த இந்தத் தமிழ்மாலையை உலகத்திலும் ஊர்களிலும் வாழ்த்தி வணங்கவல்லவர் தொண்டராய் மோக்ஷத்தையடைவார்.

(க-ரை.) திருநீரேர்ச் சிவபிரானை ஆரூரன் புகழ்ந்துரைத்த இந்தத் தமிழ்ச் சொன்மாலையைக் கற்று வல்லவர் பத்தராய் முத்தியடைவர் என்பதாம்.

(வி-ரை.) ஆதரித்தல் - விரும்பல். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சோமநாதேசுவரர். தேவியார்பெயர் - வேயுறுதோளியம்மை.

---

## திருவாழ்கொளிபுத்தூர்
பண் - தக்கேசி
திருச்சிற்றம்பலம்

தலைக்கலன் றலைமேற்றரித்தானைத்
தன்னையென்னை நினைக்கத்தருவானைக்
கொலைக்கையானையுரிபோர்த்துகந்தானைக்
கூற்றுதைத்தகுரைசேர்கழலானை
யலைத்தசெங்கண்விடையேறவல்லானை
யானையாலடியேனடிநாயேன்
மலைத்தசெக்நெல்வயல்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) தலைக்கலன் - தலைமாலையை, தலைமேல் தரித்தானை,- திருமுடி மீது தரித்தவனை, என்னை தன்னை நினைக்கத்தருவானை - என்னை தன்னை நினைக்கும்படி நியமித்தவனை, கொலை கையானை உரிபோர்த்து உகந்தானை -

கொலைக்குரிய துதிக்கையினையுடைய யானைத்தோலைப் போர்த்து மகிழ்ந்தவனே, கூற்று உதைத்த - யமனையுதைத்த, குரைசேர் - சத்திக்கிற, கழலானை - திருவடியையுடையவனை, அலைத்த செங்கண்விடை -(பகைவரை) வருத்துகிற செங்கண்ணையுடைய இடபத்தின்மேல், ஏறவல்லானை - ஏறவல்லவனே, ஆணையால் - தன் கட்டளையால், அடியேன் அடிநாயேன் - அடிமைத்தொழிலையுடைய நாயினேன், மலைத்த - மிகுதியாகிய செந்நெல்வயல்-(சூழ்ந்த), வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) தலைமாலையை திருமுடிமீது தரிப்பவனே, என்னை தன்னை நினைக்கும்படி நியமித்தவனே, கொலைக்குரிய துதிக்கையினையுடைய யானைத் தோலைப் போர்த்து மகிழ்ந்தவனே, யமனையுதைத்த சத்திக்கிற திருவடியை யுடையவனே, (பகைவரை) வருத்துகிற செங்கண்ணையுடைய இடபத்தின்மேல் ஏறவல்லவனே, தன் கட்டளையால் அடிமைத்தொழிலையுடைய நாயினேன், மிகுதியாகிய செந்நெல்வயல் (சூழ்ந்த) திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை) திருவாழ் கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து நான் வேறு எதனை நினைக்கக்கடவேன் என்பதாம்.

(வி-ரை.) என்னை நியமித்தவனே யென வியையும். கொலைக்கை யென்பதில் கை துதிக்கை. அலைத்தல் - வருத்துதல். (1)

படைக்கட்சூலம்பயிலவல்லானைப்
பாவிப்பார்மனம்பாவிக்கொண்டானைக்
கடைக்கட்பிச்சையைக்காதலித்தானைக்
காமனாகந்தனைக்கட்டழித்தானைச்
சடைக்கட்கங்கையைத்தாழவைத்தானைத்
தண்ணீர்மண்ணிக்கரையானைத்தக்கானை
மடைக்கணீலமலர்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) படைக்கண் - படைகளுள்ளே, சூலம் - சூலப்படையை, பயிலவல்லானை-பழகவல்லவனே, பாவிப்பார் மனம் பாவிக்கொண்டானை—, கடைக்கண் - வாயில்கள் தோறும், பிச்சையைக்காதலித்தானை-பிக்ஷையை விரும்பினவனே, காமன் ஆகத்தை கட்டழித்தானை-மன்மதனது சரீரத்தை யெரித்தவனே, சடைக்கண் கங்கையைத் தாழவைத்தானை - சடையில் கங்கையைத் தங்கவைத்தவனே, தண்ணீர் மண்ணி கரையானை - தண்ணீர் சூழ்ந்த மண்ணிகரையானை, தக்கானை - தகுந்தவனே, மடைக்கண் -மடைகளில், நீலம்மலர் — நீலங்கள் மலர்கிற, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தரு

ளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) படைகளுள்ளே சூலப்படையை பழகவல்லவனை, பாவிப்பார் மனம் பாவிக்கொண்டானை, வாயில் தோறும் பிக்ஷையை விரும்பினவனை, மன்மதனது சரீரத்தை எரித்தவனை, சடையில் சங்கையைத் தங்கவைத்தவனை, தண்ணீர்சூழ்ந்த மண்ணிக்கரையானை, தகுந்தவனை, மடைகளில் நீலங்கள் மலர்கிற திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ் கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான்வேறெதனை நினைக்கக்கடவே னென்பதாம்.

(வி-ரை.) படை - ஆயுதம் பாவித்தல் - நினைத்தல். ஆகம் - உடல். நீலம் - கருங்குவளை. (2)

வெந்தநீறுமெய்பூசவல்லானை
　வேதமால்விடையேறவல்லானை
யந்தமாதியறிதற்கரியானை
　யாறலைத்தசடையானையம்மானைச்
சிந்தையென்றடுமாற்றறுப்பானைத்
　தேவதேவனென்சொல்முனியாதே
வந்தெனுள்ளம்புகும்வாழ்கொளிபுத்தூர்
　மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை) வெந்த நீறு மெய்பூச வல்லானை - சுட்ட திருநீற்றினைத் தன் திருமேனியில் பூசவல்லானை, வேதமால் விடை யேறவல்லானை - வேதரூபமாகிய அழகிய பெரிய எருதின்மேலேறவல்லவனை, அந்தம் ஆதி அறிவரியானை - முடிவும் முதலும் அறிதற் கரியவனை, ஆறு அலைத்த சடையானை - கங்காநதியால் அலைக்கப்பட்ட சடையையுடையவனை, அம்மானை - தந்தையை, சிந்தை - மனத்திலுள்ள, என் தடுமாற்று அறுப்பவனை - என் தடுமாற்றத்தை ஒழிப்பவனை, தேவதேவன் - தேவர்களுக்குத்தேவன், என் சொல்முனியாதே - என் சொல்லை வெறுக்காமல், வந்து என் உள்ளம்புகும் - வந்து என்மனத்தில் புகுகிற வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளி புத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) சுட்ட திருநீற்றினைத் தன் திருமேனியில் பூசவல்லவனை, வேதரூபியாகிய அழகிய பெரிய எருதின்மேலேறவல்லவனை, முடிவும் முதலும் அறிதற்கரியவனை, கங்காநதியால் அலைக்கப்பட்ட சடையையுடையவனை, தந்தையை, மனத்திலுள்ள என் தடுமாற்றத்தை ஒழிப் வனை, தேவர்களுக்குத்தேவன், என் சொல்லை வெறுக்காமல் வந்தென்மனத்திற் புகுகிற திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான் வேறெதனை நினைக்கக் கடவேன் என்பதாம்.

(வி-ரை.) வேதமால் விடையேற வல்லானை யென்பதற்கு வேதவிடையேற வல்லானை யென்றும், மால் விடையேற வல்லானை யென்றும் பொருளுரைத்துக் கொள்க. ஆறு - ஆகாயகங்கை தடுமாற்று - தடுமாற்றம். (3)

தடங்கையான்மலர்தூய்த்தொழுவாரைத்
  தன்னடிக்கேசெல்லுமாறுவல்லானைப்
படங்கொள்நாகமரையார்த்துகந்தானைப்
  பல்லின்வெள்ளைத்தலையூணுடையானை
நடுங்கவானையுரிபோர்த்துகந்தானை
  நஞ்சமுண்டுகண்டங்கறுத்தானை
மடந்தைபாகனைவாழ்கொளிபுத்தூர்
  மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) தடம்கையால் - பெரிய கையினால், மலர்தூய் தொழுவாரை - மலர்களைத் தூவி வணங்குவோரை, தன் அடிக்கே செல்லுமாறு வல்லானை - தன் திருவடிக்கண்ணே செலுத்தும் வழியில் வல்லவனை, படம் கொள் நாகம் அரை ஆர்த்து உகந்தானை - படத்தையுடைய பாம்பை அரையிற்கட்டிய பெருமானை, பல்லின் - பல்லோடுகூடிய, வெள்ளைத்தலை - வெண்டலையில், ஊண் உடையானை - அமுதுண்டலையுடையவனை, நடுங்க ஆனை உரிபோர்த்து உகந்தானை - நடுங்கும்படி யானைத்தோல் போர்த்து மகிழ்ந்தவனை, நஞ்சம் உண்டு கண்டம் கறுத்தானை - விடமுண்டதனால் கறுத்த கண்டத்தை யுடையவனை, மடந்தைபாகனை - பெண்பாகனை, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என்நினைக்கேன் — மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) பெரிய கையினால் மலர்களைத்தூவி வணங்குவோரை, தன் திருவடிக்கண்ணே செலுத்தும் வழியில் வல்லவனை, படத்தையுடைய பாம்பை அரையிற் கட்டியபெருமானை, பல்லோடுகூடிய வெண்டலையில் அமுதுண்டலை யுடையவனை, நடுங்கும்படி யானைத்தோல் போர்த்து மகிழ்ந்தவனை, விடமுண்டதனால் கறுத்த கண்டத்தை யுடையவனை, பெண்பாகனை, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான் வேறெதனை நினைக்கக்கடவேனென்பதாம்.

(வி-ரை.) தூய் - தூவி. செல்லுமாறு - செலுத்துமாறு. ஆர்த்தல் - கட்டுதல். ஊண் - முதனிலை திரிந்த தொழிற்பெயர். (4)

வளைக்கைமுன் கைமலைமங்கைமணாளன்
மாரனுடல்நீறெழச்செற்றுத்
துளைத்தவங்கத்தொடு தூமலர்க்கொன்றை
தோலுநூலுந் துதைந்தவரைமார்பன்
திளைக்குந்தெவ்வர் திரிபுரமூன்று
மவுணர்பெண்டிருமக்களும்வேவ
வளைத்தவில்லியைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) வளைக்கை முன்கை மலைமங்கை மணாளன்-வளையணிந்த கையாகிய முன்கையையுடைய மலைமங்கைகணவனை, மாரனுர் உடல்நீறு எழ - மன்மதனுடம்பு பொடியாக, செற்று - எரித்து, துளைத்த அங்கத்தொடு – குறைத்த அங்கத்துடன், தூமலர்க்கொன்றை - பரிசுத்தமாகிய மலர்களையுடைய கொன்றைகள், தோலும் நூலும் துதைந்த - தோலும் நூலும் அணிந்த, வரைமார்பன் - மலைபோலகன்ற திருமார்பினையுடையவன், திளைக்கும்-நிரம்பின, தெவ்வர் - பகைவருடைய, திரிபுரம் மூன்றும் - ஜங்கமபட்டணங்கள் மூன்றும், அவுணர் பெண்டிரும் மக்களும் - அரக்கருடைய மனைவிமக்களும், வேவ வளைத்த வில்லியை - கெட்டழியவளைத்த வில்லையுடையவனை, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) வளையணிந்த கையாகிய முன்கையையுடைய மலைமங்கை கணவனை, மன்மதனுடம்பு பொடியாக வெரித்து குறைத்த அங்கத்துடன் பரிசுத்தமாகிய மலர்களையுடைய கொன்றைகள், தோலும் நூலுமணிந்த மலைபோலகன்ற திருமார்பினை யுடையவன் நிரம்பின பகைவருடைய ஜங்கம பட்டணங்கள் மூன்றும் அரக்கருடைய மனைவிமக்களும் கெட்டழிய வளைத்த வில்லையுடையவனை, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ் கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான்வேறெதனை நினைக்கக்கடவேன் என்பதாம்.

(வி-ரை.) அங்கம்-எலும்பு. வரை - மலை. திரிபுரம் மூன்று - திரியாநின்ற முப்புரம்,(திரிபுரம்-ஜங்கமபட்டணம்.) திரிபுரம்வினைவித்தொகை நிலைத்தொடர்.

திருவினாயகனாகியமாலுக்
கருள்கள்செய் திடுந்தேவர்பிரானை
யுருவினானையொன்றுவறிவொண்ணு
மூர்த்தியை விசயற்கருள்செய்வான்

செருவிலேந்தியோர்கேழற்பின்சென்று
செங்கண்வேடனாயென்னொடும்வந்து
மருவினான்றனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) திருவின் நாயகன் ஆகிய மாலுக்கு - லக்ஷ்மீநாதனாகிய திருமாலுக்கு, அருள்கள் செய்திடும் - அருள்களைச் செய்த, தேவர்பிரானை-தேவராஜனை, உருவினானை-உருவுடையவனை, ஒன்றா-ஒருபொருளாக, அறிவொண்ணா மூர்த்தியை-அறியவொண்ணாத திருவுருவமுடையவனை, விசயற்கு அருள்செய்வான்-அருச்சுனனுக்கு அருள்செய்யும் பொருட்டு, செரு - போர்த்தொழிலுக்குரிய, வில் எந்தி-வில்லைத்தாங்கி, ஓர் கேழல் பின்சென்று-ஒரு பன்றியின் பின்சென்று, செங்கண்வேடனாய் - செவந்த கண்ணையுடைய வேடுவனாகி, என்னொடும்வந்து மருவினான் தன்னை - என்னோடுவந்து கூடினவனை, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை-திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) லக்ஷ்மீநாதனாகிய திருமாலுக்கு அருள்களைச்செய்த தேவராஜனை, உருவுடையவனை, ஒருபொருளாக அறியவொண்ணாத திருவுருவமுடையவனை, அருச்சுனனுக்கு அருள்செய்யும் பொருட்டு போர்த்தொழிலுக்குரிய வில்லைத்தாங்கி ஒரு பன்றியின் பின்சென்று செவந்த கண்களையுடைய வேடுவனாகி என்னோடுவந்து கூடினவனை, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை, நினைக்கக்கடவேன்.

(கு-ரை.) திருவாழ் கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான் வேறெதனை நினைக்கக் கடவே னென்பதாம்.

(வி-ரை.) திரு - இலக்குமி. உருவினான் - அழகன். ஒன்று ஆ - ஒரு பொருளாக. செய்வான் என்பதில் வான் எதிர்காலவினையெச்ச விகுதி. மருவுதல் - பொருந்துதல். (6)

எந்தையையெந்தைதந்தைபிரானை
யேதமாயவிடர்தீர்க்கவல்லானை
முந்தியாகியமூவரின்மிக்க
மூர்த்தியைமுதல்காண்பரியானைக்
கந்தின்மிக்ககரியின்மருப்போடு
காரகிற்கவரிம்மயிர்மண்ணி
வந்துவந்திழிவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) எந்தையை - என் தந்தையை, எந்தை தந்தை பிரானை - பாட்டனை, எதம் ஆய - குற்றமாகிய, இடர்தீர்க்க வல்லானை - துன்பத்தையொழிக்க

வல்லவனை, முந்தி ஆகிய – முன்னமேயுண்டாயிருக்கிற, மூவரில் மிக்க மூர்த்தியை மூவரினும் மேலான மூர்த்தியை, முதல்காண்பு அரியானை - தொடக்கங்கள் காண்டற்கரியவனை, கந்தில்-கட்டுத்தறியிற் கட்டப்படுகிற, மிக்க-மேலான, கரியின் மருப்பொடு – யானைக்கொம்புடனே, கார் அகில் கவரிமயிர் - சிறந்த அகிற்கட்டைக் கவரிமாமயிர், (என்பவற்றால்) மண்ணிவந்து வந்து இழி - அலங்கரிக்கப்பட்டு வந்து வந்திறங்குகிற, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை -- திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன்-மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை) என் தந்தையை என் பாட்டனை குற்றமாகிய துன்பத்தை யொழிக்கவல்லவனை, முன்னமே யுண்டாயிருக்கிற மூவரினும் மேலான மூர்த்தியை, தொடக்கங்கள் காண்டற்கரியவனை, கட்டுத்தறியிற்கட்டப்படுகிற மேலான யானைக்கொம்புடனே சிறந்த அகிற்கட்டை கவரிமாமயிர் என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டு வந்திறங்குகிற திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(கு-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான் வேறெதனை நினைக்கக்கடவே னென்பதாம்.

(வி-ரை.) முதல் - ஆதி. காண்பு - காண்டல் கந்து - கட்டுத்தறி. மருப்பு-கொம்பு. மண்ணல் - அலங்கரித்தல். (7)

தேனையாடியகொன்றையினானைத்
 தேவர்கைதொழுந்தேவர்பிரானை
யூனமாயினதீர்க்கவல்லானை
 யொற்றையேற்றனைநெற்றிக்கண்ணனைக்
கானவானையின்கொம்பினைப்பீழ்ந்த
 கள்ளப்பிள்ளைக்குங்காண்பரிதாய
வானநாடனைவாழ்கொளிபுத்தூர்
 மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) தேனை ஆடிய - தேனைப்பொருந்திய, கொன்றையினானை-கொன்றை மலர் மாலையை யுடையவனை, தேவர் கைதொழும் தேவர்பிரானை-தேவர் அஞ்சலிக்கிற தேவராஜனை, ஊனம் ஆயின தீர்க்க வல்லானை - குறைகளெல்லாவற்றையும் ஒழிக்கவல்லவனை, ஒற்றை ஏற்றனை - ஒற்றை யெருதை யுடையவனை, நெற்றிக்கண்ணனை - நெற்றிக்கண்ணை யுடையவனை, கானம்ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த - காட்டானைக்கொம்மை முறித்த, கள்ளப்பிள்ளைக்கும் - கிருஷ்ணனுக்குப், காண்பு அரிதாய - காண்டற்கரிதான, வானநாடனை-முத்தியுலகத்தை யுடையவனை, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) தேனைப் பொருந்திய கொன்றைமலர் மாலையை யுடையவனை, தேவர் அஞ்சலிக்கிற தேவராஜனை, குறைக ளெல்லாவற்றையும் ஒழிக்க வல்லவனை, ஒற்றை யெருதையுடையவனை, நெற்றிக்கண்ணையுடையவனை, காட்டானைக் கொம்பை முறித்த கிருஷ்ணனுக்கும் காண்டற்கரிதான முத்திபுலத்தையுடையவனை, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து நான் வேறெதனை நினைக்கக்கடவே னென்பதாம்.

(வி-ரை.) தேனை ஆடிய - தேனைப்பொருந்திய. வண்டுகள் மொய்க்கின்ற எனினுமாம். (௪)

காளையாகிவ் வரையெடுத்தான்றன்
கைகளிற்றவன் மொய்தலையெல்லா
மூளைபோதவொரு விரல்வைத்த
மூர்த்தியைமுதல்காண்பரியானைப்
பாளைதெங்குபழம் வீழமண்டிச்
செங்கண்மேதிகள்சேடெறிந்தெங்கும்
வாளைபாய்வயல்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) காளை ஆகி - யவ்வன பருவமுடையவனாய், வரையெடுத்தான் - மலையைத்தூக்கினவன், தன் கைகள் இற்று - தன் கரங்கள் ஒடிந்து, அவன் மொய்தலையெல்லாம் - அவனது நெருங்கிய தலைகளெல்லாம், மூளைபோத - மூளைவெளிப்பட, ஒருவிரல் வைத்த மூர்த்தியை - ஒற்றை விரலூன்றிய மூர்த்தியை, முதல்காண்பு அரியானை - காரணங் காண்டற்கரியவனை, பாளைதெங்கு பழம் வீழ - பாளைகளோடு தென்னம் பழங்கள் உதிர, மண்டி - நெருங்கி, செங்கண்மேதிகள் - செவந்த கண்களையுடைய எருமைகள், எங்கும்சேடு எறிந்து - எவ்விடத்தும் சேடெறிந்து, வாளைபாய் - வாளைகள் பாய்கின்ற, வயல் - வயல் சூழ்ந்த, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) யவ்வன பருவமுடையவனாய் மலையைத்தூக்கினவன், தன் கரங்கள் ஒடிந்து அவனது நெருங்கிய தலைகளெல்லாம் மூளை வெளிப்பட ஒற்றைவிரலூன்றிய மூர்த்தியை, காரணங் காண்டற்கரியவனை, பாளைகளோடு தென்னம் பழங்களுதிர நெருங்கி, செவந்த கண்களையுடைய எருமைகள் எவ்விடத்தும் சேடெறிந்து வாளைகள் பாய்கின்ற வயல்சூழ்ந்த திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து, நான் வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான்வேறெதனை நினைக்கக்கடவேன் என்பதாம்.

(வி-ரை.) காளையாகி வரையெடுத்தான் என்றது இராவணனை. முதல் அடி. சேடெறிதல் - சேடடித்தல் (பரம்படித்தல்) (9)

திருந்தநான்மறைபாடவல்லானைத்
தேவர்க்குந்தெரிதற்கரியானைப்
பொருந்தமால்விடையேறவல்லானைப்
பூதிப்பைப்புலித்தோலுடையானை
யிருந்துண்டேரருநின்றுண்சமணு
மேசநின்றவனாருயிர்க்கெல்லாம்
மருந்தனன்றனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) திருந்த - திருத்தமாக, நால்மறை பாடவல்லானை - நான்குவேதங்களையும் பாடவல்லவனை, தேவர்க்கும் தெரிதற்கு அரியானை - தேவர்க்கும் அறிதற்கரியவனை, பொருந்த - பொருத்தமாக, மால்விடை - பெரிய எருதின் மேல், ஏறவல்லானை - ஏறவல்லவனை, பூதிப்பை - திருநீற்றுப் பையினையும், புலித்தோல் உடையானை - புலித்தோலாடையையுமுடையவனை, இருந்து உண் - இருந்துண்ணுகிற, தேரரும் - தேரரும், நின்று உண்சமணும் - நின்றுண்ணுகிற சமணரும், ஏச நின்றவன் - வையநின்றவன், ஆர் உயிர்க்கு எல்லாம் - நிறைந்த வுயிர்களுக்கெல்லாம், மருந்து அன்னன் தன்னை - அமிர்தம் போன்றவனை, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என்நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) திருத்தமாக நான்குவேதங்களையும் பாடவல்லவனை, தேவர்க்கும் அறிதற்கரியவனை, பொருத்தமாக பெரிய எருதின்மேல் ஏறவல்லவனை, திருநீற்றுப்பையினையும் புலித்தோலாடையையு முடையவனை, இருந்துண்ணுகிற தேரரும் நின்றுண்ணுகிற சமணரும் வையநின்றவன் நிறைந்தவுயிர்களுக்கெல்லாம் அமிர்தம்போன்றவனை, திருவாழ்கொளிபுத்தூரில்எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(க-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து நான் வேறெதனை நினைக்கக்கடவேனென்பதாம்.

(வி-ரை.) பூதி - விபூதி. புலித்தோல் உடையான் என்பதற்கு புலித்தோலையுடையவன் என்றும், புலித்தோலாகிய ஆடை யணிந்தவன் என்றும் இருவகையாய்ப் பொருளுரைத்துக்கொள்க. இருந்துண்ணல் - உட்கார்ந்துண்ணல். (10)

மெய்யனைமெய்யில்நின்றுணர்வானை
மெய்யிலாதவர் தங்களுக்கெல்லாம்
பொய்யனைப்புரமூன்றெரித்தானைப்
புனிதனைப்புலித்தோலுடையானைச்
செய்யனைவெளிய திருநீற்றிற்
றிகழுமேனியன்மான்மறியேந்தும்
மைகொள்கண்டனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) மெய்யனை - உண்மையனை, மெய்யில் நின்று - எல்லாவுடம்புகளிலும் நின்று, உணர்வானை - அறியவல்லவனை, மெய்யில்லாதவர் தங்களுக்கெல்லாம் - பொய்யருக்கெல்லாம், பொய்யனை - பொய்யாயிருப்பவனை, புரம் மூன்று எரித்தானை - முப்புரத்தை யெரித்தவனை, புனிதனை - பரிசுத்தனை, புலித்தோல் உடையானை - புலித்தோலாகிய ஆடையையுடையவனை, செய்யனை - செந்நிறமுடையவனை, வெளிய திருநீற்றின் - வெண்மையாகிய திருநீற்றினால், திகழும் மேனியனை - விளங்குகிற திருமேனியையுடையவனை, மான் மறி ஏந்தும் - மான்கன்றினை யேந்துகிற, மைகொள் கண்டனை - நீலகண்டனை, வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என் நினைக்கேன் - மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் எ-று.

(பொ-ரை.) உண்மையனை, எல்லாவுடம்புகளிலும் நின்று அறிய வல்லவனை, பொய்யருக்கெல்லாம் பொய்யாயிருப்பவனை, முப்புரத்தை யெரித்தவனை, பரிசுத்தனை, புலித்தோலாகிய ஆடையை யுடையவனை, செந்நிற முடையவனை, வெண்மையாகிய திருநீற்றினால் விளங்குகிற திருமேனியை யுடையவனை, மான்கன்றினை யேந்துகிற நீலகண்டனை, திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(கு-ரை.) திருவாழ்கொளிபுத்தூர்ச் சிவபிரானை மறந்து, நான் வேறெதனை நினைக்கக்கடவே னென்பதாம்.

(வி-ரை.) செய்யன் - செந்நிறமுள்ளவன், செவ்வியன் எனினுமாம். வெளிய - வெண்மையாகிய. மை - கருநிறம். (11)

வளங்கிளர்பொழில்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனென்
றுளங்குளிர்தமிழூரன்வன்றொண்டன்
சடையன்காதலன்வனப்பகையப்பன்
நலங்கிளர்வயல்நாவலர்வேந்த
னங்கைசிங்கடிதந்தைபயந்த
பலங்கிளர்தமிழ்பாடவல்லார்மேற்
பறையுமாஞ்செய்தபாவங்கள்தாமே.

(ப-ரை) வளம் கிளர் பொழில் - வளமிக்க சோலைகள் சூழ்ந்த, வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை - திருவாழ் கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை, மறந்து என்நினைக்கேன் என்று - மறந்து வேறெதனை நினைக்கக் கடவேன் என்று, உள்ளம் குளிர் - மனம் குளிர்தற் குரிய, தமிழ் - தமிழ், ஊரன் வன்றொண்டன் சடையன் காதலன் வனப்பகையப்பன் நலம்கிளர் வயல் நாவலர் வேந்தன் நங்கை சிங்கடி தந்தை பயந்த - சுந்தரன் சொன்ன, பலம் கிளர் தமிழ் - பயன் நிறைந்த தமிழ்ப்பாடல்களை, பாடவல்லார் - பாடவல்லவர், மேல் செய்த - முன்னே செய்த, பாவங்கள் பறையும் - பாவங்கள் அவரைவிட்டோடும் எ-று.

(பொ-ரை) வளமிக்க சோலைகள்சூழ்ந்த திருவாழ்கொளிபுத்தூரில் எழுந்தருளியிருக்கிற மாணிக்கத்தை மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் என்று மனம் குளிர்தற்குரிய தமிழில் சுந்தரன் சொன்ன, பயன் நிறைந்த தமிழ்ப் பாடல்களை பாடவல்லவர் முன்னே செய்தபாவங்கள் அவரைவிட்டோடும்.

(கு-ரை.) திருவாழ்கொளி புத்தூர்ச் சிவபிரானை நாவலாரூரன் சொன்ன இத்தமிழ்ப் பாடலைப் பாடவல்லவருடைய பாவங்கள் ஓடும் என்பதாம்

(வி-ரை.) கிளர்தல் - உயர்தல். பறைதல் - ஓடல். (12)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணவீசுவரர். தேவியார் - வண்டார்பூங்குழலம்மை.

---

## திருக்கழுமலம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

சாதலும்பிறத்தலுந்தவிர்த்தெனைவகுத்துத்
தன்னருள்தந்தவெந்தலைவனைமலையின்
மாதினைமதித்தங்கோர்பால்கொண்டமணியை
வருபுனல்சடையிடைவைத்தவெம்மானை
யேதிலென்மனத்துக்கோரிரும்புண்டநீரை
யெண்வகையொருவனையெங்கள்பிரானைக்
காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்த
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை) சாதலும் பிறத்தலும் தவிர்த்து - இறப்பையும் பிறப்பையும் ஒழித்து, எனைவகுத்து - என்னைச்சிருட்டித்து, தன்னருள்தந்த எம்தலைவனை - தன்னருள் கொடுத்த எம்மிறைவனை, மலையின் மாதினை மதித்து - பார்வதிதேவியைத் திருவுள்ளத்திலெண்ணி, அங்கு ஓர் பால்கொண்ட - அங்

கொருபாகத் தமைத்துக்கொண்ட, மணியை—, வருபுனல் சடையிணட்டவைத்த —, பெம்மானை-பெருகிவந்த கங்கையை சடையிற்றரித்த பெருமானை, ஏதம் இல் - குற்றமில்லாத, என் மனத்துக்கு - என் மனத்துக்கு, ஓர் இரும்புண்ட நீரை — ஓர் இரும்புண்ட நீர்போல்வானை, எண்வகை — எண்வகையாகிய உருவத்தையுடைய, ஒருவனை - ஒப்பற்றவனை, எங்கள் பிரானை - எங்கள் பெருமானை, காதில் வெண்குழையனை - காதில் வெள்ளைக்குழையையுடையவனை, கடல்கொள்ள - கடல் கவர்ந்தபோது, மிதந்த - மிதந்திருந்த, கழுமலவளநகர் - கழுமல மென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(பொ-ரை.) இறப்பையும் பிறப்பையும் ஒழித்து என்னை சிருட்டித்து, தன்னருள்கொண்ட எம்மிறைவனை, பார்வதிதேவியைத் திருவுள்ளத்திலெண்ணி, அங்கொரு பாகத்தமைத்துக்கொண்ட மணியை, பெருகிவந்த கங்கையை சடையிற்றரித்த பெருமானை, குற்றமில்லாத என்மனத்துக்கு ஓர் இரும்புண்ட நீர்போல்வானை, எண்வகையாகிய உருவத்தையுடைய ஒப்பற்றவனை; எங்கள் பெருமானை, காதில் வெள்ளைக்குழையை யுடையவனை, கடல் கவர்ந்தபோது மிதந்திருந்த கழுமலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை.) இறப்புப் பிறப்புக்களை யொழித்தெம்மையாண்டருளுஞ் சிவபிரானைத் திருக்கழுமலத்தில் தரிசித்துக்கொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) வகுத்தல் - நியமித்தல். மலையின்மாது - உமாதேவி. பால் - பக்கம். இரும்புண்டநீர் - காய்ச்சப்பட்ட இரும்பினாற் கவரப்பட்ட நீர். எண்வகை ஒருவன் - அட்டமூர்த்தமாயிருக்கு மொருவன். கழுமலம் - சீகாழி. புனல் - கங்கை. (1)

மற்றொருதுணையினிமறுமைக்குங்காணேன்
வருந்தலுற்றேன்மறவாவரம்பெற்றேன்
சுற்றியசுற்றமுந்துணையென்றுகருதேன்
துணையென்றுநான்தொழப்பட்டவொண்சுடரை
முத்தியும்ஞானமும்வானவரறியா
முறைமுறைபலபலநெறிகளுங்காட்டிக்
கற்பனைகற்பித்தகடவுளையடியேன்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) மற்றொருதுணை இனி மறுமைக்கும் காணேன்—, வருந்தலுற்றேன் - துன்பமடைந்தேன், மறவாவரம் பெற்றேன் - மறவாவரம் பெற்றேன், சுற்றிய சுற்றமும் - சூழ்ந்த உறவினரையும், துணையென்று கருதேன் - துணையென்று நினையேன், துணையென்று நான்தொழப்பட்ட - துணையென்று நான் தொழுகின்ற, ஒள் சுடரை - பேரொளியை, முத்தியும் ஞானமும்—,

வானவர் அறியாமுறைமுறை—, பல பலநெறிகளும்காட்டி—, கற்பனை கற்பித்த கடவுளை - சற்பனையையுண்டாக்கிய சாமியை, அடியேன் - தொண்டனேன், கழுமலவளநகர்-கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன்-தரிசித்துக்கொண்டேன் எ-று.

(பொ-ரை.) மற்றொருதுணை இனி மறுமைக்கும் காணேன், துன்பமடைந்தேன், மறவாவரப்பெற்றேன், சூழ்ந்த உறவினரையும் துணையென்று நினையேன், துணையென்று நான் தொழுகின்ற பேரொளியை, முத்தியும் ஞானமும் வானவரறியா முறைமுறை பலபல நெறிகளும் காட்டி கற்பனையுண்டாக்கிய சாமியை, தொண்டனேன் கழுமலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை.) முத்திஞான முதலியவற்றை யெனக்குக் காட்டியருளின இறைவனை, திருக்கழுமலத்தில் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) மறுமை - மறுபிறப்பு. கருதல் - நினைத்தல். முத்தி - முத்திநெறி. ஞானம் - ஞானநெறி. (2)

திருத்தினைநகருறைசேந்தனப்பனென்
செய்வினையறுத்திடுஞ்செம்பொனையம்பொ
னொருத்தனையல்லதிங்காரையுமுணரே
னுணர்வுபெற்றேனுய்யுங்காரணந்தன்னால்
விருத்தனைப்பாலனைக்கனவிடைவிரவி
விழித்தெங்குங்காணமாட்டாதுவிட்டிருந்தேன்
கருத்தனைநிருத்தஞ்செய்காலனைவேலைக்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) திருத்தினை நகர் உறை சேந்தன்-திருத்தினை நகரில்வாழ்கிற சேந்தனுக்கு, அப்பன் - தந்தை, என் செய்வினை அறுத்திடும் செம்பொன்னை-என் செய்வினையை அறுக்கிற செம்பொன்னை, அம்பொன் ஒருத்தனை அல்லது - அழகிய பொன்போல்வானொருத்தனையன்றி, இங்கு ஆரையும் உணரேன் - இங்கே யொருவரையும் உணரமாட்டேன், உய்யும் காரணந்தன்னால்-பயன் உய்தல் காரணமாக, உணர்வுபெற்றேன் - அறிவுபெற்றேன், விருத்தனை - கிழவனை, பாலனை - இளையவனை, கனவிடைவிரவி - கனவிலும் வந்து கலந்து, விழித்து எங்கும் காணமாட்டாது—, விட்டிருந்தேனு - நீங்கியிருந்தேனு, கருத்தனை - மனத்திலுள்ளவனை, நிருத்தம்செய்காலனை - நடனம்செய்கிற திருவடியையுடையவனை, வேலை-கடல்சூழ்ந்த, கழுமலவளநகர் - கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(பொ-ரை) திருத்தினை நகரில் வாழ்கிற சேந்தனுக்கு தந்தை, என் செய்வினையை யறுக்கிற செம்பொன்னை, அழகிய பொன்போல்வானொருத்தனையன்றி, இங்கேயொருவரையும் உணரமாட்டேன், பயன்உய்தல் காரண

மாக அறிவுபெற்றேன், கிழவனை, இளையவனை, கனவில்வந்து கலந்துநீங்கியிருந்தேனே, மனத்திலுள்ளவனை, நடனம்செய்கிற திருவடியை யுடையவனை, கடல்சூழ்ந்த கழுமலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை.) திருத்தினை நகருறைதல் முதலியவற்றையுடைய இறைவனைத் திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) விருத்தன் - முதியன். நிருத்தம் செய்காலன் - நடனம்செய்கிற திருவடியை யுடையவன். (3)

மழைக்கரும்பும்மலர்க்கொன்றையினானை
வளைக்கலுற்றேன்மறவாமனம்பெற்றேன்
பிழைத்தொருகாலினிப்போய்ப்பிறவாமைப்
பெருமைபெற்றேன்பெற்றதார்பெறுகிற்பார்
குழைக்கருங்கண்டனைக்கண்டுகொள்வானே
பாடுகின்றேன்சென்றுகூடவும்வல்லேன்
கழைக்கரும்புங்கதலிபல்சோலைக்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) மழைக்கு அரும்பும் மலர்க்கொன்றையினானை - மழைக்கரும்புகிற கொன்றைமலரையுடையவனை, வளைக்கலுற்றேன் - வளையாநின்றேன், மறவாமனம் பெற்றேன் - மறவாதமனத்தைப் பெற்றிருக்க, பிழைத்து - தப்பி, ஒருகால் - ஒருதரம், இனிபோய் பிறவாமை - இனிச்சென்று பிறவாமையாகிய, பெருமைபெற்றேன் - பயனைப் பெற்றேன், பெற்றது - நான் பெற்றபேறு, யார் பெறுகிற்பார் - யார் பெறவல்லார், குழை - குழையணிந்த, கருங்கண்டனை-நீலகண்டனை, கண்டுகொள்வானே-கண்டுகொள்ளும் பொருட்டாகவே, பாடுகின்றேன் - பாடுகிறேன், சென்று கூடவும் வல்லேன் - போய்க்கலக்கவும் வல்லேன், கழை கரும்பு கதலி-(இவற்றாலாகிய) பல்சோலை—, (சூழ்ந்த), கழுமலவளநகர்-கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(பொ-ரை.) மழைக்கரும்புகிற கொன்றைமலரை யுடையவனை வளையாநின்றேன், மறவாத மனத்தைப்பெற்றிருக்கத், தப்பியொருதரம் இனிச்சென்று பிறவாமையாகிய பயனைப் பெற்றேன், நான் பெற்றபேறு யார் பெறவல்லார், குழையணிந்த நீலகண்டனை கண்டுகொள்ளும் பொருட்டாகவே பாடுகிறேன், போய்க்கலக்கவும் வல்லேன், பல்சோலை சூழ்ந்த கழுமல மென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை) கொன்றை மலர்மாலை முதலியவற்றையுடைய இறைவனை, திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை) பிறவாமை - பிறத்தலில்லாமை. பேறு - பயன். குழை-குண்டலம். கதலி - வாழை. கழை - மூங்கில். (4)

குண்டலங்குழைதிகழ்காதனேயென்றுங்
கொடுமழுவாட்படைக்குழகனேயென்றும்
வண்டலம்பும்மலர்க்கொன்றையனென்றும்
வாய்வெருவித்தொழுதேன்விதியாலே
பண்டைநம்பலமனமுங்களைந்தொன்றாய்ப்
பசுபதிபதிவினவிப்பலநாளுங்
கண்டலங்கழிக்கரையோதம்வந்துலவுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) குண்டலம் குழை திகழ் காதனே என்றும் - குண்டலமும் குழையும் விளங்குகிற செவியனே யென்றும், கொடுமழுவாட்படைக் குழகனே என்றும் - கொடிய மழுவாளாயுதத்தையுடைய அழகனே யென்றும், வண்டு அலம்பும் - வண்டுகள் சத்திக்கிற, மலர்க்கொன்றையன் என்றும் - கொன்றை மலர் மாலையை யணிந்தவனே யென்றும், வாய் வெருவித் தொழுதேன் - வாய்குழறி வணங்கினேன், விதியாலே - முறையாலே, பண்டை - பழமையாகிய, நம் - நமது, பலமனமும் களைந்து - பலமனத்தையும் வேர் அறுத்து, ஒன்று ஆய் - ஒன்றாகி, பசுபதி - சிவபிரானது, பதி - திருப்பதியை, வினவி - வினவி, பலநாளும் - எந்நாளும், கண்டல் அம் கழிக்கரை - தாழைக் காடு நெருங்கின அழகிய கழிக்கரையில், ஓதம் வந்து உலவும் - கடலலைகள் வந்துலாவுகிற, கழுமலவளநகர் - கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(பொ-ரை.) குண்டலமும் குழையும் விளங்குகிற செவியனே யென்றும், கொடிய மழுவாளாயுதத்தையுடைய அழகனே யென்றும், வண்டுகள் சத்திக்கிற கொன்றைமலர் மாலையை யணிந்தவனே யென்றும், வாய்குழறி வணங்கினேன், முறையாலே பழமையாகிய நமது பலமனத்தையும் வேரறுத்து ஒன்றாகி சிவபிரானது திருப்பதியை வினவி எந்நாளும் தாழைக்காடு நெருங்கின அழகிய கழிக்கரையில் கடலலைகள் வந்துலாவுகிற கழுமலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை.) குண்டலந்திகழ் காதனாகிய சிவபிரானைத் திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) வாட்படை - வாளாயுதம். அலம்பல் - சத்தித்தல். வாய் வெருவல் - வாய்குழறல். விதி-நியமம். பலமனம் - பலவிடத்துமோடுகின்ற மனம்.

வரும்பெரும்வல்வினையென் றிருந்தெண்ணி
வருந்தலுற்றேன்மறவாமனம்பெற்றேன்
விரும்பியென்மனத்திடைமெய்குளிர்ப்பெய்தி
வேண்டிநின்றேதொழுதேன்விதியாலே

யரும்பினையலரினையமுதினைத்தேனை
  யையனைமறவேனென்பிறவிவேரறுக்குங்
கரும்பினைப்பெருஞ்செந்நெல்நெருங்கியகழனிக்
  கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) வரும் பெரு வல்வினை யென்று - பெரிய வல்வினைகள் வருமே யென்று, இருந்து எண்ணி-இருந்து எண்ணமிட்டு, வருந்தலுற்றேன்-வருந்தா நின்றேன், மறவாமனம் பெற்றேன் - மறவாத மனத்தைப் பெற்றுக் கொண் டேன், விரும்பி என் மனத்திடை - என் மனத்தில் விருப்பம்பூண்டு, மெய் - உண்மையாகவே, குளிர்ப்பு எய்தி - குளிர்ச்சியடைந்து, வேண்டிநின்று தொழுதேன் - விரும்பிநின்று தொழுதேன், விதியாலே - விதிவகையாலே, அரும்பினை-அலரினை அமுதினை தேனை ஐயனை மறவேன்—, என் பிறவி வேர் அறுக்கும் கரும்பினை - என் பிறவியை வேரோடு களைகிற கரும்பை, பெருஞ் செந்நெல் நெருங்கிய கழனி - பெரிய செந்நெற்கழனி சூழ்ந்த, கழுமலவளநகர்- கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டு கொண்டேன் - தரிசித்துக்கொண் டேன் எ-று.

(பொ-ரை.) பெரிய வல்வினைகள் வருமேயென்று இருந்து எண்ணமிட்டு வருந்தாநின்றேன், மறவாத மனத்தைப் பெற்றுக்கொண்டேன், என்மனத்தில் விருப்பம்பூண்டு உண்மையாகவே குளிர்ச்சியடைந்து விரும்பிநின்று தொழு தேன், விதிவகையாலே அரும்பினை அலரினை அமுதினை தேனை ஐயனை மறவேன் என்பிறவியை வேரோடுகளைகிற கரும்பை, பெரிய செந்நெற்கழனிசூழ்ந்த கழு மலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை.) அரும்பு முதலியவாயிருக்கிற இறைவனைத் திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) அரும்பு - மொட்டு. அலர் - மலர். (6)

அயலவர்பரவவுமடியவர்தொழவு
  மன்பர்கள்சாயலுளடையலுற்றிருந்தேன்
முயல்பவர்பின்சென்றுமுயல்வலையானை
  படுமெனமொழிந்தவர்வழிமுழுதெண்ணிப்
புயலினைத்திருவினைப்பொன்னினதொளியை
  மின்னினதுருவையென்னிடைப்பொருளைக்
கயலினஞ்சேலொடுவயல்விளையாடுங்
  கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) அயலவர் - அயலார், பரவவும் - துதிக்கவும், அடியவர் வணங்க வும் - தொண்டர் தொழவும், அன்பர்கள் சாயலுள் - அன்பர்களுடைய சாய லுள்ளே, அடையலுற்றிருந்தேன் - சேர்ந்திருந்தேன், (எனெனின்) முயல்பவர் பின்சென்று - முயல்வோர் பின்னே போய், முயல்-முயல்வோருடைய, வலை -

வலையில், யானை படும் என-யானை யகப்படுமென்று, மொழிந்தவர் வழி முழுதும் எண்ணி - சொன்னவரது வழிமுழுதும் எண்ணியே, புயலினை — மேகத்தை, திருவினை - செல்வத்தை, பொன்னினது ஒளியை - பொன்னொளியை, மின்னினது உருவை - மின்வடிவை, என்னிடைப் பொருளை - என்னுள்ளிருக்கும் பொருளை, கயல் இனம் சேலொடு-கயல் மீன்களின் இனம் சேல்மீன்களோடு, வயல் விளையாடும்-வயல்களில் விளையாடுகிற, கழுமலவளநகர்-கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(பொ-ரை.) அயலார் துதிக்கவும் தொண்டர்தொழவும் அன்பர்களுடைய சாயலுள்ளே சேர்ந்திருந்தேன் (எனெனில்) முயல்வோர் பின்னேபோய் முயல்வோருடைய வலையில் யானை யகப்படுமென்று சொன்னவரது வழி முழுதும் எண்ணியே, மேகத்தை, செல்வத்தை, பொன்னொளியை, மின்வடிவை என்னுள்ளிருக்கும் பொருளை, கயல் மீன்களின் இனம் சேல்மீன்களோடு வயல்களில் விளையாடுகிற கழுமலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(கு-ரை.) மேக முதலிய வடிவாயிருக்கிற இறைவனைத் திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) சாயல் — சார்பு. திரு - செல்வம். இனம்-கூட்டம். (7)

நினைதருபாவங்களுசங்களாக
நினைந்துமுன்றொழுதெழுப்பட்டவொண்சுடரை
மலைதருமலைமகள்கணவனைவானோர்
மாமணிமாணிக்கத்தைமறைப்பொருளைப்
புனைதருபுகழனையெங்களதொளியை
யிருவருமொருவனென்றுணர்வரியவனைக்
கனைதருகருங்கடலோதம்வந்துலவுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) நினைதருபாவங்கள் - நினைக்கத்தக்க பாவங்கள், நாசங்களாக நினைந்து - நசிக்கும்படி யெண்ணி, முன் - முன்னே, தொழுது எழப்பட்ட - யாவரும் வணங்கி யெழுதற்குரிய, ஒண் சுடரை - நல்ல சோதியை, மலைதரும் மலைமகள் கணவனை - மலைபெற்ற மலைமகள் கொழுநனை, வானோர் மாமணி மாணிக்கத்தை - தேவர்களுடைய பெரிய மணியாகிய மாணிக்கத்தை, மறைப் பொருளை — வேதார்த்தத்தை, புனைதரு-யாவராலும் அலங்கரிக்கப்பட்ட, புகழனை - புகழாளனை, எங்களது ஒளியை-எங்களது சோதியை, இருவரும்-பிரமவிஷ்ணுக்களிருவரும், ஒருவனென்று-ஒப்பற்றவனென்று, உணர்வு அரியவனை-அறிதற்கரியவனை, கனைதரு- சத்திக்கிற, கருங்கடல் ஓதம் -கரிய கடலின் அலைகள், வந்து உலவும் - வந்து தவழ்கிற, கழுமலவளநகர் - கழுமலமென்னும் வளநகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(போ-ரை.) நினைக்கத்தக்க பாவங்கள் நசிக்கும்படி யெண்ணி முன்னே யாவரும் வணங்கியெழுதற்குரிய நல்ல சோதியை, மலைபெற்ற மலைமகள் கொழுநனை, தேவர்களுடைய பெரிய மணியாகிய மாணிக்கத்தை, வேதார்த்தத்தை, யாவராலும் அலங்கரிக்கப்பட்ட புகழாளனை, எங்களது ஒளியை, பிரம விஷ்ணுக்களிருவரும் ஒப்பற்றவனென்று அறிதற் கரியவனை, சத்திக்கிற கரியகடலின் அலைகள் வந்து தவழ்கின்ற கழுமலமென்னும் வளநகரத்தில் தரிசித்துக்கொண்டேன்.

(க-ரை.) யாவராலும் வணங்கப்படுதற் குரிய இறைவனைத் திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) மலைமகள் - உமாதேவி. இருவர் - அயன் அரி. கனைதால் - சத்தித்தல். கனைதாபகுதி. (8)

மறையிடைத் துணிந்தவர்மனையிடையிருப்ப
வஞ்சனைசெய் தவர்பொய்கையுமாயத்
துறையுறக்குளித்துள தாகவைத்துய்த்த
வுண்மையெனுந்தகவின்மையையோரேன்
பிறையுடைச்சடையனையெங்கள்பிரானைப்
பேரருளாளனைக்காரிருள்போன்ற
கறையணிமிடறுடையடிகளையடியேன்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) மறையிடை - வேதங்களால், துணிந்தவர் - நிச்சயித்தவர், மனையிடை இருப்ப வீட்டிலிருக்க, வஞ்சனை செய்தவர்-வஞ்சனை செய்தவருடைய, பொய்கையும் மாய - பொய்கையு மழிய, துறை உறக் குளித்துளதாக வைத்து உய்த்த - துறையிற் பொருந்தக்குளித்துள்ள பொருளாகவைத்து அமைத்த, உண்மை யென்னும் தகவின்மையை - மெய்யென்கிற தகுதியில்லாமையை, ஓரேன் - ஆராய்ந்தறியேன், பிறை உடைச்சடையனை - பிறையையணிந்த சடையை யுடையவனை, எங்கள்பிரானை - எம்பெருமானை, பேர் அருளாளனை - பெரிய கருணையுடையவனை, காரிருள்போன்ற - கரிய இருள்போன்ற, கறை அணி - நஞ்சத்தை யணிந்த, மிடறு உடை-கண்டத்தையுடைய, அடிகளை-சுவாமியை, அடியேன் – தொண்டனேன், கழுமலம் முதுநகர் - கழுமலமென்னும் பழைய நகரத்தில், கண்டுகொண்டேன் - தரிசித்துக்கொண்டேன் எ-று.

(போ-ரை.) வேதங்களால் நிச்சயித்தவர் வீட்டிலிருக்க, வஞ்சனை செய்தவருடைய பொய்கையு மழிய, துறையிற்பொருந்தக் குளித்துள்ள பொருளாக வைத்து அமைத்துள்ள, மெய்யென்கிற தகுதியில்லாமையை ஆராய்ந்தறியேன், பிறையையணிந்த சடையையுடையவனை, எம்பெருமானை, பெரிய கருணையுடையவனை, கரிய விருள்போன்ற நஞ்சத்தை யணிந்த கண்டத்தையுடைய சுவாமியை, தொண்டனேன் கழுமலமென்னும் பழைய நகரத்தில் தரிசித்துக் கொண்டேன்.

(க-ரை.) வேதங்களால் நிச்சயிக்கப்பட்ட இறைவனைத் திருக்கழுமலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி ரை.) பொய்கை - பொய்யொழுக்கம். தகவின்மை - தகுதியின்மை. ஓர்தல் - ஆராய்தல். (9)

செழுமலர்க்கொன்றையுங் கூவிளமலரும்
விரவியசடைமுடியடிகளைநினைந்திட்
டழுமலர்க்கண்ணிணையடியவர்க்கல்லா
லறிவரிதவன்றிருவடியிணையிரண்டுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டூரன்
சடையன்றன்காதலன்பாடியபத்துந்
தொழுமலரெடுத்தகையடியவர்தம்மைத்
துன்பமுமிடும்பையுஞ்சூழகிலாவே.

(ப-ரை) செழுமலர்க் கொன்றையும் - செழிய கொன்றைமலரையும், கூவிள மலரும் - வில்வமலரையும், விரவிய — கலந்தணிந்த, சடைமுடி அடிகளை - சடைமுடியையுடைய சுவாமியை, நினைந்திட்டு - நினைத்து, அழும்மலர்க்கண் இணை-அழாநின்ற மலர்போலும் இரு கண்களையுடைய, அடியவர்க்கு அல்லால் - தொண்டருக்கேயன்றி, அறிவு அரிது - அறிதற் கரிதாகிய, அவன் - அவனது, திருவடி இணை இரண்டும் - இரண்டு திருவடிகளையும், கழுமலம்-திருக்கழுமலமாகிய, வளநகர்—வளநகரில், கண்டு கொண்டு - தரிசித்துக் கொண்டு, (ஊரன் சடையன் தன் காதலன்-) சுந்தரன், பாடிய பத்தும் - பாடின பத்துப்பாடலாலும், தொழும்- வணங்குகிற, மலர் எடுத்தகை - மலரேந்திய கையினையுடைய, அடியவர் தம்மை - தொண்டரை, துன்பமும் இடும்பையும் - துன்பமும் இடும்பையும், சூழகிலா - சூழமாட்டா எ-று.

(பொ-ரை.) செழிய கொன்றைமலரையும் வில்வமலரையும் கலந்தணிந்த சடைமுடியையுடைய சுவாமியை நினைத்து அழாநின்ற மலர்போலும் இருகண்களையுடைய தொண்டருக்கேயன்றி அறிதற் கரிதாகிய அவனது இரண்டுதிருவடிகளையும் திருக்கழுமலமாகிய வளநகரில் தரிசித்துக்கொண்டு சுந்தரன்பாடின பத்துப் பாடலாலும், வணங்குகிற மலரேந்திய கையினையுடைய தொண்டரை துன்பமும் இடும்பையும் சூழமாட்டா.

(க-ரை.) திருக்கழுமலத்திறைவனை ஊரன் சொன்ன இந்தப் பத்துப் பாடல்களுங் கற்று வல்லாரை, துன்பங்கள் சூழமாட்டா என்பதாம்.

(வி ரை.) கூவிளம் - வில்வம். இணை இரண்டு - ஒன்றற்கொன்றொத்த இரண்டு. துன்பம் - மனநோய். இடும்பை - சரீரநோய். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரீசர். தேவியார் - திருநிலைநாயகி.

## திருவாரூர்

பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

**பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்**
**போகமுந்திருவும்புணர்ப்பானைப்**
**பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்**
**பிழையெலாந்தவிரப்பணிப்பானை**
**யின்னதன்மையனென்றறிவொண்ணு**
**வெம்மானையெளிவந்தபிரானை**
**யன்னம்வைகும்வயற்பழனத்தணி**
**யாரூரானைமறக்கலுமாமே.**

(ப-ரை.) பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை - பொன்னையும் உண்மையாகிய பொருளையும் கொடுப்பவனை, போகமும் திருவும் புணர்ப்பானை - போகத்தையும் செல்வத்தையும் கொடுப்பவனை, பின்னை - மேலும், என் பிழையைப் பொறுப்பானை - என் குற்றத்தைப் பொறுப்பவனை, பிழையெல்லாம் - குற்றமெல்லாம், தவிர - ஒழிய, பணிப்பானை - நியமிப்பவனை, இன்ன தன்மையன் என்று - இத்தன்மையனென்று, அறிவொண்ணு - அறியக்கூடாத, எம்மானை - எம்பெருமானை, எளிவந்த பிரானை - எமக்கெளியனுயிருக்கிற உபகாரகனை, அன்னம் வைகும் - அன்னங்கள் தங்குகிற - வயல்பழனத்து - வயற்பழனத்தின், அணி - அழகுவாய்ந்த, ஆரூரானை - திருவாரூரிலெழுந்தருளியிருப்பவனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) பொன்னையும் உண்மையாகிய பொருளையும் கொடுப்பவனை, போகத்தையும் செல்வத்தையும் கொடுப்பவனை, மேலும் என் குற்றத்தைப் பொறுப்பவனை, குற்றமெல்லாமொழிய நியமிப்பவனை, இத்தன்மையனென்று அறியக்கூடாத எம்பெருமானை, எமக் கெளியனுயிருக்கிற உபகாரகனை, அன்னங்கள் தங்குகிற வயற்பழனத்தின் அழகுவாய்ந்த திருவாரூரி லெழுந்தருளியிருப்பவனை மறத்தலும் கூடுமோ.

(க-ரை.) பொன் முதலியவற்றைத் தந்தருளுகிற திருவாரூரிறைவனை மறத்தல் கூடுமோவென்பதாம்.

(வி-ரை.) திரு - செல்வம். புணர்த்தல் - கூட்டுதல். பணித்தல் - நியமித்தல். வைகல் - தங்கல். வயற்பழனம் - வயல்சூழ்ந்த மருதநிலம். (1)

**கட்டமும்பிணியுங்களைவானைக்**
**காலற்சீறியகாலுடையானை**
**விட்டவேட்கைவெந்நோய்களைவானை**
**விரவினால்விடுத்தற்கரியானைப்**

பட்டவார்த்தைபடநின்றவார்த்தை
வாராமேதவிரப்பணிப்பானை
யட்டமூர்த்தியைமட்டவிழ்சோலை
யாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) கட்டமும் பிணியும் களைவானை - கஷ்டத்தையும் நோயையும் வேரறுப்பவனை, காலன்சீறிய - காலனையுதைத்த, கால் உடையானை - திருவடியையுடையவனை, விட்டவேட்கை - எம்மீது விடப்பட்ட ஆசையாகிய, வெம்நோய் களைவானை - கொடிய பிணியைக் களைவானை, விரவினல் - அடுத்தால், விடுத்தற்கு அரியானை-அடுத்தவரை விடமாட்டாதவனை, பட்டவார்த்தை-உண்டான வார்த்தை, படநின்ற வார்த்தை-உண்டாகப்போகிறவார்த்தை, வாராமே-உண்டாகாமல், தவிர - ஒழிய, பணிப்பானை-நியமிப்பவனை, அட்டமூர்த்தியை-எட்டுருவா யிருப்பவனை, மட்டு அவிழ்-தேன் பரவின, சோலை-சோலைகள் சூழ்ந்த, ஆரூரானை-திருவாரூரனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ, எ-று.

(பொ-ரை) கஷ்டத்தையும் நோயையும் வேரறுப்பவனை, காலனையுதைத்த திருவடியையுடையவனை, எம்மீது விடப்பட்ட ஆசையாகிய கொடிய பிணியைக் களைவானை, அடுத்தால் அடுத்தவரை விடமாட்டாதவனை, பட்டவார்த்தை படநின்ற வார்த்தை உண்டாகாம லொழிய நியமிப்பவனை, எட்டுருவாயிருப்பவனை, தேன்பரவின சோலைகள் சூழ்ந்த திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(கு-ரை.) கட்டமுதலியவற்றைத் தவிர்ப்பவனாகிய திருவாரூரிறைவனை மறத்தல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) அட்டமூர்த்தி - எட்டுருவாயிருப்பவன், எட்டுரு — பஞ்சபூதங்களும், சூரியனும், சந்திரனும், ஆன்மாவும். (2)

கார்க்கின்றமழையாய்ப்பொழிவானைக்
கலைக்கெலாம்பொருளாயுடன்கூடிப்
பார்க்கின்றவுயிர்க்குப்பரிந்தானைப்
பகலுங்கங்குலுமாகிநின்றானை
யோர்க்கின்றசெவியைச்சுவைதன்னை
யுணருநாவினைக்காண்கின்றகண்ணை
யார்க்கின்றகடலைமலைதன்னை
யாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) கார்க்கின்ற - கறுத்த, மழையாய் - மேகங்களாகி, பொழிவானை-நீரைச் சொரிவானை, கலைக்கு எல்லாம் - எல்லாக் கலைகளுக்கும், பொருளாய் - பொருளாகி, உடன்கூடி பார்க்கின்ற உயிர்க்கு - உடன்சேர்ந்து நோக்குகிற உயிர்களுக்கு, பரிந்தானை - இரங்கினவனை, பகலும் - பகற்பொழுதும், கங்குலும் - இராப்பொழுதும், ஆகிநின்றானை - ஆகிநிற்பவனை, ஓர்க்கின்றசெவியை-சத்தத்தை யறிகிற செவியை, சுவைதன்னை உணரும் நாவினை - சுவையறிகிற

நாவை, காண்கின்ற கண்ணை - பார்க்கின்ற கண்ணை, ஆர்க்கின்ற - ஒலிக்கின்ற, கடலை - சமுத்திரத்தை, மலைதன்னை - மலையை, ஆரூரனை - திருவாரூரனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) கறுத்த மேகங்களாகி நீரைச்சொரிவானை, எல்லாக் கலைகளுக்கும் பொருளாகி உடன் சேர்ந்து நோக்குகிற வுயிர்களுக் கிரங்கினவனை, பகற்பொழுதும் இராப்பொழுதும் ஆகிநிற்பவனை, சத்தத்தையறிகிற செவியை, சுவையறிகிற நாவை, பார்க்கிற கண்ணை, ஒலிக்கின்ற சமுத்திரத்தை, மலையை திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(க-ரை.) மேகமுதலியனவாய் நின்று நீர்சொரிதல் முதலியவற்றைச் செய்கிற திருவாரூரனை மறத்தல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) ஓர்த்தல் - கேட்டல். (3)

செத்தபோதினின்முன்னின்றுநம்மைச்
சிலர்கள்கூடிச்சிரிப்பதன்முன்னம்
வைத்தசிந்தையுண்டேமனமுண்டே
மதியுண்டேவிதியின்பயனுண்டே
முத்தனெங்கள்பிரானென்றுவானோர்
தொழநின்றதிமிலேறுடையானை
யத்தனெந்தைபிரானெம்பிரானை
யாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) செத்தபோதினில் - இறந்தபோது, முன்நின்று - எதிரேநின்று, நம்மை - எம்மை, சிலர்கள் கூடி - சிலபேர்சேர்ந்து, சிரிப்பதன் முன்னம் - நகைக்குமுன்னே, வைத்தசிந்தை உண்டே - வைத்த நினைவுண்டே, மனம் உண்டே - மனமுண்டே, மதிஉண்டே - அறிவுண்டே, விதியின்பயன் உண்டே - விதிப்பயனுண்டே, முத்தன் எங்கள்பிரான் என்று - முத்தனாகிய எம்பிரானே யென்று, வானோர் தொழநின்ற - தேவர்கள் வணங்கநின்ற, திமில்ஏறு உடையானை—, அத்தன் எந்தைபிரான் - அத்தனும் எந்தைபிரானுமாகிய, எம்பிரானை - எமது தலைவனை, ஆரூரானை - திருவாரூரனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) இறந்தபோது எதிரேநின்று எம்மை சிலபேர் சேர்ந்து நகைக்குமுன்னே, வைத்தநினைவுண்டே, மனமுண்டே, அறிவுண்டே, விதிப்பயனுண்டே, முத்தனாகிய எம்பிரானேயென்று தேவர்கள் வணங்கநின்ற, எமது தலைவனை, திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(க-ரை.) யாம் இறந்து பலர்கூடிச் சிரிப்பதன்முன்னமே திருவாரூரனை மறவாது சிந்திக்கவேண்டுமென்பதாம்.

(வி-ரை.) திமில் - முசுப்பு. ஏறு - எருது. விதியின்பயன் - ஊழின்பயன்.

செறிவுண்டேன்மனத்தாற்றெளிவுண்டேற்
றேற்றத்தால்வருஞ்சிக்கனவுண்டேல்
மறிவுண்டேல்மறுமைப்பிறப்புண்டேல்
வாணாண்மேற்செல்லும்வஞ்சகனுண்டேற்
பொறிவண்டாழ்செயும்பொன்மலர்க்கொன்றை
பொன்போலுஞ்சடைமேற்புனைந்தானை
யறிவுண்டேயுடலத்துயிருண்டே
யாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) செறிவு உண்டேல் - அடக்கமுண்டாயின், மனத்தால் தெளிவு உண்டேல் - மனத்தில் தெளிவுண்டாயின், தேற்றத்தால் வரும் - தெளிவினாலுண்டாகிற, சிக்கனவு உண்டேல் - உறுதிப்பாடு உண்டாயின், மறிவு உண்டேல் - மீட்சியுண்டாயின், மறுமைப்பிறப்பு உண்டேல் - மறுபிறப்புண்டாயின், வாணாள்மேல் செல்லும் வஞ்சகன் உண்டேல் - ஆயுள்மேல் வருகிற வஞ்சகன் உண்டாயின், பொறிவண்டு-புள்ளிகளையுடைய வண்டுகள், ஆழ் செய்யும் - தேனிலழுந்துகிற, பொன்மலர்க்கொன்றை - பொன்போலுங் கொன்றைமலர் மாலையை, பொன்போலும் சடைமேல் புனைந்தானை-பொன்போலும் சடைமீது தரித்தவனை, அறிவு உண்டே-உணர் வுண்டே, உடலத்து உயிர் உண்டே-உடம்பில் உயிர் உண்டே, ஆரூரானை - திருவாரூரனை, மறக்கலும் ஆமே – மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) அடக்கமுண்டாயின், மனத்தில் தெளிவுண்டாயின், தெளிவினாலுண்டாகிற உறுதிப்பாடு உண்டாயின், மீட்சியுண்டாயின், மறுபிறப்புண்டாயின், ஆயுள்மேல் வருகிற வஞ்சகன் உண்டாயின், புள்ளிகளையுடைய வண்டுகள் தேனிலழுந்துகிற பொன்போலுங் கொன்றைமலர் மாலையை சடைமீது தரித்தவனை, உணர்வுண்டே, உடம்பில் உயிர் உண்டே, திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(கு-ரை.) அடக்கம் தெளிவு முதலியன வளவாயிருக்கையில், திருவாரூரிறைவனை மறத்தல் கூடுமோ வென்பதாம்.

(வி-ரை.) சிக்கனவு - உறுதிப்பாடு. மறிவு - இறப்பு வாணாள்மேல் செல்லும் வஞ்சகன் - யமன். பொறி - புள்ளி. ஆழ் செய்தல் - ஒரு சொல்லாய் அழுந்தலென்னும் பொருடந்து நின்றது. (5)

பொள்ளலிவ்வுடலைப்பொருளென்று
பொருளுஞ்சுற்றமும்போகமுமாகி
மெள்ளநின்றவர்செய்வனவெல்லாம்
வாராமேதவிர்க்கும்விதியானை

வள்ளலெந்தமக்கேதுணையென்று
நாளுநம்மமரர்தொழுதேத்தும்
அள்ளலங்கழனிப்பழனத்தணி
யாரூரானைமறக்கலுமாமே

(ப-ரை.) பொள்ளல் - துவாரங்களையுடைய, இவ்வுடலை பொருள் என்று - இந்த வுடம்பைப் பொருளென்று, பொருளும் சுற்றமும் போகமும் ஆகி - பொருளும் உறவும் போகமுமாகி, மெள்ள நின்றவா செய்வன எல்லாம் வாராமே - பையநின்ற வண்ணம் செய்வனயாவும் வாராமல், தவிர்க்கும்-ஒழிக்கின்ற, விதியானை - முறைமையுடையவனை, வள்ளல் - வள்ளலே, எந்தமக்கு துணையென்று - எமக்குத் துணை நீயேயென்று, நாள் நாளும் - தினந்தோறும், அமரர் தொழுது ஏத்தும் - தேவர்கள் தொழுது துதிக்கிற, அள்ளல் அம் கழனிப் பழனத்து அணி-சேற்றினையுடைய அழகிய வயல்கள் சூழ்ந்த மருதநிலத்தையுடைய, ஆரூரானை - திருவாரூரனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) துவாரங்களையுடைய இந்த உடம்பைப் பொருளென்று, பொருளும் உறவும் போகமுமாகிபைய நின்றவண்ணம் செய்வனயாவும் வாராமல் ஒழிக்கின்ற முறைமையுடையவனை, வள்ளலே எமக்குத் துணை நீயே யென்று தினந்தோறும் தேவர்கள் தொழுது துதிக்கிற சேற்றினையுடைய அழகிய வயல்கள் சூழ்ந்த மருத நிலத்தையுடைய திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(கரு-.) திருவாரூர்ச் சிவபிரானை மறக்கலாமோ வென்பதாம்.

(வி-ரை.) போகம் - சுகாநுபவம். விதி-நியமம். வள்ளல் - ஔதார்யன். அள்ளல்-சேறு. (6)

கரியானையுரிகொண்டகையானைக்
கண்ணின்மேலொருகண்ணுடையானை
வரியானைவருத்தங்களைவானை
மறையானைக்குறைமாமதிசூடற்
குரியானையுலகத்துயிர்க்கெல்லா
மொளியானையுகந்துள்கிநண்ணாதார்க்
கரியானையடியேற்கெளியானை
யாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) கரியானை உரிகொண்ட கையானை - கறுத்த யானைத்தோலையுரித்த கையினை யுடையவனை, கண்ணின்மேல் ஒரு கண் உடையானை-இயற்கையாயிருக்கிற இரண்டு கண்களுக்கு மேலே ஒரு கண் உடையவனை, வரியானை - மேலானவனை, வருத்தம் களைவானை - துன்பத்தை யொழிப்பவனை, இறையானை - தலைவனை, குறைமாமதி சூடற்கு உரியானை-பிறைமதியைத் தரித்

தற்குரியவனை, உலகத்து உயிர்க்கு எல்லாம் ஒளியானை - உலகத் துயிர்களுக் கெல்லாம் ஒளியாயிருப்பவனை, உகந்து உள்கி நண்ணாதார்க்கு அரியானை-விரு ம்பிநினைத்து அடுக்காதவர்க்குஅரியவனை, அடியேற்கு எளியானை-அடியேனுக்கு எளியவனாயிருப்பவனை, ஆரூரானை-திருவாரூரனை, மறக்கலும் ஆமே-மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) மறுத்த யானைத்தோலை யுரித்த கையினையுடையவனை, இயற் கையாயிருக்கிற இரண்டு கண்களுக்கு மேலே ஒருகண்ணுடையவனை, மேலான வனை, துன்பத்தையொழிப்பவனை, தலைவனை, பிறைமதியைத் தரித்தற்குரிய வனை, உலகத்துயிர்களுக்கெல்லாம் ஒளியாயிருப்பவனை, விரும்பி நினைத்து அடுக் காதவர்க்கு அரியவனை, அடியேனுக்கு எளியவனாயிருப்பவனை, திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(க-ரை.) யானைத்தோல் முதலியவற்றையுடைய திருவாரூரிறைவனை மறக்கலாமோ வென்பதாம்.

(வி-ரை.) கையான்--வெறுப்பவன். வரியான்-நீண்டவன். உரியான்-தக்க வன். உள்கல்-நினைத்தல் நண்ணாதவர்-அடுக்காதவர். (7)

வாளாநின்றுதொழுமடியார்கள்
வானாளப்பெறும்வார்த்தையைக்கேட்டு
நாணாளும்மலரிட்டுவணங்கார்
நம்மையாள்கின்றதன்மையையோரார்
கேளாநான்கிடந்தேயுழைக்கின்றேன்
கிளைக்கெலாந்துணையாமெனக்கருதி
யாளாவான்பலர்முன்பழைக்கின்றே
னாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) வாளா நின்றுதொழும் அடியார்கள்-சும்மா நின்று வணங்குகிற தொண்டர், வான் ஆளப்பெறும் வார்த்தையைக்கேட்டு-மேலுலகத்தை யாளப் பெறுஞ் செய்தியைக் கேள்விப்பட்டு, நாள் நாளும் மலர் இட்டு வணங்கார் - எந் நாளும் மலர் தூவிப் பணியார், நம்மை ஆள்கின்ற தன்மையை ஓரார் - எம்மை யாளுந் தன்மையையும் ஆராய்ந்து பாரார், கேளா-கேட்டு, நான் கிடந்து உழைக் கின்றேன் - நான் கிடந்து கஷ்டப்படுகிறேன், கிளைக்கு எல்லாம் துணை ஆம் எனக்கருதி - எமது உறவினர்க்கெல்லாம் துணையாவனென்றெண்ணி, ஆள் ஆவான் - அடிமைப்படும் பொருட்டு, பலர் முன்பு அழைக்கின்றேன் - பலர்க் கெதிரே அழைக்கிறேன், ஆரூரானை-திருவாரூரனை, மறக்கலும் ஆமே மறத்த லும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) சும்மாநின்று வணங்குகிற தொண்டர் மேலுலகத்தையாளப் பெறுஞ் செய்தியைக் கேள்விப்பட்டு எந்நாளும் மலர்தூவிப் பணியார், எம்மை யாளுந் தன்மையையும் ஆராய்ந்து பாரார், கேட்டு நான் கிடந்து கஷ்டப்படு

கிறேன் எமது உறவினர்க்கெல்லாம் துணையாவனென்றெண்ணி அடிமைப் படும் பொருட்டு பலர்க்கெதிரே அழைக்கிறேன், திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(க-ரை) திருவாரூர்ச் சிவபிரானை மறக்கலாமோ வென்பதாம்.

(வி-ரை) ஓர்தல் - ஆராய்தல். கிளை - உறவு. கேளா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். உழைத்தல் – கஷ்டப்படுதல். (8)

விடக்கையேபெருக்கிப்பலநாளும
வேட்கையாற்பட்டவேதனைதன்னைக்
கடக்கிலேனெறிகாணவுமாட்டேன்
கண்குழிந்திரப்பார்கையிலொன்று
மிடக்கிலேன்பரவைத்திரைக்கங்கைச்
சடையானையுமையாளையோர்பாகத்
தடக்கினானையந்தாமரைப்பொய்கை
யாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) விடக்கையே பெருக்கி - மாமிச சரீரத்தையே பெருகச்செய்து, பலநாளும் வேட்கையால் - பலநாளும் ஆசையால், பட்ட வேதனைதன்னை - அடைந்த துன்பத்தை, கடக்கிலேன் - வெல்லகிலேன், நெறி - நன்னெறியை, காணவுமாட்டேன் – நல்வழியைக் காணவுமாட்டேன், கண்குழிந்து இரப்பார் கையில் - கண்கள் ஆழ்ந்து இரப்பவர் கையில், ஒன்றும் இடக்கிலேன் - ஒரு பொருளையுந் தரமாட்டேன், பரவைத்திரை கங்கைச்சடையானை - பரப்பாகிய அலைகளையுடைய கங்காநதியைச் சடையிலணிந்தவனை, உமையாளை ஓர் பாகத்து அடக்கினானை - உமாதேவியை ஒருபாகத்தில் அமைத்தவனை, அம்தாமரைப் பொய்கை - அழகிய தாமரைத் தடங்கள் சூழ்ந்த, ஆரூரானை - திருவாரூரனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) மாமிச சரீரத்தையே பெருகச்செய்து பலநாளும் ஆசையாலடைந்த துன்பத்தை வெல்லகிலேன், நல்வழியைக் காணவுமாட்டேன், கண்கள் ஆழ்ந்து இரப்பவர் கையில் ஒரு பொருளையுந் தரமாட்டேன், பரப்பாகிய அலைகளையுடைய கங்காநதியைச் சடையிலணிந்தவனை, உமாதேவியை ஒரு பாகத்தில் அமைத்தவனை, அழகிய தாமரைத் தடாகங்கள் சூழ்ந்த திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபிரானை மறக்கலாமோ வென்பதாம்.

(வி-ரை.) விடக்கு - தசை. இது ஆகுபெயராய் உடம்பை யுணர்த்திற்று. வேட்கை - ஆசை. கடத்தல் - வெல்லல். இரப்பவர் - யாசிப்பவர். இடக்கிலேன் - கொடுக்கிலேன். பரவை - பரப்பு. (கடல் போன்ற எனினுமாம்.) (9)

ஒட்டியாட்கொண்டுபோயொளித்திட்ட
 வுச்சிப்போதனைநச்சரவார்த்த
பட்டிமைப்பகலையிருள்தன்னைப்
 பாவிப்பார்மனத்தூறுமத்தேனைக்
கட்டியைக்கரும்பின்றெளிதன்னைக்
 காதலாற்கடற்சூர்தடிந்திட்ட
செட்டியப்பனைப்பட்டனைச்செல்வ
 வாரூரானைமறக்கலுமாமே.

(ப-ரை.) ஒட்டி ஆட்கொண்டு - தொடர்ந்து ஆட்கொண்டு, போய் ஒளித்திட்ட - போய் மறைந்த, உச்சிப்போதனை - உச்சிக்காலத்தானை, நச்சு அரவு ஆர்த்த - நஞ்சையுடைய பாம்பைக் கச்சையாகக் கட்டின, பட்டிமையை - திருடனை, பகலை - பகலாயிருப்பவனை, இருள் தன்னை - இருளாயிருப்பவனை, பாவிப்பார் மனத்து ஊறும்-நினைப்பவர் மனத்திற் சுரக்கின்ற, அத்தேனை - அந்தத்தேனை, கட்டியை - சர்க்கரைக்கட்டியை, கரும்பின் தெளிதன்னை-கருப்பஞ்சாற்றின் தெளிவை, காதலால் - விருப்பத்தால், கடல் - கடலின்கண், சூர்தடிந்திட்ட - சூரனைத்துணித்த, செட்டி - முருகவேளுக்கு, அப்பனை - தந்தையை, பட்டனை - அந்தணனை, செல்வம் - செல்வமிகுந்த, ஆரூரானை-திருவாரூரனை, மறக்கலும் ஆமே - மறத்தலும் கூடுமோ எ-று.

(பொ-ரை.) தொடர்ந்து ஆட்கொண்டு போய்மறைந்த உச்சிக்காலத்தானை, நஞ்சையுடைய பாம்பைக் கச்சையாகக் கட்டின திருடனை, பகலாயிருப்பவனை, இருளாயிருப்பவனை, நினைப்பவர் மனத்திற் சுரக்கின்ற அந்தத்தேனை, சர்க்கரைக்கட்டியை கருப்பஞ்சாற்றின் தெளிவை, விருப்பத்தால் கடலின்கண் சூரனைத் துணித்த முருகவேளுக்கு தந்தையை, அந்தணனை, செல்வமிகுந்த திருவாரூரனை மறத்தலும் கூடுமோ.

(கு-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை மறக்கலாமோ வென்பதாம்.

(வி-ரை.) ஒட்டல் - தொடர்தல். பாவிப்பார்-நினைப்பவர். தெளி-தெளிவு.

ஊரூரென்றுலகங்களுக்கெல்லா
 முரைக்கலாம்பொருளாயுடன்கூடிக்
காருருங்கமழ்கொன்றைநன்மாலை
 முடியன்காரிகைகாரணமாக
ஆரூரைமறத்தற்கரியானை
 யம்மான்றன்றிருப்பேர்கொண்ட தொண்ட
னாரூரனடிநாயுரைவல்லா
 ரமரலோகத்திருப்பவர்தாமே.

(ப-ரை.) உலகங்களுக்கெல்லாம் - எல்லாவுலகங்களுக்கும், ஓர் ஊர் என்று உரைக்கலாம் பொருள்ஆய் - ஒப்பற்றவூரென்று சொல்லப்படும் பொருளாகி, உடன்கூடி - ஒன்று சேர்ந்து, கார் ஊரும் - மேகங்கள் தவழ்கின்ற, கமழ் கொன்றை நல்மாலை முடியன் - மணக்கின்ற நல்ல கொன்றைமலர்மாலையைத் தரித்த திருவடியையுடையவன், காரிகை காரணம் ஆக - பரவையாகிய பெண் காரணமாக, ஆரூரை மறத்தற்கு அரியானை - திருவாரூரை மறவாதவனை, அம்மான் தன் திருப்பேர்கொண்ட தொண்டன் - எம்பெருமானது திருநாமத்தைக் கொண்ட அடியவன், ஆரூரன் அடிநாய் சுந்தரனது, உரைவல்லார்-பாடலைக்கற்று வல்லார், அமரலோகத்து இருப்பவர்தாம் - சுவர்க்கலோகத்தி லிருப்பவரே யாவர் எ-று.

(பொ-ரை.) எல்லாவுலகங்களுக்கும் ஒப்பற்றவூரென்று சொல்லப்படும் பொருளாகி ஒன்று சேர்ந்து மேகங்கள் தவழ்கின்ற மணக்கின்ற நல்ல கொன்றைமலர்மாலையைத் தரித்த திருவடியையுடையவன், பரவையாகிய பெண் காரணமாக திருவாரூரை மறவாதவனை, எம்பெருமானது திருநாமத்தைக்கொண்ட அடியவனாகிய, சுந்தரன்பாடலைக்கற்று வல்லார் சுவர்க்கலோகத்திலிருப்பவரே யாவர்.

(கு-ரை.) திருவாரூர்ச் சிவபிரானை ஆரூரன் புகழ்ந்த இப்பாடல்கள் கற்று வல்லார் தேவலோகத்திருப்பவராவர் என்பதாம்.

(வி-ரை.) ஓரூர் - ஒப்பற்றவூர். (11)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவிடைமருதூர்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கழுதைகுங்குமந்தான்சுமந்தெய்த்தாற்
கைப்பர்பாழ்புகழற்றதுபோலப்
பழுதில்காலுழன்றுள் தடுமாறிப்
படுசுழித்தலைப்பட்டனனெந்தா
யழுதுநீயிருந்தென்செய்திமனனே
யங்கணாவரனேயெனமாட்டா
இழுதையேனுக்கோருய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) கழுதை - கழுதையானது, குங்குமம் சுமந்து - குங்குமப் பொதியைச் சுமந்து, எய்த்தால் - இளைத்தால், பாழ்புகழ் அற்றதுபோல - பாழாகிய புகழிழந்ததுபோல, கைப்பார்-வெறுப்பார், பழுது இல் கால் உழன்று - பழு

தற்ற காலமுழன்று, உள் தடுமாறி - மனந்தடுமாறி, படுசுழித்தலை - பெருஞ் சுழியில், பட்டனன் - அகப்பட்டேன், எந்தாய்-எந்தையே, மனனே-நெஞ்சே, நீ அழுது இருந்து என் செய்தி - நீயழுதுகொண்டிருந்து யாதுசெய்கின்றனை, அங்கணா - க்ருபாநோக்கமுள்ளவனே, அரனே - சிவபெருமானே, எனமாட்டாய் - என்றுச்சரிக்கமாட்டாய், இழுதையேனுக்கு - மூடனேனுக்கு, ஓர்-ஒரு, உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய் - அருள்செய்யக்கடவை, இடைமருது உறை - திருவிடைமருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(பொ-ரை.) கழுதையானது குங்குமப் பொதியைச் சுமந்து இளைத்தால் பாழாகிய புகழிழந்ததுபோல வெறுப்பார், பழுதற்றகாலமுழன்று மனத்தடுமாறி பெருஞ்சுழியில் அகப்பட்டேன், எந்தையே, நெஞ்சே, நீ யழுதுகொண்டிருந்து யாது செய்கின்றனை, க்ருபாநோக்கமுள்ளவனே, சிவபெருமானே யென்றுச் சரிக்கமாட்டாய், மூடனேனுக்கு ஒரு உய்யுமுபாயத்தை அருள்செய்யக்கடவை, திருவிடை மருதூரில் வாழ்கின்ற எந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை.) திருவிடைமருதூர்ச் சிவபிரானே, அடியேனுக்கு ஒரு உயவகை யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை) பழுதில்நாள் - மிகப்பலநாள். படு பெருமை குறித்து வந்தது. ()

நரைப்புமூப்பொடுபிணிவருமென்னே
நன்றியில்வினையேதுணிந்தெய்த்தேன்
அரைத்தமஞ்சளதாவகையறிந்தே
னஞ்சினேனமனுரவர்தம்மை
யுரைப்பனுனசேவடிசேர
வுணரும்வாழ்க்கையையொன்றறியாத
இரைப்பனேனுக்கோருய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) நரைப்பு மூப்பொடு பிணிவரும் - நரை முதுமை நோய்கள் உண்டாகும், என்னே-என்னே, நன்றி இல்வினையே - தீவினையையே, துணிந்து-செய்யத்துணிந்து, எய்த்தேன்-இளைத்தேன், அரைத்த மஞ்சள் ஆவகை அறிந்தேன் - அரைத்த மஞ்சளாம் வகையை உணர்ந்தேன், நமனுரவர் தம்மை அஞ்சினேன் - காலதூதருக்கு பயந்தேன், உரைப்பன் நான் - நான்சொல்வேன், உன் சேவடிசேர-உன் திருவடியையடைய, உணரும்-வழியறிகிற, வாழ்க்கையை - வாழ்வை, ஒன்று அறியாத - சிறிது மறியாத, இரைப்பனேனுக்கு - சோறுண்ணிக்கு, ஓர் – ஒரு, உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய் - அருள்செய்யக் கடவை, இடை மருது உறை - திருவிடைமருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(போ-ரை.) நரை முதுமை நோய்கள் உண்டாகும் என்றே தீவினையையே செய்யத் துணிந்து இளைத்தேன், அரைத்தமஞ்சளாம் வகையை உணர்ந்தேன், காலதூதருக்கு பயந்தேன், நான் சொல்வேன், உன் திருவடியையடைய வழியறிகிற வாழ்வை சிறிது மறியாத சோறுண்ணிக்கு ஒரு உய்யுமுபாயத்தை அருள் செய்யக்கடவை, திருவிடை மருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை.) திருவிடைமருதூர்ச் சிவபிரானே, அடியேனுக்கு ஒரு உய்வகையருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) இரைப்பன் – சோற்றை விழுங்குவோன். (2)

புன்னுனைப்பனிவெங்கதிர்கண்டாற்
  போலும்வாழ்க்கைபொருளிலைநாளும்
என்னெனக்கினியிற்றைக்குநாளை
  யென்றிருந்திடருற்றனனெந்தாய்
முன்னமேயுனசேவடிசேரா
  மூர்க்கனுகிக்கழிந்தனகாலம்
இன்னமென்றனக்குய்வகையருளா
  யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) புல்நுனைபனி - புல்நுனியிலுள்ள பனியானது, வெம்கதிர்-சூரியனை, கண்டாற்போலும் - கண்டாற்போன்ற, வாழ்க்கை - வாழ்வு, பொருள் இல்லை - செல்வமில்லை, நாளும் என் எனக்கு இனி - எந்நாளும் இனி யெனக்கென்றிருக்கின்றது, இற்றைக்கு நாளைக்கு என்று இருந்து—இன்றைக்கு நாளைக்கென்றிருந்து, இடர் உற்றனன் - துன்பமடைந்தேன், எந்தாய் - எமது தந்தையே, முன்னமே - முந்தியே, உன சேவடி சேரா - உன் திருவடியைச் சேராத, மூர்க்கனுகிக் காலம் கழித்தனன் - மூர்க்கனுகியே காலங்கழித்தேன், இன்னம் என்றனக்கு - மேலும் என்றனுக்கு, உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய் - அருள்செய்யக்கடவை, இடைமருது உறை - திருவிடைமருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(போ-ரை.) புல் நுனியிலுள்ள பனியானது சூரியனைக்கண்டாற்போன்ற வாழ்வு செல்வமில்லை, எந்நாளும் இனியெனக் கென்றிருக்கின்றது, இன்றைக்கு நாளைக்கென்றிருந்து துன்பமடைந்தேன், எமது தந்தையே, முந்தியே வுன் திருவடியைச் சேராத மூர்க்கனுகியே காலங்கழித்தேன், மேலு மென்றனக்கு உய்யு முபாயத்தை அருள் செய்யக்கடவை, திருவிடை மருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை) திருவிடைமருதூர்ச் சிவபிரானே, அடியேனுக்கு ஒரு உய்வகையை அருள் செய்யக்கடவை யென்பதாம். (3)

முந்திச்செய்வினையிம்மைக்கணலிய
மூர்க்கனுகிக்கழித்தனன்காலஞ்
சிந்தித்தேமனம்வைக்கவுமாட்டேன்
சீறிச்சிறிதேயிரப்பார்கட்கொன்றீயேன்
அந்திவெண்பிறைசூடுமெம்மானே
யாரூர்மேவியவமரர்கடலைவா
எந்தைநீயெனக்குய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை) முந்தி - முற்காலத்தில், செய்வினை-செய்தவினை, இம்மைக்கண் நலிய - இப்பிறப்பில்வந்து வருத்த, மூர்க்கனுகி காலம் கழித்தனன் - மூர்க்கனுகிக் காலங்கழித்தேன், சிந்தித்து மனம்வைக்கவும் மாட்டேன் - நினைத்து மனம் வைக்கவுமாட்டேன், சீறி - கோவித்து, சிறிதே இரப்பார்கட்கு - சிறிது பொருளையே யிரப்பவர்க்கு, ஒன்று ஈயேன் - ஒருபொருளைக் கொடுத்தறியேன், அந்திவெண்பிறைசூடும் எம்மானே - வெண்மையாகிய அந்திப்பிறையைச் சூடுகிற எம் பெரியோனே, ஆரூர்மேவிய - ஆரூரிலெழுந்தருளிய, அமரர்கள் தலைவா - தேவர்களுக்கு முதல்வனே, எந்தை நீ - என்தந்தையாவோனும் நீயே, எனக்கு - எனக்கு, உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய் - அருள்செய்யக் கடவை, இடை மருது உறை - திருவிடை மருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(பொ-ரை.) முற்காலத்தில் செய்தவினை இப் பிறப்பில் வந்து வருத்த, மூர்க்கனுகிக்காலங்கழித்தேன், நினைத்து மனம்வைக்கவுமாட்டேன், கோவித்து சிறிது பொருளையே யிரப்பவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்தறியேன், வெண்மையாகிய அந்திப்பிறையைச் சூடுகிற எம் பெரியோனே, ஆரூரி லெழுந்தருளிய தேவர்களுக்கு முதல்வனே, தந்தையாவோனும் நீயே, எமக்கு உய்யுமுபாயத்தை அருள் செய்யக்கடவை, திருவிடை மருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை.) திருவிடை மருதூர்ச் சிவபிரானே, அடியேனுக்கு ஒரு உய்வகை யருளாய் என்பதாம்.

(வி-ரை.) வினை - கன்மம். என் தந்தை யென்பது எந்தையென மரூஉ வாயிற்று. (4)

அழிப்பரைவர்புரவுடையார்க
ளைவரும்புரவாசறவாண்டு
கழித்துக்காற்பெய்துபோயினபின்னைக்
கடைமுறையுனக்கேபொறையானேன்

விழித்துக்கண்டனன்மெய்ப்பொருடன்னை
வேண்டேன்மானுடவாழ்க்கையிதாகில்
இழித்தேனென்றனக்குய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) அழிப்பர் ஐவர் புரவு உடையார்கள் - எம்மைக் காக்கின்ற ஐவ ரும் எம்மை யழிக்கின்றனர், ஐவரும் புரவு ஆசு அற - இவ்வைவருடைய காத் தற்றொழிலின் குற்றமற்றொழிய, ஆண்டு கழித்து - வருடங்கள் கழித்து, கால் பெய்து போயின பின்னை - மூச்சு வெளிப்பட்டுப் போயின பிறகு, கடை முறை - கடைசிக்காலத்தில், உனக்கே பொறை ஆனேன் - உனக்கே சுமை யானேன், விழித்து மெய்ப்பொருள் தன்னை கண்டனன் - விழித்து உண்மைப் பொருளைக் கண்டேன், வேண்டேன் மானிடவாழ்க்கை - மானிட வாழ்க்கை யை விரும்பேன், இது ஆகில் இழித்தேன் - இவ்வாழ்க்கைத் தன்மை இது வாயின் இதனை யிகழ்ந்தேன், என்றனக்கு - என்றனக்கு, உய்வகை - உய்யு முபாயத்தை, அருளாய் - அருள்செய்யக்கடவை, இடைமருது உறை - திரு விடைமருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெரு மானே எ-று.

(பொ-ரை.) எம்மைக் காக்கின்ற ஐவரும் எம்மை யழிக்கின்றனர், இவ் வைவருடைய காத்தற்றொழிலின் குற்றமற்றொழிய வருடங்கள் கழித்து மூச்சு வெளிப்பட்டுப் போயின பிறகு கடைசிக்காலத்தில் உனக்கே சுமையானேன், விழித்து உண்மைப் பொருளைக் கண்டேன், மானிட வாழ்க்கையை விரும் பேன், இவ் வாழ்க்கைத் தன்மை இதுவாயின் இதனை யிகழ்ந்தேன், என்ற னக்கு உய்யு முபாயத்தை யருள்செய்யக்கடவை, திருவிடைமருதூரில் வாழ் கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை.) திருவிடைமருதூர்ச் சிவபெருமானே, அடியேனுக்கொரு உய் வகை யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) புரவு - காத்தல். ஆசு - குற்றம். பொறை - பாரம். (5)

குற்றந் தன்னொடு குணம்பலபெருக்கிக்
கோலநுண்ணிடையாரொடுமயங்கிக்
கற்றிலேன்கலைகள்பலஞானங்
கடியவாயினகொடுமைகள்செய்தேன்
பற்றலாவதோர்பற்றுமற்றில்லேன்
பாவியேன்பலபாவங்கள்செய்தேன்
எற்றுளேனெனக்குய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) குற்றம் தன்னொடு குணம்பல பெருக்கி - குற்றத்துடன் குணங் களையும் பெருகப்பண்ணி, கோலம் - அழகாகிய, நுண் இடையாரொடு மயங்கி-

நுட்பமாகிய இடையையுடைய மாதரொடு கூடி மயங்கி, கலைகள் பல கற்றிலேன் - பல நூல்களையும் கற்றிலேன், ஞானம் கடிய ஆயின - அறிவு கடுமையுடையதாயிற்று, கொடுமைகள் செய்தேன் - தீமைகளையுஞ் செய்தேன், பற்றல ஆவது - நான் பற்றற்குரியதாகிய, ஓர் பற்று மற்று இல்லேன்-பற்று வேறொன்றில்லேன், பாவியேன் பல பாவங்களைச் செய்தேன் - பாவியாகிய நான் பல பாவங்களைச் செய்தேன், எற்று உள்ளேன்-யாதுக்கு இருக்கிறேன், எனக்கு-என்றனக்கு, உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய்-அருள்செய்யக்கடவை, இடைமருது உறை - திருவிடைமருதூரில் வாழ்கின்ற, எந்தைபிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(பொ-ரை.) குற்றத்துடன் குணங்களையும் பெருகப்பண்ணி அழகாகிய நுட்பமாகிய இடையையுடைய மாதரோடு கூடி மயங்கி, பல நூல்களையும் கற்றிலேன், அறிவு கடுமையுடைய தாயிற்று, தீமைகளையுஞ்செய்தேன், நான் பற்றற்குரியதாகிய பற்று வேறொன்றிலேன், பாவியாகிய நான் பல பாவங்களைச் செய்துள்ளேன், யாதுக்கிருக்கிறேன், என்றனக்கு உய்யுமுபாயத்தை யருள்செய்யக் கடவை திருவிடைமருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை.) திருவிடைமருதூர்ச் சிவபெருமானே, அடியேனுக்கு ஒரு உய்வகை யருளக்கடவை யென்பதாம். (6)

**கொடுக்ககிற்றிலேனொண்பொருடன்னைக்**
**குற்றஞ்செற்றமிவைமுதலாக**
**விடுக்ககிற்றிலேன்வேட்கையுஞ்சினமும்**
**வேண்டிலைம்புலனென்வசமல்ல**
**நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்த**
**நமன்றமர்நரகத்திடலஞ்சி**
**யிடுக்கணுற்றனனுய்வகையருளா**
**யிடைமருதுறையெந்தைபிரானே.**

(ப-ரை.) ஒள் பொருள்தன்னை கொடுக்ககிற்றிலேன் - நல்ல பொருளைத் தருகிலேன், குற்றம் செற்றம் இவைமுதலாக விடுக்ககிற்றிலேன்-குற்றம்பகை இவை முதலியவற்றை விடமாட்டேன், வேட்கையும் சினமும் - விருப்பத்தையும் கோவத்தையும், வேண்டின் ஐம்புலன் என்வசம் அல்ல - நான் விரும்பினும் ஐம்புலன்கள் என் வயப்பட்டனவல்ல, நடுக்கம் உற்றது - நடுக்கமடைந்தது, ஓர் மூப்பு வந்து எய்த - ஒப்பற்ற முதுமைவந்தடைய, நமன்தமர் - காலதூதர், நரகத்து இடல் அஞ்சி - நரகத்தில் வீழ்த்துவரென பயந்து, இடுக்கண் உற்றனன் - துன்புற்றேன், உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய்-அருள் செய்யக்கடவை, இடைமருதுஉறை - திருவிடைமருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(பொ-ரை.) நல்ல பொருளைத் தருகிலேன், குற்றம்பகை இவை முதலிய வற்றை விடமாட்டேன், விருப்பத்தையும் கோவத்தையும் நான் விரும்பினும்

ஐம்புலன்கள் என் வயப்பட்டனவல்ல, நடுக்கமடைந்தது, ஒப்பற்ற முதுமை வந்தடைய காலதூதர் நரகத்தில் வீழ்த்துவரென்று பயந்து துன்புற்றேன், உய்யுமுபாயத்தை யருள்செய்யக்கடவை, திருவிடை மருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை) திருவிடைமருதூர்ச் சிவபெருமானே, எனக்கு ஒரு உய்வகை யருளாய் என்பதாம்.

(வி-ரை.) செற்றம் - கோவம். வேட்கை - விருப்பு. சினம் - வெறுப்பு. ஐம்புலன் - பஞ்சேந்திரியங்கள். இடுக்கண் - துன்பம். (7)

ஐவகையரையரவராகி
யாட்சிகொண்டொருகாலவர்நீங்கார்
அவ்வகையவர்வேண்டுவதானு
லவரவர்வழியொழுகிநான்வந்து
செய்வ்வகையறியேன்சிவலோகா
தீவணுசிவனேயெரியாடி
யெவ்வகையெனக்குய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) ஐவகை அரையர் அவர் ஆகி - ஐவகையாகிய அரையர் அவராகி, ஆட்சிகொண்டு - ஆள்கையால், ஒருகால் அவர் நீங்கார் - ஒருகாலத்தும் அவர் நீங்கமாட்டார், அவ்வகை அவர் வேண்டுவதானல் - அவ்வாறு அவர் விரும்பின், அவரவர் வழி ஒழுகி - அவரவர் செல்லும் வழியிலே சென்று, நான் வந்து செய்வகை அறியேன் - நான் வந்து செய்யும் வகையையும் அறிந்திலேன், சிவலோகா - சிவபுரத்தனே, தீவண்ணு - நெருப்புநிற முள்ளவனே, சிவனே - சிவபெருமானே, எரியாடீ - அழலாடீ, எவ்வகை - எவ்வகையாலும், எனக்கு - என்றனக்கு, உய்வகை - உய்யுமுபாயத்தை, அருளாய் - அருள் செய்யக்கடவை, இடைமருது உறை - திருவிடை மருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என்றந்தையாகிய சிவபெருமானே எ-று.

(பொ-ரை.) ஐவகையாகிய அரையரவராகி யாள்கையால், ஒருகாலத்தும் அவர் நீங்கமாட்டார், அவ்வாறு அவர் விரும்பின் அவரவர் செல்லும் வழியிலே சென்று நான் வந்து செய்யும் வகையையும் அறிந்திலேன், சிவபுரத்தனே, நெருப்புநிறமுள்ளவனே, சிவபெருமானே, அழலாடி, எவ்வகையாலும் என்றனக்கு உய்யு முபாயத்தை யருள் செய்யக்கடவை, திருவிடை மருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை.) திருவிடை மருதூர்ச் சிவபெருமானே, அடியேனுக்கு உய்வகை யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) ஐவகையரையர் என்றது ஐம்பொறிகளை. ஒழுகல் - நடத்தல். எரி - நெருப்பு. அழல் - நெருப்பு. (8)

ஏழைமானுடவின்பினைநோக்கி
யிளையவர்வலைப்பட்டிருந்தின்னம்
வாழைதான்பழுக்குநமக்கென்று
வஞ்சவல்வினையுள்வலைப்பட்டுக்
கூழைமாந்தர்தஞ்செல்கதிப்பக்கம்
போதழும்பொருளொன்றறியாத
ஏழையேனுக்கோருய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

(ப-ரை.) ஏழை - அற்பமாகிய, மானிட இன்பினை நோக்கி - மானிட சுகத்தைநோக்கி, இளையவர் வலைப்பட்டிருந்து - மாதர் வலையிற் சிக்கியிருந்து, இன்னம் - இனிமேலும், வாழை நமக்கு பழுக்குமென்று-வாழை நம்பொருட்டுப் பழுக்குமென்று, வஞ்சம் வல்வினை உள்வலைப்பட்டு - வஞ்சமாகிய வலிய வினைவலையி லகப்பட்டு, கூழை மாந்தர்தம் செல்கதிப்பக்கம் - அறிவில்லாத மக்கள் பக்ஷமாகி, போதமும் பொருள் ஒன்று அறியாத - ஞானத்தையும் உண்மையையும் அறியாத, ஏழையேனுக்கு-அறிவில்லேனுக்கு, ஓர்-ஒரு, உய்வகை-உய்யு முபாயத்தை, அருளாய் - அருள்செய்யக்கடவை, இடைமருது உறை - திருவிடை மருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானே - என் றந்தையாகிய சிவ பெருமானே எ-று.

(போ-ரை.) அற்பமாகிய மானிட சுகத்தை நோக்கி மாதர் வலையில் சிக்கியிருந்து, இனிமேலும், வாழை நம்பொருட்டுப் பழுக்குமென்று வஞ்சமாகிய வலிய வினைவலையிலகப்பட்டு அறிவில்லாத மக்கள் பக்ஷமாகி, ஞானத்தையும் உண்மையையு மறியாத அறிவிலேனுக்கு ஒரு உய்யுமுபாயத்தை அருள்செய்யக் கடவை, திருவிடைமருதூரில் வாழ்கின்ற என்றந்தையாகிய சிவபெருமானே.

(க-ரை) திருவிடைமருதூர்ச் சிவபெருமானே, அடியேனுக்கு ஒரு உய்வகை யருளக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) ஏழை-இங்கு அற்பமென்னும் பொருள்பட்டு நின்றது. இளையவர் - மாதர். கூழைமாந்தர் - அறிவிலாத மக்கள். போதம்-அறிவு. (9)

அரைக்குஞ்சந்தனத்தோடகிலுந்தி
யைவனஞ்சுமந்தார்த்திருபாலு
மிரைக்குங்காவிரித்தென்கரைதன்மே
லிடைமருதுறையெந்தைபிரானை
யுரைக்குமூரனொளிதிகழ்மாலை
யுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்கள்
நரைப்புமூப்பொடுநடலையுமின்றி
நாதன்சேவடிநண்ணுவர்தாமே.

(ப-ரை.) அரைக்கும் சந்தனத்தோடு - அரைக்கப்பட்ட சந்தனத்துடன், அகில் உந்தி - அகில் மரங்களையும் தள்ளி, ஐவனம் சுமந்து - மலை நெல்லை யேந்தி, ஆர்த்து - பேரொலிசெய்து, இருபாலும் இரண்டு பக்கத்திலும் இரைக்கும் காவிரித்தென்கரை தன்மேல் - சத்திக்கிற காவிரியாற்றின் தென்கரை மேல், இடைமருது உறை - திருவிடைமருதூரில் வாழ்கின்ற, எந்தை பிரானை - என் றந்தையாகிய சிவபெருமானை, உரைக்கும் ஊரன் - புகழ்ந்து பாடின சுந்தரனது, ஒளிதிகழ்மாலை - ஒளிவிளங்குந் தமிழ்மாலையை, உள்ளத்தால் உவந்து - மனத்தால் விரும்பி, ஏத்தவல்லார்கள் - துதிக்க வல்லவர்கள், நரைப்பு மூப்பொடு - நரைத்தல் மூத்தலோடு, நடலையும் இன்றி - பொய்படுதலு மில்லாமல், நாதன்சேவடி நண்ணுவர் - சிவபிரானது திருவடியையடைவர் எ-று.

(பொ-ரை.) அரைக்கப்பட்ட சந்தனத்துடன் அகில்மரங்களையும் தள்ளி, மலைநெல்லையேந்தி, பேரொலிசெய்து இரண்டு பக்கத்திலும் சத்திக்கிற காவிரியாற்றின் தென்கரைமேல், திருவிடைமருதூரில் வாழ்கின்ற என் றந்தையாகிய சிவபெருமானை புகழ்ந்துபாடின சுந்தரனது ஒளிவிளங்குந் தமிழ்மாலையை மனத்தால் விரும்பி, துதிக்கவல்லவர்கள், நரைத்தல் மூத்தலொடு பொய்படுதலுமில்லாமல் சிவபிரானது திருவடியை யடைவர்.

(க-ரை.) திருவிடை மருதூர்ச் சிவபிரானை, ஆரூரன் புகழ்ந்துரைத்த இப் பத்துப் பாடலையுங் கற்று வல்லார்கள், நரை முதலியன இன்றி நாதன் திருவடியை யடைவார்கள் என்பதாம்.

(வி-ரை.) உந்தி - தள்ளி. ஆர்த்து - ஆரவாரித்து. இரைக்கும் - சத்திக்கிற. உவந்து - மகிழ்ந்து நடலை - பொய். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மருதீசர். தேவியார் - நலமுலைநாயகி.

---

## திருவேகம்பம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

**ஆலந்தானுகந்தமுதுசெய்தானை**
**யாதியையமரர்தொழுதேத்துஞ்**
**சீலந்தான்பெரிதும்முடையானைச்**
**சிந்திப்பாரவர்சிந்தையுளானை**
**யேலவார்குழலாளுமைநங்கை**
**யென்றுமேத்திவழிபடப்பெற்ற**
**காலகாலனைக்கம்பனெம்மானைக்**
**காணக்கண்ணடியேன்பெற்றவாறே.**

(ப-ரை.) ஆலம் - நஞ்சை, உகந்து - விரும்பி, அமுது செய்தானை-உண்டவனை, ஆதியை - முதல்வனை, அமரர்தொழுது ஏத்தும் - தேவர்கள் வணங்கித் துதிக்கிற, சீலம் பெரிதும் உடையானை-நல்லொழுக்க மிகுதியாக உடையவனை, சிந்திப்பாரவர் சிந்தை உள்ளானை - சிந்திப்பவாது சிந்தையுள் ளிருப்பவனை, ஏலம் வார் குழலாள் உமைநங்கை - மயிர்ச்சாந்து பூசப்பெற்ற நீள்குழலாளாகிய உமாதேவி, என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற - எந்நாளும் துதித்து வழிபடப்பெற்ற, காலகாலனை - காலகாலனை, கம்பன் - திருவேகம்பத்தி லுள்ளவனுகிய, எம்மானை - எம்பெருமானை, காண-காணும்பொருட்டு, அடியேன் கண்பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்தவிதம், ஏ - என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) நஞ்சை விரும்பி உண்டவனை, முதல்வனை, தேவர்கள் வணங்கித்துதிக்கிற நல்லொழுக்க மிகுதியாக வுடையவனை, சிந்திப்பவாது சிந்தையுளிருப்பவனை, மயிர்ச்சாந்து பூசப்பெற்ற நீள்குழலாளாகிய உமாதேவி எந்நாளும் துதித்து வழிபடப்பெற்ற காலகாலனை, திருவேகம்பத்தி லுள்ளவனுகிய எம்பெருமானை காணும்பொருட்டு அடியேன் கண்படைத்தவிதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம்பெருமானைக் காண அடியேன் கண்படைத்தவிதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) அமுது செய்தானை - உண்டவனை. சீலம் - நல்லொழுக்கம். காலகாலன் - யமனுக்கு யமன். (1)

உற்றவர்க்குதவும்பெருமானை
 யூர்வதொன்றுடையானும்பர்கோனைப்
பற்றினார்க்கென்றும்பற்றவன்றன்னைப்
 பாவிப்பார்மனம்பாவிக்கொண்டானை
யற்றமில்புகழாளுமைநங்கை
 யாதரித்துவழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக்கம்பனெம்மானைக்
 காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

(ப-ரை) உற்றவர்க்கு - அடுத்தவர்க்கு, உதவும் பெருமானை-சகாயம்செய்கிற பெருமானை, ஊர்வது - ஏறி நடத்துவதாகிய, ஒன்று - ஒரெருதை, உடையான் - உடையவனுகிய, உம்பர்கோனை - தேவர்பிரானை, பற்றினார்க்கு - அடுத்தவர்க்கு, என்றும்-எந்நாளும், பற்றவன் தன்னை-பற்றுயிருப்பானை, பாவிப்பார் மனம் - நினைப்பவர் நெஞ்சை, பாவிக்கொண்டவனை - பாவிக்கொண்டவனை, அற்றம் இல்புகழாள் – கெடுதலில்லாத புகழையுடையவளாகிய, உமை நங்கை - உமாதேவி, ஆதரித்து - விரும்பி, வழிபடப்பெற்ற - வழிபடுசெய்யப்பெற்ற, கற்றைவார்சடை - திரட்சியாகிய நீள்சடையை யுடையவனுகிய, கம்பன் எம்மானை - திருவேகம்பனுகிய எம் பெருமானை, காண - தரிசிக்க, அடியேன் கண் பெற்ற ஆறு - அடியேன் கண் படைத்தவிதம், ஏ - என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) அடுத்தவர்க்கு சகாயம்செய்கிற பெருமானை, ஏறி நடத்துவ தாகிய ஓ ரெருதை உடையவனாகிய தேவர்பிரானை, அடுத்தவர்க்கு எந்நாளும் பற்றாயிருப்பவனை, நினைப்பவர் நெஞ்சை பாவிக்கொண்டவனை, கெடுதலில்லாத புகழை யுடையவளாகிய உமாதேவி விரும்பி வழிபாடுசெய்யப்பெற்ற திரட்சி யாகிய நீள்சடையை யுடைய திருவேகம்பனாகிய எம்பெருமானை தரிசிக்க அடி யேன் கண்படைத்தவிதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம்பெருமானைக் காண அடியேன் கண்படை த்தவிதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) ஊர்வது - தவழ்ந்து செல்வது எனினுமாம். பற்று - ஆதாரம். அற்றம் - அறுதி. (அறுபகுதி) (2)

திரியுமுப்புரந்தீப்பிழம்பாகச்
செங்கண்மால்விடைமேற்றிகழ்வானைக்
கரியினீருரிபோர்த்துகந்தானைக்
காமனைக்கனலால்விழித்தானை
வரிகொள்வெள்வளையாளுமைநங்கை
மருவியேத்திவழிபடப்பெற்ற
பெரியகம்பனையெங்கள்பிரானைக்
காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

(ப-ரை.) திரியும் முப்புரம் - திரிகிற முப்புரமானது, தீ பிழம்பு ஆக - தீத்திரளாகும்படி, செங்கண்மால் விடைமேல்-செவந்த கண்களையுடைய பெரிய இடபத்தின்மீது, திகழ்வானை - விளங்குவோனை, கரியின் ஈர் உரிபோர்த்து உகந்தானை - யானையின் குளிர்ந்த தோலைப்போர்த்து மகிழ்ந்தவனை, காமனை கனலால் விழித்தானை - மன்மதனை நெருப்புக்கண்ணினால் நோக்கினவனை, வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை - இரேகைகளையுடைய வெள்வளை யாளாகிய உமாதேவி, மருவி ஏத்தி வழிபடப்பெற்றகுடி-யிருந்து' துதித்து வழி பாடுசெய்யப்பெற்ற, பெரியகம்பனை-பெரிய திருவேகம்பமுடையவனை, எங்கள் பிரானை -எம் பிரானை, காண - காணும்பொருட்டு, அடியேன்கண்பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்தவிதம், ஏ - என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) திரிகிற முப்புரமானது தீத்திரளாகும்படி செவந்த கண்களை யுடைய பெரிய இடபத்தின்மீது விளங்குவோனை, யானையின் குளிர்ந்ததோலைப் போர்த்து மகிழ்ந்தவனை, மன்மதனை நெருப்புக் கண்ணினால் நோக்கினவனை, இரேகைகளையுடைய வெள்வளையாளாகிய உமாதேவி குடியிருந்து துதித்து வழிபாடு செய்யப்பெற்ற பெரிய திருவேகம்பமுடையவனை, எம்பிரானை, காணு ம்பொருட்டு அடியேன் கண் படைத்தவிதம் என்னவியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம்பெருமானைக் காண 'அடியேன் கண்படை த்தவிதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) திரியும் - சஞ்சரிக்கிற. கனலா - கனன்று (கோவித்து) கனலா என்றது செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். எனினுமாம். (3)

காமாக்ஷியம்மையால் பூசிக்கப்பட்ட ஏகாம்பரநாதரே பெரியகம்பர்.

**குண்டலந்திகழ்காதுடையானைக்**
**கூற்றுதைத்தகொடுந்தொழிலானை**
**வண்டலம்புமலர்க்கொன்றையினானை**
**வாளராமதிசேர்சடையானைக்**
**கெண்டையந்தடங்கண்ணுமைநங்கை**
**கெழுமியேத்திவழிபடப்பெற்ற**
**கண்டஞ்சுடைக்கம்பனெம்மானைக்**
**காணக்கண்ணடியேன்பெற்றவாறே.**

(ப-ரை.) குண்டலம் திகழ்காது உடையானை - குண்டலம் பிரகாசிக்கிற திருச்செவியை யுடையவனை, கூற்று உதைத்த கொடுந்தொழிலானை - யமனை யுதைத்த கடுந்தொழிலை யுடையவனை, வண்டு அலம்பும்-வண்டுகள் சத்திக்கிற, மலர்க்கொன்றையினானை - கொன்றைமலர் மாலையை யுடையவனை, வாள்-ஒளி யையுடைய, அராமதிசேர் சடையானை-பாம்பும் பிறையும் சேர்ந்திருக்கிற சடையையுடையவனை, கெண்டை அம் தடம்கண் உமை நங்கை - கெண்டைமீன் போலும் அழகிய விசாலமான கண்களையுடைய உமாதேவி, கெழுமி - தழுவி, ஏத்தி வழிபடப்பெற்ற - துதித்து வழிபாடு செய்யப்பெற்ற, கண்டம் நஞ்சு உடை-கண்டத்தில் நஞ்சுபொருந்திய, கம்பன்-திருவேகம்பனாகிய, எம்மானை-எம் பெருமானை, காண - காணும்பொருட்டு, அடியேன் கண் பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்தவிதம், ஏ - என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) குண்டலம் பிரகாசிக்கிற திருச்செவியை யுடையவனை, யமனையுதைத்த கடுந்தொழிலை யுடையவனை, வண்டுகள் சத்திக்கிற கொன்றைமலர் மாலையையுடையவனை, ஒளியையுடைய பாம்பும் பிறையும் சேர்ந்திருக்கிற சடையையுடையவனை, கெண்டைமீன்போலும் அழகிய விசாலமான கண்களை யுடைய உமாதேவி தழுவி துதித்து வழிபாடுசெய்யப்பெற்ற கண்டத்தில் நஞ்சு பொருந்திய திருவேகம்பனாகிய எம்பெருமானை காணும்பொருட்டு அடியேன் கண்படைத்த விதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத்தெம்பெருமானைக்காண அடியேன் கண்படைத்த விதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) அரா - பாம்பு. மதி-பிறை. (4)

**வெல்லும்வெண்மழுவொன்றுடையானை**
**வேலைநஞ்சுண்டவித்தகன்றன்னை**
**யல்லல்தீர்த்தருள்செய்யவல்லானை**
**யருமறையவையங்கம்வல்லானை**

யெல்லையில்புகழாளுமைநங்கை
யென்றுமேத்திவழிபடப்பெற்ற
நல்லகம்பனையெங்கள்பிரானைக்
காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

(ப-ரை.) வெல்லும்-பகைவரை வெல்லுகின்ற, வெண்மழு ஒன்று உடையானை - வெள்ளிய மழுவாயுதத்தையுடையவனை, வேலை - கடலிற் றோன்றின, நஞ்சு உண்ட - விடத்தை உண்ட, வித்தகன் தன்னை - ஞானசொரூபனை, அல்லல் தீர்த்து - துன்பத்தை யொழித்து, அருள்செய்ய வல்லானை - கிருபை செய்ய வல்லவனை, அருமறை அவை அங்கம் வல்லானை - அரிய வேதவேதாங்கங்களில் வல்லவனை, எல்லை இல் புகழாள் உமை நங்கை - வரம்பற்ற புகழை யுடையவளாகிய உமாதேவி, என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற - எந்நாளும் துதித்து வழிபடப்பெற்ற, நல்ல கம்பனை - நல்ல திருவேகம்பனை, எங்கள் பிரானை - எம் பிரானை, காண - தரிசிக்க, அடியேன் கண்பெற்ற ஆறு - அடியேன் கண் படைத்தவிதம், ஏ - என்ன வியப்பு எ-று.

(போ-ரை.) பகைவரை வெல்லுகின்ற வெள்ளிய மழுவாயுதத்தையுடையவனை, கடலிற் றோன்றின விடத்தை யுண்ட ஞானசொரூபனை, துன்பத்தை யொழித்து கிருபைசெய்ய வல்லவனை, அரிய வேதவேதாங்கங்களில் வல்லவனை, வரம்பற்ற புகழை யுடையவளாகிய உமாதேவி எந்நாளும் துதித்து வழிபடப் பெற்ற நல்ல திருவேகம்பனை, எம் பிரானை தரிசிக்க அடியேன் கண்படைத்த விதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம் பெருமானைக்காண, அடியேன் கண்படைத்தவிதம் என்னவியப்பு என்பதாம்.

(வி-ரை.) வேலை - வேலா என்னும் வடசொற்றிரிபு வித்தகன் - ஞான வடிவன். அங்கம் - வேதாங்கம், அவை—மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்னும் ஆறுமாம். (5)

உருத்திரராற் பூசிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானுக்கு நல்லகம்பனென்று பெயர். இதனைக் காஞ்சிபுராணம்-திருவேகம்பப்படலம் ௮௮- வது செய்யுள்.

"உருத்திரனலத்தகுமொருமைபூண்டியர்
கருத்தொடும்வழிபடுநல்லகம்பனை" என்பதனாலறிக.

உமைநங்கை யென்றுமேத்தி வழிபடப்பெற்ற நல்லகம்பனை யென்பது ஏகாம்பர நாதனுக்கும், நல்லகம்பனுக்கும் பேதமின்மை காட்டுகின்றது.

திங்கள் தங்கியசடையுடையானைத்
தேவதேவனைச்செழுங்கடல்வளருஞ்
சங்கவெண்குழைக்காதுடையானைச்
சாமவேதம்பெரிதுகப்பானை

**மங்கைநங்கைமலைமகள் கண்டு**
**மருவியேத்திவழிபடப்பெற்ற**
**கங்கையாளனைக்கம்பனெம்மானைக்**
**காணக்கண்ணடியேன்பெற்றவாறே.**

(ப-ரை.) திங்கள் தங்கிய - பிறைதங்கிய, சடை உடையானை - சடையையுடையவனை, தேவதேவனை - தேவர்களுக்குத் தேவனாயிருப்பவனை, செழுங் கடல் வளரும் - செழிய கடலில் வளர்கின்ற, சங்கம் - சங்கினாற் செய்யப்பட்ட, வெண்குழைக்காது உடையானை - வெள்ளியகுண்டலமணிந்த செவியை யுடையவனை, சாமவேதம் பெரிது உகப்பானை - சாமவேதத்தை மிகவும் விரும்புவோனை, மங்கை நங்கைமலைமகள் கண்டு - உமாதேவி பார்த்து, மருவி எத்தி வழிபடப்பெற்ற - குடியிருந்து துதித்து வழிபாடு செய்யப்பெற்ற, கங்கையாளனை-கங்கா நாயகனை, கம்பன் எம்மானை-திருவேகம்பனாகிய எம் பெருமானை, காண - தரிசிக்க, அடியேன் கண்பெற்ற ஆறு - அடியேன் கண் படைத்தவிதம், ஏ - என்ன வியப்பு எ-று.

(பொ-ரை.) பிறைதங்கிய சடையையுடையவனை, தேவர்களுக்குத் தேவனாயிருப்பவனை,செழிய கடலில் வளர்கின்ற சங்கினாற் செய்யப்பட்ட வெள்ளிய குண்டலமணிந்த செவியையுடையவனை, சாமவேதத்தை மிகவும் விரும்புவோனை, உமாதேவி பார்த்து குடியிருந்து துதித்து வழிபாடு செய்யப்பெற்ற கங்கா நாயகனை, திருவேகம்பனாகிய எம் பெருமானை தரிசிக்க அடியேன் கண் படைத்த விதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம்பெருமானைக் காண அடியேன் கண்படைத்தவிதம் என்ன வியப்பென்பதாம்.

(வி-ரை.) பெரிது உகத்தல் - மிகவும் விரும்புதல். (6)

**விண்ணவர்தொழுதேத்தநின்றானை**
**வேதந்தான்விரித்தோதவல்லானை**
**நண்ணினார்க்கென்றுநல்லவன்றன்னை**
**நாளுநாமுகக்கின்றபிரானை**
**யெண்ணில்தொல்புகழாளுமைநங்கை**
**யென்றுமேத்திவழிபடப்பெற்ற**
**கண்ணுமூன்றுடைக்கம்பனெம்மானைக்**
**காணக்கண்ணடியேன்பெற்றவாறே.**

(ப-ரை.) விண்ணவர் தொழுது எத்தநின்றானை - தேவர்கள் வணங்கித் துதித்தற்குரியவனை, வேதம் விரித்து ஓதவல்லானை - வேதங்களை விரித்துச் சொல்லவல்லவனை, நண்ணினார்க்கு - அடைந்தவர்க்கு, என்றும் நல்லவன் தன்னை - எந்நாளும் நல்லவனாயிருப்பவனை, நாளும் நாம் உகக்கின்ற பிரானை - எந்நாளும் யாம் விரும்புகிற உபகாரசீலனை, எண் இல் தொல் புகழாள் உமை

நங்கை - அளவற்ற பெரும்புகழையுடையவளாகிய உமாதேவி, என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற-எந்நாளும் துதித்து வழிபடப்பெற்ற, கண்ணு மூன்று உடை-மூன்று கண்களையுடைய, கம்பன் எம்மானை - திருவேகம்பத்திலுள்ளவனாகிய எம்பெருமானை, காண - தரிசிக்க, அடியேன் கண்பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்த விதம், ஏ - என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) தேவர்கள் வணங்கித் துதித்தற்குரியவனை, வேதங்களை விரித்துச் சொல்லவல்லவனை, அடைந்தவர்க்கு எந்நாளும் நல்லவனாயிருப்பவனை, எந்நாளும் யாம் விரும்புகிற உபகாரசீலனை, அளவற்ற பெரும்புகழையுடையவளாகிய உமாதேவி துதித்து வழிபடப்பெற்ற மூன்று கண்களையுடைய திருவேகம்பத்திலுள்ளவனாகிய எம்பெருமானை, தரிசிக்க அடியேன் கண்படைத்தவிதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத்தெம்பெருமானைக்காண, அடியேன் கண்படைத்த விதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) உகத்தல் - விரும்புதல். கண் உகரச்சாரியை பெற்று கண்ணு என நின்றது. விண்ணவர் - தேவர். (7)

**சிந்தித்தென்று நினைந்தெழுவார்கள்**
**சிந்தையிற் றிகழுஞ்சிவன் றன்னைப்**
**பந்தித்தவினைப்பற்றறுப்பானைப்**
**பாலோடானஞ்சுமாட்டுகந்தானை**
**யந்தமில்புகழாளுமைநங்கை**
**யாதரித்துவழிபடப்பெற்ற**
**கந்தவார்சடைக்கம்பனெம்மானைக்**
**காணக்கண்ணடியேன்பெற்றவாறே.**

(ப-ரை.) சிந்தித்து - ஆலோசித்து, என்றும் - எந்நாளும், நினைந்து எழுவார்கள் சிந்தையில் - நினைந்தெழுவார்களுடைய மனத்தில், திகழும் - விளங்குகிற, சிவன் தன்னை - சிவனை, பந்தித்த - பிணித்த, வினைப்பற்று அறுப்பானை - கர்மசேடத்தைச் சேதிப்பவனை, பாலொடு ஆன் அஞ்சும் ஆட்டு உகந்தானை - பால்முதலிய பஞ்சகவ்யாபிஷேகத்தை விரும்பினவனை, அந்தம் இல் புகழாள்—முடிவற்ற புகழையுடையவளாகிய, உமைநங்கை - உமாதேவி, ஆதரித்து - விரும்பி, வழிபடப்பெற்ற - வழிபடப்பெற்ற, கந்தம் வார்சடை - மணந்தங்கிய நீண்ட சடையையுடையவனை, கம்பன் எம்மானை - திருவேகம்பத்திலுள்ளவனாகிய எம் பெருமானை, காண-தரிசிக்க, அடியேன் கண்பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்தவிதம், ஏ - என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) ஆலோசித்து எந்நாளும் நினைந்தெழுவார்களுடைய மனத்தில் விளங்குகிற சிவனை, பிணித்த கர்மசேடத்தைச் சேதிப்பவனை, பால்முதலிய

பஞ்சகவ்யாபிஷேகத்தை விரும்பினவனை, முடிவற்ற புகழையுடையவளாகிய உமாதேவி விரும்பி வழிபடப்பெற்ற மணந்தங்கிய நீண்ட சடையையுடையவனை, திருவேகம்பத்திலுள்ளவனாகிய எம்பெருமானை, தரிசிக்க அடியேன் கண் படைத்தவிதம் என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம்பெருமானைக்காண, அடியேன் கண்படைத்த விதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) பாலொடு ஆன் அஞ்சு - பஞ்சகவ்வியம். ஆட்டு - ஆடல். (அபிஷேகம்.) கந்தம் - மணம். (8)

***வரங்கள்பெற்றுழல்வாளரக்கர்தம்***
***வாலியபுரமூன்றெரித்தானை***
***நிரம்பியதக்கன்றன்பெருவேள்வி***
***நிரந்தரஞ்செய்தநிஷ்கண்டகனைப்***
***பரந்ததொல்புகழாளுமைநங்கை***
***பரவியேத்திவழிபடப்பெற்ற***
***கரங்களெட்டுடைக்கம்பனெம்மானைக்***
***காணக்கண்ணடியேன்பெற்றவாறே.***

(ப-ரை.) வரங்கள்பெற்று உழல்வாள் அரக்கர்தம்-வரங்களைப்பெற் றுழலாநின்ற வாளரக்கருடைய, வாலிய-பரிசுத்தமான, புரம்மூன்று எரித்தானை - முப்புரத்தை யெரித்தவனை, நிரம்பிய தக்கன் பெருவேள்வி - நிறைந்த தக்கனது பெரிய யாகத்தை, நிரந்தரம்செய்த - வெற்றிடமாக்கின, நிஷ்கண்டகனை - மிகு கொடியோனை, பரந்த - வியாபித்த, தொல்புகழாள் உமைநங்கை - பழமையாகிய புகழையுடைய உமாதேவி, பரவி ஏத்தி வழிபடப்பெற்ற-வந்தித்து வாழ்த்தி வழிபடப்பெற்ற, கரங்கள் எட்டு உடை - எட்டுத் தோள்களையுடைய, கம்பன் எம்மானை - திருவேகம்பனாகிய எம்பெருமானை, காண - தரிசிக்க, அடியேன் கண் பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்த விதம், ஏ - என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) வரங்களைப் பெற்றுழலாநின்ற வாளரக்கருடைய பரிசுத்தமான முப்புரத்தை யெரித்தவனை, நிறைந்த தக்கனது பெரிய யாகத்தை வெற்றிடமாக்கின மிகு கொடியோனை, வியாபித்த பழமையாகிய புகழையுடைய உமாதேவி வந்தித்து வாழ்த்தி வழிபடப் பெற்ற எட்டுத் தோள்களையுடைய திருவேகம்பனாகிய எம்பெருமானை, தரிசிக்க அடியேன் கண்படைத்தவிதம், என்ன வியப்பு.

(க-ரை.) திருவேகம்பத் தெம்பெருமானைக்காண, அடியேன் கண் படைத்தவிதம் என்ன வியப்பு என்பதாம்.

(வி-ரை.) அரக்கர் என்றது திரிபுரத்தவுணரை. கண்டகன் - கொடியோன், நிஷ்கண்டகன் என்பதில் நி என்பது மிகுதிப்பொருளில் வந்தது. நிர்மூடன் என்பதிற்போல. கரங்கள் எட்டு - எண்டோள். (9)

எள்கலின் றியிமையவர்கோனை
யீசனைவழிபாடுசெய்வாள்போ
லுள்ளத்துள்கியுகந்துமைநங்கை
வழிபடச்சென்று நின்றவாகண்டு
வெள்ளங்காட்டிவெருட்டிடவஞ்சி
வெருவியோடித்தழுவவெளிப்பட்ட
கள்ளக்கம்பனையெங்கள்பிரானைக்
காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

(ப-ரை.) எள்கல் இன்றி - இகழ்தலில்லா, இமையவர்கோனை - தேவரா ஜனை, ஈசனை - ஈச்சுரனை, வழிபாடு செய்வாள் போல் - வழிபடுவாள் போல, உள்ளத்து உள்கி – மனத்தில் நினைத்து, உகந்து - விரும்பி, உமைநங்கை - உமாதேவி, வழிபடச்சென்று-வழிபடப்போய், நின்றவாகண்டு-நின்றவாற்றைப் பார்த்து, வெள்ளம்காட்டி - வெள்ளத்தைக்காட்டி, வெருட்டிட - அச்சுறுத்த, வஞ்சி - உமாதேவி, வெருவி - பயந்து, ஓடித்தழுவ வெளிப்பட்ட - ஓடித்தழுவ வெளிப்பட்ட, கள்ளக்கம்பனை - கள்ளக்கம்பனை, எங்கள்பிரானை - எம்பிரானை, காண - தரிசிக்க, அடியேன் கண்பெற்ற ஆறு - அடியேன் கண்படைத்தவிதம், ஏ - என்னவியப்பு எ-று.

(பொ-ரை.) இகழ்தலில்லா தேவராஜனை, ஈச்சுரனை, வழிபடுவான்போல், மனத்தில் நினைத்து விரும்பி உமாதேவி வழிபடப்போய் நின்றவாற்றைப்பார்த்து வெள்ளத்தைக்காட்டி அச்சுறுத்த, உமாதேவி, பயந்து ஓடித்தழுவ வெளிப்பட்ட கள்ளக்கம்பனை, எம்பிரானை தரிசிக்க அடியேன் கண்படைத்தவிதம் என்னவியப்பு.

(க-ரை.) திருவேகம்பத்தெம்பெருமானைக்காண அடியேன் கண்படைத்த விதம் என்ன வியப்பென்பதாம்.

(வி-ரை.) நின்றவா-நின்றவாறு. அஞ்சி வெருவியெனப் பாடமோதி மிக வும்பயந்து என்றுரைத்தலுமாம். (10)

விஷ்ணுவினாற் பூசிக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்குக் கள்ளக்கம்ப னென்றுபெயர். இதனை காஞ்சிபுராணம் திருவேகம்பப் படலம் அஎ - வது செய்யுள்.

"மருள்புரிகருத்தினுன்மாயனேத்தலுங்
கருதுமப்பெரியகள்ளக்கம்பனை." என்பதனாலறிக.

ஈண்டுக் கூறப்பட்ட நல்லக்கம்பன் கள்ளக்கம்பனென்னும் இரண்டு மூர்த் திகளுமேயன்றி, பிரமனால் பூசிக்கப்பட்ட வெள்ளக்கம்பன்-என்னும் ஒரு சிவலி ங்கப்பெருமானுமுண்டு. இதனை

"வாலியசிந்தையான் மலர்ப்பொகுட்டணை
மேலவன்வழிபடு வெள்ளக்கம்பனை" அசு-வது செய்யுளாலறிக.

பெற்றமேறுகந்தேறவல்லானைப்
  பெரியவெம்பெருமானென்றெப்போதுங்
கற்றவர்பரவப்படுவானைக்
  காணக்கண்ணடியேன்பெற்றதென்று
கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக்
  குளிர்பொழிற்றிருநாவலாரூர
னற்றமிழிவையீரைந்தும்வல்லார்
  நன்னெறியுலகெய்துவர்தாமே.

(ப-ரை.) பெற்ற ஏறு-இடபவேற்றின்மேல், உகந்து ஏற வல்லானை-விரும்பியேற வல்லவனை, பெரிய எம்பெருமான் என்று-பெருமையுள்ள எம் பெருமானே என்று, எப்போதும் - எப்பொழுதும், கற்றவர் - கற்றோரால், பரவப்படுவானை - துதிக்கப்படுவோனை, காண கண் அடியேன் பெற்றது என்று - காண அடியேன் கண் பெற்றதென்று, கொற்றவன் – வேந்தன், கம்பன் - திருவேகம்பன், கூத்தன்-நடராஜன் ஆகிய, எம்மானை-எம் பெருமானை, குளிர் பொழில்-குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த, திருநாவலாரூரன்-சுந்தரன், (சொன்ன) நல்தமிழ் - நல்ல தமிழாலாகிய, இவை ஈரைந்தும் வல்லார்-இப்பத்துப்பாடலும் கற்று வல்லவர், நல்நெறி உலகு எய்துவர் - நன்னெறி வழங்குகிற உயர்ந்த வுலகையடைவார் எ-று.

(பொ-ரை.) இடபவேற்றின்மேல் விரும்பியேறவல்லவனை, பெருமையுள்ள எம்பெருமானே என்று எப்பொழுதும் கற்றோரால் துதிக்கப்படுவோனை காண அடியேன் கண் பெற்றதென்று, வேந்தன், திருவேகம்பன், நடராஜன் ஆகிய, எம் பெருமானை, குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த சுந்தரன் சொன்ன நல் தமிழாலாகிய இப் பத்துப் பாடலும் கற்று வல்லவர் நன்னெறி வழங்குகிற உயர்ந்த வுலகை யடைவார்.

(க-ரை.) திருவேகம்பத்தெம்பெருமானைத் திருநாவலாரூரன் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாட்டும் கற்றுவல்லார் நல்லுலகை யடைவாரென்பதாம்.

(வி-ரை.) பெற்றம்–பசுப்பொது. பெற்ற வேறு என்றதனால் பசுப்பொதத்தாகிய இடபத்தை யுணர்த்திற்று. (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஏகாம்பரநாதர். தேவியார் - காமாக்ஷியம்மை.

## திருக்கோலக்கா

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

புற்றில்வாளரவார்த்தபிரானைப்
பூதநாதனைப்பாதமேதொழுவார்
பற்றுவான்றுணையெனக்கெளிவந்த
பாவநாசனைமேவரியானை
முற்றலார்திரிபுரமொருமூன்றும்
பொன்றவென்றிமால்வரையரியம்பாக்
கொற்றவில்லங்கையேந்தியகோனைக்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) புற்று இல் - புற்றையுடைய வல்லாத, வாள் - ஒளியுள்ள, அரவு - பாம்புகளை, ஆர்த்த - (திருவரையில்) கட்டின, பிரானை - பெருமானை, பூதநாதனை - பூதநாயகனை, பாதமே தொழுவார் - தன் திருவடியையே தொழுவாரது, பற்று - பற்றுகின்ற, வான் துணை - மேலான துணையாகி, எமக்கு எளி வந்த பாவநாசனை - எங்களுக்கு எளிதிற் கிடைத்த பாவநாசனை, மேவு அரியானை - அடைதற் கரியவனை, முற்றல் ஆர் - பழமையாகிய, திரி - சஞ்சரிக்கிற, புரம் ஒரு மூன்றும்பொன்ற - ஒப்பற்ற முப்புரம் அழிய, வென்றி - வெற்றியை யுடைய, மால் வரை — பெரிய மலையையும், அரி - திருமாலையும், கொற்ற வில்லா அம்பா - வெற்றியையுடைய வில்லாகவும் அம்பாகவும், அங்கை எந்திய கோனை - தனது அங்கையிற்றாங்கிய தலைவனை, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டு கொண்டேன் - கண்டு கொண்டேன் எ - று.

(பொ - ரை.) புற்றையுடையவல்லாத ஒளியுள்ள பாம்புகளை (திருவரையில்) கட்டின பெருமானை, பூதநாயகனை, தன் திருவடியையே தொழுவாரது பற்றுகின்ற மேலான துணையாகி எங்களுக்கு எளிதிற்கிடைத்த பாவநாசனை, அடைதற் கரியவனை, பழமையாகிய சஞ்சரிக்கிற ஒப்பற்ற முப்புரமழிய வெற்றியையுடைய பெரிய மலையையும் திருமாலையும் வெற்றியையுடைய வில்லாகவும் அம்பாகவும் தனது அங்கையிற் றாங்கிய தலைவனை, திருக்கோலக்காவில் கண்டு கொண்டேன்.

(க - ரை.) அரவார்த்தல் முதலிய செயல்களையுடைய சிவபெருமானைத் திருக்கோலக்காவினிற் கண்டுகொண்டே னென்பதாம்.

(வி - ரை.) மால்வரை யென்றது மேருமலையை. கொற்றம் - வெற்றி. ஒரு மூன்றும் என மேல் வருதலால் திரியென்பதற்கு சஞ்சரிக்கிற எனப் பொருளுரைக்கலாயிற்று. பொன்ற - அழிய. (1)

அங்கமாறும்மறையொருநான்கு
மாயனப்பனைவேய்புரைதோளி
தங்குமாதிருவுருவுடையானைத்
தழன்மதிசடைமேற்புனைந்தானை
வெங்கணானையினீருரியானை
விண்ணுளாரொடுமண்ணுளார்பரசுங்
கொங்குலாம்பொழிற்குராவெறிகமழுங்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப - ரை.) அங்கம் ஆறும் - ஆறங்கங்களும், மறை ஒரு நான்கும் ஆயானை - நான்கு வேதங்களுமா யிருக்கிற சிவபெருமானை, வேய் புரை தோளி - உமாதேவி, தங்கும் - தங்குகின்ற, மா - அழகிய, திருவுரு உடையானை - திருமேனியை யுடையவனை, தழல் - பிரகாசிக்கிற, மதி - பிறையை, சடைமேல் புனைந்தானை - சடைமீது தரித்தவனை, வெம்கண் - கொடுங்கண்மையுள்ள, ஆனையின் ஈர் உரியானை-யானையின் குளிர்ந்த தோலையுடையவனை, விண் உள்ளாரொடும் மண்ணுளார்-தேவரோடு மானிடரும், பரசும்-வழிபடுகிற, கொங்கு உலாம் பொழில் - மணம்வீசுகிற சோலைகள் சூழ்ந்த, குரா - குராவமலர், வெறி கமழும் - மணங்கமழ்கின்ற, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டு கொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(பொ - ரை.) ஆறங்கங்களும் நான்கு வேதங்களுமா யிருக்கிற சிவபெருமானை,உமாதேவி தங்குகின்ற அழகிய திருமேனியையுடையவனை,பிரகாசிக்கிற பிறையை சடைமீது தரித்தவனை, கொடுங்கண்மையுள்ள யானையின் குளிர்ந்த தோலையுடையவனை, தேவரோடு மானிடரும் வழிபடுகிற மணம்வீசுகிற சோலைகள் சூழ்ந்த குராவமலர் மணங்கமழ்கின்ற திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(கு-ரை.) வேதவேதாங்கங்களைத் தன்னுருவாகப்பெற்ற சிவபெருமானைத் திருக்கோலக்காவிற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) வேய்புரைதோளி - மூங்கிலை நிகர்த்த தோள்களையுடையவள். புனைந்தானை - தரித்தவனை. விண்ணுள்ளார் - தேவர். (2)

பாட்டகத்திசையாகிநின்றானைப்
பத்தர்சித்தம்பரிவினியானை
நாட்டகத்தேவர்செய்கையுளானை
நட்டமாடியைநம்பெருமானைக்
காட்டகத்துறுபுலியுரியானைக்
கண்ணோர்மூன்றுடையண்ணலையடியேன்
கோட்டகப்புனலார்செழுங்கழனிக்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) பாட்டகத்து - பாடலில், இசை ஆகி நின்றானை - இசையாகி நின்றவனை, பத்தர் சித்தம் - பத்தர் மனத்தில், பரிவு இனியானை — இரங்குதலில் இனியவனை, நாட்டகத் தேவர் செய்கை உள்ளானை - பூசுரர் செய்கையிலகப்பட்டவனை, நட்டம் ஆடியை - கூத்தாடியை, நம்பெருமானை - எம்பெருமானை, காட்டகத்து உறு - காட்டில் வாழ்கிற, புலி உரியானை - புலித்தோலையுடையவனை, கண் ஓர் மூன்று உடை அண்ணலை — மூன்று கண்களையுடைய பெரியோனை, அடியேன் - தொண்டனேன், கோடு அகப்புனல் ஆர் — கரையினுள்ளே நிறைந்த நீரையுடைய, செழுங்கழனி - செழியகழனிகள் சூழ்ந்த, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(பொ-ரை.) பாடலில் இசையாகி நின்றவனை, பத்தர் மனத்தில் இரங்குதலில் இனியவனை, பூசுரர் செய்கையிலகப்பட்டவனை, கூத்தாடியை, எம்பெருமானை, காட்டில் வாழ்கிற புலித்தோலையுடையவனை, மூன்று கண்களையுடைய பெரியோனை, தொண்டனேன் கரையினுள்ளே நிறைந்த நீரையுடைய செழிய கழனிகள் சூழ்ந்த திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(க-ரை.) இசைமுதலியவாய்நின்ற சிவபெருமானைத் திருக்கோலக்காவிற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) இசை-வழிசை. இராகம் எனினும் பண் எனினும் அமையும். பரிவு - இரக்கம். நட்டம் - நடநம். அண்ணல் - பெரியோன். நாட்டகத்தேவரென்பதனை "நாட்டுத்தேவர்கள் நாடரும்பொருளே" என்னுந் திருவாசகத்தாலுமுணர்க. (3)

**ஆத்தமென்றெனையாளுகந்தானை**
**யமரர்நாதனைக்குமரனைப்பயந்த**
**வார்த்தயங்கியமுலைமடமானை**
**வைத்துவான்மிசைக்கங்கையைக்கரந்த**
**தீர்த்தனைச்சிவனைச்செழுந்தேனைத்**
**தில்லையம்பலத்துண்ணிறைந்தாடுங்**
**கூத்தனைக்குருமாமணிதன்னைக்**
**கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.**

(ப-ரை.) ஆத்தம் என்று - சிநேகமென்று, என்னை ஆள் உகந்தானை - என்னை யடிமையாக ஏற்றுக்கொண்டவனை, அமரர்நாதனை-தேவர்க்கிறைவனை, குமரனைப்பயந்த - குமரனைப்பெற்ற, வார் தயங்கிய முலைமடமானை வைத்து - உமாதேவியை ஒருபுறத்துவைத்து, வான்மிசை கங்கையை - ஆகாய கங்கையை, கரந்த - (சடையில்) மறைத்த, தீர்த்தனை - பரிசுத்தனை, சிவனை - சிவபிரானை, செழுந்தேனை - செழுமையாகிய தேனை, தில்லையம்பலத்துள் -

தில்லைப்பொதுவில், நிறைந்து ஆடும் கூத்தனை - நிறைந்து ஆடுகிற திருக்கூத்துடையவனை, குருமாமணி தன்னை — ஒளியுள்ள மாணிக்கத்தை, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(பொ-ரை.) சிநேகமென்று என்னை யடிமையாக ஏற்றுக்கொண்டவனை, தேவர்க்கினிறவனை, குமரனைப்பெற்ற உமாதேவியை ஒருபுறத்து வைத்து ஆகாயகங்கையை (சடையில்) மறைத்த பரிசுத்தனை, சிவபிரானை, செழுமையாகிய தேனை, தில்லைப்பொதுவில் நிறைந்தாடுகிற திருக்கூத்துடையவனை, ஒளியுள்ள மாணிக்கத்தை, திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(க-ரை.) என்னையாட்கோடல் முதலிய செயலுடைய சிவபிரானைத் திருக்கோலக்காவிற் கண்டுகொண்டே னென்பதாம்.

(வி-ரை.) வார் - கச்சு. தயங்குதல் - விளங்குதல். குருமாமணி-மாணிக்கம்.

அன்றுவந்தெனையகலிடத்தவர்முன்
  னாளதாகவென்றுவணங்காட்டி
நின்றுவெண்ணைநல்லூர்மிசையொளித்த
  நித்திலத்திரட்டொத்தினைமுத்திக்
கொன்றினன்றனையும்பர்பிரானை
  யுயருநல்லரணங்கெடச்சீறுங்
குன்றவில்லியைமெல்லியலுடனே
  கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) அன்று வந்து - அந்நாளில்வந்து, அகலிடத்தவர் முன் - உலகத்தார்க்கெதிரே, என்னை - என்னை நோக்கி, ஆள் ஆக என்று - அடிமையாகுகவென்று, ஆவணம் காட்டிநின்று - அடிமையோலையைக் காட்டி நின்று, வெண்ணைநல்லூர்மிசை ஒளித்த - திருவெண்ணெய் நல்லூரில் மறைந்துபோன, நித்திலத்திரள் தொத்தினை - முத்துத்திரளாகிய கொத்தினை, முத்திக்கு ஒன்றினான் தன்னை-முத்தியளித்தற் கென்றே ஒருப்பட்டிருப்பவனை, உம்பர்பிரானை-தேவர் பெருமானை, உயரும் - உயர்ந்த, நல் - நல்ல, அரணம் - மும்மதில்கள் கெட்டழிய, சீறும் - கோவித்த, குன்றவில்லியை - மேருமலையாகிய வில்லையுடையவனை, மெல்லியலுடனே - உமாதேவியோடு, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(பொ-ரை.) அந்நாளில் வந்து உலகத்தவர்க் கெதிரே என்னைநோக்கி அடிமையாகுகவென்று அடிமையோலையைக் காட்டிநின்று திருவெண்ணெய் நல்லூரில் மறைந்து போன முத்துத் திரளாகிய கொத்தினை, முத்தியளித்தற் கென்றே ஒருப்பட்டிருப்பவனை, தேவர் பெருமானை, உயர்ந்த நல்ல மும்மதில்கள் கெட்டழிய கோவித்த மேருமலையாகிய வில்லையுடையவனை, உமாதேவியோடு திருக்கோலககாவில் கண்டுகொண்டேன்.

(க-ரை) அன்று வந்து உலகத்தாரறிய என்னை யாட்கொண்ட சிவபிரானைத் திருக்கோலக்காவிற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை) அசலிடம் ஒருசொல் (உலகு). மிசை - ஏழனுருபு. குன்ற வில்லி - மேருமலையாகிய வில்லையுடையவன். (5)

காற்றுத்தீப்புனலாகிநின்றானைக்
கடவுளைக்கொடுமால்விடையானை
நீற்றுத்தீயுருவாய் நிமிர்ந்தானை
நிரம்புபல்கலையின்பொருளாலே
போற்றித்தன்கழற்றொழுமவனுயிரைப்
போக்குவானுயிர்நீக்கிடத்தாளாற்
கூற்றைத்தீங்குசெய்குரைகழலானைக்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப-ரை) காற்று தீ புனல் ஆகி நின்றானை - காற்று நெருப்பு நீர் ஆகி நின்றவனை, கடவுளை - தேவனை, கொடு - கொடிய, மால்விடையானை - மால்விடையையுடையவனை, நீற்று - திருவெண்ணீற்றையுடைய, தீஉருவாய் நிமிர்ந்தானை - நெருப்புருவாயுயர்ந்தவனை, நிரம்பு - நிறைந்த, பல்கலையின் பொருளாலே போற்றி - பலநூற்பொருள்களால் வணங்கி, தன் கழல் தொழுமவன் உயிரை - தன் திருவடியை வணங்குவோனது உயிரை, போக்குவான் - போக்கவந்தவனாகிய யமனது, உயிர்நீக்கிட - உயிரைவாங்க, தாளால் - திருவடியால், கூற்றை தீங்கு செய் - யமனை யுதைத்த, குரைகழலானை - குரைகழலையுடையவனை, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(பொ-ரை.) காற்று நெருப்பு நீர் ஆகிநின்றவனை, தேவனை, கொடியமால் விடையை யுடையவனை, திருவெண்ணீற்றையுடைய நெருப்புருவாயுயர்ந்தவனை, நிறைந்த பல நூற்பொருள்களால் வணங்கி தன் திருவடியை வணங்குவோனது உயிரை போக்கவந்தவனாகிய யமனது உயிரை வாங்க திருவடியால் யமனையுதைத்த குரைகழலை யுடையவனை, திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(க-ரை.) பஞ்சபூதங்கள் முதலாயினவாய் வியாபித்து நின்ற சிவபிரானைத் திருக்கோலக்காவில் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) தன்கழல் தொழுமவன் - மார்க்கண்டன். தாளால் தீங்குசெய்தல் - உதைத்தல். குரைகழல்-திருவடி, (சத்திக்கிற வீரக்கழலணிந்த திருவடி.)

அன்றயன்சிரமரிந்ததிற்பலிகொண்
டமரருக்கருள்வெளிப்படுத்தானைத்
துன்றுபைங்கழலிற்சிலம்பார்த்த
சோதியைச்சுடர்போலொளியானை

மின்றயங்கியவிடைமடமங்கை
யேவுமீசனைவாசமாமுடிமேற்
கொன்றையஞ்சடைக்குழகனையழகார்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப-ரை) அன்று அயன்சிரம் அரிந்து - அந்நாளில் பிரமனது தலையை யறுத்து, அதில் பலிகொண்டு - அத்தலையோட்டிற் பிக்ஷையேற்று, அமரருக்கு அருள் வெளிப்படுத்தானை - தேவர்களுக்குக் கருணைசெய்தவனை, துன்று - நெருங்கிய, பைகழல் சிலம்பு ஆர்த்த - பசிய திருவடியிற் சிலம்புக ளொலிக்கின்ற, சோதியை - ஒளியை, சுடர்போல் ஒளியானை - சூரியன்போலொளியை யுடையவனை, மின்தயங்கிய இடைமட மங்கை - உமாதேவி; மேவும் - ஒரு பாகத்தமர்ந்த, ஈசனை - ஈச்சுரனை, வாசம் - மணங்கமழ்கின்ற, மாமுடிமேல் - பெரிய திருமுடி மீது, கொன்றை-கொன்றைமாலையைத்தரித்த, அம்சடை-அழகிய சடையையுடைய, குழகனை-அழகனை, அழகு ஆர்-அழகுநிறைந்த, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன்.

(பொ-ரை.) அந்நாளில் பிரமனது தலையையறுத்து அத் தலையோட்டில் பிக்ஷையேற்று தேவர்களுக்குக் கருணைசெய்தவனை, நெருங்கிய பசிய திருவடியிற் சிலம்புகளொலிக்கின்ற ஒளியை, சூரியன்போலொளியையுடையவனை, உமாதேவி ஒரு பாகத்தமர்ந்த ஈச்சுரனை, மணங்கமழ்கின்ற பெரிய திருமுடிமீது கொன்றை மாலையைத் தரித்த அழகிய சடையையுடைய அழகனை, அழகு நிறைந்த திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(க-ரை.) அயன்றலை கொய்தல் முதலிய செயல்களையுடைய சிவபிரானைத் திருக்கோலக்காவிற் கண்டு கொண்டேனென்பதாம்.

(வி-ரை.) அயன்-அஜன் என்னும் வடமொழித்திரிபு. (பிரமன்.) தயங்குதல் - விளங்குதல். (7)

நாளுமின்னிசையாற்றமிழ்பரப்பு
ஞானசம்பந்தனுக்குலகவர்முன்
றாளமீந்தவன்பாடலுக்கிரங்குந்
தன்மையாளனையென்மனக்கருத்தை
யாளும்பூதங்கள்பாடநின்றாடு
மங்கணன்றனையெண்கணமிறைஞ்சுங்
கோளிலிப்பெருங்கோயிலுள்ளானைக்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே,

(ப-ரை.) நாளும் - நாள்தோறும், இன் இசையால் - இனிய இசையோடு, தமிழ்பரப்பும் ஞானசம்பந்தனுக்கு - தமிழைவிரித்த திருஞானசம்பந்தனுக்கு

உலகவர்முன் - உலகத்தார்க்கெதிரில், தாளம் ஈந்து - தாளத்தைக்கொடுத்து, அவன்பாடலுக்கு - அவனது பாட்டுக்கு, இரக்கும் தன்மையாளனை - இரங்கும் குணமுடையவனை, என் மனக்கருத்தை - என்னுள்ளக்கருத்தை, ஆளும் - ஆளப்படுகிற, பூதங்கள் பாடநின்று ஆடும் - பூதங்கள் பாடநின்றாடுகிற, அங்கணன்தன்னை - கிருபைக் கண்ணனை, எண்கணம் இறைஞ்சும் - எண்கணம் வணங்குகிற, கோளிலி - திருக்கோளிலியில், பெருங்கோயில் உள்ளானை - பெரிய ஆலயமுடையவனை, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(பொ-ரை.) நாள்தோறும் இனிய இசையோடு தமிழைவிரித்த திருஞானசம்பந்தனுக்கு உலகத்தார்க் கெதிரில் தாளத்தைக் கொடுத்து அவனதுபாட்டுக்கு இரங்கும் குணமுடையவனை, என்னுள்ளக் கருத்தை ஆளப்படுகிற பூதங்கள் பாடநின்றாடுகிற கிருபைக்கண்ணனை, எண்கணம் வணங்குகிறதிருக்கோளிலியில் பெரிய ஆலயமுடையவனை, திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(க-ரை.) திருஞான சம்பந்தனுக்குத் தாளங்கொடுத்தல் முதலிய செயல்களையுடைய சிவபிரானைத் திருக்கோலக்காவினிற் கண்டு கொண்டே னென்பதாம்.

(வி-ரை.) அங்கணன் - கிருபைக்கண்ணன். (8)

அரக்கனாற்றலையழித்தவன்பாட்டுக்
கன்றிரங்கியவென்றியினானைப்
பரக்கும்பாரளித்துண்டுகந்தவர்கள்
பரவியும்பணிதற்கரியானைச்
சிரக்கண்வாய்செவிமூக்குயர்காய
மாகித்தீவினைதீர்த்தவெம்மானைக்
குரக்கினங்குதிகொண்டுகள்வயல்சூழ்
கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

(ப-ரை.) அரக்கன் - இராவணனது, ஆற்றல் - வலியை, அழித்து-கெடுத்து, அவன் பாட்டுக்கு - அவனது பாடலுக்கு, அன்று இரங்கிய - அந்நாளில் இரங்கியருளின, வென்றியினானை - வெற்றியுடையவனை, பரக்கும் - பரந்த, பார் அளித்து - உலகத்தைப் படைத்து, உண்டு உகந்தவர்கள் - உண்டு களித்தவர்கள், பரவியும் - துதித்தும், பணிதற்கு அரியானை - துதித்து வணங்குதற்கும் அரியவனை, சிரம் கண் வாய் செவி மூக்கு உயர்காயம் ஆகி - சிரம் கண் வாய் செவி மூக்கு உயர்காயமாகி, தீவினைதீர்த்த எம்மானை - தீவினையை யொழித்த எம்பெருமானை, குரக்கு இனம் - குரங்குக் கூட்டங்கள், குதிகொண்டு உகள் - குதித்துத்துள்ளுகிற, வயல்சூழ் - வயல்கள் சூழ்ந்த, கோலக்காவினில் - திருக்கோலக்காவில், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

(போ-ரை) இராவணனது வலியைக்கெடுத்து அவனது பாடலுக்கு அந்நாளில் இரங்கியருளின வெற்றியையுடையவனை, பரந்த உலகத்தைப்படைத்து உண்டுகளித்தவர்கள் துதித்து வணங்குதற்கும் அரியவனை, சிரம்கண் வாய் செவி மூக்கு உயர்காயமாகி தீவினையையொழித்த எம்பெருமானை, குரங்குக் கூட்டங்கள் குதித்துத் துள்ளுகிற வயல்கள் சூழ்ந்த திருக்கோலக்காவில் கண்டுகொண்டேன்.

(கு-ரை.) இராவணனது பாட்டுக்கிரங்கின சிவபிரானைத் திருக்கோலக்காவிற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) பார் அளித்து உண்டு உகந்தவர்கள் என்றது பிரமவிட்டுணுக்களை. (9)

கோடரப்பயில்சடையுடைக்கரும்பைக்
 கோலக்காவுளெம்மானைமெய்ம்மானப்
பாடரக்குடியடியவர்விரும்பப்
 பயிலுநாவலாரூரன்வன்றொண்ட
னாடிரங்கிமுன்னறியுமந்நெறியா
 னவின்றபத்திவைவிளம்பியமாந்தர்
காடரங்கெனநடநவின்றான்பாற்
 கதியுமெய்துவர்பதியவர்க்கதுவே.

(ப-ரை.) கோடு - வளைவாகிய, அரபயில்—பாம்புவாழ்கின்ற, சடைஉடை-சடையையுடைய, கரும்பை - கரும்பினை, சோலக்காவுள், எம்மானை - திருக்கோலக்காவிலுள்ள எம்பெருமானை, மெய் - உண்மையாகிய, மானப்பாடர் - மானமாகிய பெருமையையுடையவாகிய, அம் - அழகிய, குடி அடியவர் விரும்ப - குடியடியார் விரும்பும்படி, பயிலும் - வாழ்கின்ற, நாவலாரூரன் வன்றொண்டன்-சுந்தரன், நாடு - நாட்டார், இரங்கி - இரக்கமுற்று, முன் அறியும் - முன்னேயறிதற்குரிய, அந்நெறியால் - அவ்வழியால், நவின்ற - சொன்ன, இவை பத்து விளம்பிய மாந்தர் - இந்தப் பத்துப்பாடலுஞ் சொன்ன மானிடர், காடு-மயானத்தை, அரங்கு என - ஆடிடமாகக்கொண்டு, நடம் நவின்றான் பால்- நடநஞ் செய்தவனிடத்தில், கதியும் எய்துவர்-உயர் கதியையும் அடைவர், அவர்க்கு பதி அதுவே — அவர்க்கிடமாவதும் அதுவே எ-று.

(போ-ரை.) வளைவாகிய பாம்பு வாழ்கின்ற சடையையுடைய கரும்பினை, திருக்கோலக்காவிலுள்ள எம்பெருமானை, உண்மையாகியமானமாகிய பெருமையையுடையவராகிய அழகியகுடியடியார் விரும்பும்படிவாழ்கின்ற சுந்தரன், நாட்டார் இரக்கமுற்று முன்னே யறிதற்குரிய அவ்வழியால் சொன்ன இந்தப் பத்துப்பாடலுஞ்சொன்னமானிடர், மயானத்தை ஆடிடமாகக்கொண்டு நடநஞ்செய்தவனிடத்தில் உயர்கதியையும் அடைவர், அவர்க்கிடமாவதும் அதுவே.

(க-ரை.) திருக்கோலக்காவி லெழுந்தருளியிருக்கிற சிவபெருமானை நாவலாரூரன் புகழ்ந்துரைத்த இந்தப் பத்துப்பாடலுங் கற்றுவல்லார் சிவகதியை யடைவரென்பதாம்.

(வி-ரை) காடரங்கென நடநவின்றான் - சிவபெருமான். அரா அரா எனக் குறுக்கல் பெற்றது. அன்பர்க்கினியனாதலால் கரும்பென்றார். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சத்தபுரீசர். தேவியார் - ஓசைகொடுத்தநாயகி.

---

## நம்பியென்ற திருப்பதிகம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

மெய்யைமுற்றப்பொடிப்பூசியோர்நம்பி
வேதநான்கும்விரித்தோதியோர்நம்பி
கையிலோர்வெண்மழுவேந்தியோர்நம்பி
கண்ணுமூன்றுமுடையாயொருநம்பி
செய்யநம்பிசிறுசெஞ்சடைநம்பி
திரிபுரந்தீயெழச்செற்றதோர்வில்லா
லெய்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) மெய்முற்ற - திருமேனிமுழுதும், பொடிபூசி - நீறுபூசியாகிய, ஓர் நம்பி - ஒப்பற்ற நம்பி, வேதம் நான்கும் விரித்து ஓதி - நான்கு வேதங்களையும் விரித்தோதுவோனாகிய, ஓர் நம்பி - ஒப்பற்ற நம்பி, கையில் ஓர் வெண்மழு ஏந்தி ஓர் நம்பி - திருக்காத்தில் ஒரு வெண்மழு வேந்துவோனாகிய ஒப்பற்ற நம்பி, கண்ணு மூன்றும் உடையாய் ஒரு நம்பி - மூன்று கண்களையுடையவனாகிய ஒப்பற்ற நம்பி, செய்ய நம்பி - செவ்விய நம்பி, சிறு செஞ்சடை நம்பி - சிறிய செஞ்சடையையுடைய நம்பி, திரிபுரம் தீ எழ செற்றது-முப்புரம் நெருப்பெழ அழித்ததாகிய, ஓர் வில்லால் எய்த நம்பி - ஒருவில்லால் அம்பெய்தநம்பி, என்னை ஆளுடை நம்பி — என்னை யடிமையாகவுடைய நம்பி, எழுபிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி - எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று.

(பொ-ரை.) திருமேனிமுழுதும் நீறுபூசியாகிய, ஒப்பற்ற நம்பி, நான்கு வேதங்களையும் விரித்தோதுவோனாகிய ஒப்பற்ற நம்பி, திருக்காத்தில் ஒரு

வெண்மழுவேந்துவோனாகிய ஒப்பற்றநம்பி, மூன்று கண்களையுடையவனாகிய ஒப்பற்ற நம்பி, செவ்விய நம்பி, சிறிய செஞ்சடையையுடைய நம்பி, முப்புரம் நெருப்பெழ அழித்ததாகிய ஒருவில்லால் அம்பெய்த நம்பி, என்னையடிமையாக வுடைய நம்பி, எழ்பிறவியினும் எம்முடையநம்பி, கண்டாயே.

(க-ரை.) திருமேனிமுழுதும் பொடிபூசுதல் முதலிய தொழில்களை யுடைய நம்பியே எழுபிறப்பு மென்னையாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை.) கண் உகரச்சாரியை பெற்று கண்ணு என நின்றது. செய்ய நம்பி-செவந்தநம்பி. நம்பி - மங்களகுணங்களால் நிறைந்தவன், (ஸகுணபூர்த்தி யுள்ளவன்.) கண்டாய் வ முன்னிலை யசைச்சொல். (1)

திங்கணம்பிமுடிமேலடியார்பாற்
சிறந்தநம்பிபிறந்தவுயிர்க்கெல்லா
மங்கணம்பியருண்மால்விசும்பாளு
மமரர்நம்பிகுமரன்முதற்றேவர்
தங்கணம்பிதவத்துக்கொருநம்பி
தாதையென்றுன்சரண்பணிந்தேத்து
மெங்கணம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) முடிமேல் திங்கள் நம்பி - திருமுடிமேல் பிறையையணிந்த நம்பி, அடியார்பால் - அடியவரிடத்தில், சிறந்த நம்பி - சிறந்திருக்கிற நம்பி, பிறந்த உயிர்க்கு எல்லாம் - பிறந்த உயிர்கட் கெல்லாம், அங்கண் நம்பி - கருணையுள்ளநம்பி, அருள்-அருளோடு கூடி, மால்விசும்பு ஆளும் - பெரிய விண்ணுலகையாள்கின்ற, அமரர்நம்பி - தேவர்களுக்கிறைவன், குமரன்முதல் தேவர்கள் தங்கள் நம்பி - முருகன் முதலிய தேவர்களுக்கு நம்பி, தவத்துக்கு ஒரு நம்பி - தவத்துக்கு ஒருநம்பி, தாதை என்று உன் சரண் பணிந்து ஏத்தும் - தந்தையே யென்று உன் திருவடியை வணங்கித் துதிக்கிற, எங்கள் நம்பி - எம்முடையநம்பி, என்னை ஆளுடை நம்பி-என்னை யடிமையாக வுடையநம்பி, எழு பிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி - எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று.

(பொ-ரை.) திருமுடிமேல் பிறையையணிந்த நம்பி, அடியவரிடத்தில் சிறந்திருக்கிற நம்பி, பிறந்த உயிர்கட்கெல்லாம் கருணையுள்ள நம்பி, அருளோடு கூடிய பெரிய விண்ணுலகை யாள்கின்ற தேவர்களுக்கிறைவன், முருகன் முதலிய தேவர்களுக்கு நம்பி, தவத்துக்கு ஒருநம்பி தந்தையேயென்று உன் திருவடியை வணங்கித் துதிக்கிற எம்முடைய நம்பி, என்னை யடிமையாக வுடைய நம்பி, எழ்பிறவியினும் எம்முடையநம்பி கண்டாயே.

(கு-ரை.) முடிமேல் திங்களையணிந்த நம்பியே எழுபிறப்பும் என்னை யாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை) அங்கண் - கிருபை. மால்விசும்பு - பெரிய சுவர்க்கலோகம். திங்கள் - பிறை. (2)

வருந்தவன் றுமதயானையுரித்த
வழக்குநம்பிமுழங்குங்கடனஞ்சம்
அருந்துநம்பியமரர்க்கமுதீய்ந்த
வருளெனம்பிபொருளாயருநட்டம்
புரிந்தநம்பிபுரிநூலுடைநம்பி
பொழுதும்விண்ணும்முழுதும்பலவாகி
யிருந்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) மதயானை அன்று வருந்த - மதயானை அந்நாளில் வருந்துமாறு, உரித்த வழக்கு நம்பி - உரித்த வழக்கத்தையுடைய நம்பி, முழங்கும் கடல் நஞ்சம் அருந்தும் நம்பி - சத்திக்கிற கடலிலுண்டாகிய நஞ்சையுண்ட நம்பி, அமரர்க்கு அமுது ஈந்த - தேவர்க்கு அமுதுகொடுத்த, அருள் என் நம்பி - அருளையுடைய எனது நம்பி, பொருளால் - உண்மையால், அருநட்டம் புரிந்த நம்பி - அரியநடநம்செய்த நம்பி, புரிநூல் உடையநம்பி - பூணூலையுடைய நம்பி, பொழுதும் விண்ணும் முழுதும் - காலமும் ஆகாயமும் முழுதுமாகிய, பலஆகி இருந்த நம்பி - பல வுருவாகியிருந்த நம்பி, என்னை ஆளுடை நம்பி - என்னை யடிமையாகவுடைய நம்பி, எழுபிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி-எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று.

(பொ-ரை) மதயானை அந்நாளில் வருந்துமாறு உரித்த வழக்கத்தையுடைய நம்பி, சத்திக்கிற நடலிலுண்டாகிய நஞ்சையுண்ட நம்பி, தேவர்க்கு அமுதுகொடுத்த அருளையுடைய எனது நம்பி, உண்மையால் அரிய நடநம் செய்த நம்பி, பூணூலையுடைய நம்பி, காலமும் ஆகாயமும் முழுதுமாகிய பல வுருவாயிருந்த நம்பி, என்னை யடிமையாகவுடைய நம்பி, எழ்பிறவியினும் எம்முடைய நம்பி கண்டாயே.

(கு ரை.) யானையுரித்தல் முதலிய தொழில்களையுடைய நம்பியே எழுபிறப்பும் என்னை யாளுடைநம்பி யென்பதாம்.

(வி-ரை.) பொருள்-உண்மை பொருள் இப்பொருட்டாதலை "இருள்சேரிருவினையுஞ்சேரா விறைவன், பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்னும் பெரு நாவலர் செய்யுட்கண்ணுங் கண்டமைக. (3)

ஊறுநம்பியமுதாவுயிர்க்கெல்லா
முரியநம்பிதெரியம்மறையங்கங்
கூறுநம்பிமுனிவர்க்கருங்கூற்றைக்
குமைத்தநம்பிகுமையாப்புலனைந்துஞ்

சீறுநம்பி திருவெள்ளடைநம்பி
செங்கண்வெள்ளைச்செழுங்கோட்டெருதென்று
மேறுநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) உயிர்க்கு எல்லாம் அமுதா ஊறும் நம்பி - எல்லா வுயிர்கட்கும் அமிர்தமாகச் சுரக்கின்றநம்பி, உரியநம்பி-யாவர்க்கு முரியநம்பி, முனிவர்க்கு - முனிவருக்கு, மறை அங்கம் - வேதாங்கத்தை, தெரியக்கூறும் நம்பி - தெரியு மாறு சொல்லுகிறநம்பி, அரும் கூற்றை குமைத்த நம்பி - அரிய யமனை யுதைத்தநம்பி, குமையா - அழியாத, புலன் ஐந்தும் சீறும் நம்பி — ஐம்புலன் களையும் கோவிக்கிற நம்பி, திருவெள்ளடை நம்பி - திருவெள்ளடையிலெழுந் தருளியிருக்கிற நம்பி, செங்கண் - செவந்தகண்களையும், வெள்ளைச் செழுங் கோட்டு - வெண்மையாகிய செழிய கொம்பினையுமுடைய, எருது - எருதின் மேல், என்றும் ஏறும் நம்பி - எந்நாளும் ஏறுகிற நம்பி, என்னை ஆளுடை நம்பி - என்னை யடிமையாகவுடையநம்பி, எழுபிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி - எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று

(பொ-ரை) எல்லாவுயிர்கட்கும் அமிர்தமாகச் சுரக்கின்றநம்பி, யாவர்க்கு முரியநம்பி, முனிவருக்கு வேதாங்கத்தைத் தெரியுமாறு சொல்லுகிற நம்பி, அரிய யமனையுதைத்த நம்பி, அழியாத ஐம்புலன்களையும் கோவிக்கிறநம்பி, திருவெள் ளடையி லெழுந்தருளியிருக்கிறநம்பி, செவந்த கண்களையும் வெண்மையாகிய செழிய கொம்பினையுமுடைய எருதின்மேல் எந்நாளும் ஏறுகிற நம்பி, என்னை யடிமையாகவுடைய நம்பி, எழ்பிறவியினும் எம்முடையநம்பி கண்டாயே.

(கு-ரை.) எல்லா வுயிர்க்கும் அமுதாகச் சுரக்கின்ற நம்பியே எழுபிறப்பும் என்னை யாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை.) முனிவர் என்றது சநகாதியராகிய நால்வரை. மறை அங்கம் - வேதமும் வேதாங்கமும். குமைத்தல் - நொறுக்கல். திருவெள்ளடை — ஒரு திருப்பதி. கோடு - கொம்பு. சீறுதல் - வெல்லுதல். (4)

குற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக்
குலைத்தநம்பிசிலையாவரைகையிற்
பற்றுநம்பிபரமானந்தவெள்ளம்
பணிக்குநம்பியெனப்பாடுதலல்லான்
மற்றுநம்பியுனக்கென்செயவல்லேன்
மதியிலேன்படுவெந்துயரெல்லா
மெற்றுநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) குற்றம் - குற்றத்தையுடைய, நம்பி - நம்பி, குறுகார் எயில்மூன்றைக்குலைத்த நம்பி - பகைவராது முப்புரத்தை யழித்த நம்பி, வரை - மலையை, சிலைபா-வில்லாக, கையில் பற்றும் நம்பி - திருக்கரத்திற் பிடித்த நம்பி, பரமாநந்தவெள்ளம் பணிக்கும் நம்பி - பரமாநந்த ப்ரவாஹத்தை யருள்செய்கிற நம்பி, என - என்று, பாடுதல் அல்லால் - பாடுவதேயன்றி, மற்றும் நம்பி உனக்கு என்செயவல்லேன் - நம்பிமேலும் உனக்கு யாது செய்யவல்லேன், மதியிலேன்படும் - அறிவிலேன்படுகிற, வெம்துயர் எல்லாம் - கொடிய துன்பங்களையெல்லாம், எற்றும் நம்பி - அழிக்கிற நம்பி, என்னை ஆளுடை நம்பி - என்னை யடிமையாக வுடையநம்பி, எழுபிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி - எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று.

(போ-ரை) குற்றத்தையுடைய நம்பி, பகைவாது முப்புரத்தை யழித்த நம்பி, மலையை வில்லாக திருக்கரத்திற் பிடித்தநம்பி, பரமாநந்த ப்ரவாஹத்தை யருள்செய்கிற நம்பி என்று பாடுவதே யன்றி, நம்பிமேலும் உனக்கு யாதுசெய்யவல்லேன், அறிவிலேன் படுகிற கொடிய துன்டங்களையெல்லாம் அழிக்கிற நம்பி, என்னை யடிமையாகவுடைய நம்பி, எழ்பிறவியினும் எம்முடைய நம்பி கண்டாயே.

(க-ரை.) குற்றநம்பிக் குறுகார் எயில் மூன்றைக் குலைத்தநம்பி முதலிய பெயர்களைப் படைத்த நம்பியே எழுபிறப்பும் என்னையாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை.) குறுகார் - பகைவர் (முப்புரத்தார்). எயில் - மதில். மலை - மேருமலை. எற்றுதல் - அழித்தல். (5)

அரித்தநம்பியடிகைதொழுவார்நோ
யாண்டநம்பிமுன்னையீண்டுலகங்க
டெரித்தநம்பியொருசேவுடைநம்பி
சில்பலிக்கென்றகந்தோறுமெய்வேடந்
தரித்தநம்பிசமயங்களினம்பி
தக்கன்றன்வேள்விபுக்கன்றிமையோரை
யிரித்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) அடி கை தொழுவார் - தன் திருவடியை கைகூப்பி வணங்குவோருடைய, நோய் - துன்பத்தை, அரித்த நம்பி - சங்கரித்த நம்பி, ஆண்ட நம்பி - எம்மை யாண்டருளின நம்பி, நம்முன்னை உலகங்கள் - பழைய உலகங்கள், தெரித்த நம்பி - தோற்றுவித்த நம்பி, ஒரு சே உடைநம்பி - ஒற்றை எருதினையுடைய நம்பி, சில்பலிக் கென்று - சிறிது பிக்ஷையின் பொருட்டு, அகம் தோறும் - வீடுதோறும், மெய்வேடம் தரித்த நம்பி - உண்மையாகிய வேடம் பூண்ட நம்பி, சமயங்களின் நம்பி - சமயங்களுக்கெல்லாம் இறைவன், தக்கன்

றன் வேள்விபுக்கு-தக்கனது யாகத்திற் பிரவேசித்து, அன்று இமையோரை இரித்த நம்பி-அந்நாளில் தேவர்களை யோட்டின நம்பி, என்னை ஆளுடை நம்பி-என்னை யடிமையாகவுடைய நம்பி, எழுபிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி – எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று.

(பொ-ரை.) தன் திருவடியைக் கைகூப்பி வணங்குவோருடைய துன்பத்தை சங்கரித்த நம்பி, எம்மை யாண்டருளின நம்பி, பழைய வுலகங்கள் தோற்றுவித்த நம்பி, ஒற்றை எருதினையுடைய நம்பி, சிறிது பிச்சையின்பொருட்டு வீடுதோறும் உண்மையாகிய வேடம்பூண்ட நம்பி, சமயங்களுக்கெல்லாம் இறைவன், தக்கனது யாகத்திற் பிரவேசித்து அந்நாளில் தேவர்களை யோட்டின நம்பி, என்னை யடிமையாகவுடைய நம்பி, எழ்பிறவியினும் எம்முடைய நம்பி கண்டாயே.

(கு-ரை.) அடி கை தொழுவார் நோயரித்த நம்பி முதலிய பேர்களைப்படைத்த நம்பியே எழுபிறப்பும் என்னை யாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை) அரித்தல் - வேறுத்தல். தெரித்தல் - தோன்றுவித்தல். சே - எருது. பலி - சோறு. இரித்தல் - ஓட்டுதல். (6)

பின்னைநம்புப்புயத்தானெடுமாலும்
பிரமனும்மென்றிவர்நாடியுங்காணு
வுன்னைநம்பியொருவர்க்கெய்தலாமே
யுலகுநம்பியுரைசெய்யுமதல்லான்
முன்னைநம்பிபின்னும்வார்சடைநம்பி
முழுதிவையித்தனையுந்தொகுத்தாண்ட
தென்னைநம்பியெம்பிரானுபநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை ) பின்னை - திருமகள், நம்பும்-பற்றுகிற, புயத்தான் நெடுமாலும்-புயத்தினையுடைய திருமாலும், பிரமனும்-பிரமதேவனும், என்ற இவர்நாடியும்-என்ற இவ்விருவர் தேடியும், காணு உன்னைநம்பி-காணக்கூடாத உன்னைநம்பி, ஒருவர்க்கு எய்தல் ஆமே - ஒருவர்க்கு அடையக்கூடுமோ, உலகு நம்பி உரை செய்யுமது அல்லால் - உலகத்தார் நம்பிச்சொல்லுதலே யன்றி, முன்னை நம்பி-முற்பட்டநம்பி, பின்னும் வார்சடை நம்பி - பின்னிய நீண்ட சடையையுடைய நம்பி, முழுது இவை இத்தனையும் - முழுமையாகிய இவை யித்தனையும், தொகுத்தாண்டது-சேர்த்தாண்டது, என் ஐ நம்பி-என் இறைவனாகிய நம்பி, எம்பிரான் ஆய நம்பி - எம்பெருமானாகிய நம்பி, எழுபிறப்பும் - எழ் பிறவியினும், எங்கள் நம்பி - எம்முடைய நம்பி, கண்டாயே - கண்டாயே எ-று.

(பொ - ரை.) திருமகள் பற்றுகிற புயத்தினையுடைய திருமாலும் பிரமதேவனும் என்ற இவ்விருவர் தேடியும் காணக்கூடாத வுன்னை நம்பி, ஒருவர்க்கு

அடையக்கூடுமோ, உலகத்தார் நம்பிச் சொல்லுதலே யன்றி, முற்பட்ட நம்பி, பின்னிய நீண்ட சடையையுடைய நம்பி, முழுதுமாகிய இவையித்தனையும் சேர்த்தாண்டது என் இறைவனாகிய நம்பி, என் பெருமானாகிய நம்பி, எழ்பிறவியினும் எம்முடைய நம்பி கண்டாயே.

(க-ரை.) நெடுமால் முதலியோரால் காணவொண்ணாத நம்பியே எழு பிறப்பும் என்னை யாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை.) பின்னை - இலக்குமி. புயத்தான் - புயத்தவனாகிய. எய்தல் - அடைதல். ஆமே - கூடுமா. வார்சடை - நீரையுடைய சடை, நீண்ட சடையுமாம். உலகு - எல்லா வுலகத்தாரும். உரைசெய்தல் - பகழ்தல். என் ஐ-என் இறைவன். (7)

சொல்லைநம்பிபொருளாய்நின்றநம்பி
தோற்றமீறுமுதலாகியநம்பி
வல்லைநம்பியடியார்க்கருள்செய்ய
வருந்திநம்பியுனக்காட்செயகில்லா
ரல்லனம்பிபடுகின்றதென்னடி
யணங்கொருபாகம்வைத்தெண்கணம்போற்ற
இல்லைநம்பிபிடுபிச்சைகொள்நம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) சொல்லை நம்பி - சொல்லாயிருக்கின்ற நம்பி, பொருளாய்நின்ற நம்பி - பொருளாயிருக்கின்ற நம்பி, தோற்றம் ஈறு முதல்ஆகிய நம்பி-தோற்றக் கேடு முதலாகியிருக்கிறநம்பி, வல்லை நம்பி-வல்லவனாயிருக்கிற நம்பி, அடியார்க் கருள்செய்ய வருந்தி நம்பி - தொண்டருக்கருள்செய்தற்பொருட்டு வருந்துவோனாகிய நம்பி, உனக்கு ஆள் செயகில்லார் - உனக்கடிமைசெய்ய மாட்டாதவர், அல்லல்நம்பி படுகின்றது என்னாடி-துன்பப்படுவது யாதுகருதி நம்பி, அணங்கு ஒருபாகம்வைத்து உமாதேவியை ஒருபங்கில்வைத்து, எண்கணம்போற்ற-மதித்தற்குரிய சிவகணங்கள் வணங்க, இல்லை நம்பி - வீடுகளை நம்பி, இடுபிச்சை கொள் நம்பி-அவர்களிடம் பிக்ஷையை எற்றுக்கொள்ளுகிற நம்பி, எழுபிறப்பும்-எழ்பிறவியினும், எங்கள்நம்பி-எம்முடைய நம்பி, கண்டாயே-கண்டாயே எ-று.

(பொ-ரை.) சொல்லாயிருக்கிற நம்பி, பொருளாயிருக்கிற நம்பி, தோற்றக் கேடுமுதலாயிருக்கிற வல்லவனாகிய நம்பி, தொண்டருக் கருள்செய்தற்பொருட்டு வருந்துவோனாகியநம்பி, உனக்கடிமை செய்யமாட்டாதவர் துன்பப்படுவது யாது கருதி நம்பி, உமாதேவியை ஒரு பங்கில் வைத்து மதித்தற்குரிய சிவகணங்கள் வணங்க, வீடுகளை நம்பி அவர்களிடம் பிக்ஷையை எற்றுக் கொள்ளுகிற நம்பி, எழ்பிறவியினும் எம்முடைய நம்பி கண்டாயே.

(க-ரை.) சொன்முதலியவாய் நின்ற நம்பியே எழுபிறப்பும் என்னையாளு டைநம்பி யென்பதாம்.

(வி-ரை.) தோற்றம் - உற்பத்தி. ஈறு - நாசம். ஆள்செய்தல் - அடிமை செய்தல். அல்லல் - துன்பம். அணங்கு - உமாதேவி. சொல்லை - சொல் ஐ. யாவரும் புகழ்தற்குரிய தலைவன். பொருள்-அர்த்தம். (சொற்பொருள்) வல்லை நம்பி - எல்லாம் வல்லவனாகிய நம்பி. கணம் - கூட்டம். இல்லை-இல்லில் (வீடு களில்) உருபுமயக்கம். (8)

காண்டுநம்பிகழற்சேவடியென்றுங்
 கலந்துனைக்காதலித்தாட்செய்கிற்பாரை
யாண்டுநம்பியவர்முன்கதிசேர
 வருளுநம்பிகுருமாப்பிறைபாம்பைத்
தீண்டுநம்பிசென்னியிற்கன்னிதங்கத்
 திருத்துநம்பிபொய்ச்சமண்பொருளாகி
யீண்டுநம்பியிமையோர்தொழுநம்பி
 யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.

(ப-ரை.) நம்பி கழற் சேவடி காண்டும் என்றும் - நம்பியின் கழல் பூண்ட திருவடியைக் காண்போமென்றும், கலந்து உன்னை காதலித்து ஆட் செய்கின் றாரை - கூடி உன்னையிச்சித்து அடிமைசெய்வோரை, ஆண்டுநம்பி - ஆண்ட ருளுநம்பி, அவர் முன்கதிசேர அருளும் நம்பி - அவர் முதன்மையாகிய கதி யடைய அருள்செய்கிற நம்பி, குருமாப்பிறை-ஒளியுள்ள பெரிய பிறையானது, பாம்பைதீண்டும் நம்பி-பாம்பைத் தொடுதற்கிடமாயிருக்கிற நம்பி, சென்னியில் கன்னிதங்க திருத்தும் நம்பி - சிரத்தில் கங்கை தங்கும்படி திருத்தின நம்பி, பொய்ச்சமண் - பொய்ச்சமணர்களுக்கு, பொருள்ஆகி ஈண்டும் நம்பி - பொரு ளாகியிருக்கிற நம்பி, இமையோர் தொழும் நம்பி-தேவர்களால் வணங்கப்படு கிற நம்பி, எழுபிறப்பும் - எழ்பிறவியினும், எங்கள் நம்பி - எம்முடைய நம்பி, கண்டாயே-கண்டாயே எ-று.

(பொ-ரை.) நம்பியின் கழல்பூண்ட திருவடியைக் காண்போமென்றும் கூடி உன்னை யிச்சித்து அடிமைசெய்வோரை ஆண்டருளு நம்பி, அவர் முதன் மையாகிய கதியடைய அருள் செய்கிற நம்பி, ஒளியுள்ள பெரிய பிறையானது பாம்பைத் தொடுதற்கிடமாயிருக்கிற நம்பி, சிரத்தில் கங்கைதங்கும்படி திருத் தின பொய்ச்சமணர்களுக்கு பொருளாகியிருக்கிற நம்பி, தேவர்களால் வணங்கப் படுகிற நம்பி, எழ்பிறவியினும் எம்முடைய நம்பி கண்டாயே.

(கு-ரை.) நம்பி அடிமைசெய்வாரை யாண்டருளும் நம்பியே எழுபிறப்பும் என்னை யாளுடை நம்பி யென்பதாம்.

(வி-ரை) கதி - முத்தி. குரு - நிறம். கன்னி - கங்கை. காண்டும் - காண்போம். காதலித்து - விரும்பி. ஆட்செய்கின்றாரை - அடிமைசெய்வோரை. ஈண்டும் - மிகுந்த. (9)

**காத்திநம்பிகசியாதவர்தம்மைக்**
**கசிந்தவர்க்கிம்மையோடம்மையிலின்பம்**
**பெருக்குநம்பிபெருகக்கருத்தா** *

(ப-ரை.) கசியாதவர் தம்மை நம்பி - மனங்கரையாதவர்க்கு, காத்திநம்பி— ஒளிக்கிறாய் நம்பி, கசிந்தவர்க்கு - மனங்கரைந்தவர்க்கு, இம்மையொடு-இம்மையின்பத்தோடு, அம்மையில் இன்பம் - மறுமையின்பத்தையும், பெருக்கும் நம்பி-பெருகச்செய்கிற நம்பி, பெருகக் கருத்தா.

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தினை நகர்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

**நீறுதாங்கியதிருநுதலானை**
**நெற்றிக்கண்ணனைநிரைவளைமடந்தை**
**கூறுதாங்கியகொள்கையினானைக்**
**குற்றமில்லியைக்கற்றையஞ்சடைமே**
**லாறுதாங்கியவழகனையமரர்க்**
**கரியசோதியைவரிவராலுகளுஞ்**
**சேறுதாங்கியதிருத்தினைநகருட்**
**சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.**

(ப-ரை.) நீறுதாங்கிய திருநுதலானை - நீறுபூசப்பெற்ற அழகிய நெற்றியையுடையவனை, நெற்றிக்கண்ணனை - நெற்றியில் கண்ணுடையவனை, நிரைவளை மடந்தை - உமாதேவியை, கூறுதாங்கிய கொள்கையினானை - ஒருபாகத்தில் தாங்கிய கோட்பாடுடையவனை, குற்றம் இல்லியை - குற்றமில்லாதவனை, கற்றை அம் சடைமேல் - திரட்சியாகிய அழகிய சடையின்மீது, ஆறுதாங்கிய அழகனை — கங்காநதியைச் சுமந்த அழகனை, அமரர்க்கு அரிய சோதியை-தேவர்களுக்கு அருமையாகிய ஒளியை, வரிவரால் உகளும் - வரிகளை

---

* மற்றது - சிதிலமாயிற்று.

யுடைய வரால்மீன்கள் குதிக்கிற, சேறுதாங்கிய - சேற்றையுடைய, திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினைநகரில் எழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) நீறுபூசப் பெற்ற அழகிய நெற்றியையுடையவனை, நெற்றியில் கண்ணுடையவனை, உமாதேவியை ஒருபாகத்தில்தாங்கிய கோட்பாடுடையவனை, குற்றமில்லாதவனை, திரட்சியாகிய அழகிய சடையின்மீது கங்காநதியைச் சுமந்த அழகனை, தேவர்களுக்கு அருமையாகிய ஒளியை, வரிகளையுடைய வரால்மீன்கள் குதிக்கிற சேற்றையுடைய திருத்தினை நகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை என் நெஞ்சே

(க - ரை.) மனமே, நீறுதாங்கிய திருநுதல் முதலியவற்றையுடையவனை திருத்தினை நகரிற் சென்று அடைவாயாக என்பதாம்.

(வி - ரை.) நிரைவளைமடந்தை-உமாதேவி, (வரிசையாகிய வளையலையணிந்த பெண்.) கூறு - பாகம். வரி - கீற்று, நீட்சியெனினுமாம். (1)

பிணிகொளாக்கைபிறப்பிறப்பென்னுமிதனை
நீக்கியீசன்றிருவடியிணைக்காட்
டுணியவேண்டிடிற்சொல்லுவன்கேணீ
யஞ்சனெஞ்சமேவஞ்சர்வாழ்மதின்மூன்
றணிகொள்வெஞ்சிலையாலுகச்சீறு
மையன்வையகம்பரவிநின்றேத்துந்
திணியும்வார்பொழிற்றிருத்தினைநகருட்
சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

(ப-ரை) பிணிகொள் ஆக்கை - நோயைக் கொண்டிருக்கிற சரீரத்தின், பிறப்பு இறப்பு என்னும் இவற்றை நீக்கி - பிறப்பிறப்பென்கிற இவற்றை யொழித்து, ஈசன் திருவடியிணைக்கு-கடவுளின் திருவடியிணைக்கு, ஆள் துணிய வேண்டிடின்-ஆளாகும்படி நிச்சயிக்கவேண்டினல், சொல்லுவன் கேள்-சொல்லுகிறேன் கேட்கக்கடவை, நெஞ்சமே - மனமே, நீ அஞ்சல் - நீயஞ்சாதே, வஞ்சர் வாழ் - வஞ்சகர் வாழ்ந்திருந்த, மதில் மூன்று - மும்மதில்களை, அணிகொள் - அழகைக்கொண்ட, வெஞ்சிலையால் - கொடியவில்லினல், உக - அழியும்படி, சீறும் - கோவித்த, ஐயன் - எமது தந்தை, வையம் பரவி நின்று ஏத்தும் - உலகம் வணங்கி நின்று துதிக்கிற, திணியும்-உறுதியாகிய, வார்பொழில்-நீண்ட சோலைகள் சூழ்ந்த, திருத்தினை நகருள்சிவக்கொழுந்தினை - திருத்தினை நகருளெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) நோயைக்கொண்டிருக்கிற சரீரத்தின் பிறப்பிறப்பென்கிற இவற்றையொழித்து, கடவுளின் திருவடியிணைக்கு ஆளாகும்படி நிச்சயிக்க

வேண்டினால் சொல்லுகிறேன் கேட்கக்கடவை, மனமே, நீயஞ்சாதே, வஞ்சகர் வாழ்ந்திருந்த மும்மதில்களை அழலைக் கொண்ட கொடிய வில்லினால் அழியும்படி கோவித்த எமது தந்தை, உலகம் வணங்கிநின்று துதிக்கிற உறுதியாகிய நீண்டசோலைகள் சூழ்ந்த திருத்தினை நகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை என் நெஞ்சே.

(க-ரை.) மனமே, திருத்தினை நகர்ச் சிவபெருமானைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) இணை - இரண்டு. வஞ்சர் - முப்புரத்தார். ஆக்கை - உடம்பு. சிலை - வில். வையம் - எல்லாவுலகத்தாரும். (2)

வடிகொள்கண்ணிணைமடந்தையர்தம்பான்
மயலதுற்றுவஞ்சனைக்கிடமாகி
முடியுமாகருதேலெருதேறு
மூர்த்தியைமுதலாயபிரானை
யடிகளென்றடியார்தொழுதேத்து
மப்பன்றுய்ப்பிலாமுலையுமைகோனைச்
செடிகொள்கான்மலிதிருத்தினைநகருட்
சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

(ப-ரை.) வடிகொள் - மாவடு வகிர்போன்ற, கண் இணை - இரண்டு கண்களையுடைய, மடந்தையர் தம்பால் - மாதரிடத்தில், மயல் உற்று - மயக்கமடைந்து, வஞ்சனைக்கு இடம் ஆகி - வஞ்சகத்துக்கிடமாகி, முடியுமாறு கருதேல் - இறக்கநினையாதே, எருது ஏறும் மூர்த்தியை - இடபவாகனனை, முதல்ஆய பிரானை - முதல்வனாகிய பெருமானை, அடிகள் என்று - சுவாமியென்று, அடியார் தொழுது ஏத்தும் அப்பன் - தொண்டர் வணங்கித் துதிக்கிற உபகாரகனை, துய்ப்பு இல்லா முலை - உண்ணப்படாத தனங்களையுடைய, உமைகோனை - உமாதேவிக்கு நாயகனை, செடி கொள் கான்மலி - செடிகள் அடர்ந்த காடுமிகுந்த, திருத்தினைநகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினை நகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) மாவடு வகிர்போன்ற இரண்டு கண்களையுடைய மாதரிடத்தில் மயக்கமடைந்து வஞ்சகத்துக்கிடமாகி இறக்க நினையாதே, இடபவாகனனை, முதல்வனாகிய பெருமானை, சுவாமியென்று தொண்டர்வணங்கித் துதிக்கிற உபகாரகனை, உண்ணப்படாத தனங்களையுடைய உமாதேவிக்குநாயகனை, செடிகள் அடர்ந்த காடுமிகுந்த திருத்தினை நகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை என் நெஞ்சே.

(க-ரை.) மனமே, திருத்தினை நகர்ச் சிவபிரானைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) மடந்தையர் - மாதர். முடிதல் - இறத்தல். செடி - அச்சம் எனினுமாம். வடி - வடுத்தலையுடையது. "மாவடுவகிரன்ன கண்ணி பங்கா" "வடிக்கணிவை" என்றற் றொடக்கத்தனவற்றான் இது இனிது விளங்கும். துய்ப்பிலாமுலை - உண்ணாமுலை. ஒப்பிலாமுலையென்றும் பாடம். (3)

பாவமேபுரிந்தகலிடந்தன்னிற்
  பலபகர்ந்தலம்வந்துயிர்வாழ்க்கைக்
காவவென்றுழந்தயர்ந்துவீழாதே
  யண்ணறன்றிறமறிவினாற்கருதி
மாவினீருரியுடைபுனைந்தானை
  மணியைமைந்தனைவானவர்க்கமுதைத்
தேவதேவனைத்திருத்தினைநகருட்
  சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

(ப-ரை ) அகலிடம் தன்னில் பாவமேபுரிந்து - பூமியில் பாவத்தையே செய்து, பலபகர்ந்து-பலவற்றைச்சொல்லி, அலம் வந்து-உழன்று, உயிர் வாழ்க்கைக்கு - உயிர் வாழ்தற் பொருட்டு, - ஆவ என்று — ஐயோவென்று, உழந்து அயர்ந்து வீழாதே—வருந்திச் சோர்ந்து விழாமல், அண்ணல் திறம் - இறைவனது தன்மையை, அறிவினால் கருதி - உணர்வோடு நினைத்து, மாவின் -யானையின் ஈர் உரி—நனைவாகிய தோலை, உடைபுனைந்தானை - ஆடையாகப் போர்த்தவனை, மணியை - ரத்நத்தை, மைந்தனை - உறுதியாயிருப்பவனை, வானவர்க்கு அமுதை - தேவர்க்கு அமிர்தமாயிருப்பவனை, தேவதேவனை - தேவர்க்கு தேவனாயிருப்பவனை, திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினை நகருள் எழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை ) பூமியில் பாவத்தையே செய்து பலவற்றைச் சொல்லி உழன்று உயிர் வாழ்தற்பொருட்டு ஐயோவென்று வருந்திச் சோர்ந்து விழாமல் இறைவனது தன்மையை உணர்வோடு நினைத்து யானையின் நனைவாகிய தோலை ஆடையாகப் போர்த்தவனை, ரத்நத்தை, உறுதியாயிருப்பவனை, தேவர்க்கு அமிர்தமாயிருப்பவனை, தேவர்க்கு தேவனாயிருப்பவனை, திருத்தினை நகருள் எழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று சேரக்கடவை, என் நெஞ்சே.

(க-ரை.) மனமே, திருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) அலம்வந்து-சுழன்று. (பகுதி அலம்வா) உழத்தல் - வருந்தல். மா - யானை. அகலிடம் - ஒரு சொல், பூவுலகு என்பது பொருள். அகல் இடம் எனப் பிரித்து விரிந்த இடமுள்ள பூமியெனக் கோடலுமமையும். மைந்தன் - (மைந்து - அன்) எனப் பிரிக்க - மைந்து — பலம். அன் - விகுதி. பெருவலியுள்ளவன். (4)

ஒன்றலாவுயிர்வாழ்க்கையைநினைந்திட்
டுடறளர்ந்தருமாநிதியியற்றி
யென்றும்வாழலாமெமக்கெனப்பேசு
மிதுவும்பொய்யெனவே நினையுளமே
குன்றுலாவியபுயமுடையானைக்
கூத்தனைக்குலவிக்குவலயத்தோர்
சென்றெலாம்பயிறிருத்தினைநகருட்
சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

(ப-ரை) ஒன்று அல்லா - ஒரு பொருளல்லாத, உயிர் வாழ்க்கையை நினைந்திட்டு — உயிர் வாழ்வை நினைத்து, உடல் தளர்ந்து - சரீரம் தளர்ந்து, அரு - அரிய, மாநிதி - பெரும் பொருளை, இயற்றி - சம்பாதித்து, எமக்கு, எங்களுக்கு, என்றும் - எக்காலமும், வாழலாம் எனப்பேசும் - வாழ்தல் கூடும் என்று சொல்லுகிற, இதுவும் பொய்யெனவே நினை - இச்சொல்லும் பொய் யாமென்றே கருது, உள்ளமே - மனமே, குன்று உலாவியபுயம் உடையானை - மலைபோன்ற புயமுடையவனை, கூத்தனை - கூத்தாடியை, குலவி - தழுவி, குவலயத்தோர் எல்லாம் - உலகத்தார் எல்லாரும், சென்றுபயில் - போய் நெருங்குகிற, திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினைநகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) ஒரு பொருளல்லாத உயிர்வாழ்வை நினைத்து சரீரம் தளர்ந்து அரிய பெரும்பொருளை சம்பாதித்து எங்களுக்கு எக்காலமும் வாழ்தல் கூடும் என்று சொல்லுகிற இச் சொல்லும் பொய்யா மென்றேகருது, மனமே, மலைபோன்ற புயமுடையவனை, கூத்தாடியை தழுவி, உலகத்தார் எல்லாரும் போய் நெருங்குகிற திருத்தினை நகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை, என்னெஞ்சே.

(க-ரை) மனமே, திருத்தினை நகருட் சிவக்கொழுந்தைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) குன்று உலாவிய - மலைபோன்ற. (5)

வேந்தராயுலகாண்டறம்புரிந்து
வீற்றிருந்தவிவ்வுடலிதுதன்னைத்
தேய்ந்திறந்துவெந்துயருழந்திடுமிப்
பொக்கவாழ்வினைவிட்டிடுநெஞ்சே
பாந்தளங்கையிலாட்டுகந்தானைப்
பரமனைக்கடற்சூர்தடிந்திட்ட
சேந்தன்தாதையைத்திருத்தினைநகருட்
சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

(ப-ரை.) வேந்தர் ஆய் - அரசராய், உலகு ஆண்டு - உலகத்தையாண்டு, அறம்புரிந்து வீற்றிருந்த - தருமம்செய்து வீற்றிருந்த, இவ்வுடல் இதுதன்னை - இந்த உடம்பாகிய இதனை, தேய்ந்து இறந்து வெம்துயருழந்திடும் - தேய்ந்திறந்து கொடிய துன்பத்தை யனுபவிக்கிற, இ - இந்த, பொக்கவாழ்வினை - பொய் வாழ்வை, விட்டிடு - விட்டுவிடு, நெஞ்சே - மனமே, பாந்தள் - பாம்பை, அங்கையில் - அழகிய கையாற்பற்றி, ஆட்டு - ஆட்டுதலை, உகந்தானை - விரும்பினவனை, பரமனை - மேலானவனை, கடல் - கடலில், சூர்தடிந்திட்ட - சூரனைத் துணித்த, சேந்தன் தாதையை - முருகன் தந்தையை, திருத்தினைநகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினை நகருளெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) அரசராய் உலகத்தையாண்டு தருமம்செய்து வீற்றிருந்த, இந்த உடம்பாகிய இதனை, தேய்ந்திறந்து கொடிய துன்பத்தை யனுபவிக்கிற, இந்த பொய்வாழ்வை விட்டுவிடு, மனமே, பாம்பை அழகிய கையாற்பற்றி ஆட்டுதலை விரும்பினவனை, மேலானவனை, கடலில் சூரனைத் துணித்த முருகன்தந்தையை, திருத்தினை நகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை, என் நெஞ்சே.

(க-ரை.) மனமே, திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) துயருழத்தல் - ஒரு சொல். துன்பப்படுதல் என்பது பொருள்.

தன்னிலாசறுசித்தமுமின்றித்
தவமுயன்றவமாயினபேசிப்
பின்னலார்சடைகட்டியென்பணிந்தாற்
பெரிதுநீந்துவதரிதுநிற்க
முன்னெலாமுழுமுதலென்றுவானோர்
மூர்த்தியாகியமுதலவன்றன்னைச்
செந்நெலார்வயற்றிருத்தினைநகருட்
சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே

(ப-ரை.) தன்னில் – தனக்குள்ளே, ஆசு அறு - குற்றமற்ற, சித்தமும் இன்றி - மனமுமில்லாமல், தவமுயன்று – மிகமுயன்று, அவம் ஆயின பேசி - வீணனபேச்சுகளைப் பேசி, பின்னல் ஆர் சடைகட்டி - பின்னலையுடைய சடையைமுடித்து, என்பு அணிந்தால் - எலும்புமாலையைத் தரித்தால், பெரிதும் நீந்துவது அரிது - மிகவும் கடத்தல் அரிதாகும், அதுநிற்க - அது இருக்கட்டும், முன்னெல்லாம்-முன்பெல்லாம் முழுமுதலென்று-முழுமுதற்பொருளென்று, வானோர் மூர்த்தியாகிய முதலவன் தன்னை - தேவர்க்கிறைவனாகிய தலைவனை, செந்நெல் ஆர் வயல்-செந்நெற் பயிர்நிறைந்த வயல் சூழ்ந்த, திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினை நகருளெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே–என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) தனக்குள்ளே குற்றமற்ற மனமுமில்லாமல் மிகமுயன்று, வீணனபேச்சுகளைப் பேசி, பின்னலையுடைய சடையைமுடித்து, எலும்பு மாலையைத் தரித்தால் மிகவும் கடத்தலரிதாகும், அது இருக்கட்டும், முன்பெல்லாம் முழுமுதற் பொருளென்று தேவர்க்கிறைவனாகிய தலைவனை, செந்நெற் பயிர் நிறைந்த வயல்சூழ்ந்த திருத்தினைநகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை, என் நெஞ்சே.

(கு-ரை.) மனமே, திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) தவ – மிகுதியாக. என்பு - எலும்பு. முயன்று என்பதற்குப் பகுதி முயல். முழுமுதல் - முழுமுதற் பொருள். (7)

பரிந்தசுற்றமுமற்றும்வன்றுணையும்
 பலருங்கண்டழுதெழவுயிருடலைப்
பிரிந்துபோமிதுநிச்சயமறிந்தாற்
 பேதைவாழ்வெனும்பிணக்கினைத்தவிர்த்து
கருந்தடங்கண்ணிபங்கனையுயிரைக்
 காலகாலனைக்கடவுளைவிரும்பிச்
செருந்திபொன்மலர்திருத்தினைநகருட்
 சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

(ப-ரை.) பரிந்த - இரங்கின, சுற்றமும்- உறவினரும், மற்றும் வன்றுணையும்-மேலும்வலிய துணையுமாகிய, பலரும் கண்டு-பலரும் நோக்கி, அழுது எழ-அழுது எழாநிற்க, உயிர் - உயிரானது, உடலைப் பிரிந்துபோம் - உடம்பைப் பிரிந்துபோகிற, இது நிச்சயம் - இச்செய்தி உண்மை, அறிந்தால் -(இச்செய்தியை) உணர்ந்தால், பேதைவாழ்வு என்னும் பிணக்கினை தவிர்த்து–அறியாமையோடு கூடினவாழ்க்கை என்கிற பிணக்கத்தை யொழித்து, கருந்தடங்கண்ணி பங்கனை - உமாதேவிபங்கனை, உயிரை - உயிராயிருப்பவனை, கால காலனை-யம

னுக்கு எமனானவனை, கடவுளை-சுவாமியை, விரும்பி - காதலித்து, செருந்தி-செருந்திமரம், பொன்மலர்-பொன்போல மலர்கின்ற, திருத்தினைநகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினைநகருள் எழுந்தருளி யிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) இரங்கின உறவினரும் மேலும் வலிய துணையுமாகிய பலரும் நோக்கி அழுது எழாநிற்க, உயிரானது உடம்பைப் பிரிந்துபோகிற இச்செய்தி உண்மை, (இச்செய்தியை) உணர்ந்தால் அறியாமையோடு கூடின வாழ்க்கை என்கிற பிணக்கத்தை யொழித்து, உமாதேவி பங்கனை, உயிராயிருப்பவனை, எமனுக்கு எமனானவனை, சுவாமியை, காதலித்து, செருந்திமரம் பொன்போல மலர்கின்ற திருத்தினைநகரிலெழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை, என் நெஞ்சே.

(கு-ரை.) மனமே, திருத்தினை நகருட் சிவபெருமானைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) பேதை வாழ்வு - பொய்வாழ்வு. பிணக்கு - மாறுபாடு. தவிர்த்தல் - நீக்குதல். (8)

**நமையெலாம்பலரிகழ்ந்துரைப்பதன்மு**
**ன்னன்மையொன்றிலாத்தேரர்புன்சமணஞ்**
**சமையமாகியதவத்தினாரவத்தத்**
**தன்மைவிட்டொழிநன்மையைவேண்டி**
**லுமையோர்கூறனையேறுகந்தானை**
**யும்பராதியையெம்பெருமானைச்**
**சிமையமார்பொழிற்றிருத்தினைநகருட்**
**சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.**

(ப-ரை.) நம்மை யெல்லாம் - நம்மெல்லாரையும், பலர் இகழ்ந்து உரைப்பதன்முன் - பலர் இகழ்ந்து பேசுவதற்குமுன்பே, நன்மை ஒன்று இல்லா - நன்மை சிறிது மில்லாத, தேரர் - தேரரும், புன்சமண் ஆம் சமயமாகிய தவத்தினார் - அற்பமாகிய சமணசமயத் தவத்தாரும், அவத்தத்தன்மை விட்டொழி - பொய்ந்நிலையை விட்டபோது, நன்மையை வேண்டில் - நன்மையை விரும்பினால், உமை ஓர் கூறனை - உமாதேவியை ஒருபாகத்திலுடையவனை, ஏறு உகந்தானை - இடபத்தை விரும்பினவனை, உம்பர் ஆதியை - தேவர்க்கு முதல்வனை, எம்பெருமானை - எம்பிரானை, சிமையம் ஆர் பொழில் - மலைகளும் நிறைந்த சோலைகளும் சூழ்ந்த, திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினை நகருள் எழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, சென்று அடை - சென்று சேரக்கடவை, மனனே - என் நெஞ்சே எ-று.

(பொ-ரை.) நம்மெல்லாரையும் பலர் இகழ்ந்து பேசுவதற்குமுன்பே, நன்மை சிறிது மில்லாத தேரரும், அற்பமாகிய சமணசமயத்தவத்தாரும்

பொய்ந்நிலையை விட்டபோது, நன்மையை விரும்பினால் உமாதேவியை ஒரு பாகத்திலுடையவனை, இடபத்தை விரும்பினவனை, தேவர்க்கு முதல்வனை, எம்பிரானை, மலைகளும் நிறைந்த சோலைகளும் சூழ்ந்த திருத்தினை நகருள் எழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை சென்று சேரக்கடவை என்னெஞ்சே.

(க-ரை.) மனமே, திருத்தினை நகருட் சிவபெருமானைச் சென்றடைவாயாக வென்பதாம்.

(வி-ரை.) தேரர் - அருகசமயத்தில் ஒரு சாரார். (9)

நீடுபொக்கையிற்பிறவியைப்பழித்து
 நீங்கலாமென்றுமனத்தினைத்தெருட்டிச்
சேடுலாம்பொழிற்றிருத்தினைநகருட்
 சிவக்கொழுந்தினைத்திருவடியிணைத்தண்
ணுடெலாம்புகழ்நாவலூராளி
 நம்பிவன்றொண்டனூரனுரைத்த
பாடலாந்தமிழ்பத்திவைவல்லார்
 முத்தியாவதுபரகதிப்பயனே.

(ப-ரை.) நீடு பொக்கையின் பிறவியைப்பழித்து - பெரும்பொய்யாகிய - பிறவியைப் பழித்து, நீங்கலாம் என்று - நீங்கக்கூடுமென்று, மனத்தினை தெருட்டி-மனத்தைத் தெளிவித்து, சேடு உலாம் பொழில் - பெருமைபொருந்திய சோலைகள் சூழ்ந்த, திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினை - திருத்தினை நகருள் எழுந்தருளியிருக்கிற சிவக்கொழுந்தை, திருவடியிணை - இரண்டு திருவடியையும், தண்-தண்ணிய, நாடு எல்லாம் புகழ்நாவலூராளி—, நம்பி—, வன்றொண்டன்—, ஊரன்—, சுந்தரன், உரைத்த - சொன்ன, பாடல் ஆம்-பாடல்களாகிய, இவைபத்து வல்லார் - இப்பத்துப் பாடல்களையும் கற்று வல்லார்க்கு, முத்தி ஆவது பரகதிப்பயனே-முத்தியாயிருப்பது பரகதிப்பயனேயாம் எ-று.

(பொ-ரை.) நீங்கக்கூடுமென்று பெரும்பொய்யாகிய பிறவியைப் பழித்து மனத்தைத் தெளிவித்து பெருமைபொருந்திய சோலைகள்சூழ்ந்த திருத்தினை நகரி லெழுந்தருளி யிருக்கிற சிவக்கொழுந்தை இரண்டு திருவடியையும் தண்ணிய நாடு எல்லாம் புகழ் நாவலூராளி சுந்தரன் சொன்ன பாடல்களாகிய இப்பத்துப் பாடல்களையும் கற்று வல்லார்க்கு முத்தியாயிருப்பது பரகதிப்பயனேயாம்.

(க-ரை.) திருத்தினைநகருட் சிவபெருமானை நாவலூராளி புகழ்ந்து பாடின இப்பத்துப் பாடலுங் கற்று வல்லார் முத்திபடைவர் என்பதாம்.

(வி-ரை.) நீடு பொய்கையின் பிறவி - பிறவிக்கடல். தெருட்டல் - தெளிவித்தல். சேடு - பெருமை. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருந்தீச்சுரர். தேவியார் - ஒப்பில்லாநாயகியம்மை.

## திருநின்றியூர்.

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ்
 சிலந்தியார்செய்தசெய்பணிகண்டு
மருவுகோச்செங்கணன்றனக்களித்த
 வார்த்தைகேட்டுநுன்மலரடியடைந்தேன்
பெருகுபொன்னிவந்துந்துபன்மணியைப்
 பிள்ளைப்பல்கணம்பண்ணையுணண்ணித்
தெருவுந்தெற்றியுமுற்றமும்பற்றித்
 திரட்டுந்தென்றிருநின்றியூரானே.

(ப-ரை.) சிலந்தியார் செய்த - சிலந்திப்பூச்சி செய்த, செய்பணிகண்டு - பணிவிடையை நோக்கி, மருவு - வந்தடைந்த, கோச் செங்கணன் தனக்கு - கோச் செங்கட்சோழனுக்கு, திருவும் - செல்வமும், வண்மையும்-கொடையும், திண் திறல் அரசும் - வலியவெற்றியையுடைய அரசாட்சியும், அளித்த - அருள் செய்த, வார்த்தைகேட்டு - செய்தியைக்கேட்டு, நுன்மலர் அடி அடைந்தேன்- உனது தாமரை மலர்போலுந் திருவடியையடைந்தேன், பெருகு பொன்னி-நீர் பெருகுகிற காவிரி நதியானது, வந்து உந்து - வந்து தள்ளுகிற, பல்மணியை - பலவகை மணிகளை, பிள்ளை பல்கணம் - பலபிள்ளைகளின் கூட்டங்கள், பண்ணையுள் நண்ணி - விளையாட்டிற் பொருந்தி, தெருவும் - தெருவும், தெற்றியும்- திண்ணையும், முற்றமும் - வாசலும், பற்றித்திரட்டும்-பற்றித்திரட்டுகிற, தென் திருநின்றி யூரானே - தென்திருநின்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே எ-று.

(போ-ரை.) சிலந்திப்பூச்சி செய்த பணிவிடையை நோக்கி வந்தடைந்த கோச்செங்கட்சோழனுக்கு செல்வமும் கொடையும், வலிய வெற்றியையுடைய அரசாட்சியும் அருள் செய்தசெய்தியைக் கேட்டு, உனது தாமரைமலர்போலுந் திருவடியை யடைந்தேன், நீர் பெருகுகிற காவிரி நதியானது வந்து தள்ளுகிற பலவகை மணிகளை பல பிள்ளைகளின் கூட்டங்கள் விளையாட்டிற் பொருந்தி தெருவும் திண்ணையும் வாசலும் பற்றித்திரட்டுகிற தென் திரு நின்றியூரிலெழுந்தருளி யிருப்பவனே.

(க-ரை.) திருநின்றியூர்ச் சிவபெருமானே, கோச்செங்கணன் தனக்குத் திருமுதலியவற்றை யருள் செய்தமை கேட்டு நின்றிருவடி யடைந்தே னென்பதாம்.

(வி-ரை.) சிலந்தி - ஓர் பூச்சி, இதனைச் சிலந்தியார் என்றது இதுசெய்த சிவபுண்ணியத்தைக் கருதி யென்க. செய்பணி - திருத்தொண்டு. (1)

அணிகொளாடையம்பூணணிமாலை
யமுதுசெய்தமுதம்பெறுதண்டி
யிணைகொளேழெழுநூறிரும்பனுவ
லீன்றவன்றிருநாவினுக்கரையன்
கணைகொள்கண்ணப்பனென்றிவர்பெற்ற
காதலின்னருளாதரித்தடைந்தேன்
றிணைகொள்செந்தமிழ்பைங்கிளிதெரியுஞ்
செல்வத்தென்றிருநின்றியூரானே.

(ப-ரை.) அணிகொள் - அழகைக்கொண்ட, ஆடை - உடை, அம்பூண் - அழகிய ஆபரணம், அணிமாலை - அணிதற்குரிய மாலை, அமுது செய்து - அமுது செய்வித்து, அமுதம் பெறுதண்டி - முத்திபெற்ற தண்டி, இணைகொள் - (தமக்குத்தாமே) சமானமாகிய, ஏழ் எழுநூறு - நாலாயிரத்துத் தொளாயிரமென்கிற, இரும்பனுவல் - பெரும்பனுவலை, ஈன்றவன் - செய்தருளினவனாகிய, திருநாவினுக்கரையன் - வாகீசன், கணைகொள் கண்ணப்பன் - அம்பைக் கையிற்கொண்ட கண்ணப்பன், என்ற இவர் பெற்ற - என்று சொல்லப்பட்ட இவரடைந்த, காதல் இன் அருள் ஆதரித்து அடைந்தேன் - ஆசையையும் உன் இனிய அருளையும் விரும்பியடைந்தேன், திணைகொள்-ஐந்திணைகளைக்கொண்ட, செந்தமிழ் - செந்தமிழ்ப் பாடல்களை, பைங்கிளி தெரியும் - பசுங்கிளிகள் அறிந்து பாடுகிற, செல்வம் - செல்வப் பெருக்குள்ள, தென்திருநின்றியூரானே - தென்திரு நின்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) அழகைக்கொண்ட உடை, அழகிய ஆபரணம், அணிதற்குரிய மாலை, அமுது செய்வித்து, முத்திபெற்ற தண்டி (தமக்குத்தாமே) சமானமாகிய நாலாயிரத்துத் தொளாயிரமென்கிற பெரும்பனுவலை செய்தருளினவனாகிய வாகீசன், அம்பைக் கையிற்கொண்ட கண்ணப்பன் என்று சொல்லப்பட்ட இவரடைந்த ஆசையையும் உன் இனிய அருளையும் விரும்பியடைந்தேன், ஐந்திணைகளைக் கொண்ட செந்தமிழ்ப் பாடல்களை பசுங்கிளிகள் அறிந்து பாடுகிற செல்வப் பெருக்குள்ள தென்திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருநின்றியூர்ச் சிவபிரானே, தண்டிமுதலியோர் உன்னை யடைத்துப்பெற்ற பேறுகண்டு உன் திருவடி யடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) கணை - அம்பு. ஆதரித்தல் - விரும்புதல். ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. அமுதம் - அம்ருதம் என்னும் வடசொற்றிரிபு. மோக்ஷமென்பது பொருள், (அழியாப்பதவி.) (2)

மொய்த்தசீர்முந்நாற்றறுபதுவேலி
மூன்றுநூறுவேதியரொடுநுனக்கு
வொத்தபொன்மணிக்கலசங்களேந்தி
யோங்குநின்றியூரென்றுனக்களிப்பப்

பத்திசெய் தவப்பாசிராமற்குப்
பாதங்காட்டியநீதிகண்டடைந்தேன்
சித்தர்வானவர் தானவர்வணங்குஞ்
செல்வத்தென்றிருநின்றியூரானே.

(ப-ரை.) மொய்த்த சீர்-மிகுந்த சிறப்பினையுடைய, முந்நூற்றறுபதுவேலி-முந்நூற்றறுபது வேலிநிலம், மூன்று நூறு வேதியரொடு - முந்நூறு மறையவருடன், நுனக்கு - உனக்கு, ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி - இணக்கமான பொன்மணிக் குடங்களை யேந்தி, ஓங்கும்-உயர்ந்த, நின்றியூர் என்று உனக்கு அளிப்ப - நின்றியூரென்று உனக்குக் கொடுக்க, பத்தி செய்த அப்பாசிராமற்கு - அன்புசெய்த அந்தப் பரசுராமனுக்கு, பாதம் காட்டிய நீதிகண்டு அடைந்தேன் - திருவடியைக் காட்டிய நியாயத்தை நோக்கி யடைந்தேன், சித்தர் வானவர் தானவர் வணங்கும் - சித்தரும் தேவரும் அசுரரும் வணங்குகிற, செல்வம் - செல்வப்பெருக்குள்ள, தென்திருநின்றியூரானே - தென்திருநின்றியூரி லெழுந்தருளி யிருப்பவனே எ-று.

(பொ-ரை.) மிகுந்த சிறப்பினையுடைய முந்நூற்றறுபது வேலி நிலம் முந்நூறு மறையவருடன் உனக்கு இணக்கமான பொன்மணிக்குடங்களை யேந்தி, உயர்ந்த நின்றியூரென்று உனக்குக் கொடுக்க, அன்பு செய்த அந்தப் பரசிராமனுக்கு, திருவடியைக் காட்டிய நியாயத்தை நோக்கியடைந்தேன், சித்தரும் தேவரும் அசுரரும் வணங்குகிற செல்வப் பெருக்குள்ள தென்திருநின்றியூரிலெழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருநின்றியூர்ச் சிவபிரானே, முந்நூற்றறுபது வேலி நிலமுதலியவற்றை யுனக்கு அளித்த பரசிராமனுக்குத் திருவடிப்பேற்றை யருளினமை கண்டு உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) பத்திசெய்தல் - அன்பு செய்தல். வானவர் - தேவர், தானவர்-அசுரர். பொற்கலசங்கள் - பொற்குடங்கள். (3)

இரவிநீள்சுடரெழுவதன்முன்ன
மெழுந்துதன்முலைக்கலசங்களேந்திச்
சுரவிபால்சொரிந்தாட்டிநின்பாதந்
தொடர்ந்தவார்த்தைதிடம்படக்கேட்டுப்
பரவியுள்கிவன்பாசத்தையறுத்துப்
பரமவந்துநுன்பாதத்தையடைந்தே
னிரவிதித்திலமத்தகுசெம்பொ
ளிக்குந்தென்றிருநின்றியூரானே

(ப-ரை.) இரவி - சூரியனது, நீள்சுடர் - நெடிய கிரணங்கள், எழுவதன் முன்னம் - உதிக்குமுன்னே, எழுந்து - எழுந்து, தன்முலைக் கலசங்கள் ஏந்தி-

தன் முலேக்குடங்களைத் தாங்கி, சுரவி - காமதேனுவானது, பால் சொரிந்து, பால் பொழிந்து, நின்பாதம் ஆட்டி - உன் திருவடியை அபிஷேகம் செய்து - தொடர்ந்த வார்த்தை - பற்றினசெய்தியை, திடம்படக் கேட்டு - உறுதியாகக் கேள்விப்பட்டு, பரவி - வழிபட்டு, உள்கி - நினைத்து, வல்பாசத்தை அறுத்து - வலிய பாசத்தளையைச்சேதித்து, வந்து - வந்து, நுன்பாதத்தை அடைந்தேன் - உன் திருவடியை யடைந்தேன் - பரம - பரமனே, நித்திலம் நிரவி - முத்துக்களைப் பரப்பி, அத்தகு செம்பொன் அளிக்கும் - அதற்குத் தகுந்த செம்பொன்னைத் தருகின்ற, தென்திரு நின்றியூரானே - தென்திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) சூரியனது நெடிய கிரணங்கள் உதிக்குமுன்னே எழுந்து, தன் முலேக் குடங்களைத் தாங்கி, காமதேனுவானது பால் பொழிந்து உன் திருவடியை அபிஷேகம் செய்து பற்றினசெய்தியை, உறுதியாகக் கேள்விப்பட்டு வழிபட்டு நினைத்து, வலிய பாசத்தளையைச் சேதித்து வந்து உன் திருவடியை யடைந்தேன், பரமனே, முத்துக்களைப் பரப்பி அதற்குத் தகுந்த செம்பொன்னைத்தருகின்ற தென்திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருநின்றியூர்ச் சிவபிரானே, காமதேனுவானது பால்சொரிந்து உன்னையாட்டின செய்திகேட்டு உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) சுரவி - சுரபி யென்னும் வடசொற்றிரிபு. ஆட்டல் - திருமஞ்சனஞ்செய்வித்தல். (4)

வந்தோரிந்திரன்வழிபடமகிழ்ந்து
வானநாடுநீயாள்கெனவருளிச்
சந்திமூன்றிலுந்தாவரநிறுத்திச்
சகளிசெய்திறைஞ்சகத்தியர்தமக்குச்
சிந்துமாமணியணி திருப்பொதியிற்
சேர்வுநல்கியசெல்வங்கண்டடைந்தேன்
செந்தண்மாமலர்த்திருமகண்மருவுஞ்
செல்வத்தென்றிருநின்றியூரானே.

(ப-ரை.) ஓர் இந்திரன் வந்து வழிபட - ஒரு இந்திரன்வந்து வழிபாடு செய்ய, மகிழ்ந்து-மகிழ்வடைந்து, (அவனுக்கு) வானநாடு - விண்ணுலகை, நீ ஆள்க என அருளி-நீயாளக்கடவையென் றருள்செய்து, சந்திமூன்றிலும் - திரிசந்தியாகாலங்களிலும், தாவரம் நிறுத்தி-தாவரத்தைநாட்டி, சகளிசெய்து இறைஞ்சு - சகளவுருச்செய்து வணங்கின, அகத்தியர் தமக்கு-அகத்தியருக்கு, சிந்து-கடலேயும், மாமணி - பெரிய அரதநங்களால், அணி - அலங்கரிக்கப்பட்ட, திருப்பொதியில் சேர்வு - அழகிய பொதியமலேவாழ்வையும், நல்கிய - அருள்செய்த, செல்வம்கண்டு அடைந்தேன் - செல்வத்தைநோக்கி யடைந்தேன், செம்தண்மாமலர் திருமகள்மருவும்-குளிர்ந்த செந்தாமரைமலரி லெழுந்தருளியிருக்

கும் திருமகள் வாழ்கிற, செல்வம் – செல்வப்பெருக்குள்ள, தென்திருநின்றியூ ரானே - தென்திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) ஓர் இந்திரன்வந்து வழிபாடுசெய்ய மகிழ்வடைந்து (அவனுக்கு) விண்ணுலகை நீயாளக்கடவையென் றருள்செய்து, திரிசந்தியா காலங்களிலும் தாவரத்தைநாட்டி, சகளவுருச்செய்து வணங்கின அகத்தியருக்கு கடலையும் பெரிய ஆரதனங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொதியமலை வாழ்வையும் அருள்செய்த செல்வத்தை நோக்கி யடைந்தேன், குளிர்ந்த செந்தாமரை மலரி லெழுந்தருளி யிருக்கும் திருமகள் வாழ்கிற செல்வப்பெருக்குள்ள தென் திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே.

(கரை.) திருநின்றியூர்ச் சிவபிரானே, இந்திரன்முதலியோர் உன்னை வழிபட்டு அடைந்த பேற்றைக்கேட்டு, உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) திரிசந்தியாகாலம் - காலைமாலை உச்சி. தாவரம் - விக்கிரகம். சகளி - உருவம். பேறு - பயன். (5)

காதுபொத்தரைக்கின்னரருழுவை
 கடிக்கும்பன்னகம்பிடிப்பருஞ்சியங்
கோதின்மாதவர்குழுவுடன்கேட்பக்
 கோலவாணிழற்கீழறம்பகர
வேதஞ்செய்தவரெய்தியவின்ப
 மியானுங்கேட்டுநின்னிணையடியடைந்தே
னீதிவேதியர்நிறைபுகழுலகி
 னிலவுதென்றிருநின்றியூரானே.

(ப-ரை ) காது பொத்தர் - வாதுசெய்கிற பொத்தர், ஐகின்னரர் - அழகிய கிந்நரர், உழுவை - புலி, கடிக்கும் பன்னகம் - கடிக்கிற பாம்பு, பிடிப்புஅரு சீயம் - பிடித்தற்கரிய சிங்கம், கோதுஇல் - குற்றமில்லாத, மாதவர் குழுவுடன் கேட்ப - பெரிய தவசிக்கூட்டங்களோடு கேட்ப, கோலம் - அழகாகிய, ஆல் நிழல்கீழ் – கல்லாலின் நீழலில், அறம்பகர - அறத்தைச் சொல்ல, ஏதஞ்செய் தவர் - குற்றஞ்செய்தவர், எய்திய - அடைந்த, இன்பம் - சுகத்தை, யானும் கேட்டு - நானும் கேள்விப்பட்டு, நின் இணையடி அடைந்தேன் - உன்னிரண்டு திருவடிகளை யடைந்தேன், நீதிவேதியர் நிறைபுகழ் உலகில் - நீதியையுடைய மறையோர்நிறைந்த புகழினையுடைய உலகத்தில், நிலவு-விளங்குகிற, தென் திருநின்றியூரானே - தென்திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை ) வாதுசெய்கிற பொத்தர் அழகிய கிந்நரர், புலி, கடிக்கிறபாம்பு பிடித்தற்கரிய சிங்கம், குற்றமில்லாத பெரிய தவசிக் கூட்டங்களோடு கேட்ப, அழகாகிய கல்லாலின் நீழலில் அறத்தைச்சொல்ல குற்றஞ்செய்தவர் அடைந்த சுகத்தை நானும் கேள்விப்பட்டு உன்னிரண்டு திருவடிகளை யடைந்தேன், நீதி

யையுடைய மறையோர் நிறைந்த புகழினையுடைய உலகத்தில்விளங்குகிற தென் திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருநின்றியூர்ச் சிவபிரானே, வாதிடுகின்ற புத்தர் முதலியோர் கேட்க, ஆலநிழலி லெழுந்தருளி அறமுரைத்த செய்திகேட்டு உன்திருவடி யடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) குழு - கூட்டம். அறம் - பரமதர்மம், (முத்திநெறி). (6)

கோடுநான் குடைக்குஞ்சரங்குலுங்க
நலங்கொள்பாதநின்றேத்தியபொழுதே
பீடுவிண்மிசைப்பெருமையும்பெற்ற
பெற்றிகேட்டுநின்பொற்கழலடைந்தேன்
பேடைமஞ்ஞையும்பிணைகளின்கன்றும்
பிள்ளைக்கிள்ளையுமெனப்பிறைநுதலார்
நீடுமாடங்கண்மாளிகைதோறு
நிலாவுதென்றிருநின்றியூரானே.

(ப-ரை.) கோடுநான்கு உடை - நான்கு கொம்புகளையுடைய, குஞ்சரம் - யானையானது, குலுங்க - தன்னுடல் குலுங்கும்படி, நலம்கொள் - அழகைக் கொண்ட, பாதம் - உன் திருவடியை, நின்று ஏத்தியபொழுதே - நின்று துதித்தபோதே, பீடுவிண்மிசை - பெருமையுள்ள விண்ணுலகில், பெருமையும் பெற்ற - பெருமையடைந்த, பெற்றிகேட்டு, செய்தியைக் கேள்விப்பட்டு, நின் பொற்கழல் அடைந்தேன் - உன் பொன்னடியை யடைந்தேன், பேடைமஞ்ஞையும் - மயில்பேடையும், பிணைகளின் கன்றும் - பெண்மான்களின்கன்றும், பிள்ளைக்கிள்ளையும் - கிளிப்பிள்ளையும், என - போல, பிறைநுதலார் - மாதர், நீடும் - நீண்ட, மாடங்கள் மாளிகைதோறும் - மாடமாளிகைதோறும், நிலாவு - விளங்குகிற, தென் திருநின்றியூரானே - தென்திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே எ-று.

(பொ-ரை.) நான்கு கொம்புகளையுடைய யானையானது, தன்னுடல் குலுங்கும்படி அழகைக்கொண்ட உன்திருவடியை நின்று துதித்தபோதே பெருமையுள்ள விண்ணுலகில் பெருமையடைந்த செய்தியைக் கேள்விப்பட்டு, உன் பொன்னடியை யடைந்தேன், மயில்பேடையும் பெண்மான்களின் கன்றும், கிளிப்பிள்ளையும்போல மாதர் நீண்ட மாடமாளிகைதோறும் விளங்குகிற தென் திருநின்றியூரி லெழுந்தருளியிருப்பவனே.

(க-ரை.) திருநின்றியூர்ச் சிவபிரானே, யானையானது உன்னை வழிபட்டுப் பெற்ற பேற்றைக்கேட்டு உன்திருவடியடைந்தே னென்பதாம்.

(வி-ரை.) கோடுநான்குடைக் குஞ்சரம் - ஐராவதம். பெற்றி - தன்மை. (7)

திருச்சிற்றம்பலம்.

---

மற்றது சிதிலமாயிற்று.

## திருவாவடுதுறை

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

மறையவனொருமாணிவந்தடைய
வாரமாயவனாருயிர்நிறுத்தக்
கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்
கடந்தகாரணங்கண்டுகொண்டடியே
னிறைவனெம்பெருமானென்றெப்போது
மேத்தியேத்திநின்றஞ்சலிசெய்து
னறைகொள்சேவடிக்கன்பொடுமடைந்தே
னாவடுதுறையாதியெம்மானே.

(ப-ரை) மறையன் - வேதியனாகிய, ஒரு மாணி - ஒரு பிரமசாரி, வந்து அடைய - வந்து சேர, வாரம்ஆய் - அன்பாகி, அவன் - அவனது, ஆர் உயிர் நிறுத்த - அரியவுயிரை நிறுத்த, கறைகொள் - உதிரந்தோய்ந்த, வேல் உடை - வேற்படையையுடைய, காலனை - யமனை, காலால் - திருவடியால், கடந்த - வென்ற, காரணம் கண்டுகொண்டு-காரணமறிந்துகொண்டு, அடியேன்-தொண்டனேன், இறைவன் எம்பெருமான் என்று - இறைவனே எம்பெருமானே என்று, எப்போதும் - எப்பொழுதும், எத்தி எத்தி நின்று - துதித்து நின்று, அஞ்சலிசெய்து - அஞ்சலிசெய்து, உன் - உனது, அறைகொள் - ஒலியைக்கொண்ட, சேவடி - திருவடியை, அன்பொடும் அடைந்தேன் - அன்புடனே சேர்ந்தேன், ஆவடுதுறை - திருவாவடுதுறையிலெழுந்தருளிய, ஆதி - முதல்வனே, எம்மானே - எம்பெருமானே எ-று.

(பொ-ரை) வேதியனாகிய ஒரு பிரமசாரிவந்து சேர, அன்பாகி அவனது அரியவுயிரை நிறுத்த உதிரந்தோய்ந்த வேற்படையையுடைய யமனை திருவடியால் வென்ற காரணமறிந்துகொண்டு, தொண்டனேன், இறைவனே எம்பெருமானே என்று துதித்துநின்று அஞ்சலிசெய்து உனது ஒலியைக்கொண்ட திருவடியை அன்புடனே சேர்ந்தேன் திருவாவடுதுறையிலெழுந்தருளிய முதல்வனே, எம்பெருமானே.

(கு-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, வேதியச் சிறுவனுக்காக யமனையுதைத்த செய்தியையறிந்து உன் திருவடியை யடைந்தேனென்பதாம்.

(வி-ரை.) கடத்தல்-உதைத்தல். அஞ்சலிசெய்தல்-கைகூப்புதல். (1)

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்தி
சித்திரப்பந்தர்சிக்கெனவியற்றச்
சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச்
சோழனுக்கியதொடர்ச்சிகண்டடியேன்

புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்
போற்றிபோற்றியென்றன்பொடுபுலம்பி
யருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தே
னாவடுதுறையாதியெம்மானே.

(ப-ரை.) தெருண்ட - பரிசுத்தமான - வாயிடை நூல் கொண்டு - வாயினிடமாக நூலைக்கொண்டு, சிலந்தி - சிலந்திப்பூச்சி, சித்திரப்பந்தர் - அழகிய பந்தலை, சிக்கன இயற்ற - உறுதியாகச்செய்ய, சுருண்ட செஞ்சடையாய் - சுருண்ட செஞ்சடையையுடையவனே, அதுதன்னை - அதனை, சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண்டு - சோழனைச்செய்த தொடர்ச்சியையறிந்து, அடியேன் - தொண்டனேன், புரண்டு வீழ்ந்து - புரண்டு விழுந்து, நின் பொன்மலர்ப் பாதம் - உன் மலர்போலும் பொன்னடியை, போற்றி போற்றி யென்று - போற்றிபோற்றியென்று, அன்பொடு புலம்பி - அன்புடனே புலம்பி, அருண்டு - வெருண்டு, என் - எனது, மேல்வினைக்கு - இனி வரக்கடவனவாகிய வினைகளுக்கு, அஞ்சிவந்து அடைந்தேன் - பயந்துவந்து சேர்ந்தேன், ஆவடுதுறை - திருவாவடுதுறையி லெழுந்தருளிய, ஆதி - முதல்வனே, எம்மானே - எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) பரிசுத்தமான வாயினிடமாக நூலைக்கொண்டு சிலந்திப்பூச்சி அழகிய பந்தலை உறுதியாகச்செய்ய, சுருண்ட செஞ்சடையையுடையவனே, அதனை, சோழனைச்செய்த தொடர்ச்சியையறிந்து, தொண்டனேன் புரண்டு விழுந்து உன்மலர்போலும் பொன்னடியை போற்றிபோற்றியென்று அன்புடனே புலம்பி, வெருண்டு, எனது இனி வரக்கடவனவாகிய வினைகளுக்கு பயந்துவந்து சேர்ந்தேன், திருவாவடுதுறையிலெழுந்தருளிய முதல்வனே, எம்பெருமானே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, சிலந்தி சித்திரப்பந்தலிழைத்துப் பெற்ற பேற்றைக்கேட்டு உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) சிலந்தி - ஓர் பூச்சி. வாயிடையென்பதில் இடை ஏழனுருபு. அது தன்னை யென்பதில் தன் சாரியை. தொடர்ச்சி - அன்பு. (2)

திகழுமாலவனாயிரமலரா
லேத்துவானொருநீண்மலர்குறைபப்
புகழினாலவன்கண்ணிடந்திடலும்
புரிந்துசக்கரங்கொடுத்தல்கண்டடியேன்
றிகழுநின்றிருப்பாதங்கள்பரவித்
தேவதேவநின்றிறம்பலபிதற்றி
யகழும்வல்வினைக்கஞ்சிவந்தடைந்தே
னாவடுதுறையாதியெம்மானே.

(ப-ரை.) திகழும் - பிரகாசிக்கிற, மாலவன் - திருமாலானவன், ஆயிரம் மலரால் ஏத்துவான் - ஆயிரமலர்களால் வழிபடுவோன், ஒருநாள் மலர்குறைப - ஒருநாள் மலர் குறைதலால், புகழிநல் அவன் கண்- புகழ் காரணமாக அவன் கண்ணே, இடந்து இடலும் - தோண்டி அருச்சித்தலும், புரிந்து — மகிழ்ந்து, சக்கரம்கொடுத்தல் கண்டு - சக்கரம் கொடுத்ததை யறிந்து, அடியேன் - தொண்டனேன், திகழும் - விளங்குகிற, நின் திருப்பாதங்கள் பரவி — உன் திருவடிகளைத் துதித்து; தேவதேவ - தேவதேவனே, நின்திறம்பல பிதற்றி - உன் வெற்றி பலவற்றையும் பிதற்றி, அகழும் - வேரறுத்தற்குரிய, வல்வினைக்கு அஞ்சி - வலிய வினைகளுக்குப் பயந்து, வந்து அடைந்தேன் - வந்து சேர்ந்தேன், ஆவடுதுறை - திருவாவடுதுறையிலெழுந்தருளிய, ஆதி - முதல்வனே, எம்மானே - எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) பிரகாசிக்கிற திருமாலானவன் ஆயிரமலர்களால் வழிபடுவான், ஒருநாள் மலர் குறைதலால், புகழ்காரணமாக அவன் கண்ணை தோண்டி அருச்சித்தலும், மகிழ்ந்து சக்கரம் கொடுத்ததையறிந்து, தொண்டனேன் விளங்குகிற உன் திருவடிகளைத்துதித்து, தேவதேவனே, உன் வெற்றி பலவற்றையும் பிதற்றி, வேரறுத்தற்குரிய வலிய வினைகளுக்குப் பயந்துவந்து சேர்ந்தேன் திருவாவடுதுறையிலெழுந்தருளிய முதல்வனே, எம்பெருமானே.

(கு-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, திருமால் வழிபட்டடைந்த பேற்றைக்கேட்டு உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) இடத்தல் - தோண்டுதல். திறம் - செய்தி. அகழ்தல் - ஆழமாய்த் தோண்டுதல். (3)

**வீரத்தாலொருவேடுவனாகி
விசைத்தோர்கேழலைத்துரந்துசென்றணைந்து
போரத்தான்விசயன்றனக்கன்பாய்ப்
புரிந்துவான்படைகொடுத்தல்கண்டடியேன்
வாரத்தாலுனநாமங்கள்பரவி
வழிபட்டுன்றிறமேநினைந்துருகி
யார்வத்தோடுவந்தடியிணையடைந்தே
னாவடுதுறையாதியெம்மானே.**

(ப-ரை.) வீரத்தால் — வீரத்தினால், ஒரு வேடுவனாகி - ஒரு வேடனாகி, விசைந்து ஓர் கேழலை துரந்து சென்று அணைந்து - வேகமாய் ஒருபன்றியை வலைகட்டித்துரத்திப்போய், போர - மிக, தான் விசயன்தனக்கு அன்பாய் புரிந்து- அருச்சுனனுக்கு அன்போடிரங்கி, வான் - மேலான, படை-அஸ்திரத்தை, கொடுத்தல் கண்டு - கொடுத்ததை யறிந்து, அடியேன் - தொண்டனேன், வாரத்தால் - அன்பால், உன நாமங்கள் பரவி வழிபட்டு - உன் திருநாமங்களைப் புகழ்ந்து வழிபாடுசெய்து, உன்திறமே நினைந்து உருகி - உன்திறத்தையே

நினைந்துருகி ஆர்வத்தோடு - ஆசையோடு, வந்து அடியிணை அடைந்தேன் - வந்து உன் இரண்டு திருவடியைச் சேர்ந்தேன், ஆவடுதுறை - திருவாவடுதுறையி லெழுந்தருளிய, ஆதி - முதல்வனே, எம்மானே - எம்பெருமானே எ-று

(பொ-ரை.) வீரத்தினால் ஒரு வேடனாகி, வேகமாய் ஒரு பன்றியை வலை கட்டித் துரத்திப்போய் மிக அருச்சுனனுக்கு அன்போடிரங்கி, மேலான அஸ்திரத்தை கொடுத்ததையறிந்து, தொண்டனேன் அன்பால் உன் திருநாமங் களைப்புகழ்ந்து வழிபாடுசெய்து, உன்திறத்தையே நினைந்துருகி ஆசையோடு வந்து, உன் இரண்டு திருவடியைச் சேர்ந்தேன், திருவாவடுதுறையி லெழுந் தருளிய முதல் வனே, எம்பெருமானே.

(க-ரை) திருவாவடுதுறைச் சிவபெருமானே, அருச்சுநன் பொருட்டு வேடுவனாய்வந்தருள்செய்த செய்திகேட்டு உன் திருவடியடைந்தே னென் பதாம்.

(வி-ரை) கேழல் - பன்றி. வாரம் - அன்பு. (4)

ஒக்கமுப்புரமோங்கெரிதூவ
வுன்னைமுன்னியமூவர்நின்சரணம்
புக்குமற்றவர்பொன்னுலகாளப்
புகழினாலருளீந்தமையறிந்து
மிக்கநின்கழலேதொழுதரற்றி
வேதியாவாதிமூர்த்திநின்னரையில்
அக்கணிந்தவெம்மானுனையடைந்தே
னாவடுதுறையாதியெம்மானே.

(ப-ரை.) ஒக்கமுப்புரம் - ஒருமிக்க முப்புரங்களில், ஓங்கு - மிகுந்த, எரி தூவ - நெருப்புச்சிந்த, உன்னை முன்னிய - உன்னை நினைத்த, மூவர் - மூன்று பேர், நின்சரணம்புக்கு - உன் அடைக்கலம் புகுந்து, அவர் பொன்னுலகு ஆள் - அவர்கள் பொன்னுலகத்தையாள, புகழினால் அருள் ஈந்தமை அறிந்து - புக ழோடு அருள்செய்ததையறிந்து, மிக்க - மேலான, நின்கழலே தொழுது அரற்றி - உன் திருவடியையே வணங்கித் துதித்து, வேதியா - மறையோனே, ஆதிமூர்த்தி - ஆதிமூர்த்தியே, நின் அரையில் அக்கு அணிந்த எம்மான் - நின் அரையில் அக்குமணியணிந்த எம்பெருமானே, உன்னை அடைந்தேன் - உன் னைச் சேர்ந்தேன், ஆவடுதுறை - திருவாவடுதுறையிலெழுந்தருளிய, ஆதி - முதல்வனே, எம்மானே - எம்பெருமானே எ-று,

(பொ-ரை.) ஒருமிக்க முப்புரங்களில் மிகுந்த நெருப்புச் சிந்த உன்னை நினைத்த மூன்றுபேர் உன் அடைக்கலம் புகுந்து அவர்கள் பொன்னுலகத்தை யாள, புகழோடு அருள்செய்ததையறிந்து, மேலான உன்திருவடியையே வண ங்கித் துதித்து, மறையோனே, ஆதிமூர்த்தியே, நின் அரையில் அக்குமணி

யணிந்த எம்பெருமானே, உன்னைச்சேர்ந்தேன், திருவாவடுதுறையிலெழுந்தருளிய முதல்வனே, எம்பெருமானே.

(க-ரை) திருவாவடுதுறைச் சிவபெருமானே, முப்புரமெரித்த நாளில் உன்னைச் சரணடைந்த மூவருக்கு அருள் புரிந்த செய்திகேட்டு உன் திருவடியடைந்தேன் என்பதாம்.

(வி-ரை.) முன்னல் - நினைத்தல். பொன்னுலகு - சுவர்க்கலோகம். அக்கு - சங்குமணி. (5)

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் சோழநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர் - மாசிலாமணியீசுரர். தேவியார் - ஒப்பிலாமுலையம்மை.

---

## திருவலிவலம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஊனங்கைத்துயிர்ப்பாயுலகெல்லா
 மோங்காரத்துருவாகிநின்றானை
வானங்கைத்தவர்க்குமளப்பரிய
 வள்ளலையடியார்கடம்முள்ளத்
தேனங்கைத்தமுதாகியுள்ளூறுந்
 தேசனைத்திளைத்தற்கினியானை
மானங்கைத்தலத்தேந்தவல்லானை
 வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) ஊனம் கைத்து - உடம்பை வெறுத்து, உயிர்ப்பு ஆய் - வாயுரூபமாகி, உலகு எல்லாம்-உலகு முழுதும், ஓங்காரத்து உரு ஆகி நின்றானை-பிரணவ வடிவானவனை, வானம்கைத்தவர்க்கும்-விண்ணுலகை வெறுத்தவர்க்கும், அளப்பு அரிய - அளத்தற்கரியவனை, வள்ளலை - பரமோதாரனை, அடியார்கள் உள்ளத்தேன் - தொண்டர்கள் மனத்துத்தேன், அம்கைத்து அமுது-அங்கையிடத்ததாகிய அமிர்தம், ஆகி - ஆய், உள் ஊறும் தேனினை - மனத்தினூறுகிறதேனை, திளைத்தற்கு - நுகர்தற்கு, இனியானை - இனியவனை, மான் அங்கைத்தலத்து ஏந்தவல்லானை - மானை அகங்கையில் தாங்கவல்லவனை, வலிவலந்தனில் வந்து கண்டேன்- திருவலிவலத்தில்வந்து தரிசித்தேன் எ-று.

---

மற்றைய திருப்பாடல்கள் ஐந்தும் சிதிலமாயின.

(போ-ரை.) உடம்பைவெறுத்து வாயுரூபமாகி உலகுமுழுதும் பிரணவ வடிவானவனை, விண்ணுலகை வெறுத்தவர்க்கும் அளத்தற்கரியனுன பரமோதாரனை, தொண்டர்கள் மனத்துத்தேன், அங்கையிடத்ததாகிய அமிர்தம் ஆய், மனத்திலூறுகிற தேனை, நுகர்தற்கு இனியவனை, மானை அகங்கையில் தாங்க வல்லவனை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(கருத்துரை) ஓங்காரவுருவாகிய திருவலிவலத்துச் சிவபிரானைக் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) ஊனம் என்பதில் அம்சாரியை. வள்ளல் - பெருங்கொடையாளன், உள் - மனம். (1).

பல்லடியார்பணிக்குப்பரிவானைப்
பாடியாடும்பத்தர்க்கன்புடையானைச்
செல்லடியேநெருக்கித்திறம்பாது
சேர்ந்தவர்க்கேசித்திமுத்திசெய்வானை
நல்லடியார்மனத்தெய்ப்பினில்வைப்பை
நானுறுகுறையறிந்தருள்புரிவானை
வல்லடியார்மனத்திச்சையுளானை
வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) பல் அடியார் பணிக்கு பரிவானை - பல தொண்டரது தொண்டுக்கு இரங்குகிறவனை, பாடி ஆடும் பத்தர்க்கு அன்பு உடையானை - பாடியாடுகிற பத்தர்க்கு அன்புள்ளவனை, செல் அடியே நெருக்கி - போகிற அடியே நெருக்கி, திறம்பாது சேர்ந்தவர்க்கே - தவறாது அடைந்தவர்க்கே, சித்திமுத்தி செய்வானை - சித்திமுத்திகளை அருள்செய்கிறவனை, நல் அடியார்மனத்து - சிறந்த அடியார் மனத்தில், எய்ப்பினில் வைப்பை - இளைத்தகாலத்தில் நிதியாயிருப்பவனை, நான் உறுகுறை அறிந்து அருள்புரிவானை - நானடைந்த மிக்க குறையையறிந்து அருள்செய்பவனை, வல் அடியார் மனத்து இச்சை உள்ளானை - வலிய அடியார்மனத்தில் விருப்பமுள்ளவனை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் - திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(போ-ரை.) பல தொண்டரது தொண்டுக்கு இரங்குவோனை, பாடியாடுகிற பத்தர்க்கு அன்புள்ளவனை, போகிற அடியே நெருக்கி தவறாது அடைந்தவர்க்கே சித்திமுத்திகளை அருள்செய்கிறவனை, சிறந்த அடியார் மனத்தில் இளைத்தகாலத்தில் நிதியாயிருப்பவனை, நானடைந்த மிக்க குறையையறிந்து அருள்செய்பவனை, வலிய அடியார்மனத்தில் விருப்பமுள்ளவனை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(க-ரை.) அடியார் பணிக்கிரங்குதல் முதலிய செய்வோனாகிய சிவபெருமானைத் திருவலிவலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) பரிதல் - இரங்குதல். செல்லடி - நடக்கின்ற அடி. எய்ப்பு - இளைப்பு. வைப்பு - புதையல். திறம்பாது - தவறாமல். (2)

ஆழியனாயகன்றேயுயர்ந்தானை
யாதியந்தம்பணிவார்க்கணியானைக்
கூழையராகிப்பொய்யேகுடியோம்பிக்
குழைந்துமெய்யடியார்குழுப்பெய்யும்
வாழியர்க்கேவழுவாநெறிகாட்டி
மறுபிறப்பென்னைமாசறுத்தானை
மாழையொண்கண்ணுமையைமகிழ்ந்தானை
வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) ஆழியன் ஆய் - ஆழமுடையவனாய், அகன்று - விசாலித்து, உயர்ந்தானை - உயர்ந்தவனை, ஆதியந்தம் பணிவார்க்கு அணியானை - தொழுவார்க்கு அடிமுடிகள் சமீபமாயிருப்பவனை, கூழையர் ஆகி - அறிவிலிகளாகி, பொய்யே குடி ஓம்பி - பொய்யையே குடியாகக்காத்து, குழைந்து - உருகி, மெய்யடியார் குழுப்பெய்யும் வாழியர்க்கே - மெய்யடியார்கூட்டம் வாழ்தற்பொருட்டே, வழுவாநெறிகாட்டி—தவறாதவழியைக்காட்டி, என்னை மறுபிறப்பு மாசு அறுத்தானை-எனது மறுபிறப்பாகிய குற்றத்தை யொழித்தவனை, மாழை ஒண்கண்-மாவடுப்போலும் அழகிய கண்களையுடைய, உமையைமகிழ்ந்தானை - உமாதேவியை மகிழ்ந்தவனை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் - திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(பொ-ரை) ஆழமுடையவனாய், விசாலித்து உயர்ந்தவனை, தொழுவார்க்கு அடிமுடிகள் சமீபமாயிருப்பவனை, அறிவிலிகளாகி பொய்யையே குடியாகக்காத்து உருகி, மெய்யடியார் கூட்டம் வாழ்தற்பொருட்டே தவறாத வழிகாட்டி எனது மறுபிறப்பாகிய குற்றத்தை யொழித்தவனை, மாவடுப்போலும் அழகிய கண்களையுடைய உமாதேவியை மகிழ்ந்தவனை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(கு-ரை.) ஆழமுடைமை முதலியவற்றையுடைய சிவபெருமானை திருவலிவலத்திற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) கூழையர் – மூடர். வாழியர் - வாழ்த்து. மாசு - குற்றம். மாழை – மாவடுவகிர். (3)

நாத்தானுன்றிறமேதிறம்பாது
நண்ணியண்ணித்தமுதம்பொதிந்தூறும்
ஆத்தானையடியேன்றனக்கென்று
மளவிறந்தபல்தேவர்கள்போற்றும்

சோத்தானைச்சுடர்மூன்றிலுமொன்றித்
துருவிமால்பிரமன்னறியாத
மாத்தானைமாத்தெனக்குவைத்தானை
வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை) அடியேன் தனக்கு என்றும் - அடியேனுக்கு எக்காலத்தும், நா-நாவானது, உன்திறமே திறம்பாது நண்ணி-உன் சிறப்பையே தவறாதடைந்து, அண்ணித்து - சமீபித்து, அமுதம் பொதிந்து ஊறும் ஆத்தானை - அமுதமிருந்து சுரக்கிற ஆத்தனை, அளவு இறந்த - அளவுகடந்த, பலதேவர்கள்போற்றும்-பலதேவர்கள் வணங்குகிற, சோத்தானை-அஞ்சலிக்குரியவனை, சுடர்மூன்றிலும் ஒன்றி - முச்சுடர்களிலும் சேர்ந்து, மால்பிரமன் - திருமால் பிரமன், துருவி - தேடி, அறியாத - அறியவொண்ணாத, மாத்தானை - பெருமையுடையவனை, எனக்கு மாத்துவைத்தானை-எனக்குப் பெருமைவைத்தவனை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் — திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(பொ-ரை) அடியேனுக்கு எக்காலத்தும் நாவானது உன் சிறப்பையே தவறாதடைந்து, சமீபித்து, அமுதமிருந்து சுரக்கிற ஆத்தனை, அளவுகடந்த தேவர்கள் வணங்குகிற அஞ்சலிக்குரியவனை, முச்சுடர்களிலும் சேர்ந்து திருமால் பிரமன் தேடி யறியவொண்ணாத பெருமையுடையவனை, எனக்குப் பெருமைவைத்தவனை, திருவலிவலத்தில்வந்து தரிசித்தேன்.

(க-ரை.) அளவில்லாத தேவர் அஞ்சலிசெய்யும் பெருமை யினையுடைய சிவபெருமானை, திருவலிவலத்திற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) நாத்தான் என்பதில் தன் சாரியை தான் என நீண்டது. திறம்பாது - தவறாமல். அண்ணித்தல் - இனித்தல். ஆத்தன் — அருளுடையோன். இது ஆத்தான் என நீண்டது. சோத்தான் - அஞ்சலியை யேற்பவன். சுடர்மூன்று -சோமசூரியாக்கினிகள். துருவுதல் - தேடுதல். மாத்தான் - மகத்துவமுடையவன். மாத்து - மகத்துவம். (4)

நல்லிசைஞானசம்பந்தனுநாவினுக்
கரசனும்பாடியநற்றமிழ்மாலை
சொல்லியவேசொல்லியேத்துகப்பானைத்
தொண்டனேனறியாமையறிந்து
கல்லியென்மனத்தைக்கசிவித்துக்
கழலடிகாட்டியென்களைகளையறுக்கும்
வல்லியல்வானவர்வணங்கநின்றானை
வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) நல் இசை - மிக்க புகழினையுடைய, ஞானசம்பந்தனும் - திருஞானசம்பந்தனும், நாவினுக்கரசனும் - வாகீசனும், பாடிய - பாடின, நல்

தமிழ்மாலை - நல்லதமிழ்மாலைகளை, சொல்லியலே சொல்லி - சொல்லியலாகச் சொல்லி, எத்து - துதித்தலை, உகப்பானை - மகிழ்வோனை, தொண்டனேன் அறியாமை அறிந்து — அடியேனது அறிவின்மையை யறிந்து, கல்லி - வேரறுத்து, என்மனத்தைக் கசிவித்து - என்மனத்தைக் கசியச்செய்து, கழல் அடிகாட்டி - கழலணிந்த திருவடியைக்காட்டி, என் களைகளை அறுக்கும் - என் துன்பத்தையறுக்கிற, வல் இயல்வானவர் - வலிய இயற்கையையுடைய, தேவர் கள் வணங்க நின்றானை - வணங்க நின்றவனை, வலிவலந்தன்னில் வந்து கண் டேன் — திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ—று.

(பொ-ரை) மிக்க புகழையுடைய திருஞானசம்பந்தனும், வாகீசனும் பாடின, நல்ல தமிழ்மாலைகளை சொல்லியலாகச்சொல்லி துதித்தலை மகிழ் வோனை, அடியேனது அறிவின்மையை யறிந்து வேரறுத்து, என்மனத்தைக் கசியச்செய்து, கழலணிந்த திருவடியைக்காட்டி என் துன்பத்தை யறுக்கிற வலிய இயற்கையையுடைய தேவர்கள் வணங்க நின்றவனை, திருவலிவலத் தில் வந்து தரிசித்தேன்.

(கு-ரை.) ஞானசம்பந்தன் முதலியோர் பாடிய நற்றமிழ்ப் பாடல்களை யேற்று மகிழ்ந்த சிவபெருமானை, திருவலிவலத்திற் கண்டுகொண்டேன் என் பதாம்.

(வி-ரை.) கல்லல் - தோண்டுதல். கழல் - வீரவிருது. களைகள் - விடாய் கள். கசிவித்தல் - உருகுவித்தல். (5)

பாடுமாபாடிப்பணியுமா றறியேன்
பனுவுமாபனுவிற்பரவுமா றறியேன்
தேடுமாதேடித்திருத்துமா றறியேன்
செல்லுமாசெல்லச்செலுத்துமா றறியேன்
கூடுமாறெங்ஙனமோவென்றுகூறக்
குறித்துக்காட்டிக்கொணர்ந்தெனையாண்டு
வாடிநீவாளாவருந்தலென்பானை
வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) பாடுமாறு பாடி - பாடும் வழியாய்ப்பாடி, பணியுமாறு அறி யேன் - வணங்கும் வழியை அறிந்திலேன், பனுவுமாறு பனுவி - சொல்லும் வழியாய்ச்சொல்லி, பரவுமாறு அறியேன் - துதிக்கும் வழியை யறிந்திலேன், தேடுமாறு தேடி - தேடும்வழியாய்த்தேடி, திருத்து மாறு அறியேன் - திருத் தும் வழியையறிந்திலேன், செல்லுமாறு செல்லச்-செல்லும்வழியாய்ச்செல்ல, செலுத்துமாறு அறியேன் - செலுத்தும் வழியை யறிந்திலேன், கூடுமாறு எங் ஙனமோ என்று கூற - உன்னையடையும்வழி யெப்படியென்றுசொல்ல, குறித் துக்காட்டி சுட்டிக்காட்டி, கொணர்ந்து-என்னை ஆண்டு-என்னையாண்டுகொண் டருளி, நீவாடி வாளாவருந்தல் என்பானை - நீவாடி சும்மா வருந்தாதேயென்று

சொல்வோனை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் - திருவலிவலத்தில்வந்து தரிசித்தேன் எ-று.

(போ-ரை.) பாடும் வழியாய்ப்பாடி வணங்கும் வழியை அறிந்திலேன், சொல்லும் வழியைச் சொல்லி துதிக்கும்வழியை யறிந்திலேன், தேடும் வழியைத் தேடி திருத்தும்வழியை யறிந்திலேன், செல்லும்வழியாய்ச் செல்ல செலுத்தும்வழியை யறிந்திலேன், உன்னை யடையும்வழி எப்படியென்று சொல்ல, சுட்டிக்காட்டி என்னையாண்டுகொண்டருளி, நீவாடி சும்மா வருந்தாதே,யென்று சொல்வோனை திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(க-ரை.) பாடுமாறு முதலியவற்றையறியாத என்னை வருந்தாதே என்று ஆண்டருளின சிவபெருமானைத் திருவலிவலத்திற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) பனுவுதல் - நூல்செய்தல். (6)

பந்தித்தவல்வினைப்பற்றறப்பிறவிப்
  படுகடற்பரப்புத்தவிர்ப்பானைச்
சந்தித்ததிறலாற்பணிபூட்டித்
  தவத்தையீட்டியதம்மடியார்க்குச்
சிந்தித்தற்கெளிதாய்த்திருப்பாதஞ்
  சிவலோகந்திறந்தேற்றவல்லானை
வந்திப்பார்தம்மனத்திலுள்ளானை
  வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) பந்தித்த - பிணித்த, வல்வினைப்பற்று அற - வலிய வினை பற்றொழிய, பிறவி - பிறவியாகிய, படுகடல் பரப்பு - பெருங்கடற் பரப்பை, தவிர்ப்பானை - ஒழிப்பவனை, சந்தித்த - நேர்ந்த, திறல் ஆர் பணிபூட்டி - வன்றொண்டினை யேற்பித்து, தவத்தை - தவச்செல்வத்தை, ஈட்டிய - சம்பாதித்த, தம் அடியார்க்கு - தமது தொண்டருக்கு, திருப்பாதம் - திருவடி, சிந்தித்தற்கு எளிது ஆய் - நினைத்தற் கெளியதாகி, சிவலோகம் திறந்து ஏற்றவல்லானை - சிவலோகத்தைத் திறந்து ஏற்றவல்லவனை, வந்திப்பார் தம் மனத்தில் உள்ளானை - துதிப்பவரது மனத்திலிருப்பவனை, வலிவலந் தன்னில் வந்து கண்டேன் - திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(போ-ரை.) பிணித்தவலியவினைப்பற்றொழிய பிறவியாகிய பெருங்கடற் பரப்பை ஒழிப்பவனை, நேர்ந்த வன்றொண்டினை யேற்பித்து, தவச்செல்வத்தை சம்பாதித்த தமது தொண்டருக்கு திருவடிநினைத்தற் கெளியதாகி, சிவலோகத்தைத் திறந்து ஏற்ற வல்லவனை, துதிப்பவரது மனத்திலிருப்பவனை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(கு-ரை.) பிறவித்தளையறுத்து அடியார்க்கு சிவலோகமருள் செய்யுஞ் சிவபெருமானைத் திருவலிவலத்திற் கண்டுகொண்டேன் என்பதாம்.

(வி-ரை.) படுகடல் - ஆழமாகிய கடல். வந்தித்தல் - வணங்கல். (7)

எவ்வவர்தேவரிருடிகண்மன்ன
 ரெண்ணிறந்தார்கண்மற்றெங்குநின்றேத்த
வவ்வவர்வேண்டியதேயருள்செய்து
 அடைந்தவர்க்கேயிடமாகிநின்றானை
யிவ்வவர்கருணையெங்கற்பகக்கடலை
 யெம்பெருமானருளாயென்றபின்னை
வவ்விஎன்னாவிமனங்கலந்தானை
 வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) எவ்வவர் - எவ்வெவர்களாகிய, தேவர் இருடிகள் மன்னர் - தேவர்கள் இருடிகள் அரசர்கள், எண் இறந்தார்கள் - அளவுகடந்தவர்கள், எங்கும் நின்று எத்த - எவ்விடத்தும் நின்று துதிக்க, அவ்வவர் வேண்டியதே அருள்செய்து - அவரவர் விரும்பியதையே யருள்செய்து, அடைந்தவர்க்கே இடம் ஆகி நின்றானை - அடைந்தவர்க்கே யிடமாய் நின்றவனை, இவ்வவர்கருணை - இவரிவர்க்குக் கருணைசெய்கிற, கற்பகக்கடலை - எமது கற்பகச்சமுத்திரத்தை, எம்பெருமான் - எம்பெருமானே, அருளாய் என்றபின்னை - அருள்வாயென்ற பிறகு, என் ஆவி வவ்வி - என்னுயிரைக் கவர்ந்து, மனம் கலந்தானை - என் மனத்திற் கலந்தவனை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் - திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(பொ-ரை.) எவ்வெவர்களாகிய தேவர்கள் இருடிகள் அரசர்கள் அளவு கடந்தவர்கள் எவ்விடத்தும் நின்று துதிக்க, அவரவர் விரும்பியதையே யருள் செய்து அடைந்தவர்க்கே யிடமாய் நின்றவனை, இவரிவர்க்கு கருணைசெய்கிற எமது கற்பகச் சமுத்திரத்தை, எம்பெருமானே அருள்வாயென்ற பிறகு, என்னுயிரைக் கவர்ந்து என் மனத்திற் கலந்தவனை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(கு-ரை.) தேவர் இருடியர் முதலான எவ்வகையார்க்கும் அருள்புரியும் சிவபெருமானைத் திருவலிவலத்திற் கண்டுகொண்டேனென்பதாம்.

(வி-ரை.) வவ்வல் - கவர்தல். (8)

திரியுமுப்புரஞ்செற்றதுங்குற்றத்
 திறலரக்கனைச்செறுத்ததுமற்றைப்
பெரியநஞ்சமுதுண்டதுமுற்றும்
 பின்னையாய்முன்னமேமுளைத்தானை

யரியநான்மறையந்தணரோவா
　　தடிபணிந்தறிதற்கரியானை
வரையின்பாவைமணாளனெம்மானை
　　வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) திரியும் முப்புரம் செற்றதும்-சஞ்சரிக்கிற முப்புரத்தை யழித்ததும், குற்றம் திறல் அரக்கனை செறுத்ததும் - குற்றத்தையும் வெற்றியையுமுடைய அரக்கனை வென்றதும், மற்றை - வேறாகிய, பெரிய நஞ்சு - பெரிய நஞ்சுமாகிய, அமுது உண்டதும் - அமுதுசெய்ததும், பின்னையாய் - பிறகாகி, முன்னமே முளைத்தானை - முன்னே முளைத்தவனை, அரிய நான்மறை - அருமையாகிய நான்கு வேதங்களையுடைய, அந்தணர் ஓவாது - வேதியர் இடையறாது, அடிபணிந்து – அடிவணங்கி, அறிதற்கு அரியானை - அறிதற் கரியவனை, வரையின் பாவை மணாளன் எம்மானை - மலைமங்கைக்கு மணாளனாகிய எப்பெருமானை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் – திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(பொ-ரை.) சஞ்சரிக்கிற முப்புரத்தை யழித்ததும், குற்றத்தையும் வெற்றியையுமுடைய அரக்கனை வென்றதும், வேறாகிய பெரிய நஞ்சுமாகிய அமுதுசெய்ததும், பிறகாகி முன்னே முளைத்தவனை, அருமையாகிய நான்கு வேதங்களையுடைய வேதியர் இடையறாது அடிவணங்கி அறிதற் கரியவனை, மலைமங்கைக்கு மணாளனாகிய எம்பெருமானை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(க-ரை.) திரிபுரமெரித்தல் முதலியவற்றைச் செய்த சிவபெருமானைத் திருவலிவலத்திற் கண்டுகொண்டே னென்பதாம்.

(வி-ரை.) அரக்கன் என்றது இராவணனை. ஓவாது - நீங்காமல். (9)

ஏன்றவந்தணன் றலையினையறுத்து
　　நிறைக்கமாலுதிரத்தினையேற்றுத்
தோன்றுதோண்மிசைக்களேபரந்தன்னைச்
　　சுமந்தமாவிரத்தகங்காளன்
சான்றுகாட்டுதற்கரியவனெளிய
　　வன்றன்னைத்தன்னிலாமனத்தார்க்கு
மான்றுசென்றணையாதவன்றன்னை
　　வலிவலந்தனில்வந்துகண்டேனே.

(ப-ரை.) ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து நிறைக்க - பொருந்திய பிரமனது தலையையறுத்து நிறைக்க, மால் உதிரத்தினை யேற்று - சக்கின உதிரத்தை யேற்று, தோன்று தோள்மிசை – காணப்பட்ட தோள்மீது, களேபரந்தன்னை - உடம்பை, சுமந்த - தாங்கின, மாவிரத்த - மிக்கவுதிரத்தையுடைய,

கங்காளன் - கங்காளத்தை யுடையவன், சான்று காட்டுதற்கரியவன் — சாக்ஷி காட்டுதற்கு அரியவனும், எளியவன் தன்னை - எளியவனுமா யிருப்பவனை, தன்னில் நில்லா மனத்தார்க்கு - தன்னிடத்து நிற்காத மனத்தினை யுடையவர்க்கு, மான்று - மயங்கி, சென்று அணையாதவன் தன்னை - போய் அடையக் கூடாதவனை, வலிவலந்தன்னில் வந்து கண்டேன் - திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன் எ-று.

(பொ-ரை) பொருந்திய பிரமனது தலையையறுத்து நிறைக்க, கக்கின உதிரத்தை யேற்று, காணப்பட்ட தோள்மீது உடம்பைசுமந்த மிக்க உதிரத்தையுடைய கங்காளத்தையுடையவன், சாக்ஷிகாட்டுதற்கு அரியவனும் எளியவனுமா யிருப்பவனை, தன்னிடத்து நிற்காத மனத்தினை யுடையவர்க்கு மயங்கி போய் அடையக்கூடாதவனை, திருவலிவலத்தில் வந்து தரிசித்தேன்.

(கு-ரை.) பிரமன் சிரங்கொய்தல் முதலியவற்றைச் செய்த சிவபெருமானைத் திருவலிவலத்திற் கண்டுகொண்டே னென்பதாம்.

(வி-ரை.) கங்காளன் - முழுவெலும்பை யணிந்தவன். சான்று - சாக்ஷி. மான்று என்பதற்குப் பகுதி மால். (10)

கலிவலங்கெடவாரழலோம்புங்
  கற்றநான்மறைமுற்றனலோம்பும்
வலிவலந்தனில்வந்துகண்டடியேன்
  மன்னுநாவலாரூரன்வன்றொண்ட
னொலிகொளின்னிசைச்செந்தமிழ்பத்து
  முள்ளத்தாலுகந்தேத்தவல்லார்போய்
மெலிவில்வானுலகத்தவரேத்த
  விரும்பிவிண்ணுலகெய்துவர்தாமே.

(ப-ரை.) கலிவலம் கெட - பாவத்தின்வலியழிய, ஆர் அழல் ஓம்பும் - அரிய அனலைக்காக்கிற, கற்ற நான்மறைமுற்று அனல் ஓம்பும் - சுற்ற நால் வேதங்களையும் அனல்முழுதும் காக்கிற, வலிவலந்தனில் வந்துகண்டு-வலிவலத்தில் வந்து தரிசித்து, அடியேன் - தொண்டனேன், மன்னும் நாவலாரூரன் வன்றொண்டன் - சுந்தரன், ஒலிகொள் இன்இசை - ஓசையைக் கொண்ட இனிய இசையோடு, செந்தமிழ் பத்தும் - செந்தமிழ்ப்பாடல் பத்தினையும், உள்ளத்தால் உகந்து ஏத்தவல்லார் - மனத்தால் விரும்பித் துதிக்க வல்லவர், போய் - சென்று, மெலிவு இல் - இளைப்பில்லாத, வானுலகத்தவர் ஏத்த - விண்ணுலகத்தார் துதிக்க, விரும்பி விண்ணுலகு எய்துவர் - விரும்பி விண்ணுலகை யடைவர் எ-று.

(பொ-ரை.) பாவத்தின் வலியழிய அரிய அனலைக் காக்கிற கற்ற நால் வேதங்களையும் அனல்முழுதும் காக்கிற வலிவலத்தில் வந்து தரிசித்து, தொண்

டனேன் சுந்தரன் ஓசையைக்கொண்ட இனிய இசையோடு செந்தமிழ்ப் பாடல் பத்தினையும் மனத்தால் விரும்பித் துதிக்க வல்லவர், சென்று இளைப் பில்லாத விண்ணுலகத்தார் துதிக்க விரும்பி விண்ணுலகடைவர்.

(க-ரை.) திருவலிவலத்துச் சிவபெருமானை வன்றொண்டன் புகழ்ந்து பாடின இப்பத்துப் பாடலுங் கற்று வல்லார் விண்ணவர் ஏத்த விண்ணுல கடைவர் என்பதாம்.

(வி-ரை.) ஆரழலோம்புதல் - வேள்விசெய்தல். மெலிவு - இளைத்தல். ()

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மனத்துணைநாதர். தேவியார்-வாளையங்கண்ணியம்மை.

---

## திருநள்ளாறு

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

செம்பொன்மேனிவெண்ணீறணிவானைக்
கரியகண்டனைமாலயன்காணாச்
சம்புவைத்தழலங்கையினானைச்
சாமவேதனைத்தன்னொப்பிலானைக்
கும்பமாகரியின்னுரியானைக்
கோவின்மேல்வருங்கோவினைநங்க
ணம்பனைநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) செம்பொன்மேனி - செம்பொன்போலும் திருமேனியில், வெண்ணீறு அணிவானை - திருவெண்ணீறணிபவனை, கரியகண்டனை - கருங் கண்டத்தையுடையவனை, மால் அயன்காணா சம்புவை - திருமாலும் பிரமனும் காணாதசம்புவை, தழல் அங்கையினானை - நெருப்பினை அங்கையிலுடையவனை, சாமவேதனை - சாமவேதகீதனை, தன் ஒப்பு இல்லானை — தனக்கு ஒப்பாரில் லாதவனை, கும்பம்மாகரியின் உரியானை - கும்பத்தையுடைய பெரிய யானைத் தோலையுடையவனை, கோவின்மேல் - இடபத்தின்மீது, வரும் கோவினை-எறி வருகிற இறைவனை, நங்கள் நம்பனை — நமது நம்பனை, நள்ளாறனை - திருநள் ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன்-வேறெதனை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) செம்பொன்போலும் திருமேனியில் திருவெண்ணீறணி பவனை, கருங் கண்டத்தை யுடையவனை, திருமாலும் பிரமனும் காணாத சம்பு

வை,நெருப்பினை அங்கையிலுடையவனை, சாமவேதகீதனை, தனக்கு ஒப்பாரில்லாதவனை, கும்பத்தையுடைய பெரிய யானைத்தோலை யுடையவனை, இடபத்தின்மீது ஏறிவருகிற இறைவனை, நமதுநம்பனை, திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமிர்தத்தை, நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை.) திருநள்ளாற்றுச் சிவபெருமானை மறந்து, யான் மற்றெதை நினைக்கக்கடவேன் என்பதாம்.

(வி-ரை.) கும்பம் – மத்தகம். உரி - தோல். கோவின்மேல் வருங்கோ - அரசர்க்கரசன், நள்ளாறன் - திருநள்ளாற்றில் எழுந்தருளி யிருக்குஞ் சிவபிரான். கோ - இடபம் எனக்கொண்டு இடபத்தின்மே லெழுந்தருளுகிற கோவினை - அரசனை யென்றுரைத்தலுமாம். (1)

விரைசெய்மாமலர்க்கொன்றையினானை
வேதகீதனைமிகச்சிறந்துருகிப்
பரசுவார்வினைப்பற்றறுப்பானைப்
பாலொடானைஞ்சுமாடவல்லானைக்
குரைகடல்வரையேழுலகுடைக்
கோனைஞானக்கொழுந்தினைத்தொல்லை
நரைவிடையுடையநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) விரைசெய் – மணம்வீசுகிற, மாமலர்க் கொன்றையினானை - பெரிய கொன்றைமலர்மாலையை யுடையவனை, வேதகீதனை - வேதகீதத்தை யுடையவனை, மிகச்சிறந்து உருகி - மிகுதியாயுருகி, பரசுவார்வினை - துதிப்பவாது வினையை, பற்று அறுப்பானை- பற்றறுப்பவனை, பாலொடு ஆன் அஞ்சும் ஆடவல்லானை - பாலுடனே பஞ்சகவ்வியங்களையும் அபிஷேகிக்கத் தக்கவனை, குரைகடல் – ஒலிக்கிற கடல், வரைஏழ் - சப்தகுலகிரிகள், உலகு - உலகம், உடைய கோனை - உடைய அரசனை, ஞானக்கொழுந்தினை - ஞானக்கொழுந்தை, தொல்லை நரைவிடை உடைய - பழமையாகிய வெள்ளெருதினையுடைய, நள்ளாறனை - திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என்நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று

(பொ-ரை.) மணம்வீசுகிற பெரிய கொன்றைமலர் மாலையை யுடையவனை, வேதகீதத்தை யுடையவனை, மிகுதியாயுருகி துதிப்பவர்து வினையை பற்றறுப்பவனை, பாலுடனே பஞ்சகவ்வியங்களையும் அபிஷேகிக்கத்தக்கவனை, ஒலிக்கிற கடல் சப்தகுலகிரிகள் உலகம் உடைய அரசனை, ஞானக்கொழுந்தை, பழமையாகிய வெள்ளெருதினையுடைய திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை, அமிர்தத்தை, நாயேன்மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை.) திருநள்ளாற்றுச் சிவபெருமானை நான் மறந்து வேறெதனை நினைக்கக் கடவேன் என்பதாம்.

(வி-ரை.) பரசுவார் - வழிபடுவோர். நரைவிடை - வெள்ளை யெருது. ()

பூவில்வாசத்தைப்பொன்னினைமணியைப்
புவியைக்காற்றினைப்புனலனல்வெளியைச்
சேவின்மேல்வருஞ்செல்வனைச்சிவனைத்
தேவதேவனைத்தித்திக்குந்தேனைக்
காவியங்கண்ணிபங்கனைக்கங்கைச்
சடையனைக்காமரத்திசைபாட
நாவிலூறுநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(பு-ரை.) பூவில் வாசத்தை - மலரில் மணத்தை, பொன்னினை - பொன்னை, மணியை - ரத்நத்தை, புவியை - பூமியை, காற்றினை - காற்றை, புனல் அனல் வெளியை - நீர் நெருப்பு ஆகாயமாகியிருப்பவனை, சேவின்மேல் வரும் செல்வனை - இடபத்தின்மேலேறி வருகிற செல்வனை, சிவனை - சிவனை, தேவ தேவனை - தேவர்க்குத் தேவனை, தித்திக்கும்தேனை - இனிக்கிறதேனை, காவியங் கண்ணிபங்கனை - கருங்குவளை மலர்போலுங் கண்ணையுடைய உமாதேவி பாகனை, கங்கைச்சடையனை - கங்கையைத் தரித்த சடையையுடையவனை, காமரத்து இசைபாட - காமரப்பண்ணைப்பாட, நாவில் ஊறும் - நாவில் சுரக்கிற, நள்ளாறனை - திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை, அமுதை-அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என்நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) மலரில் மணத்தை, பொன்னை, ரத்நத்தை, பூமியை, காற்றை நீர் நெருப்பு ஆகாயமாகியிருப்பவனை, இடபத்தின்மேலேறி வருகிற செல்வனை, சிவனை, தேவர்க்குத்தேவனை, இனிக்கிறதேனை, கருங்குவளை மலர்போலுங் கண்ணையுடைய உமாதேவிபாகனை, கங்கையைத்தரித்த சடையையுடையவனை, காமரப் பண்ணைப்பாட, நாவில் சுரக்கிற திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமிர்தத்தை, நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை.) மண் முதலியவையாயிருக்கிற திருநள்ளாறனை நான் மறந்து வேறெதனை நினைக்கக் கடவேன் என்பதாம். (3)

தஞ்சமென்றுதன்றாளதுவடைந்த
பாலன்மேல்வந்தகாலனையுருள
நெஞ்சிலோருதைகொண்டபிரானை
நினைப்பவர்மனநீங்ககில்லானை

விஞ்சைவானவர் தானவர்கூடிக்
கடைந்தவேலைபுண் மிக்கெழுந்தெரிபு
நஞ்சமுண்டநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) தஞ்சம் என்று - அடைக்கலம் என்று, தன் தாள் அடைந்த - தன் திருவடியைச் சேர்ந்த, பாலன்மேல் வந்த - பாலகன்மீதுவந்த, காலனை - யமனை, உருள - உருளும்படி, நெஞ்சில் ஓர் உதைகொண்ட பிரானை — மார்பில் ஒரு உதையுதைத்த பிரானை, நினைப்பவர்மனம் நீங்ககில்லானை - நினைப்பவர் மனத்தைவிட்டு நீங்காதவனை, விஞ்சைவானவர் தானவர்கூடி - வித்தையையுடைய தேவர் அசுரர் சேர்ந்து, கடைந்த வேலைபுள் - கடைந்த பாற்கடலில், மிக்கு எழுந்து எரியும் - மிகுதியா யெழுந்தெரிந்த, நஞ்சம் உண்ட - விஷமுண்ட, நள்ளாறனை - திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை. அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) அடைக்கலமென்று தன் திருவடியைச் சேர்ந்த பாலகன் மீது வந்த யமனை உருளும்படி மார்பில் ஒரு உதை யுதைத்தபிரானை, நினைப்பவர் மனத்தைவிட்டு நீங்காதவனை, வித்தையையுடைய தேவர் அசுரர் சேர்ந்து கடைந்த பாற்கடலில் மிகுதியா யெழுந்தெரிந்த விஷமுண்ட திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை, அமிர்தத்தை, நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(கு-ரை) காலகாலனும் நஞ்சமுது செய்தவனுமாகிய திருநள்ளாறனை நான் மறந்து வேறெதனை நினைக்கக் கடவே னென்பதாம்.

(வி-ரை.) தஞ்சம் - ஆதரவு. பாலன் என்றது மார்க்கண்டனை. வேலை — கடல். (பாற்கடல்) விஞ்சை - வித்தை. (4)

மங்கைபங்கனைமாசிலாமணியை
வானநாடனையேனமோடன்ன
மெங்குநாடியுங்காண்பரியானை
யேழையேற்கெளிவந்தபிரானை
யங்கநான்மறையாணிறைகின்ற
வந்தணாரடியதுபோற்று
நங்கள்கோனைநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) மங்கை பங்கனை-உமாதேவிபாகனை, மாசிலாமணியை - மாசற்ற ரத்நத்தை, வானநாடனை - முத்தியுலகையுடையவனை, ஏனமோடு அன்னம் — பன்றியோடு அன்னம், எங்கும் நாடியும் - எவ்விடத்தும் தேடியும், - காண்பு

அரியானை - காண்டற் கரியவனை, எழையேற்கு எளிவந்த பிரானை - அறிவிலேனுக்கு எளியனாயிருந்த பிரானை, அங்கம் நான் மறையால் நிறைகின்ற - அங்கங்களாலும் நான்மறைகளாலும் நிறைந்த, அந்தணாளர் - வேதியர், அடி போற்றும் - அடி பணிகிற, நங்கள் கோனை - எமது இறைவனை, நள்ளாறனை - திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(போ-ரை.) உமாதேவிபாகனை, மாசற்றரத்நத்தை, முத்தியுலகை யுடையவனை, பன்றியோடு அன்னம் எவ்விடத்தும் தேடியும் காண்டற்கரியவனை, அறிவிலேனுக்கு எளியனாயிருந்த பிரானை, அங்கங்களாலும் நான்மறைகளாலும் நிறைந்த வேதியர் அடிபணிகிற எமது இறைவனை, திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமிர்தத்தை நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(சு-ரை.) மங்கைபங்கினன் முதலிய திருநாமங்களையுடைய திருநள்ளாறனை நான் மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன்.

(வி-ரை.) ஏனம்-பன்றி அன்னம் - அன்னப்பறவை. இவை யிரண்டும் நாடிக்காண்பு அரியானை யென்றது விட்டுணுபிரமர்கள் அடிமுடியறிதற்கரிதாய் நெருப்புப்பொருப்பாய் நிமிர்ந்து நின்ற கதையைக் குறித்தது. (5)

கற்பகத்தினைக்கனகமால்வரையைக்
காமகோபனைக்கண்ணுதலானைச்
சொற்பதப்பொருளிருளறுத்தருளுந்
தூயசோதியைவெண்ணைநல்லூரி
லற்புதப்பழவாவணங்காட்டி
யடியனுவென்னையாளதுகொண்ட
நற்பதத்தைநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) கற்பகத்தினை - கற்பகத்தை, கனகமால்வரையை - பெரிய பொன்மலையை, காமகோபனை - காமதகனனை, கண்ணுதலானை - நெற்றிக்கண்ணையுடையவனை, சொற்பதப்பொருள் - சொற்பதப்பொருள்களின், இருள் அறுத்தருளும் - இருளைச் சேதித்தருள்செய்கிற, தூயசோதியை - பரிசுத்தமாகிய ஒளியை, வெண்ணைநல்லூரில் - திருவெண்ணெய் நல்லூரில், அற்புதம் - ஆச்சரியகரமாகிய, பழ ஆவணம் காட்டி - பழைய ஓலையைக்காட்டி, அடியனு என்னை ஆள்கொண்ட - என்னை யடிமையாகக் கொண்ட, நல்பதத்தை - நல் பதவியை, நள்ளாறனை - திருநள்ளாற்றிலெழுந்தருளியிருப்பவனை, அமுதை -

அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(போ-ரை.) கற்பகத்தை, பெரிய பொன்மலையை, காமதகனனை, நெற்றிக் கண்ணையுடையவனை, சொற்பதப் பொருள்களின் இருளைச் சேதித்தருள் செய்கிற பரிசுத்தமாகிய ஒளியை, திருவெண்ணெய் நல்லூரில் ஆச்சரியகரமாகிய பழைய ஓலையைக்காட்டி என்னை யடிமையாகக் கொண்ட நல்பதவியை, திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமிர்தத்தை நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை) ஆவணம் காட்டி யென்னையாட்கொண்ட திருநள்ளாற்றுச் சிவபிரானை நான் மறந்து வேறெதனை நினைக்கக் கடவேனென்பதாம்.

(வி-ரை.) கனகம் — பொன். கனகமால்வரை - மேருமலை. ஆவணம் - அடிமைப்பத்திரம். நல்பதம் - நல்லதிருவடி. (6)

மறவனையன் றுபன் றிப்பின்சென்ற
மாயனைநால்வர்க்காலின்கீழுரைத்த
அறவனையமரர்க்கரியானை
யமரர்சேனைக்குநாயகனான
குறவர்மங்கைதன்கேள்வனைப்பெற்ற
கோனைநான்செய்தகுற்றங்கள்பொறுக்கு
நறைவிரியுநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) மறவனை - வேடனை, அன்று பன்றிப்பின்சென்ற மாயனை - அந்நாளில் பன்றியின் பின்னேகின மாயனை, நால்வர்க்கு-நால்வர்க்கு, ஆலின் கீழ் உரைத்த - ஆலடியிலிருந்து சொல்லிய, அறவனை - தருமமூர்த்தியை, அமரர்க்கு அரியானை - தேவர்க்கு அரியவனை, அமரர்சேனைக்கு நாயகன் ஆன - தேவ சேநாபதியாகிய, குறவர்மங்கை தன் கேள்வனைப்பெற்றகோனை - வள்ளிமணாளனை யீன்ற இறைவனை, நான் செய்த குற்றங்கள் பொறுக்கும் - நான் பண்ணின குற்றங்களைப் பொறுக்கின்ற, நறைவிரியும்-மணம்பரவிய, நள்ளாறனை-திருநள்ளாற்றிலெழுந்தருளியிருப்பவனை, அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(போ-ரை.) வேடனை, அந்நாளில் பன்றியின்பின்னேகின மாயனை, நால்வர்க்கு ஆலடியிலிருந்து சொல்லிய தருமமூர்த்தியை, தேவர்க்கு அரியவனை தேவ சேநாபதியாகிய வள்ளிமணாளனை யீன்ற இறைவனை, நான் பண்ணின குற்றங்களைப் பொறுக்கின்ற மணம்பரவிய திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமிர்தத்தை நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை.) அருச்சுனன் பொருட்டுப் பன்றியின்பின் வேடுவனுய்ச் சென்ற திருநள்ளாறனை நான் மறந்து வேறெதனை நினைக்கக் கடவேன் என்பதாம்.

(வி-ரை.) நால்வர் - சநகாதியர். குறவர் மங்கை தன் கேள்வன் - முருகன். கோன் - இறைவன். (7)

மாதினுக்குடம்பிடங்கொடுத்தானை
 மணியினைப்பணிவார்வினைகெடுக்கும்
வேதனைவேதவேள்வியர்வணங்கும்
 விமலனையடியேற்கெளிவந்த
தூதனைத்தன்னைத்தோழமையருளித்
 தொண்டனேன்செய்ததுரிசுகள்பொறுக்கு
நாதனைநள்ளாறனையமுதை
 நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) மாதினுக்கு உடம்பு இடம் கொடுத்தானை-பெண்ணுக்குத் தன் சரீரத்தின் இடப்பாகம் கொடுத்தவனை, மணியினை - மணியை, பணிவார் வினைகெடுக்கும் வேதனை - வணங்குவோரது வினையையொழிக்கும் வேதரூபனை, வேதவேள்வியர் வணங்கும் விமலனை - வேதவேள்வியாளர் வணங்குகிற பரிசுத்தனை, அடியேற்கு எளிவந்த தூதனை - அடியேனுக்கு எளிதிற் கிடைத்த தூதனை, தன்னைத் தோழமை அருளி — தன்சிநேகத்தை யருள் செய்து, தொண்டனேன் செய்த - அடியேன் செய்த, துரிசுகள் பொறுக்கும்-குற்றங்களைப் பொறுக்கிற, நாதனை-இறைவனை, நள்ளாறனை - திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை, அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) பெண்ணுக்குத் தன் சரீரத்தின் இடப்பாகம் கொடுத்தவனை, மணியை, வணங்குவோரது வினையை யொழிக்கும் வேதரூபனை, வேதவேள்வியாளர் வணங்குகிற பரிசுத்தனை, அடியேனுக்கு எளிதிற் கிடைத்த தூதனை, தன்சிநேகத்தை யருள்செய்து அடியேன் செய்த குற்றங்களைப் பொறுக்கிற இறைவனை, திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை, அமிர்தத்தை நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை.) பெண்பாகங் கொடுத்தல் முதலியவற்றையுடைய திருநள்ளாறனை மறந்து நான் வேறெதனை நினைக்கக்கடவேன் என்பதாம்.

(வி-ரை.) மாது என்றது - உமாதேவியை. வேதன் - வேதப்பொருளா யிருப்பவன். தோழமை - நட்பு. விமலன் — பரிசுத்தன். (8)

இலங்கைவேந்தனெழிறிகழ்கயிலை
 யெடுப்பவாங்கிமவான்மகளஞ்சத்
துலங்குநீண்முடியொருபதுதோள்க
 ளிருபதுந்நெரித்தின்னிசைகேட்டு

வலங்கைவாளொடுநாமமுங்கொடுத்த
வள்ளலைப்பிள்ளைமாமதிச்சடைமே
னலங்கொள்சோதிநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

(ப-ரை.) இலங்கைவேந்தன் - இராவணன், எழில்திகழ் கயிலை எடுப்ப - அழகு விளங்குகிற கைலாய மலையை யெடுக்க, ஆங்கு இமவான்மகள் அஞ்ச - அங்கே மலையரையன்மகள் அஞ்சாநிற்க, துலங்கு நீள்முடி ஒருபதும் - பிரகாசிக்கிற நீண்டமுடி யொருபத்தும், தோள்கள் இருபதும் - புஜங்களிருபதும், நெரித்து - முறித்து, இன் இசை கேட்டு - (அவன் பாடின) இனிய இசையைக் கேட்டு, வலங்கை வாளொடு - வலமாகிய வாட்படையோடு, நாமமும் கொடுத்த வள்ளலை - பயரையுங் கொடுத்த உதாரனை, பிள்ளைமாமதி - அழகிய பிறைமதி, சடைமேல் - சடைமீது, நலம்கொள் சோதி - நன்றாகத் தரித்த ஒளியுருவாகிய, நள்ளாறனை - திருநள்ளாற்றி லெழுந்தருளி யிருப்பவனை, அமுதை - அமிர்தத்தை, நாயினேன் - நாயேன், மறந்து - மறந்து, என் நினைக்கேன் - வேறெதனை நினைப்பேன் எ-று.

(பொ-ரை.) இராவணன் அழகு விளங்குகிற கைலாய மலையை யெடுக்க, அங்கே மலையரையன் மகள் அஞ்சாநிற்க, பிரகாசிக்கிற நீண்ட முடியொருபத்தும், புஜங்களிருபதும் முறித்து (அவன் பாடின) இனிய இசையைக்கேட்டு, வலமாகிய வாட்படையோடு பயரையுங் கொடுத்த உதாரனை, அழகிய பிறைமதி சடைமீது நன்றாகத் தரித்த ஒளியுருவாகிய திருநள்ளாற்றி லெழுந்தருளியிருப்பவனை, அமிர்தத்தை நாயேன் மறந்து வேறெதனை நினைப்பேன்.

(க-ரை.) இலங்கைவேந்தன் வலியழித்தல் முதலிய செயல்களை யுடைய திருநள்ளாறனை நான் மறந்து வேறெதனை நினைக்கக்கடவேன் என்பதாம்.

(வி-ரை.) நாமம் - பெயர். வள்ளல் - பரமோதாரன். (9)

செறிந்தசோலைகள்சூழ்ந்தநள்ளாற்றெஞ்
சிவனைநாவலூரர்சிங்கடிதந்தை
மறந்துநான்மற்றுநினைப்பதேதென்று
வனப்பகையப்பனூரன்வன்றொண்டன்
சிறந்தமாலைகொண்டைஞ்சினோடைஞ்சுஞ்
சிந்தையுள்ளுருகிச்செப்பவல்லார்க்
கிறந்துபோக்கில்லைவாவில்லையாகி
யின்பவெள்ளத்துளிருப்பர்களினிதே.

(ப-ரை.) செறிந்த - நெருங்கின, சோலைகள் சூழ்ந்த - சோலைகள் சுற்றின, நள்ளாற்று எம் சிவனை - திருநள்ளாற்றிலுள்ள எமது சிவபிரானை, நாவலூர் சிங்கடிதந்தை—, மறந்து நான் மற்று நினைப்பது ஏதென்று - மறந்து

நான் மற்று நினைப்பது என்னென்று, வனப்பகையப்பன் ஊரன் வன்றொண்டன் - சுந்தரன் சொன்ன, சிறந்த மாலை கொடு - சிறந்த தமிழ் மாலையைக் கொண்டு, அஞ்சினொடு அஞ்சும் - பத்தும், சிந்தை உள்ளுருகி செப்பவல்லாருக்கு - மனமுருகிச் சொல்ல வல்லவருக்கு, இறந்து போக்கு இல்லை - இறந்து போதலில்லை, வரவு இல்லையாகி - பிறவியில்லையாகி, இன்ப வெள்ளத்துள் இனிது இருப்பர்கள் - ஆனந்தசாகரத்தில் இனிது வாழ்வார்கள் எ-று.

(போ-ரை.) நெருங்கின சோலைகள் சுற்றின திருநள்ளாற்றிலுள்ள எமது சிவபிரானை, நாவலூர் சிங்கடிதந்தை, மறந்து நான் மற்று நினைப்பது என்னென்று வனப்பகையப்பன் ஊரன் சுந்தரன் சொன்ன, சிறந்த தமிழ்மாலையைக்கொண்டு பத்தும் மனமுருகிச் சொல்ல வல்லவருக்கு இறந்துபோதலில்லை, பிறவியில்லையாகி ஆனந்த சாகரத்தில் இனிது வாழ்வார்கள்.

(க-ரை.) திருநள்ளாற்றுச் சிவபெருமானை, வன்றொண்டன் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாடலும் கற்றுவல்லார், பிறப்பிறப்பின்றி இன்பவெள்ளத் தழுந்துவர் என்பதாம்.

(வி-ரை) இறந்து போக்கு - இறந்துபோதல், வரவு-பிறத்தல். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தெர்ப்பாரணியேசுவரர், தேவியார்-போகமார்த்தபூண்முலையம்மை

---

## திருவடமுல்லைவாயில்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

திருவுமெய்ப்பொருளுஞ்செல்வமுமெனக்குன்
சீருடைக்கழல்களென்றெண்ணி
யொருவரைமதியாதுறுமைகள்செய்து
மூடியுமுறைப்பனுய்த்திரிவேன்
முருகமர்சோலைசூழ்திருமுல்லை
வாயிலாய்வாயினுலுன்னைப்
பரவிடுமடியேன்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப ரை.) திருவும் - அழகும், மெய்ப்பொருளும் - உண்மைப்பொருளும், செல்வமும - பாக்கியமும், எனக்கு - அடியேனுக்கு, உன்சீர் உடைகழல்கள் என்று எண்ணி - உனது சிறந்த திருவடிகளே யென்று நினைத்து, ஒருவரை மதியாது - ஒருவரையும் மதிக்காமல், உறாமைகள்செய்து - கெடுதிகள்செய்து, மூடியும் — மறைத்தும், உறைப்பனாய் திரிவேன் — உறுதியுடையவனாய்த் திரிந்தேன், முருகு அமர் சோலைசூழ் — மணமுள்ள சோலைகள் சூழ்ந்த, திருமுல்லை வாயிலாய் - திருமுல்லை வாயிலையுடையவனே, வாயினால் உன்னை - வாக்கினாலே யுன்னை, பரவிடும் அடியேன் - துதிக்கிற அடியேன், படுதுயர் களையாய்- படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே-பேரொளியே எ-று.

(போ ரை.) அழகும் உண்மைப்பொருளும் பாக்கியமும் அடியேனுக்கு உனது சிறந்த திருவடிகளே யென்று நினைத்து, ஒருவரையும் மதிக்காமல் கெடுதிகள்செய்து மறைத்தும் உறுதியுடையவனாய் திரிந்தேன், மணமுள்ள சோலைகள் சூழ்ந்த திருமுல்லை வாயிலையுடையவனே, வாக்கினாலே யுன்னை துதிக்கிற அடியேன் படுந்துன்பத்தை ஒழித்தருளாய் பாசுபதனே, பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படுந்துன்பங் களைந்தாண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) உறாமைகள் - செய்யத்தகாதவைகள். உறைப்பன் - வன்மனத்தன். முருகு - வாசனை, தேன் எனினுமாம். களைதல் - வேரறுத்தல். பரவுதல்-துதித்தல். (1)

கூடியவிலயஞ்சதிபிழையாமைக்
கொடியிடையுமையவள்காண
வாடியவழகாவருமறைப்பொருளே
யங்கணாவெங்குற்றாயென்று
தேடியவானோர்சேர்திருமுல்லை
வாயிலாய்திருப்புகழ்விருப்பாற்
பாடியவடியேன்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப-ரை.) கூடிய இலயஞ்சதி - சேர்ந்த இலயமும் சதியும், பிழையாமை-தவறாமல், கொடி இடை உமையவள்காண - பூங்கொடிபோலும் இடையை யுடையவளாகிய உமாதேவி தரிசிக்கும்படி, ஆடிய அழகா - நடனஞ்செய்த அழகனே, அருமறைப்பொருளே-அரிய வேதார்த்தமே, அங்கணா - கிருபைக்கண்ணனே, எங்கு உற்றாய் என்று - எங்கே போயினையென்று, தேடியவானோர்-தேடிய தேவர்கள், சேர் - கூடிய, திருமுல்லைவாயிலாய் - திருமுல்லைவாயிலையுடையவனே, திருப்புகழ் - உன் திருப்புகழை, விருப்பால் - என் விருப்பத்

தால், பாடின அடியேன் - பாடிய அடியேனது, படுதுயர்களையாய் — படுந்துன்பத்தை யொழிப்பாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே — பேரொளியே எ—று.

(போ-ரை) சேர்ந்த இலயமும் சதியும் தவறாமல் பூங்கொடிபோலும் இடையையுடையவளாகிய உமாதேவி தரிசிக்கும்படி நடனஞ்செய்த அழகனே, அரிய வேதார்த்தமே, கிருபைக்கண்ணனே, எங்கே போயினையென்று தேடிய தேவர்கள்கூடிய திருமுல்லை வாயிலையுடையவனே, உன் திருப்புகழை என் விருப்பத்தால் பாடின அடியேனது படுந்துன்பத்தை யொழிப்பாய், பாசுபதனே பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன்படும் துன்பம் களைந்தாண்டருளவேண்டும் என்பதாம். (2)

விண்பணிந்தேத்தும்வேதியர்மாதர்
வெருவிடவேழமொன் றுரித்தாய்
செண்பகச்சோலைசூழ்திருமுல்லை
வாயிலாய்தேவர்தம்மரசே
தண்பொழிலொற்றிமாநகருடையாய்
சங்கிலிக்காவென்கண்கொண்ட
பண்பநின்னடியேன்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப-ரை.) விண்பணிந்து ஏத்தும் - விண்ணுலகத்தார் துதித்து வணங்குகிற, வேதியர் மாதர் - பார்ப்பினிகள், வெருவிட — அஞ்ச, வேழம் ஒன்று உரித்தாய் - ஒரு யானையை யுரித்தவனே, செண்பகச் சோலைசூழ் - சண்பகச் சோலைகள் சூழ்ந்த, திருமுல்லைவாயிலாய் - திருமுல்லை வாயிலையுடையவனே, தேவர்தம் அரசே - தேவராஜனே, தண்பொழில்-குளிர்ந்த சோலைகள்சூழ்ந்த, ஒற்றிமாநகர் உடையாய் - திருவொற்றியூரை யுடையவனே, சங்கிலிக்கா - சங்கிலியின்பொருட்டு, என் கண்கொண்ட - என் கண்ணைக் கவர்ந்துகொண்ட, பண்ப - தன்மையையுடையோனே, நின் அடியேன் - நினதுதொண்டனேன், படுதுயர்களையாய் - படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(போ-ரை.) விண்ணுலகத்தார் துதித்து வணங்குகிற பார்ப்பினிகள் அஞ்ச ஒரு யானையை யுரித்தவனே, சண்பகச்சோலைகள் சூழ்ந்த திருமுல்லைவாயிலையுடையவனே, தேவராஜனே, குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருவொற்றியூரையுடையவனே, சங்கிலியின்பொருட்டு என் கண்ணைக் கவர்ந்துகொண்ட தன்மையை யுடையோனே, நினது தொண்டனேன் படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதனே பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படும் துன்பங் களைந்தாண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) பண்ப - குணத்தையுடையவனே. (3)

பொன்னலங்கழனிப்புதுவிரைமருவிப்
பொறிவரிவண்டிசைபாட
அந்நலங்கமலத்தவிசின்மேலுறங்கு
மலவன்வந்துலவிடவள்ளற்
செந்நெலங்கழனிசூழ்திருமுல்லை
வாயிலாய்திருப்புகழ்விருப்பாற்
பன்னலந்தமிழாற்பாடுவேற்கருளாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப-ரை.) பொன்நலம் - அழகென்னும் நன்மைமிகுந்து, கழனி - வயல்களில், புதுவிரை மருவி - புதிய மணத்தைப் பொருந்தி, பொறிவரி வண்டு இசைபாட - புள்ளிகளும் கீற்றுக்களுமுள்ள வண்டுகள் இசைபாடாநிற்க, அம் நலம் - அழகுமிக்க, கமலத்தவிசின்மேல் - தாமரைமலராகிய ஆசனத்தின் மீது, உறங்கும் - தூங்குகிற, அலவன் - நண்டுகள், வந்து உலவிட - வந்து உலாவ, அள்ளல் - சேற்றையுடைய, செந்நெல் அம்கழனி — அழகிய செந்நெல் வயல்கள், சூழ் - சூழ்ந்த, திருமுல்லைவாயிலாய் — திருமுல்லை வாயிலையுடையவனே, திருப்புகழ் - உன் திருப்புகழை, விருப்பால் - என் விருப்பத்தால், பன்நல் அம்தமிழால் பாடுவேற்கு - பல்வகை யழகமைந்த தமிழ்ச் சொற்களால் பாடுவோனாகிய எனக்கு, அருளாய் - அருள்செய்வாயாக, பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(பொ-ரை.) அழகென்னும் நன்மைமிகுந்து வயல்களில் புதிய மணத்தைப் பொருந்தி, புள்ளிகளும் கீற்றுக்களுமுள்ள வண்டுகள் இசைபாடாநிற்க, அழகுமிக்க தாமரைமலராகிய ஆசனத்தின்மீது தூங்குகிற நண்டுகள் வந்து உலாவும் சேற்றையுடைய அழகிய செந்நெல் வயல்கள் சூழ்ந்த திருமுல்லை வாயிலையுடையவனே, உன் திருப்புகழ் என்விருப்பத்தால் பல்வகையழகமைந்த தமிழ்ச் சொற்களால் பாடுவோனாகிய எனக்கு அருள்செய்வாயாக, பாசுபதனே, பேரொளியே எ-று.

(கு-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன்படும் துன்பங் களைத்தாண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) விரை-வாசனை. தவிசு-ஆசநம். (4)

சந்தனவேருங்காரகிற்குறடுந்
தண்மயிற்பீலியுங்கரியின்
றந்தமுந்தரளக்குவைகளும் பவளக்
கொடிகளுஞ்சுமந்துகொண்டுந்தி
வந்திழிபாலிவடகரைமுல்லை
வாயிலாய்மாசிலாமணியே
பந்தனைகெடுத்தென்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே,

(ப-ரை.) சந்தன வேரும் - சந்தனமரத்தின் வேரும், கார் அகில் குறடும் - கரிய அகிற்கட்டையும், தண் மயில் பீலியும் - தண்ணிய மயிற்றோகையும், கரியின் தந்தமும் - யானைக்கொம்பும், தாளக்குவைகளும் - முத்துக் குவியல்களும், பவளக்கொடிகளும் - பவளக்கொடிகளும், சுமந்து கொண்டு - தாங்கிக் கொண்டு, உந்தி வந்து இழி - தள்ளிவந்திறங்குகிற, பாவி - பாவாற்றின், வடகரை - வடகரையிலுள்ள, முல்லைவாயிலாய் - திருமுல்லை வாயிலையுடையவனே, மாசிலாமணியே - குற்றமற்ற மாணிக்கமே, பந்தனைகெடுத்து - என் பந்தத்தையறுத்து, என் - எனது, படுதுயர்களையாய் - படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(பொ-ரை.) சந்தன மரத்தின்வேரும், கரிய அகிற்கட்டையும், தண்ணிய மயிற்றோகையும் யானைக்கொம்பும் முத்துக் குவியல்களும், பவளக்கொடிகளும் தாங்கிக்கொண்டு தள்ளிவந்திறங்குகிற பாவாற்றின் வடகரையிலுள்ள திருமுல்லைவாயிலையுடையவனே, குற்றமற்ற மாணிக்கமே, என் பந்தத்தையறுத்து எனது படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதனே பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படும் துன்பங் களைந்தாண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) பந்தனை - பிறவித்தளை. (5)

**மற்றுநான்பெற்றதார்பெறவல்லார்**
**வள்ளலேகள்ளமேபேசிக்**
**குற்றமேசெயினுங்குணமெனக்கொள்ளுங்**
**கொள்கையான்மிகைபலசெய்தேன்**
**செற்றுமீதோடுந்திரிபுரமெரித்த**
**திருமுல்லைவாயிலாயடியேன்**
**பற்றிலேனுற்றபடுதுயர்களையாய்**
**பாசுபதாபரஞ்சுடரே.**

(ப-ரை.) மற்றும் - மேலும், நான் பெற்றது - நான் பெற்றபேறு, ஆர் பெறவல்லார் - பெறவல்லார் யார், வள்ளலே - பரமோதாரனே, கள்ளமே பேசி - வஞ்சமேபேசி, குற்றமே செயினும் - குற்றத்தையே செய்தாலும், குணம் எனக்கொள்ளும் - குணமாகக் கொள்ளும், கொள்கையால் - தன்மையால், மிகைபலசெய்தேன் - பல குற்றங்கள் செய்தேன், மீது ஓடும் - மேலே யோடுகிற, திரிபுரம் செற்று எரித்த - முப்புரத்தை வென்று எரித்த, திருமுல்லைவாயிலாய்-திருமுல்லை வாயிலையுடையவனே, அடியேன்பற்று இலேன்- ஆதாரமில்லாதவனாகிய அடியேன், உற்ற - அடைந்த, படுதுயர்களையாய் - படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(போ-ரை.) மேலும் நான் பெற்றபேறு பெறவல்லார் யார்; பரமோதாரனே, வஞ்சமேபேசி குற்றத்தையே செய்தாலும் குணமாகக்கொள்ளும் தன்மையால் பல குற்றங்கள் செய்தேன், மேலே யோடுகிற முப்புரத்தை வென்று எரித்த திருமுல்லைவாயிலையுடையவனே, ஆதாரமில்லாதவனாகிய அடியேன் அடைந்த படுந்துன்பத்தை ஒழித்தருளாய் பாசுபதனே, பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படும் துன்பங் களைந்தாண்டருள வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) மிகை - குற்றம். மீது ஓடும் திரிபுரம் - ஆகாயத்திற் சஞ்சரிக்கும் முப்புரம். செற்று எரித்த - வென்று நீறுக்கின. (6)

மணிகெழுசெவ்வாய்வெண்ணகைக்கரிய
வார்குழன்மாமயிற்சாய
லணிகெழுகொங்கையங்கயற்கண்ணா
ரருநடமாடலறாத
திணிபொழிறழுவுதிருமுல்லைவாயிற்
செல்வனேயெல்லியும்பகலும்
பணியதுசெய்வேன்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப-ரை.) மணிகெழு செவ்வாய் - அழகுபொருந்திய செவ்வாயினையும், வெள்நகை - வெண்பல்லினையும், கரிய வார்குழல் - கரிய நீண்ட கூந்தலையும், மாமயில் சாயல் - அழகிய மயில் நிறத்தினையும், அணிகெழுகொங்கை- ஆபாரணமணிந்த தனங்களையும், அம் கயல் கண்ணார்-அழகிய சேல்மீன்போலுங் கண்களையுமுடைய மாதர், அருநடம் ஆடல் – அரிய நடனமாடுதல், அறாத - நீங்காத, திணிபொழில் தழுவு-நெருங்கிய சோலைகள் சூழ்ந்த, திருமுல்லைவாயிற் செல்வனே - திருமுல்லைவாயிலையுடைய செல்வனே, எல்லியும் பகலும் - இரவும் பகலும், பணியது செய்வேன் – தொண்டுசெய்வேன், படுதுயர்களையாய் - படுந்துன்பத்தை ஒழித்தருளாய். பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(போ-ரை.) அழகுபொருந்திய செவ்வாயினையும், வெண்பல்லினையும் கரிய நீண்ட கூந்தலையும் அழகிய மயில்நிறத்தினையும் ஆபரணமணிந்த தனங்களையும் அழகிய சேல்மீன்போலுங் கண்களையுமுடைய மாதர் அரிய நடனமாடுதல் நீங்காத, நெருங்கிய சோலைகள் சூழ்ந்த திருமுல்லைவாயிலையுடைய செல்வனே, இரவும் பகலும் தொண்டுசெய்வேன், படுந் துன்பத்தை ஒழித்தருளாய் பாசுபதனே பேரொளியே.

(க-ரை) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படும் துன் பங் களைந்தாண்டருள வேண்டுமென்பதாம்.

(வி-ரை.) பணி தொண்டு. பணியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (7)

நம்பனே யன் றுவெண் ணெய்நல் லூரி
னாயினேன் றன்னையாட்கொண்ட
சம்புவேயும்பரார்தொழுதேத்துந்
தடங்கடனஞ்சுண்டகண்ட
செம்பொன் மாளிகைசூழ்திருமுல்லைவாயிற்
றேடியான் றிரிதர்வேன்கண்ட
பைம்பொனேயடியேன்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப ரை.) நம்பனே - சுகுணபூர்த்தியுள்ளவனே, அன்று - அந்நாள், வெண்ணெய் நல்லூரில் - திருவெண்ணெய் நல்லூரில், நாயினேன் தன்னை ஆட்கொண்ட சம்புவே - நாயேனை யடிமைகொண்ட சம்புவே, உம்பரார் தொழுது எத்தும் - தேவர்கள் வணங்கித் துதிக்கிற, தடம்கடல் - பெரிய பாற் கடலில் உண்டான, நஞ்சு உண்ட கண்ட - பெரிய கடல்விடத்தையுண்ட கண் டனே, செம்பொன் மாளிகை சூழ் - செம்பொன் மாளிகைகள் சூழ்ந்த, திரு முல்லைவாயில் தேடி - திருமுல்லை வாயிலைத்தேடி, யான் திரிதர்வேன் - நான் திரிவேன், பைம்பொனே - பசுமையாகிய சுவர்ணமே, அடியேன் படுதுயர் களையாய் தொண்டனேன் படுந்துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசு பதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(பொ-ரை.) சுகுணபூர்த்தியுள்ளவனே, அந்நாள் திருவெண்ணெய் நல் லூரில் நாயேனை யடிமைகொண்ட சம்புவே, தேவர்கள் வணங்கித் துதிக்கிற பெரிய பாற்கடலில் உண்டான பெரிய கடல் விஷத்தையுண்ட கண்டனே, செம்பொன் மாளிகைகள் சூழ்ந்த திருமுல்லைவாயிலைத் தேடி நான் திரிவேன், பசுமையாகிய சுவர்ணமே, தொண்டனேன் படுந்துன்பத்தை யொழித்தருளாய், பாசுபதனே, பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன்படுந் துன் பங் களைந்தாண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) உம்பரார் என்பதில் ஆர் விகுதி உயர்வுதோன்ற வந்தது. "அணியு மமிழ்து மென்னுவியு மாயவன் றில்லைச் சிந்தாமணியும் யாரறியா மறையோன்," என்பது திருக்கோவையார். திரிதருவேன் என்பது திரிதர் வேன் என விகாரமாயிற்று. (8)

மட்டுலாமலர்கொண்டடியிணைவணங்கு
மாணிதன்மேன்மதியாதே
கட்டுவான்வந்தகாலனைமாளக்
காலினாலாருயிர்செகுத்த

சிட்டனேசெல்வத் திருமுல்லைவாயிற்
செல்வனேசெழுமறைபகர்ந்த
பட்டனேயடியேன்படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப-ரை.) மட்டு உலாம் - மணம் வீசுகிற, மலர்கொண்டு - மலர்களால், அடியிணை வணங்கும் மாணிமேல் – திருவடியை வழிபட்ட பிரமசாரிமேல், மதியாதே - மதிக்காமல், கட்டுவான் வந்த - கட்டவந்த, காலனை-யமனை, மாள - மடிய, காலினால் - திருவடியால், ஆர் உயிர் செகுத்த - அரிய வுயிரை வாங்கின, சிட்டனே - மேலோனே, செல்வத் திருமுல்லைவாயில் செல்வனே - செல்வத் திருமுல்லைவாயிலி லெழுந்தருளிய செல்வனே, செழுமறைபகர்ந்த - சிறந்த வேதங்களைச் சொன்ன, பட்டனே-தேவனே, அடியேன் படுதுயர் களையாய் - தொண்டனேன் படுந் துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(பொ-ரை.) மணம்வீசுகிற மலர்களால் திருவடியை வழிபட்ட பிரமசாரிமேல் மதிக்காமல் கட்டவந்த யமனை மடிய திருவடியால் அரிய வுயிரைவாங்கின மேலோனே, செல்வத் திருமுல்லைவாயிலிலெழுந்தருளிய செல்வனே, சிறந்த வேதங்களைச் சொன்ன தேவனே, தொண்டனேன் படுந் துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதனே பேரொளியே.

(கு-ரை) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படும் துன்பங் களைந்தாண்டருள வேண்டுமென்பதாம்.

(வி-ரை.) மட்டு - தேன் எனினுமாம். மாணி - பிரமசாரி, (மார்க்கண்டன்) கட்டுவான் என்பதில் வான் எதிர்கால வினையெச்ச விகுதி. (9)

சொல்லரும்புகழான்றொண்டைமான்களிற்றைச்
சூழ்கொடிமுல்லையாற்கட்டிட்
டெல்லையிலின்பமவன்பெறவெளிப்பட்
டருளியவிறைவனேயென்று
நல்லவர்பரவுந்திருமுல்லைவாயி
லுதனேநரைவிடையேறீ
பல்கலைப்பொருளேபடுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே.

(ப-ரை.) சொல் அரும்புகழான் தொண்டைமான் - சொல்லுதற்கரிய புகழையுடைய தொண்டைமானது, களிற்றை - யானையை, சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு - வளைந்த முல்லைக் கொடியால் கட்டி, எல்லையில் இன்பம் அவன் பெற - அளவில்லாத இன்பத்தை அவன் அடைய, வெளிப்பட்டு அரு

ளிய - வெளிப்பட்டு அவனுக் கருள்செய்த, இறைவனே யென்று-தலைவனே யென்று, நல்லவர் பரவும் - நல்லோர் துதிக்கிற, திருமுல்லை வாயில் நாதனே-திருமுல்லைவாயிலிறைவனே, நறை விடை ஏறீ - வெள்ளெருது ஏறுவோனே, பல்கலைப் பொருளே - கலைகளெல்லாவற்றின் பொருளாயிருப்பவனே, படுதுயர்களையாய் - படுந் துன்பத்தை ஒழித்தருளாய், பாசுபதா - பாசுபதனே, பரஞ்சுடரே - பேரொளியே எ-று.

(பொ-ரை.) சொல்லுதற்கரிய புகழையுடைய தொண்டைமானது யானையை வளைந்த முல்லைக் கொடியால் கட்டி அளவில்லாத இன்பத்தை அவன் அடைய, வெளிப்பட்டு அவனுக் கருள்செய்த தலைவனே யென்று நல்லோர் துதிக்கிற திருமுல்லைவாயிற்கிறைவனே, வெள்ளெருது ஏறுவோனே, கலைகளெல்லாவற்றின் பொருளாயிருப்பவனே, படுந் துன்பத்தை ஒழித்தருளாய் பாசுபதனே, பேரொளியே.

(க-ரை.) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானே, அடியேன் படும் துன்பங் களைந்தாண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) கட்டிட்டு - கட்டி, ஏறி—ஏறுவோன். (வினையாலணையும்பெயர்) இது விளியுருபேற்று ஏறீயென்றாயிற்று. (10)

விரைதருமலர்மேலயனொடுமாலும்
வெருவிடநீண்டவெம்மானைத்
திரைதருபுனல்சூழ்திருமுல்லைவாயிற்
செல்வனைநாவலாரூர
னுரைதருமாலையோரைஞ்சினோடைஞ்சு
முள்குளிர்ந்தேத்தவல்லார்க
ணரைதிரைமூப்புநடலையுமின்றி
நண்ணுவர்விண்ணவர்க்கரைசே.

(ப-ரை.) விரை தரு மலர்மேல் அயனொடு - மணம்வீசுகிற தாமரை மலர்மேலிருக்கிற பிரமனும், மாலும் - விஷ்ணுவும், வெருவிட நீண்ட எம்மானை - அஞ்சும்படி நிமிர்ந்து நின்ற எம்பெருமானை, திரைதருபுனல்சூழ் - அலைகளையுடைய நீர்சூழ்ந்த, திருமுல்லைவாயில் செல்வனை - திருமுல்லைவாயிலெழுந்தருளிய செல்வனை, நாவலாரூரன் - சுந்தரன், உரைதரும்—சொன்ன, மாலை- தமிழ் மாலை, ஓர் அஞ்சினோடு அஞ்சும்-ஒரு பத்தும், உள்குளிர்ந்து-மனங்குளிர்ந்து, ஏத்தவல்லார்கள் — துதிக்க வல்லவர்கள், நரை திரை மூப்பு நடலையும் இன்றி- நரை திரை மூப்பு பொய்யென்பன வின்றி, விண்ணவர்க்கு அரைசு நண்ணுவர் - இந்திரபதவியை யடைவர் எ-று.

(பொ-ரை.) மணம் பொருந்திய தாமரைமலரில் வீற்றிருப்போனாகிய பிரமனோடு விஷ்ணுவும் அஞ்சும்படி நிமிர்ந்துநின்ற எம்பெருமானை, அலைகளையுடைய நீர் சூழ்ந்த திருமுல்லைவாயிலெழுந்தருளிய செல்வனை, சுந்தரன் சொன்ன தமிழ்மாலை ஒருபத்தும், மனங்குளிர்ந்து துதிக்க வல்லவர்கள் நரை திரை மூப்பு பொய் யென்பன வின்றி இந்திரபதவியை யடைவர்.

(க-ரை) திருவடமுல்லைவாயிற் சிவபெருமானை, வன்றொண்டன் புகழ்ந்துரைத்த இந்தப் பத்துப் பாடலும் கற்று வல்லார் இந்திரபதவியை யடைவர் என்பதாம்.

(வி-ரை) விரை - வாசனை. அயன் என மேல் வருதலால் மலர் தாமரை மலரை யுணர்த்திற்று. அயன்-பிரமன். நடலை-சலநம். (பொய்-அழிவு.) (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—பாசிலாமணியீசர். தேவியார்-கொடியிடையம்மை.

---

## திருவாவடுதுறை

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கங்கைவார்சடையாய்கணநாதா
காலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றானே
பூதநாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனே
தீர்த்தனே திருவாவடுதுறையு
ளங்கணாவெனையஞ்சலென் றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

(ப-ரை) கங்கை வார் சடையாய் - கங்கையைத் தரித்த நீண்ட சடையையுடையவனே, கணநாதா - கணங்களுக்குத் தலைவனே, காலகாலனே - யமனுக்கு யமனே, காமனுக்கு அனலே – மன்மதனுக்கு நெருப்பே, பொங்கு மாகடல் - பொங்குகிற பெருங்கடலி லெழுந்த, விடம் - நஞ்சை, மிடற்றானே - கண்டத்திலுடையவனே, பூதநாதனே-பூதங்களுக்குத் தலைவனே, புண்ணியா-புண்ணியனே, புனிதா - பரிசுத்தனே, செங்கண்மால் விடையாய் - செவந்த கண்களையுடைய பெரிய இடபத்தையுடையவனே, தெளிதேனே - தெளிந்த தேனே, தீர்த்தனே - தேவனே, திருவாவடுதுறையுள் - திருவாவடு துறையி

லெழுந்தருளிய, அங்கணா - கிருபைக்கண்ணனே, என்னை அஞ்சல் என்று அருளாய் - என்னை அஞ்சாதேயென்று அருள் செய்யக்கடவை, எனக்கு உறவு யார் - எனக் குறவினர்வேறு யாவர், அமரர்கள் ஏறே - தேவரிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) கங்கையைத் தரித்த நீண்ட சடையையுடையவனே, கணங்களுக்குத் தலைவனே, யமனுக்கு யமனே, மன்மதனுக்கு நெருப்பே, பொங்குகிற பெருங்கடலி லெழுந்த நஞ்சை கண்டத்திலுடையவனே, பூதங்கட்குத் தலைவனே, புண்ணியனே, பரிசுத்தனே, செவந்த கண்களையுடைய பெரிய இடபத்தையுடையவனே, தெளிந்த தேனே, தேவனே, திருவாவடுதுறையி லெழுந்தருளிய கிருபைக்கண்ணனே, என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறுயாவர், தேவரிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சல் என்று அருளாய் என்பதாம்.

(வி-ரை.) மிடறு - கண்டம். அமரர்கள் ஏறு - தேவரிற் சிறந்தவன், ( )

மண்ணின்மேன் மயங்கிக்கிடப்பேனை
வலியவந்தென்னையாண்டுகொண்டானே
கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்
கருத்தழிந்துனக்கேபொறையானேன்
தெண்ணிலாவெறிக்குஞ்சடையானே
தேவனே திருவாவடுதுறையு
ளண்ணலேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

(ப-ரை.) மண்ணின்மேல் - மண்ணுலகில், மயங்கிக் கிடப்பேனை - மயங்கிக் கிடக்கிற என்னை, வலியவந்து என்னை ஆண்டு கொண்டானே - வலிய வந்து என்னை யாண்டு கொண்டவனே, கண் இல்லேன் - கண்ணிலியானேன், உடம்பில் - சரீரத்தில், அடும் - வருத்துகிற, நோயால் - பிணியால், கருத்து அழிந்து - மனம் நொந்து, உனக்கே பொறை ஆனேன் - உனக்கே பாரமானேன், தெள் நிலா எறிக்கும் - தெளிவாகிய நிலா வீசுகிற, சடையானே - சடையையுடையவனே, தேவனே-தேவனே, திருவாவடுதுறையுள் அண்ணலே - திருவாவடுதுறையிலுள்ள பெரியோனே, என்னை அஞ்சல் என்று அருளாய் - என்னை அஞ்சாதே யென்று அருள் செய்யக்கடவை, எனக்கு உறவு யார் - எனக்குறவினர் வேறு யாவர், அமரர்கள் ஏறே - தேவரிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) மண்ணுலகில் மயங்கிக்கிடக்கிற என்னை, வலியவந்து என்னை ஆண்டு கொண்டவனே, கண்ணிலியானேன், சரீரத்தில் வருத்துகிற பிணி

யால் மனம் நொந்து உனக்கே பாரமானேன், தெளிவாகிய நிலா வீசுகிற சடையை யுடையவனே, தேவனே, திருவாவடுதுறையிலுள்ள பெரியோனே, என்னை அஞ்சாதே யென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறு யாவர் தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென் றருளா யென்பதாம்.

(வி-ரை.) அடுதல் - வருத்துதல். (2)

ஒப்பிலாமுலையாளொருபாகா
உத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கே
மூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவாலிழற்கீழிருந்தருளுஞ்
செல்வனே திருவாவடுதுறையு
ளப்பனேயென்னையஞ்சலென் றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

(ப-ரை.) ஒப்பு இல்லாமுலையாள் - ஒப்பற்ற தனங்களை யுடையவளாகிய உமாதேவியை, ஒருபாகா - ஒரு பாகத்திலுடையவனே, உத்தமா - உத்தமனே, மத்தம் ஆர் தரு - ஊமத்த மலரணிந்த, சடையாய் - சடையையுடையவனே, முப்புரங்களை தீவளைத்து - முப்புரங்களை நெருப்பினால் வளைத்து, அங்கே மூவருக்கு அருள்செய்ய வல்லானே - அவ்விடத்தே மூவருக்கு அருள் செய்ய வல்லவனே, செப்ப - அறமுரைக்க, ஆலநிழற்கீழ் இருந்தருளும் செல்வனே - கல்லாலின் கீழிருந்த செல்வனே, திருவாவடுதுறையுள் அப்பனே - திருவாவடுதுறையிலுள்ள அப்பனே, என்னை அஞ்சல் என்று அருளாய் - என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்கு உறவுயார் - எனக்குறவினர் வேறு யாவர், அமரர்கள் ஏறே - தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) ஒப்பற்ற தனங்களையுடையவளாகிய உமாதேவியை ஒரு பாகத்திலுடையவனே, உத்தமனே, ஊமத்த மலரணிந்த சடையையுடையவனே, முப்புரங்களை நெருப்பினால் வளைத்து அவ்விடத்தே மூவருக்கு அருள் செய்ய வல்லவனே, அறமுரைக்க கல்லாலின் கீழிருந்த செல்வனே, திருவாவடுதுறையிலுள்ள அப்பனே, என்னை அஞ்சாதேயென்று அருள் செய்யக் கடவை, எனக்குறவினர் வேறு யாவர், தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென் றருளா யென்பதாம்.

(வி-ரை.) செப்புதல் - சொல்லுதல். அறமுரைத்தது - சநகாதியர்க்கு.

கோதியினல்வருகாளிதன்கோபங்
குறையவாடியகூத்துடையானே
மதியிலேனுடம்பில்லடுநோயான்
மயங்கினேன்மணியேமணவாளா
விதியினலிமையோர்தொழுதேத்தும்
விகிர்தனே திருவாவடுதுறையு
ளதிபனேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே,

(ப-ரை.) கொதியினல் வரு - கொதிப்போடு வந்த, காளி கோபங் குறைய - காளியின் கோபங்கெட, ஆடிய - ஆடின, கூத்து உடையானே - கூத்து உடையவனே, மதியில்லேன் - அறிவிலேன், உடம்பில் - சரீரத்தில், அடும்நோயால் - வருத்துகிற நோயினல், மயங்கினேன் - மயங்கினேன், மணியே - ரத்நமே, மணவாளா - மணவாளனே, விதியினல் - முறையால், இமையோர் தொழுது எத்தும் - தேவர்கள் வணங்கித்துதிக்கிற, விகிர்தனே - மெய்யனே, திருவாவடு துறையுள் அதிபனே-திருவாவடு துறையிலெழுந்தருளிய இறையவனே, என்னை அஞ்சல் என்று அருளாய் - என்னை அஞ்சாதே யென்று அருள் செய்யக்கடவை, எனக்கு உறவுயார் - எனக்குறவினர் வேறு யாவர், அமரர்கள் ஏறே - தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) கொதிப்போடு வந்த காளியின் கோபங்கெட ஆடின கூத்து உடையவனே, அறிவிலேன் சரீரத்தில் வருத்துகிற நோயினல் மயங்கினேன், ரத்நமே, மணவாளனே, முறையால் தேவர்கள்வணங்கித்துதிக்கிற மெய்யனே, திருவாவடுதுறையிலெழுந்தருளிய இறையவனே, என்னை அஞ்சாதே யென்று அருள்செய்யக் கடவை, எனக் குறவினர் வேறுயாவர், தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென்றருளா யென்பதாம்.

(வி-ரை.) கொதிப்பு - கோவம். மதி - அறிவு. விகிர்தன்—ஆன்மாக்கள் மீ துன்புள்ளவன். அதிபன் - இறைவன். (4)

வந்தவாளரக்கன் வலிதொலைத்து
வாழுநாள்கொடுத்தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிபூசவல்லானே
வேடனுய்விசயற்கருள்புரிந்த
விந்துசேகரனேயிமையோர்சீ
ரீசனே திருவாவடுதுறையு
ளந்தணுவென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

(ப-ரை.) வந்தவாள் அரக்கன் - வந்த வாளாயுதத்தையுடைய அரக்கனது, வலி தொலைத்து - வலியை யழித்து, வாழும் நாள் கொடுத்தாய் - வாழ்நாளையும் கொடுத்தவனே, வழிமுதலே-எமது சந்ததிக்கு முதல்வனே, வெந்த வெண்பொடி பூசவல்லானே - திருநீறுபூச வல்லவனே, வேடனாய விசயற்கு அருள் புரிந்த-வேடனாய் அருச்சுநனுக்கருள்செய்த, இந்து சேகரனே-சந்திரகண்டத்தையணிந்த திருமுடியை யுடையவனே, இமையோர் சீர்-தேவர்களிற் சிறப்புவாய்ந்த, ஈசனே-பெருஞ்செல்வனே, திருவாவடுதுறையுள் அந்தணா-திருவாவடுதுறையிலுள்ள வேதியனே, என்னை அஞ்சல் என்று அருளாய்-என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்கு உறவுயார் - எனக்குறவினர் வேறுயாவர், அமரர்கள் ஏறே - தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) வந்த வாளாயுதத்தையுடைய அரக்கனது வலியைபழித்து வாழ்நாளையும் கொடுத்தவனே, எமது சந்ததிக்கு முதல்வனே, திருநீறுபூச வல்லவனே, வேடனாய் அருச்சுநனுக் கருள்செய்தவனே, சந்திரகண்டத்தையணிந்த திருமுடியையுடையவனே, தேவர்களிற் சிறப்புவாய்ந்த பெருஞ்செல்வனே, திருவாவடுதுறையிலுள்ள வேதியனே, என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறுயாவர், தேவர்களிற் சிறந்தோனே.

(கு-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென்றருளாயென்பதாம்.

(வி-ரை.) அரக்கன் என்றது இராவணனை. வாழுநாள் - ஆயுள். இந்து சேகரன் - சந்திரகண்டத்தை யணிந்த திருமுடியையுடையவன். அந்தணன் - வேதியன். (5)

குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக்கா துடையானே
யுறவிலே னுனையன் றிமற் றடியே
னொருபிழை பொறுத்தா லிழிவுண்டோ
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொனே திருவாவடு துறையு
ளறவனே யெனையஞ் சலென் றருளா
யாரெனக் குறவமரர்க ளேறே.

(ப-ரை.) குறைவு இல்லா நிறைவே - எந்நாளும் குறையாத பரிபூர்ணமே, குணக்குன்றே - குணமலையே, கூத்தனே - நடராஜனே, குழைக்காது உடையானே - குண்டலமணிந்ததிருச்செவியையுடையவனே, உன்னையன்றி - உன்னையல்லாமல், மற்று அடியேன் உறவு இல்லேன்—, ஒரு பிழை பொறுத்தால் இழிவு உண்டோ—, சிறைவண்டு ஆர் - சிறகுகளையுடைய வண்டுகள்

நிறைந்த, பொழில்சூழ்-சோலைகள்சூழ்ந்த, திருவாரூர் செம்பொன்னே,—திருவாவடுதுறையுள் அறவனே - திருவாவடுதுறையிலுள்ள புண்ணியனே, என்னை அஞ்சல் என்று அருளாய்-என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக் கடவை, எனக்கு உறவுயார் - எனக்குறவினர் வேறுயாவர், அமரர்கள் ஏறே தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை) எந்நாளுங் குறையாத பரிபூரணமே, குணமலையே, நடராஜனே, குண்டலமணிந்த திருச்செவியையுடையவனே, மற்று அடியேன் உறவுயில்லேன், மற்றொருபிழை பொருத்தால் இழிவுண்டோ, சிறகுகளையுடைய வண்டுகள் நிறைந்த சோலைகள்சூழ்ந்த திருவாரூர்ச் செம்பொன்னே, திருவாவடுதுறையிலுள்ள புண்ணியனே, என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறுயாவர், தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென்றருளாயென்பதாம்.

(வி-ரை.) ஆர்தல் - நிறைதல். (6)

வெய்யமாகரியீருரியானே
வேங்கையாடையினாய்விதிமுதலே
மெய்யனேயன்றரியடலாழியன் றரிதான்
வேண்டநீகொடுத்தருள்புரிவிகிர்தா
செய்யமேனியனே திகழொளியே
செங்கணாதிருவாவடுதுறையு
ளையனேயென்னையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே

(ப-ரை.) வெய்யமாகரி - கொடிய பெரிய யானையின், ஈர் உரியானே — குளிர்ந்த தோலையுடையவனே, வேங்கை - புலித்தோலாகிய, ஆடையினாய் - ஆடையையுடையவனே, விதிமுதலே - மெய்யனே — உண்மையானவனே, அன்று — அந்நாளில், அரி - திருமால், அடல் - வெற்றியையுடைய, ஆழி வேண்ட - சக்ராயுதத்தை விரும்ப, நீகொடுத்து அருள்புரி - நீ கொடுத்தருள் செய்த, விகிர்தா - விகிர்தனே, செய்யமேனியனே - செவந்த திருமேனியையுடையவனே, திகழ் ஒளியே—, செங்கணா—நெருப்புக்கண்ணனே, திருவாவடுதுறையுள் ஐயனே - திருவாவடுதுறையிலுள்ள ஐயனே, என்னை அஞ்சல் என்று அருளாய்-என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்கு உறவுயார்-எனக்குறவினர் வேறுயாவர், அமரர்கள் ஏறே - தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) கொடிய பெரிய யானையின் குளிர்ந்த தோலையுடையவனே, புலித்தோலாகிய ஆடையையுடையவனே, விதிமுதலே, உண்மையானவனே, அந்நாளில் திருமால் வெற்றியையுடைய சக்காயுதத்தை விரும்ப, நீ கொடுத்

தருள்செய்த விகிர்தனே, செவந்த திருமேனியையுடையவனே, திகழொளியே, நெருப்புக்கண்ணனே, திருவாவடுதுறையிலுள்ள ஐயனே, என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறுயாவர், தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென்றருளாயென்பதாம்.

(வி-ரை.) வெய்யமாகரி - கொடிதாகிய பெரிய யானை. வேங்கை - புலி. இவை இங்கு இவற்றின் தோலுக்காயின. (7)

கோதிலாவமுதேயருள்பெருகு
கோலமேயிமையோர்தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானே
பசுபதீபரமாபரமேட்டீ
தீதிலாமலையேதிருவருள்சேர்
சேவகாதிருவாவடுதுறையு
ளாதியேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

(ப-ரை.) கோது இல்லா அமுதே - குற்றமற்ற அமிர்தமே, அருள் பெருகு கோலமே - அருள்மிக்க திருக்கோலமுடையவனே, இமையோர் தொழு கோவே - தேவர் வணங்குகின்ற அரசனே, பாதிமாது ஒரு கூறு உடையானே - உமாதேவியை ஒரு பாகத்திலுடையவனே, பசுபதீ-பசுபதியே, பரமா-பரமனே, பரமேட்டீ - பரமேட்டியே, தீது இல்லாமலையே - தீங்கற்ற பர்வதமே, திருவருள்சேர் - திருவருள் பொருந்திய, சேவகா - வீரனே, திருவாவடுதுறையுள் ஆதியே - திருவாவடுதுறையிலெழுந்தருளிய முதல்வனே, என்னை அஞ்சல் என்று அருளாய் - என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்கு உறவுயார் - எனக்குறவினர் வேறுயாவர், அமரர்கள் ஏறே - தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை) குற்றமற்ற அமிர்தமே, அருள்மிக்க திருக்கோலமுடையவனே, தேவர் வணங்குகின்ற அரசனே, உமாதேவியை ஒரு பாகத்திலுடையவனே, பசுபதியே, பரமனே, பரமேட்டியே, தீங்கற்ற பர்வதமே, திருவருள் பொருந்திய வீரனே, திருவாவடுதுறையிலெழுந்தருளிய முதல்வனே, என்னை அஞ்சாதே யென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறுயாவர் தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை ) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென்றருளாயென்பதாம்.

(வி-ரை) பசுபதி - ஆன்மாக்களுக்கிறைவன். பரன் - மேலானவன். பரமேட்டி - மேன்மையையுடைய யாதிபன். (8)

வானநாடனேவழித்துணைமருந்தே
மாசிலாமணியேமறைப்பொருளே
யேனமாவெயிறாமையுமென்பு
மீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாறயிராட்டுகந்தானே
தேவனேதிருவாவடுதுறையு
ளானையேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர் ளேறே

(ப-ரை) வானநாடனே - வானநாட்டை யுடையவனே, வழித்துணை மருந்தே - வழித்துணையாகிய மருந்தே, மாசிலாமணியே - களங்கமற்ற மாணிக்கமே,, மறைப்பொருளே - வேதார்த்தமே, ஏனம் - பன்றியின், மா எயிறு - பெரியகொம்பும், ஆமையும் என்பும் - ஆமையோடும் எலும்பும், ஈடுதாங்கியமார்பு உடையானே - அணிந்த திருமார்புடையவனே, தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே - தேன் முதலியவற்றின் அபிஷேகத்தை விரும்பினவனே, தேவனே - தேவனே, திருவாவடுதுறையுள் ஆனையே - திருவாவடுதுறையிலுள்ள யானையே, என்னை அஞ்சல் என்று அருளாய் - என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்கு உறவுயார் - எனக்குறவினர் வேறுயாவர், அமரர்கள் ஏறே - தேவர்களிற் சிறந்தோனே எ-று.

(பொ-ரை.) வானநாட்டை யுடையவனே, வழித்துணையாகிய மருந்தே, களங்கமற்ற மாணிக்கமே, வேதார்த்தமே, பன்றியின் பெரியகொம்பும் ஆமையோடும் எலும்பும் அணிந்த திருமார்பினையுடையவனே, தேன்முதலியவற்றின் அபிஷேகத்தை விரும்பினவனே, தேவனே, திருவாவடுதுறையிலுள்ள யானையே, என்னை அஞ்சாதேயென்று அருள்செய்யக்கடவை, எனக்குறவினர் வேறு யாவர், தேவர்களிற் சிறந்தோனே.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானே, என்னை அஞ்சலென்றருளாயென்பதாம்.

(வி-ரை.) வானநாடன் - பரமாகாயமாகிய நாட்டினையுடையவன். (9)

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்
வேரிமத்தமும்விராவிமுடித்த
விண்டைமாமலர்ச்செஞ்சடையானை
யீசனைத்திருவாவடுதுறையு

ளண்டவாணனைச்சிங்கடியப்ப
னணுக்கவன்றொண்டனூர்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர்பத்தும்வல்லார்கள்
சாதலும்பிறப்புமறுப்பாரே.

(ப-ரை.) வெள்தலை பிறைகொன்றையும் அரவும்-வெண்டலையையும் சந்திரனையும் சொன்றை மலரையும் பாம்பையும், வேரிமத்தமும்-மணமுள்ள ஊமத்தமலரையும், விரவி-கலந்து முண்டித்த - பறித்த, இண்டைமாமலர் செஞ்சடையானை- அழகிய இண்டைமலரை யணிந்த செஞ்சடையை யுடையவனை, ஈசனை — சர்வேசுவரனை, திருவாவடுதுறையுள் அண்டவாணனை — திருவாவடுதுறையி லெழுந்தருளிய ,சிவபெருமானை, சிங்கடியப்பன் அணுக்கவன்றொண்டன் - சுந்தரன், ஆர்வத்தால் - விருப்பத்தால், உரைத்த - சொன்ன, தண் தமிழ்மலர் பத்தும் வல்லார்கள் - குளிர்ந்த தமிழ்மலர் பத்தினையும் கற்று வல்லவர்கள், சாதலும் பிறப்பும் அறுப்பாரே - இறப்பினையும் பிறப்பினையும் அறுப்பவராவர் எ-று.

(பொ-ரை.) வெண்டலையையும் சந்திரனையும் கொன்றைமலரையும் பாம்பையும் மணமுள்ள ஊமத்தமலரையும் கலந்துபறித்த அழகிய இண்டைமலரை யணிந்த செஞ்சடையை யுடையவனை, சர்வேசுவரனை, திருவாவடுதுறையி லெழுந்தருளிய சிவபெருமானை, சுந்தரன் விருப்பத்தால் சொன்ன குளிர்ந்த தமிழ்மலர் பத்தினையும் கற்றுவல்லவர்கள் இறப்பினையும் பிறப்பினையும் அறுப்பவராவர்.

(க-ரை.) திருவாவடுதுறைச் சிவபெருமானை, வன்றொண்டன் புகழ்ந்துரைத்த இந்தப் பத்துப்பாடலும் கற்றுவல்லவர் இறப்புப்பிறப்புக்களை யடையார் என்பதாம்.

(வி-ரை.) வேரி - வாசனை, தேன் எனினுமாம். விரவல் - கலத்தல். அண்டவாணன் - சிவபுரத்தில் வாழ்பவன். (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமறைக்காடு

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணுமறைக்காடே.

(ப-ரை.) யாழை - யாழோசையை, பழித்தால் அன்ன - பழித்தாற்போன்ற, மொழி - சொல்லையுடைய, மங்கை - உமாதேவியை, ஒருபங்கன் - ஒரு பாகத்திலுடையவன், பேழை - பெரிதாகிய, சடைமுடிமேல் பிறைவைத்தான் - சடாமகுடத்தின்மீது பிறையைத் தரித்தவன், இடம் - (அவனது) இடம், பேணின் - (அறிய) விரும்பினல், கூழை குரங்கு - குறகின குரங்கு, தாழைப்பொழிலூடேசென்று - தென்னஞ்சோலையிற்போய், பூழைத்தலை நுழைந்து - துவாரத்தில் நுழைந்து, வாழைக்கனி உண்ணும்-வாழைப்பழந் தின்னுகிற, மறைக்காடே - திருமறைக் காடேயாம் எ-று.

(பொ-ரை) யாழோசையைப் பழித்தாற்போன்ற சொல்லையுடைய உமாதேவியை, ஒரு பாகத்திலுடையவன், பெரிதாகிய சடைமுடிமேல் பிறையைத் தரித்தவன், (அவனது) இடம் (அறிய) விரும்பினல் குறகின குரங்கு தென்னஞ்சோலையிற்போய் துவாரத்தில் நுழைந்து வாழைப்பழத்தைத் தின்னுகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை.) உமாதேவி பங்களுகிய சிவபெருமானுக்கிடமாவது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை) பேழைச்சடைமுடி - பெரிய சடாமகுடம், தாழை - தெங்கு, பூழை - துவாரம். (1)

சிகரத்திடையிளவெண்பிறைவைத்தானிடந்தேரியின்
முகரத்திடைமுத்தின்னொளிபவளத்திரளேறத்
தகரத்திடைதாழைத்திரணுழற்றிரணீழன்
மகரத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே.

(ப-ரை.) சிகரத்திடை - திருமுடியில், இளவெண்பிறை வைத்தான் - வெண்மையாகிய இளம்பிறையைத் தரித்தவனது, இடம் - இடமாவது, தெரியின் - அறியவேண்டினல், முகரத்திடை - சங்கினிடத்துண்டாகிற, முத்தின் ஒளி - முத்தினொளியானது, பவளத்திரள் ஏற - பவளத்தொகுதி யேறுதலால், தகரத்திடை - தகரமரங்களினிடையேயுள்ள, தாழைத்திரள் - தாழைச்செடிக் கூட்டம், நாழல் திரள்-குங்குமமரக்கூட்டம், (இவைகளின்) நீழல் - நிழலில், மகரத்தொடு சுறவம்கொணர்ந்து எற்றும் - மகரமீனோடு சுறாமீனையும்கொண்டு வந்து (கடலலைகள்) வீசுகிற, மறைக்காடே-திருமறைக்காடேயாம் எ-று.

(பொ-ரை.) திருமுடியில் வெண்மையாகிய இளம்பிறையைத் தரித்தவனது இடமாவது அறியவேண்டினல், சங்கினிடத்துண்டாகிற முத்தினொளியானது பவளத்தொகுதி யேறுதலால் தகரங்களினிடையேயுள்ள தாழைச்செடிக்கூட்டம் குங்குமமரக்கூட்டம் (இவைகளின்) நிழலில் மகரமீனோடு சுறாமீனையும் கொண்டுவந்து (கடலலைகள்) வீசுகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை) திருமுடியில் இளம்பிறையையணிந்த சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை.) முகரம் - சங்கு. தகரம் - ஓர்வகை மரம். மகரம் சுறவம் என்பன மீன் விசேடங்கள். (2)

அங்கங்களுமறைநான்குடன் விரித்தானிடமறிந்தோம்
தெங்கங்களுநெடும்பெண்ணையும் பழம்வீழ்மணற்படப்பைச்
சங்கங்களுமிலங்கிப்பியும் வலம்புரிகளுமிடறி
வங்கங்களுமுயர்கூம்பொடு வணங்கும் மறைக்காடே.

(ப-ரை) மறை நான்குடன் - நால்வேதங்களோடு, அங்கங்களும், ஆறங்கங்களையும், விரித்தான் இடம் அறிந்தோம் - விரித்தவனாகிய இறைவனிடத்தை அறிந்துகொண்டோம், தெங்கங்களும் - தென்னமரங்களும், நெடும்பெண்ணையும் - நீண்ட பனைமரங்களும், பழம்வீழ் - கனிகளை உதிர்க்கிற, மணற்படப்பை-மணற்பரப்புக்களில், சங்கங்களும்-சங்குகளும், இலங்கு இப்பியும் - பிரகாசிக்கிறமுத்துச் சிப்பியும், வலம்புரிகளும்-வலம்புரிச் சங்குகளும், இடறி - இடறி, வங்கங்களும் - மரக்கலங்களும், உயர்கூம்பொடு - உயர்ந்த கொடிமரத்தோடு, வணங்கும் - வணங்குகிற, மறைக்காடே-திருமறைக்காடேயாம் எ-று.

(பொ-ரை.) நால் வேதங்களோடு ஆறங்கங்களையும் விரித்தவனாகிய இறைவனிடத்தை யறிந்துகொண்டோம், உயர்ந்த பனைமரம் கனிகளை உதிர்க்கிற மணற் பரப்புக்களில் சங்குகளும் பிரகாசிக்கிற முத்துச் சிப்பியும் வலம்புரிச் சங்குகளும் இடறி மரக்கலங்களும் உயர்ந்த கொடிமரத்தோடு, வணங்குகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை.) வேதவேதாங்கங்களை விரித்தவனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை) பெண்ணை - பனைமரம். கூம்பு - மரக்கலத்தினொருறுப்பு. (3)

நரைவிரவியமயிர்தன்னொடுபஞ்சவடிமார்ப
னுரைவிரவியவுத்தமனிடமுணரலுறுமனமே
குரைவிரவியகுலைசேகரக்கொண்டற்றலைவிண்ட
வரைபுரைவனதிரைபொருதிழிந்தெற்றும்மறைக்காடே

(ப-ரை) நரை விரவிய மயிர்தன்னொடு-வெண்மையாகிய மயிரினாற்செய்யப்பட்ட, பஞ்சவடிமார்பன் - பூணூலணிந்த மார்பினையுடையவன், உரைவிரவிய உத்தமன் - புகழ்பொருந்திய உத்தமனது, இடம் - இடமாவது, உணரல் உறும்மனமே - அறியவிரும்பு மனமே, குரை விரவிய - ஒலியைக்கொண்ட, குலை - குலைகள், சேகரம்-உயர்விடத்திலுள்ள, கொண்டல் தலைவிண்ட-மேகங்

களில் வெடித்த, வரைபுரைவன - மலையை நிகர்ப்பனவாகிய, திரைபொருது இழிந்து எற்றும் - அலைகள் மோதியிறங்கி எறிகிற, மறைக்காடே-திருமறைக்காடேயாம் எ-று.

(போ ரை) வெண்மையாகிய மயிரினாற் செய்யப்பட்ட பூணூலணிந்த மார்பினையுடையவன், புகழ்பொருந்திய உத்தமன் அவனது இடமாவது அறிய விரும்பு மனமே,ஒலியைக்கொண்ட குலைகள் உயர்விடத்திலுள்ள மேகங்களில் வெடித்த மலையை நிகர்ப்பனவாகிய அலைகள் மோதியிறங்கி எறிகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை) பஞ்சவடி மார்பனாகிய சிவபெருமானுக் கிடமாவது திருமறைக்காடேயாமென்பதாம். (4)

சங்கைப்படநினையாதெழுநெஞ்சேதொழுதேத்தக்
கங்கைச்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
யங்கைக்கடலருமாமணியுந்திக்கரைக்கேற்ற
வங்கத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே.

(ப-ரை.) சங்கைப்பட நினையாது - சந்தேகமாக நினையாமல், நெஞ்சே - மனமே, தொழுது ஏத்த எழு - வணங்கித்துதிக்க எழுவாயாக, கங்கைச்சடைமுடி உடையவர்க்கு - கங்கையையணிந்த சடைமுடியுடையவர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, பரவை அங்கை - திரையாகிய கையினையுடைய, கடல் - கடலானது, அருமாமணி உந்தி - அரிய பெரிய மணிகளைக் கொழித்து, கரைக்கு எற்ற - கரையிலேற்ற, வங்கத்தொடு சுறவம் கொணர்ந்து எற்றும் - மரக்கலங்களோடு சுறுமீன்களையும் கொண்டுவந்து வீசுகிற, மறைக்காடே - திருமறைக்காடேயாம் எ-று.

(போ-ரை.) சந்தேகமாக நினையாமல் மனமே, வணங்கித் துதிக்க எழுவாயாக கங்கையையணிந்த சடைமுடியுடையவர்க்கு இடமாயிருப்பது திரையாகிய கையினையுடைய கடலானது அரிய பெரிய மணிகளைக் கொழித்து கரையிலேற்ற மரக்கலங்களோடு சுறுமீன்களையும் கொண்டுவந்து வீசுகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை.) கங்கைச் சடையானாகிய சிவபெருமானுக் கிடமாவது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை.) உந்தி – தள்ளி. (5)

அடல்விடையினன்மழுவாளினனலராலணிகொன்றைப்
படருஞ்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவைக்
கடலிடையிடைகழியருகினிற்கடிநாறுதண்கைதை
மடலிடையிடைவெண்குருகெழுமணிநீர்மறைக்காடே.

(ப-ரை.) அடல் - வலியையுடைய, விடையினன் - இடபத்தையுடைய வன், மழுவாளினன் - மழுவாகிய வாளையுடையவன், அலரால் அணி - மலர்களால் தொடுக்கப்பட்ட, கொன்றை - கொன்றைமாலையா லலங்கரிக்கப்பெற்ற, படரும் - பரந்த, சடைமுடி உடையவர்க்கு - சடைமுடியையுடையவர்க்கு, இடமாவது - இடமாயிருப்பது, பரவை - பரவுதலையுடைய, கடல் இடையிடை - கடலினிடையிடையே, கழி அருகினில் - கழியருகே, கடி நாறு தண் கைதை - மணம்வீசுகிற குளிர்ந்த தாழையின், மடல் இடையிடை - மடல்களினிடையிடையே, வெண்குருகு எழும் - வெண்ணாரைகள் பறக்கிற, மணிநீர் - அழகிய நீர் சூழ்ந்த, மறைக்காடே - திருமறைக்காடேயாம் எ-று.

(பொ-ரை) வலியையுடைய இடபத்தையுடையவன், மழுவாகிய வாளையுடையவன், மலர்களால் தொடுக்கப்பட்ட கொன்றைமாலையா லலங்கரிக்கப்பெற்ற பரந்த சடைமுடியையுடையவர்க்கு இடமாயிருப்பது, பரவுதலையுடைய கடலினிடையிடையே கழி அருகினில் மணம்வீசுகிற குளிர்ந்த தாழையின் மடல்களினிடையிடையே வெண்ணாரைகள் பறக்கிற அழகிய நீர் சூழ்ந்த திருமறைக்காடேயாம்.

(கு-ரை.) இடபவாகன முதலியவற்றை யுடையவனாகிய சிவபெருமானுக்கிடமாவது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை.) வெண்குருகு - வெண்ணிறத்தையுடைய கொய்யடி நாரை.

**முளைவளரிளமதியுடையவர்முன்செய்தவல்வினைகள்**
**களைகளைந்தெனையாளலுறுகண்டனிடஞ்செந்நெல்**
**வளைவிளைவயற்கயல்பாய்தருகுணவார்மணற்கடல்வாய்**
**வளைவளையொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே.**

(ப-ரை.) முளை - முளைக்கின்ற, வளர் - வளராநின்ற, இளமதி உடையவர் - இளம்பிறையை யுடையவர், முன்செய்த வல்வினைகள் களைந்து - முன் செய்த வலிய வினைகளை வேரறுத்து, என்னை ஆளல் உறு - என்னை யாளாநின்ற, கண்டன் இடம் - தலைவனிடமாவது, செந்நெல்வளை விளைவயல் - செந்நெல் வளைந்து விளையும் வயல் சூழ்ந்த, கயல்பாய்தரு - சேல்மீன்கள் பாய்கிற, குணம் - கிழக்குத்திக்கிலுள்ள, வார் - நீண்ட, மணல் கடல்வாய் - மணலையுடைய கடலினிடத்து, வளைவளையொடு-கூன்சங்கொடு, சலஞ்சலம் கொணர்ந்து எற்றும் - சலஞ்சலமென்னுஞ் சங்குகளையுங்கொண்டுவந்து வீசுகிற, மறைக்காடே - திருமறைக்காடேயாம் எ-று.

(பொ-ரை.) முளைக்கின்ற வளராநின்ற இளம்பிறையையுடையவர், முன் செய்த வலிய வினைகளை வேரறுத்து என்னை யாளாநின்ற தலைவனிடமாவது செந்நெல் வளைந்து விளையும் வயல் சூழ்ந்த சேல் மீன்கள் பாய்கிற கிழக்குத்

திக்கிலுள்ள நீண்ட மணலையுடைய கடலினிடத்து கூன்சங்கொடு சலஞ்சல மென்னுஞ் சங்குகளையுங் கொண்டுவந்து வீசுகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை.) சந்திரசேகரனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை.) கண்டன் - நீலகண்டன், இறைவன் எனினுமாம். வளைவளை-கூன்சங்கு. சலஞ்சலம் - சங்குவிசேடம். (7)

நலம்பெரியனசுரும்பார்ந்தனநங்கோனிடமறிந்தோங்
கலம்பெரியனசாருங்கடற்கரைபொருதிழிகங்கைச்
சலம்புரிசடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
வலம்புரியொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே.

(ப-ரை) நலம்பெரியன - நன்மை மிகுந்தனவாகிய, சுரும்பு ஆர்ந்தன - வண்டுகள் நிறைந்தனவாகிய, நம் கோன் இடம் அறிந்தோம் - நமது இறைவனிடத்தை யறிந்தோம், கலம் பெரியன - பெரியனவாகிய மரக்கலங்கள், சாரும் - சேர்கின்ற, கடல் கரை பொருது - கடற்கரையைமோதி, இழி - இறங்குகிற, கங்கைச்சலம் - கங்கைநீரை, புரி - முறுக்கப்பட்ட, சடைமுடி-சடைமுடியில், உடையவர்க்கு - உடையவருக்கு, இடமாவது - இடமாயிருப்பது, பரவை - கடலானது, வலம்புரியொடு சலஞ்சலம் கொணர்ந்து எற்றும் - வலம்புரியொடு சலஞ்சலமென்னுஞ் சங்குகளையுங் கொண்டுவந்து வீசுகிற, மறைக்காடே - திருமறைக்காடேயாம் எ-று.

(பொ-ரை.) நன்மைமிகுந்தனவாகிய வண்டுகள் நிறைந்தனவாகிய நமது இறைவனிடத்தை யறிந்தோம், பெரியனவாகிய மரக்கலங்கள் சேர்கின்ற கடற்கரையை மோதி இறங்குகிற கங்கைநீரை, முறுக்கப்பட்ட சடைமுடியில் உடையவருக்கு இடமாயிருப்பது, கடலானது வலம்புரியொடு சலஞ்சலமென்னுஞ் சங்குகளையுங் கொண்டுவந்து வீசுகிற திருமறைக்காடேயாம்.

(க-ரை.) நம்மிறைவனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருமறைக்காடேயாமென்பதாம்.

(வி-ரை.) கோ - இறைவன். இது னகரச்சாரியைபெற்று கோன் என நின்றது. (8)

குண்டாடியுஞ்சமணாடியுங்குற்றுடுக்கையர்தாமுங்
கண்டார்கண்டகாரணம்மவைகருதாதுகைதொழுமி
னெண்டோளினன்முக்கண்ணினனேழிசையினனறுகால்
வண்டாடுதண்பொழில்சூழ்ந்தெழுமணிநீர்மறைக்காடே.

(ப-ரை.) குண்டாடியும் சமணுடியும் - குண்டாடியும் சமணுடியும், குற்றுடுக்கையர்தாமும் - சிற்றுடையையுடையவரும், கண்டார்கண்ட காரணம் - கண்டார் காண்டற்குக் காரணங்களாகிய, அவை கருதாது - அவற்றை நினையாமல், கைதொழுமின் - கைகுவித்து வணங்குங்கள், எண்தோளினன் - எட்டுத் தோள்களையுடையவன், முக்கண்ணினன் - மூன்று கண்களையுடையவன், ஏழிசையின்ன் - ஏழிசையையுடையவன், அறுகால் வண்டு ஆடு - வண்டுகள் விளையாடுகிற, தண்பொழில் சூழ்தரு - குளிர்த்த சோலைகள் சூழ்ந்தோங்கிய, மணிநீர் - அழகிய நீர்சூழ்ந்த, மறைக்காடே - திருமறைக்காடேயாம் எ-று.

(பொ-ரை.) குண்டாடியும் சமணுடியும் சிற்றுடையையுடையவரும், கண்டார் காண்டற்குக் காரணங்களாகிய அவற்றை நினையாமல் கைகுவித்து வணங்குங்கள், எட்டுத்தோள்களையுடையவன், மூன்று கண்களையுடையவன், ஏழிசையையுடையவன், வண்டுகள் விளையாடுகிற குளிர்ந்த சோலைகள் சூழ்ந்தோங்கிய அழகிய நீர்சூழ்ந்த திருமறைக்காடேயாம்.

(க-ரை.) எண்டோள் முக்கண் ணெம்பெருமானுக் கிடமாயிருப்பது திருமறைக்காடேயா மென்பதாம்.

(வி-ரை.) மணிநீர் - கடல். (ரத்நாகரம்) (9)

பாரூர்பலபுடைசூழ்வளவயனாவலர்வேந்தன்
வாரூர்வனமுலையாளுமைபங்கன்மறைக்காட்டை
யாரூரனதமிழ்மாலைகள்பாடும்படித்தொண்டர்
நீரூர்தருநிலனோடுயர்புகழாகுவர்தாமே.

(ப-ரை.) பார் ஊர்பல - பலவாகிய பெரிய வூர்கள், புடைசூழ் - பக்கத்திற் சூழப்பெற்ற, வளவயல்-வளமாகிய வயல்களையுடைய, நாவலர்வேந்தன்—, வார் ஊர் - கச்சணிந்த, வனமுலையாள் - வனமுலையாளாகிய, உமைபங்கன் - உமைபாகனது, மறைக்காட்டைப்பாடின - திருமறைக்காட்டைப்பாடின, ஆரூரன் - சுந்தரனது, தமிழ்மாலைகள் பாடும் அடித்தொண்டர்-தமிழ்மாலைகளைப் பாடுகிற திருவடித்தொண்டர், நீர் ஊர்தரும் - கடல் சூழ்ந்த, நிலனோடு - நிலவுலகில், உயர்புகழாகுவர் - பெரும்புகழுடையவராவர் எ-று.

(பொ-ரை.) பலவாகிய பெரியவூர்கள் பக்கத்திற் சூழப்பெற்ற வளமாகிய வயல்களையுடைய நாவலர் வேந்தன், கச்சணிந்த வனமுலையாளாகிய உமைபாகனது திருமறைக்காட்டைப்பாடின சுந்தரனது தமிழ்மாலைகளைப்பாடுகிற திருவடித்தொண்டர், கடல்சூழ்ந்த நிலவுலகில் பெரும்புகழுடையவராவர்.

(க-ரை.) திருமறைக்காட் டெம்பெருமானை, ஆரூரன் புகழ்ந்து பாடின இத் தமிழ்மாலையைப் பாடுந் தொண்டர், இவ்வுலகில் பெரும்புகழெய்துவர் என்பதாம்.

(வி-ரை.) நீர் சினையாகு பெயராய்க் கடலை யுணர்த்திற்று. வனம் - அழகு. நிலனோடு என்பதில் ஓடு என்னும் மூன்றனுருபு எழனுருபின் பொருள் பயத்தலால் உருபுமயக்கம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மறைக்காட்டீசுரர். தேவியார்-யாழைப்பழித்தமொழியம்மை.

---

## திருவலம்புரம்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

**எனக்கினித் தினைத்தனைப்புகலிடமறிந்தேன்**
**பனைக்கனிப்பழம்படும்பரவையின்கரைமே**
**லெனக்கினியவன்றமர்க்கினியவனெழுமையு**
**மனக்கினியவன்றனதிடம்வலம்புரமே.**

(ப-ரை.) இனி - இப்பொழுது, எனக்கு - எனக்கு, தினைத்தனை - தினையளவு, புகலிடம் அறிந்தேன் - புகலிடமறிந்துகொண்டேன், (அது யாதெனின்) பனைக்கனிப் பழம்படும்-பனையினது கனிந்த பழம் உதிர்கின்ற, பரவையின் கரைமேல்-கடற்கரைமேல், எனக்கு இனியவன் - எனக்கு இனிமையானவன், தமர்க்கு இனியவன் - அடியார்க்கு இனியவன், எழுமையும் மனக்கு இனியவன் - எழ்பிறப்பினளவும் என் மனதுக்கு இனியவன், தனது- அவனது, இடம் - இடமாகிய, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(பொ-ரை) இனி எனக்கு தினையளவு புகலிடம் அறிந்தேன், (அது யாதெனின்) பனையினது கனிந்த பழம் உதிர்கின்ற கடற்கரையேல் எனக்கு இனிமையானவன், அடியார்க்கு இனியவன், எழ்பிறப்பினளவும் என் மனதுக்கு இனியவன், அவன் மனது இடமாகிய திருவலம்புரமேயாம்.

(க-ரை.) எனக்கு இனியவனது இடமொன்றை யறிந்தேன், அது யாதெனின், திருவலம்புரமேயாம் என்பதாம்.

(வி-ரை.) புகலிடம் - புகுமிடம், (சரணமடையுமிடம்.) தமர்-அடியவர்,

**புரமவையெரிதரவளைந்தவில்லினனவன்**
**மரவுரிபுலியதளரைமிசைமருவின**
**னரவுரியிரந்தவனிரந்துணவிரும்பிநின்**
**றிரவெரியாடிதனிடம்வலம்புரமே.**

(ப-ரை.) புரம் அவை எரிதர - புரங்கள் எரிந்தொழிய, வளைந்த வில்லி னன் - வளைக்கப்பட்ட வில்லையுடையவன், அவன் - அவன், மாவுரி புலி அதள் - மரப்பட்டையும் புலித்தோலையும், அரைமிசை மருவினன் - திருவ ரையிற் கட்டினவன், அரவுரி இரந்தவன் - பாம்புத்தோலை யிச்சித்தவன், இரந்து உண்ண - பிக்ஷையெடுத்துண்ண, விரும்பி நின்று - இச்சித்து நின்று, இரவு எரி ஆடி - இராக்காலத்தில் நெருப்போடாடுவோன், தன் - அவனது, இடம் - இடமாவது, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(போ-ரை.) புரங்கள் எரிந்தொழிய வளைக்கப்பட்ட வில்லையுடையவன், அவன் மரப்பட்டையும் புலித்தோலையும் திருவரையிற் கட்டினவன், பாம் புத்தோலை இச்சித்தவன், பிக்ஷையெடுத்துண்ண இச்சித்து நின்று இராக்கா லத்தில் நெருப்போடாடுவோன், அவனது இடமாவது திருவலம்புரமேயாம்.

(க-ரை.) திரிபுரசங்காரியாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திரு வலம்புரமே யென்பதாம்.

(வி-ரை.) எரிதர என்பதற்குப் பகுதி - எரிதர. அதள் - தோல். எரி யாடி - அழலாடி. (2)

நீறணிமேனியனெருப்புமிழரவினன்
கூறணிகொடுமழுவேந்தியோர்கையின
னாறணியவிர்சடையழல்வளர்மழலைவெள்
ளேறணியடிகடமிடம்வலம்புரமே.

(ப-ரை.) நீறு அணிமேனியன் - திருநீறணிந்த திருமேனியையுடைய வன், நெருப்பு உமிழ் அரவினன் - விஷாக்நியை யுமிழ்கின்ற பாம்புகளையுடை யவன், கூறு அணி - ஒரு பாகத்தை யலங்கரிக்கிற, கொடுமழு ஏந்திய ஓர் கையினன் - கொடிய மழுவேந்திய கையையுடையவன், ஆறு அணி - கங்கா நதியை தரித்த, அவிர்சடை - விளங்குகிற சடையையுடைய, அழல் வளர் - நெருப்பு வளர்கின்ற, மழலை - இளமையுள்ள, வெள் ஏறு அணி - வெள் விடையையுடைய, அடிகள் தம் இடம் - சுவாமியினிடமாயிருப்பது, வலம் புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(போ-ரை.) திருநீறணிந்த திருமேனியையுடையவன், விஷாக்நியை யுமிழ்கின்ற பாம்புகளையுடையவன், ஒருபாகத்தை யலங்கரிக்கிற கொடிய மழு வேந்திய கையையுடையவன், கங்காநதியை தரித்து விளங்குகிற சடையையு டைய நெருப்பு வளர்கின்ற இளமையுள்ள வெள்விடையையுடைய சுவாமியி னிடமாயிருப்பது திருவலம்புரமேயாம்.

(க-ரை.) நீறணிமேனி முதலியவற்றையுடையவனாகிய சிவபெருமா னுக் கிடமாயிருப்பது திருவலம்புரமே யென்பதாம்.

(வி-ரை.) அரவினன் - சர்ப்பாபரணத்தை யுடையவன். ஒருபாகம் என்றது வலப்பாகத்தை. வெள்விடையை யணிந்த - வெண்மையாகிய இடபக்கொடியைத்தரித்த எனினுமாம். (3)

கொங்கணைசுரும்புண நெருங்கியகுளிரிளந்
தெங்கொடுபனைபழம்படுமிடந்தேவர்க
டங்கிடுமிடந்தடங்கடற்றிரைபுடைதர
வெங்களதடிகடமிடம்வலம்புரமே.

(ப-ரை.) கொங்கு - தேனை, அணை - வந்த, சுரும்பு உண்ண - வண்டுகளுண்ண, நெருங்கிய - செறிந்த, குளிர் இளந் தெங்கொடுபனை - குளிர்ந்த இளந்தெங்கோடு பனைமரங்கள், பழம்படும் - கனிகளுதிர்க்கின்ற, இடம் - இடமாவது, தேவர்கள் தங்கிடும் இடம் - வாழுமிடம், தடம் கடல்திரை - பெரிய கடலலைகள், புடைதர - சூழ, எங்களது அடிகள் தம் இடம் - எமது சுவாமிகளுடைய இடமாயிருப்பது, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(பொ-ரை.) தேனை, வந்த வண்டுகளுண்ணச்செறிந்த குளிர்ந்த இளந்தெங்கோடு பனைமரங்கள் கனிகளுதிர்க்கின்ற இடமாவது, தேவர்கள் வாழுமிடம், பெரிய கடலலைகள் சூழ எமது சுவாமிகளுடைய இடமாயிருப்பது திருவலம்புரமேயாம்.

(க-ரை.) தெங்குமுதலியவை பழமுதிர்க்கின்ற சிவபெருமானதிடமாவது திருவலம் புரமேயென்பதாம்.

(வி-ரை.) தடம் - விசாலமாகிய. புடைதர என்பதற்குப் பகுதி புடைதா.

கொடுமழுவிரகினன்கொலைமலிசிலையின
னெடுமதில்சிறுமையினிரவவல்லவனிடம்
படுமணிமுத்தமும்பவளமுமிகச்சுமந்
திடுமணலடைகரையிடம்வலம்புரமே.

(ப-ரை.) கொடுமழு - கொடிய மழுவேந்திய, விரகினன் - உபாயத்தை யுடையவன், கொலை மலி - கொலைத்தொழில் மிகுந்த, சிலையினன் - வில்லை யுடையவன், நெடுமதில் - நெடிய முப்புரங்கள், சிறுமையின் - எளிதாக, நிரவ வல்லவன் இடம் - நிரவ வல்லவனது இடமாயிருப்பது, படும் - உண்டாகிற, அணிமுத்தமும் பவளமும் - அழகிய முத்தும்பவளமும், மிகச்சுமந்து இடும் - அதிகமாயேந்தி வந்து தள்ளுகிற, மணல் அடை கரை இடம் - மணலின் அடைகரையிடமாகிய, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(பொ-ரை.) கொடிய மழுவேந்திய உபாயத்தையுடையவன், கொலைத் தொழில் மிகுந்த வில்லையுடையவன், நெடிய முப்புரங்கள் எளிதாக நிரவ்வல்லவனது இடமாயிருப்பது, உண்டாகிற முத்தும்பவளமும் அதிகமாயேந்தி வந்து தள்ளுகிற மணலின் அடைகரையிடமாகிய திருவலம்புரமேயாம்.

(க-ரை.) மழு முதலியவற்றை யுடையவனுகிய சிவபெருமானுக் கிடமா யிருப்பது திருவலம்புரமேயாமென்பதாம்.

(வி-ரை.) நெடுமதில் என்றது முப்புரத்தை. நிரவல் - பரப்பல். (5)

கருங்கடக்களிற்றுரிக்கடவுள திடங்கயல்
நெருங்கியநெடும்பணையடம்பொடுவிரவிய
மருங்கொடுவலம்புரிசலஞ்சலமணம்புணர்ந்
திருங்கடலணைகரையிடம்வலம்புரமே.

(ப-ரை.) கருகடம் - கரிய மதநீரையுடைய, களிற்று உரி கடவுளது இடம் - யானைத்தோலையுடைய கடவுளின் இடமாவது, கயல் நெருங்கிய நெடும்பணை - கயல்மீன்கள் நெருங்கிய நெடியவயல்கள் சூழ்ந்த, அடம் பொடு விரவிய மருங்கொடு - அடம்ப மரங்களோடு கலந்த பக்கங்களுடன், வலம்புரி சலஞ்சலம் - வலம்புரி சலஞ்சலம் என்னுஞ் சங்குகள், மணம்புணர்ந்து - சேர்ந்து, இருங்கடல் - பெரியகடல், அணைகரையிடம் - கூடுமிடமாயிருக்கிற, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(பொ-ரை.) கரிய மதநீரையுடைய யானைத்தோலையுடைய கடவுளின் இடமாவது, கயல் மீன்கள் நெருங்கிய நெடிய வயல்கள் சூழ்ந்த அடம்ப மரங்களோடு கலந்த பக்கங்களுடன், வலம்புரி சலஞ்சலம் என்னுஞ் சங்குகள் சேர்ந்து பெரிய கடல் கூடுமிடமாயிருக்கிற திருவலம்புரமேயாம்.

(க-ரை.) யானையுரித்த சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருவலம்புரமேயாமென்பதாம்.

(வி-ரை.) களிற்றுரி - யானைத்தோல். பணை - வயல். அடம்பு - ஓர் மரம். விரவல் - கலத்தல். (6)

நரிபுரிகாடரங்காகடமாடுவர்
வரிபுரிபாடநின்றாடுமெம்மானிடம்
புரிசுரிவரிகுழலரிவையோர்பான்மகிழ்ந்
தெரியெரியாடிதனிடம்வலம்புரமே.

(ப-ரை.) நரிபுரிகாடு - நரிகள் விரும்புகிற சுடுகாட்டையே, அரங்கு ஆ - ஆடிடமாகக்கொண்டு, நடம் ஆடுவர் - கூத்தாடுவர், வரிபுரிபாட - வண்டுகள் விரும்பிப் பாடாநிற்க, நின்று ஆடும் எம்மான் இடம் - நின்று ஆடும் எம்பெருமானது இடமாயிருப்பது, புரிசுரிவரிகுழல் அரிவை - உமாதேவி, ஓர் பால் மகிழ்ந்து - ஒருபாகத்திருக்க மகிழ்ந்து, எரி - எரிகிற, எரியாடி தன் இடம் - அழலாடியினிடமாயிருப்பது, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(போ-ரை) நரிகள் விரும்புகிற சுடுகாட்டையே ஆடிடமாகக்கொண்டு கூத்தாடுவர், வண்டுகள் விரும்பிப் பாடாநிற்க நின்று ஆடும் எம்பெருமானது இட.மாயிருப்பது, உமாதேவி ஒருபாகத்திருக்க மகிழ்ந்து எரிகிற அழலாடியி னிடமாயிருப்பது திருவலம்புரமேயாம்.

(க ரை) சுடுகாட்டில் நடநஞ்செய்யும் இறைவனிடமாயிருப்பது திரு வலம் புரமேயாமென்பதாம்.

(வி-ரை) புரிதல் - விரும்புதல். புரிதல் - முறுக்குதல். சுரி - நெரிதல். வரி - நீளம். குழல் - கூந்தல். அரிவை - பெண். புரிசுரிவரி குழல் அரிவை- உமாதேவி. (7)

பாறணிமுடைதலைகலனெனமருவிய
நீறணிநிமிர்சடைமுடியினனிலவிய
மாறணிவருதிரைவயலணிபொழிலது
வேறுடையடிகடமிடம்வலம்புரமே.

(ப ரை.) பாறு அணி - பருந்துகள் சூழ்கின்ற, முடைதலை - புலால்நாற் றத்தையுடைய தலையோடு, கலன் என மருவிய - பிக்ஷாபாத்ரமாகக்கொண்ட, நீறு அணி நிமிர்சடை முடியினன்-நீறணிந்த நீண்ட சடைமுடியையுடையவன், நிலவிய-விளங்குகின்ற, மால் - பெரிய, தணிவு அரு - தணியாத, திரைவயல்- அலை வீசுகிற வயல்களையுடைய, அணிபொழிலது-அழகிய சோலைகள் சூழ்ந்த தாகிய, ஏறு உடை அடிகள்தம் இடம் - இடபவாகநனாகிய சுவாமியின் இடமா யிருப்பது, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(போ-ரை) பருந்துகள் சூழ்கின்ற புலால் நாற்றத்தையுடைய தலை யோடு பிக்ஷாபாத்ரமாகக்கொண்ட நீறணிந்த நீண்ட சடைமுடியை யுடைய வன், விளங்குகிற பெரிய தணியாத அலைவீசுகிற வயல்களையுடைய அழகிய சோலைகள் சூழ்ந்ததாகிய இடபவாகனனாகிய சுவாமியின் இடமாயிருப்பது திருவலம்புரமேயாம்.

(க ரை.) முடைத்தலை முதலியவற்றையுடைய இறைவனுக் கிடமாயிருப் பது திருவலம்புரமேயாமென்பதாம்.

(வி-ரை.) நிமிர்சடை - நீண்டசடை. (8)

சடசடவிடுபெணைபழம்படுமிடவகை
படவடகத்தொடுபலிகலந்துலவிய
கடைகடைபலிதிரிகபாலிதனிடமது
இடிகரைமணலடையிடம்வலம்புரமே.

(ப-ரை.) சடசட இடு – சடசடவென்றொலிக்கிற, பெண்ணை பழம்படும் இடவகைப்பட - பனம்பழம் உதிர்கிற இடவகையுண்டாக, வடகத்தொடு பலிகலந்து உலவிய - குய்யோடுகூடிய சோறு என்று திரிந்த, கடைகடைபலி திரி - வாயில்தோறும் பிக்ஷைக்கென்றே திரிகிற, கபாலிதன் இடமது - கபா

லியினிடமாயிருப்பதும், இடிகரைமணல் அடை இடம் - இடிகரை மணல் சேர்ந்த இடமாயிருப்பதும், வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(போ-ரை.) சடசடவென்றொலிக்கிற பனம்பழம் உதிர்கிற இடவகையுண்டாக குய்யோடு கூடிய சோறு என்று திரிந்த, வாயில்தோறும் பிச்சைக் கென்றே திரிகிற கபாலியினிடமாயிருப்பது, இடிகரை மணல்சேர்ந்த இடமாயிருப்பதும் திருவலம்புரமேயாம்.

(க-ரை.) வீடுதோறும் பலியேற்றுண்ணுகிற சிவபெருமானுக் கிடமாவது திருவலம்புரமேயென்பதாம்.

(வி-ரை.) கபாலி - கபாலமேந்தித்திரிவோன்.

குண்டிகைப்படப்பினில்விடக்கினையொழித்தவர்
கண்டவர்கண்டடிவீழ்ந்தவர்கனைகழ
றண்டுடைத்தண்டிதனிணமுடையரவுட
னெண்டிசைக்கொருசுடரிடம்வலம்புரமே.

(ப-ரை.) குண்டிகைப்படப்பினில் - குண்டிகையாகிய இடத்தில், விடக்கினை ஒழித்தவர் - தசையை யொழித்தவர், கண்டவர் கண்டு - கண்டோர் கண்டு, அடிவீழ்ந்தவர்-காலில் விழுந்தவர், கனைகழல் தண்டு உடை - சத்திக்கிற கழலினையும் தண்டினையுமுடைய, தண்டி தன்னின் - தண்டியைப்போல, முடை அரவுடன் - முடைநாறும் பாம்புடனே, எண்டிசைக்கு ஒரு சுடர் இடம் - அஷ்டதிக்குகளுக்கும் ஒரு சோதியாயிருப்பவனுக்கு இடமாயிருப்பது, வலம்புரமே - திருவலம்புரமேயாம் எ-று.

(போ-ரை.) குண்டிகையாகிய இடத்தில் தசையை யொழித்தவர், கண்டோர்கண்டு காலில் விழுந்தவர், சத்திக்கிற கழலினையும் தண்டினையுமுடைய தண்டியைப்போல முடைநாறும் பாம்புடனே அஷ்டதிக்குகளுக்கும் ஒரு சோதியாயிருப்பவனுக்கு இடமாயிருப்பது திருவலம்புரமேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக்கிடமாயிருப்பது திருவலம்புரமேயா மென்பதாம்.

(வி-ரை.) குண்டிகை - கரகம். விடக்கு - மாமிசம். கனைத்தல் - ஒலித்தல். தண்டு - தண்டாயுதம். தண்டி - ஒரு சிவபத்தன். (10)

வருங்கலமும்பலபேணுதல்கருங்கட
லிருங்குலப்பிறப்பர்தமிடம்வலம்புரத்தினை
யருங்குலத்தருந்தமிழூரன்வன்றொண்டன்சொற்
பெருங்குலத்தவரொடுபிதற்றுதல்பெருமையே.

(ப-ரை.) கருங்கடல் - கருங்கடலில், வரும்கலமும் பலபேணுதல்-வருகிற பல மரக்கலங்களைக் காப்பதில், இருங்குலப் பிறப்பர்தம் இடம் - பெருங்குலப் பிறப்பினாது இடமாகிய, வலம்புரத்தினை - திருவலம்புரத்தை, அருங்

குலத்து - அருமையாகிய குலத்திற்பிறந்த, அருந்தமிழ் ஊரான் வன்றொண்டன் சொல் - சுந்தரன்சொன்ன பாடல்களை, பெருங்குலத்தவரொடு பிதற்றுதல் - பெருங்குலத்தினரோடு கூடிப் பிதற்றுதல், பெருமையே - பெருமையாம் எ-று.

(பொ-ரை.) கருங்கடலில் வருகிற பல மரக்கலங்களைக் காப்பதில் பெருங்குலப் பிறப்பினாது இடமாகிய திருவலம்புரத்தை அருமையாகிய குலத்திற்பிறந்த அருந்தமிழ் ஊரான் சுந்தரன் சொன்ன பாடல்களை பெருங்குலத்தவரோகூடிப் பிதற்றுதல் பெருமையாம்.

(க-ரை.) திருவலம்புரத்துச் சிவபெருமானை, வன்றொண்டன் புகழ்ந்துரைத்த இப்பத்துப் பாடலும் கற்று வல்லார் மிக்க பெருமையடைவர் என்பதாம்.

(வி-ரை) கலம் - மரக்கலம். இருங்குலம் — உயர்குலம். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வலம்புரிநாதர். தேவியார்-வடுவகிர்க்கண்ணம்மை.

---

# திருவாரூர்

## பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லா
முரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லா
மரையனிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை.) கரையும் - கரைகளும், கடலும் - கடல்களும், மலையும் — மலைகளும், காலையும் மாலையும் எல்லாம் - காலைமாலையென்னும் எல்லாப்பொழுதுகளிலும், உரையில் விரவிவருவான் - அவரதுசொல்லிற் கலந்துவருவான், ஒருவன் - ஒப்பற்றவன், உருத்திரலோகன் - சிவபுரத்தான், வரையின் மடமகள் கேள்வன் - மலையரையனது இளம்பெண்ணாகிய உமாதேவியின் நாயகன், வானவர் தானவர்க்கு எல்லாம் அரையன் - தேவாசுரர்க்கெல்லாம் அரசன், இருப்பதும் ஆரூர் - வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) கரைகளும் கடல்களும் மலைகளும் காலை மாலையென்னும் எல்லாப் பொழுதுகளிலும் அவரது சொல்லிற் கலந்து வருவான், ஒப்பற்றவன், சிவபுரத்தான், மலையரையனது இளம்பெண்ணாகிய உமாதேவியின் நாய

கன், தேவாசுரர்களுக்கெல்லாம் அரசன், வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே கேட்பீராக.

(க-ரை.) மலைமகள்கேள்வனாகிய சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்கள் என்பதாம். (1)

தனியனென்றெள்கியறியேன்றம்மைப்பெரிதுமுகப்பன்
முனிபவர்தம்மைமுனிவன்முகம்பலபேசிமொழியேன்
கனிகள்பலவுடைச்சோலைக்காய்க்குலையீன்றகமுகி
னினியனிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை.) தனியன் என்று - தனியனாயிருப்பவனென்று, எள்கி அறியேன் - இகழ்ந்தறியேன், தம்மைபெரிதும் உகப்பன் - தம்மை மிகவும் மதிப்பவன், முனிபவர்தம்மை முனிவன் - வெறுப்பவர்களை வெறுப்பன், முகம்பல பேசி மொழியேன் - பல இன் சொற்களைச் சொல்லேன், கனிகள் பல உடை சோலை - பலவகைக் கனிகளையுடைய சோலைகள் சூழ்ந்த, காய்க்குலை ஈன்ற கமுகின் - காய்க்குலைகளைத்தந்த கமுகமரங்களோடு, இனியன் இருப்பதும் ஆரூர் - இனியனிருப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) தனியனாயிருப்பவனென்று இகழ்ந்தறியேன், தம்மை மிகவும் மதிப்பவன், வெறுப்பவர்களை வெறுப்பவன், பல இன் சொற்களைச் சொல்லேன், பலவகைக் கனிகளையுடைய சோலைகள் சூழ்ந்த காய்க்குலைகளைத் தந்த கமுகமரங்களோடு இனியனிருப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே கேட்பீராக.

(க-ரை.) சிவபெருமான் இருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்களென்பதாம்.

(விரை) எள்கல் - இகழ்தல். முனிதல் - கோவித்தல். முகம்பலபேசல்- பல இச்சகவார்த்தைகளைப் பேசுதல். (2)

சொல்லிற்குலாவன்றிச்சொல்லேன்றொடர்ந்தவர்க்குந்துணையல்லேன்
கல்லில்வலியமனத்தேன்கற்றபெரும்புலவாண
ரல்லல்பெரிதுமறுப்பானருமறையாறங்கமோது
மெல்லையிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை) சொல்லின் - சொன்னால், குலாவன்றி சொல்லேன் - முகமன் வார்த்தைகளையன்றி வேறொன்றைச் சொல்லமாட்டேன், தொடர்ந்தவர்க்கும் துணை அல்லேன் - அடுத்தவர்க்கும் சகாயனல்லேன், கல்லின் வலியமனத்தேன் - கல்லினும் வன்னெஞ்சன், கற்ற பெரும்புலவாணர் - கற்ற பெரும்புலவர், அல்லல் பெரிதும் அறுப்பான் - துன்பத்தை மிகுதியாய்ச் சேதிப்பவன், அருமறை ஆறு அங்கம் ஓதும் - அரிய வேதங்களையும் ஆறங்கங்

களையும் ஓதுகிற, எல்லே - ஞான சூரியன், இருப்பதும் ஆரூர் - வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையு மாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை) சொன்னால் முகமன்வார்த்தைகளையன்றி வேறொன்றைச் சொல்லமாட்டேன், அடுத்தவர்க்கும் சகாயனல்லேன், கல்லினும் வன்னெஞ்சன், கற்றபெரும்புலவர் துன்பத்தை மிகுதியாய்ச் சேதிப்பவன், அரிய வேதங்களையும் ஆறங்கங்களையும் ஓதுகிற ஞானசூரியன் வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே, கேட்பீராக.

(க-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே, கேளுங்களென்பதாம்.

(வி-ரை.) சல்லின் - கல்லின், கற்போல எனினுமாம். புலவாணர் - அறிஞர். அல்லல் - துன்பம். (3)

நெறியுமறிவுஞ்செறிவுநீதியுநான்மிகப்பொல்லேன்
மிறையுந்தறியுமுகப்பன்வேண்டிற்றுச்செய்துதிரிவன்
பிறையுமரவும்புனலும்பிறங்கியசெஞ்சடைவைத்த
விறைவனிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளிர்.

(ப-ரை.) நெறியும் — நன்னெறியிலும், அறிவும் - அறிவிலும், செறிவும் அடக்கத்திலும், நீதியும் - நீதியிலும், நான் மிகப் பொல்லேன் - நான் பெரிதும் பொல்லாதவன், மிறையும் - மாறுபாட்டினையும், தறியும் - வெட்டெனவையும், உகப்பன் - விரும்புவேன், வேண்டிற்றுச் செய்து திரிவன் - விரும்பினதைச்செய்து திரிவேன், பிறையும் அரவும் புனலும் - பிறையும் பாம்பும் கங்கையும், பிறங்கிய - விளங்காநின்ற, செஞ்சடைவைத்த இறைவன் - செஞ்சடையிலணிந்த இறைவன், இருப்பதும் ஆரூர் - வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) நன்னெறியிலும் அறிவிலும் அடக்கத்திலும் நீதியிலும் நான் பெரிதும் பொல்லாதவன், மாறுபாட்டினையும், வெட்டெனவையும் விரும்புவேன், விரும்பினதைச்செய்து திரிவேன், பிறையும் பாம்பும் கங்கையும் விளங்காநின்ற செஞ்சடையிலணிந்த இறைவன் வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே, கேட்பீராக.

(க-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்களென்பதாம்.

(வி-ரை.) தறி - வெட்டெனவு, வெட்டெனப்பேசுதல். புனல் - கங்கை. பிறங்கல் - விளங்கல். (4)

*நீதியிலொன் றும்வழுவேனிர்க்கண் டகஞ்செய் துவாழ்வேன்*
*வேதியர்தம்மைவெகுளேன்வெகுண் டவர்க்குந் துணையாகேன்*
*சோதியிற்சோதியெம்மானைச்சுண் ணவெண்ணீ றணிந்திட்ட*
*வாதியிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.*

(ப-ரை.) நீதியில் ஒன்றும் வழுவேன் - நீதியில் சிறிதும் தவறேன்; நிஷ்கண்டகம் செய்து வாழ்வேன் - யாவர்க்கும் இதஞ்செய்து வாழ்வேன், வேதியர் தம்மை வெகுளேன் - அந்தணரைக் கோவியேன், வெகுண்டவர்க்கும் துணை ஆகேன் - கோவித்தவர்க்கும் உதவியாக மாட்டேன், சோதியில்சோதி எம்மானை - சுடர்களுக்கும் சுடராகிய எம்பெருமானை, சுண்ண வெண்ணீறு அணிந்திட்ட ஆதி - திருவெண்ணீற்றை யணிந்திட்ட முதல்வன், இருப்பதும் ஆரூர் - வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) நீதியில் சிறிதும் தவறேன், யாவர்க்கும் இதஞ் செய்து வாழ்வேன், அந்தணரைக் கோவியேன், கோவித்தவர்க்கும் உதவியாக மாட்டேன், சுடர்களுக்கும் சுடராகிய எம்பெருமானை, திருவெண்ணீற்றை யணிந்திட்ட முதல்வன் வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே, கேட்பீராக.

(கு-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே சேருங்கள் என்பதாம்.

(வி-ரை.) நிஷ்கண்டகம் - இன்பம். (5)

*அருத்தம்பெரிதுமுகப்பனலவலையேனலந்தார்க*
*ளொருத்தர்க்குதவியேனல்லேனுற்றவர்க்குந் துணையல்லேன்*
*பொருத்தமேலொன் றுமிலாதேன்புற்றெடுத்திட்டிடங்கொண்ட*
*அருத்தனிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.*

(ப-ரை.) அருத்தம் - பொருளை, பெரிதும் உகப்பன் - மிகவும் விரும்புவேன், அலவலையேன் - அற்பன், அலந்தார்கள்-வருந்தினவர்களாகிய, ஒருத்தர்க்கு உதவியேன் அல்லேன் - ஒருவருக்கு உதவுவோனல்லேன், உற்றவர்க்கும் துணை அல்லேன்-அடுத்தவர்க்கும் துணையல்லேன், பொருத்தமேல் ஒன்றும் இலாதேன் - சிறிதும் பொருத்தமில்லாதவன், புற்றெடுத்திட்ட இடம் கொண்ட - புற்றுங்கின இடத்தை தனக்கிடமாகக் கொண்ட, அருத்தன் - வேதார்த்தமாயிருப்பவன், இருப்பதும் ஆரூர்-வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) பொருளை மிகவும் விரும்புவேன், அற்பன், வருந்தினவர்களாகிய ஒருவருக்கு உதவுவோனல்லேன், அடுத்தவர்க்கும் துணையல்லேன், சிறிதும் பொருத்தமில்லாதவன், புற்றுங்கின இடத்தை தனக்கிடமாகக்

கொண்ட வேதார்த்தமாயிருப்பவன், வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையு மாளுவனே, கேட்பீராக.

(க-ரை) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்கள் என்பதாம்.

(வி-ரை.) அலத்தல்-வருந்தல். உற்றவர்-அடுத்தவர். அருத்தன்—வல்மீக நாதர். (6)

சந்தம்பலவறுக்கில்லேன்சார்ந்தவர்தம்மடிசாரேன்
முந்திப்பொருவிடையேறிமூவுலகுந்திரிவானே
கந்தங்கமழ்கொன்றைமாலைக்கண்ணியன்விண்ணவரேத்து
மெந்தையிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை.) சந்தம்பல அறுக்கில்லேன் - ஆசைகளெவற்றையு மறுக்கமாட்டேன், சார்ந்தவர்தம் அடிசாரேன் - அடுத்தவர் திருவடியையும் அடையமாட்டேன், முந்திப்பொருவிடை ஏறி - முற்பட்டுப் பொருகிற எருதின்மீதேறி, மூவுலகும் திரிவான் - மூன்றுலகங்களிலும் திரிபவன், கந்தம்கமழ் கொன்றை மாலைக்கண்ணியன் - மணம்வீசுகிற கொன்றை மலர்மாலையையுடையவன், விண்ணவர் ஏத்தும் எந்தை - தேவர்கள் துதிக்கிற எமது தந்தை, இருப்பதும் ஆரூர் - வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை) ஆசைகளெவற்றையு மறுக்கமாட்டேன், அடுத்தவர் திருவடியையும் அடையமாட்டேன், முற்பட்டுப் பொருகிற எருதின்மீதேறி மூன்றுலகங்களிலும் திரிபவன், மணம் வீசுகிற கொன்றைமலர் மாலையையுடையவன், தேவர்கள் துதிக்கிற எமது தந்தை, வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே, கேட்பீராக.

(க-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்கள் என்பதாம்.

(வி-ரை.) பலசந்தம் - பலவகையாகிற வழிகள் எனினுமாம். பொருவிடை - போர்செய்யும் இடபம். (7)

நெண்டிக்கொண்டேயுங்கிலாய்ப்பனிச்சயமேயிது திண்ண
மிண்டர்க்குமிண்டலாற்பேசேன்மெய்ப்பொருளன்றியுணரேன்
பண்டங்கிலங்கையர்கோனைப்பருவரைக்கீழடர்த்திட்ட
வண்டனிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை.) நெண்டிக்கொண்டேயும் - நெளித்துக்கொண்டாயினும், கிலாய்ப்பன் - களிப்பேன், நிச்சயமே இது திண்ணம் - நிச்சயமே இது உறுதிவார்த்தை, மிண்டர்க்கு மிண்டு அல்லால் பேசேன் - மிண்டர்க்கு மிண்டன்றி வேறு பேசேன், மெய்ப்பொருள் அன்றி உணரேன்-உண்மைப் பொருள் அல்லால் அறியேன், பண்டு - முற்காலத்தில், அங்கு இலங்கையர்கோனை-அவ்விடத்து

இலங்கையர்க்கரசனாகிய ராவணனை, பருவரைக்கீழ் - பெரிய மலைக்கீழே, அடர்த்திட்ட - நெரித்த, அண்டன் - தேவன், இருப்பதும் ஆரூர்-வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) நெளித்துக் கொண்டாயினும் களிப்பேன், நிச்சயமே, இது உறுதிவார்த்தை, மிண்டர்க்கு மிண்டன்றி வேறுபேசேன், உண்மைப்பொரு ளல்லாமல் அறியேன், முற்காலத்தில் அவ்விடத்து இலங்கையர்க் கரசனாகிய ராவணனை, பெரிய மலைக்கீழே நெரித்த தேவன், வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே, கேட்பீராக.

(க-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்களென்பதாம்.

(வி-ரை) நெண்டல் - நெளிதல். மிண்டர் - வன்னெஞ்சர். மிண்டு - வன்சொல். பருவரை யென்றது - கைலாய மலையை. (8)

நமர்பிறரென்பதறியேனான் கண்டதே கண்டுவாழ்வேன்
றமரம்பெரிதுமுகப்பன் றக்கவாறொன்றுமிலாதேன்
குமரன்றிருமால்பிரமன்கூடியதேவர்வணங்கும்
அமரனிருப்பதுமாரூரவனெம் மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை.) நமர் பிறர் என்பது அறியேன் - நம்மவர் அயலார் என்பதை அறியமாட்டேன், நான் கண்டதே கண்டுவாழ்வேன் - நான் பார்த்ததையே பார்த்து வாழ்வேன், தமரம் - ஆரவாரத்தை, பெரிதும் உகப்பன் - மிகவும் விரும்புவேன், தக்க ஆறு ஒன்றும் இல்லாதேன் - தகுந்தவழி சிறிதும் இல்லாதவன், குமரன் - முருகன், திருமால் - விட்டுணு, பிரமன் — பிரமன் இவர்களோடு, கூடிய - சேர்ந்த, தேவர்வணங்கும் - தேவர்கள் தொழுகின்ற, அமரன் — தேவன், இருப்பதும் ஆரூர் — வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனே - அவன் எம்மையுமாளுவனே, கேளீர் - கேட்பீராக எ—று.

(பொ-ரை ) நம்மவர் அயலார் என்பதை அறியமாட்டேன், நான் பார்த்ததையே பார்த்து வாழ்வேன், ஆரவாரத்தை மிகவும் விரும்புவேன், தகுந்தவழி சிறிதும் இல்லாதவன், முருகன், விட்டுணு, பிரமன் இவர்களோடு சேர்ந்த தேவர்கள் தொழுகின்ற தேவன் வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனே கேட்பீராக,

(க-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனே கேளுங்களென்பதாம்.

(வி-ரை ) தக்க ஆறு - தகுந்தவழி. (முத்தி நெறி. உகத்தல் - விரும்புதல். (9)

ஆசைபலவறுக்கில்லேனாரையுமன்றியுரைப்பேன்
பேசிற்சழக்கலாற்பேசேன் பிழைப்புடையேன்மனத்தன்னா
லோசைபெரிதுமுகப்பேனொலிகடனஞ்சமுதுண்ட
வீசனிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனேகேளீர்.

(ப-ரை) ஆசைபல அறுக்கில்லேன் - ஆசைகள் பலவற்றையும் சேதித்திலேன், ஆரையும் - எவரையும், அன்றி — பகைத்து, உரைப்பேன் - பேசுவேன், பேசின் — பேசினால், சழக்கு அல்லால் பேசேன் - பொய்யன்றிப் பேசமாட்டேன், மனந்தன்னால் பிழைப்பு உடையேன் - மனத்தினால் பிழைசெய்தலையுடையேன், ஓசைபெரிதும் உகப்பன்-ஆரவாரத்தை மிகவும் விரும்புவேன், ஒலிகடல் நஞ்சு - ஒலிக்கிற பாற்கடலிற் றோன்றிய நஞ்சினை, அமுது உண்ட - அமுதாக உண்டருளின, ஈசன் - சர்வேசுவரன், இருப்பதும் ஆரூர்-வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனோ-அவன் எம்மையுமாளுவனோ, கேளீர் - கேட்பீராக எ-று.

(பொ-ரை.) ஆசைகள் பலவற்றையும் சேதித்திலேன், எவரையும் பகைத்து பேசுவேன், பேசினால் பொய்யன்றிப் பேசமாட்டேன், மனத்தினால்பிழைசெய்தலையுடையேன், ஆரவாரத்தை மிகவும் விரும்புவேன், ஒலிக்கிற பாற்கடலிற் றோன்றிய நஞ்சினை அமுதாக வுண்டருளின சர்வேசுவரன் வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையுமாளுவனோ கேட்பீராக.

(க-ரை.) சிவபெருமானிருப்பதும் ஆரூர், அவன் எம்மையும் ஆள்வனோ கேளுங்களென்பதாம்.

(வி-ரை.) அன்றுதல் - பகைத்தல். சழக்கு - தொடுவழக்கு எனினுமாம். கடல் இங்குப் பாற்கடலை யுணர்த்திற்று மேல் நஞ்சமுதுண்ட என வருதலால். (10)

எந்தையிருப்பதுமாரூரவனெம்மையுமாள்வனோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திரடோளான்
மந்தம்முழவமியம்பும்வளவயனாவலாரூரன்
சந்தமிசையொடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே.

(ப-ரை.) எந்தை இருப்பதும் ஆரூர் - தந்தை வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனோ என்று-அவன் எம்மையும் ஆள்வனோவென்று, சிந்தைசெய்யும் திறம்வல்லான் - சிந்திக்கும் வகையில் வல்லவன், திருமருவும் திரள்தோளான் - அழகுபொருந்திய திரண்ட தோள்களையுடையவன், மந்தம் முழவும் இயம்பும் - மந்தமாகிய மத்தளமுழங்குகிற, வளவயல் - வளமாகிய வயல்கள் சூழ்ந்த, நாவலாரூரன் - சுந்தரன் சொன்ன, சந்தம் - சந்தப்பாடல்களை, இசையொடும் வல்லார் - இராகத்தோடு பாடவல்லவர், புகழ் எய்துவர்- கீர்த்தியையடைவர் எ-று.

(பொ-ரை) தந்தை வசிப்பதும் திருவாரூர், அவன் எம்மையும் ஆள்வனேவென்று சிந்திக்கும்வகையில் வல்லவன், அழகுபொருந்திய திரண்ட தோள்களையுடையவன், மந்தமாகிய மத்தளமுழங்குகிற வளமாகிய வயல்கள் சூழ்ந்த சுந்தரன்சொன்ன சந்தப்பாடல்களை இராகத்தோடு பாடவல்லவர் கீர்த்தியையடைவர்.

(கு-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நாவலாரூரன் புகழ்ந்துரைத்த இப்பத்துப் பாடல்களையும் இசையோடு பாடவல்லார் புகழெய்துவர் என்பதாம்.

(வி-ரை.) இசை - பண், இராகம் எனினுமமையும். (11)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்துருத்தியுந் திருவேள்விக்குடியும்

பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவி
வெடில்படக்கரையொடுந்திரைகொணர்ந்தெற்று
மன்னமாக்காவிரியகன்கரையுறைவா
ரடியிணைதொழுதெழுமன்பராமடியார்
சொன்னவாறறிவார்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயே
னென்னைநான்மறக்குமாறெம்பெருமானை
யென்னுடம்படும்பிணியிடர்கெடுத்தானை.

(ப-ரை.) மின்னும் - மின்னுகிற, மா - பெரிய, மேகங்கள் பொழிந்து-மேகங்கள் நீரைச்சொரிதலால், இழிந்த அருவி - இறங்கின அருவியாறுகள், வெடில்பட முழங்க—, திரையோடு-அலைகளோடு, கரைகொணர்ந்து எற்றும்-கரையிற் கொண்டுவந்து வீசுகிற, அன்ன - அத்தன்மையதாகிய, மா-பெரிய, காவிரி அகன்கரை உறைவார் - காவிரியின் அகன்ற கரையில்வாழ்பவர், அடி இணை-திருவடியிரண்டினையும், தொழுது எழும்-வணங்கியெழுகின்ற, அன்பர் ஆம் அடியார் - அன்பராகிய அடியவர், சொன்ன ஆறு அறிவார் - சொன்ன வழியேதெரிந்துகொள்வர், துருத்தியார் - திருத்துருத்தியிலுள்ளவரும், வேள்விக்குடியிலுள்ளார் - திருவேள்விக்குடியிலுள்ளவருமாகிய, அடிகளை - சுவாமியை, செடியனேன்-குற்றமுடையேனாகிய, நாயேன் - நாயினேன், எம்பெருமானை - எம்பிரானை, என் உடம்பு அடும்பிணி - என்னுடம்பை வருத்துகிற நோயின், இடர் கெடுத்தானை - துன்பத்தை யொழித்தவனை, நான்மறக்குமாறு என்னை - நான் மறக்கும் வழியேது எ-று.

(போ-ரை.) மின்னுகிற பெரிய மேகங்கள் நீரைச் சொரிதலால், இறங்கின அருவியாறுகள் வெடில்பட முழங்க அலைகளோடு கரையிற்கொண்டுவந்து வீசுகிற அத்தன்மையதாகிய பெரிய அகன்ற காவிரிக்கரையில் வாழ்பவர் திருவடியிரண்டினையு வணங்கி யெழுகின்ற அன்பராகிய அடியவர் சொன்ன வழியேதெரிந்துகொள்வர், திருத்துருத்தியிலுள்ளவரும் திருவேள்விக்குடியிலுள்ளவருமாகியசுவாமியை குற்றமுடையேனாகிய நாயினேன், எம்பிரானை, என்னுடம்பை வருத்துகிற நோயின் துன்பத்தை யொழித்தவனை, நான் மறக்கும்வழியேது.

(க-ரை.) திருத்துருத்தி திருவேள்விக்குடி யென்னுந் திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, நான் மறக்குமாறென்னை யென்பதாம்.

(வி-ரை.) எற்றுதல் - எறிதல். வெடிபடல் - முழங்கல். அடுதல் - வருத்துதல். (1)

கூடுமாறுள்ளனகூடியுங்கோத்துங்
கொய்புனலேனலோடைவனஞ்சிதறி
மாடுமாகோங்கமேமருதமேபொருது
மலையெனக்குலைகளைமறிக்குமாறுந்தி
யோடுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
பாடுமாறறிகிலேனெம்பெருமானைப்
பழவினையுள்ளனபற்றறுத்தானை.

(ப-ரை.) கூடுமாறு உள்ளன - சேருமாறுள்ளவற்றை, கூட்டியும்-சேர்த்தும், கோத்தும் - கோத்துக்கொண்டும், கொய்புனம்-அறுக்கும்புனத்திலுள்ள, ஏனலோடு - தினையுடன், ஐவனம் - மலைநெல்லையும், சிதறி - எறிந்து, மாடு - அயலிலுள்ள, மா - பெரிய, கோங்கம் மருதம்பொருது - கோங்கமரங்களையும் மருதமரங்களையும் மோதி, மலையென - மலைகள்போல, குலைகளை மறிக்குமாறு உந்தி - குலைகளைத் தடுக்கும்படி தள்ளி, ஓடும் - ஓடுகிற, மா - பெரிய, காவிரித் துருத்தியார் - காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியார், வேள்விக்குடியிலுள்ளார் - திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை – சுவாமிகளை, செடியனேன் நாயேன் - குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை-எம்பிரானை, பழைவினையுள்ளன - பழவினையுள்ளவற்றை, பற்று அறுத்தானை - வேரறுத்தவனை, பாடும் ஆறு அறிகிலேன்-துதித்துப்பாடும் வழியை யறிகிலேன் எ-று.

(போ-ரை.) சேருமாறுள்ளவற்றை சேர்த்தும், கோத்துக்கொண்டும் அறுக்கும் புனத்திலுள்ள தினையுடன் மலைநெல்லையும் எறிந்து, அயலிலுள்ள பெரிய கோங்க மரங்களையும் மருதமரங்களையும் மோதி, மலைகள்போல குலைகளைத் தடுக்கும்படி தள்ளி ஓடுகிற பெரிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியார் திருவேள்விக்குடியிலுள்ளவராகிய சுவாமியை குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை, பழவினையுள்ளவற்றை வேரறுத்தவனை, துதித்துப்பாடும் வழியையறிகிலேன்.

(க-ரை.) திருத்துருத்தி திருவேள்விக்குடியென்னுந் திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நான் பாடும்வழியறியேன் என்பதாம்.

(வி-ரை.) கோங்கம் மருதம்-மரவிசேடங்கள். (2)

கொல்லுமாலியானையின்கொம்பொடுவம்பார்
கொழுங்கனிச்செழும்பயன்கொண்டுகூட்டெய்திப்
புல்கியுந்தாழ்ந்தும்போந்துதவஞ்செய்யும்
போகரும்யோகரும்புலரிவாய்மூழ்கச்
செல்லுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
சொல்லுமாறறிகிலேனெம்பெருமானைத்
தொடர்ந்தடுங்கடும்பிணித்தொடர்பறுத்தானை.

(ப-ரை.) கொல்லும் - கொல்லுகிற, மால்யானையின் கொம்பொடு - பெரிய யானைக்கொம்புடனே, வம்பு ஆர் - மணம் நிறைந்த, கொழுங்கனி - கொழுங்கனிகளின், செழும் பயன்கொண்டு - செழுஞ்சாற்றைக் கொண்டு, கூட்டு எய்தி - கூட்டுதலை யடைந்து, புல்கியும் - தழுவியும், தாழ்ந்தும் - இறங்கியும், போந்து - வந்து, தவம் செய்யும் போகரும் யோகரும் - தவம் செய்யும் போகரும் யோகரும், புலரிவாய் - விடியற்காலத்தில், மூழ்க - முழுகுதற்கு, செல்லும் - போகிற, மா - பெரிய, காவிரித்துருத்தியார் - காவிரிக் கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை - சுவாமியை, செடியனேன் நாயேன்-குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, தொடர்ந்து அடும் - தொடர்ந்து வருத்துகிற, கடும்பிணித்தொடர்பு அறுத்தானை-கொடிய நோயின் தொடர்ச்சியைச் சேதித்தவனை, சொல்லும் ஆறு அறிகிலேன் - துதிக்கும் வழியை யறிகிலேன் எ-று.

(பொ-ரை.) சொல்லுகிற பெரிய யானைக்கொம்புடனே மணம் நிறைந்த கொழுங்கனிகளின் செழுஞ் சாற்றைக்கொண்டு கூட்டுதலை யடைந்து தழுவியும் இறங்கியும் வந்து தவம்செய்யும் போகரும் யோகரும் விடியற்காலத்தில் முழுகுதற்கு போகிற பெரிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், திருவேள்விக் குடியிலுள்ளவர், சுவாமியை, குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை, தொடர்ந்து வருத்துகிற கொடிய நோயின் தொடர்ச்சியைச் சேதித்தவனை, துதிக்கும்வழியையறிகிலேன்.

(க-ரை.) திருத்துருத்தி, திருவேள்விக்குடி யென்னுந் திருப்பதிகளிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, நான் சொல்லும்வழி யறியேன் என்பதாம்.

(வி-ரை.) தொடர்பு - சம்பந்தம். (3)

பொறியுமாசந்தனத் துண்டமோடகிலும்
பொழிந்திழிந்தருவிகள் புன்புலங்கவரக்
கறியுமாமிளகொடுகதலியுமுந்திக்
கடலுறவிளைப்பதே கருதித்தன்கைபோ
யெறியுமாகாவிரித் திருத்துருத்தியார் வேள்விக்
குடியுளாரடிகளைச் செடியனேனாயே
னறியுமாறறிகிலேனெம்பெருமானை
யருவினையுள்ளனவாசறுத்தானை.

(ப-ரை.) பொறியும் - பொருக்கெழுகிற, மாசந்தனத்துண்டமோடு - அழகிய சந்தன மரத்துண்டங்களோடு, அகிலும் பொழிந்து இழிந்த - அகிற் கட்டைகளையும் தள்ளியிறங்குகிற, அருவிகள் - அருவியாறுகள், புன புலம் கவர - புல்லிய புலத்தைக் கவர்ந்துகொள்ள, கறியும் - கறிக்கிற, மாமிளகொடு - அழகிய மிளகுக் கொடிகளோடு, கதலியும் உந்தி - வாழைமரங்களையும் தள்ளி, கடல் உறவிளைப்பதே கருதி - கடலை யடையவே நினைத்து, தன்கைபோய் எறியும் - தன் னொழுங்காகச் சென்று எறிகிற, மாகாவிரித்திருத்துருத்தியார் - அழகிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை - சுவாமியை, செடியனேன் நாயேன் - குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, அருவினையுள்ளன - அரிய வினைகளாயுள்ளவற்றை, ஆசு அறுத்தானை - பற்றறுத்தவனை, அறியும் ஆறு அறிகிலேன் - அறியும் வழியை யறிகிலேன் எ-று.

(பொ-ரை.) பொருக்கெழுகிற அழகிய சந்தனமரத் துண்டங்களோடு அகிற்கட்டைகளையும் தள்ளி யிறங்குகிற அருவியாறுகள் புல்லிய புலத்தைக் கவர்ந்து கொள்ள, கறிக்கிற அழகிய மிளகுக்கொடிகளோடு வாழைமரங்களையும் தள்ளி கடலைபடையவே நினைத்து தன் னொழுங்காகச்சென்று எறிகிற அழகிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர் திருவேள்விக்குடியிலுள்ளவர் சுவாமியை குற்றமுடையேனாகிய நாயேன், எம்பிரானை, அரிய வினைகளாயுள்ளவற்றை பற்றறுத்தவனை, அறியும் வழியை யறிகிலேன்.

(க-ரை.) திருத்துருத்தி திருவேள்விக்குடி யென்னும் திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அறியும்வழி யறியேனென்பதாம்.

(வி-ரை.) கைபோய் - ஒழுங்காகச்சென்று. ஆசு - குற்றம். (4)

பொழிந்திழிமும்மதக் களிற்றினமருப்பும்
பொன்மலர்வேங்கையினன்மலருந்தி
யிழிந்திழிந்தருவிகள் கடும்புனலீண்டி
யெண்டிசையோர்களுமாடவந்திங்கே

சுழித்திழிகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனுயே
னெழித்திலேனபிதற்றுமாறெயபெருமானை
யுற்றநோயிற்றைறயேயுறவொழித்தானை.

(ப-உ.ர.) பொழிந்து இழி மும்மதம் - மும்மதத்தைச் சொரிந்திறங்குகிற, களிறு - யானைகளின், இனமருப்பும் - கூட்டமாகிய கொம்புகளையும், பொன்மலர் வேங்கையின் நல்மலர் - வேங்கையின் நல்லமலர்களையும், உந்தி - தள்ளி, இழிந்து இழிந்து - மிகுதியாயிறங்கி, அருவிகள் - அருவிகளின், கடும் புனல் - வேகமாகிய நீர், ஈண்டி - மிகுந்து, எண்டிசையோர்களும் - எட்டுத் திசையிலுள்ளோரும், ஆடவந்து - மூழ்கவந்து, இங்கே சுழிந்து இழி - இவ்விடத்தே சுழித்துக்கொண்டிறங்குகிற, காவிரித்துருத்தியார் - காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை - சுவாமியை, செடியனேன் நாயேன் - குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, உற்றநோய் - அடைந்த பிணியை, இற்றையே - உறவொழித்தானை - இன்றைக்கே மிகவு மொழித்தவனை, பிதற்றுமாறு ஒழிந்திலேன் - துதிக்கும்வழி யறிந்திலேன் எ-று.

(பொ-ரை.) மும்மதத்தைச் சொரிந்திறங்குகிற யானைகளின் கூட்டமாகிய கொம்புகளையும் வேங்கையின் நல்ல மலர்களையும் தள்ளி மிகுதியாயிறங்கி அருவிகளின வேகமாகிய நீர்மிகுந்து எட்டுத்திசைகளுள்ளோரும் மூழ்கவந்து இவ்விடத்தே சுழித்துக்கொண்டிறங்குகிற காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், திருவேள்விக்குடியிலுள்ளவர், சுவாமியை, குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை, அடைந்த பிணியை இன்றைக்கே மிகவு மொழித்தவனை துதிக்கும்வழி யறிந்திலேன்.

(க-ரை.) திருத்துருத்தி திருவேள்விக் குடியென்னுந் திருப்பதிகளிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நான் பிதற்றும்வழி யறியேனென்பதாம்.

(வி-ரை.) ஈண்டி - மிகுந்து. ஆட - மூழ்க. சுழிந்து - சுழித்து (5)

புகழுமாசந்தனத்துண்டமோடகிலும்
பொன்மணிவரன்றியுநன்மலருந்தி
யகழுமாவருங்கரைவளம்படப்பெருகி
யாடுவார்பாவந்தீர்த்தஞ்சனமலம்பித்
திகழுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனுயே
னிகழுமாறறிகிலேனெப்பெருமானை
யிழித்தநோயிம்மையேயொழிக்கவல்லானை.

(ப-ரை.) புகழுமாறு - புகழும்படி, சந்தனத்துண்டமோடு அகிலும் - சந்தனமரத்துண்டங்களோடு அகிற்கட்டைகளும், பொன்மணி - பொன்னும் மணிகளும், வரன்றியும் - வாரிக்கொண்டும், நலமலர் உந்தி - நல்ல மலர்களைத் தள்ளி, அகழும் - (நிலத்தை) கிழிக்கிற, அருங்கரை வளம்படப் பெருகி -

அரிய கரையினது வளமடையப் பெருக்கெடுத்து, ஆடுவோர் பாவம் தீர்த்து - மூழ்குவோரது பாவத்தைத் தொலைத்து, அஞ்சனம் அலம்பி - மையைக் கரைத்து, திகழும் - விளங்குகிற, மாகாவிரித்து நத்தியார் - அழகிய காவிரிக் கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை - சுவாமியை, செடியனேன் நாயேன் - குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, இழித்தநோய் - இழிந்த பிணியை, இம்மையே ஒழிக்கவல்லானை – இம்மையிற்றானே யொழிக்கவல்லவனை, இகழும் ஆறு அறிகிலேன் - இகழும் வழியை யறிகிலேன் எ-று.

(பொ-ரை) புகழும்படி சந்தனமரத்துண்டங்களோடு அகிற்கட்டைகளும் பொன்னும் மணிகளும் வாரிக்கொண்டும் நல்ல மலர்களைத் தள்ளி (நிலத்தை) கிழிக்கிற அரிய கரையினது வளமடையப் பெருக்கெடுத்து மூழ்குவோரது பாவத்தைத் தொலைத்து மையைக்கரைத்து விளங்குகிற அழகிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர் திருவேள்விக் குடியிலுள்ளவர் சுவாமியை குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை இழித்த பிணியை இம்மையிற்றானே யொழிக்க வல்லவனை இகழும் வழியை யறிகிலேன்.

(க-ரை.) திருத்துருத்தி திருவேள்விக் குடியென்னுந் திருப்பதிகளி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, இகழும் வழி யறிகிலேன் என்பதாம்.

(வி-ரை) துண்டம் - துணிக்கை. அகழ்தல் - தோண்டுதல். (6)

**வரையின்மாங்கனியொடுவாழையின்கனியும்**
**வருடியும்வணக்கியுமராமரம்பொருது**
**கரையுமாகருங்கடல்காண்பதேகருத்தாய்க்**
**காம்பீலிசுமந்தொளிர்நித்திலங்கைபோய்**
**விரையுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்**
**குடியுளாரடிகளைச்செடியனேனாயே**
**னுரையுமாறறிகிலேனெம்பெருமானை**
**யுலகறிபழவினைபறவொழித்தானை.**

(ப-ரை) வரையின் - மலைகளிலுள்ள, மாங்கனியொடு வாழையின் கனியும் - மாங்கனியொடு வாழைப்பழங்களையும், வருடியும் வணக்கியும் - இடறியும் வளைத்தும், மராமரம் பொருதும் - மராமரத்தை மோதியும், கரையும் - சத்திக்கிற, மாகருங்கடல் - பெரிய கரியகடலை, காண்பதே கருத்தாய் - காண்பதே கருத்தாகக்கொண்டு, காம்-காவுகிற, பீலி சுமந்து - மயிற்றோகையைச் சுமந்து, ஒளிர் நித்திலம் கைபோய்—, விளங்குகிற முத்துக்களுடனே ஒழுங்காகச் சென்று, விரையும்-வேகமாயோடுகிற, மா காவிரித்துருத்தியார்-அழகிய காவிரிக் கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார்-திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை-சுவாமிகளை, செடியனேன்நாயேன்-குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, உலகு அறி - உலகறிந்த, பழவினை அற வொழித்தானை - பழவினையை பற்றறவொழித்தவனை, உரையுமாறு அறிகிலேன்-புகழும் வழியை யறிகிலேன் எ-று.

(போ-ரை.) மலைகளிலுள்ள மாங்கனியொடு வாழைப்பழங்களையும் இடறியும் வளைத்தும் மராமரத்தை மோதியும் சத்திக்கிற பெரிய கரியகடலை காண்பதே கருத்தாகக்கொண்டு காவுகிற மயிற்றோகையைச்சுமந்து விளங்குகிற முத்துக்களுடனே ஒழுங்காகச்சென்று வேகமாயோடுகிற அழகிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர் திருவேள்விக் குடியிலுள்ளவர் சுவாமிகளை குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை உலகறிந்த பழவினையைப் பற்றற வொழித்தவனை, புகழும் வழியை யறிந்திலேன்.

(சு-ரை.) திருத்துருத்தி திருவேள்விக்குடி யென்னுந் திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, புகழும்வழியறிந்திலேன் என்பதாம்.

(வி-ரை.) மராமரம் - ஆச்சாமரம். காம்-காவுகின்ற, காவும் என்பது காம் என விகாரமாயிற்று. (7)

ஊருமாதேசமேமனமுகந்துள்ளிப்
புள்ளினம்பலபடிந்தொண்கரையுகளக்
காருமாகருங்கடல்காண்பதேகருத்தாய்க்
கவரிமாமயிர்சுமந்தொண்பளிங்கிடறித்
தேருமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயே
னாருமாறறிகிலேனெம்பெருமானை
யம்மைநோயிம்மையேயாசறுத்தானை.

(ப-ரை.) ஊரும் - ஊராரும், மாதேசமும்-பெரிய தேசத்தாரும், மனம் உகந்து உள்ள - மனம் விரும்பியுள்ள, பல புள் இனம் படிந்து - பல பறவைக் கூட்டப் படிந்து, ஒண்கரை உகள - அழகிய கரையில் துள்ள, காருச்-கறுத்த, மா கருங்கடல் - பெரிய கருங்கடலை, காண்பதே கருத்தாய் - காணவேண்டுமென்பதே கருத்தாகக் கொண்டு, கவரிமாமயிர் சுமந்து - கவரிமானின் மயிரையேந்தி, ஒள்பளிங்கு இடறி - ஒள்ளிப்பளிங்குக் கற்களையிடறி, தேரும்-தெளிகிற, மா - பெரிய, காவிரித் துருத்தியார் - காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக்குடியிலுள்ளவர், அடிகளை-சுவாமியை, செடியனேன் நாயேன் - குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, அம்மைநோய் - அம்மைப்பிணியை, இம்மையே ஆசு அறுத்தானை - இம்மையிற்றானே பற்றறுத்தானை, ஆருமாறு அறுகிலேன்- அடையும்வழியை யறிகிலேன் எ-று.

(போ-ரை.) ஊராரும் பெரிய தேசத்தாரும் மனம் விரும்பியுள்ள பல பறவைக்கூட்டம் படிந்து அழகிய கரையில் துள்ள, கறுத்த பெரிய கருங்கடலை காணவேண்டுமென்பதே கருத்தாகக்கொண்டு கவரிமானின் மயிரையேந்தி ஒள்ளிய பளிங்குக் கற்களையிடறி தெளிகின்ற பெரிய காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர் திருவேள்விக்குடியிலுள்ளவர் சுவாமியை குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை, அம்மைப்பிணியை இம்மையிற்றானே பற்றறுத்தானை அடையும்வழியை யறிகிலேன்,

(க-ரை) திருத்துருத்தி, திருவேள்விக்குடியென்னும் திருப்பதிகளில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானை, நான் அடையும்வழி யறியேனென்பதாம்.

(வி-ரை.) உகளல் - துள்ளல். (8)

புலங்களைவளம்படப்போக்கறப்பெருகிப்
பொன்களேசுமந்தெங்கும்பூசல்செய்தார்ப்ப
விலங்குமாமுத்தினோடினமணியிடறி
யிருகரைப்பெருமரம்பீழ்ந்துகொண்டேற்றிக்
கலங்குமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
விலங்குமாறறிகிலேனெம்பெருமானை
மேலைநோயிம்மையேவீடுவித்தானை.

(ப-ரை.) புலங்களை - வயல்களை, வளம்பட - வளமுண்டாக, போக்கு அற பெருகி - போம்வழியில்லாதபடி பெருக்கெடுத்து, பொன்களேசுமந்து - பொன்னையேதாங்கி, எங்கும் பூசல்செய்து ஆர்ப்ப - எவ்விடத்தும் மோதி யாரவாரிக்க, இலங்குமாமுத்தினோடு-விளங்குகிற அழகிய முத்துக்களுடனே, இனமணி இடறி - கூட்டமாகிய மணிகளைச் சிதறி, இருகரை பெருமரம் - இருகரைகளிலுள்ள பெரிய மரங்களை, பீழ்ந்துகொண்டு எற்றி-பிளந்தெறிந்து, கலங்கும் - கலங்காநின்ற, காவிரித்துருத்தியார் - காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக் குடியிலுள்ளவர், அடிகளை-சுவாமியை, செடியனேன் நாயேன்-குற்றமுடையேனாகிய நாயேன், எம்பெருமானை - எம்பிரானை, மேலைநோய் - முன்னையபிணியை, இம்மையே வீடுவித்தானை - இம்மையிற்றானே யழித்தவனை, விலங்குமாறு அறிகிலேன் - நீங்கும்வழி அறிகிலேன் எ-று.

(போ-ரை.) வயல்களை வளமுண்டாக போம்வழியில்லாதபடி பெருக்கெடுத்து, பொன்னையேதாங்கி எவ்விடத்தும் மோதி யாரவாரிக்க, விளங்குகிற அழகிய முத்துக்களுடனே கூட்டமாகிய மணிகளைச் சிதறி, இருகரைகளிலுள்ள பெரிய மரங்களை பிளந்தெறிந்து, கலங்காநின்ற காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர் திருவேள்விக்குடியிலுள்ளவர், சுவாமியை, குற்றமுடையேனாகிய நாயேன் எம்பிரானை, முன்னைய பிணியை இம்மையிற்றானே யழித்தவனை, நீங்கும்வழி அறிகிலேன்.

(க-ரை.) திருத்துருத்தி திருவேள்விக்குடியென்னும் திருப்பதிகளிலெழுந்தருளியிருக்கும், சிவபெருமானை விட்டு நீங்கும்வழியை யறிகிலேன் என்பதாம். (9)

மங்கையோர்கூறுகந்தேறுகந்தேறி
மாற்றலர்திரிபுரம்நீறெழச்செற்ற
வங்கையான்கழலடியன்றிமற்றறியா
னடியவர்க்கடியவன்றொழுவனாரூரன்
கங்கையார்காவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுள்ளாரடிகளைச்சேர்த்தியபாட
றங்கையாற்றொழுதுதந்நாவின்மேற்கொள்வார்
தவநெறிசென்றமருலகமாள்பவரே.

(ப-ரை.) மங்கை - உமாதேவியை, ஓர் கூறு உகந்து - ஒருபாகத்திலிருக்க விரும்பி, ஏறு உகந்து ஏறி - இடபத்தின்மீது மகிழ்ந்தேறி, மாற்றலர் திரிபுரம் - பகைவரது முப்புரத்தை, நீறு எழ செற்ற - நீறுபட அழித்த, அங்கையான் - அங்கையையுடைய சிவபிரானது, கழல் அடி அன்றி - கழலையணிந்த திருவடியை யல்லது, மற்று அறியான் - வேறொன்று மறியாதவன், அடியவர்க்கு அடியவன் - தொண்டர்க்குத் தொண்டன், தொழுவன் - தொழும்பன், ஆரூரன்–சுந்தரன், கங்கையார்–கங்கையை யுடையவர், காவிரித்துருத்தியார் - காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர், வேள்விக்குடியுளார் - திருவேள்விக்குடியிலுள்ளவர், அடிகளை-சுவாமியை, சேர்த்தியபாடல் - சேர்த்திப்பாடின பாடலை, தம்கையால் தொழுது - தமது கையால் வணங்கி, தம் நாவின் மேற்கொள்வார் - தமது நாவினாற் பாடுவோர், தவநெறி சென்று - தபோமார்க்கத்திற்போய், அமரர் உலகம் ஆள்பவர் - தேவலோகத்தை யாள்பவராவர் எ-று.

(பொ-ரை.) உமாதேவியை ஒருபாகத்திலிருக்க விரும்பி இடபத்தின் மீது மகிழ்ந்தேறி பகைவரது முப்புரத்தை நீறுபட அழித்த அங்கையையுடைய சிவபிரானது கழலையணிந்த திருவடியை யல்லது வேறொன்றுமறியாதவன், தொண்டர்க்குத் தொண்டன், தொழும்பன், சுந்தரன், கங்கையையுடையவர், காவிரிக்கரையிலுள்ள திருத்துருத்தியிலுள்ளவர் திருவேள்விக்குடியிலுள்ளவர் சுவாமியை சேர்த்திப்பாடின பாடலை தமதுகையால் வணங்கி நாவினாற்பாடுவோர் தபோமார்க்கத்திற்போய் தேவலோகத்தை யாள்பவராவர்.

(கு-ரை.) திருத்துருத்தி திருவேள்விக்குடி யென்னுந் திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை ஆரூரன் புகழ்ந்துரைத்த இந்தப்பத்துப் பாடலும் கற்றுவல்லார் தேவலோகத்தை யாள்பவராவர் என்பதாம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலங்கள் சோழநாட்டிலுள்ளது.

திருத்துருத்தி சுவாமிபெயர்-முத்தாவதேசுரர். தேவியார்-அமிர்தமுகிழம்பிகை.
திருவேள்விக்குடி சுவாமிபெயர்-கல்யாணசுந்தரர். தேவியார்-பரிமளசுகந்தநாயகி.

# திருவானைக்கா

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

**மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாந்**
**துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய**
**வறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு**
**மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே.**

(ப-ரை.) மறைகள் ஆயின நான்கும் - வேதங்களாயின நான்கும், மற்றுள்ள பொருள்களும் எல்லாம் - வேறுயுள்ள பொருள்களுமாகிய யாவும், துறையும் தோத்திரத்து இறையும் — வழியும் அற்பமான தோத்திரமும், தொன்மையும் நன்மையும் ஆய - பழையவும் நல்லவையுமாகிய, அறையும் — சத்திக்கிற, பூபுனல் - அழகிய நீர்ப்பெருக்குள்ள, ஆனைக்கா உடை ஆதியை - திருவானைக் காவினைத் தனதிடமாகவுடைய முதல்வனை, நாளும் - நாள்தோறும், இறைவன் என்று - தலைவனென்றறிந்து, அடி சேர்வார் - அவனது திருவடியை யடைவோர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையராவர் எ-று.

(பொ-ரை.) வேதங்களாயின நான்கும், வேறுயுள்ள பொருள்களுமாகிய யாவும், வழியும்அற்பமானதோத்திரமும், பழையவும் நல்லவையுமானவை, சத்திக்கிற அழகிய நீர்ப்பெருக்குள்ள திருவானைக்காவினைத் தனதிடமாகவுடைய முதல்வனை, நாள்தோறும் தலைவனென்றறிந்து அவனது திருவடியை யடைவோர் எம்மையும் அடிமையாக வுடையராவர்.

(கு-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை, இறைவனென்று அவனது திருவடியை யடைவோர் எம்மையும் ஆளுடையார் என்பதாம்.

(வி-ரை.) அறைதல் - சத்தித்தல். (1)

**வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சர்கள்கூடித்**
**தங்கண்மேலடராமையுண்ணெனவுண்டிருள்கண்ட**
**னங்கமோதியவானைக்காவுடையாதியைநாளு**
**மெங்களீசனென்பார்களெம்மையுமாளுடையாரே.**

(ப-ரை.) வங்கம்மேவிய வேலை - கப்பல்கள் பொருந்திய கடலில், நஞ்சு எழ - விடமுண்டாக, வஞ்சகர்கள் கூடி - வஞ்சகர்கள் சேர்ந்து, தங்கள் மேல் அடராமை - தம்மீது நெருங்காமல், உண் என - உண்ணென்று வேண்ட, உண்டு - அந்த நஞ்சினை உணவாக வுண்டு, இருள் - இருண்ட, கண்டன் -

கண்டத்தையுடையவன், அங்கம் ஓதிய-வேதாங்கங்களை யோதின, ஆனைக்கா உடை ஆதியை - திருவானைக் காவினையுடைய முதல்வனை, நாளும் - தினந்தோறும், எங்கள் ஈசன் என்பார்கள் - எமது ஈசனென்றுசொல்வோர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையராவர் எ-று.

(பொ-ரை) கப்பல்கள் பொருந்திய கடலில் விடமுண்டாக, வஞ்சகர்கள் சேர்ந்து தம்மீது நெருங்காமல் உண்ணென்றுவேண்ட, அந்த நஞ்சினை உணவாகவுண்டு இருண்ட கண்டத்தையுடையவன், வேதாங்கங்களை யோதின திருவானைக் காவினையுடைய முதல்வனை தினந்தோறும் எமது ஈசனென்று சொல்வோர் எம்மையும் அடிமையாக வுடையராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை ஈசனென்பவர் எம்மையும் ஆளுடையார் என்பதாம்.

(வி-ரை) உண்ணென் - உண்ணென்று சொல்ல. இருண்ட - கறுத்த. ()

நீலவண்டறைகொன்றைநேரிழைமங்கையோர்திங்கள்
சாலவாளரவங்கடங்கியசெஞ்சடையெந்தை
யாலநீழலுளானைக்காவுடையாதியைநாளும்
ஏலுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே.

(ப-ரை) நீலவண்டு அறை கொன்றை — கருவண்டுகள் சத்திக்கிற கொன்றை மலர்மாலையும், நேரிழை மங்கை - கங்கையாகிய பெண்ணும், ஓர் திங்கள்-ஒருகலையாகிய சந்திரனும், சாலவாள் அரவங்கள்-மிகுதியாகிய வொளியையுடைய பாம்புகளும், தங்கிய - தங்கி வாழ்தற் கிடமாகிய, செஞ்சடை எந்தை - செஞ்சடையையுடைய எமது தந்தை, ஆலநீழலுள்-கல்லாலின் நீழலையும், ஆனைக்காவுடை - திருவானைக்காவினையும் தனதிடமாகவுடைய, ஆதியை - முதல்வனை, நாளும் - எந்நாளும், ஏலுமாறு வல்லார்கள் - ஏலுமாறு வல்லவர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையவராவர் எ-று.

(பொ-ரை) கருவண்டுகள் சத்திக்கிற கொன்றை மலர்மாலையும் கங்கையாகிய பெண்ணும், ஒரு கலையாகிய சந்திரனும், மிகுதியாகிய வொளியையுடைய பாம்புகளும், தங்கி வாழ்தற் கிடமாகிய செஞ்சடையையுடைய எமது தந்தை, கல்லாலின் நீழலையும் திருவானைக் காவினையும் தனதிடமாகவுடைய முதல்வனை, எந்நாளும் ஏலுமாறு வல்லவர் எம்மையும் அடிமையாகவுடையராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை வழிபட வல்லவர் எம்மையும் ஆளுடையா ரென்பதாம்.

(வி-ரை) அறைதல் - சத்தித்தல். (3

தந்தையாயுலகுக்கோர் தத்துவன்மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயினபெருமான்பரிசுடையவர் திருவடிக
ளந்தண்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மெந்தையென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே.

(ப-ரை) உலகுக்கு தந்தையாய் - உலகத்துக்கு தந்தையாகிய, ஓர் தத்துவன்-ஒரு மெய்யன், மெய்த்தவத்தோர்க்கு-உண்மையாகிய தவத்தினர்க்கு, பந்தம் ஆயின பெருமான்-தொடர்புடைய பெருமான், பரிசு உடையவர் திருவடிகள் - நற்குணமுடையவர்களுடைய திருவடிகள், அம்தண் பூபுனல் - அழகிய குளிர்ந்த வொளியாகிய நீர்வளமுள்ள, ஆனைக்காவுடை ஆதியை - திருவானைக்காவினைத் தனதிடமாகவுடைய முதல்வனை, நாளும் - எந்நாளும், எந்தை என்று - என்றந்தையென்று, அடிசேர்வார் - அவனது திருவடியை யடைவோர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையவராவர் எ-று.

(போ-ரை) உலகத்துக்குத் தந்தையாகிய ஒரு மெய்யன், உண்மையாகிய தவத்தினர்க்கு தொடர்புடைய பெருமான், நற்குணமுடையவர்களுடைய திருவடிகள், அழகிய குளிர்ந்த வொளியாகிய நீர்வளமுள்ள திருவானைக்காவினைத் தனதிடமாகவுடைய முதல்வனை, எந்நாளும் என்றந்தையென்று அவனது திருவடியை யடைவோர் எம்மையும் அடிமையாக வுடையவராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானது திருவடியைச் சேர்பவர் எம்மையும் ஆளுடையார் என்பதாம்.

(வி-ரை.) பந்தம் - பற்று. (4)

கணைசெந்தீயரவநாண்கல்வளையுஞ்சிலையாகத்
துணைசெய்மும்மதின்மூன்றுஞ்சுட்டவனேயுலகுய்ய
வணையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிணைகொள்சேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே.

(ப-ரை.) கணை செந்தீ - அம்பு நெருப்பு, நாண் அரவம் - நாண் பாம்பு, வளையும் சிலை கல் ஆக - வளைந்த வில்மலையாக, துணை செய் - உதவி செய்ய, மும்மதில் மூன்றும் சுட்டவனே - மும்மதிலையும் எரித்தவனே, உலகு உய்ய - உலகம் பிழைக்க, அணையும் பூம் புனல் - சேர்ந்த நல்ல நீர் உள்ள, ஆனைக்காவுடை ஆதியை - திருவானைக்காவைத் தனக்கிடமாகக் கொண்ட முதல்வனை, நாளும் - தினந்தோறும், இணைகொள் சேவடி சேர்வார் - இரண்டாகிய திருவடியை யடைவோர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையவராவர் எ-று.

(போ-ரை) அம்பு நெருப்பு, நாண் பாம்பு, வளைந்த வில் மலையாக உதவிசெய்ய, மும்மதிலையும் எரித்தவனே, உலகம் பிழைக்க சேர்ந்த நல்ல

நீருள்ள திருவானைக்காவைத் தனக்கிடமாகக்கொண்ட முதல்வனை, தினந் தோறும் இரண்டாகிய திருவடியை யடைவோர் எம்மையும் அடிமையாக வுடையவராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானது திருவடியைச் சேர்வோர் எம்மையும் ஆளுடையார் என்பதாம்.

(வி-ரை.) கணை - அம்பு. நாண் - நாரி. உய்ய-பிழைக்க. இணை-இரண்டு.

**விண்ணின்மாமதிசூடிவிலையிலிகலனணிவிமலன்**
**பண்ணினேர்மொழிமங்கைபங்கினன்பசுவுகந்தேறி**
**யண்ணலாகியவானைக்காவுடையாதியைநாளு**
**மெண்ணுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே.**

(ப-ரை.) விண்ணின் மாமதிசூடி - ஆகாய சஞ்சாரியாகிய அழகிய பிறையை யணிந்தவன், விலை இலிகலன் அணி விமலன் - விலைமதிக்கப்படாதனவாகிய ஆபரணங்களை யணிந்த பரிசுத்தன், பண்ணின் ஏர் மொழி மங்கை பங்கினன் - பண்போல அழகிய மொழியினையுடைய உமாதேவிபாகன், பசு உகந்து ஏறி - இடபத்தை விரும்பி யேறுவோன், அண்ணல் ஆகிய-பெரியோனாகிய, ஆனைக்காவுடை ஆதியை - திருவானைக்காவைத் தனக்கிடமாகக் கொண்ட முதல்வனை, நாளும் - தினந்தோறும், எண்ணுமாறு வல்லார்கள்- நினைக்கவல்லார்கள், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையவராவர் எ-று.

(பொ-ரை.) ஆகாய சஞ்சாரியாகிய அழகிய பிறையையணிந்தவன், விலை மதிக்கப் படாதனவாகிய ஆபரணங்களையணிந்த பரிசுத்தன், பண்போல அழகிய மொழியினையுடைய உமாதேவிபாகன், இடபத்தை விரும்பி யேறுவோன், பெரியோனாகிய திருவானைக்காவைத் தனக்கிடமாகக் கொண்ட முதல்வனை, தினந்தோறும் நினைக்கவல்லார்கள் எம்மையும் அடிமையாக வுடையவராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை எண்ணவல்லவர் எம்மையும் ஆளுடையார் என்பதாம். (6)

**தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுந்து**
**நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே**
**யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு**
**மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே.**

(ப-ரை.) தாரம் ஆகிய - முத்துக்கள் பொருந்திய, பொன்னிதண்துறை ஆடி விழுந்து - காவிரியின் குளிர் துறையில் நீராடி விழுந்து, நீரில் நின்று அடிபோற்றி - நீரில் நின்று அடிவணங்கி, நின்மல - நின்மலனே, கொள்

என - ஏற்றுக்கொள்வாயென்றுவேண்ட, ஆங்கே ஆரம்கொண்ட-அவ்வாறே மாலையாயேற்றுக்கொண்ட, எம் ஆனைக்காவுடை ஆதியை - திருவானைக்காவினைத் தனக் கிடமாகக்கொண்ட முதல்வனை, நாளும் - தினந்தோறும், ஈரம் உள்ளவர் - அன்புள்ளவர், நாளும் - எந்நாளும், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையவராவர் எ-று.

(பொ-ரை.) முத்துக்கள் பொருந்திய காவிரியின் குளிர்துறையில் நீராடி விழுந்து, நீரில் நின்று அடிவணங்கி, நின்மலனே, ஏற்றுக்கொள்வாயென்று வேண்ட அவ்வாறே மாலையா யேற்றுக்கொண்ட திருவானைக் காவினைத் தனக் கிடமாகக்கொண்ட முதல்வனை, தினந்தோறும் அன்புள்ளவர் எம்மையும் அடிமையாக வுடையவராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை அன்பு செய்வோர் எம்மையும் ஆளுடையாரென்பதாம்.

(வி-ரை.) தண்துறை-குளிர்ந்த நீர்த்துறை. ஆரம் - மாலை. ஈரம் அன்பு.

உரவமுள்ளதோருழையின் னுரிபுலியதளுடையானை
விரைகொள்கொன்றையினானைவிரிசடைமேற்பிறையானை
யரவம்வீக்கியவானைக்காவுடையாதியைநாளு
மிரவுமெல்லியும்பகலுமேத்துவாரெம்மையுமாளுடையாரே.

(ப-ரை.) உரவம் உள்ளது - வேகமுள்ளதாகிய, ஓர் உழையின் உரி - ஒரு மான்தோல், புலி அதள் - புலித்தோல், உடையானை - உடையவனை, விரைகொள் கொன்றையினானை - மணங்கொண்ட கொன்றைமலர் மாலையை யுடையவனை, விரிசடைமேல் பிறையானை - விரிந்த சடையின்மீது பிறையை வைத்துக்கொண்டவனை, அரவம் வீக்கிய - பாம்பைக் கச்சையாகக்கட்டின, ஆனைக்காவுடை ஆதியை - திருவானைக்காவினைத் தனக்கிடமாகக்கொண்ட முதல்வனை, நாளும் - நாள்தோறும், இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார்-இருளுருவாகிய இரவிலும் பகலிலும் துதிப்பவர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையராவர் எ-று.

(பொ-ரை.) வேகமுள்ளதாகிய ஒரு மான்தோல் புலித்தோலுடையவனை, மணங்கொண்ட கொன்றைமலர் மாலையையுடையவனை, விரிந்த சடையின்மீது பிறையை வைத்துக்கொண்டவனை, பாம்பைக் கச்சையாகக்கட்டின திருவானைக்காவினைத் தனக்கிடமாகக்கொண்ட முதல்வனை, நாள்தோறும் இருளுருவாகிய இரவிலும் பகலிலும் துதிப்பவர் எம்மையும் அடிமையாக வுடையராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை இரவும் பகலும் ஏத்துவோர் எம்மையும் ஆளுடையாரென்பதாம்.

(வி-ரை.) வீக்கிய - கச்சையாகக் கட்டின. (8)

வலங்கொள்வாரவர் தங்கள் வல்வினை தீர்க்குமருந்து
கலங்கக்காலனைக்காலாற்காமனைக்கண்சிவப்பானை
யலங்கனீர்பொருமானைக்காவுடையாதியைநாளு
மிலங்குசேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே.

(ப-ரை.) வலம்கொள்வார் - வலம் செய்வோராகிய, அவர் தங்கள்- அவர்களுடைய, வல்வினை தீர்க்கும் மருந்து-வலிய வினைகளை யொழிக்கிறமருந்து, காலனைக் காலால் - யமனைக்காலினாலும், காமனை கண்ணால்-மன்மதனைக் கண்ணினாலும், கலங்க-மனங்கலங்கும்படி, சிவப்பானை-வென்றவனை, அலங்கல்நீர் பொரும்-அசையாநின்ற நீர்மோதுகிற, ஆனைக்காவுடை ஆதியை-திருவானைக் காவினைத் தனக்கிடமாகக் கொண்ட முதல்வனை, நாளும் - தினந்தோறும், இலங்கு சேவடி சேர்வார் - விளங்குகிற திருவடியை யடைபவர், எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையராவர் எ-று.

(பொ-ரை.) வலம் செய்வோராகிய அவர்களுடைய வலிய வினைகளை யொழிக்கிற மருந்து, திருவடியால் யமனை மனங்கலங்கும்படி மன்மதனைக் கண்சிவந்து எரித்தவனை, அசையாநின்ற நீர் மோதுகிற திருவானைக்காவினைத் தனக்கிடமாகக் கொண்ட முதல்வனை, தினந்தோறும் திருவடியையடைபவர் எம்மையும் அடிமையாக வுடையராவர்.

(கு-ரை.) திருவானைக்காச் சிவபெருமானது திருவடியைச் சேர்பவர் எம்மையும் ஆளுடையா ரென்பதாம்.

(வி-ரை.) வலம் செய்தல் - பிரதக்ஷிணம் செய்தல். கண்சிவத்தல் - கோபித்தல். அலங்கல் – அசைதல். பொருதல் - மோதுதல். இலங்கல் - பிரகாசித்தல். சேவடி - செவந்த திருவடி. (9)

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநின்றருள் கூரநினைந்து
வாழவல்லவன்றொண்டன் வண்டமிழ்மாலைவல்லார்போய்
ஏழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே.

(ப-ரை.) ஆழியாற்கு - திருமாலுக்கு, அருள் - அருள் செய்த, ஆனைக்காவுடை ஆதி - திருவானைக் காவினையுடைய முதல்வனது, பொன் அடியின் நீழலே - பொன்னடியின் நீழலே, சரணாக நின்று - தஞ்சமாகப் பற்றிநின்று, அருள்கூர நினைந்து - திருவருளை மிகவும் நினைந்து, வாழவல்ல வன் றொண்டன் - சுந்தரனது, வன் தமிழ்மாலை வல்லார் போய் - வளமாகிய தமிழ்மாலையைக் கற்று வல்லார் சென்று, மா – பெரிய, ஏழுபிறப்பு அற்று - ஏழுபிறப்பு மொழிந்து, எம்மையும் ஆளுடையார் - எம்மையும் அடிமையாக வுடையராவர் எ-று.

(பொ-ரை.) திருமாலுக்கு அருள்செய்த திருவானைக் காவினைத் தனக்கிடமாகக் கொண்ட முதல்வனது பொன்னடியின் நீழலே தஞ்சமாகப் பற்றி நின்று, திருவருளை மிகவும் நினைந்த சுந்தரனது வளமாகிய தமிழ் மாலையைக் கற்று வல்லார் சென்று பெரிய எழு பிறப்பு மொழிந்து எம்மையும் அடிமையாக வுடையராவர்.

(க-ரை.) திருவானைக்காச் சிவபெருமானை வன்றொண்டன் பாடின இப் பத்துப்பாடலுங் கற்று வல்லார் பிறப்பற்றவராய், எம்மையும் ஆளுடையராவர் என்பதாம்.

(வி-ரை.) ஆழியான் - சக்கரப்படையை யுடையவன், பாற்கடலை யுடையவன் என்றலுமொன்று. கூர - மிக. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சப்புகேசுவரர். தேவியார் - அகிலாண்டேசுவரியம்மை.

---

## திருவாஞ்சியம்

பண்-பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

**பொருவனார் புரிநூலார் புணர்முலையுமை யவளோடு**
**மருவனார் மருவார்பால் வருவதுமில் லைநம்மடிக**
**ளிருவனார் பணிந்தேத்துந் திகழ்திருவாஞ்சியத் துறையு**
**மொருவனா ரடியாரை யூழ்வினைநலியவொட்டாரே.**

(ப-ரை.) பொருவனார் - போர்புரிபவர், (வேடுவனார்) புரிநூலார்-முப்புரி நூலை யுடையவர், புணர்முலை உமையவளோடு மருவனார் - நெருங்கின முலைகளை யுடையவளாகிய உமாதேவியோடுங் கூடியிருப்பவர், மருவார் பால் வருவதும் இல்லை - தம்மை யடுக்காதவரிடத்தில் வருதலு மில்லை, நம் அடிகள்-எமது சுவாமி, திருவனார் பணிந்து எத்தும் - சிவஞானச் செல்வர் வணங்கித் துதிக்கிற, திகழ் - விளங்குகிற, திருவாஞ்சியத்து உறையும் - திருவாஞ்சியத்தில் வாழ்கிற, ஒருவனார் - ஒப்பற்றவர், அடியாரை - தொண்டரை, ஊழ்வினை நலிய வொட்டார் - ஊழ்வினை வருத்த வொட்டார் எ-று.

(பொ-ரை.) போர்புரிபவர் (வேடுவனார்) முப்புரி நூலையுடையவர், நெருங்கின முலைகளை யுடையவளாகிய உமாதேவியோடுங் கூடியிருப்பவர், தம்மை யடுக்காதவரிடத்தில் வருதலுமில்லை, எமது சுவாமி, சிவஞானச் செல்வர் வணங்கித் துதிக்கிற விளங்குகிற திருவாஞ்சியத்தில் வாழ்கிற ஒப்பற்றவர் தொண்டரை ஊழ்வினை வருத்த வொட்டார்.

(க-ரை.) திருவாஞ்சியத்துச் சிவபெருமான் தன்னைத் துதிக்கும் அடியாரை ஊழ்வினை நலியவொட்டார் என்பதாம்.

(வி-ரை) மருவனூர் - கூடினவர். மருவார் - அடையாதவர். திகழ்தல் - விளங்குதல். (1)

**தொறுவிலானிளவேறுதுண்ணெனவிடிகுரல்வெருவிச்**
**செறுவில்வாளைகளோடச்செங்கயல்பங்கயத்தொதுங்கக்**
**கறுவிலாமனத்தார்கள்காண்டகுவாஞ்சியத்தடிகண்**
**மறுவிலாதவெண்ணீறுபூசுதன்மன்னுமொன்றுடைத்தே.**

(ப-ரை.) தொறுவில் - பசுக்கூட்டத்திலுள்ள, ஆன் இள ஏறு - இடபத்தின், துண்ணென இடிகுரல் வெருவி - துண்ணென்னும் இடிகுரலுக்கு அஞ்சி, செறுவில் வாளைகள் ஓட - வயல்களில் வாளைமீன்கள் ஓடாநிற்க, செங்கயல் பங்கயத்து ஒதுங்க - செங்கயல்கள் தாமரைமலரி லொதுங்கா நிற்க, கறுவு இல்லா - கோபமில்லாத, மனத்தார்கள் - மனமுடையவர்கள், காண்டகு - காணத்தகுந்த, வாஞ்சியத்து அடிகள் - திருவாஞ்சியத்திலுள்ள சுவாமி, மறு இல்லா - களங்கமற்ற, வெண்ணீறு பூசுதல் - திருவெண்ணீறு பூசுதல், மன்னும் ஒன்று உடைத்து - நிலைபெற்ற ஒரு கருத்தினையுடைத்து எ-று.

(பொ-ரை.) பசுக்கூட்டத்திலுள்ள இடபத்தின் துண்ணென்னும் இடிகுரலுக்கு அஞ்சி, வயல்களில் வாளைமீன்கள் ஓடாநிற்க, செங்கயல்கள் தாமரைமலரி லொதுங்காநிற்க, கோபமில்லாத மனமுடையவர்கள் காணத்தகுந்த திருவாஞ்சியத்திலுள்ள சுவாமி களங்கமற்ற திருவெண்ணீறு பூசுதல் நிலைபெற்ற ஒரு கருத்தினையுடைத்து.

(க-ரை.) திருவாஞ்சியத்துச் சிவபெருமானுக்கு திருநீறு பூசுந் தொழிலொன்றுண்டென்பதாம்.

(வி-ரை) இடிகுரல் - இடிபோலுங் குரல். பங்கயம் - தாமரை மலர். (2)

**தூர்த்தர்மூவெயிலெய்துசுடுநுனைப்பகழியதொன்றாற்**
**பார்த்தனுர்திரடோண்மேற்பன்னுனைப்பகழிகள்பாய்ச்சித்**
**தீர்த்தமாமலர்ப்பொய்கைத்திகழ்திருவாஞ்சியத்தடிகள்**
**சாத்துமாமணிக்கச்சங்கொருதலைபலதலையுடைத்தே.**

(ப-ரை.) தூர்த்தர் - கொடியவரது, மூவெயில் - மும்மதில்களை, சுடுநுனை பகழியது ஒன்றால் - மிகு கூர்மையுள்ள ஓரம்பினால், எய்து - எய்து, பார்த்தனுர் - அருச்சுநனுருடைய, திரள்தோள் மேல் - திரண்ட புயத்தின்மீது, பல நுனைப்பகழிகள் பாய்ச்சி - பலவாகிய கூர்மையுள்ள அம்புகளைப் பிரயோகித்து, தீர்த்தம் - நன்னீருள்ள, மலர்ப்பொய்கை திகழ் - அழகிய பூந்தடங்களால் விளங்குகிற, திருவாஞ்சியத்து அடிகள் - திருவாஞ்சியத்து சுவாமிகள், சாத்

தும் - சாத்திக்கொள்ளுகிற, மாமணிகச்சு - மாணிக்கக் கச்சானது, அங்கு ஒரு தலை பல்தலை யுடைத்து - அவ்விடத்தே உண்மையாகப் பல தலைகளை யுடைத்தாயிருக்கிறது எ-று.

(பொ-ரை.) கொடியவரது மும்மதில்களை மிகு கூர்மையுள்ள ஓரம்பினால் எய்து, அருச்சுநனுருடைய திரண்ட புயத்தின்மீது பலவாகிய கூர்மையுள்ள அம்புகளைப் பிரயோகித்து, நன்னீருள்ள அழகிய பூந்தடங்களால் விளங்குகிற திருவாஞ்சியத்து சுவாமிகள் சாத்திக் கொள்ளுகிற மாணிக்கக் கச்சானது அவ்விடத்தே உண்மையாகப் பல தலைகளை யுடைத்தாயிருக்கிறது.

(க-ரை.) திருவாஞ்சியத்து அடிகள் அணிகிற கச்சானது ஒரு தலையாகப் பல தலைகளை உடைத்து என்பதாம்.

(வி-ரை.) மாமணிக்கச்சு - பாம்பு, மணிகளில் மாணிக்கத்திற் சிறந்த தொன்றின்மையால் அதனை மாமணியென்றார். (3)

**சள்ளைவெள்ளையங்குருகுதானதுவாமெனக்கருதி**
**வள்ளைவெண்மலரஞ்சிமறுகியோர்வாளையின்வாயிற்**
**றுள்ளுதெள்ளுநீர்ப்பொய்கைத்துறைமல்குவாஞ்சியத்தடிகள்**
**வெள்ளைநுண்பொடிபூசும்விகிர்தமொன்றொழிகிலர்தாமே.**

(ப-ரை.) சள்ளை-சிறுமீன்கள், வெள்ளைஅம் குருகுதான் அதுவாம் எனக் கருதி - வெள்ளையா யழகுடைத்தாயிருக்கிற நாரையா மதுவென்று நினைத்து, வள்ளைவெள்மலர் அஞ்சி - வள்ளைக்கொடியின் வெண்மலர்க்கு அஞ்சி, மறுகி - மயங்கி, ஓர் வாளையின் வாயில் - ஒரு வாளையின் வாயினில், துள்ளு - துள்ளுகிற, தெள்ளுநீர் - தெளிந்த நீரையுடைய, பொய்கைத் துறைமல்கு - பொய்கைத்துறைகள் நிறைந்த, வாஞ்சியத்து அடிகள் - திருவாஞ்சியத்து சுவாமி, வெள்ளை நுண்பொடி - வெண்மையாகிய நுண்ணிய திருநீற்றை, பூசும் விகிதம் ஒன்று ஒழிகிலர் - பூசிக்கொள்ளும் வழக்கத்தைச் சிறிதும் நீங்கிலர் எ-று.

(பொ-ரை.) சிறு மீன்கள் வெள்ளையாயழகுடைத்தாயிருக்கிற நாரையா மதுவென்று நினைத்து, வள்ளைக்கொடியின் வெண்மலர்க்கு அஞ்சி, மயங்கி ஒரு வாளையின் வாயினில் துள்ளுகிற தெளிந்த நீரையுடைய பொய்கைத்துறைகள் நிறைந்த திருவாஞ்சியத்துசுவாமி வெண்மையாகிய நுண்ணிய திருநீற்றை பூசிக்கொள்ளும் வழக்கத்தைச் சிறிதும் நீங்கிலர்.

(க-ரை.) திருவாஞ்சியத்தடிகள் வெள்ளைப்பொடி பூசுதல் ஒழியார் என்பதாம்.

(வி-ரை.) வெள்ளையங்குருகு - வெண்ணாரை. தெள்ளுநீர் - தெளிந்தநீர். விகிர்தம்-வழக்கம். (4)

மைகொள்கண்டரெண்டோளர்மலைமகளுடனுறைவாழ்க்கை
கொய்தகூவிளமாலைகுலாவியசடைமுடிக்குழகர்
கைதைநெய்தலங்கழனிகமழ்புகழ்வாஞ்சியத்தடிகள்
பைதல்வெண்பிறையோடுபாம்புடன்வைப்பதுபரிசே.

(ப-ரை) மைகொள்கண்டர் - கருநிறங்கொண்ட கண்டத்தையுடையவர் எண்தோளர்-எட்டுத்தோள்களையுடையவர், மலைமகளுடன் - மலையரையன் மகளோடு, உறைவாழ்க்கை-வாழும் வாழ்க்கை, கொய்த கூவிளமாலை குலாவிய-வில்வமாலை விளங்கிய, சடைமுடிக்குழகர் - சடைமுடியையுடைய அழகர், கைதை-தாழை மலர், நெய்தலம் கழனிகமழ்-நெய்தற்பூவையுடைய அழகிய வயல்களில் மணக்கின்ற, புகழ்-புகழமைந்த, வாஞ்சியத்து அடிகள்-திருவாஞ்சியத்து சுவாமி, பைதல் வெண்பிறையோடு - வெள்ளிய இளம்பிறையோடு, பாம்பு - பாம்பையும், உடன்வைப்பது-ஒருசேரவைத்துக்கொள்வது, பரிசே-தகுதியோ. எ-று.

(போ-ரை.) கருநிறங்கொண்ட கண்டத்தையுடையவர், எட்டுத்தோள்களையுடையவர், மலையரையன் மகளோடுவாழும் வாழ்க்கை வில்வமாலை விளங்கிய சடைமுடியையுடைய அழகர், தாழைமலர் நெய்தற்பூவையுடைய அழகிய வயல்களில் மணக்கின்ற புகழமைந்த திருவாஞ்சியத்து சுவாமி, வெள்ளிய இளம்பிறையோடு பாம்பையும் ஒருசேரவைத்துக்கொள்வது தகுதியோ.

(க-ரை.) திருவாஞ்சியத்தடிகள் பிறையோடு பாம்பையும் சேரவைப்பது தகுதியோவென்பதாம்.

(வி-ரை.) மை - கருமை. கூவிளம் - வில்வம். நெய்தல் - கருநெய்தல். பைதல் - இளமை. (5)

கார்த்தைகூவிளமாலைகடிமலர்க்கொன்றையுஞ்சூடிப்
பாந்தபாரிடஞ்சூழவருவர்நம்பரமர்தம்பரிசாற்
றிருந்துமாடங்கணீடுதிகழ்திருவாஞ்சியத்துறையு
மருந்தனாரடியாரைவல்வினைநலியவொட்டாரே.

(ப-ரை.) காந்தை கூவிளமாலை - காந்தைமாலை கூவிளமாலைகளோடு, கடிமலர்க்கொன்றையும் சூடி - மணமுள்ள கொன்றைமலர் மாலையையும் தரித்து, பரந்த - பரவிய, பாரிடம் சூழவருவர் - பூதகணங்கள் சுற்றிவர வருவார், நம்பரமர்தம் பரிசால் - எமது பரமரது பெருமையை, திருந்துமாடங்கள் நீடு-திருத்தமாகிய மாடங்கள் ஓங்கின, திகழ் - விளங்குகிற, திருவாஞ்சியத்து உறையும்-திருவாஞ்சியத்தில் வாழ்கிற, மருந்து அன்னார்-அமிர்தத்தை நிகர்த்தவர், அடியாரை - தமது அடியாரை, வல்வினை நலியவொட்டாரே - வலிய வினைகள் வருத்தவொட்டார் எ-று

(போ-ரை.) காந்தைமாலை கூவிளமாலைகளோடு மணமுள்ள கொன்றைமலர் மாலையையும் தரித்து, பரவிய பூதகணங்கள் சுற்றிவர வருவார், எமது பா

மாது பெருமையை திருத்தமாகிய மாடங்கள் ஓங்கின விளங்குகிற திருவாஞ்சியத்தில் வாழ்கிற அமிர்தத்தை நிகர்த்தவர், தமது அடியாரை வலியவினைகள் வருத்தவொட்டார்.

(க-ரை.) திருவாஞ்சியத்தடிகள் தம்மடியாரை வல்வினை நலியவொட்டாரென்பதாம்.

(வி-ரை) பரிசு - தன்மை. மருந்து அன்னார் – மருந்தை யொத்தவர். மருந்து - அமிர்தம். (6)

அருவிபாய்தருகழனியலர்தருகுவளையங்கண்ணார்
குருவியாய்கிளிசேர்ப்பக்குருகினமிரிதருகிடங்கிற்
பருவரால்குதிகொள்ளும்பைம்பொழில்வாஞ்சியத்துறையு
மிருவரால்றியொண்ணாவிறைவனதறைகழல்சரணே.

(ப-ரை.) அருவிபாய்தருகழனி - அருவிபாறுகள் பாய்கிற வயல்களில், அலர்தரு - மலர்கின்ற, குவளையங்கண்ணார் - குவளைமலர் போலுங் கண்களையுடையவராகிய மாதர், குருவி கிளி ஆய் - குருவிகளையும் கிளிகளையும் ஓட்டுகிற, சேர்ப்பு - கடற்கரையில், குருகு இனம்-பறவையினங்கள், இரிதருகிடங்கில் – ஓடாநின்ற அகழியில், பருவரால் குதிகொள்ளும் - பெரிய வரால்மீன்கள் துள்ளுகிற, பைம்பொழில் - பசுமையாகிய சோலைகள் சூழ்ந்த, வாஞ்சியத்து உறையும் - திருவாஞ்சியத்தில் வாழ்கின்ற, இருவரால் அறியொண்ணா இறைவனது-பிரமவிட்டுணுக்களால் அறியவொண்ணாத இறைவனது, அறைகழல் - சத்திக்கிற வீரக்கழலணிந்த திருவடியே, சரண் - எமக்குப் புகலிடமாவது எ-று.

(பொ-ரை) அருவியாறுகள் பாய்கிற வயல்களில் மலர்கின்ற குவளைமலர்போலுங் கண்களையுடையவராகிய மாதர் குருவிகளையும் கிளிகளையும் ஓட்டுகிற கடற்கரையில் பறவையினங்கள் ஓடாநின்ற அகழியில் பெரிய வரால்மீன்கள் துள்ளுகிற பசுமையாகிய சோலைகள்சூழ்ந்த திருவாஞ்சியத்தில் வாழ்கின்ற பிரமவிட்டுணுக்களால் அறியவொண்ணாத இறைவனது சத்திக்கிற வீரக்கழலணிந்த திருவடியே எமக்குப் புகலிடமாவது.

(க-ரை) திருவாஞ்சியத்து அடிகளது திருவடியே எமக்குப் புகலிடமாவதென்பதாம்.

(வி-ரை.) சேர்ப்பு - கடற்கரை. கிடங்கு - அகழி. (7)

களங்களார்தருகழனியளிதரக்களிதருவண்டு
வுளங்களரர்களிப்பாடலும்பரிலொலித்திடுங்காட்சி
குளங்களாணிழற்கீழ்நற்குயில்பயில்வாஞ்சியத்தடிகள்
விளங்குதாமரைப்பாதநினைப்பவர்வினைநலிவிலரே.

(ப-ரை) களங்கள் ஆர்தரு – நெற்களங்கள் நிறைந்த, கழனி - வயல்கள், அளிதர - முதிர்ந்துவிளைய, களிதருவண்டு - களிக்கிற வண்டுகள், உளங்கள் ஆர் - கேட்போரது மனங்கள் நிறைந்த, களிபாடல் - மகிழ்தற்கேதுவாகிய பாடல், உம்பரில் ஒலித்திடும் காட்சி - மேலுலகத்திற் கேட்கும்படியாயுள்ள தோற்றத்தோடு, குளங்களால் - குளங்களிலும், நிழற்கீழ் - மரநீழலிலும், நல்குயில் பயில் - அழகிய குயில்கள் நெருங்குகிற, வாஞ்சியத்து அடிகள் - திருவாஞ்சியத்து சுவாமியது, விளங்குதாமரைப்பாதம் நினைப்பவர் - பிரகாசிக்கிற தாமரைமலர்போலும் திருவடியை நினைப்பவர், வினைநலிவு இலர்-வினைகளால் வருந்துதல் இல்லாதவராவர் எ-று.

(பொ-ரை.) நெற்களங்கள் நிறைந்த வயல்கள் முதிர்ந்துவிளைய களிக்கிற வண்டுகள் கேட்போரது மனங்கள் நிறைந்த மகிழ்தற்,கேதுவாகிய பாடல், மேலுலகத்திற் கேட்கும்படியாயுள்ள தோற்றத்தோடு, குளங்களிலும்,மரநீழலிலும், அழகிய குயில்கள் நெருங்குகிற திருவாஞ்சியத்து சுவாமியது பிரகாசிக்கிற தாமரைமலர்போலும் திருவடியை நினைப்பவர் வினைகளால் வருந்துதலில்லாதவராவர்.

(க ரை.) திருவாஞ்சியத்தடிகளின் திருவடியை நினைப்பவர் வினைகளால் வருந்தமாட்டார் என்பதாம்.

(வி-ரை.) அளிதர களிதரு என்பவற்றிற்கு முறையே அளிதா களிதா என்பன பகுதிகள். உம்பர் - மேலுலகம். பயிலல் - நெருங்கல். (8)

வாழையின்கனிதானுமதுவிம்மு வருக்கையின்சுளையுங்
கூழைவானரந்தம்மிற்கூறிதுசிறிதெனக்குழறித்
தாழைவாழையந்தண்டாற்செருச்செய்துதருக்குவாஞ்சியத்
தேழைபாகனையல்லாலிறையெனக்கருதுதலிலமே. [து

(ப-ரை.) வாழையின் கனிதானும்-வாழைக்கனிகளும், மதுவிம்மு வருக்கையின் சுளையும்-தேன் நிறைந்த பலாச்சுளைகளும், கூழைவானரம் தம்மில் – குறிய வாநரங்கள் தமக்குள்ளே, குறிது சிறிது எனக் குழறி-குறியது சிறியது என்று குழறி, தாழை வாழையந் தண்டால் - தாழைத்தண்டு வாழைத்தண்டு என்பவற்றால், செருச்செய்து-போர்செய்து, தருக்கு - செருக்குகிற, வாஞ்சியத்துள்-திருவாஞ்சியத்திலிருக்கிற, ஏழைபாகனை அல்லால் - மங்கைபங்கனை அல்லது, இறையெனக் கருதுதல் இலம் - வேறொருவரை இறைவனென நினைத்தலிலம் எ-று.

(பொ ரை ) வாழைக்கனிகளும் தேன்நிறைந்த பலாச்சுளைகளும், குறிய வாநரங்கள் தமக்குள்ளே குறியது சிறியது என்று குழறி, தாழைத்தண்டு

வாழைத்தண்டு என்பவற்றால் போர்செய்து செருக்குகிற திருவாஞ்சியத்திலிருக்கிற மங்கைபங்கனையல்லது வேறொருவரை இறைவனென நினைத்தலிலம்.

(க-ரை) திருவாஞ்சியத் திறைவனையன்றி வேறொருவரை நினைக்கமாட்டோம் யாம் என்பதாம்.

(வி-ரை.) விம்முதல் - மிகுதல். கூழை - குறுமை. (9)

**செந்நெலங்கலங்கழனித்திகழ்திருவாஞ்சியத்துறையு**
**மின்னலங்கலஞ்சடையெம்மிறைவனதறைகழல்பரவும்**
**பொன்னலங்கலநன்மாடப்பொழிலணிநாவலாரூரன்**
**பன்னலங்கனன்மாலைபாடுமின்பத்தருளீரே.**

(ப-ரை.) அம்செந்நெல்கழனி - அழகிய செந்நெல்வயல்கள், திகழ் - விளங்குகிற, திருவாஞ்சியத்து உறையும் - திருவாஞ்சியத்தில் வாழ்கிற, மின் அலங்கல் அம்சடை - மின்போலும் அசைகிற அழகிய சடையையுடைய, எம் இறைவனது - எமது தலைவனது, அறைகழல் பரவும் - திருவடியைத் துதிக்கிற, பொன்னலம்-பொன்னினழகினாலும், கலம் - ஆபரணங்களின் அழகினாலும், நல்மாடம் - நல்லமாடங்களின் அழகினாலும், பொழில் — சோலைகளின் அழகினாலும், அணி - அலங்கரிக்கப்பெற்ற, நாவலாரூரன் - சுந்தரனது, பல் நலம் கல் நல்மாலை-பல நன்மைகளையும் கற்பித்தற்குரிய சிறந்த தமிழ்ச்சொன்மாலையை, பாடுமின் - பாடுங்கள், பத்தர் உள்ளீரே - பத்தர்களாயிருப்பவர்களே எ-று.

(போ ரை.) அழகிய செந்நெல்வயல்கள் விளங்குகிற திருவாஞ்சியத்தில் வாழ்கிற மின்போலும் அசைகிற அழகிய சடையையுடைய எமதுதலைவனது திருவடியைத் துதிக்கிற, பொன்னினழகினாலும் ஆபரணங்களின் அழகினாலும் நல்ல மாடங்களினழகினாலும், சோலைகளின் அழகினாலும் அலங்கரிக்கப்பெற்ற சுந்தரனது பல நன்மைகளையும் கற்பித்தற்குரிய சிறந்த தமிழ்ச்சொன்மாலையை பாடுங்கள் பத்தர்களாயிருப்பவர்களே.

(க-ரை.) திருவாஞ்சியத் தடிகளது சீர்பாதத்தை நாவலூரான் புகழ்ந்து பாடிய இப் பத்துப்பாடலும், பத்தர்காள் நீங்கள்பாடியுய்யக்கடவீர் என்பதாம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வாஞ்சியநாதர். தேவியார் - வாழவந்தநாயகியம்மை.

## திருவையாறு

பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**பரவும்பரிசொன் றறியேனான் பண்டேயும்மைப்பயிலாதே**
**னிரவும்பகலு நினைந்தாலுமெய்த நினையமாட்டேனான்**
**காவலருவிகமுகுண்ணத்தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை**
**யரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.**

(ப-ரை.) பாவும் பரிசு ஒன்று அறியேன் – யான் உன்னைத் துதிக்கும் வகை சிறிது மறியேன், நான் பண்டே உம்மை பயிலாதேன் - யான் முன்னமே உம்மை யடுக்காதவன், இரவும் பகலும் நினைந்தாலும் - இரவும் பகலும் நினைத்தாலும், எய்த நினையமாட்டேன் நான் - நான் உம்மையடையக் கருத மாட்டேன், காவல் அருவி – வேகமுள்ள அருவியாறு, கமுகு உண்ண - கமுகமரங்களை யொடிக்க, தெங்கங் குலைக்கீழ் - தென்னங் குலையின் கீழேயுள்ள, கருப்பு ஆலை அரவம் - கரும்பாலையின் சத்தம், திரை - அலைகளையுடைய, காவிரிக் கோட்டத்து - காவிரியாற்றங் கரையிலிருக்கிற, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) யான் உன்னைத் துதிக்கும் வகை சிறிது மறியேன், யான் முன்னமே உம்மை யடுக்காதவன், இரவும் பகலும் நினைத்தாலும் நான் உம்மை யடையக் கருதமாட்டேன், வேகமுள்ள அருவியாறு கமுகமரங்களை யொடிக்க தென்னங் குலையின் கீழேயுள்ள கரும்பாலையின் சத்தம் அலைகளையுடைய காவிரியாற்றங் கரையிலிருக்கிற திருவையாற்றையுடைய சுவாமீ.

(கு-ரை.) ஐயாறுடைய அடிகாள், இரவும் பகலும் உம்மை யடைந்துய்ய வெண்ணுதிருக்கிறேன் யானென்பதாம்.

(வி-ரை.) பரவல் – வழிபடல். பரிசு - விதம். பயிலல் - நெருங்கல். எய்தல் - அடைதல். காவல் அருவி - மிக்க வலியுள்ள அருவியாறு. அரவம்-ஒலி. காவிரிக் கோட்டத்து ஐயாறு - காவிரிக் கரையிலுள்ள திருவையாறு. கோடு - கரை. இது அம்முச்சாரியை பெற்று இடையொற்றிரட்டிக் கோட்டமென்றாயிற்று. (1)

**எங்கேபோவேனாயினுமங்கேவந்தென்மனத்தீராய்ச்**
**சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளொக்கவே**
**கங்கைசடைமேற்கரந்தானேகலைமான்மறியுங்கனன்மழுவுந்**
**தங்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.**

(ப-ரை.) எங்கே போவேனாயினும் - நான் எவ்விடத்துச் செல்லுவேனாயினும், அங்கே வந்து - அவ்விடத்தே யெழுந்தருளி, என் மனத் தீராய் -

என் மனத்திலிருப்பவராய், சங்கை ஒன்றும் இன்றியே-சந்தேகம் சிறிது மில்லாமலே, தலைநாள் - முதல்நாள், கடைநாள் ஒக்கவே - கடைநாளை ஒத்திருக்கவே, கங்கை சடைமேல் கரந்தானே - கங்கா நதியைச் சடையி லொளித்தவனே, கலைமான் மறியும் - கலைமான் கன்றும், கனல் மழுவும் - நெருப்புருவாகிய மழுவும், தங்கும் - தாங்குகிற, திரை - அலைகளையுடைய, காவிரிக் கோட்டத்து - காவிரிக் கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) நான் எவ்விடத்துச் செல்லுவேனாயினும் அவ்விடத்தே யெழுந்தருளி என் மனத்திலிருப்பவராய் சந்தேகம் சிறிது மில்லாமலே முதல் நாள் கடைநாளை ஒத்திருக்கவே கங்காநதியைச் சடையிலொளித்தவனே, கலைமான் கன்றும் நெருப்புருவாகிய மழுவும் தாங்குகிற அலைகளையுடைய காவிரிக் கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமீ.

(கு-ரை) ஐயாறுடைய அடிகாள், நான் எங்கே போனாலும், ஒருதன்மையாய், என் மனத்தி லமைந்திருக்கவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) கரத்தல் - மறைத்தல். (2)

மருவிப்பிரியமாட்டேனான்வழிநின்றொழிந்தேனொழிகிலேன்
பருவிவிச்சிமலைச்சாரற்பட்டைகொண்டுபகடாடிக்
குருவியோப்பிக்கிளிகடிவார்குழன்மேன்மாலைகொண்டோட்டந்
தரவந்திரைகாவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

(ப-ரை.) மருவி பிரிய மாட்டேன் நான்-நான் கூடிப் பிரியமாட்டேன், வழிநின்றொழிந்தேன் - நல்வழியில் நின்று விலகினேன், ஒழிகிலேன் - ஒழியேன், பருவிவிச்சி மலைச்சாரல் – பெரிய விவிச்சிமலைச்சாரலில், பட்டை கொண்டு - பட்டையால், பகடு ஆடி - யானையுடன் விளையாடி, குருவிஓப்பி-குருவிகளை அதட்டி, கிளிகடிவார்-கிளிகளை யோட்டுவார், குழல்மேல் மாலைகொண்டு-கூந்தலிலுள்ள மாலையைக் கொண்டு, ஓட்டம் தரவந்து இரை-ஓடிவந்து இரைகிற, காவிரிக் கோட்டத்து–காவிரியாற்றங் கரையிலிருக்கிற, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) நான் கூடிப் பிரியமாட்டேன், நல்வழியில் நின்று விலகினேன், ஒழியேன், பெரிய விவிச்சி மலைச்சாரலில் பட்டையால் யானையுடன் விளையாடி குருவிகளை அதட்டி கிளிகளை யோட்டுவார் கூந்தலிலுள்ள மாலையைக்கொண்டு ஓடிவந்து இரைகிற காவிரியாற்றங் கரையிலிருக்கிற திருவையாற்றையுடைய சுவாமீ.

(கு-ரை.) ஐயாறுடைய அடிகாள், நான் உம்மை யடைந்து பிரியமாட்டேனென்பதாம்.

(வி-ரை.) மருவி – சேர்ந்து, வழி - நன்னெறி. ஒப்பல் - அதட்டல். ()

பழகநின் றுபணிசெய்வார்பெற்றபயனென் றறிகிலனி
கழா துமக்காட்பட்டோர்க்குவேகபடமொன் றரைசாத்தி
குழகவாழைக்குலைத்தெங்குகொணர்ந்துகரைமேலேறியவே
யழகார்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

(ப-ரை.) பழகநின்று - பழகியிருந்து, பணிசெய்வார் - தொண்டு செய்வார், பெற்ற பயன் ஒன்று அறிகிலன் - பெற்ற பயன் சிறிதும் அறிகிலேன், இகழாது – அவமதியாமல், உமக்கு ஆட் பட்டோர்க்கு - உமக்கு அடிமைப் பட்டோர்க்கு, வேக படம் ஒன்று அரைசாத்தி - படம் ஒன்றையும் அரையிற் றரித்து, குழகவாழைக்குலை - இளவாழைக் குலையையும், தெங்குகொணர்ந்து- தென்னங் குலைகளையும் கொண்டுவந்து, கரைமேல் ஏறியவே-கரைமேலெற்றவே, அழகு ஆர்திரை–அழகு பொருந்திய அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து - காவிரியாற்றங் கரையிலிருக்கிற, ஐயாறு உடைய அடிகளோ-திருவையாற்றையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) பழகியிருந்து தொண்டு செய்வார் பெற்ற பயன் சிறிதும் அறிகிலேன், அவமதியாமல் உமக்கு அடிமைப் பட்டோர்க்கு படம் ஒன்றையும் அரையிற் றரித்து இளவாழைக் குலையையும் தென்னங் குலைகளையும் கொண்டுவந்து கரைமேலெற்றவே, அழகு பொருந்திய அலைகளையுடைய காவிரியாற்றங் கரையிலிருக்கிற திருவையாற்றையுடைய சுவாமீ.

(க-ரை.) ஐயாறுடைய அடிகாள், உமக்குத் தொண்டு செய்வோர் அடைந்த பயன் சிறிதும் அறிந்திலேன் என்பதாம்.

(வி-ரை.) பணிசெய்தல் - தொண்டு செய்தல். குழகவாழை-இளவாழை. திரை - அலை. (4)

பிழைத்தபிழையொன் றறியேனான்பிழையைத்தீரப்பணியாயே
மழைக்கணல்லார்குழைந்தாடமலையுநிலனுங்கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங்கலந்தெங்குங்கழனிமண்டிக்கையேறி
யழைக்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

(ப-ரை.) பிழைத்தபிழை ஒன்று அறியேன் நான் - நான் பிழைத்த பிழை சிறிதும் அறியேன், பிழையை - என் பிழையை, தீரப்பணியாய்-ஒழியும்படி கட்டளையிட் டருள்வாய், மழைக்கண் நல்லார் - குளிர்ந்த கண்களையுடைய மாதர், குழைந்து ஆட - மனங்குழைந்து மூழ்க, மலையும் நிலனும் கொள்ளாமை - மலையும் நிலமும் கொள்ளாமை, கழைகொள் பிரசம் கலந்து - கருப்பஞ்சாறு கலந்து, எங்கும் - எவ்விடத்தும், கழனி மண்டி - வயல்கள் நெருங்கி, கை ஏறி அழைக்கும் திரை-கையுயர அழைக்கும் அலைகளையுடைய, காவிரிக் கோட்டத்து - காவிரிக்கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ-திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) நான் பிழைத்த பிழை சிறிதும் அறியேன், என் பிழையை ஒழியும்படி கட்டளை யிட்டருள்வாய், குளிர்ந்த கண்களையுடைய மாதர் மனங் குழைந்து மூழ்க மலையும் நிலமும் கொள்ளாமை கருப்பஞ்சாறு கலந்து எவ் விடத்தும் வயல்கள் நெருங்கி கையுயா அழைக்கும் அலைகளையுடைய காவிரிக் கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமீ.

(க-ரை.) ஐயாறுடைய அடிகாள், யான் பிழை செய்ததொன்றும் அறி யேன், என் பிழைதீரப் பணித்தருளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) பணித்தல் - கட்டளையிடல். கையேறி - மிகுந்து. (5)

**கார்க்கொள்கொன்றைச்சடைமேலொன்றுடையாய்விடையாய்ந**
**மூர்க்கர்புரமூன்றெரிசெய்தாய்முன்னிபின்னிமுதல்வனீ[கையினுன்**
**வார்க்கொளருவிபலவாரிமணியுமுத்தும்பொன்னுங்கொண்**
**டார்க்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.**

(ப-ரை.) கார்கொள் கொன்றை - கருமையைக் கொண்ட கொன்றை மாலையை யணிந்த, சடைமேல் ஒன்று உடையாய்-சடைமீது ஒன்றையுடைய வனே, விடையாய் - எருதுடையவனே, நகையினுல் - சிரிப்பினுல், மூர்க்கர் புரம் மூன்று எரி செய்தாய் - மூர்க்கருடைய முப்புரத்தை யெரித்தாய், முன் நீ - முன்னிருப்பவன் நீயே, பின் நீ - பின்னிருப்பவன் நீயே, முதல்வன் நீ - தலைவன் நீ, வார்கொள் அருவி - நீரைக்கொண்ட அருவி, பலவாரி - பல பொருள்களையும் வாரிக்கொண்டு, மணியும் முத்தும் பொன்னும் கொண்டு - மணியையும் முத்தையும் பொன்னையும் சேர்த்துக்கொண்டு, ஆர்க்கும் திரை-சத்திக்கிற அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து - காவிரிக்கரையிலுள்ள ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) கருமையைக்கொண்ட கொன்றை மாலையை யணிந்த, சடைமீது ஒன்றை யுடையவனே, எருதுடையவனே, சிரிப்பினுல் மூர்க்க ருடைய முப்புரத்தை யெரித்தாய், முன்னிருப்பவன் நீயே, பின்னிருப்பவன் நீயே, தலைவன் நீ, நீரைக்கொண்ட அருவி பல பொருள்களையும் வாரிக் கொண்டு, மணியையும் முத்தையும் பொன்னையும் சேர்த்துக்கொண்டு சத்திக் கிற அலைகளையுடைய காவிரிக்கரையிலுள்ள திருவையாற்றையுடைய சுவாமீ.

(க-ரை.) ஐயாறுடைய அடிகாள், முப்புர மெரித்தல் முதலியவற்றைச் செய்த வுன்பெருமை சொல்லவொண்ணுமோ வென்பதாம்.

(வி-ரை.) ஆர்க்கும் - ஆரவாரிக்கிற. (6)

**முலைக்கண்மடவாளொருபாலாய்ப்பற்றியுலகம்பலிதேர்வாய்**
**சிலைக்கொள்கணையாலெயிலெய்தாய்செங்கண்விடையாய்தீர்த்தனீ**
**மலைக்கொளருவிபலவாரிமணியுமுத்தும்பொன்னுங்கொண்**
**டலைக்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.**

(ப-ரை.) முலைக்கண் மடவாள் - உமாதேவி, ஒரு பாலாய் பற்றி-ஒருபக்கத்திற் கொண்டு, உலகம் பலிதேர்வாய் - உலகத்திற் பிச்சை யேற்கிறாய், சிலைகொள் கணையால்-வில்லிற் பூட்டிய அம்பினால், எயில் எய்தாய்-மும்மதில்களை யெய்தாய், செங்கண் விடையாய் - செங்கண்களையுடைய இடபத்தை யுடையவனே, தீர்த்தன் நீ - பரிசுத்தன் நீ, மலைக்கொள் அருவி - மலையருவியானது, பலவாரி - பல பொருள்களையும் வாரிக்கொண்டு, மணியும் முத்தும் பொன்னும் கொண்டு - மணிகளையும் முத்துக்களையும் பொன்னையும் வாரிக்கொண்டு, அலைக்கும் திரை - அசையாநின்ற அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து - காவிரிக்கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) உமாதேவி ஒரு பக்கத்திற் கொண்டு உலகத்திற் பிச்சை யேற்கிறாய், வில்லிற்பூட்டிய அம்பினால் மும்மதில்களை யெய்தாய், செங்கண்களையுடைய இடபத்தை யுடையவனே, பரிசுத்தன் நீ, மலையருவியானது பல பொருள்களையும் வாரிக்கொண்டு மணிகளையும் முத்துக்களையும் பொன்னையும் வாரிக்கொண்டு அசையாநின்ற அலைகளையுடைய காவிரிக் கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமீ.

(கு-ரை.) ஐயாறுடைய அடிகாள், மலைமகளை யொருபாற் கோடல் முதலியவற்றையுடைய உமது பெருமை சொல்ல வொண்ணுமோ வென்பதாம்.

(வி-ரை.) தீர்த்தன் - தேவன், பரிசுத்தன் எனினுமாம். (7)

**போழுமதியம்புனங்கொன்றைபுனல்சேர்சென்னிப்புண்ணியா**
**சூழுமரவச்சுடர்ச்சோதியுன்னைத்தொழுவார்துயர்போக**
**வாழுமவர்களங்கங்கேவைத்தசிந்தையுய்ந்தாட்ட**
**வாழுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.**

(ப-ரை) போழும்மதியம் - இளம்பிறை, புனம் கொன்றை - புனத்திலுண்டாகிய கொன்றை, புனல் - கங்கை, சேர் - சேர்ந்த, சென்னி - சிரத்தையுடைய, புண்ணியா - புண்ணியனே, சூழும் - சூழ்ந்த, அரவம் சுடர் - ஒலியையுடைய ஒளியோடு கூடிய, சோதீ - சோதியே, உன்னை தொழுவார் துயர்போக-உன்னை வணங்குவோருடைய துன்பம் நீங்க, வாழுமவர்கள்-வாழ்வோர்கள், அங்கங்கே வைத்த சிந்தை - அவ்வவ்விடத்தில் வைத்த மனமானது, உய்ந்து ஆட்ட - உய்ந்து ஆட்டலால், ஆழும் - ஆழ்ந்த, திரை - அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து - காவிரிக் கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) இளம்பிறை, புனத்திலுண்டாகிய கொன்றை, கங்கை சேர்ந்த சிரத்தையுடைய புண்ணியனே, சூழ்ந்த ஒலியையுடைய ஒளியோடு கூடிய சோதியே, உன்னை வணங்குவோருடைய துன்பம் நீங்க வாழ்வோர்

கள் அவ்வவ்விடத்தில் வைத்த மனமானது உய்ந்து ஆட்டலால், ஆழ்ந்த அலைகளையுடைய காவிரிக்கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமீ.

(க-ரை.) ஐயாறுடைய அடிகாள், உம்மைத் தொழுவாரது துயர மொழியக்கண்டு அடியேனும் உம்மை வந்தடைந்தேனென்பதாம்.

(வி-ரை.) போழுமதியம் - பிளவுபட்ட சந்திரன். புண்ணியா - அறவடிவனே. சிந்தை - மனம். (8)

கதிர்க்கொள்பசியையொத்தேநான்கண்டேனும்மைக்காணாதே
னெதிர்த்துநீந்தமாட்டேனானெம்மான்றம்மான்றம்மானே
விதிர்த்துமேகமழைபொழியவெள்ளம்பரந்துநுரைசிதறி
யதிர்க்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

(ப-ரை.) கதிர்கொள்பசியை ஒத்து-மிகுதியாகிய பசியை நிகர்த்து, நான் கண்டேன் - நான்பார்த்தேன், உம்மைக்காணாதேன் — உம்மைக்காணாத நான், எதிர்த்து நீந்தமாட்டேன் நான் - எதிரேறி நீந்தமாட்டேன், எம்மான் தம்மான் தம்மானே - எழ்தலைமுறைக்கும் பெரியோனே, மேகம் விதிர்த்து மழை பொழிய - மேகங்கள் முழங்கி மழையைச்சொரிய, வெள்ளம் பரந்து நுரை சிதறி - பெருக்குநீரைப் பெருக்கி நுரையைச்சிந்தி, அதிர்க்கும்-முழங்குகிற, திரை - அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து-காவிரிக்கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) மிகுதியாகிய பசியை நிகர்த்து நான் பார்த்தேன், உம்மைக் காணாத நான் எதிரேறி நீந்தமாட்டேன், எழ்தலைமுறைக்கும் பெரியோனே, மேகங்கள் முழங்கி மழையைச்சொரிய, பெருக்குநீரைப் பெருக்கி நுரையைச் சிந்தி முழங்குகிற அலைகளையுடைய காவிரிக்கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமீ.

(க-ரை) ஐயாறுடைய அடிகாள், மிகு பசிகொண்டவன்போல் உம்மை வந்தடைந்தேன், என்னை யாண்டருளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) விதிர்த்தல் - அதிர்தல். அதிர்த்தல் - முழங்கல். (9)

கூசியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
தேசவேந்தன்றிருமாலுமலர்மேலயனுங்காண்கிலாத்
தேசமெங்குந்தெளிந்தாடத்தெண்ணீரருவிகொணர்நதெங்கும்
வாசந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

(ப-ரை.) அடியார் கூசி இருந்தாலும் — உன்றொண்டர் வெள்கியிருந்தாலும், குணம் ஒன்று இல்லீர் - குணம் சிறிது மில்லாதவர்களே, குறிப்பு இல்லீர் - எண்ணமில்லாதீர், தேசவேந்தன் - லோகநாதன், திருமாலும்-விஷ்ணுவும், மலர்மேல் அயனும் - தாமரைமலர்மேலிருக்கிற பிரமனும், காண்கிலா - காணவொண்ணாத, தேசம் - ஒளிவானது, எங்கும் தெளிந்து ஆட-எவ்விடத்

தும் தெளிந்தசைய, தெள்நீர் அருவி - தெள்ளிய நீரையுடைய அருவியாறுகள், கொணர்ந்து-கொண்டுவந்து, எங்கும் வாசம்திரை - எவ்விடத்தும் மணமுள்ள அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து-காவிரிக்கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ - திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை) உன் தொண்டர் வெள்கியிருந்தாலும், குணம் சிறிதுமில்லாதவர்களே, எண்ணமில்லாதீர், லோகநாதன், விஷ்ணுவும் தாமரைமலர்மேலிருக்கிற பிரமனும் காணவொண்ணாத ஒளிவானது எவ்விடத்தும் தெளிந்தசைய, தெள்ளிய நீரையுடைய அருவியாறுகள் கொண்டுவந்து எவ்விடத்தும் மணமுள்ள அலைகளையுடைய காவிரிக்கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமி.

(க-ரை) ஐயாறுடைய அடிகாள், குணங்குறிகளில்லாத உம்மைப் பிரமவிட்டுணுக்கள் காண்கிலராயின் அடியேன் காணவல்லேனோ வென்பதாம்.

(வி-ரை.) கூசியிருத்தல் - நாணியிருத்தல். வாசம் - மணம். (10)

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீ
ரூடியிருந்துவுணர்கிலேனும்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்ப
னாடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

(ப-ரை) அடியார் கூடியிருந்தாலும்-அடியவர் சேர்ந்திருந்தாலும், குணம் ஒன்று இல்லீர் - குணம் சிறிது மில்லாதீர், குறிப்பு இல்லீர் - நினைப்பில்லீர், ஊடியிருந்து உணர்கிலேன் உம்மை உம்மைப் பிணங்கியிருந்து அறிகிலேன், தொண்டன் ஊரனேன் - சுந்தரனாகிய நான், தேடி எங்கும் காண்கிலேன் - எவ்விடத்தும் தேடிக்கண்டிலேன், திருவாரூரே சிந்திப்பன் திருவாரூரையே சிந்தித்துக் கொண்டிருப்பேன், ஆடும்திரை - அசைகின்ற அலைகளையுடைய, காவிரிக்கோட்டத்து - காவிரிக்கரையிலுள்ள, ஐயாறு உடைய அடிகளோ-திருவையாற்றினையுடைய சுவாமீ எ-று.

(பொ-ரை.) அடியார் சேர்ந்திருந்தாலும், குணம் சிறிதுமில்லாதீர், நினைப்பில்லீர், உம்மைபிணங்கியிருந்து அறிகிலேன், தொண்டனாகிய சுந்தரன் எவ்விடத்தும் தேடிக்கண்டிலேன், திருவாரூரையே சிந்தித்துக்கொண்டிருப்பேன், அசைகின்ற அலைகளையுடைய காவிரிக்கரையிலுள்ள திருவையாற்றினையுடைய சுவாமீ.

(க-ரை.) ஐயாறுடைய அடிகாள், உம்மைத்தேடியெங்கும் காண்கிலேன் திருவாரூரையே சிந்தித்துக்கொண்டிருக்கின்றேனென்பதாம்.

(வி-ரை.) ஊடுதல் - பிணங்குதல். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்பொன்சோதீசுரர். தேவியார் - அறம்வளர்த்தநாயகியம்மை.

## திருக்கேதாரம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
சூழாதறஞ்செய்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே.

(ப-ரை.) வாழ்வு ஆவது மாயம் - வாழ்வாவது பொய், இது மண் ஆவது திண்ணம் - இதுமண்ணாவது நிச்சயம், பிறவிக்கடல் பாழ் போவது - பிறவிக்கடல் பாழடைவது, பசிநோய்செய்த பறிதான் - பசிநோய்செய்த கொள்ளையே, சூழாது - ஆலோசியாமல், அறம்செய்மின் - தருமஞ்செய்யுங்கள், தடம் கண்ணன் மலரோனும் - திருமாலும் பிரமனும், கீழ்மேல் உறநின்றான் - கீழுமேலு மாகும்படி நிமிர்ந்து நின்றவனது, திருக்கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) வாழ்வாவது பொய், இது மண்ணாவது நிச்சயம், பிறவிக்கடல் பாழடைவது, பசிநோய் செய்த கொள்ளையே, ஆலோசியாமல் தருமஞ்செய்யுங்கள், திருமாலும் பிரமனும் கீழுமேலு மாகும்படி நிமிர்ந்துநின்றவனது திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(க-ரை.) உலகத்தாரே, செல்வமுதலானவை பொய்யாதலால், நீங்கள் விரைந்து அறத்தைச் செய்யுங்கள், இறைவனது திருக்கேதார மென்னுங்கள் என்பதாம்.

(வி-ரை) வாழ்வு - செல்வம், வாழ்நாள் எனினுமாம். சூழாது என்றது தாமதிக்காமல் என்றபடி. கீழ்மேலுற நிற்றலாவது வராகமாய்க் கீழ்ச்சென்றதையும் மராளமாய் மேற் சென்றதையுங் குறித்தது. (1)

பறியேசுமந்துழல்வீர்பறிநரிகீறுவதறியீர்
குறிகூவியகுற்றங்கொளுநாளாலறமுளவே
யறிவானிலுமறிவானலநறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழுகேதாரமெனீரே.

(ப-ரை.) பறியேசுமந்து உழல்வீர் - உடம்பையே சுமந்து உழலுவோர்களே, பறிநரிகீறுவது அறியீர்-உடம்பை நரிதோண்டுவதை அறிந்திலீர், குறிகூவிய - குறித்துச்சொல்லப்பட்ட, குற்றம் கொளும் நாளால் - குற்றமுள்ள நாள்களுண்டாதலால், அறம்உளவே - புண்ணியங்களிருக்கின்றனவே, அறிவானிலும்அறிவான் அல - அறிவோனிலும் அறிவோனல்ல, நறுநீரொடுசோறும்-

நல்ல நீரோடு சோற்றையும், கிறிபேசி நின்று இடுவோர் தொழு-மெய்வழிபேசி நின்று இடுவோர் வணங்குகின்ற, கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(போ-ரை) உடம்பையேசுமந்து உழலுவோர்களே, உடம்பை நரிதோண்டுவதை அறிந்திலீர், குறித்துச்சொல்லப்பட்ட குற்றமுள்ள நாள்களுண்டாதலால், புண்ணியங்களிருக்கின்றனவே, அறிவோனிலும் அறிவோனல்ல, நல்ல நீரோடு சோற்றையும் மெய்வழிபேசிநின்று இடுவோர் வணங்குகின்ற திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(க-ரை) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தை யெந்நாளும் சிந்தித்திருங்க ளென்பதாம்.

(வி-ரை.) பறி-டொன் பறிநரி - தோண்டுகிறநரி. கிறி-வழி, (நல்வழி).

**கொம்பைப்பிடித்தொருக்காலர்களிருக்கான்மலர்தூவி**
**நம்பன்னமையாள்வானென்றுநடுகாளையும்பகலுங்**
**கம்பக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவிச்**
**செம்பொற்பொடிசிந்துந்திருக்கேதாரமெனீரே.**

(ப-ரை.) கொப்பைப்பிடித்து - கொம்பைப்பற்றி, ஒருகாலர்சள் - ஒப்பற்ற காலர்கள், இருக்கால் மலர்தூவி - வேதமார்க்கத்தால் மலரைச்சிந்தி, நம்பன் நம்மை ஆள்வான் என்று - சிவபிரான் எம்மை யாண்டருள்வானென்று, நடுநாளையும் பகலும் - நள்ளிரவும் பகலும், கம்பக்களிறு - கட்டுத்தறியிற் கட்டப்படுகிற யானைகள், இனம் ஆய் நின்று - கூட்டமாய் நின்று, சுனைநீர்களைத்தூவி - சத்திக்கிற நீர்களையிறைத்து, செம்பொன்பொடி சிந்தும் - செப்பொற் பொடியைச் சிதறுகிற, திருக்கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(போ-ரை.) கொம்பைப்பற்றி ஒப்பற்ற காலர்கள் வேதமார்க்கத்தால் மலரைச் சிந்தி, சிவபிரான் எம்மை யாண்டருள்வானென்று நள்ளிரவும் பகலும் கட்டுத்தறியிற் கட்டப்படுகிற யானைகள் கூட்டமாய் நின்று சத்திக்கிற நீர்களையிறைத்து, செப்பொற் பொடியைச் சிதறுகிற திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(க-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தை யெந்நாளும் சிந்தித்திருங்க ளென்பதாம். (3)

**உழக்கேயுண்டுபடைத்தீட்டிவைத்திழப்பார்களுஞ்சிலர்கள்**
**வழக்கேயெனிற்பிழைக்கேமென்பர்மதிமாந்தியமாந்தர்**
**சழக்கேபறிநிறைப்பாரோடுதவமாவதுசெய்மின்**
**கிழக்கேசலமிடுவார்தொழுகேதாரமெனீரே.**

(ப-ரை.) உழக்கே உண்டு - உழக்கரிசிச் சோற்றையேயுண்டு, படைத்து ஈட்டிவைத்து - பணம் படைத்துச் சம்பாதித்து வைத்து, இழப்பார்களும் சிலர்கள் - இழந்துபோவோருஞ் சிலருளர், (இது) வழக்கே என்னின் - இது வழக்கமேயென்றால், பிழைக்கேம் என்பர்-பிழைக்கமாட்டோமென்பார், மதி மாந்திய மாந்தர்-மந்தபுத்தியுள்ள மனிதர், சழக்கே பறி நிறைப்பாரொடு-தொடு வழக்குள்ள பொன்னை நிறைப்பாரோடும், தவமாவது செய்மின் - தவமாவதைச் செய்யுங்கள், கிழக்கே சலம் இடுவார் தொழு - கிழக்கேநோக்கி நீரிறைக்கிறவராகிய பிராமணர் வணங்குகிற, கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) உழக்கரிசிச் சோற்றையேயுண்டு, பணம் படைத்துச் சம்பாதித்து வைத்து, இழந்து போவோருஞ் சிலருளர், இது வழக்கமே யென்றால் பிழைக்க மாட்டோ மென்பார், மந்தபுத்தியுள்ள மனிதர் தொடுவழக்குள்ள பொன்னை நிறைப்பாரோடும், தவமாவதைச் செய்யுங்கள், கிழக்கே நோக்கி நீரிறைக்கிறவராகிய பிராமணர் வணங்குகிற திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(க-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தைச் சிந்தித்திருங்களென்பதாம்.

(வி-ரை.) படைத்தல் - பெறல். ஈட்டல் - சம்பாதித்தல். பறி - பொன். கிழக்கே சலமிடுதலாவது உதயகாலத்தில் கீழ்த்திசையிலுதித்தெழுகின்ற சூரியனைநோக்கி வேதியர் மந்திரோச்சாரணத்தோடு அருக்கியநீரிறைத்தல், இது மாந்தேயரால் சூரியன் தேர் தடைபடாமைப்பொருட்டுச் செய்யப்படுவது. ()

வாளோடியதடங்கண்ணியர்வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர்நணுகாமுனநணுகி
யாளாயுய்ம்மினடிகட்கிடமதுவேயெனினதுவே
நீளோடரவசைத்தானிடங்கேதாரமெனீரே.

(ப-ரை) வாள் ஒடிய - வாள்போன்ற, தடம் கண்ணியர் – நெடுங்கண்ணியராகிய மாதர், வலையில் அழுந்தாதே - வலையிற் கட்டுண்டழுந்தாமல், நாள் ஓடிய - நாள் செல்லுதலும், நமனார் தமர் நணுகாமுனம் - யமதூதர் வருவதன் முன்னமே, நணுகி - விரைந்து, ஆள் ஆய் உய்ம்மின் - அடிமைப்பட்டுய்யுங்கள், அடிகட்கு இடம் அதுவே யெனின் - இறைவனுக் கிடம் அதுதானோ வென்றால், அதுவே - அதுவேயாம், நீளோடு - நீளுடையோடு, அரவு அசைத்தான் இடம் - பாம்பையும் கட்டினவனது இடமாகிய, கேதாரம் என்னீர் - திருக்கேதாரம் என்று சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) வாள்போன்ற நெடுங்கண்ணியராகிய மாதர் வலையிற் கட்டுண்டழுந்தாமல் நாள் செல்லுதலும், யமதூதர் வருவதன்முன்னமே விரைந்து

அடிமைப்பட்டுய்யுங்கள், இறைவனுக்கிடம் அதுதானே வென்றால் அதுவேயாம், சீளுடையோடு பாம்பையும் கட்டினவனது இடமாகிய திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(கு-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தைச் சிந்தித்திருங்களென்பதாம்.

(வி-ரை.) உய்மின் - பிழையுங்கள். அசைத்தல் - கட்டுதல். (5)

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறிலன்றே
குளியீருளங்குருக்கேத்திரங்கோதாவிரிகுமரி
தெளியீருளஞ்சீபர்ப்பதந்தெற்குவடக்காகக்
கிளிவாழையொண்கனிகீறியுண்கேதாரமெனீரே.

(ப-ரை.) தளிசாலைகள்-கோயில்களும் அறச்சாலைகளும், தவம் ஆவது-தவக்ஷேத்ரமாவது, தம்மைப் பெறின் அன்றே - அவை தம்மைத் தவத்தோர் அடைந்தாலன்றோ, குருக்கேத்திரம் - குருக்ஷேத்ரம், கோதாவிரி - கோதாவிரி, குமரி - தென்குமரியாறு, உள்ளம் குளியீர் - உள்ளம் தெளியீர், சீபர்ப்பதம் - ஸ்ரீசைலம், தெற்கு வடக்கு ஆக - தெற்கு வடக்காகக்கொண்டு, கிளி - கிள்ளைகள், வாழை - வாழையின், ஒள்கனி - நல்லகனிகளை, கீறி உண் – கிழித்துண்கிற, கேதாரம் என்னீர் - திருக்கேதாரம் என்று சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) கோயில்களும் அறச்சாலைகளும், தவக்ஷேத்ரமாவது, அவை தம்மைத் தவத்தோர் அடைந்தாலன்றோ, குருக்ஷேத்ரம் கோதாவிரி தென்குமரியாறு உள்ளம் தெளியீர், ஸ்ரீசைலம் தெற்கு வடக்காகக்கொண்டு கிள்ளைகள் வாழையின் நல்லகனிகளை கிழித்துண்கிற திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(கு-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தைச் சிந்தித்திருங்களென்பதாம்.

(வி-ரை.) தளி - கோயில். கீறியுண்ணல் - பிளந்துண்ணல். (6)

பண்ணின்றமிழிசைபாடலின்பழவேய்முழவதிரக்
கண்ணின்னொளிகனகச்சுனைவயிரம்மவைசொரிய
மண்ணின்றனமதவேழங்கண்மண்வாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசைமுரலுந்திருக்கேதாரமெனீரே.

(ப-ரை.) பண் இன் தமிழ் இசை பாடலின் - பண்களையுடைய இனிய தமிழிராகங்களைப் பாடுதலாகிய, பழவேய் - முதிர்ந்த மூங்கில்கள், முழவு

அதிர - முழவொலியதிரவும், கண்ணின் ஒளி - கண்ணொளிநிறைந்த, கனகம் - பொன்னும், சுனை - சுனைகள், வயிரம் - வயிரமுமாகிய, அவை சொரிய - அவற்றைச் சொரிய, மண் நின்றன - பூமியின்மீது நிற்கின்றனவாகிய, மதவேழங்கள் - மதயானைகள், மண்வாரிக்கொண்டு எறிய - மணியை வாரியெறிய, கிண் என்று இசை முரலும் - கிண்ணென்றிசை முழங்காநிற்கிற, திருக்கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(போ-ரை.) பண்களையுடைய இனிய தமிழிராகங்களைப் பாடுதலாகிய மூதிர்ந்த மூங்கில்கள் முழவொலியதிரவும், கண்ணொளி நிறைந்த பொன்னும் சுனைகள் வயிரமுமாகிய அவற்றைச் சொரிய, பூமியின்மீது நிற்கின்றனவாகிய மதயானைகள் மணியை வாரியெறிய, கிண்ணென்றிசை முழங்காநிற்கிற திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(க-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தைச் சிந்தித்திருங்களென்பதாம்.

(வி-ரை.) முழவு – மத்தளம். அதிர்தல் ஒலித்தல். வயிரம்-வச்சிரக்கல்.

**முளைக்கைப்பிடிமுகமன்சொலிமுதுவேய்களையிறுத்துத்**
**துளைக்கைக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவி**
**வளைக்கைப்பொழிமழைகூர்தரமயின்மான்பிணைநிலத்தைக்**
**கிளைக்கம்மணிசிந்துந்திருக்கேதாரமெனீரே.**

(ப-ரா.) முளை - முளைபோன்ற, கை - துதிக்கையையுடைய, பிடி - பெண்யானை, முகமன்சொல்லி - இன்சொற் சொல்லி, முது வேய்களை இறுத்து - முதிர்ந்த மூங்கில்களை யொடித்து, துளைக்கை- துவாரமுள்ள கையினையுடைய, களிற்று இனம் ஆய் நின்று - யானைகள் கூட்டமாய் நின்று, சுனை நீர்களை தூவி - சுனைநீர்களை இறைத்து, வளைக்கை பொழி - சூழ்ந்துகொண்டு பொழிகிற, மழை கூர்தர - மழையதிகரிக்க, மயில் மான் பிணை - மயில்மான் பெண்மான் என்பன, நிலத்தைக்கிளைக்க - நிலத்தைக் கீறுதலால், மணிசிந்தும் - மணிகள் சிதறுகிற, திருக்கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(போ-ரை.) முளைபோன்ற துதிக்கையையுடைய பெண்யானை இன்சொற்சொல்லி, முதிர்ந்த மூங்கில்களை யொடித்து துவாரமுள்ள கையினையுடைய யானைகள் கூட்டமாய் நின்று சுனைநீர்களை இறைத்து சூழ்ந்துகொண்டு பொழிகிற மழையதிகரிக்க மயில் மான் பெண்மான் என்பன நிலத்தைக் கீறுதலால் மணிகள் சிதறுகிற திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(க-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தைச் சிந்தித்திருங்கள் என்பதாம்.

**(வி-ரை.)** தூவுதல் - இறைத்தல். வளைக்கை - வளைத்தல். (8)

*பொதியேசுமந்துழல்வீர்பொதியவமாவதுமறியீர்*
*மதிமாந்தியவழியேசென்றுகுழிவீழ்வதும்வினையாற்*
*கதிசூழ்கடலிலங்கைக்கிறைமலங்கவ்வரையடர்த்துக்*
*கெதிபேறுசெய்திருந்தானிடங்கேதாரமெனீரே.*

(ப-ரை.) பொதியே சுமந்து உழல்வீர் - உடற்சுமையை சுமந்து உழல்வோரே, பொதியவம் ஆவதும் அறியீர் - இது மண்ணில் மறைவதாவதும் அறிய மாட்டீர், மதிமாந்தியவழியே சென்று - மனம் சென்றவழியே சென்று, வினையால் குழிவீழ்வது - வினைவயத்தால் குழிவீழ்வதை, கதிசூழ் - வேகத்தோடு வளைந்த, கடல் - கடலிடையேயுள்ள, இலங்கைக்கு இறை - இலங்கைக் காசனாகிய ராவணன், மலங்க - மனங்கலங்க, வரை அடர்த்து - கயிலாய மலையை யழுத்தி, கெதிபேறுசெய்து - அவனுக்கு நற்கதியை யருள்செய்து, இருந்தான் இடம் — இருந்தவனாகிய சிவபிரானுக் கிடமாயிருப்பதாகிய, கேதாரம் என்னீர் - திருக்கேதாரமென்று சொல்லுங்கள் எ-று.

(பொ-ரை.) உடற்சுமையை சுமந்து உழல்வோரே, இது மண்ணில் மறைவதாவதும் அறிய மாட்டீர், மனம் சென்ற வழியே சென்று வினைவயத்தால் குழிவீழ்வதை வேகத்தோடு வளைந்த கடலிடையேயுள்ள இலங்கைக் காசனாகிய ராவணன் மனங்கலங்க கயிலாயமலையை யழுத்தி அவனுக்கு நற்கதியை யருள்செய்து இருந்தவனாகிய சிவபிரானுக் கிடமாயிருப்பதாகிய திருக்கேதாரமென்று சொல்லுங்கள்.

(கு-ரை.) உலகத்தாரே, இறைவனது திருக்கேதாரத்தைச் சிந்தித்திருங்கள் என்பதாம்.

(வி-ரை) பொதி - மூட்டை. (சுமை) அடர்த்தல் - நெருக்கல். (9)

*நாவின்மிசையரையன்னொடுதமிழ்ஞானசம்பந்தன்*
*யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்*
*தேவன்றிருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த*
*பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே.*

(ப-ரை.) நாவின்மிசை அரையனொடு-திருநாவுக்கரசனோடு, தமிழ் ஞான சம்பந்தன்-தமிழுணர்ந்த ஞானசம்பந்தன், யாவர் சிவன் அடியார்களுக்கு அடியான் - எவர்கள் சிவனடியார்களோ அவர்களுடைய, அடித்தொண்டன் - தொண்டர்க்குத்தொண்டன், தேவன் திருக்கேதாரத்தை — சிவபெருமானது திருக் கேதாரத்தை, ஊரன் உரைசெய்த - சுந்தரன் புகழ்ந்து பாடின, பா இன்தமிழ் வல்லார் - இனிய தமிழ்ப்பாவினைப் பாடவல்லவர், பரலோகத்து இருப்பார் - பரலோகத்திலிருப்பவராவர் எ-று.

(பொ-ரை.) திருநாவுக்கரசனோடு தமிழுணர்ந்த ஞானசம்பந்தன், எவர்கள் சிவனடியார்களோ அவர்களுடைய அடியன் தொண்டர்க்குத்தொண்டன், சிவபெருமானது திருக்கேதாரத்தை சுந்தரன் புகழ்ந்துபாடின இனிய தமிழ்ப் பாவினைப் பாடலல்லவர் பரலோகத்திலிருப்பவராவர்.

(க-ரை.) இறைவனது திருக்கேதாரத்தை ஊரனுரைத்த தமிழ்மாலையைக் கற்றுவல்லார், பரலோகத்திலிருப்பவராவர் என்பதாம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் வடநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கேதாரேஸ்வரர். தேவியார்-கௌரியம்மை.

---

## சீபர்ப்பதம்

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்

மானுமரையினமுமயிலினமுங்கலந்தெங்குந்
தாமேமிகமேய்ந்துதடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமரமுரிஞ்சிப்பொழிலூடேசென்றுபுக்குத்
தேமாம்பொழினீழற்றுயில்சீபர்ப்பதமலையே.

(ப-ரை.) மானும் - மான்களும், மரையினமும் - மரையின் கூட்டங்களும், மயில் இனமும் - மயிற் கூட்டங்களும், கலந்து - கூடி, எங்கும் - எவ்விடத்தும், தாமே - தாமாகவே, மிகமேய்ந்து - மிகுதியாக மேய்ந்து, தடம் சுனை நீர்களை பருகி - பெரிய சுனைநீர்களைக் குடித்து, பூ மாமரம் உரிஞ்சி- பெரிய மலர் மரங்களை உராய்ந்து, பொழிலூடே சென்று புக்கு - சோலைகளினூடு போய்ப் புகுந்து, தேமாம் பொழில் நீழல் துயில் - தேமாமரச் சோலையின்நிழலில் தூங்குகிற. சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(பொ-ரை.) மான்களும், மரையின் கூட்டங்களும், மயிற்கூட்டங்களும் கூடி எவ்விடத்தும் தாமாகவே மிகுதியாக மேய்ந்து பெரிய சுனை நீர்களைக் குடித்து, பெரிய மலர் மரங்களை உராய்ந்து சோலைகளினூடுபோய்ப் புகுந்து தேமாமரச் சோலையின் நிழலில் தூங்குகிற திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்கள் என்பதாம்.

(வி-ரை.) மரை - ஓர்வகைமான். பருகல் - குடித்தல். தேமாமரம் - இன்சுவைக்கனிகளைத் தருகிற ஒருவகை மாமரம். ஸ்ரீபர்ப்பதமலையை ஸ்ரீசைலம் என்பர் வடநூலார். ஸ்ரீபர்ப்பதமலை - சீபர்ப்பதமாகிய மலை யென்றாயினும், சீபப்பதமென்று சொல்லப்படுகிற மலையென்றாயினும் உரைத்துக்கொள்க. ()

மலைச்சாரலும்பொழிற்சாரலும்புறமேவருமினங்கண்
மலைப்பாற்கொணர்ந்திடித்தூட்டிடமலங்கித்தன்களிற்றை
யழைத்தோடியும்பிளிறியவையலமந்துவந்தெய்த்துத்
திகைத்தோடித்தன்பிடிதேடிடுஞ்சீபர்ப்பதமலையே.

(ப-ரை.) மலைச்சாரலும் - மலைச்சாரலிலும், பொழில்சாரலும் - சோலைப் புறத்திலும், புறமேவரும் இனங்கள் - புறத்தேவருங்கூட்டங்கள், மலைப்பால் கொணர்ந்து இடித்து ஊட்டி - மலைப்பால் கொண்டுவந்து இடித்தூட்ட, மயங்கி - கலங்கி, தன்களிற்றை - தனது ஆண் யானையை, அழைத்து ஓடியும் - கூவி யோடியும், பிளிறி - சத்தித்து, அவை அலமந்து-அவை சுழன்று, வந்து எய்த்து - வந்திளைத்து, திகைத்து ஓடி - மயங்கியோடி, தன் பிடி தேடிடும் - தன் பெண்யானை தேடுகிற, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(பொ-ரை) மலைச்சாரலிலும், சோலைப்புறத்திலும் புறத்தேவருங் கூட்டங்கள் மலைப்பால்கொண்டுவந்து இடித்தூட்ட, கலங்கி தனது ஆண்யானையை கூவியோடியும் சத்தித்து அவை சுழன்று வந்திளைத்து மயங்கியோடி தன் பெண்யானை தேடுகிற திருப்பருப்பதத்தையே சித்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்கள் என்பதாம்.

(வி-ரை.) பிளிறல் - முழங்கல். (2)

மன்னிப்புனங்காவன்மடமொழியாள்புனங்காக்கக்
கன்னிக்கிளிவந்துகவைக்கோலிக்கதிர்கொய்ய
வென்னைக்கிளிமதியாதென்றெடுத்துக்கவணொலிப்பத்
தென்னற்கிளிதிரிந்தேறியசீபர்ப்பதமலையே.

(ப-ரை.) மன்னி - நிலைபெற்று, புனங்காவல் மடமொழியாள் - புனங்காவலையுடைய குதலை மொழியாள், புனம் காக்க - புனத்தைக்காத்துக்கொண்டிருக்க, கன்னிக்கிளி வந்து - இளங்கிளிவந்து, கவை கோலி - தன் காரியத்தைப்பற்றி, கதிர் கொய்ய - கதிர் பறிக்க, என்னை கிளிமதியாது என்று - என்னை கிளிமதியாதென்று, எடுத்து கவண் ஒலிப்ப - கவணெடுத்து ஒலி செய்ப, தென்நல்கிளி - அழகிய நல்ல கிளிகள், திரிந்து எறிய - சுழன்று எறிய, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(பொ-ரை.) நிலைபெற்று புனங்காவலையுடைய குதலைமொழியாள் புனத்தைக் காத்துக் கொண்டிருக்க, இளங்கிளிவந்து தன் காரியத்தைப் பற்றி கதிர் பறிக்க என்னை கிளிமதியாதென்று கவணெடுத்து ஒலி செய்ய அழகிய நல்ல கிளிகள் சுழன்று எறிய திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்கள் என்பதாம்.

(வி-ரை.) புனங்காவல் மடமொழியாள் - குறத்தி. (3)

மையார்தடங்கண்ணண்மடமொழியாள்புனங்காக்கச்
செவ்வேதிரிந்தாயோவெனப்போகாவிடவிளித்து
கைபாவியகவணன்மணியெறியவிரிந்தோடிச்
செவ்வாயினகிளிபாடிடுஞ்சீபர்ப்பதமலையே.

(ப-ரை) மை ஆர் - அஞ்சன மெழுதப்பெற்ற, தடம் கண்ணள் - பெருங் கண்ணையுடையாள், மடமொழியாள் - குதலைச் சொல்லையுடையவள், புனம் காக்க - புனத்தைக் காத்திருக்க, செவ்வே திரிந்தாயோ என - செவ்வையாய்த் திரிந்தாயோவென்று, போகாவிட - போகவிட, விளித்து - அழைத்து, கைபாவிய - கையிலுள்ள, கவணல் - கவண்கல்லால், மணி எறிய-மணிகளையெறிய, இரிந்து ஓடி - பரந்தோடி, செவ்வாய் இளங்கிளி பாடிடும் - செவந்த வாயினை யுடைய இளங்கிளிகள் பாடிக்கொண்டிருக்கிற, சீபர்ப்பத மலையே – திருப் பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ–று.

(பொ-ரை.) அஞ்சன மெழுதப்பெற்ற பெருங்கண்ணையுடையாள் குதலைச் சொல்லையுடையவள், புனத்தைக் காத்திருக்க, செவ்வையாய்த் திரிந்தாயோவென்று போகவிட, அழைத்து கையிலுள்ள கவண்கல்லால் மணிகளையெறிய பரந்தோடி செவந்த வாயினையுடைய இளங்கிளிகள் பாடிக்கொண்டிருக்கிற திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்க ளென்பதாம்.

(வி-ரை.) ஆயோவென - ஆயாலோட்ட. கவண் - கிளிமுதலிய வற்றை யோட்டுங் கருவி. மணி - மாணிக்கம். (4)

ஆனைக்குலமிரிந்தோடித்தன்பிடிசூழலிற்றிரியத்
தானப்பிடிசெவிதாழ்த்திடவதற்குமிகவிரங்கி
மானக்குறவடல்வேடர்களிலையாற்கலைகோலித்
தேனைப்பிழிந்தினிதூட்டிடுஞ்சீபர்ப்பதமலையே.

(ப-ரை.) ஆனைக்குலம் இரிந்து ஓடி - யானைக்கூட்டம் அஞ்சி யோடி, தன் பிடி சூழலில் திரிய-தன் பெண்யானைகள் காட்டில் திரிய, தான் அப்பிடி செவிதாழ்த்திட - தான் அப்பெண்யானை செவிதாழ்த்த, அதற்கு மிக இரங்கி-அதன்பொருட்டு மிகவும் இரக்கமுற்று, மானம் குறம் அடல் வேடர்கள் - பெருமை குறத்தன்மை வெற்றி யென்பவற்றையுடைய வேடர்கள், இலையால் கல்லை கோலி - இலையால் தொன்னை தைத்து, தேனைப்பிழிந்து - தேனைப் பிழிந்து, இனிது ஊட்டிடும் - இனிதாக வுண்பிக்கிற, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(பொ-ரை.) யானைக் கூட்டம் அஞ்சியோடி, தன் பெண்யானைகள் காட்டில் திரிய, தான் அப்பெண்யானை செவிதாழ்த்த, அதன் பொருட்டு மிகவும் இரக்கமுற்று பெருமை குறத்தன்மை வெற்றி யென்பவற்றையுடைய வேடர்

கள் இலையால் தொன்னைதைத்து தேனைப்பிழிந்து இனிதாக வுண்பிக்கிற திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்க ளென்பதாம்.

(வி-ரை) சூழல் – காடு. செவிதாழ்த்தல் - செவிவளைத்தல். கல்லை - தொன்னை, இது கலையெனத் தொகுத்தல் பெற்றது. (5)

மாற்றுக்களிறடைந்தாயென்றுமதவேழங்கையெடுத்து
மூற்றிக்கன லுமிழ்ந்துமதப்பொழிந்துமுகஞ்சுழியத்
தூற்றித்தரிக்கில்லேலென்றுசொல்லியயலறியத்
தேற்றிச்சென்றுபிடிசூழறுஞ்சீபர்ப்பதமலையே.

(ப-ரை.) மாற்று களிறு அடைந்தாய் என்று - வேறு களிற்றை யணைந்தாயென்று, மதவேழம் - மதயானை, கையெடுத்து – கையை உயர்த்தியும், ஊற்றி - வார்த்து, கனல் உமிழ்ந்தும் - நெருப்பைக் கக்கியும், மதம் பொழிந்தும் - மதநீரைச் சொரிந்தும், முகம் சுழிப்ப - முகங்கோண, தூற்றி - அலரெடுத்து, தரிக்கில்லேலன் என்று - சகிக்கிலேலனென்று, சொல்லி - சொல்லி, அயல் அறிய - அயலாரறிய, தேற்றி சென்று – தேற்றிப்போய், பிடி சூழாறும் - பெண்யானை சத்தியஞ்செய்கிற, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(பொ-ரை.) வேறு களிற்றை யணைந்தாயென்று மதயானை கையையுயர்த்தியும், வார்த்து நெருப்பைக் கக்கியும் மதநீரைச் சொரிந்தும் முகங்கோண அலரெடுத்து சகிக்கிலேலனென்று சொல்லி அயலாரறிய தேற்றிப்போய் பெண்யானை சத்தியஞ் செய்கிற திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்க ளென்பதாம்.

(வி-ரை.) தூற்றல் - பலரறியச் செய்தல். (6)

அப்போதுவந்துண்டீர்களுக்கழையாதுமுன்னிருந்தே
னெப்போதும்வந்துண்டாலெமையெமர்கள்சுளியாரோ
விப்போதுமக்கிதுவேதொழிலென்றோடியக்கிளியைச்
செப்பேந்திளமுலையாளெறிசீபர்ப்பதமலையே.

(ப-ரை.) அப்போது வந்து உண்டீர்களுக்கு - அப்பொழுது வந்துண்டவுமக்கு, அழையாது முன் இருந்தேன் - அழைப்பதற்கு முன்னேயிருந்தேன், எப்போதும் வந்து உண்டால் - எப்பொழுதும் வந்துண்டால், எமர்கள் – எம்மையன்மார்கள், எம்மை சுளியாரோ - எங்களைக் கோவிக்க மாட்டாரோ, இப்போது - இப்பொழுது, உமக்கு – உங்களுக்கு, இதுவே தொழில் என்று - இதுவே வேலையென்று, ஓடி - ஓடி, அக்கிளியை - அந்தக்கிளியை, செப்பு ஏந்து இளமுலையாள் - செப்புப்போல எந்தப்பட்ட முலையாளாகிய ஒரு குறப்பெண், எறி - எறிகிற, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(போ-ரை.) அப்பொழுது வந்துண்ட வுமக்கு அழைப்பதற்கு முன்னே யிருந்தேன், எப்பொழுதும் வந்துண்டால் எம்மையன்மார்கள் எங்களைக் கோபிக்க மாட்டாரோ, இப்பொழுது உங்களுக்கு இதுவே வேலையென்று ஓடி அந்தக்கிளியை செப்புப்போல எந்தப்பட்ட முலையாளாகிய ஒரு குறப்பெண் எறிகிற திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்க ளென்பதாம். (7)

(வி-ரை.) அழைத்தல் - கூவுதல். எறிதல் - கடிதல்.

திரியும்புரநீறாக்கியசெல்வன் றன்கழலை
யரிய திருமாலோடயன்றானு மவரறியார்
கரியின் னினமோடும்பிடிதே னுண்டவைகளித்துத்
திரிதந்தவை திகழ்வாற்பொலிசீபர்ப்பதமலையே.

(ப-ரை.) திரியும் புரம் - சஞ்சரிக்கிற புரங்களை, நீறு ஆக்கிய - பொடியாக்கின, செல்வன் றன் கழலை-செல்வனது திருவடியை, அரிய திருமாலோடு அயன்தானும் அவர் அறியார் - அரியராகிய திருமால் பிரமன் என்பவரு மறியமாட்டார், கரியின் இனமோடும் - யானைக்கூட்டத்தோடும், பிடி-பெண்யானைகள், தேன் உண்டவை களித்து - தேனுண்டு களித்து, திரிதந்து - திரிந்து, அவை திகழ்வால் பொலி - அவை ஒளியோடு மிக்கு விளங்குகிற, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(போ-ரை.) சஞ்சரிக்கிற புரங்களை பொடியாக்கின செல்வனது திருவடியை அரியராகிய திருமால் பிரமன் என்பவரு மறியமாட்டார், யானைக் கூட்டத்தோடும் பெண்யானைகள் தேனுண்டு களித்து திரிந்து அவை ஒளியோடுமிக்கு விளங்குகிற திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்களென்பதாம்.

(வி-ரை.) திரிதந்து என்பதற்குப் பகுதி திரிதா. திகழ்வால்-விளங்கலால்.

ஏனத்திரள்கிளைக்கவ்வெரிபோலம்மணிசிதர்த்தி
ஏனல்லவைமலைச்சாரலிற்றிரியுங்காடீயு
மானும்மரையினமும்மயின்மற்றும்பலவெல்லாந்
தேனுண்பொழில்சோலைம்மிகுசீபர்ப்பதமலையே.

(ப-ரை.) ஏனம் திரள் கிளைக்க - பன்றிக் கூட்டங்கள் சீக்க, எரிபோல மணிசிதர்த்தி – நெருப்புப்போன்ற மணிகளை யெறிந்து, ஏனல் அவை மலைச்சாரலில் - தினைவிளையும் மலைச்சாரலில், திரியும் காடீயும்-திரியும் காடிகளும், மானும் - மான்களும், மரை இனமும் - மரைக் கூட்டங்களும், மயில் - மயில்களும், மற்றும் பல எல்லாம் - மற்றுமுள்ள பலவும், தேன் உண் பொழில் சோலை மிகு - தேனுண்டற்குரிய சோலைகளடர்ந்த, சீபர்ப்பதமலையே - திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள் எ-று.

(போ-ரை.) பன்றிக்கூட்டங்கள் சிக்க, நெருப்புப் போன்ற மணிகளை யெறிந்து தினைவிளையும் மலைச்சாரலில் திரியும் காடிகளும் மான்களும் மரைக் கூட்டங்களும் மயில்களும் மற்றுமுள்ள பலவும் தேனுண்டற்குரிய சோலைக ளடர்ந்த திருப்பருப்பதத்தையே சிந்தித்திருங்கள்.

(க-ரை.) திருப்பருப்பதத்தைச் சிந்தித்திருங்க ளென்பதாம்.

(வி-ரை.) கிளைத்தல் - கீறுதல். எரிபோல் மணி - மாணிக்கம். ஏனல் - தினை. (9)

நல்லாரவர்பலர்வாழ்தருவயனாவலவூரன்
செல்லலுறவரியசிவன்சீபர்ப்பதமலையை
யல்லலவைதீரச்சொன்னதமிழ்மாலைகள்வல்லா
ரொல்லைச்செலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே.

(ப-ரை.) நல்லார் அவர் பலர் வாழ்தரு - நல்லோர் பலரும் வாழ்கின்ற, வயல்-வயல்சூழ்ந்த, நாவலவூரன் – நாவலூரையுடையவன், செல்லல் உற அரிய- துன்பந்தொடாத, சிவன் - சிவபிரானது, சீபர்ப்பதமலையை - ஸ்ரீசைலத்தை, அல்லல் அவை தீரச் சொன்ன - துன்பங்களாகிய அவை யாவு மொழியச் சொல்லிய, தமிழ்மாலைகள் வல்லார் - தமிழ் மாலைகள் வல்லவர், ஒல்லை-விரை வாக, செல்ல - சென்று, உயர் - உயர்ந்த, வானகம் ஆண்டு – விண்ணுலகத்தை யாண்டு, அங்கு இருப்பார் - அவ்விடத்து வீற்றிருப்பவராவர் எ—று.

(போ-ரை.) நல்லோர் பலரும் வாழ்கிற வயல்சூழ்ந்த நாவலூரையுடைய வன் துன்பந்தொடாத சிவபிரானது ஸ்ரீசைலத்தை, துன்பங்களாகிய அவை யாவுமொழியச்சொல்லிய தமிழ் மாலைகள் வல்லவர் விரைவாகசென்று உயர்ந்த விண்ணுலகத்தையாண்டு அவ்விடத்து வீற்றிருப்பவராவர்.

(க-ரை.) இறைவனது திருப்பருப்பதத்தை நாவலூரான் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாடலும் கற்றுவல்லார் சிவலோகத்திற்போய் வாழ்ந்திருப்பார் என்பதாம்.

(வி-ரை.) வாழ்தரு என்பதற்கு வாழ்தரபகுதி, வாழ்கின்ற என்பது பொருள். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் வடநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பருப்பதேஸ்வரர். தேவியார் - பருப்பதமங்கையம்மை. இது ஸ்ரீசைலமென்றும், மல்லிகார்ச்சுனமென்றும் வழங்குகின்றது.

## திருக்கேதீச்சரம்

பண் - நட்டபாஷை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படைஞானன்பசுவேறிக்நனைகவுண்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேற்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே.

(ப - ரை.) நத்தார் - பகைவரை, படை - படுத்தலையுடைய, ஞானன் - ஞானவாளுடையவன், பசு ஏறி - இடபவாகனன், நனைகவுள்வாய் - நனைந்த கபோலத்தோடு கூடிய வாயினையுடைய, மத்தமதயானை - மயக்கத்தையுடைய மதயானையின், உரிபோர்த்த - தோலைப்போர்த்துக்கொண்ட, மணவாளன் - மணாளன், பத்தாகிய - பத்தராகிய, தொண்டர்தொழு - அடியவர் வணங்குகிற, பால் ஆவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, செத்தார் எலும்பு அணிவான் - இறந்தவரது எலும்பையணிந்தவன், திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன் எ-று.

(பொ - ரை.) பகைவரை படுத்தலையுடைய ஞானவாளுடையவன், இடபவாகனன், நனைந்த கபோலத்தோடு கூடிய வாயினையுடைய மயக்கத்தையுடைய மதயானையின் தோலைப்போர்த்துக் கொண்ட மணாளன், பத்தராகிய அடியவர் வணங்குகிற பாற்குளத்தின் கரைமீது இறந்தவரது எலும்பை யணிந்தவன் திருக்கேதீச்சரத்திலெழுந்தருளியிருப்பவன்.

(க-ரை) தன்னை விரும்பாதவரைப் படுத்தல் முதலிய தொழில்களை யுடைய சிவபெருமான் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருப்பவன் என்பதாம்.

(வி-ரை.) நத்தார் - விரும்பாதவர். (பகைவர்) படை-படுத்தல் (கொல்லுதல்) ஞானன் - அறிவுருவனுமாம். பற்று-அன்பு, அது பத்து என விகாரமாயிற்று.

சுடுவார்பொடிநீறுநல்லதுண்டப்பிறைக்கீளுங்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றிடமாவுறைகின்றான்றிருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை) சுடுவார் பொடி நீறும் - சுடப்படுவோரது சாம்பலும், நல்ல துண்டப் பிறைக்கீளும்-சிறந்த துண்டிக்கப்பட்ட மதிப்பிளவும், கடம் ஆர் களி யானை உரி - மதத்தையுடைய யானைத்தோலும், அணிந்த - தரித்த, கறைகண்டன் - விஷகண்டன், படம் ஏர் இடைமடவாளொடு-உமாதேவியோடு, பாலாவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, திடமா உறைகின்றான் - திர

மாக வாழ்பவன், திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவன் எ-று.

(போ-ரை.) சுடப்படுவோரது சாம்பலும், சிறந்த துண்டிக்கப்பட்ட மதிப் பிளவும், மதத்தையுடைய யானைத்தோலும் தரித்த விஷகண்டன், உமாதேவி யோடு பாற்குளத்தின் கரைமீது திரமாக வாழ்பவன் திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன்.

(க-ரை.) சுடுவோர் பொடியணிதல் முதலியவற்றையுடைய சிவபெருமான், பாலாவியின் கரைமேலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருப்பவன் என்பதாம்.

(வி-ரை.) துண்டப்பிறை-சந்த்ரகண்டம். கீள்-கீளுடை. படம்-நூலிழை. ஏர் - நிகர்த்த, அழகாகிய எனினுமாம். படம் ஆர் இடை மடவாள் என்றது உமாதேவியை. (2)

அங்கம்மொழியன்னாரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தபிறைசூடினன்பாலாவியின்கரைமேற்
செங்கண்ணரவசைத்தான்றிருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை.) அங்கம் மொழி அன்னார் அவர்-வேதாங்கங்களைச் சொன்னவரா கிய சிவபெருமானார், அமரர்தொழுது ஏத்த - தேவர்கள் வணங்கித் துதிக்க, வங்கம் மலிகின்ற கடல்-கப்பல்கள் மிக்க கடல்வளைந்த, மாதோட்டநல்நகரில்-மாதோட்ட மென்னும் நல்லநகரில், பங்கம் செய்த பிறை சூடினன் – துண்டப் பிறையைத் தரித்தவன், பாலாவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, செங்கண் அரவு அசைத்தான் - செங்கண்களையுடைய பாம்பைக் கச்சையாகத் திருவரையிற் கட்டினவன், திருக்கேதீச்சரத்தானே-திருக்கேதீச்சரத்திலெழுந் தருளி யிருப்பவன் எ-று.

(போ-ரை.) வேதாங்கங்களைச் சொன்னவராகிய சிவபெருமானார், தேவர் கள் வணங்கித் துதிக்க, கப்பல்கள் மிக்க கடல்வளைந்த மாதோட்ட மென்னும் நல்ல நகரில் துண்டப் பிறையைத் தரித்தவன், பாற்குளத்தின் கரைமீது செங் கண்களையுடைய பாம்பைக் கச்சையாகத் திருவரையிற் கட்டினவன், திருக்கே தீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவன்.

(க-ரை.) தேவர் முதலியோர் தொழுது துதிக்க, சந்திர சேகரனாகிய சிவபெருமான் திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவனென்பதாம்.

(வி-ரை.) பங்கம் செய்த - பிளந்த. அசைத்தல் - கட்டுதல். (3)

கரியகறைக்கண்டனல்லகண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ்செயுமாதோட்டநன்னகருட்
பரியதிரையெறியாவருபாலாவியின்கரைமேற்
றெரியுமறைவல்லார்திருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை.) கரிய கறைக்கண்டன் - கருமையாகிய விஷகண்டன், நல்ல கண்மேல் ஒரு கண்ணன் - நல்ல கண்களின்மேல் ஒரு கண்ணுடையவன், வரிய சிறை-வரிகளோடு கூடிய சிறகுகளையுடைய, வண்டியாழ் செய்யும்-வண்டுகள் யாழ்வாசிக்கிற, மாதோட்ட நன்னகருள் - மாதோட்ட நன்னகரத்தில், பரிய திரை எறியவரு-பெரிய அலைகளை வீசிவருகிற, பாலாவியின் கரைமேல்-பாலாவியின் கரைமீதுள்ள, தெரியும் மறைவல்லார் - வேதமறிந்து வல்லவராகிய வேதியர் வாழ்கின்ற, திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்திலெழுந்தருளி யிருப்பவன் எ-று.

(போ-ரை.) கருமையாகிய விஷகண்டன், நல்ல கண்களின்மேல் ஒரு கண்ணுடையவன், வரிகளோடு கூடிய சிறகுகளையுடைய வண்டுகள் யாழ் வாசிக்கிற மாதோட்ட நன்னகரத்தில் பெரிய அலைகளை வீசிவருகிற பாலாவியின்கரைமீதுள்ள வேதமறிந்து வல்லவராகிய வேதியர் வாழ்கின்ற திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவன்.

(க-ரை) கறைக்கண்டத்தையுடைய சிவபெருமான் திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவன் என்பதாம்.

(வி-ரை.) நல்லகண்மேல் ஒரு கண்ணன் – மூன்று கண்களையுடையவன்.

அங்கத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வங்கமலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றெங்கம்பொழில்சூழ்ந்ததிருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை) அடியார்மேல் - அடியவரிடத்து, அங்கத்து உறும்-உடம்பிலுண்டாகிற, நோய்கள் ஒழித்தருளி-பிணிகளை நீக்கியருளி, வங்கம் மலிகின்ற கடல்-கப்பல்கள் மிகுகின்ற கடல் வளைந்த மாதோட்ட நல் நகரில்-மாதோட்ட நன்னகரத்தில், பங்கம் செய்த மடவாளொடு - திருமேனியைப் பகிர்ந்து கொண்ட பார்வதிதேவியுடன், பாலாவியின் கரைமேல்-பாற்குளத்தின் கரைமீது, தெங்கம் பொழில் சூழ்ந்த - தென்னஞ்சோலைகள் சூழ்ந்த, திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்திலெழுந்தருளியிருப்பவன் எ-று.

(போ-ரை.) அடியவரிடத்து உடம்பிலுண்டாகிற பிணிகளை நீக்கியருளி, கப்பல்கள் மிகுகின்ற கடல் வளைந்த மாதோட்ட நன்னகரத்தில் திருமேனியைப் பகிர்ந்துகொண்ட பார்வதிதேவியுடன் பாற்குளத்தின் கரைமீது தென்னஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவன்.

(க ரை). அடியார்களை நோய்தவிர்த்தாள்வோனாகிய சிவபெருமான் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனென்பதாம். (5)

வெய்யவினையாயவடியார்மேலொழித்தருளி
வையமலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பையேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
செய்யசடைமுடியார்திருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை.) அடியார்மேல்-அடியவரிடத்துண்டாகிற, வெய்யவினையாயது-வெவ்வினையானதை, ஒழித்தருளி-நீக்கியருளி, வையம்மலிகின்ற கடல் - கப்பல்கள் மிகுந்த கடல் வளைந்த, மாதோட்ட நன்னகரில் - மாதோட்ட நன்னகரத்தில், பை ஏர் இடை மடவாளொடு - பாம்பை நிகர்த்த இடையையுடையவளாகிய உமாதேவியோடு, பாலாவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, செய்ய சடைமுடி ஆர்-செஞ்சடைமுடியையுடைய, திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன் எ-று.

(பொ-ரை.) அடியவரிடத்துண்டாகிற வெவ்வினையானதை நீக்கியருளி, கப்பல்கள் மிகுந்த கடல் வளைந்த மாதோட்ட நன்னகரத்தில் பாம்பை நிகர்ந்த இடையையுடையவளாகிய உமாதேவியோடு பாற்குளத்தின் கரைமீது செஞ்சடை முடியையுடைய திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருபபவன்.

(க-ரை.) அடியாரது வெவ்வினையை யொழித்தருள்கின்ற சிவபெருமான் திருக்கேதீச்சாத்தி லெழுந்தருளியிருக்கிருனென்பதாம்.

(வி-ரை.) செய்ய - செந்நிறத்தையுடைய. (6)

ஊனத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வானத்துறமலியுங்கடன்மாதோட்டநன்னகரிற்
பானத்துறுமொழியாளொடுபாலாவியின்கரைமே
லேனத்தெயிறணிந்தான்திருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை) அடியார்மேல் - அடியவரிடத்து, ஊனத்து உறு நோய்கள் - உடம்பின்மேலுண்டாகிற பிணிகளை, ஒழித்தருளி - நீக்கியருளி, வால்நத்து-வெண்சங்குகள், உறமலியும் கடல்-மிகவும் நிறைந்த கடல்வளைந்த, மாதோட்ட நன்னகரில் - மாதோட்ட நன்னகரத்தில், பால்நத்துறு மொழியாளொடு - பால் விரும்புகிற சொல்லை யுடையவளாகிய உமாதேவியோடு, பாலாவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, ஏனத்து எயிறு அணிந்தான் - பன்றியின் கொம்பைத் தரித்தவன், திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்திலெழுந்தருளியிருப்பவன் எ-று.

(பொ-ரை.) அடியவரிடத்து உடம்பின்மேலுண்டாகிற பிணிகளை நீக்கியருளி, வெண்சங்குகள், மிகவும் நிறைந்த கடல்வளைந்த மாதோட்ட நன்னகரத்தில் பால்விரும்புகிற சொல்லையுடையவளாகிய உமாதேவியோடு பாற்குளத்தின் கரைமீது பன்றியின் கொம்பைத் தரித்தவர் திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன்.

(க-ரை.) அடியார்மேல், ஊனத்து உறும் நோய்களையொழித்தருளி உமையவளோடு கூடியிருப்பவனாகிய சிவபெருமான் திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருக்கிறு னென்பதாம்.

(வி-ரை.) ஊனம் - உடம்பு, இதில் அம் சாரியை. (7)

அட்டனழகாகவரைதன்மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாடும்பொழின்மாதோட்டநன்னகரிற்
பட்டவரிநுதலாளொடுபாலாவியின்கரைமேற்
சிட்டனமையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை.) அட்டன் - அஷ்ட மூர்த்தத்தை யுடையவன், அழகாக அரைதன்மேல் — திருவரையில் அழகாக, அரவு ஆர்த்து - பாம்பைக் கட்டி, மட்டு உண்டு - தேனையுண்டு, வண்டு ஆடும் பொழில்-வண்டுகள் விளையாடுஞ் சோலை சூழ்ந்த, மாதோட்ட நன்னகரில் - மாதோட்ட நன்னகரத்தில், பட்டவரி நுதலாளொடு - உமாதேவியோடு, பாலாவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, சிட்டன் - மேலானவன், நம்மை ஆள்வான் - எம்மை யாள்வோன், திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன்.

(பொ-ரை.) அஷ்டமூர்த்தத்தை யுடையவன், திருவரையில் அழகாக பாம்பைக் கட்டி, தேனையுண்டு வண்டுகள் விளையாடுஞ் சோலைசூழ்ந்த மாதோட்ட நன்னகரத்தில் உமாதேவியோடு பாற்குளத்தின் கரைமீதுள்ள மேலானவன், எம்மையாள்வோன், திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளி யிருப்பவன்.

(க-ரை.) சிவபெருமான் உமையவளோடு கூடித் திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருக்கிறு னென்பதாம்.

(வி-ரை.) பட்டம் - நெற்றிப்பட்டம். வரி - நீளம். நுதலாள்-நெற்றியை யுடையவள். (8)

மூவரெனவிருவரெனமுக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும்பொழின்மாதோட்டநன்னகரிற்
பாவம்வினையறுப்பார்பயில்பாலாவியின்கரைமேற்
றேவனெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே.

(ப-ரை.) மூவர் என - மூவரென்றும், இருவர் என - இருவர் என்றும், முக்கண் உடை மூர்த்தி - மூன்று கண்களையுடைய மூர்த்தி, மாவின்கனி-மாங் கனிகள், தூங்கும் பொழில் - தொங்குகிற சோலைகள் சூழ்ந்த, மாதோட்ட நன்னகரில் - மாதோட்ட நன்னகரத்தில், பாவம் வினை - பாவத்தொழில்களை, அறுப்பார் - சேதிப்பவராகிய அடியார், பயில் - நெருங்குகிற, பாலாவியின் கரைமேல் - பாற்குளத்தின் கரைமீது, தேவன் - கடவுள், என்னை ஆள்வான்- என்னை யாண்டருள்வோன், திருக்கேதீச்சரத்தானே - திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன் எ-று.

(பொ-ரை.) மூவரென்றும் இருவர் என்றும் மூன்று கண்களையுடைய மூர்த்தி, மாங்கனிகள் தொங்குகிற சோலைகள் சூழ்ந்த மாதோட்ட நன்னகரத்தில் பாவத்தொழில்களை சேதிப்பவராகிய அடியார் நெருங்குகிற பாற்குளத்தின் கரைமீதுள்ள கடவுள், என்னை யாண்டருள்வோன், திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பவன்.

(க ரை.) மூவர் முதலிய வுருவத்தோடு கூடியிருப்பவனாகிய சிவபெருமான், திருக்கேதீச்சரத்தி லெழுந்தருளியிருப்பனென்பதாம். (9)

**கறையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருட்**
**சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை**
**மறையார்புகழூரன்னடித்தொண்டனுரைசெய்த**
**குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே.**

(ப-ரை.) கறை ஆர் கடல்சூழ்ந்த - கருங்கடல் சூழ்ந்த, கழி - உப்புக்கழிகள் விளைந்த, மாதோட்ட நன்னகரில் - மாதோட்ட நன்னகரத்தில், சிறை ஆர் வண்டு - சிறகுகளையுடைய வண்டுகள், யாழ்செய்யும் - பண்பாடுகிற, பொழில்-சோலைசூழ்ந்த, கேதீச்சரத்தானை - திருக்கேதீச்சரத்துச் சிவபெருமானை, மறையார்புகழ் - வேதியர்புகழ்கிற, ஊரான் அடித்தொண்டன் - சுந்தரன், உரைசெய்த - சொன்ன, குறையா - குறையாத, தமிழ் பத்தும் சொல்ல - தமிழ்ப்பாடல்களாகிய பத்தினையும் சொல்லின், கொடுவினை கூடா - கொடிய வினைகள் சேரா எ-று.

(பொ-ரை.) கருங்கடல் சூழ்ந்த உப்புக் கழிகள் விளைந்த மாதோட்ட நன்னகரத்தில் சிறகுகளையுடைய வண்டுகள் பண்பாடுகிற சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரத்துச் சிவபெருமானை வேதியர் புகழ்கிற சுந்தரன் சொன்ன குறையாத தமிழ்பாடல்களாகிய பத்தினையும் சொல்லின் கொடிய வினைகள் சேரா.

(க-ரை) திருக்கேதீச்சரத்துச் சிவபெருமானை ஊரன் அடித்தொண்டன் புகழ்ந் துரைத்த பத்துப் பாடலும் சொல்வாரைக் கொடிய வினைகள் அணுகா வென்பதாம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் ஈழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கேதேச்சுவரர். தேவியார் - கௌரிநாயகியம்மை.

---

## திருக்கழுக்குன்றம்

பண் - நட்டபாஷை

திருச்சிற்றம்பலம்

**கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே**
**நின்றபாவம்வினைகடாம்பலநீங்கவே**
**சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்**
**கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.**

(ப-ரை.) கொன்றுசெய்த - பலவுயிர்களைக் கொலைசெய்த, கொடுமையால் - பாவத்தினால், பலசொல்ல - கண்டோர் பலபடியாகப்பேச, நின்ற பாவம்வினை

கள் தாம் பல நீங்க - நிலைபெற்ற பாவமும் அதன் காரணமாகிய வினைகளுமாகிய யாவும் நீங்கும்படி, சென்று சென்று தொழுமின் - போய்ப் போய் வணங்குங்கள், தேவர்பிரான் இடம் - தேவர் பெருமானாகிய சிவபெருமானது இடமாகிய, கன்றினோடு - கன்றுகளுடனே, பிடிசூழ் - பெண்யானைகள் சூழ்ந்து திரிகிற, தண்கழுக்குன்றமே - குளிர்ச்சியையுடைய திருக்கழுக்குன்றத்தை.

(பொ-ரை.) பலவுயிர்களைக் கொலைசெய்த பாவத்தினால் கண்டோர் பலபடியாகப்பேச, நிலைபெற்ற பாவமும், அதன் காரணமாகிய வினைகளுமாகிய யாவும் நீங்கும்படி, போய்ப்போய் வணங்குங்கள், தேவர் பெருமானாகிய சிவபெருமானது இடமாகிய கன்றுகளுடனே பெண்யானைகள் சூழ்ந்து திரிகிற குளிர்ச்சியையுடைய திருக்கழுக்குன்றத்தை.

(க-ரை.) கொலைமுதலியவற்றா லுண்டாகிய பாவவினைகள் நீங்கும்படி சிவபெருமானது இடமாகிய திருக்கழுக் குன்றத்தை வணங்குங்களென்பதாம்.

(வி-ரை.) கொன்று-கொலைசெய்து. கொடுமை - தீச்செயல். தொழுமின் என்பதற்கு நீங்கள் என்னும் எழுவாய் வருவித்துரைத்துக் கொள்க. இது உலகத்தாரை நோக்கிக் கூறியது. உலகத்தீரே, உங்கள் பாவவினைகளொழியும் பொருட்டு, தேவர் பிரானாகிய சிவபிரானுக் கிடமாயிருக்கிற திருக்கழுக் குன்றத்தைச் சென்று வணங்குங்கள் என்று முடித்துக் கொள்க. (1)

இறங்கிச்சென்றுதொழுமின்வண்டிசைபாடவே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
சறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே.

(ப-ரை.) வண்டு இசைபாட-வண்டுகள் இராகங்களைப் பாடாநிற்க, பிறங்கு கொன்றைச்சடையன் - விளங்குகிற கொன்றை மலர்மாலையணிந்த சடையையுடையவனாகிய, எங்கள் பிரான்-எம்பெருமானது, இடம் - இடமாயிருப்பது, நிறங்கள் செய்த மணிகள்-பல நிறங்கள் பொருந்திய மணிகளையும், நித்திலம்-முத்துக்களையும், கொண்டு இழி - வாரிக்கொண்டிறங்குகிற, சறங்கு வெள்ளை அருவி - சத்திக்கிற வெள்ளருவிகளையுடைய, தண்கழுக்குன்றமே - தண்ணிய கழுக்குன்றமேயாம் (ஆதலால்), இறங்கிச் சென்று தொழுமின் - நீங்கள் தாழ்ந்துபோய் வணங்குங்கள் எ-று.

(பொ-ரை.) வண்டுகள் இராகங்களைப் பாடாநிற்க, விளங்குகிற கொன்றை மலர் மாலையணிந்த சடையையுடையவனாகிய, எம்பெருமானது இடமாயிருப்பது பல நிறங்கள் பொருந்திய மணிகளையும் முத்துக்களையும் வாரிக் கொண்டிறங்குகிற சத்திக்கிற வெள்ளருவிகளையுடைய தண்ணிய கழுக்குன்றமேயாம் (ஆதலால்), நீங்கள் தாழ்ந்துபோய் வணங்குங்கள்.

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தை வணங்குங்கள் என்பதாம்.

(வி-ரை.) கொன்றை-இருமடியாகுபெயர். மணிகள் நித்திலம் என்பவற் றீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. கறங்குதல் - ஒலித்தல். (2)

நீளநின்றுதொழுமினித்தலுநீதியா
லாளுநம்மவினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே.

(ப-ரை.) நீதியால் - நீதிநெறியோடு, ஆளும் - ஆண்டருள்வன், நம்ம வினைகள் - நம்முடைய வினைகள், அல்கி அழிந்திட - தேய்ந்தழிந்துபோக, தோளும் எட்டும் உடைய — எட்டுத் தோள்களையுடையவன், மாமணிச் சோதி யான் - மாணிக்க நிறமுள்ளவன், காளகண்டன் - விஷகண்டன், உறையும் - (அவன்) வாழ்கிற, தண்கழுக்குன்றமே - திருக்கழுக்குன்றத்தையே, நித்த லும் - நாள்தோறும், நீளநின்று தொழுமின் - நெடுக நின்று வணங்குங்கள் எ-று.

(போ-ரை.) நீதிநெறியோடு ஆண்டருள்வன், நம்முடைய வினைகள் தேய்ந்தழிந்துபோக எட்டுத் தோள்களை யுடையவன், மாணிக்க நிறமுள்ள வன், விஷகண்டன் (அவன்) வாழ்கிற திருக்கழுக்குன்றத்தையே நாள் தோறும் நெடுகநின்று வணங்குங்கள்.

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச் சென்று வணங்குங்க ளென்பதாம்.

(வி-ரை) தோளும் எட்டும் என்னும் உம்மைகள் இசை நிறையாய் வந்த இடைச் சொற்கள். மாமணி - மாணிக்கம். காளம் - நஞ்சு. (3)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்ம்மதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.

(ப-ரை.) வெண்பொடி யாடியை - வெண்ணீறு பூசுவோனை, வெளிறு தீரத்தொழுமின் - உங்கள் அறியாமை யொழிய வணங்குங்கள், (யாரையெ னின்) முளிறு இலங்கு மழுவாளன் - கூர்மையோடு விளங்குகிற மழுப்படை யையுடையவன், முந்தி உறைவிடம்-முற்பட்டு வாழ்கிற, பிளிறுதீர - முழக்க மடங்க, பெருங்கை-நீண்ட துதிக்கையினையுடைய, பெய்மதம் மூன்று உடை- பொழிகிற மூன்று மதங்களையுடைய, களிறினோடு - ஆண்யானைகளோடு, பிடி சூழ் - பெண்யானைகளும் சூழ்கின்ற, தண்கழுக் குன்றமே - தண்ணிய திருக் கழுக்குன்றத்தை எ-று.

(பொ-ரை.) வெண்ணீறு பூசுவோனை, உங்கள் அறியாமை யொழிய வணங்குங்கள், (யாரையெனின்) கூர்மையோடு விளங்குகிற மழுப்படையை யுடையவன், முறப்பட்டு வாழ்கிற முழக்க மடங்க நீண்ட துதிக்கையினையுடைய பொழிகிற மூன்று மதங்களையுடைய ஆண்யானைகளோடு பெண் யானைகளும் சூழ்கின்ற தண்ணிய திருக்கழுக்குன்றத்தை.

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச் சென்று வணங்குங்கள் என்பதாம்.

(வி-ரை.) வெளிறு - அறியாமை. பிளிறல் - ஒலித்தல். மும்மதம் - கர்ண மதம், கபோலமதம், கோசமதம். (4)

புலைகடீரத்தொழுமின்புன்சடைப்புண்ணிய
னிலைகொள்சூலப்படையனெந்தைபிரானிட
முலைகளுண்டுதழுவிக்குட்டியோடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே.

(ப-ரை.) புன்சடை புண்ணியன் - புன்சடையையுடைய புண்ணியன், இலைகொள் சூலப்படையன்-இலையைக் கொண்ட சூலாயுதத்தை யுடையவன், எந்தை பிரான்-எந்தை பெருமான், இடம் - (அவனது) இடமாகிய, முலைகள் உண்டு தழுவி-முலைகளையுண்டு அணைத்து, குட்டியோடு முசுக்கலைகள்பாயும் - குட்டிகளோடு முசுக்கலைகள் குதிக்கிற, புறவின்-முல்லை நிலத்தைத் தழுவிய, தண்கழுக்குன்றமே - தண்ணிய திருக்கழுக்குன்றத்தை, (அதனை) புலைகள் தீர - நமது இழிவுகள் நீங்க, தொழுமின் - வணங்குங்கள் எ-று.

(பொ-ரை.) புன்சடையையுடைய புண்ணியன், இலையைக் கொண்ட சூலாயுதத்தையுடையவன், எந்தை பெருமான், (அவனது) இடமாகிய முலைகளை யுண்டு அணைத்து குட்டிகளோடு முசுக்கலைகள் குதிக்கிற முல்லை நிலத்தைத் தழுவிய தண்ணிய திருக்கழுக்குன்றத்தை (அதனை) நமது இழிவுகள் நீங்க வணங்குங்கள்.

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச் சென்று வணங்குங்க ளென்பதாம்.

(வி-ரை.) இலை - அச்சவடிவு. முலைகளுண்டு என்றது முலைப்பாலை யுண்டு என்றபடி. முசுக்கலை - குரங்கு. புலை - நீசத்துவம். (5)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையவரவன்றான்பயிலும்மிடங்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே.

(ப-ரை.) மடம் உடைய - அறியாமை கெட, அடியார் தம் மனத்தே உற - அடியாரது மனத்திற் பொருந்த, விடம் உடைய மிடறன் - விஷமமைந்த கண்டத்தை யுடையவன், விண்ணவர் மேலவன் - தேவர்க்கு மேலானவன், படம் உடைய அரவன் - படமுள்ள பாம்பை யுடையவன், தான்பயிலும் இடம் - அவன் வாழுமிடமாகிய, கடம் உடைய புறவின் - காட்டினையுடைய முல்லை நிலத்திலுள்ள, தண் கழுக்குன்றமே - தண்ணிய திருக்கழுக் குன்றமே, (அதனைச் சென்று வணங்குங்கள்) எ-று.

(போ-ரை.) அறியாமை கெட அடியாரது மனத்திற் பொருந்த விஷமமைந்த கண்டத்தை யுடையவன், தேவர்க்கு மேலானவன், படமுள்ளபாம்பை யுடையவன், அவன் வாழுமிடமாகிய காட்டினையுடைய முல்லை நிலத்திலுள்ள தண்ணிய திருக்கழுக்குன்றமே (அதனைச் சென்று வணங்குங்கள்.)

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச்சென்று வணங்குங்கள் என்பதாம்.

(வி-ரை.) மடம் உடைய என்பதற்கு அறியாமை நசிக்கும் பொருட்டு எனினுமாம். மிடறு - கண்டம். (6)

ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண்டின்னிசைபாடவே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே.

(ப-ரை.) ஊனம் இல்லா - குற்ற மில்லாத, அடியார் தம்மனத்தே உற - அடியவர் மனத்திற் பொருந்த, ஞானமூர்த்தி - ஞானவுருவன், நட்டம் ஆடி - கூத்தாடுவோன், நவிலும் இடம் - உறைபுமிடம், தேனும் வண்டும் - தேன்வண்டும் கருவண்டும், மது உண்டு - தேனையுண்டு, இன் இசை பாட - இனிய இராகத்தைப் பாட, கான மஞ்ஞை உறையும் - காட்டுமயில்கள் வாழ்கிற, தண் கழுக்குன்றமே - தண்ணிய திருக்கழுக்குன்றத்தை, (சென்று வணங்குங்கள்) எ-று.

(போ-ரை.) குற்றமில்லாத அடியவர் மனத்திற்பொருந்த ஞானவுருவன், கூத்தாடுவோன் உறையுமிடம், தேன்வண்டும் கருவண்டும் தேனையுண்டு இனிய இராகத்தைப்பாட காட்டுமயில்கள் வாழ்கிற தண்ணிய திருக்கழுக்குன்றத்தை (சென்று வணங்குங்கள்.)

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச் சென்று வணங்குங்க ளென்பதாம்.

(வி-ரை.) ஊனம் - குற்றம். ஞானமூர்த்தி-அறிவுருவன் நட்டம்-நடனம்.

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்தமலர்கணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற்றண்கழுக்குன்றமே.

(ப-ரை.) அந்தம் இல்லா - முடிவில்லாத, அடியார்தம் மனத்தே உற- அடியார்கள் மனத்திற் பொருந்த, வந்து நாளும் வணங்கி - வந்து நாள்தோறும் தொழுது, மாலொடு நான்முகன்-திருமாலோடு பிரமனும், சிந்தை செய்தமலர்கள் - அருச்சித்த மலர்கள், நித்தலும் சேர - தினந்தோறும் சேர்ந்தவாது, கந்தம் நாறும் புறவின்-பரிமளம் வீசுகிற முல்லை நிலத்தைத் தழுவிய, தண்கழுக் குன்றமே - தண்ணிய திருக்கழுக்குன்றத்தை, (சென்று வணங்குங்கள்) எ-று.

(பொ-ரை.) முடிவில்லாத அடியார்கள் மனத்திற் பொருந்த வந்து, நாள்தோறும் தொழுது, திருமாலோடு பிரமனும் அருச்சித்த மலர்கள் தினந்தோறும் சேர்ந்தவாது பரிமளம் வீசுகிற முல்லை நிலத்தைத் தழுவிய தண்ணிய திருக்கழுக் குன்றத்தை (சென்று வணங்குங்கள்.)

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச் சென்று தொழுங்க ளென்பதாம்.

(வி-ரை) அந்தம் இல்லா என்றது பெருமைக்கு முடிவில்லாத என்றபடி, கந்தநாறும் எனப் பாடங்கொண்டு மணம் வீசுகின்ற என் றுரைத்தலுமாம் (8)

பிறைகடூரத்தொழுமின்பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையுமிட
மழைகள்சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே.

(ப-ரை.) புன்சடை பிஞ்ஞகன்-புன்சடையையுடைய பிஞ்ஞகன், குழைகொள் காதன் - குண்டலமணிந்த செவியை யுடையவன், குழகன் - அழகன், தான் உறையும் இடம் - அவன் வாழுமிடம், மழைகள் சால கலித்து - மேகங்கள் மிக முழங்கி, நீடு உயர் வேய் அவை-மிகவும் நீண்ட மூங்கில்களானவை, குழை கொள் முத்தம் சொரியும் - செழுமையாகக் கொண்ட முத்துக்களைச் சிந்துகிற, தண்கழுக்குன்றமே - தண்ணிய திருக்கழுக்குன்றத்தை. (சென்று வணங்குங்கள்.) எ-று.

(பொ-ரை.) புன்சடையையுடைய பிஞ்ஞகன், குண்டலமணிந்த செவியையுடையவன், அழகன், அவன் வாழுமிடம், மேகங்கள் மிகமுழங்கி மிகவும் நீண்ட மூங்கில்களானவை செழுமையாகக் கொண்ட முத்துக்களைச் சிந்துகிற தண்ணிய திருக்கழுக்குன்றத்தை (சென்று வணங்குங்கள்.)

(க-ரை.) சிவபெருமானது இடமாகிய திருக்கழுக்குன்றத்தைச் சென்று வணங்குங்கள் என்பதாம்.

(வி-ரை) பிஞ்ஞகன்-பிஞ்ஞகம் என்னும் தலைக்கோலத்தை யுடையவன் (சிவபெருமான்) குழை - குண்டலம். குழை - செழிப்பு. வேய் - மூங்கில். சால - மிகுதியாக. (9)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே.

(ப-ரை.) பல் இல் - பல்லில்லாத, வெள்ளைத்தலையன் - வெண்டலையை யுடையவன், தான் பயிலும் இடம் - அவன் வாழுமிடமாகிய, கல்லில் - கற்பா றைகளின் மேல், வெள்ளை அருவி - வெள்ளருவிகள் தவழ்கின்ற, தண் கழுக் குன்றினை - தண்ணிய திருக்கழுக் குன்றத்தை, மல்லின் மல்கு - மற்போரில் உயர்ந்த, திரள் தோள் - திரண்ட தோள்களையுடைய, ஊரன்-சுந்தரன், வனப் பினால் - அழகோடு, சொல்லல் - சொன்ன பாடல்களை, சொல்லித் தொழு வாரை-பாடி வணங்குவோரை, தொழுமின்கள் - நீங்கள் வணங்குங்கள் எ-று.

(பொ-ரை.) பல்லில்லாத வெண்டலையை யுடையவன், அவன் வாழுமிட மாகிய கற்பாறை களின்மேல் வெள்ளருவிகள் தவழ்கின்ற தண்ணிய திருக்கழு க்குன்றத்தை மற்போரில் உயர்ந்த திரண்ட தோள்களையுடைய சுந்தரன் அழ கோடு சொன்ன பாடல்களை பாடி வணங்குவோரை நீங்கள் வணங்குங்கள்.

(கு-ரை.) சிவபெருமானிடமாகிய திருக்கழுக் குன்றினை நாவலூரன் உரை த்த இப் பத்துப் பாடலுங் கற்று வல்லாரைத் தொழுவாரைத் தொழுங்களென் பதாம்.

(வி-ரை.) பல்லில் வெள்ளைத் தலையன் - பல்லுதிர்ந்த வெண்டலையை யுடையவன். (கபாலி) பயிலல்-பழகுதல். மல்-மற்போர். வனப்பு-அழகு. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதகிரீசுவரர். தேவியார்-பெண்ணினல்லாளம்மை.

---

## திருச்சுழியல்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

ஊனாயுயிர்புகலாயகலிடமாய்முகில்பொழியும்
வானாய்வருமதியாய்விதிவருவானிடம்பொழிலின்
தேனாதரித்திசைவண்டினமிழற்றுந்திருச்சுழிய
லானாவிதனினைவார்தமைநலியார்நமன்றமரே.

(ப-ரை.) ஊன் ஆய் - தசையாகி, உயிர்புகல் ஆய்-உடம்பாகி, அகலிடம் ஆய் - பூமியாகி, முகில் பொழியும் வான் ஆய் - மேகங்கள் நின்று நீரைச் சொரிதற் கிடமாகிய ஆகாயமாகி, வரும்மதியாய் - வளராநின்ற சந்திரனாகி

விதிவருவான் - முறையே வருவோனாகிய சிவபிரானது, இடம் - இடமாகிய, பொழிலின்தேன் ஆதரித்து - சோலையின் தேனை விரும்பி, வண்டு இனம் - வண்டின் கூட்டங்கள், இசைமிழற்றும் - இராகங்களைப் பாடுகிற, திருச்சுழியல் - திருச்சுழியலை, நானாவிதம் நினைவார்தமை - பலவகையாலும் நினைப்பவரை, நமன்தமர்நலியார் - யமதூதர் வருத்தமாட்டார் எ-று.

(பொ-ரை.) தசையாகி உடம்பாகி பூமியாகி மேகங்கள் நின்று நீரைச் சொரிதற் கிடமாகிய ஆகாயமாகி, வளராநின்ற சந்திரனாகி, முறையே வருவோனாகிய சிவபிரானது இடமாகிய சோலையின் தேனைவிரும்பிவண்டின் கூட்டங்கள் இராகங்களைப் பாடுகிற திருச்சுழியலை பலவகையாலும் நினைப்பவரை யமதூதர் வருத்தமாட்டார்.

(க-ரை.) சிவபெருமானது திருச்சுழியலை நினைவோரை நமன் தமர் நலியார் என்பதாம்.

(வி-ரை.) அகலிடம் - பூமி. இசைமிழற்றல் – பண்பாடுதல். (1)

**தண்டேர்மழுப்படையான்மழவிடையானெழுகடனஞ்**
**சுண்டேபுரமெரியச்சிலைவளைத்தானிமையவர்க்காத்**
**திண்டேர்மிசைநின்றானவனுறையுந்திருச்சுழியற்**
**றொண்டேசெயவல்லாரவர்நல்லார்துயரிலரே.**

(ப-ரை.) தண்டு–தண்டாயுதத்தையும், ஏர்-அழகிய, மழுப்படையான் - மழுப்படையையுமுடையவன், மழவிடையான் - இளவேற்றினையுடையவன், எழு - தோன்றின, கடல்நஞ்சு உண்டு - பாற்கடலிற்றோன்றின விஷத்தையுண்டு, புரம் எரிய - முப்புரம் எரிந்துபோக, சிலைவளைத்தான் - வில் வளைத்தவன், இமையவர்க்கா - தேவர்கள் பொருட்டு, திண்தேர்மிசைநின்றான்-வலிய தேரின்மீது நின்றவன், அவன் உறையும் - அவன் வாழ்கின்ற, திருச்சுழியல் - திருச்சுழியலில் தங்கியிருந்து, தொண்டேசெயவல்லார் அவர்-தொண்டு செய்யவல்லவராகிய அவர், நல்லார் - நல்லவர், துயர் இலர் -(மேலும்) துன்பமில்லாதவருமாவர் எ-று.

(பொ-ரை.) தண்டாயுதத்தையும் அழகியமழுப்படையையுமுடையவன், இளவேற்றினையுடையவன், பாற்கடலிற்றோன்றின விஷத்தையுண்டு, முப்புரம் எரிந்துபோக வில்வளைத்தவன், தேவர்கள் பொருட்டு வலிய தேரின்மீது அவன் வாழ்கின்ற திருச்சுழியலில் தங்கியிருந்து தொண்டுசெய்ய வல்லவராகிய அவர் நல்லவர், (மேலும்) துன்பமில்லாதவருமாவர்.

(க-ரை.) சிவபெருமானது திருச்சுழியலில் தொண்டு செய்திருப்பவர் நல்லோர், அவர் துயரில்லாதவராவர் என்பதாம்.

(வி-ரை.) சிலை - மலை. (மேருமலை) திண்தேர் - வலியதேர். (பூமியாகிய ரதம்). (2

கவ்வைக்கடல்கதறிக்கொணர்முத்தங்கரைக்கேற்றக்
கொவ்வைத்துவர்வாயார்குடைந்தாடுந்திருச்சுழியற்
றெய்வத்தினைவழிபாடுசெய்தெழுவாரடிதொழுவா
ரவ்வத்திசைக்கரசாகுவரலராள்பிரியாளே.

(ப-ரை.) கவ்வைக்கடல் - ஓசையை யுடைய கடல், கதறி கொணர் - இரைத்துக்கொண்டு வருகிற, முத்தம் - முத்துக்களை, கரைக்கு ஏற்ற-கரையிலேற்ற, கொவ்வை துவர் வாயார் - கொவ்வைக் கனிபோலச் சிவந்த அதரத்தை யுடையவராகிய மாதர், குடைந்து ஆடும் - மூழ்கி விளையாடுகிற, திருச்சுழியல் - திருச்சுழியலிலுள்ள, தெய்வத்தினை-தெய்வமாகிய சிவபிரானை, வழிபாடு செய்து - வழிபட்டு, அழுவார் - அழுவோரும், அடிதொழுவார்-அடிவணங்குவோரும், அவ்வத்திசைக்கு - அந்தந்த திசைகளுக்கு, அரசு ஆகுவர் - அரசராவார், அலராள் பிரியாள் - (அவர்களைவிட்டு) திருமகள் பிரியமாட்டாள் எ-று.

(பொ-ரை.) ஓசையையுடைய கடல் இரைத்துக் கொண்டு வருகிற முத்துக்களை கரையிலேற்ற, கொவ்வைக் கனிபோலச் சிவந்த அதரத்தையுடையவராகிய மாதர் மூழ்கி விளையாடுகிற திருச்சுழியலிலுள்ள தெய்வமாகிய சிவபிரானை வழிபட்டு அழுவோரும், அடிவணங்குவோரும், அந்தந்த திசைகளுக்கு அரசராவார், (அவர்களைவிட்டு) திருமகள் பிரியமாட்டாள்.

(க-ரை.) திருச்சுழியல் சிவபிரானை வழிபட்டு அழுவாரது அடியைத் தொழுவார், திக்பாலகராவார், அவரை திருமகள் பிரியமாட்டாள் என்பதாம்.

(வி-ரை.) கவ்வை - ஒலி. குடைந்தாடல்-மூழ்கி விளையாடல். அலராள்-தாமரைமலரீ விருப்பவள். (3)

மலையான்மகள்மடமாதிடமாகத்தவன்மற்றுக்
கொலையானையினுரிபோர்த்தவெம்பெருமான்றிருச்சுழிய
லலையார்சடையுடையானடிதொழுவார்பழுதுள்ளி
நிலையார்திகழ்புகழானெடுவானத்துயர்வாரே.

(ப-ரை.) மலையான் மகள்-மலையரையன் மகளாகிய, மடமாது-இளம் பெண், இடம் ஆகத்தவன்-திருமேனியின் இடப்பக்கத்திலுள்ளவன், மற்றும்-மேலும், கொலையானையின் உரி-கொலைத்தொழிலையுடைய யானையின்தோலை, போர்த்த - போர்த்துக் கொண்ட, எம்பெருமான் - எம்பிரான், திருச்சுழியல்-(அமைந்து) திருச்சுழியலிற்போய், அலை - கங்கையை, ஆர்சடை உடையான்-நிறைந்த சடையிலுள்ளவனாகிய சிவபெருமானது, அடிதொழுவார் - திருவடியைத் தொழுவோரது, பழுது உள்ளி – குற்றத்தை நீலைத்து, நிலையார் திகழ் புகழால் - நிலைபெற்று விளங்குகிற புகழோடு, நெடுவானத்து உயர்வார் - பெரிய சுவர்க்கலோகத்தை யடைந்துயர்வார் எ-று.

(பொ-ரை) மலைபரையன் மகளாகிய இளம்பெண், திருமேனியின் இடப் பக்கத்திலுள்ளவன், மேலும், கொலைத்தொழிலையுடைய யானையின் தோலைப் போர்த்துக்கொண்ட எம்பிரான், (அவனது) திருச்சுழியலிற்போய் கங்கையை நிறைத்த சடையிலுள்ளவனாகிய சிவபெருமானது திருவடியைத் தொழுவோர் தமது குற்றத்தை நினைத்து நிலைபெற்று விளங்குகிற புகழோடு பெரிய சுவர்க்க லோகத்தை யடைந்துயர்வார்.

(க-ரை) திருச்சுழியலிலுள்ள சிவபிரானடி தொழுவோர் நிலைபெற்ற புகழோடு இம்மையில் வாழ்ந்து மறுமையில் உயர்பதமடைவா ரென்பதாம்.

(வி-ரை.) உள்ளி-நினைத்து. நெடுவானம் – சுவர்க்கலோகம். (4)

உற்றானமக்குயருமதிச்சடையான்புலனைந்தும்
செற்றார்திருமேனிப்பெருமானூர்திருச்சுழியல்
பெற்றானினிதுறையத்திறம்பாமைத்திருநாமங்
கற்றாரவர்கதியுட்செல்வரேத்துமதுகடனே.

(ப-ரை.) நமக்கு உற்றான் - நமக்கு உறவினன், உயரும் - ஆகாயத்திலுயர்ந்து காணப்படுகிற, மதிச்சடையான் - சந்திரனைத் தரித்த சடையையுடையவன், புலன் ஐந்தும் செற்று ஆர் - புலன்களைந்தினையும் வென்றுள்ள, திருமேனிப் பெருமான் - திருமேனியையுடைய எம்பெருமானது, ஊர்-ஊராகிய, திருச்சுழியல் - திருச்சுழியலை, பெற்றான் - தனதுறைவிடமாகப் பெற்றவன், இனிது உறையும் - இனிது வாழ்தலால், திறம்பாமை - தவறாமல், திருநாமம் கற்றார் அவர்-அவனது திருநாமங்களைக் கற்றவராகிய அவர், கதியுள் செல்வர் - நற்கதியில் சேர்வர், (ஆதலால்) ஏத்தும் அது கடன் - அவனைத் துதிப்பது நமக்குக் கடனாகும் எ-று.

(பொ-ரை.) நமக்கு உறவினன், ஆகாயத்திலுயர்ந்து காணப்படுகிற சந்திரனைத் தரித்த சடையையுடையவன், புலன்களைந்தினையும் வென்றுள்ள திருமேனியையுடைய எம்பெருமானது ஊராகிய திருச்சுழியலை தனதுறைவிடமாகப் பெற்றவன், இனிது வாழ்தலால் தவறாமல் அவனது திருநாமங்களைக் கற்றவராகிய அவர் நற்கதியில் சேர்வர், (ஆதலால்) அவனைத் துதிப்பது நமக்குக் கடனாகும்.

(க-ரை.) திருச்சுழியல் சிவபெருமானது திருநாமத்தைக் கற்றோர் நற்கதியடைவர், ஆதலால் அவரைத் துதித்தல் நமது கடமையா மென்பதாம். (5)

மலந்தாங்கியபாசப்பிறப்பறுப்பீர்துறைக்கங்கைச்
சலந்தாங்கியமுடியானமர்ந்திடமாந்திருச்சுழிய
னிலந்தாங்கியமலராற்கொழும்புகையானினைந்தேத்துந்
தலந்தாங்கியபுகழான்மிகுதவமாஞ்சதுராமே.

(ப-ரை.) மலர்தாக்கிய – மலங்கலந்த, பாசப்பிறப்பு அறப்பீர் - பாசப் பிறப்பினை அறுப்பவரே, துறை கங்கை - பல துறைகளையுடைய கங்கையின், சலம் தாங்கிய - வெள்ளத்தைச் சுமந்த, முடியான் - திருமுடியை யுடையவன், அமர்ந்த இடம் ஆம் - அமர்ந்திருக்கும் இடமாகிய, திருச்சுழியல் - திருச்சுழியலை, நிலம் தாங்கிய மலரால் - நிலப்பூவைக் கொண்டும், கொழும்புகையால் – கொழுவிய புகையைக் கொண்டும், புகழ்ந்து எத்தும் - புகழ்ந்து தோத்திரம் பண்ணுங்கள், தலம் தாங்கிய புகழால் –உலகில் தங்கிய புகழினுல், மிகும் தவம் ஆம் - மிக்க தவமாகும், சதுர் ஆம் - மேலான சதுரதையுமாகும் எ-று.

(பொ-ரை.) மலங்கலந்த பாசப்பிறப்பினை அறுப்பவரே, பல துறை களையுடைய கங்கை வெள்ளத்தைச் சுமந்த திருமுடியை யுடையவன், அமர்ந் திருக்கும் இடமாகிய திருச்சுழியலை நிலப்பூவைக்கொண்டும், கொழுவிய புகை யைக் கொண்டும், புகழ்ந்து தோத்திரம் பண்ணுங்கள், உலகில் தங்கிய புகழி னுல் மிக்க தவமாகும், மேலான சதுரதையுமாகும்.

(கு-ரை.) திருச்சுழியற் சிவபிரானைத் துதித்தலே தவமுதலிய எல்லாவற் றுலு முண்டாகிற பயனைத் தரும் என்பதாம்.

(வி-ரை.) மலம் - மும்மலங்கள். அவை-ஆணவம், மாயை, காமியம் என் பன. சலம் - நீர். அமர்ந்த இடம் என்பது அமர்ந்திடம் என நிலைமொழி யீறு தொகுத்தலாயிற்று. நிலந்தாங்கிய மலர் - நிலப்பூ, (தும்பைமலர் முதலியவை) சதுர்–புத்தி. (6)

சைவத்தசெவ்வுருவன் றிருநீற்றன் னுருமேற்றன்
கைவைத்தொருசிலையாலரண்மூன் றும்மெரிசெய்தான்
றெய்வத்தவர்தொழுதேத்தியகுழகன் றிருச்சுழியன்
மெய்வைத்தடிநினைவார்வினைதீர்தல்லெளிதன்றே.

(ப-ரை.) சைவத்த செவ்வுருவன் - சிவத்துவ மமைந்த செவந்த வடிவினை யுடையவன், திருநீற்றன் - திருநீற்றை யுடையவன், உரும் ஏற்றன் - இடிக் குரலுள்ள இடபத்தை யுடையவன், கைவைத்த ஒருசிலையால் - கையிற்பிடித்த வொரு வில்லினுல், அரண் மூன்றும் எரி செய்தான் - மும்மதில்களையும் எரித் தவன், தெய்வத்தவர்-தெய்விக மமைந்த தவத்தினர், தொழுது ஏத்திய-வணங் கித் துதிக்கிற, குழகன்-அழகன், திருச்சுழியல்-திருச்சுழியலை, மெய்வைத்து- உண்மையைக் கொண்டு, அடி நினைவார் - திருவடியை நினைவாரது, வினை தீர்தல் - வினைகளொழிதல், எளிது அன்றே - எளிதல்லவா எ-று.

(பொ-ரை.) சிவத்துவமமைந்த செவந்த வடிவினையுடையவன், திருநீற் றையுடையவன், இடிக்குரலுள்ள இடபத்தை யுடையவன், கையிற் பிடித்த வொரு வில்லினுல் மும்மதில்களையும் எரித்தவன், தெய்விகமமைந்த தவத்தி னர் வணங்கித் துதிக்கிற அழகன், திருச்சுழியலை உண்மையைக் கொண்டு திருவடியை நினைவாரது வினைகளொழிதல் எளிதல்லவா.

(க-ரை.) திருச்சுழியற் சிவபெருமானை நினைவாருடைய வினைகள் ஒழிதல் எளிது என்பதாம்.

(வி-ரை.) செவ்வுருவன் - செம்மேனியன். அரண் மூன்று - மும்மதில், (முப்புரம்) எரிசெய்தல் - எரித்தல். தெய்வத்தவர் - தேவர், தெய்விகமாகிய தவத்தை யுடையவர் எனினுமாம். (7)

பூவேந்தியபீடத்தவன்றானுமடலரியுங்
கோவேந்தியவிநயத்தொடுகுறுகப்புகலரியான்
சேவேந்தியகொடியானவனுறையுந்திருச்சுழியன்
மாவேந்தியகரத்தானெமசிரத்தான்றனதடியே.

(ப-ரை.) பூ எந்திய பீடத்தவன் தானும் - பிரமனும், அடல் அரியும் - வெற்றியையுடைய திருமாலும், கோ எந்திய விநயத்தொடு - மிக்க விநயத்தோடு, குறுகபுகல் அரியான் - கிட்ட நெருங்குதற் கரியவன், சே எந்திய கொடியான் - இடபக் கொடியை யுடையவனாகிய, அவன் உறையும் - அவன் வாழ்கின்ற, திருச்சுழியல் - திருச்சுழியலிலுள்ள, மா எந்திய கரத்தான் - மானேந்திய கையினன், தனது அடி எமசிரத்தான் - தனது திருவடி யெமது சிரத்தமைத்தவன் எ-று.

(போ-ரை.) பிரமனும் வெற்றியையுடைய திருமாலும் மிக்க விநயத்தோடு கிட்ட நெருங்குதற்கரியவன், இடபக் கொடியை யுடையவனாகிய அவன் வாழ்கின்ற திருச்சுழியலிலுள்ள மானேந்திய கையினன், தனது திருவடியை யெமது சிரத்தமைத்தவன்.

(க-ரை.) திருச்சுழியற் சிவபெருமான் பிரமவிட்டுணுக்களுக்கு அரியனாயினும் எமக்கு எளியனா மென்பதாம்.

(வி-ரை.) அடல் - வலி. குறுகல் - கிட்டல். (8)

கொண்டாடுதல்புரியாவருதக்கன்பெருவேள்விச்
செண்டாடுதல்புரிந்தான்றிருச்சுழியற்பெருமானைக்
குண்டாடியசமணாதர்கள்குடைச்சாக்கியரறியா
மிண்டாடியவதுசெய்ததுவானால்வருவிதியே.

(ப-ரை.) கொண்டாடுதல் புரியா - கொண்டாடுதல் செய்யாமல், வரு - வந்த, தக்கன் பெரு வேள்வி - தக்கனது பெரிய யாகத்தை, செண்டாடுதல் புரிந்தான் - அழித்தவனாகிய, திருச்சுழியல் பெருமானை - திருச்சுழியலிலிறைவனை, குண்டாடிய சமண் ஆதர்கள் - தாழ்ந்த சமணராகிய அறிவிலிகள், குடைசாக்கியர் - குடைசாக்கியர், அறியா - அறியாமல், மிண்டாடிய அது செய்தது ஆனல் - மிண்டு செய்ததோவென்றால், வருவிதியே -(அவர்களுக்கு) நேர்ந்த விதியின் பயனேயாம் எ-று.

(போ-ரை.) கொண்டாடுதல் செய்யாமல் வந்த தக்கனது பெரிய யாகத்தை யழித்தவனாகிய திருச்சுழியலிறைவனை, தாழ்ந்த சமணராகிய அறிவிலிகள் குடைசாக்கியர் அறியாமல் மிண்டு செய்ததோவென்றால் (அவர்களுக்கு) நேர்ந்த விதியின் பயனேயாம்.

(க-ரை.) திருச்சுழியற் சிவபெருமானை, மதியாமல் வாது செய்த சமணர் முதலியோரது தீவினைப்பயனிருந்தவா றென்னை யென்பதாம்.

(வி-ரை.) குண்டாடல் - தாழ்தல். மிண்டாடுதல் - மதத்தாலடர்த்தல்.

**நீரூர் தருநிமலன் றிருமலையார்க் கயலருகே**
**தேரூர் தருமரக்கன் சிரநெரித்தான் றிருச்சுழியல்**
**பேரூ ரெனவுறைவா னடிபெயர் நாவலர்கோமா**
**னாரூரன தமிழ்மாலைபத் தறிவார் துயரிலரே.**

(ப-ரை.) நீர் ஊர்தரு நிமலன் - மங்கள குணங்கள் நிறைந்த நிர்மலன், திருமலையார்க்கு அயல் அருகே - கைலாய மலையின் அருகே, தேர் ஊர்தரும் - தேரைச் செலுத்தின, அரக்கன் சிரம் நெரித்தான் - அரக்கன் தலைகளை நெரித்தவனது, திருச்சுழியல் - திருச்சுழியலை, பேர் ஊர் என உறைவான் - பெரிய நகரமாகக்கொண்டு வாழ்பவன், (அவன்மீது) அடிபெயர் நாவலர் கோமான் ஆரூரன்-சுந்தரன் சொன்ன, தமிழ்மாலை பத்து அறிவார் - தமிழ்மாலையாகிய பத்துப் பாடலையும் அறிபவர், துயர் இலர் - துன்பமில்லாதவராவர் எ-று.

(போ-ரை.) மங்கள குணங்கள் நிறைந்த நிர்மலன், கைலாய மலையின் அருகே தேரைச் செலுத்தின அரக்கன் தலைகளை நெரித்தவனது திருச்சுழியலை, பெரிய நகரமாகக்கொண்டு வாழ்பவன், (அவன்மீது) சுந்தரன் சொன்ன தமிழ் மாலையாகிய பத்துப் பாடலையும் அறிபவர் துன்பமில்லாதவராவர்.

(க-ரை.) திருச்சுழியற் சிவபெருமானை, திருநாவலூரன் பாடின இப்பத்துப் பாடலுங் கற்றறிவோர் துன்பமில்லாதவராவர் என்பதாம்.

(வி-ரை.) நீர் - குணம். அது இங்கு மங்கள குணத்தைக் குறித்தது. தேர் ஊர்தரும் அரக்கன் என்றது ராவணனை. (10)

திருச்சிற்றம்பலம்

**இத்தலம் பாண்டிநாட்டி லுள்ளது.**

சுவாமிபெயர் - திருமேனிநாதேச்சுரர். தேவியார் - துணைமாலையம்மை.

## திருவாரூர்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

**அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி**
**முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்**
**சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்**
**கெந்தைபிரானைரையென்றுகொலெய்துவதே.**

(ப-ரை.) அந்தியும் நண்பகலும் - அந்தியிலும் நடுப்பகலிலும், அஞ்சுபதம் சொல்லி - ஐந்தெழுத்தை யோதி, முந்தியெழும் – முற்பட்டெழுகிற, பழைய வல்வினை மூடாமுன் - பழமையாகிய வலிய வினைகள் மூடுவதற்கு முன்பே, சிந்தை பராமரியா - மனம் பராமரித்து, தென் திருவாரூர் புக்கு - தென் திருவாரூரில் புகுந்து, எந்தைபிரானை - எந்தை பிரானை, என்றுகொல் எய்துவது – அடைவது என்றோ எ-று.

(பொ-ரை.) அந்தியிலும் நடுப்பகலிலும் ஐந்தெழுத்தை யோதி, முற்பட்டெழுகிற பழமையாகிய வலிய வினைகள் மூடுவதற்கு முன்பே, மனம்பராமரித்து தென் திருவாரூரில் புகுந்து எந்தைபிரானை அடைவது என்றோ.

(கு-ரை.) திருவாரூர்ச் சிவபிரானை நானடைவது எந்நாளோ வென்பதாம்.

(வி-ரை.) பராமரித்தல் - விசாரித்தல். எய்துவது - அடைவது. தென் திருவாரூர் - தென்றிசையிலுள்ள திருவாரூர், அழகாகிய திருவாரூரெனினுமமையும். (1)

**நின்றவினைக்கொடுமைநீங்கவிருபொழுதுந்**
**துன்றுமலரிட்டுச்சூழும்வலஞ்செய்து**
**தென்றன்மணங்கமழுந்தென்றிருவாரூர்புக்**
**கென்றன்மனங்குளிரவென்றுகொலெய்துவதே.**

(ப-ரை.) நின்ற - நிலைபெற்ற, வினைக்கொடுமைநீங்க - வினையின் கொடுமை யொழிய, இருபொழுதும் - காலை மாலைகள்தோறும், துன்றும் மலர் இட்டு - நெருங்கின மலர்களால் அருச்சித்து, சூழும் வலம் செய்து - சுற்றும் பிரதக்ஷிணம்செய்து, தென்றல் மணம்கமழும் - தென்றல் மணம் வீசுகிற, தென் திருவாரூர்புக்கு - தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து, என்றன் மனம் குளிர - என்மனம் குளிரும்படி, என்று கொல் எய்துவது - அடைவது என்றோ எ-று.

(பொ-ரை.) நிலைபெற்ற வினையின் கொடுமை யொழிய காலை, மாலைகள் தோறும் நெருங்கின மலர்களால் அருச்சித்து, சுற்றும் பிரதக்ஷிணம்செய்து

தென்றல் மணம் வீசுகிற தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து என்மனம் குளிரும்படி அடைவது என்றோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்பதாம். (2)

முன்னைமுதற்பிறவிமூதறியாமையினாற்
பின்னைநினைந்தனவும்பேதுறவும்மொழியச்
செந்நெல்வயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கென்னுயிர்க்கின்னமுதையென்றுகொலெய்துவதே.

(ப-ரை.) முன்னை முதல்பிறவி - முற்பிறப்புக்களில், மூதறியாமையினால் - மிகுந்த அறியாமையால், பின்னை நினைந்தனவும் - பின்னே கருதினவையும், பேதுறவும் – பேதைமையும், ஒழிய - நீங்க, செந்நெல் வயல் கழனி - செந்நெல் வயல்களும் கழனிகளும் சூழந்த, தென் திருவாரூர் புக்கு - தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து, என் உயிர்க்கு இன் அமுதை - என்னுயிர்க்கு இனிய அமிர்தமாயிருப்பவனை, என்று கொல் எய்துவது - நானடைவது என்றோ எ-று.

(பொ-ரை.) முற்பிறப்புக்களில் மிகுந்த அறியாமையால் பின்னே கருதினவையும் பேதைமையும் நீங்க, செந்நெல்வயல்களும் கழனிகளும் சூழ்ந்த தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து என்னுயிர்க்கு இனிய அமிர்தமாயிருப்பவனை, நானடைவ்து என்றோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்பதாம். (3)

நல்லநினைப்பொழியநாள்களிலாருயிரைக்
கொல்லநினைப்பனவுங்குற்றமுமற்றொழிய
செல்வவயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கெல்லைமிதித்தடியேனென்றுகொலெய்துவதே.

(ப-ரை.) நல்லநினைப்பு ஒழிய - நல்ல ஞாபகம் ஒழிய, நாள்களில் - வாழ்நாட்களில், ஆர் உயிரை - அரிய வுயிர்களை, கொல்ல நினைப்பனவும் - கொல்ல நினைப்பவையும், குற்றமும் அற்று ஒழிய-பிழையும் அற்றொழியும்படி, செல்வ வயல் கழனி – செந்நெல் வயல்களும் கழனிகளும் சூழ்ந்த, தென் திருவாரூர் புக்கு-தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து, எல்லை மிதித்து - எல்லையை மிதித்து, அடியேன் என்று கொல் எய்துவது - தொண்டனேன் அடைவது என்றோ எ-று.

(பொ-ரை.) நல்ல ஞாபகமொழிய வாழ் நாட்களில் அரிய வுயிர்களைக் கொல்ல நினைப்பவையும், பிழையும் அற்றொழியும்படி செந்நெல் வயல்

களும் கழனிகளும் சூழ்ந்த தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து எல்லையமிதித்து தொண்டனேன் அடைவது என்றோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்பதாம்.

(வி-ரை.) ஆருயிர் - அரியவுயிர். எல்லை - அளவு. (4)

கடுவரிமாக்கடலுட்காய்ந்தவன்றாதையைமுன்
சுடுபொடிமெய்க்கணிந்தசோதியைவன்றலைவா
யடுபுலியாடையனையாதியையாரூர்புக்
கிடுபலிகொள்ளியைநானென்றுகொலெய்துவதே.

(ப-ரை.) கடு அரிமா - கடிய சிங்கமுகாசுரனை, கடலுள் காய்ந்தவன் தாதையை-கடலிற் கொன்றவனாகிய முருகவேளின் தந்தையை, முன்சுடுபொடி-முன் சுட்டபொடியை, மெய்க்கு அணிந்த சோதியை - திருமேனியிலணிந்த ஒளியுருவனை, வல்தலைவாய் - வலிய தலையையுடைய, அடுபுலி ஆடையனை - கொல்லுகிற புலித்தோலாகிய ஆடையை யுடையவனை, ஆதியை - முதல்வனை, இடு - மாதரிடு, பலிகொள்ளியை - பிக்ஷையை யேற்பவனை, ஆரூர்புக்கு - திருவாரூரில் புகுந்து, நான் என்று கொல் எய்துவது-நானடைவது என்றோ எ-று.

(போ-ரை.) கடிய சிங்கமுகாசுரனை கடலிற் கொன்றவனாகிய முருகவேளின் தந்தையை, முன்சுட்ட பொடியை திருமேனியிலணிந்த ஒளியுருவனை, வலிய தலையையுடைய கொல்லுகிற புலித்தோலாகிய ஆடையை யுடையவனை, முதல்வனை, மாதரிடும் பிக்ஷையை யேற்பவனை, திருவாரூரில் புகுந்து நானடைவது என்றோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்பதாம்.

(வி-ரை.) அரிமா - சிங்கம். இது சிங்கமுகத்தையுடைய வோரசுரனை யுணர்த்திற்று. சுடு பொடி - திருநீறு. வாய் - வாய்ந்த. அடுபுலி-கொல்லும்புலி, புலியென்றது புலித்தோலை. பலிகொள்ளி - பலிகொள்வோன். (5)

சூழொளிநீர்நிலந்தீத்தாழ்வளியாகாயம்
வானுயர்வெங்கதிரோன்வண்டமிழ்வல்லவர்க
ளேழிசையேழ்நரம்பினோசையையாரூர்புக்
கேழுலகாளியைநானென்றுகொலெய்துவதே.

(ப-ரை.). சூழ் ஒளி - சூழ்ந்த வொளியை யுடைய சந்திரன், நீர் நிலம் தீதாழ்வளி ஆகாயம்-நீர் நிலம் நெருப்பு காற்று ஆகாயம், வான் உயர் வெங்கதிரோன் - விண்ணிலுயர்ந்து தோன்றுகிற சூரியன், வன் தமிழ் வல்லவர்கள் - வாயிப தமிழ்நூல் வல்லார் (என்பவைகளோடு), ஏழ் இசை ஏழ் நரம்பின்

ஓசையை - எழிசை எழ் நரம்பின் ஓசையுமா யிருப்பவனை, எழுலகு ஆளியை- எழுலகங்களையும் ஆள்பவனை, ஆரூர் புக்கு - திருவாரூரில் புகுந்து, நான் என்றுகொல் எய்துவது - நானடைவது என்றோ எ-று.

(பொ-ரை) சூழ்ந்த வொளியையுடைய சந்திரன், நீர் நிலம் நெருப்பு காற்று ஆகாயம், விண்ணிலுயர்ந்து தோன்றுகிற சூரியன், வளவிய தமிழ்நூல் வல்லார் (என்பவைகளோடு) எழிசை எழ் நரம்பின் ஓசையுமா யிருப்பவனை, எழுலகங்களையும் ஆள்பவனை, திருவாரூரில் புகுந்து நானடைவது என்றோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்ப தாம்.

(வி-ரை.) வளி - காற்று. வெங்கதிரோன்-சூரியன். ஆளி-ஆள்வோன்.

கொம்பன நுண்ணிடையாள்கூறனை நீறணிந்த
வம்பனையெவ்வுயிர்க்கும்வைப்பினையொப்பமராச்
செம்பொனைநன்மணியைத்தென்றிருவாரூர்புக்
கென்பொனையென்மணியையென்றுகொலெய்துவதே.

(ப-ரை) கொம்பு அன்ன நுண் இடையாள் - பூங்கொம்பு போலும் நுண்ணிடையாளாகிய உமாதேவியின், கூறனை - பாகனை, நீறு அணிந்த வம்பனை - திருநீறணிந்த புதுமையனை, எவ்வுயிர்க்கும் வைப்பினை - எல்லாவுயிர் களுக்கும் நிக்ஷேபமாயிருப்பவனை, ஒப்பு அமரா - நிகரற்ற, செம்பொன்னை - செம்பொன்னை, நல் மணியை-உயர்ந்த மணியை, என் பொன்னை - என் சுவர் ணத்தை, என் மணியை - எனது ரத்நத்தை, தென் திருவாரூர் புக்கு - தென் றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து, என்று கொல் எய்துவது - அடைவது என்றோ எ-று.

(பொ-ரை.) பூங்கொம்புபோலும் நுண்ணிடையாளாகிய உமாதேவிபாக னை, திருநீறணிந்த புதுமையனை, எல்லாவுயிர்களுக்கும் நிக்ஷேபமா யிருப் பவனை, நிகரற்ற செம்பொன்னை, உயர்ந்த மணியை, என் சுவர்ணத்தை, எனது ரத்நத்தை தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து அடைவது எந்நாளோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்ப தாம்.

(வி-ரை) கொம்பு - பூங்கொடி. கொம்பன நுண்ணிடையாள் - உமா தேவி. கூறன் - பங்கன். வம்பன்-புதியன். வைப்பு-நிக்ஷேபம். ஒப்பு அமரா- ஒப்பில்லாத. (7)

ஆறணிநீண்முடிமேலரவஞ்சூடிப்
பாறணிவெண்டலையிற்பிச்சைகொணச்சரவன்
சேறணிதண்கழனித்தென்றிருவாரூர்புக்
கேறணியெம்மிறையையென்றுகொலெய்துவதே.

(ப-ரை.) ஆறு அணி நீள்முடிமேல் — கங்காநதியை யணிந்த நீண்ட திருமுடியின் மீது, ஆடு அரவம் சூடி - ஆடுகின்ற பாம்பைத் தரித்து, பாறு - பருந்துகள், அணி - வரிசையாய்ச் சூழ்ந்த, வெள்தலையில் - வெள்ளிய தலையோட்டில், பிச்சைகொள் - பிக்ஷையேற்கிற, நச்சு அரவன் - நஞ்சுடைய பாம்பையுடையவன், சேறு அணி தண்கழனி - சேற்றையுடைய குளிர்ந்த கழனிகள் சூழ்ந்த, தென்திருவாரூர் புக்கு - தென்றிசையி லுள்ள திருவாரூரில் புகுந்து, ஏறு அணி எம்மிறையை - இடபக்கொடியையுடைய எம்மிறைவனை, என்று கொல் எய்துவது — அடைவது என்றோ எ-று.

(பொ-ரை.) கங்காநதியை யணிந்த நீண்ட திருமுடியின்மீது ஆடுகின்ற பாம்பைத் தரித்து, பருந்துகள் வரிசையாய்ச் சூழ்ந்த வெள்ளிய தலையோட்டில் பிக்ஷையேற்கிற நஞ்சுடைய பாம்பையுடையவன், சேற்றையுடைய குளிர்ந்த கழனிகள் சூழ்ந்த தென்றிசையிலுள்ள திருவாரூரில் புகுந்து இடபக்கொடியை யுடைய எம்மிறைவனை அடைவது எந்நாளோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்பதாம்.

(வி-ரை.) பாறு — பருந்து. ஏறு - இடபம், இது இங்கு இடபக் கொடியைக் குறித்தது. (8)

மண்ணினையுண்டுமிழ்ந்தமாயனுமாமலர்மே
லண்ணலுநண்ணரியவாதியைமாதினொடுந்
திண்ணியமாமதில்சூழ்தென்றிருவாரூர்புக்
கெண்ணியகண்குளிரவென்றுகொலெய்துவதே.

(ப-ரை.) மண்ணினை உண்டு உமிழ்ந்த மாயனும் — பூமியை விழுங்கியுமிழ்ந்த திருமாலும், மாமலர்மேல் அண்ணலும் - அழகிய தாமரை மலர்மேலிருப்பவனாகிய பிரமனும், நண் அரிய ஆதியை - அடைதற்கரிய முதல்வனை, மாதினொடும் - உமாதேவியோடும், திண்ணிய மாமதில் சூழ்-திண்மையுடைய பெரிய மதில் சூழ்ந்த, தென் திருவாரூர் புக்கு - தென்றிசையிலுள்ள திருவாரூரிற்பிரவேசித்து, எண்ணிய-நினைத்த, கண்குளிர - கண் குளிரும்படி, என்று கொல் எய்துவது - அடைவது எந்நாளோ எ-று.

(பொ-ரை.) பூமியை விழுங்கியுமிழ்ந்த திருமாலும், அழகிய தாமரை மலர்மேலிருப்பவனாகிய பிரமனும், அடைதற்கரிய முதல்வனை, உமாதேவியோடு திண்மையுடைய பெரிய மதில்சூழ்ந்த தென்றிசையிலுள்ள திருவாரூரிற் பிரவேசித்து நினைத்த கண்குளிரும்படி அடைவது எந்நாளோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானை நானடைவது எந்நாளோ வென்பதாம். (9)

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானாவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகநண்ணுவர்புண்ணியரே.

(ப-ரை.) மின்நெடு செஞ்சடையான் - மின்னுகிற நீண்ட செஞ்சடையை யுடைய சிவபிரான், மேவிய ஆரூரை - எழுந்தருளியிருக்கிற திருவாரூரை, நல் நெடு - நன்மையாகிய பெரிய, காதன்மையால் - விருப்பத்தால், நாவலர்கோன் ஊரன் - சுந்தரன், பல் நெடுஞ் சொல்மலர்கொண்டு இட்டன-அநேகமாகிய சொல்மலர்களைக்கொண்டு அருச்சித்தனவாகிய, பத்தும் வல்லார் - பத்துப் பாடலுங்கற்று வல்லார், புண்ணியர் - புண்ணியராகி, பொன் உடை விண்ணுலகம் நண்ணுவர் - பொன்னுலகாகிய சுவர்க்கலோகத்தையடைவர் எ-று.

(பொ-ரை.) மின்னுகிற நீண்ட செஞ்சடையையுடைய சிவபிரான் எழுந்தருளியிருக்கிற திருவாரூரை, நன்மையாகிய பெரிய விருப்பத்தால் சுந்தரன், அனேகமாகிய சொல்மலர்களைக்கொண்டு அருச்சித்தனவாகிய, பத்துப் பாடலுங் கற்று வல்லார் புண்ணியராகி பொன்னுலகாகிய சுவர்க்கலோகத்தை யடைவார்.

(கு-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானைத் திருநாவலூரான் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாடலுங் கற்றுவல்ல புண்ணியர் பொன்னுலகையடைவ ரென்பதாம்.

(வி-ரை.) மின் - மின்னுகின்ற, அன்றி மின்போன்ற எனினுமாம். சொல்மலர் — சொல்லாகிய மலர். இட்டன - அருச்சித்தன. (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கானப்பேர்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

தொண்டரடித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ்
சூதனமென்முலையாள்பாகமுமாகிவரும்
புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்
பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமருங்
கொண்டலெனத்திகழுங்கண்டமுமெண்டோளுங்
கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) தொண்டர் அடி தொழலும் - அடியார்தன் திருவடியை வணங்குதலும், சோதி இளம்பிறையும் - ஒளியையுடைய இளம்பிறையும், சூது அன்னமெல்முலையாள் பாகமும் ஆகிவரும் - சொக்கட்டான் காய்போன்ற மெல்லிய முலையையுடைய உமாதேவியின் பாகமுமாகி வருகிற, புண்டரிக பரிசு ஆம் மேனியும் - செந்தாமரை மலரை நிகர்த்த திருமேனியும், வானவர்கள் பூசல் இட - தேவர்கள் முறையிட, கடல் நஞ்சு உண்டகருத்து - கடல்விடமுண்டகுறி, அமரும் - அமைய, கொண்டல் என திகழும் கண்டமும் — மேகம் போல் விளங்குகிற திருக்கழுத்தும், எண்தோளும் - எட்டுத்தோள்களும், கோலம் — அழகாகிய, நறு சடைமேல் - நல்லசடைமீது, வண்ணமும் ஆக - ஒளியுமாக, கார்வயல்சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கின்ற, காளையை - யவ்வநத்தானை, அடியேன் கண்குளிர - தொண்டனேன் கண்கள் குளிரும்படி, கண்டுதொழப் பெறுவது - கண்டு வணங்கப் பெறுவது, என்றுகொலோ - எந்நாளோ எ-று.

(பொ-ரை.) அடியார் தன் திருவடியை வணங்குதலும், ஒளியையுடைய இளம் பிறையும், சொக்கட்டான் காய்போன்ற மெல்லியமுலையையுடைய உமாதேவியின் பாகமுமாகிவருகிற, செந்தாமரை மலரை நிகர்த்த திருமேனியும், தேவர்கள் முறையிட கடல் விடமுண்ட குறியமைய, மேகம்போல் விளங்குகிற திருக்கழுத்தும், எட்டுத்தோள்களும், அழகாகிய நல்ல சடைமீது ஒளியுமாக கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கின்ற யவ்வநத்தானை, தொண்டனேன் கண்கள் குளிரும்படி கண்டு வணங்கப் பெறுவது எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபெருமானை நான் கண்டு தொழப் பெறுவது என்றோ வென்பதாம்.

(வி-ரை.) சூது - சூதாடுகருவி (சொக்கட்டான் காய்) புண்டரீகம் - செந்தாமரைமலர். பூசலிடல் - முறையிடல். கொண்டல் - மேகம். கோலம் - அழகு. நறு - மணமுள்ள. வண்ணம் - மின்னொளி. (1)

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங்
  கொக்கிறகுங்குளிர்மாமத்தமுமொத்துனதா
ளோதலுணர்ந்தடியாருன்பெருமைக்குநினைந்
  துள்ளுருகாவிரசுமோசையைப்பாடலுநீ
யாதலுணர்ந்தவரோடன்புபெருத்தடியே
  னங்கையின்மாமலர்கொண்டென்கணதல்லல்கெடக்
காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன்
  கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) கூதலிடும் சடையும்-சிக்குப்பட்ட சடையும், கோள் அரவும் - துன்பத்தை யுண்டாக்குகிற பாம்பும், விரவும் கொக்கு இறகும் - பொருந்திய கொக்கிறகும், குளிர்மாமத்தமும் - குளிர்ந்த அழகிய ஊமத்தை மலரும், ஒத்து - ஒருசேரக்கூடி, உன் தாள் ஓதல் உணர்ந்து-உன் திருவடியைப் புகழ்த லறிந்து, அடியார் - தொண்டர், உன் பெருமைக்கு நினைந்து - உன் மேன் மையை நினைந்து, உள் உருகு ஆவிரசும் - மனமுருகுகிற அந்தத் தன்மையும், ஓசையைப்பாடலும்-இசையோடு பாடுதலும், நீ ஆதல் உணர்ந்து-நீயேயாதலை யறிந்து, அவரோடு அன்புபெருத்து - அவரோடு அன்பு மிகுத்து, அடியேன் - தொண்டனேன், அங்கையில் மாமலர்கொண்டு - அகங்கையில் மாமலர்களைக் கொண்டு, என் கண்ணது அல்லல் கெட - என்னிடத்ததாகிய துன்பமொழிய, கார் வயல் சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப் பேரில் வாழ்கிற, காளையை - யவ்வநத்தானை, அடியேன் - அடியனேன், காதல் உறதொழுவது - விருப்பமிகும்படி வணங்குவது, என்று கொலோ-எந் நாளோ எ-று.

(பொ-ரை.) சிக்குப்பட்ட சடையும், துன்பத்தை யுண்டாக்குகிற பாம் பும் பொருந்திய கொக்கிறகும், குளிர்ந்த அழகிய ஊமத்தைமலரும், ஒரு சேரக்கூடி உன் திருவடியைப் புகழ்தலறிந்து தொண்டர் உன் மேனியை நினைந்து மனமுருகுகிற அந்தத் தன்மையும் இசையோடு பாடுதலும், நீயே யாதலையறிந்து, அவரோடு அன்பு மிகுந்து தொண்டனேன், அங்கையில் மாம லர்களைக்கொண்டு, என்னிடத்ததாகிய துன்பமொழிய, கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கிற யவ்வநத்தானை, அடியனேன் விருப்பமிகும்படி வணங்குவது எந்நாளோ.

(கு-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபெருமானை நான் கண்டுதொழப் பெறு வது என்றோவென்பதாம்.

(வி-ரை.) கூதலிடும்சடை - குளிர்ந்தசடையுமாம். கோள்-துன்பம். உரு குமா - உருகுமாறு. என் கண்ணது - என்னிடத்தது. அல்லல் - துன்பம்.

நானுடைமாடெனவேநன்மைதரும்பரனை
நற்பதமென்றுணர்வார்சொற்பதமார்சிவனைத்
தேனுடையின்னமுதைமற்றதனிற்றெளிவைத்
தேவர்களுயகனைப்பூவுயர்சென்னியனை
வானிடைமாமதியைமாசறுசோதியனை
மாருதமும்மனலும்மண்டலமும்மாயக்
கானிடைமாநடனென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) நான் உடைமாடு எனவே - நான் உடைய செல்வம் போலவே, நன்மை தரும் பரனை - நன்மையைத்தருகிற மேலோனை, நற்பதம் என்று உணர்வார் - நல்ல தருணமென்று அறிடவர்க்கு, சொல் பதம் ஆர் சிவனை - சொல்லப்பட்ட முத்திப்பதத்தை யடைவிக்கிற சிவபிரானை, தேன் உடை இன் அமுதை - தேன்சுவையுள்ள இனிய அமிர்தத்தை, மற்று அதனில் தெளிவை - அத்தேனின் தெளிவை, தேவர்கள் நாயகனை - தேவர்பிரானை, பூ உயர் சென்னியனை - கொன்றை மலரையுடைய திருமுடியுள்ளவனை, வான் இடை மாமதியை - ஆகாயத்திலுள்ள சந்திரனை, மாசு அறு சோதியனை - குற்றமற்ற வொளியையுடையவனை, மாருதமும் அனலும் மண்டலமும் மாய - காற்றும் நெருப்பும் மண்ணும் அழிய, கான் இடை - மயானத்தில், மாநடன் என்று - பெரிய நடநஞ் செய்வோனென்று, கார்வயல் சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை - யவ்வந்தானை, எய்துவது - அடைவது, என்று கொலோ-எந்நாளோ எ-று.

(போ-ரை.) நான் உடைய செல்வம்போலவே, நன்மையைத் தருகிற மேலோனை,நல்லதருணமென்று அறிபவர்க்கு சொல்லப்பட்ட முத்திப்பதத்தை யடைவிக்கிற சிவபிரானை, தேன்சுவையுள்ள இனிய அமிர்தத்தை, அத்தேனின் தெளிவை, தேவர்பிரானை, கொன்றைமலரையுடைய திருமுடியுள்ளவனை, ஆகாயத்திதுள்ள சந்திரனை, குற்றமற்ற வொளியையுடையவனை, காற்றும் நெருப்பும் மண்ணுமழிய மயானத்தில் பெரிய நடநஞ்செய்வோனென்று கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கிற யவ்வந்தானை, அடைவது எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபெருமானை நான் கண்டு தொழப் பெறுவது என்றோ வென்பதாம்.

(வி-ரை.) மாடு - செல்வம். மாருதம் - காற்று. மண்டலம் - பூமி. கானிடை - சுடுகாட்டில். (3)

செற்றவர்முப்புரமன்றட்டசிலைத்தொழிலார்
சேவகமுஞ்சினைவார்பாவகமுஞ்நெறியுங்
குற்றமில்தன்னடியார்கூறுமிசைப்பரிசுங்
கோசிகமும்மரையிற்கோவணமும்மதளு
மற்றிகழ்திண்புயமுமார்பிடைநீறுதுதை
மாமலைமங்கையுமைசேர்சுவடும்புகழக்
கற்றனவும்பரவிக்கைதொழலென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) செற்றவர்முப்புரம்-பகைவரது முப்புரத்தை, அன்று அட்ட-அந்நாளில் நீறாக்கின, சிலைத்தொழில் ஆர் சேவகமும்-விற்றொழிலின் அரியசேவ

கமும், நினைவார்பாவகமும் நெறியும் - நினைப்பவரது எண்ணமும் நெறியும், குற்றம் இல்தன் அடியார்-குற்றமற்றதன்னடியார், கூறும் - சொல்லுகிற, இசைப்பரிசும்-புகழின் தன்மையும், கோசிகமும்-வெண்பட்டும், அரையில் கோவணமும்-அரையிற் கோவணமும், அதளும்-தோலும்மல், திகழ் திண் புயமும் - மற்றெழில் விளங்குகிற திண்ணிய தோள்களும், மார்பிடை-மார்பில், நீறுதுதை-வெண்ணீறு மிகுதியாகப் பூசப்பட்டிருக்கிற, மாமலைமங்கை உமைசேர் - மலைமங்கையாகிய வுமர்தேவி சேர்ந்த, சுவடும்-தழும்பும், புகழ-துதிக்க, கற்றனவும் பாவி - தாம்கற்றன வற்றையும் சொல்லிப் புகழ்ந்து, கார்வயல் சூழ்-கரியவயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை - யவ்வனத்தானை, கைதொழல் - கைகூப்பி வணங்குதல், என்றுகொலோ - எந்நாளோ எ-று.

(பொ-ரை.) முப்புரத்தை யந்நாளில் நீறுக்கின விற்றொழிலின் அரிய சேவகமும், நினைப்பவரது எண்ணமும் நெறியும், குற்றமற்ற தன்னடியார் சொல்லுகிற புகழின் தன்மையும் மற்றெழில் விளங்குகிற திண்ணிய தோள்களும், மார்பில் வெண்ணீறு மிகுதியாகப் பூசப்பட்டிருக்கிற உமைமுலைத்தழும்பும், துதிக்க, தாம் கற்றனவற்றையும் சொல்லிப் புகழ்ந்து கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கிற யவ்வநத்தானை, கைகூப்பிவணங்குதல் எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபெருமானை நான் கண்டுதொழப் பெறுவது என்றோவென்பதாம்.

(வி ரை.) செற்றவர் – பகைத்தவர். அட்ட - நீறுக்கின. சிலைத்தொழில்-வில்வித்தை. பாவகம் - சிந்தனை. இசைப்பரிசு – புகழின்பெருமை. கோசிகம்-வெண்பட்டு. அதள் - தோல். துதைதல் - மிகுதல். சுவடு – தழும்பு. பாவல்-வழிபடல். (4)

கொல்லைவிடைக்கழகுங்கோலநறுஞ்சடையிற்
  கொத்தலருமிதழித்தொத்துமதனருகே
முல்லைபடைத்தநகைமெல்லியலாளொருபான்
  மோகமிகுத்திலகுங்கூறுசெயப்பரிசுந்
தில்லைநகர்ப்பொதுவுற்றாடியசீர்நடமுந்
  திண்மழுவுங்கைமிசைகூரெரியுமடியார்
கல்லவடப்பரிசுங்காணுவதென்றுகொலோ
  கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) கொல்லை விடைக்கு அழகும், - கொலைத்தொழிலையுடைய இடபத்தினழகும், கோலம் நறுசடையில்-அழகு மணமுமுள்ள சடையில், கொத்து அலரும்-கொத்தாய் மலர்கிற, இதழித்தொத்தும்-கொன்றைமலர்க்கொத்தும்,

அதன் அருகே - அதனருகில், முல்லைபடைத்த நகை-முல்லை யரும்புபோன்ற பற்களையுடைய, மெல் இயலாள் - மெல்லியவளாகிய உமாதேவி, ஒருபால் - ஒருபக்கம், மோகம்மிகுத்து இலகும்-விருப்ப மிகுந்து விளங்குகிற, கூறுசெய் - பங்கிட்டுக்கொண்ட, அப்பரிசும் - அத்தன்மையும், தில்லைநகர் பொதுவுற்று - தில்லைப்பொதுவையடைந்து, ஆடியசீர்நடமும்-ஆடின சிறந்த நடநமும், திண் மழுவும் - வலிய மழுவும், கைமிசை கூர் எரியும் - கையில் கூர்மையாகிய மழுப்படையும், அடியார் கல்லவடப்பரிசும் ஆக - கல்லவடப்பரிசுமாக, கார் வயல்சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர்உறை-திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை-யவ்வனத்தானை, காணுவது என்றுகொலோ-காண்பது எந்நாளோ எ-று.

(பொ-ரை.) கொலைத்தொழிலையுடைய இடபத்தினழகும், அழகுமணமுமுள்ள சடையில் கொத்தாய் மலர்கிற கொன்றைமலர்க்கொத்தும் அதனருகில் முல்லையரும்புபோன்ற பற்களையுடைய மெல்லியவளாகிய உமாதேவி ஒருபக்கம் விருப்பமிகுந்து விளங்குகிற பங்கிட்டுக்கொண்ட அந்தத் தன்மையும், தில்லைப் பொதுவையடைந்து ஆடின சிறந்தநடநமும் வலியமழுவும், கையில் கூர்மையாகிய மழுப்படையும் அடியார் கல்லவடப்பரிசுமாக கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கிற யவ்வனத்தானை, காண்பது எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபெருமானை நான் காண்பது என்றோ வென்பதாம்.

(வி-ரை.) கொல்லை – கொல்லுந்தொழில். விடை - இடபம். கோலம் - அழகு. நறுமை - மணம். இதழிதொத்து - கொன்றைமலர்க்கொத்து. நடம்-கூத்து. எரி - மழு கல்லவடம் - வாத்தியவிசேடம். பொது - அம்பலம். (5)

பண்ணுதலைப்பயனாற்பாடலுநீடுதலும்
பங்கயமாதனையார்பத்தியுமுத்தியளித்
தெண்ணுதலைப்பெருமானென்றெழுவாரவர்த
மேசறவுமிறையாமெந்தையையும்விரவி
நண்ணுதலைப்படுமாறெங்ஙனமென்றயலே
நைகிறவென்னைமதித்துய்யும்வண்ணமருளுங்
கண்ணுதலைக்கனியைக்காண்பதுமென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) பண்ணுதல் - பண்களோடு கூடிய, ஐ – அழகிய, பயனால் - பயனோடு, பாடலும் -பாடுதலும், நீடுதலும் - நீட்சியும், பங்கயமாது அனையார் பத்தியும் - திருமகளை நிகர்த்தமாதரது பத்திமையும், முத்தி அளித்து எண்ணு - முத்திதர நினைக்கிற, தலை - தலைமையையுடைய, பெருமானென்று-பெருமையுடையானென்று, எழுவார் அவர்தம் ஏசறவும் -எழுவோரது துன்பு

மும், இறை ஆம் எந்தையையும் விரவி - இறைவனாகிய எமது தந்தையையும் சேர்ந்து, நண்ணுதலைப் படுமாறு - பொருந்தியிருக்கும் வண்ணம், எங்ஙனம் என்று - எப்படியோவென்று, அயலே நைகிற என்னை மதித்து - அருகேயிருந்து வருந்துகிற என்னை மதித்து, உய்யும் வண்ணம் — உய்யும் வகையை, அருளும் - அருள்செய்கிற, கண்ணுதலை - நெற்றிக்கண்ணனை, கனியை - கனியாயிருப்பவனை, கார்வயல்சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை - யவ்வனத்தானை, காண்பதும் - காணப்பெறுவதும், என்றுகொலோ - எந்நாளோ எ-று.

(பொ-ரை.) பண்களோடு கூடிய அழகிய பயனோடு பாடுதலும் நீட்சியும் திருமகளை நிகர்த்தமாதராது பத்தியையும்,முத்திதரநினைக்கிற தலைமையையுடைய பெருமையுடையானென்று எழுவோராது துன்பமும், இறைவனாகிய எமது தந்தையையும் சேர்ந்து பொருந்தியிருக்கும் வண்ணம் எப்படியோ வென்று அருகேயிருந்து வருந்துகிற என்னை மதித்து, உய்யும் வகையை அருள்செய்கிற நெற்றிக்கண்ணனை, கனியாயிருப்பவனை, கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப் பேரில் வாழ்கிற யவ்வனத்தானை, காணப்பெறுபவதும் எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபிரானை நான் காண்பது எந்நாளோ வென்பதாம்.

(வி-ரை.) பங்கயமாது - இலக்குமி. எசறவு - துக்கம். விரவி-சேர்ந்து. நைகிற - வருந்துகிற. (6)

மாவையுரித்ததள்கொண்டங்கமணிந்தவனை
　வஞ்சமனத்திறையுநெஞ்சணுகாதவனை
மூவருருத்தனதாமூலமுதற்கருவை
　மூசிடுமால்விடையின்பாகனையாகமுறப்
பாவகமின்றிமெய்யேபற்றுமவர்க்கமுதைப்
　பானறுநெய்தயிராந்தாடுபரம்பரனைக்
காவலெனக்கிறையென்றெய்துவதென்றுகொலோ
　கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.

(ப-ரை.) மாவை உரித்து - யானையையுரித்து, அதள்கொண்டு - அதன் தோலைத்தரித்து, அங்கம் அணிந்தவனை-தன் திருமேனியில் தரித்தவனை, வஞ்சம்மனத்து — கபடமனத்தில், இறையும் - சிறிதும், நெஞ்சு அணுகாதவனை - நெஞ்சிற்பொருந்தாதவனை, மூவர் உரு - மூவர் உருவமும், தனது ஆம் - தனதேயாகிய, மூலமுதற் கருவை - மூலமுதற் பொருளை, மூசிடும் - சீறுகிற, மால் விடையின் பாகனை - பெரிய இடபவாகநனை, ஆகம் உற — மனம்பொருந்த, பாவகம் இன்றி-நினைப்பின்றி, மெய்யேபற்றுமவர்க்கு-உண்மையாகவே பற்றுவோருக்கு, அமுதை - அமிர்தத்தை, பால் நறு நெய் தயிர் - பால் நெய் முத

லிய, ஐந்தாடு பரம்பரனை-ஐந்தினும் அபிஷேகம்செய்யப்பட்டமேலோனை, கார்வயல் சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை - யவ்வநத்தானை, எனக்கு காவல் இறையென்று - எனக்குக் காவலாகிய இறைவனென்று, எய்துவது - அடைவது, என்று கொலோ - எந்நாளோ எ-று.

(பொ-ரை.) யானையையுரித்து அதன் தோலைக்கொண்டு, தன் திருமேனியில் தரித்தவனை, மனவஞ்சகம் சிறிதும் நெஞ்சிற் பொருந்தாதவனை, மூவர் உருவமும் தனதேயாகிய மூலமுதற்பொருளை, சீறுகிற பெரிய இடபவாகநனை, மனம்பொருந்த நினைப்பின்றி உண்மையாகவே பற்றுவோருக்கு அமிர்தத்தை, பால் நெய் (முதலிய) ஐந்தினும் அபிஷேகம் செய்யப்பட்ட மேலோனை, கரிய வயல்கள்சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கிற யவ்வநத்தானை, எனக்குக் காவலாகிய இறைவனென்று அடைவது எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபிரானை நான் காண்பது எந்நாளோ என்பதாம்.

(வி-ரை.) மா - யானை. அதள் - தோல். அங்கம் - உடம்பு. இறையும் - சிறிதும். கருவை - மூலத்தை. பாவகம் - நினைப்பு. (7)

**தொண்டர்தமக்கெளியசோதியைவேதியனைத்**
**தூயமறைப்பொருளாநீதியைவார்கடனஞ்**
**சுண்டதனுக்கிறவாதென்றுமிருந்தவனை**
**யூழிபடைத்தவனோடொள்ளரியும்முணரா**
**வண்டனையண்டர்தமக்காகமநூன்மொழியு**
**மாதியைமேதகுசீரோதியைவானவர்தங்**
**கண்டனையன்பொடுசென்றெய்துவதென்றுகொலோ**
**கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.**

(ப-ரை.) தொண்டர் தமக்கு எளிய சோதியை - அடியார்க்கெளிதாகிய ஒளியை, வேதியனை - அந்தணனை, தூயமறைப்பொருளாம் நீதியை - பரிசுத்தமாகிய வேதார்த்தமென்னும் நீதியை, வார்கடல் நஞ்சு உண்டு - பெரிய கடல்விடத்தையுண்டு, அதனுக்கு-அதனால், இறவாது - இறவாமல், என்றும் இருந்தவனை - எந்நாளுமிருந்தவனை, ஊழிபடைத்தவனோடு - கற்பங்களைப் படைத்தவனாகிய பிரமனோடு, ஒள் அரியும் உணரா- அழகிய திருமாலும் அறியாத, அண்டனை - தேவனை, அண்டர் தமக்கு - தேவர்களுக்கு, ஆகமநூல் மொழியும் ஆதியை - ஆகமநூல்களைச்சொன்ன முதல்வனை, மேதகுசீர் ஓதியை-மேன்மையாகிய வேதங்களால் புகழப்பட்டவனை, வானவர்தம் கண்டனை - தேவர்பிரானை,

கார்வயல்சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கின்ற, காளையை - யவ்வநத்தானை, அன்போடு சென்று-அன்புடனே போய், எய்துவது-அடைவது, என்றுகொலோ-எந்நாளோ எ-று.

(பொ-ரை.) அடியார்க்கெளிதாகிய ஒளியை, அந்தணனை, பரிசுத்தமாகிய வேதார்த்தமென்னும் நீதியை, பெரிய கடல்விடத்தையுண்டு அதனால் இறவாமல் எந்நாளுமிருந்தவனை, கற்பங்களைப் படைத்தவனாகிய பிரமனோடு, அழகிய திருமாலுமறியாத தேவனை, தேவர்களுக்கு ஆகம நால்களைச் சொன்ன முதல்வனை, மேன்மையாகிய வேதங்களால் புகழப்பட்டவனை, தேவர்பிரானை, கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கின்ற யவ்வனத்தானை, அன்புடனே போய் அடைவது எந்நாளோ.

(கு-ரை.) திருக்கானப் பேர்ச் சிவபிரானை நான் காண்பது எந்நாளோ என்பதாம்.

(வி-ரை.) கண்டனை - தலைவனை. ஊழிபடைத்தவன் - கற்பங்களைப் படைத்தவன். (பிரமன்) வானவர் - தேவர். (8)

**நாதனைநாதமிகுத்தோசையதானவனை**
**ஞானவிளக்கொளியாமூனுயிரைப்பயிரை**
**மாதனைமேதகுதன்பத்தர்மனத்திறையும்**
**பற்றுவிடாதவனைக்குற்றமில்கொள்கையனைத்**
**தூதனையென்றனையாள்தோழனைநாயகனைத்**
**தாழ்மகரக்குழையுந்தோடுமணிந்ததிருக்**
**காதனைநாயடியேனெய்துவதென்றுகொலோ**
**கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே.**

(ப-ரை.) நாதனை - யாவர்க்கும் தலைவனை, நாதம்மிகுந்து ஓசை ஆனவனை - சத்தமிகுந்து சத்தரூபமானவனை, ஞானவிளக்கு ஒளி ஆம் - ஞானதீப வொளியாகிய, ஊன் உயிரை - உடலுயிர்களை, பயிரை - பயிரை, மாதனை - பெண்பாகனை, மேதகுதன் பத்தர்மனத்து - மேலான தன் பத்தரிடத்தில், இறையும் பற்று விடாதவனை - சிறிதும் அன்பு நீங்காதவனை, குற்றம் இல் கொள்கையனை - குற்றமற்ற கோட்பாடுடையவனை, தூதனை - அடியார்க்குத் தூதுவனை, என்றனை ஆள் தோழனை - என்னையாளும் நண்பனை, நாயகனை - தலைவனை, தாழ்மகரக்குழையும் - தொங்குகிற மகரகுண்டலமும், தோடும் அணிந்த திருக்காதனை - சங்கத்தோடும் அணிந்த திருச்செவியையுடையவனை, கார்வயல் சூழ் - கரிய வயல்கள் சூழ்ந்த, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை - யவ்வநத்தானை, நாயடியேன் எய்துவது - நாயடியேன் அடைவது, என்று கொலோ - எந்நாளோ எ-று.

(போ-ரை.) யாவர்க்கும் தலைவனை, சத்தமிருந்து சத்தரூபமானவனை, ஞானதீபவொளியாகிய உடலுயிர்களை, பயிரை, பெண்பாகனை, மேலான தன் பத்தரிடத்தில் சிறிதும் அன்பு நீங்காதவனை, குற்றமற்ற கோட்பாடுடையவனை, அடியார்க்குத் தூதுவனை, என்னையாளும் நண்பனை, தலைவனை, தொங்குகிற மகரகுண்டலமும் சங்கத்தோடு மணிந்த திருச்செவியை யுடையவனை, கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப்பேரில் வாழ்கிற யவ்வநத்தானை, நாயடியேன் அடைவது எந்நாளோ.

(க-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபிரானை நான் காண்பது எந்நாளோ வென்பதாம்.

(வி-ரை.) மாதனை - பெண்பாகனை. தூதனை - சுந்தரன் தூதனை. மேதகு - மேன்மை பொருந்தின. பற்று - அன்பு. (9)

**கன்னலையின்னமுதைக்கார்வயல்சூழ்கானப்**
**பேருறைகாளையையொண்சீருறைதண்டமிழா**
**லுன்னிமனத்தயராவுள்ளுருகிப்பரவு**
**மொண்பொழினாவலர்கோனாகியவாரூரன்**
**பன்னுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார்**
**பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ**
**மன்னியிருப்பவர்கள்வானினிழிந்திடினு**
**மண்டலநாயகராய்வாழ்வதுநிச்சயமே.**

(ப-ரை.) கன்னலை - கரும்பை, இன் அமுதை-இனிய அமிர்தத்தை, கானப்பேர் உறை - திருக்கானப்பேரில் வாழ்கிற, காளையை - யவ்வநத்தானை, ஒள் சீர் உறை-ஒட்பமாகிய சீரினையுடைய, தண் தமிழால் உன்னி-தண்ணிய தமிழ்ப்பாக்களால் நினைத்து, மனத்து அயரா - மனமயர்ந்து, உள் உருகி பரவும் - மனமுருகித் துதிக்கிற, ஒள் பொழில் - அழகிய சோலைகள் சூழ்ந்த, நாவலர்கோன் ஆகிய ஆரூரன் - சுந்தரன், பன்னும்-சொன்ன, இசைக் கிளவி-இசையோடுகூடிய, பத்து இவைபாட வல்லார் - பத்துப் பாடலையும் பாடவல்லவர், பத்தர் குணத்தினர் ஆய் - பத்தர் குணத்தையுடையவராகி, எத்திசையும் புகழ-எத்திசையாரும் புகழும்படி, மன்னியிருப்பவர்கள் - நிலைபெற்றிருப்பவர்கள், வானின் இழிந்திடினும்-விண்ணினின் றிழிந்தாலும், மண்டலநாயகராய் வாழ்வது - பூலோகநாயகராய் வாழ்வது, நிச்சயமே - உண்மையே எ-று.

(போ-ரை), கரும்பை, இனியஅமிர்தத்தை, திருக்கானப்பேரில்வாழ்கிற யவ்வநத்தானை, ஒட்பமாகிய சீரினையுடைய தண்ணிய தமிழ்ப்பாக்களால் நினைத்து மனமயர்ந்து மனமுருகித் துதிக்கிற அழகிய சோலைகள் சூழ்ந்த சுந்தரன்சொன்ன இசையோடுகூடிய, பத்துப் பாடலையும் பாட

வல்லவர், பத்தர் குணத்தை யுடையவராகி, எத்திசையும் புகழும்படி நிலைபெற்றிருப்பார்கள், விண்ணினின் றிழிந்தாலும் பூலோகநாயகராய் வாழ்வது உண்மையே.

(கு-ரை.) திருக்கானப்பேர்ச் சிவபிரானை, ஆரூரன் புகழ்ந்துரைத்த இந்தப் பத்துப்பாடலுங் கற்று வல்லார், யாவராலும் புகழப்பட்டு, பூலோகத்தரசராய் வாழ்வது திண்ணம் என்பதாம்.

(வி-ரை.) கன்னல் - சர்க்கரையுமாம். உன்னி - நினைத்து. அயரா - அயர்ந்து. உள் - மனம். இசைக்கிளவி-பண்ணோடுகூடிய பாடல் மன்னி-நிலைபெற்று. (10)

**திருச்சிற்றம்பலம்.**

**இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர் - காளையீசுவரர். தேவியார் - மகமாயியம்மை.

இது காளையார் கோயிலென்று வழங்கப்படுகின்றது.

---

## திருக்கூடலையாற்றூர்

பண் - புறநீர்மை

**திருச்சிற்றம்பலம்**

**வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்**
**பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடுங்**
**கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரி**
**லடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

(ப-ரை.) வடிவுடை மழு எந்தி-அழகுள்ள மழுவைத்தாங்கி, மதகரி உரிபோர்த்து - மதயானையின் தோலைப்போர்த்து, பொடி அணிதிருமேனி-திருவெண்ணீறணிந்த திருமேனியினோர்பாகத்தில், புரிகுழல் உமை யோடும்-முறுக்கப்பட்ட கூந்தலையுடைய வுமாதேவியோடும், கொடி அணி நெடுமாடம் - கொடிகட்டப்பட்ட நெடிய மாளிகைகள் நிறைந்த, கூடலையாற்றூரில் அடிகள்-திருக்கூடலையாற்றூரி லெழுந்தருளியிருக்கிற சுவாமிகள், இவ்வழிபோந்த - இவ்வழியாயெழுந்தருளின, அதிசயம் அறியேன் - அதிசயத்தை யறிந்திலேன் எ-று.

(போ-ரை.) அழகுள்ள மழுவைத்தாங்கி, மதயானையின் தோலைப் போர்த்து,திருவெண்ணீறணிந்த திருமேனியினோர் பாகத்தில் முறுக்கப் பட்ட கூந்தலையுடைய வுமாதேவியோடும், கொடிகட்டப்பட்ட நெடிய மாளிகைகள் நிறைந்த திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற சுவாமிகள் இவ்வழியா யெழுந்தருளின அதிசயத்தை யறிந்திலேன்.

(க-ரை.) திருக்கூடலையாற்றூரடிகள், இவ்வழியே யெழுந்தருளின அதிசயம் அறியேனென்பதாம்.

(வி-ரை.) வடிவு - அழகு. புரிகுழல் - முறுக்கப்பட்ட கூந்தல். (1)

**வையகமுழுதுண்டமாலொடுநான்முகனும்**
**பையிளவரவல்குற்பாவையொடும்முடனே**
**கொய்யணிமலர்ச்சோலைக்கூடலையாற்றூரி**
**லையனிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

(ப-ரை.) வையகம் முழுது உண்ட-உலகமெல்லாமுண்ட, மாலொடு நான்முகனும் - திருமாலோடு பிரமனும், பை இள அரவு அல்குல் - இளமையாகிய பாம்பின் படம்போலும் அல்குலையுடைய, பாவையொடும் உடனே - உமாதேவியுடனே, கொய் - பறிக்கப்படுகிற, அணி மலர்ச்சோலை- அழகிய பூஞ்சோலை சூழ்ந்த, கூடலையாற்றூரில் - திருக்கூடலையாற்றூரி லெழுந்தருளியிருக்கிற, ஐயன் - இறைவன், இவ்வழிபோந்த-இவ்வழியே யெழுந்தருளின, அதிசயம் அறியேன் - அதிசயத்தை யறிந்திலேன் எ-று.

(போ-ரை.) உலகமெல்லாமுண்ட திருமாலோடு பிரமனும், இளமையாகிய பாம்பின்படம்போலும் அல்குலையுடைய உமாதேவியுடனே, பறிக்கப்படுகிற அழகிய பூஞ்சோலை சூழ்ந்த திருக்கூடலையாற்றூரி லெழுந்தருளியிருக்கிற இறைவன், இவ்வழியே யெழுந்தருளின அசயத்தை யறிந்திலேன்.

(க-ரை.) திருக்கூடலையாற்றூரில் ஐயன் இவ்வழிபோந்த அதிசயம் அறியேன் என்பதாம்.

(வி-ரை.) பாவை - பிரதிமைபோல்வாளாகிய உமாதேவி. (2)

**ஊர்தொறும்வெண்டலைகொண்டுண்பலியிடுமென்று**
**வார்தருமென்முலையாண்மங்கையொடும்முடனே**
**கூர்நுனைமழுவேந்திக்கூடலையாற்றூரி**
**லார்வனிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

(ப-ரை) ஊர்தொறும் - ஊர்கள்தோறும், வெண்டலை கொண்டு - வெள்ளிய தலையோட்டைக் கொண்டு, உண்பலி இடும் என்று - உண்டற்குரிய பிக்ஷையிடுங்களென்று, வார்தரும் மென்முலையாள்-கச்சையணிந்த ஸ்தனங்களையுடைய, மலைமங்கையொடும் உடனே - உமாதேவியுடனே, கூர் நுனை மழு ஏந்தி - கூர்மையாகிய நுனியையுடைய மழுப்படையைத் தாங்கி, கூடலையாற்றூரில் - திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற, ஆர்வன் - அன்பரிடத்தன்புள்ளவன், இவ்வழிபோந்த - இவ்வழியே யெழுந்தருளின, அதிசயம் அறியேன் - அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

(போ-ரை.) ஊர்கள்தோறும் வெள்ளிய தலையோட்டைக் கொண்டு உண்டற்குரிய பிக்ஷையிடுங்களென்று கச்சையணிந்தஸ்தனங்களையுடைய வுமாதேவியுடனே கூர்மையாகிய நுனியையுடைய மழுப்படையைத்தாங்கி திருக்கூடலையாற்றூரி லெழுந்தருளியிருக்கிற அன்பரிடத் தன்புள்ளவன், இவ்வழியே யெழுந்தருளின அதிசயத்தை அறிந்திலேன்.

(க-ரை.) திருக்கூடலையாற்றூரில் ஆர்வன் இவ்வழிபோந்த அதிசயம் அறியேன் என்பதாம். (3)

**சந்தணவும்புனலுந்தாங்கியதாழ்சடையன்**
**பந்தணவும்விரலாள்பாவையொடும்முடனே**
**கொந்தணவும்பொழில்சூழ்கூடலையாற்றூரி**
**லந்தணன்வழிபோந்தவதிசயமறியேனே.**

(பத-ரை.) சந்து அணவும் - அழகுபொருந்திய, புனலும் தாங்கிய - கங்கையையும் தரித்த, தாழ்சடையன் - தொங்குகிற சடையை யுடையவன், பந்து அணவும் விரலாள் - பந்து பயிலும் விரலுடையவளாகிய, பாவையொடும் உடனே - உமாதேவியோடும், கொந்து அணவும் - பூங்கொத்துக்களையுடைய, பொழில் சூழ்-சோலைகள் சூழ்ந்த, கூடலையாற்றூரில் - திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற, அந்தணன் - வேதியன், வழிபோந்த - இவ்வழியாய் வந்த, அதிசயம் அறியேன் - அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

(போ-ரை) அழகுபொருந்திய கங்கையையும் தரித்த நீண்ட சடையையுடையவன், பந்து பயிலும் விரலுடையவளாகிய உமாதேவியோடும், பூங்கொத்துக்களையுடைய சோலைகள் சூழ்ந்த, திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற வேதியன், இவ்வழியாய்வந்த அதிசயத்தை அறிந்திலேன்.

(க-ரை) திருக்கூடலையாற்றூரில் அந்தணன் இவ்வழியே வந்த அதிசய மறியேனென்பதாம்.

(விரை.) சந்தம் - அழகு, அது ஈறு தொகுத்தலாய் சந்து என்றுயிற்று. (4)

**வேதியர்விண்ணவருமண்ணவருந்தொழநற்**
**சோதியதுருவாகிச்சுரிகுழலுமையோடுங்**
**கோதியவண்டறையுங்கூடலையாற்றூரி**
**லாதியிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

(பத-ரை) வேதியர் விண்ணவரும் - அந்தணரும் தேவரும், மண்ணவரும் - மண்ணுலகத்தாரும், தொழ - வணங்க, நல் சோதியது உருவாகி - நல்ல ஒளியுருவாகி, சுரிகுழல் உமையோடும் - சுரிந்த கூந்தலையுடைய உமாதேவியோடும், கோதிய-கிண்டிய, வண்டு அறையும் - வண்டுகள் சத்

திக்கிற, கூடலையாற்றூரில் ஆதி - திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளி யிருக்கிற முதல்வன், இவ்வழிபோந்த - இவ்வழியா யெழுந்தருளின, அதிசயம் அறியேன் - அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

(பொ-ரை.) அந்தணரும் தேவரும், மண்ணுலகத்தாரும் வணங்க, நல்ல வொளியுருவாகி சுருண்ட கூந்தலையுடைய உமாதேவியோடும் கிண்டிய வண்டுகள் சத்திக்கிற திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற முதல்வன், இவ்வழியா யெழுந்தருளின அதிசயத்தை அறிந்திலேன்.

(க-ரை.) திருக்கூடலையாற்றூரில் ஆதி இவ்வழிபோந்த அதிசய மறியே னென்பதாம்.

(வி-ரை.) விண்ணவர் - தேவர். மண்ணவர் - மனிதர். சுரிகுழல் - சுருண்ட கூந்தல். கோதிய - மூக்கினுலுழுத. அறையும்-சத்திக்கிற. ஆதி - முதல்வன். (5)

**வித்தகவீணையொடும்வெண்புரிநூல்பூண்டு**
**முத்தனவெண்முறுவன்மங்கையொடும்முடனே**
**கொத்தலரும்பொழில்சூழ்கூடலையாற்றூரி**
**லத்தனிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

(ப-ரை.) வித்தக வீணையொடும்-ஞானரூபமாகிய யாழோடும், வெண் புரிநூல் பூண்டு - வெள்ளிய முப்புரிநூலைத்தரித்து, முத்து அன்னவெண் முறுவல் - முத்துப்போலும் வெள்ளிய பற்களையுடைய, மங்கையொடும் உடனே - உமாதேவியுடனே, கொத்து அலரும் - பூங்கொத்துக்கள் மலர்கிற, பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, கூடலையாற்றூரில்-திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற, அத்தன் - இறைவன், இவ்வழிபோந்த- இவ்வழியா யெழுந்தருளின, அதிசயம் அறியேன் - அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

(பொ-ரை) ஞானரூபமாகிய யாழோடும், வெள்ளிய முப்புரிநூலைத் தரித்து, முத்துப்போலும் வெள்ளிய பற்களையுடைய உமாதேவியுடனே பூங்கொத்துக்கள் மலர்கிற சோலைகள் சூழ்ந்த, திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற இறைவன், இவ்வழியா யெழுந்தருளின அதிசயத்தை அறிந்திலேன்.

(க-ரை.) திருக்கூடலையாற்றூரில் அத்தன் இவ்வழிபோந்த அதிசயம் அறியே னென்பதாம்.

(வி-ரை.) வித்தகம் - அதிசயம். முத்து அன்ன - முத்தைநிகர்த்த. முறுவல் - பல். அலரும் - மலர்கின்ற. அத்தன் - கடவுள். (6)

**மழைநுழைமதியமொடுவாளரவஞ்சடைமே**
**லிழைநுழைதுகிலல்குலேந்திழையாளோடும்**

**குழையணிதிகழ்சோலைக்கூடலையாற்றூரி**
**லழகனிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

**(ப-ரை.)** மழை நுழை மதியமொடு - மேகத்தில் நுழைகிற பிறையோடு, வாள் அரவம் - ஒளியையுடைய பாம்பையும், சடைமேல் - சடையின்மீது, இழை நுழை துகில் அல்குல் - நூலிழையாலியன்ற மெல்லிய ஆடையையணிந்த அல்குலையுடைய, எந்திழையாளோடும் - உமாதேவியோடும், குழை அணிதிகழ் - தளிர்களின் அழகு விளங்குகிற, சோலை - சோலைகள் சூழ்ந்த, கூடலையாற்றூரில் - திருக்கூடலையாற்றூரி லெழுந்தருளியிருக்கிற, அழகன் - அழகன், இவ்வழிபோந்த-இவ்வழியாயெழுந்தருளின, அதிசயம் அறியேன் - அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

**(பொ-ரை)** மேகத்தில் நுழைகிற பிறையோடு ஒளியையுடைய பாம்பையும், சடையின்மீது நூலிழையாலியன்ற மெல்லிய ஆடையையணிந்த அல்குலையுடைய உமாதேவியோடும், தளிர்களின் அழகு விளங்குகிற சோலைகள் சூழ்ந்த திருக்கூடலையாற்றூரி லெழுந்தருளியிருக்கிற அழகன், இவ்வழியா யெழுந்தருளின அதிசயத்தை அறிந்திலேன்.

**(க-ரை.)** திருக்கூடலையாற்றூரில் அழகன் இவ்வழி போந்த அதிசய மறியே னென்பதாம்.

**(வி-ரை.)** மதியம் - சந்திரகண்டம். வாள்-ஒளி. குழை-தளிர் அணி - அழகு. திகழ்தல் - விளங்குதல். (7)

**மறைமுதல்வானவருமாலயனிந்திரனும்**
**பிறைநுதன்மங்கையொடும்பேய்க்கணமுஞ்சூழக்**
**குறள்படையதனோடுங்கூடலையாற்றூரி**
**லறவனிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

**(ப-ரை.)** மறைமுதல் வானவரும் - வேதமுதலாக தேவர்கள் யாவரும், மால் அயன் இந்திரனும் - திருமால் பிரமன் இந்திரனும், பிறைநுதல் மங்கை யொடும் - உமாதேவியோடும், பேய்க்கணமும் சூழ - பேய்க்கூட்டமும் சுற்றிவர, குறள்படையதனோடும் - பூதப்படையோடும், கூடலையாற்றூரில்-திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற, அறவன்-தருமவுருவன், இவ்வழிபோந்த - இவ்வழியாயெழுந்தருளின, அதிசயம் அறியேன்- அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

**(பொ-ரை.)** வேதமுதலாக தேவர்கள் யாவரும், திருமால் பிரமன் இந்திரனும் உமாதேவியோடும் பேய்க்கூட்டமும் சுற்றிவர, பூதப்படையோடும், திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற தருமவுருவன் இவ்வழியா யெழுந்தருளின அதிசயத்தை அறிந்திலேன்.

**(க-ரை.)** திருக்கூடலையாற்றூரில் அறவன், இவ்வழிபோந்த அதிசயம் அறியே னென்பதாம்.

(வி-ரை) பிறைநுதல் மங்கை - பிறைபோலும் நெற்றியையுடையவளாகிய உமாதேவி. குறள்படை - பூதப்படை. (8)

**வேலையினஞ்சுண்டுவிடையது தானேறிப்**
**பாலனமென்மொழியாள்பாவையொடும்முடனே**
**கோலமதுருவாகிக்கூடலையாற்றூரி**
**லாலனிவ்வழிபோந்தவதிசயமறியேனே.**

(ப-ரை.) வேலையில் நஞ்சு உண்டு-பாற்கடலிற் றோன்றின விடத்தையுண்டு, விடையது தான் ஏறி - இடபத்தின்மேலேறி, பால் அன்ன மென்மொழியாள் - பால் போன்ற மிருதுவசநத்தை யுடையவளாகிய, பாவையொடும் உடனே - உமாதேவியோடு, கோலமது உருவாகி - அழகுருக்கொண்டு, கூடலையாற்றூரில் - திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற, ஆலன் - கல்லாலின் நிழலிலிருந்தவன், இவ்வழிபோந்த-இவ்வழியாயெழுந்தருளின, அதிசயம் அறியேன்-அதிசயத்தை அறிந்திலேன் எ-று.

(பொ-ரை.) பாற்கடலிற்றோன்றின விடத்தையுண்டு, இடபத்தின்மேலேறி பால்போன்ற மிருது வசநத்தையுடையவளாகிய உமாதேவியோடு அழகுருக்கொண்டு திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற கல்லாலின் நிழலிலிருந்தவன் இவ்வழியாயெழுந்தருளின அதிசயத்தை அறிந்திலேன்.

(கு-ரை.) திருக்கூடலையாற்றூரில் ஆலன் இவ்வழிபோந்த அதிசயம் அறியேனென்பதாம்.

(வி-ரை.) வேலை - கடல். விடை - இடபம். பாவை - உமாதேவி. கோலம் - அழகு. ஆலன் - ஆலநிழற்கீழிருந்தவன் (9)

**கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடும்**
**ஆடலுகந்தானையதிசயமிதுவென்று**
**நாடியவின்றமிழால்நாவலவூரன்சொற்**
**பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே.**

(ப-ரை) கூடலையாற்றூரில் - திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற, கொடியிடையவளோடும்-உமாதேவியுடனே, ஆடல் உகந்தானை-நடநத்தை விரும்பினவனை, அதிசயம் இதுவென்று-அதிசயமிதுவென்று, நாடிய இன் தமிழால் - யாவரும் விரும்புகிற இனிய தமிழினால், நாவல ஆரன் சொல்-சுந்தரன் சொன்ன, பாடல்கள் பத்தும் வல்லார் தம்வினை-பத்துப்பாடலுங் கற்று வல்லோரது வினைகள், பற்று அறும் - பற்றற்றுப் போம் எ-று.

(பொ-ரை.) திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளியிருக்கிற உமாதேவியுடனே நடனத்தை விரும்பினவனை, அதிசயமிதுவென்று யாவரும் விரும்புகிற இனிய தமிழினால், சுந்தரன் சொன்ன பத்துப் பாடலுங் கற்று வல்லோரது வினைகள் பற்றற்றுப்போம்.

(கு-ரை.) திருக்கூடலையாற்றூர்ச் சிவபெருமானை, நாவலூரான் புகழ்ந்துரைத்த இந்தப் பத்துப்பாடலுங் கற்று வல்லார்களுடைய வினைப் பற்றறும் என்பதாம்.

(வி-ரை.) கொடியிடையவள் - உமாதேவி. ஆடல் - கூத்து. உகந்தான் - விரும்பினவன். நாடிய - ஆராய்ந்த. (10)

இத்திருப்பதிகம், சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புறம்பயமென்னுந் தலத்தினின்று மெழுந்தருளித் திருக்கூடலை யாற்றூருக்குச் சமீபமாகச் செல்லும்பொழுது, அத்தலத்துக்குள் செல்லாமல் விருத்தாசலத்தை நோக்கிச் செல்லுங் கருத்தினராக, அம்மார்க்கத்தில் பரமசிவம் ஒருபிராமணத் திருவுருவாய் நிற்கக்கண்டு, ஐயரே விருத்தாசலத்துக்குச் செல்லும் மார்க்கமெதுவென்ன, இக் கூடலையாற்றூர் மார்க்கமாகச் செல்லுகின்றதென்று கூறி வழிகாட்டிப் பின் செல்லத் தான் முன்சென்று கூடலையாற்றூருக்குச் சமீபமாகச் சார்ந்தபோது பின்வந்த அந்தணர் மறையக் கண்டு அதிசயமடைந்து ஓதியருளியது.

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் நடுநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர் - நெறிகாட்டுநாயகர். தேவியார் - புரிகுழலாளம்மை.

---

## திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

***விடையின்மேல்வருவானைவேதத்தின்பொருளானை***
***யடையிலன்புடையானையாவர்க்குமறியொண்ணா***
***மடையில்வாளைகள்பாயும்வன்பார்த்தான்பனங்காட்டூர்ச்***
***சடையிற்கங்கைதரித்தானைச்சாராதார்சார்வென்னே.***

(ப-ரை) விடையின்மேல் வருவானை - இடபத்தின்மீதேறி வருவோனை, வேதத்தின் பொருளானை - வேதப்பொருளாயிருப்பவனை, அடையில் - தன்னையடுத்தால், (அவர்கள்மேல்) அன்பு உடையானை - அன்புடையவனை, யாவர்க்கும் அறியொண்ணா - எல்லார்க்கும் அறிய வொண்ணாத, மடையில் வாளைகள் பாயும் - நீர்மடையில் வாளைமீன்கள் பாய்கிற,

வன்பார்த்தான் பனங்காட்டூர்-திருவன்பார்த்தான் பனங்காட்டூரி லெழுந் தருளிய, சடையில் கங்கைதரித்தானை - கங்கைச்சடையனை, சாராதார் - அடுக்காதவரது, சார்வு - சார்பினால், என் - பயன் யாது எ-று.

(போ-ரை.) இடபத்தின்மீதேறி வருவோனை, வேதப்பொருளா யிருப்பவனை, தன்னையடுத்தால் (அவர்கள்மேல்) அன்புடையவனை, எல்லார்க்கும் அறியவொண்ணாத, நீர்மடையில் வாளைமீன்கள்பாய்கிற திருவன்பார்த்தான் பனங்காட்டூரி லெழுந்தருளிய கங்கைச்சடையனை, அடுக்காதவரது சார்பினால் பயன் யாது.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானைச் சாராதாரது சார்வு என்னபயன் தருமென்பதாம்.

(வி-ரை.) அடையில் - அடைந்தால். மடை - நீர்மடை. (1)

**அறையும்பைங்கழலார்ப்பவரவாடவனலேந்திப்**
**பிறையுங்கங்கையுஞ்சூடிப்பெயர்ந்தாடும்பெருமானார்**
**பறையுஞ்சங்கொலியோவாப்படிறன்றன்பனங்காட்டூ**
**ருறையுமெங்கள்பிரானாரையுணராதாருணர்வென்னே.**

(ப-ரை.) அறையும் பைங்கழல் ஆர்ப்ப - சத்திக்கிற பசிய கழல்கள் ஒலிக்க, அரவு ஆட - பாம்பு ஆட, அனல் ஏந்தி - மழுவேந்தி, பிறையும் கங்கையும் சூடி - பிறையையும் கங்கையையும் தரித்து, பெயர்ந்து ஆடும் பெருமானார் - அசைந்தாடும் பெருமானார், பறையும் சங்கு ஒலி - ஊதப்படுகிற சங்கோசை, ஓவா - நீங்காத, படிறர்தம் - வஞ்சகரது, பனங்காட்டூர் - திருவன்பார்த்தான் பனங்காட்டூரில், உறையும் - வாழ்கின்ற, எங்கள் பிரானாரை - எம்பிரானாரை, உணராதார் - அறியாதவரது, உணர்வு - அறிவிற்கு, என் - பயன்யாது எ-று.

(போ-ரை.) சத்திக்கிற பசிய கழல்கள் ஒலிக்க, பாம்பு ஆட, மழுவேந்தி பிறையையும் கங்கையையும் தரித்து அசைந்தாடும் பெருமானார், ஊதப்படுகிற சங்கோசை நீங்காத வஞ்சகரது திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் வாழ்கின்ற எம்பிரானாரை அறியாதவரது அறிவிற்கு பயன் யாது.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானை அறியாதவரது அறிவு என்னபயன் தரும் என்பதாம்.

(வி-ரை.) அறையும் - ஒலிக்கின்ற. பைங்கழல் - பசும்பொன்னாலியன்ற கழல். ஆர்ப்ப - ஆரவாரிக்க. பெயர்ந்து - அசைந்து. பறையும் - ஒலிக்கிற. படிறன் - வஞ்சகன், பொய்யன் எனினுமாம். (3)

**தண்ணார்மாமதிசூடித்தழல்போலுந்திருமேனிக்**
**கெண்ணார்நாண்மலர்கொண்டங்கிசைந்தேத்துமடியார்கள்**
**பண்ணார்பாடலறாதபடிறன்றன்பனங்காட்டூர்ப்**
**பெண்ணாணாயபிரானைப்பேசாதார்பேச்சென்னே.**

(ப-ரை.) தண் ஆர் - குளிர்ச்சிபொருந்திய, மாமதி-அழகிய பிறையை, சூடி - தரித்து, தழல்போலும் திருமேனிக்கு - நெருப்புப்போலுந் திருமேனிக்கு, எண் ஆர் நாள் மலர்கொண்டு - மதித்தற்கரிய நீரையு மலரையுங் கொண்டு, அங்கு இசைந்து ஏத்தும் - அவ்விடத்தினின்று துதிக்கிற, அடியார்கள் - தொண்டர்கள், பண் ஆர் பாடல் அறாத - பண்களோடு கூடின பாடல் இடையறாத, படிறன் தன் - படிறனது, பனங்காட்டூர்-திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய, பெண் ஆண் ஆய பிரானை-பெண்ணும் ஆணுமாகிய பிரானை, பேசாதார் பேச்சு என் - பேசாதவரது பேச்சினால் பயன்யாது எ-று.

(போ-ரை.) குளிர்ச்சிபொருந்திய அழகிய பிறையை தரித்து நெருப்புப்போலும் திருமேனிக்கு மதித்தற்கரிய நீரையு மலரையுங்கொண்டு அவ்விடத்தினின்று துதிக்கிற தொண்டர்கள் பண்களோடுகூடின பாடல் இடையறாத படிறனது திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய பெண்ணும் ஆணுமாகிய பிரானை, பேசாதவரது பேச்சினால் பயன் யாது.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானைப் பேசாதவரது பேச்சு என்னபயன் தருமென்பதாம்.

(வி-ரை.) தண் ஆர் - குளிர்ச்சியையுடைய தட்பமாகிய ஆத்தி மலர் மாலையெனினு மமையும். எண் ஆர் - எண்ணப்பட்ட. நாள்மலர் - புதுப்பூ.

**நெற்றிக்கண் ணுடையானைநீறேறுந் திருமேனிக்**
**குற்றமில்குணத்தானைக்கோணுதார்மனத்தானைப்**
**பற்றிப்பாம்பரையார்த்தபடிறன்றன்பனங்காட்டூர்ப்**
**பெற்றொன்றேறும்பிரானைப்பேசாதார்பேச்சென்னே.**

(ப-ரை.) நெற்றிக்கண் உடையானை-நெற்றிக்கண்ணனை, நீறு ஏறும் திருமேனி - நீறுபூசப்பெற்ற திருமேனியை யுடையவன், குற்றம் இல் குணத்தானை - குற்றமற்ற குணமுடையவனை, கோணுதார்மனத்தானை - கோணுதவரது மனத்திலுள்ளவனை, பற்றி - பிடித்து, பாம்பு - பாம்பை, அரை ஆர்த்த - அரையிற் சச்சையாகக் கட்டின, படிறன் றன் - வஞ்சகனது, பனங்காட்டூர் - திருவன்பார்த்தான் பனங்காட்டூரில், எழுந்தருளிய, பெற்றொன்று ஏறும் பிரானை-ஒரு எருதேறும் பிரானை, பேசாதார் பேச்சு என்னே - பேசாதவரது பேச்சினால் பயன்யாது எ-று.

(போ-ரை.) நெற்றிக்கண்ணனை, நீறு பூசப்பெற்ற திருமேனியையுடையவன், குற்றமற்ற குணமுடையவனை, கோணுதவரது மனத்திலுள்ளவனை பாம்பைப்பிடித்து அரையிற்கச்சாகக் கட்டின வஞ்சகனது திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய ஒரு எருதேறும் பிரானை பேசாதவரது பேச்சினால் பயன்யாது.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானை பேசாதாரது பேச்சு என்னபயன் தருமென்பதாம்.

(வி-ரை.) கோளறுதார் - ஒழுக்கங்குன்றுதவர். பெற்றம் ஒன்று என்பது பெற்றொன்று என நிலைமொழி யீறு தொகுத்தல் பெற்றது. (4)

**உரமென்னும்பொருளானையுருகிலுள்ளுறைவானை**
**சிரமென்னுங்கலனானைச்செங்கண்மால்விடையானை**
**வரமுன்னமருள்செய்வான்வனபார்த்தான்பனங்காட்டூர்ப்**
**பரமெங்கள்பிரானைப்பரவாதார்பரவென்னே.**

(ப-ரை.) உரம் என்னும் பொருளானை - அறிவென்னும் பொருளாயிருப்பவனை, உருகில் - மனங்கரைந்தால், உள் உறைவானை - மனத்தில் வாழ்பவனை, சிரம் என்னும் கலனானை - தலையோடாகிய பிக்ஷாபாத்ரத்தை யுடையவனை, செங்கண்மால் விடையானை - செவந்த கண்களையுடைய பெரிய இடபத்தையுடையவனை, முன்னம் வரம் அருள்செய்வான் -முற்பட வரமருள்செய்வோன், வன்பார்த்தான் பனங்காட்டூர்-திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய, பரம் - மேலான, எங்கள் பிரானை - எம்பெருமானை, பரவாதார் பரவு - வழிபடாதவரது வழிபாடு, என் - என்ன பயன்கொடுக்கும் எ-று.

(பொ-ரை.) அறிவென்னும் பொருளாயிருப்பவனை, மனங்கரைந்தால் மனத்தில் வாழ்பவனை, தலையோடாகிய பிக்ஷாபாத்ரத்தை யுடையவனை, செவந்த கண்களையுடைய பெரிய இடபத்தையுடையவனை, முற்பட வரமருள்செய்வோன், திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய மேலான எம்பெருமானை வழிபடாதவரது வழிபாடு என்னபயன் கொடுக்கும்.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானை பரவாதவரது பரவு என்னபயன் தரும் என்பதாம்.

(வி-ரை.) உரம் - அறிவு. உருகில் - உருகினால். (5)

**எயிலார்பொக்கமெரித்தவெண்டோண்முக்கணிறைவன்**
**வெயிலாய்க்காற்றெனவீசிமின்னாய்த்தீயெனநின்றான**
**மயிலார்சோலைகள்சூழ்ந்தவன்பார்த்தான்பனங்காட்டூர்ப்**
**பயில்வானுக்கடிமைக்கட்பயிலாதார்பயில்வென்னே.**

(ப-ரை.) எயிலார் பொக்கம் எரித்த - மும்மதில்களையுடையவரது செருக்கை எரித்தடக்கின, எண்டோள்முக்கண் இறைவன் - எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையுமுடைய தலைவன், வெயிலாய் - வெயிலுருவாகி, காற்று என வீசி - காற்றாகி வீசி, மின் ஆய் தீ என நின்றான் - மின்னலாகி நெருப்பென்னும்படி நின்றவன், மயில் ஆர் - மயில்கள் நிறைந்த, சோலைகள் சூழ்ந்த - சோலைகள்சூழ்ந்த, வன்பார்த்தான் பனங்

காட்டூர் - திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளி, பயில்வர்னுக்கு - வாழ்பவனுக்கு, அடிமைக்கண் பயிலாதார்-தொண்டின்கண்ணே பழகாதவரது, பயில்வு - பழக்கம், என் - என்னபயனைத்தரும் எ-று.

(பொ-ரை) மும்மதில்களையுடையவரது செருக்கை எரித்தடக்கின எட்டுத்தோள்களையும் மூன்று கண்களையுமுடைய தலைவன், வெயிலுருவாகி காற்றாகி வீசி மின்னலாகி நெருப்பென்னும்படி நின்றவனை, மயில்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளி வாழ்பவனுக்கு தொண்டின்கண்ணே பழகாதவரது பழக்கம் என்னபயனைத்தரும்.

(க-ரை) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானுக்கு அடிமை செய்யாதவரது நட்பு என்னபயன் தரும் என்பதாம்.

(வி-ரை.) பொக்கம் - பொங்குதல் (மீச்செலவு). பயில்வானுக்கு - உறைவோனுக்கு. அடிமைக்கண் - தொண்டுசெய்வதில். பயிலாதார் - பழகாதவரது. பயில்வு - நட்பு. (6)

**மெய்யன்வெண்பொடிபூசும்விகிர்தன்வேதமுதல்வன்**
**கையின்மான்மழுவேந்திக்காலன்காலமறுத்தான்**
**பைகொள்பாம்பரையார்த்தபடிறன்றண்பனங்காட்டூ**
**ரையனெங்கள்பிரானையறியாதாரறிவென்னே.**

(ப-ரை.) மெய்யன்-மெய்ம்மையன், வெண்பொடி பூசும் விகிர்தன்-திருநீறு பூசுகிற நன்மையன், வேதமுதல்வன்-வேதங்களுக்குத் தலைவன், கையில் மான் மழு ஏந்தி - திருக்கரத்தில் மான்மழுக்களைத் தரித்து, காலன் காலம் அறுத்தான்-யமனது ஆயுளை முடிவுசெய்தவன், பைகொள் பாம்பு-படத்தையுடைய பாம்பை, அரை ஆர்த்த - திருவரையிற் கட்டின, படிறன் - வஞ்சகன், தண்-குளிர்ச்சியையுடைய, பனங்காட்டூர் ஐயன்-திருவன்பார்த்தான் பனங்காட்டூரி லெழுந்தருளிய ஐயன், எங்கள் பிரானை - எம்பிரானை, அறியாதார் அறிவு-அறியாதவரது அறிவு, என் - என்னபயன் தரும் எ-று.

(பொ-ரை) மெய்ம்மையன், திருநீறுபூசுகிற நன்மையன், வேதங்களுக்குத் தலைவன், திருக்கரத்தில் மான் மழுக்களைத் தரித்து யமனது ஆயுளை முடிவுசெய்தவன், படத்தையுடைய பாம்பை திருவரையிற்கட்டின வஞ்சகன், குளிர்ச்சியையுடைய திருவன்பார்த்தான் பனங்காட்டூரிலெழுந்தருளிய ஐயன், எம்பிரானை அறியாதவரது அறிவு என்னபயனைத்தரும்.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானை அறியாதவரது அறிவு என்னபயன் தரும் என்பதாம். (7)

**வஞ்சமற்றமனத்தாரைமறவாதபிறப்பிலியைப்**
**பஞ்சிற்சீறடியாளைப்பாகம்வைத்துகந்தானை**
**மஞ்சுற்றமணிமாடவன்பார்த்தான்பனங்காட்டூர்**
**நெஞ்சத்தெங்கள்பிரானைநினையாதார்நினைவென்னே.**

(**ப-ரை.**) வஞ்சம் அற்ற மனத்தாரை - வஞ்சமற்ற மனத்தினராகிய அடியாரை, மறவாத - மறக்காத, பிறப்பிலியை - பிறப்பில்லாதவனை, பஞ்சின் சீறடியாளை - பஞ்சுபோலும் சிற்றடியையுடையவளை, பாகம் வைத்து உகந்தானை - பாகத்தில்வைத்து மகிழ்ந்தவனை, மஞ்சு உற்ற-மேகங்கள் தவழ்கின்ற, மணிமாடம்-மணிமாடங்கள் நிறைந்த, வன்பார்த்தான் பனங்காட்டூர்-திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய, நெஞ்சத்து - அடியார்களது மனத்தில் வீற்றிருக்கிற, எங்கள்பிரானை - எம்பெருமானை, நினையாதார் நினைவு - நினையாதவரது நினைவு, என்-என்னபயன் தரும் எ-று.

(**போ-ரை.**) வஞ்சமற்ற மனத்தினராகிய அடியாரை மறக்காத பிறப்பில்லாதவனை, பஞ்சுபோலும் சிற்றடியையுடையவளை பாகத்தில்வைத்து மகிழ்ந்தவனை, மேகங்கள் தவழ்கின்ற மணிமாடங்கள் நிறைந்த திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளி அடியார்களது மனத்தில் வீற்றிருக்கிற எம்பெருமானை நினையாதவரது நினைவு என்னபயன்தரும்.

(**க-ரை.**) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானை நினையாதவரது நினைவு என்னபயன்தரும் என்பதாம்.

(**வி-ரை.**) பஞ்சின் சீறடியாள் - பஞ்சூட்டின சிற்றடியையுடையவள், (உமாதேவி.) மஞ்சு - மேகம். (8)

**மழையானுந்திகழ்கின்றமலரோனென்றிருவர்தா**
**முழையாநின்றவருள்கவுயர்வானத்துயர்வானைப்**
**பழையானைப்பனங்காட்டூர்பதியாகத்திகழ்கின்ற**
**குழைகாதற்கடிமைக்கட்குழையாதார்குழைவென்னே.**

(**ப-ரை.**) மழையானும் - மேகவண்ணனும், திகழ்கின்ற - விளங்குகிற, மலரோன் - பிரமனும், என்ற இருவர்தாம் - என்று சொல்லப்பட்ட இருவரும், உழையாநின்றவர் உள்க - வருந்தாநின்றவர் நினைக்க, உயர் வானத்து உயர்வானை-உயர்ந்த ஆகாயத்தில் உயர்வோனை, பழையானை-பழையோனை, பனங்காட்டூர் - திருவன் பார்த்தான் பனங்காட்டூரை, பதியாகத் திகழ்கின்ற-தனக்கிடமாகக்கொண்டு விளங்குகிற, குழைகாதற்கு-குண்டலமணிந்த செவியை யுடையவற்கு, அடிமைக் கண் குழையாதார்-தொண்டு செய்தற்கண் குழையாதார், குழைவு என்-குழைவு என்னபயன் தரும் எ-று.

(பொ-ரை.) மேகவண்ணனும் விளங்குகிற பிரமனும் என்று சொல்லப்பட்ட இருவரும் வருந்தாநின்றவராய் நினைக்க, உயர்ந்த ஆகாயத்தில் உயர்வோனை, பழையோனை, திருவன்பார்த்தான் பனங்காட்டூரை தனக்கிடமாகக்கொண்டு விளங்குகிற குண்டலமணிந்த செவியை யுடையவற்கு தொண்டு செய்தற்கண் குழையாதார் குழைவு என்னபயன் தரும்.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபெருமானுக்கு அடிமைசெய்தற்கண் மனமுருகாதாரது உருக்கம் என்னபயன்தரும் என்பதாம்.

(வி-ரை.) பழையான் - முன்னோன். பதி - உறைவிடம். குழைக்காதற்கு- குண்டலத்தையணிந்த செவியை யுடையவனாகிய சிவபிரானுக்கு. குழைதல் - உருகுதல். (9)

**பாரூரும்பனங்காட்டூர்ப்பவளத்தின்படியானைச்**
**சீரூருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த**
**வாரூரன்னடித்தொண்டனடியன்சொல்லடிநாய்சொல்**
**லூரூரனுரைசெய்வாருயர்வானத்துயர்வாரே.**

(ப-ரை.) பார் ஊரும் பனங்காட்டூர் - உலகெங்கும் பரவியிருக்கிற பனங்காட்டூரிலுள்ள, பவளத்தின் படியானை - பவளம்போலும் திருமேனியை யுடையவனை, சீரூரும் - சிறப்புப்பொருந்திய, திருவாரூர்ச் சிவன் பேர் - திருவாரூர்ச் சிவன்பேரை, சென்னியில் வைத்த - சிரசில் வைத்த, ஆரூரன் அடித்தொண்டன் அடியன் - சுந்தரன், சொல் - சொன்ன, அடிநாய் சொல் - அடிநாயேன் சொன்ன, ஊரூரின் உரைசெய்வார் - ஊர்கள்தோறும் சொல்லுவோர், உயர்வானத்து உயர்வார் - உயர்ந்த விண்ணுலகத்தில் உயர்வடைந்திருப்பர் எ-று.

(பொ-ரை) உலகெங்கும் பரவியிருக்கிற பனங்காட்டூரிலுள்ள பவளம் போலும் திருமேனியையுடையவனை, சிறப்புப்பொருந்திய திருவாரூர்ச் சிவன்பேரை சிரசில்வைத்த சுந்தரன் சொன்ன, அடிநாயேன் சொன்ன ஊர்கள்தோறும் சொல்லுவோர் உயர்ந்த விண்ணுலகத்தில் உயர்ந் திருப்பர்.

(க-ரை.) திருவன்பார்த்தான் பனங்காட்டூர்ச் சிவபிரானை ஆரூரன் புகழ்ந்து பாடின இப்பதிகத்தையோதினவர் உயர்ந்த விண்ணுலகிலுயர்ந் திருப்பர் என்பதாம்.

(வி-ரை.) பார் ஊரும்-பூலோகத்திலிருக்கிற, சென்னியில் வைத்த-சிரசாவகித்த. (10)

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர்-பனங்காட்டீசர். தேவியார்-அமுதவல்லியம்மை.

## திருப்பனையூர்

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

**மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழிற்**
**பாடல்வண்டறையும்பழனத்திருப்பனையூர்த்**
**தோடுபெய்தொருகாதினிற்குழைதூங்கத்தொண்டர்கடுள்ளிப்பா [டநின்**
**றாடுமாறுவல்லாரவரேயழகியரே.**

(ப-ரை.) மாடமாளிகை கோபுரத்தொடு - மாடமாளிகை கோபுரங்களோடு, மண்டபம் - மண்டபங்களும், வளரும் வளர் பொழில் - வளர்ந்து உயர்ந்த சோலைகளில், பாடல்வண்டு அறையும் பழனம் - பாடல் வண்டுகள் சத்திக்கிற வயல்கள் உள்ள, திருப்பனையூர் - திருப்பனையூரில், ஒரு காதினில் தோடுபெய்து - ஒப்பற்ற திருச்செவியில் தோடணிந்து, குழை தூங்க - குண்டலங்கள் தொங்க, தொண்டர்கள் துள்ளிப் பாட-அடியார்கள் துதித்துப்பாட, நின்று ஆடுமாறு - நின்று நடிக்குமாற்றில், வல்லார் அவரே - வல்லவராகிய அச் சிவபிரானுரே, அழகியர்-அழகர் எ-று.

(பொ-ரை.) மாடமாளிகை கோபுரங்களோடு மண்டபங்களும் வளர்ந்து உயர்ந்த சோலைகளில் பாடல் வண்டுகள் சத்திக்கிற வயல்களுள்ள திருப்பனையூரில் ஒப்பற்ற திருச்செவியில் தோடணிந்து குண்டலங்கள் தொங்க அடியார்கள் துதித்துப்பாட நின்று நடிக்குமாற்றில் வல்லவராகிய அச் சிவபிரானுரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூரில் வாழுஞ் சிவபெருமானுரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) அறையும் - பாடுகின்ற. தோடு - குண்டலம். (1)

**நாறுசெங்கழுநீர்மலர்நல்லமல்லிகைசண்பகத்தொடு**
**சேறுசெய்கழனிப்பழனத்திருப்பனையூர்**
**நீறுபூசிநெய்யாடிதன்னைநினைப்பவர்தம்மனத்தனுகிநின்**
**றாறுசூடவல்லாரவரேயழகியரே.**

(ப-ரை.) நாறு செங்கழுநீர் மலர் - பரிமளிக்கிற செங்கழுநீர் மலர், நல்ல மல்லிகை சண்பகத்தொடு-நல்ல மல்லிகைமலர் சண்பகமலரோடு, சேறுசெய் கழனி பழனம் - சேறுபட்டுக் கிடக்கிற வயல்களை யுடைய பழனஞ்சூழ்ந்த, திருப்பனையூர் - திருப்பனையூரிலுள்ள, நீறுபூசி - திருநீறு பூசி, நெய்யாடிதன்னை - நெய்யாடியை, நினைப்பவர்தம் மனத்தனுகி நின்று - நினைப்பவரது மனத்தின்கணிருப்பவனுகி நின்று, ஆறுசூட வல்லார் - கங்கையைத் தரிக்கவல்லவராகிய, அவரே-அச்சிவபிரானுரே, அழகியர் - அழகர் எ-று.

(போ-ரை.) பரிமளிக்கிற செங்கழுநீர் மலர் நல்ல மல்லிகைமலர் சண்பக மலரோடு சேறுபட்டுக் கிடக்கிற வயல்களையுடைய பழனத்திருப்பனையூரிலுள்ள திருநீறு பூசி நெய்யாடியை நினைப்பவர் தம்மனத்தின்கணிருப்பவனுகின்று கங்கையைத் தரிக்க வல்லவராகிய அச்சிவபிரானுரே அழகர்.

(க-ரை) திருப்பனையூர்ச் சிவபிரானுரே அழகியர் என்பதாம். (2)

**செங்கண்மேதிகள்சேடெறிந்துதடம்படிதலிற்சேலினத்தொடு**
**பைங்கண்வாளைகள்பாய்பழனத்திருப்பனையூர்த்**
**திங்கள்சூடியசெல்வனுரடியார்தம்மேல்வினைதீர்ப்பாய்விடி**
**லங்கிருந்துறைவாரவரேயழகியரே.**

(ப-ரை.) செங்கண் மேதிகள் - செங்கண்ணெருமைகள், சேடு எறிந்து தடம்படிதலின்-சேடெறிந்து தடாகங்களிற் படிதலால், சேல் இனத்தொடு - சேல்மீன் கூட்டத்தோடு, பைங்கண் வாளைகள் - பசிய கண்களையுடைய வாளைமீன்கள், பாய்பழனம் - பாய்ந்து விளையாடுகிற வயல்கள் சூழ்ந்த, திருப்பனையூர் - திருப்பனையூரிலுள்ள, திங்கள் சூடிய செல்வனுர் - சந்திரகண்டத்தைத்தரித்த செல்வர், அடியார் தம்மேல்-தொண்டர்மீது, வினை - வினைகள், தீர்ப்பு ஆய்விடின் - தீர்ந்து விட்டால், அங்கு இருந்து உறைவார் - அவரிடத்தேயிருந்து வாழ்பவராகிய, அவரே - அச் சிவபிரானுரே, அழகியர் - அழகர் எ- று.

(போ-ரை.) செங்கண்ணெருமைகள் சேடெறிந்து தடாகங்களிற் படிதலால் சேல்மீன் கூட்டத்தோடு பசியகண்களையுடைய வாளைமீன்கள் பாய்ந்து விளையாடுகிற வயல்கள்சூழ்ந்த திருப்பனையூரிலுள்ள சந்திரகண்டத்தைத்தரித்த செல்வர், தொண்டர்மீது வினைகள்தீர்ந்துவிட்டால் அவரிடத்தேயிருந்து வாழ்பவராகிய அச்சிவபிரானுரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானுரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) மேதிகள் - எருமைகள். சேடெறிதல் - பாம்படித்தல். பைங்கண் - பசுமையாகிய கண். திங்கள் - இளம்பிறை. (3)

**வாளைபாயமலங்கிளங்கயல்வரிவராலுகளுங்கழனிப்**
**பாளையொண்கமுகம்புடைசூழ்திருப்பனையூர்த்**
**தோளுமாகமுந்தோன்றநட்டமிட்டாடுவாரடித்தொண்டர்தங்களை**
**யாளுமாறுவல்லாரவரேயழகியரே.**

(ப-ரை) வாளை பாய - வாளைமீன்கள்பாய, மலங்கு - மலங்கு, இளங்கயல் - இளங்கெண்டைச்சேல், வரிவரால் - வரிகளையுடைய வரால்மீன்கள், உகளும் கழனி - குதிக்கிற வயல்சூழ்ந்த, பாளை ஒண்கமுகம் புடைசூழ் - பாளைகளையுடைய அழகிய கமுகமரங்கள் சூழ்ந்த, திருப்பனையூர் - திருப்பனையூரி

லுள்ள, தோளும் ஆகமும் தோன்ற - புயமும் மார்பும் வெளிப்படநின்று, நட்டமிட்டு ஆடுவார்-நடிப்பவர், அடித்தொண்டர் தங்களை-அடியார்களை, ஆளுமாறுவல்லார் -: ஆளும்நெறியில்வல்லவராகிய, அவரே - அச்சிவபிரானே, அழகியர் - அழகர் எ-று.

(பொ-ரை.) வாளைமீன்கள்பாய மலங்கு இளஞ்சேல் வரிகளையுடைய வரால்மீன்கள் குதிக்கிற வயல் சூழ்ந்த பாளைகளையுடைய அழகிய கமுகமரங்கள் சூழ்ந்த திருப்பனையூரிலுள்ள, புயமும் மார்பும் வெளிப்பட நின்று நடிப்பவர், அடியார்களை ஆளும்நெறியில் வல்லவராகிய அச்சிவபிரானே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) மலங்கு - நாறைமீன். புடை - பக்கம். ஆகம் - மார்பு. நட்டமிட்டு - நடனஞ்செய்து. ஆளுமாறு - ஆளும்வகையில். (4)

**கொங்கையார்பலருங்குடைந்தாடக்குவளைமலர்தரப்**
**பங்கயமலருமபழனத்திருப்பனையூர்**
**மங்கைபாகமுமாலோர்பாகமுந்தாமுடையவர்மான்மழுவினோ**
**டங்கைத்தீயுகப்பாரவரேயழகியரே.**

(ப-ரை.) கொங்கையார் பலரும் - மாதர்பலரும், குடைந்தாட - குளித்து விளையாட, குவளைமலர்தர - குவளைப்பூக்கள்விரிய, பங்கயம் மலரும்பழனம்-தாமரைகள் மலர்கிற வயல்கள்சூழ்ந்த, திருப்பனையூர்-திருப்பனையூரிலுள்ள, மங்கைபாகமும் - பெண்பாகமும், மால் ஓர்பாகமும் - திருமால் ஓர்பாகமும்,தாம் உடையவர்-தாம் உடையவராயிருப்பவர், மான்மழுவினோடு - மான்மழுக்களுடன், அங்கைதீ உகப்பார் - அகங்கையிலுள்ள நெருப்பினை மகிழ்பவர், அவரே - அச்சிவபிரானே, அழகியர் - அழகர் எ-று.

(பொ-ரை.) மாதர்பலரும் குளித்தாட, குவளைப்பூக்கள் விரிய, தாமரைகள் மலர்கிற வயல்கள்சூழ்ந்த திருப்பனையூரிலுள்ள பெண்பாகமும் திருமால் ஓர்பாகமும் உடையவராயிருப்பவர், மான் மழுக்களுடன் அகங்கையிலுள்ள நெருப்பினை மகிழ்பவர் அச்சிவபிரானே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) குடைந்தாட - முழுகிவிளையாட. மலர்தர-மலர. பங்கயம் - தாமரை. மங்கை - உமாதேவி. உகப்பார் - மகிழ்பவர். (5)

**காவிரிபுடைசூழ்சோணாட்டவர்தாம்பரவிய**
**பாவிரிபுலவர்பயிலுந்திருப்பனையூர்**
**மாவிரிமடநோக்கியஞ்சமதகரியுரிபோர்த்துகந்த**
**வாவிலைத்துகப்பாரவரேயழகியரே.**

(ப-ரை.) காவிரிபுடைசூழ்-காவிரிநதி புடைசூழ்ந்த, சோணாட்டவர் தாம் பரவிய - சோழநாட்டார் துதித்த, பாவிரி புலவர்பயிலும் - பாக்களை விரிக்கிற புலவர் வசிக்கிற, திருப்பனையூர் - திருப்பனையூரிலுள்ள, மாவிரி மடநோக்கி அஞ்ச - மான்கண்டஞ்சியோடுகிற மென்னோக்கத்தை யுடையவளாகிய உமாதேவி அஞ்ச, மதகரி உரிபோர்த்து - மதயானையின் தோலைப்போர்த்து, உகந்த-மகிழ்ந்த, 'ஆவில் ஐந்து உகப்பார் - பசுவின் ஐந்து திரவியங்களை விரும்புவோராகிய,அவரே - அச்சிவபிரானாரே, அழகியர் - அழகர் எ-று.

(போ-ரை.) காவிரிநதி புடைசூழ்ந்த சோழநாட்டார் துதித்த பாக்களை விரிக்கிற புலவர் வசிக்கிற திருப்பனையூரிலுள்ள மான்கண்டஞ்சியோடுகிற மென்னோக்கத்தை யுடையவளாகிய உமாதேவியஞ்ச, மதயானையின் தோலைப்போர்த்து மகிழ்ந்து பசுவின் ஐந்து திரவியங்களை விரும்புவோராகிய அச்சிவபிரானாரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானாரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) பரவிய-துதித்த. பாவிரி-பாடல்களை விரிக்கிற. பயிலும்-நெருங்குகிற. ஆவில் ஐந்து - பஞ்சகவ்வியம். உகப்பார் - விரும்புவார்.

**மரங்கள்மேன்மயிலாலமண்டபமாடமாளிகைகோபுரத்தின்மேற்**
**றிரங்கல்வன் முசுவன்புகப்பாய் திருப்பனையூர்த்**
**துரங்கன்வாய்பிளந்தானுந்தூமலர்த் தோன்றலுமறியாமற்றோன்**
**றரங்கிலாடவல்லாரவரேயழகியரே. [றிநின்**

(ப-ரை.) மரங்கள்மேல் மயில் - மரங்களின்மீது மயில்கள், ஆல - ஆட, மண்டபம் மாடமாளிகை கோபுரத்தின்மேல் - மண்டபம் மாடமாளிகை கோபுரங்களின்மேல், திரங்கல் - தோல்திரைந்த, வல்முசுவன் - வலியகுரங்குகள், புகப்பாய் - புகுந்துபாய்கிற, திருப்பனையூர் - திருப்பனையூரிலுள்ள, துரங்கன்வாய் பிளந்தானும் - கிருஷ்ணனும், தூமலர்த்தோன்றலும் - பிரமனும், அறியாமல் - அறியாதபடி, தோன்றிநின்று - தோன்றிநின்று, அரங்கில் ஆடவல்லார் - அம்பலத்தில் நடிக்கவல்லவராகிய, அவரே - அச்சிவபிரானாரே, அழகியர் - அழகர் எ-று.

(போ-ரை.) மரங்களின்மீது மயில்கள் ஆட மண்டபம் மாடமாளிகை கோபுரங்களின்மேல் தோல்திரைந்த வலிய குரங்குகள் புகுந்துபாய்கிற திருப்பனையூரில் கிருஷ்ணனும் பிரமனும் அறியாதபடி தோன்றிநின்று அம்பலத்தில் நடிக்கவல்லவராகிய அச்சிவபிரானாரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானாரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) ஆலல் - ஆடல். திரங்கல் - திரைதல். முசு-குரங்கு. துரங்கன் - குதிரையுருக்கொண்ட ஓரசுரன், துரங்கன்வாய் பிளந்தான் - கிருஷ்டினன். அரங்கில் - சபையில். (7)

**மண்ணெலாமுழவம்மதிர்தரமாடமாளிகைகோபுரத்தின்மேற்**
**பண்ணியாழ்முரலும்பழனத்திருப்பனையூர்**
**வெண்ணிலாச்சடைமேவியவிண்ணவரொடுமண்ணவர்தொழ**
**வண்ணலாகிநின்றாரவரேயழகியரே.**

(ப-ரை.) மண் எல்லாம் முழவம் அதிர்தர - பூமிமுற்றும் மத்தளம் அதிர, மாடமாளிகை கோபுரத்தின்மேல் - மாடமாளிகை கோபுரத்தின் மேல், பண்ணியாழ் முரலும்-பண்களோடுகூடி வீணை சத்திக்கிற, பழனத் திருப்பனையூர் - வயல்சூழ்ந்த திருப்பனையூரிலுள்ள, வெண்ணிலா சடை மேவிய - வெண்பிறையைச் சடையிலுடைய, விண்ணவரொடு மண்ணவர் தொழ - தேவர்களோடு மனிதரும் வணங்க, அண்ணல் ஆகி நின்றார் - பெரியாராகி நின்றவராகிய, அவரே-அச்சிவபிரானாரே, அழகியர்-அழகர் எ-று.

(பொ-ரை.) பூமிமுற்றும் மத்தளமதிர, மாடமாளிகை கோபுரத்தின் மேல் பண்களோடுகூடி வீணைசத்திக்கிற வயல்சூழ்ந்த திருப்பனையூரி லுள்ள வெண்பிறையைச் சடையிலுடைய தேவர்களோடு மனிதரும் வணங்க பெரியாராகி நின்றவராகிய அச்சிவபிரானாரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானாரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) முழவம் - மத்தளம். அதிர்தர -முழங்க. முரலும் - சத்திக் கிற. வெண்ணிலா - வெண்பிறை. அண்ணல் - பெரியோன். (8)

**குரக்கினங்குதிகொள்ளத்தேனுகக்குண்டு தண்வயற்கெண்டைபா**
**பரக்குந்தண்கழனிப்பழனத்திருப்பனையூ [ய்தரப்**
**ரிரக்கமில்லவரைந்தொடைந்தலைதோளிருபதுதாணெரிதர**
**வரக்கனையடர்த்தாரவரேயழகியரே.**

(ப-ரை.) குரக்கு இனம் குதிகொள்ள - குரங்குக்கூட்டங்கள் குதிக் கிற, தேன் உக - தேன் சிந்த, குண்டு தண்வயல் - குளங்களிலும் குளிர் ந்த வயல்களிலும், கெண்டைபாய்தர - கெண்டைமீன்கள்பாய, பரக்கும் தண்கழனிபழனம் - பரந்த தண்ணிய வயலும்பழனமும் சூழ்ந்த, திருப் பனையூர் - திருப்பனையூரிலுள்ள, இரக்கம் இல்லவர் - இரக்கமற்றவர், ஐந் தொடு ஐந்தலை - பத்துத்தலை, தோள் இருபது தாள் நெரிதர - இருபது புயமும் இருபது காலும் நெரிய, அரக்கனை - அரக்கனாகிய இராவணனை, அடர்த்தார் - வென்றவராகிய, அவரே - அச்சிவபிரானாரே, அழகியர்- அழகர் எ-று.

(பொ-ரை.) குரங்குக்கூட்டங்கள் குதிக்கிற, தேன்சிந்த, குளங்களி லும் குளிர்ந்த, வயல்களிலும் கெண்டைமீன்கள்பாய, பரந்த தண்ணிய வயலும் பழனமும் சூழ்ந்த திருப்பனையூரிலுள்ள இரக்கமற்றவர், பத்துத் தலை இருபதுபுயமும் இருபது காலும் நெரிய அரக்கனாகிய இராவணனை வென்றவராகிய அச்சிவபிரானாரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானுரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) குரக்கு - குரங்கு என்பதன் வலித்தல் விகாரம். குதிகொள்ள - குதிக்க. உக - சிந்த. குண்டு - பள்ளம். பாய்தர - பாய. பரக்கும் - பரந்த. இல்லவர் - இல்லாதவராகி. (9)

**வஞ்சிநுண்ணிடைமங்கைபங்கினர்மாதவர்வளரும்வளர்பொழிற்**
**பஞ்சின்மெல்லடியார்பயிலுந்திருப்பனையூர்**
**வஞ்சியும்வளர்நாவலூரன்வனப்பகையவளப்பன்வன்றொண்டன்**
**செஞ்சொற்கேட்டுகப்பாரவரேயழகியரே.**

(ப-ரை.) வஞ்சி நுண் இடை மங்கைபங்கினர் - உமாதேவி பாகத்தர், மாதவர்வளரும் - பெருந்தவத்தினர் வாழ்கிற, வளர்பொழில் - உயர்ந்த சோலைகள் சூழ்ந்த, பஞ்சின் மெல் அடியார்பயிலும் - மாதர் நெருங்குகிற, திருப்பனையூர் - திருப்பனையூரிலுள்ள, வஞ்சியும்வளர் நாவலூரன் வனப்பகையவள் அப்பன் வன்றொண்டன்-சுந்தரன், செஞ்சொல்கேட்டு - செஞ்சொற் பாடல்களைக்கேட்டு, உகப்பார் - மகிழ்பவர், அவரே-அச்சிவபிரானுரே, அழகியர் - அழகர் எ-று.

(பொ-ரை.) உமாதேவி பாகத்தர், பெருந்தவத்தினர் வாழ்கிற உயர்ந்த சோலைகள்சூழ்ந்த மாதர்நெருங்குகிற திருப்பனையூரில் சுந்தரன் செஞ்சொற்பாடல்களைக்கேட்டு மகிழ்பவர் அச்சிவபிரானுரே அழகர்.

(க-ரை.) திருப்பனையூர்ச் சிவபிரானைத் திருநாவலூரன் புகழ்ந்து பாடின இப் பத்துப் பாடலுங்கேட்டு மகிழ்பவரே அழகியர் என்பதாம்.

(வி-ரை.) வஞ்சி - வஞ்சிக்கொடி, கொடியெனினு மமையும். வஞ்சி நுண்ணிடை மங்கையென்றது உமாதேவியை. பஞ்சின்மெல் அடியார் - மாதர். (10)

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் சோழநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர் - சவுந்தரேசர். தேவியார் - பெரியநாயகி.

---

## திருவீழிமிழலை

பண்-சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

**நம்பினார்க்கருள்செய்யுமந்தணர்நான்மறைக்கிடமாயவேள்வியுட்**
**செம்பொனேர்மடவாரணிபெற்றதிருமிழலை**
**யும்பரார்தொழுதேத்தமாமலையாளொடும்முடனேயுறைவிட**
**மம்பொன்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.**

(ப-ரை.) நம்பினோர்க்கு அருள் செய்யும் - நம்பினவர்க்கு அருள் செய்கிற, அந்தணர் - வேதியர், நான்மறைக்கு இடம் ஆய வேள்வியுள் - நான்கு வேதங்களுக்கிடமாகிய யாகத்தில், செம்பொன் நேர் - செம்பொன்னை நிகர்த்த, மடவார் அணி பெற்ற - மாதரால் அழகுபெற்ற, திருமிழலை - திருவீழிமிழலையில், உம்பரார் தொழுது ஏத்த - தேவர்கள் வணங்கித் துதிக்க, மாமலையாளொடும் உடனே - மலையரையன் மகளாகிய உமாதேவியுடனே, உறைவிடம் - வாழுமிடமாக, அம்பொன் வீழிகொண்டீர் - அழகின்மிக்க திருவீழிமிழலையைக் கொண்டீர், அடியேற்கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர் எ-று.

(பொ-ரை.) நம்பினவர்க்கு அருள்செய்கிற வேதியர் நான்குவேதங்களுக் கிடமாகிய செம்பொன்னை நிகர்த்த மாதரால் அழகுபெற்ற திருவீழிமிழலையில் தேவர்கள் வணங்கித் துதிக்க மலையரையன் மகளாகிய வுமாதேவியுடனே வாழுமிடமாக அழகின்மிக்க திருவீழிமிழலையைக் கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) அணி - அழகு. மாமலையாள் - உமாதேவி. (1)

**விடங்கொண்மாமிடற்றீர்வெள்ளைச்சுருளொன்றிட்டுவிட்டகாதி**
**திடங்கொள்சிந்தையினார்கலிகாக்குந்திருமிழலை [னீரென்று**
**மடங்கல்பூண்டவிமானமுமண்மிசைவந்திழிச்சியவானநாட்டையு**
**மடங்கல்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.**

(ப-ரை.) விடம்கொள் - விஷத்தைக்கொண்ட, மாமிடற்றீர் - நீலகண்டத்தை யுடையவர், வெள்ளைச்சுருள் ஒன்று - ஒரு வெண்டோட்டினை, இட்டு விட்ட - அணிந்திருக்கிற, காதினீர் என்று - திருச்செவியையுடையவரே என்று, திடங்கொள் சிந்தையினார் - உறுதிகொண்ட மனமுடையாரது, கலிகாக்கும் - வறுமையைத் தீர்க்கிற, திருமிழலை - திருவீழிமிழலையில், மடங்கல் பூண்ட விமானமும் - சிங்கம்பூண்ட விமானமும், மண்மிசை வந்து இழிச்சிய வானநாட்டையும் - பூமிமேல் வந்திறங்கிய விண்ணுலகையும், அடங்க - முழுதும், வீழிகொண்டீர் - திருவீழிமிழலையாகக் கொண்டீர், அடியேற்கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர் எ-று.

(பொ-ரை.) விஷத்தைக் கொண்ட நீலகண்டத்தையுடையவர், ஒரு வெண்டோட்டினை அணிந்திருக்கிற திருச்செவியையுடையவரே என்று உறுதிகொண்ட மனமுடையாரது வறுமையைத் தீர்க்கிற திருவீழிமிழலையில், சிங்கம்பூண்ட விமானமும் பூமிமேல் வந்திறங்கிய விண்ணுலகையும் முழுதும் திருவீழிமிழலையாகக் கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர்,

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) மாமிடற்றீர் - கருங்கண்டத்தை யுடையவரே, வெள்ளைச் சுருள் - வெண்டோடு. கலி - வறுமை. மடங்கல்-சிங்கம். இழிச்சிய-இறங்கிய. (2)

**ஊனையுற்றுயிராயினீரொளிமூன்றுமாய்த்தெளிநீரோடானைஞ்சின்**
**றேனையாட்டுகந்தீர்செழுமாடத்திருமிழலை**
**மானைமேவியகையினீர்மழுவேந்தினீர்மங்கைபாகத்தீர் விண்ணி**
**லானவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.**

(ப-ரை.) ஊனை உற்று உயிர் ஆயினீர்-உடலிலுள்ள வுயிரானீர், ஒளி மூன்றும் ஆய் - முச்சுடர்களுமாகி, தெளிநீரொடு - தெளிந்தநீருடனே, ஆன் ஐஞ்சின்-பஞ்சகவ்வியத்தோடும், தேனை ஆட்டு உகந்தீர் - தேனபிஷேகத்தை விரும்பினீர், செழுமாடத் திருமிழலை-செழுமையாகிய திருவீழிமிழலையில், மானைமேவிய கையினீர் - மானைத்தாங்கிய கையையுடையவரே, மழு ஏந்தினீர் - மழுவைத் தாங்கினீர், மங்கை பாகத்தீர் - பெண் பாகத்தை யுடையவரே, விண்ணில் ஆன வீழிகொண்டீர் - விண்ணுலகம் போலத் திருவீழிமிழலையைக் கொண்டீர், அடியேற்கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள் செய்யக்கடவீர் எ-று.

(பொ-ரை.) உடலிலுள்ள வுயிரானீர், முச்சுடர்களுமாகி பஞ்சகவ்வியத்தோடும் தேனபிஷேகத்தை விரும்பினீர், செழுமையாகிய திருவீழிமிழலையில் மானைத்தாங்கிய கையையுடையவரே, மழுவைத்தாங்கினீர், பெண் பாகத்தை யுடையவரே, விண்ணுலகம் போலத் திருவீழிமிழலையைக் கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) ஊன் - தசை. அது இங்கு உடம்புக்காயினமையால் ஆகுபெயர். உற்ற உயிர் என்பது உற்றுயிர் என நிலைமொழியீற்றகரம்தொகுத்தல் பெற்றது. ஒளிமூன்று என்றது சோமசூரியாக்கினிகளை. ஆட்டு - ஆடுதல். (அபிஷேகம்.) ஐஞ்சின் - ஐந்தினோடு. (3)

**பந்தம்வீடவைபண்ணினீர்படிற்றீர்மதிப்பிதிர்க்கண்ணியீரென்று**
**சிந்தைசெய்திருக்குஞ்செங்கையாளர்திருமிழலை**
**வந்துநாடகம்வானநாடியராடமாலயனேத்தநாடொறு**
**மந்தண்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.**

(ப-ரை.) பந்தம் வீடு இவை பண்ணினீர் - பந்தமோக்ஷங்களாகிய இவைகளை யுண்டாக்கினீர், படிறீர்-வஞ்சமுடையீர், மதிப்பிதிர்க்கண்ணியீர் என்று - பிறையாகிய மாலையைத் தரித்தீர் என்று, சிந்தை செய்திருக்கும் செய்கையாளர் - சிந்தித்துக் கொண்டிருக்கிற செய்கையை யுடையோர் வாழ்கின்ற, திருமிழலைவந்து - திருவீழிமிழலையில் வந்து, வானநாடியர் நாடகம் ஆட - விண்ணாட்டுப் பெண்கள் நாடகமாட, மால் அயன் ஏத்த - திருமாலும் பிரமனும் துதிக்க, நாள்தொறும் - தினந்தோறும், அம்தண் வீழிகொண்டீர் - அழகும் குளிர்ச்சியுமுள்ள திருவீழிமிழலையை இடமாகக் கொண்டீர், அடியேற்கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள் செய்யக்கடவீர் எ-று.

(போ-ரை.) பந்தமோக்ஷங்களாகிய இவைகளை யுண்டாக்கினீர், வஞ்சமுடையீர், பிறையாகிய மாலையைத் தரித்தீர் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிற செய்கையை யுடையோர் வாழ்கின்ற திருவீழிமிழலையில் வந்து விண்ணாட்டுப் பெண்கள் நாடகமாட திருமாலும் பிரமனும் துதிக்க, தினந்தோறும் அழகும் குளிர்ச்சியுமுள்ள திருவீழிமிழலையை இடமாகக்கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக்கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானாரே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) பந்தம் - கட்டு. வீடு - விடுகை. (முத்தி) (4)

**புரிசைமூன்றையும்பொன்றக்குன்றவிலேந்திவேதப்புரவித்தேர்மி[சைத்**
**திரிசெய்நான்மறையோர்சிறந்தேத்துந்திருமிழலைப்**
**பரிசினாலடிபோற்றுபத்தர்கள்பாடியாடப்பரிந்துநல்கினீ**
**ரரியவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.**

(ப-ரை.) புரிசை மூன்றையும் பொன்ற - மும்மதில்களையும் வென்ற, குன்றவில் ஏந்தி-மலையாகிய வில்லைத்தாங்கி, வேதப்புரவி தேர்மிசை-வேதங்களாகிய குதிரைகள் பூண்ட தேரின்மேல், திரிசெய் - திரிகிற, நான்மறையோர்-அந்தணர், சிறந்து ஏத்தும் - மிகுதியாகத்துதிக்கிற, திருமிழலை-திருவீழிமிழலையில், பரிசினால்-முறைப்படி, அடிபோற்றும்-திருவடியை வணங்குகிற, பத்தர்கள் பாடியாட - அன்பர்கள் பாடியாட, பரிந்து நல்கினீர் - இரங்கி யருள்செய்தீர், அரிய வீழிகொண்டீர் - அரிதாகிய திருவீழிமிழலையை யிடமாகக் கொண்டீர், அடியேற்கும் அருளுதீர் - அடியேனுக்கும் அருள் செய்யக்கடவீர் எ-று.

(போ-ரை.) மும்மதில்களையும் வென்ற மலையாகிய வில்லைத்தாங்கி வேதங்களாகிய குதிரைகள் பூண்ட தேரின்மேல் திரிகிற அந்தணர் மிகுதியாகத் துதிக்கிற திருவீழிமிழலையில் முறைப்படி திருவடியை வணங்குகிற அன்பர்கள் பாடியாட இரங்கி யருள்செய்தீர், அரிதாகிய திருவீழிமிழலையை யிடமாகக் கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக்கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானாரே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) பொன்ற - அழிய. வேதப்புரவி - வேதமாகிய குதிரை. தேர்-(பூமியாகிய) தேர். மிசை-மேலே. திரிசெய் - திரிதலைச் செய்த. பரிசு - முறை. புரிந்து நல்கினீர் - இரங்கியருளினீர். (5)

**எறிந்ததண்டி யிடந்தகண்ணப் பனேத்துபத்தர்கட் கேற்றநல்கினீர்**
**செறிந்தபூம்பொழிற் றேன்றுளிவீசுந் திருமிழலை**
**நிறைந்தவந்தணர் நித்தநாடொறு நேசத்தாலுமைப் பூசிக்குமிட**
**மறிந்துவீழிகொண் டீரடியேற்கு மருளுதிரே.**

(ப-ரை.) எறிந்த - தந்தையின் காலை வெட்டின, தண்டி - தண்டியடிகள், இடந்த - தன் கண்ணைத் தோண்டின, கண்ணப்பன் - கண்ணப்ப நாயனார், எத்து பத்தர்கட்கு - துதித்த பத்தர்கள் ஆகிய இவர்கட்கெல்லாம், எற்றம் நல்கினீர் - உயர்வாகிய முத்திப்பதத்தைக் கொடுத்தீர், செறிந்த பூம்பொழில் - நெருங்கின பூஞ்சோலைகள் சூழ்ந்த, தேன் துளி வீசும்-தேன் துளிசிந்துகிற, திருமிழலை-திருவீழிமிழலையில், நிறைந்த அந்தணர் - நிறைந்த வேதியர், நித்தம்-நாள்தோறும், நேசத்தால்-அன்பினால், உம்மைப் பூசிக்கும் இடம் அறிந்து - உம்மைப் பூசிக்குமிடத்தையறிந்து, வீழிகொண்டீர் - திருவீழிமிழலையை யிடமாகக்கொண்டீர், அடியேற்கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர் எ-று.

(பொ-ரை.) தந்தையின் காலை வெட்டின தண்டியடிகள் தன் கண்ணைத் தோண்டின கண்ணப்ப நாயனார் துதித்த பத்தர்கள் ஆகிய இவர்கட்கெல்லாம் உயர்வாகிய முத்திப்பதத்தைக் கொடுத்தீர், நெருங்கின பூஞ்சோலைகள் சூழ்ந்த தேன்துளி சிந்துகிற திருவீழிமிழலையில் நிறைந்த வேதியர் நாள்தோறும் அன்பினால் உம்மைப் பூசிக்குமிடத்தை யறிந்து திருவீழிமிழலையை யிடமாகக் கொண்டீர் அடியேனுக்கும், அருள்செய்யக் கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானாரே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர்.

(வி-ரை.) செறிந்த - நெருங்கின. நேசம்-அன்பு. (6)

**பணிந்தபார்த்தன் பகீரதன்பல பத்தர்சித்தர்க்குப் பண்டுநல்கினீர்**
**திணிந்தமாடந் தொறுஞ்செல்வமல்கு திருமிழலைத்**
**துணிந்தவந்தணர் சந்திநாடொறு மந்திவானிடு பூச்சிறப்பவை**
**யணிந்துவீழிகொண் டீரடியேற்கு மருளுதிரே.**

(ப-ரை.) பணிந்த பார்த்தன் - வணங்கிய அர்ஜுனன், பகீரதன் - பகீரதன் முதலிய, பல பக்தர் சித்தர்க்கு-பலபக்தர்களுக்கும் சித்தர்களுக்

கும், பண்டு நல்கினீர் - முற்காலத்தில் கிருபை செய்தீர், திணிந்த மாடம் தொறும் - நெருங்கின மாடந்தோறும், செல்வம் மல்கு - செல்வமிகுந் திருக்கிற, திருமிழலை-திருவீழிமிழலையில், தணிந்த அந்தணர்சந்தி - சாந்தி யையடைந்த வேதியர் சந்த்யா காலத்தில், நாள் தொறும் - தினந்தோ றும், அந்திவான் - அந்திவானம், இடு - செய்கிற, பூச்சிறப்பு - புஷ்பாலங் காரம் ஆகிய, அவை அணிந்து - அவற்றையேற்று, வீழிகொண்டீர்-திரு வீழிமிழலையைக் கொண்டீர், அடியேற்கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர் எ-று.

(பொ-ரை.) வணங்கிய அருச்சுனன் பகீரதன் முதலிய பல பக்தர்க ளுக்கும் முற்காலத்தில் கிருபைசெய்தீர், நெருங்கின மாடந்தோறும் செல் வமிகுந்திருக்கிற திருவீழிமிழலையில் சாந்தியை யடைந்திருக்கிற வேதியர் சந்த்யாகாலத்தில் தினந்தோறும் அந்திவானம் செய்கிற புஷ்பாலங்கார மாகிய அவற்றையேற்று திருவீழிமிழலையைக் கொண்டீர், அடியேனுக் கும்அருள்செய்யக் கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானே, அடியேற்கும் அருள்செய் யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) திணிந்த - நெருங்கின. மல்குதல் - நிறைதல். தணிந்த - சாந்தியடைந்த. சந்தி - சந்த்யாகாலம். (7)

**பரந்தபாரிடமூரிடைப்பலிபற்றிப்பாகத்துணுஞ்சுற்றமாயினீர்
தெரிந்தநான்மறையோர்க்கிடமாயதிருமிழலை
யிருந்துநீர்தமிழோடிசைகேட்குமிச்சையாற்காசுநித்தநல்கினீ
ரருந்தண்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.**

(ப-ரை.) பரந்த பாரிடம் ஊரிடை-விசாலமாகிய பூமியிலுள்ள ஊர் களில், பலிபற்றி - பிக்ஷையேற்று, பாத்து உண்ணும்-பகிர்ந்துண்ணுகிற, சுற்றம் ஆயினீர் - உறவினரானீர், தெரிந்தநான்மறையோர்க்கு-தெரிந்த சதுர்வேத பரர்களுக்கு, இடம்ஆய - உறைவிடமாகிய, திருமிழலை இரு ந்து-திருவீழிமிழலையி லிருந்து, நீர் தமிழோடு இசைகேட்கும் - நீர் தமி ழோடு இசைகேட்கும், இச்சையால் - விருப்பத்தால், காசு நித்தம் நல்கி னீர் - காசு நாள்தோறும் கொடுத்தீர், அருந்தண் வீழிகொண்டீர் - அரு மையாகிய குளிர்ந்த திருவீழிமிழலையை இடமாகக்கொண்டீர், அடியேற் கும் அருளுதிர் - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர் எ-று.

(பொ-ரை.) விசாலமாகிய பூமியிலுள்ள ஊர்களில் பிக்ஷையேற்று பகிர்ந்துண்ணுகிற உறவினரானீர், தெரிந்த சதுர்வேதபரர்களுக்கு உறை விடமாகிய திருவீழிமிழலையிலிருந்து தமிழோடு இசைகேட்கும் விருப்பத் தால் காசு நாள்தோறும் கொடுத்தீர், அருமையாகிய குளிர்ந்த திருவீழிமி ழலையை இடமாகக் கொண்டீர் அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானாரே, அடியேற்கும் அருள்செய்யக்கடவீர் என்பதாம். (8)

**தூயநீரமுதாயவாறதுசொல்லுகென்றுமைக்கேட்கச்சொல்லினீர்**
**தீயராக்குலையாளர்செழுமாடத்திருமிழலை**
**மேயநீர்பலியேற்றதென்னென்றுவிண்ணப்பஞ்செய்பவர்க்குமெய்ப்**
**ளாயவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. [பொரு**

(ப-ரை.) தூயநீர் அமுது ஆயவாறு - தூய்மையாகிய நீர் அமுதானது போல, அது சொல்லுக என்று - அதனைச் சொல்லுக வென்று, உம்மை கேட்கச்சொல்லினீர்-உம்மை கேட்கச்சொன்னீர், தீயர் அக்குலையாளர் - தீயர் அக்குலையாளர், செழுமாடத் திருமிழலை-செழுமையாகிய திருமிழலையில், மேயநீர்-எழுந்தருளினநீர், பலியேற்றது-பிக்ஷையேற்றது, என்என்று-என்னவென்று, விண்ணப்பம் செய்பவர்க்கு - விண்ணப்பம் செய்வோர்க்கு, மெய்ப்பொருள் ஆய-உண்மைப்பொருளாகி, வீழிகொண்டீர் - திருவீழிமிழலையைக் கொண்டீர், அடியேற்கும் - அருளுதிர் - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர் எ - று.

(பொ-ரை.) தூய்மையாகிய நீர் அமுதானது போல அதனைச்சொல்லுகவென்று உம்மை கேட்கச் சொன்னீர், தீயர் அக்குலையாளர் செழுமையாகிய திருமிழலையில் எழுந்தருளினீர், பிக்ஷையேற்றது என்னவென்று விண்ணப்பம்செய்வோர்க்கு உண்மைப்பொருளாகி திருவீழிமிழலையைக்கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக் கடவீர்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானாரே, அடியேற்கும் அருள்செய்யக் கடவீர் என்பதாம்.

(வி-ரை.) தூய - பரிசுத்தமான. ஆய ஆறு - ஆனவிதம். (9)

**வேதவேதியர்வேதநீதியரோதுவார்விரிநீர்மிழலையு**
**ளாதிவீழிகொண்டீரடியேற்குமருளுகென்று**
**நாதகீதம்வண்டோதுவார்பொழினாவலூரன்வன்றொண்டனற்றமி**
**பாதமோதவல்லார்பரனோடுங்கூடுவரே. [ழ்**

(ப-ரை.) வேதவேதியர் - வேதவேதியர், வேதநீதியர் - வேதநீதியர், ஓதுவார்-துதிப்போர், விரிநீர் மிழலையுள் ஆதி-கடல் சூழ்ந்த திருவீழிமிழலையுள் இருக்கிற முதல்வன், வீழி கொண்டீர் - திருவீழிமிழலையை இடமாகக்கொண்டீர், அடியேற்கும் அருளுக என்று - அடியேனுக்கும் அருள்செய்யக் கடவை யென்று, நாதகீதம் வண்டு ஓதும் - வண்டுகள் நாதகீதத்தைப் பாடுகிற, வார்பொழில்-பெரிய சோலைகள் சூழ்ந்த, (நாவலூரன் வன்றொண்டன்) - சுந்தரன் சொன்ன, நல் தமிழ் - நல்ல தமிழ்ப்பாடல்களை, பாதம் ஓதவல்லார் - ஓரடியைப் படிக்க வல்லவர், பரனோடும் கூடுவர் - பரனோடும் சேர்வார் எ-று.

(போ-ரை.) வேதவேதியர் வேதநீதியர் துதிப்போர் கடல் சூழ்ந்த திருவீழிமிழலையுள்ளிருக்கிற முதல்வன், திருவீழிமிழலையை இடமாகக் கொண்டீர், அடியேனுக்கும் அருள்செய்யக்கடவீரென்று வண்டுகள் நாத கீதத்தைப் பாடுகிற பெரிய சோலைகள்சூழ்ந்த சுந்தரன் சொன்ன தமிழ்ப் பாடல்களின் ஓரடியைப் படிக்க வல்லார் பரனோடும் சேர்வார்.

(க-ரை.) திருவீழிமிழலைச் சிவபிரானைத் திருநாவலூரன் புகழ்ந்துரைத்த இப்பத்துப் பாடலுள்ளே ஓரடியை யோதவல்லார் பரமனோடும் சேர்வர் என்பதாம்.

(வி-ரை.) வார்பொழில்-பெருஞ்சோலை. பாதம் - செய்யுளின் ஓரடி. பரமன் - மேலானவன். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீழியடிகேசுரர். தேவியார் - சுந்தரகுசாம்பிகை.

---

## திருவெண்பாக்கம்

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

**பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்காற்**
**பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்**
**குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன**
**வுழையுடையானுள்ளிருந்தேயுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) பிழை உள்ளன பொறுத்திடுவர் என்று - குற்றங்களாயுள்ளவற்றைப் பொறுத்திடுவர் என்று, அடியேன் பிழைத்தக்கால் - அடியேன் பிழைசெய்தால், பழியதனைப் பாராதே - பழியை நோக்காதே, படலம் - நேத்திரரோகத்தால், என் கண் மறைப்பித்தாய் - என் கண்ணை மறைக்கச் செய்தாய், குழைவிரவு வடிகாதா - குண்டலம் பொருந்திய அழகிய திருச்செவியை யுடையவனே, கோயில் உள்ளாயே என்ன - கோயிலினுள்ளே யிருக்கிறாயா என்று கேட்க, உழை உடையான் - மானையுடையவன், உள் இருந்தே-உள்ளேயிருந்துகொண்டே, உளோம்-இருக்கிறோம், போகீர் என்றான்-போகக்கடவீர் என்றான் எ-று.

(போ-ரை.) குற்றங்களாயுள்ளவற்றைப் பொறுத்திடுவர் என்று அடியேன் பிழை செய்தால், பழியை நோக்காதே நேத்திர ரோகத்தால் என் கண்ணை மறைக்கச் செய்தாய், குண்டலம்பொருந்திய அழகிய திருச்செவியை யுடையவனே, கோயிலினுள்ளே யிருக்கிறாயா வென்று கேட்க, மானையுடையவன் உள்ளேயிருந்துகொண்டே இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(க-ரை.) திருவெண்பாக்கத்துச் சிவபெருமானே, கோயிலுள் இருக்கின்றீரோ வென்று யாம் கேட்க, இருக்கின்றோம், நீர் போமென்றருளிச் செய்தான் என்பதாம்.

(வி-ரை) வடிகாதா - அழகிய காதுடையானே. போகீர் - போகக்கடவீராக. (1)

**இடையறியேன்றலையறியேனெம்பெருமான்சரணமென்பே**
**னடையுடையனம்மடியானென்றவற்றைப்பாராதே**
**விடையுடையான்விடநாகன்வெண்ணீற்றன்புலியின்றோ**
**லுடையுடையானென்னையுடையானுளோம்போகீரென்றானே.**

(ப-ரை ) இடை அறியேன் - நடுவறியேன், தலை அறியேன் - முதலறியேன், எம்பெருமான் - எம்பெருமானே, சரணம் என்பேன்-அடைக்கலமென்பேன், நம் அடியான் - நமதடியவன், நடை உடையன் என்று - நடையுடையவனென்று, அவற்றைப் பாராதே - அவற்றை நோக்காமல், விடை உடையான் - இடபவாகநன், விடநாகன் - விடப்பாம்பை யுடையவன், வெண்ணீற்றன் - திருவெண்ணீறுடையவன், புலியின்தோல்-புலித்தோலாகிய, உடை உடையான் - ஆடையை யுடையவன், என்னை உடையான்-என்னை யடிமையாக வுடையவன், உளோம்-இருக்கிறோம், போகீர் என்றான் - போகக் கடவீர் என்றான் எ-று.

(பொ-ரை) நடுவறியேன் முதலறியேன் எம்பெருமானே அடைக்கலமென்பேன், நமதடியவன் நடையுடையவனென்று அவற்றை நோக்காமல் இடபவாகநன், விடப்பாம்பை யுடையவன், திருவெண்ணீறுடையவன் புலித்தோலாகிய ஆடையை யுடையவன், என்னையடிமையாக வுடையவன் இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(க-ரை.) திருவெண் பாக்கத்துச் சிவபெருமானை, யான் கோயிலுள் இருக்கிறீரோவென்று கேட்க, அவன் யாம் இருக்கின்றோம் நீர் போமென்றான் என்பதாம்,

(வி-ரை.) இடை - சமயம், நடு எனினுமாம். நடை - தீநடை. (2)

**செய்வினையொன்றறியாதேன்திருவடியேசரணென்று**
**பொய்யடியேன்பிழைத்திடினும்பொறுத்திடநீவேண்டாவோ**
**பையரவாவிங்கிருந்தாயோவென்னப்பரிந்தென்னை**
**யுய்யவருள்செய்யவல்லானுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) செய்வினை ஒன்று அறியாதேன் - செய்தற்குரிய செய்கையை யறியேன், திருவடியே சரண் என்று - திருவடியே சரணமென்று, பொய்யடியேன் பிழைத்திடினும்-பொய்த்தொண்டன் பிழைசெய்தாலும் நீபொறுத்திடவேண்டாவோ-நீ பொறுத்துக்கொள்ள வேண்டாமோ,பை அரவா-படத்தையுடைய சர்ப்பாபரணனே, இங்கு இருந்தாயோ என்ன.

இவ்விடத்திருந்தாயோ வென்ன, பரிந்து - இரங்கி, என்னை - எம்மை, உய்ய - உய்யும்படி, அருள்செய்ய வல்லான் - அருள்செய்ய வல்லவனாகிய சிவபிரான், உளோம் - இருக்கிறோம், போகீர் என்றான் - போகக்கடவீர் என்றான் எ-று.

(பொ-ரை.) செய்தற்குரிய செய்கையை யறியேன், திருவடியே சரணமென்று பொய்த்தொண்டன் பிழைசெய்தாலும், நீ பொறுத்துக் கொள்ள வேண்டாமோ, படத்தையுடைய சர்ப்பாபரணனே, இவ்விடத் திருந்தாயோ வென்ன இரங்கி எம்மை உய்யும்படி அருள்செய்யவல்லவனாகிய சிவபிரான் இருக்கிறோம் போகக் கடவீர் என்றான்.

(க-ரை.) யான் திருவெண்பாக்கத்துச் சிவபெருமானை, நீர் கோயிலினுள்ளே யிருக்கிறீரோ வென்றுகேட்க, அவன் யாமிருக்கின்றோம் நீர் போமென்றான் என்பதாம். (3)

**கம்பமருங்கரியுரியன்கறைமிடற்றன்காபாலி**
**செம்பவளத்திருவுருவன்சேயிழையோடுடனாகி**
**நம்பியிங்கேயிருந்தீரேயென்றுநான்கேட்டலுமே**
**யும்பர்தனித்துணையெனக்குவுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) கம்பு அமரும் கரி உரியன் - கம்பத்திற் கட்டப்படுகிற யானையின் தோலையுடையவன், கறைமிடற்றன்-விஷகண்டன், காபாலி கபாலமேந்தினவன், செம்பவளத் திருவுருவன் - செம்பவளம்போலும் திருமேனியை யுடையவன், சேயிழையோடு உடனாகி - உமாதேவியோடு கூடி, நம்பி - நம்பீ, இங்கே இருந்தீரே யென்று - இவ்விடத்திலிருந்தீரோ வென்று, நான் கேட்டலுமே-நான் கேட்டவுடனே, உம்பர் தனித்துணை-தேவர்களுக்கு ஒப்பற்றதுணை, எனக்கு - எனக்கு, உளோம் - இருக்கிறோம், போகீர் என்றான் - போகக்கடவீர் என்றான் எ-று.

(பொ-ரை) கம்பத்திற் கட்டப்படுகிற யானையின் தோலை யுடையவன், விஷகண்டன், கபால மேந்தினவன், செம்பவளம் போலுந் திருமேனியையுடையவன், உமாதேவியோடு கூடி, நம்பீ, இவ்விடத்திலிருந்தீரோ வென்று நான் கேட்டவுடனே, தேவர்களுக்கு ஒப்பற்ற துணை எனக்கு இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(க-ரை.) யான், திருவெண் பாக்கத்துச் சிவபெருமானை, நீர் கோயில் இருக்கிறீரோ வென்று கேட்க, யாம் இருக்கிறோம், நீர் போமென்றான் என்பதாம். (4)

**பொன்னிலங்குநறுங்கொன்றைபுரிசடைமேற்பொலிந்திலங்க**
**மின்னிலங்குநுண்ணிடையாள்பாகமாவெருதேறி**
**துன்னியிருபாலடியார்தொழுதேத்தவடியேனு**
**முன்னதமாய்க்கேட்டலுமேயுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) பொன் இலங்கும் நறுங்கொன்றை - பொன்போல் விளங்குகிற மணமுள்ள கொன்றைமலர் மாலை, புரிசடைமேல்-முறுக்கப்பட்ட சடையின் மீது, பொலிந்து இலங்க - மிகுந்து விளங்க, மின் இலங்கும் நுண் இடையாள் பாகமாய் - மின்கொடிபோல் விளங்குகிற நுண்ணிடையவளாகிய உமாதேவியின் பங்கினனும், எருது ஏறி-விடையேறி, துன்னி இருபால் - இருபுறத்தும் நெருங்கி, அடியார் தொழுது ஏத்த - அடியவர் வணங்கித் துதிக்க, அடியேனும் - தொண்டனேனும், உன்னதமாய் கேட்டலுமே - பெருமையாய்க் கேட்டலும், உளோம் - இருக்கிறோம், போகீர் என்றான் - போகக்கடவீர் என்றான் எ-று.

(பொ-ரை.) பொன்போல் விளங்குகிற மணமுள்ள கொன்றை மலர் மாலை முறுக்கப்பட்ட சடையின்மீது மிகுந்து விளங்க, மின்கொடிபோல் விளங்குகிற நுண்ணிடையவளாகிய உமாதேவியின் பங்கினனும், விடையேறி, இருபுறத்தும் நெருங்கி அடியவர் வணங்கித் துதிக்கிற தொண்டனேனும் பெருமையாய்க் கேட்டலும் இருக்கிறோம் போகக் கடவீர் என்றான்.

(கு-ரை.) யான், திருவெண்பாக்கத்துச் சிவபிரானை, நீர் கோயிலில் இருக்கிறீரோ வென்று கேட்க, அவன் யாமிருக்கின்றோம், நீர் போமென்றான் என்பதாம்.

(வி-ரை.) துன்னி - நெருங்கி. (5)

***கண்ணுதலாற்காமனையுங்காய்ந்ததிறற்கங்கைமலர்***
***தெண்ணிலவுசெஞ்சடைமேற்றீமலர்ந்தகொன்றையினான்***
***கண்மணியைமறைப்பித்தாயிங்கிருந்தாயோவென்ன***
***வொண்ணுதலிபெருமானாருளோம்போகீரென்றானே.***

(ப-ரை.) கண் நுதலால்-நெற்றிக்கண்ணினால், காமனையும் காய்ந்த-மன்மதனையு மெரித்த, திறல் - வெற்றியையுடைய, கங்கை மலர் தெள் நிலவு - கங்கை மலர் தெளிந்த நிலா இவற்றையும், செஞ்சடைமேல் - சிவந்த சடாபாரத்தின்மீது, தீமலர்ந்த கொன்றையினான் - நெருப்புப் போல் மலர்ந்த கொன்றை மலர் மாலையையும் உடையவன், கண்மணியை மறைப்பித்தாய் - கட்பார்வையை மறைப்பித்தாய், இங்கு இருந்தாயோ என்ன - இங்கே யிருக்கிறாயோ வென்று கேட்க, ஒண்ணுதலி பெருமானார் - அழகிய நெற்றியை யுடையவளாகிய உமாதேவி கொழுநனாகிய சிவபெருமான், உளோம்-இருக்கிறோம், போகீர்என்றான் - போகக்கடவீர் என்றான் எ-று.

(பொ-ரை.) நெற்றிக்கண்ணினால் மன்மதனையுமெரித்த வெற்றியை யுடைய கங்கை மலர் தெளிந்த நிலா இவற்றையும்,சிவந்த சடாபாரத்தின் மீது நெருப்புப்போல் மலர்ந்த கொன்றைமலர்மாலையையும் உடையவன், கட்பார்வையை மறைப்பித்தாய், இங்கே யிருக்கிறாயோ வென்றுகேட்க,

அழகிய நெற்றியை யுடையவளாகிய உமாதேவி கொழுநனாகிய சிவபெருமான், இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(க-ரை.) யான், திருவெண்பாக்கத்துச் சிவபெருமானை, நீர் கோயிலில் இருக்கிறீரோவென்று கேட்க, யாமிருக்கின்றோம், நீர் போமென்றான் என்பதாம்.

(வி-ரை.) மலர் - ஆத்திமலர். தெள் - தெளிவாகிய. நிலவு - சந்திரகண்டம். கண்மணி - கண்பார்வை. (6)

**பார்நிலவுமறையோரும்பத்தர்களும்பணிசெய்யத்**
**தார்நிலவுநறுங்கொன்றைச்சடையனார் தாங்கரிய**
**கார்நிலவுமணிமிடற்றீரிங்கிருந்தீரேயென்ன**
**ஆரரவமரைக்கசைத்தானுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) பார் நிலவும் மறையோரும் - பூமியிலுள்ள வேதியரும், பத்தர்களும் பணிசெய்ய - பத்தர்களும் தொண்டுசெய்ய, தார்நிலவும் நறுங்கொன்றைச் சடையனார் - கொன்றை மலர்மாலையைத்தரித்த சடையையுடையவர், தாங்கு அரிய - பொறுத்தற்கரிய, கார் நிலவு மணிமிடற்றீர் - கருமை விளங்கும் கண்டத்தை யுடையீர், இங்கு இருந்தீரே என்ன - இங்கேயிருக்கிறீரோ வென்று கேட்க, ஆர் அரவம் அரைக்கு அசைத்தான் - தவழ்கின்ற பாம்பைத் திருவரையிற் கச்சையாகக் கட்டினவன், உளோம் - இருக்கிறோம், போகீர் என்றான் - போகக்கடவீர் என்றான் எ-று.

(பொ-ரை.) பூமியிலுள்ள வேதியரும், பத்தர்களும் தொண்டு செய்ய, கொன்றைமலர் மாலையைத்தரித்த சடையையுடையவர், பொறுத்தற்கரிய கருமை விளங்கும் கண்டத்தை யுடையீர், இங்கே யிருக்கிறீரோ வென்று கேட்க, தவழ்கின்ற பாம்பைத் திருவரையிற் கச்சையாகக்கட்டினவன் இருக்கிறோம், போகக்கடவீர் என்றான்.

(க-ரை.) யான், திருவெண்பாக்கத்துச் சிவபெருமானை, நீர் கோயிலில் இருக்கிறீரோ வென்று கேட்க, யாமிருக்கின்றோம், நீர் போமென்றான் என்பதாம்.

(வி-ரை.) நிலவும்-நிலைபெற்ற. தார் - மாலை. கார் - கருமை. மணிமிடற்றீர் - நீலகண்டத்தை யுடையவரே. (7)

**வாரிடங்கொள்வனமுலையாடன்னோடுமயானத்துப்**
**பாரிடங்கள்பலசூழப்பயின்றாடும்பரமேட்டி**
**காரிடங்கொள்கண்டத்தன்கருதுமிடந்திருவொற்றி**
**யூரிடங்கொண்டிருந்தபிரானுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) வார் இடம் கொள்-கச்சையிடமாகக் கொண்ட, வன் முலையாள் தன்னோடு - அழகிய தனங்களையுடையவளாகிய உமாதேவியோடு,

மயானத்து - மயானத்தில், பாரிடங்கள் பல சூழ - பல பூதகணங்கள் சூழ, பயின்று ஆடும் - இடையறாதே யாடுகிற, பரமேட்டி - பயின்று நடிக்கிற பரமேஷ்டி, கார் இடம் கொள் கண்டத்தன் - கருமை குடி கொண்ட கண்டன், கருதும் இடம்-விரும்புமிடம், திருவொற்றியூர் இடம் கொண்டிருந்த பிரான் - திருவொற்றியூரை உறையிடமாகக் கொண் டெழுந்தருளியிருந்த வுபகாரகன், உளோம் - இருக்கிறோம், போகீர் என் றான் - போகக்கடவீர்என்றான் எ-று.

(**போ-ரை**) கச்சையிடமாகக் கொண்ட அழகிய தனங்களை யுடை யவளாகிய உமாதேவியோடு மயானத்தில் பல பூதகணங்கள் சூழ, இடைய றாதே யாடுகிற பயின்று நடிக்கிற பரமேஷ்டி, கருமை குடிகொண்ட கண் டன் விரும்புமிடம், திருவொற்றியூரை உறையிடமாகக் கொண்டெழுந் தருளியிருந்த வுபகாரகன், இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(**க-ரை.**) யான் திருவெண்பாக்கத்துச் சிவபெருமானை, நீர் கோயி லில் இருக்கிறீரோ வென்று கேட்க, யாமிருக்கின்றோம் நீர் போமென் றான் என்பதாம். (8)

**பொன்னவிலுங்கொன்றையினாய்போய்மகிழ்க்கீழிருவென்று**
**சொன்னவெனைக்காணுமேசூளறவுமகிழ்க்கீழே**
**யென்னவல்லபெருமானேயிங்கிருந்தாயோவென்ன**
**வொன்னலரைக்கண்டாற்போலுளோம்போகீரென்றானே.**

(**ப-ரை.**) பொன் நவிலும் கொன்றையினாய்-பொன்போலுங் கொன் றைமலர்மாலையை யணிந்தவனே, போய் மகிழ்க்கீழ் இருவென்று சொன்ன - போய் மகிழமரத்தின் கீழிருவென்றுசொன்ன, என்னை காணுமே - என்னைப் பாராமல், சூளறவு மகிழ்க்கீழே என்னவல்ல - சூளறவுக்கிடம் மகிழ மரத்தின் கீழேயென்று சொல்லவல்ல, பெரு மானே - பெருமையனே, இங்கு இருந்தாயோ என்ன - இங்கேயிருக்கி றாயோவென்று கேட்க, ஒன்னலரை கண்டாற்போல் - பகைவரை கண் டாற்போல, உளோம் - இருக்கிறோம், போகீர் என்றான் - போகக்கட வீர் என்றான் எ-று.

(**போ-ரை.**) பொன்போலுங் கொன்றைமலர்மாலையை யணிந்த வனே, போய் மகிழமரத்தின் கீழிருவென்று சொன்ன என்னைப் பாரா மல், சூளறவுக்கிடம் மகிழமரத்தின் கீழேயென்று சொல்லவல்ல பெரு மையனே, இங்கேயிருக்கிறாயோவென்று கேட்க, பகைவரை கண்டாற் போல இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(**க-ரை.**) யான் திருவெண்பாக்கத்துச் சிவபிரானை, நீர் கோயிலில் இருக்கிறீரோவென்று கேட்க, யாமிருக்கின்றோம் நீர் போம் என்றான் என்பதாம்.

(வி-ரை.) பொன் நவிலும் - பொன்னென்றே சொல்லுதற்குரிய. கொன்றை - ஆகுபெயர். மகிழ் - மகிழமரம். சூளறவு - ஆணை. (9)

**மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாந்**
**தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லா**
**மீன்றவனேவெண்கோயிலிங்கிருந்தாயோவென்ன**
**வூன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே.**

(ப-ரை.) மான்திகழும் சங்கிலியைத் தந்து - மான்போல் விளங்குகிற சங்கிலியைக் கொடுத்து, வருபயன்கள் எல்லாம் - உண்டாகிற பயன்கள் யாவும், தோன்ற அருள்செய்து - உண்டாக க்ருபைசெய்து, அளித்தாய் என்று உரைக்க - கொடுத்தாயென்று சொல்ல, உலகம் எல்லாம் ஈன்றவனே - எல்லாவுலகங்களையும் தந்தவனாகிய சிவபிரானே, வெண்கோயில் இங்கு இருந்தாயோவென்ன - வெண்கோயிலாகிய இங்கேயிருந்தாயோவென்று கேட்க, ஊன்றுவது ஓர்கோல் அருளி - ஊன்றுதற்குரிய ஒரு கோலையருள்செய்து, உளோம் - இருக்கிறோம், போகீர் என்றான் - போகக்கடவீர் என்றான் எ-று.

(போ-ரை.) மான்போல் விளங்குகிற சங்கிலியைக் கொடுத்து உண்டாகிற பயன்கள்யாவும் உண்டாக க்ருபைசெய்து கொடுத்தாயென்று சொல்ல, எல்லாவுலகங்களையும் தந்தவனாகிய சிவபிரானே, வெண்கோயிலாகிய இங்கேயிருந்தாயோவென்று கேட்க, ஊன்றுதற்குரிய ஒரு கோலை யருள்செய்து, இருக்கிறோம் போகக்கடவீர் என்றான்.

(க-ரை.) யான், திருவெண்பாக்கத்துச் சிவபிரானை, நீர் கோயிலில் இருக்கின்றீரோ வென்று கேட்க, யாமிருக்கிறோம், நீர் போமென்றான் என்பதாம்.

(வி-ரை.) மான்திகழும்-பெண்மான்போல விளங்குகிற அன்றி மானினது நோக்கம்போன்ற நோக்கத்தோடு கூடி விளங்குகிற எனினுமாம். வெண்கோயில் - திருவெண்பாக்கத்துக் கோயில். ஊன்றுவதோர்கோல் - ஒரு ஊன்றுகோல். (10)

**ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட**
**காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினொடுஞ்**
**சீராருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த**
**வாரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதாமே.**

(ப-ரை) ஏர் ஆரும் பொழில் நிலவு - அழகிய சோலைகள் நிலைபெற்ற, வெண்பாக்கம் இடம் கொண்ட - திருவெண்பாக்கத்தை யிடமாகக் கொண்ட, கார் ஆரும் - கருமைபொருந்திய, மிடற்றானை - கண்டத்தையுடையவனை, காதலித்திட்டு - விரும்பி, அன்பினொடும் - பத்தியோடும், சீர் ஆரும் திருவாரூர்ச் சிவன்பேர் - சிறப்புப்பொருந்திய திருவாரூர்ச் சிவன்பேரை, சென்னியில்வைத்த - சிரசாவகித்த, ஆரூரன் - சுந்தரனது,

தமிழ்வல்லார்க்கு - தமிழ்ப்பாடலைக் கற்று வல்லாரை, வல்வினை அடையா - ஒழித்தற்கரிய வினைப்பயன்க ளடையமாட்டா எ-று.

(பொ-ரை) அழகிய சோலைகள் நிலைபெற்ற திருவெண்பாக்கத்தை யிடமாகக்கொண்ட கருமைபொருந்திய கண்டத்தையுடையவனை விரும்பி, பத்தியோடும் சிறப்புப்பொருந்திய திருவாரூர்ச் சிவன்பேரை சிரசாவகித்த சுந்தரனது தமிழ்ப்பாடலைக் கற்று வல்லாரை ஒழித்தற்கரிய வினைப்பயன்க ளடையமாட்டா.

(க-ரை.) திருவெண்பாக்கத்துச் சிவபிரானை, ஆரூரன் புகழ்ந்து பாடின இப் பத்துப்பாடலுங் கற்றுப் பாடவல்லாரை கொடிய வினைகள் அணுகாவென்பதாம்.

(வி-ரை.) ஏர் - அழகு. பொழில் - சோலை. நிலவுதல் - நிலைபெறுதல். விளங்குதல் எனினுமமையும். மிடற்றானை - கண்டத்தையுடையவனை. காதலித்திட்டு - விரும்பி. சென்னி - தலை. (11)

இது திருவொற்றியூரில் சங்கிலியாருக்குக்கூறிய சபதத்தை மறந்து திருவாரூருக்குச் செல்லுங் கருத்தினால் திருவொற்றியூரெல்லையைக் கடந்த வளவில், பார்வைமறைய, அவ்வண்ணமே திருவெண்பாக்கத்திற் சென்று ஆலயத்துக்குளடைந்து தரிசித்துக் கோயிலிலிருக்கின்றீரோ வென்ன, பரமசிவம் உளோமென்றுகோலொன்றருளிச்செய்து, நாம் கோயிலுள் இருக்கின்றோம் நீர் போகக்கடவீரென்று அருளிச்செய்தபோது ஓதிய பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வெண்பாக்கநாதேசுவரர். தேவியார்-கனிவாய்மொழியம்மை.

---

## கோயில்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

**மடித்தாடுமடிமைக்கணன்றியே**
**மனனேநீவாழுநாளுந்**
**தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கி**
**லிடும்போதுதடுத்தாட்கொள்வான்**
**கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமு**
**மெரியகலுங்கரியபாம்பும்**
**பிடித்தாடிப்புலியூர்ச்சிற்றம்பலத்**
**தெம்பெருமானைப்பெற்றாமன்றே.**

(பொ-ரை.) மடித்து ஆடும் அடிமைக்கண் அன்றியே-மட்டித்தாடும் அடிமைக்கண்ணேயல்லால், மனனே - மனமே, நீ வாழும் நாளும் - நீ வாழ்

கின்ற காலத்திலும், தடுத்து ஆட்டி - தடுத்து ஆட்டி, தருமனார் தமர் - யம கிங்கரர், செக்கில் இடும்போது - செக்கிலிடும் காலத்தில், தடுத்து ஆட்கொள்வான் - தடுத்து ஆட்கொள்பவனும், கடுத்து ஆடும் - விசை கொண்டாடும், கரதலத்தில் - கைத்தலத்தில், தமருகமும் - உடுக்கையும், எரி அகலும் - மழுவும், கரியபாம்பும் - கரும்பாம்பும், பிடித்து ஆடி - பிடித்தாடுவோன், புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம் பெருமானை - எம்பிரானை, பெற்றாம் - அடைந்தோம் எ-று.

(பொ-ரை) மனமே, நீ வாழ்கிற காலத்திலும், மட்டித்தாடும் அடிமைத் கண்ணே யல்லாமல் தடுத்து ஆட்டி யமகிங்கரர் செக்கிலிடும்காலத்தில் தடுத்து ஆட்கொள்பவனும், விசைகொண்டாடும் கைத்தலத்தில் உடுக்கையும் மழுவும் கரும்பாம்பும் பிடித்தாடுவோனாகிய, புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை யாம் அடைந்தோம் என்பதாம்.

(வி-ரை.) மட்டித்தாடுதல் - சுழன்றாடுதல். அது மடித்தாடுதல் என விகாரமாயிற்று. தருமனார் - கூற்றுவனார். தமர் - படர். (யமகிங்கரர்). கடுத்தாடல் - விசைகொண்டாடுதல். தமருகம் - உடுக்கை. எரியகல் - மழு. அன்று ஏ அசைகள். (1)

**போராதுகாமத்திற்சென்றாற்போ**
**லன்றியேபிரியாதுள்கிச்**
**சீரார்ந்தவன்பராய்ச்சென்று**
**முன்னடிவீழுந்திருவினரை**
**யோராதுதருமனார்தமர்செக்கி**
**லிடும்போதுதடுத்தாட்கொள்வான்**
**பேராளர்புலியூர்ச்சிற்றம்பலத்**
**தெம்பெருமானைப்பெற்றாமன்றே.**

(ப-ரை.) போராது - இடையறாமல், காமத்தில் - காமநெறியில், சென்றார்போல் அன்றியே - சென்றார்போலல்லாமல், பிரியாது - பிரியாமல், உள்கி - நினைத்து, சீர் ஆர்ந்த அன்பர் ஆய் சென்று - சிறப்புப் பொருந்திய அன்பராகிச்சென்று, முன் அடிவீழும் திருவினரை - எதிரே திருவடியில் விழுகின்ற செல்வரை, ஓராது - ஆராயாமல், தருமனார் தமர் செக்கில் இடும்போது - யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில், தடுத்து ஆட்கொள்வான் - தடுத்தாட்கொள்வோனாகிய, பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்து - பெரியோர்வாழ்கிற புலியூர் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எம்பிரானை, பெற்றாம் - அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) இடையறாமல் காமநெறியில் சென்றார்போலல்லாமல் பிரியாமல் நினைத்து சிறப்புப்பொருந்திய அன்பராகிச் சென்று எதிரே

திருவடியில் விழுகின்ற செல்வரை ஆராயாமல், யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில் தடுத்தாட்கொள்வோனாகிய பெரியோர்வாழ்கிற புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத்தெம்பெருமானை யாம் அடைந்தோமென்பதாம்.

(வி-ரை.) திருவினரை - செல்வரை. ஓராது - மதியாமல். போராளர்புலியூர் - பெரியோர் வாழ்கிற புலியூர். (2)

**நரியார்தங்கள்ளத்தாற்பக்கான**
**பரிசொழிந்துநாளுமுள்கிப்**
**பிரியாதவன்பராய்ச்சென்று**
**முன்னடிவீழுஞ்சிந்தையாரைத்**
**தரியாதுதருமனார்தமர்செக்கி**
**லிடும்போதுதடுத்தாட்கொள்வான்**
**பெரியோர்கள்புலியூர்ச்சிற்றம்பலத்**
**தெம்பெருமானைப்பெற்றாமன்றே.**

(ப-ரை.) நரியார் - நரிபோல்பவர், தம்கள்ளத்தால் - தமது கள்ளத்தனத்தால், பக்குஆன பரிசு ஒழிந்து - பிளவாகிய தன்மையொழிந்து, நாளும் உள்கி - தினந்தோறும் நினைத்து, பிரியாத அன்பராய் சென்று - பிரியாத அன்பராய்ச்சென்று, முன் அடிவீழும் சிந்தையாரை - முந்தி அடியை விரும்புகிற மனமுடையாரை, தரியாது - தரிக்காமல், தருமனார் தமர் செக்கில் இடும்போது - யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில், தடுத்தாட்கொள்வான் - தடுத்தாட்கொள்வோனாகிய, பெரியோர்கள் புலியூர்ச் சிற்றம்பலத்து - பெரியோர்கள் வாழ்கிற புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எமது பெருமானை, பெற்றாம் - அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) நரிபோல்பவர் தமது கள்ளத்தனத்தால் பிளவாகிய தன்மையொழிந்து தினந்தோறும் நினைத்து பிரியாத அன்பராய்ச் சென்று, முந்தி அடியைவிரும்புகிற மனமுடையாரை தரிக்காமல், யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில் தடுத்தாட்கொள்வோனாகிய, பெரியோர்கள் வாழ்கிற புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எமது பெருமானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத்தெம்பெருமானை யாமடைந்தோம் என்பதாம்.

(வி-ரை.) நரியார் என்பதில் ஆர் விகுதி இழித்தற்கண் வந்தது. கள்ளம் - கபடம். பக்கான - பிளவுபட்ட. பரிசு - தன்மை. வீழும் - விரும்புகிற. சிந்தையாரை - மனத்தையுடையவரை. பெரியோர்கள் - பெரியோர்கள் வாழ்கின்ற, அன்றிப் பெரியோர்களுடைய என்றலும் பொருந்தும். (3)

கருமையார் தருமனூர் தமர்நம்மைக்
 கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையாந்தன் னுலகந்தருவானை
 மண் ணுலகங்காவல்பூண்ட
வுரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடா
 மன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்
 தெம்பெருமானைப்பெற்றாமன்றே

(ப-ரை) கருமை ஆர் - கருநிறம் பொருந்திய, தருமனூர் தமர் - யமகிங்கரர், நம்மை கட்டிய கட்டு - நம்மைப் பிணித்த பிணிப்பை, அறுப்பிப்பானை - அறுப்பிப்பவனை, அருமை ஆம் தன் உலகம் தருவானை-அருமையாகிய தன்னுலகத்தைத் தருகிறவனை, மண்ணுலகம் காவல்பூண்ட - நிலவுலகத்தைக் காவல்செய்கிற, உரிமையால்-பாத்யதையால், பல்லவர்க்கு - பல்லவர்களுக்கு, திறைகொடாமன்னவரை - திறைகொடுக்காத அரசரை, மறுக்கம்செய்யும் - வருத்தும், பெருமையால் - பெருந்தன்மையால், புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை-எம்பிரானை, பெற்றும் - அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) கருநிறம் பொருந்திய யமகிங்கரர் நம்மைப் பிணித்த பிணிப்பை அறுப்பிப்பவனை, அருமையாகிய தன்னுலகத்தைத் தருகிறவனை, நிலவுலகத்தைக் காவல்செய்கிற பாத்யதையால், பல்லவர்களுக்கு திறைகொடுக்காத அரசரை வருத்தும் பெருந்தன்மையால், புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை) திருப்புலியூர்ச் சிற்றம்பலத்தெம்பெருமானை, யாம் அடைந்தோம் என்பதாம்.

(வி-ரை.) தன் உலகம் என்றது சிவலோகத்தை. மறுக்கம்செய்தல் - வருத்தல். (4)

கருமானினுரியாடைச்செஞ்சடைமேல்
 வெண்மதியக்கண்ணியானை
யுருமன்னகூற்றத்தையுருண்டோட
 வுதைத்துகந்துவுலவாவின்பந்
தருவானைத்தருமனூர்தமர்செக்கி
 லிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பெருமானூர்புலியூர்ச்சிற்றம்பலத்
 தெம்பெருமானைப்பெற்றாமன்றே.

(ப-ரை.) கருமானின் உரி ஆடை - யானைத்தோலாகிய ஆடையோடு, செஞ்சடைமேல்-செவந்த சடையின் மீது, வெண்மதியக் கண்ணியானை - வெண்பிறையாகிய மாலையை யுடையவனை, உரும் அன்ன கூற்

றத்தை - இடியேறுபோன்ற யமனை, உருண்டு ஓட - உருண்டோடும்படி, உதைத்து உகந்து - உதைத்து மகிழ்ந்து, உலவா - கெடாத, இன்பம் தருவானை - சுகத்தைத் தருவானை, தருமனார் தமர் - யமகிங்கரர், செக்கில் இடும்போது - செக்கிலிடும் காலத்தில், தடுத்தாட் கொள்வான் - தடுத்தாட்கொள்வோனாகிய, பெருமானார் - பிரானார், புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எம்பிரானை, பெற்றாம் - அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) ஆனைத்தோலாகிய ஆடையோடு செவந்த சடையின் மீது வெண்பிறையாகிய மாலையையுடையவனை, இடியேறுபோன்ற யமனை உருண்டோடும்படி உதைத்து மகிழ்ந்து, கெடாத சுகத்தைத் தருவேனை, யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில் தடுத்தாட் கொள்வோனாகிய பிரானார் புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை, யாம் அடைந்தோம் என்பதாம்.

(வி-ரை.) கருமா - யானை, அது னகரச்சாரியை பெற்று கருமான் என்றாயிற்று. கண்ணி - மாலை. (5)

**உய்த்தாடித்திரியாதேயுள்ளமே**
**யொழிகண்டாயூன்கணோட்ட**
**மெத்தாலுங்குறைவில்லையென்பர்கா**
**ணெஞ்சமேநம்மைநாளும்**
**பைத்தாடுமரவினன்படர்சடையன்**
**பரஞ்சோதிபாவந்தீர்க்கும்**
**பித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்**
**தெம்பெருமானைப்பெற்றாமன்றே.**

(ப-ரை.) உய்த்து ஆடித் திரியாதே-புலன் வழியிற் சென்றாடி யலையாமல், உள்ளமே - மனமே, ஒழி - நீங்குவாயாக, ஊன் கண் ஓட்டம் - மாமிசக் கண்ணோட்டம், எத்தாலும் குறைவில்லை என்பர் - எவ்வகையாலும் குறைவில்லை யென்பர், நெஞ்சமே - மனமே, நம்மை நாளும்-நம்மை நாள்தோறும், பைத்து ஆடும் அரவினன் - படமெடுத்தாடுகிற பாம்பைத் தரித்தவன், படர் சடையன்-விரிந்த சடையை யுடையவன், பரஞ்சோதி-பேரொளி, பாவம் தீர்க்கும்-பாவத்தை யொழிக்கிற, பித்தாடி - பித்தன், புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை-எம்பிரானை, பெற்றாம் - அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) புலன்வழியிற் சென்றாடி யலையாமல் மனமே, நீங்குவாயாக, மாமிசக் கண்ணோட்டம் எவ்வகையாலும் குறைவில்லை யென்பர், மனமே, நம்மை நாள்தோறும் படமெடுத்தாடுகிற பாம்பைத் தரித்தவன், விரிந்த சடையையுடையவன் பேரொளி, பாவத்தை யொழிக்கிற பித்தன் புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை, யாம் அடைந்தோம் என்பதாம்.

(வி-ரை.) பைத்து - படமெடுத்து. அரவினன் - பாம்பணிவோன். படர்சடையன் - விரிந்த சடையை யுடையவன். (6)

**முட்டாதமுச்சந்திமூவாயிரவர்க்கு**
**மூர்த்தியென்னப்**
**பட்டானைப்பத்தராய்ப்பாவிப்பார்**
**பாவமும்வினையும்போக**
**விட்டானைமலையெடுத்தவிராவணனைத்**
**தலைபத்துநெரியக்காலாற்**
**றொட்டானைப்புலியூர்ச்சிற்றம்பலத்**
**தெம்பெருமானைப்பெற்றாமன்றே.**

(ப-ரை.) முட்டாத - குறையாத, முச்சந்தி - திரிசந்தியா காலங்களிலும் செய்தற்குரிய நியமங்களைச் செய்கிற, மூவாயிரவர்க்கு - மூவாயிரவருக்கு, மூர்த்தி யென்னப்பட்டானை - மூர்த்தியென்று சொல்லப்பட்டவனை, பத்தராய் பாவிப்பார் - அன்பராகி நினைப்பவர்களுடைய, பாவமும் வினையும் போகவிட்டானை - பாவத்தையும் வினையையும் வழிவிட்டவனை, மலையெடுத்த இராவணனை - கைலாய மலையைத் தூக்கின ராவணனை, தலைபத்தும் நெரிய - பத்துத் தலைகளும் நெரியும்படி, காலால் தொட்டானை - திருவடியால் அழுத்தினவனை, புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எம்பிரானை, பெற்றாம் - அடைந்தோம் எ-று.

(போ-ரை) குறையாத, திரிசந்தியா காலங்களிலும் செய்தற்குரிய நியமங்களைச் செய்கிற மூவாயிரவருக்கு மூர்த்தியென்று சொல்லப்பட்டவனை, அன்பராகி நினைப்பவர்களுடைய பாவத்தையும் வினையையும் வழிவிட்டவனை, கைலாயமலையைத் தூக்கின ராவணனை பத்துத் தலைகளும் நெரியும்படி திருவடியாலழுத்தினவனை, புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை) திருப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை யாமடைந்தோமென்பதாம்.

(வி-ரை.) முட்டாத - தடைபடாத. முச்சந்தி - திரிசந்தியா கால பூசை. மூர்த்தி - தலைவன். பாவிப்பார் - நினைப்பவர். (7)

கற்ருனுங்குழையுமா றன்றியே
கருதுமாகருதகிற்ருர்க்
கெற்ருலுங்குறைவில்லையென்பர்கா
ணுள்ளமேநம்மைநாளுஞ்
செற்ருட்டித்தருமனுர்தமர்செக்கி
லிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பெற்றேறிபுலியூர்ச்சிற்றம்பலத்
தெம்பெருமானைப்பெற்ருமன்றே.

(ப-ரை.) கல்தானும் - கல்லும், குழையுமாறு அன்றியே - குழையும் விதமாயல்லாமல், கருதுமாறு-நினைக்கும்வழியால், கருதகிற்ருர்க்கு-நினைக்கவல்லார்க்கு, எற்ருலும் குறைவு இல்லையென்பர் - எவ்வகையாலும் குறைவில்லையென்பர், உள்ளமே - மனமே, நம்மை நாளும்-நம்மை நாள்தோறும், செற்று ஆட்டி-வருத்தியாட்டி, தருமனுர் தமர் - யமகிங்கரர், செக்கிலிடும்போது - செக்கிலிடும் காலத்தில், தடுத்தாட்கொள்வான் - தடுத்தாட்கொள்பவன், பெற்றம் ஏறி - இடபமேறுவோன், புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எம்பிரானை, பெற்ரும் - அடைந்தோம் எ-று.

(போ-ரை.) கல்லும் குழையும் விதமாயல்லாமல் நினைக்கும் வழியால் நினைக்கவல்லார்க்கு எவ்வகையாலும் குறைவில்லையென்பர், மனமே நம்மை நாள்தோறும் வருத்தியாட்டி யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில் தடுத்தாட்கொள்பவன், இடபமேறுவோன், புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(கு-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை யாமடைந்தோமென்பதாம்.

(வி-ரை.) கல்தானும் - கல்லும், இதில் தான் சாரியை. குழைதல் - நெகிழ்தல். செற்று - வருத்தி. பெற்றம் - இடபம். பெற்றமேறி யென்பது பெற்றேறியெனத் தொகுத்தல் பெற்றது. (8)

நாடுடையநாதன்பானன்றென்றுஞ்
செய்மனமேநம்மைநாளுந்
தாடுடையதருமனுர்தமர்செக்கி
லிடும்போதுதடுத்தாட்கொள்வான்
மோடுடையசமணர்க்குமுடையுடைய
சாக்கியர்க்குமூடம்வைத்த
பீடுடையபுலியூர்ச்சிற்றம்பலத்
தெம்பெருமானைப்பெற்ருமன்றே.

(ப-ரை.) நாடு உடைய-எல்லாவுலகங்களையு முடைய, நாதன் பால்-இறைவனிடத்தில், நன்று என்றும் செய்-நன்மையை யெப்போதும் செய்யக்கடவை, மனமே - நெஞ்சே, நம்மை நாளும் - நம்மை நாள்தோறும், தாடு உடைய - தண்டித்தலையுடைய, தருமனார் தமர் - யமகிங்கரர், செக்கிலிடும்போது-செக்கிலிடும் காலத்தில், தடுத்து ஆட்கொள்வான் - தடுத்தாட் கொள்பவனும், மோடு உடைய சமணர்க்கும் - பெருமையுள்ள சமணர்க்கும், முடை உடைய சாக்கியர்க்கும் - புலால் நாற்றத்தையுடைய சாக்கியர்க்கும், மூடம்வைத்த - மூடத்தனத்தை வைத்த, பீடு உடைய - பெருமையையுடைய, புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எம்பிரானை, பெற்றாம்-அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) எல்லாவுலகங்களையு முடைய இறைவனிடத்தில் நன்மையை யெப்போதும் செய்யக்கடவை, நெஞ்சே நம்மை நாள்தோறும், தண்டித்தலையுடையயமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில் தடுத்தாட் கொள்பவனும், பெருமையுள்ள சமணர்க்கும், புலால் நாற்றத்தையுடைய சாக்கியர்க்கும், மூடத்தனத்தை வைத்த பெருமையையுடைய புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத்தெம்பெருமானை,யாமடைந்தோமென்பதாம்.

(வி-ரை.) தாடனம் - தண்டித்தல். அது தாடு என விகாரமாயிற்று. முடை - நீசத்துவம், பீடு - பெருமை. (9)

பாரூருமரவல்கு லுமைநங்கையவள்
  பங்கன்பைங்கணேற்ற
னூரூரன்றருமனார்தமர்செக்கி
  லிடும்போதுதடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீ
  கோங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூரர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்
  பலத்தேபெற்றாமன்றே.

(ப-ரை.) பார் ஊரும்-நிலத்தில் தவழ்கிற, அரவு அல்குல்-பாம்பின் படம்போலும் அல்குலையுடைய, உமை நங்கையவள் பங்கன்-உமாதேவியின்பாகத்தையுடையவன், பைங்கண்-பசிய கண்களையுடைய, ஏற்றன்-இடபத்தையுடையவன், ஊரூரன் - ஊர்கள் தோறும் திரிபவன், தருமனார் தமர் - யமகிங்கரர், செக்கிலிடும்போது - செக்கிலிடும்காலத்தில், தடுத்து ஆட்கொள்வான் - தடுத்தாட் கொள்பவனும், ஆரூரன் தம்பிரான்-ஆரூரன் மீ கோங்கில் - அணிகாஞ்சி வாய் -பேரூரர் பெருமானை -பெரியோர்

கள் பிரானை, புலியூர்ச் சிற்றம்பலத்து - புலியூர்ச் சிற்றம்பலத்திலுள்ள, எம்பெருமானை - எம்பிரானை, பெற்றும்-அடைந்தோம் எ-று.

(பொ-ரை.) நிலத்தில் தவழ்கிற பாம்பின் படம்போன்ற அல்குலையுடைய உமாதேவியின் பாகன், பசிய கண்களையுடைய இடபத்தை யுடையவன், ஊர்கள்தோறும் திரிபவன், யமகிங்கரர் செக்கிலிடும் காலத்தில் தடுத்தாட் கொள்பவனும், ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீ கோங்கில் அணிகாஞ்சியாய் பெரியோர்கள் பிரானை, புலியூர் சிற்றம்பலத்திலுள்ள எம்பிரானை அடைந்தோம்.

(க-ரை.) திருப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை, யாம் அடைந்தோ மென்பதாம்.

(வி-ரை.) அரவு - பாம்பு, அது இங்கு அதன் படத்துக்காயிற் றுதலால் ஆகுபெயர். (10)

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் சோழநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர் - சபாநாதர். தேவியார்-சிவகாமியம்மை.
மூலத்தானச் சிவலிங்கப்பெருமான்பெயர் திருமூலநாதர்.
அங்கு வீற்றிருந்தருளும் தேவியார்பெயர் உமையம்மை.

---

## திருஒற்றியூர்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

**பாட்டும்பாடிப்பரவித்திரிவா**
**ரீட்டும்வினைகடீர்ப்பார்கோயில்**
**காட்டுங்கலமுந்திமிலுங்கரைக்கே**
**யோட்டுந்திரைவாயொற்றியூரே.**

(ப-ரை.) பாட்டும்பாடி - பாடலையும்பாடி, பரவி திரிவார்-வழிபட்டுத் திரிபவர், ஈட்டும் - தேடுகிற, வினைகள் - வினைகளை, தீர்ப்பார்-ஒழிப்பவரது, கோயில் - கோயிலானது, காட்டும் - காணப்படுகிற, கலமும்-கப்பலும், திமிலும் - தெப்பமும், கரைக்கே ஓட்டும் - கரையிற் செலுத்துகிற, திரைவாய் - அலைமோதுகிற, ஒற்றியூரே - திருவொற்றியூரேயாம் எ-று.

(பொ-ரை.) பாடலையும்பாடி வழிபட்டுத்திரிபவர் தேடுகிறவினைகளை ஒழிப்பவரது கோயிலானது, காணப்படுகிற கப்பலும் தெப்பமும்கரையிற் செலுத்துகிற அலைமோதுகிற திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம். (1)

**பந்துங்கிளியும்பயிலும்பாவை**
**சிந்தைகவர்வார்செந்தீவண்ண**
**ரெந்தம்மடிகளிறைவர்க்கிடம்போ**
**லுந்துந்திரைவாயொற்றியூரே.**

(**ப-ரை.**) பந்தும் - பந்துடனும், கிளியும் - கிளியுடனும், பயிலும் பாவை - பழகுகிற வுமாதேவியின், சிந்தை கவர்வார் - மனதைக் கவர்வோரும், செந்தீவண்ணர் - செந்தீயினிற முடையவரும், எந்தம் அடிகள் - எமது சுவாமிகளுமாகிய, இறைவர்க்கு இடம் - இறைவர்க்கிடமாயிருப்பது, உந்தும் திரை - காற்றினால் தள்ளப் படுகிற அலை, வாய்-பொருந்திய, ஒற்றியூரே - திருவொற்றியூரே யாம் எ-று.

(**போ-ரை**) பந்துடனும் கிளியுடனும் பழகுகிற உமாதேவியின் மனதைக் கவர்வோரும், செந்தீயினிற முடையவரும் எமது சுவாமிகளுமாகிய இறைவர்க்கிடமாயிருப்பது காற்றினால் தள்ளப்படுகிற அலை பொருந்திய திருவொற்றியூரேயாம்.

(**க-ரை**) சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம்.

(**வி-ரை**.) சிந்தை கவர்வார் - மனதைக் கிரகிப்பவர் (வசப்படுத்துவோர்). (2)

**பவளக்கனிவாய்ப்பாவைபங்கன்**
**கவளக்களிற்றினுரிவைபோர்த்தான்**
**றவழுமதிசேர்சடையாற்கிடம்போ**
**லுகளுந்திரைவாயொற்றியூரே.**

(**ப-ரை.**) பவளக்கனிவாய்ப் பாவை பங்கன்-பவளம்போலுங் கனிந்த அதரத்தையுடைய உமாதேவிபாகன், கவளக்களிற்றின் உரிவை-கவளங்கொள்ளும் யானையின்தோலை, போர்த்தான் - போர்த்துக்கொண்டவன், தவழும்மதிசேர் சடையாற்கு - தவழும் பிறைசேர்ந்த சடையையுடையவனுக்கு, இடம் - இடமாயிருப்பது, உகளும் திரைவாய் - தாவுகிற அலைகளையுடைய, ஒற்றியூரே - திருவொற்றியூரேயாம் எ-று.

(**போ-ரை.**) பவளம்போலுங்கனிந்த அதரத்தையுடைய உமாதேவி பாகன், கவளங்கொள்ளும் யானையின்தோலை போர்த்துக்கொண்டவன், தவழும் பிறைசேர்ந்த சடையையுடையவனுக்கு இடமாயிருப்பது தாவுகிற அலைகளையுடைய திருவொற்றியூரேயாம்.

(**க-ரை.**) சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம். (3)

**என்னதெழிலுநிறையுங்கவர்வான்**
**புன்னைமலரும்புறவிற்றிகழுந்**
**தன்னைமுன்னநினைக்கத்தருவா**
**னுன்னப்படுவானொற்றியூரே.**

(ப-ரை.) என்னது எழிலும் நிறையும் கவர்வான் - எனது அழகையும் நிறையையும் கவர்கின்றவன், புன்னைமலரும் - புன்னைப்பூமலர்கின்ற, புறவில் திகழும் தன்னை - முல்லைநிலத்தில் விளங்குகிற தன்னை, முன்னம் நினைக்க தருவான் - முன்னமே நினைக்கத்தருபவன், உன்னப்படுவான் - நினைக்கப்படுவோன், ஒற்றியூரே - திருவொற்றியூரேயாம் எ-று.

(பொ-ரை.) எனது அழகையும் நிறையையும் கவர்கின்றவன், புன்னைப்பூமலர்கின்ற முல்லைநிலத்தில் விளங்குகிறதன்னை முன்னமே நினைக்கத் தருபவன், நினைக்கப்படுபவன் திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக்கிடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம்.

(வி-ரை.) எழிலும் - அழகும். நிறையும் - கற்பும். கவர்வான்-கிரகிப்பவன். புறவில் - முல்லைநிலத்தில். (4)

**பணங்கொளரவம்பற்றிப்பரமன்**
**கணங்கள்சூழக்கபாலமேந்தி**
**வணங்குமிடைமென்மடவாரிட்ட**
**வுணங்கல்கவர்வானொற்றியூரே.**

(ப-ரை.) பணம்கொள் அரவம்பற்றி - படத்தையுடைய பாம்பைப் பிடித்து, பரமன் கணங்கள்சூழ - சிவகணங்கள்சூழ, கபாலம் ஏந்தி - தலையோட்டை யேந்தி, வணங்கும் இடை - வளைந்த இடையையுடைய, மெல் மடவார் இட்ட - மென்மையாகிய பெண்களிட்ட, உணங்கல் கவர்வான் - சோற்றையேற்பவன், ஒற்றியூரே - திருவொற்றியூரேயாம் எ-று.

(பொ-ரை.) படத்தையுடைய பாம்பைப்பிடித்து சிவகணங்கள்சூழ தலையோட்டை யேந்தி வளைந்த இடையையுடைய மென்மையாகியபெண்களிட்ட சோற்றை யேற்பவன், திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம்.

(வி-ரை.) பணம் - படம். (5)

**படையார்மழுவன்பால்வெண்ணீற்றன்**
**விடையார்கொடியன்வேதநாவ**
**னடைவார்வினைகளறுப்பானென்னை**
**யுடையானுறையுமொற்றியூரே.**

(ப-ரை.) படை ஆர்மழுவன் - மழுவாயுதத்தை யுடையவன், பால் வெண்ணீற்றன் - பால்போலும் வெள்ளிய திருநீற்றையுடையவன், விடை ஆர்கொடியன் - இடபக்கொடியை யுடையவன், வேதநாவன்-வேதமோதுகிற நாவையுடையவன், அடைவார் வினைகள் அறுப்பான் - தன்னைச் சேர்வோரது வினையை யறுப்பவன், என்னை உடையான் - என்னையுடையவன், உறையும்-வாழ்கின்ற, ஒற்றியூரே-திருவொற்றியூரேயாம் எ-று.

(போ·ரை.) மழுவாயுதத்தையுடையவன், பால்போலும் வெள்ளிய திருநீற்றையுடையவன், இடபக்கொடியை யுடையவன், வேதமோதுகிற நாவையுடையவன் தன்னைச்சேர்வோரது வினையையறுப்பவன், என்னையுடையவன் வாழ்கின்ற திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருவொற்றியூரேயென்பதாம்.

(வி-ரை.) படை - ஆயுதம். பால் - வெண்மை. (6)

**சென்றபுரங்கடீயில்வேவ**
**வென்றவிகிர்தன்வினையைவீட்ட**
**நன்றுநல்லநாதன்னரையே**
**றொன்றையுடையானொற்றியூரே.**

(ப-ரை.) சென்றபுரங்கள் - திரிகிற முப்புரங்கள், தீயில்வேவ - நெருப்பில் வேவ, வென்றவிகிர்தன் - வென்றமெய்யன், வினையை வீட்ட - வினைகளையழிக்க, நன்று நல்லநாதன் - மிகநல்ல இறைவன், நரை ஏறு ஒன்றை உடையான் - ஒரு வெள்ளெருதையுடையவன், ஒற்றியூரே - திருவொற்றியூரேயாம் எ-று.

(போ·ரை) திரிகிற முப்புரங்கள் நெருப்பில்வேவ வென்ற மெய்யன், வினைகளையழிக்க மிகநல்ல இறைவன், ஒரு வெள்ளெருதை யுடையவன் திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக்கிடமாயிருப்பது திருவொற்றியூரேயென்பதாம்.

(வி-ரை.) சென்றபுரங்கள் - ஜங்கமபட்டணங்கள். (திரிகின்ற முப்புரங்கள்.) (7)

**கலவமயில்போல்வளைக்கைநல்லார்**
**பலரும்பரவும்பவளப்படியா**
**னுலகிலுள்ளார்வினைகடீர்ப்பா**
**னுலவுந்திரைவாயொற்றியூரே.**

(ப-ரை.) கலவமயில் போல் - தோகைகளையுடைய மயில்போன்ற, வளைக்கை நல்லார் - வளையலணிந்த கையினையுடைய மாதர், பலரும் - எல்லாரும், பரவும் - புகழ்கின்ற, பவளப்படியான் - பவளம்போலுந் திரு

மேனியை யுடையவன், உலகில் உள்ளார் வினைகள் தீர்ப்பான் - உலகத்தாருடைய வினைகளை யொழிப்பவன், உலவும் திரைவாய் - தவழ்கிற அலைகளையுடைய, ஒற்றியூரே - திருவொற்றியூரே யாம் எ-று.

(பொ-ரை.) தோகைகளையுடைய மயில்போன்ற வளையலணிந்த கையினையுடைய மாதர் எல்லாரும் புகழ்கின்ற பவளம்போலுந் திருமேனியையுடையவன், உலகத்தாருடைய வினைகளை யொழிப்பவன், தவழ்கிற அலைகளையுடைய திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம்.

(வி-ரை.) கலவம் - கலாபம் என்னும் வடசொற்றிரிபு. (தோகை)

**பற்றிவரையையெடுத்தவரக்க**
**னிற்றுமுரியவிரலாலடர்த்தா**
**ரெற்றும்வினைகடீர்ப்பாரோத**
**மொற்றுந்திரைவாயொற்றியூரே.**

(ப-ரை.) பற்றிவரையை எடுத்த-கைலாயமலையைப் பற்றியெடுத்த, அரக்கன்-ராவணன், இற்றுமுரிய-ஒடிந்துசெரிய, விரலால் அடர்த்தார்-விரலால் அழுத்தினவர், எற்றும் வினைகள் தீர்ப்பார் - வருத்துகிற வினைகளை யொழிப்பவர், ஓதம் ஒற்றும் திரைவாய் - கடல் ஒற்றிவருகிற அலைகள் வாய்ந்த, ஒற்றியூரே - திருவொற்றியூரேயாம் எ-று.

(பொ-ரை.) கைலாயமலையைப் பற்றியெடுத்த ராவணன் ஒடிந்து செரிய விரலால் அழுத்தினவர், வருத்துகிற வினைகளை யொழிப்பவர், கடல் ஒற்றிவருகிற அலைகள் வாய்ந்த திருவொற்றியூரேயாம்.

(க-ரை.) சிவபெருமானுக்கிடமாயிருப்பது திருவொற்றியூரே யென்பதாம். (9)

**ஒற்றியூருமரவும்பிறையும்**
**பற்றியூரும்பவளச்சடையர்**
**ஒற்றியூர்மேலூரனுரைத்த**
**கற்றுப்பாடக்கழியும்வினையே.**

(ப-ரை.) ஒற்றி ஊரும் அரவும் - புடைபெயர்ந்து தவழ்கின்ற பாம்பும், பிறையும்-சந்த்ரகண்டமும், பற்றி ஊரும் பவளச்சடையர் - பொருந்தித் தவழ்கின்ற பவளம்போலுஞ் சடையை யுடையவரது, ஒற்றியூர்மேல்-திருவொற்றியூர் மீது, ஊரன் உரைத்த - சுந்தரன் சொன்னவையாகிய பாடல்களை, கற்று பாட - கற்றுப் பாடினால், வினைகழியும் - வினைகள் நீங்கும் எ-று.

(போ-ரை.) புடைபெயர்ந்து தவழ்கின்ற பாம்பும், சந்த்ரகண்டமும் பொருந்தித் தவழ்கின்ற பவளம்போலுஞ் சடையையுடையவரது, திருவொற்றியூர் மீது சுந்தரன் சொன்னவையாகிய பாடல்களை கற்றுப் பாடினால் வினைகள் நீங்கும்.

(க-ரை.) சிவபெருமானது திருவொற்றியூர்மேல், ஊரன் சொன்ன பாடலாகிய இவை பத்துங் கற்றுப் பாடவல்லாரது வினைகள் நீங்குமென்பதாம்.

(வி-ரை.) பாட-செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சத் திரிபு.

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புக்கொளியூர் அவிநாசி

### பண் - குறிஞ்சி

### திருச்சிற்றம்பலம்

**எத்தான்மறக்கேனெழுமைக்குமெம்பெருமானையே**
**யுற்றுயென்றுன்னையேயுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தாற்**
**புற்றாடரவாபுக்கொளியூரவிநாசியே**
**பற்றாகவாழ்வேன்பசுபதியேபரமேட்டியே.**

(ப-ரை.) எம்பெருமானையே - எம்பெருமானாகிய வுன்னையே, எழுமைக்கும் உற்றுயென்று - எழ்பிறப்புக்கும் உற்றவனென்று, உன்னையே உள்குகின்றேன்-உன்னையே நினைக்கின்றேன், உள்ளத்தால் உணர்ந்து-மனத்தாலறிந்து, புற்று ஆடு அரவா-புற்றில் வாழ்கின்ற ஆடுபாம்பனே, புக்கொளியூர் அவிநாசியே - திருப்புக் கொளியூர் அவிநாசியே, பற்றாக வாழ்வேன் - ஆதரவாகக் கொண்டு வாழ்கின்றேன், பசுபதியே-ஆன்மாக்களுக்குத் தலைவனே, பரமேட்டியே - மேலான யஜ்ஞரூபனே, எத்தால் மறக்கேன் - உன்னை யெவ்வகையால் மறக்கப்போகிறேன் எ-று.

(போ-ரை) எம்பெருமானாகிய வுன்னையே எழ்பிறப்புக்கும் உற்றவனென்று உன்னையே நினைக்கின்றேன், மனத்தாலறிந்து புற்றில் வாழ்கின்ற ஆடு பாம்பனே, திருப்புக்கொளியூர் அவிநாசியே ஆதரவாகக் கொண்டு வாழ்கின்றேன், ஆன்மாக்களுக்குத் தலைவனே, மேலான யஜ்ஞரூபனே உன்னை யெவ்வகையால் மறக்கப்போகிறேன்.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில்வாழ்கின்ற சிவபெருமானே உன்னை யெவ்வகையால் நான் மறக்கப் போகிறேன் என்பதாம்.

(வி-ரை.) பசுபதி - ஆன்மாக்களுக்குத் தலைவன். (1)

**வழிபோவார்தம்மோடும்வந்துடன்கூடியமாணிநீ**
**யொழிவதழகோசொல்லாயருளோங்குசடையானே**
**பொழிலாருஞ்சோலைப்புக்கொளியூரிற்குளத்திடை**
**யிழியாக்குளித்தமாணியென்னைக்கிறிசெய்ததே.**

(ப-ரை.) வழிபோவார் தம்மோடும் வந்து - வழிச்செல்வோருடன் வந்து, உடன்கூடிய மாமணி நீ - உடன் சேர்ந்த பெரிய மணியாகிய நீ, ஒழிவது அழகோ சொல்லாய் - என்னைவிட்டு நீங்குவது அழகோ சொல்லக்கடவாய், அருள் ஓங்கு - அருள் மிகுந்த, சடையானே - சடையனே, பொழில் ஆரும் சோலை-பெருமைபொருந்திய சோலைகள் சூழ்ந்த, புக்கொளியூரில் குளத்திடை - திருப்புக்கொளியூர்க் குளத்தில், இழியா-இறங்கி, குளித்த - முழுகின, மாணி - பிரமசாரியாகிய பாலகன், என்னைக் கிறிசெய்தது - செய்த குற்றம்யாது எ-று.

(போ-ரை.) வழிச்செல்வோருடன்வந்து உடன் சேர்ந்த பெரிய மணியாகிய நீ, என்னைவிட்டு நீங்குவது அழகோ சொல்லக்கடவாய், அருள் மிகுந்த சடையனே, பெருமை பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருப்புக்கொளியூர்க் குளத்தில் இறங்கி முழுகின் பிரமசாரியாகிய பாலகன் செய்த குற்றம் யாது.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, நீ யென்னை யொழிவது அழகாமோ வென்பதாம்.

(வி ரை.) இழியா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். மாணி - பிரமசாரி. (2)

**எங்கேனும்போகினுமெம்பெருமானைநினைந்தக்காற்**
**கொங்கேபுகினுங்கூறைகொண்டாறலைப்பாரிலைப்**
**பொங்காடரவாபுக்கொளியூரவிநாசியே**
**யெங்கோனேயுனைவேண்டிக்கொள்வேன்பிறவாமையே.**

(ப-ரை.) எங்கேனும் போகினும் - எங்குச் சென்றாலும், எம்பெருமானை நினைந்தக்கால் - எம்பெருமானை நினைத்தால், கொங்கே புகினும்-கொங்குநாட்டிற் சென்றாலும், கூறைகொண்டு - ஆடையைக் கவர்ந்து கொண்டு, ஆறு அலைப்பார் இல்லை - வழிபறிப்பாரில்லை, பொங்கு ஆடு அரவா - சீறுகின்ற ஆடரவனே, புக்கொளியூர் அவிநாசியே - திருப்புக்கொளியூர் அவிநாசியே, எம்கோனே - எம்மிறைவனே, பிறவாமை உன்னை வேண்டிக்கொள்வேன் - பிறவாதிருக்கும்படி உன்னை வேண்டிக்கொள்ளாநின்றேன் எ-று.

(போ-ரை.) எங்குச் சென்றாலும் எம்பெருமானை நினைத்தால் கொங்குநாட்டிற் சென்றாலும் ஆடையைக்கவர்ந்துகொண்டு வழிபறிப்பாரில்லை,

சீறுகின்ற ஆடரவனே, திருப்புக்கொளியூர் அவிநாசியே, எம்மிறைவனே பிறவாதிருக்கும்படி உன்னை வேண்டிக் கொள்ளாநின்றேன்.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, நான் இனிப் பிறவாதிருக்க அருள்செய்யவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) ஏனும் - ஆயினும் என்பதன் றிரிபு. (3)

**உரைப்பாருரையுகந்துள்கவல்லார் தங்களுச்சியா**
**யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்**
**புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே**
**கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே.**

(ப-ரை.) உரைப்பார் உரை உகந்து - சொல்வோரது சொல்லை யுவந்து, உள்கவல்லார் தங்கள் உச்சியாய் - புகழவல்லாரது சிரமேலுள்ளவனே, அரைக்கு ஆடு அரவா-திருவரையில் ஆடரவமுடையவனே, ஆதியும் அந்தமும் ஆயினாய் - முதலு முடிவுமானவனே, புரைக்காடு சோலை - பெரிய சோலைகள் சூழ்ந்த, புக்கொளியூர் அவிநாசியே-திருப்புக்கொளியூர் அவிநாசியே, கரைக்கான் முதலையை-கரையிலுள்ள காட்டுமுதலையை, காலனை - யமனை, பிள்ளைதரச்சொல்லு - பிள்ளையைத் தரச்சொல்வாயாக எ-று.

(பொ-ரை.) சொல்வோரது சொல்லையுவந்து புகழவல்லாரதுசிரமேலுள்ளவனே, திருவரையில் ஆடரவமுடையவனே, முதலு முடிவுமானவனே, பெரியசோலைகள் சூழ்ந்த திருப்புக்கொளியூர் அவிநாசியே, கரையிலுள்ள காட்டுமுதலையை யமனை பிள்ளையைத் தரச்சொல்வாயாக.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவ பெருமானே, முதலையுண்ட பிள்ளையைத் தரும்படி காலனுக்கு கட்டளையிடுவாயாக வென்பதாம்.

(வி-ரை.) உரைப்பார் - புகழ்வோர். உகந்து - மகிழ்ந்து. உள்கவல்லார் - நினைக்கவல்லார். உச்சியாய் - சிரசில் வீற்றிருப்பவனே. அரைக்கு- அரையில் (உருபு மயக்கம்). புரை. உயர்ச்சி. (4)

**அரங்காவதெல்லாமாயிடுகாடதுவன்றியுஞ்**
**சரங்கோலைவாங்கிவரிசிலைநாணியிற்சந்தித்துப்**
**புரங்கெடவெய்தாய்புக்கொளியூரவிநாசியே**
**குரங்காடுசோலைக்கோயில்கொண்டகுழகனே.**

(ப-ரை.) அரங்கு ஆவது எல்லாம் - ஆடிடமாவதெல்லாம், ஆய் இடுகாடு - ஆராய்ந்த இடுகாடு, அது அன்றியும் - அதுவல்லாமலும், சரங் கோலைவாங்கி - கையில் அம்பையெடுத்து, வரிசிலை நாணியில் சந்தித்து- நீண்ட வில்நாணில் தொடுத்து, புரம்கெட எய்தாய் - முப்புரமழிய எய்

தனே, புக்கொளியூர் அவிநாசியே - திருப்புக்கொளியூர் அவிநாசியிலிருப்ப வனே, குரங்கு ஆடுசோலைக் கோயில்கொண்ட - குரங்காடுசோலையைக் கோயிலாகக் கொண்ட, குழகனே-அழகனே எ-று.

(போ-ரை.) ஆடிடமாவதெல்லாம் ஆராய்ந்த இடுகாடு, அது வல்லாமலும் கையில் அம்பையெடுத்து நீண்ட வில்நாணில் தொடுத்து முப்புரமழிய எய்தனே, திருப்புக்கொளியூர் அவிநாசியிலிருப்பவனே, குரங்காடு சோலையைக் கோயிலாகக் கொண்ட அழகனே.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, என்னையாண்டருள வேண்டுமென்பதாம்.

(வி-ரை.) சரம்கோல் - ஒரு பொருட் பன்மொழி. (அம்பு) (5)

**நாத்தானுமுனைப்பாடலின்றிநவிலாதென்னுச்**
**சோத்தென்றுதேவர்தொழநின்றசுந்தரச்சோதியாய்**
**பூத்தாழ்சடையாய்புக்கொளியூரவிநாசியே**
**கூத்தாவுனக்குநானுட்பட்டகுற்றமுங்குற்றமே.**

(ப-ரை.) உன்னை பாடல் இன்றி - உன்னைப் பாடாமல், என் நாத்தானும் நவிலாது - என் நாவும் வேறொருவரைப் புகழாது, தேவர் சோத்து என்று தொழநின்ற - தேவர்கள் அஞ்சலியென்று தொழும் வண்ணம் நின்ற, சுந்தரச் சோதியாய் - அழகுள்ள ஒளியுருவனே, பூதாழ் சடையாய் - அழகாகிய நீண்ட சடையையுடையவனே, புக்கொளியூர் அவிநாசியே - திருப்புக்கொளியூர் அவிநாசியிலிருப்பவனே, கூத்தா-கூத்தனே, உனக்குநான் ஆட்பட்ட குற்றமும் குற்றமே - உனக்கு நான் அடிமைப்பட்ட குற்றமும் குற்றமேயாம் எ-று.

(போ-ரை.) உன்னைப் பாடாமல் என்நாவும் வேறொருவரைப் புகழாது, தேவர்கள் அஞ்சலி யென்று தொழும்வண்ணம் நின்ற அழகுள்ள ஒளியுருவனே, அழகாகிய நீண்ட சடையையுடையவனே, திருப்புக்கொளியூர் அவிநாசியிலிருப்பவனே, கூத்தனே, உனக்கு நான் அடிமைப் பட்ட குற்றமும் குற்றமேயாம்.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, நான் உனக்கு ஆட்பட்டது குற்றந்தானோவென்பதாம்.

(வி-ரை.) நாத்தானும் - நாவும். தான் - அசை. நவிலாது - சொல்லாது. சோத்து சோத்தம் என்பதன் விகாரம். இதற்கு அஞ்சலி யென்பது பொருள். (6)

**மந்திகடுவனுக்குண்ணப்பழநாடிமலைப்புறஞ்**
**சந்திகடோறுஞ்சலபுட்பமிட்டுவழிபடப்**
**புந்தியுறைவாய்புக்கொளியூரவிநாசியே**
**நந்தியுனைவேண்டிக்கொள்வேனரகம்புகாமையே.**

(ப-ரை.) மந்தி - பெண்குரங்கு, கடுவனுக்கு - ஆண் குரங்குக்கு, உண்ண - உண்டற்கு, பழம்நாடி - கனிகளைத்தேடி, மலைப்புறம் சந்திகள் தோறும் - மலைகளின் புறத்தேயுள்ள சந்திகள்தோறும், சலப்பட்பம் இட்டு வழிபட-நீரையும் மலரையுங் கொண்டு வழிபடாநிற்க, புந்தி உறைவாய் - அவர்களுடைய மனத்தில் வாழ்பவனே, புக்கொளியூர் அவிநாசியே-திருப்புக்கொளியூர் அவிநாசியே, நந்தி—, நரகம் புகாமை—, உன்னை வேண்டிக்கொள்வேன்-உன்னை வேண்டிக்கொள்ளாநின்றேன் எ-று.

(போ-ரை.) பெண்குரங்கு ஆண்குரங்குக்கு உண்டற்கு கனிகளைத் தேடி மலைகளின் புறத்தேயுள்ள சந்திகள்தோறும், நீரையும் மலரையும் கொண்டு வழிபடாநிற்க அவர்களுடைய மனத்தில் வாழ்பவனே, திருப்புக்கொளியூர் அவிநாசியே, நரகம்புகாமை உன்னை வேண்டிக்கொள்ளாநின்றேன்.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, நான் நரகமடையாமல் கிருபை செய்தருளவேண்டுமென்பதாம்.

(வி-ரை.) புந்தி - புத்தி. (7)

**பேணுதொழிந்தேனுன்னையலாற்பிறதேவரைக்**
**காணுதொழிந்தேன்காட்டுதியேலின்னங்காண்பனுன்**
**பூணுணாவாபுக்கொளியூரவிநாசியே**
**காணுதகண்கள்காட்டவல்லகறைக்கண்டனே.**

(ப-ரை.) உன்னை அல்லால் பிறதேவரை - உன்னையன்றி வேறு தேவரை, பேணுது ஒழிந்தேன் - விரும்பாதொழிந்தேன், காணுது ஒழிந்தேன் - கண்ணிஞற் காணுமலும் ஒழிந்தேன், காட்டுதியேல் - காட்டுவையாயின், இன்னம் நான் காண்பன் - இன்னமும் நான் காண்பேன், பூண் நாண் அரவா - பூண்பதற்குரிய அரைநாணும் பாம்பாகவுடையவனே, புக்கொளியூர் அவிநாசியே - திருப்புக்கொளியூர் அவிநாசியிலிருப்பவனே, காணுத கண்கள் காட்டவல்ல கறைக்கண்டனே - காணுத கண்களுக்கும் காட்டவல்ல விஷகண்டனே எ-று.

(போ-ரை.) உன்னையன்றி வேறு தேவரை விரும்பாதொழிந்தேன், கண்ணிஞற் காணுமலும் ஒழிந்தேன், காட்டுவையாயின் இன்னமும் நான் காண்பேன், பூண்பதற்குரிய அரைநாணும் பாம்பாகவுடையவனே, திருப்புக்கொளியூர் அவிநாசியிலிருப்பவனே, காணுத கண்களுக்கும் காட்டவல்ல விஷகண்டனே.

(க-ரை.) திருப்புக் கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, நான் பிறதேவரை விரும்பாதொழிந்தேன் என்பதாம். (8)

**நள்ளாறுதெள்ளாறரத்துறைவாவெங்கணம்பனே**
**வெள்ளாடைவேண்டாய்வேங்கையின்றோலைவிரும்பினாய்**
**புள்ளேறுசோலைப்புக்கொளியூரிற்குளத்திடை**
**யுள்ளாடப்புக்கமாணியெனைக்கிறிசெய்ததே.**

(ப-ரை.) நள்ளாறு தெள்ளாறு அரத்துறைவா-திருநள்ளாறு திருத்தெள்ளாறு திருவர்த்துறை யென்பவற்றை யுடையவனே, எங்கள் நம்பனே - எமது மங்களகுண பூரணனே, வெள்ளாடை வேண்டாய்-வெள்ளுடையை விரும்பாதவனே, வேங்கையின்தோலை விரும்பினாய் - புலித்தோலை விரும்பினவனே, புள் எறுசோலை-பறவைகள் மிக்க சோலை சூழ்ந்த, புக்கொளியூரில் - திருப்புக்கொளியூரில், குளத்திடையுள் ஆடப்புக்க-குளத்தில் முழுகவந்த, மாணி - பிரமசாரி, என்னைகிறிசெய்தது - என்ன குற்றஞ்செய்தது எ-று.

(போ-ரை) திருநள்ளாறு திருத்தெள்ளாறு திருவரத்துறை யென்பவற்றை யுடையவனே, எமது மங்களகுணபூரணனே, வெள்ளுடையை விரும்பாதவனே, புலித்தோலை விரும்பினவனே, பறவைகள் மிக்கசோலை சூழ்ந்த திருப்புக்கொளியூரில் குளத்தில் முழுகவந்த பிரமசாரி என்ன குற்றஞ் செய்தது.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசிச் சிவபெருமானே, குளத்திற் குளிக்கப்புகுந்த சிறுவன் செய்த குற்றமென்னென்பதாம். (9)

**நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்**
**போரேறதேறியைப்புக்கொளியூரவிநாசியைக்**
**காரேறுகண்டனைத்தொண்டனாரூரன்கருதிய**
**சீரேறுபாடல்கள்செப்பவல்லார்க்கில்லைதுன்பமே.**

(ப-ரை.) நீர் ஏற ஏறும் நிமிர் புன்சடை-கங்கைநீர் ஏறவுயரும் சடையையுடைய, நின்மலமூர்த்தியை - நின்மலவுருவனை, போர் ஏறு ஏறியை - போர்க்குரிய எருதேறியை, புக்கொளியூர் அவிநாசியை - திருப்புக்கொளியூர் அவிநாசியை, கார் ஏறு கண்டனை-கருமை மிகுந்த கண்டத்தை யுடையவனை, தொண்டன் ஆரூரன் கருதிய - சுந்தரன் நினைந்துசொன்ன, சீர் ஏறுபாடல்கள் செப்பவல்லார்க்கு - சிறப்புமிக்க பாடல்களைச் சொல்லவல்லார்க்கு, துன்பம் இல்லை - துன்பமில்லை எ-று.

(போ-ரை.) கங்கைநீர் ஏறவுயரும் சடையையுடைய நின்மலவுருவனை, போர்க்குரிய எருதேறியை, திருப்புக்கொளியூர் அவிநாசியை, கருமை மிகுந்த கண்டத்தை யுடையவனை, சுந்தரன் நினைந்துசொன்ன சிறப்புமிக்க பாடல்களைச் சொல்லவல்லார்க்கு துன்பமில்லை.

(க-ரை.) திருப்புக்கொளியூர் அவிநாசிச்சிவபிரானை, திருநாவலூரன் புகழ்ந்து பாடின இந்தப் பத்துப் பாடலுங்கற்றுப் பாடவல்லார்க்குத் துன்பமில்லை யென்பதாம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அவிநாசியப்பர். தேவியார்-பெருங்கருணைநாட்டத்தம்மை.

---

## திருநறையூர்ச்சித்தீச்சரம்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

**நீரும்மலருந்நிலவுஞ்சடைமே**
**லூரும்மரவும்முடையானிடமாம்**
**வாரும்மருவிமணிபொன்கொழித்துச்**
**சேரும்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) வாரும் - ஒழுகாநின்ற, அருவி - அருவியாறுகள், மணி பொன்கொழித்து-மணிகளையும் பொன்னையும் கொழித்து, சேரும்நறையூர்ச்சித்தீச்சரமே - வருகிற திருநறையூர் சித்தீச்சரமே, நீரும்மலரும் நிலவும் - கங்கையையும் மலரையும் பிறையையும், சடைமேல் ஊரும் அரவும் உடையான் இடம் ஆம் - சடைமீது தவழ்கிற பாம்பும் உடையவனது இடமாகும் எ-று.

(பொ-ரை.) ஒழுகாநின்ற அருவியாறுகள் மணிகளையும் பொன்னையும் கொழித்துவருகிற திருநறையூர்ச் சித்தீச்சரமே, கங்கையையும் மலரையும் பிறையையும் சடைமீது தவழ்கிற பாம்பும் உடையவனது இடமாகும்.

(க-ரை.) கங்காதரனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம்.

(வி-ரை.) வார்தல் - ஒழுகுதல். கொழித்தல் - தெள்ளுதல். நிலவும்- நிலாவும். (பிறையும்) (1)

**அலைப்பையரவேரிடையாளஞ்சத்**
**துளைக்கைக்கரித்தோலுரித்தானிடமாம்**
**வளைக்கைம்மடவார்மடுவிற்றடநீர்**
**திளைக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) வளைகைமடவார்-வளையலணிந்த கையினையுடைய மாதர்—, மடுவில் - மடுக்களில், தடம்நீர் திளைக்கும் - பெரிய நீரில் மூழ்கி விளையாடுகிற, நறையூர்ச் சித்தீச்சரமே - திருநறையூர் சித்தீச்சரமே, அளை - புற்றில் வாழ்கிற, பை - படத்தையுடைய, அரவு ஏர் இடையாள் - பாம்பை நிகர்த்த இடையையுடையவள், அஞ்ச - அஞ்சும்படி, துளைக்கைக் கரித்தோல் - துவாரமுள்ள துதிக்கையினையுடைய யானையின்தோலை, உடுத்தான் இடம் ஆம் - போர்த்துக் கொண்டவற்கு இடமாகும் எ-று.

(பொ-ரை.) வளையலணிந்த கையினையுடைய மாதர் மடுக்களில் பெரியநீரில் மூழ்கி விளையாடுகிற திருநறையூர்ச் சித்தீச்சரமே, புற்றில் வாழ்கிற படத்தையுடைய பாம்பைநிகர்த்த இடையையுடையவள் அஞ்சும்படி துவாரமுள்ள துதிக்கையினையுடைய யானையின்தோலை போர்த்துக் கொண்டவனுக்கு இடமாகும்.

(க-ரை.) சர்ப்பாபரணனாகிய சிவபிரானுக்கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம். (2)

**இகழுந்தகையோரெயின்மூன்றெரித்த**
**பகழியொடுவில்லுடையோன்பதிதான்**
**முகிழ்மென்முலையார்முகமேகமலந்**
**திகழுந்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) முகிழ் - தாமரை யரும்பு போன்ற, மெல் முலையார்-மெல்லிய முலைகளையுடைய மாதரது, முகமே - முகமே, கமலம் திகழும்-தாமரைமலர்போல விளங்குகிற, நறையூர்ச் சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, இகழும் தகையோர் - இகழுங் குணத்தை யுடையவராகிய திரிபுரத்தாரது, எயில் மூன்று எரித்த - மும்மதில்களையு மெரித்த, பகழியொடு - அம்போடும், வில் உடையோன் - வில்லையுமுடையோனது, பதியாம் - இடமாகும் எ-று.

(பொ-ரை) தாமரை யரும்புபோன்ற முலைகளையுடைய மாதரது முகமே, தாமரைமலர்போல விளங்குகிற திருநறையூர்ச் சித்தீச்சரமே, இகழுங் குணத்தையுடையவராகிய திரிபுரத்தாரது மும்மதில்களையு மெரித்த அம்போடும் வில்லையுமுடையோனது இடமாகும்.

(க-ரை.) முப்புரத்தை யழித்த சிவபிரானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம். (3)

**மறக்கொளரக்கன்வரைத்தோள்வரையா**
**லிறக்கொள்விரற்கோனிருக்குமிடமா**
**நறக்கொள்கமலந்நனிபள்ளியெழத்**
**திறக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) நறக்கொள் கமலம் - மணங்கொண்ட தாமரைமலரினின்றும், நனிபள்ளியெழ - மிகுதியாய்ப் பள்ளியினின் றெழும்வண்ணம், திறக்கும் - திறக்கிற, நறையூர்ச் சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, மறம்கொள் அரக்கன் - கோவங்கொண்ட அரக்கனது, வரைத்தோள் - மலையை நிகர்த்த புயங்கள், வரையால் - கைலாய மலையினால், இறக்கொள் விரல்கோன் - நெரியும்படி செய்த விரலையுடைய இறைவன், இருக்கும் இடம் ஆம் - இருக்கும் இடமாகும் எ-று.

(பொ-ரை.) மணங்கொண்ட தாமரைமலரினின்றும் மிகுதியாய்ப் பள்ளியினின் றெழும்வண்ணம் திறக்கிற திருநறையூர்ச் சித்தீச்சரமே, கோவங்கொண்ட அரக்கனது மலையை நிகர்த்த புயங்கள் கைலாயமலையினால் நெரியும்படிசெய்த விரலையுடைய இறைவன் இருக்குமிடமாகும்.

(க-ரை.) இராவணசங்காரியாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம். (4)

**முழுநீறணிமேனியன்மொய்குழலா**
**ரெழுநீர்மைகொள்வானமரும்மிடமாங்**
**கழுநீர்கமழக்கயல்சேலுகளுஞ்**
**செழுநீர்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) கழுநீர்கமழ - செங்கழுநீர் மலர் பரிமளிக்க, கயல் சேல் உகளும் - கயல்மீன்களும் சேல்மீன்களும் துள்ள, செழுநீர் - செழுமையாகிய நீரையுடைய, நறையூர்ச் சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, முழுநீறு அணி மேனியன் - முழுநீறு தரிக்கிற திருமேனியையுடையவன், மொய்குழலார் - மாதர், எழும் நீர்மை கொள்வான் - எழுகின்ற தன்மையைக் கவர்பவன், அமரும் இடம் ஆம் - வீற்றிருக்குமிடமாகும் எ-று.

(பொ-ரை.) செங்கழுநீர்மலர் பரிமளிக்க, கயல்மீன்களும் சேல்மீன்களும் துள்ள, செழுமையாகிய நீரையுடைய திருநறையூர்ச் சித்தீச்சரமே, முழுநீறு தரிக்கிற திருமேனியையுடையவன், மாதர் எழுகின்ற தன்மையைக் கவர்பவன், வீற்றிருக்குமிடமாகும்.

(க-ரை.) முழுநீறணிவோனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம். (5)

**ஊனாருடைவெண்டலையுண்பலிகொண்**
**டானாரடலேறமர்வானிடமாம்**
**வானார்மதியம்பதிவண்பொழில்வாய்த்**
**தேனார்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) வான் ஆர் மதியம் பதிவள் பொழில்வாய் - ஆகாயத்திலுள்ள சந்திரனைத் தொடுகிற வளவிய சோலையில், தேன் ஆர்-வண்டுகள் நிறைந்த, நறையூர்ச் சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, ஊன் ஆர்-மாமிசம்பொருந்திய, உடை - உடைந்த, வெள் தலை-வெள்ளிய தலையோட்டில், உண்பலிகொண்டான்-உண்ணுதற்குரிய பிக்ஷைச்சோற்றையேற்பவன், ஆர் அடல் - மிகுந்த வெற்றியையுடைய, ஏறு அமர்வான் - இடபத்தின்மேல்மர்ந்திருப்பவனது, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(பொ-ரை.) ஆகாயத்திலுள்ள சந்திரனைத் தொடுகிற வள்விய சோலையில் வண்டுகள் நிறைந்த திருநறையூர்ச் சித்தீச்சரமே, மாமிசம் பொருந்திய உடைந்த வெள்ளிய தலையோட்டில் உண்ணுதற்குரிய பிக்ஷைச்சோற்றை யேற்பவன், மிகுந்த வெற்றியையுடைய இடபத்தின் மேலமர்ந்திருப்பவனது இடமாகும்.

(கு-ரை.) வெண்டலையிற் பலியேற்கிற சிவபிரானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம். (6)

**காரூர்கடலில்விடமுண்டருள்செய்**
**நீரூர்சடையன்னிலவும்மிடமாம்**
**வாரூர்முலையார்மருவும்மறுகிற்**
**றேரூர்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) வார் ஊர் முலையார்மருவும் மறுகில்-கச்சணிந்த தனங்களையுடைய மாதர் சஞ்சரிக்கிற தெருவில், தேர் ஊர் - தேர்கள் தவழ்கிற, நறையூர்ச்சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, கார் ஊர் கடலில் விடம் உண்டு-கருமையையுடைய பாற்கடல் விஷத்தையுண்டு, அருள் செய்-அருள்செய்த, நீர் ஊர் சடையன் - கங்கைச் சடையன், நிலவும் இடம் ஆம் - நிலைபெற்றிருக்கிற இடமாகும் எ-று.

(பொ-ரை.) கச்சணிந்த தனங்களையுடைய மாதர் சஞ்சரிக்கிற தெருவில் தேர்கள் தவழ்கிற திருநறையூர்ச் சித்தீச்சரமே, கருமையையுடைய பாற்கடல் விஷத்தையுண்டு அருள்செய்த கங்கைச்சடையன், நிலைபெற்றிருக்கிற இடமாகும்.

(கு-ரை.) காளகண்டனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம்.

(வி-ரை.) மறுகு - தெரு. நிலவும் - விளங்குகிற, நிலைபெற்றிருக்கிற என்னினுமாம். (7)

**கரியினுரியுங்கலைமான்மறியு**
**மெரியும்மழுவும்முடையானிடமாம்**
**புரியும்மறையோர்நிறைசொற்பொருள்க**
**டெரியுந்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) புரியும் மறையோர் - விரும்புகிற வேதியர், நிறைசொல் பொருள்கள் தெரியும் - நிறைந்த சொற்பொருள்களை யறிந்துகொள்ளுதற்குரிய, நறையூர்ச்சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, கரியின் உரியும்-யானைத்தோலையும், கலைமான்மறியும்-கலைமான் கன்றும், எரியும் மழுவும் - எரிகிற மழுவும், உடையான் - உடையவனது, இடம் ஆம்-இடமாகும் எ-று.

(பொ-ரை.) விரும்புகிற வேதியர் நிறைந்த சொற்பொருள்களை யறிந்துகொள்ளுதற்குரிய திருநறையூர்ச் சித்தீச்சரமே, யானைத்தோலும் கலைமான் கன்றும் எரிகிற மழுவும் உடையவனது இடமாகும்.

(க-ரை.) யானைத்தோல் முதலியவற்றையுடையவனாகிய சிவபிரானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம். (8)

**பேணாமுனிவன்பெருவேள்வியெலா**
**மாணாமைசெய்தான்மருவும்மிடமாம்**
**பாணார்குழலும்முழவும்விழவிற்**
**சேணார்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) பாண் ஆர் குழலும் - இசையையுடைய குழலும், முழவும் - மத்தளமும், விழவில் - திருவிழாவில், சேண் ஆர் - ஆகாயத்தை யளாவிய, நறையூர்ச் சித்தீச்சரமே - திருநறையூர்ச் சித்தீச்சரமே, பேணா முனிவன் - மதியாத தக்கனது, பெருவேள்வியெல்லாம் - பெரிய யாக முழுதும், மாணாமை செய்தான் - பெருமையடையாமற் செய்தவன், மருவும் இடம் ஆம் - எழுந்தருளி யிருக்குமிடமாகும் எ-று.

(பொ-ரை.) இசையையுடைய குழலும், மத்தளமும், திருவிழாவில் ஆகாயத்தை யளாவிய திருநறையூர்ச் சித்தீச்சரமே, மதியாத தக்கனது பெரிய யாகமுழுதும் பெருமையடையாமற் செய்தவன் எழுந்தருளி யிருக்குமிடமாகும்.

(க-ரை.) தக்கனது யாகத்தை யழித்தவனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம்.

(வி-ரை.) பாண் - இராகம். குழல் - வேய்ங்குழல். மாணாமை செய்தான் - சிறவாமற் செய்தவன் (அழித்தவன்.) (9)

**குறியில்வழுவாக்கொடுங்கூற்றுதைத்த**
**வெறியும்மழுவாட்படையானிடமாம்**
**நெறியில்வழுவாநியமத்தவர்கள்**
**செறியுந்நறையூர்ச்சித்தீச்சரமே.**

(ப-ரை.) நெறியில் வழுவா - ஒழுக்கத்தில் தவறாத, நியமத்தவர்கள் - நியமமுடையவர், செறியும் - நெருங்கின, நறையூர் சித்தீச்சரமே - திரு

நறையூர்ச் சித்தீச்சரமே, குறியில் வழுவா - குறியில் தவறாத, கொடுங் கூற்று உதைத்த-கொடிய யமனை உதைத்த, எறியும் - பகைவரை வெட்டுகிற, மழுவாள் படையான் - மழுவாகிய வாளாயுதத்தை யுடையவனது, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(பொ-ரை.) ஒழுக்கத்தில் தவறாத நியமமுடையவர் நெருங்கின திருநறையூர்ச் சித்தீச்சரமே, குறியில் தவறாத கொடிய யமனையுதைத்த பகைவரை வெட்டுகிற மழுவாகிய வாளாயுதத்தை யுடையவனது இடமாகும்.

(கு-ரை.) கூற்றுதைத்தவனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருநறையூர்ச் சித்தீச்சரமே யென்பதாம்.

(வி-ரை.) செறிதல் - நெருங்கல். குறி - எண்ணம், அன்றி இலக்கு எனினு மமையும். எறிதல் - வெட்டுதல். (10)

போரார்புரமெய் தபுனிதன்னமருஞ்
சீரார்நறையூர்ச்சித்தீச்சரத்தை
யாரூரன்சொல்லிவைவல்லவர்க
ளேரார்இமையோருலகெய் துவரே.

(ப-ரை.) போர் ஆர் - போர்த்தொழில் நிறைந்த, புரம் எய்த - முப்புரத்தை யொழித்த, புனிதன் அமரும்-பரிசுத்தன் எழுந்தருளியிருக்கிற, சீர் ஆர் நறையூர்ச் சித்தீச்சரத்தை - சிறப்புப் பொருந்திய திருநறையூர்ச் சித்தீச்சரத்தை, ஆரூரன் - சுந்தரன், சொல் - சொல்லிய, இவை வல்லவர்கள் - இப்பாடல்களைக் கற்று வல்லவர்கள், ஏர் ஆர் - அழகு நிறைந்த, இமையோர் உலகு-சுவர்க்கலோகத்தை, எய்துவர்-அடைவார்கள் எ-று.

(பொ-ரை.) போர்த்தொழில் நிறைந்த முப்புரத்தை யொழித்த பரிசுத்தன் எழுந்தருளியிருக்கிற சிறப்புப் பொருந்திய திருநறையூர்ச் சித்தீச்சரத்தை சுந்தரன் சொல்லிய இப் பாடல்களைக் கற்று வல்லவர்கள் அழகு நிறைந்த சுவர்க்கலோகத்தை அடைவார்கள்.

(கு-ரை.) திருநறையூர்ச் சித்தீச்சரத் தெம்பெருமானை, ஆரூரன் புகழ்ந்து பாடின இப் பத்துப் பாடலுங் கற்றுவல்லார் சுவர்க்கலோகத் தையடைவர் என்பதாம்.

(வி-ரை.) இமையோருலகு - சிவலோகம் எனினுமாம். (11)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சித்தநாதேசர். தேவியார் - அழகாம்பிகை.

## திருச்சோற்றுத்துறை

பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

அழனீரொழுகியனையசடையு
முழையீருரியுமுடையானிடமாங்
கழைநீர்முத்துங்கனகக்குவையுஞ்
சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே.

(ப-ரை.) கழை-மூங்கிலிலுண்டாகிய, நீர்-நற்குணமுள்ள, முத்தும் - முத்தமும், கனகக்குவையும் - பொற்குவைகளும், சுழல்நீர் - சுழலாநின்ற நீரினையுடைய, பொன்னி-காவிரிநதிக்கரையிலுள்ள, சோற்றுத்துறையே - திருச்சோற்றுத்துறையே, அழல் - நெருப்பே, நீர் ஒழுகி அனைய-நீரையொழுக்கினாற்போன்ற, சடையும்-சடைக்கற்றையும், உழை ஈர் உரியும்-குளிர்ந்ததோலும், உடையான்-உடையவனாகிய சிவபிரானது, இடம் ஆம்-இடமாகும் எ-று.

(பொ-ரை.) மூங்கிலிலுண்டாகிய நற்குணமுள்ள முத்தும் பொற்குவைகளும் சுழலாநின்ற நீரினையுடைய காவிரிக்கரையிலுள்ள திருச்சோற்றுத்துறையே, நெருப்பே நீரை யொழுக்கினாற்போன்ற சடைக்கற்றையும் குளிர்ந்த தோலும் உடையவனாகிய சிவபிரானது இடமாகும்.

(க-ரை.) செஞ்சடையையுடைய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருச்சோற்றுத் துறையே யென்பதாம்.

(வி-ரை.) கழை - மூங்கில், கரும்புமாம். ஈர்உரி யென்பதற்கு உரித்ததோல் என்றுரைத்தலுமாம். (1)

பண்டைவினைகள்பறியநின்ற
அண்டர்முதல்வனமலனிடமா
மிண்டைகொண்டன்பிடையறாத
தொண்டர்பரவுஞ்சோற்றுத்துறையே.

(ப-ரை.) இண்டை கொண்டு - தாமரை மலர்களால், அன்பு இடையறாத - அன்பு நீங்காத, தொண்டர் பரவும் - அடியார் வழிபடுகிற, சோற்றுத் துறையே, - திருச் சோற்றுத் துறையே, பண்டை-பழையனவாகிய, வல்வினைகள் - வலிய வினைகள், பறியநின்ற - ஒழியும்படி நின்ற, அண்டர் முதல்வன் - தேவர்களுக்குத் தலைவன், அமலன்-பரிசுத்தன் (அவனுக்கு) இடம் ஆம் - இடமாகும் எ-று.

(பொ-ரை.) தாமரைமலர்களால் அன்பு நீங்காத அடியார் வழிபடுகிற திருச்சோற்றுத் துறையே பழையனவாகிய வலிய வினைகள் ஒழியும்படி நின்ற தேவர்களுக்குத் தலைவன், பரிசுத்தன், (அவனுக்கு) இடமாகும்.

(க-ரை.) பாசநாசகனுகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருச் சோற்றுத் துறையே யென்பதாம்.

(வி-ரை.) பண்டை-முற்காலம். அண்டமுதல்வன் எனப் பாடமோதி உலககாரணன் என் றுரைத்தலுமாம்.

கோலவரவுங் கொக்கினிறகு
மாலைமதியும்வைத்தானிடமா
மாலும்மயிலுமாடலளியுஞ்
சோலைதருநீர்ச்சோற்றுத்துறையே.

(ப-ரை.) ஆலும் மயிலும் - ஆடுகிற மயில்களும், ஆடல் அளியும் - விளையாடுகிற வண்டுகளும், சோலைதரும் - சோலைகளில் உலாவுகிற, நீர் - நீர்வளமுள்ள, சோற்றுத் துறையே - திருச்சோற்றுத் துறையே, கோலம் அரவும் - அழகிய பாம்பினையும், கொக்கின் இறகும் - கொக்கிறகினையும், மாலைமதியும் - அந்திக் காலத்துப் பிறையையும், வைத்தான் - (சிரத்தில்) தரித்தவனுகிய சிவபிரானது, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(போ-ரை.) ஆடுகிற மயில்களும் விளையாடுகிற வண்டுகளும் சோலைகளில் உலாவுகிற நீர்வளமுள்ள திருச்சோற்றுத் துறையே, அழகிய பாம்பினையும் கொக்கிறகினையும் அந்திக் காலத்துப் பிறையையும் சிரத்தில் தரித்தவனுகிய சிவபெருமானது இடமாகும்.

(க-ரை.) சர்ப்பாபரணனுகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருச் சோற்றுத் துறையே யென்பதாம்.

(வி-ரை.) ஆலும் - ஆடுகிற. அளி - வண்டு. (3)

பளிக்குத்தாரைபவளவெற்பிற்
குளிக்கும்போல்நூற்கோமாற்கிடமா
மளிக்குமாத்தியல்லான்மதுவத்
துளிக்குஞ்சோலைச்சோற்றுத்துறையே.

(ப-ரை.) அளிக்கும் - கொடுக்குமியல்புள்ள, ஆத்தி அல்லால் - ஆத்தியல்லாமல் (மற்றையமரங்கள்), மதுவம் துளிக்கும் - தேனைத் துளிக்கிற, சோலை - சோலைகள் சூழ்ந்த, சோற்றுத் துறையே - திருச்சோற்றுத் துறையே, பளிக்குத்தாரை - பளிங்குநூல், பவளவெற்பில் - பவள மலை மீது, குளிக்கும்போல் - குளிப்பது போலத் தோன்றுகிற, நூல் - வெண் புரிநூலணிந்த, கோமாற்கு - இறைவனுக்கு, இடம் ஆம் - இடமாகும்.

(போ-ரை.) கொடுக்குமியல்புள்ள ஆத்தியல்லாமல் மற்றைய மரங் கள் தேனைத்துளிக்கிற சோலைகள் சூழ்ந்த திருச்சோற்றுத் துறையே, பளிங்குநூல் பவளமலைமீது குளிப்பதுபோலத் தோன்றுகிற வெண்புரி நூலணிந்த இறைவனுக்கு இடமாகும்.

(க-ரை.) சிவந்த திருமேனியில் வெண்புரிநூலணிந்த சிவபெருமா னுக் கிடமாயிருப்பது திருச்சோற்றுத் துறையே யென்பதாம்.

(வி-ரை) ஆத்தியல்லால் மதுவம் துளிக்குஞ் சோலை யென்றமையால், ஆத்திக்குத் தேன் துளிக்குந் தன்மை யில்லையென்றாயிற்று. துளித்தல்-சிந்துதல். இறைவனது திருமேனியாகிய பவளமலைமேல் வெண்புரிநூலாகிய பளிக்குத் தாரை தோன்றா நின்ற தென்க. (4)

உதையுங்கூற்றுக்கொல்காவிதிக்கு
வதையுஞ்செய்தமைந்தனிடமாக்
திதையுந்தாதுந்தேனுஞ்ஞிமிறுந்
துதையும்பொன்னிச்சோற்றுத்துறையே.

(ப-ரை.) திதையும் தாதும்-மிகாநின்ற மகரந்தமும், தேனும் ஞிமிறும் - தேன்வண்டுகளும் பொன்வண்டுகளும், துதையும் - நெருங்குகிற, பொன்னி - காவிரிநதிக்கரையிலுள்ள, சோற்றுத்துறையே - திருச்சோற்றுத்துறையே, உதையும் கூற்றுக்கு-யமனுக்கு உதையும், ஒல்காவிதிக்கு - அடங்காத தக்கனுக்கு, வதையும்செய்த - கொலையும்செய்த, மைந்தன் - வலியனது, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(பொ-ரை.) மிகாநின்ற மகரந்தமும் தேன் வண்டுகளும் பொன் வண்டுகளும் நெருங்குகிற காவிரிக்கரையிலுள்ள திருச்சோற்றுத் துறையே, யமனுக்கு உதையும் அடங்காத தக்கனுக்கு கொலையும் செய்த வலியனது இடமாகும்.

(க-ரை.) கூற்றுதைத்த சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருச்சோற்றுத் துறையே யென்பதாம்.

(வி-ரை.) திதைதல் - திணிதல். தேன் ஞிமிறு என்பன வண்டின் பேதங்கள். கூற்றையுதைத்தவன் என்பதும், தக்கனை வதைத்தவன் என்பதும் தோன்ற 'உதையும் கூற்றுக்கு ஒல்காவிதிக்கு வதையும் செய்த மைந்தன்,' என்றார். மைந்து - வலி, அதனையுடையவன் மைந்தன். (ரு)

ஓதக்கடனஞ்சினையுண்டிட்ட
பேதைப்பெருமான்பேணும்பதியாஞ்
சீதப்புனலுண்டெரியைக்காலுஞ்
சூதப்பொழில்சூழ்சோற்றுத்துறையே.

(ப-ரை.) சீதம்புனல் உண்டு - குளிர்ச்சியாகிய நீரையுண்டு, எரியைக் காலும் - நெருப்பைக் கக்குகிற, சூதப் பொழில் சூழ் - மாமரச்சோலை சூழ்ந்த, சோற்றுத்துறையே - திருச்சோற்றுத் துறையே, ஓதக்கடல் - அலைகளையுடைய பாற்கடலில் தோன்றின, நஞ்சினை உண்டிட்ட - விஷத்தையுண்ட, பேதைப் பெருமான் - அறியாமையை யுடைய பெருமான், பேணும் பதி ஆம் - விரும்புகிற இடமாகும் எ-று.

(போ-ரை.) குளிர்ச்சியாகிய நீரையுண்டு நெருப்பைக் கக்குகிற மாமரச்சோலை சூழ்ந்த திருச்சோற்றுத் துறையே, அலைகளையுடைய பாற்கடலில் தோன்றின விஷத்தையுண்ட அறியாமையை யுடைய பெருமான் விரும்புகிற இடமாகும்.

(க-ரை.) நஞ்சுண்ட சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருச்சோற்றுத் துறையே யென்பதாம்.

(வி-ரை.) காலல் - கக்குதல். (6)

இறந்தாரென்புமெருக்குஞ்சூடிப்
புறங்காட்டாடும்புனிதன்கோயில்
சிறந்தார்சுற்றந்திருவென்றின்ன
துறந்தார்சேருஞ்சோற்றுத்துறையே.

(ப-ரை.) சிறந்தார் - உயர்ந்தோர், சுற்றம் - உறவினர், திரு - செல்வம், என்ற - என்று சொல்லப்பட்ட, இன்ன - இவைபோல்வனவற்றை, துறந்தார் - ஒழித்தவர், சேரும் - சேர்கிற, சோற்றுத் துறையே - திருச்சோற்றுத் துறையே, இறந்தார் என்பும் - மாண்டவரது எலும்பையும், எருக்கும் - எருக்கம் பூவையும், சூடி - தரித்து, புறங்காட்டு ஆடும் - மயானத்தி லாடுகிற, புனிதன் - பரிசுத்தனது, கோயில் - திருக்கோயிலாகும்.

(போ-ரை.) உயர்ந்தோர் உறவினர் செல்வம் என்று சொல்லப்பட்ட இவைபோல்வனவற்றை ஒழித்தவர் சேர்கிற திருச்சோற்றுத் துறையே மாண்டவரது எலும்பையும் எருக்கம்பூவையும் தரித்து மயானத்திலாடுகிற பரிசுத்தனது திருக்கோயிலாகும்.

(க-ரை.) இறந்தோரது எலும்பு முதலியவற்றை யணியுஞ் சிவபெருமானுக் கிடமாயிருப்பது திருச்சோற்றுத் துறையே யென்பதாம். (7)

காமன்பொடியாக்கண்ணொன்றிமைத்த
ஓமக்கடலாருகந்தவிடமாந்
தேமன்குழலார்சேக்கைபுகைத்த
தூமம்விசும்பார்சோற்றுத்துறையே.

(ப-ரை.) தேம் - தேன், மன் - மிகுந்த, குழலார் - கூந்தலையுடைய மாதர், சேக்கை புகைத்த - படுக்கை யறையில் புகைத்த, தூமம் - புகை, விசும்பு ஆர் - ஆகாயத்திற் பரவுகிற, சோற்றுத் துறையே - திருச்சோற்றுத் துறையே, காமன் பொடி ஆ - மன்மதன் நீறாகும்படி, கண் ஒன்று இமைத்த - ஒரு கண்ணைத் திறந்த, ஓமக்கடவார் - மிக்க யாகாக்கினியை யுடையவர், உகந்த - விரும்பின, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(போ-ரை.) தேன் மிகுந்த கூந்தலையுடைய மாதர் படுக்கையறையில் புகைத்த புகை, ஆகாயத்திற் பரவுகிற திருச்சோற்றுத் துறையே, மன்மதன் நீறாகும்படி, ஒரு கண்ணைத் திறந்த மிக்க யாகாக்கினியை யுடையவர் விரும்பின இடமாகும்.

(க-ரை.) காமதகனனாகிய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருச்சோற்றுத் துறையே யென்பதாம். (8)

**இலையாலன்பாலேத்துமவர்க்கு**
**நிலையாவாழ்வைநீத்தாரிடமாந்**
**தலையாற்றாழுந்தவத்தோர்க்கென்றுந்**
**தொலையாச்செல்வச்சோற்றுத்துறையே.**

(ப-ரை.) தலையால் தாழும் - சிரத்தால் வணங்குகிற, தவத்தோர்க்கு- தவமுடையோருக்கு, என்றும் தொலையா - எந்நாளும் குறையாத, செல்வம்-செல்வம்நிறைந்த, சோற்றுத் துறையே-திருச்சோற்றுத் துறையே, இலையால்-பச்சிலையால், அன்பால் - அன்பினால், ஏத்துமவர்க்கு - துதிப்பவர்க்கு நிலையாவாழ்வை நீத்தார் - பொய்ச்செல்வத்தை யொழித்தவரது, இடம் ஆம் - இடமாகும் எ-று.

(பொ-ரை.) சிரத்தால் வணங்குகிற தவமுடையோருக்கு எந்நாளும் குறையாத செல்வம்நிறைந்த திருச்சோற்றுத் துறையே, பச்சிலையால் அன்பினால் துதிப்பவர்க்கு பொய்ச் செல்வத்தை யொழித்தவரது இடமாகும்.

(க-ரை.) அன்பருக்குப் பொய்யுலகவாழ்வை யொழிப்பவராகிய சிவபெருமானுக்கு இடமாயிருப்பது திருச்சோற்றுத்துறையே யென்பதாம்.

(வி ரை.) தாழ்தல் - வணங்குதல். இலையால்-பத்திரத்தால். (9)

**சுற்றார்தருநீர்ச்சோற்றுத்துறையுண்**
**முற்றாமதிசேர்முதல்வன்பாதத்**
**தற்றாரடியாரடிநாயூரன்**
**சொற்றாளிவைகற்றார் துன்பிலரே.**

(ப-ரை.) சுற்று - சுற்றிலும், ஆர்தரும் நீர் - நிறைந்த நீரையுடைய, சோற்றுத்துறையுள் - திருச்சோற்றுத் துறையுள் எழுந்தருளியிருக்கிற, முற்றாமதிசேர்-இளம்பிறையைத் தலையில் தரித்த, முதல்வன்-தலைவனது, பாதத்து-திருவடியைக் குறித்து, அற்றார் அடியார் அடிநாய்-பற்றற்றவர்களாகிய அடியார்க்கடியேனாகிய நாய், ஊரன்- சுந்தரன், சொல் - சொன்ன, இவை கற்றார் - இந்தப் பாடல்களைக் கற்றவர், துன்பு இலர் - துன்பமில்லாதவராவர் எ-று.

(பொ-ரை.) சுற்றிலும் நிறைந்த நீரையுடைய திருச்சோற்றுத் துறையுள் எழுந்தருளியிருக்கிற இளம்பிறையைத் தலையில் தரித்த முதல்வனது திருவடியைக் குறித்து பற்றற்றவர்களாகிய அடியார்க்கடியேனாகிய நாய் சுந்தரன் சொன்ன இந்தப் பாடல்களைக் கற்றவர் துன்பமில்லாதவராவர்.

(க-ரை.) திருச்சோற்றுத் துறைச் சிவபெருமானது திருவடிமீது திருநாவலூரன் சாத்தின இத் தமிழ்மாலையைக் கற்று வல்லார், துன்ப மற்றவராவர் என்பதாம்.

(வி-ரை.) அற்றார் - பற்றற்றவர். தான் - அசை. (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - தொலையாச்செல்வர். தேவியார் - ஒப்பிலாம்பிகை.

---

## திருவாரூர்

பண் - செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்

***மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே***
***மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தால்மிகவாடி***
***யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்***
***வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.***

(ப-ரை.) உமக்கே - தேவரீருக்கே, மீளா - திரும்பாத, அடிமையாளாய் - தொண்டனாய், பிறரை வேண்டாதே - அந்நியரை விரும்பாமல், மூளாதீப்போல் - மூண்டெரியாத நெருப்புப்போல, உள்ளே கனன்று - உள்ளே சுட்டு, முகத்தால் மிகவாடி - முகத்தால் மிகு வாட்டமடைந்து, ஆளாயிருக்கும் - அடிமையாயிருக்கிற, அடியார் - அடியவர், தங்கள் அல்லல் சொன்னக்கால்-தமது துன்பத்தைச் சொன்னால், வாளாங்கு இருப்பீர் - சும்மா இருப்பீர், திருவாரூரீர் - திருவாரூரரே, வாழ்ந்துபோதீரே-நீர்தாம் வாழ்ந்திருமே எ-று.

(போ-ரை.) தேவரீருக்கே திரும்பாத தொண்டனாய் அந்நியரை விரும்பாமல் மூண்டெரியாத நெருப்புப்போல உள்ளே சுட்டு முகத்தால் மிகு வாட்டமடைந்து அடிமையாயிருக்கிற அடியவர் தமது துன்பத்தைச் சொன்னால் சும்மா இருப்பீர், திருவாரூரரே நீர்தாம் வாழ்ந்திருமே.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபிரானே, அடியார் தமது துன்பத்தை விண்ணப்பம் செய்துகொண்டால், அதைப் பரிகரியாமல் சும்மாவிருக்கின்றீர், நீர்தாம் வாழ்ந்திருமே யென்பதாம்.

(வி-ரை.) மீளா - மீட்கப்படாத. வாழ்ந்து போதீரே யென்பதற்கு வாழ்ந்துபோவீரோ வென் றுரைப்பினுமாம். (1)

**விற்றுக்கொள்வீரொற்றியல்லேன்விரும்பியாட்பட்டேன்**
**குற்றமொன்றுஞ்செய்ததில்லைக்கொத்தையாக்கினீர்**
**எற்றுக்கடிகேளென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்**
**மற்றைக்கண்டாரன்றாரொழிந்தால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) ஒற்றி அல்லேன் - ஒற்றிவைக்கப்பட்டேனல்லேன், விற்றுக்கொள்வீர் - நீர் என்னை விற்றுக்கொள்ளக் கடவீர், விரும்பி ஆட்பட்டேன் - நானே விரும்பி உமக்கு அடிமைப்பட்டேன், குற்றம் ஒன்றும் செய்ததில்லை - ஒரு குற்றமும் செய்ததில்லை, கொத்தை ஆக்கினீர் - அடியேனை அறிவிலியாக்கிவிட்டீர், எற்றுக்கு - எதுக்கு, அடிகேள் - சுவாமீ, என் கண் கொண்டீர் - என் கண்ணைக் கவர்ந்துகொண்டீர், நீரே பழிபட்டீர் - நீரே பழிக்கப்பட்டீர், மற்றைக் கண்தாராது ஒழிந்தால் - மற்றைக் கண்ணையும் தராதொழிந்தால், வாழ்ந்துபோதீரே - நீர்வாழ்ந்துபோவீரோ எ-று.

(போ-ரை.) ஒற்றி வைக்கப்பட்டேனல்லேன், நீர் என்னை விற்றுக் கொள்ளக்கடவீர், நானே விரும்பி உமக்கு அடிமைப்பட்டேன், ஒரு குற்றமும் செய்ததில்லை, அடியேனை அறிவிலியாக்கி விட்டீர், எதுக்கு சுவாமி என் கண்ணைக் கவர்ந்து கொண்டீர், நீரே பழிக்கப்பட்டீர், மற்றைக் கண்ணையும் தராதொழிந்தால் நீர் வாழ்ந்து போவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபிரானே, குற்றமற்ற எம்மைக் கொத்தையாக்கினீர், நீர் வாழ்ந்து போவீரோ என்பதாம்.

(வி-ரை.) கொத்தை கொச்சை யென்பதன் விகாரம். (2)

**அன்றின்முட்டாதடையுஞ்சோலையாரூரகத்தீரே**
**கன்றுமுட்டியுண்ணச்சுரந்தகாலியவைபோல**
**வென்றுமுட்டாப்பாடுமடியார்தங்கண்காணாது**
**குன்றின்முட்டிக்குழியில்விழுந்தால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) அன்றில் - அன்றிற் பறவைகள், முட்டாது - தடைபடாமல், அடையும் - சேர்கின்ற, சோலை - சோலைசூழ்ந்த, ஆரூர் அகத்தீரே - திருவாரூரிலுள்ளவரே, கன்றுமுட்டி உண்ண - கன்று முட்டிக் குடிக்க, சுரந்த - பால்சுரந்த, காலி அவைபோல - பசுக்கூட்டமாகிய அவற்றைப் போல, வென்று முட்டப்பாடும் அடியார் - மேம்பட்டு முழுதும் பாடுகிற அடியவர், தம் கண் காணாது - தமது கண் தெரியாமல், குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால் - மலையை முட்டிப் பள்ளத்தில் விழுந்தால், வாழ்ந்து போதீரே - நீர் வாழ்ந்து போவீரோ எ-று.

(போ-ரை.) அன்றிற் பறவைகள் தடைபடாமல் சேர்கின்ற சோலை சூழ்ந்த திருவாரூரிலுள்ளவரே, கன்று முட்டிக் குடிக்க பால்சுரந்த பசுக்

கூட்டமாகிய அவற்றைப்போல மேம்பட்டு முழுதும் பார்க்கிற அடியவர், தமது கண் தெரியாமல் மலையை முட்டிப் பள்ளத்தில் விழுந்தால் நீர் வாழ்ந்து போவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபிரானே, உன்னடியார் கண்கெட்டுக் குழியில் வீழ்ந்தால் நீர் வாழ்ந்து போவீரோ என்பதாம்.

(வி-ரை.) அன்றில் - ஓர்பறவை. காலி - பசுக்கூட்டம். (3)

**துருத்தியுறைவீர்பழனம்பதியாச்சோற்றுத்துறையாள்வீ**
**ரிருக்கைதிருவாரூரேயுடையீர்மனமேயெனவேண்டா**
**வருத்தியுடையவடியார்தங்களல்லல்சொன்னக்கால்**
**வருத்திவைத்துமறுமைப்பணித்தால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) துருத்தி உறைவீர் - திருத்துருத்தியில் வாழ்வீர், பழனம் பதியா - திருப்பழனத்தை உறைவிடமாகக் கொண்டு, சோற்றுத்துறையாள்வீர் - திருச்சோற்றுத் துறையை யாள்வீர், இருக்கை திருவாரூரே உடையீர்-திருவாரூரையே இருப்பிடமாக வுடையீர், மனமே என வேண்டா - நெஞ்சே யெனவேண்டா, அருத்தி உடைய அடியார் - அன்புடைய அடியார், தங்கள் அல்லல் சொன்னக்கால் - தமது துன்பத்தைச் சொல்லிக் கொண்டால், வருத்திவைத்து மறுமைப்பணித்தால் - அவரைவருத்திவைத்து மறுதலையாகக் கட்டளையிட்டால், வாழ்ந்துபோதீரே-நீர் வாழ்ந்துபோவீரோ எ-று.

(பொ-ரை.) திருத்துருத்தியில் வாழ்வீர், திருப்பழனத்தை உறைவிடமாகக்கொண்டு திருச்சோற்றுத் துறையை யாள்வீர், திருவாரூரையே இருப்பிடமாக வுடையீர், நெஞ்சே யெனவேண்டா, அன்புடைய அடியார் தமது துன்பத்தைச் சொல்லிக்கொண்டால் அவரை வருத்திவைத்து மறுதலையாகக் கட்டளையிட்டால் நீர் வாழ்ந்து போவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானே, அடியார் அல்லல்சொன்னால் அதைப் பரிகரியாது விட்டால், நீர் வாழ்ந்து போவீரோ வென்பதாம்.

(வி-ரை.) அருத்தி - ஒரு திருப்பதி. பழனம் - ஒரு திருப்பதி. அருத்தி - அன்பு. (4)

**செந்தண்பவளந்திகழுஞ்சோலையிதுவோதிருவாரூ**
**ரெந்தமடிகேளிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்குச்**
**சந்தம்பலவும்பாடுமடியார்தங்கண்காணாது**
**வந்தெம்பெருமான்முறையோவென்றால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) செந்தண்பவளம் - செவந்த குளிர்ந்த பவளம், திகழும் சோலை - விளங்குகிற சோலைசூழ்ந்த, இதுவோ திருவாரூர் - திருவாரூர்

இதுதானோ, எந்தம் அடிகேள் - எமது சுவாமி, இதுவே ஆமாறு-ஆகும் விதம் இதுதானோ, உமக்கு ஆட்பட்டோர்க்கு - உமக்கு அடிமைப்பட்டவர்க்கு, சந்தம்பலவும் பாடும் அடியார் - பல சந்தக்கவிகளைப் பாடவல்ல அடியவர், தம்கண் காணாதுவந்து - தமது கண் தெரியாமல்வந்து, எம்பெருமான் முறையோவென்றால்-எம்பெருமானே முறையோ வென்றால், வாழ்ந்து போதீரே - நீர் வாழ்ந்து போவீரோ எ-று.

(பொ-ரை.) செவந்த குளிர்ந்த பவளம் விளங்குகிற சோலைசூழ்ந்த திருவாரூர் இதுதானோ, எமதுசுவாமி ஆகும்விதம் இதுதானோ, உமக்கு அடிமைப்பட்டவர்க்கு, பல சந்தக்கவிகளைப் பாடவல்ல அடியவர் தமது கண் தெரியாமல்வந்து எம்பெருமானே முறையோவென்றால் நீர் வாழ்ந்துபோவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச்சிவபெருமானே, எம்கண்கெட்டுவந்து வருந்துவதைக்கண்டு இரங்காவிடின், நீர் வாழ்ந்துபோவீரோ வென்பதாம். (5)

**திணைத்தாளன்னசெங்கானாரைசேருந்திருவாரூர்ப்**
**புனைத்தார்கொன்றைப்பொன்போன்மாலைப்புரிபுன்சடையீரே**
**தனத்தாலின்றித்தாந்தாமெலிந்துதங்கண்காணாது**
**மனத்தால்வாடியடியாரிருந்தால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) திணைத்தாள் அன்ன - திணைத்தட்டையை நிகர்த்த, செங்கால்நாரை - செங்காலையுடைய நாரைகள், சேரும் - வந்து சேர்தற் கிடமாகிய, திருவாரூர் - திருவாரூரி லெழுந்தருளி யிருக்கிற, புனைத்தார் கொன்றை-புனையப்பட்ட கொன்றைமலராணியன்ற, பொன்போல்மாலை-பொன்போலும் மாலையை, புரிபுன்சடையீரே - விரும்புகிற புன்சடையையுடையவரே, தனத்தால் இன்றி - பொருளில்லாமல், தாம் தாம் மெலிந்து-தமக்குத்தாமே மெலிவடைந்து, தம்கண்காணாது - தமது கண் தெரியாமல், மனத்தால்வாடி அடியார் இருந்தால் - மனம்வாடி அடியார் இருந்தால், வாழ்ந்து போதீரே - நீர் வாழ்ந்துபோவீரோ எ-று.

(பொ-ரை.) திணைத்தட்டையை நிகர்த்த செங்காலையுடைய நாரைகள்வந்து சேர்தற்கிடமாகிய திருவாரூரி லெழுந்தருளியிருக்கிற புனையப்பட்ட கொன்றை மலராணியன்ற பொன்போலும் மாலையை விரும்புகிற புன்சடையை யுடையவரே, பொருளில்லாமல் தமக்குத்தாமே மெலிவுடைந்து, தமதுகண் தெரியாமல் மனம்வாடி அடியாரிருந்தால் நீர் வாழ்ந்துபோவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானே, உன்னடியார் கண்கெட்டு வருந்தப் பார்த்திருந்தீராயின், நீர் வாழ்ந்துபோவீரோ வென்பதாம். (6)

**ஆயம்பேடையடையுஞ்சோலையாரூரகத்தீரே**
**யேயெம்பெருமானிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்கு**
**மாயங்காட்டிப்பிறவிகாட்டிமறவாமனங்காட்டிக்**
**காயங்காட்டிக்கண்ணீர்கொண்டால்வாழ்ந்துபோதீரே**

(ப-ரை.) ஆயம் - கூட்டமாகிய, பேடை - அன்னப்பேடைகள், அடையுஞ்சோலை-சேர்கிற சோலைகள் சூழ்ந்த, ஆரூர் அகத்தீரே - திருவாரூரையிடமாகக் கொண்டவரே, ஏ எம்பெருமான் - எம்பெருமானே, இதுவேயாமாறு உமக்கு ஆட்பட்டோர்க்கு - உமக்கு அடிமைப்பட்டவர்க்கு ஆமாறு இதுதானோ, மாயம்காட்டி - மாயத்தைக்காட்டி, பிறவி காட்டி - பிறவியைக்காண்பித்து, மறவாமனம்காட்டி - மறவாத மனத்தையும் காண்பித்து, காயம்காட்டி - சரீரத்தைக்காட்டி, நீர் கண்கொண்டால் - நீர் என் கண்ணைக் கவர்ந்துகொண்டால், வாழ்ந்துபோதீரே - வாழ்ந்துபோவீரோ எ-று.

(பொ-ரை.) கூட்டமாகிய அன்னப்பேடைகள் சேர்கிற சோலைகள் சூழ்ந்த திருவாரூரையிடமாகக் கொண்டவரே, எம்பெருமானே, உமக்கு அடிமைப்பட்டவர்க்கு ஆமாறு இதுதானோ, மாயத்தைக்காட்டி பிறவியைக் காண்பித்து மறவாத மனத்தையும் காண்பித்து சரீரத்தைக்காட்டி நீர் என் கண்ணைக் கவர்ந்து கொண்டால் வாழ்ந்துபோவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானே, என் கண்ணைக்கவர்ந்தால், நீர் வாழ்ந்து போவீரோ வென்பதாம்.

(வி-ரை.) ஆமாறு - ஆகும்விதம். (7)

**கழியாய்க்கடலாய்க்கலனாய்நிலனாய்க்கலந்தசொல்லாகி**
**யிழியாக்குலத்திற்பிறந்தோமும்மையிகழாதேத்துவோம்**
**பழிதானாவதறியீரடிகேள்பாடும்பத்தரோம்**
**வழிதான்காணாதலமந்திருந்தால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) கழியாய் - கழியாகி, கடலாய் - கடலாகி, கலன் ஆய் - கலமாகி, நிலன் ஆய்-மண்ணாகி, கலந்தசொல் ஆகி - கலந்த மொழியாகி, இழியாகுலத்தில் பிறந்தோம்-உயர் குலத்தில் பிறந்தோம், உம்மை இகழாது ஏத்துவோம் - உம்மை அவமதிக்காமல் துதிப்போம், பழிதான் ஆவது அறியீர் - பழியாவதையும் அறியமாட்டீர், அடிகேள் - சுவாமீ, பாடும்பத்தரோம் - உம்மைப்பாடும் பத்தராகிய யாம், வழிதான் காணாது அலமந்து இருந்தால் - வழிதெரியாமல் சுழன்றுகொண்டிருந்தால், வாழ்ந்து போதீரே - நீர் வாழ்ந்து போவீரோ எ-று.

(பொ-ரை.) கழியாகி கடலாகி கலமாகி மண்ணாகி கலந்தமொழியாகி உயர்குலத்தில் பிறந்தோம், உம்மை அவமதியாமல் துதிப்போம்,

பழியாவதையும் அறியமாட்டீர், சுவாமீ உம்மைப் பாடும் பத்தராகிய யாம் வழிதெரியாமல் சுழன்றுகொண்டிருந்தால் நீர்வாழ்ந்துபோவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானே, உன்னைப் பாடும் அடியார் கண்கெட்டு வருந்தினால், நீர் வாழ்ந்துபோவீரோ வென்பதாம். (8)

**பேயோடேனும்பிறிவொன்றின்னாதென்பர்பிறரெல்லாங்**
**காய்தான்வேண்டிற்கனிதானன்றோகருதிக்கொண்டக்கா**
**லாய்தான்போலநடுவேதிரிந்துமுமக்காட்பட்டோர்க்கு**
**வாய்தான்றிறவீர் திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) பேயோடேனும் - பேயோடாயினும், பிறிவு ஒன்று-பிரிவொன்றே, இன்னாது என்பர் - துன்பஞ்செய்வது என்பார், பிறர் எல்லாம் - பிறரெல்லாரும், காய்தான் - காய்தானே, வேண்டின் - விரும்பினால், கனிதான் அன்றோ - கனியே யல்லவோ, கருதிக் கொண்டக்கால்- நினைத்துக் கொண்டால், நாய்போல நடுவே திரிந்தும் - நாய்போல நடுவேயலைந்தும், உமக்கு ஆட்பட்டோர்க்கு - உமக் கடிமைப்பட்டவர்க்கு, வாய்திறவீர் - வாய்திறக்கமாட்டீர், திருவாரூரீர்-திருவாரூரரே, வாழ்ந்து போதீரே - வாழ்ந்துபோவீரோ எ-று.

(பொ-ரை.) பேயோடாயினும் பிரிவொன்றே துன்பஞ் செய்வது என்பார் பிறரெல்லாரும், காய்தானே விரும்பினால் கனியே யல்லவோ நினைத்துக்கொண்டால் நாய்போல நடுவே யலைந்தும் உமக்கு அடிமைப் பட்டவர்க்கு வாய்திறக்க மாட்டீர், திருவாரூரரே, வாழ்ந்து போவீரோ.

(க-ரை) திருவாரூர்ச் சிவபெருமானே, உமக்கு ஆட்பட்டோர்க்கு வாய்திறவாதிருந்தால், நீர் வாழ்ந்துபோதீரோ வென்பதாம். (9)

**செருந்திசெம்பொன்மலருஞ்சோலையிதுவோதிருவாரூர்**
**பொருந்தித்திருமூலத்தானம்மேயிடமாக்கொண்டீரே**
**யிருந்துநின்றுங்கிடந்துமும்மையிகழாதேத்துவோம்**
**வருந்திவந்துமுமக்கொன்றுரைத்தால்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) செருந்தி - செருந்திமரங்கள், செம்பொன்மலரும் - செம்பொன்போல மலர்கின்ற, சோலை-சோலைசூழ்ந்த, இதுவோ திருவாரூர்- திருவாரூர் இதுதானோ, பொருந்தி - மனமிசைந்து, திருமூலத் தானமே- திருமூலத்தானத்தையே, இடமாக் கொண்டீரே-இடமாகக்கொண்டீரே, இருந்தும் நின்றும் கிடந்தும் - இருப்பினும் நிற்பினும் கிடப்பினும், உம்மை இகழாது எத்துவோம்-உம்மை அவமதியாமல் துதிப்போமாகிய யாம், வருந்திவந்தும் - வருத்தமடைந்து வந்தும், உமக்கு ஒன்று உரைத்தால் - உமக்கொன்றைச்சொன்னால், வாழ்ந்துபோதீரே - வாழ்ந்து போவீரோ எ-று.

(போ-ரை.) செருந்திமரங்கள் செம்பொன்போல மலர்கின்றசோலை சூழ்ந்த திருவாரூர் இதுதானே, மணமிசைந்து திருமூலத்தானத்தையே இடமாகக்கொண்டீரே, இருப்பினும் நிற்பினும் கிடப்பினும் உம்மை அவமதியாமல் துதிப்போமாகிய யாம் வருத்தமடைந்துவந்து உமக்கொன்று சொன்னால் வாழ்ந்து போவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானே, உம்மைத் துதிசெய்கிறவர்களாகிய யாம் வருந்தச் செய்து நீர் வாழ்ந்து போவீரோ வென்பதாம்.

(வி-ரை) உரைத்தால் - சொல்லிக்கொள்ளும்படி நீர் பாராமுகமாயிருந்தால். (10)

**காரூர்கண்டத் தெண்டோண்முக்கண் கலைகள்பலவாகி**
**யாரூர்த் திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்**
**பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்**
**வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே.**

(ப-ரை.) கார் ஊர் கண்டத்து - கருமைபரந்த ஸ்ரீகண்டத்தை யுடைய, எண்டோள் - எட்டுப்புயம், முக்கண் - மூன்றுகண், கலைகள் பலவாகி - பல கலைகளாகி, ஆரூர் திருமூலத்தானத்தே - திருவாரூர் திருமூலத்தானத்தே, அடிப்பேர் ஆரூரன் - சுந்தரன், பார் ஊர் அறிய - உலகத்துள்ள ஊரரெல்லாரும் அறியும்படி, என்கண் கொண்டீர் - என் கண்ணைக் கவர்ந்து கொண்டீர், நீரே பழிபட்டீர் - நீரே பழிக்காளானீர், வார் ஊர் முலையாள் - உமாதேவியை, பாகம் கொண்டீர் - பாகத்திற் கொண்டிருந்தீர், வாழ்ந்து போதீரே - வாழ்ந்துபோவீரோ எ-று.

(போ-ரை.) கருமைபரந்த ஸ்ரீ கண்டத்தையுடைய எட்டுப்புயம் மூன்றுகண் பலகலைகளாகி திருவாரூர் திருமூலத்தானத்தே சுந்தரன், உலகத்துள்ள ஊரரெல்லாரும் அறியும்படி என் கண்ணைக் கவர்ந்துகொண்டீர், நீரே பழிக்காளானீர், உமாதேவியை பாகத்திற்கொண்டிருந்தீர், வாழ்ந்து போவீரோ.

(க-ரை.) திருவாரூர்ச் சிவபெருமானே, என் கண்கொண்டதனால் நீரே பழிக்கப்பட்டீர், நீர் வாழ்ந்துபோவீரோ வென்பதாம்.

(வி-ரை) கார் ஊர் கண்டம் - நீலகண்டம். (11)

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர்ப் பரவையுண்மண்டளி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**தூவாயாதொண்டுசெய்வார்படுதுக்கங்கள்**
**காவாயேகண்டுகொண்டாரைவர்காக்கினு**
**நாவாயாலுன்னையேநல்லனசொல்லுவேற்**
**காவாவென்பரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) தூவாயா - பரிசுத்தமாகிய திருவாக்கினையுடையவனே, தொண்டுசெய்வார்படு - தொண்டர் படுகிற, துக்கங்கள் காவாயே - துன்பங்களைத் தடுக்கமட்டாயா, கண்டுகொண்டார் ஐவர்காக்கிலும் - ஐவர் கண்டுகொண்டு காக்கினும், நாவாயால் - நாவோடுகூடிய வாயினால், உன்னையே நல்லனசொல்லுவேற்கு - உன்னையே நல்லவற்றைச் சொல்லுகிற எனக்கு, ஆவா என் - அந்தோவென்றிரங்குவாயாக, பரவையுண்மண்டளியம்மானே - திருவாரூர்ப் பரவையுண்மண்டளியிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) பரிசுத்தமான திருவாக்கினை யுடையவனே, தொண்டர் படுகிற துன்பங்களைத் தடுக்கமாட்டாயா, ஐவர் கண்டுகொண்டு காக்கிலும் நாவோடுகூடிய வாயினால் உன்னையே நல்லவற்றைச் சொல்லுகிற எனக்கு அந்தோவென்றிரங்குவாயாக, திருவாரூர்ப் பரவையுண் மண்டளியிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(கு-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளி யெம்பெருமானே, உன்னையே துதிக்கிற எனக்கு ஐயோவென்றிரங்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) ஐவர் - ஐம்பொறிகள். காக்கிலும் - தடுத்தாலும். (1)

**பொன்னானேபுலவர்க்குநின்புகழ்போற்றலாந்**
**தன்னானேதன்னைப்புகழ்ந்திடுந்தற்சோதி**
**மின்னானேசெக்கர்வானத்திளநாயி**
**றன்னானேபரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) பொன்னானே - பொன்போல்வானே, புலவர்க்கு - அறிஞருக்கு, நின்புகழ் போற்றலாம் - உன்புகழை யெடுத்துரைத்தல் கூடும், தன்னானே தன்னைப் புகழ்ந்திடும் தற்சோதீ - தன்னாலேயே தன்னைப் புகழ்ந்திடும் தன்னொளியே, மின்னானே - மின்போல்வானே, செக்கர் வானத்து - செவ்வானத்தில் காணப்படுகிற, இளநாயிறு அன்னானே - இளஞ்சூரியனை நிகர்த்தவனே, பரவையுண் மண்டளியம்மானே - திருவாரூர்ப் பரவையுண்மண்டளியிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) பொன்போல்வானே, அறிஞருக்கு உன்புகழை யெடுத்துரைத்தல் கூடும், தன்னாலேயே தன்னைப்புகழ்ந்திடும் தன்னொளியே, மின்போல்வானே, செவ்வானத்தில் காணப்படுகிற இளஞ்சூரியனை நிகர்த்தவனே, திருவாரூர்ப் பரவையுண்மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(கு-ரை.) திருவாரூர்ப் பரவையுண்மண்டளி, யெம்பெருமானே, என்னைக் காத்தருளவேண்டுமென்பதாம். (2)

**நாமாறுதுன்னையேநல்லனசொல்லுவார்**
**போமாறென்புண்ணியாபுண்ணியமானனே**
**பேய்மாறுப்பிணமிடுகாடுகந்தாடுவாய்க்**
**காமாறென்பரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) நாமாறுது - நாவோயாமல், உன்னையே நல்லனசொல்லுவார் - உன்னைக்குறித்தே நல்லவற்றைச் சொல்லுவோர், போமாறு என்- போம்வழியாது, புண்ணியா - புண்ணியனே, புண்ணியம் ஆனனே - புண்ணியமானவனே, பேய்மாறு - பேய்கள் இடையறாது வாழ்கின்ற, பிணம் இடுகாடு உகந்து - மயானத்தை விரும்பி, ஆடுவாய்க்கு-அவ்விடத்தில் ஆடுகிற உனக்கு, ஆமாறு என் - யாம் தொண்டுபடும் வழியாது, பரவையுண் மண்டளியம்மானே-திருவாரூர்ப் பரவையுண்மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) நாவோயாமல் உன்னைக்குறித்தே நல்லவற்றைச்சொல்லுவோர் போம்வழியாது, புண்ணியனே, புண்ணியமானவனே, பேய்கள் இடையறாது வாழ்கின்ற மயானத்தை விரும்பி அவ்விடத்தில் ஆடுகிற உனக்கு யாம் தொண்டுபடும் வழியாது, திருவாரூர்ப்பரவையுண்மண்டளியிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(கு-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, உனக்கு என்னாலாகவேண்டியது யாதென்பதாம். (3)

**நோக்குவேனுன்னையேநல்லனநோக்காமைக்**
**காக்கின்றாய்கண்டுகொண்டாரைவர்காக்கிலும்**
**வாக்கென்னுமாலைகொண்டுன்னையென்மனத்**
**தார்க்கின்றேன்பரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) உன்னையே நோக்குவேன் - உன்னையே நாடுவேன், அல்லன நோக்காமை - அல்லாதவற்றை நோக்காமல், காக்கின்றாய் - என்னைக் காக்கிறாய், ஐவர் கண்டுகொண்டார் - ஐவர் கண்டுகொண்டவராய், காக்கிலும் - தடுத்தாலும், வாக்கு என்னும் மாலைகொண்டு - வாக்கென்ற

மாலையைக்கொண்டு, உன்னை என்மனத்து ஆர்க்கின்றேன் - உன்னை என்மனத்தில் கட்டுகிறேன், பரவையுண்மண்டளியம்மானே - திருவாரூர்ப்பரவையுண்மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) உன்னையே நாடுவேன், அல்லாதவற்றை நோக்காமல் என்னைக் காக்கிறாய், ஐவர்கண்டுகொண்டவராய்தடுத்தாலும் வாக்கென்ற மாலையைக்கொண்டு உன்னை என்மனத்தில் கட்டுகிறேன், திருவாரூர்ப் பரவையுண்மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(க-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, ஐவர் தடுத்தாலும் உன்னையே நோக்குவேன், உன்னை யென்மனத்திற் கட்டிவைக்கிறேன் என்பதாம்.

(வி-ரை.) காத்தல் - தடுத்தல். வாக்கு என்னும்மாலை - சொல்மாலை. ஆர்த்தல் - கட்டுதல். (4)

**பஞ்சேருமெல்லடியாளைபோர்பாகமாய்**
**நஞ்சேருநன்மணிகண்டமுடையானே**
**நெஞ்சேநின்னையேயுள்கிநினைவாரை**
**யஞ்சேலென்பரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) பஞ்சு எரும் - செம்பஞ்சினால் அழகு செய்யப்பட்ட, மெல் அடியாளை - மெல்லடியை யுடையவளாகிய உமாதேவியை, ஓர் பாகம்ஆய்-ஓர் பாகத்திற்கொண்டு, நஞ்சு எரும் - விஷத்தை நிகர்த்த, நல்மணி கண்டம் உடையானே - நல்ல நீலமணிபோலுங் கண்டத்தை யுடையவனே, நெஞ்சே - மனத்திலே, நின்னையே உள்கிநினைவாரை-உன்னையே நினைப்பாரை, அஞ்சேல் என் - அஞ்சேல் என்பாய், பரவையுண் மண்டளியம்மானே - திருவாரூர்ப் பரவையுண் மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) செம்பஞ்சினால் அழகு செய்யப்பட்ட மெல்லடியையுடையவளாகிய உமாதேவியை ஓர் பாகத்திற்கொண்டு விஷத்தை நிகர்த்த நல்ல நீலமணிபோலுங் கண்டத்தை யுடையவனே, மனத்திலே உன்னையே நினைப்பாரை அஞ்சேல் என்பாய், திருவாரூர்ப் பரவையுண் மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(க-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, உன்னையே நினையாநின்ற உம்போல்வாரை அஞ்சேல்என்றருளக்கடவையென்பதாம்.

(வி-ரை.) உள்கிநினைதல் - மிகுதியாக நினைதல். (5)

**அம்மானேயாகமசிலர்க்கருணல்கும்**
**பெம்மானேபேரருளாளன்பிடவூரன்**
**றம்மானேதண்டமிழ்நூற்புலவாணர்க்கோ**
**ரம்மானேபரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) அம்மானே-அம்மானே, ஆகமசீலர்க்கு - ஆகமவொழுக்கத் தார்க்கு, அருள் நல்கும் பெம்மானே - அருள்செய்கிற பெருமானே, பேரருளாளன் பிடவூரன் தம்மானே - பேரருளாளனாகிய பிடவூர்த்தம் பிரானே, தண்தமிழ்நூல் புலவாணர்க்கு - தண்ணிய தமிழ்நூலில் வல்ல அறிஞருக்கு, ஓர் அம்மானே - ஒரு தந்தையே, பரவையுண் மண்டளியம் மானே - திருவாரூர்ப் பரவையுண் மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம் பெருமானே எ-று.

(போ-ரை.) அம்மானே, ஆகமவொழுக்கத்தார்க்கு அருள் செய்கிற பெருமானே, பேரருளாளனாகிய பிடவூர்த்தம்பிரானே, தண்ணிய தமிழ் நூலில் வல்ல அறிஞருக்கு ஒரு தந்தையே, திருவாரூர்ப் பரவையுண்மண் டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(க-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, எம்மைப் போல்வாரை யாண்டருளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) ஆகமசீலர் - ஆகமநெறியி லொழுகுவோர். அம்மான் - தந் தையென் றுரைப்பினுமாம். (6)

**விண்டானேமேலையார்மேலையார்மேலாய**
**வெண்டானேயெழுத்தொடுசொற்பொருளெல்லாமுன்**
**கண்டானேகண்டனைகொண்டிட்டுக்காட்டாயே**
**யண்டானேபரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) விண்டானே - யாவையும் விட்டவனே, மேலையார் மேலை யார் - மேலோர்க்கு மேலோர்க்கும், மேலாய - மேன்மையாகிய, எண் தானே - அறிவுருவனே, எழுத்தொடு - எழுத்திலக்கணத் துடனே, சொல் பொருள் எல்லாம்-சொல்லிலக்கணம் பொருளிலக்கணம் என்கிற எல்லாவற்றையும், முன் கண்டானே - முன்னமே அறிந்திருப்பவனே, கண் தன்னைக் கொண்டிட்டு - என் கண்ணைப் பறித்துக்கொண்டு, காட் டாயே - காட்டாதிருக்கிறாயே, அண்டானே-அணுக வொண்ணாதவனே, பரவையுண் மண்டளியம்மானே - திருவாரூர்ப் பரவையுண் மண்டளியி லெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே எ-று.

(போ-ரை.) யாவையும் விட்டவனே, மேலோர்க்கு மேலோர்க்கும் மேன்மையாகிய அறிவுருவனே, எழுத்திலக்கணத்துடனே சொல்லிலக்க ணம் பொருளிலக்கணம் என்கிறஎல்லாவற்றையும் முன்னமே அறிந்திருப் பவனே, என் கண்ணைப் பறித்துக்கொண்டு காட்டாதிருக்கிறாயே, அணுக வொண்ணாதவனே, திருவாரூர்ப் பரவையுண் மண்டளியி லெழுந்தருளி யிருக்கிற எம்பெருமானே.

(க-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, என் கண் ணைக் கொண்டு காட்டாயோ வென்பதாம்.

(வி-ரை) விண்டானே - பாசவிமுக்தனே. அண்டானே - மனோ வாக்காயங்களுக் கெட்டாதவனே. (7)

**காற்றானேகார்முகில்போல்வதோர்கண்டத்தெங்**
**கூற்றானேகோல்வளையாளையோர்பாகமாய்**
**நீற்றானேநீள்சடைமேனிறையுள்ளதோ**
**ராற்றானேபரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை) காற்றானே - காற்றாயிருப்பவனே, கார்முகில் போல்வது - கார்காலத்து மேகத்தை நிகர்ப்பதாகிய, ஓர் கண்டத்து - ஒப்பற்ற கண்டத்தையுடைய, எம் கூற்றானே - எமது பங்கிலிருப்பவனே, கோல்வளை யாளை - உமாதேவியை, ஓர் பாகமாய் - ஒரு பாகத்திற்கொண்டு, நீற்றானே - திருவெண்ணீற்றையுடையவனே, நீள் சடைமேல்-நீண்ட சடையின்மீது, நிறையுள்ளது - நீர் நிறைந்ததாகிய, ஓர் ஆற்றானே - ஒப்பற்ற கங்காநதியை யுடையவனே, பரவையுண் மண்டளியம்மானே - திருவாரூர்ப் பரவையுண் மண்டளியிலெழுந்தருளாயிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) காற்றாயிருப்பவனே, கார்காலத்து மேகத்தை நிகர்ப்பதாகிய ஒப்பற்ற கண்டத்தை யுடைய எமது பங்கிலிருப்பவனே, உமாதேவியை ஓர் பாகத்திற்கொண்டு திருவெண்ணீற்றையுடையவனே, நீண்ட சடையின்மீது நீர் நிறைந்ததாகிய ஒப்பற்ற கங்காநதியை யுடையவனே, திருவாரூர்ப்பரவையுண்மண்டளியிலெழுந்தருளியிருக்கிறஎம்பெருமானே.

(கு-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, என்னை யாண்டருள வேண்டும் என்பதாம். (8)

**செடியேனுன்செய்வினைநல்லனசெய்யாத**
**கடியேனுன்கண்டதேகண்டதேகாமுறுங்**
**கொடியேனுன்கூறுமாறுன்பணிகூறாத**
**வடியேனுன்பரவையுண்மண்டளியம்மானே.**

(ப-ரை.) நான் செடியேன் - நான் குற்றமுடையேன், நான் நல்லன செய்வினை செய்யாதகடியேன் - நான் நல்லவற்றைச் செய்யாத கடுமையன், நான் கண்டதே கண்டதே - நான் கண்டதையே கண்டதையே, காமுறும் - விரும்புகிற, கொடியேன் - கொடுமையன், நான் உன் பணி கூறுமாறு கூறாத அடியேன் - நான் உன் திருத்தொண்டினைச் செய்யுமாறு செய்யாத தொண்டன், பரவையுண்மண்டளியம்மானே - திருவாரூர்ப் பரவையுண்மண்டளியிலெழுந்தருளி யிருக்கிற எம்பெருமானே எ-று.

(பொ-ரை.) நான் குற்றமுடையேன், நான் நல்லவற்றைச் செய்யாத கடுமையன், நான் கண்டதையே கண்டதையே விரும்புகிற கொடுமை

யன், நான் உன் திருத்தொண்டினைச் செய்யுமாறு செய்யாத தொண்டன், திருவாரூர்ப் பரவையுண் மண்டளியிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானே.

(கு-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானே, கடியேனாகிய என்னைக் காத்தருளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) செடியேன் - பாவமுடையேன். செடி - பாவம். காமுறுதல் - விரும்புதல். (9)

**கரந்தையும்வன்னியுமத்தமுங்கூவிளமும்**
**பரந்தசீர்ப்பரவையுண்மண்டளியம்மானை**
**நிரம்பியவூரனுரைத்தனபத்திவை**
**விரும்புவார்மேலையார்மேலையார்மேலாரே.**

(ப-ரை.) கரந்தையும் - கரந்தையிலையும், வன்னியும் - வன்னியிலையும், மத்தமும் - ஊமத்தம் பூவும், கூவிளமும் - வில்வமும், பரந்த - சடையிற் பரவப்பெற்ற, சீர் - சிறப்புவாய்ந்த, பரவையுண் மண்டளியம்மானை - பரவையுண் மண்டளிச் சிவபிரானை, நிரம்பிய ஊரன் - சுந்தரன், உரைத்தன - புகழ்ந்தவையாகிய, இவைபத்து - இந்தப் பத்துப் பாடலையும், விரும்புவார்-விரும்புவோர், மேலையார் மேலையார் மேலாரே - மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலோராவர் எ-று.

(பொ-ரை) கரந்தையிலையும், வன்னியிலையும், ஊமத்தம்பூவும், வில்வமும் சடையிற் பரவப்பெற்ற சிறப்புவாய்ந்த பரவையுண் மண்டளிச் சிவபிரானைச் சுந்தரன் புகழ்ந்தவையாகிய இந்தப் பத்துப் பாடலையும் விரும்புவோர் மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலோராவர்.

(கு-ரை.) திருவாரூர்ப் பரவையுண் மண்டளியம்மானைத் திருநாவலூரன் புகழ்ந்துரைத்த இப் பத்துப்பாடலும் விரும்பிக் கற்பவர் எல்லாருள்ளுஞ் சிறந்தோராவர் என்பதாம்.

(வி-ரை.) கூவிளம் - வில்வம். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மண்டலேசுவரர். தேவியார்-பஞ்சினுமெல்லடியம்மை.

## திருநனிபள்ளி

### பண் - பஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

**ஆதியன்னாதிரையன்னயன்மாலறிதற்கரிய**
**சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறைநான்கினையு**
**மோதியனும்பர்தங்கோனுலகத்தினுளெவ்வுயிர்க்கு**
**நாதியனம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை) ஆதியன் - முதல்வன், ஆதிரையன் - திருவாதிரைநாளை யுடையவன், அயன்மால்-பிரமவிஷ்ணுக்கள், அறிதற்கு அரிய சோதியன்- அறிதற்கரிதாகிய ஒளியுருவன், சொல்பொருள் ஆய்-சொல்லும்பொருளு மாகி, சுருங்கா - குறையாத, மறை நான்கினையும் - நால் வேதங்களையும், ஓதியன் - சொன்னவன், உம்பர் தம்கோன் - தேவர் கோமான், உலகத் தினுள் எவ்வுயிர்க்கும் - உலகத்திலுள்ள எல்லாவுயிர்களுக்கும், நாதியன்- நாயகன், நம்பெருமான் - நமக்குப் பெருமான், நண்ணும் ஊர் - அவன் எழுந்தருளியிருக்கு மூரானது, நனி பள்ளியதே-திருநனி பள்ளியேயாம்.

(பொ-ரை.) முதல்வன், திருவாதிரை நாளையுடையவன், பிரமவிஷ் ணுக்கள் அறிதற்கரிதாகிய ஒளியுருவன், சொல்லும் பொருளுமாகி குறை யாத நால்வேதங்களையும் சொன்னவன், தேவர்கோமான், உலகத்தி லுள்ள எல்லாவுயிர்களுக்கும் நாயகன், நமக்குப் பெருமான், அவன் எழுந் யிருக்கு மூரானது திருநனி பள்ளியேயாம்.

(க-ரை.) எல்லாப்பொருள்களுக்கும் முன்னோனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கு மூர் திருநனிபள்ளியே என்பதாம்.

(வி-ரை.) நாதி - ஞாதி (சுற்றம், தந்தை) (1)

**உறவிலியூனமிலியுணரார்புரமூன்றெரியச்**
**செறுவிலிதன்னினைவார்வினையாயினதேய்ந்தழிய**
**வறவிலகும்மருளான்மருளார்பொழில்வண்டறையு**
**நறைவிரிகொன்றையினானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை.) உறவு இலி - சுற்றமில்லாதவன், ஊனம் இலி - குறையில் லாதவன், உணரார் புரம்மூன்று எரிய - பகைவருடைய புரம் மூன்றும் எரிந்து போக, செறுவில்லி - அழித்த வில்லையுடையவன், தன் நினைவார் வினையாயினதேய்ந்து அழிய - தன்னை நினைப்பவரது வினை தேய்ந்தழிய, அற இலகும் அருளான் - மிகுதியாய் விளங்கும் அருளையுடையவன், மருள் ஆர் பொழில் - மயங்குதற் கேதுவாகிய சோலைகளில், வண்டு அறையும் - வண்டுகள் சத்திக்கிற, நறைவிரி கொன்றையினான்-

மணம் வீசுகிற கொன்றைமலர் மாலையை யுடையவன், நண்ணும் ஊர் - அவன் எழுந்தருளியிருக்கு மூரானது, நனிபள்ளியதே - திருநனிபள்ளி யேயாம் எ-று.

(போ-ரை.) சுற்றமில்லாதவன், குறையில்லாதவன், பகைவருடைய புரமூன்றும் எரிந்துபோக அழித்த வில்லையுடையவன், தன்னை நினைப்பவரது வினை தேய்ந்தழிய மிகுதியாய் விளங்கும் அருளையுடையவன், மயங்குதற் கேதுவாகிய சோலைகளில் வண்டுகள் சத்திக்கிற மணம்வீசுகிற கொன்றை மலர்மாலையை யுடையவன், அவன் எழுந்தருளியிருக்குமூரானது திருநனி பள்ளியேயாம்.

(க-ரை.) உறவுமுதலியன இல்லாத சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர், திருநனிபள்ளியே என்பதாம்.

(வி-ரை.) உறவு இலி - உறவில்லாதவன். ஊனம் இலி - குறைவில்லாதவன் உணரார் - அறிவில்லாதவர், மதியாதவர் எனினும் பொருந்தும். (முப்புரத்தாரை.) செறுவில்லி - அழித்த வில்லையுடையவன். அற - மிகுதியாக. இலகுதல் - விளங்குதல். அறைதல் - சத்தித்தல். நறை-தேன், வாசனையுமாம். கொன்றை - ஆகுபெயர். (2)

**வானுடையான்பெரியான்மனத்தாலுநினைப்பரியான்**
**ஆனிடையைந்தமர்ந்தானணுவாகியோர்தீயுருக்கொண்**
**டூனுடையிவ்வுடலமொடுங்கிப்புகுந்தான்பரந்தா**
**னானுடைமாடெம்பிரானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை.) வான் உடையான் - மேன்மையை யுடையவன், பெரியான் - பெருமை யுடையோன், மனத்தாலும் - மனதினாலும், நினைப்பு அரியான் - நினைத்தற் கரியவன், ஆன் இடை ஐந்து அமர்ந்தான் - பஞ்ச கவ்வியங்களை விரும்பினவன், அணு ஆகி - அணுவுருவாகி, ஓர் தீ உரு கொண்டு - ஒப்பற்ற நெருப்புருக்கொண்டு, ஊன் உடை இவ்வுடலம் - மாமிசத்தையுடைய இந்தச் சரீரத்தில், ஒடுங்கிப் புகுந்தான் - சுருங்கிப் புகுந்தான், பரந்தான் - விரிந்தான், நான் உடை மாடு - நான் உடைத்தாயிருக்கிற பொன், எம்பிரான் - எம்பெருமான், (அவன்) நண்ணும் ஊர் - எழுந்தருளியிருக்கிற ஊரானது, நனி பள்ளியதே - திருநனி பள்ளியேயாம் எ-று.

(போ-ரை.) மேன்மையை யுடையவன், பெருமையையுடையோன், மனதினாலும் நினைத்தற்கரியவன், பஞ்சகவ்வியங்களை விரும்பினவன், அணுவுருவாகி ஒப்பற்ற நெருப்புருக் கொண்டு மாமிசத்தையுடைய இந்தச் சரீரத்தில் சுருங்கிப் புகுந்தான், விரிந்தான், நான் உடைத்தாயிருக்கிற பொன், எம்பெருமான் (அவன்) எழுந்தருளியிருக்கிற ஆரானது திருநனிபள்ளியேயாம்.

(க-ரை.) மேன்மையுடையவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர் திருநனிபள்ளியே யென்பதாம்.

(வி-ரை.) ஆன் - பசு. ஆனிடை யைந்து - பஞ்சகவ்வியம். (3)

**ஓடுடையன்கலனாவுடைகோவணவன்னுமையோர்
பாடுடையன்பலிதேர்ந்துண்ணும்பண்புடையன்பயிலக்
காடுடையன்னிடமாமலையேழுங்கருங்கடல்சூழ்
நாடுடைநம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை.) ஓடு கலன் ஆ உடையன் - தலையோட்டை பிக்ஷாபாத்திரமாகவுடையவன், உடைகோவணவன்-கௌபீநத்தை யுடையவன், உமை ஓர் பாடு உடையன் - உமாதேவியை யொருபக்கத்தி லுடையவன், பலி தேர்ந்து உண்ணும் பண்பு உடையன் - பிக்ஷை யேற்றுண்கிற ஒரு இயல்புடையவன், பயில - சஞ்சரிக்க, காடு உடையன் - காடுகளை யுடையவன், இடம் ஆம்-இடம் விரிந்த, மலை எழும்-சப்தகுல மலைகளையும், கருங்கடல் சூழ் - கரிய கடல்சூழ்ந்த, நாடு உடை நம்பெருமான்-உலகத்தையுமுடைய எம்பெருமான், நண்ணும் ஊர் - (அவன்) வாழும் ஊரானது, நனிபள்ளியதே - திருநனிபள்ளியேயாம் எ-று.

(பொ-ரை) தலையோட்டை பிக்ஷாபாத்திரமாக வுடையவன், கௌபீநத்தையுடையவன், உமாதேவியை யொருபக்கத்தி லுடையவன், பிக்ஷை யேற்றுண்கிற ஒரு இயல்புடையவன், சஞ்சரிக்க காடுகளையுடையவன், இடம்விரிந்த சப்தகுல மலைகளையும் கரிய கடல்சூழ்ந்த உலகத்தையுமுடைய எம்பெருமான் வாழுமூரானது திருநனிபள்ளியேயாம்.

(க-ரை.) பிக்ஷாபாத்திர முதலியவற்றை யுடையவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர் திருநனிபள்ளியே யென்பதாம்.

(வி-ரை.) காடு - மயானம். (4)

**பண்ணற்கரியதொருபடையாழிதனைப்படைத்து
கண்ணற்கருள்புரிந்தான்கருதாதவர்வேள்வியவி
யுண்ணற்கிமையவரையுருண்டோடவுதைத்துகந்து
நண்ணற்கரியபிரானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை) பண்ணற்கு அரியது - செய்தற்கரிதாகிய, ஒரு - ஒப்பற்ற, படை ஆழிதனைப் படைத்து - திருவாழிப்படையை யுண்டாக்கி, கண்ணற்கு அருள் புரிந்தான் — கண்ணனுக் கருள்செய்தவன், கருதாதவர் - மதியாதவரது, வேள்வி அவி உண்ணற்கு-யாகவுணவுண்டற்கு வந்த, இமையவரை உருண்டோட - தேவர்களை யுருண்டோட, உதைத்து உகந்து - உதைத்து மகிழ்ந்து, நண்ணற்கு அரியபிரான்-அடைதற்கரிய பெருமான், நண்ணுமூர் - எழுந்தருளி யிருக்கு மூரானது, நனிபள்ளியதே - திருநனிபள்ளியேயாம் எ-று.

(பொ-ரை.) செய்தற் கரிதாகிய வொப்பற்ற திருவாழிப்படையை யுண்டாக்கி கண்ணனுக் கருள்செய்தவன், மதியாதவரது யாகவுணவுண்டற்குவந்த தேவர்களை யுருண்டோட உதைத்து மகிழ்ந்த அடைதற்கரிய பெருமான் எழுந்தருளியிருக்கு மூரானது திருநனிபள்ளியேயாம்.

(கு-ரை.) திருமாலுக்குச் சக்கரமருளின சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர் திருநனிபள்ளியே யென்பதாம்.

(வி-ரை.) படைஆழி - ஆழிப்படை, (சக்ராயுதம்) பகைவரைப் படுத்தற் குரிய ஆழியெனினுமாம். படுத்தல் - கொல்லுதல். அவி - அவிசு. (5).

**மல்கியசெஞ்சடைமேன்மதியும்மரவும்முடனே,**
**புல்கியவாரணனெம்புனிதன்புரிநூல்விரகின்**
**மெல்லியவிற்றொழிலான்விருப்பன்பெரும்பார்த்தனுக்கு**
**நல்கியநம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை.) மல்கிய செஞ்சடைமேல் - வளமாக வளர்ந்த செஞ்சடைமீது, மதியும் அரவும் உடனே - பிறையையும் பாம்பையும் ஒருங்கே, புல்கிய - உடையனாகிய, ஆரணன் - வேதியன், எம் புனிதன் - எமது பரிசுத்தன், புரிநூல் விரகின் - முப்புரிநூலுணர்வோடு, மெல்கிய வில் தொழிலான் - மென்மையாகிய விற்றொழிலையு முடையவன், விருப்பன் - எல்லார்க்கும் விருப்பத்தை யுண்டாக்குவோன், பெரும் பார்த்தனுக்கு-பழைய அருச்சுனனுக்கு, நல்கிய - அருள்செய்த, நம்பெருமான் - எம்பெருமான், நண்ணும் ஊர் - எழுந்தருளியிருக்கு மூரானது, நனிபள்ளியதே-திருநனிபள்ளியேயாம் எ-று.

(பொ-ரை.) வளமாக வளர்ந்த செஞ்சடைமீது பிறையையும் பாம்பையும் ஒருங்கே யுடையவனாகிய வேதியன், எமது பரிசுத்தன், முப்புரிநூலுணர்வோடு மென்மையாகிய விற்றொழிலையுமுடையவன், எல்லார்க்கும் விருப்பத்தை யுண்டாக்குவோன், பழைய அருச்சுனனுக்கு அருள்செய்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கு மூரானது திருநனிபள்ளியேயாம்.

(கு-ரை.) சந்திரகண்ட முதலியவற்றைச் சடையிலமைத்த சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர் திருநனிபள்ளியே யென்பதாம்.

(வி-ரை.) புல்கல் - கூடியிருத்தல். (6)

**அங்கமோராறவையும் அருமாமறைவேள்விகளு**
**மெங்குமிருந்தந்தணரெரிமூன்றவையோம்புமிடம்**
**பங்கயமாமுகத்தாளுமைபங்கனுறைகோயில்**
**செங்கயல்பாயும்வயற்றிருநனிபள்ளியதே.**

(ப்-ரை.) அங்கம் ஓர் ஆறு அவையும் - வேதாங்கங்களாகிய அவையாலும், அருமாமறை வேள்விகளும் - அரிய பெரிய வேதப்பிரதி பாத்ய மான யாகங்களும், எங்கும் இருந்து அந்தணர் - அந்தணர் எவ்விடத்து மிருந்து, எரிமூன்று-அக்கினி மூன்றுமாகிய, அவை ஓம்பும் இடமும்-அவற்றைக் காக்குமிடமும், பங்கயம் மாமுகத்தாள்—தாமரை மலர்போலும் திருமுகத்தை யுடையவளாகிய, உமைபங்கன் - உமாதேவியை பாகத்திலுடையவன், உறைகோயில்-வீற்றிருக்கும் கோயிலானது, செங்கயல்பாயும்வயல்-செங்கயல்கள் துள்ளுதற்கிடமாகிய வயல் சூழ்ந்த, திருநனிபள்ளியதே-திருநனி பள்ளியேயாம் எ-று.

(பொ-ரை.) வேதாங்கங்களாகிய அவையாலும் அரிய பெரிய வேதப் பிரதிபாத்யமான யாகங்களும் அந்தணர் எவ்விடத்து மிருந்து அக்கினி மூன்றுமாகிய அவற்றைக் காக்குமிடமும் தாமரைமலர்போலும் திருமுகத்தை யுடையவளாகிய உமாதேவியை பாகத்திலுடையவன் வீற்றிருக்கும் கோயிலானது செங்கயல்கள் துள்ளுதற் கிடமுமாகிய வயல்சூழ்ந்த திருநனிபள்ளியேயாம்.

(கு-ரை.) வேதியர் திரேதாக்கினி வளர்க்குமிடமாகிய திருநனிபள்ளியே சிவபெருமானுக்குக் கோயிலென்பதாம்.

(வி-ரை.) அங்கம் ஓராறு - வேதாங்கம் ஆறு, அவை—மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. எரி மூன்று - திரேதாக்கினி, அவை—ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, கார்ஹபத்யம் என்பன. ஓம்புதல் - காத்தல். (7)

**திங்கட்குறுந்தெரியற்றிகழ்கண்ணியனுண்ணியனாய்**
**நங்கட்பிணிகளைவானருமாமருந்தேழ்பிறப்பு**
**மங்கத்திருவிரலாலடர்த்தான்வல்லரக்கனையு**
**நங்கட்கருளும்பிரானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை.) திங்கள் குறுந்தெரியல் திகழ்கண்ணியன் - பிறையாகிய சிறு மாலையையுடையவன், நுண்ணியன் ஆய் - சூக்ஷ்ம வுருவுடையனாகி, நங்கண் பிணிகளைவான் - நமது நோயைக் களையும்பொருட்டு, அருமா மருந்து - அரிய பெரிய மருந்தானவன், எழ்பிறப்பும் மங்க - எழுவகைப் பிறப்பும் மறையும்படி, வல் அரக்கனையும் - வலிய அரக்கனாகிய ராவணனையும், திருவிரலால் அடர்த்தான் - திருவிரலால் அழுத்தினவன், நங்கட்கு அருளும் பிரான் - எமக்கு அருள்செய்யும் பிரான், நண்ணும் ஊர் - எழுந்தருளியிருக்கு மூரானது, நனிபள்ளியதே - திருநனி பள்ளியேயாம் எ-று.

(பொ-ரை.) பிறையாகிய சிறுமாலையையுடையவன், சூக்ஷ்மவுருவுடையனாகி நமது நோயைக் களையும்பொருட்டு, அரிய பெரிய மருந்தானவன்

ஏழுவகைப் பிறப்பும் மறையும்படி வலிய அரக்கனாகிய இராவணனையும் திரு விரலால் அழுத்தினவன், எமக்கு அருள்செய்யும் பிரான் எழுந்தருளியிரு க்குமூரானது திருநனி பள்ளியேயாம்.

(க-ரை.) சந்திரசேகரனாகிய சிவபெருமானுக் கிடமாயிருப்பது திரு நனி பள்ளியே யென்பதாம்.

(வி-ரை) குறுந்தெரியல் - சிறுகியமாலை. நம் கண் - நம்மிடத்து. கண்ணி - பெரியமாலை. (8)

**ஏனமருப்பினொடுமெழிலாமையும்பூண்டுகந்து**
**வானமதிலரணமலையேசிலையாய்வளைத்தா**
**னூனமில்காழிதன்னுளுயர்ஞானசம்பந்தர்க்கன்று**
**ஞானமருள்புரிந்தானண்ணுமூர்நனிபள்ளியதே.**

(ப-ரை.) ஏனம் மருப்பினொடும்-பன்றிக்கொம்போடும், எழில் ஆமை யும் பூண்டு - அழகிய ஆமையோட்டையும் தரித்து, உகந்து - மகிழ்ந்து, வானம் மதில் அரணம்-ஆகாய மளாவிய மதில்களையுடைய, மலையே சிலையா வளைத்தான் - மலையையே வில்லாக வளைத்தவன், ஊனம் இல் காழி தன்னுள் - குற்றமில்லாத சீகாழியில், உயர்ஞான சம்பந்தர்க்கு- உயர்ந்த ஞான சம்பந்தருக்கு, அன்று ஞானம் அருள்புரிந்தான் - அக்கா லத்தில் ஞானப்பாலை யருள்செய்தவன், நண்ணும் ஊர் - அவன் எழுந்த ருளியிருக்கிற ஊரானது, நனிபள்ளியதே-திருநனிபள்ளியேயாம் எ-று.

(பொ-ரை.) பன்றிக்கொம்போடும் அழகிய ஆமையோட்டையும் தரித்து மகிழ்ந்து ஆகாயமளாவிய மதில்களையுடைய, மலையையே வில்லாக வளைத்தவன், குற்றமில்லாத சீகாழியில் உயர்ந்த ஞானசம்பந்த ருக்கு அக்காலத்தில் ஞானப்பாலை யருள்செய்தவன், அவன் எழுந்தருளி யிருக்கிற ஊரானது திருநனி பள்ளியேயாம்.

(க-ரை.) பன்றிக் கொம்பு முதலியவற்றை யணிந்த சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர், திருநனிபள்ளியே யென்பதாம்.

(வி-ரை.) ஆமை - ஆமையோடு. அரணம் - காவல். (9)

**காலமுநாள்கழியுநனிபள்ளிமனத்தினுள்கிக்**
**கோலமதாயவனைக்குளிர்நாவலவூரன்சொன்ன**
**மாலைமதித்துரைப்பார்மண்மறந்துவானோருலகிற்**
**சாலநல்லினமெய்தித்தவலோகத்திருப்பவரே.**

(ப-ரை.) காலமும் நாள்கழியும் - காலங்களும் நாள்களும் கழியா நின்றன, கோலமது ஆயவனை - அழகு பெற்றவனை, குளிர் நாவலவூரன் சொன்ன - சுந்தரன் சொன்ன, மாலை - கவிமாலையை, மதித்து உரைப்

பார் - மகிழ்ந்து பாடவல்லவர், மண்மறந்து - நிலவுலகை மறந்து, வானோர் உலகில் - தேவலோகத்தில், சாலநல் இனம் எய்தி - மிகவும் நல்லினத்தை யடைந்து, தவலோகத்து இருப்பவரே - தபோலோகத்தி லிருப்பவரே யாவர் எ-று.

(பொ-ரை.) காலங்களும் நாள்களும் கழியாநின்றன, அழகு பெற்ற வனை சுந்தரன் சொன்ன கவிமாலையை மகிழ்ந்து பாடவல்லவர், நிலவுலகைமறந்து தேவலோகத்தில் மிகவும் நல்லினத்தை யடைந்து தபோலோகத்திலிருப்பவரே யாவர்.

(கு-ரை.) திருநனிபள்ளிச் சிவபெருமானை, நாவலூரன் புகழ்ந்த இப் பத்துப்பாடலும் வல்லார், தவலோகத் திருப்பவராவர் என்பதாம்.

(வி-ரை.) கழிதல் - கடத்தல். உள்கல் - நினைத்தல். (10)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - நற்றுணையப்பர். தேவியார் - பர்வதராசபுத்திரி.

---

## திருநன்னிலத்துப் பெருங்கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**தண்ணியல்வெம்மையினான் றலையிற்கடைதோறும்பலி**
**பண்ணியன்மென்மொழியாரிடங்கொண்டுழல்பாண்டரங்கன்**
**புண்ணியநான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப**
**நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) தண் இயல் வெம்மையினான் - தட்பமும் வெப்பமு முடையவன், தலையில் - தலையோட்டில், கடைதோறும் - வாயில்தோறும், பலி - பிச்சையை, பண் இயல் - பண்போலும், மென் மொழியாரிடம் கொண்டு உழல் - மென் சொல்லியராகிய மாதரிடத்தேற்றுழல்கின்ற, பாண்டரங்கன் - பாண்டரங்கன், புண்ணிய நான் மறையோர் - வேதியர், முறையால் - கிரமமாக, அடிபோற்றிசைப்ப - திருவடியை வணங்க, நண்ணிய - பொருந்திய, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) தட்பமும் வெப்பமுமுடையவன், தலையோட்டில்வாயில் தோறும் பிச்சையை பண்போலும் மென்சொல்லியராகிய மாதரிடத் தேற்றுழல்கின்ற பாண்டரங்கன், வேதியர் கிரமமாக திருவடியைவணங்க பொருந்திய திருநன்னிலத்து பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே,

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபெருமானே, குளிர்ச்சி வெப்ப முதலானவைகளாயிருப்பவ னென்பதாம்.

(வி-ரை.) பாண்டரங்கன் - பாண்டரங்கமென்னுங் கூத்துடையவன். (சிவன்) (1)

**வலங்கிளர்மாதவஞ்செய்மலைமங்கையோர்பங்கினனாய்ச்**
**சலங்கிளர்கங்கைதங்கச்சடையொன்றிடையே தரித்தான்**
**பலங்கிளர்பைம்பொழிறண்பனிவெண்மதியந்தடவ**
**நலங்கிளர்நன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) வலம்கிளர் - மனவுறுதிமிகுந்த, மாதவம்செய் - பெருந்தவஞ்செய்த, மலைமங்கை - மலைமகளை, ஓர் பங்கினனாய்-ஒருபாகத்திலுடையவனாய், சலம்கிளர் கங்கைதங்க - நீர் மிகுந்த கங்காநதி தங்கும்படி, சடை ஒன்றிடையே தரித்தான் - ஒற்றைச் சடையில் தாங்கினவன், பலம்கிளர் பைம்பொழில்-பலன் மிகுந்த பசும் பொழில்கள் சூழ்ந்த, தண்பனி வெள்மதியம் தடவ - வெண்மையாகிய சந்திரன் தடவலால், நலம்கிளர் - அழகுமிக்க, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) மனவுறுதிமிகுந்து பெருந்தவஞ்செய்த மலைமகளை ஒருபாகத்தி லுடையவனாய் நீர் மிகுந்த கங்காநதி தங்கும்படி ஒற்றைச்சடையில் தாங்கினவன், பலன் மிகுந்த பசும் பொழில்கள் சூழ்ந்த வெண்மையாகிய சந்திரன் தடவலால் அழகு மிக்க திருநன்னிலத்து பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபெருமானே, மலைமகள் பாகனாயெழுந்தருளி யிருப்பவனென்பதாம். (2)

**கச்சியினின்கருப்பூர்விருப்பன்கருதிக்கசிவா**
**ருச்சியன்பிச்சையுண்ணியுலகங்களெல்லாமுடையா**
**னொச்சியம்பச்சிலையானுரைதீர்புனலாற்றொழுவார்**
**நச்சியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) கச்சியன்-திருக்கச்சியை யுடையவன், இன்கருப்பூர் விருப்பன் -இனிய கருப்பூரில் விருப்பமுடையவன், கருதிகசிவார்-நினைந்துருகுவோரது, உச்சியன் - உச்சியிலிருப்பவன், பிச்சை உண்ணி-பிச்சைச்சோறுண்பவன், உலகங்கள் எல்லாம் உடையான்-எல்லா வுலகங்களையுமுடையவன், நொச்சியம் பச்சிலையான்-நொச்சியாகிய அழகிய பச்சிலையையுடையவன், நுரைதீர் புனலால் தொழுவார் - நுரையொழிந்த நீர் கொண்டு அபிஷேகஞ் செய்து தொழுவோர், நச்சிய - விரும்பின, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில்-பெருங்கோயிலை, நயந்தவனே-விரும்பி வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) திருக்கச்சியை யுடையவன், இனிய கருப்பூரில் விருப்பமுடையவன், நினைந்துருகுவோரது உச்சியிலிருப்பவன், பிக்ஷைச்சோறுண்பவன், எல்லா வுலகங்களையுமுடையவன், சொச்சியாகிய அழகிய பச்சிலையை யுடையவன், நுரையொழிந்த நீர்கொண்டு அபிஷேகஞ்செய்து தொழுவோர் விரும்பின திருநன்னிலத்து பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபெருமானே, கச்சி முதலியவற்றை யுடையனு யிருப்பவனென்பதாம்.

(வி-ரை.) கச்சி, கருப்பூர் என்பன திருப்பதிகள். (3)

**பாடியநான்மறையான்படுபல்பிணக்காடரங்கா**
**வாடியமாநடத்தானடிபோற்றியென்றன்பினராய்ச்**
**சூடியசெங்கையினர்பலதோத்திரம்வாய்த்தசொல்லி**
**நாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) பாடிய நான்மறையான் - பாடப்பட்ட நால்வேதங்களை யுடையவன், படு - இறந்துபட்ட, பல்பிணக்காடு - பல பிணக்காட்டினை, அரங்கா - ஆடிடமாகக்கொண்டு, ஆடிய - அதிலாடின, மாநடத்தான் - பெரிய நடநத்தையுடையவன், அடிபோற்றியென்று - திருவடிக்கு நமஸ்காரமென்று, அன்பினராய்-அன்புடையராய், சூடிய செங்கையினர்பலர் - குவித்த செங்கையினர் அநேகர், வாய்ந்த - இசைந்த, தோத்திரம் சொல்லி - தோத்திரங்களைச் சொல்லி, நாடிய-விரும்பின, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) பாடப்பட்ட நால்வேதங்களையுடையவன், இறந்துபட்ட பல பிணக்காட்டினை ஆடிடமாகக்கொண்டு அதிலாடின பெரிய நடநத்தையுடையவன், திருவடிக்கு நமஸ்காரமென்று அன்புடையராய் குவித்த செங்கையினர் அநேகர் இசைந்த தோத்திரங்களைச் சொல்லி விரும்பின திருநன்னிலத்து பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபெருமானே, மயானத்தில் நடிப்பவனென்பதாம்.

(வி-ரை.) படுதல் - இறத்தல். நடத்தான் - நடநஞ் செய்பவன். (4)

**பிலந்தருவாயினொடுபெரிதும்வலிமிக்குடைய**
**சலந்தரனுகமிருபிளவாக்கியசக்கரமுன்**
**னிலந்தருமாமகள்கோனெடுமாற்கருள்செய்தபிரா**
**னலந்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) பிலம்தருவாயினொடு - குகைபோலும் வாயுடனே, பெரிதும் வலிமிக்கு உடைய - மிகப் பெருவலியையுமுடைய, சலந்தரன்-சலந்தரனது, ஆகம் - சரீரத்தை, இருபிளவு ஆக்கிய - இருபிளவுசெய்த, சக்கரம்-சக்கரப்படையை, முன் - முற்காலத்தில், நிலம்தரும்மாமகள்-உலகமெல்லாம்பெற்ற திருமகளுக்கு, கோன்-கணவனாகிய, நெடுமாற்கு அருள்செய்த - விட்டுணுவுக்கு அருள்செய்த, பிரான் - உபகாரசீலன், நலம்தரு-நன்மையைத்தருகிற, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(போ-ரை.) குகைபோலும் வாயுடனே மிகப் பெருவலியையுமுடைய சலந்தரனது சரீரத்தை இருபிளவுசெய்த சக்கரப்படையை முற்காலத்தில் உலகமெல்லாம்பெற்ற திருமகளுக்கு கணவனாகிய விட்டுணுவுக்கு அருள்செய்த உபகாரசீலன், நன்மையைத்தருகிற திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) சலந்தரனுடம்பைப்பிளந்த சக்கரப்படையைத் திருமாலுக்கருள்செய்தவன், திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபிரானே யாவன் என்பதாம். (5)

**வெண்பொடிமேனியினான் கருநீலமணிமிடற்றான்**
**பெண்படிசெஞ்சடையான்பிரமன்சிரம்பீடழித்தான்**
**பண்புடைநான்மறையோர்பயின்றேத்திப்பல்கால்வணங்கு**
**நண்புடைநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) வெண்பொடி மேனியினான் - திருவெண்ணீறு பூசப்பட்ட திருமேனியை யுடையவன், கருநீலமணிமிடற்றான் - கருமையாகிய நீலமணிபோலுங் கண்டத்தையுடையவன், பெண்படிசெஞ்சடையான்-கங்கைதங்கிய செஞ்சடையையுடையவன், பிரமன்சிரம் பீடு அழித்தான் - பிரமனது தலையை பெருமையழித்தவன், பண்பு உடை நான்மறையோர் - நற்குணமுடைய சதுர்வேதபாரங்கதர், பயின்று ஏத்தி-மிகத் துதித்து, பல்கால் வணங்கும்-பலகாலும் தொழுகிற, நண்பு உடை - நட்புள்ள, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(போ-ரை.) திருவெண்ணீறு பூசப்பட்ட திருமேனியையுடையவன், கருமையாகிய நீலமணிபோலுங் கண்டத்தையுடையவன், கங்கைதங்கிய செஞ்சடையை யுடையவன், பிரமனது தலையை பெருமையழித்தவன், நற்குணமுடைய சதுர்வேத பாரங்கதர் மிகத்துதித்து பலகாலுந் தொழுகிற நட்புள்ள திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) வெண்பொடியானும் செஞ்சடையானும் ஆகிய சிவபெருமானே, திருநன்னிலத்துப் பெருங்கோயிலில் எழுந்தருளியிருப்பவன் என்பதாம். (6)

**தொடைமலிகொன்றைதுன்றுஞ்சடையன்சுடர்வெண்மழுவாட்**
**படைமலிகையன்மெய்யிற்பகட்டுருரிப்போர்வையினன்**
**மடைமலிவண்கமலம்மலர்மேன்மடவன்னமன்னி**
**நடைமலிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) தொடைமலிகொன்றை - தொடுக்கப்பட்ட கொன்றை மலர்மாலை, துன்றும் - நெருங்கியுள்ள, சடையன் - சடையையுடையவன், சுடர் - விளங்குகிற, வெண்மழு - வெண்மழுவாகிய, வாள் - ஒளியை யுடைய, படையன் - ஆயுதத்தையுடையவன், மெய்யில் - திருமேனியில், பகடு - யானையின், ஈர் உரிப்போர்வையினன் - குளிர்ந்த தோலைப் போர்த்துக்கொண்டவன், மடைமலி - நீர்மடைகளில் மிக்கிருக்கிற, வண்கமல மலர்மேல் - வளவிய தாமரைமலர்களின் மீது, மட அன்னம் மன்னி - இளமையுள்ள அன்னப்பறவைகள் இருந்து, நடைமலி - நடைபயில்கிற, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) தொடுக்கப்பட்ட கொன்றைமலர்மாலை நெருங்கியுள்ள சடையையுடையவன், விளங்குகிற வெண்மழுவாகிய ஒளியையுடைய ஆயுதத்தையுடையவன், திருமேனியில் யானையின் குளிர்ந்த தோலைப்போர்த்துக் கொண்டவன், நீர் மடைகளில் மிக்கிருக்கிற வளவிய தாமரைமலர்களின்மீது இளமையுள்ள அன்னப்பறவைகள் இருந்து நடைபயில்கிற திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை) திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபிரானே, கொன்றை மாலை முதலியவற்றை யணிந்திருப்பவனென்பதாம். (7)

**குளிர்தருதிங்கள்கங்கைகுரவோடரக்கூவிளமு**
**மிளிர்தருபுன்சடைமேலுடையான்விடையான்விரைசேர்**
**தளிர்தருகோங்குவேங்கைதடமாதவிசண்பகமு**
**நளிர்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) குளிர்தருதிங்கள் - குளிர்ச்சியாகிய சந்திரன், கங்கை - கங்கையாறு, குரவோடு - குராமலரோடு, அர - பாம்பு, கூவிளமும் - வில்வமும், மிளிர்தரு - விளங்குகிற, புன்சடைமேல் உடையான் - புல்லிய சடைமீதுடையவன், விடையான் - இடபவாகனமுடையவன், விரைசேர் - மணம் பொருந்திய, தளிர்தரு - தளிர்க்கிற, கோங்கு - கோங்கமரம், வேங்கை - வேங்கைமரம், தடம் - பெரிய, மாதவி - குருக்கத்தி, சண்பகமும் - சண்பகமரமும், நளிர்தரு - குளிர்ச்சியைத் தருகிற, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே' எ-று.

(பொ-ரை.) குளிர்ச்சியாகிய சந்திரன், கங்கையாறு குராமலரோடு பாம்பு வில்வமும் விளங்குகிற புல்லிய சடைமீதுடையவன், இடபவாகன

முடையவன், மணம்பொருந்திய தளிர்க்கிற கோங்கமரம் வேங்கைமரம் பெரிய குருக்கத்தி சண்பகமரமும் குளிர்ச்சியைத்தருகிற திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயிற் சிவபிரானே, திங்கள் கங்கை முதலியவற்றை யணிந்திருப்பவனென்பதாம்.

(வி-ரை.) கோங்கு, வேங்கை, மாதவி என்பன தருவிசேடங்கள். (8)

**கமர்பயில்வெஞ்சுரத்துக்கடுங்கேழற்பின் கானவனா**
**யமர்பயில்வெய்தியருச்சுனற்கருள்செய்தபிரான்**
**றமர்பயிறண்விழவிற்றகுசைவர் தவத்தின்மிக்க**
**நமர்பயினன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) கமர்பயில் - வெடிப்புக்களையுடைய வெம்சுரத்து - வெப்பமாகிய பாலைநிலத்தில், கடுங்கேழல்பின் - கடியபன்றியின்பின்னே, கானவனாய் - வேடுவனாகி, அமர்பயில்வு எய்தி - சண்டைசெய்யவந்து, அருச்சுனற்கு அருள்செய்த பிரான் - அருச்சுனனுக்கு அருள்செய்த பெருமான், தமர் பயில் தண்விழவில் - அடியார் நெருங்குகிற தண்ணிய திருவிழாவில், தகுசைவர் - தகுந்தசைவர், தவத்தின் மிக்க நமர் - தவத்தினால் மேன்மையடைந்த நம்மவர், பயில் - நெருங்குகிற, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே - விரும்பி வாழ்வோனே எ-று.

(போ-ரை.) வெடிப்புக்களையுடைய வெப்பமாகிய பாலைநிலத்தில், கடிய பன்றியின்பின்னே வேடுவனாகி சண்டை செய்யவந்து அருச்சுனனுக்கருள்செய்த பெருமான், அடியார் நெருங்குகிற தண்ணிய திருவிழாவில் தகுந்த சைவர் தவத்தினால் மேன்மையடைந்த நம்மவர் நெருங்குகிற திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) அருச்சுனனுக் கருள்செய்யும்பொருட்டுப் பன்றியின் பின்னோடின சிவபெருமானே, திருநன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனென்பதாம்.

(வி-ரை.) கமர் - வெடிப்பு. வெம்சுரம் - கொடிய பாலைநிலம். கடுங்கேழல் - வேகத்தையுடையபன்றி. அமர்பயில்வு - போர்செய்தல். தமர் - அடியார். (9)

**கருவரைபோலரக்கன்கயிலைம்மலைக்கீழ்க்கதற**
**ஒருவிரலாலடர்த்தின்னருள்செய்தவுமாபதிதான்**
**திரைபொருபொன்னிநன்னீர்த்துறைவன்றிகழ்செம்பியர்கோ**
**னரபதிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.**

(ப-ரை.) கருவரைபோல் அரக்கன் - கரிய மலைபோன்ற அரக்கன், கயிலைமலைகீழ் கதற - கயிலைமலையின் கீழேயகப்பட்டுக் கதற, ஒருவிரலால் அடர்த்து - ஒருவிரலால் நெருக்கி, இன் அருள் செய்த - இனிய கிருபை

செய்த, உமாபதிதான்-உமாநாயகன், திரைபொரு-அலைமோதுகிற, பொன்னிநன்னீர்த் துறைவன் - காவிரிநன்னீர்த் துறையை யுடையவன், திகழ் செம்பியர்கோன் - விளங்குகிற சோழர்பிரான், நரபதி-நரேந்திரன், நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனே-விரும்பி வாழ்வோனே எ-று.

(பொ-ரை.) கரியமலைபோன்ற அரக்கன் கயிலைமலையின்கீழே யகப்பட்டுக்கதற, ஒரு விரலால் நெருக்கி இனிய கிருபைசெய்த உமாநாயகன், காவிரிநன்னீர்த் துறையையுடையவன், விளங்குகிற சோழர்பிரான், நரேந்திரன், திருநன்னிலத்துப் பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனே.

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயினயந்தவனே, இராவணனை அடர்த்தவன் என்பதாம்.

(வி-ரை.) கருவரை-கரியமலை. அரக்கன் - இராவணேசுரன், திரைபொருதல்-அலைமோதுதல். பொன்னி-காவிரிநதி. செம்பியர்கோன்-சோழன்.()

**கோடுயர்வெங்களிற்றுத்திகழ்கோச்செங்கணான்செய்கோயி**
**னாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனைச்**
**சேடியல்சிங்கிதந்தைசடையன்றிருவாரூரன்**
**பாடியபத்தும்வல்லார்புகுவார்பரலோகத்துளே.**

(ப-ரை.) கோடு உயர்-கொம்புயர்ந்த, வெங்களிற்று-கொடிய யானைமீது, திகழ் - விளங்குகிற, கோச்செங்கணான் செய்-கோச்செங்கட் சோழன் அமைத்த, கோயில் நாடிய-கோயிலை விரும்பிய, நன்னிலத்து - திருநன்னிலத்து, பெருங்கோயில் - பெருங்கோயிலை, நயந்தவனை - விரும்பி வாழ்வோனை, சேடு இயல் சிங்கிதந்தை - பெருமை பொருந்திய சிங்கியின் தந்தை, சடையன் - சடையன், திருவாரூரன் - திருவாரூரன், பாடிய - சுந்தரன் பாடின, பத்தும் வல்லார் பத்துப்பாடலும் கற்றவல்லவர், பரலோகத்துள்ளே புகுவார் - சிவலோகத்துள்ளே பிரவேசிப்பார் எ-று.

(பொ-ரை.) கொம்புயர்ந்த கொடிய யானைமீது விளங்குகிற கோச்செங்கட்சோழன் அமைத்த கோயிலை விரும்பிய திருநன்னிலத்து பெருங்கோயிலை விரும்பி வாழ்வோனை, பெருமை பொருந்திய சிங்கியின் தந்தை சடையன் திருவாரூரன் சுந்தரன் பாடின பத்துப்பாடலும் கற்றுவல்லவர், சிவலோகத்துள்ளே பிரவேசிப்பர்.

(க-ரை.) திருநன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனை, நாவலூரன் புகழ்ந்துரைத்த இந்தப் பதிகத்தைக் கற்றுவல்லவர் பரலோகத்தையடைவர் என்பதாம்.

(வி-ரை.) சேடு-பெருமை, அழகுமாம். (11)

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் சோழநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர்-பிரமேசுவரர். தேவியார்-பிரமேசுவரி.

## திருநாகேச்சரம்

### பண் - பஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

**பிறையணிவா ணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க**
**நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே**
**குறையணிகுல்லைமுல்லையளைந்துகுளிர்மாதவிமேற்**
**சிறையணிவண்டுகள்சேர் திருநாகேச்சரத்தானே.**

(ப-ரை.) பிறைஅணிவாள் நுதலாள்-பிறைபோலும் அழகியஒளிபொருந்திய நெற்றியை யுடையவளாகிய, உமையாள் அவள்-உமையவளாகிய அவள், பேழ் கணிக்க - அஞ்ச, நிறைஅணி நெஞ்சு அனுங்க - கற்பினையுடைய மனம்வருந்த, நீலமால் விடம் -கரிய பெரியவிடத்தை, உண்டது- உண்டதற்குக் காரணம், என்னே -யாதோ, குறை அணி குல்லை - குறுகிய அழகிய துளசிக் கொல்லைகள் சூழ்ந்த, முல்லை அளைந்து - முல்லை நிலத்தைச் சேர்ந்து, குளிர்மாதவிமேல் - குளிர்ந்த மாதவிகளின்மேல், சிறை அணி வண்டுகள்சேர் - சிறையழகுபெற்ற வண்டுகள்சேர்ந்த, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) பிறைபோலும் அழகிய ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளாகிய உமையவள் அஞ்ச, கற்பினையுடைய மனம்வருந்த, கரிய பெரியவிடத்தை யுண்டதற்குக் காரணம் யாதோ, குறுகியஅழகிய துளசிக்கொல்லைகள் சூழ்ந்த முல்லைநிலத்தைச் சேர்ந்து குளிர்ந்தமாதவிகளின் மேல் சிறையழகுபெற்ற வண்டுகள் சேர்ந்த திருநாகேச்சரத்தை யுடையவனே.

(கு-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான் விடமுண்டது யாதுக்கோ வென்பதாம்.

(வி-ரை.) பேழ்கணித்தல்-அஞ்சுதல். அனுங்கல்-வருந்தல். குல்லை- துளசி. மாதவி - குருக்கத்திமரம், ஓர் கொடியெனினுமாம். சிறை-சிறகு. அணி - அழகு. (1)

**அருந்தவமாமுனிவர்க்கருளாகியோராலதன்கீ**
**ழிருந்தறமேபுரிதற்கியல்பாகியதென்னைகொலாங்**
**குருந்தயலேகுரவம்மரவின்னெயிறேற்றரும்பச்**
**செருந்திசெம்பொன்மலருந் திருநாகேச்சரத்தானே.**

(ப-ரை.) அருந்தவம் - அரிய தவத்தையுடைய, மாமுனிவர்க்கு - பெரிய முனிவருக்கு, அருளாகி - அருள் செய்த, ஓர் - ஒரு, ஆலதன்கீழ் இருந்து - கல்லாலின் கீழிருந்து, அறமே புரிதற்கு - அறமுபதேசித்

தற்கு, இயல்பு ஆகியது - சம்மதித்தது, என்னைகொலாம் - என்னையோ, குருந்து அயலே குரவம் - குருந்தினருகேயுள்ள குராமரமும், மரா - மராமரமும், இன் எயிறு ஏற்று அரும்ப - மாதரது இனிய பல்லினையொத்து அரும்பாநிற்க, செருந்தி - செருந்திமரம், செம்பொன்மலரும் - செம்பொன்போல மலர்தற்கிடமாகிய, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை) அரிய தவத்தையுடைய பெரிய முனிவருக்கு அருள் செய்து ஒருகல்லாலின் கீழேயிருந்து அறமுபதேசித்தற்கு சம்மதித்தது என்னையோ, குருந்தினருகேயுள்ள குராமரமும், மராமரமும் மாதரது இனிய பல்லினையொத்து அரும்பாநிற்க, செருந்திமரம் செம்பொன் போல மலர்தற்கிடமாகிய திருநாகேச்சரத்தையுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான், ஆலநிழற்கீழிருந்து, முனிவர்க்கு அறமுரைத்தது யாதுக்கென்பதாம்.

(வி-ரை.) முனிவர் - என்றது சநகாதியரை. மரா-மராமரம், இது மரவெனக் குறுகிற்று. (2)

**பாலனதாருயிர்மேற்பரியாதுபகைத்தெழுந்த**
**காலனைவீடுவித்துக்கருத்தாகியதென்னைகொலாங்**
**கோலமலர்குவளைக்கழுநீர்வயல்சூழ்கிடங்கிற்**
**சேலொடுவாளைகள்பாய்திருநாகேச்சரத்தானே.**

(ப-ரை.) பாலனது - பாலகனாகிய மார்க்கண்டனது, ஆர் உயிர் மேல் - அரிய வுயிரின்மீது, பரியாது - இரக்கமின்றி, பகைத்து எழுந்த - கோவித்தெழுந்த, காலனை - யமனை, வீடுவித்து - கொன்று, கருத்தாகியது - நீ திருவுளம் பற்றியது, என்னைகொலாம் - என்னையோ, கோலமலர் குவளை - அழகிய குவளை மலர்களும், கழுநீர் - கழுநீர் மலர்களும் நிறைந்த, வயல் சூழ் கிடங்கில் - வயல்கள் சூழ்ந்த பள்ளங்களில், சேலொடு வாளைகள்பாய் - சேலோடு வாளைகளும் பாய்ந்து விளையாடுதற்கிடமாகிய, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தையுடையவனே எ-று.

(பொ-ரை.) பாலகனாகிய மார்க்கண்டனது அரிய வுயிரின்மீது இரக்கமின்றி கோவித்தெழுந்த யமனைக் கொன்று நீ திருவுளம்பற்றியது என்னையோ, அழகியகுவளைமலர்களும் கழுநீர் மலர்களும் நிறைந்த வயல்கள் சூழ்ந்த பள்ளங்களில் சேலோடு வாளைகளும் பாய்ந்து விளையாடுதற்கிடமாகிய திருநாகேச்சரத்தையுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான், பாலகன் பொருட்டுக் காலனையுதைத்த தென்னோ வென்பதாம். (3)

குன்றமலைக்குமரிகொடியேரிடையாள்வெருவ
வென்றிமதகரியின்னுரிபோர்த்ததுமென்னேகொலோ
முன்றிலிளங்கமுகின்முதுபாளைமதுவளைந்து
தென்றல்புகுந்துலவுந்திருநாகேச்சரத்தானே.

(ப-ரை.) குன்றம் - குவடுகளையுடைய, மலைக்குமரி - மலைமகளாகிய, கொடியேர் இடையாள் - கொடியை நிகர்த்த இடையையுடையவளாகிய உமாதேவி, வெருவ - அஞ்ச, வென்றி - வெற்றியையுடைய, மதகரியின் உரி-மதயானையின் தோலை, போர்த்ததும் - போர்த்துக்கொண்டதும், என்னேகொலோ - என்னேயோ, முன்றில் - முற்றத்திலுள்ள, இளங்கமுகின் - இளங்கமுகினது, முதுபாளை - முதிர்ந்த பாளைகளின், மது அளைந்து - தேனோடு கலந்து, தென்றல் புகுந்து உலவும்-தென்றற்காற்று புகுந்துலாவுகிற, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தையுடையவனே எ-று.

(போ-ரை.) குவடுகளையுடைய மலைமகளாகிய கொடியை நிகர்த்த இடையை யுடையவளாகிய உமாதேவி அஞ்ச, வெற்றியையுடைய மதயானையின்தோலை போர்த்துக்கொண்டதும் என்னேயோ, முற்றத்திலுள்ள இளங்கமுகினது முதிர்ந்த பாளைகளின் தேனோடு கலந்து தென்றற்காற்று புகுந்துலாவுகிற திருநாகேச்சரத்தை யுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான் உமாதேவி யஞ்சும்படி யானைத்தோலைப் போர்த்துக்கொண்டது யாது கருதியோ வென்பதாம்.

(வி-ரை.) குன்றம் - குவடு. மலை-இமயமலை. மது-தேன். அளைந்து-பூசிக்கொண்டு. (4)

அரைவிரிகோவணந்தோடரவார்த்தொருநான்மறைநூ
லுரைபெருகவுரைத்தன்றுகந்தருள்செய்ததென்னே
வரைதருமாமணியும்வரைச்சந்தகிலோடுமுந்தித்
திரைபொருதண்பழனத்திருநாகேச்சரத்தானே.

(ப-ரை.) அரை-திருவரையில், விரிகோவணத்தோடு-அகன்ற கோவணத்துடனே, அரவு ஆர்த்து-பாம்பைக்கட்டி, ஒருநான்மறைநூல்-ஒப்பற்ற நால்வேதமாகிய நூலை, உரைபெருக உரைத்த- சொல் பெருகச்சொல்லி, அன்று - அந்நாளில், உகந்து - மகிழ்ந்து, அருள் செய்தது என்னே - அருள்செய்தது என்னேயோ, வரைதருமாமணியும்-மலைதந்த பெரிய மணிகளையும், வரைச்சந்து-மலைச் சந்தனமரங்களை, அகிலோடும் உந்தி - அகில் மரங்களோடும் தள்ளிக்கொண்டு, திரைபொரு-அலைமோதுகிற, தண்பழனம்-குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) திருவரையில் அகன்ற கோவணத்துடனே பாம்பைக் கட்டி ஒப்பற்ற நால்வேதமாகிய நூலைச்சொல்பெருகச்சொல்லி, அந்நாளில் மகிழ்ந்து அருள்செய்தது என்னையோ மலைசார்ந்த பெரிய மணிகளையும், மலைச்சந்தனமரக்கட்டைகளையும் அகில்மரக்கட்டைகளையும் தள்ளிக்கொண்டு அலைமோதுகிற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருநாகேச்சரத்தையுடையவனே.

(க-ரை.) திருநாகேச் சரத்துச் சிவபெருமான், நான்கு வேதங்களையும் அன்று உரைத்தருளியது யாது கருதியோவென்பதாம். (5)

தங்கியமாதவத்தின் றழல்வேள்வியினின்றெழுந்த
சிங்கமுநீள்புலியுஞ்செழுமால்கரியோடலறப்
பொங்கியபோர்புரிந்துபிளந்தீருரிபோர்த்ததென்னே
செங்கயல்பாய்கழனித்திருநாகேச்சரத்தானே.

(ப-ரை.) தங்கிய மாதவத்தின் - பொருந்திய பெருந் தவத்தினையுடைய, தழல்வேள்வியில் நின்று எழுந்த - அக்கினி ஹோமத்தினின்று எழுந்த, சிங்கமும் நீள்புலியும் - சிங்கமும் பெரும்புலியும், செழுமால் கரியோடு அலற - செழிய மதமயக்கத்தையுடைய யானையோடு அலற, பொங்கிய போர்புரிந்து பிளந்து - மிக்க போர்செய்து அவற்றைப்பிளந்து, ஈர் உரிபோர்த்தது என்னே - அவற்றின் குளிர்ந்த தோலைப் போர்த்துக்கொண்டது என்னையோ, செங்கயல் பாய்கழனி - செங்கேல்கள் பாய்ந்து விளையாடுகிற வயல்கள் சூழ்ந்த, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) பொருந்திய பெருந்தவத்தினையுடைய அக்கினிஹோமத்தினின்றெழுந்த சிங்கமும் பெரும்புலியும் செழிய மதமயக்கத்தை யுடைய யானையோடு அலற, மிக்க போர்செய்து அவற்றைப் பிளந்து அவற்றின் குளிர்ந்த தோலைப் போர்த்துக்கொண்டது என்னையோ, செங்கேல்கள் பாய்ந்து விளையாடுகிற வயல்கள்சூழ்ந்த திருநாகேச்சரத்தையுடையவனே.

(கு-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான் சிங்க முதலியவற்றின் தோலை போர்த்துக்கொண்ட தென்னையோ வென்பதாம். (6)

நின்றவிம்மாதவத்தையொழிப்பான்சென்றணைந்துமிக்க
பொங்கியபூங்கணைவேள்பொடியாகவிழித்ததென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுவண்டேன்மலரச்
செங்கயல்பாய்வயல்சூழ்திருநாகேச்சரத்தானே.

(ப-ரை.) நின்ற இம்மாதவத்தை ஒழிப்பான் - நிலைபெற்ற இந்த மாதவத்தை யொழிக்கும்பொருட்டு, சென்று அணைந்து - சென்று சேர்ந்து, மிக்க பொங்கிய பூங்கணைவேள் - மிகவும் நெருங்கின புஷ்ப பாணத்தை யுடைய காமன், பொடியாக விழித்தது என்னே - நீறாகும்படி கண்திறந்தது

என்னே, பங்கயமாமலர்மேல்-பெருமைபொருந்திய தாமரைமலரில், மது விண்டு-தேன் வெளிப்பட்டு, வள்தேன் மலர-வளவிய தேன் பெருக, செங் கயல்பாய் வயல்சூழ் - செஞ்சேல்கள் பாய்ந்து விளையாடுகிற, திருநாகேச் சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) நிலைபெற்ற இந்த மாதவத்தை யொழிக்கும் பொருட்டு சென்று சேர்ந்து மிகவும் நெருக்கின புஷ்பபாணத்தையுடைய காமன் நீறாகும்படி கண்திறந்தது என்னே, பெருமை பொருந்திய தாமரை மலரில் தேன் வெளிப்பட்டு வளவிய தேன்பெருக, செஞ்சேல்கள் பாய்ந்து விளையாடுகிற திருநாகேச்சரத்தை யுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான், காமனை விழித்தீயால் எரித்தது யாதுக்கென்பதாம். (7)

வரியரநாணதாகமாமேருவில்லதாக
அரியனமுப்புரங்கள்ளவையாரழலூட்டலென்னே
விரிதருமல்லிகையும்மலர்ச்சண்பகமுமளைந்து
திரிதருவண்டுபண்செய்திருநாகேச்சரத்தானே.

(ப-ரை.) வரி அரநாணதாக - நீண்ட பாம்பு நாணாக, மாமேருவில்லதாக-பெரியமேருமலை வில்லாக, அரியனமுப்புரங்கள் அவை-அரியவாகிய முப்புரங்களென்பவைகளை, ஆர் அழல் ஊட்டல் என்னே-நிறைந்த நெருப்புக் கிரையாக்கின தென்னையோ, விரிதருமல்லிகையும் - மலர்ந்த மல்லிகையும், மலர்ச்சண்பகமும் அளைந்து - சண்பகமலரையும் பொருந்தி, திரிதருவண்டு-திரியாநின்ற வண்டுகள், பண்செய்-பண் பாடுகிற, திருநாகேச் சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) நீண்ட பாம்பு நாணாக, பெரிய மேருமலைவில்லாக அரியவாகிய முப்புரங்களென்பவைகளை நிறைந்த நெருப்புக் கிரையாக்கின தென்னையோ, மலர்ந்த மல்லிகையும் சண்பகமலரையும் பொருந்தி திரியாநின்ற வண்டுகள் பண்பாடுகிற திருநாகேச்சரத்தை யுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான் முப்புரத்தில் தீமூட்டினது என் கருதியோ வென்பதாம்.

(வி-ரை.) வரி - நீற்று. நாணதாக-கயிறாக. நாண் என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி. வில்லதாக என்புழியும் அது பகுதிப் பொருள் விகுதி. அரியன - அருமையுடையன. (8)

அங்கியல்யோகந்தன்னையழிப்பான்சென்றணைந்துமிக்க
பொங்கியபூங்கணைவேள்பொடியாகவிழித்தலென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுபண்வண்டறையச்
செங்கயனின்றுகளுந்திருநாகேச்சரத்தானே.

(ப-ரை.) அங்கு இயல் - அவ்விடத்து நீ இயைந்திருந்த, யோகந் தன்னை - யோகத்தை, அழிப்பான் - அழிக்கும்பொருட்டு, சென்று அணைந்து - வந்தடைந்து, மிகப் பொங்கிய - மிகுதியாகத் தருக்கின, பூங்கணை வேள் - புஷ்பபாணத்தையுடைய காமன், பொடியாக விழித்தல் என்னே - நீருகக் கண்விழித்தது என்னையோ, பங்கய மாமலர்மேல் - அழகாகிய தாமரை மலர்மீது, வண்டு மது உண்டு - வண்டுகள் தேனுண்டு, பண் அறைய - பண்பாட, செங்கயல் நின்று உகளும் - செஞ்சேல்கள் நின்று துள்ளி விளையாடுகிற, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தையுடையவனே எ-று.

(பொ-ரை.) அவ்விடத்து நீ இயைந்திருந்த யோகத்தை அழிக்கும் பொருட்டு வந்தடைந்து மிகுதியாகத் தருக்கின புஷ்பபாணத்தையுடைய காமன் நீருகக் கண்விழித்தது என்னையோ, அழகாகிய தாமரை மலர்மீது வண்டுகள் தேனுண்டு பண்பாட, செஞ்சேல்கள் நின்று துள்ளிவிளையாடுகிற திருநாகேச்சரத்தை யுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான், மன்மதனைப் பொடியாக விழித்தது யாதுக்கென்பதாம். (9)

**குண்டரைக்கூறையின்றித்திரியுஞ்சமண்சாக்கியப்பேய்**
**மிண்டரைக்கண்டதன்மைவிரவாகியதென்னைகொலோ**
**தொண்டிரைத்துவணங்கித்தொழில்பூண்டடியார்பரவுந்**
**தெண்டிரைத்தண்வயல்சூழ்திருநாகேச்சரத்தானே.**

(ப-ரை.) குண்டரை - கோட்சொல்வோரை, கூறை இன்றி - ஆடையில்லாமல், திரியும் - திரிகிற, சமண் சாக்கியப்பேய் மிண்டரை - சமணரும் சாக்கியப் பேய்களுமாகிய துஷ்டரை, கண்ட தன்மை - கண்டதனாலாகிய பயன், விரவாகியது என்னைகொலோ - கலந்தது என்னையோ, தொண்டு இரைத்து வணங்கி - தொண்டர்களாயினர் வணங்கி, தொழில் பூண்டு - தொழிலை மேற்கொண்டு, அடியார் பரவும் - அடியவர் துதிக்கிற, தெள்திரை தண்வயல்சூழ் - தெளிவாகிய அலைகள் தவழ்கிற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, திருநாகேச்சரத்தானே - திருநாகேச்சரத்தை யுடையவனே எ-று.

(பொ-ரை.) கோட்சொல்வோரையும் ஆடையில்லாமல் திரிகிற சமணரும் சாக்கியப் பேய்களுமாகிய துஷ்டரை கண்டதனாலாகிய பயன்கலந்தது என்னையோ, தொண்டர்களாயினர் வணங்கி தொழிலை மேற்கொண்டு அடியவர் துதிக்கிற தெளிவாகிய அலைகள் தவழ்கிற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருநாகேச்சரத்தை யுடையவனே.

(க-ரை.) திருநாகேச்சரத்துச் சிவபெருமான் சமணர் முதலானோரை வென்றது யாதுக்கோவென்பதாம். (10)

**கொங்கணைவண்டலர்த்தக்குயிலும்மயிலும்பயிலுந்**
**தெங்கணைபூம்பொழில்சூழ்திருநாகேச்சரத்தானை**
**வங்கமலிகடல்சூழ்வயனாவலவூரன்சொன்ன**
**பங்கமில்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே.**

(ப-ரை.) கொங்கு அணை - தேன்பொருந்திய, வண்டு அலர்த்த-வண்டுகள் மலர்த்த, குயிலும் மயிலும் - குயிலும் மயிலும், பயிலும் - சஞ்சரிக்கிற, தெங்கு அணை - தென்ன மரங்களுள்ள, பூம்பொழில்சூழ் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, திருநாகேச்சரத்தானை-திருநாகேச்சரத்தை யுடையவனை, வங்கம்மலி கடல்சூழ் - மரக்கலங்கள் மிக்குச் சஞ்சரிக்கிற கடல்சூழ்ந்த, வயல் நாவலவூரன் சொன்ன - சுந்தரன் சொன்ன, பங்கம் இல் - குறைவில்லாத, பாடல் வல்லார்-பாடலைக்கற்று வல்லவராகிய், அவர்தம்வினை-அவரது வினைகள், பற்று அறும் - வேரற்றுப்போகும் எ-று.

(போ-ரை.) தேன் பொருந்திய வண்டுகள் மலர்த்த, குயிலும் மயிலும் சஞ்சரிக்கிற தென்னமரங்களுள்ள பூஞ்சோலைசள் சூழ்ந்த திருநாகேச்சரத்தை யுடையவனை, மரக்கலங்கள் மிக்குச் சஞ்சரிக்கிற கடல்சூழ்ந்த சுந்தரன் சொன்ன குறைவில்லாத பாடலைக்கற்று வல்லவராகிய அவரது வினைகள் வேரற்றுப்போகும்.

(கு-ரை.) திருநாகேச் சரத்துச் சிவபெருமானை நாவலூரன் புகழ்ந்து பாடின இந்தப் பத்துப்பாடலுங் கற்று வல்லார்களுடைய வினை பற்றற்றுப்போம் என்பதாம்.

(வி-ரை.) வங்கம் - கப்பல். மலிதல் - மிகுதல். (11)

திருச்சிற்றம்பலம்.

**இத்தலம் சோழநாட்டிலுள்ளது.**

சுவாமிபெயர்-செண்பகாரணியேசுவரர். தேவியார் - குன்றமுலையம்மை.

---

## திருநொடித்தான்மலை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே**
**நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து**
**வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து**
**ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே.**

(ப-ரை.) தான் என்னை முன்படைத்தான் - தானென்னை முன்னே படைத்தவன், அது அறிந்து-அதனையுணர்ந்து, தன்பொன்னடிக்கே-தன் திருவடிக்கே, நான் எனபாடல்-நான் என்னபாடுவது, அந்தோ - ஐயோ,

நாயினேனை பொருட்படுத்துவான் - நாயேனைப் பொருட்படுத்தும் பொருட்டு, என்னைவந்து எதிர்கொள்ள - என்னைவந்து எதிர்கொள்ள, மத்த யானை அருள்புரிந்து - மதயானையை யருள்செய்து, ஊன் உயிர் வேறு செய்தான்-உடலுயிர்களை வேறாக்கினான், நொடித்தான்மலை உத்தமன் - திருநொடித்தான் மலை உத்தமன் எ-று.

(பொ-ரை.) தானென்னை முன்னே படைத்தவன், அதனையுணர்ந்து தன் திருவடிக்கே நான் என்னபாடுவது ஐயோ, நாயேனைப் பொருட்படுத்தும்பொருட்டு என்னை வந்து எதிர்கொள்ளும் பொருட்டு மதயானையை யருள் செய்து உடலுயிர்களை வேறாக்கினான், திருநொடித்தான்மலை உத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன் என்னைப் படைத்து என்னைத் தடுத்தாட்கொண்டு, எனக்கு ஒரு யானையையும் அருள் புரிந்தான் என்பதாம். (1)

**ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொலோ**
**ஊனையுயிர்வெருட்டியொள்ளியானைநினைந்திருந்தேன்**
**வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க**
**வானையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே.**

(ப-ரை.) ஆனை உரித்தபகை - யானையை யுரித்தபகை, அடியேனொடு மீளக்கொலோ - அடியேனொடு மீளத்தானோ, ஊனை உயிர்வெருட்டி - உடலுயிர்களை அச்சுறுத்தி, ஒள்ளியானை நினைந்திருந்தேன் - ஒட்பமுடையானை நினைந்திருந்தேன், வானை மதித்த அமரர் - விண்ணுலகை மதித்த தேவர், வலம்செய்து - பிரதக்ஷிணம் செய்து, என்னை ஏறவைக்க - என்னை உயர்த்த, ஆனை அருள்புரிந்தான் - ஆனையை அருள்செய்தான், நொடித்தான்மலை உத்தமன் - திருநொடித்தான்மலை உத்தமன் எ-று.

(பொ-ரை.) யானையையுரித்த பகை அடியேனொடு மீளத்தானோ உடலுயிர்களை அச்சுறுத்தி ஒட்பமுடையானை நினைந்திருந்தேன், விண்ணுலகை மதித்த தேவர் பிரதக்ஷிணம்செய்து என்னை உயர்த்த ஆனையை அருள்செய்தான் திருநொடித்தான்மலை உத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கு ஒரு யானையை அருள்செய்தான் என்பதாம்.

(வி-ரை.) ஒள்ளியான் - நல்லவன். வானை-சுவர்க்கலோகத்தை. மதித்த - பெருமைப்படுத்தின. (2)

**மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்**
**சுந்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனேனை**
**யந்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த**
**துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே.**

(ப-ரை.) மந்திரம் ஒன்று அறியேன் - ஒரு மந்திரமும் அறியேன், மனைவாழ்வை மகிழ்ந்து - இல்வாழ்வை மகிழ்ந்து, அடியேன் - தொண்ட

னேன், சுந்தரவேடங்களால் - அழகிய வேடங்களால், துரிசேசெய்யும் தொண்டன் - குற்றத்தையே செய்யும் தொண்டன், என்னை - அடியேற்கு, அந்தரம்மால் விசும்பில் - வேறாகிய பெரிய ஆகாயத்திற்செல்ல, அழகு ஆனை அருள்புரிந்தது - அழகிய யானை யருள்செய்தது, உம்தரமோ - உம்வசமோ, நெஞ்சமே - மனமே, நொடித்தான்மலை உத்தமன் - திருநொடித்தான்மலை உத்தமன் எ-று.

(போ-ரை.) ஒரு மந்திரமும் அறியேன், இல்வாழ்வை மகிழ்ந்து தொண்டனேன் அழகிய வேடங்களால் குற்றத்தையே செய்யும் தொண்டன், அடியேற்கு வேறாகிய பெரிய ஆகாயத்திற் செல்ல அழகிய யானை யருள்செய்தது உம்வசமோ, நெஞ்சமே திருநொடித்தான்மலை உத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கொரு யானையை யருள் புரிந்தான் என்பதாம்.

(வி-ரை.) மந்திரம் - ரஹஸ்யம். (3)

**வாழ்வையுகந்தநெஞ்சமடவார்தங்கள்வல்வினைப்பட்**
**டாழமுகந்தவென்னையதுமாற்றியமரரெல்லாஞ்**
**சூழவருள்புரிந்துதொண்டனேன்பரமல்லதொரு**
**வேழமருள்புரிந்தாநொடித்தான்மலையுத்தமனே.**

(ப-ரை.) வாழ்வை - ஆயுளை, உகந்த - விரும்பின, நெஞ்சம் - மனம், மடவார் தங்கள் - மாதரது, வல்வினைப்பட்டு - வலிய வினையிற் சிக்கி, ஆழ - அழுந்த, முகந்த என்னை - எடுத்த என்னை, அது மாற்றி - அதை மாற்றி, அமரர் எல்லாம் சூழ - தேவரெல்லாரும் சூழ, அருள்புரிந்து - அருள்செய்து, தொண்டனேன் பரம் அல்லது - தொண்டனேனுக்குத் தகுதியல்லாத, ஒரு வேழம் அருள்புரிந்தான் - ஒரு யானையை அருள் செய்தான், நொடித்தான்மலை உத்தமன் - திருநொடித்தான்மலை உத்தமன் எ-று.

(போ-ரை.) ஆயுளை விரும்பின மனம், மாதரது வலிய வினையிற் சிக்கி அழுந்த எடுத்த என்னை, அதை மாற்றி தேவரெல்லாரும்சூழ அருள் செய்து தொண்டனேனுக்குத் தகுதியல்லாத ஒரு யானையை அருள்செய்தான் திருநொடித்தான்மலை உத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கொரு யானையை யருள்புரிந்தான் என்பதாம்.

(வி-ரை.) வாழ்வு - ஆயுள், செல்வம் எனினுமாம். முகந்த-தூக்கின.

**மண்ணுலகிற்பிறந்து நும்மைவாழ்த்தும்வழியடியார்**
**பொன்னுலகம்பெறுதருெண்டனேனின்றுகண்டொழிந்தேன்**
**விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ளையானையின்மே**
**லென்னுடல்காட்டுவித்தாநொடித்தானமலையுத்தமனே.**

(ப-ரை.) மண்ணுலகில் பிறந்து - நிலவுலகில் ஜன்மித்து, நும்மை வாழ்த்தும்வழி அடியார்-நும்மைத் துதிக்கிற அடியவர், பொன்னுலகம் பெறுதல்-சுவர்க்க லோகத்தைப் பெறுதலை, தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன் - தொண்டனேன் இன்று பார்த்தொழிந்தேன், விண்ணுலகத்தவர்கள் விரும்ப - தேவர்கள் விரும்ப, வெள்ளை யானையின்மேல்-வெள்ளையானையின் மீது, என் உடல் காட்டுவித்தான் - என்னுடம்பைத் தோற்றுவித்தான், நொடித்தான் மலை உத்தமன் - திருநொடித்தான் மலை உத்தமன் எ-று.

(பொ-ரை.) நிலவுலகில் ஜன்மித்து நும்மைத் துதிக்கிற அடியவர் சுவர்க்கலோகத்தைப் பெறுதலைத் தொண்டனேன் இன்றுபார்த்தொழிந்தேன், தேவர்கள் விரும்ப வெள்ளையானையின்மீது என்னுடம்பைத் தோற்றுவித்தான் திருநொடித்தான் மலை உத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கு ஒரு வெள்ளை யானையைத் தந்தருளினன் என்பதாம். (5)

**அஞ்சினையொன்றிநின்று அலர்கொண்டடிசேர்வரியா**
**வஞ்சனை என்மனமேவைகிவானநன்னடர்முன்னே**
**துஞ்சுதன்மாற்றுவித்துத்தொண்டனேனபரமல்லதொரு**
**வெஞ்சினவானைதந்தானொடித்தான்மலையுத்தமனே.**

(ப-ரை.) அஞ்சினை — அச்சத்தை, ஒன்றிநின்று - அடைந்து நின்று, அலர்கொண்டு — மலர்கொண்டு நின்று, அடிசேர்வு அறியாவஞ்சனை - உன் திருவடியைச்சேர அறியாவஞ்சகனை, என்மனமே - என்நெஞ்சே, வானம் நல்நாடர்முன்னேவைகி - தேவர்களுக் கெதிரே தங்கி, துஞ்சுதல் மாற்றுவித்து - இறப்பை யொழித்து, தொண்டனேன் பரம் அல்லது - தொண்டனேனுக்குத் தகுதியல்லாத, ஒரு வெஞ்சினம் யானை தந்தான் - கொடுங்கோவத்தையுடைய ஒரு யானையைக்கொடுத்தான், நொடித்தான்மலை உத்தமன் - திருநொடித்தான்மலை உத்தமன் எ-று.

(பொ-ரை.) அச்சத்தை யடைந்து நின்று மலர்கொண்டு நின்று உன் திருவடியைச்சேர அறியா வஞ்சகனை என்நெஞ்சே தேவர்களுக் கெதிரே தங்கி, இறப்பையொழித்து தொண்டனேனுக்குத் தகுதியல்லாத கொடுங்கோவத்தையுடைய ஒரு யானையைக் கொடுத்தான் திருநொடித்தான்மலை யுத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கு ஒரு யானையைத் தந்தருளினன் என்பதாம்.

(வி-ரை.) வஞ்சனே - வஞ்சகமுடையேனுகிய என்னே. வெம்சினம் - கொடுங் கோவம். (6)

**நிலேகெடவிண்ணதிரநிலமெங்குமதிர்ந்தசைய**
**மலேயிடையானேயேறிவழியேவருவேனெதிரே**
**யலேகடலாலரையனலர்கொண்டுமுன்வந்திறைஞ்சும்**
**உலேயணேயாதவண்ணநொடித்தான்மலேயுத்தமனே.**

(ப-ரை.) நிலேகெட - நிலேகுலேய, விண் அதிர - ஆகாயம் நடுங்க, நிலம் எங்கும் அதிர்ந்து அசைய - நிலமுழுதும் அதிர்ந்து அசைய, மலே இடை - மலேதோற்கும்படியான, யானே ஏறி - யானேமேலேறி, வழியே வருவேனெதிரே - வழியேவருகிறவனுகிய எனக்கெதிரே, அலேகடல் ஆலர் - திருமால், அயன் - பிரமன், அலர்கொண்டு-மலர்களேக் கொண்டு, முன்வந்து இறைஞ்சும் - முன்னேவந்து வணங்குகிற, உலே அடையாத வண்ணம் - கெடுதலேயடையாதபடி, நொடித்தான்மலே உத்தமனே - திருநொடித்தான்மலே உத்தமன் எ-று.

(போ-ரை) நிலேகுலேய ஆகாயம் நடுங்க, நிலமுழுதும் அதிர்ந்து மசைய, மலே தோற்கும்படியான யானேமேலேறி வருகிறவனுகிய எனக் கெதிரே திருமால் பிரமன் மலர்களேக் கொண்டு முன்னேவந்து வணங்கு கிற கெடுதலேயடையாதப்படி திருநொடித்தான்மலே யுத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலே யுத்தமன், பிரமன் முதலியோர் வந்து வணங்கும்படி என்னே யானேயேறிவரச்செய்தருளினுன் என்பதாம்.

(வி-ரை.) விண் - மேகம். ஆலர் - ஆலிலேமேல் பள்ளிகொள்வோர். உலே - உலேதல். (வருந்தல்.) (7)

**அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்**
**விரவியவேதஒலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப**
**வரமலிவாணன்வந்துவழிதந்தெனக்கேறுவதோர்**
**சிரமலியானேதந்தானெடித்தான்மலேயுத்தமனே.**

(ப-ரை.) அரஒலி - அரகர என்னுமொலி, ஆகமங்கள் அறிவார்-ஆக மவுணர்ச்சியுள்ளவர், அறிதோத்திரங்கள் - அறிந்த தோத்திரங்கள், விரவிய - கலந்த, வேதவொலி - வேதமுழக்கம், விண் எல்லாம் வந்து - விண் ணுலகத்தா ரெல்லாரும் வந்து, எதிர்ந்து இசைப்ப - நேர் நின்று புகழ வரம்மலிவாணன் வந்து - பெருமை மிகுந்த வாணன் வந்து, வழி தந்து- வழிகாட்டி, எனக்கு அடியேனுக்கு, ஏறுவது - ஏறுதற்குரிய, ஓர் சிரம் மலி - ஒரு தலேமை பெற்ற, யானே தந்தான் - யானேயைக் கொடுத்தான், நொடித்தான்மலே உத்தமனே - திருநொடித்தான்மலே உத்தமன் எ-று.

(போ-ரை.) அரகர என்னுமொலி ஆகம வுணர்ச்சியுள்ளவர் அறிந்த தோத்திரங்கள், கலந்த வேதமுழக்கம் விண்ணுலகத்தாரெல்லாரும் வந்து நேர் நின்று புகழ, பெருமைமிகுந்த வாணன்வந்து வழிகாட்டி அடியேனுக்கு ஏறுதற்குரிய ஒரு தலைமைபெற்ற யானையைக்கொடுத்தான் திருநொடித்தான் மலை யுத்தமன்.

(க-ரை.) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கு ஒரு யானையைத் தந்தருளினான் என்பதாம்.

(வி-ரை.) விண் - ஆகுபெயராய் விண்ணுலகத்தாரை யுணர்த்திற்று.

**இந்திரன்மால்பிரமன்னெழிலால்மிகுதேவரெல்லாம்**
**வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து**
**மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமா**
**னந்தமரூரனென்றானொடித்தான்மலையுத்தமனே.**

(ப-ரை.) இந்திரன் - இந்திரன், மால் - திருமால், பிரமன் - பிரமன், எழில் ஆல் மிகு - அழகினால் மிகுந்த, தேவர் எல்லாம் - தேவரெல்லாரும், வந்து - வந்து, என்னை எதிர்கொள்ள - என்னை யெதிர்கொண்டழைக்க, மத்தயானை அருள்புரிந்து - மதயானையை அருள்செய்து, மந்திர மாமுனிவர் - வேதாகமங்களை யெல்லாம் உணர்ந்த பெருமை பொருந்திய முனிவர் கூட்டங்கள், இவன் ஆர் என - இவன் யாரென்று கேட்க, எம்பெருமான் - எம்பிரான், நம்தம் ஆரூரன் என்றான் - எமது சுந்தரன் என்றான், நொடித்தான்மலை உத்தமன் - திருநொடித்தான்மலைஉத்தமன் எ-று.

(போ-ரை.) இந்திரன் திருமால் பிரமன் அழகினால் மிகுந்த தேவர் எல்லாரும் வந்து என்னை எதிர்கொண்டழைக்க வேதரகசியங்களை எல்லாம் உணர்ந்த பெருமை பொருந்திய முனிவர்கூட்டங்கள் இதோவருகிறவர் யாரென்றுகேட்க, எம்பிரான் எமது சுந்தரன் என்றான் திருநொடித்தான்மலை யுத்தமன்.

(க-ரை) திருநொடித்தான்மலை யுத்தமன், எனக்கொரு யானை தந்து, முனிவர் முதலியோர் இவன்யாரென்று கேட்க, இவன் என் அடியவன் என்றான் என்பதாம். (9)

**ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்**
**சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன**
**வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையு**
**மாழிகடலரையாலஞ்சையப்பர்க்கறிவிப்பதே,**

(ப-ரை.) ஊழிதோறு ஊழிமுற்றும் - ஊழியூழிதோறும், உயர் பொன் - உயர்ந்த பொன்மயமாகிய, நொடித்தான்மலையை - திருநொடித்

தான் மலையை, சூழ் இசை - புகழ் சூழ்ந்த, இன் கரும்பின் சுவை- இனிய கரும்பின் சுவையுள்ள, நாவலவூரன் சொன்ன - சுந்தரன் சொன்ன, எழ் இசை இன் தமிழால்- எழிசையோடு கூடிய இனிய தமிழினல், இசைத்து எத்திய - சொல்லித்துதித்த, பத்தினையும் - பத்துப்பாடலேயும், ஆழிகடலரையா வஞ்சையப்பர்க்கு - ஆழிகடலரையாவஞ்சையப்பர்க்கு, அறிவிப்பதே - உணர்த்துவதே எ-று.

(போ-ரை) ஊழியூழிதோறும் உயர்ந்த பொன்மயமாகிய திருநொடித்தான்மலையை புகழ் சூழ்ந்த இனிய கரும்பின் சுவையுள்ள சுந்தரன் சொன்ன எழிசையோடு கூடிய இனிய தமிழினல் சொல்லித் துதித்த பத்துப்பாடலேயும் ஆழிகடலரையாவஞ்சையப்பர்க்கு உணர்த்துவதே.

(க-ரை.) திருநொடித்தான் மலையை நாவலூரன் புகழ்ந் துரைத்த இந்தப் பத்துப் பாடலும் பாடவல்லார் சிவலோகம் பெறுவர் என்பதாம்.

(வி-ரை.) திருநொடித்தான்மலை - வடநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஆழிகடல்-வட்டமாகிய கடல், ஆழமாகியகடல் எனினுமாம். (10)

திருச்சிற்றம்பலம்.

கொடித்தான்மலையென்பது கயிலைமலை.

சுவாமிபெயர் - கயிலாயநாதர். தேவியார் - பார்வதியம்மை.

ஆ பதிகம்-100.

நம்பியாரூரரென்னும்

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

தேவாரத் திருமுறை

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாட்டகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அக்கடிமை | 68 |
| அங்கங்களு | 520 |
| அங்கத்துறு | 581 |
| அங்கமாறு | 450 |
| அங்கமொ | 580 |
| அங்கமோ | 243 |
| அங்கமோரா | 690 |
| அங்கியல் | 704 |
| அங்கையின் | 144 |
| அஞ்சாதேயு | 112 |
| அஞ்சினார்க் | 342 |
| அஞ்சினை | 709 |
| அஞ்சுங்கொ | 131 |
| அடல்விடை | 521 |
| அடிகேளு | 17 |
| அடுதலையே | 164 |
| அட்டன் | 583 |
| அணிகொ | 475 |
| அண்டங்கபா | 162 |
| அண்டத்த | 88 |
| அந்தமில்லா | 588 |
| அந்தணாளனு | 387 |
| அந்திதிரிந் | 309 |
| அர்த்தியுநண் | 597 |
| அப்போது | 576 |
| அம்மானே | 683 |
| அயலவர்பரவு | 419 |
| அயனோடன் | 204 |
| அர்க்கணாற்ற | 455 |
| அரக்கன்மு | 154 |
| அரங்காவ | 659 |
| அரவேரல் | 226 |
| அரவொலி | 710 |
| அரித்தநம்பி | 461 |
| அரித்துநம் | 52 |
| அரியொடுபூ | 316 |
| அருத்தம்பெ | 534 |
| அருந்தவமா | 700 |
| அருமணி | 287 |
| அருமலரோ | 65 |
| அரும்பார்ந்த | 96 |
| அருவிபாய் | 557 |
| அரைக்குஞ் | 438 |
| அரையார் | 196 |
| அரைவிரி | 702 |
| அலையார்த | 198 |
| அல்லலுள்ள | 403 |
| அழனீரொ | 669 |
| அழிப்பரை | 434 |
| அழுக்குமெ | 379 |
| அளைப்பை | 663 |
| அறிவினால் | 394 |
| அறுபதும்ப | 58 |
| அறையும் | 619 |
| அற்றவனா | 143 |
| அன்றயன்சி | 453 |
| அன்றாலின் | 200 |
| அன்றின்மு | 675 |
| அன்றுவந் | 452 |
| அன்னஞ்சே | 255 |
| அன்னமன் | 297 |
| அன்னையே | 101 |
| **ஆ** | |
| ஆக்குமழிவு | 32 |
| ஆசைபலவறு | 537 |
| ஆடியசைந் | 308 |
| ஆடுமினன் | 163 |
| ஆட்டான் | 157 |
| ஆதியன்றா | 687 |
| ஆத்தமென் | 451 |
| ஆயம்பேடை | 678 |
| ஆரூரத்தா | 335 |
| ஆர்த்தவரா | 146 |
| ஆர்த்தானா | 171 |
| ஆலந்தானு | 439 |
| ஆவியைப் | 206 |
| ஆழியனையக | 486 |
| ஆழியார்க | 552 |
| ஆறணிநீண் | 600 |
| ஆறுகந்தா | 144 |
| ஆனைக்குல | 575 |
| ஆனையுரித்த | 707 |
| **இ** | |
| இசழுந்தகை | 664 |
| இங்ஙனம்வந் | 360 |
| இடையறி | 638 |
| இட்டனுண் | 340 |
| இட்டிதாக | 230 |
| இண்டைம | 120 |
| இத்தனையா | 205 |
| இந்திரனுக் | 141 |
| இந்திரன் | 711 |
| இமையோர் | 187 |
| இயக்கர்கின் | 391 |
| இரவத்திடு | 32 |
| இரவிநீள் | 476 |
| இரும்புயர் | 283 |
| இலங்கையர் | 124 |
| இலங்கைவே | 499 |
| இலவவிதழ் | 328 |
| இலைகொள் | 258 |
| இலைமலிந்த | 272 |
| இலையாலன் | 672 |
| இழித்துகந் | 44 |
| இழைக்கு | 30 |
| இழைதழுவு | 287 |
| இழைவளர் | 308 |
| இளைப்பறியீ | 307 |
| இறங்கிச் | 585 |
| இறந்தா | 672 |
| இறைகளோ | 57 |
| இறைவனே | 314 |
| இன்பமுண் | 54 |
| **ஈ** | |
| ஈழநாட்டுமா | 91 |
| ஈன்றுகொ | 381 |
| **உ** | |
| உங்கைகளா | 164 |
| உதிரநீரிறை | 62 |
| உதையுங்கூ | 671 |
| உம்பரார்கோ | 132 |
| உம்பரானா | 141 |
| உம்பரும்வா | 181 |
| உய்த்தாட்டி | 648 |
| உரமென்னு | 621 |
| உரவமுள்ள | 551 |
| உரைப்பாரு | 659 |
| உலவுமுலகிற் | 22 |
| உழக்கேயு | 568 |
| உறவிலியூன | 687 |
| உற்றவர்க்கு | 440 |
| உற்றனனுற் | 322 |
| உற்றபோத | 102 |
| உற்றார்சுற் | 158 |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| உற்ருனமக் | 593 |
| **ஊ** | |
| ஊட்டிக்கொ | 139 |
| ஊருமாதேச | 544 |
| ஊர்தோறும் | 613 |
| ஊர்வதோர் | 396 |
| ஊழிதோறு | 711 |
| ஊறிவாயின | 223 |
| ஊறுநம்பி | 459 |
| ஊனங்கத்து | 484 |
| ஊனத்துறு | 582 |
| ஊனமில்லா | 588 |
| ஊனுயிரானு | 5 |
| ஊனுயிர் | 590 |
| ஊனுருடை | 665 |
| ஊனைப்பெ | 296 |
| ஊனையுற்று | 632 |
| ஊன்மிடையு | 58 |
| **எ** | |
| எங்கேபோ | 560 |
| எங்கேனுமி | 169 |
| எங்கேனும் | 658 |
| எட்டுகந்தார் | 147 |
| எண்ணவனெ | 320 |
| எண்ணூர்த | 369 |
| எண்ணியிரு | 83 |
| எத்தான்ம | 657 |
| எத்திசையுந் | 311 |
| எந்தம்மடிக | 35 |
| எந்தையை | 409 |
| எந்தையிருப் | 537 |
| எம்பெருமா | 153 |
| எம்மானெ | 158 |
| எம்மானெந் | 370 |
| எம்மானெம் | 176 |
| எயிலார் | 621 |
| எரியார்புன் | 203 |
| எல்லையில் | 342 |
| எவ்வெவர்தே | 490 |
| எள்கலின்றி | 447 |
| எள்விழுந்திட | 240 |
| எறிக்குங்கதி | 297 |
| எறிந்ததண் | 634 |
| எற்றேறினை | 357 |
| எனக்கினித் | 525 |
| என்பிணையே | 270 |
| என்னதெழி | 654 |
| **ஏ** | |
| ஏசற்றுநீசி | 356 |
| ஏசினவல்ல | 109 |
| ஏடுலாமலர்க் | 253 |
| ஏடுவானிளந் | 343 |
| ஏதநின்னில | 389 |
| ஏத்தாதிருந்த | 185 |
| ஏராரும் | 643 |
| ஏரார்முப்பு | 180 |
| ஏரிக்கனக | 306 |
| ஏலமிலவங்க | 23 |
| ஏழிசையா | 364 |
| ஏழைமாறுட | 438 |
| ஏற்றூர்புரமூன் | 6 |
| ஏனக்கொம் | 138 |
| ஏனமருப்பி | 692 |
| ஏனத்திரள் | 577 |
| ஏன்றவந்தண | 491 |
| **ஐ** | |
| ஐயனையத்த | 323 |
| ஐவகையரை | 437 |
| ஐவணமாம் | 359 |
| ஐவாயரவினை | 115 |
| **ஒ** | |
| ஒக்கமுப்புர | 483 |
| ஒட்டியாட் | 430 |
| ஒப்பிலாமுலை | 512 |
| ஒருமையே | 108 |
| ஒருபேடிகமு | 282 |
| ஒழிப்பாயே | 171 |
| ஒறுத்தாய் | 170 |
| ஒற்றியூரு | 656 |
| ஒற்றியூரெ | 227 |
| ஒன்றலாவுயிர் | 469 |
| ஒன்றுநீர்க | 230 |
| **ஓ** | |
| ஓடுடையன் | 689 |
| ஓதக்கடனஞ் | 671 |
| ஓதம்வந்து | 386 |
| ஓருரொன்று | 430 |
| ஓர்ந்தனனே | 319 |
| ஓவணமே | 42 |
| ஓவுநாளுணர் | 347 |
| **க** | |
| கங்கைதங்கி | 380 |
| கங்கைவார் | 510 |
| கச்சியனின் | 694 |
| கச்சேர்பாம் | 111 |
| கச்சேரா | 292 |
| கச்சையூர்கா | 222 |
| கடங்களூர் | 221 |
| கடல்சூழ்ந்த | 278 |
| கடமாகளி | 302 |
| கடிக்கும்மர | 72 |
| கடிதாய்க்க | 223 |
| கடியேன்கா | 190 |
| கடுத்தவன் | 165 |
| கடுவரிமாக் | 599 |
| கட்டக்காட் | 137 |
| கட்டமும்பி | 423 |
| கட்டனேன் | 380 |
| கட்டுமயக்க | 79 |
| கணைசெந் | 549 |
| கண்டமுங்க | 402 |
| கண்ணையே | 177 |
| கண்ணுதலா | 640 |
| கதிர்க்கொள் | 565 |
| கந்தங்கமழ் | 95 |
| கமர்பயில் | 698 |
| கம்பமருங் | 639 |
| கம்பமால்களி | 395 |
| கரத்திநம்பி | 465 |
| கரந்தைகூ | 556 |
| கரந்தையும் | 686 |
| கரியகறைக் | 580 |
| கரியமனச் | 316 |
| கரியானையுரி | 427 |
| கரியினுரி | 666 |
| கருக்கநஞ்சமு | 222 |
| கருங்கடக்க | 528 |
| கருதுநீமன | 353 |
| கருமானினு | 647 |
| கருமையார் | 647 |
| கருவரை | 698 |
| கரையுங்கட | 531 |
| கலவமயில் | 655 |
| கலியேன்மா | 116 |
| கலிவலங்கெ | 492 |
| கலைமலிந்த | 220 |
| கல்லேனல் | 113 |
| கல்வாயகிலுங் | 18 |
| கவ்வைக்க | 592 |
| கழியாய்க்க | 678 |
| கழுதைகுங் | 431 |
| களங்களார் | 557 |
| கள்ளிநீ | 245 |
| கறிமாமிளகு | 19 |
| கறையார்க | 584 |
| கறைக்கண்ட | 277 |
| கற்பகத்தி | 497 |
| கற்றுனுங்கு | 650 |
| கற்றிலாதா | 241 |
| கற்றுளவான் | 363 |
| கன்னலையி | 611 |
| **கா** | |
| காடிலாடிய | 400 |
| காடும்மலையு | 303 |
| காடேமிக | 225 |
| காட்டூர்க்கட | 333 |
| காணியேற் | 237 |
| காண்டனன் | 317 |
| காண்டவன் | 320 |
| காண்டுநம்பி | 464 |
| காதலாலே | 47 |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| காதுபொத் | 478 |
| காதல்செய் | 296 |
| காமன்பொ | 672 |
| காயும்புலியி | 373 |
| காய்சினமால் | 317 |
| காய்ந்தவன் | 318 |
| காராரும் | 192 |
| காரார்கடலி | 376 |
| காருலாவிய | 249 |
| காரூர்கண்ட | 680 |
| காரூர்கடலி | 666 |
| காரூர்புனலெய் | 7 |
| காரூர்மழை | 73 |
| கார்க்கின்ற | 424 |
| கார்க்கொள் | 563 |
| காலமுநாயி | 148 |
| காலமுநாள் | 692 |
| காவிரிபுடை | 627 |
| காளையாகிவ | 411 |
| காற்றுத்தீப்பு | 453 |
| காற்றானேகா | 685 |
| **கீ** | |
| கீளார்கோவ | 175 |
| **கு** | |
| குடமெடுத் | 46 |
| குண்டரைக் | 705 |
| குண்டலங்கு | 418 |
| குண்டலந்தி | 442 |
| குண்டாடிச்ச | 117 |
| குண்டிகைப் | 530 |
| குண்டாடியு | 528 |
| குரக்கினங்கு | 629 |
| குரவநாறக்கு | 260 |
| குரவநாறிய | 252 |
| குரவமருக்கு | 153 |
| குரவுகொண் | 48 |
| குருகுபாய | 256 |
| குருதிசோர | 56 |
| குரும்பைமு | 118 |
| குழலைவென் | 90 |
| குழைத்துவந் | 107 |
| குளங்கள்பல | 298 |
| குளிர்தருதிங் | 697 |
| குறவனார்தம் | 139 |
| குறியில்வழு | 667 |
| குறைவிலாநி | 514 |
| குற்றநம்பி | 460 |
| குற்றந்தன் | 435 |
| குற்றமொ | 399 |
| குற்றொருவ | 245 |
| குனிவினிய | 288 |
| குன்றமலைக் | 702 |
| **கூ** | |
| கூசநீக்கிக் | 54 |
| கூசியடியா | 565 |
| கூடலையாற் | 617 |
| கூடலர்மன் | 142 |
| கூடாமன்ன | 118 |
| கூடிக்கூடி | 39 |
| கூடியடியா | 566 |
| கூடியவில | 502 |
| கூடிஞய்ம | 384 |
| கூடுமென்னப் | 261 |
| கூடுமாறுள் | 539 |
| கூதலிடுஞ் | 603 |
| கூறுநடைக் | 75 |
| **கை** | |
| கைம்மாவுரி | 339 |
| கையதுகபா | 105 |
| கையார்வெ | 159 |
| கையோர்பா | 255 |
| **கொ** | |
| கொங்கணை | 706 |
| கொங்கணைச | 527 |
| கொங்கார்ம | 304 |
| கொங்கிற்கு | 334 |
| கொங்குறு | 76 |
| கொங்கையா | 627 |
| கொடியுடை | 66 |
| கொடிகளி | 75 |
| கொடுகுவெ | 347 |
| கொடுக்ககிற் | 436 |
| கொடுமழுவி | 527 |
| கொண்டாடு | 595 |
| கொதியினால் | 513 |
| கொத்தாற் | 375 |
| கொந்தணவும் | 184 |
| கொம்பனாறு | 600 |
| கொம்பைப் | 568 |
| கொய்யாமலர் | 98 |
| கொல்லுமா | 540 |
| கொல்லுமூ | 397 |
| கொல்லைவள | 155 |
| கொல்லைவி | 606 |
| கொள்ளிவா | 357 |
| கொன்று | 584 |
| **கோ** | |
| கோடரம்ப | 456 |
| கோடுநான் | 479 |
| கோடுயர்கோ | 21 |
| கோடுயர் | 699 |
| கோட்டங் | 132 |
| கோணல்மா | 232 |
| கோணியபி | 346 |
| கோதிலாவ | 516 |
| கோத்திட் | 8 |
| கோலமால்வ | 391 |
| கோலவரவு | 670 |
| கோவலநான் | 129 |
| கோளாளிய | 15 |
| **ச** | |
| சக்ரவாளத்தி | 258 |
| சங்கலைக்குந் | 360 |
| சங்கேந்து | 218 |
| சங்கைப்பட | 521 |
| சங்கையவர் | 81 |
| சடசடவிடு | 529 |
| சந்தணவும் | 614 |
| சந்தம்பல | 535 |
| சந்தாருங்கு | 178 |
| சந்தார்வெ | 195 |
| சந்தனவே | 504 |
| சள்ளைவெள் | 555 |
| **சா** | |
| சாதலும்பிற | 414 |
| சாந்தமாக | 351 |
| சாரணன்ற | 345 |
| சாலக்கோ | 292 |
| **சி** | |
| சிகரத்திடை | 519 |
| சிகரிமுகத்தி | 24 |
| சிங்கத்துரி | 14 |
| சித்தநீநினை | 353 |
| சிந்தித்தெ | 29 |
| சிந்தித்தென் | 445 |
| சிம்மாந்து | 211 |
| சிலைத்து | 250 |
| சிலையான்மு | 194 |
| **சீ** | |
| சீரின்மிகப் | 87 |
| **சு** | |
| சுடுவார்பொ | 579 |
| சுரும்பார்வி | 170 |
| சுற்றார்தருநீ | 673 |
| சுற்றுமுற்று | 260 |
| சுற்றுமூர்சுரி | 221 |
| **சூ** | |
| சூழுமோடிச் | 257 |
| சூழொளிநீர் | 599 |
| **செ** | |
| செங்கண்மே | 626 |
| செஞ்சேல | 189 |
| செடிகொ | 216 |
| செடிகொ | 51 |
| செடித்தவஞ் | 104 |
| செடியேன் | 168 |
| செடியேனு | 685 |
| செடிபடத் | 165 |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| செட்டிநின் | 310 |
| செண்டாடு | 187 |
| செத்தபோதி | 425 |
| செந்தீண்பவ | 676 |
| செந்தமிழ்த் | 251 |
| செந்நெலங்க | 559 |
| செப்பரியவய | 361 |
| செம்பொன் | 344 |
| செம்பொ | 493 |
| செய்யார்கமல | 100 |
| செய்யார்மே | 195 |
| செய்வினை | 638 |
| செருக்குவா | 285 |
| செருந்திசெம் | 679 |
| செருமேவுச | 119 |
| செழுமலர்க் | 422 |
| செறிவுண்டே | 426 |
| செறிந்தசோ | 500 |
| செறுவினிற் | 242 |
| செற்றவர்மு | 605 |
| சென்றபுரங் | 655 |
| சென்றிலிடை | 309 |
| **சே** | |
| சேந்தார்தாய் | 265 |
| சேரும்புகழ் | 149 |
| **சை** | |
| சைவத்தசெ | 594 |
| **சொ** | |
| சொல்லரும் | 508 |
| சொல்லிடி | 59 |
| சொல்லிற்கு | 532 |
| சொல்லுவ | 152 |
| சொல்லைநம்பி | 463 |
| **த** | |
| தக்கைதண் | 254 |
| தங்கியமாத | 703 |
| தஞ்சமென் | 495 |
| தஞ்சொலார | 63 |
| தடங்கையா | 407 |
| தட்டெனும் | 313 |
| தண்கமலப் | 127 |
| தண்டமு | 78 |
| தண்டேர்ம | 591 |
| தண்ணார்மதிசூடி | 5 |
| தண்ணார்மா | 619 |
| தண்புனலும் | 128 |
| தண்ணியல் | 693 |
| தந்தையாபுல | 549 |
| தந்தையாரு | 55 |
| தம்மானையறி | 262 |
| தம்மையேபு | 235 |
| தயங்குதோ | 349 |
| தரிக்குந்தரை | 65 |
| தலைக்கலன்ற | 404 |
| தலையிடை | 146 |
| தலைக்குத்த | 27 |
| தழலுமேனி | 92 |
| தளிசாலைகள் | 570 |
| தளிர்போல் | 191 |
| தனியனென் | 532 |
| தன்மையினால் | 130 |
| தன்னிலாசறு | 470 |
| **தா** | |
| தாங்கூர்பி | 336 |
| தாயளவாய்த் | 133 |
| தாரமாகிய | 550 |
| தாருந்தண் | 315 |
| தாழ்வெனுந்த | 61 |
| தானெனைமு | 706 |
| **தி** | |
| திகழுமாலவ | 481 |
| திங்கட்குறுங் | 691 |
| திங்கள்தங்கி | 443 |
| திங்கடங்கு | 37 |
| திங்கணம்பி | 458 |
| திங்களூர்திரு | 222 |
| திண்டேர்நெடு | 25 |
| திரியுமுப்புர | 490 |
| திரியுமுப்புர | 441 |
| திரியும்புரநீ | 577 |
| திரிவனமும் | 166 |
| திருத்தினைநக | 416 |
| திருந்தாதவா | 269 |
| திருநின்றசெ | 273 |
| திருந்தநான் | 412 |
| திருவிளையக | 408 |
| திருவுடை | 82 |
| திருவுமெய் | 501 |
| திருவும்வண் | 474 |
| திரையினார் | 290 |
| தில்லைவாழந் | 271 |
| தினைத்தான | 677 |
| **து** | |
| துஞ்சியும் | 248 |
| துணிப்படுமு | 108 |
| துணிவார் | 375 |
| துருத்திச்சு | 337 |
| துருத்தியுறை | 676 |
| துனைவெண் | 301 |
| துன்னுவார் | 387 |
| **தூ** | |
| தூசுடையவ | 329 |
| தூண்டாவி | 367 |
| தூயநீரமு | 636 |
| தூயவர்கண் | 250 |
| தூர்த்தர்மூ | 554 |
| தூவாயர்தொ | 681 |
| தூறன்றியா | 312 |
| **தெ** | |
| தெருண்ட | 480 |
| தெள்ளிய | 84 |
| தென்னாத் | 13 |
| தென்னூற் | 90 |
| **தே** | |
| தேங்கூருந் | 89 |
| தேசனூர்வி | 223 |
| தேடுவன்றே | 322 |
| தேவியம் | 289 |
| தேனலங்கொ | 259 |
| தேனெய்புரி | 74 |
| தேனைக்கா | 337 |
| தேனையாடி | 410 |
| தேனையாடு | 231 |
| **தை** | |
| தையலாருக் | 241 |
| **தொ** | |
| தொக்காய்ம | 354 |
| தொடைமலி | 697 |
| தொண்டர | 602 |
| தொண்டர்க | 307 |
| தொண்டர்த | 609 |
| தொழுவார்க் | 301 |
| தொறுவிலா | 554 |
| **தோ** | |
| தோடுகொதி | 398 |
| தோற்றமு | |
| **ந** | |
| நஞ்சியிடை | 303 |
| நடையுடை | 85 |
| நத்தார்ப | 579 |
| நமணநந்தி | 234 |
| நமர்பிறரென் | 536 |
| நமையெலாம் | 472 |
| நம்பனைய | 507 |
| நம்பினார்க்க | 630 |
| நரிதலைக்கவ் | 313 |
| நரிபுரிகாடர | 528 |
| நரியார்தங்க | 646 |
| நரம்பினோ | 60 |
| நரைகள்போ | 237 |
| நரைப்புமூப் | 432 |
| நரைவிரவிய | 520 |
| நலமிலாதானை | 239 |
| நலம்பெரிய | 523 |
| நல்லநினைப் | 598 |
| நல்லாரவர்ப | 570 |
| நல்லிசைஞா | 487 |
| நள்ளாறு | 662 |
| நறைசேர் | 374 |
| நற்றமிழ்வல்ல | 390 |
| **நா** | |
| நாச்சிலபேசி | 103 |
| நாடுடையநாத | 651 |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| நாதனுக்கூர் | 135 | நீறுநுந்திரு | 252 | பண்ணுளீரா | 45 | பாரூரும் | 624 |
| நாதனைநாத | 610 | நீற்றுருமே | 212 | பண்ணேர் | 300 | பாரூர்பலவு | 524 |
| நாத்தானுமு | 660 | **நெ** | | பண்மயத்த | 332 | பாரூர்மலிசூ | 228 |
| நாத்தாலுன் | 486 | நெடியோனு | 184 | பதியுஞ்சுற் | 243 | பாரூர்பல்லவ | 161 |
| நாமாரூது | 682 | நெடியானெ | 223 | பத்தர்சித்த | 371 | பாரோர்வி | 196 |
| நாயேன்பலநா | 2 | நெண்டிக் | 535 | பத்தாபத்த | 182 | பாரோடுவி | 16 |
| நாவின்மி | 572 | நெய்யும்பா | 36 | பத்தராய்ப் | 279 | பார்நிலவும் | 641 |
| நாளூர்வந்த | 178 | நெறியுமறிவு | 533 | பத்திமையு | 358 | பாலனதாரு | 701 |
| நாளுநன்னி | 91 | நெறியேநி | 179 | பத்தூர்புக்கி | 323 | பாவமேபுரிந் | 468 |
| நாளுமின்னி | 494 | நெற்றிக்க | 620 | பந்தம்வீடி | 632 | பாறணிமு | 529 |
| நாறுசெங்க | 625 | **நொ** | | பந்தித்தவல் | 489 | பாறுதாங்கி | 229 |
| நாற்றனத் | 265 | நொந்தா | 156 | பந்துங்கிளியு | 653 | **பி** | |
| நானுடைமா | 604 | **நோ** | | பரசாருங்கர | 185 | பிடிக்குக்க | 34 |
| நானேனலுன் | 159 | நோக்குவே | 682 | பரந்தபாரிட | 635 | பிடித்தாட்டி | 28 |
| **நி** | | நோயனைத்த | 239 | பரவும்பரி | 560 | பிணிகொளா | 466 |
| நினம்படுமு | 106 | **ப** | | பரிந்தசுற்றமு | 471 | பிணிவண்ண | 15 |
| நித்தமாகநி | 261 | பசுக்களே | 348 | பருத்தாள்வ | 172 | பித்தரை | 140 |
| நிலனேநீர்வ | 197 | பஞ்சேருமெ | 683 | பல்லடியார் | 485 | பித்தாபிறைசூ | 1 |
| நிலனுடை | 84 | படங்கொணு | 43 | பல்லில்வெள் | 590 | பிலந்தருவாயி | 695 |
| நிலைகெடவி | 710 | படப்பாற்றன் | 114 | பல்லுயிர்வா | 167 | பிழைகடூரத் | 589 |
| நிலையாய்நி | 160 | படமாடும்ப | 134 | பவளக்கனி | 653 | பிழையுளன | 637 |
| நில்லாய்மன | 355 | படவரவுநு | 351 | பழகநின்று | 562 | பிழைத்தபி | 562 |
| நிறைக்காட் | 334 | படிசெய்நீர் | 235 | பழிக்கும்பெ | 69 | பிறவாயிற | 294 |
| நிறையனூர் | 222 | படைகளேந் | 44 | பழிசேரில்புக | 174 | பிறையணி | 700 |
| நிர்பானுங்க | 122 | படைக்கட் | 405 | பளிக்குத்தா | 670 | பிறையாருஞ் | 146 |
| நினைதருபாவ | 420 | படைத்தாய் | 173 | பறக்குமெங்கி | 257 | பிறையாருஞ்ச | 200 |
| நின்றவினைக் | 597 | படையார்ம | 654 | பறியேசுமந் | 567 | பின்னைநம்பும் | 462 |
| நின்றவிம் | 703 | படையார் | 188 | பறைக்கணெடு | 70 | **பீ** | |
| **நீ** | | படையெலா | 246 | பறையாதவ | 217 | பீறைகூறையு | 348 |
| நீடுபொக்கை | 473 | பணங்கொ | 654 | பறையுங்குழ | 227 | **பு** | |
| நீடுவாழ்பதி | 234 | பணிந்தபார்த் | 634 | பற்றிவரை | 656 | புகழுமாசந்த | 542 |
| நீதியிலொன் | 534 | பண்டரியன | 248 | **பா** | | புரமவையெ | 525 |
| நீரும்மலரு | 663 | பண்டாழினி | 219 | பாடியநான்ம | 695 | புரிசைமூன் | 633 |
| நீருருநெடுவய | 26 | பண்டேநி | 176 | பாடுமாபாடிப் | 488 | புலங்களைவன | 543 |
| நீரூர்தருநி | 596 | பண்ணற்கரி | 689 | பாடுவன்பாடு | 318 | புலியூர்ச்சிற் | 338 |
| நீரேறவேறு | 662 | பண்டையமா | 155 | பாடுவார்பசி | 206 | புலைகடூரத் | 587 |
| நீலவண்ட | 548 | பண்டைவி | 669 | பாடுவிப்பா | 210 | புல்லியிடந் | 80 |
| நீளநின்றீ | 586 | பண்ணிடை | 208 | பாட்டும்பா | 652 | புற்றில்வாளர | 449 |
| நீளநினைந்தடி | 150 | பண்ணின்ற | 570 | பாட்டகத்தி | 450 | புறந்திரைந் | 244 |
| நீறணிமே | 526 | பண்ணுதலை | 607 | பாதம்பணிவார் | 4 | புற்றுடரவம் | 20 |
| நீறூர்மேனி | 191 | | | பாதியோர் | 151 | புன்னுனைப்பு | 433 |
| நீறுதாங்கிய | 465 | | | பாரூருமாவல் | 651 | | |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| **பூ** | |
| பூணுவ | 110 |
| பூணபமேதா | 325 |
| பூவில்வாசத் | 495 |
| பூவேந்திய | 595 |
| பூனைபுனை | 284 |
| **பெ** | |
| பெற்றிமை | 123 |
| பெற்றமேபா | 37 |
| பெற்றமே | 448 |
| **பே** | |
| பேணுதொ | 661 |
| பேணுமுனி | 667 |
| பேணாநாட | 93 |
| பேயோடே | 679 |
| பேரதுகாம | 645 |
| பேருமோரா | 137 |
| பேருருமதக | 365 |
| பேரோராயி | 403 |
| பேழ்வாயர | 376 |
| பேறனார் | 223 |
| **பை** | |
| பைத்தபட | 77 |
| **பொ** | |
| பொஃதியேசு | 572 |
| பொடியாடு | 358 |
| பொடியார் | 199 |
| பொடியேறு | 215 |
| பொய்த்தன் | 62 |
| பொய்ம்மை | 40 |
| பொய்யர்க | 53 |
| பொய்யவ | 190 |
| பொய்யடிமை | 276 |
| பொய்யாத | 216 |
| பொய்யாநா | 173 |
| பொய்யேசெ | 366 |
| பொய்யேயு | 295 |
| பொருப்பில | 126 |
| பொருவஞ | 553 |
| பொல்லாப் | 12 |
| பொழிந்திழி | 541 |
| பொன்னலி | 426 |
| பொறியுமா | 541 |
| பொன்செ | 181 |
| பொன்னல | 504 |
| பொன்னவன் | 321 |
| பொன்னார்மே | 175 |
| பொன்னனை | 618 |
| பொன்னுனை | 268 |
| பொன்னில | 639 |
| பொன்னுமெ | 423 |
| பொன்னவி | 642 |
| **போ** | |
| போந்தனை | 209 |
| போரருங் | 201 |
| போரார்புர | 668 |
| போர்த்தநீள் | 392 |
| போழுமதி | 564 |
| **ம** | |
| மகத்திற்புக் | 385 |
| மங்கைபங்க | 496 |
| மங்கையோர் | 546 |
| மங்கையோர் | 182 |
| மஞ்சுண்ட | 11 |
| மடமுடைய | 587 |
| மடித்தாடும | 644 |
| மட்டார்பூங் | 113 |
| மட்டார்மலா | 97 |
| மட்டுலாமலர் | 507 |
| மணமென | 60 |
| மணிகெழு | 506 |
| மண்ணினை | 601 |
| மண்ணின் | 511 |
| மண்ணீர்தீ | 202 |
| மண்ணுலகிற் | 709 |
| மண்ணுலகு | 330 |
| மண்ணெலா | 629 |
| மத்தம்மதயா | 95 |
| மத்தமாமலர் | 253 |
| மத்தம்மலி | 225 |
| மத்தயானை | 50 |
| மந்திகடுவனு | 660 |
| மந்திரமொ | 707 |
| மரங்கமே | 628 |
| மருகலுரை | 336 |
| மருவார்கொ | 372 |
| மருவிப்பிரிய | 561 |
| மலக்கிலின் | 209 |
| மலந்தாங்கி | 593 |
| மலமேலாம் | 247 |
| மலைக்குமக | 64 |
| மலைச்சார | 574 |
| மலைமடந்தை | 121 |
| மலையாண்ம | 592 |
| மலையாருவித் | 94 |
| மல்கியசெஞ் | 690 |
| மழுவாள்வல | 7 |
| மழைக்கண்ம | 71 |
| மழைக்கரும்பு | 417 |
| மழைநுழை | 615 |
| மழையானு | 623 |
| மழைக்கொள | 664 |
| மறவல்நீமன | 355 |
| மறவனையன் | 498 |
| மறிசேர்கை | 188 |
| மறிநேரொ | 367 |
| மறியேறு | 331 |
| மறைகளாயி | 547 |
| மறைமுதல் | 616 |
| மறையவ | 480 |
| மறையிடத்து | 421 |
| மறையோர் | 193 |
| மற்றுநான் | 505 |
| மற்றுத்தே | 384 |
| மற்றுப்பற் | 339 |
| மற்றொருது | 415 |
| மன்னிப்பு | 574 |
| மன்னேமறவா | 3 |
| மன்னியசீர்ம | 280 |
| **மா** | |
| மாடங்காட் | 48 |
| மாடமல்கு | 378 |
| மாடமாளிகை | 625 |
| மாடார்ந்தன | 96 |
| மாணுவுருவா | 25 |
| மாதார்மயிற்பீ | 97 |
| மாறினுக்கு | 499 |
| மாயமாயம | 125 |
| மாயமாயமன | 401 |
| மாலயனுங் | 125 |
| மாவாய்ப்பிள | 99 |
| மானையுரித் | 608 |
| மாறுபட்ட | 46 |
| மாற்றமே | 329 |
| மாற்றுக்கனி | 576 |
| மானுமரை | 573 |
| மானேநோக் | 383 |
| மான்றிகழு | 643 |
| **மி** | |
| மிக்கிறையே | 86 |
| மிண்டாடித் | 327 |
| மிடுக்கிலாதா | 236 |
| மிடுக்குண்டே | 135 |
| மின்னனை | 85 |
| மின்னுமா | 538 |
| மின்னெடுஞ் | 502 |
| **மீ** | |
| மீளாவடிமை | 674 |
| **மு** | |
| முடிப்பதுக | 312 |
| முடியேனினிப் | 4 |
| முட்டாதமுச் | 649 |
| முட்டாமே | 213 |
| முண்டந்தரி | 9 |
| முதுவா | 291 |
| முத்தாமுத் | 366 |
| முத்திமுத்தா | 311 |
| முத்துநீற்று | 56 |
| முந்திச்செய் | 434 |
| முந்திவான | 352 |
| முந்தையூர்மு | 221 |
| மும்மையாலு | 273 |

பாட்டு. பக்கம்.

முலைக்கண்ம 563
முல்லைமுறு 152
முழுநீறணி 665
முளைக்கைப் 571
முளைவளரிள 522
முன்ருன்க 224
முன்னவ 162
முன்னெறிவா 363
முன்னேயெம் 263
முன்னைச்செ 246
முன்னைமுதற் 598

மூ
மூடாயுமுய 1
மூப்பதுமில் 136
மூவரெனவி 583
மூவெயில்செ 393
மூலனூர்மு 89

மெ
மெய்யனை 413
மெய்யன் 622
மெய்யென் 233
மெய்ம்மைமுற் 457

மே
மேலைவிதி 294

மை
மைகொள்க 556
மைகொள்கண் 93
மைம்மானம 266
மையாரும்மி 183
மையார்கண் 202
மையார்தட 226
மையார்தடங் 575

மொ
மொய்த்தச் 475

மோ
மோருந் 157

யா
யாழைப்பழி 518

வ
வங்கமலிகட 364
வங்கமேவிய 547
வஞ்சநெஞ்ச 238
வஞ்சங்கொ 145
வஞ்சமற்ற 623
வஞ்சிநுண் 305
வஞ்சிநுண் 630
வடிகொள்க 467
வடிவுடைமழு 612
வணங்கித் 67
வண்டமரும் 150
வண்டார்குழ 369
வண்டுகொள் 259
வந்தவாளர 513
வந்துசொல் 232
வந்தோரிந் 477
வம்பறுவரி 274
வரங்கள்பெ 446
வரிந்தவெஞ் 104
வரியரநாண 704
வருங்கலமு 530
வருந்தவன்று 459
வருங்காலன் 198
வரும்பழி 208
வரும்பெரும் 418
வரைமான 299
வரையின் 543
வலங்கிளர் 694
வலங்கொள் 552
வலையம்வை 41
வல்லதெல் 38
வழித்தலைப் 382
வழிபோவா 658
வளங்கனி 211
வளங்கிளர் 413
வளைக்கைமு 403
வள்வாயம 281
வற்கென்றி 354
வன்சயமாய 362
வன்னுகரா 361

வா
வாசத்திணர் 143
வாடாமுலை 377
வாயாடிமா 134
வாயார்மன 148
வாரமாகித் 42
வாரிடங் 641
வாரிருங்கு 39
வார்கொண் 275
வாழையின் 558
வாழ்வர் 52
வாழ்வாவது 567
வாழ்வையுக 708
வாளாநின்று 428
வாளைபாயம 626
வாளோடிய 569
வானநாட 517
வானுடையா 688

வி
விடங்கொண் 631
விடக்கையே 429
விடையரவக் 286
விடையாரு 193
விடையுங் 293
விடையின் 618
விட்டதோர் 326
விட்டிலங் 400
விட்டிசைப் 349
விண்டானே 684
விண்ணூர்ந்த 99
விண்ணின் 550
விண்ணோர்த 372
விண்பணிந் 503
விண்ணவர் 444
வித்தகவீணை 615
விரித்தவேத 49
விரும்பிநின் 344
விரும்பினே 264
விருத்தாய 214
விரைசெய் 494
விரைதரும 509
விரையார் 160
வில்லைக்காட் 347
விற்றுக்கொ 675

வீ
வீடின்பய 31
வீடுபெறப் 81
வீரத்தாலொ 488
வீழக்காலனை 87

வெ
வெண்டலைப் 517
வெண்பொடி 696
வெந்தநீறு 406
வெப்பொடு 207
வெய்தாயவி 267
வெய்யமாக 515
வெய்யவினை 581
வெய்யவி 179
வெல்லும் 442
வெளிறுதீர 586
வெறுத்தே 33
வெற்றரைக் 167
வென்றவன் 319

வே
வேகங்கொண் 31
வேதவேதிய 636
வேதமோதி 350
வேதியர்விண் 614
வேந்தராயுல 470
வேம்பினே 324
வேலங்காடு 368
வேலையினஞ் 617
வேயனதோ 314
வேழமுரிப்ப 377
வேறுவன்ன 203

வை
வைத்தனன் 100
வையகமுழு 613
வையகமுற்று 388

திருச்சிற்றம்பலம்.

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பகவத்கீதை வசனம் | 1 | 4 |
| ஞானவாசிஷ்டவசனம் | 1 | 8 |
| திருமந்திரம் மூவாயிரம் | 1 | 8 |
| தத்துவராயசுவாமிகள்பாடுது | 0 | 12 |
| வள்ளலார் 20-சாஸ்திரம் | 1 | 8 |
| குமாரதேவர் 16-சாஸ்திரம் (மகாராஜா துறவு முதலியன) | 0 | 10 |
| ஒழிவிலொடுக்கம் உரை | 0 | 12 |
| கொலைமறுத்தல் உரை | 0 | 5 |
| வைராக்கியசதகம் உரை | 0 | 5 |
| வைராக்கியதீபம் உரை | 0 | 5 |
| அவிரோதவுந்தியார் உரை | 0 | 7 |
| பிரபுலிங்கலீலை யுரை | 2 | 8 |
| ஷை மூலம் | 0 | 8 |
| கைவல்லியநவநீத விருத்தியு | 1 | 4 |
| ஷை தத்துவார்த்ததீபிகையுரை | 2 | 0 |
| வாசுதேவமனனம் | 1 | 0 |
| பதினெண்சித்தர்கள் ஞானக் கோர்வை | 1 | 0 |
| வேமன்னபத்தியம் 1000-பாடல் உரையுடன் | 1 | 0 |
| சைவசமயநெறி உரை | 1 | 4 |
| கட்டளைக்கொத்து14-சேர்ந்த | 0 | 8 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதம் செய்யுள் | 3 | 8 |
| ஸ்ரீமகாபாரதம் வசனம் | 4 | 0 |
| ஷை சுருக்கம் | 2 | 0 |
| ஸ்ரீமஹாபாரதகீர்த்தனை | 3 | 0 |
| இராமாயண கீர்த்தனை படங்களுடன் | 1 | 0 |
| ஸ்ரீ சிவமகாபுராண வசனம் படங்களுடன் (இதில் 6-சங்கிதைகள டங்கி யிருக்கின்றன) | 5 | 0 |
| ஸ்ரீமகாபாகவத வசனம் | 1 | 8 |
| ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம் | 1 | 14 |
| கந்தபுராண வசனம் | 1 | 8 |
| விநாயகபுராண வசனம் | 2 | 0 |
| கந்தபுராணச்சுருக்கம்செய்யுள் | 0 | 12 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| பிரமோத்தரகாண்டம் உரை | 1 | 8 |
| பெரியபுராணவசனம் படங்களுடன் | 1 | 8 |
| திருவிளையாடற்புராண மூலம் | 2 | 0 |
| திருவிளையாடல் வசனம் படங்களுடன் | 1 | 8 |
| தாயுமானவர் உரையுடன் | 3 | 0 |
| பட்டணத்தார் பாடலுரைபுராண வசனத்துடன் | 1 | 12 |
| திருவாதவூரர் புராணம் உரை படத்துடன் | 0 | 12 |
| சேதுபுராண வசனம் | 2 | 0 |
| அருணாசலபுராணமுரை படங்களுடன் | 0 | 8 |
| விருத்தாசலபுராணம் உரை | 0 | 10 |
| ஸ்ரீகாளத்திபுராணமூலமும் வசனமும் | 0 | 12 |
| சிவபராக்கிரமம் வசனம் படங்களுடன் | 1 | 4 |
| சுப்பிரமணியர் பராக்கிரமம் படங்களுடன் | 1 | 4 |
| அரிச்சந்திரபுராணமுரை | 1 | 4 |
| ஷை புராண மூலம் | 0 | 8 |
| பழனிஸ்தலபுராணம் | 0 | 12 |
| சிவஸ்தலமான்மிய வசனச் சுருக்கம் | 0 | 12 |
| விஷ்ணுஸ்தலமான்மியவசன | 0 | 8 |
| மூவர் தேவாரம் பண்முறை (ஸ்தலமுறை அட்டவணையுடன்) | 3 | 0 |
| திருஞானசம்பந்தர் தேவாரம் தனி | 1 | 8 |
| திருநாவுக்கரசு தேவாரம்தனி | 1 | 4 |
| அகஸ்தியர் தேவாரத்திரட்டு உரை | 0 | 12 |
| அற்புதத் தேவாரத்திரட்டு | 0 | 3 |
| திருவாசகம் உரை | 2 | 0 |
| அருட்பா படத்துடன் | 1 | 8 |

பு. ஷண்முக முதலியார்,
நெ-5, ஆறுமுகம் தெருவு,
ஜார்ஜ்டவுன், சென்னை.